# பாடத்திட்டமும்
# ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியும்

## தரம் ஐந்து



அனுசரணை
யுனிசெவ்

முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும்
ஆரம்பக்கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்

# பாடத்திட்டமும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியும்

## தரம் 5

தாய்மொழி (தமிழ்)
சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்
செயற்பாட்டு அடிப்படையிலான வாய்மொழி ஆங்கிலம்
இரண்டாம் மொழி (சிங்களம்)
மாணவர் முன்னேற்றத்தை கணிப்பீடு செய்தல்

முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
2009

முதற் பதிப்பு - 2001

இரண்டாம் பதிப்பு - 2002

மீளாய்வு செய்யப்பட்ட மூன்றாம் பதிப்பு 2009

© முழுப் பதிப்புரிமையுடையது.

**அச்சுப் பதிப்பு: சாப் கிரபிக் ஹவ்ஸ் தனியார் நிறுவனம்**

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

ஆரம்பக் கல்விப் பருவம் என்பது பிள்ளை விருத்தியின் தீர்க்கமான ஒரு கட்டமாகும். எதிர்காலத்தில் வெற்றிகரமான ஒரு பிரசையாகச் செயற்படுவதற்குத் தேவையான பற்பல ஆற்றல்கள் உருவாகி இசைவடையும் பருவம் இதுவாகும். எனவே பிள்ளைகளின் சாதகமான வளர்ச்சிக்கு உந்துதலளிக்கும் வகையிலான சூழலை உருவாக்குவது அவசியமாகும். பிள்ளைகளுக்குத் தமது அயற் சூழலுடன் நிதமும் தொடர்புற்று, அனுபவங்களைப் பெறுவதற்கும் உயிரோட்டமான வகையில் சூழலுடன் தொடர்புறுவதற்கும், மகிழ்ச்சியையும் களிப்பையும் அனுபவிப்பதற்கும், தாம் செய்யும் வேலைகள் மூலம் வெற்றியை அனுபவிப்பதற்கும் பெற்றோரதும், ஆசிரியர்களதும் அன்பையும் களிப்பையும் பெறுவதற்கும் வாய்ப்புக்களை உருவாக்கலாம். அவ்வாறான சந்தர்ப்பங்கள், பிள்ளையின் விருத்தி, உச்ச விருத்திக்குத் தூண்டுகோலாக அமையும்.

ஆரம்பத் தரங்களுக்காக, கலைத்திட்டம் மற்றும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளைத் தயாரிக்கும் போது மேற்படி விடயங்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை பாடசாலையில் நடைமுறைப்படுத்தும்போது அவ்விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை ஒழுங்குபடுத்திக்கொள்வது தொடர்பாக ஆசிரியர்கள் கவனஞ் செலுத்துதல் வேண்டும். மேலும், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள், ஆசிரிய ஆசிரியைகளுக்கு தமது வகுப்பறைகளில் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை விருத்தி செய்துகொள்வதற்காக வழங்கப்படும் ஒரு வழிகாட்டி மாத்திரமே என்பதை வலியுறுத்திக் குறிப்பிட விரும்புகிறேன். அவற்றில் அடங்கியுள்ள விடயங்களைக் கருத்திற்கொண்டு. தத்தமது பிரதேசத்துக்குப் பொருத்தமான வகையில் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை உருவாக்கிக்கொள்வதில் ஆசிரிய ஆசிரியைகள் கவனஞ் செலுத்துதல் வேண்டும். ஆக்கபூர்வமான வகையில் வகுப்பறைப் பணிகளை உருவாக்கிக்கொள்வதற்காக இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைப் பயன்படுத்துதல் வேண்டும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, கல்வித்துறையைச் சேர்ந்த பெருந்தொகையா னோரின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு பங்களிப்புச் செய்த அனைவருக்கும், குறிப்பாக இப்பணியில் முன்னின்று செயற்பட்ட ஆரம்பக்கல்வித் துறையின் சகல அதிகாரிகளுக்கும் எனது நன்றியறிதல் உரித்தாகட்டும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியை அச்சிடுவதற்கு நிதி அனுசரணை வழங்கிய யுனிசெவ் (UNICEF) நிறுவனத்துக்கும் எமது விசேட நன்றி உரித்தாகும்.

**பேராசிரியர் லால் பெரேரா**
பணிப்பாளர் நாயம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம.

# அறிமுகம்

ஐந்தாந் தரத்துக்காக 2009 இல் அறிமுகஞ் செய்யப்படும் இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, 2002 ஆம் ஆண்டில் கல்வி மறுசீரமைப்பின்படி ஐந்தாந் தரத்துக்காக அறிமுகஞ் செய்யப்பட்ட ஆசிரியர் கைந்நூலின் திருத்தியமைக்கப்பட்ட பதிப்பாகும். பாடசாலைகளில் 2003 தொடக்கம் நடைமுறைப்படுத்தலினூடாகப் பெற்ற அனுபவங்கள், 2003இல் வெளியிடப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை, தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்பட்ட கலைத்திட்ட பின்னூட்டல் வேலைத்திட்டங்கள் ஊடாகப் பெற்ற தகவல்கள், பல்வேறு நிறுவனங்களால் ஆரம்பக் கல்வி தொடர்பாக நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் மூலம் பெற்ற தகவல்கள், ஆசிரியர் ஆலோசகர்கள் மற்றும் ஆசிரிய ஆசிரியைகளால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் போன்றவற்றைக் கருத்திற்கொண்டு இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி திருத்தியமைக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி என்பது. ஆசிரிய ஆசிரியைகளுக்கு தமது வகுப்புக்களில், கற்றல் - கற்பித்தலை ஒழுங்குசெய்து கொள்வதற்காக வழிகாட்டும் ஓர் அறிவுறுத்தற் கோவையாகும். நல்வழிகாட்டில்களின்படி, தமது கற்றல் - கற்பித்தல் பணியை ஒழுங்கு செய்துகொள்ளும் பொறுப்பு ஆசிரிய ஆசிரியைகளைச் சாரும். ஆரம்பத் தரங்களில் இருக்கும் மாணவர்கள், பிள்ளை விருத்தியின் தீர்க்கமான ஒரு பருவத்தைச் சேர்ந்தவர்களாவர். இப்பருவத்திலேயே அவர்களது ஆக்கச் சிந்தனையும் சமூகத்திறன்களும், ஆளுமைப்பண்புகளும் விருத்தியடைந்து இசைவடையும். எனவே இம்மாணவருக்கான கற்றல் அனுபவங்களைத் திட்டமிடும்போது இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் தரப்பட்டுள்ள தகவல்களையும், மேற்குறிப்பிட்ட பிள்ளை விருத்தி தொடர்பான முக்கிய விடயங்களையும் கவனத்திற்கொண்டு செயற்படுதல் வேண்டும். ஆரம்பப் பாடசாலைப் பருவத்தில், மாணவர்கள் கற்றலுக்காக சூழலுடன் இடைத்தொழிற்பாடுகளை நடத்துவது மிக முக்கியமானது. எனவே இம்மாணவருக்காக, கற்றல் - கற்பித்தல் பணிகளை ஒழுங்குசெய்யும்போது, மாணவரது சூழலை பொருளுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு ஆசிரிய ஆசிரியைகள் முயற்சி செய்தல் வேண்டும்.

மாணவர்களுக்கு, தமது பிள்ளைப் பருவத்தில் மகிழ்ச்சியைச் சகிப்பதற்கும், வெற்றியை அனுபவிப்பதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தலானது அவர்களது விருத்திக்கு இன்றியமையாததாகும். எனவே இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் தயாரிக்கையில், பிள்ளை நேயச் செயற்பாடுகளை உள்ளடக்குவது தொடர்பாக அதிக கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. அதன் விளைவாகவே பல்வேறு களிப்பூட்டத்தக்க வேலைகளும், மாணவர் மையச் செயன்முறைச் செயற்பாடுகளும் இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. வகுப்பறையில் கற்றல் - கற்பித்தல் பணிகளை ஒழுங்குசெய்யும்போது இவ்விடயங்களுக்கு மேலும் மெருகூட்டத்தக்க வகையில் செயற்பாடுகளைத் திட்டமிட்டுக்கொள்வது குறித்து ஆசிரிய ஆசிரியைகள் கவனஞ் செலுத்துதல் வேண்டும். ஒவ்வொரு பிள்ளைக்கும் தனது எதிர்கால வாழ்க்கையை விருத்தி செய்துகொள்வதற்கான உறுதியான அத்திவாரத்தை அமைத்துக்கொள்ளும் வாய்ப்பு ஆரம்பப் பாடசாலைக் காலத்துள் கிடைப்பது அவசியமாகும். அதற்கமையவே மிகப்பரந்த கல்வியைப் பெறத்தக்கவாறு பெருந்தொகையான வாழ்க்கைத் தேர்ச்சிகள், கலைத்திட்டத்திலும் ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டியிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன. கற்றல் - கற்பித்தல் பணிகளை ஒழுங்குசெய்யும்போது அது தொடர்பாகக் கவனஞ் செலுத்திச் செயற்படுவது அவசியமாகும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் தயாரிக்கும் பணிக்காக, ஆசிரிய ஆசிரியைகள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர் கல்லூரிகள், தேசிய கல்விக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த விரிவுரையாளர்கள், கல்வி அதிகாரிகள் உட்பட கல்வித் துறையைச் சேர்ந்த பெருந்தொகையானோரின் கருத்துக்கள் பெறப்பட்டன. இப்பணியில் அவர்கள் வழங்கிய பங்களிப்பு குறித்து எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் ஆரம்பக்கல்விப் பணிகளில் நிதமும் ஒத்துழைப்பு வழங்கும் கலாநிதி. கமலா பீரிஸ், திருமதி. சித்திராங்கனி மல்வென்ன, கலாநிதி ஜீ.எல்.எஸ். நாணயக்கார ஆகியோரின் சேவையையும் பெரிதும் மதிக்கின்றோம். மேலும் நிதமும் எமக்கு ஆலோசனை வழங்கி வழிகாட்டும் எமது நிறுவகப் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் லால் பெரேரா அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம். இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியை தயாரிக்கும் பணியில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட எமது துறையைச் சேர்ந்த சகலருக்கும் எமது நன்றிகள் உரித்தாகும்.

**விமல் சியம்பலாகொட**
உதவிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

**கலாநிதி. சுரனிமல லேகம்கே**
பணிப்பாளர்
முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும்
ஆரம்பக்கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்

# தேசிய கல்வி முறைமைக்கான இலக்குகள்

## தேசிய குறிக்கோள்கள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபருக்கும் சமூகத்துக்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கரு திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக்கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

(i) மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருக்குள் தேசியப் பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

(ii) மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

(iii) மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கடப்பாடுகள் பற்றிய விழிப் புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

(iv) ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப் படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.

(v) நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

(vi) தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங் கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணி களுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனித வள அபிவிருத்தி

(vii) தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய் யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாரா ததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

(viii) நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### (i) தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில் நுட்பத் தகைமை

**எழுத்தறிவு:** கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன் தருவகையான கருத்துப் பரிமாற்றம்.

**எண்ணறிவு:** பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல். எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

**சித்திர அறிவு:** கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல் விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

**தகவல் தொழில்நுட்பத் தகைமை:** கணினிஅறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

### (ii) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.

- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.

- மன எழுச்சிகள், நுண்ணறிவு

### (iii) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

***சமூகச் சூழல்:***
தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வ மானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப் பாடுகள் என்பவற்றில் அக்கறை

***உயிரியல் சூழல்:*** வாழும் உலகு, மக்கள், உயிரியல் சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

***பௌதிகச் சூழல்:*** இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும் வாழ்வதற்கும் கருவிகளையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

## (iv) வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக்கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள் பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.

அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்.
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்.
பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான சீவனோபாயத்தில் ஈடுபடல்.

## (v) சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

## (vi) ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள், மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.

## (vii) ''கற்றலுக்குக் கற்றல்'' தொடர்பான தேர்ச்சிகள்

விரைவாக மாறுகின்ற சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

**முதற்பதிப்பு - 2001**
**ஆலோசனை**
**கலாநிதி ஜீ.பீ. குணவர்தன**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
**கலாநிதி. நந்தசேன கமாச்சிகே**
பிரதிப் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்

**கலாநிதி ஜீ.எல்.எஸ். நாணயக்கார**
மேலதிக செயலாளர், (கல்வி அபிவிருத்தி) கல்வி அமைச்சு

**மேற்பார்வை**
விமல் சியம்பலாகொட
பணிப்பாளர்
ஆரம்பக்கல்வியும், விசேட கல்வியும்
தேசிய கல்வி நிறுவகம்

**பாடவிதானக்குழு**
விமல் சியம்பலாகொட
ஈ.எல். சுரநிமல
கே.ஏ.டீ.பீ. சரத்சந்திர
எம்.எல். விதானபதிரண
டபிள்யூ. தெல்தெனிய
பீ.எச்.எச்.என்.டீ. சில்வா
டபிள்யூ. எம்.கே. வீரக்கோன்
டபிள்யூ. வி. சிங்கநாத
எஸ்.ஏ. சுனில்
கே.எச். பரணவிதான
ரீ.கே. வீரதுங்க
ஐரின் கஜநாயக்க
கே.டீ.ஆர். தயாவங்ச
ஏ. அத்துகோரள
நந்தா பென்தரகே
எஸ்.எம்.ஆர். சூதின்
டீ.எம்.டப்ளியூ. முனசிங்ஹ
எம்.ஏ.ஜீ.டப்ளியு. குலரத்ன
பீ.ஜீ. பிரேமலதா ஜயசிங்ஹ
எம்.ஆர்.டப்ளியூ. மத்தும
கே.ஆர். பத்மசிறி
எம்.என்.சீ. பெர்ணாந்து
ஆர்.எம்.கே. த சில்வா
வி.என்.எஸ் உதயசந்திரன்
எஸ்.ஐ.எம்.எச்.கரீம் (ஓய்வுபெற்ற செ.அ)
பீ. சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற பி.செ.அ)
எஸ்.எம். விஜயரத்ன (ஓய்வுபெற்ற செ.அ)

**கணினித்தொழில்நுட்பம்**
கமலவேணி கந்தையா

**மீளாய்வு செய்யப்பட்ட பதிப்பு - 2009**
**ஆலோசனை**
பேராசிரியர் லால் பெரேரா
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

திரு. விமல் சியம்பலாகொட
உதவிப் பணிப்பாளர் நாயகம்
(மொழிகள், மானுடவியல் சமூக விஞ்ஞான பீடம்)

**மேற்பார்வை**
கலாநிதி. சுரநிமல லேகம்கே
பணிப்பாளர் - முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்

**இணைப்பாக்கமும் பதிப்பும்**
எஸ்.எம்.ஆர். சூதின்
பிரதம செயற்றிட்ட அதிகாரி
முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும்
ஆரம்பக்கல்வித் துறை - தே.க.நி

**கலைத்திட்டக்குழு**
**முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித்துறை**
கலாநிதி. சுரநிமல லேகம்கே
கே.ஏ.டீ.பீ. சரத்சந்திர
எம்.பீ.எஸ்.த. சில்வா
எஸ்.எம்.ஆர். சூதின்
டீ.எம்.டப்ளியூ. முனசிங்ஹ
எம்.ஏ.ஜீ.டப்ளியூ. குலரத்ன
பிரேமலதா ஜயசிங்ஹ
எம்.ஆர்.டப்ளியூ. மத்தும
கே.ஆர். பத்மசிறி
எம்.என். சந்தன பெர்ணாந்து
ஆர்.எம்.கே.த. சில்வா
வி.என்.எஸ். உதயசந்திரன்
எச்.டப்ளியு.டப்ளியு.எம். சஜீவா ருவனி
எஸ்.எம். சதமாலி சேதப்பரிய
ஐ.ஜீ.எஸ். பிரேமசிறி
டப்ளிவ்.ஜீ.எஸ். குமார்
ஜே.ஏ. நிர்மலா தமயந்தி ஜயசிங்ஹ

**தாய்மொழி - தமிழ்**
திரு. வி.என்.எஸ். உதயசந்திரன்
செயற்றிட்ட அதிகாரி
முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும்
ஆரம்பக்கல்வித் துறை - தே.க.நி

**வெளி வளவாளர்கள்**
பத்மினி ரணவீர
ரேணுகா பீரிஸ்

**ஆங்கிலக் கல்வித்துறை**
டீ. சந்திரிகா பீரிஸ்

**மொழிச்செம்மையாக்கம்**
திரு. வி.என்.எஸ். உதயசந்திரன்
எம்.எச்.எம். யாகூத்


**அட்டைப்பட வடிவமைப்பு**
திரு. வி.என்.எஸ். உதயசந்திரன்


**படம்**
அமரா அமரசிங்ஹ/ரவீந்திர தேனுவர

**கணினிப் பதிப்பும் பக்க வடிவமைப்பும்**
எப். நிஸ்மியா அமீர்

# கல்விச் சீர்திருத்தங்கள் - மறுசீரமைப்பு

## ஆரம்பக் கல்வித் திட்டம் - (1998) - 2007



## புதிய கல்விச் சீர்திருத்தங்கள் - மறுசீரமைப்பின் கீழ் ஆரம்பக்கல்விப் கலைத்திட்டத்தின் விசேட பண்புகள்

- ஐந்து ஆண்டுகளைக் கொண்ட ஆரம்பக்கல்விப் புலம் கலைத்திட்ட விருத்தியினதும் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளினதும் வசதி கருதி மூன்று முதன்மை நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

  முதன்மை நிலை 1 - **தரங்கள் 1 உம் 2 உம்**
  முதன்மை நிலை 2 - **தரங்கள் 3 உம் 4 உம்**
  முதன்மை நிலை 3 - **தரம் 5**

- தரம் 1 இல் பிரவேசிக்கும் பிள்ளையை இனங்காண்பதற்கு வசதியான செயற்பாடுகள் இனங்காணப்பட்டுள்ளன.

- பொதுக்கல்வி நிலை இறுதியில் மாணவர்களிடம் விருத்தி செய்யப்பட்டிருக்க வேண்டும் என விதந்துரைக்கப்பட்ட அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் வெளியிடப்பட்டுள்ளன. அத்தேர்ச்சிகளைக் கட்டியெழுப்புவதற்குப் பொருத்தமான அடித்தளத்தை இட்டுச் செல்லும் கலைத்திட்டமாக, தேர்ச்சி சார்ந்த கலைத்திட்டமாக உள்ளது.

- பாட விடயங்கள் நான்காக வகுக்கப்பட்டுள்ளன.
  - **மொழி**
  - **கணிதம்**
  - **சமயம்**
  - **சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்**

- பிள்ளையின் பூரண விருத்திக்கு மொழி, கணிதத் தேர்ச்சிகளுடன் வேறு சில தேர்ச்சிகளும் விருத்தி செய்யப்படவேண்டியது அவசியமாகும்.
  ***எடுத்துக்காட்டு:*** அழகியல், ஆக்கம், விஞ்ஞானம், விழுமியம், உடல் விருத்தி, சுகாதாரம் சார்ந்த தேர்ச்சிகள்

- இத்தேர்ச்சிகளைத் தனித்தனிப் பாட அலகுகள் மூலம் முன்வைப்பதை விட பிள்ளை களுக்குப் பொருத்தமான கருப்பொருள்கள் மூலம் வெளிக்கொணர்ந்து எய்துவதே சிறந்ததென ஏற்றுக்கொள்ளப்படடுள்ளது. 16 கருப்பொருள்களைக் கொண்ட **சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்** எனும் பாடப்பரப்பு முன்பை விட ஒன்றிணைக்கப்பட்ட பண்பைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

- தரம் 1 இலிருந்து **செயற்பாடுகள் சார்ந்த வாய்மொழி ஆங்கிலமும், இரண்டாவது தேசிய மொழியும்** (சிங்களம்/தமிழ்மொழிப் பாடங்கள்) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- முதன்மை நிலை 2 இலிருந்து முறைசார் **ஆங்கிலம்** சேர்க்கப்பட்டுள்ளது.

- தரம் 1 இலிருந்து தொடர்ச்சியாக பாட **இணைச் செயற்பாடுகளுக்கும்,** தரம் 5 இல் பிள்ளைகளின் விருப்புக்கும், தேவைக்குமேற்பப் பொருத்தமான **விருப்புப் பாடங்களைக்** கற்பதற்கும் கால அட்டவணையில் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

- ஆரம்பக்கல்விப் பருவத்தினருக்குப் பொருத்தமாக மேற்கொள்ளக்கூடிய கற்றல் - கற்பித்தல் முறைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை:
    - **விளையாட்டுக்களும் விநோதச் செயற்பாடுகளும்**
    - **செயற்பாடுகள்**
    - **எழுத்து வேலைகள்**

முதன்மை நிலை 1 இல் விளையாட்டுக்களுக்கும் செயற்பாடுகளுக்கும் அதிக அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு முதன்மை நிலைகள் மூன்றிலும் கற்றல் - கற்பித்தல் முறைகள் ஒழுங்கமைக்கப்பட்டுப் படிப்படியாக மாறிச் செல்லும் விதத்தில் அவை வடிவமைக்கப்பட்டுள்ளன.

- பிள்ளையின் முன்னேற்றம், கற்றல் இடர்ப்பாடுகள் தொடர்பாக தகவல் சேகரிப்ப தற்கு முறைசாராத கணிப்பீடு முறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்ற அதாவது, தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டிய தொடர் கணிப்பீட்டிற்காக முன்னுரிமை பெறுகின்ற கணிப்பீட்டுச் செயல்முறையை நடைமுறைப்படுத்தல்.

- யாவருக்கும் கல்வியை உறுதி செய்வதை இலக்காகக் கொண்டு அதற்குத் தரநிர்ண யமுள்ள ஒவ்வொரு முதன்மைநிலை இறுதியிலும் மாணவர்கள் கட்டாயமாக பாண்டித்தியம் அடையவேண்டிய அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன.

- ஒவ்வொரு முதன்மைநிலை இறுதியிலும் எதிர்பார்க்கின்ற அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகளில் சகல மாணவர்களும் பாண்டித்தியம் அடைய வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டு ஒவ்வொரு முதன்மைநிலையும் ஒரே ஆசிரியரிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

- ஒரு பிள்ளையின் அடைவை இன்னொரு பிள்ளையின் அடைவோடு ஒப்பிட்டுத் தீர்மானம் எடுக்கும் முறைமையை விடுத்து, குறித்தவொரு நோக்குடன், நியதியுடன் அடைவை ஒப்பிட்டு தீர்மானம் மேற்கொள்வதற்கு, நியதிசார்ந்த அடிப்படை கணிப்பீடு முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

- முதன்மை நிலை 1 இன் பிள்ளைகள் தரம் 5/6 இன் பிள்ளைகளுடன் சேர்ந்து ஒழுங்கமைப்புடன் செயற்பாடுகளிலும் விளையாட்டுக்களிலும் ஈடுபடுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

- 2007 ஆம் ஆண்டு முதல், முதன்மை நிலை ஒன்று தொடக்கம் இரண்டாவது தேசிய மொழியும் அறிமுகம் (சிங்களம்/தமிழ்) செய்யப்பட்டுள்ளது.

- 2007 ஆம் ஆண்டு முதல் செயற்பாடு அடிப்படையிலான வாய்மொழி ஆங்கிலம் கணித பாடத்துடனும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

- மாணவர்களின் உடல், உள விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தில் உடலியக்கச் செயற்பாடுகள் எனும் வேலைத்திட்டம் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் முதன்மை நிலை ஒன்றிலிருந்து அறிமுகம் செய்யப்படுகின்றது.

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| **1.0** | **நேரப்பகிர்வு** | xiii |
| **2.0** | **தாய்மொழி (தமிழ்)** | |
| | **அறிமுகம் - பாடத்திட்டம்** | 01 |
| | **கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்** | 11 |
| | 01. செவிமடுத்தல் | 16 |
| | 02. பேசுதல் | 63 |
| | 03. வாசித்தல் | 93 |
| | 04. எழுதுதல் | 139 |
| | **கணிப்பீட்டுப்படிவம் - தாய்மொழி (தமிழ்)** | 196 |
| | **முதன்மைநிலை மூன்றில் மாணவர்களின் வாசிப்பு, எழுத்து தொடர்பான இடர்பாடுகள்** | 197 |
| **3.0** | **சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்** | |
| | **அறிமுகம் - பாடத்திட்டம்** | 209 |
| | **கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்** | 223 |
| | 1.0 எமது நல்வாழ்வு | 225 |
| | 2.0 எம்மைச் சூழவுள்ள பிராணிகள் | 234 |
| | 3.0 நிலமும் வானமும் | 243 |
| | 4.0 நாமும் சந்தையும் | 256 |
| | 5.0 மரஞ்செடிகொடிகள் | 263 |
| | 6.0 நீர் | 274 |
| | 7.0 வீட்டுத்தோட்டம் | 281 |
| | 8.0 பாதுகாப்பும் கரிசனையும் | 289 |
| | 9.0 எமது பண்டைய தகவல்கள் | 299 |
| | 10.0 வேலைகளை இலகுவாக்கும் வழிகள் | 305 |
| | 11.0 நாம் இலங்கையர் | 319 |
| | 12.0 எம்மால் செய்யக்கூடிய மாற்றங்கள் | 333 |
| | 13.0 மனிதனும் தகவல்களும் | 340 |
| | 14.0 எமது உணவு | 350 |
| | 15.0 போக்குவரத்து | 361 |
| | 16.0 மனித நடத்தைகள் | 368 |
| | **கணிப்பீட்டுப்படிவம் - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்** | 381 |
| **4.0** | **செயற்பாட்டு அடிப்படையிலான வாய்மொழி ஆங்கிலம்** | 382 |
| **5.0** | **இரண்டாம் தேசிய மொழி சிங்களம்** | |
| | **அறிமுகம் - பாடத்திட்டம்** | 399 |
| | **கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்** | 407 |
| **6.0** | **விசேட கல்வித் தேவைகள்** | 445 |
| **7.0** | **மாணவர்களின் விருப்புக்குரிய பாடங்கள்** | 451 |
| **8.0** | **மாணவர் முன்னேற்றத்தைக் கணிப்பீடு செய்தல்** | 453 |
| **9.0** | **பொதுக் கணிப்பீட்டுப்படிவம்** | 460 |


**கணிதம், சமயங்கள் தொடர்பான பாடத்திட்டங்களும், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளும் தனித்தனியாக முன்வைக்கப்பட்டுள்ளன.**

## பாட நேரம்

### நேர ஒதுக்கீடு முதன்மைநிலை - மூன்று
### (தரம் 5)

| விடயம் | வாரத்திற்கான நேரம் |
|---|---|
| 1. தாய்மொழி | 5 மணித்தியாலங்கள் |
| 2. கணிதம் | 5 மணித்தியாலங்கள் |
| 3. சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் | 7 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள் |
| 4. ஆங்கிலம் | 3 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள் |
| 5. இரண்டாவது தேசிய மொழி சிங்களம் | 1 மணித்தியாலங்கள் |
| 6. சமயம் | 2 மணித்தியாலங்கள் |
| 7. காலைக்கூட்டமும் சமய அனுட்டானமும் | 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள் |
| 8. ஓய்வு (இடைவேளை) | 1 மணித்தியாலம் 40 நிமிடங்கள் |
| 9. உடலியக்கச் செயற்பாடுகள் | 2 மணித்தியாலம் 05 நிமிடங்கள் |
| 10. இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் | 30 நிமிடங்கள்(வாரத்தில் ஒரு நாள்) |
| 11. விருப்பிற்குரிய செயற்பாடுகள் | 30 நிமிடங்கள்(வாரத்தில் ஒரு நாள்) |
| **வாரத்திற்கான மொத்த நேரம்** | **30 மணித்தியாலங்கள்** |

# தாய்மொழி - தமிழ்

## அறிமுகம்

ஆரம்பக் கல்விப்புல - தாய்மொழிப் பாடத்திற்கான விடயக்கூறுகள் அடிப்படை மொழித்திறன்களான செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய பரப்புகளின் கீழ் வகுக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் பாட விடயக்கூறுகளைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே அவை மொழித்திறன் வாரியாக வகுக்கப்பட்டுள்ளன. கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளின்போது ஆசிரியர் அவற்றைப் பொருத்தமாக ஒன்றிணைத்தே செயற்படுத்த வேண்டும்.

தேர்ச்சி மைய, பாடத்திட்ட விருத்திப் பிரவேசத்தின் போது மொழிப்பாட வாரியான தேர்ச்சிகளுக்கு முக்கியத்துவமளிக்க வேண்டும். தேசிய கல்வி ஆணைக்குழு 2003ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ள அறிக்கையில் (மனித விருத்தி பற்றிய தொலைநோக்கு...) பொதுத்தேர்ச்சிக் குறிக்கோள்களை அடைவதற்கு மாணவர்கள் எய்த வேண்டிய அடிப்படைத் தேர்ச்சிகளை விதந்துரைத்துள்ளது. அதாவது தொடர்பாடல் தேர்ச்சிகள் இவற்றுடன் ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள், சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகளுக்கான தேர்ச்சிகள், வேலை உலகிற்குத் தயார்ப்படுத்துதலுக்கான தேர்ச்சிகள், சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள், ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டுப் பற்றிய தேர்ச்சிகள், கற்றலுக்கான கற்றல் தொடர்பான தேர்ச்சிகள் ஆகியன விருத்தி அடைந்து செல்லும் விதமாகக் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள் அமைதல் சிறந்ததாகும்.

## ஆரம்பக்கல்விப் புலத்தில் எதிர்பார்க்கப்படும் மொழி சார்ந்த தேர்ச்சிகள்

- ✓ அன்றாட தேவைகளுக்காகச் செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய தொடர்பாடல் திறன்களை வெளிப்படுத்துவார்.
- ✓ கவிதை, பாடல், கதை ஆகியவற்றைக் கேட்டும், வாசித்தும் இரசிப்பார்.
- ✓ எழுத்துக்கள், சொற்களைச் சரியாக உச்சரித்து உரத்து வாசிப்பார்.
- ✓ படிப்படியாக தெளிவாகவும் பிழையின்றியும் எழுதுவார்.
- ✓ செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் தொடர்பான நல்ல பண்புகளை வெளிப்படுத்துவார்.
- ✓ புத்தகங்களை வாசித்து விளங்கிக்கொள்வார், இரசிப்பார்.
- ✓ தமது கருத்துக்களை வெளிப்படுத்திக் காட்டுவார்.
- ✓ சமுதாயத்தின் மத்தியில் தமது எண்ணங்களைச் சிநேகபூர்வமாகவும் பண்பாகவும் வெளிப்படுத்துவார்.
- ✓ கற்றலுக்காகக் கற்பார்.

## தரம் ஐந்தில் எதிர்பார்க்கும் மொழித் தேர்ச்சிகள்

- ✓ சந்தர்ப்பங்களுக்கேற்ப சொற்களின் கருத்தை விளங்கித் துலங்குவார்.
- ✓ ஒலித்தல் வேறுபாட்டுச் சொற்களை இனங்கண்டு வேறுபடுத்தி உச்சரிப்பார்.
- ✓ செவிமடுத்துக் கிரகிப்பார்/துலங்குவார்.
- ✓ பண்புடன் செவிமடுப்பார்.
- ✓ தொடர்பாடலுக்காகச் செவிமடுத்துத் துலங்குவார்.
- ✓ இரசனைக்காகச் செவிமடுப்பார்.
- ✓ கற்றலுக்காக - கற்கச் செவிமடுப்பார்.
- ✓ நாளாந்தத் தேவைகளுக்காகப் பேசுவார்.
- ✓ தொடர்பாடலுக்காகப் பேசுவார்.
- ✓ பேச்சுத்திறனை விருத்தி செய்து வெளிப்படுத்துவார்.
- ✓ ஆக்கத்திறன் விருத்திக்காகப் பேசுவார்.
- ✓ இரசனைக்காகவும் பேச்சுத் திறன் விருத்திக்காகவும் பேசுவார்/பாடுவார்/ நடிப்பார்.
- ✓ வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார்.
- ✓ சொற்களஞ்சிய விருத்திக்காக வாசிப்பார்.
- ✓ இரசித்தலுக்காக வாசிப்பார்.
- ✓ கற்றலுக்காக - கற்க வாசிப்பார்.
- ✓ இரசனைக்காக வாசிப்பார்.
- ✓ தொடர்பாடலுக்காக வாசிப்பார்.
- ✓ எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து நேர்த்தியாக எழுதுவார்.
- ✓ கிரகித்து எழுதுவார்.
- ✓ நாளாந்தத் தேவைகளுக்காக எழுதுவார்.
- ✓ ஆக்கத்திறனை வெளிப்படுத்தி எழுதுவார்.
- ✓ நியமமொழியை அனுசரித்து எழுதுவார்.
- ✓ விரைவாக எழுதும் திறனை விருத்தி செய்து துலங்குவார்.
- ✓ மொழிப் பயிற்சிகளில் ஈடுபடுவார்.

# பாடத்திட்டம்

## 1.0 செவிமடுத்தல்

### 1.1 கிரகிக்கும் திறனை விருத்தி செய்வதற்காகவும் சொற்களின் பொருளை விளங்கிக்கொள்வதற்காகவும் வினைத்திறனுடன் செவிமடுப்பார்.

**1.1.1. சந்தர்ப்பத்திற்கேற்பச் சொற்களின் கருத்தை விளங்கித் துலங்குவார்.**

* ஒத்தகருத்துச் சொற்கள்
* எதிர்க்கருத்துச் சொற்கள்
* எதிர்ப்பாற் சொற்கள்

**1.1.2 ஒலித்தல் வேறுபாட்டுச் சொற்களைச் செவிமடுத்து, இனங் கண்டு வேறுபடுத்தி உச்சரிப்பார்.**

* லகர, ளகர, ழகர வேறுபாட்டுச் சொற்கள்
* னகர, ணகர, நகர வேறுபாட்டுச் சொற்கள்
* ரகர, றகர வேறுபாட்டுச் சொற்கள்

**1.1.3 செவிமடுத்துக் கிரகிப்பார் / துலங்குவார்.**

* **பிறர் கூறுவதை உன்னிப்பாகச் செவிமடுத்து விளங்கித் துலங்குதல்**
  - ✓ அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள், அறிவுரைகள்
  - ✓ உரையாடல்கள், பேச்சுக்கள், வருணனைகள், விவரணங்கள்

* **பொறுமையாகச் செவிமடுத்தல்**
  - ✓ வானொலி தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் (தெரிவுசெய்யப்பட்ட)
  - ✓ ஒளி, ஒலி நாடாக்கள்

* **அவதானித்துச் செவிமடுத்தல் / துலங்குதல்**
  - ✓ சாராம்சம் கூறுதல்
  - ✓ கதைகள், நாடகங்கள், என்பவற்றில் வரும் கதாபாத்திரங்களின் குண இயல்புகளைக் கூறுதல்
  - ✓ உவமைகள், பழமொழிகள், இணைமொழிகள், மரபுத் தொடர்கள் என்பவற்றை இணங்கான உதவுதல்
  - ✓ செவிமடுத்த விடயங்கள் பற்றிச் சிந்தித்தல், ஆராய்தல்
  - ✓ செவிமடுத்த விடயங்களை மீண்டும் நினைவு கூருதல்
  - ✓ தொடர்புகாணுதல், எதிர்வுகூறுதல்

### 1.2 பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ற வகையில் செவிமடுத்துத் துலங்குவார்.

#### 1.2.1 பண்புடன் செவிமடுப்பார்.

* பெரியோர், மூத்தோர் முன்னிலையில்
* நண்பர்கள், உறவினர்கள் முன்னிலையில்
* சபையில்
* கற்கும் சந்தர்ப்பங்களில்

#### 1.2.2 தொடர்பாடலுக்காகச் செவிமடுத்துத் துலங்குவார்.

* பெற்றோர் மற்றும் குடும்ப உறுப்பினர்களுடன்
* நண்பர்களுடன்
* ஆசிரியர்களுடன்
* பாடசாலையில் உள்ள ஏனையோர்களுடன்
* ஏனைய பாடசாலை மாணவர்களுடன்
* சமுதாய அங்கத்தவர்களுடன்

#### 1.2.3 இரசனைக்காகச் செவிமடுப்பார்.

* கதைகள்
* பாடல்கள், கவிதைகள்
* கிராமியப் பாடல்கள்
* உரையாடல்கள்
* நாடகங்கள்
* விகடப் பேச்சுக்கள்
* வருணனைகள்
* இலத்திரனியல் ஊடக நிகழ்ச்சிகள்

#### 1.2.4 கற்றலுக்காகக் கற்கச் செவிமடுப்பார்.

* பாடசாலை, கிராமம், நாடு தொடர்பான முக்கிய தகவல்கள் (அவை பற்றித் தெரிந்த பெரியவர்களிடம்)
* முக்கிய நிகழ்ச்சிகளும், நிகழ்ச்சிகள் தொடர்பான விவரணங்களும்
* உலகின் முக்கிய இடங்கள், ஆறுகள், மலைகள், பிராணிகள், தாவரங்கள் மற்றும் விந்தை உலகம் பற்றிய தகவல்கள் (வளவாளர்களிடம்)
* இலத்திரனியல் ஊடகங்களினூடாகப் பெறக்கூடிய பயனுள்ள தகவல்கள்

## 2.0 பேசுதல்

### 2.1 பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்பக் கருத்துக்களை வெளிப்படுத்தும் வகையில் ஆக்கபூர்வமாகப் பேசுவார்/உரையாடுவார்.

#### 2.1.1. நாளாந்த தேவைகளுக்காகப் பேசுவார்.

* பல்வேறு தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக உரையாடுதல்
* எண்ணங்கள், கருத்துக்களை வெளிப்படுத்தல்
* உணர்வுகளை வெளிப்படுத்தல்
* கருத்தொன்றை வலியுறுத்திப் பேசுதல்
* அனுபவங்களைத் தெளிவாகக் கூறுதல்

### 2.1.2 தொடர்பாடலுக்காகப் பேசுவார்.

- தகவல் பரிமாற்றம்
- அறிவித்தல்களைக் கூறுதல்
- அறிவுறுத்தல்களைக் கூறுதல்
- குறித்த நோக்கத்திற்காக ஒருவரை வழிப்படுத்தல்
- தொலைபேசியில் உரையாடுதல்
- ஊடகங்களுடன் உரையாடுதல்
- வினாக்கேட்டலும் விடையளித்தலும்

### 2.1.3 பேச்சுத்திறனை விருத்தி செய்வார்.

- ஒலித்தல் வேறுபாடுகளை அனுசரித்துப் பேசுதல்
- தொனி வேறுபாடுகளுடன் உணர்வுபூர்வமாகப் பேசுதல்
- தெளிவாகவும் ஏனையோருக்கு விளங்கும் வகையிலும் வலுவூட்டிப் பேசுதல் (எடுத்துக்காட்டுகள், மேற்கோள்கள்)
- சபை/குழு/வகுப்பு என்பவற்றின் முன் கூச்சமின்றிப் பண்பாகப் பேசுதல் (தலைமையுரை, வரவேற்புரை, நன்றியுரை)
- ஒரு பொருள் பற்றி முன்னாயத்தத்துடன் பேசுதல்
- ஒரு பொருள் பற்றி முன்னாயத்தமின்றிப் பேசுதல்

### 2.1.4 ஆக்கத்திறன் விருத்திக்காகப் பேசுவார்.

- படம் பார்த்துக் கதை கூறுதல்
- கதைகளைப் பூர்த்தி செய்து கூறுதல்
- பாத்திரமேற்று நடித்துப் பேசுதல்
- பாவனை செய்து பேசுதல்
- சம்பவங்கள், விடயங்கள், விபரங்கள் என்பவற்றை ஒழுங்கு படுத்திக் கூறுதல்
- விவாதங்களிற் பங்குபற்றி ஒட்டியும் வெட்டியும் பேசுதல்

### 2.1.5 இரசனைக்காகவும் மொழிவிருத்திக்காகவும் பேசுவார்/ பாடுவார்/நடிப்பார்.

- கதை கூறுதல்
- பார்த்த நிகழ்வுகளை விபரித்தல்
- பாடல்களைத் தாளத்துடன் பாடுதல்
- விடுகதைகள், புதிர்கள் ஆகியவற்றை விடுத்தலும் விடுவித்தலும்
- தகவல்களைச் சேகரித்து விவரித்தல்
- பிறர் ஏற்றுக்கொள்ளும் வகையில் தமது கருத்துக்களை வலியுறுத்திக் கூறுதல்
- விவாதித்தல்/பட்டிமன்றத்தில் பங்குபற்றுதல்
- வினாக்களைக் கேட்டுக் கிரகித்து விடை கூறுதல்
- தடயம் கூறி விளையாடுதல்

# 3.0 வாசித்தல்

## 3.1 பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப கருத்துப் புலப்படும் வகையில் திருத்தமாக வாசிப்பார்.

### 3.1.1. வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார்.

* எழுத்துக்களின் இயல்பொலி, மாற்றொலி என்பன புலப்பட உரத்து வாசித்தல்
* ஒலித்தல் வேறுபாடுகளை அனுசரித்து வாசித்தல்
* உயிர்க்குறிகளை அனுசரித்து வாசித்தல்
* நிறுத்தக் குறிகளை அனுசரித்து வாசித்தல்
* கேட்போருக்கு விளங்கும் வகையில் ஏற்ற தொனி வேறுபாடு களுடனும் உரிய வேகத்துடனும் வாசித்தல்

### 3.1.2. கிரகித்தலுக்காக வாசிப்பார்.

* வாசிப்புப் பழக்கத்தை விருத்தி செய்தல்
  - ✓ **உரத்து வாசித்தல்**
    - பாடநூல், துணை வாசிப்பு நூல்கள்
    - அறிவித்தல்கள்
    - அறிவுறுத்தல்கள்
    - துண்டுப்பிரசுரங்கள்
    - சுவரொட்டிகள்
    - விளம்பரங்கள்
  - ✓ **மௌனமாக வாசித்தல்**
    - பாடநூல்கள்
    - துணை வாசிப்பு நூல்கள்
    - பல்வேறு பகுதிகள்
* **கருத்தூன்றி வாசித்தல்**
  - ✓ விடயத்திற்க்கும் தலைப்புக்கும் இடையிலான தொடர்பை இனங்காணுதல்
  - ✓ பிரதான கருத்தை இனங்காணுதல்
  - ✓ படிப்பினைகள், விழுமியங்கள் என்பவற்றை உய்த்தறிதல்
* **வாசிப்பு வேகத்தை விருத்தி செய்தல்**
  - ✓ இலத்திரனியல் ஊடகங்களில் வெளிவரும் செய்திகளை வாசித்தல்/தகவல்கள் என்பவற்றை வாசித்தல்

### 3.1.3. சொற்களஞ்சிய விருத்திக்காக வாசிப்பார்.

* புதிய சொற்கள்
* மரபுச் சொற்கள்
* மரபுத் தொடர்கள்
* சுருக்கக் குறியீடுகள் இடப்பட்ட பகுதிகள்
* குறியீடுகள்
* பழமொழிகள்
* பத்திரிகைகள்/சஞ்சிகைகள்
* ஏனைய பாட நூல்கள்
* சிறுவர் அறிவியல் நூல்கள்
* அகராதி
* சிறுவர் கலைக்களஞ்சியம்

### 3.1.4 தொடர்பாடலுக்காக வாசிப்பார்.

* அழைப்பிதழ்கள்
* அறிவித்தல்கள்
* அறிக்கைகள்
* சுவரொட்டிகள்
* துண்டுப்பிரசுரங்கள்
* விளம்பரங்கள்
* இணையத்தளம் (Website)
* மின்னஞ்சல் (E-mail)
* குறுஞ்செய்தி (SMS)

### 3.1.5 இரசனைக்காக வாசிப்பார்.

* உணர்ச்சி வெளிப்பாடு, தொனி வேறுபாடு, முகபாவம் என்பன வெளிப்பட வாசித்தல்
  - ✓ சிறுவர் பாடல்கள்/கவிதைகள்
  - ✓ கதைகள்
  - ✓ நாடகங்கள்
  - ✓ சித்திரக்கதைகள்
  - ✓ சஞ்சிகைகள்
  - ✓ விகடத் துணுக்குகள்
  - ✓ பழமொழிகள், உவமைகள், மரபுத் தொடர்கள், இரட்டைக்கிளவி, இணைமொழிகள் போன்றவை அமைந்துள்ள பகுதிகள்
  - ✓ படிப்பினைகள், விழுமியங்கள்

### 3.1.6 கற்றலுக்காகக் கற்க வாசிப்பார்.

* பத்திரிகைகள்/சஞ்சிகைகள்
* பல்வேறுபட்ட நூல்கள்
* சிறுவர் பாடல்கள்
* விடுகதைகள், புதிர்கள்
* இலத்திரனியல் ஊடகங்களில் வெளிவரும் தகவல்கள்

# 4.0 எழுதுதல்

## 4.1 கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு எழுத்தாக்க நுட்பங்களையும், முறைகளையும் பயன்படுத்தி எழுதுந் திறனை விருத்தி செய்வார்.

### 4.1.1. எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து எழுதுவார்.

* அமைப்பு, அளவு, திசைமுகம், உறுப்பு, ஆகியவற்றை அனுசரித்து எழுதுதல்
* உயிர்க்குறிகளை அனுசரித்து எழுதுதல்
* நிறுத்தக் குறிகளை (முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி, வியப்புக்குறி, மேற்கோட்குறி, அடைப்புக்குறி, இடையீட்டுக் கோடு) அனுசரித்து எழுதுதல்

* சொல், வாக்கியம், பந்தி என்பவற்றுக்கிடையே ஏற்ற இடைவெளி விட்டு எழுதுதல்
* நெடுங்கணக்கு ஒழுங்குமுறையைப் பின்பற்றி எழுதுதல்.
* ஒலித்தல் வேறுபாடுகளை அனுசரித்து எழுதல் (எழுத்துக்கள், சொற்கள்)

### 4.1.2 கிரகித்து எழுதுவார்.

* செவிமடுத்துக் கிரகித்து வினாக்களுக்கு விடை எழுதுதல்
* வாசித்துக் கிரகித்து வினாக்களுக்கு விடை எழுதுதல்
* செவிமடுத்த/வாசித்த விடயங்களை நினைவுபடுத்தி எழுதுதல்
* சொல்வதெழுதுதல் / கேட்டெழுதுதல்
* வாசித்த, செவிமடுத்த பகுதிகளில் இடம் பெற்றுள்ள அடை மொழிகள், மரபுத்தொடர்கள், இரட்டைக்கிளவி, இணைமொழிகள், பழமொழிகள், உவமைத் தொடர்கள் என்பவற்றை இனங்கண்டு எழுதுதல்
* சிறிய கதை / உரைப்பகுதி / பாடல் என்பவற்றிற்குப் பொருத்தமான தலைப்பினை இடுதல்
* சிறிய கதை / உரைப்பகுதி / பாடல் என்பவற்றின் பிரதான கருத்தை, சாராம்சத்தை எழுதுதல்
* தொடர்புபடுத்தல், எதிர்வுகூறல்

### 4.1.3 நாளாந்தத் தேவைகளுக்காக எழுதுவார்.

* சுயவிபரம் எழுதுதல்
* படிவங்களைப் பூர்த்தி செய்தல்
* கடிதம் (உறவுமுறை, உத்தியோகபூர்வமான) எழுதுதல்
* அறிவித்தல்கள் எழுதுதல்
* அறிவுறுத்தல்கள் எழுதுதல்
* நிகழ்ச்சி நிரல் எழுதுதல்
* தினக்குறிப்பு எழுதுதல்
* அழைப்பிதழ் எழுதுதல்
* மின்னஞ்சல் எழுதுதல் / குறுஞ் செய்திகள் அனுப்புதல்
* குறியீடுகளுக்கான விளக்கம் எழுதுதல்

### 4.1.4 ஆக்கத்திறனை வெளிப்படுத்தி எழுதுவார்.

* ஒரு பொருள் பற்றி வாக்கியங்கள் எழுதுதல்
* படம் பார்த்து விளக்கம் எழுதுதல் / வருணித்து எழுதுதல்
* படம் பார்த்துக் கவிதைகள் எழுதுதல்
* பழமொழிகள், மரபுப் பெயர்கள், உவமைகள், இரட்டைக்கிளவி, இணைமொழிகள், மரபுத் தொடர்கள் என்பவற்றைத் தமது ஆக்கங்களிலே பயன்படுத்தி எழுதுதல்
* தமது அனுபவங்களை எழுதுதல்
* கவிதைகளை ஆக்குதல்
* அவதானித்தவற்றை விவரித்து எழுதுதல்
* வழிகாட்டற் குறிப்புகளின் துணையுடன் கதை, கட்டுரை என்பவற்றை எழுதுதல்

* சுயசரிதை எழுதுதல்
* சிறுவர்களுக்கான கதைகளை எழுதுதல்
* விளம்பரங்கள், துண்டுப்பிரசுரங்கள் என்பவற்றை எழுதுதல்
* உரையாடல்கள்/ பொம்மலாட்ட உரையாடல்கள் என்பவற்றை எழுதுதல்

### 4.1.5 நியமமொழியை அனுசரித்து எழுதுவார்.

* பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள் என்பனவற்றை இனங்கண்டு எழுதுதல்
* பெயராகவும் வினையாகவும் வரும் சொற்களை வைத்து வாக்கியங்கள் எழுதுதல்
* சேர்த்தெழுதுதல், பிரித்தெழுதுதல்
* சொற்றொடர்கள், வாக்கியங்கள் என்பனவற்றை எழுதுதல்
* திணை, பால், எண், இடம், காலம் என்பனவற்றை அனுசரித்து வாக்கியம் எழுதுதல்
* எழுவாய், பயனிலைகள் பொருத்தமாக அமைய வாக்கியங்களை எழுதுதல்
* வாக்கியங்களில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பன வற்றை இனங்கண்டு எழுதுதல்
* வாக்கியங்களில் அடைமொழிகளைக் கையாண்டு எழுதுதல்
* பேச்சு வழக்குச் சொற்களை நியம மொழியில் எழுதுதல்
* செம்மையான மொழிநடையிற் சரளமாக (தனிவாக்கியங்கள், தொடர்வாக்கியங்கள்) எழுதுதல்

### 4.1.6 விரைவாகவும் எழுத்துகளை உறுப்பமையவும் எழுதுந் திறனை விருத்தி செய்வார்.

* **பார்த்தெழுதுதல்**
    - சொற்கள்
    - சொற்றொடர்கள்
    - வாக்கியங்கள்
    - பந்திகள்

* **கேட்டெழுதுதல்/சொல்வதெழுதுதல்**
    - தெரிவுசெய்யப்பட்ட சொற்கள்
    - சொற்றொடர்கள்
    - இணைமொழிகள்
    - வாக்கியங்கள்
    - பழமொழிகள்
    - சிறிய பந்திகள்

**4.1.7 மொழிப் பயிற்சிகளில் ஈடுபடுவார்.**

* ஒத்த கருத்துச் சொற்கள், எதிர்க்கருத்துச் சொற்கள், எதிர்ப்பாற் சொற்கள் என்பவற்றை இனங்கண்டு அவற்றை வாக்கியத்தில் எழுதுதல்
* ஒரு பொருள் பன்மொழி, பலபொருள் ஒரு மொழி , தொடர் மொழிக்கு ஒரு மொழி ஆகியவற்றை எழுதுதல்
* கீறிட்ட இடங்களில் சொற்களை வைத்து நிரப்புதல்
* ஒழுங்கின்றி அமைந்துள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்களை ஆக்குதல்
* சொற்கள் / சொற்றொடர்களைத் வைத்து வாக்கியமாக்குதல்
* கவிதைகளைப் பூர்த்தி செய்தல்
* தனி வாக்கியங்களைத் தொடர் வாக்கியங்களாக்குதல்
* தொடர் வாக்கியங்களைத் தனிவாக்கியங்களாக்குதல்
* வாக்கியங்களை வினா வாக்கியங்களாக மாற்றி எழுதுதல்
* குறுக்கெழுத்துப் போட்டி, புதிர்கள்
* சுருக்கக்குறியீடுகளை விரித்து எழுதுதல்
* பழமொழிகளின் பொருள் எழுதுதல்
* மரபுத் தொடர்களின் பொருள் எழுதுதல்
* உவமைகளை இனங்கண்டு எழுதுதல்
* ஒழுங்கின்றி அமைந்துள்ள வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி எழுதுதல்
* பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுதல்

## சிந்தனைக்கு:

**கேட்டேன், மறந்து போனேன்;**

**பார்த்தேன், நினைவில் வைத்தேன்;**

**செய்தேன், புரிந்து கொண்டேன்.**

**- சீனப்பழமொழி**

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

மொழித்திறன் ஒவ்வொன்றிலும் விதந்துரைக்கப்பட்ட விடயக்கூறுகளில் மாணவர்கள் உரிய தேர்ச்சி பெறுவதை உறுதிப்படுத்துவதாகக் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் அமைதல் வேண்டும்.

தரம் 5 இல் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின்போது விளையாட்டு, செயற்பாடுகள், எழுத்துவேலை ஆகியவற்றுள் எழுத்து வேலைக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். தமிழ்மொழி பாடம் கற்பிக்கப்படும்போது அதற்குரிய பாடநூலையும் உரியவாறு இணைத்துக் கற்பிக்க வேண்டும். அதற்கான வழிகாட்டலுக்கு ''ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி'' துணை புரியும்.

கதை கூறல், பாடுதல், நடித்தல், பாவனை செய்தல், செய்து காட்டுதல் செயற்பாடுகளில் ஈடுபடுதல், வாசித்தல், பேசுதல், உரையாடுதல், பரிமாறுதல், எழுதுதல், வரைதல், விளக்கங்கூறுதல் போன்றவற்றை உள்ளடக்கிய செயற்பாடுகளிலும் விளையாட்டுக்களிலும் மாணவர்களை ஈடுபடுத்தலாம்.

## பாடநூலைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள்

1. கற்பித்தலை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆசிரியர் பாடநூலை நன்கு நுணுகி ஆராய்ந்து கற்றல் வேண்டும்.


2. பாடநூலில் உள்ள பாடங்களை மாணவர்களுக்கு முன்வைக்கும்போது எமது நாடு, எமது விழுமியங்கள், விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள், உள்நாட்டு மற்றும் உலகளாவிய விடயங்கள், சுற்றுச்சூழல் அழகு மற்றும் பாதுகாப்பு, விவசாயம், இலக்கிய நயம் உலகளாவிய இலக்கியம் போன்ற பல்வேறு துறைகளை அடிப்படையாகக் கொண்ட தத்துவங்களுடன் மாணவர்களுக்கு வழங்க வேண்டியது உங்களது கடமையாகும்.

3. வருடாவருடம் பிள்ளையின் மொழித்தேர்ச்சி விருத்தியுற உதவும் வகையில் பாடநூல் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

4. செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படைத் மொழித்திறன்கள் நான்கினையும் மாணவர்கள் விருத்தி செய்து கொள்ளக்கூடிய வகையில் பாடநூலை வாசிப்பதற்கு மாத்திரம் பயன்படுத்தாமல் மேற்குறிப்பிட்ட திறன்களுடன் ஒன்றிணைக்கும் வகையில் பயன்படுத்த வேண்டும்.

5. தரம் ஐந்து ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டியிலே தரப்பட்டுள்ள தேர்ச்சிகளை அடைந்து கொள்வதற்காக முன்மொழியப்பட்டுள்ள ஏதேனும் செயற்பாடுகளுக்கு சமனான செயற்பாடுகளைப் பாடநூலில் இருந்தும் பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறே ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் உள்ள ஏதேனும் செயற்பாடு களுக்கு பாடநூலையும் உசாத்துணையாகப் பயன்படுத்த முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்கள் எவை என்பதைப் பாடநூலையும் ஆசிரிய வழியகாட்டியையும் நன்கு நுணுகி ஆராய்ந்து கற்கும்போது விளங்கிக்கொள்ள முடியும்.

6.




## பாடசாலைக்கொள்கையும் வேலைத்திட்டமும்

தமிழ்மொழிப் பாடத்துடன் இணைந்த பல செயற்பாடுகளைப் பாடசாலையில் நடைமுறைப் படுத்த முடியும்.

- காலைக்கூட்டமும் நற்சிந்தனையும்
- வகுப்புக் கூட்டம்
- கலைநிகழ்ச்சிகள்
- கண்காட்சிகள்
- சிறுவர் நிகழ்ச்சிகள் - சந்தை, சுற்றுலா போன்றவை
- சமய நிகழ்ச்சிகள்
- மாணவர் மன்றம்
- ஆசிரிய, பெற்றோர் தினம் ... போன்றவை

தரம் 5 மாணவர்கள் மொழிக் கற்றல் தேர்ச்சிகளை அடைதற்பொருட்டு பின்வரும் கொள்கைகளைப் பாடசாலை மட்டத்தில் கடைப்பிடித்தல் நன்று.

- வகுப்பறையை வளமுள்ளதாக்கல்
- மொழிக் கற்றலுக்கான வளங்களையும் வசதிகளையும் அளித்தல்.
- மாணவர் பலதரப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடத்தக்கதான வசதியளித்தல்
- இணைப்பாடத்திட்டச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல்
- பொருத்தமான ஆசிரியருக்கு இவ்வகுப்பை ஒப்படைத்தல்
- ஆசிரியருக்கு வேண்டிய சேவைக்காலப் பயிற்சி பெறச் சந்தர்ப்பமளித்தல்
- பெற்றோருடன் சாதகமான தொடர்புகளை ஏற்படுத்தல்
- மேற்பார்வை செய்தல், ஆலோசனை வழிகாட்டல்

## பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

வகுப்பறையில் ஆசிரிய மாணவரிடையே நிலவும் இடைத்தொடர்புகளுடன் கூடிய கற்றல் சூழ்நிலை மாத்திரம் மாணவரின் மொழி வளர்ச்சிக்கு போதுமானதன்று; அவ்வாறு செயற்படுத்தக்கூடிய சில வேலைத்திட்டங்கள் வருமாறு. இவை பாடசாலை மற்றும் வகுப்பறைக் கொள்கையாகத் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

- **காலைக்கூட்டமும் வகுப்புச் கூட்டமும்**
  - பேச்சுச் செயற்பாடு
  - செவிமடுத்தலுக்கான செயற்பாடு
  - அறிவித்தல்
  - செய்தி வாசிப்பு
  - நற்சிந்தனை
  - இரசிக்கும் சந்தர்ப்பங்கள் (இலத்திரனியல் ஊடகம்)

- **கலை நிகழ்ச்சிகள்**
  - ஒன்றிணைந்த அல்லது தனியாள் முன்வைப்பு
  - நடனமும் அபிநயமும்
  - விநோதச் செயற்பாடுகள்

- **கண்காட்சி**
  - ஆக்கங்கள் (புத்தகம், சஞ்சிகை, கட்டுரை)
  - சித்திரம், காட்டூன் (கருத்துப்படம்)
  - கற்றல் துணைச்சாதனங்கள்
  - கைப்பணி (கைவேலை)

- **சிறுவர் சந்தை**
  - பாத்திரமேற்றுப் பேசுதல்
  - பாத்திரமேற்று நடித்தல்
  - நடிப்பும் அபிநயமும்

- **சமய கலாசார நிகழ்ச்சிகள்**
  - பக்திப்பாடல்கள்
  - கரோல் கீதங்கள்
  - தாயைப் போற்றும் பாடல்கள், தேசாபிமானப்பாடல்கள்
  - நாடகங்கள்
  - கிராமியப்பாடல்கள்
  - வீதி நாடகம்
  - புதுவருடக்கொண்டாட்டம்

- **சிறுவர் இலக்கியமாதல்**
  - தமிழ்மொழித் தின ஒழுங்கமைப்பு
  - கையெழுத்துப் போட்டி
  - வாசிப்புப் போட்டி
  - புத்தக வெளியீடு (கவிதை, பாடல், கதை, நாடகம்)
  - நாடகப்போட்டி

- கிராமியப்பாடல்கள், கிராமிய நடனங்கள்
- அறிவிப்பாளர் போட்டி
- வாழ்த்துமடல், அழைப்பிதழ், சுவரொட்டி ஆகியவற்றைத் தயாரிக்கும் போட்டி
- சிறுவர் இலக்கியகர்த்தாக்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டும்போட்டி

- **சுவர்ப்பத்திரிகை, ஆக்கப்பலகை**
  - கையெழுத்து ஆக்கங்கள்
  - கவிதை புனைதலும் பாடல் எழுதுதலும்
  - சித்திரமும் காட்டூனும்
  - சந்தமற்ற கவிதைகள், வசனங்கள்

- **வாசகர் வட்டம்**
  - வகுப்பறை நூலகத்தைப் பயன்படுத்தல்
  - புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளைப் பரிமாறிக் கொள்ளுதல்

மேற்கூறப்பட்டுள்ள பாடசாலை வேலைத்திட்டங்களில் மாணவர்களின் மொழித் தேர்ச்சியை விருத்தி செய்வதற்கான செயற்பாடுகள் மற்றும் வேலைத்திட்டங்களை ஒழுங்கமைக்கவும், அவற்றை வருடாந்தத் திட்டமிடலில் உள்ளடக்கவும் மாணவரின் முன்னேற்றத்தைக் கணிப்பிடல்.

தரம் ஐந்தில் தாய்மொழிப் பாடத்தில் எழுத்துப் பரீட்சை போன்றவற்றிற்கு அதிக அளவு முக்கியத்துவம் வழங்கப்படுவதுடன் மாணவர்களுடன் மேற்கொள்கின்ற செயற்பாடுகளைக் கண்காணிப்பதன் ஊடாகவும் கணிப்பீட்டை மேற்கொள்ள முடியும். விளையாட்டு, விநோதச் செயற்பாடுகள், பாடப்புத்தகப் பயன்பாடு போன்ற சந்தர்ப்பங்களில் கண்காணிப்பு, கலந்துரையாடல், வாய்மொழி வினாக்களை வினவுதல் போன்ற தரம் ஐந்திற்குரிய தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்கும் தகவல்களை சேகரித்துக் கணிப்பீட்டில் ஈடுபடுவதற்கும் முடியும்.

### மாணவரின் முன்னேற்றத்தைக் கணிப்பிடுவதற்காக பயன்படுத்தக்கூடிய அறிக்கைகள்

- குழுவேலை முன்னேற்றக் குறிப்பு
- செயலடைவுக்கோவை
- சுவர்ப்பத்திரிகைக்குச் சமர்ப்பித்த ஆக்கங்களின் தொகுப்பு
- பாடக் கணிப்பீட்டுப் பத்திரம்
- அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சி அறிக்கை
- மாணவர் பற்றிய சிறு குறிப்புப்புத்தகம்
- விசேட தேவையுள்ள பிள்ளைகள் தொடர்பான அறிக்கை. (செவிமடுத்தல்/வேகமாகக் கற்றல் தொடர்பான இடர்பாடுகளை எதிர்நோக்கும்)
- குழுவேலை / முன்னேற்றக்குறிப்பு / வீட்டுவேலைக்கொப்பி

## வீட்டு வேலையை ஒப்படைத்தல்

- வகுப்பறைக்குள் கற்கும் விடயங்களை மேன்மேலும் விருத்தி செய்வதன் பொருட்டு மாணவர்களால் உள்வாங்கிக்கொள்ளக்கூடிய அளவுக்கு வீட்டு வேலைகளை வழங்கவும்.

- வீட்டு வேலைகளின்போது செய்ய வேண்டியவற்றையும் செய்ய வேண்டிய விதத்தையும் மாணவர்கள் தெளிவாக விளங்கிக்கொள்ளும் வகையில் அறிவுறுத்தவும்.

- வகுப்பறைச் செயற்பாட்டிற்காக வீட்டில் இருந்து கொண்டு வரவேண்டிய பொருட்கள் தொடர்பாக மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் முன்கூட்டியே அறிவுறுத்தல் வழங்கவும்.

  - **ஒப்படைக்கப்படுகின்ற வீட்டுவேலைகள் அனைத்தையும் மாணவரே செய்தல் வேண்டும்.**
  - **வீட்டுச் சூழலானது மொழித்திறனை மேம்படுத்தும் வகையில் அமைதல் வேண்டும்.**
  - **வாசிப்பதற்குத் தேவையான புத்தகங்களைத் தெரிவுசெய்வதற்கு உதவுதல் வேண்டும்.**
  - **வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தெரிவுசெய்து கேட்பதற்கும் பார்ப்பதற்கும் வழிப்படுத்தல் வேண்டும்.**

## கணிப்பீடு


ஒவ்வொரு மொழித்திறனிலும் மாணவர் அடைய வேண்டிய தேர்ச்சிகளை இனங்கண்டு அவற்றை அடைந்துள்ளனரா என்பதைக் கணிபபீடு செய்தல் எதிர்பார்க்கப்படுகின்றது. கணிப்பீடு முறைசார்ந்ததும், முறைசாராததுமாக அமைதல் நன்று. பின்வரும் எடுத்துக்காட்டுகளை அனுசரித்துக் கணிப்பீடுகளை மேற்கொள்ளலாம்.

- கூர்ந்து கவனித்துச் செவிமடுத்தல், கிரகித்தல், துலங்குதல் என்பவற்றை அவதானித்தல்.
- கருத்துக்களை வெளிப்படுத்திப் பேசுதலை அவதானித்தல்
- கதைகூறல் / பாவோதல் என்பவற்றை உற்று நோக்குதல்
- எழுத்துக்களை இனங்கண்டு உச்சரித்தலை அவதானித்தல்
- தெளிவாக உச்சரித்து வாசித்தலை அவதானித்தல்
- உறுப்பமைய எழுதுதலைப் பார்வையிடல்
- சொல்வதெழுதுதல்/கேட்டெழுதுதலைப் பார்வையிடல்
- பொறிமுறையை அனுசரித்து எழுதுதலைப் பார்வையிடல்
- ஆக்கி எழுதுதலைச் சரிபார்த்தல்



# 1.0 செவிமடுத்தல் (LISTENING)

**மொழியின் அடிப்படைத்திறன்கள், அவை பெறப்படுகின்ற நிலையில் கொள்திறன், வெளியீட்டுத்திறன் என இருவகைப்படும். செவிமடுத்தலும், வாசித்தலும் கொள் திறன்கள்; பேசுதலும் எழுதுதலும் வெளியீட்டுத்திறன்கள். இவை செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் என வரிசைப்படுத்தப்படுகின்றன. இந்த நான்கு திறன்களில் செவிமடுத்தல் திறனே அடிப்படையானதும் மிக இன்றியமையாததுமாகும். ஒலியைக் காது ஏற்கும் செயல் செவிமடுத்தல் எனப்படும். கல்வியில் செவிமடுத்தல் என்பது பரந்துபட்ட பொருளைக் கொண்டது. வெளிப்படும் ஒலிகளைச் செவி ஏற்று, அவற்றிற்குரிய பொருளை உணர்த்துவதே செவிமடுத்தலாகும். சொற்களால் அமைந்த வாக்கியங்கள், வாக்கியங்களால் வெளிப்படும் பொருள் ஆகியவற்றைக் கொண்டதே மொழியாகும். இம்மொழியைக் கற்பதற்கான முதல்நிலை வாயில் செவியாகும். செவிமடுத்தலின் வழியே கற்றலில் பெரும்பகுதி நிகழ்கின்றது. பிள்ளைகளின் செவிமடுக்கும் அளவினைப் பொறுத்தே மொழியின் பேசும் அளவும் திறனும் அமைகின்றன.**



## தேர்ச்சி

**1.1 கிரகிக்கும் திறனை விருத்தி செய்வதற்காகவும் சொற்களின் பொருளை விளங்கிக் கொள்வதற்காகவும் வினைத் திறனுடன் செவிமடுப்பார்.**

## தேர்ச்சி மட்டம்

**1.1.1 சந்தர்ப்பத்திற்கேற்பச் சொற்களின் கருத்தை விளங்கித் துலங்குவார்.**

## உள்ளடக்கம்

- ✓ ஒத்த கருத்துச் சொற்கள்
- ✓ எதிர்க்கருத்துச் சொற்கள்
- ✓ எதிர்ப்பாற்சொற்கள்

**செவிமடுக்கும் திறனை வளர்க்கும் வழிகள்**

- மற்றவர் பேசும்போது கவனத்துடன் கேட்டல்
- பேச்சுத்தொடரைப் பொருளுணரும் வகையில் பல கூறுகளாகப் பிரித்தல்
- சொற்களின் பொருளையும் சொற்றொடர்களின் பொருளையும் அறிதல்
- பேச்சின் ஒலி நுட்பங்களைக் கவனித்து நுண்பொருள் அறிதல்
- பேச்சின் முதன்மை மற்றும் மையக் கருத்துக்களை அறிதல்
- கருத்துக்களின் தொடர்ச்சியை அறிதல்
- பேசுபவரின் உணர்வுக் குறிப்பறிதல்

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

- ஒத்த கருத்துச் சொற்கள் தொடர்பாக மாணவர்களின் முன்னறிவை மீட்டறிக. அதன் பின்னர் சில வாக்கியங்களைச் செவிமடுக்கச் செய்க. அவ்வாக்கியங்களில் உள்ள குறிப்பிட்ட சொற்களின் ஒத்த கருத்துச் சொற்களைக்கூற வழிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு:*** அது அடர்ந்த **காடு.**
**சுத்தம்** சுகம் தரும்.
நாம் **சினம்** கொள்ளக்கூடாது.
நாம் **உண்மை** பேச வேண்டும்.

| | |
|---|---|
| காடு | வனம், கானகம் |
| சுத்தம் | தூய்மை, புனிதம் |
| சினம் | கோபம், சீற்றம் |
| உண்மை | சத்தியம், வாய்மை |

- எதிர்க்கருத்துச் சொற்களாக அமையும் சொற்கள் சிலவற்றை ஓர் அட்டவணையிற் காட்சிப்படுத்துக. அவற்றை வாசித்துக்காட்டி மாணவர்களைச் செவிமடுக்கச் செய்க. பின்னர் அச்சொற்களை வாக்கியங்களில் அமைத்துக்கூற வழிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு:***

இன்பம் x துன்பம்
வெற்றி x தோல்வி
இலாபம் x நட்டம்
வன்மை x மென்மை

**வாக்கியம் அமைத்துக் கூறுதல்**

**இன்பம் x துன்பம்**

**இன்பம்:** இசையைக் கேட்பதால் **இன்பம்** அடைகிறோம்.
**துன்பம்:** நாம் பிறருக்குக் **துன்பம்** விளைவித்தல் கூடாது.

- எதிர்ப்பாற் சொற்கள் பற்றிய மாணவர்களின் முன்னறிவை மீட்டறிக. எதிர்ப்பாற் சொற்கள் சிலவற்றை அட்டைகளில் (பெரிய எழுத்துக்களில்) எழுதிக் காட்சிப்படுத்தி அவற்றை வாசித்துக்காட்டி மாணவர்களைச் செவிமடுக்கச் செய்க. அதன் பின்னர் ஆசிரியர் கூறும் ஆண்பால் வாக்கியங்களைச் செவிமடுத்து பெண்பால் வாக்கியங்களாகவும் பெண்பால் வாக்கியங்களைச் செவிமடுத்து ஆண்பால் வாக்கியங்களாகவும் மாற்றிக்கூற வழிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு 1:***

**எதிர்ப்பால் சொல் - அட்டைகள்**

அரசன் - அரசி
குறவன் - குறத்தி
பாங்கன் - பாங்கி
நடிகன் - நடிகை
வீரன் - வீராங்கனை
செல்வன் - செல்வி

***எடுத்துக்காட்டு 2:***

| | | |
|---|---|---|
| ஆசிரியர் → | அரசன் அரண்மனைக்குச் சென்றான். | ஆண்பால் வாக்கியம் |
| மாணவன் → | அரசி அரண்மனைக்குச் சென்றாள். | பெண்பால் வாக்கியம் |

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | → அவள் சிறந்த ஓட்ட வீராங்கனை. | பெண்பால் வாக்கியம் |
| மாணவன் | → அவன் சிறந்த ஓட்ட வீரன். | ஆண்பால் வாக்கியம் |

## செயற்பாடுகள்

### செயற்பாடு 1 (ஒத்த கருத்துச் செற்களைச் செவிமடுப்பார்)

◘ மாணவர்களை இரு குழுக்களாக்குக. முதலாவது குழுவில் உள்ளவர் ஒரு சொல் லைக் கூற வேண்டும். அதன் ஒத்த கருத்துச் சொற்களை இரண்டாவது குழுவில் உள்ளவர்கள் கூற வேண்டும். (இரண்டு சொற்கள்) பின்னர் இரண்டாவது குழுவில் உள்ள ஒருவர் இன்னொரு சொல்லைக்கூற முதற் குழுவினர் அச்சொல்லிற்கான ஒத்த கருத்துச் சொற்களைச் கூறுதல் வேண்டும். இவ்வாறு செயற்பாட்டைத் தொடர வழிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு:***

| குழு - ❶ | | குழு - ❷ |
|---|---|---|
| சூரியன் | ⟶ | ஞாயிறு, ஆதவன் |
| மன்னன், வேந்தன் | ⟵ | அரசன் |
| அழகு | ⟶ | வடிவு, எழில் |
| நேசம், பரிவு | ⟵ | அன்பு |

**குறிப்பு:** இவ்வாறான செயற்பாடுகள் மாணவர்களின் கற்கும் ஆர்வத்தைத் தூண்டும். தமது குழு வெற்றி பெற வேண்டும் என்பதற்காக தெரியாத மாணவர் களுக்கு ஏனைய மாணவர்கள் சொல்லிக் கொடுப்பர். இதனால் மாணவர் களுக்கிடையே சுயமாகக் கற்றல் நிகழ வாய்ப்பேற்படுகின்றது. இதனூடாகச் செவிமடுக்கும் திறனும் மேம்பாடடைகின்றது என்பதை நினைவிற் கொள்க.

### செயற்பாடு 2 (எதிர்க்கருத்துச் சொற்களைச் செவிமடுத்தல்)

◘ மாணவர்களை வட்டமாக அமரச் செய்க. பின்வரும் பாடலை பாடிக்காட்டுக. பாட முடியாவிடில் பாடக் கூடியவர்களைக் கொண்டு பாடி ஒலிப்பதிவு செய்து ஒலித்துக்காட்டுக. மாணவர்களையும் பாட வழிப்படுத்துக. பாடலைச் செவிமடுத்த பின்னர் அப்பாடலில் வரும் எதிர்க்கருத்துச் சொற்களைக் கேட்டறிக.

***எடுத்துக்காட்டு:***

**எதற்கு?**

இரவும் பகலும் எதற்கு? - மனம்
இன்பம் துன்பம் உணர!

மேடு பள்ளம் எதற்கு? - திறன்
மேன்மை தாழ்மை உணர!

காயும் கனியும் எதற்கு? - சொல்
கடுமை இனிமை உணர!

வெயிலும் மழையும் எதற்கு? - உள்ளக்
கடுமை அன்பு உணர!

பூவும் பிஞ்சும் எதற்கு? - நறும்
புதுமை இளமை உணர!

பிறப்பும் இறப்பும் எதற்கு? - உலகில்
ஆக்கம் அழிவு உணர!

வரவு செலவு எதற்கு? - உலகில்
நடுவு நிலைமை உணர!

மண்ணும் விண்ணும் எதற்கு? - வாழ்வின்
மறுமை இம்மை உணர!

**வெ. நல்லதம்பி**

நன்றி: கண்ணே பாப்பா

**பாடலில் இடம்பெற்றுள்ள எதிர்க் கருத்துச் சொற்கள்**

இரவு x பகல்

இன்பம் x துன்பம்

மேடு x பள்ளம்

காய் x கனி

வெயில் x மழை

பிறப்பு x இறப்பு

ஆக்கம் x அழிவு

மண் x விண்

இம்மை x மறுமை

**குறிப்பு:** இப்பாடலை மொழிப் பயிற்சியின் போதும் பயன்படுத்த முடியும். இவ்வாறான பாடல்களைத் தெரிவு செய்வதற்கு ஆசிரியருக்குத் தேடல் அவசியமாகும். எனவே ஆசிரியர் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

## செயற்பாடு 3 (எதிர்பாற் சொற்களைச் செவிமடுத்தல்)

- மாணவர்களை நான்கு குழுக்களாக்குக. முதலாவது குழு மூன்றாவது குழுவுடனும் இரண்டாவது குழு நான்காவது குழுவுடனும் எதிர்ப்பாற் சொற்களைக் கூறும் செயற்பாட்டில் ஈடுபட வழிப்படுத்துக. (குழுக்களை மாற்றும் சுதந்திரம் ஆசிரியருக் குண்டு)

***எடுத்துக்காட்டு:***

| குழு - ❶ | | குழு - ❷ |
|---|---|---|
| சிறுவன் | ⟶ | சிறுமி |
| சீமாட்டி | ⟵ | சீமான் |
| செல்வன் | ⟶ | செல்வி |
| நாயகி | ⟵ | நாயகன் |
| தலைவன் | ⟶ | தலைவி |

| குழு - ❸ | | குழு - ❹ |
|---|---|---|
| மாணவன் | ⟶ | மாணவி |
| மருத்துவச்சி | ⟵ | மருத்துவன் |
| மைத்துனன் | ⟶ | மைத்துனி |
| புதல்வி | ⟵ | புதல்வன் |
| நம்பி | ⟶ | நங்கை |

- இச்செயற்பாடு நிறைவு பெற்றதன் பின் ஆண்பால் வாக்கியங்களை செவிமடுத்துப் பெண்பால் வாக்கியங்களாகவும் பெண்பால் வாக்கியங்களைச் செவிமடுத்து ஆண்பால் வாக்கியங்களாகவும் கூறும் செயற்பாட்டில் (குழுக்களை மாற்றி) ஈடுபட வழிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு:***

| குழு - ❶ | | குழு - ❷ |
|---|---|---|
| நான் **மாமா** வீட்டிற்குச் சென்றேன். | ⟶ | நான் **மாமி** வீட்டிற்குச் சென்றேன். |
| அந்தச் **சிறுமி** அழுகிறாள். | ⟵ | அந்தச் **சிறுவன்** அழுகிறான். |
| **அரசி** கோபமடைந்தாள். | ⟶ | **அரசன்** கோபமடைந்தான். |

| குழு - ❸ | | குழு - ❹ |
|---|---|---|
| எனது **எசமான்** நல்லவர். | ⟶ | எனது **எசமானி** நல்லவர். |
| இவள் எனது **பேர்த்தி.** | ⟵ | இவன் எனது **பேரன்.** |
| எனது **தங்கை** ஓவியம் வரைவாள். | ⟶ | எனது **தம்பி** ஓவியம் வரைவான் |

## கற்றல் - கற்பித்தல் வளங்கள்

- ஒத்த கருத்துச் சொற்கள் இடம்பெறும் வாக்கிய அட்டைகள்
- ஒத்த கருத்துச் சொற்கள் எழுதப்பட்ட அட்டைகள்
- எதிர்க்கருத்துச் சொற்கள் எழுதப்பட்ட பட்டியல்
- எதிர்ப்பாற் சொற்கள் கொண்டமைந்த பாடல்கள்/உரைப்பகுதி
- எதிர்ப்பாற் சொற்கள் எழுதப்பட்ட அட்டைகள்
- எதிர்ப்பாற் சொற்கள் கொண்டமைந்த வாக்கிய அட்டைகள்
- ஒலிப்பதிவு நாடா

## கணிப்பீடு

- ஒத்த கருத்துச் சொல் என்ற எண்ணக்கருவை விளங்கி உரியவாறு ஒத்த கருத்துச் சொற்களைக் கூறுதல்
- எதிர்க்கருத்துச் சொற்களைக் கண்டறிதல்
- எதிர்ப்பாற் சொற்களைக் கூறுதல்
- எதிர்ப்பாற் சொற்களை வாக்கியங்களில் அமைத்துக்கூறுதல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

## தேர்ச்சி மட்டம்

## 1.1.2 ஒலித்தல் வேறுபாட்டுச் சொற்களைச் செவிமடுத்து இனங்கண்டு வேறுபடுத்தி உச்சரிப்பார்.

## உள்ளடக்கம்

- ✓ லகர, ளகர, ழகர வேறுபாட்டுச் சொற்கள்
- ✓ னகர, ணகர, நகர வேறுபாட்டுச் சொற்கள்
- ✓ ரகர, றகர வேறுபாட்டுச் சொற்கள்

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

➲ லகர, ளகர, ழகர வேறுபாட்டுச் சொற்களை ஆசிரியர் கூற மாணவர்களைச் செவிமடுக்கச் செய்க. சரியாகச் செவிமடுக்கின்றார்களா என அறிய அச்சொற்களை மீண்டும் கூறச் செய்க. அதன் பின்னர் அச்சொற்களின் பொருளையும் கூற வழிப் படுத்துக.

***எடுத்துக்காட்டு:***

| |
|---|
| அலை - கடலலை |
| அளை - தயிர், புற்று, குகை |
| அழை - அழைத்தல், கூப்பிடுதல் |

➲ னகர, ணகர, நகர வேறுபாடுகளை அறிந்து சரியாகச் செவிமடுப்பதற்காகப் பல்வேறு பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்குக.

- ஆசிரியர் கூற மாணவர்கள் செவிமடுத்து மீண்டும் கூறுதல்.
- ஒலிப்பதிவு நாடாவில் சொற்களை ஒலிப்பதிவு செய்து அவற்றை ஒலிக்கவிட்டு மாணவர்களை செவிமடுக்கச் செய்து அச்சொற்களை மீண்டும் கூறுதல்.
- மாணவர்கள் சிலரை எழுமாற்றாக அழைத்து அவர்கள் னகர, ணகர, நகர வேறுபாட்டுச் சொற்களைக் கூற ஏனைய மாணவர்கள் செவிமடுத்து அச்சொற்களை மீண்டும் கூறுதல்.
- வாக்கியங்களில் அமைத்துக் கூறுதல்

***எடுத்துக்காட்டு:***

| |
|---|
| 1. கனம், வனம், மனம் |
| 2. கணம், குணம், மணம் |
| 3. நகரம், நகம், நட்பு |
| 4. இயக்குநர், ஆளுநர், ஓட்டுநர் |

➲ ரகர, றகர சொற்களைச் சரியாகச் செவிமடுக்கத் தவறும் போது அச் சொற்களின் பொருளும் வேறுபடும் என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக. பொருள் வேறுபடும் சொற்களை சரியாக உச்சரித்துக்கூற வழிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு:***

**அரம்** - ஒரு கருவி
**அறம்** - தருமம்

**மரம்** - தாவர வகை
**மறம்** - வீரம்

**பரவை** - கடல்
**பறவை** - பறப்பது

**கரை** - ஓரம்
**கறை** - அழுக்கு

# செயற்பாடுகள்

## செயற்பாடு 1 (ஒலிப்பில் வேறுபாடு உள்ள சொற்கள், வாக்கியங்கள் போன்றவற்றைச் செவிமடுத்தல் - னகர, ணகர வேறுபாடுகள்)

- மாணவர்களை அறுவர் கொண்ட குழுக்களாக்குக. ஒவ்வொரு குழுவுக்கும் லகர, ளகர, ழகர வேறுபாட்டுச் சொற்கள் எழுதப்பட்ட சொல்லட்டைகளை வழங்குக. குழுவில் உள்ள ஒருவர் சொல்லட்டைகளை வாசிக்க ஏனையோர் அவதானமாகச் செவிமடுத்து அச்சொற்களை மீண்டும் கூற வேண்டும். அதே போன்று எல்லோரும் வாசிக்க வேண்டும். அதன் பின்னர் அட்டைகளில் உள்ள சொற்களில் இரண்டைத் தெரிவு செய்து அச் சொற்களை வைத்து வாக்கியம் அமைத்துக் கூறுதல் வேண்டும்.

***எடுத்துக்காட்டு 1:***

**சொல்லட்டைகள்**

| ❶ | ❷ | ❸ |
|---|---|---|
| மலர்கள்<br>வளங்கள்<br>பழங்கள் | வலிமை<br>புளிப்பு<br>வழிகள் | வலைகள்<br>களைகள்<br>பிழைகள் |

| ❹ | ❺ | ❻ |
|---|---|---|
| கலங்கள்<br>குளங்கள்<br>கழகங்கள் | இல்லம்<br>வள்ளம்<br>விழிகள் | அகலம்<br>பள்ளம்<br>வழக்கம் |

**குறிப்பு:** ஒவ்வொரு குழுவுக்கும் 6 அட்டைகளையும் வழங்குதல் வேண்டும். அதற்கேற்றவாறு அட்டைகளை ஆசிரியர் தயாரித்துக்கொள்ள வேண்டும். குழுவில் உள்ள ஒரு மாணவன் வாசிக்கும் போது ஏனையவர்கள் செவிமடுத்து பின் அச் சொற்களை மீண்டும் கூற வேண்டும். அவ்வாறு கூறிப்பயிற்சி பெற்றதன் பின்னர் வாக்கியங்களில் அமைத்துக் கூறுதல் வேண்டும்.

***எடுத்துக்காட்டு 2:***

**வளங்கள்:** எங்கள் பாடசாலையில் நிறைய **வளங்கள்** உண்டு.

**வழிகள் :** இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பல **வழிகள்** உண்டு.

**கவனத்திற்கு:** வாக்கியங்களில் அமைத்துக் கூறும்போது தான் ஒலி வேறுபாடுகளை சரியாகச் செவிமடுத்துள்ளாரா என அறிய முடியும் என்பதை நினைவிற் கொள்க.

- லகர, ளகர, ழகரச் சொற்கள் கொண்ட பாடலடிகளை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டிச் செவிமடுக்கச் செய்து செவிமடுத்த பாடலடிகளை மீண்டும் சரியான உச்சரிப்புடன் கூற வழிப்படுத்துக. (குழுக்களிடையே)

***எடுத்துக்காட்டு :*** **ஒலிப்புப்பாடலடிகள்**

| ‘ழ’ | ‘ள’ | ‘ல’ |
|---|---|---|
| பழுத்தது வாழை | தென்னையில் பாளை | ஆட்டும் நாய் வாலை |
| வெடித்தது தாழை | வளர வேண்டும் மூளை | பொழுது எழும் காலை |
| பெட்டிதான் பேழை | சுண்ணாம்புச் சூளை | திரையின் பேர் சீலை |
| அறிவிலான் ஏழை | அடுத்தநாள் நாளை | முறுக்கிடு நூலை |

## செயற்பாடு 2

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்கி அவர்களை வட்டமாக அமரச்செய்க. னகர, ணகர, நகர வேறுபாட்டுச் சொற்கள் அமைந்த பந்தி ஒன்றைத் தெரிவுசெய்து நகல் எடுத்து அட்டையில் ஒட்டி அல்லது அட்டையில் எழுதித் தயார் செய்து கொள்க. ஒவ்வொரு குழுவுக்கும் அட்டையை வழங்குக. குழுவில் உள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு அட்டையில் உள்ள பந்தியை வாசிக்க வேண்டும். ஒவ்வொருவரும் வாசிக்கின்றபோது ஏனையவர்கள் அவதானமாகச் செவிமடுக்க வேண்டும். அதன் பின்னர் அட்டையைப் பார்க்காமல் அப்பந்தியில் உள்ள னகர, ணகர, நகரச் சொற்களை நினைவுபடுத்திக்கூற வேண்டும். (மாணவர்கள் செயற்படுகின்றார்களா என்பதை ஆசிரியர் அவதானித்து வழிப்படுத்த வேண்டும்.)

***எடுத்துக்காட்டு:***

வண்ணத்துப்பூச்சிகளின் பிரதான உணவு தேன் ஆகும். பெரும்பாலும் அவை திரவ உணவையே உட்கொள்கின்றன. சுவையை உணரும் உறுப்பு அவற்றின் கால்களில் அமைந்துள்ளன. அவை கண்களைத் திறந்தபடியே இரவில் ஓய்வெடுக்கின்றன. இவற்றின் இறக்கைகளில் அமைந்துள்ள நரம்பு மண்டலம் இறக்கைகளுக்கு சக்தியைக் கொடுக்கின்றது. உலகின் பல பகுதிகளிலும் பல வண்ண, வண்ணத்துப்பூச்சிகள் காணப்படுகின்றன.

| பந்தியில் உள்ள னகர, ணகர, நகர வேறுபாட்டுச் சொற்கள் | | |
|---|---|---|
| • வண்ணத்துப்பூச்சி | • திரவ உணவு | • நரம்பு மண்டலம் |
| • உணவு | • உணரும் | • ஓய்வெடுக்கின்றன. |
| • பிரதான | • கண்கள் | • அமைந்துள்ளன. |
| • தேன் | • வண்ண | • காணப்படுகின்றன. |
| | • உலகின் | • கொடுக்கின்றன. |

- ணகர, னகர, நகர ஒலித்தல் வேறுபாட்டுச் சொற்கள் கொண்ட பாடலடிகளை மாணவர்களுக்கு வாசித்துச் செவிமடுக்கச் செய்க. பின்னர் செவிமடுத்த பாடலடிகளை சரியான ஒலிப்புமுறையுடன் தமது குழுக்களிடையே மாணவர்களைக் கூற வழிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு :*** **ஒலிப்புப்பாடலடிகள்**

| ‘ண’ | ‘ன’ | ‘ந’ |
|---|---|---|
| வானில் வண்ணம் | பொய்கையில் அன்னம் | வீசும் பந்து |
| சந்தனக் கிண்ணம் | உணவின்பேர் அன்னம் | தெருவினில் சந்து |
| நெஞ்சிலே எண்ணம் | குழந்தையின் கன்னம் | வெற்றிக்கு முந்து |
| வெல்வது திண்ணம் | தேர்தலில் சின்னம்! | பாடுவாய் சிந்து |

## செயற்பாடு 3

- மாணவர்களை இருவர் கொண்ட சோடிகளாக்குக. ஒவ்வொரு மாணவருக்கும் ரகர, றகர சொற்கள் கொண்ட அட்டைகளை வழங்குக. ஒருவர் தனக்கு வழங்கப்பட்ட அட்டையில் உள்ள சொற்களை உரத்துக்கூற மற்றவர் செவிமடுத்து அச்சொற்களை வாக்கியங்களில் அமைத்துக்கூற வேண்டும். இவ்வாறு எல்லா மாணவர்களும் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும். அட்டைகள் அடுத்த அடுத்த சோடிகளுக்கு கைமாற வேண்டும்.

***எடுத்துக்காட்டு:***

| | | | | |
|---|---|---|---|---|
| அரை<br>அறை | இரை<br>இறை | கூரிய<br>கூறிய | பரி<br>பறி | அரி<br>அறி |
| மாரி<br>மாறி | திரை<br>திறை | கூரை<br>கூறை | ஏரி<br>ஏறி | கரி<br>கறி |

**சோடி**

கரி → யானையைக் கரி என்றும் கூறுவர்.

கறி → அம்மா பருப்புக் **கறி** சமைத்தார்.

அதிபர் பரிசளிப்பு விழாவில் **உரை**யாற்றினார். ← உரை

நான் கொப்பிக்கு **உறை** போட்டேன். ← உறை

**குறிப்பு:** மாணவர்கள் சொற்களை வாக்கியங்களில் அமைத்துக் கூறும்போது ஆசிரியர் இடையிடையே அவதானித்தல் வேண்டும். மாணவர்கள் சொற்களைச் சரியாகச் செவிமடுத்து வாக்கியங்களையும் அமைக்கின்றார்களா என்பதையும் தங்களுக்குள் அவதானிக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கூறுக.

### கற்றல் - கற்பித்தல் வளங்கள்

- ஒலித்தல் வேறுபாட்டுச் சொற்கள் கொண்ட அட்டைகள்
- ஒலித்தல் வேறுபாட்டுச் சொற்கள் அமைந்த பந்திகள்
- ஒலிப்பதிவு நாடா

### கணிப்பீடு

- லகர, ளகர, ழகர ஒலித்தல் வேறுபாட்டுச் சொற்களைப் பொருளறிந்து சரியாக உச்சரித்தல்
- னகர, ணகர, நகர ஒலித்தல் வேறுபாட்டுச் சொற்களைப் பொருளறிந்து சரியாக உச்சரித்தல்
- ரகர, றகர ஒலித்தல் வேறுபாட்டுச் சொற்களைப் பொருளறிந்து சரியாக உச்சரித்தல்
- இவ்வாறான சொற்களை நாளாந்த மொழிப் பிரயோகத்தில் சரியாகப் பயன்படுத்துதல்

ஆகியவற்றைக் கணிப்பிடு செய்க.

## தேர்ச்சி மட்டம்

## 1.1.3 செவிமடுத்துக் கிரகிப்பார்/துலங்குவார்.

## உள்ளடக்கம்

- ✓ **பிறர் கூறுவதை உன்னிப்பாகச் செவிமடுத்து விளங்கித் துலங்குதல்**
  - அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள், அறிவுரைகள்
  - உரையாடல்கள், பேச்சுக்கள், வருணனைகள், விவரணங்கள்
- ✓ **பொறுமையாகச் செவிமடுத்தல்**
  - வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் (தெரிவுசெய்யப்பட்ட)
  - ஒலி, ஒளி நாடாக்கள்
- ✓ **அவதானித்துச் செவிமடுத்தல்/துலங்குதல்**
  - சாராம்சம் கூறுதல்
  - கதைகள், நாடகங்கள் என்பவற்றில் வரும் கதாபாத்திரங்களின் குண இயல்புகளைக் கூறுதல்
  - உவமைகள், பழமொழிகள், இணைமொழிகள், மரபுத்தொடர்கள் என்ப வற்றை இனங்கண்டு கூறுதல்
  - செவிமடுத்த விடயங்கள் பற்றிச் சிந்தித்தல், ஆராய்தல்
  - செவிமடுத்த விடயங்களை மீண்டும் நினைவு கூருதல்
  - தொடர்புகாணல், எதிர்வுகூறல்

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

➲ பிறர் சொல்வனற்றை விளங்கிச் செவிமடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துக. பிறர் அறிவுரை கூறும்போதும் அறிவிக்கும்போதும் அறிவுறுத்தல்களை வழங்கும் போதும் வேறு விடயங்களில் கவனம் செலுத்தாது செவிமடுக்கும் விடயத்திலேயே கவனம் செலுத்தி அவற்றை விளங்கிக்கொள்ள வேண்டும் என்பதை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துக. மாணவர்கள் அதனைப் பழகிக் கொள்ள வழிப்படுத்துக.

➲ உரையாடல்கள், பேச்சுக்கள், வருணனைகள், விவரணங்கள் என்பவற்றைச் செவி மடுக்கும்போதும் நன்கு விளங்க வேண்டுமாயின் செவிமடுக்கும்போது அவற்றின் மீது கவனம் செலுத்துதல் அவசியம் என்பதை வலியுறுத்திக் கூறுக.

➲ பொறுமையாகச் செவிமடுக்கும் பழக்கத்தை மாணவரிடையே ஏற்படுத்துவதற்கும் படிப்படியாக அப்பழக்கத்தை வளர்த்துக் கொள்வதற்கும் ஆவன செய்க.

➲ அவதானமாகச் செவிமடுத்த விடயங்கள் தொடர்பாகச் சாராம்சம் கூறவும், கதைகள், நாடகங்கள் என்பனவாயின் கதாபாத்திரங்களின் குணவியல்பு களைக் கூறவும் நெறிப்படுத்துக.

➲ செவிமடுத்த விடயங்களில் உவமைகள், பழமொழிகள், இணைமொழிகள், மரபுத் தொடர்கள் என்பன இடம்பெற்றிருப்பின் அவற்றை இனங்கண்டு கூறச் செய்க.

➲ செவிமடுத்த விடயங்களைப் பற்றிச் சிந்திக்கவும் ஆராயவும் சந்தர்ப்பம் வழங்குக.

- மாணவர்கள் செவிமடுத்த விடயங்களை மீண்டும் நினைவு கூருவதற்கு அவ்வப்போது சந்தர்ப்பம் வழங்குக.
- செவிமடுத்த விடயங்களிடையே தொடர்புகாணவும் அவ்விடயம் தொடர்பாக எதிர்வு கூறவும் மாணவர்களைப் பயிற்றுக.

## செயற்பாடுகள்

### செயற்பாடு 1

- ஒலிப்பதிவு நாடாவில் அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள், அறிவுரைகள் சிலவற்றை ஒலிப்பதிவு செய்து ஒலிக்கச்செய்து மாணவர்களைச் செவிமடுக்கச் செய்க. ஒலிப்பதிவுக் கருவி கிடைக்காத சந்தர்ப்பத்தில் ஆசிரியரே அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள், அறிவுரைகள் என்பவற்றைக் கூறிச் செவிமடுக்கச் செய்க. மாணவர்கள் செவிமடுத்துள்ளார்களா என அறிய மீண்டும் அவற்றைக் கூறச் செய்க. வினாக்களைக்கேட்டு விடையளிக்கத் தூண்டுவதன் மூலமும் செவிமடுத்துள்ளமையை உறுதி செய்க.

***எடுத்துக்காட்டு 1:***

**அறிவித்தல்**

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு விபுலானந்தர் மண்டபத்தில் பரிசளிப்பு விழா நடைபெறும்.

**-அதிபர் -**

**வினாக்கள்**

1. எப்போது பரிசளிப்பு விழா நடைபெறும்?
2. எத்தனை மணிக்கு நடைபெறும்?
3. எந்த மண்டபத்தில் நடைபெறும்?

***எடுத்துக்காட்டு 2:***

**அறிவுறுத்தல்**

பரீட்சை ஆரம்பமாவதற்கு முப்பது நிமிடங்களுக்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு வருகை தந்து ஆசனங்களில் அமருதல் வேண்டும். பரீட்சை ஆரம்பித்ததன் பின்னர் எவரும் உள்ளே அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**- பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் -**

**வினாக்கள்**

1. பரீட்சை ஆரம்பமாவதற்கு எத்தனை நிமிடங்களுக்கு முன்னர் ஆசனங்களில் அமருதல் வேண்டும்?
2. எப்போது உள்ளே எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள்?

*எடுத்துக்காட்டு 3:*

**அறிவுரைகள்**

- **தினமும் எட்டு மணி நேரம் உறங்குங்கள்.**
- **கடிகாரத்தின் உதவியுடன் நீங்களே காலையில் எழுந்துவிடுங்கள்.**
- **அப்போதுதான் பாடசாலைக்குப் பதற்றம் இல்லாமல் செல்ல முடியும்.**
- **பற்றூரிகையை எப்போதும் ஒரே இடத்தில் வையுங்கள்.**
- **குளிப்பதில் இருந்து பள்ளி செல்லத் தயாராவது வரை உங்கள் வேலைகளை நீங்களே செய்து கொள்ளுங்கள்.**
- **பாடசாலை முடிந்து வீட்டுக்கு வந்தவுடன் பாதணி, புத்தகப்பை போன்றவற்றை அதற்குரிய இடங்களில் வையுங்கள்.**
- **அதன் பின்னர் கைகால் முகம் கழுவுங்கள்; உணவு உண்ணுங்கள்.**
- **மாலையில் சிறிது நேரம் விளையாடுங்கள்.**
- **பின்னர் வீட்டுப் பாடங்களை எழுதுங்கள்; படியுங்கள்.**
- **எத்தகைய பிரச்சினை என்றாலும் அதை அம்மாவிடம் மறைக்காமல் சொல்லுங்கள்.**

**வினாக்கள்**

1. தினமும் எத்தனை மணி நேரம் உறங்க வேண்டும்?
2. காலையில் யாரும் எழுப்பாமல் நாமே எழ வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?
3. பாடசாலை முடிந்து வீட்டுக்கு வந்ததும் என்ன செய்ய வேண்டும்?
4. எப்போது விளையாட வேண்டும்?
5. எந்தப் பிரச்சினையையும் மறைக்காமல் யாரிடம் சொல்ல வேண்டும்?

**குறிப்பு:** அறிவுரை சொல்லும்போது பொறுமையாகவும் மிகவும் அவதானத்துடனும் செவிமடுப்பதற்கு மாணவர்களுக்குப் பயிற்சி வழங்குக. மாணவர்கள் செவிமடுத்துள்ளார்களா என அறிய வாய்மொழி மூல வினாக்களை வினவுக.

## செயற்பாடு 2

- வகுப்பு மாணவர்கள் அனைவரையும் மூன்று குழுக்களாக்குக. மூன்று குழுக்களையும் வெவ்வேறு பகுதிகளில் அமரச் செய்க. மூன்று குழுக்களில் இருந்தும் சிலரை எழுமாற்றாகத் தெரிவுசெய்து கற்பனைப் பாத்திரங்களாக மாறி ஏனைய மாணவர்களுடன் உரையாட வழிப்படுத்துக. ஒருவர் உரையாடும்போது மற்றையோர் அமைதியாக இருந்து செவிமடுப்பதற்கும். குறுக்கே பேசாது இருப்பதற்கும் வழிப்படுத்துக.

*எடுத்துக்காட்டு:*

| | | |
|---|---|---|
| 1. தொலைபேசி | 2. கணினி | 3. தொலைக்காட்சி |
| 4. விவசாயி | 5. தபாற்காரர் | 6. கவிஞர் |

**உரையாடல்**

**மாணவர்கள் :** கனினியாரே! வணக்கம்
**கணினி :** வணக்கம் மாணவர்களே!

**மாணவன் 1 :** உங்களைப் பற்றி அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.
**கணினி :** என்னைப் பற்றி என்ன அறிந்துகொள்ள விரும்புகின்றீர்கள்?

**மாணவன் 2 :** உங்களைக் கண்டுபிடித்தவர் யார்?
**கணினி :** என்னைக் கண்டுபிடித்தவர் என்று சொல்வதிலும் பார்க்க நான் உருவாவதற்குக் காரணமாக இருந்தவர் சாள்ஸ் பபேஜ் என்பவர் ஆவார்.

**மாணவன் 3 :** ..........................................................................................

**குறிப்பு:** இதுபோன்ற பல்வேறு கற்பனைப் பாத்திரங்களாக மாணவர்கள் மாறி உரையாட வழிப்படுத்துக. செவிமடுத்தல் சிறப்பாக நிகழ்ந்தால் மட்டுமே உரையாடல் தொடரும்; இன்றேல் இடையில் நின்றுவிடும் என்பதை நினைவிற் கொள்க.

**துணைக்குறிப்பு:** மாணவர்களின் அறிவு நிலை ஒருவருக்கொருவர் வேறுபட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் கூடியவரை ஒத்த நிலைகளில் இருப்பவர்களையே சோடி சோடியாக இச்செயற்பாட்டிற்கு இணைக்க வேண்டும். அவர்களின் உரையாடற் கருப்பொருளும் அவ்வாறே அமைய வேண்டும்.

## செயற்பாடு 3

- வானொலிப்பேச்சுக்கள், வருணனைகள், விவரங்கள் என்பவற்றை ஒலிப்பதிவுசெய்து ஒலிக்கவிட்டு மாணவர்களைச் செவிமடுக்கச் செய்க. மாணவர்கள் சரியாகச் செவிமடுத்துள்ளார்களா என அறிய வினாக்களை வினவி உறுதி செய்து கொள்க.

***எடுத்துக்காட்டு 1:***



**பேச்சு**

சுப்பிரமணிய பாரதியார் சிறந்த புலவர். அவர் சுவை நிறைந்த பாடல்களைப் பாடினார். எல்லோரும் அவரை பாரதியார் என்று அழைப்பர். அவருடைய பாடல்களைச் சிறுவர்களும் பெரியவர்களும் விரும்பிப் படிக்கின்றார்கள். பாரதியார் தமிழ் நாட்டிலே உள்ள எட்டையபுரத்தில் பிறந்தார். அவர் இளமையிலே தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்தி ஆகிய மொழிகளைக் கற்றார். அவருக்கு தமிழிலே பற்று அதிகமாக இருந்தது.

**வினாக்கள்:**

1. பாரதியாரின் முழுப்பெயர் யாது?
2. அவர் எங்கே பிறந்தார்?
3. பாரதியார் கற்ற மொழிகள் எவை?

***எடுத்துக்காட்டு 2:***

**நேர்முக வருணனை**



வணக்கம் நேயர்களே!

இப்பொழுது தாமரை எப்.எம் இற்காக தம்புள்ளை விளையாட்டரங்கில் இருந்து உங்களுடன் பேசிக்கொண்டிருப்பவர் சந்திரன். இன்னும் சில நிமிடங்களில் இலங்கை அணியும் இந்திய அணியும் மோதும் முதலாவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஆரம்பமாக விருக்கிறது.

பூவா தலையா போட்டுப்பார்த்ததில் இலங்கை அணி வெற்றிபெற்று முதலில் துடுப் பெடுத்து ஆடத் தீர்மானித்துள்ளது. இம்முறை இலங்கை அணி மிகவும் வலுவான நிலையில் உள்ளது. அதேவேளை இந்திய அணியில் மூன்று அனுபவம் வாய்ந்த வேகப்பந்து வீச்சாளர்கள் இருப்பது அந்த அணிக்கு மேலும் பலம் சேர்க்கின்றது. ......................................................................................................

**வினாக்கள்:**

1. ஒருநாள் கிரிக்கெட் போட்டி எந்த விளையாட்டரங்கில் நடைபெறுகிறது?
2. ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் மோதும் இரு அணிகளும் எவை?
3. முதலில் துடுப்பெடுத்தாடும் அணி எது?
4. எந்த அணியில் அனுபவம் வாய்ந்த மூன்று வேகப்பந்து வீச்சாளர்கள் உள்ளனர்?

***எடுத்துக்காட்டு 1:***

**விவரணம்**



சுறுசுறுப்புக்கு எவற்றை எடுத்துக்காட்டாகக் கூறுவார்கள்? எறும்பையும் தேனீயையும் தானே! இன்று நாம் தேனீக்களைப் பற்றி அறிந்து கொள்வோமா! தேனீக்கள் மரக்கொம்பு, மரப்பொந்து, குகை முதலிய இடங்களிலே கூடமைக்கும். அதிலே உணவுக்காகத் தேனைச் சேமித்து வைக்கும். பண்டைக்கால மக்கள் அந்தத் தேனையும் மெழுகையும் சேகரித்தனர்.

தேனீக்களில் மலைத்தேனீ, கொம்புத்தேனீ, பொந்துத்தேனீ எனப் பல வகைகள் உண்டு. அவற்றுள் நாம் கூட்டில் வளர்க்கத்தக்கதும் அதிக பயனைத் தரத்தக்கதும் பொந்துத் தேனீயாகும். அது வாழும் கூட்டில் இராணித் தேனீ, வேலைக்காரத் தேனீ, சோம்பேறித் தேனீ என மூவினைத் தேனீகள் உண்டு. என்ன ஆச்சரியமாக இருக்கிறதா?

**வினாக்கள்:**

1. சுறுசுறுப்புக்கு எவற்றை எடுத்துக்காட்டாகக் கூறுவார்கள்?
2. தேனீக்கள் எவ்வாறான இடங்களில் கூடமைக்கும்?
3. பண்டைக்கால மக்கள் எவற்றைச் சேகரித்தனர்?
4. அதிக பயனைத் தரத்தக்க தேனீ எது?

**குறிப்பு:** இங்கு தரப்பட்டுள்ள செயற்பாட்டிற்கான பயிற்சிகளை பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகியவற்றிற்கும் பயன்படுத்த முடியும் என்பதைக் கவனத்திற் கொள்க.

## செயற்பாடு 4

- மாணவர்களுக்குப் பொருத்தமான பயன்மிக்க வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சி களைத் தெரிவுசெய்து ஒலிப்பதிவு/ஒளிப்பதிவு செய்துகொள்க. முதலில் 5 தொடக்கம் 10 நிமிடங்கள் வரை நிகழ்ச்சிகளைப் பொறுமையாகச் செவிமடுக்கச் செய்க. பின்னர் படிப்படியாக பொறுமையாக இருந்து செவிமடுக்கும் நேரத்தை அதிகரித்துச் செல்க. மாணவர்கள் பொறுமையாகச் செவிமடுப்பதற்கு மாணவர்களைக் கவரக்கூடிய நிகழ்ச்சிகளையே தெரிவுசெய்தல் வேண்டும் என்பதை நினைவிற் கொள்க.

- மாணவர்களுக்குப் பொருத்தமான பாடல்கள், கதைகள், நாடகங்கள், உரையாடல்கள் போன்றவற்றை நேர அளவு அடிப்படையில்(3 நிமிடங்கள், 5 நிமிடங்கள், 8 நிமிடங்கள், 10 நிமிடங்கள்) வகைப்படுத்திக் கொண்டால் மட்டுமே பொறுமையாகச் செவிமடுக்கும் திறனை மாணவர்களிடையே படிப்படியாக வளர்க்க முடியும் என்பதை நினைவிற் கொள்க. மாணவர்களின் துலங்கல்களை அவதானித்து அதன் பின்னர் படிப்படியாக கூடுதலான நேர அளவிலான நிகழ்ச்சிகளைச் செவிமடுக்க ஆவன செய்க. மாணவர் கள் சலிப்படையாத நிகழ்ச்சிகளைத் தேடித் தெரிவுசெய்து கொள்வது ஆசிரியரின் பொறுப்பாகும் என்பதை நினைவிற் கொள்க.

***கவனத்திற்கு:*** இச்செயற்பாடு வீட்டிலும் நிகழ்கின்ற போதுதான் வினைத்திறன் வாய்ந்ததாக அமையும். வீட்டில் பிள்ளைகள் பொருத்தமான வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பொறுமையாக இருந்து செவிமடுத்துக் கிரகிக்கப் பெற்றோர்களும் வழிப்படுத்தல் வேண்டும் என்பதை விளக்கிக் பெற்றோர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துக.

## செயற்பாடு 5

- மாணவர்களை நான்கு குழுக்களாக்குக. ஒலிப்பதிவு நாடாவின் மூலம் கதைகள், உரையாடல்கள், நாடகங்கள் என்பவற்றை முன்கூட்டியே மாணவர்களின் குரலிலேயே ஒலிப்பதிவு செய்து கொள்க. ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்யும் வசதிகள் இல்லாதிருப்பின் ஆசிரியர் பாடியோ, கதை சொல்லியோ, நடித்தோ மாணவர்களை அவதானித்துச் செவிமடுக்கச் செய்க. அல்லது மாணவர் மன்றத்தை ஒழுங்குசெய்து அதில் பல்வேறு நிகழ்ச்சிளை மேடையேற்றி அவற்றை மாணவர்களைச் செவிமடுக்க வும் வழிப்படுத்தலாம்.

### செவிமடுத்த பின்னர்:

- சாராம்சம் கூறவும்
- கதாபாத்திரங்களின் குணவியல்புகளைக் கூறவும்
- விமர்சிக்கவும்/கருத்துக்கூறவும்

மாணவர்களை வழிப்படுத்துக.

- கதைகள், நாடகங்கள், உரையாடல்கள் ஆகியவற்றில் பழமொழிகள், உவமைகள், இணைமொழிகள் , மரபுத்தொடர்கள் இடம்பெற்றிருப்பின் அவற்றையும் இனங்கண்டு கூறவழிப்படுத்துக.

## *எடுத்துக்காட்டு 1:* நாடகம் - கொடை உள்ளம்

### காட்சி: ஒன்று

| | | |
|---|---|---|
| **இடம்** | : | **குமணனின் அரசவை** |
| **காலம்** | : | **காலை நேரம்** |
| **நாடக மாந்தர்** | : | **குமணன், புலவர் பெருஞ்சித்திரனார், அமைச்சர், வாயிற் காவலன்.** |

**(அரசவையில் குமணன் அரியணையில் வீற்றிருக்கிறார்.)**

**வாயிற்காவலன் :** வாழி அரசே! சோழ நாட்டிலிருந்து பெருஞ் சித்திரனார் தங்களைக் காண வந்துள்ளார்.

**குமணன் :** வாயிற்காவலா! தண்டமிழ்ப் புலவரைத் தடை செய்யாதே! அழைத்து வா! (புலவர் அரசவைக்குள் வருகின்றார். குமணன் ஓடிச்சென்று வரவேற்று)

**குமணன் :** சோழ வள நாட்டின் செந்தமிழ்ப் புலவரே! இனிய தமிழை எத்திக்கும் பரப்பும் பாவலர் ஏறே!... வருக... வருக. வளமெல்லாம் பெறுக! இதோ என் அரியாசனத்திற்கு இணையான சரியாசனம்! இதில் அமருங்கள்.

**புலவர் :** வாழி மன்னா...! வாழி...! தங்கு தடையின்றித் தமிழ் வளர்க்கும் கொங்குப் பகுதியின் தார் வேந்தே! நீ ஏந்திய கூர்வாளோ பகை ஒடுக்கும்; உன் செங்கோலோ அறம் வளர்க்கும்; உன் வெண்கொற்றக் குடையோ அண்டினோர்க்கு வாழ்வளிக்கும். நாடி வந்து இரப்போர்க்கு ஓடிச்சென்று உதவும் குமண வள்ளலே! நலிந்த இப்புலவனின் நல்குரவு தீர்க்க வேண்டுகிறேன்.

**குமணன் :** நற்றமிழ்ப் புலவரே! தமிழ் வளர்க்கும் தங்கள் வாழ்க்கையில் வறுமையா?

**புலவர் :** ஆம். அரசே! வறுமையால் வாடும் என் குடும்பத்தின் அவலத்தை எவ்வாறு உரைப்பேன்? பசியால் ஊன் வற்றி உடல் மெலிந்து உருக்குலைந்து போனாள் என் மனைவி; ஆடிப்பாடி மகிழ வேண்டிய என் அருமை மகளோ குரல் எடுத்து அழவும் சக்தியற்றுக் கிடைக்கிறாள். அருமைத் தாயின் முகம் பார்த்துப் பசியால் அழுகிறது பச்சிளங்குழந்தை. அவளோ பாலில்லாததால் பால் நிலாவைக் காட்டிக் காட்டித் தானும் அழுகின்றாள். ஒருவேளை உணவிற்குக் குப்பைக் கீரைகளையாவது சமைக்கலாம் என்றாலோ உப்பிற்கும் வழியில்லை.

**குமணன் :** போதும் புலவரே! போதும்! தங்கள் நிலை கேட்டு என் மனம் துடிக்கிறது. யாது வேண்டும்? தயக்கமின்றிக் கேளும்.... தமிழ்ப் புலவர்களின் வாழ்வை அழித்து வரும் வறுமையே! இனி இக்குமணனின் உயிர் உள்ளவரை புலவர்களின் வாழ்க்கையைச் சீரழிக்க உன்னை அனுமதிக்க மாட்டேன.

**புலவர் :** அரசே! அல்லல்படும் என் இல்லாளின் இதயம் மகிழ வேண்டும். உன்னிடத்தில் யான் பெறும் செல்வத்தைக் களிற்றின் மீது ஏற்றிச்செல்ல வேண்டும். அதைக் காண்போர் எல்லாம் வியக்க வேண்டும். என் பிள்ளைகளும் அழுகையை மறக்க வேண்டும். வள்ளலே! அது மட்டுமன்றிப் புலவர்களுக்குப் பரிசில் நல்காத வேந்தர்கள் உன் கொடைத்திறம் அறிந்து வெட்கித்தலை குனிய வேண்டும். இதுதான் என் பேரவா?

**குமணன் :** இவ்வளவுதானே...! அமைச்சரே! புலவருக்குப் பொன்னையும் பொருளையும் பொதிப் பொதியாய் கட்டிக் களிற்றின் மீது ஏற்றி அனுப்ப ஏற்பாடு செய்யுங்கள்.

**அமைச்சர் :** அப்படியே செய்கிறேன் மன்னவா!

**புலவர் :** எம் வறுமை தீர்த்த வள்ளலே! நீடுழி வாழ்க!

**குமணன்** : புலவரே... முதலில் உம் பயணக் களைப்பு நீங்க உணவு உண்டு ஓய்வெடுங்கள். இன்று யானும் உங்களோடு அமர்ந்து விருந்துண்ணப் போகின்றேன்.

**புலவர்** : பூவுலகில் புதுமைகள் படைக்கும் தலைவா! குவலயம் உள்ள வரை உன் குலம் தழைக்கட்டும். நின் புகழ் நிலைக்கட்டும்.

## காட்சி: இரண்டு

| | | |
|---|---|---|
| **இடம்** | : | **பெருஞ்சித்திரனார் இல்லம்** |
| **காலம்** | : | **மாலை நேரம்** |
| **நாடக மாந்தர்** | : | **பெருஞ்சித்திரனார், மனைவி, மகள்** |

**(பெருஞ் செல்வத்துடன் யானை மீது அமர்ந்து வந்த புலவர், தாம் ஏறி வந்த யானையை வீட்டின் வெளியே ஒரு மரத்தில் கட்டுகிறார். பின்பு தம் இல்லத்தினுள் செல்கிறார்.)**

**மனைவி** : (முக மலர்ச்சியுடன்) வாருங்கள்!... வாருங்கள்!

**புலவர்** : இனியவளே! வாசலில் சென்று பார். முதிரமலைக் கோமான் குமணன் நமக்களித்த பெருநிதியத்தையும் அவற்றைச் சுமந்து நிற்கும் களிற்றினையும் பார்.

**மகள்** : (மகிழ்ச்சியோடு) ஆ... அ... யானை... யானை...!

**மனைவி** : நம் குறை தீர வாரி வழங்கிய குமண வள்ளல் பல்லாண்டு வாழ்க! அன்பரே! இவ்வளவு பொருளையும் நம் சிறிய இல்லத்தில் எவ்விடம் வைப்பேன்? என்ன செய்வேன்?

**புலவர்** : என் இல்லாளே! முதிரமலைக் கோமான் வாரி வழங்கிய செல்வத்தை நாம் மட்டுமே துய்க்கலாமா? பெற்ற செல்வத்தின் பெரும் பயன் ஈதலே! ஆதலால், நம்மை வறுமையில் ஆதரித்து நின்ற அனைவருக்கும் அள்ளிக்கொடு; வறுமையில் அல்லற்படும் அனைவருக்கும் கொடு; இனிமேல் நம்மைச் சுற்றியுள்ள எவரையும் வறுமைத் தீ நெருங்கக்கூடாது.

என் அன்பே! நமக்கு நன்மை செய்தவர், செய்யாதவர் என்ற பாகுபாடு இன்றிப் பகுத்துக் கொடு; பிறர் நலம் காத்தலே பிறவியின் பயன் என்ற உயர் பண்போடு உதவு! இந்நற்செயலுக்கொல்லாம் என் அனுமதியை எதிர்பார்த்து நிற்காதே! குமணனின் பெயர் சொல்லி வாரிக்கொடு.

**மனைவி** : நல்லது துணைவரே! அப்படியே செய்கிறேன். வாழ்க குமண வள்ளல்! வளர்க அவன் கொடை உள்ளம்!

- **முற்றும்.**

***நன்றி: www.textbooksoline.tn.nic.in***

**குறிப்பு:** வானொலி நாடகம் போன்று மாணவர்களின் குரலிலேயே நாடகத்தை ஒலிப்பதிவு செய்து வகுப்பு மாணவர்கள் அனைவரையும் செவிமடுக்கச் செய்ய ஆவன செய்க. ஒலிப்பதிவு செய்யும் வசதி இல்லாதிருப்பின் ஆசிரியரே குரல் மூலம் நடித்துக்காட்டி மாணவர்களைச் செவிமடுக்கச் செய்யலாம்.

**துணைக்குறிப்பு:** இந்நாடகத்தை ஏனைய திறன்களை விருத்திசெய்யும் செயற்பாடுகளின்போது பயன்படுத்த முடியும்.

## செயற்பாடு 6

- மாணவர்களை ஆறு குழுக்களாக்குக. மாணவர்களுக்கு இங்கு தரப்பட்டுள்ள விளம்பரத்தை ஆசிரியர் வாசித்துக்காட்டுக. மாணவர்கள் செவிமடுத்த பின்னர் விளம்பரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள பழமொழிகளைக் கூற வழிப்படுத்துக.

**சிறுவர் வங்கி**

**''சிறுதுளி பெருவெள்ளம்''**

சிறுவயதில் இருந்தே நாம் சேமிக்கப் பழகுவோம். இன்றே சிறுவர் வங்கிக் கணக்கை ஆரம்பிப்போம். இவ் அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாமல் சேமிப்பின் ஊடாக சிறந்த எதிர்காலத்தைப் பெறுவோம்.

**சிந்திப்பீர்! இன்றே விரைவீர்!**

**''காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.''**

***கவனத்திற்கு:*** மாணவர்கள் பழமொழிகளை இனங்காண்பதற்கு இச்செயற்பாடு தரப்பட்டுள்ளது என்பதைக் கவனத்திற்கொள்க.

## செயற்பாடு 7

- மாணவர்களை ஆறு குழுக்களாக்குக. இங்கு தரப்பட்டுள்ள இணைமொழிகள் அமைந்த கதைப்பகுதியை வாசித்துக் காட்டுக. அக்கதைப்பகுதியில் இடம்பெற்றுள்ள இணைமொழிகளைக் கூற வழிப்படுத்துக.

**இணைமொழிகள் அமைந்த கதைப்பகுதி**

அது ஒரு பெரியகாடு. மாதவன் **அங்குமிங்கும்** பார்த்தான். ஒருவரையும் காணவில்லை. சுற்றுலா வந்த நண்பர்களைத் தவறவிட்டு விட்டேனே! என்ன செய்வது என்று **ஆறஅமர** அவனால் சிந்திக்க முடியவில்லை. **கண்ணும் கருத்துமாக** வளர்த்த பெற்றோர் மட்டுமே அவன் கண் முன்னே தோன்றினர். அவன் கால் போன போக்கில் நடக்கலானான். காட்டுப் பாதையோ **கரடுமுரடு**; எங்கும் **கஞ்சல்குப்பைகள்.** பருகுவதற்கு நீர் நிலைகளும் இல்லை. குளங்கள் **வற்றிவரண்டு** காணப்பட்டன. தூரத்தே மாதவா! மாதவா! என்று கூப்பிடும் சத்தம் எதிரொலித்தது. திரும்பிப்பார்த்தான். தூரத்தே வகுப்பாசிரியர் பதற்றத்துடன் வந்து கொண்டிருந்தார். மாதவன் வகுப்பாசிரியரைக் கண்டதும் அவரை நோக்கி ஓடினான்.

***கவனத்திற்கு:*** மேலே தரப்பட்டுள்ள கதைப்பகுதியை வாசித்துக்காட்டி மாணவர்களை அவதானித்துச் செவிமடுக்கச் செய்க. கதைப்பகுதியில் பயன்படுத்தப் பட்டுள்ள இணைமொழிகளைக்கூற வழிப்படுத்துக. இணைமொழிகளை இனங்கண்டுகொள்வதற்காகவே இச்செயற்பாடு தரப்பட்டுள்ளது என்ப தைக் கவனத்திற்கொள்க.

## செயற்பாடு 8

▣ மாணவர்களை ஐந்து குழுக்களாக்குக. ஆசிரியர் இங்கு தரப்பட்டுள்ள மரபுத்தொடர் அமைந்த கதைப்பகுதியை வாசித்துக் காட்டுக. மாணவர்கள் செவிமடுத்து கதையில் இடம்பெற்றுள்ள மரபுத்தொடர்களை இனங்கண்டு கூற வழிப்படுத்துக.

### மரபுத்தொடர் அமைந்த கதைப்பகுதி

அது ஒரு சிறிய கிராமம். அக்கிராமத்தில் பரந்தாமன் என்ற விவசாயி வாழ்ந்து வந்தார். அவர் வேலையில் **கண்ணாயிருப்பார்.** எந்த வேலையையும் **ஆறப்போட**மாட்டார்; எவர் மனதையும் **புண்படுத்த** அவர் விரும்புவதில்லை. மற்றவர்களுடன் **விட்டுக்கொடுத்து** நடந்துகொள்வார்; எந்தத்தவறு நடந்தாலும் **பூசிமெழுகவும்** மாட்டார்; எவரையும் **நட்டாற்றில்விடவும்** மாட்டார்; அதனால் அவரது புகழ் ஊரெங்கும் பரவியது.

**குறிப்பு:** மரபுத்தொடர் அமைந்த கதைப்பகுதியை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டியபின் மரபுத் தொடர்களை இனங்கண்டு கூற வழிப்படுத்துக.

***கவனத்திற்கு:*** இக்கதைப்பகுதியை மொழிப்பயிற்சியின்போதும் பயன்படுத்த முடியும் என்பதை நினைவிற் கொள்க.

கதைப்பகுதியில் வந்துள்ள மரபுத்தொடர்களும் கருத்தும்

* **கண்ணாயிருத்தல்** - கவனமாக இருத்தல்
* **ஆறப்போடல்** - பிற்போடல்
* **புண்படுத்தல்** - மனதை வருந்தச் செய்தல்
* **விட்டுக்கொடுத்தல்** - இணக்கம் காட்டுதல்
* **பூசிமெழுகுதல்** - குற்றத்தை மறைக்கப்பார்த்தல்
* **நட்டாற்றில்விடல்** - ஆபத்து வேளையில் கைவிடல்

▣ மரபுத்தொடரையும் அதன் கருத்தையும் அறியாத மாணவர்களுக்கு விளக்கிக் கூறுக.

## செயற்பாடு 9

▣ மாணவர்கள் செவிமடுத்த விடயங்கள் பற்றிச் சிந்திப்பதற்கும், ஆராய்வதற்கும் செவிமடுத்த விடயங்களை நினைவு கூருவதற்கும் வழிப்படுத்துக. மாணவர்களை நான்கு குழுக்களாக்கி நெறிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு:***

புத்தாண்டுக்கொண்டாட்டங்களுக்கு இன்னும் சில நாட்களே உள்ளன. தீபன் வாழ்த்து அட்டைகளை இம்முறை வாங்கவில்லை. அவன் இம்முறை மின் அஞ்சலில் வாழ்த்து அனுப்பத் தீர்மானித்துள்ளான். அதனால் புத்தாண்டு பிறக்கும்போது மின் அஞ்சலில் வாழ்த்துக்களை அனுப்பினால் போதும் என அவன் நினைத்தான்.

### சிந்தித்தல்/ஆராய்தல்/நினைவு கூருதல்

- வாழ்த்து மடல்களை மின் அஞ்சலில் அனுப்ப எவ்வளவு செலவு!
- வாழ்த்து மடல்களைத் தபாலில் அனுப்பினால் உரியவர்களுக்குப் போய்ச் சேர எத்தனை நாட்கள் செல்லும்?
  மின் அஞ்சல் மூலம் அனுப்பினால்...
- மின் அஞ்சல் வாழ்த்து அட்டைகளை எப்படித் தயாரிக்கலாம். யாரிடம் ஆலோசனை பெறலாம்.
- எல்லோருக்கும் மின்அஞ்சல் மூலம் வாழ்த்து அனுப்பலாமா? இது சாத்திய மாகுமா? மின் அஞ்சல் வசதி இல்லாவிடின்...
- கடந்த வருடம் புத்தாண்டிற்க்கு யார் யார் வாழ்த்து மடல்களை எனக்கு அனுப்பினார்கள்?

## செயற்பாடு 10

◘ அவதானமாகச் செவிமடுத்துத் தொடர்புகாண மாணவர்களை நான்கு குழுக்களாக்குக. அவர்களுக்கு ஆசிரியர் நிகழ்வுகளைக் கூற வேண்டும். மாணவர்கள் அந்நிகழ்வுகளை அவதானமாகச் செவிமடுத்து அந்நிகழ்வுகளுடன் தொடர்புடைய பழமொழிகளைத் தெரிவுசெய்து கூற வழிப்படுத்துக. அதன் பின்னர் பழமொழிகளைச் செவிமடுத்து அவற்றுடன் தொடர்புடைய கருத்துக்களைக் கூற வழிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு 1:***

**நிகழ்வு:** சுமதியின் அண்ணன் பொது அறிவு வினாக்களுக்கு விடையளிப்பதில் மிகவும் கெட்டிக்காரன். அவனை எவராலும் தோற்கடிக்க முடியாது. ஒருநாள் சுமதியின் வீட்டிற்கு வந்த நண்பியின் தங்கை கேட்ட பொது அறிவுக் கேள்விக்கு சுமதியின் அண்ணனால் விடை கூற முடியவில்லை.

இந்நிகழ்விற்குப் பொருத்தமான பழமொழி எது?

1. நிறைகுடம் தளம்பாது.
2. ஆனைக்கும் அடி சறுக்கும்.
3. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

***எடுத்துக்காட்டு 2:***

பழமொழியைச் செவிமடுத்து அதனுடன் தொடர்புபடும் கருத்தைக் கூறல்.

| **பழமொழி** : அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. |
|---|

இப்பழமொழிக்குப் பொருத்தமான கருத்து எது?

1. விடாமுயற்சி பலன் தரும்.
2. பலசாலியும் தோல்வியடையலாம்.
3. ஒற்றுமையே பலம்.

**துணைக்குறிப்பு:** ஒரு ஆளை,பொருளை, கூற்றை அல்லது சந்தர்ப்பத்தை அது போன்ற வேறொரு ஆளுடன், பொருளுடன், கூற்றுடன், சந்தர்ப்பத்துடன் காணப்படும் ஒற்றுமை, வேற்றுமைகளை இனங்கண்டு வெளிப்படுத்தும் ஆற்றலே தொடர்புகாணும் ஆற்றலாகும்.

## செயற்பாடு 11

- தரவுகள், தகவல்கள், நிகழ்வுகள் ஆகியவற்றை அவதானித்துச் செவிமடுத்து எதிர் காலத்தில் நிகழக்கூடிய நிலைமைகளை எதிர்வுகூற மாணவர்களை இரு குழுக்க ளாக்குக. ஆசிரியர் தரவுகள்/தகவல்கள்/நிகழ்வுகள் ஆகியவற்றைக்கூற மாணவர்கள் அவதானமாகச் செவிமடுத்து எதிர்வுகூற உற்சாகமூட்டுக.

***எடுத்துக்காட்டு 1:***

**அமலனின் ஊருக்கு ஒரு பேருந்து மட்டுமே சேவையில் ஈடுபடுகிறது. காலை யில் பாடசாலை மாணவர்களையும் வேலைக்குச் செல்பவர்களையும் ஏற்றி வரும் பேருந்து மாலை ஐந்து மணிக்கு மீண்டும் அவனது ஊருக்குத் திரும் பிச் செல்லும். தினமும் தவறாது பாடசாலைக்கு பேருந்தில் வரும் அமலன் இன்று பாடசாலைக்குவரவில்லை.**

- அவன் பாடசாலைக்குச் சமூகமளிக்காமைக்குக் காரணமாக இருக்கக்கூடியது எது?
  1. பேருந்து தரிப்பிடத்தில் நிற்காமல் சென்றமை
  2. பேருந்து சேவையில் ஈடுபடாமை
  3. பேருந்தை அவன் தவறவிட்டமை

**துணைக்குறிப்பு:** தரப்பட்டுள்ள தரவுகள், தகவல்களை மையமாகக்கொண்டு எதிர்காலத்தில் நிகழக்கூடிய அல்லது நிகழ்காலத்தில் நிகழ்ந்த இறந்த காலத்தில் நடந்த நிலைமையை பற்றிச் சிந்தித்து, இப்படி இருக்கலாம், இப்படி இருக்கும், இப்படி இருந்திருக்க வாய்ப்பு உண்டு என்ற முடிவுகளுக்கு வருதலே எதிர்வு கூறலாகும்.

***கவனத்திற்கு:*** இங்கு தரப்பட்டுள்ள செயற்பாடுகளுக்கான பயிற்சிகளை எழுது தலின் போதும் பயன்படுத்த முடியும் என்பதை நினைவிற் கொள்க.

## கற்றல் - கற்பித்தல் வளங்கள்

- வானொலி, தொலைக்காட்சி
- ஒலிப்பதிவு நாடாக்கள், இறுவட்டுக்கள்
- பொருத்தமான பாடல்கள், நாடகங்கள், உரையாடல்கள் கொண்ட ஒலி, ஒளி நாடாக்கள், இறுவட்டுக்கள்.
- கடந்தகால புலமைப்பரிசில் வினாத்தாள்கள் I, II ஆகியவற்றில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட வினாப்பகுதிகள் (உவமைகள், இணைமொழிகள், பழ மொழிகள் போன்றவை உள்ளடக்கப்பட்ட பகுதிகள்)

## கணிப்பீடு

- பிறர் சொல்வதை விளக்கத்துடன் செவிமடுத்தல்
- பொறுமையாகச் செவிமடுத்தல்
- அவதானித்துச் செவிமடுத்துத் துலங்குதல்
- சாராம்சம் கூறுதல்
- கதாபாத்திரங்களின் குண இயல்புகளைக் கூறுதல்
- உவமைகள், பழமொழிகள், இணைமொழிகள், மரபுத்தொடர்கள் ஆகிய வற்றை இனங்காணல்
- செவிமடுத்த விடயங்கள் பற்றிச் சிந்தித்து ஆராய்தல்
- செவிமடுத்த விடயங்களை மீண்டும் நினைவுகூரல்
- தொடர்புகாணல், எதிர்வுகூறல் என்பனவற்றைக் கணிப்பிடுக.

## தேர்ச்சி

**1.2 பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ற வகையில் செவிமடுத்துத் துலங்குவார்.**

## தேர்ச்சி மட்டம்

**1.2.1 பண்புடன் செவிமடுப்பார்.**

## உள்ளடக்கம்

- ✓ பெரியோர், மூத்தோர் முன்னிலையில்
- ✓ நண்பர்கள், உறவினர்கள் முன்னிலையில்
- ✓ சபையில்
- ✓ கற்கும் சந்தர்ப்பங்களில்

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

- ➲ பெரியோர், மூத்தோர் கூறுவனவற்றைச் செவிமடுக்கும்போது அவர்களுக்கு உரிய மரியாதை செலுத்தி அடக்கமாகவும், அவதானமாகவும் செவிமடுக்க வேண்டுமென்பதை அறிவுறுத்துக. அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்கள் முன்னிலையில் பணிவுடன் செவிமடுக்க வழிப்படுத்துக.

- ➲ நண்பர்கள் முன்னிலையில் திறந்த மனதுடன் உரையாடிச் சந்தேகங்கள் எதுவுமின்றிச் செவிமடுக்க முடியுமென்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

- ➲ உறவினர்கள், மூத்தோராயின் அவர்களுக்குரிய மரியாதையுடன் அவர்கள் கூறுவன வற்றைச் செவிமடுப்பதே உகந்தது என நயம்படக் கூறுக. உறவினர்கள் இளையோரா யின் அவர்கள் கூறுபவற்றையும் அலட்சியம் செய்யக்கூடாது என்பதை வலியுறுத்துக.

- ➲ பலர் கூடியுள்ள சபையில் ஏனையோருக்கு இடையூறு செய்யா வண்ணம் அடக்கமாக இருந்து சபை நிகழ்ச்சிகளைச் செவிமடுப்பது தனக்கும் பிறருக்கும் பயன் அளிக்கும் என்பதை எடுத்துக் கூறுக.

- ➲ கற்கும் சந்தர்ப்பங்களில் பிறரது அறிவித்தல்களையும் அறிவுறுத்தல்களையும் அவதானமாகச் செவிமடுத்து அதன்படி துலங்குவது அனுகூலமானது என்பதை எடுத்துக் கூறுக.

## செயற்பாடுகள்

### செயற்பாடு 1

- ▣ பொது இடங்களில் ஆலயங்களில், பள்ளிவாசல்களில், சனசமூக நிலையங்களில், பெரியோர் அறிவுரை பகரும் சந்தர்ப்பங்களில் அவர்கள் கூறுவனவற்றை முழுமை யாகவும் அவதானமாகவும் செவிமடுக்க வேண்டும் என்பதை கதை அல்லது சம்பவங்கள் மூலம் மாணவர்களுக்கு விளக்குக.

- பாடசாலைக்கு சமூகப் பெரியார் ஒருவரை அழைத்து குறிப்பிட்ட தலைப்பில் மாணவர்கள் முன்னிலையில் உரையாற்ற ஏற்பாடுகளைச் செய்க. அதற்கு முன்னர் மாணவர்கள் எவ்வாறு அமர வேண்டும்; எவ்வாறு செவிமடுக்க வேண்டும்; எப்போது சந்தேகங்களுக்குரிய வினாக்களை எழுப்ப வேண்டும் என்பது தொடர்பாகப் பயிற்சி வழங்குக. அத்தகைய பயிற்சியை வழங்குக.

- மாணவர்களை நான்கு குழுக்களாக்கி நான்கு குழுவிலிருந்தும் நான்கு பேரைத் தெரிவு செய்க. அவர்களை அறிஞர் போன்று வேடமிடச்செய்து மாணவர்கள் மத்தியில் உரையாற்றவும் மாணவர்கள் அவரது உரையை அமைதியாக இருந்து செவிமடுக்கவும் வழிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு:***

1. ஓய்வு பெற்ற கல்வி அதிகாரி
2. சமயப் பெரியார்
3. பல்கலைக்கழகப் பேராசிரியர்
4. சுகாதார அதிகாரி

- பயிற்சி அளித்த பின்னர், பிறிதொரு நாளில் பெரியார் அல்லது அறிஞர் ஒருவரை அழைத்து மாணவர்களுக்கு முன்னிலையில் உரையாற்ற வழிப்படுத்துக.

**குறிப்பு:** மாணவர்கள் அமர்ந்திருக்கும் நிலை, வினாக்கேட்கும் முறை என்பவற்றை அவதானித்து மாணவர்களை வழிப்படுத்த வேண்டும் என்பதை நினைவிற் கொள்க.

## செயற்பாடு 2

- மாணவர்களை ஆறு பேர் கொண்ட குழுக்களாக்குக. குழுக்களிலே செவிமடுப்பதற்குக் கொடுக்க வேண்டிய விடயங்கள் பற்றி முற்கூட்டியே திட்டமிட்டுப் பின்வருவன போன்ற தலைப்புக்களைக் குழுக்களுக்கு ஒப்படைக்குக.

***எடுத்துக்காட்டு:***

1. நண்பனின் பிறந்தநாள்
2. நண்பனுக்கு அறிவுரை கூறல்
3. தான் பார்த்த சம்பவத்தை விபரித்தல்
4. தனது பொழுதுபோக்குப் பற்றிக் கூறுதல்
5. விளையாட்டுகள் பற்றி கூறுதல்
6. தான் பெற்ற அனுபவத்தைப் பகிருதல்

- குறிப்பிட்ட தலைப்பில் ஒரு குழுவில் இருந்து இருவர் உரையாடும்போது ஏனையோரைச் செவிமடுக்கச் செய்க. குழுக்களிலே எவ்வாறு செவிமடுத்தல்/உரையாடல் நிகழ்கின்றது என்பதை குழுவிலுள்ள ஒருவர் அறிக்கைப்படுத்துவதற்கு ஆவன செய்க. அன்பு, நட்புறவு, குதூகலம் என்பன இருவர் உரையாடும் போதும் ஏனையோர் செவிமடுக்கும் போதும் இழையோடியிருக்கிறதா என்பதை உறுதி செய்க.

## செயற்பாடு 3

- தரம் ஐந்து மாணவர்களுக்கான **''மாணவர் மன்றத்தை''** ஏற்பாடு செய்க. அம் மன்றத்திற்கு அதிபர், உப அதிபர் ஆகியோரை அழைத்து நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டுக் கருத்துரை வழங்கவும் ஒழுங்குகளை மேற்கொள்க. மாணவர் மன்றத்தில்

மாணவர்கள் பங்குபற்றித் தமது திறமைகளை வெளிப்படுத்துவதற்கும் அமைதியாக இருந்து செவிமடுப்பதற்கும் வழிப்படுத்துக. சபையில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது தொடர்பாக மாணவர்களிடமே கேட்டறிக. பாடசாலையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறும் போது அந்நிகழ்ச்சிகளை மண்டபத்தில் அமர்ந்திருந்து (ஆசிரியரின் மேற்பார்வையின் கீழ்) செவிமடுத்து இரசிப்பதற்கும் வாய்ப்புக்களை வழங்குக.

## செயற்பாடு 4

- கற்கும் சந்தர்ப்பங்களில் அறிவுறுத்தல்களை பணிவுடன் செவிமடுத்து அதற்கேற்பத் துலங்கவும் அறிவித்தல்களை மற்றவர்களுக்கு பணிவுடன் கூறவும் வழிப்படுத்துக. ஆசிரியர் கூறும் வினாக்களைச் செவிமடுக்கும்போதும் அதற்கான பதிலைக் கூறும்போதும் பண்புடன் நடந்துகொள்ளாவிடில் கற்றல் சரியாக நிகழமாட்டாது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கிக் கூறுக.

***எடுத்துக்காட்டு:***

**அறிவித்தல்**

நாளை மறுதினம் பாடசாலைக்கு வரும்போது சிறிய கதைகள், பாடல்கள், நகைச்சுவைத் துணுக்குகள் ஆகியவற்றைக் கொண்டு வாருங்கள்.

*- வகுப்பாசிரியர்*

- இந்த அறிவித்தலை மாணவர்கள் அரைகுறையாகச் செவிமடுத்தாலோ, செவிமடுக்காது விட்டாலோ நாளை மறுதினம் கற்றல் பாதிக்கப்படும்; அதற்கான ஆயத்தமின்மையால் செயற்பாடுகளில் ஈடுபட முடியாதநிலை ஏற்படும் என எடுத்தியம்புக.

**குறிப்பு:** மாணவர்கள் பணிவுடன் செவிமடுப்பதற்குப் பல்வேறு பயிற்சிகளை மேற்கொள்க.

***கவனத்திற்கு:*** மாணவர்கள் பொது இடங்களில் பணிவுடன் செவிமடுக்காமல் இருப்பதற்கு சரியான வழிகாட்டல் இன்மையே காரணமாக அமைகிறது என்பதை நினைவிற் கொள்க.

## கற்றல் - கற்பித்தல் வளங்கள்

- பண்புடன் செவிமடுத்தல் தொடர்பான படங்கள், வீடியோக் காட்சிகள்
- குழுச் செயற்பாட்டிற்கான அட்டைகள்

## கணிப்பீடு

- பெரியோர், மூத்தோர் கூறுவனவற்றை மரியாதையுடன் செவிமடுக்கின்றனரா என்பதைக் கணிப்பிடுக.
- நட்புறவுடன் செவிமடுக்கும்போது அன்னியோன்னியமாக உரையாடிச் செவிமடுக்கின்றனரா என்பதைக் கணிப்பிடுக.
- சபையில் ஏனையோருக்கு இடையூறு செய்யாவண்ணம் செவிமடுக்கின்றனரா என்பதைக் கணிப்பிடுக.
- கற்கும் சந்தர்ப்பங்களில் பணிவுடன் செவிமடுக்கின்றமையை அவதானித்துக் கணிப்பிடுக.

## தேர்ச்சி மட்டம்

## 1.2.2 தொடர்பாடலுக்காகச் செவிமடுத்துத் துலங்குவார்.

## உள்ளடக்கம்

- ✓ பெற்றோர் மற்றும் குடும்ப உறுப்பினர்களுடன்
- ✓ நண்பர்களுடன்
- ✓ ஆசிரியர்களுடன்
- ✓ பாடசாலையில் உள்ள ஏனையோர்களுடன்
- ✓ ஏனைய பாடசாலை மாணவர்களுடன்
- ✓ சமுதாய அங்கத்தவர்களுடன்

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

- ➲ பெற்றோர் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் (தாத்தா, பாட்டி, அண்ணா, அக்கா) கூறும் அறிவுரைகளை விளக்கங்களைச் செவிமடுத்து அதற்கேற்ற வகையில் துலங்குவதற்கு வழிகாட்டுக.

- ➲ நண்பர்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களைச் செவிமடுத்து அதற்கேற்பத் துலங்களை சரியான முறையில் வெளிப்படுத்துவதற்கு ஆலோசனைகளை வழங்குக.

- ➲ ஆசிரியர்களுடன் உரையாடிச் செவிமடுப்பதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துக. பின்வருவன போன்ற சந்தர்ப்பங்களில் ஆசிரியர்களுடன் உரையாடி செவிமடுக்க வழிப்படுத்துக.

  ***எடுத்துக்காட்டு:***
  - வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் சந்தர்ப்பங்கள்
  - விசேட கற்றல் சந்தர்ப்பங்கள்
  - தனிப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்தல்
  - பாடசாலை / வகுப்பறை வைபவங்கள்
  - அதிபர் / ஆசிரியர் ஆகியோரின் கட்டளைகள், அறிவுறுத்தல்கள் என்பவற்றுக்குத் துலங்குதல்

- ➲ பாடசாலையில் பணிபுரியும் அலுவலக உதவியாளர்கள், எழுதுவினைஞர்கள், கணினி இயக்குநர்கள், நூலக உதவியாளர்கள், ஆய்வுகூட உதவியாளர்கள், சிற்றூழியர்கள் ஆகியோருடன் தொடர்பாடிச் செவிமடுப்பதற்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி வழிகாட்டுக.

- ➲ பாடசாலையில் கற்கும் ஏனைய வகுப்பு மாணவர்கள், உயர் வகுப்பு மாணவர்கள், போன்றோருடன் உரையாடிச் செவிமடுத்துத் தகவல்களைப் பரிமாற வழிப்படுத்துக.

- ➲ அருகில் உள்ள ஏனைய பாடசாலை மாணவர்களுடன் உரையாடிச் செவிமடுப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்க ஆவன செய்க. இதன் மூலம் தொடர்பாடிச் செவிமடுத்து அன்னியோன்னிய உறவை வளர்த்துக்கொள்ள முடியும் என்பதை நினைவிற் கொள்க.

- ➲ சமுதாய அங்கத்தவர்களான கிராமசேவகர், சுகாதார அதிகாரி, தபாற்காரர், நகரும் வியாபாரிகள், சமயத் தலைவர்கள், பெரியோர்கள் போன்றோருடன் உரையாடிச் செவிமடுப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்துக.

## செயற்பாடுகள்

### செயற்பாடு 1

- பெற்றோர் அல்லது குடும்ப உறுப்பினர்கள் கூறும் அறிவுரைகளைச் செவிமடுப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்துக. பாடசாலை சென்று வீடு திரும்பும் மாணவர்கள் பாடசாலையில் என்ன படித்தார்கள்?, வீட்டு வேலை தரப்பட்டதா? என்பது தொடர் பாகவும் உணவு மற்றும் விளையாட்டு தொடர்பாகவும் கலந்துரையாடி அறிவுரை வழங்க வேண்டும் என வலியுறுத்துக. பிள்ளைகளை நேரம் கிடைக்கும் போது பல்வேறு இடங்களுக்கு அழைத்துச் சென்று அவர்கள் பல்வேறு விடயங்களைத் தெரிந்து கொள்ளவும் வழிப்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்துக. இதன் மூலம் தொடர்பாடலுக்காகச் செவிமடுத்து துலங்கும் திறன் அதிகரிக்கும் என வலியுறுத்திக் கூறுக.

- மாணவர்களை 6 பேர் கொண்ட குழுக்களாக்கி பெற்றோர் மற்றும் உறவினர்களுடன் தொடர்பாடிய முக்கிய விடயங்களை தமது குழுக்களுக்குள் கூறவும் ஏனையவர்கள் செவிமடுக்கவும் வழிப்படுத்துக.

  ***எடுத்துக்காட்டு:***
  - பெற்றோர் கூறிய அறிவுரைகள்
  - பெற்றோர்/உறவினர்கள் கூறிய கதைகள்
  - பெற்றோருடன் சென்ற இடங்கள்
  - பொருட்கள் வாங்கப் பெற்றோருடன் சென்றமை
  - சந்தைக்குச் சென்று பொருட்கள் வாங்கியமை
  - உறவினர்கள் வீட்டுக்கு வந்து நலம் விசாரித்தமை
  - உறவினர்கள் வீட்டுக்குச் சென்றமை

### செயற்பாடு 2

- மாணவர்களை தமக்கு விருப்பமான நண்பர்களுடன் சோடி சேர வழிப்படுத்தக. அவர்கள் சோடி, சோடியாக மனம்விட்டு உரையாடிச் செவிமடுக்க வழிப்படுத்துக.

  ***எடுத்துக்காட்டு:***
  - விரும்பி வாசித்த புத்தகம்
  - கிறிக்கெட் விளையாட்டுப்போட்டி
  - பொது அறிவு விடயங்கள்
  - ஓய்வு நேரப் பொழுதுபோக்கு

### செயற்பாடு 3

- மாணவர்களை மூன்று குழுக்களாக்குக. அவர்களை மூன்று வெவ்வேறு இடங்களில் அமரச் செய்க. பாடசாலையின் ஓய்வறையில் அமர்ந்திருக்கும் ஆசிரியர்கள் சிலரை அழைத்து வந்து மாணவர்களுடன் உரையாட வழிப்படுத்துக. ஆசிரியர் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக மாணவர்களுக்கு எழும் சந்தேகங்களைத் தீர்க்கவும், மாணவர்கள் வினாக்களைக் கேட்கவும் வழிப்படுத்துக.

  ***எடுத்துக்காட்டு:***
  - கணித பாட ஆசிரியர்
  - விஞ்ஞான பாட ஆசிரியர்
  - மனையியல் பாட ஆசிரியை
  - விளையாட்டுகளுக்குப் பொறுப்பான ஆசிரியர்
  - கணினிக்கூடப் பொறுப்பாசிரியர்

## செயற்பாடு 4

- பாடசாலையில் உள்ள ஆசிரியர்கள் மாணவர்கள் தவிர்ந்த அலுவலக உதவியாளர்கள், எழுதுவினைஞர்கள், கணினி இயக்குநர்கள், ஆய்வுகூட உதவியாளர்கள், சிற்றூழியர்கள் ஆகியோருடன் உரையாடிச் செவிமடுக்க வழிப்படுத்துக. அதிபரின் அனுமதியை முற்கூட்டியே பெற்று மாணவர்களை 4 பேர் கொண்ட குழுக்களாக்கி அவர்களை மேற்குறிப்பிட்டவர்களுடன் தொடர்பாடிச் செவிமடுக்கவும், செவிமடுத்த விடயங்களை வகுப்பில் கூறவும் வழிப்படுத்துக. பாடசாலையில் ஏனைய ஊழியர்கள் இல்லையாயின் மாற்று ஒழுங்குகளைச் செய்க.


***எடுத்துக்காட்டு:***

குழு A - அலுவலக உதவியாளர்களைச் சந்தித்தல்
குழு B - நூலக உதவியாளர்
குழு C - சிற்றூழியர்கள்

## செயற்பாடு 5

- அருகில் உள்ள பாடசாலை மாணவர்களுடன் உரையாடிச் செவிமடுப்பதற்கு இரு பாடசாலை அதிபர்களிடமும் முன்னனுமதியைப் பெற வேண்டும் என்பதை ஆசிரியர் நினைவிற் கொள்ள வேண்டும். அதன் பின்னர் இரு பாடசாலை மாணவர்களையும் குழுக்களாக்கி உரையாடிச் செவிமடுக்க வழிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு:***




> **குறிப்பு:** இரு பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்கள் அன்னியோனியமாக உரையாடிச் செவிமடுக்கின்றார்களா என அவதானித்தல் வேண்டும் எவ்வாறு உரையாடுவது? எது தொடர்பாக உரையாடுவது என்பது பற்றி சிறு விளக்கத்தையும் ஆசிரியர் வழங்க வேண்டும் என்பதையும் நினைவிற் கொள்க.

## செயற்பாடு 6

- சமுதாய அங்கத்தவர்களுடன் மாணவர்கள் பயமின்றி உரையாடிச் செவிமடுத்துத் துலங்குவதற்கு வாய்ப்பை வழங்குக. இதற்கும் அதிபரின் அனுமதியை முன்கூட்டியே பெற வேண்டும் என்பதை நினைவிற் கொள்க.

***எடுத்துக்காட்டு:***

- கிராமசேவகர்
- சுகாதார அதிகாரி
- தபாற்காரன்
- வங்கி அதிகாரி
- சமயத் தலைவர்கள்

**துணைக்குறிப்பு:** சமுதாய அங்கத்தவர்களுடன் சமூக விழிப்புணர்வு ஏற்படுத் தக்கூடிய விடயங்கள் தொடர்பாகச் செவிமடுக்க வழிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு:*** சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு
நுளம்பு ஒழிப்பு
நீரை வீண்விரயம் செய்யாதிருத்தல்
வீதி விதிகளை மதித்தல்
மற்றவர்களின் இன்ப துன்பங்களில் பங்கு கொள்ளல்
சேமிப்பின் நன்மைகள்

## கற்றல் - கற்பித்தல் வளங்கள்

- ⊡ பெற்றோர், அதிபர், உப அதிபர், ஏனைய வகுப்பு ஆசிரியர்கள், பாட சாலை அங்கத்தவர்கள், ஏனைய பாடசாலை மாணவர்கள், ஏனைய பாடசாலை ஆசிரியர்கள் சமுதாய அங்கத்தவர்கள்.

## கணிப்பீடு

- ✳ பின்வருவோருடன் அன்னியோனியமாகத் தொடர்பாடிச் செவிமடுத்ததைக் கணிப்பீடு செய்க.
    - பெற்றோர் மற்றும் குடும்ப உறுப்பினர்கள்
    - நண்பர்கள்
    - பாடசாலை ஆசிரியர்கள்
    - பாடசாலையில் உள்ள ஏனையவர்கள்
    - ஏனைய பாடசாலை மாணவர்கள்
    - சமுதாய அங்கத்தவர்கள்

## தேர்ச்சி மட்டம்

## 1.2.3 இரசனைக்காகச் செவிமடுப்பார்.

## உள்ளடக்கம்

- ✓ கதைகள்
- ✓ பாடல்கள், கவிதைகள்
- ✓ கிராமியப் பாடல்கள்
- ✓ உரையாடல்கள்
- ✓ நாடகங்கள்
- ✓ விகடப் பேச்சுக்கள், விகடத்துணுக்குகள்
- ✓ வருணனைகள்
- ✓ இலத்திரனியல் ஊடக நிகழ்ச்சிகள்

**இரசனையை வளர்த்தல்**

ஒவ்வொரு முதன்மை நிலை இறுதியிலும் மாணவர்களின் இரசனையில் படிமுறை விருத்தி ஏற்படுவதனை அவதானித்து, அறிந்து அதற்கேற்ப செயற்பாடுகளைத் திட்டமிடுதலே சிறந்தது.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

- ➲ மாணவர்களின் வயது மட்டத்திற்குப் பொருத்தமானதும் மாணவர்கள் இரசித்துச் செவிமடுக்கக்கூடியதுமான சிறிய கதைகளைத் தெரிவுசெய்து வாசித்துக்காட்டி மாணவர்களைச் செவிமடுக்கச் செய்க. ஒலிப்பதிவு நாடாவில் கதையைப் பதிவுசெய்து ஒலிக்கவிட்டும் மாணவர்களைச் செவிமடுக்கச்செய்ய வழிப்படுத்துக.

- மாணவர்களின் வயது மட்டம், சொற்களஞ்சிய விருத்தி என்பவற்றைக் கருத்திற் கொண்டு இரசிக்கக்கூடிய பாடல்கள், கவிதைகளை தெரிவுசெய்க. தெரிவுசெய்த பாடல்களைப் பாடியும் கவிதைகளை இரசனையுடன் கவிதை நடையில் வாசித்தும் காட்டுக. அல்லது ஒலிநாடாக்கள், இறுவட்டுக்கள் உள்ள சிறுவர் பாடல்களை ஒலிக்க விட்டு மாணவர்களைச் செவிமடுக்க வழிப்படுத்துக. கவிதைகளை ஒலி நாடாக்களில் பதிவு செய்து ஒலிக்கவிட்டும் இரசனையுடன் செவிமடுக்க நெறிப்படுத்தலாம் என்பதையும் நினைவிற் கொள்க.

- பல்வேறு பிரதேசங்களில் வழக்கில் உள்ள அல்லது பாதுகாக்கப்படும் கிராமியப் பாடல்களில் இருந்து சிறுவர்களுக்குப் பொருத்தமான கிராமியப் பாடல்களைத் தெரிவுசெய்து ஆசிரியர் பாடிக்காட்டி அல்லது பாடக்கூடிய ஆசிரியர்கள் உதவியைப் பெற்று கிராமியப் பாடல்களை ஒலிப்பதிவு நாடாக்களில் ஒலிப்பதிவு செய்து ஒலிக்கச் செய்து மாணவர்களைச் செவிமடுக்கச் செய்க.

- வானொலி, தொலைக்காட்சி, இணையவானொலி, இணையத்தொலைக்காட்சி ஆகிய வற்றில் ஒலி, ஒளிப்பரப்பாகும் சிறுவர் நாடகங்களைத் தெரிவுசெய்து பதிவு செய்து மாணவர்கள் செவிமடுக்க வழிப்படுத்துக. (சிறுவர்களுக்கான நாடகங்கள் ஐந்து தொடக்கம் எட்டு நிமிடங்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும் என்பதை நினைவிற் கொள்க.)

- வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றில் ஒலி, ஒளிபரப்பாகும் விகடப் பேச்சுக்கள், விகடத் துணுக்குகளைத் தெரிவுசெய்து ஒலிப்பதிவு செய்து கொள்க. அல்லது விகடப் பேச்சுககளையோ அல்லது விகடத் துணுக்குகளையோ தயார் செய்து நகைச்சுவையுடன் கூறி செவிமடுக்க வழிப்படுத்துக.

- இலத்திரனியல் ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளில் மாணவர்களுக்குப் பொருத்தமான நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்து மாணவர்கள் செவிமடுக்க வழிப் படுத்துக.

  ***எடுத்துக்காட்டு:***
  - பட்டிமன்றம்
  - கலை நிகழ்ச்சிகள்
  - பொது அறிவு நிகழ்ச்சிகள்
  - விவரண நிகழ்ச்சிகள்
  - செய்திகள்
  - விளையாட்டுத் தொகுப்பு நிகழ்ச்சிகள்

## செயற்பாடுகள்

### செயற்பாடு 1

- மாணவர்களின் வயது மட்டத்திற்குப் பொருத்தமான சிறிய கதைகளைத் தெரிவு செய்க. அதனை இரசனையுடன் மாணவர்களுக்கு வாசித்துக்காட்டுக. ஒலிப்பதிவு நாடாவில் கதைகளை ஒலிப்பதிவு செய்து ஒலிக்கச் செய்தும் மாணவர்களைச் செவிமடுக்கச் செய்யலாம்.

***எடுத்துக்காட்டு:*** **கதை - நல்ல தீர்ப்பு**

ஓர் ஊரில் ஓர் அரசர் இருந்தார். அவர் மிகவும் நல்லவர். ஒரு நாள் அரண்மனையில் விசாரணை நடந்து கொண்டிருந்தது.

ஒரு விவசாயி ''தன்னுடைய வயலில் ஆடுகள் வந்து மேய்ந்து பயிர்களை அழித்துவிட்டன'' என்று புகார் கொடுத்தார்.

''நிறைய உழைத்துப் பணம் செலவு செய்து பயிரை வளர்த்திருந்தேன்... இப்போது எல்லாம் போய்விட்டது. இனிமேல் நன் என்ன செய்வது? நீங்கள் தான் இதற்குச் சரியான தீர்ப்பு வழங்க வேண்டும்!'' என்று அந்த விவசாயி கேட்டுக் கொண்டார்.

''அந்த ஆடுகளுக்குச் சொந்தக்காரர் யார் என்று கண்டுபிடித்து அவரை அரண்மனைக்கு அழைத்து வாருங்கள்.'' என்று அரசர் உத்தரவு பிறப்பித்தார். சேவகர்கள் சென்று ஆடுகளின் சொந்தக்காரரை அரண்மனைக்கு அழைத்து வந்தார்கள்.

அரசர் விசாரித்து முடித்ததும் ''விவசாயி அடைந்திருக்கும் இழப்புக்கு ஈடாக உன்னுடைய ஆடுகளை நீ அவரிடம் கொடுத்து விட வேண்டும்.'' என்று தீர்ப்பு வழங்கினார். இதைப்பார்த்துக்கொண்டே அந்த மன்னரின் மகன் அமர்ந்திருந்தான்.

அவன் இந்தத் தீர்ப்பை வேறு விதமாக இன்னும் சிறப்பாக வழங்கலாமே! என்று நினைத்தான். அதை அவன் தந்தையிடம் தெரிவித்தான்.

உடனே அந்த அரசன் ''சரி, நீயே இதற்குச் சரியான ஒரு தீர்ப்பு சொல்'' என்றார். அந்த இளவரசன் ஆடுகளின் சொந்தக்காரரைப் பார்த்து ''உங்களுடைய ஆடுகள் எல்லாவற்றையும் ஒரு வருடகாலம் அந்த விவசாயியிடம் நீங்கள் ஒப்படையுங்கள். அந்த ஒரு வருடத்திற்குள் அந்த ஆடுகள் போடும் குட்டிகள், பால், எரு ஆகியவற்றை விவசாயி எடுத்துக்கொள்ளட்டும். ஒரு வருடத்திற்குப் பிறகு உங்களுடைய ஆடுகளை நீங்கள் திரும்பவும் வாங்கிக் கொள்ளுங்கள்!'' என்று தீர்ப்புக் கூறினான்.

''இது சரியான தீர்ப்புத்தான்...இனி நான் என்னுடைய அரச பொறுப்புக்களை இளவரசனிடமே ஒப்படைக்கிறேன்!'' என்று சொல்லி அவ்விதமே செய்தார்.

***தென்கச்சி. கோ. சுவாமிநாதன்***
***நன்றி: நீதிக்கதைகள்***

**துணைக்குறிப்பு:** ஒரு தண்டனையைப் பெறுபவர், அதற்குப் பிறகு சமுதாயத்தில் நல்ல விதமாக வாழ்வதற்கு வாய்ப்பு இருப்பதுபோல தீர்ப்பு அமைய வேண்டும். அதற்கு இந்தத் தீர்ப்பு சிறந்த எடுத்துக்காட்டாகும் என்பதை மாணவர்கள் மனதில் பதிக்குக.

**வாய்மொழி வினாக்கள்:**

(1) விவசாயி கொடுத்த புகார் யாது?
(2) அரசன் பிறப்பித்த உத்தரவு யாது?
(3) அரசன் வழங்கிய தீர்ப்பு யாது?
(4) அரசரின் மகன் அரசரிடம் என்ன கூறினான்?
(5) இளவரசன் வழங்கிய தீர்ப்பு யாது?


***கவனத்திற்கு:***
இக்கதையையும் அதற்குரிய வினாக்களையும் மொழிப்பயிற்சிக்கும் வாசிப்புப் பயிற்சிக்கும் பயன்படுத்த முடியும்.


**குறிப்பு:** மாணவர்களைக் குழுக்களாக்கி கதையைச் செவிமடுக்கச் செய்யலாம். அதன் பின்னர் ஆசிரியர் கூறிய கதையை குழுக்களில் உள்ள ஒருவர் மீண்டும் கூற வழிப்படுத்தலாம். இதன் மூலம் மாணவர்கள் இரசித்துச் செவிமடுத்துள்ளார்களா என அறிந்துகொள்ள முடியும். வினாக்களைக் கேட்பதன் ஊடாக இரசித்துக் கிரகித்தமையைக் கணிப்பீடு செய்ய முடியும்.

## செயற்பாடு 2

- தற்போது சிறுவர் பாடல்கள் அடங்கிய பல ஒலிநாடாக்களும் இறுவட்டுக்களும் வெளிவந்துள்ளன. அதுமட்டுமன்றி தேசிய கல்வி நிறுவக ஆரம்பக் கல்வித்துறையின ராலும் சிறுவர் பாடல்கள் அடங்கிய ஒலிநாடாக்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் இருந்து தரம் ஐந்து மாணவர்களுக்குப் பொருத்தமான ஒரு பாடலைத் தெரிவுசெய்து ஒலிக்கச் செய்க. தெரிவு செய்யும் பாடல் இரசனையுடன் பாடக்கூடியதாக இருத்தல் வேண்டும். மாணவர்களை நான்கு குழுக்களாக்கி வெவ்வேறு இடங்களில் அமரச் செய்து செவிமடுக்கச் செய்க. அல்லது வட்டமாக அமரச் செய்து நடுவில் ஒலிப்பதிவுக் கருவியை வைத்து ஒலிப்பதிவு நாடாவை ஒலிக்க விட்டு செவிமடுக்கச் செய்க.

***எடுத்துக்காட்டு 1:***



*எடுத்துக்காட்டு 2:* **பாடல்**

## ஒழுக்கம்

பெற்றவர் இடத்தில் மரியாதை
பெரியவர் இடத்தில் மரியாதை
கற்றவர் இடத்தில் மரியாதை
காட்டி நடப்பது ஒழுக்கம் என்போம்.

நன்மை பயக்கும் சொல்லோடு
நல்லோர் போற்றும் செயலோடு
உண்மை பேசும் துணிவோடு
உலகில் வாழ்வது ஒழுக்கம் என்போம்.

மாறும் சுற்றுச் சூழ்நிலையில்
மாசுகள் செய்து கெடுக்காமல்
போற்றும் பொதுச்சொத்(து) அழிக்காமல்
பேணிக் காப்பது ஒழுக்கம் என்போம்.

உதவிக் கரங்கள் நீட்டிடவும்
ஊரார் உன்னைப் போற்றிடவும்
பதவி பெருமை காத்திடவும்
பக்குவப் படுத்தும் ஒழுக்கம் என்போம்.

***தி.து. சிவசுப்பிரமணியன்***

*எடுத்துக்காட்டு 3:* **பாடல்**

**காக்கையாரே.......**



கறுப்பு வண்ண காக்கையாரே
கண்ணை உருட்டி கரைகிறாய்
விருந்தில் கலந்து கொள்ளவா
விரைந்து உறவை அழைக்கிறாய்?

ஒற்றுமையின் வலிமையை
உணர்த்த வானில் கரைகிறாய்
வண்ணக் கறுப்பே ஆனாலும்
வருத்தம் மனதில் இல்லையே!

சுத்தம் தெருவில் செய்கிறாய்
சிறந்த தொண்டன் ஆகிறாய்
வண்ணக் குயில் குஞ்சுக்கு
வளர்ப்பு தாயும் நீயாவாய்!

விட்டுக் கொடுத்து வாழும்
வித்தை எங்கு கற்றீரோ?
கற்கும் சிறுவர் மனத்திலே
கருத்தை விதைத்து உயர்த்துகிறாய்?

***கு. காளிமுத்து***
***நன்றி: கோகுலம் நவம்பர் 2007***

*எடுத்துக்காட்டு 4:* **கவிதைகள்**

### நான் வேண்டுவன

புன்னகை செய்யும்
பூக்கள் போதாது
புண்ணியம் செய்யும்
பூமி வேண்டும்!
சிலையான கற்கள்
போதாது
சுவையான கல்வி
வேண்டும்!
சுட்டெரிக்கும் சூரியன்
போதாது.
சுகமான நிலவும்
வேண்டும்!

***ஏ. ஜெகன்குமார்***
***நன்றி: கோகுலம், மார்ச் 2003***

### மூன்றெழுத்து

அன்னை என்னும்
மூன்றெழுத்தால் பிறந்தோம்.
அன்பு என்னும்
மூன்றெழுத்தால் வளர்ந்தோம்.
பள்ளி என்னும்
மூன்றெழுத்தில் சேர்ந்தோம்.
கல்வி என்னும்
மூன்றெழுத்தினைக் கற்றோம்.
போட்டி என்னும்
மூன்றெழுத்தினை எதிர்கொண்டு
வெற்றி என்னும்
மூன்றெழுத்தினை அடைந்து
சாதனை என்னும்
மூன்றெழுத்தினைச் சந்தித்தோம்.

***ஆர். ஹறிணி***
***நன்றி: கோகுலம் மே 2003***

### நிலையான தோல்வியில்லை

செல்வனே
நீ ஏழைகள் ஆயிரம்
பேருக்கு எஜமானாக
இருக்கலாம்
ஈ எறும்பு
ஒன்றுக்காவது எஜமானாக
முடியுமா?

உன் பத்து ரூபாய்
நோட்டுக்குப் பத்துப்பேர்
வரலாம். பத்தாயிரம்
நீட்டு, பட்டாம் பூச்சி வருமா?

உட்கார்ந்திருப்பது உன்
தோட்டத்துப் பூவில்
என்றாலும், உன்
வருகையைக் கண்டு
வண்டு எழுந்திருக்குமா?

நீ ஒரு தேன் கூட்டைத்
தொடு, நீ செல்வனாயிற்றே
என்று ஒரு தேனீயாவது உன்னை
முத்தமிட்டுப் பறக்குமா?

நீயும் உன் பணமும் பெறுவது
நிலையான வெற்றியுமல்ல
நாங்களும் எங்கள்
ஏழ்மையும் பெறுவது
நிலையான தோல்வியுமல்ல.

***ஏ. பாலகிருஷ்ணன்***
***நன்றி: கோகுலம் செப்ரெம்பர் 2003***


**கவனத்திற்கு:** கவிதைகளை கவிதை நடையில் வாசித்துக்காட்டி மாணவர்களை வாசிக்க ஆர்வமூட்டுக. மாணவர் மன்ற நிகழ்வுகளின்போது கவிதைகளை வாசிக்க களம் அமைத்துக்கொடுக்கும்போது வாசித்தல் திறன், செவிமடுத்தல் திறன் ஆகியவை வளரும் என்பதை நினைவிற்கொள்க.

## செயற்பாடு 3


- மாணவர்கள் வாழும் பிரதேசங்களில் உள்ள கிராமியப் பாடல்களில் இருந்து தரம் ஐந்து மாணவர்களுக்குப் பொருத்தமான கிராமியப் பாடல்களைத் தெரிவு செய்க. அல்லது ஒலி நாடாக்களையோ இறுவட்டுக்களையோ பெற்றுக் கொள்க. மாணவர் களை மூன்று குழுக்களாக்கி ஆசிரியர் நடுவில் நின்று பாடி மாணவர்களைச் செவி மடுக்கச் செய்க. ஆசிரியரால் பாடமுடியாவிடில் ஒலி நாடாக்களைப் பயன்படுத்துக.

***எடுத்துக்காட்டு 1:***

**வகுப்பு அமைப்பு**




**குழு - ❶**



**குழு - ❷**

**ஆசிரியர்/ஒலிப்பதிவுக்கருவி**



**குழு - ❸**

***எடுத்துக்காட்டு 2:*** **மலையகக் கிராமியப் பாடல்**

1. கோண கோண மலையேறி
   கோப்பிப் பழம் பறிக்கையிலே
   ஒரு பழம் தப்பிச்சுன்னு
   உதைச்சானய்யா சின்னத்துரை

2. பாட்டுக்குப் பணிய லயம்
   பந்தடிக்க மேட்டு லயம்
   பேச்சுக்கு பீலிக்கரை
   வாச்சுதடா உந்தனுக்கு

3. பொட்டுப் பொட்டா கையெழுத்தாம்
   பொன் பதிச்ச பேனாவாம்
   ஆதரிச்சு பேரு போடும்
   ஐயா கணக்குப்பிள்ளை

4. திண்ணயத் திண்ணயக் கூட்டுங்களேன்
   தெருவுத் திண்ணயக் கூட்டுங்களேன்
   நம்மையா கங்காணி சாஞ்சிருக்க
   சருகுத் திண்ணயக் கூட்டுங்களேன்.

***எடுத்துக்காட்டு 3 :*** **கும்மிப்பாடல்**

கும்மியடி பெண்ணே கும்மியடி - நீ
குனிந்து வளைந்து கும்மியடி
குழந்தைப் பெண்ணே கும்மியடி - நீ
குலத்தைக் காத்திட கும்மியடி

தையும் பிறந்தது கும்மியடி - நீ
தரணி சிறக்கக் கும்மியடி
தை தை என்றே கும்மியடி - நீ
தைப் பொங்கலன்று கும்மியடி

சித்திரை வந்தது கும்மியடி - நீ
சிறப்புடன் வாழக் கும்மியடி
சின்னப் பெண்ணே கும்மியடி - நீ
சிட்டுப்போலக் கும்மியடி


ஆடி பிறந்தது கும்மியடி - நீ
ஆடி மகிழக் கும்மியடி
ஆடிப்பெருக்கில் கும்மியடி - நீ
ஆனந்தமாகக் கும்மியடி

## செயற்பாடு 4

- மாணவர்களுக்கு முன்கூட்டியே அறிவுறுத்தல்களை வழங்கி, ஒரு விடயம் தொடர்பாக உரையாடலைத் தயார்ப்படுத்த(கூட்டாக) வழிப்படுத்துக. ஆசிரியரும் உரையாடல் ஒன்றைத் தயார்ப்படுத்தி எழுமாற்றாக சில மாணவர்களை உரையாட பயிற்றுக. அந்த உரையாடலை ஏனைய மாணவர்கள் செவிமடுத்து இரசிக்க வழிப்படுத்துக. அதன் பின்னர் மாணவர்களுக்கு முன்கூட்டியே வழங்கிய அறிவுறுத்தலின்படி அவர்கள் ஆயத்தப்படுத்திய உரையாடலை நிகழ்த்திக் காட்ட ஊக்கப்படுத்துக.

***எடுத்துக்காட்டு:*** **உரையாடல் - உயிரை நேசி**


**ஒரு மயக்கும் மாலைப்பொழுதில் சூரியா கிராமத்தில் வாழ்ந்து வந்த வளர்ப்புப் பிராணிகள் அனைத்தும் சமூக மண்டபத்தில் ஒன்றுகூடி கலந்துரையாடின.**



வணக்கம். இந்த நிகழ்வுக்குச் சிரமம் பாராது வருகை தந்த உங்கள் அனைவரையும் வருக வருகவென வரவேற்கின்றேன். தொடர்ந்து, இந்நிகழ்வின் தலைமையுரையை ஆற்ற நம் தலைவர் அவர்களை அன்புடன் அழைக்கின்றேன்.


**தலைவர்**

நம் நலன்விருத்திச் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் என் முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இக்கூட்டத்தில் நம்முடைய குறை நிறைகளைப் பற்றிக் கலந்துரையாடி ஒரு தீர்வுகாண வேண்டும் என்பதே நமது முக்கிய நோக்கமாகும். சங்க உறுப்பினர்கள் நன்முறையில் ஒத்துழைப்பு நல்குவீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன். நன்றி.



என்னை என் எஜமானர் நன்கு கவனித்து வருகின்றார். வேளை தவறாது நல்ல உணவு அளிக்கின்றார். என் உறைவிடம் வசதியாக இருக்கின்றது. என்னை அவர்கள் தங்கள் குடும்பத்தில் ஓர் உறுப்பினராகவே போற்றி வருகின்றார்கள்.


நீ கொடுத்து வைத்தவன். என் நிலையைப் பற்றி நினைத்தால் மிகவும் வருத்தமாக உள்ளது. மிஞ்சியதைத்தான் எனக்குக் கொடுக்கின்றனர். எங்களுடைய முட்டைகளையும் எடுத்துக் கொண்டு எங்களையும் உணவாகக் கொள்கின்றனர். நன்றி கெட்ட மானிடர்கள்!






உன் கதையைக் கேட்கப் பரிதாபமாக இருக்கிறது. எனக்கு அனுதினமும் பழங்களும் பருப்பும் கொடுக்கிறார்கள். என்னுடன் கொஞ்சி விளையாடுகிறார்கள். சிறகிருந்தும் என்னால் சுதந்திரமாகப் பறக்க முடியவில்லையே!


குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன். அவர்களுடைய தொழிலுக்கு மட்டும் என்னைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். நல்ல தீனியும் கொடுக்கின்றனர். ஆனால் கூண்டில் அடைபட்டுக் கிடப்பதைத்தான் நான் வெறுக்கிறேன்.






எனக்கு நல்ல உணவுதான் கொடுக்கிறார்கள். நான் கிடைத்த வற்றையும் தின்பேன்; திருடியும் தின்பேன். என்னை நன்றாகக் கவனித்துக் கொள்கிறார்கள்.

உங்கள் கருத்துகளுக்கு நன்றி. என்னை என் வீட்டில் ‘கோமாதா’ என்று போற்றி வருகின்றனர். என் உறைவிடமும் நன்றாக உள்ளது. வேளை தவறாது பசும்புற்களைத் தருகின்றனர் நானும் அதற்கு நன்றிக் கடனாகப் பாலைத் தருகின்றேன்.





சக தோழர்களே, இப்பொழுது நடந்த கலந்துரையாடலில் இருந்து நாம் ஒரு தீர்மானத்திற்கு வருவோம். முன்பு, நம் வாழ்க்கை சிரமமாக இருந்தது. இன்றும் சில குறைபாடுகள் இருந்த போதிலும் நம் தேவைகள் பெரும்பாலும் நிறைவு செய்யப்படுகின்றன. ஆகவே நாம்,

**‘‘குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள்**
**மிகை நாடி மிக்க கொளல்’’**

என்ற பண்புடையவராய் இருத்தல் வேண்டும் என்று கூறி இக்கூட்டத்தை முடிக்கிறேன். நன்றி.

*தமிழ் மொழிப்பயிற்றி*
*நன்றி: கலைத்திட்ட மேம்பாட்டு மையப் பாடக்குழு*
*கல்வி அமைச்சு - கோலாம்பூர்*
*உமா பதிப்பகம் - கோலாம்பூர் வெளியீடு*

பின்வரும் வினாக்களை வினவி இரசனையுடன் செவிமடுத்தலை உறுதி செய்து கொள்க.

**வாய்மொழி வினாக்கள்:**

1. வளர்ப்புப் பிராணிகள் சங்கத் தலைவர் யார்?
2. கிளியின் மனக்குறை யாது?
3. குரங்கு எதனை வெறுக்கிறது?
4. கோழி மனிதர்களை நிந்திக்கக் காரணம் யாது?
5. 'கோமாதா' என்று எதனை அழைப்பர்?
6. பிராணிகளின் இறுதி முடிவு யாது?

**குறிப்பு:** இங்கு தரப்பட்டுள்ள உரையாடலை ஒலிப்பதிவு செய்து ஒலிக்கச் செய்தும் மாணவர்களைச் செவிமடுக்கச் செய்யலாம். இந்த உரையாடலை பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகியவற்றிற்கும் பயன்படுத்த முடியும் என்பதையும் நினைவிற் கொள்க.

## செயற்பாடு 5

- மாணவர்களின் வயது மட்டத்திற்குப் பொருத்தமான நாடகங்களை வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் இருந்து தெரிவுசெய்க. மாணவர்களை இரு குழுக்களாக்குக. நாடகங்களை செவிமடுக்கச் செய்க. (நாடகங்கள் பத்து நிமிடங்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.) நாடகம் தொடர்பான கருத்துக் களைக் கூற வழிப்படுத்துக. ஆசிரியர் தாமும் நாடகத்தை எழுதி அல்லது சிறுவர் நாடக நூல்களில் இருந்து தெரிந்து மாணவர்களை நடிக்க வைத்து ஒலிப்பதிவு செய்து (வானொலி நாடகம் போன்று) ஒலிக்கவிட்டும் செவிமடுக்கச் செய்யலாம். அல்லது சிலமாணவரைத் தெரிவுசெய்து ஓரங்க நாடகமாகவும் நடிக்க விட்டுஏனைய மாணவர்களைச் செவிமடுக்கச் செய்யலாம்.

*எடுத்துக்காட்டு:* **நாடகம் - படிப்பினை**

### காட்சி 1

**கீதா** : வாழைப்பழத் தோலை கண்டபடி வீசாதே.
**மாலா** : வேறு எங்குதான் வீசுவது.

**கீதா** : குப்பைத் தொட்டி அல்லது குப்பைக் கூடைக்குள் போடு.
**மாலா** : அவ்வளவு தூரம் சென்று என்னால் வீச முடியாது.

**கீதா** : குப்பைத் தொட்டிக்குள் போடுவது என்றால் தான் சிறிது தூரம் நடக்க வேண்டும்.
**மாலா** : வேறு எங்குதான் போடுவது?

**கீதா** : வகுப்புக்கு வெளியில் உள்ள குப்பைக் கூடைக்குள் போடு
**மாலா** : குப்பைக் கூடைக்குள் வாழைப்பழத் தோலைப் போடலாமா?

**கீதா** : வேடிக்கையாக இருக்கிறது உன் பேச்சு. (சிரித்தல்)
**மாலா** : ஏன் சிரிக்கிறாய். (கோபமாக)

**கீதா** : சிரிக்காமல் வேறு என்னதான் செய்வது.
**மாலா** : எனக்குக் கோபம் கோபமாக வருகிறது.

**கீதா** : கோபப்படாதே பொறுமையாகக்கேள்.
**மாலா** : நடைபாதையில் வீசுவதை விட குப்பைக் கூடைக்குள் போடுவதில் என்ன தவறு இருக்கிறது.

**காட்சி 2**

**தீபன்** : அய்யோ! அம்மா....... (வாழைப்பழத் தோலில் சறுக்கி தீபன் கீழே விழுந்துவிட்டான்.)
**கீதா** : மாலா, அங்கே பார். தீபன் நீ வீசிய வாழைப்பழத்தோலில் சறுக்கி விழுந்து விட்டான்.
**மாலா** : அதற்கு நான் என்ன செய்ய. (அலட்சியமாக)

**கீதா** : நீ வாழைப்பழத்தோலை குப்பைக்கூடைக்குள் போட்டிருந்தால் தீபன் விழுந்திருப்பானா?
**மாலா** : நீ என்மீது பழியைப் போடாதே.

**கீதா** : உன்மீது நான் பழி சுமத்தவில்லை. நாம் செய்யும் சிறு தவறு மற்றவர் களுக்கு பெரும் பாதிப்பை உருவாக்கிவிடும் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

**காட்சி 3**

**ஆசிரியர்** : யார் வாழைப்பழத்தோலை நடைபாதையில் வீசியது.

**மாணவர்கள்** : (மௌனமாக இருக்கிறார்கள்.)

**ஆசிரியர்** : கீதா, நீயா வீசினாய்?

**கீதா** : இல்லை ரீச்சர்

**ஆசிரியர்** : மாலா...

**மாலா** : நான் தான் ரீச்சர்.

**ஆசிரியர்** : குப்பைக் கூடைக்குள் போட்டிருந்தால் இந்த விபரீதம் நடந்திருக் குமா? பார்த்தாயா, உனது பொறுப்பற்ற தன்மையால் நடந்த விபரீதத்தை! இனியாவது இப்படியான தவறுகளைச் செய்யாதே. இச்சம்பவம் உனக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் நல்ல படிப்பினை யாகும்.

**மாலா** : என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். நான் இப்படி இனிமேல் செய்ய மாட்டேன் ரீச்சர்.


***நாடகக் கருத்துருவாக்கம்:***
***வி.என்.எஸ். உதயசந்திரன்***

## செயற்பாடு 6

- வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றில் ஒலி ஒளிபரப்பாகும் விகடப் பேச்சுக்கள், விகடத் துணுக்குகளை பதிவுசெய்து கொள்க. மாணவர்களைக் குழுக்களாக்கி அவற்றை செவிமடுக்க வழிப்படுத்துக. அல்லது ஆசிரியரே விகடப் பேச்சு ஒன்றை நிகழ்த்த மாணவர்கள் அப்பேச்சுக்களை செவிமடுக்க வழிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு 1:***


### கண் தெரியுமா?



ஆந்தைகளைப் பற்றி பாடம் நடத்தி முடித்துவிட்டு கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தார் ஆசிரியர். என் நண்பனிடம் ''ஆந்தைக்கு இரவில் கண் தெரியுமா?'' என்று கேட்டார். ''எனக்குத் தெரியவில்லை ஐயா?'' என்றான். ''உனக்குத் தெரியுமா என்று நான் கேட்கவில்லை. ஆந்தைக்குத் தெரியுமா?'' என்று மீண்டும் கேட்டார் ஆசிரியர். ''ஐயா, பதில் எனக்குத் தெரியவில்லை என்று சொன்னேன்.'' என்றான். ''ஒழுங்காகக் கவனித்திருந்தால்தானே பதில் சொல்ல முடியும்'' உட்கார் என்றார் ஆசிரியர்.

***எடுத்துக்காட்டு 2:***

### சொர்க்கம்



பெர்னாட்ஷா பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது சக மாணவர் கள் அவரை மட்டம் தட்டிக்கொண்டேயிருப்பார்கள்.

அவர்களுக்குப் பாடம் புகட்ட சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் வகுப்பாசிரியர் மாணவர்களைப் பார்த்து ''உங்களில் சொர்க்கத்துக்குப் போக விரும்புகிறவர்கள் எழுந்து நில்லுங்கள்!'' என்றார்.

உடனே பெர்னார்ட்ஷாவைத் தவிர அனைவரும் எழுந்து நின்றனர். ஆசிரியர்''உனக்கு மட்டும் சொர்க்கத்துக்குப் போக விருப்பம் இல்லையா?'' என்று ஷாவிடம் கேட்டார்.


உடனே பெர்னார்ட்ஷா, ''எனக்கும் விருப்பம்தான். ஆனால் இவர்களெல்லாம் சொர்க்கத்திற்குப் போன பிறகு அது சொர்க்கமாகவா இருக்கும்!'' என்றார். மாணவர்கள் முகத்தில் ஈயாடவில்லை.

## செயற்பாடு 7


- வானொலியில் ஒலிபரப்பாகும் கிறிக்கெட், காற்பந்தாட்டம், விழாக்கள், ஆலய உற்சவங்கள், தேசிய வைபவங்கள் போன்றவை தொடர்பான நேர்முக வருணனைகளை செவிமடுக்க வழிப்படுத்துக. வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றில் ஒலிபரப்பாகும் நேர்முக வருணனைகளை பதிவுசெய்து மாணவர்கள் மத்தியில் ஒலிக்கவிட்டு செவிமடுக்கச் செய்க. அல்லது ஆசிரியரே நேர்முக வருணனையை நிகழ்த்தி மாணவர்களைச் செவிமடுக்கச் செய்யலாம். குழுக்களுக்குள் நேர்முக வருணனைகளை மேற்கொள்ள வழிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு 1:***


**குழு - ❶**
கிறிக்கெட் நேர்முக வருணனை




**குழு - ❷**
பாடசாலை விளையாட்டுப் போட்டி நேர்முக வருணனை



**குழு - ❸**
புத்தாண்டு விழா நேர்முக வருணனை



**குழு - ❹**
இயற்கை அனர்த்தம் தொடர்பான நேர்முக வருணனை



**குறிப்பு:** குழுவில் உள்ள எல்லோரும் நேர்முக வர்ணனையில் பங்குபற்ற ஊக்கப் படுத்துக. ஒருவர் நேர்முக வருணனையில் ஈடுபடும்போது குழுவில் உள்ள ஏனைய மாணவர்கள் இரசனையுடன் செவிமடுக்க வழிப்படுத்துக.

## செயற்பாடு 8

- இலத்திரனியல் ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகின்ற சிறுவர் நிகழ்ச்சிகளை அல்லது ஆசிரியர் குறிப்பிடுகின்ற நிகழ்ச்சிகளை ஒத்த நிகழ்ச்சிகளைக் கேட்க, பார்க்க அறிவுறுத்துக. அவை தொடர்பாக வகுப்பில் கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குக.வீட்டில் செவிமடுத்த நிகழ்ச்சிகள் பற்றி வகுப்பில் மாணவர்கள் கூறும்போது அவர்கள் கேட்ட, பார்த்த நிகழ்ச்சிகளின் தரம், பொருத்தப்பாடு என்பவை தொடர்பாகவும் ஆசிரியர் கவனம் செலுத்த வேண்டும் என்பதை நினைவிற் கொள்க.

  ***எடுத்துக்காட்டு:***

  - சிறுவர் நிகழ்ச்சிகள்
  - விநோத நிகழ்ச்சிகள்
  - விவரணச் சித்திரங்கள் (பிராணிகள், தாவரங்கள்)
  - பொது அறிவு நிகழ்ச்சிகள்
  - உலக அதிசயங்கள், சம்பவங்களின் விவரணச் சித்திரங்கள்

## கற்றல் - கற்பித்தல் வளங்கள்

- கதைகள், பாடல்கள், கிராமியப் பாடல்கள், நாடகங்கள், விகடப் பேச்சுக்கள், விகடத்துணுக்குகள் கொண்ட சஞ்சிகைகள், நூல்கள்.
- தொலைக்காட்சி, வானொலி, ஒலி நாடாக்கள், ஒளி நாடாக்கள், இறுவட்டுக்கள்.

## கணிப்பீடு

- ✳ கதைகள், பாடல்கள், அபிநயப் பாடல்கள், கிராமியப் பாடல்கள், நாடகங்கள், விகடப் பேச்சுக்கள், விகடத்துணுக்குகள், வருணனைகள், நேர்முக வருணனைகள் என்பவற்றைச் செவிமடுத்து இரசித்தலைக் கணிப்பீடு செய்க.
- ✳ இரசித்தலுக்கான துலங்கலை மாணவர்கள் வெளிப்படுத்துகின்றார்களா என்பதையும் கணிப்பிடுக. (முகபாவம், தலையசைத்தல், தாளம்போடுதல், குதூகலித்தல், வியத்தல்)
- ✳ கதைகள், பாடல்கள், தொடர்பில் வாய்மொழி வினாக்களுக்கு விடை கூறுதலையும் கணிப்பிடுக.
- ✳ கதைகூற, பாட்டுப்பாட, நடிக்க, வருணிக்க மாணவர்கள் ஆர்வத்துடன் முன் வருகின்றார்களா என்பதையும் கணிப்பீடு செய்க.

## தேர்ச்சி மட்டம்

## 1.2.4 கற்றலுக்காகக் கற்க செவிமடுப்பார்.

## உள்ளடக்கம்

- ✓ பாடசாலை, கிராமம், நாடு தொடர்பான முக்கிய தகவல்கள் (அவை பற்றித் தெரிந்த பெரியவர்களிடம்)
- ✓ முக்கிய நிகழ்ச்சிகளும் நிகழ்ச்சிகள் பற்றிய விவரணங்களும்
- ✓ உலகில் முக்கிய தினங்கள், இடங்கள், ஆறுகள், மலைகள், பிராணிகள், தாவரங்கள், மற்றும் விந்தை உலகம் பற்றிய தகவல்கள் (வளவாளர்களிடம்)
- ✓ இலத்திரனியல் ஊடகங்களினூடாகப் பெறக்கூடிய பயனுள்ள தகவல்கள்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

- ➲ மாணவர்கள் வகுப்பறைக் கற்றல் செயற்பாடுகளுக்கு அப்பால் சுயாதீனமாகக் கற்பதற்கு வலிமையளித்தல், அவர்கள் வாழ்நாட்கள் முழுவதும் தொடர்ந்து கற்பதற்கு வாய்ப்பளிக்கும். அதனால் ஆரம்ப வகுப்புக்களிலேயே கற்றலுக்காகக் கற்கச் செய்வதற்கான தகைமையைச் செவிமடுத்தலிலும் பெறுவதற்கு ஆவன செய்க.

- ➲ பாடசாலை, கிராமம், நாடு தொடர்பான முக்கிய தகவல்களை அவை பற்றி நன்கு தெரிந்த பெரியோரிடம் அறிந்து செவிமடுக்க வழிப்படுத்துக.

- ➲ ஒலிம்பிக் போட்டிகள், உலகின் முக்கிய நிகழ்ச்சிகள் மற்றும் சுனாமி, சூறாவளி, வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை அனர்த்தங்கள் பற்றியும் அவற்றின் விவரங்களையும் அறிந்து செவிமடுக்க வழிப்படுத்துக.

- ➲ உலகின் முக்கிய தினங்கள், இடங்கள், ஆறுகள், மலைகள், பிராணிகள் மற்றும் விந்தை உலகம் பற்றிய தகவல்களை புவியியல், உயிரியல் ஆசிரியர்களிடம் (வளவாளர்கள்) அறிந்து செவிமடுக்க வழிப்படுத்துக.

- ➲ இலத்திரனியல் ஊடகங்களில் (வானொலி, தொலைக்காட்சி) ஒலி, ஒளிபரப்பாகும் அறிவுபூர்வமான பயன்மிக்க நிகழ்ச்சிகளை மாணவர்கள் (அதற்கான நேரத்தை ஒதுக்கிச்) செவிமடுக்க நெறிப்படுத்துக.

## செயற்பாடுகள்

### செயற்பாடு 1

- பாடசாலையின் வரலாறு தெரிந்த வயதில் மூத்த பழைய மாணவர் அல்லது ஓய்வு பெற்ற அப்பிரதேச ஆசிரியர் ஒருவரை அழைத்து, மாணவர்களுடன் உரையாட ஏற்பாடு செய்க.

  ***எடுத்துக்காட்டு:***

  **பாடசாலை பற்றிய தகவல்கள்**

  - பாடசாலை ஆரம்பித்த ஆண்டு
  - பாடசாலையை உருவாக்கக் காரணமாக இருந்தவர்கள்
  - பாடசாலையின் முதல் அதிபர்
  - பாடசாலை ஆரம்பிக்கும்போது படித்த மாணவர்களின் எண்ணிக்கை
  - பாடசாலையில் கல்வி கற்று உயர்ந்த நிலையில் உள்ளவர்களின் விவரம்
  - பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையிலான தொடர்பு

  ஆகியவை பற்றிக்கூறக்கூடிய ஒருவரைத் தெரிவுசெய்வதே பொருத்தமானது என்பதை நினைவிற் கொள்க.

- இது போன்றே பெற்றோரின் வழிகாட்டலுடன் கிராமம், நாடு தொடர்பான தகவல் களையும் வயதில் மூத்தவர்களிடம் மாணவர்கள் கேட்டறிய வழிப்படுத்துக.

  ***எடுத்துக்காட்டு:*** **நாடு**

  - இலங்கை நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட தீவு ஆகும்.
  - இலங்கை 1948ஆம் ஆண்டு சுதந்திரமடைந்தது.
  - இலங்கை 1972 ஆம் ஆண்டு குடியரசாக மாறியது.
  - தேசிய கீதம் பிரபல இசையமைப்பாளர் ஆனந்த சமரக்கோன் அவர்களால் இயற்றப் பட்டது.
  - தேசிய கீதத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர் முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி அவர்கள் ஆவார்.
  - இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ். சேனாநாயக்க ஆவார்.
  - இலங்கையின் மிக நீளமான நதி மகாவலி கங்கை
  - இலங்கையின் உயரமான மலை பேதுருதாலகாலை
  - இலங்கையின் மிக உயரமான நீர்வீழ்ச்சி பம்பரக்கந்தை
  - இலங்கையின் தேசியப் பறவை காட்டுக்கோழி
  - இலங்கையின் தேசிய மரம் நாகமரம்
  - இலங்கையின் தேசிய மலர் நீலோற்பலம்
  - இலங்கையில் இலவசக்கல்வியின் தந்தை சி.டபிள்யூ.டப்ளியூ. கன்னங்கர ஆவார்.
  - இலங்கையின் இயற்கைத் துறைமுகம் திருகோணமலையில் அமைந்துள்ளது.
  - இலங்கையின் மிகப்பெரிய தாவரவியற் பூங்கா பேராதனையில் அமைந்துள்ளது.

### செயற்பாடு 2

- நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள், இயற்கை அனர்த்தங்கள் பற்றி மாணவர்களை கேட்டறிந்து வருமாறு ஒருவாரத்திற்கு முன்னர் அறிவுறுத்துக. அவர்கள் கேட்டறிந்த தகவல்களை ஏனைய மாணவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்காக மாணவர்களை நான்கு பேர்கள் கொண்ட குழுக்களாக்குக.

- ஏற்கனவே அறிவுறுத்தல் வழங்கியபடி மாணவர்கள் கேட்டறிந்த தகவல்களை தமது குழுக்களிடையே பகிர்ந்து கொள்ள வழிப்படுத்துக. குழுக்களிடையே தகவல்களைப் பகிர்ந்து கொண்டபின் முழு வகுப்புக்கும் அத்தகவல்களை முன்வைக்க ஆவன செய்க.

***எடுத்துக்காட்டு:***

- ஒலிம்பிக் போட்டிகள்
- கிறிக்கெட் போட்டி/காற்பந்தாட்டப்போட்டி/வலைப்பந்தாட்டப்போட்டி
- சூறாவளி, மண்சரிவு
- சுனாமி
- உலக சாதனைகள் (மாணவர்களுக்கு அவசியமான)

## ஒலிம்பிக் வரலாற்றுக் குறிப்புக்கள்

கிரேக்க நாட்டில் தான் முதன் முறையாக (கி.மு.776ஆம் ஆண்டு) ஒலிம்பிக் விளையாட்டு ஆரம்பிக்கப்பட்டது. கிரேக்கர்களுக்காக மட்டும் தொடங்கிய இந்த விளையாட்டின் புகழ் உலகெங்கும் பரவியது.

நவீன ஒலிம்பிக் போட்டிகள் கி.பி. 1896ஆம் ஆண்டு எதென்சில் ஆரம்பமாகின. 1900ஆம் ஆண்டு இரண்டாவது ஒலிம்பிக் போட்டிகள் பாரிசில் நடைபெற்றன. 29ஆவது ஒலிம்பிக்போட்டிகள் 2008ஆம் ஆண்டு சீனாவில் நடைபெற்றன.




உலக அளவில் விளையாட்டு இரசிகர்களின் மனம் கவர்ந்த ஒலிம்பிக் போட்டிகள் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகின்றன. 2004 ஆம் ஆண்டு கீரீஸ் நாட்டின் தலைநகர் ஏதென்ஸ் நகரில் நடைபெற்றது. இதனை அடுத்து 2008ஆம் ஆண்டில் ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் வாய்ப்பு சீனாவுக்கு அளிக்கப்பட்டது. 29ஆவது ஒலிம்பிக் போட்டிகள் சீனத் தலைநகர் பீஜிங்கில் கோலாகலமாக நடைபெற்ற நிறைவு பெற்றன. 8ஆம் எண்ணை ராசியானதாக சீனர்கள் கருதுகின்றார்கள். அதனால் 2008ஆம் ஆண்டு 8ஆம் மாதம் 8ஆந் திகதி சீன நேரப்படி இரவு 8.08 மணிக்கு ஒலிம்பிக் போட்டிகள் கோலாகலமாகத் தொடங்கின. பறவைக்கூடு வடிவத்திலான தேசிய மைதானத்தில் தொடக்க விழா, கண்ணைக் கவரும் விதத்தில் நடைபெற்றது. இதற்காக அந்த மைதானம் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. முதலில் சீனாவின் பாரம்பரிய மேளம் இசைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து பதினையாயிரம் கலைஞர்கள், பல்வேறு கலைநிகழ்ச்சிகளை நடத்தி பார்வையாளர் களைப் பிரமிக்கச் செய்தனர். உலகத்தையே வியக்கவைத்த இந்தக் கலை நிகழ்ச்சிகள், சீனாவின் பழம் பெருமையையும் தற்போதைய நவீன தோற்றத்தையும் பறைசாற்றுவனவாக அமைந்து இருந்தன.

**2012ஆம் ஆண்டு இங்கிலாந்து தலைநகர் லண்டனில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற உள்ளன.**

**கிறிக்கெட் வரலாற்றுக் குறிப்புகள்**

இங்கிலாந்து நாட்டின் ‘கென்ட்’ என்ற மாகாணத்தில் உள்ள ‘வீல்டு’ எனும் கிராமத்தில் கிராமவாசிகள் முதன் முதலில் இந்தக் கிரிக்கெட் விளையாட்டை ஆர்வமாக விளையாட ஆரம்பித்தார்கள். மெல்ல மெல்ல அந்த விளையாட்டு இங்கிலாந்தில் உள்ள மற்ற மாகாணங்களிலும் தொற்றிக் கொண்டது. லண்டன் நகரத்து செல்வசீமான்கள் இந்த விளையாட்டைப் பார்த்து அதன் சுவாரசியத்திலும் விறுவிறுப்பிலும் தங்களை மறந்து உற்சாகமடைந்தனர். அவர்கள் அந்த விளையாட்டில் ஈடுபாடு கொள்ள கிறிக்கெட் விதிமுறைகள் நாளடைவில் மெருகேறிச் செழுமையடைந்தன.

## செயற்பாடு 3

- உலகின் முக்கிய தினங்கள், இடங்கள், ஆறுகள், மலைகள், பிராணிகள், தாவரங்கள் பற்றிய தகவல்களைத் தெரிந்தவர்களிடம் கேட்டறிந்து வருமாறு (ஒருவாரத்திற்கு முன்) அறிவுறுத்தல் வழங்குக. அவர்கள் கேட்டறிந்தமையை உறுதிப்படுத்திக் கொண்டு மாணவர்களைச் சிறிய குழுக்களாக்கி (4 மாணவர்கள்) ஒருவர் தகவல்களைக் கூறும்போது ஏனைய மாணவர்கள் கவனமாகச் செவிமடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுக. (செவிமடுத்தலை ஆசிரியர் உறுதிப்படுத்திக் கொள்க.)

***எடுத்துக்காட்டு 1:***

**உலகப் புத்தக தினம் - ஏப்ரல் 23**

ஐக்கிய நாடுகள் சபை ஏப்ரல் 23 ஆந் திகதியை உலக புத்தக தினமாக அறிவித்துள்ளது. நமக்குத் தேவையானவற்றுள் முக்கியமானதொன்று புத்தகமாகும். நல்ல நூல்களே உற்ற நண்பர்கள். மற்றைய உயிரினங்களின் வாழ்க்கையில் தலைமுறைகள் மாறினாலும், வாழ்க்கை முறைகள் மாறாமல் தொடங்கிய இடத்திலிருந்தே மீண்டும் மீண்டும் தொடங்குகிறது. ஆனால் மனிதனின் வாழ்க்கை மட்டும்தான் ஒரு தலைமுறை விட்ட இடத்திலிருந்து அடுத்த தலைமுறை வாழ்க்கையைத் தொடங்குகிறது. மனிதன் தன்னுடைய வாழ்க்கையை வரலாறாக நூல்களில் பதிவுசெய்வதன் காரணத்தால் தான் அது சாத்தியமாகின்றது.

***எடுத்துக்காட்டு 2:***

| | |
|---|---|
| உலகின் மிக நீளமான ஆறு | - **நைல் நதி (ஆபிரிக்கா)** |
| உலகின் மிக உயரமான மலைச்சிகரம் | - **எவரெஸ்ட் சிகரம்** |
| உலகின் மிகப் பெரிய பாலைவனம் | - **சகாராப் பாலைவனம்** |
| உலகின் மிகப் பெரிய நதி | - **மிசிசிபி** |
| உலகில் அதிக சனத்தொகை கொண்ட நாடு | - **சீனா** |
| பறக்காத பறவை | - **பென்குவின்** |
| மிகப் பெரிய பறவை | - **தீக்கோழி** |
| நீந்தத் தெரியாத மிருகம் | - **ஒட்டகம்** |
| இறக்கை இல்லாத பறவை | - **கிவி** |

**சரஸ்வதி அமுதன்**

**நன்றி: அறிவுக் களஞ்சியம்**



# பறவைகள் பலவிதம்...

◆ நாங்க கடல் பறவைங்கோ!

◆ பல பறவைகள் உணவிற்கு கடலையே சார்ந்துள்ளன. அப்படிப்பட்ட பறவைகள்தான், கடல் பறவைகள். கரையோர பறவைகளில் ஒன்றான சிப்பீத்தின்னி கடல் அருகே வசித்து கடலோர மண் மற்றும் மணல் ஈரமாகிய பகுதிகளில் தங்கள் உணவை சேகரித்துக் கொள்ளும். கடல் பறவைகள் சமுத்திரத்தின் மேல் பறந்தபடி வாழ்வை ஓட்டினாலும் முட்டையிடுவதற்கும், குஞ்சுப் பொரிப்பதற்கும் கடலோரத்து செங்குத்தான பாறை பகுதிகளுக்கே திரும்பி வரும், வருடா வருடம்.

◆ போர் கப்பல் பறவைகள்:

◆ போர் கப்பல் பறவைகள் வெப்ப மண்டல பகுதிகளில் வாழும். பிற பறவைகளை தாக்கி அவைகளின் உணவினை திருடி தின்னும். ஆண் பறவைகள் தங்கள் சிவப்புத் தொண்டையை காற்றால் உப்பச் செய்து பெண் பறவைகளை ஈர்க்கும்.

◆ எங்கள் நகரம் :

◆ ஒத்த பழக்கங்கள், வாழும் முறைக் கொண்ட வெவ்வேறு பறவைகள் பெரிய அளவில் ஒரு இடத்தில் செங்குத்தான பாறைகளில் வசிக்கும். இதன் மூலம் எதிரி பறவைகளிடமிருந்து ஒன்றுக்கொன்று பாதுகாப்பாய் வாழ முடிகிறது. இதோ பக்கத்தில் இருக்கும் இந்த கேனட் பறவைதான் மிக உயரத்தில் குடியிருக்கும்.



நன்றி: www.thinamalar.com

## செயற்பாடு 4

- இலத்திரனியல் ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளில் மாணவர்களின் அறிவு மட்டத்திற்கேற்ற அறிவுபூர்வமான நிகழ்ச்சிகளை செவிமடுக்க வழிப்படுத்துக. இச் செயற்பாட்டிற்கு பெற்றோரின் ஒத்துழைப்பு அவசியமாகும். பெற்றோருடன் கலந்துரையாடி இலத்திரனியல் நிகழ்ச்சிகளில் சிறந்த நிகழ்ச்சிகளைத் தெரிவு செய்க. அந்நிகழ்ச்சிகளை மாணவர்கள் ஓய்வு நேரங்களில் செவிமடுக்க வழிப்படுத்துக. மாணவர்கள் செவிமடுத்த நிகழ்ச்சிகள் பற்றி ஏனைய மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ள வழிப்படுத்துக.

  ***எடுத்துக்காட்டு:***

  - விநோத உலகம்
  - பிராணிகளின் விவரணச் சித்திரங்கள்
  - பாரம்பரிய விழாக்கள்
  - உலக அதிசயங்கள்
  - வியப்பூட்டும் செய்திகள்
  - செய்தியறிக்கைகள்
  - பொது அறிவு நிகழ்ச்சிகள்
  - பட்டிமன்றம்
  - சொற்பொழிவுகள்
  - நேர்முக வர்ணனைகள்
  - நேர்காணல்கள்

**குறிப்பு:** மாணவர்களைக் குறிப்பிட்ட சில மணித்தியாலங்கள் மட்டும் இலத்திரனியல் ஊடகங்களைப் பார்வையிட அனுமதிக்க வேண்டும் என்பதைப் பெற்றோரிடம் வலியுறுத்திக்கூறுக. பிள்ளைகள் இலத்திரனியல் ஊடக நிகழ்ச்சிகளை பார்வை யிடும் போது பெற்றோர்/வயதில் மூத்தோர் அருகில் இருத்தல் வேண்டும் என்பதையும் வலியுறுத்துக.

## கற்றல் - கற்பித்தல் வளங்கள்

- பாடசாலை, கிராமம், நாடு பற்றிய தகவல்கள் அடங்கிய நூல்கள்
- முக்கிய நிகழ்வுகள் தொடர்பான ஒலி, ஒளி நாடாக்கள்
- உலகின் முக்கிய தகவல்கள் அடங்கிய நூல்கள்
- சிறுவர் கலைக்களஞ்சியங்கள்
- விவரணச் சித்திரங்கள் அடங்கிய ஒலி, ஒளி நாடாக்கள்

## கணிப்பீடு

- கற்றலுக்காக செவிமடுத்த விடயங்கள் தொடர்பாக வினாக்களுக்கு விடையளிக்கின்றமை. புதிய விடயங்களை அறிந்துகொள்ள ஆர்வம் காட்டுகின்றமை
  - பாடசாலை, கிராமம், நாடு பற்றிய தகவல்களை பெரியவர்களிடம் கேட்டு அறிதல்
  - உலகின் முக்கிய நிகழ்ச்சிகளையும், நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்களையும் செவிமடுத்து அறிந்து கொள்ளலும் ஆர்வம் காட்டுகின்றமையும்
  - உலகில் முக்கிய இடங்கள், ஆறுகள், மலைகள், பிராணிகள் மற்றும் விந்தை உலகம் பற்றிய தகவல்களை பெரியவர்களிடம் இருந்து கேட்டு அறிந்து கொண்டமை ஆகியவற்றைக் கணிப்பிடுக.

## ஆசிரியர்களின் சுயமதிப்பீட்டிற்கான அளவுகோல்...

**ஆசிரியர்கள் தமது கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளின் சாதக பாதக விளைவுகளை தாமே சுயமதிப்பீடு செய்துகொண்டு தமது கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளை மாற்றியமைத்துக்கொள்வதற்காகவே இவ்வினாக்கள் தரப்பட்டுள்ளன.**

1. மொழி கற்பித்தலின்போது செவிமடுத்தல் திறன் முக்கியமானது என்பதை அனுபவரீதியாக உணருகின்றீர்களா?

2. செவிமடுத்தல் திறனை மேம்படுத்துவதற்கான நுட்பங்களை அறிந்துள்ளீர்களா?

3. திட்டமிட்ட விளையாட்டுக்கள் மற்றும் செயற்பாடுகள் ஊடாக செவிமடுத்தல் திறனை மேம்படுத்த முயலுகின்றீர்களா?

4. பாடல்கள், கதைகள், உரையாடல்கள் ஆகியவற்றின் ஊடாக வினைத்திறனுடைய செவிமடுத்தல் நிகழப் பொருத்தமான அணுகுமுறைகளைப் பின்பற்றுகின்றீர்களா?

5. அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு துலங்கு வதற்குச் சந்தர்ப்பமளிக்கின்றீர்களா?

6. செவிமடுக்கும் சந்தர்ப்பங்களில் அல்லது செவிமடுத்த பின்னர் வினாக்களை வினவுவதற்கு ஊக்குவிக்கின்றீர்களா?

7. பிறரின் கருத்துக்களை மதித்து தமது கருத்துக்களைப் பண்புடன் வெளிப்படுத்து வதற்கு வாய்ப்பளிக்கின்றீர்களா?

8. இரசனையுடன் செவிமடுப்பதற்காகவும் கிரகித்துத் துலங்குவதற்காகவும் பல்வேறு நவீன அணுகுமுறைகளைப் பின்பற்றுகின்றீர்களா?


9. ஒலித்தல் வேறுபாடுகளை இனங்கண்டு செவிமடுப்பதற்குப் பொருத்தமான செயற் பாடுகளை முன்வைக்கிறீர்களா?

10. செவிப்புல ஊடகங்கள் மூலம் செவிமடுத்தல் திறனை மேலும் வினைத்திற னுடையதாக்க முடியுமென்று நம்புகின்றீர்களா?

11. மொழி வளர்ச்சியிலும் தகவல் பரிமாற்றத்திலும் செவிமடுத்தல் முக்கிய இடத்தினை வகிக்கின்றது என்பதை உணர்ந்துள்ளீர்களா?

12. செவிமடுத்தலுக்காக வழங்கப்படும் செயற்பாடுகளின் மூலம் ஒருபுறம் பேசுதலும் மறுபுறம் செவிமடுத்தலும் நிகழ்கின்றது . இதற்கு ஆசிரியரின் வகிபங்கு முக்கிய மானது என்பதைக் கருத்திற்கொண்டு செயற்படுகின்றீர்களா?

# 2.0 பேசுதல் (SPEAKING)



**செவிமடுத்தலைப் போன்றே அடிப்படைமொழித் திறன் களில் ஒன்றாகக்கருதப்படுவது பேசுதலாகும். இது வெளியீட்டுத் திறனாகும். செவிமடுத்தலைத் தொடர்ந்தும் செவிமடுத்த லின் விளைவாலும் உருவாகும் திறன் பேசுதல் ஆகும். பேசுதல் திறன், பேச்சுத்திறன் ஆகிய இரு சொல்லாட்சிகள் உள்ளன. பேசுதல் என்பது தகவல் பரிமாற்றச் செயலைக் குறிப்பதாகும். செய்திகளை வெளிப்படுத்தல் என்ற அளவிலேயே பேசுதல் நிறைவு பெறும். பிறரை ஈர்க்குமாறு கருத்துக்களை வெளிப் படுத்துதல் பேச்சுத்திறனாகும். ஒருவர் பேசிக்கொண்டி ருக்கும் போது பேசுதல் நிகழ்கின்றது. மேடையில் பேச்சு நிகழ்கின்றது. பேச்சுத் திறன் வளரப் பேசுதல் திறன் அடிப்படையாகும். அவ்வடிப்படையிலிருந்து இலக்கியக் கூறுகளை ஏற்றிப் பெறப்படுவதே பேச்சுத்திறனாகும். தொடக்க நிலை மொழிக்கல்வியில் கருதப்படுவது பேசுதல் திறனாகும். பேசுதல் நா, பல், இதழ், அண்ணம் ஆகிய ஒலிப்பு உறுப்புக்களைச் சார்ந்த செயல்களோடு இணைந்ததாகும். பிள்ளைகள் பேசுதலை மேற்கொள்ள உருவாக்கப்படும் சூழல்கள் அனைத்தும் பேசுதல் திறன் வளர்க்கும் செயற்பாடுகளாகும்.**

## தேர்ச்சி

**2.1 பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப் பங்களுக்கும் ஏற்பக் கருத்துக்களை வெளிப்படுத்தும் வகையில் ஆக்கபூர்வ மாகப் பேசுவார்/உரையாடுவார்.**

## தேர்ச்சி மட்டம்

**2.1.1 நாளாந்தத் தேவைகளுக்காகப் பேசுவார்.**

## உள்ளடக்கம்

- ✓ பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற் காக உரையாடுதல்
- ✓ எண்ணங்கள், கருத்துக்களை வெளிப்படுத்தல்
- ✓ உணர்வுகளை வெளிப்படுத்தல்
- ✓ கருத்தொன்றை வலியுறுத்திப் பேசுதல்
- ✓ அனுபவங்களைத் தெளிவாகக் கூறுதல்

**பேசுதல் திறன் மேம்பாட்டிற் கான செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்தும் போது மேற்கொள்ள வேண்டிய உத்திகள்**

- ஆர்வமூட்டல்
- எடுத்துக்கொடுத்தல்
- கனிவான பேச்சு
- நகைச்சுவைப்போக்கு
- நெறிப்படுத்தும் திறன்
- பரிவுணர்வு
- திருத்தமான பேச்சு
- பாராட்டுதல்

**பேசுதல் திறனை வளர்க்கும் வழிகள்**

- கருத்தாடல்
- படம்பார்த்து விளக்குதல்
- செயலெதிராகப் பேசுதல்
- வாக்கிய அளவை மாற்றிப் பேசுதல்
- தொடர் நிகழ்வாகப் பேசுதல்
- சூழ்நிலைப் பேச்சு
- பட்டிமன்றம்

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

- நாளாந்தம் பல தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உரையாடுதல் அவசியமாகின்றது என்பதைத் தெளிவுபடுத்துக. உணவு, உடை, தாகம் தீர்த்தல் போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு உரையாடுதல் இன்றியமையாததொன்றாகி விட்டதை எடுத்துக் கூறுக. அத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உரையாட வழிப்படுத்துக.

- தமது எண்ணங்களையும் கருத்துக்களையும் வெளிப்படுத்துவதற்குப் பேசுதல் தவிர்க்க முடியாததொன்று என்பதை விளக்குக. இந்நோக்கத்தை நிறைவு செய்யும் பொருட்டு மாணவர் ஒருவரோடொருவர் பேசுவதற்கு வழிப்படுத்துக.

- அவ்வப்போது ஏற்படும் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்காகவும் பேசுதல் இடம் பெறுவதைச் சுட்டிக்காட்டி உணர்வு வேறுபாடுகளைப் பிரதிபலிக்கும் வகையில் மாணவர்களைப் பேசுவதற்கு நெறிப்படுத்துக.

- உரையாடலின்போதும் கலந்துரையாடலின்போதும் சபை முன் பேசும்போதும் தான் கூறும் கருத்துக்களை வலியுறுத்துவதற்குத் தகுந்த ஆதாரங்களைக் காட்டியும் பொருத்தமான எடுத்துக்காட்டுக்களைக் குறிப்பிட்டும் மேற்கோள்கள், பழமொழிகள் என்பவற்றை எடுத்தாண்டும் பேசுவது அவசியமாகும் என்பதை எடுத்துக்கூறுக. மாணவர்கள் ஒவ்வொருவரும் கருத்தை வலியுறுத்திப் பேசுவதற்குச் சந்தர்ப்பங்களை வழங்குக.

- தாம் பெற்ற அனுபவத்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்வதற்கான சிறந்த ஊடகமாகப் பேச்சு அமைவதனை விளக்குக. குழுச் செயற்பாடாக ஒவ்வொரு மாணவரும் தாம் பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்பும் வசதியும் வழங்குக.

**குறிப்பு:** நான்கு சொற்களுக்குக் குறையாத வாக்கியங்களை ஆக்கிப் பேசுவதற்கு வழிப்படுத்துக.

## செயற்பாடுகள்

### செயற்பாடு 1 (நாளாந்த தேவைகளுக்காகப் பேசுதல்)

- கரும்பலகையில் மாணவர்களின் தேவைகள் சிலவற்றைப் (உணவு, உடை, தாகம், பென்சில், புத்தகம் போன்றவை) பெரிதாக எழுதிக் காட்சிப்படுத்துக. குழுக்களிலே மாணவர்கள் இத் தேவைகளுள் ஒன்றையோ, இரண்டையோ தெரிவுசெய்து அவை பற்றி உரையாடலில் ஈடுபடுவதற்கு வழிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு:***

**குழு - ❶** (நான்கு மாணவர்கள்)

**உணவு**

மாணவன் 1 → எனக்கு விருப்பமான காலை உணவு இடியப்பம்
மாணவன் 2 → எனக்கு விருப்பமான காலை உணவு பிட்டு
மாணவன் 3 → எனக்கு விருப்பமான காலை உணவு தோசை
மாணவன் 4 → எனக்கு விருப்பமான காலை உணவு அப்பம்

## செயற்பாடு 2

◻ ஒலி நாடாவின் துணை கொண்டு ‘டெங்குக் காய்ச்சல்’ பரவுதல் தொடர்பாக சிறிய பேச்சை மாணவர்களுக்கு ஒலித்துக் காட்டுக. (ஒலிநாடா இன்றேல் ஆசிரியரே பேசிக் காட்டுக.) குழுச் செயற்பாடாக ‘டெங்கு’ ஒழிப்பு பற்றிய தமது எண்ணங்களை மாணவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு கோணங்களில் இருந்து வெளியிடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குக. மாணவர்கள் கூறிய நல்ல கருத்துக்களைத் தொகுத்துக் கூறுக.

***எடுத்துக்காட்டு:*** **டெங்கு காய்ச்சலைத் தவிர்த்துக் கொள்வோம்.**

டெங்குக் காய்ச்சல் வைரஸ் கிருமியினால் தொற்றும் ஒரு நோயாகும். டெங்குக் காய்ச்சல் ஈடிஸ், ஈஜிப்டய், ஈடிஸ் அல்போபிக்டஸ் என்னும் இருவகை நுளம்புகளினா லேயே பரவுகின்றது.

டெங்குக்காய்ச்சலை நாம் தடுக்க என்ன செய்யவேண்டும்? டெங்குக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்புகள் பரவாமல் தடுக்க வேண்டும்.

அவை பரவும் இடங்களைக் கண்டறிந்து அழிக்க வேண்டும். அதற்குப் பின்பற்றக் கூடிய வழிகள் எவை தெரியுமா?

வெற்றுத் தகரடப்பாக்கள், சட்டி பானைகள், வெற்றுத் தயிர்ச்சட்டிகள், பயன்படுத்தப் பட்ட யோகட் கோப்பைகள், போத்தல்கள் ஆகியவற்றில் நீர் தேங்காமல் உடைத்து துண்டுகளாக எறிதல் வேண்டும். அல்லாவிடில் குழிதோண்டிப் புதைத்தல் வேண்டும். இளநீர் கோம்பைகள், தேங்காய்ச் சிரட்டைகள் ஆகியவற்றில் தண்ணீர் தேங்காமல் அவற்றைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டுதல் வேண்டும். இந்த வழிகளில் மட்டும் தான் நுளம்புகள் பரவும் என்று நினைக்கிறீர்களா? இல்லை. வீட்டில் பூச்சாடிகளின் கீழ் வைக்கப்படும் நீர்ச்சட்டிகள் மூலமும் நுளம்புகள் பரவுகின்றன.

இதற்கு மாற்று வழிதான் என்ன? இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒருமுறை பூச்சட்டிகளில் உள்ள நீரை மாற்றுதல் வேண்டும். மீண்டும் நீரை மாற்றும்போது உப்புக்கட்டியொன்றை இடுவதன் ஊடாக நுளம்புப் பெருக்கத்தைத் தடுக்க முடியும். வேறு எவ்வழிகளில் நுளம்புகள் பரவுகின்றன? சிந்தித்துப் பாருங்கள். விடை கிடைக்கும்!

### டெங்கு ஒழிப்பு பற்றிய மாணவரது எண்ணங்கள்

மாணவன் 1 : குப்பைகளை அகற்றுதல் அல்லது குழிதோண்டிப் புதைத்தல்

மாணவன் 2 : வீட்டுச் சூழலைச் சுத்தமாக வைத்திருத்தல்

மாணவன் 3 : கூரைகளில் நீர்வழிந்தோடும் குழாய்களில் நீர் தேங்கி நிற்காமல் தினமும் சுத்தம் செய்தல்

மாணவன் 4 : வீடுகளில் நீர்தேக்கி வைத்திருக்கும் பாத்திரங்களை மூன்று அல்லது நான்கு தினங்களுக்கு ஒருமுறை சவர்க்காரம் இட்டுச்சுத்தம் செய்தல்

மாணவன் 5 : வீட்டுக் கூரைகளில் பாரத்துக்காக வைக்கப்பட்டுள்ள ரயர்களையும் வீட்டின் அருகில் காணப்படும் ரயர்களையும் அழித்தல் அல்லது அவற்றுள் மண் நிரப்புதல்

மாணவன் 6 : பொது சுகாதார பரிசோதகருக்கு அறிவித்து நுளம்பு அழிப்பு மருந்து களை விசுறுதல்

***ஆதாரம்:***

***கொழும்பு மாநகர சபை சுகாதாரக் கல்விப் பகுதியின் துண்டுப்பிரசுரம்***

## செயற்பாடு 3

- வகுப்பு மாணவர்களை மூன்று குழுக்களாக்குக. ஏற்கனவே தயாரிக்கப்பட்ட செயலட்டைகளைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட விடயங்கள் பற்றிப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குக.

**செயலட்டை - ❶**

- மகிழ்ச்சியாகப் பேசுதல்
- கோபமாகப் பேசுதல்
- பயத்துடன் பேசுதல்
- வெறுப்போடு பேசுதல்

**செயலட்டை - ❷**

பின்வருவனவற்றுள் ஒன்றை வலியுறுத்திப் பேசுதல்

- வாசிப்போம் - பயன் பெறுவோம்.
- வீட்டுத் தோட்டம் செய்வோம்.
- பெற்றோரைப் பேணுவோம்.
- ஏனையோருக்கு உதவுவோம்.

**செயலட்டை - ❸**

- சந்தைக்காட்சி
- மாலைக்காட்சி
- கடற்கரைக்காட்சி
- பூந்தோட்டம்
- கண்காட்சி

ஏதேனும் ஒன்று பற்றிய உங்கள் அனுபவங்களைக் கூறுக.

- குழுக்களில் செயலட்டைகளை மாற்றிக் கொடுத்து எல்லா மாணவர்களுக்கும் உணர்வுகளை வெளிப்படுத்திப் பேசுதல், கருத்தொன்றை வலியுறுத்திப் பேசுதல், அனுபவங்களை ஒழுங்கு முறையாகக் கூறுதல் ஆகிய மூன்றிலும் ஈடுபடச் சந்தர்ப்பம் வழங்குக.

**குறிப்பு:** ஆசிரியர் விரும்பினால் இவற்றைத் தனித் தனிச் செயற்பாடுகளாகவும் நடைமுறைப்படுத்தலாம்.

### கற்றல் - கற்பித்தல் வளங்கள்

- மாணவர்களின் தேவைகள் (பெரிதாக) எழுதப்பட்ட அட்டை
- மாணவர்கள் தம் கருத்துக்களை வெளிப்படுத்திப் பேசுவதற்குப் பொருத்தமான தலைப்புகள் எழுதப்பட்ட அட்டை
- செயற்பாடு மூன்றில் தரப்பட்ட செயலட்டைகள்.

### கணிப்பீடு

- ✳ தெளிவாக உச்சரித்துப் பேசுதல்
- ✳ தேவைகளை வெளிப்படுத்திப் பேசுதல்
- ✳ கருத்துக்களை வலியுறுத்திப் பேசுதல்
- ✳ உணர்வுகளை வெளிப்படுத்திப் பேசுதல்
- ✳ அனுபவங்களை ஒழுங்கு முறையில் கூறுதல்

என்பவற்றைக் கணிப்பீடு செய்க.

## தேர்ச்சி மட்டம்

## 2.1.2 தொடர்பாடலுக்காகப் பேசுவார்.

### உள்ளடக்கம்

- ✓ தகவல் பரிமாற்றம்
- ✓ அறிவித்தல்களைக் கூறுதல்
- ✓ அறிவுறுத்தல்களைக் கூறுதல்
- ✓ குறித்த நோக்கத்திற்காக ஒருவரை வழிப்படுத்தல்
- ✓ தொலைபேசியில் உரையாடுதல்
- ✓ ஊடகங்களுடன் உரையாடுதல்
- ✓ வினாக்கேட்டலும் விடையளித்தலும்

***பேச்சுத் துல்லியத்தின் கூறுகள்***

- முறையான ஒலிப்பு
- பொருத்தமான சொல்லாட்சி
- இலக்கணமுடைமை

***பேச்சுத்திறனை அளப்பதற்கான அளவுக் கூறுகள்***

- மொழிநடை
- மெய்ப்பாடு
- கருத்து

### கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

➲ சூழலிலுள்ள விடயங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்கச் செய்து, அவ்வாறு சேகரிக்கப்பட்ட தகவல்களை ஏனைய மாணவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் வழங்குக.

➲ செவிமடுத்த / வாசித்த அறிவித்தல்களை மாணவர்களுக்கு நினைவுபடுத்துக. சில அறிவித்தல்களை மாணவர்கள் ஆக்கிக் கூறுவதற்குத் துணை புரிக.

***எடுத்துக்காட்டு:***

1. நாளை மறுதினம் பி.ப. 3.00 மணிக்குப் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெறும்.
2. தரம் ஐந்து வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சையில் எமது பாடசாலையின் ஐம்பது மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.
3. இப்பூங்காவில் உள்ள பூக்களைப் பறிக்காதீர்கள்.
4. இவ்விடத்திலே குப்பைகளைக் கொட்ட வேண்டாம்.
5. வழியைத் தடை செய்யாதீர்கள்.

➲ முன்னைய வகுப்புகளில் மாணவர்கள் கற்றுக்கொண்ட சில அறிவுறுத்தல்களை ஞாபகமூட்டி, வேறு சில அறிவுறுத்தல்களை ஆக்கி மாணவர் கூறுவதற்கு வழி நடத்துக.

***எடுத்துக்காட்டு:***

1. வினாப்பத்திரத்தை நன்கு வாசித்த பின்னர், வினாக்களுக்கு விடையெழுதத் தொடங்குக.
2. தடித்த எழுத்தில் உள்ள சொற்களுக்குரிய ஒத்த கருத்துச் சொற்களை புள்ளிக் கோட்டில் எழுதுக.
3. முழுப் பெயரைத் தனித்தனி எழுத்துக்களில் தரப்பட்ட கூடுகளில் எழுதுக.
4. எழுதும்போது சிவப்பு நிறப் பேனையைப் பயன்படுத்த வேண்டாம்.
5. வீதியைக் கடக்கும்போது மஞ்சள் நிறக்கோடுகள் உள்ள பகுதியினூடாகக் கடந்து செல்லவும்.

> **குறிப்பு:** அறிவித்தல்களும் அறிவுறுத்தல்களும் ஒரே மாதிரியாகத் தோன்றினாலும், சகலரும் பொதுவாக அறிந்திருக்க வேண்டியவற்றை அறியத் தருவன **அறிவித்தல்கள்** ஆகும்.
>
> குறிப்பிட்ட குழுவினரை முன்னிலைப்படுத்தி, அவர்கள் பின்பற்றி நடைமுறைப்படுத்துவதற்கு உதவும் வகையில், உடன்பாடாகவோ எதிர்மறையாகவோ அறிவுரை கூறும் பாங்கில் அமைவன **அறிவுறுத்தல்கள்** ஆகும்.

- குறித்த ஒரு நோக்கத்தை அடையும் வகையில் ஒருவரை வழிப்படுத்தலின்போது,
  - சரியான தகவல்கள் கூறப்படுதல்
  - தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறப்படுதல்
  - கேட்பவர் விளங்கி நடைமுறைப்படுத்துவதற்கேற்ற ஓர் ஒழுங்கு முறையிற் கூறப்படுதல்

  என்பன கவனத்திற் கொள்ளப்பட வேண்டும் என்பதை மாணவர்க்கு எடுத்துக்கூறுக.

  ***எடுத்துக்காட்டு:***

  1. வைத்தியசாலைக்குச் செல்லும் வழி எது எனக் கேட்ட முதியவரைப் பின்வருமாறு வழிப்படுத்தலாம்.

     இங்கிருந்து 50 மீற்றர் சென்றால் ஒரு சந்தி வரும். அந்தச் சந்தியில் வலது பக்கமாகப் போகும் வீதியிற் செல்லுங்கள். அந்த வீதியில் 20 மீற்றர் சென்றதும் வீதியின் இடது பக்கமாக மாடிக் கட்டிடம் ஒன்று தெரியும். அதுவே வைத்திய சாலை ஆகும்.
  2. பொது நூலகத்தில் உறுப்பினர் அட்டை பெற விரும்பிய மாணவர்களை பின்வருமாறு வழிப்படுத்தலாம்.

     முதலிற் பொது நூலகத்திற்குச் சென்று உறுப்புரிமை பெறுவதற்கான விண்ணப்பப் படிவம் பெற்றுக்கொள்ள வேண்டும். பின்னர் அப்படிவத்தை நிரப்பி நீங்கள் கையொப்பமிட்டு, பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஒப்பத்தையும் பெற வேண்டும். அப்படிவத்தை நூலகத்திற் கொடுத்தால் பொறுப்பாக உள்ள நூலகர் உங்களுக்கு உறுப்பினர் அட்டையைத் தருவார்.

- தொலைபேசியில் உரையாடுவதற்கும், நேரில் உரையாடுவதற்கும் வேறுபாடுகள் உள்ளன என எடுத்துக் கூறுக.

- எனவே தொலைபேசியில் சுருக்கமாகவும், தெளிவாகவும் கூறவேண்டிய விடயங்கள் அனைத்தையும் மறக்காமலும் பேச வேண்டும் என்பதையும், தொலைபேசியிற் கேட்பவர் தாம் கூறுபவற்றை விளங்கிக் கொண்டாரா என்பதை அவ்வப்போது சரி பார்த்துக் கொள்வதும் அவசியம் என்பதையும் தெளிவுபடுத்துக.

- இலத்திரனியல் ஊடகங்களான வானொலி, தொலைக்காட்சி என்பனவற்றுடன் உரையாட வேண்டிய தேவை இன்று அதிகரித்திருப்பதை மாணவர்க்கு விளக்குக. ஊடகங்களுடன் உரையாடும்போது கருத்து தெளிவாகப் புலப்படுதல், எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடிய மொழி நடை கையாளப்படுதல், எடுத்துக்கொண்ட தலைப்புக்குப் பொருத்தமாக அமைதல், குறிப்பிட்ட அளவு நேரத்துக்குள் எடுத்துக்கொண்ட விடயத்தைச் சுருக்கமாகக் கூறுதல் என்பன முக்கியமாகக் கவனிக்கப்படுதல் அவசியமென வற்புறுத்துக.

- வினாக்கள், தொடர்பாடலிலே முக்கிய பங்கு வகிப்பதை மாணவர்க்கு எடுத்துக் கூறுக. **யார், எங்கே, எப்படி, ஏன், எப்போது** போன்ற வினாக்கள் தொடர்பாடும் போது அடிக்கடி இடம்பெறுவதைச் சுட்டிக் காட்டுக. இதனால் பொருத்தமான இடங்களில் பொருத்தமான வினாக்கள் வினவப்படுவதும், கேட்கப்பட்ட வினாக்களுக்குப் பொருத்தமாக விடையளிப்பதும் தொடர்பாடலிலே பிரதானமானவை எனத் தெளிவுறுத்துக.

## செயற்பாடுகள்

### செயற்பாடு 1 (தொடர்பாடலுக்காகப் பேசுதல்)

- மாணவர்கள் தகவல்கள் சேகரிப்பதற்குரிய விடயங்களை (அவர்களின், வயது, அறிவு, ஆற்றல், கிடைப்பதற்குரிய பின்புலம் என்பவற்றிற்குப் பொருத்தமாக)முன் கூட்டியே திட்டமிட்டுக் கூறுக.

  ***எடுத்துக்காட்டு:***

  மாணவர்கள் கற்கும் பாடசாலையின் ஆரம்பகால வரலாறு பற்றிய தகவல்களைத் திரட்டுதல்
    - பழைய மாணவர்களுடன் உரையாடுதல்
    - மூத்த ஆசிரியர்களுடன் உரையாடுதல்
    - உயர்வகுப்பு மாணவர்களிடம் கேட்டு அறிதல்
    - அதிபர், உப அதிபர்கள் ஆகியோரிடம் கேட்டு அறிதல்
    - அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களிடம் வினவுதல்

  தகவல் சேகரிப்பதற்குரிய விடயங்கள்
    - பாடசாலையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றவர்களின் விவரங்கள்
    - பாடசாலை விளையாட்டுப் போட்டியில் சாதனை படைத்தவர்களின் விவரங்கள்
    - பாடசாலைக்காக பல்வேறு போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்றவர்கள் பற்றிய தகவல்கள்

  அல்லது

    - சோமசுந்தரப்புலவர்
    - பாரதியார்
    - உமறுப்புலவர்
    - விபுலாநந்த அடிகளார்

- தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்காக மாணவர்களை நால்வர் அல்லது அறுவர் கொண்ட குழுக்களாகப் பிரிக்குக. இருவர் இருவராகத் தாம் சேகரித்த தகவல்களைப் பரிமாறிக்கொண்ட பின்னர் குழுக்களில் ஒவ்வொரு விடயம் தொடர்பான தகவல்களை எழுதிக் காட்சிப்படுத்தவும் கலந்துரையாடவும் சந்தர்ப்பம் வழங்குக. குழுச் செயற் பாடுகள் நிறைவுற்றதும், குழுக்களிற் காட்சிப்படுத்திய தகவல்களை முழு வகுப்பிற்கும் காட்சிப்படுத்தவும், கலந்துரையாடவும் வழிநடத்துக. தொகுப்புரையின் போது ஒவ்வொரு விடயந் தொடர்பாகவும் சேகரிக்கப்பட்ட பிரதான தகவல்களை முதன்மைப் படுத்திக் காட்டுக.

***எடுத்துக்காட்டு:***

| குழு - ❶ | குழு - ❷ | குழு - ❸ | குழு - ❹ |
|---|---|---|---|
| சோமசுந்தரப்புலவர்<br><br>பற்றிய தகவல்கள்<br>- பிறந்த திகதி<br>- ஊர்<br>- நூல்கள்<br>- கவிதை | பாரதியார்<br><br>பற்றிய தகவல்கள்<br>- பிறந்த திகதி<br>- ஊர்<br>- நூல்கள்<br>- கவிதை | உமறுப்புலவர்<br><br>பற்றிய தகவல்கள்<br>- பிறந்த திகதி<br>- ஊர்<br>- நூல்கள்<br>- கவிதை | விபுலாநந்த அடிகளார்<br><br>பற்றிய தகவல்கள்<br>- பிறந்த திகதி<br>- ஊர்<br>- நூல்கள்<br>- கவிதை |

## செயற்பாடு 2 (தொடர்பாடலுக்காகப் பேசுதல்)

- அறிவித்தல்கள் ஐந்தினை ஒவ்வொரு மாணவரும் கூறும் பொருட்டுப் பின்வருவன வற்றை முன்கூட்டியே வழங்குக.
  - எழுத்துமூல அறிவித்தல்கள் (பொது இடங்களில் காணப்படுபவை)
  - ஆசிரியர்களின் அறிவித்தல்கள்
  - அதிபர், பிரதி அதிபர்களின் அறிவித்தல்கள்
  - விளையாட்டுப் போட்டியின்போது கூறப்படும் அறிவித்தல்கள்.
  - மாணவர் மன்றக் கூட்ட அறிவித்தல்கள்.
  - வானொலியில் கூறும் விசேட அறிவித்தல்கள்

- மாணவர் ஒவ்வொருவரும் எழுதி வந்த அறிவித்தல்களைக் குழுச் செயற்பாடாக வாசித்துக் கலந்துரையாடிச் செப்பனிடுவதற்கு வாய்ப்பு வழங்குக.

***எடுத்துக்காட்டு:***

**அறிவித்தல் 1**

கண்ட கண்ட இடங்களில் குப்பைகளைக்
கொட்ட வேண்டாம்.

*- மாநகரசபை*

**அறிவித்தல் 2**

முதலாந் தவணைக்கான பரீட்சைக் கட்டணங்களை
எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் செலுத்தவும்.

*- வகுப்பாசிரியர்*

**அறிவித்தல் 3**

கவிதைப் போட்டிக்காக தமது பெயர்களை பதிவுசெய்து கொண்ட
மாணவர்கள் நாளை முற்பகல் 10.00 மணியளவில்
பிரதான மண்டபத்திற்கு வருகை தரவும்.

*- அதிபர்*

**அறிவித்தல் 4**

'தடைதாண்டல்' போட்டியில் பங்குபற்றும் விளையாட்டு வீரர்களை
போட்டி ஆரம்பமாகும் இடத்திற்கு அனுப்பிவைக்குமாறு
இல்லப் பொறுப்பாசிரியர்களை கேட்டுக்கொள்கிறோம்.

*- விளையாட்டுப் போட்டி அறிவிப்பாளர்*

**அறிவித்தல் 5**

மாணவர் மன்றக்கூட்டம் அடுத்த மாதம் முதலாவது வெள்ளிக்கிழமை பி.ப. 1.00 மணியளவில் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

**- மன்றப் பொறுப்பாசிரியர்**

**விசேட அறிவித்தல்**

கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் நாளைக் காலை ஆறு மணி முதல் பன்னிரண்டு மணி வரை நீர் வெட்டு அமுலில் இருக்கும் என தேசிய நீர் வழங்கால் வடிகால் அமைப்புச் சபை அறிவித்துள்ளது. பொது மக்கள் முன்கூட்டியே நீரைச் சேமித்து வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

**- நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை**

## செயற்பாடு 3

- மாணவர்களை ஐந்து குழுக்களாக வகுத்து ஒவ்வொரு குழுவினரும் ஐந்து அறிவுறுத்தல்களையும் ஆக்கி எழுதச் சந்தர்ப்பம் வழங்குக. குழுக்கள் தயாரித்த அறிவுறுத்தல்களைக் கூற இடமளிப்பதோடு வகுப்பு மாணவர்கள் அனைவரும் அவை பற்றிக் கலந்துரையாடவும் செப்பனிடவும் வழிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு:*** **அறிவுறுத்தல்கள்**

**1. எல்லா வினாக்களினதும் சரியான விடைகளுக்கு '✓' அடையாளத்தையும் பிழையான வினாக்களுக்கு '×' அடையாளத்தையும் உரிய கூடுகளுக்குள் இடுக.**

**2. 21 ஆம் 22ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் கருத்தற்றவை. இக்கூற்றுக்கள் ஏன் கருத்தற்று இருக்கின்றன என்பதைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

**3. பின்வரும் ஒவ்வொரு புதிரிலும் மறைந்துள்ள சொல்லைக் கண்டுபிடித்து அதனைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

**4. உங்கள் சுண்டெண்ணை இந்த அடைப்புக்குள் உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

**சுட்டெண் ..............................**

**5. அடைப்பிலுள்ள சொற்களை மட்டும் பயன்படுத்திச் சரியான கருத்துள்ள நான்கு வாக்கியங்களை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்களாவது இடம் பெறுதல் வேண்டும்.)**

## செயற்பாடு 4

- வகுப்பை ஆறு குழுக்களாகப் பிரிக்குக. ஒவ்வொரு குழுவினரும் குறித்த நோக்கத்திற்காக ஒருவரை எவ்வாறு வழிப்படுத்தலாம் என்பது பற்றி விளக்கிக் கூற வழிநடத்துக. தொகுப்புரையின் போது குழுக்களின் பேச்சுக்களில் இடம்பெற்ற குறை நிறைகளை விளக்குக.

***எடுத்துக்காட்டு:***

**பிரதேச செயலகத்திற்குச் செல்ல வழிகாட்டுமாறு கேட்ட ஒருவருக்கு வழிகாட்டுதல்**

**பெரியவர் :** தம்பி! பிரதேச செயலகத்திற்கு எப்படிச் செல்ல வேண்டும்?

**மாணவன் :** இப்பாதையின் ஊடாகச் சென்றால் ஒரு சந்தி வரும். அச்சந்தியில் இருந்து இடதுபுறம் திரும்பி நூறு மீற்றர் சென்றால் தபாற்கந்தோர் வரும். தபாற்கந்தோர் பக்கமாக ஒரு வீதி செல்கிறது. அந்த வீதியால் சென்றால் பிரதேச செயலகத்திற்குச் செல்லலாம்.

## செயற்பாடு 5

- மாதிரித் தொலைபேசி உரையாடலில் ஈடுபடுவதற்காக இரண்டு மாணவரையும், நேரில் உரையாடுவதற்காக வேறு இருவரையும் ஒழுங்கு செய்து, குறிப்பிட்ட தலைப்பொன்றில் இரு வித உரையாடல்களும் நடைபெற ஒழுங்கு செய்க.

- இரண்டு உரையாடல்களையும் நடத்தி, பார்த்துக்கொண்டிருந்த மாணவர்கள் அவ்விரு உரையாடல்கள் பற்றியும் ஒப்பிட்டுக் கலந்துரையாடச் சந்தர்ப்பம் வழங்குக.

- தொகுப்புரையின்போது இரு உரையாடல்களினதும் சிறப்பம்சங்களைத் தெளிவு படுத்துக.

## செயற்பாடு 6

- மாணவர்களைச் சோடிகளாக்குக. ஒவ்வொரு சோடிக்கும் முன்கூட்டியே திட்டமிடப்பட்ட தலைப்புகள் எழுதப்பட்ட செயலட்டைகளை வழங்குக. சோடியிலுள்ள ஒருவர் வினாக்களைக் கேட்கவும் மற்றவர் விடையளிக்கவும் வழிநடத்துக. பின்னர் வினாக் கேட்டவர் விடையளிக்கவும் விடையளித்தவர் வினாக் கேட்கவும் ஒழுங்கு செய்க.

***எடுத்துக்காட்டு:*** **செயலட்டை**

**பிராணிகள்**

மனதில் நினைத்த பிராணியைக் கண்டுபிடித்தல்

**அறிவுறுத்தல்கள் :**

- வினாக்கேட்பவர் 10 வினாக்களுக்கு மேல் கேட்க முடியாது.
- விடையளிப்பவர் ஆம், இல்லை என்று மட்டுமே பதிலளிக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| **சுருக்கக்குறியீடு** | **வி.கே. - வினாக்கேட்பவர்** | |
| | **வி.அ. - விடையளிப்பவர்** | |

**வி.கே. :** ❶ வீட்டில் வளர்க்கப்படும் பிராணிகளில் ஒன்றா?
**வி.அ. :** ஆம்.

**வி.கே. :** ❷ அப்பிராணி பறக்கக் கூடியதா?
**வி.அ. :** இல்லை.

**வி.கே. :** ❸ இலங்கைக்கே உரித்தான பிராணியா?
**வி.அ. :** இல்லை.

**வி.கே. :** ❹ மனிதனுக்கு உதவக் கூடியதா?
**வி.அ. :** ஆம்.

**வி.கே. :** ❺ இரண்டு கால்கள் உள்ள பிராணியா?
**வி.அ. :** இல்லை.

**வி.கே. :** ❻ நான்கு கால்கள் உள்ள பிராணியா?
**வி.அ. :** ஆம்.

**வி.கே. :** ❼ இப்பிராணிக்கு மோப்ப சக்தி அதிகம் உண்டா?
**வி.அ. :** ஆம்.

**வி.கே. :** ❽ எல்லா நாட்டினரும் விரும்பி வளர்க்கின்றார்களா?
**வி.அ. :** ஆம்.

**வி.கே. :** ❾ இதற்கும் 'நன்றி' என்ற வார்த்தைக்கும் தொடர்பு உண்டா?
**வி.அ. :** ஆம்.

**வி.கே. :** ❿ அப்பிராணியின் முதல் எழுத்து 'நா' என்பதில் ஆரம்பிக்கிறதா?
**வி.அ. :** ஆம்.

**வி.கே. :** * **நீங்கள் மனதில் நினைத்த பிராணி நாய்தானே!**
**வி.அ. :** **ஆமாம்....**

**குறிப்பு:** பழங்கள், காய்கறிகள், போக்குவரத்துச்சாதனங்கள் போன்ற இலகுவான தலைப்புக்களைக் கொடுத்து அதிலிருந்து ஒன்றை நினைக்கச் சொல்லி வினாக்கேட்டு விடையளிக்க வழிப்படுத்தலாம்.

## கற்றல் - கற்பித்தல் வளங்கள்

- தகவல்கள் சேகரிப்பதற்கான தலைப்புகள் எழுதப்பட்ட அட்டை
- மாதிரி அறிவித்தல்கள்
- மாதிரி அறிவுறுத்தல்கள்
- குறித்த நோக்கத்திற்காக ஒருவரை வழிப்படுத்துவதற்கான முறைகள் சில
- வினா - விடைச் செயலட்டைகள்

## கணிப்பீடு

- தகவல்களைச் சேகரித்தலில் ஈடுபாடு
- தகவல்களைப் பரிமாறுவதில் ஆர்வம்
- பதிய தகவல்களைக் கேட்குந்திறன்
- அறிவித்தல்கள் கூறுதல்
- அறிவுறுத்தல்கள் கூறுதல்
- ஒருவரை வழிப்படுத்தலிற் காட்டும் திறன்
- தொலைபேசியில் உரையாடுதல்
- ஊடகங்களுடன் உரையாடுதல்
- வினாக்கேட்டல்
- விடையளித்தல் என்பனவற்றைக் கணிப்பிடுக.

## தேர்ச்சி மட்டம்

## 2.1.3 பேச்சுத் திறனை விருத்தி செய்வார்.

### உள்ளடக்கம்

- ✓ ஒலித்தல் வேறுபாடுகளை அனுசரித்துப் பேசுதல்
- ✓ தொனி வேறுபாடுகளுடன் உணர்வுபூர்வமாகப் பேசுதல்
- ✓ தெளிவாகவும் ஏனையோருக்கு விளங்கும் வகையிலும், வலுவூட்டிப் பேசுதல் (எடுத்துக்காட்டுகள், மேற்கோள்கள்)
- ✓ சபை/குழு/வகுப்பு என்பனவற்றின் முன் கூச்சமின்றிப் பண்பாகப் பேசுதல் (தலைமையுரை, வரவேற்புரை, நன்றியுரை)
- ✓ ஒரு பொருள் பற்றி முன்னாயத்தத்துடன் பேசுதல்
- ✓ ஒரு பொருள் பற்றி முன்னாயத்தமின்றிப் பேசுதல்

### கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

➲ லகர, ளகர, ழகர சொற்கள் கொண்ட வாக்கியங்களை அவ்வெழுத்துக்களின் ஒலி வேறுபாடுகள் நன்கு புலப்படும் வகையில் உரத்து உச்சரித்துக் கூறி மாணவரைச் செவிமடுக்கச் செய்து அவர்களையும், ஒலித்தல் வேறுகளை அனுசரித்துப் பேச வழிநடத்துக. இவ்வாறே, ணகர, னகர சொற்கள் கொண்ட வாக்கியங்களையும், ரகர, றகர சொற்கள் கொண்ட வாக்கியங்களையும் அவ்வெழுத்துகளின் ஒலித்தல் வேறுபாடுகள் நன்கு புலப்படும் வகையில் உரத்து உச்சரித்துப் பேசுவதற்குத்துணை புரிக.

➲ கதைகளைக் கூறும் போதோ, கருத்துக்கள் எண்ணங்கள் என்பவற்றைக் கூறும்போதோ உணர்வுபூர்வமாகத் தொனியை உயர்த்தியும் தாழ்த்தியும் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற வாறு தொனியைக் கட்டுப்படுத்திப் பேசுவதற்கு ஒவ்வொரு மாணவருக்கும் போதிய சந்தர்ப்பம் வழங்குக.

➲ பேசுதல் பிறர் விளங்குவதற்காகவே என்பதை மாணவர்க்கு எடுத்துக் கூறுக. ஏனை யோருக்கு விளங்கும் வகையிலும், செவிமடுப்பவர்க்குச் சலிப்புத் தட்டாத வகையில் மனதைக்கவரக்கூடிய முறையில் பேசுவதோடு, அவர்களின் பேச்சினை வலுவூட்டும் வகையில் ஆங்காங்கே எடுத்துக் காட்டுக்களை எடுத்துக் கூறியும், மேற்கோள்களைக் கையாண்டும் பேசுவது அவசியமென வற்புறுத்துக.

➲ சபை/குழு/வகுப்பு என்பன முன் மாணவர்கள் கூச்சமின்றிப் பேசுவதற்காக அவ்வாறான சந்தர்ப்பங்களை ஒவ்வொரு மாணவரும் பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்துக.

- நிற்கும் நிலை
- தன்னம்பிக்கையுடன் பேசுதல்
- அனாவசிய உடலசைவுகளைத் தவிர்த்தல்
- பேசும் பொருள் பற்றிய விடய அறிவு
- எல்லோருக்கும் விளங்கக்கூடிய நியமமான பேச்சு வடிவம்
- எடுத்துக்கொண்ட பொருள் பற்றித் தெளிவாகக் கூறுதல்
- கூறியது கூறலைத் தவிர்த்தல்
- ஒழுங்கு முறையைக் கையாண்டு பேசுதல்
- சபையை அவதானித்துப் பேசுதல்

போன்ற உத்திகளை ஒவ்வொரு மாணவரும் கடைப்பிடிக்கவும், பேச்சுத் திறனை வளர்க்கவும் ஆவன செய்க.

- சபை முன் பேசும்போது, தலைமையுரை, வரவேற்புரை, நன்றியுரை முதலிய வெவ்வேறு வகையிலமைந்த உரைகளையும் ஆற்றுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குக.

**குறிப்பு:** மாணவர் மன்றக்கூட்ட நிகழ்வுகளை இதன் பொருட்டு நன்கு பயன்படுத்துக.

- ஒரு பொருள் பற்றி முன்னாயத்தத்துடன் பேசுவதற்கு மாணவரைப் பின்வருமாறு தயார்ப்படுத்துக.
  - குறிப்பிட்ட பொருள் பற்றிய அறிவினைத் தேடச் செய்தல்
  - நேர அளவுக்கேற்ப முக்கியமான விடயங்களைத் தெரிவு செய்தல்
  - தெரிவு செய்த விடயங்களை ஒழுங்குபடுத்துதல்
  - தாமாகவே பருமட்டாகப் பேச்சினை எழுதவும், நேரத்தைக் கணிக்கவும் துணை புரிதல்
  - சபையை விளிக்கும் உத்திகள், தொனி வேறுபாட்டுடன் பேசுதல், படிமுறை யாகப் பேசுதல், நிறைவு செய்தல் ஆகிய அம்சங்களைக் கடைப்பிடிக்க வற்புறுத்துதல்.

- ஒரு பொருள் பற்றி முன்னாயத்தமின்றிப் பேசுவதற்கு மாணவரைப் பின்வருமாறு தயார்ப்படுத்துக.
  - கொடுக்கப்படும் தலைப்புகளுள் தனக்கு நன்கு பரிச்சயமான தலைப்பினைத் தெரிவு செய்வதற்கு மாணவருக்கு அறிவுறுத்தல்
  - குறிப்பிட்ட தலைப்பிலே தனக்குத் தெரிந்த விடயங்கள் பற்றி எழுதச் செய்தல்
  - ஒவ்வொரு விடயத்துக்கும் வலுவூட்டும் எடுத்துக்காட்டுகள், மேற்கோள்கள் என்பவற்றையும் குறிக்கச் செய்தல்
  - தெரிவு செய்த விடயங்களை ஒழுங்கு செய்வதற்கு வழிகாட்டல்
  - நேரக் கட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு அழுத்திக் கூறும் விடயங்களைக் கவனத்திற்கொள்ளுமாறு கூறுதல்
  - முகவுரை, தொடருரை, நிறைவுரை என்பன தொடர்பாகச் சந்தர்ப்பத்திற்கேற்ற வாறு நேரத்தை ஒதுக்கச் செய்தல்

## செயற்பாடுகள்

### செயற்பாடு 1 (பேச்சுத் திறனை விருத்தி செய்தல்)

- ஒலித்தலில் வேறுபடுத்த வேண்டிய, சரியாக உச்சரித்துப் பேச வேண்டிய (லகர, ளகர, ழகரச் சொற்களும், ணகர, னகரச் சொற்களும் ரகர, றகரச் சொற்களும் கொண்ட) பல்வேறு வாக்கியங்களை மாணவர்கள் பேசுவதற்கு வாய்ப்பாகச் சில தலைப்புகளை முன்கூட்டியே மாணவர்களிடம் வழங்குக.

***எடுத்துக்காட்டு:***

- மழைநாள்
- கடற்கரை
- வெற்றிக்கிண்ணம்
- மலைநாடு
- நூலகம்
- வானொலி
- சூறாவளி
- கணினி

- மாணவர்களைக் குழுக்களாக்கி ஒவ்வொரு மாணவர்க்கும் இச் சொற்தொகுதிகளுள் ஒன்றை வழங்குக. ஒவ்வொரு மாணவரும் குறித்த தலைப்பில் குறைந்தது ஒரு வாக்கியத்தை ஆக்கிக் கூறுவதற்கு வழிப்படுத்துக. லகர, ளகர, ழகரங்கள், ரகர, றகரங்கள், ணகர, னகரங்கள் இடம்பெறும் சொற்களை மாணவர்கள் உச்சரிக்கும் போது அவற்றின் வேறுபாடுகள் தோன்ற உரத்து உச்சரிப்பதை உறுதிப்படுத்துக.

## செயற்பாடு 2

- அனுதாபம் தெரிவித்தல், கோபத்தோடு கூறுதல், மகிழ்ச்சியை வெளிப்படுத்துதல், பயத்தோடு பேசுதல், துக்கத்தினை வெளிப்படுத்துதல் போன்ற பல்வேறு சந்தர்ப்பங் களில் தொனியை உயர்த்தியும், தாழ்த்தியும் கட்டுப்படுத்தியும் எவ்வாறு கூறவேண்டும் என்பதை ஆசிரியர் அவ்வவ்வுணர்வு தோன்றும் வகையில் கதைகள், சம்பவங்கள் என்பவற்றைக் கூறிக்காட்டுக. குழுச் செயற்பாடுகளில் பல்வேறு உணர்வுகள் புலப்படும் வகையில் மாணவர்களும் கதைகள், சம்பவங்கள் என்பவற்றைக் கூறத்துணைபுரிக.

***எடுத்துக்காட்டு:***

**அனுதாபம் தெரிவித்தல்**



கவலைப்படாதீர்கள். நடந்தது நடந்துவிட்டது. எல்லாம் நன்மைக்கே என்று மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள். தோல்விதான் வெற்றிக்கு முதற்படி. நாங்கள் எல்லோரும் உங்கள் அருகில் இருக்கும் போது நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும். தைரியமாக இருங்கள்.

**கோபத்தோடு கூறுதல்**




நேரத்திற்கு வரவேண்டும் என்று எத்தனை முறை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். இதுதான் இறுதி எச்சரிக்கை. இனிமேலும் தாமதமாக வந்தால் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும்.

**மகிழ்ச்சியை வெளிப்படுத்தல்**



''எனது கவிதைக்கு முதல் பரிசு கிடைக்கும் என்று நான் கனவிலும் நினைத்திருக்கவில்லை. எனக்கு என்ன பேசுவதென்றே தெரிய வில்லை. முதலில் அம்மாவிடம் சொல்ல வேண்டும்''

**பயத்தோடு கூறுதல்**



அம்மா..... நான் .... நா... ன்.... பேனாவைத் தொலைத்து விட்டேன்...... அம்மா.. இனிமேல் தொலைக்கவே.......... மாட்டேன்...

**துக்கத்தினை வெளிப்படுத்தல்**



நாம் எல்லோரும் ஒன்றாகப்படித்தோம். இன்ப, துன்பங்களில் பங்கு பற்றினோம். இன்றுடன் பிரியப்போகின்றோம் என்பதை நினைத்துப் பார்க்க முடியவில்லை.... இதற்குமேல் என்னால் பே...ச.. முடிய வில்லை.....

**குறிப்பு:** ஆசிரியர் பல்வேறு முக பாவங்களுடன் தொனியை உயர்த்தியும், தாழ்த்தி யும் மாணவர்களுக்கு பல்வேறு விதமாகப் பேசிக் காட்டி வழிப்படுத்துதல் வேண்டும் என்பதை நினைவிற் கொள்க.

- தொனி வேறுபாடுகளுடன் பின்வரும் உணர்வுகள் புலப்படுமாறு கதை, சம்பவங்களைக் கூறவோ, கருத்துகள், எண்ணங்களைப் புலப்படுத்த ஒவ்வொரு மாணவரும் ஈடுபடு வதற்குச் சந்தர்ப்பம் வழங்குக.
  - கோபம் - அனுதாபம்
  - துக்கம் - அன்பு, கனிவு, நெகிழ்ச்சி
  - மகிழ்ச்சி - வெறுப்பு

**குறிப்பு:** தொனியை வேறுபடுத்திப் பேசுவதற்கு கதை கூறுவதற்கு உரிய பகுதி களைத் தேடி முன்கூட்டியே தயார்ப்படுத்தி வைத்திருக்கவும்.

## செயற்பாடு 3

- ஏற்கனவே தயாரிக்கப்பட்ட இரண்டு ஒலி நாடாக்களை ஒலித்துக் காட்டுக. ஒரு ஒலி நாடாவின் பேச்சு, ஏனையோருக்குத் தெளிவாக விளங்காத வகையில் அமைந்திருப்ப தையும் மற்ற ஒலி நாடாவின் பேச்சு, தெளிவாகவும் நன்கு விளங்கிக்கொள்ளக் கூடிய வகையிலே எடுத்துக் காட்டுகள் மேற்கோள்கள் என்பனவற்றை உள்ளடக்கியும் அமைந்திருப்பதையும், மாணவர்கள் கலந்துரையாடலின்போது ஒப்பிட்டுக் கூறுவதற்கு நெறிப்படுத்துக.

- மாணவர்களைக் குழுக்களாக்கி, ஒவ்வொரு குழுவுக்கும் வலுவூட்டிப் பேசிப் பழகு வதற்கு வாய்ப்பாகப் பின்வருவன போன்ற தலைப்புகளையும் அத்தலைப்புகளிற் பேசும் போது கையாளக்கூடிய சில எடுத்துக்காட்டுகள், மேற்கோள்கள் என்பன வற்றையுங் கொண்ட செயலட்டைகளை வழங்குக.

| தலைப்பு | எடுத்துக்காட்டு | பழமொழிகள்/மேற்கோள்கள் |
|---|---|---|
| ஒற்றுமை | காகம் கரைந்து உண்பது போல | ‘‘ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு’’<br>‘‘அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு’’<br>‘‘முயற்சி திருவினை ஆக்கும்’’ |
| விடாமுயற்சி<br><br>விவசாயம்/ உழவுத் தொழில் | எறும்புகள் போல தேனீக்கள் போல | ‘‘முயற்சி திருவினை ஆக்கும்’’<br><br>‘‘சீரைத் தேடின் ஏரைத் தேடு’’<br>‘‘தன் கையே தனக்கு உதவி’’<br>‘‘உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்.<br>‘‘உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை’’ |
| பிறருக்கு உதவுதல் | பாரி முல்லைக்குத் தேர் கொடுத்தமை | ‘‘ஐயம் இட்டு உண்’’ |
| தேசப்பற்று | நாடு காத்த சிறுவனின் கதை (ஒல்லாந்துச் சிறுவன்) | ‘‘பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே’’ |

- ஒவ்வொரு குழுவிலும் ஒவ்வொரு மாணவரும் பேச்சில் ஈடுபடுவதை உறுதிப்படுத்துக. இடர்ப்படுவோருக்கு உதவுக. ஒவ்வொரு குழுவிலும் தெளிவாகவும், விடயத்தை ஒட்டியும், எல்லோருக்கும் விளங்கும் வகையிலும் வலுவூட்டிப் பேசிய மாணவரைப் பாராட்டுக. (அத்தகைய சிறந்த பேச்சுகளை ஒலிப்பதிவு செய்து ஏனைய குழுக்களுக் கும்/முழு வகுப்புக்கும் ஒலித்துக் காட்டுக.)

## செயற்பாடு 4

- மாணவரைக் கூச்சமின்றிப் பேசச்செய்வதற்கு மாணவர் மன்றக்கூட்டங்கள், காலை வேளை ஆராதனைகள் போன்றவற்றிலே சகல மாணவருக்கும் ஒழுங்கு முறையில் சந்தர்ப்பம் வழங்குவதோடு, அவ்வாறு பேசுவோருக்குக் கூச்சமின்றிப் பேசுவதற்கான வழிமுறைகளைத் தனித்தனியாக விளக்கிப் பயிற்சி வழங்குக. கூச்சப்படுவதற்கான காரணங்களையும் பேச்சின்போது ஏற்படும் இடர்ப்பாடுகளையும் இனங்கண்டு அவற்றை நீக்கப் பரிகாரக் கற்பித்தல் முறையைக் கையாளுக.

> • பேச்சுத்திறன் வளர முதன்மைக் கருவியாக உள்ளது உரையாடலாடகும்.
> • மாணவர்கள் கண்டும் கேட்கும் அறிந்தவை பற்றிய உரையாடலில் ஈடுபடவே விரும்புவர்.
> • உரையாடலின் ஊடாக மாணவர்கள் சிந்தனையாற்றல், சொற்களஞ்சியம், கருத்துக்கள் ஆகியன விரிவடைகின்றன.
>
> என்பதைக் கருத்திற்கொண்டு படிமுறையில் பயிற்சி வழங்குவதன் ஊடாக மாணவர்களின் பேச்சாற்றலை வளர்க்க முடியும். கூச்சமின்றி பேசச் செய் வதற்கு இவ்வுத்தியைப் பயன்படுத்தலாம்.

## செயற்பாடு 5

- மாணவர்கள் ஒரு பொருள் பற்றி முன்னாயத்தத்துடன் பேசுவதற்கு, அவர்களை இரண்டு வகைகளில் ஆயத்தஞ் செய்ய ஒழுங்குபடுத்துக.
  (அ) பேச ஆயத்தஞ் செய்தல்
  (ஆ) பேச்சை ஆயத்தஞ் செய்தல்

(அ) ஒரு பொருள் பற்றிய பேச்சைத் தயாரித்து மாணவர்களிடம் முன்கூட்டியே கொடுத்து, மனனஞ் செய்வித்து, அவர்களின் பேச்சுத் திறனை விருத்தி செய் வதற்கு ஒவ்வொருவருக்கும் வாய்ப்பும் வசதியும் வழங்குக.

- சபையை விளித்தல்
- நிற்கும் நிலை
- தன்னம்பிக்கையுடன் பேசுதல்
- எழுத்தொலிகளைச் சரியாக உச்சரித்துப் பேசுதல்
- தொனி வேறுபாடுகளுடன் பேசுதல்
- பொருளை விளங்கிப் பேசுதல்
- இடையீடின்றி ஒழுங்காகப் பேசுதல்
- நேரத்தை அவதானித்துப் பேசுதல்

முதலிய பேச்சிற்கான உத்திகளைக் கையாண்டு மாணவர்கள் பேசுவதற்கு வழி காட்டுக.

(ஆ) ஒரு பொருள் பற்றிப் பேச்சொன்றை மாணவர்கள் தாமாக எழுதி ஆயத்தஞ் செய்வதற்கு வசதியாக மாணவர்களுக்குப் பொருத்தமான தலைப்புகளை முன்கூட்டியே **குறைந்தது ஒருவார காலத்துக்கு முன்னரே** வழங்குக.

***எடுத்துக்காட்டு:***

கணினியின் பயன்பாடு
மரம் வளர்ப்போம்
சூழலைப் பாதுகாப்போம்
நூலகம் செல்வோம்
பயன்மிக்க பொழுதுபோக்கு
வீட்டுத்தோட்டம்
நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவோம்.

பேச்சை ஆயத்தம் செய்யும்பொழுது பின்வருவனவற்றைக் கருத்திற் கொள்ளச் செய்க.

- நியம மொழியில் அமைதல்
- நேர அளவு பேணப்படுதல்
- தலைப்பிற்கேற்ப அமைதல்
- கருத்துக்களின் ஒழுங்கு பேணல்
- எடுத்துக்காட்டுகள், மேற்கோள்கள் என்பன கையாளப்படுதல்

(மாணவர் பேச்சில் ஈடுபடுவதற்கு முன்னர் ஒவ்வொருவரினதும் ஆயத்தத்தைப் பார்வை யிட்டுச் செம்மைப்படுத்துக.)

▣ பேச ஆயத்தஞ் செய்தல், பேச்சை ஆயத்தஞ் செய்தல் என்பவற்றிற்குக் குழுச்செயற் பாடுகளை ஒழுங்கு செய்து, பின்னர் முழு வகுப்புக்கும் நடத்த ஆவன செய்க.

## செயற்பாடு 6

▣ மாணவர்களின் தரத்துக்குப் பொருத்தமான தலைப்புகளை எழுதி ஒரு பெட்டிக்குள் இடுக. எழுமாற்றாக மாணவர்களை அழைத்து (எல்லா மாணவர்க்கும் சந்தர்ப்பம் வழங்குக.) பெட்டியில் இருந்து ஒரு தலைப்பை எடுத்து அத்தலைப்பிலே பேசச் செய்க. (தலைப்பைப் பெற்றதன் பின்னர் ஒரு சில நிமிடங்கள் கால அவகாசம் வழங்குக.) பேச்சின் போது பின்வருவன அவதானிக்கப்படும் என்பதை முன்கூட்டியே மாணவர்க்கு அறிவிக்குக.

- சபையை விளித்தல்
- நிற்கும் நிலை
- முகவுரை, தொடருரை, முடிவுரை என்பன இடம் பெறுதல்
- அனாவசியமான உடலசைவுகளைத் தவிர்த்தல்
- கூறியது கூறலைத் தவிர்த்தல்
- தலைப்பிற்கேற்பப் பேசுதல்

▣ இச்செயற்பாட்டின்போது மாணவர்கள் பேசியவற்றை ஒலிப்பதிவு செய்து மாணவர்கள் மீண்டும் கேட்கச் செய்க. ஒவ்வொருவரும் தம் பேச்சுத்திறனை விருத்தி செய்வதற்குரிய ஆலோசனைகளை வழங்குக.

***எடுத்துக்காட்டு:***

- வானொலி
- தொலைக்காட்சி
- நான் விரும்பும் பெரியார்
- மறக்க முடியாத அனுபவம்
- எனது பொழுதுபோக்கு
- எனது ஆசைகள்

## கற்றல் - கற்பித்தல் வளங்கள்

- ஒலித்தல் வேறுபாடுகளை அனுசரித்துப் பேசுவதற்கான தலைப்புகள் எழுதப்பட்ட அட்டைகள்
- தொனி வேறுபாட்டுடன் பேசுவதற்கான கதைப் பகுதிகள் / வாக்கியங்கள் எழுதப் பட்ட அட்டைகள்
- வலுவூட்டிப் பேசுவதற்கு உதவும் மாதிரி எடுத்துக்காட்டுகள், மேற்கோள்கள் என்பன எழுதப்பட்ட அட்டைகள்
- பேச்சுகள் இடம்பெற்ற ஒலி நாடாக்கள்
- பேச்சைப் பேச ஆயத்தஞ் செய்ய உதவும் குறிப்புகள் எழுதப்பட்ட அட்டைகள்
- பேச்சுக்கான தலைப்புகள் எழுதப்பட்ட அட்டைகள்

## கணிப்பீடு

- ஒலித்தல் வேறுபாடுகளை அனுசரித்துப் பேசுதல்
- தொனி வேறுபாடுகளுடன் உணர்வுபூர்வமாகப் பேசுதல்
- தெளிவாக வலுவூட்டிப் பேசுதல்
- கூச்சமின்றிப் பேசுதல்
- முன்னாயத்தத்துடன் பேசுதல்
- முன்னாயத்தமின்றிப் பேசுதல்

என்பனவற்றைக் கணிப்பிடுக.


## தேர்ச்சி மட்டம்

## 2.1.4 ஆக்கத்திறன் விருத்திக்காகப் பேசுவார்.

## உள்ளடக்கம்

- ✓ படம் பார்த்துக் கதை கூறுதல்
- ✓ கதைகளைப் பூர்த்தி செய்து கூறுதல்
- ✓ பாத்திரமேற்று நடித்துப் பேசுதல்
- ✓ பாவனை செய்து பேசுதல்
- ✓ சம்பவங்கள், விடயங்கள், விபரங்கள் என்பவற்றை ஒழுங்குபடுத்திக் கூறுதல்
- ✓ விவாதங்களிற் பங்குபற்றி ஒட்டியும் வெட்டியும் பேசுதல்

ஆக்கபூர்வமாகப் பேசுவதற்கு காட்டுன் படங்களைப் பயன்படுத்த முடியும்.



## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

- படத்தைப் பார்த்து, அதிலுள்ள பல்வேறு நிகழ்வுகளை அவதானித்து, மாணவர்கள் கதையை ஆக்கிச் சுவைபடக் கூற வழி நடத்துக.

- ஆசிரியர் கூறிய / வகுப்பு மாணவர் ஒருவர் கூறிய / ஒலிநாடாவில் செவிமடுத்த கதையினைப் பூர்த்திசெய்து கூறுவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பம் வழங்குக.

- கதை / உரையாடல் / நாடகம் என்பவற்றில் இடம்பெறும் சில சம்பவங்களைப் பாத்திரமேற்று நடிப்பதற்குத் துணைபுரிக.

- மாணவர்களுக்கு நன்கு பிடித்த ஒருவர் அல்லது காட்டூன் கதாபாத்திரங்கள் போன்று பாவனை செய்து பேசுவதற்கு ஒவ்வொரு மாணவர்க்கும் இடமளிக்குக.

- பார்த்து அனுபவித்த சம்பவம் ஒன்றினை / குறிப்பிட்ட ஒரு விடயத்தினை / தனக்குத் தெரிந்த ஒரு பொருள் பற்றிய விவரங்களைக் கேட்பவர் நன்கு விளங்கும்படி ஒழுங்குபடுத்திக் கூறுவதற்கு மாணவர்க்குத் துணைபுரிக.


- விவாதங்கள் / பட்டிமன்றங்கள் சிலவற்றை ஒலித்துக்காட்டி, மாணவர்களை அவற்றில் ஆர்வத்துடன் ஈடுபடச் செய்க. ஒரு தலைப்புப் பற்றிச் சார்பாகவும் (ஒட்டியும்)மாறா கவும் (வெட்டியும்) பேசும் உத்திகளை எடுத்துக்கூறுக.

## செயற்பாடுகள்

### செயற்பாடு 1 (ஆக்கத்திறன் விருத்திக்காகப் பேசுதல்)


- மாணவர்களைக் குழுக்களாக்குக.

- மாணவர்களைப் படம் பார்த்து கதைகூற வழிப்படுத்துவதற்கு முன்னர் படம் பார்த்து நிகழ்வுகளைக் கூற வழிப்படுத்துக. பொருத்தமான காட்சிப்படங்களைத் தெரிவுசெய்து அட்டைகளில் ஒட்டி குழுக்களுக்கு வழங்குக.
  ***எடுத்துக்காட்டு:***



- முன் கூட்டியே தயாரித்துப் பெரிதாக வரையப்பட்ட கதை நிகழ்வுகளை உள்ளடக்கிய படங்களுள் ஒவ்வொன்றை ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குக. ஒவ்வொரு குழுவிலும் அப்படத்தைப் பார்த்துக் கதையை ஆக்கிச் சுவைபடக் கூறுவதற்கு ஒவ்வொரு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குக. வேறொரு பாடவேளையில் படத்தை மாற்றிக் கொடுத்து ஒவ்வொரு மாணவரையும் படம் பார்த்து கதை கூறலில் ஈடுபடுத்துக. இடர்ப்படும் மாணவர்க்குக் கதை கூற உதவுக.

***எடுத்துக்காட்டு:***



*நன்றி: ரவீந்திர தேனுவர*

## செயற்பாடு 2

- முழு வகுப்பு மாணவரையும் நன்கு அவதானிக்கச் செய்து ஆசிரியரோ, மாணவர் ஒருவரோ, ஒலி நாடாவைப் பயன்படுத்தியோ கதையைக் கூறத் தொடங்கி பூர்த்தி செய்யாது நிறுத்தும் வகையில் ஒழுங்கு செய்க. பின்னர், மாணவர்களைச் சிறு குழுக்களாக்குக. செவிமடுத்த கதையினைப் பூர்த்தி செய்வதற்கு அனுமானித்தல் உள்ளடக்கத் தொடர்பு, காரண காரியத் தொடர்பு காணல். எதிர்வுகூறல் என்பன வற்றின் அடிப்படையில் குழுக்கள் முயற்சிக்கலாம் என்பதை எடுத்துக் கூறுக. குழுச் செயற்பாடுகளை அவதானித்து ஒவ்வொரு குழுவிலுள்ளோரும் கதையைப் பூர்த்திசெய்து கூறுவதற்கு இடமளிக்குக.

***எடுத்துக்காட்டு:***

**கருங்குருவி அங்கும் இங்கும் இரைதேடி அலைந்தது. கடைசியில் களைப்பைப் போக்க ஆற்றங்கரைக்கு வந்தது. ஆற்று நீரை ஆசையாகப் பருகத் தொடங்கியது. அந்த நேரம் ஆற்று நீரில் 'பொத்தென்று' ஏதோ விழுந்த சத்தம் கேட்டது. திடுக்கிட்ட கருங்குருவி சத்தம் வந்த திசையினை நோக்கியது... ................................................**

**......................................................................................................................**


## செயற்பாடு 3

- கதை, உரையாடல், நாடகம் என்பனவற்றில் தரம் ஐந்து மாணவர்களுக்குப் பொருத்தமான சம்பவங்களையோ/காட்சிகளையோ/பகுதிகளையோ தெரிந்தெடுத்துப் பாத்திரமேற்று நடிப்பதற்கு மாணவர்களிடம் ஒப்படைக்குக. அவற்றை அம்மாணவர்கள் பாத்திரமேற்று நடிக்கவும், ஏனையோர் அவதானிக்கவும் குறைநிறைகள் கூறவும் சந்தர்ப்பம் வழங்குக. பாத்திரமேற்று நடிப்பதற்கு எல்லா மாணவர்களுக்கும் வாய்ப்பு வழங்குக.

## செயற்பாடு 4

- மாணவர்களின் மனதுக்குப் பிடித்த ஒருவர் அல்லது காட்டுன் கதாபாததிரங்கள் போன்று பாவனை செய்து பேசுவதற்குக் குழுக்களில் பயிற்சி வழங்குக.

  ***எடுத்துக்காட்டு:***
  - கற்பனைக் கதாபாத்திரங்கள்
  - பெரியார் ஒருவர்
  - மரக்கறி வியாபாரி
  - வானொலி/தொலைக்காட்சி அறிவிப்பாளர்
  - விளையாட்டுப் போட்டி அறிவிப்பாளர்
  - கிறிக்கெட் போட்டி வருணனையாளர்
  - விழாக்கள் தொடர்பான நேரடி வருணனையாளர்
  - பிராந்தியச் செய்தியாளர்கள்



- குழுக்களிலே பாவனை செய்து பேசுவதில் தேர்ச்சி பெற்றவர்களை வகுப்பு மாணவர் களுக்கு முன் / மாணவ மன்றத்தின் முன் பாவனை செய்து பேசுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குக. அத்தகைய முயற்சியில் ஈடுபடுவதற்கு ஆர்வமூட்டுக.

## செயற்பாடு 5

- மாணவர்களை மூன்று குழுக்களாக்குக. பார்த்த, கேள்வியுற்ற சம்பவம் ஒன்றினை ஒழுங்குபடுத்திக் கூறுவது, குறிப்பிட்ட ஒரு விடயத்தைப் பற்றி ஒழுங்குபடுத்திக் கூறுவது, ஒரு பொருள் பற்றிய விபரங்களை ஒழுங்குபடுத்திக் கூறுவது ஆகியவற்றினை அக்குழுக்களிடம் ஒப்படைக்குக. கேட்பவர்கள் நன்கு விளங்கும்படி ஒழுங்குபடுத்துதல் அவசியம் என்பதை எடுத்துக்கூறுக. குழுச் செயற்பாடுகளில் ஒவ்வொன்றையும் ஒழுங்குபடுத்தி எவ்வாறு முன்வைக்க வேண்டும் என்பதை விளக்குக.
  - அறிமுகஞ் செய்தல்
  - தொடர்புபடுத்துதல்
  - காரண காரியத் தொடர்பு விளக்கம்
  - எளிமைப்படுத்திக் கூறுதல்
  - தொகுத்துக் கூறல்
  - நிறைவுரை

***எடுத்துக்காட்டு:***
1. வீதி விபத்தின்போது நிகழ்ந்தவை
2. தொலைக்காட்சி பார்த்த நிகழ்வு
3. வீட்டுப்பாடம் செய்யாமைக்கான காரணங்கள்

## செயற்பாடு 6

- மாணவர்களின் தரத்துக்குப் பொருத்தமான விடயங்கள் தொடர்பாக விவாதங்களில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்குக. மாணவர்களின் தர்க்கிக்கும் திறனை மேம்படுத்துவதற்கு உதவியாக, விவாதங்கள் சிலவற்றைச் செவிமடுக்கச் செய்க. அல்லது ஒலி நாடாக்களிற் பதிவு செய்யப்பட்ட விவாதங்களை ஒலித்துக் காட்டுக.

- அவ் விவாதங்களில் ஒரு விடயத்தை ஒட்டியும் வெட்டியும் பேசும் முறையை மாண வர்கள் அவதானிக்கச் செய்க. விவாதங்களிற் பங்குபற்றி ஒரு விடயத்தைப் பற்றிச் சார்பாகக் கருத்துக் கூறுவதற்கும், அதனை மறுத்துக் கூறுவதற்கும் சந்தர்ப்பங்கள் வழங்குக.

*எடுத்துக்காட்டு:* **விவாதம்**

**நிபந்தனைகள்:**
விவாதத்தில் இரண்டு குழுக்கள் பங்குபற்ற வேண்டும். ஒவ்வொரு குழுவிலும் தலைவருடன் சேர்ந்து நால்வர் உள்ளடங்கியிருத்தல் வேண்டும். ஒவ்வொரு வருக்கும் மூன்று நிமிடங்கள் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கப்படும். இரு அணியின் தலைவர்களுக்கு இறுதியாகத் தொகுப்புரை வழங்குவதற்காக இரு நிமிடங்கள் வழங்கப்படும்.

**தலைப்பு :**

குழு ❶ பொதிசெய்யப்பட்ட உணவுகள் உண்பது நல்லது.

குழு ❷ பொதிசெய்யப்பட்ட உணவுகளை உண்பது கூடாது.

குழு ❶

**தலைவர்:** இன்றைய உலகில் உணவு சமைத்துச் சாப்பிடுவதற்கு நேரமில்லை. வேலைப்பளு அதிகம். பொருளாதாரச் செலவுகள் அதிகம். பணத்தைச் சேமிக்காமல் வாழ முடியாதுள்ளது. அதனால் வேலைக்குச் செல்பவர்களுக்கு பொதி செய்யப்பட்ட உணவு அவசியமாகின்றது. அதிகாலையில் தூரப்பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் பொதி செய்யப்பட்ட உணவைத்தான் உண்ண வேண்டியுள்ளது. இன்றைய அவசர உலகில் பொதி செய்யப்பட்ட உணவுகளின் தேவை அதிகரித்துள்ளது..................
..........................................................................................................................................

குழு ❷

**தலைவர்:** எனது எதிரணித் தலைவர் பொதிசெய்யப்பட்ட உணவு அவசியம் என்று வலியுறுத்திப் பேசிவிட்டுச் சென்றார். அவரைப் பார்த்தீர்களா! மெலிந்து காணப்படுகின்றார். என்னைப் பாருங்கள். நல்ல உடலாரோக்கியத்துடன் காட்சி தருகிறேன். நான் உண்பது வீட்டில் சமைத்த உணவுகளை மட்டுமே. அதனால் தான் நான் நோய் நொடி இன்றி இருக்கிறேன். எனது எதிர்த்தரப்பு நண்பர்களைப் பாருங்கள். என்னைப்போன்று மகிழ்ச்சியாக இருக்கிறார்களா? இல்லை. அதற்குக் காரணம் என்ன? பொதிசெய்யப்பட்ட உணவுகளை உண்பதே ஆகும்..........................................................................
............................................................

**குறிப்பு:** மாதிரிக்கு விவாத உரையாடலின் ஆரம்பப்பகுதி இங்கு தரப்பட்டுள்ளது. இங்கு தரப்பட்டுள்ள தலைப்புப்போன்று மாணவர்களுக்குப் பொருத்தமான பயன்மிக்க தலைப்புக்களைக்கொடுத்து விவாதம் நடாத்த மாணவர்களை ஊக்கப்படுத்துக.

## கற்றல் - கற்பித்தல் வளங்கள்

- கதை நிகழ்வுகளைக் காட்டும் படங்கள்
- கதை ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒலி நாடா
- கதை/காட்சி/சம்பவங்கள் (பாத்திரமேற்று பேசுதல்)
- பாவனை செய்து பேசுவதற்குரிய தலைப்புகள்
- கேட்போருக்கு நன்கு விளங்கக்கூடிய பேச்சுக்கான விடயத் தலைப்புகள்
- விவாதத் தலைப்புகள்.

## கணிப்பீடு

- ✳ படம் பார்த்துக் கதையைத் தெளிவாகக் கூறுதல்
- ✳ கதைகளைப் பூர்த்திசெய்து கூறுதல்
- ✳ பாத்திரமேற்றுப் பேசுதல்
- ✳ பாவனை செய்து பேசுதல்
- ✳ ஒழுங்குபடுத்திப் பேசுதல்
- ✳ விவாதங்களிற் பங்கேற்றல்

என்பனவற்றைக் கணிப்பிடுக.

## தேர்ச்சி மட்டம்

### 2.1.5 இரசனைக்காகவும் மொழிவிருத்திக்காகவும் பேசுவார்/பாடுவார்/நடிப்பார்.

## உள்ளடக்கம்

- ✓ கதை கூறுதல்
- ✓ பார்த்த நிகழ்வுகளை விவரித்தல்
- ✓ பாடல்களைத் தாளத்துடன் பாடுதல்
- ✓ விடுகதைகள், புதிர்கள் ஆகியவற்றை விடுத்தலும், விடுவித்தலும்
- ✓ தகவல்களைச் சேகரித்து விவரித்தல்
- ✓ பிறர் ஏற்றுக்கொள்ளும் வகையில் தமது கருத்துக்களை வலியுறுத்திக் கூறுதல்
- ✓ விவாதித்தல்/பட்டிமன்றத்தில் பங்குபற்றுதல்
- ✓ வினாக்களைக் கேட்டுக் கிரகித்து விடை கூறுதல்
- ✓ தடயம் கூறி விளையாடுதல்

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

➲ மாணவர்கள் தாம் இரசித்த கதைகளை ஏனையோரும் இரசிக்கும் வகையில் மெய்ப்பாடுகளுடன் கூற வழிப்படுத்துக.

➲ பார்த்துக் கிரகித்த நிகழ்வுகளை இரசனையுடன் விவரிக்க மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குக.

➲ பாடல்களை அபிநயத்துடனும் தாளத்துடனும் குழுவாகவும் தனியாகவும் பாடுவதற்கு மாணவர்களை வழிப்படுத்துக.

➲ தாம் செவிமடுத்து, வாசித்து இரசித்த நல்ல விடுகதைகளையும் புதிர்களையும் ஏனைய மாணவர்களுக்கு விடுக்க ஒவ்வொரு மாணவருக்கும் சந்தர்ப்பம் வழங்குக. ஏனையோரால் விடுவிக்கப்பட்ட விடுகதைகளையும், புதிர்களையும் விடுவிக்க நேரம் வழங்குவதோடு, அவற்றை விடுவிக்கத் துணை புரிக.

➲ சூழல், விளையாட்டுகள், அருகி வரும் பிராணிகள் முதலிய பயனுள்ள தகவல்களைச் சேகரித்து அவை பற்றி சுவைபட விவரிக்கத் துணை புரிக.

- மொழி வளம், கருத்துச் செறிவு, தொகுத்து வழங்குவதிலுள்ள சிறப்பு, எளிமை, தெளிவு முதலிய அம்சங்கள் காரணமாக புதிய/கடின விடயங்களைக் கூடப் பிறர் ஏற்றுக்கொள்ளும் வகையில் முன்வைப்பதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பம் வழங்குக.

- மாணவர்களின் தரத்திற்குப் பொருத்தமான விடயங்கள் பற்றி நல்ல அம்சங்கள், தீமையான அம்சங்கள் தொடர்பாகச் சிந்தித்து ஆராய்ந்து தம் கருத்துக்களை எடுத்துக் கூறி விவாதிப்பதற்கு மாணவர்களுக்குப் போதிய வாய்ப்புகள் வழங்குக.

- ஒருவர் கேட்கும் வினாக்களைக் கிரகித்து விடைகளைப் பொருத்தமாகவும் சுருக்க மாகவும் தெளிவாகவும் விடை கூறுந் திறனை வளர்க்க மாணவரை நெறிப்படுத்துக.

- தடயங்கூறி ஒரு பொருளைக் கண்டுபிடிக்கும் விளையாட்டில் மாணவரை ஈடுபடுத்துக.

## செயற்பாடுகள்

### செயற்பாடு 1 (இரசனைக்காகவும், மொழி விருத்திக்காகவும் பேசுதல்/பாடுதல்)

- மாணவர்கள் தாம் செவிமடுத்து, வாசித்து, கிரகித்த கதைகளை ஏனையோருக்கு மெய்ப்பாட்டுடனும் இரசனையுடனும் கூறுவதற்கு வாய்ப்பாகக் குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துக. ஒவ்வொரு மாணவரும் குழுக்களிலே கதை கூறுவதற்கு வாய்ப்பாக மூவர்/நால்வர் கொண்ட சிறு குழுக்களாக்கி ஈடுபடுத்துக. கதையைக் கூறுவதற்கு இடர்ப்படும் மாணவர்களுக்குத் துணை புரிக.

***எடுத்துக்காட்டு:***

**கதை**

முன்னொரு காலத்தில் ஒரு கிராமத்தில் கமரால ஒருவர் வாழ்ந்து வந்தார். சீரும் சிறப்புமாக வாழ்ந்து வரும்போது சிறிது சிறிதாக அவரது கண் பார்வை மங்கத் தொடங்கியது. பல வைத்தியர்களையும் நாடி கண்ணுக்கு வைத்தியம் செய்வித்தார் கமரால. பணமும் காலமும் விரயமாகியும் கண்பார்வை மீளவில்லை. அதனால் கமரால மிகவும் கவலையோடு வாழ்ந்து வந்தார். தூர இடங்களுக்குச் சென்று வைத்தியம் செய்யக் கூடிய நிலையிலும் அவர் இல்லை.

இவ்வாறு இருக்கும்போது கண்வைத்தியத்தில் பிரபலமான ஒருவர் இருப்பதாக கேள்வியுற்றார் கமரால. தெரிந்தவர்கள் வாயிலாக அந்த வைத்தியரை தனதுவீட்டுக்கு வரவழைத்து வைத்தியம் செய்வதுதான் சிறந்த வழி என கமரால தீர்மானித்தார். ஒரு நாள் தெரிந்தவர் ஒருவர் மூலம் வைத்தியருக்குச் செய்தி அனுப்பப்பட்டது. சில நாட்களில் வைத்தியரும் வந்து சேர்ந்தார். முறையாக வைத்தியம் செய்து கண்களைக் குணப்படுத்த வேண்டுமானால் சிறிது காலம் எடுக்கும் என்பதால் கமராலவின் வீட்டிலேயே தங்கியிருந்து வைத்தியம் செய்ய இணங்கினார்.

வைத்தியர் தங்குவதற்கு இடம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது. வைத்தியம் ஆரம்பிக்கப்பட்டு சில நாட்களில் தனது கண்பார்வையில் ஒரு திருப்தியான மாற்றம் ஏற்படுவதை கமரால உணர்ந்தார். கண்பார்வை படிப்படியாக கிடைத்துக் கொண்டிருக்கும்போதே இன்னொரு அதிசயம் நிகழ்ந்து கொண்டிருப்பதை கமராலவினால் உணர முடிந்தது. தனது வீட்டில் ஆங்காங்கே வைக்கப்பட்டிருந்த கலைப் பொருட்களும் பெறுமதி வாய்ந்த வேறு சில பொருட்களும் மாயமாக மறைந்திருப்பதை கமரால உணர்ந்து கொண்டார். என்றாலும் வைத்தியம் முடியும் வரை பொறுமையாக இருந்தார் கமரால.

குறிப்பிட்ட கால முடிவில் தனது வைத்தியத்தை முடித்துக் கொண்ட கண் வைத்தியர் ஏற்கனவே ஒப்புக் கொண்டிருந்தபடி தனது கட்டணத்தை தரும்படி கமராலவிடம் கேட்டார். உண்மையில் கண்பார்வை மீளக் கிடைத்திருந்தாலும், தனக்குப் பார்வை கிடைக்கவில்லை, அதனால் பொருந்திய தொகையை தர முடியாதென மறுத்து விட்டார் கமரால. பல முறை பணம் கேட்டுப் பார்த்தும் கிடைக்கவில்லை. ஈற்றில் கிராம நீதிபதியிடம் சென்றார் வைத்தியர்.

தான் நீண்டநாள் கமராலாவின் வீட்டில் தங்கி இருந்து வைத்தியம் செய்ததாகவும் ஈற்றில் கண்பார்வை பெற்றவுடன் வாக்களித்த பணத்தைத் தர மறுப்பதாகவும் முறைப்பாடு செய்தார் கண்வைத்தியர். வைத்தியரின் முறைப்பாட்டை ஏற்றுக் கொண்ட நீதிபதி கமராலவை அழைத்து வரும்படி தனது சேவகர்களை அனுப்பினார். நீதிபதியின் முன்னால் நிறுத்தப்பட்ட கமராலவிடம் வைத்தியரின் முறைப்பாட்டைக் கூறி அதற்கான விளக்கத்தை அளிக்கும்படி கேட்டுக் கொண்டார் நீதிபதி.

எந்தவிதப் பதற்றமோ குழப்பமோ அடையாத கமரால மிகவும் சாந்தமான குரலில் "நீதிபதி அவர்களே! எனது கண்பார்வைக் குறைவுக்காக வைத்தியம் செய்யவென இந்த வைத்தியர் எனது வீட்டில் வந்து தங்கினார். வைத்தியமும் செய்தார். கண்பார்வை சிறிது சிறிதாகக் கிடைப்பதை என்னால் உணர முடிந்தது. ஆனால் என்ன ஆச்சரியம்! எனது வீட்டில் ஆங்காங்கே வைக்கப்பட்டிருந்த கலைப் பொருட்களையும், வேறு சில பெறுமதியான பொருட்களையும் மட்டும் என்னால் பார்க்க முடியவில்லை. அவை அந்தந்த இடங்களில் இல்லை. எனவே, எனது பார்வை இன்னும் முழுமையாக வழமைக்குத் திரும்பவில்லை என்று நினைக்கிறேன். அப்படிப் பார்வை திரும்பியிருந்தால் அந்தப் பொருட்களும் தெரிய வேண்டுமல்லவா? அதனால்தான் முழுமையாகக் குணமடைய முன்னர் நான் வாக்களித்த பணத்தைக் கொடுக்க விரும்பவில்லை" என சாவதானமாகக் கூறி முடித்தார் கமரால.

இவற்றையெல்லாம் மிகக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த நீதிபதி என்ன நடந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டார். உடனே கண்வைத்தியரை நோக்கி எடுத்த பொருட்களை எல்லாம் சரியாக ஒப்படைத்துவிடும்படியும் அதன் பின்னர் உரிய கூலியைப் பெற்றுக் கொள்ளும்படியும் கட்டளையிட்டார். அதனை கமராலவும் கண்வைத்தியரும் ஏற்றுக் கொண்டனர். வழக்கு அத்துடன் முடிவந்தது.

**எம்.எச்.எம். ஹசன்**
**நன்றி: சந்திரனைக் காப்பாற்றிய**
**மனிதன் கதைகள் (2008)**

## செயற்பாடு 2

- பார்த்த நிகழ்வுகளை இரசனையுடன் கூறுவதற்கு வாய்ப்பாக, ஆசிரியர் இரண்டொரு நிகழ்வுகளைச் சுவைபடக் கூறுக. வகுப்பைக் குழுக்களாக்குக. குழுக்களில் நிகழ்வு களை இரசனையுடன் கூற வழிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு:*** **நிகழ்வு**

**மிருகக் காட்சிசாலைக்குச் சென்ற அனுபவம்**

- நான் எனது பெற்றோருடன் காலை ஒன்பது மணியளவில் மிருகக்காட்சிச் சாலைக்குச் சென்றேன்.
- மிருகக் காட்சிசாலையைப் பார்வையிடுவதற்கான நுழைவுச்சீட்டை எனது பெற்றோர் பெற்றுக் கொண்டனர்.
- முதலில் அங்குள்ள பல வண்ணப் பறவைகளைப் பார்வையிட்டேன்.
- அதன் பின்னர் அழகிய மீனினங்களைப் பார்வையிட்டேன்.
- அபூர்வ மீனினங்களைப் பார்த்து ஆச்சரியமடைந்தேன்.
- மீனினங்களைப் பார்வையிட்டபின் பாம்பினங்களைப் பார்வையிட்டேன்.
- அனக்கொண்டா பாம்பினத்தைப் பார்க்கும்போது எனக்குப் பயமாக இருந்தது.
- அதனால் அவ்விடத்தை விட்டு அகன்று நீரில் வாழும் உயிரினங்களைப் பார்வை யிடுவதில் கவனத்தைச் செலுத்தினேன்.
- இறுதியாக பல்வகையான மிருகங்களைப் பார்த்து மகிழ்ந்தேன்.
- அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் 'யானை நடனம்' இடம்பெறும் என்று அங்குள்ளவர்கள் என் பெற்றோரிடம் கூறினார்கள்.
- அதனால் மாலை ஐந்து மணிவரை இருந்து யானை நடனத்தைப் பார்த்துவிட்டு எனது பெற்றோருடன் வீடு திரும்பினேன்.

**விசேட குறிப்பு:** தெகிவளை மிருகக்காட்சிசாலைக்குச் சென்ற தரம் ஐந்து மாணவர் ஒருவர் தனது அனுபவத்தைக் கூறக் கேட்டு எழுதப்பட்டது.

## செயற்பாடு 3

- தாளத்துடனும் அபிநயத்துடனும் பாடக்கூடிய சில பாடல்களைத் தெரிந்தெடுத்து அவற்றைப்பாட மாணவர்களைப் பரிச்சயப்படுத்துக. அப்பாடல்களுள் ஒன்றைத் தாளத்துடன் பாடி அபிநயித்துக் காட்டுக. அதன் பின்னர் ஆசிரியருடன் சேர்ந்து மாணவர்களும் பாடி அபிநயக்க வழிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு:*** **பாடல்**

**பச்சோந்தி**

வேலி எங்கும் பச்சோந்திதான்
சுற்றி வருகுது - கீழே
வீழ்ந்திடாமல் கால்களினால்
பற்றி வருகுது!

நீலம்! மஞ்சள்! பச்சை! செம்மை!
நிறமும் மாறுது - செடி
நிறத்திற்கேற்ப வண்ணம் பல
நிதமும் சேருது!

வாலை ஆட்டித் தலையை ஆட்டி
வந்து போகுது - பூச்சி
வாயில் கவ்விப் பிடித்துத் தின்று
வாழ்க்கை ஆவுது!

நூலைக் கட்டிச் சிறுவர்கள்தாம்
நோக வைக்கிறார்! - அதை
நோக்கிச் சிலர் கல்லை வீசிச்
சாக வைக்கிறார்!

ஐயோ! பாவம்! பச்சோந்தியின்
அழகை ரசிக்கணும்! - இதை
அடிப்பதும் வீண்! - பிடிப்பதும் ஏன்?
அன்பாய் நேசிக்கணும்!

**நெல்லை ஆ. கணபதி**
**நன்றி: http://www.dailythanthi.com**

## செயற்பாடு 4

- இருவாரங்களுக்கு/மாதத்திற்கு ஒரு முறை விடுகதைகள், புதிர்கள் என்பனவற்றை மாணவர் நன்கு இரசிக்கும் வகையில் போட்டி நடத்தி, வெற்றிபெறும் மாணவர்களைப் பாராட்டுக. அப்போட்டியிலே மாணவர்கள் சேகரித்த விடுகதைகளையும், புதிர்களையும் (இரண்டு குழுக்களாகப் பிரித்து) விடுக்கவும் விடுவிக்கவும் சந்தர்ப்பம் வழங்குக. ஒரு குழுவால் விடுக்கப்பட்ட விடுகதைகள், புதிர்கள் என்பவற்றை மற்றக்குழு விடுவித்தால் அக்குழுவுக்கு ஒரு புள்ளி என்ற அடிப்படையில் போட்டியை நடத்துக.

***எடுத்துக்காட்டு:***

**விடுகதைகள்**

1. **சீருடை இல்லாத காவலாளி; சம்பளம் கேட்காத காவலாளி. அவன் யார்?**
2. **நிற்காமல் ஓடுபவனைத் துரத்திப்பிடிக்க ஆளில்லை. அவன் யார்?**
3. **திறந்தால் முத்துக்கள்; மூடினால் பவளங்கள். அவைகள் யாவை?**
4. **தன்னிடம் சேருபவனை தன்னைப்போலவே மாற்றுவான். அவன் யார்?**
5. **தீக்குளித்துச் சாகிறவன் காற்று குளித்தும் சாவான். அவன் யார்?**
6. **சுண்டி விட்டால் இரத்தம் வராது; ஆனால், வெற்றி தோல்வி வரும். அது எது?**
7. **சின்ன வாயில் ஊட்டி விடும் உணவை ஜீரணம் செய்யாமல் வைத்திருப்பான். அவன் யார்?**
8. **முதுகிலே அரிதாரம் பூசுபவன் முகத்தைப்பளிச்சென்று காட்டுவான். அவன் யார்?**
9. **வில்லாய் வளைபவன் ஒருபோதும் ஒடிந்து போகமாட்டான். அவன் யார்?**
10. **அமாவாசைக்கு வயதானால் பௌர்ணமியாகும். அது என்ன?**
11. **மின்சாரம் இல்லாத வேளையிலும் எரிவான். அவன் யார்?**
12. **இரண்டு கால்கள் இருப்பவனை விழாமல் பிடித்துக்கொள்ள வேண்டும். அவன் யார்?**
13. **கண்ணுக்கு எட்டியவரை சொட்டு நீலமாய்த் தெரிவான். கையிலெடுத்தால் நிறமில்லாது போவான். அவன் யார்?**

**14. வளமாய் வளர்ந்த மரம்; வாசற்காலுக்கு உதவாத மரம். அது என்ன?**
**15. குண்டுச் சொம்பில் தண்ணீர் இருந்தும், குருவி குடிக்க வழியில்லை. அது என்ன?**

**விடைகள்:**

| | | | |
|---|---|---|---|
| 1. நாய் | 2. ஆறு | 3. பற்கள், உதடுகள் | 4. பால் |
| 5. கற்பூரம் | 6. நாணயம் | 7. உண்டியல் | 8. கண்ணாடி |
| 9. நாணல் | 10. தலைமுடி | 11. சூரியன் | 12. ஏணி |
| 13. கடல் | 14. வாழைமரம் | 15. இளநீர் | |

நன்றி: http://www.dinamani.com

## புதிர்கள்

1. அந்த மனிதரிடம் அவரது வயதைக் கேட்டால் நேராகச் சொல்லமாட்டார். ''என் வயதிலுள்ள இரு எண்களையும் கூட்டினால் 9 வரும். அந்த இரு எண்களையும் இடம்மாற்றிப்போட்டால் என் வயதில் ஒன்பது கூடி விடும்.'' என்பார். அப்படியானால் அவர் வயது என்ன?

2. சில பெண்கள் கடைக்குச் சென்றனர். ஒவ்வொருவரும் ஒரே தொகைக்குப் பொருள்களை வாங்கினர். அவர்கள் செலவழித்த மொத்தத் தொகை 203 ரூபாய். எந்தப் பொருளும் 10 ரூபாய்க்குக் குறைந்தது கிடையாது. அப்படி யானால் அந்தப் பெண்கள் மொத்தம் எத்தனை பேர்? பொருளின் விலை என்ன?


| ❶ விடைகள் | ❷ |
|---|---|
| **45.** இவ்விரு எண்களையும் கூட்டினால் வரும் தொகை 9. திருப்பிப்போட்டல் 54. 54க்கும் 45க்கும் உள்ள வித்தியாசம் 9. | **7 பெண்கள், 29 ரூபாய்.** ரூபாய் 203 மீதம் வராமல் வகுக்கும் இரண்டு இலக்க எண் எது என்று கண்டு பிடிக்க வேண்டும். ஏனெனில் எந்தப் பொருளும் பத்து ரூபாய்க்குக் குறைந்தது கிடையாது என்பதால். 7 x 29 = 203 ரூபாய் |

## செயற்பாடு 5

- மாதம் ஒரு முறை கிராமிய விளையாட்டுகள், அருகிவரும் பிராணிகள் முதலிய பயனுள்ள தகவல்களைச் சேகரிக்கவும், அவை பற்றிச் சுவைபட விவரிப்பதற்குமான கலந்துரையாடலை நடத்தவும் ஒழுங்கு செய்க. சேகரித்த தகவல்களைச் சுவைபட விவரிப்பதற்கேற்ற வழிமுறைகளை முன்கூட்டியே மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துக.

***எடுத்துக்காட்டு:*** **அருகிவரும் பிராணிகள்**

அண்டார்ட்டிகா, அவுஸ்திரேலியா ஆகிய இரண்டு கண்டங்களைத் தவிர உலகின் அனைத்துப் பகுதிகளிலும் மான்கள் வாழ்கின்றன. மான்கள் புற்கள் மற்றும் தழைகளைச் சாப்பிட்டு வாழ்கின்றன. மான்களில் பல வகைகள் இருக்கின்றன. ஆபிரிக்காவில் பலவகைகள் இருக்கின்றன. ஆபிரிக்காவில் செவ்ரொடெயன்ஸ் என்ற வகை மான்கள் வாழ்கின்றன. இதன் உயரம் மிகவும் குறைந்து காணப்படுகின்றது. இதன் மொத்த உயரமே ஒரு அடிதான். ஆனால் உடம்பு சற்று குண்டாயிருக்கும். ஆபிரிக்காவின் ஈரக்காட்டுப் பகுதிகளில் இவை வாழ்கின்றன. இந்த மான்களைப் பிடிப்பது சற்றுக் கடினம். ஆபிரிக்கா நாட்டில் மற்றொரு வகை



மானும் இருக்கின்றது. இதன் பெயர் இம்பாலா மான்கள் என்பதாகும். இது மிக வேகமாக அதாவது மணிக்கு எண்பது கிலோ மீற்றர் வேகத்தில் ஓடும் ஆற்றல் பெற்றது. இது மட்டுமன்றி இவை ஒரே பாய்ச்சலில் சுமார் ஒன்பது மீற்றர் தூரத்தை எளிதில் தாவிவிடும் ஆற்றல் பெற்று விளங்குகிறது. மான்களுக்கு அழகே அதன் கொம்புகள்தான்.

**ஆர். வீ. பதி**
**நன்றி: பாலூட்டிகள் பற்றிய தகவல் களஞ்சியம்**

## செயற்பாடு 6

- மாணவர்கள் தமது கருத்துக்களைப் பிறர் ஏற்றுக்கொள்ளச் செய்வதற்குப் பின்வரும் உத்திகளைக் கையாள்வதற்கு வழிப்படுத்துக.
  - மொழி வளத்தை கூட்டுதல் (சொற்பிரயோகம், உவமைச் சொற்றொடர்கள் கையாளப்படுதல், பொருத்தமான மேற்கோள்கள், பழமொழிகள் என்பவற்றை எடுத்தாளல்)
  - கருத்துச் செறிவு அமைந்திருத்தல் (மாணவர்கள் ஒரு விடயம் பற்றி முன்வைக்கும் போது, கேட்போருக்குப் பயனளிக்கும் கருத்துக்கள் நிறைந்து காணப்படுதல்)
  - தொகுத்து வழங்குதல் (கேட்போர் நன்கு புரிந்து கொள்ளவும், கிரகிக்கவும் ஏற்ற வகையில் முன் சொன்ன கருத்தையும், அடுத்துச் சொல்லவுள்ள கருத்தையும் தொடர்புபடுத்துதல்)
  - எளிமையாகவும் தெளிவாகவும் கூறுதல் (கேட்போரின் அறிவு, ஆற்றல் என்பனவற்றைக் கருத்திற்கொண்டு அவர்கள் இலகுவாகவும், தெளிவாகவும் புரிந்து கொள்ளத்தக்க வகையிற் கூறுதல்)

- புதிய / கடினமான விடயங்களைப் பற்றி மாணவர் பேச வேண்டிய சந்தர்ப்பங்களில் இவ்வுத்திகளைக் கையாளுமாறு அறிவுறுத்துக.

## செயற்பாடு 7

- விவாதங்களிலும் / பட்டிமன்றங்களிலும் ஈடுபடுவதற்கு மாணவர்கள் ஏற்கனவே தயார் செய்யப்பட்ட போதிலும் இரசனை, மொழி விருத்தி என்பனவற்றைக் கருதி மாணவர் மன்றக்கூட்டங்களிலும், பிற பாடசாலை மாணவருடனும் விவாதங்கள், பட்டிமன்றங்கள் என்பனவற்றில் ஈடுபடுத்த ஆவன செய்க.

  ***எடுத்துக்காட்டு:***

  **பட்டிமன்றத் தலைப்புகள்**

  1. தொலைக்காட்சியின் நன்மை, தீமைகள்
  2. மழை பெய்வதன் நன்மை, தீமைகள்
  3. திரைப்படங்களின் நன்மை, தீமைகள்

## செயற்பாடு 8

- மாணவர்களுக்குச் சில விடயங்கள் தொடர்பாக ஆழமான அறிவு ஏற்படவேண்டுமானால் அவ்விடயங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பதோடு அவை பற்றிச் சிந்தித்து, ஆராய்ந்து சந்தேகம் ஏற்படும் இடங்களில் அவை பற்றி வினாக்களைக் கேட்டு உரியவர்களிடம் விடைகளை அறிந்து கொள்ளவும் வேண்டும் என்பதை வற்புறுத்துக. இதற்கு நேர்முக உரையாடல் அல்லது செவ்விகாணல் சிறந்த வழியாகும் என்பதை எடுத்துக் கூறுக. பெரியவர்களைச் செவ்விகாண்பது தான்

முறைமையாயினும் மாணவர்களைச் சோடிகளாக்கி ஒருவர் வினா கேட்கவும் மற்றவர் பொருத்தமாக விடை அளிக்கவும் ஏற்ற வகையில் ஒழுங்குபடுத்தி, ஏற்ற ஆயத்தங்களைச் செய்து ஈடுபடுத்துக.

## செயற்பாடு 9

- தடயங் கூறி ஒரு பொருளைக் கண்டுபிடிக்கும் விளையாட்டில் மாணவரை ஈடுபடுத்துக. (இவ்விளையாட்டுக்கான விதிமுறைகள் தரம் 3 ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் பக்கம் 43 இல் தரப்பட்டுள்ளன.)

***எடுத்துக்காட்டு:***

**நினைத்த பொருள் : நெருப்பு**

| வினா | விடை |
|---|---|
| 1. உயிருள்ளதா? | இல்லை |
| 2. உலகில் எங்கும் கிடைக்குமா? | ஆம் |
| 3. வீடுகளிலும் கிடைக்குமா? | ஆம் |
| 4. விலை கொடுத்து வாங்கப்படுகிறதா? | ஆம் |
| 5. நீர் நிலைகளில் கிடைக்குமா? | இல்லை |
| 6. வேறு பொருட்களை ஆக்க உதவுமா? | இல்லை |
| 7. குளிர் காய உதவுமா? | ஆம் |
| 8. சமைக்க உதவுகிறதா? | ஆம் |

## கற்றல் - கற்பித்தல் வளங்கள்

- கதைகள்
- நிகழ்வுகள்
- பாடல்கள்
- விடுகதைகள், புதிர்கள்
- தகவல் சேகரிப்பதற்கான தலைப்புகள்
- பட்டிமன்றத் தலைப்புகள்
- செவ்வி காண்பதற்காக இலகு வினாக்கள்

## கணிப்பீடு

- கதைகளைச் சுவையாகக் கூறுதல்
- பார்த்த நிகழ்வுகளை விவரித்தல்
- விடுகதைகள், புதிர்கள் என்பவற்றை விடுத்தலும் விடுவித்தலும்
- தகவல்களைச் சேகரித்து விவரித்தல்
- தம் கருத்துக்களை வலியுறுத்திக் கூறுதல்
- பட்டிமன்ற விவாதங்களில் பங்குபற்றுதல்
- வினாக்களைக் கேட்டுக் கிரகித்து விடை கூறுதல்
- தடயங்களை வைத்து நினைத்த பொருள் கூறல்

என்பனவற்றைக் கணிப்பிடுக.

## ஆசிரியர்களின்
## சுயமதிப்பீட்டிற்கான அளவுகோல்.....

**ஆசிரியர்கள் தமது கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளின் சாதக பாதக விளைவுகளை தாமே சுயமதிப்பீடு செய்துகொண்டு தமது கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளை மாற்றியமைத்துக்கொள்வதற்காகவே இவ்வினாக்கள் தரப்பட்டுள்ளன.**

1. பேசுதல் திறன், பேச்சுத்திறன் ஆகிய இரு சொல்லாட்சிகளை விளங்கிச் செயற்பாடு களைத் திட்டமிடுகின்றீர்களா?

2. பேசுதல் திறன் செவிமடுத்தலின் விளைவால் உருவாகும் திறன் என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்து செயற்படுகின்றீர்களா?

3. குரல் ஏற்றத்தாழ்வு, அழுத்தம், நிறுத்தம் போன்ற மொழியியற் கூறுகள் பேசுதலிலும் பேச்சிலும் உள்ளன என்பதை விளங்கிச் செயற்படுகின்றீர்களா?

4. பேசுதலுக்கான சூழலை உருவாக்கும்போது பிள்ளைகள் தயக்கமில்லாமல் பேசவும், ஆர்வத்துடன் கலந்துரையாடவும் அனைவரும் பங்கேற்கவும் ஆசிரியரின் ஊக்குவிப்புத் தேவை என்பதை உணருகின்றீர்களா?

5. கதைகளை மெய்ப்பாடுகளுடன் கூறவும், பாடல்களை இரசனையுடன் பாடவும் வாய்ப்புக் களை வழங்குகின்றீர்களா?

6. அறிவித்தல்கள், அறிவுறுத்தல்களைக் கூறுவதற்கும் செவிமடுத்துத் துலங்குவதற்கும் சந்தர்ப்பங்களை வழங்குகின்றீர்களா?

7. முன்னாயத்தத்துடன் பேசுவதற்கும், முன்னாயத்தமின்றிப் பேசுவதற்கும் சந்தர்ப்பங்களை உருவாக்கிக்கொடுத்து ஊக்குவிக்கின்றீர்களா?

8. பல்வேறு வகையான பேச்சுக்களைச் செவிமடுத்துப் பேசுவதற்காக ஒலி, ஒளி நாடாக்கள், இறுவட்டுக்கள் போன்றவற்றைப் பயன்படுத்துகின்றீர்களா?

9. பாத்திரமேற்றுப் பேசுவதற்கும் நாடகங்களை நடிப்பதற்கும், நேர்முக வர்ணனைகள் செய்வதற்கும், விவாதிப்பதற்கும் களம் அமைத்துக் கொடுக்கின்றீர்களா?


10. விடுகதைகள், புதிர்கள் ஆகியவற்றை விடுவிப்பதன் ஊடாகவும் தடயம் கூறி விளையாடு வதன் ஊடாகவும் பேச்சுத்திறனை வளப்படுத்த உதவுகின்றீர்களா?

11. பேசுதலில் தயக்கம், பேசுவதற்குக் கூச்சம் போன்ற உளவியல் சார்ந்த மனவெழுச்சிக் குறைபாடுகளை இனங்காண்பதற்கும் அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கும் பல்வேறு அணுகுமுறைகளைப் பின்பற்றுகின்றீர்களா?

12. சொற்களஞ்சியத்தை விருத்தி செய்வதன் ஊடாகப் பேசுதல் திறனை மேம்படுத்த புதிய அணுகுமுறைகளைப் பயன்படுத்துகின்றீர்களா?

13. நவீன கற்பித்தல் நுட்பங்களைப் பயன்படுத்தி செயற்பாடுகளின் ஊடாகப் பேச்சுத்திறனை மேம்படுத்த முயலுகின்றீர்களா?

14. பேசுதல் திறன் அளப்பதற்கு பேச்சுத்தான் ஊடகம் என்பதை விளங்கிக் கணிப்பீடு செய்கின்றீர்களா?

# 3.0  வாசித்தல் (READING)



**எழுத்துக்களைக் காணும் நிலை வாசித்தலின் தொடக்கமாகும். காணுவதை மூளை அறிந்து பொருளுணரும்போது வாசித்தல் நிகழுகின்றது. வாசித்தலின்போது இரு உளவியற் செயல்கள் நடைபெறுகின்றன. மூளை கண்ணுக்குச் சொல்லுதல், கண் மூளைக்குச் சொல்லுதல் ஆகியவையே அவ்விரு செயல்களாகும். வரி வடிவத்திலுள்ள சொற்களை ஒலிவடிவமாக மாற்றி உச்சரித்தல், உறுப்புக்களும் சொற்களை நோக்கும் கண்ணும் ஒத்துழைத்தால்தான் வாசித்தல் சரியாக நடைபெறும். எனவே வாசித்தலில் சொற்களை இனங்காணுதல், உச்சரித்துப் பொருளுணர்தல் என முக்கூறுகள் உள்ளன. இவை நடைபெற உள்ளம், கண், காது, மூக்கு, நா, குரல் உறுப்புக்கள் அத்தனையும் ஒத்துழைக்க வேண்டிய நிலை வாசிப்பிற்கு மட்டுமே உண்டு. வாசித்தலின்போது எழுத்துக் குறியீடுகள், ஒலிக் குறியீடுகளாக மாற்றப்படுகின்றன. உரத்து வாசிக்கும்போதுதான் ஒலிக் குறியீட்டு மாற்றம் ஏற்படுவதாகக் கருத முடியாது. மௌன வாசிப்பின்போதும் மனத்தளவில் எழுத்துகளுக்குரிய ஒலிகள் எழுப்பப்படுகின்றன. வாசித்தல் செயலுக்கும் செவிமடுத்தலுக்கும் மிகுந்த வேறுபாடு இல்லை. செவிமடுத்தலின்போது ஒருவர் புறத்தே இருந்து பேசுகின்றார். வாசித்தலின்போது வாசிப்பவர் மனதுக்குள்ளிருந்து ஒருவர் பேசுவதைப் போன்றுணர்வு ஏற்படுகின்றது. ஒலி வடிவங்களாக வெளிப்படுத்தும் செயல் வாசித்தலில் நிகழினும் அந்த நிகழ்வு மட்டும் வாசித்தலாகாது. ஒலி வடிவங்களாக வெளிப்படுபவை தரும் பொருளையும் உணர வேண்டும். பொருளுணர்தலோடு இணைந்த வாசிப்பே 'வாசித்தல்' ஆகும். எழுத்துக்களாலான சொற்கள், சொற்களாலான வாக்கியங்கள் ஆகியன வாசிக்கும்போது பொருளுணர்த்தும் மொழிக் கூறுகளாகும். ஆகவே எழுத்துக்கள், சொற்கள், வாக்கியங்கள் ஆகியவற்றின் மொழிப் பண்பாட்டுத்திறன் வாசித்தலுக்கு இன்றியமையாததாகும்.**

## தேர்ச்சி

**3.1 பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப கருத்துப் புலப்படும் வகையில் திருத்தமாக வாசிப்பார்.**

## தேர்ச்சி மட்டம்

**3.1.1 வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார்.**

## உள்ளடக்கம்

- ✓ எழுத்துக்களின் இயல்பொலி, மாற்றொலி என்பன புலப்பட உரத்து வாசித்தல்
- ✓ ஒலித்தல் வேறுபாடுகளை அனுசரித்து வாசித்தல்
- ✓ உயிர்க்குறிகளை அனுசரித்து வாசித்தல்
- ✓ நிறுத்தக் குறிகளை அனுசரித்து வாசித்தல்
- ✓ கேட்போருக்கு விளங்கும் வகையில் ஏற்ற தொனி வேறுபாடுகளுடனும் உரிய வேகத்துடனும் வாசித்தல்

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

- தமிழில் எழுத்துக்கள் பலவற்றுக்கு இயல்பொலியும் சிலவற்றுக்கு இயல்பொலியோடு மாற்றொலியும் உண்டு என்பதனை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக. இவற்றை அவதானித்து, இயல்பொலி, மாற்றொலி என்பன அவ்வெழுத்துக்கள் இடம்பெற்ற சொற்களை உரத்து உச்சரிக்கவும், அத்திறனிலே தேர்ச்சி பெறவும் வழிப்படுத்துக.
  ***எடுத்துக்காட்டு:***

| | |
|---|---|
| கட்டம் | - க (இயல்பொலி) |
| காகம் | - க (மாற்றொலி) |
| தங்கம் | - க (மாற்றொலி) |
| பிஞ்சு | - பி (இயல்பொலி) |
| தம்பி | - பி (மாற்றொலி) |

- ஒலித்தல் வேறுபாடுள்ள எழுத்துகளாலான (ல, ள, ழக்கள், ரகர, றக்கள், ண, னக்கள்) சொற்கள் கொண்ட வாக்கியங்களை அவ்வொலி வேறுபாடுகளை அனுசரித்து வாசிக்க மாணவர்களுக்குத் துணை புரிக.

- சொற்களில் இடம்பெறும் எழுத்துக்களின் உயிர்க்குறிகளை அனுசரித்துப் பிழையின்றி வாசிக்க நெறிப்படுத்துக. சகல உயிர்க்குறிகளையும் இனங்கண்டு வாசிக்கத் துணை புரிக.

- வாசிப்புப் பகுதிகளில் (வாக்கியங்கள், பந்திகள் என்பன) இடம்பெறும் நிறுத்தக் குறிகளை இனங்கண்டு, அவற்றை அனுசரித்து வாசிக்க வழிப்படுத்துக. (முன்னைய வகுப்புகளிற் கற்ற நிறுத்தக்குறிகளோடு, அடைப்புக்குறி ( ), இடையீட்டுக் கோடு (-) என்பவற்றையும் அறிமுகஞ் செய்க.)
  ***எடுத்துக்காட்டு:***

தரம் ஐந்து மாணவர்கள் அறிந்திருக்க வேண்டிய நிறுத்தக்குறிகள்

1. (.) முற்றுப்புள்ளி
2. (,) காற்புள்ளி
3. (?) வினாக்குறி
4. (!) வியப்புக்குறி
5. (‘‘...’’) மேற்கோட்குறி

தரம் ஐந்தில் அறிமுகமாகும் நிறுத்தக்குறிகள்

**6. ( ) அடைப்புக்குறி**
**7. (-) இடையீட்டுக்கோடு**

- வாசிப்பதைக் கேட்போருக்குப் பொருள் நன்கு புலப்படுவதற்காக, ஏற்ற தொனி வேறுபாடுகளுடன் உயர்த்தல், தாழ்த்தல் முதலிய) வேகத்துடனும் வாசிப்பதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டுக.

## செயற்பாடுகள்

### செயற்பாடு 1 (வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசித்தல்)

- தமிழ் நெடுங்கணக்கு அட்டையைக் காட்சிப்படுத்துக. தமிழிலுள்ள எழுத்துக்களை உள்ளடக்கிய சொல்லட்டைகள், அச்சொற்கள் கொண்ட வாக்கிய அட்டைகளையும் பெரிய எழுத்தில் தயாரித்துக் கொள்க.

- மாணவர்களைக் குழுக்களாகக்கித் தயாரிக்கப்பட்ட சொல்லட்டைகள், வாக்கிய அட்டைகளுள் ஒவ்வொன்றை ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குக. அவற்றைக் குழுவில் உள்ள ஒவ்வொருவரும் உரத்து உச்சரித்து, அவற்றில் உள்ள எழுத்துகளில் இயல்பொலிகள் நன்கு புலப்படும் வகையில் உச்சரிக்கச் செய்க.

- எழுத்துகளின் இயல்பொலியைச் சரியாக உச்சரிக்க இடர்ப்படும் மாணவர்களுக்குத் தமிழ் நெடுங்கணக்கு அட்டையைக்காட்டி, எழுத்தொலிகளைச் சரியாக உச்சரிக்க வழிகாட்டுக.

- எழுத்துக்களின் இயல்பொலியை மாணவர் நன்கு உச்சரிக்க உறுதிப்படுத்திய பின்னர் மாற்றொலிகளாக அமையும் சில சொற்களை அறிமுகஞ் செய்க. (மாற் றொலிகள் உள்ள எழுத்துக்கள் கொண்ட பின்வருவன போன்ற சொல்லட்டைகளை பெரிதாக எழுதி முன்கூட்டியே தயாரித்துக் கொள்க.
  ***எடுத்துக்காட்டு:***

| க | ச |
|---|---|
| கம்பி (இயல்பொலி)<br>காகம் (மாற்றொலி)<br>தங்கம் (மாற்றொலி) | சட்டி (இயல்பொலி)<br>பாசறை (மாற்றொலி)<br>பஞ்சம் (மாற்றொலி) |
| **த** | **ப** |
| தகரம் (இயல்பொலி)<br>பதம் (மாற்றொலி)<br>அந்தம் (மாற்றொலி) | பன்னீர் (இயல்பொலி)<br>கோபம் (மாற்றொலி)<br>கம்பம் (மாற்றொலி) |

- குழுவிலுள்ள ஒவ்வொரு மாணவரும் சொற்களில் உள்ள எழுத்துகளின் இயல்பொலி, மாற்றொலி என்பனவற்றைச் சரியாக உச்சரிப்பதை உறுதிப்படுத்துக. இடர்ப்படும் மாணவர்களுக்குச் சரியாக உச்சரித்துக்காட்டுக.

### செயற்பாடு 2

- பின்வருவன போன்ற ஒலி வேறுபாட்டுச் சொற்கள் கொண்ட வாக்கிய அட்டைகளைப் பெரிய எழுத்தில் எழுதிக் காட்சிப்படுத்துக.

- அடைப்புக்குள் உள்ள சொற்களில் ஏற்றவற்றை வைத்து இடைவெளிகளை நிரப்பி ஒவ்வொரு மாணவரையும் உரத்து வாசிக்கச் செய்க.

***எடுத்துக்காட்டு:*** **தொகுதி - ❶**

1. சூரியனது............... உட்புகாத மரங்கள் அடர்ந்த காடு அது. (ஒளி, ஒலி, ஒழி)
2. பாடசாலையின் முதலாவது மணி...................... சில நிமிடங்களின் முன்னர் கேட்டது. (ஒளி, ஒலி, ஒழி)
3. சிங்கத்தின் கர்ச்சனையைக்கேட்ட ஏனைய விலங்குள் ஓடி..................... ந்தன. (ஒளி, ஒலி, ஒழி)
4. காடுகளை .............ப்பதினால் சுற்றுப்புறச் சூழல் பாதிப்படைகின்றது. (அலி, அளி, அழி)
5. இந்தப் பூமியைச் சுற்றி............. மண்டலம் உள்ளது. (வலி, வளி, வழி)
6. சில குழந்தைகளுக்கு அடிக்கடி .................... உண்டாவது வழக்கம். (வலி, வளி, வழி)
7. சுற்றுலாப் பயணி ஒருவர் கண்டிக்குச் செல்லும் ...............எதுவெனக் கேட்டார். (வலி, வளி, வழி)
8. உணவு உண்ட பின்னர் சிறிது தூரம்.................வது உடம்புக்கு நல்லது. (உலவு, உளவு, உழவு)
9. ........... பார்த்தவன் நகரக் காவலரால் பிடிக்கப்பட்டான். (உலவு, உளவு, உழவு)
10. ............. தொழிலுக்கு ஒப்பானதாக வேறெதுவும் இவ்வுலகில் இல்லை. (உலவு, உளவு, உழவு)

**தொகுதி - ❷**

1. ................ மப்பும் மந்தாரமுமாய் இருண்டு காணப்பட்டது. (வாணம், வானம்)
2. சுதந்திர தின விழாவின் போது ................ வேடிக்கைகள் காட்டப்பட்டன. (வான, வாண)
3. அவன் எய்த............... பட்டு மான் கீழே விழுந்தது. (பானம், பாணம்)
4. மோகன் தாகந் தீரக் குளிர்................ குடித்தான். (பானம், பாணம்)
5. ................. உறக்கமின்றிப் பாடுபட்டு உழைத்த காரணத்தால் அவன் இன்று பணக்காரனாக இருக்கிறான். (ஊன், ஊண்)
6. நீண்ட நாட்கள் நோய் நொடியின்றி உயிர்வாழ வேண்டுமானால் ..................... உணவுகளைத் தவிர்த்தல் வேண்டும். (ஊன், ஊண்)
7. மலை நாட்டில்............மூடியிருந்தமையால் கடுங்குளிராக இருந்தது. (பனி, பணி)
8. தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் ................ நிறுத்தம் செய்த காரணத்தால் அதன் வேலைகள் ஸ்தம்பிதமடைந்தன. (வேலை, வேளை)
9. ‘‘தந்தை தாய் ..................’’ என்பது நாம் அனைவரும் கடைப்பிடிக்கவேண்டிய ஒரு முதுமொழி ஆகும். (பேண், பேன்)
10. தலையில்.................. மிகுந்தமையால் அடிக்கடி தலையைச் சொறிய வேண்டியுள்ளது. (பேன், பேண்)

**தொகுதி - ❸**

1. ஆற்றங் ................ யில் ஒரு பெரிய ஆலமரம் உள்ளது. (கறை, கரை)
2. உடையில் இருந்த இரத்தக் ............ அவன் செய்த குற்றத்தைக் காட்டிக்கொடுத்தது. (கறை, கரை)
3. அவர்கள் ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டு மாடியிலிருந்து............................... (இரங்கினர், இறங்கினர்)
4. அவளது நிலைமையைக் கண்டு அங்குள்ள அனைவரும்.................................. (இரங்கினர், இறங்கினர்)

5. காகம் அங்கும் இங்கும் ..................... இரை தேடியது. (பரந்து, பறந்து)
6. மழை வெள்ளம், எங்கும் ....................... பாய்ந்தது. (பரந்து, பறந்து)
7. சிறுவர் கடற்கரையில்............ களைப் பொறுக்கி விளையாடினர். (ஊரி, ஊறி)
8. அவ்விடத்தில் அள்ள அள்ளத் தண்ணீர் ................ க் கொண்டே இருந்தது. (ஊரி, ஊறி)
9. நல்ல கருத்துக்களை ................. ஆர்வம் வேண்டும். (அரிய, அறிய)
10. இன்று கிராமியக் கலைஞர்களைக் காண்பது ................. காரியம் ஆகும். (அரிய, அறிய)

## செயற்பாடு 3

- முன்னைய வகுப்புகளிற் கற்ற உயிர்க்குறிகள் கொண்ட சொற்கள், சொற்றொடர்களை மாணவர்கள் அவதானித்து அனுசரித்து வாசிக்க நினைவூட்டிய பின்னர், எல்லா உயிர்க்குறிகளும் இடம்பெறும் வாக்கியங்கள் பெரியதாக எழுதப்பட்ட அட்டைகளை காட்சிப்படுத்தி உரத்து வாசிக்கச் செய்க.

| உயிர்க்குறிகள் | உயிர்க்குறிகளின் | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| ா | அரவு | கானகம் |
| ி | விசிறி | விழிகள் |
| ீ | விசிறியும் சுழியும் | நீதி |
| ெ | ஒற்றைக்கொம்பு | பெட்டகம் |
| ே | இரட்டைக் கொம்பு | நேரம் |
| ை | சங்கிலிக் கொம்பு | மைதானம் |
| ெ...ா | ஒற்றைக்கொம்பும் அரவும் | கொம்பு |
| ே...ா | இரட்டைக்கொம்பும் அரவும் | கோலம் |
| ꠸ | கீழ்க்கால் | சுதந்திரம் |
| ூ | கீழ்க்காலும் சுழியும் | சூழல் |
| ு | மடக்கேறு | நுட்பம் |
| ூ | மடக்கேறும் அரவும் | நூலகம் |

### வாக்கிய அட்டை

கானகத்தில் மிருகங்கள் நீரின்றி அலைந்தன.
விழிகளை நாம் பாதுகாத்தல் வேண்டும்.
நீதி வழுவாத ஆட்சியையே மக்கள் விரும்புவர்.
பெட்டகத்திற்குள் விலையுயர்ந்த மணிகள் உள்ளன.
''நேரம் பொன் போன்றது'' என்பதை மறவாதே.
மைதானத்தை சுற்றி வேலி அமைக்கப்பட்டுள்ளது.
கொம்பு உள்ள மான்களின் தொகை மிகவும் குறைவு.
கோலத்திலும் பல வகைகள் உண்டு.
மிருகங்கள் சுதந்திரமாக வாழவே விரும்புகின்றன.
சூழலைப் பாதுகாப்பது எமது கடமையாகும்.
நுட்பமான முறையில் சிலை செதுக்கப்பட்டுள்ளது.
நூலகத்திற்குச் செல்வதைப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும்.

- பின்னர் பாட நூலில் உள்ள சில வாக்கியங்களைத் தெரிவுசெய்து வாசிக்கவும், அவற்றில் உள்ள உயிர்க்குறிகளை இனங்காணவும், அவற்றை அனுசரித்து வாசிக்கவும் சந்தர்ப்பம் வழங்குக.

## செயற்பாடு 4

- முன்னைய வகுப்புகளிற் கற்ற நிறுத்தக் குறிகளை மீட்டு அடைப்புக்குறி, இடையிட்ட கோடு என்பன இடம்பெற்ற வாக்கியங்கள், பந்திகள் என்பன எழுதப்பட்ட அட்டைகளைக் காட்சிப்படுத்துக. அக்குறிகளை அறிமுகஞ் செய்து விளக்குக.

***எடுத்துக்காட்டு 1:***

1. **முற்றுப்புள்ளி (.) (FULL STOP)**

   வாக்கிய முடிவைக் காட்டுவது முற்றுப்புள்ளியாகும்.

   **எடுத்துக்காட்டு:**

   ஆதவன் ஓவியம் வரைகிறான்.

   எழுதும் நிலையில் மட்டுமன்றி எழுதியதைப் படிக்கும் நிலையிலும் முற்றுப்புள்ளி மொழியில் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கின்றது. வாசிக்கும்போது ஒவ்வொரு வாக்கியமும் நிறுத்தத்துடன் படிக்கப்பட வேண்டும் என்பதற்கு அடையாளமாகவும் முற்றுப்புள்ளி அமைகின்றது.

2. **காற்புள்ளி (,) (COMMA)**

   சொற்களைத் தனித்தனியாகவோ, அடுக்கடுக்காகவோ பிரிக்கும்போது காற்புள்ளி இடல் வேண்டும்.

   **எடுத்துக்காட்டு:**

   ஆதிகாலத்தில் தரைமார்க்கமாகச் செல்வதற்கு மாட்டுவண்டி, குதிரை வண்டி ஆகியவற்றைப் பயன்படுத்தினர்.

   மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன ஐம்பொறிகளாகும்.

   முகவரி எழுதும் போதும் காற்புள்ளி பயன்படுத்தப்படுகின்றது.

   **எடுத்துக்காட்டு:**

   திரு. அ. அரங்கநாதன்,<br>
   பழமுதிர்சோலை,<br>
   18, பூங்கா வீதி.<br>
   திருகோணமலை.

3. **வினாக்குறி (?) (QUESTION MARK)**

   ஒரு வாக்கியம் வினா வாக்கியமாக அமையின் அதற்கு இறுதியில் 'வினாக்குறி' இடப்பட வேண்டும்.

   **எடுத்துக்காட்டு:**

   இங்கே வந்தவர் யார்?<br>
   இலங்கையின் தேசிய மலர் எது?<br>
   கிராமங்கள் அழகானவையா?

4. **வியப்புக்குறி (!) (EXCLAMATION MARK)**

   இதனை உணர்ச்சிக்குறி என்பர்.

   **எடுத்துக்காட்டு:**

   தலைவா, வருக! வருக!<br>
   ஐயோ! பாவம்! இவன் நல்லவனாயிற்றே!<br>
   அவர் தம் பெருமை என்னே! என்னே!

5. **மேற்கோள்குறி (‘‘ ’’) (QUOTATION MARKS OR INVERTED COMMAS)**
   ஒருவர் கூறிய செற்களை அவர் கூறியவாறே எடுத்தாளும்போது இரட்டை மேற்கோள்குறி இடப்படும்.

   **எடுத்துக்காட்டு:**
   ‘‘அறஞ்செய விரும்பு’’ என்றார் ஔவைப்பாட்டி.
   சங்கர் தனது தாயைப் பார்த்து ‘‘நாளைக்குப் பாடசாலைக்கு வருவீர்கள் தானே’’ என்று கேட்டான்.
   புயற்காற்று ‘‘ஊ....ஊ’’ என இரைந்தது.

**குறிப்பு:** இங்கு தரப்பட்டுள்ள நிறுத்தக்குறிகளில் சில முதன்மைநிலை ஒன்றிலும், வேறு சில முதன்மைநிலை இரண்டில் அறிமுகம் செய்யப்பட்டவை என்பதை நினைவிற் கொள்க.

***எடுத்துக்காட்டு 2:***

1. **அடைப்புக்குறிகள் ( ) (BRACKETS)**
   அடைப்புக்குறிகள் எழுத்துப் பகுதியின் இடையே மேற்கோள்கள் அல்லது விளக்கத்தினை உண்டாக்குவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

**அட்டை - ❶**
அவர்கள் மூவரும் (கண்ணன், இம்ரான், பீற்றர் ஆகியோர்) புலமைப்பரிசிற் பரீட்சையிற் சித்தி பெற்றுள்ளனர்.

**அட்டை - ❷**
முக்கனிகள் (வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம் என்பன) எங்கள் ஊரிலே நிறைய உள்ளன.

***எடுத்துக்காட்டு 3:***

1. **இடையீட்டுக் கோடு (-) (DASH)**
   இடச்சுருக்கம் கருதி ஒரு வரிக்குள் சொல் அமையாத சூழலில் **‘‘-’’** எனும் இடையீட்டுக்கோடு சொல்லைப் பிரித்தெழுதப் பயன்படும்.

**அட்டை - ❶**
அதிபர்கள், ஆசிரியர், மாணவர், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் - எல்லா வகுப்பினரும் வந்திருந்தனர்.

**அட்டை - ❷**
கிரேக்கக் கவிகளுட் தலை சிறந்த காவியங்களை - ஓடிஸி, இலியட் என்பவற்றை - ஹோமர் என்பார் இயற்றினார்.

**குறிப்பு:** மேற்குறிப்பிட்ட நிறுத்தக் குறிகளைப் பற்றி விரிவாக தரம் 6, தரம் 7 வகுப்புக்களில் கற்க முடியும் என்பதை நினைவிற் கொள்க. அடிப்படையான விளக்கங்களை மட்டும் மாணவர்களுக்கு எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

## செயற்பாடு 5

- தெரிவு செய்யப்பட்ட உரைப்பகுதியை உரத்து வாசிக்கும்போது தொனியை உயர்த்தி யும், தாழ்த்தியும் வாசித்துக்காட்டுக. எவ்வகை வாசிப்பினால் மாணவர்களுக்கு விளக்கம் கூடுதலாக இருந்தது என்பது பற்றிக் கலந்துரையாடுக. தொனி வேறு பாட்டுடன் வாசிப்பதே கேட்போருக்குக் கூடுதலான விளக்கம் தரும் என்பதை நிறுவுக.

  மாணவர்களையும் தொனி வேறுபாட்டுடன் உரத்து வாசிக்கச் செய்க.

  மாணவர்களுக்கு வாசிப்பு வேகத்தை அதிகரிப்பதற்கும் ஆலோசனை கூறுக.

  ***எடுத்துக்காட்டு:*** **உரைப்பகுதி**

**உரைப்பகுதி**



காட்டில் சிங்கம் ஒன்று மனிதன் விரித்த வலையில் விழுந்து துடித்தது. ஒரு நுளம்பு பறந்துவந்து சிங்கத்தின் மூக்கில் கடித்தது; சிங்கம் நுளம்பைப் பார்த்துக் கர்ஜித்து மிரட்டியது.

''உனக்கென்ன தைரியம்? சிங்கராஜாவையே கடிக்கு மளவுக்கு தைரியம் உனக்கு எப்படி வந்தது?''
நுளம்பு பவ்வியமாகக் கூறியது.
''மனிதன் விரித்த வலையில் நீ விழுந்து கிடக்கிறாய்! ஆனால் மனிதனோ எனக்குப் பயந்து வலைகட்டி அதற்குள் விழுந்து கிடக்கிறான். உனக்கேன் பயப்பட வேண்டும். நான்? ராஜாவாம் ராஜா! சிறைப்பட்டபின் எதற்கு ராஜாப் பட்டம்?'' சிங்கத்திற்குத் தலை சுற்றியது.

***நன்றி: செம்மலர்***

## கற்றல் - கற்பித்தல் வளங்கள்

- தமிழ் நெடுங்கணக்கு அட்டை
- தமிழ் எழுத்துக்களாலான சொல்லட்டைகள், வாக்கிய அட்டைகள்
- வட எழுத்துக்களைக் கொண்ட சொல்லட்டைகள், வாக்கிய அட்டைகள்
- சொல்லட்டைகள் (மாற்றொலிகள் உள்ள எழுத்துகள்)
- லகர, ளகர, ழகர வேறுபாட்டைக் காட்டும் வாக்கியங்கள்
- ணகர, னகர வேறுபாட்டைக் காட்டும் வாக்கிங்கள்
- ரகர, றகர வேறுபாட்டைக் காட்டும் வாக்கிங்கள்
- உயிர்க்குறிகள் கொண்ட சொற்கள், வாக்கிய அட்டைகள்
- நிறுத்தக்குறிகள் - மீட்டல் - வாக்கியங்கள், உரைப்பகுதிகள் அடைப்புக்குறி, இடையிட்ட கோடு - அறிமுகப்படுத்தும் வாக்கியங்கள்

## கணிப்பீடு

* எழுத்துக்களின் இயல்பொலி, மாற்றொலி என்பன புலப்பட உரத்து வாசித்தல்
* ஒலிவேறுபாடுகளை அனுசரித்து வாசித்தல்
* உயிர்க்குறிகளை அனுசரித்து வாசித்தல்
* நிறுத்தக்குறிகளை அனுசரித்து வாசித்தல்
* ஏற்ற தொனி வேறுபாடுகளுடனும் வேகத்துடனும் வாசித்தல்

என்பனவற்றைக் கணிப்பிடுக.

## தேர்ச்சி மட்டம்

## 3.1.2 கிரகித்தலுக்காக வாசிப்பார்.

## உள்ளடக்கம்

✓ வாசிப்புப் பழக்கத்தை விருத்தி செய்தல்

- **உரத்து வாசித்தல்**
    - பாடநூல், துணை வாசிப்பு நூல்கள்
    - அறிவித்தல்கள்
    - அறிவுறுத்தல்கள்
    - துண்டுப்பிரசுரங்கள்
    - சுவரொட்டிகள்
    - விளம்பரங்கள்

- **மௌனமாக வாசித்தல்**
    - பாடநூல், துணை வாசிப்பு நூல்கள்
    - பல்வேறு பகுதிகள்

✓ **கருத்தூன்றி வாசித்தல்**

- விடயத்திற்கும் தலைப்புக்கும் இடையிலான தொடர்பை இனங்காணுதல்
- பிரதான கருத்தை இனங்காணுதல்
- படிப்பினைகள், விழுமியங்கள் என்பவற்றை உய்த்தறிதல்

✓ **வாசிப்பு வேகத்தை விருத்தி செய்தல்**

- இலத்திரனியல் ஊடகங்களில் வெளிவரும் செய்திகள்/தகவல்கள் என்பவற்றை வாசித்தல்

### உரத்து வாசித்தலின் நல்லியல்புகள்

- விரைவாக வாசித்தல்
- நிறுத்தக்குறிகளை அனுசரித்து வாசித்தல்
- தெளிவாக வாசித்தல்
- தெளிவான ஒலிப்பு
- திருந்திய உச்சரிப்பு
- சரியான குரல் ஏற்றத்தாழ்வு
- இயற்கையான குரல்
- கண்பாய்ச்சல் சரியான வரிக்குச் செல்லுதல்
- விரைவான கண் நகர்ச்சி
- முழுச் சொற்களாகவே சொற் களைக் காணல்
- வகுப்பிற்கேற்ற நடுநிலையான குரல்

### வாசிப்பின் வேகத்தை உண்டாக்கும் வழிகள்

- கண் நிறுத்தம்
- கண் பாய்ச்சல்
- கண்சான் (Eye span)
- பிற்போக்கு (Regression)
- அமரும் நிலையும் வெளிச்சமும்

### மௌன வாசிப்பின் முக்கிய கூறுகள்

- உறுப்புககளின் அசைவின்மை
- விரைவான கண் நகர்ச்சி
- நேர்மையான கண் பாய்ச்சல்
- நல்ல கண்பார்வை
- பொருளுணரும் ஆற்றல்
- சொற்களஞ்சியப் பெருக்கம்

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

- வாக்கியங்களை அல்லது பந்தியை அல்லது பாடநூலில் உள்ள பகுதியைத் தெளிவாகவும், சரியான உச்சரிப்புடனும், உரத்து வாசிக்க மாணவரை வழிப்படுத்துக.

- துணை வாசிப்பு நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றில் உள்ள மொழியறிவு விருத்திக்குரிய பகுதிகளை ஏனையோருக்கும் பயன்படும் வகையில் உரத்து வாசிக்கும் பழக்கத்தை விருத்தி செய்யும் சந்தர்ப்பங்களைச் சகல மாணவர்க்கும் வழங்குக.

- அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள், அறிக்கைகள் என்பவற்றை உரிய வேகத்தோடும், தொனி வேறுபாட்டுடனும் ஏனையோருக்கு நன்கு விளங்கும் வகையில் மாணவரை வாசிக்க நெறிப்படுத்துக.

- வகுப்புக்கு வெளியிலும் உரத்து வாசிப்பதற்கு துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள், விளம்பரங்கள் என்பன சிறந்த சாதனங்களாக அமைவதை எடுத்துக்கூறி அவை கிடைக்கும் சந்தர்ப்பங்களில் அவற்றின் பொருள்களைக் கிரகிப்பதற்காகப் பிழையின்றித் தெளிவாக வாசிக்கச் செய்க.

- உரத்து வாசிப்புடன், மௌனமாக வாசிக்கவும் மாணவர்களை வழிப்படுத்துக. மௌன வாசிப்பின் மூலமே விரைவாகவும் அதிக அளவிலும் மாணவர்களால் விடயங்களைக் கிரகிக்க முடியும் என்பதை எடுத்துக்கூறுக. கண் வழி, மனம் லயித்து வாசிப்பதால், உரத்து வாசிப்பிலே பயன்படும் உறுப்புகள் இங்கு பயன்படுத்தப்படுவதில்லை என்பதையும் மாணவர்க்கு விளக்குக. பரீட்சை நிலையங்கள், நூலகம் போன்ற இடங்களில் மௌன வாசிப்பே அவசியமாகிறது என்பதையும் எடுத்துக் கூறுக.

- வாரத்திற் குறைந்தது ஒரு முறையாவது பாடநூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஏனைய வாசிப்புப் பகுதிகள் என்பவற்றை மாணவர் மௌனமாக வாசிக்கவும், அவற்றைக் கிரகிக்கவும் சந்தர்ப்பம் வழங்குக. நூலகத்திற்குச் சென்று வாசிக்கவும் வழிப்படுத்துக.

- பொருளுணர்ந்து வாசிப்பதற்கு உதவும் பொருட்டு மாணவர்கள் பின்வரும் உத்திகளைக் கையாளப் போதிய வாய்ப்பும் வசதியும் வழங்குக.
  - விடயத்துக்கும் தலைப்புக்கும் இடையிலான தொடர்பைக் கண்டுபிடித்தல்
  - கூறப்பட்ட கருத்துகளுள் பிரதான கருத்து எதுவென இனங்காணல்
  - வாசித்த பகுதிகள் மூலம் உணர்த்தப்படும் படிப்பினைகள், விழுமியக் கருத்துகள் என்பவற்றை அனுமானித்தறிதல் (உய்த்தறிதல்)

  இவ்வுத்திகளைக் கையாள்வதில் இடர்ப்படும் மாணவர்க்குத் துணை புரிக.

- மாணவர்கள் முன்னைய வகுப்புகளில் வாசித்துக் கிரகித்ததை விட, தரம் ஐந்தில் வாசிக்கும் வேகத்தையும் கிரகிக்கும் திறனையும் விருத்தி செய்வதற்கு உதவும் வகையில் மேலதிகமான வாசிப்புப் பயிற்சிகள் வழங்குக.

- இலத்திரனியல் ஊடகங்களான தொலைக்காட்சி, கணினி, இணையத்தளம் என்பவற்றில் வரும் தகவல்களையும் செய்திகளையும் வாசிக்க வழிப்படுத்துக.

## செயற்பாடுகள்

### செயற்பாடு 1 (கிரகித்தலுக்காக வாசித்தல்)

- பாடநூல்/ துணை வாசிப்பு நூல்/ ஏதாவது ஒரு உரைப்பகுதி என்பவற்றில் ஒரு பந்தியை உரத்து வாசிக்கவும், கிரகித்தல் வினாக்களுக்கு நான்கு சொற்களுக்குக் குறையாத வாக்கியங்களில் விடை கூறவும் துணை புரிக.

***எடுத்துக்காட்டு:*** **பந்தி**



ஊக்கமும் விடா முயற்சியும் வெற்றிக்கு ஏணிப்படிகள். இன்று நம் வீடுகளில் மின் விளக்குகள் எரிகின்றன. ஒன்றரை நூற்றாண்டுக்கு முன் இந்த மின்விளக்குகள் நம்மிடையே இல்லை. தோமஸ் அல்வா எடிசன் என்பவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மின்விளக்கைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சி செய்தார். தமது முதல் முயற்சியிலே தோல்வி கண்டார். சளைக்காது தனது ஆய்வைத் தொடர்ந்தார். பல முறைகள் தோல்வியைக் கண்ட அவர் இறுதியிலே தம் ஆராய்ச்சியில் வெற்றி கண்டார். மின் விளக்கு எரியத் தொடங்கியது. ''முயற்சி திருவினையாக்கும்'' என்பதற்கு இணங்க வெற்றி பெற்றார். இன்றும் வீடுகளிலே மின் விளக்குகள் எரிய முன்னோடியாகத் திகழ்ந்த அறிவியல் மேதை தோமஸ் அல்வா எடிசன் ஆவார்.




**கிரகித்தல் வினாக்கள்**

1. யாருடைய சாதனை பற்றி இங்கு கூறப்பட்டுள்ளது?
2. வெற்றிக்கு ஏணிப்படிகள் எவை?
3. மின்விளக்குக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சி எப்போது தொடங்கப்பட்டது?
4. பல முறைகள் தோல்வியைக் கண்டாலும் இறுதியில் வெற்றி காண உதவியது எது?
5. இங்கு இடம்பெற்ற மேற்கோளாக அமையும் கூற்று யாது?

### செயற்பாடு 2

- மாணவர்கள் வாசிப்பதற்கேற்ற அறிவித்தல், அறிவுறுத்தல், அறிக்கை ஆகியவற்றை எழுதி அட்டைகளில் ஒட்டித் தயார்ப்படுத்துக.
மாணவர்களைச் சிறிய குழுக்களாக்குக. குழு ஒவ்வொன்றும் அவற்றை வாசிக்கச் செய்க.

***எடுத்துக்காட்டு:*** **அறிவித்தல்**



*நீர் விநியோக வடிகாலமைப்பு அமைச்சு*

பாரிய கொழும்பு பிரதேசத்திற்கு

நீர் விநியோகத் தடை

தேசிய நீர் விநியோக வடிகாலமைப்புச் சபை அம்பத்தலை நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் அத்தியவசிய வேலைகளுக்காக கீழே காட்டப்பட்ட மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை, பகுதிகளின் 2008 மே 31 சனிக்கிழமை மு. ப. 9.00 மணி முதல் 2008, ஜூன் 01ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு. ப. 3.00 மணி வரை நீர் விநியோகத் தடையை அறிவித்துள்ளது.

பாதிக்கப்படும் பிரதேசங்கள்

கொழும்பு மாநகர சபை எல்லைகள்
பேலியகொட நகர சபை எல்லைகள்
வத்தளை/மாபோல நகர சபை எல்லைகள்
ஜா எல நகர சபை மற்றும் பிரதேச சபை எல்லைகள்
களனி பிரதேச சபை எல்லைகள்
வத்தளை பிரதேச சபை எல்லைகள்
மஹர பிரதேச சபை எல்லைகள்
பியகம பிரதேச சபை எல்லைகள்
பியகம ஏற்றுமதி வலையம்
கோட்டே மாநகர சபை எல்லைகள்

*நன்றி: தினகரன்*

## வாய்மொழி வினாக்கள்

1. எந்த நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் அவசியத் தேவை களுக்காக நீர் விநியோகத்தடை அறிவிக்கப்பட் டுள்ளது?
3. எந்தக்காலப்பகுதிக்குள் நீர் விநியோகம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
4. நீர் விநியோகத்தடையில் பாதிக்கப்படும் மாநகர சபை எல்லைகள் எவை?
5. நீர் விநியோகத்தடையால் பாதிக்கப்படும் பிரதேச சபை எல்லைகள் எவை?
6. நீர் விநியோகத்தடையால் பாதிக்கப்படும் நகர சபை எல்லைகள் எவை?
7. நீர் விநியோகத்தடை அறிவித்தல் யாரால் விடுக்கப்பட்டுள்ளது?

**அறிவுறுத்தல்**

### கீழே தரப்பட்டுள்ள அறிவுறுத்தலைப் பின் பற்றி பலூன் இயந்திரத்தை உருவாக்குங்கள்.

முதலில் ஒரு பொம்மைக்காரர், ஒரு பலூன், ஒரு காட்போட்துண்டு செல்லோரேப், சிறிய கத்தி ஆகியவற்றை எடுத்துக்கொள்ளுங்கள்.



1. கத்தியைக்கொண்டு காட்போட்டில் ஓர் ஓரமாகத் துளையிடுங்கள்.
2. துளையிட்ட பகுதி, மேற்புறமாக இருக்கும்படி வைத்து அந்த காட்போட்டை உங்கள் பொம்மைக் காரரின் பின் பகுதியில் ‘செல்லோரேப்’ கொண்டு அசையாமல் ஒட்டுங்கள்.



3. அதன் பின்னர், காட்போட் துளைக்குள் கார் பக்கமிருந்து பலூனை நுழையுங்கள். பலூனின் வாய்ப்பகுதி வெளிப்புறம் இருத்தல் வேண்டும்.
4. பின்னர் பலூனை ஊதி, அதன் வாய்ப்பகுதி யைக் கைகளால் அழுத்திப் பிடித்துக் கொள்ளுங்கள். காரைத் தரையில் வைத்து பலூனைப் பிடித்திருக்கும் கையை எடுங்கள்.

**குறிப்பு:** கூறப்பட்ட அறிவுறுத்தல்படி செய்து முடித்துவிட்டால் கார் முன்புறம் சீறிக் கொண்டு செல்லும். அவ்வாறு செல்லவில்லையாயின் அறிவித்தலை வாசித்து மாணவர்கள் சரியாகத் துலங்கவில்லை என்றுதான் தீர்மானிக்க வேண்டும். மீண்டும் அறிவுறுத்தலைப் பின்பற்றி பலூன் இயந்திரத்தை உருவாக்க சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.

- குழுக்களைச் சேர்ந்த மாணவர்கள் அவை ஒவ்வொன்றையும் வாசித்த பின், சொந்த மொழிடையே கூற வழிப்படுத்துக.

## செயற்பாடு 3

- துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள், விளம்பரங்கள் என்பவற்றின் மாதிரிகளை மாணவர்க்குக் காட்சிப்படுத்துக. அவற்றில் மாணவர்களுக்குப் பொருத்தமான துண்டுப்பிரசுரம், சுவரொட்டி, விளம்பரம் என்பவற்றைச் செயலட்டைகளாகத் தயார்ப் படுத்திக் குழுச் செயற்பாடாக வாசிக்கச் செய்க.

***எடுத்துக்காட்டு:*** **துண்டுப்பிரசுரம்**

**பிள்ளைகளே!**

**கண்களைப் பாதுகாப்பதில்**
**கவனஞ் செலுத்துகின்றீர்களா?**



**சில அறிவுரைகள்...**

**நமது கண்களில் தூசி விழுந்ததும்**

- எந்தக் காரணம் கொண்டும் கண்களைக் கசக்காதீர்கள். கண்பார்வை பறிபோக நீங்களே காரணமாகிவிடுவீர்கள்.
- எந்தக் காரணம் கொண்டும் எந்தப் பொருளையாகவது கூர்ந்து அவதானிக்கும் போது கண்களில் கண்ணீர் வந்தால் உடனே அச்செயலை நிறுத்தி விடுங்கள்.
- வெளிச்சம் குறைவாக இருக்கும் போது வாசிக்கும் பழக்கம் பார்வை கோளாறை உண்டாகக் காரணமாகலாம்.
- வாகனங்களில் பயணம் செய்யும்போது வாசிக்கக்கூடாது; கண்கள் சிரமப்படக் கூடும்; இதனால் பார்வைக் கோளாறு ஏற்பட வாய்ப்பு உண்டு.
- புத்தகம் வாசிக்கும்போது எப்போதுமே கண்களுக்குக் குறைந்தது ஒரு அடி தூரத்தில் புத்தகத்தை வைத்து வாசிப்பதே நல்லது.

இதுபோல,

**சிறு சிறு விடயங்களிற்கூட கவனமாக இருந்தால் தான் கண்களைக் காப்பாற்ற முடியும்.**

சிறு வயதில் இருந்தே நல்ல அறிவுரைகளைப் பின்பற்றுவோம்!

**கண்களைப் பாதுகாப்போம்!**

**- கண்களைப்பாதுகாக்கும் நண்பர்கள் அமைப்பு**

**குறிப்பு:** துண்டுப்பிரசுரத்தில் உள்ள முக்கிய விடயங்களை வாசித்துக் கிரகித்துக் கொண்டார்களா என அறிய அவற்றைத் தமது மொழிநடையில் ஏனை யோருக்குக் கூற வழிப்படுத்துக.

**சுவரொட்டி**

**வாருங்கள்! அறிவைத் தேடுங்கள்.**
**கொழும்பு சர்வதேச புத்தகக்கண்காட்சி - 2008**



**காலம் :**
**செப்ரெம்பர் 20 முதல்**
**செப்ரெம்பர் 28 வரை**

**இடம்:**
**பண்டாரநாயக்க சர்வதேச**
**மாநாட்டு மண்டபம் - கொழும்பு 07**

***அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.***

**- புத்தக வியாபாரிகள் சங்கம்**

**விளம்பரம்**

**சிறுவர் இலக்கியத்தில்**
**அடுத்த பாய்ச்சல்...**

**அப்பா!**
**என்ன மகனே?**
**'முத்துக்கள்'** சஞ்சிகையைப் படித்து முடித்துவிட்டேன்.
அடுத்த இதழ் வெளிவந்துவிட்டதா அப்பா!
ஆம், மகனே,
அதில் பல புதிய அம்சங்கள் உள்ளன.
கூறுங்கள் அப்பா!
கூறுகிறேன் கேள்!

- ஒலிம்பிக் தொடர்பான விறுவிறுப்பான தகவல்கள்
- ஒலிம்பிக் போட்டிகளின் வண்ணப்படங்கள்
- ஜப்பானில் 'ரோபோ' திருவிழா பற்றி ஆச்சரியமான தகவல்கள்
- கதைகள், புதிர்கள்
- இரசிக்கும் தகவல்கள்

இன்னும் பல சுவையான அம்சங்கள் உள்ளன.
அப்பா, உடனே எனக்கு வாங்கித் தாருங்கள்

**வெளிவந்துவிட்டது**
**முத்துக்கள்**

**சிறுவர்களின் குதூகலக் கனவை நனவாக்கும் சஞ்சிகை இது.**

- ஒவ்வொன்றிலும் கூறப்பட்டவற்றைச் சுருக்கிக்கூற மாணவரை நெறிப்படுத்துக.

## செயற்பாடு 4

- கிரகித்தலுக்காக வாசிப்பதற்கு உரத்து வாசிப்பதை விட மௌனமாக வாசிப்பதோடு சிறந்தது எனக் கூறுக.

- பாடநூல், துணை வாசிப்பு நூல், ஏனைய வாசிப்புப் பகுதிகளுள் மாணவர்களுக்கு வாசிப்புக்குக் கொடுக்கக்கூடிய உரைப்பகுதிகளைத் தெரிவுசெய்து செயலட்டை களாகத் தயார்ப்படுத்துக. மாணவர்களுக்குக் கொடுத்த செயலட்டைகளை நேர ஒதுக்கீட்டுக்கமைவாக வாசிக்கச் செய்க. மாணவர்கள் வாசித்ததைக் கிரகித்துள்ளார் களா என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு எழுமாற்றாக மாணவர்களிடம் வினாக் களைக் கேட்டு, விடையளிக்கச் செய்க. இடர்ப்படும் மாணவருக்குத் துணை புரிக.

***எடுத்துக்காட்டு:*** **உரைப்பகுதி**

| |
|---|
| மழையைப் பெறுவதற்கு மனிதனுக்குக் காடுகள் அவசியமாகின்றன. விலங்குகள் உயிர்வாழ்வதற்கும் காடுகள் தேவைப்படுகின்றன. நாம் வாழும் சூழலில் காடுகள் முக்கிய அங்கமாகக் கருதப்படுகின்றன. மனிதன் விவசாயத் தேவைகளுக்காகக் காடுகளை அழிக்கின்றான். சனத்தொகை அதிகரிப்புக் காரணமாக வதிவிடத் தேவையும் அதிகரிக்கின்றது. அதனால் காடுகள் மேலும் மேலும் அழிக்கப்பட்டு, குடியேற்றங்கள் அமைக்கப்படுகின்றன. தனக்குத் தேவையான பல்வேறு பொருட்களைத் தயாரிப்பதற்காகவும் மனிதன் காடுகளை அழிக்கின்றான். இதனால் விலங்குகள் தம் இருப்பிடங்களை இழந்து வருகின்றன. காடழிப்புக் காரணமாகக் காலநிலையில் மாற்றம் ஏற்பட்டு, மனிதர்கள் நீர்ப் பற்றாக் குறையை எதிர்நோக்கு கின்றனர். காடுகளை அழிப்பது நம்மை நாமே அழித்துக் கொள்வதற்குச் சமமாகும். எனவே நாம் காடுகளைப் பாதுகாக்க வேண்டும். |

## செயற்பாடு 5

- மாணவர்கள் பாடநூலில் உள்ள பகுதிகளைக் கருத்தூன்றி வாசிக்க வேண்டும் என்பதைத் தெளிவுறுத்துக. கருத்தூன்றி வாசிப்பதற்காக பின்வருவன போன்ற செயலட்டைகளை மாணவர்களுக்குத் தயாரித்து வழங்குக. அச்செயலட்டைகளை மாணவர்கள் பலமுறை வாசிக்க வழிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு:***

**பழங்கள்**

| |
|---|
| பழங்களில் பல வகை உண்டு. மா, பலா, வாழை ஆகிய முக்கனிகள் எமது நாட்டில் புகழ் பெற்றவை. அன்னாசி, தோடம்பழம், தக்காளி, திராட்சை, எலுமிச்சை, பப்பாளி, மாதுளை, முலாம்பழம், தர்பூசணிப்பழம், விளாம்பழம் முதலிய பழங்களும் உள்ளன. பொதுவாகப் பழங்கள் எல்லாம் கீரைகளின் குணம் உடையன. கீரைகள் இரத்தத்தைத் தூய்மையாக வைப்பது போலப் பழங்களும் இரத்தத்தைத் தூய்மை செய்கின்றன. அது மட்டுமன்றி உணவைச் சமிபாடடையச் செய்வதில் உதவி புரிகின்றன. எனவே உணவுடன் பழங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு சேர்த்துக் கொண்டால் உடல் ஆரோக்கியத்துடன் நோயின்றி நீண்ட நாட்கள் வாழ முடியும். |

- வாசித்த பின் பின்வருவன போன்ற வினாக்களுக்கு மாணவர் விடையளிக்கத் துணை புரிக.
  - விடயம் எதை பற்றிக் கூறுகிறது? (இதற்கு என்ன தலைப்புக் கொடுக்கலாம்.)
  - தலைப்புக் கொடுக்கப்பட்டிருப்பின், தலைப்புக்கும் தரப்பட்ட விடயத்துக்கும் உள்ள தொடர்பு எவ்வாறானது?
  - வாசித்த பகுதியின் பிரதான கருத்து எது?
  - வாசித்த பகுதி என்ன படிப்பினையை உணர்த்துகிறது?

## செயற்பாடு 6

- பல்வேறு பந்திகளைச் செயலட்டைகளாகத் தயார்ப்படுத்துக. குறிப்பிட்ட ஒரேயளவு நேரத்துக்குள், குழுச் செயற்பாடாக அப்பந்திகளை வாசிக்க வழிப்படுத்துக. வாசிப்பு வேகம் அதிகரித்தாலும் கிரகிக்கும் திறன் குறையாதிருப்பதை உறுதிப்படுத்துக. வாசிப்பு வேகத்தை அதிகரிப்பதில் இடர்ப்படுவோரை இனங்கண்டு அவர்களுக்கு மேலதிக வாசிப்புப் பயிற்சி வழங்குக.

***எடுத்துக்காட்டு:***

**பந்தி - 1**

புல்வெளிக்கு அப்பால் ஓர் அடர்ந்த காடு இருந்தது. காட்டின் மத்தியில் அழகான ஏரி. ஏரிக்கரையில் இருந்த புதர்களில் ஒரு வாத்து முட்டைகளை இட்டு அடைகாத்துக் கொண்டிருந்தது. மற்ற வாத்துக்கள் வாய்க்காலில் சுகமாக நீந்திக் கொண்டிருந்தன. அந்த வாத்திற்கு மற்றைய வாத்துக்களுடன் அரட்டை அடிக்க விருப்பமில்லை.

**பந்தி - 2**

‘‘உங்களுக்குப் பாராட்டு விழா நடத்திப் பரிசு தர இருக்கின்றோம்; அவசியம் வர வேண்டும்.’’ என்று ஒருவரிடம் சொல்கிறார்கள். ‘‘பரிசு வாங்கிக்கொள்கிறேன்; பாராட்டு விழா நடத்த வேண்டாம்; விழாவுக்காக ஆகும் செலவுப் பணத்தையும் என் கையில் கொடுத்து விடுங்கள்.’’ என்று அவர் பதில் சொன்னால் எப்படி இருக்கும்..? ‘‘இவ்வளவு அற்பமாகவா நடந்து கொள்வார்கள்.’’ என்று சலிப்பாகவும் வெறுப்பாகவும் இருக்கும் தானே...! ஆனால் அப்படிச் சொல்லி, அதனால் இன்னும் பெருமை பெற்றவர், அன்னை தெராசாவாக மட்டுமே இருக்க முடியும். அவருடைய தன்னலமற்ற சேவையைப் பாராட்டி 1979ஆம் ஆண்டு அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.


**பந்தி - 3**

கருத்துப் பரிமாற்றத்திற்குத் தகவல் தொடர்பு மிக அவசியமாகும். எந்த அறிவியல் வளர்ச்சியும் இல்லாத காலங்களில் வேலையாட்கள் தான் செய்தி கொண்டு சொல்லப் பயன்படுத்தப்பட்டார்கள். அவர்கள் நடந்து சென்றார்கள். அல்லது குதிரையில் பயணித்தார்கள். அரசனுக்கு அரசன் ஓலையில் எழுதி அனுப்பும் செய்தியைக்கொண்டு சென்றவர்கள் ‘ஓலை தாங்கிகள்’’ என்று அழைக்கப்பட்டனர். மிகத் தொலைவான இடங்களுக்கு புறாக்கள் மூலம் செய்திகள் அனுப்பப்பட்டன.

## செயற்பாடு 7

▣ இலத்திரனியல் ஊடக வசதிகள் இருப்பின், அவற்றில் வெளிவரும் செய்திகள்/ தகவல்கள் என்பவற்றை மாணவர் விரைவாக வாசிக்கச் செய்க.

***எடுத்துக்காட்டு:*** **இணையத்தளத்திலிருந்து**



BBC TAMIL.com

30 ஜூலை, 2008 - பிரசுர நேரம் 13:04 ஜிஎம்டி

**நாசா - அரைச் சதம்**

**அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு நிலையம் துவக்கப்பட்டு 50 ஆண்டுகள் கடந்திருப்பது குறித்த சிறப்புப் பெட்டகம்.**

▶ ஒலி பெட்டக நிகழ்ச்சி

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உலக நாடுகள் ரஷ்யாவின் பக்கமாகவும், அமெரிக்காவின் பக்கமாகவும் இரண்டாகப் பிளவுபட்டு நின்ற நிலையில், இந்த இரு நாடுகளும் தங்கள் வல்லமையை பறைசாற்ற இராணுவத்தையும், தொழில்நுட்பத்தையும் உபகரணங்களாகப் பயன்படுத்தின.

இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையேயான போட்டிகள் விண்வெளியிலும் பெரிய அளவில் வெளிப்பட்டன.

ஸ்புட்னிக் 1 என்று பெயரிடப்பட்ட முதல் செயற்கைக் கோளை அப்போதைய சோவியத் யூனியன் 1957ஆம் ஆண்டு அக்டோபர் 4ஆம் திகதி விண்ணில் ஏவியது.

விண்வெளி முயற்சிகளில் முன்னணியில் நாசா திகழ்கிறது

நவம்பர் 3ஆம் திகதி ஸ்புட்னிக் 2 விண்ணில் ஏவப்பட்டது. ஆனால் செயற்கைக் கோளை விண்ணில் செலுத்த அமெரிக்கா எடுத்த முதல் முயற்சி தோல்வியில் முடிந்தது.

1957 ஆம் ஆண்டின் டிசம்பர் 6 ஆம் திகதியன்று அமெரிக்காவின் செயற்கைக் கோள் ராக்கெட் ஏவுதளத்திலேயே வெடித்து சிதறியது.

இந்த நிலையில் 1958ஆம் ஆண்டு ஜூலை 29ஆம் திகதியன்று அப்போதைய அமெரிக்க அதிபராக இருந்த ஐசன்ஹோவர் நேஷனல் ஏரோநாடிக்ஸ் அண்ட் ஸ்பேஸ் ஆக்ட் என்ற சட்டத்தை கைச்சாத்திட்டார்.

இந்த சட்டத்தினால் உருவாக்கப்பட்ட அமைப்பான நாசா அதன்பிறகு பல விண்வெளி சாதனைகளுக்கு பொறுப்பானது.

இவை குறித்த மேலதிக தகவல்களை நேயர்கள் கேட்கலாம்.

***நன்றி: www.BBCTamil.com***

## கற்றல் - கற்பித்தல் வளங்கள்

- பாடநூல், துணை வாசிப்பு நூல் - தெரிவுசெய்த பந்திகள், கிரகித்தல் வினாக்கள்
- அறிவித்தல்கள்
- அறிவுறுத்தல்கள்
- அறிக்கைகள்
- துண்டுப்பிரசுரம்
- சுவரொட்டி
- விளம்பரம்
- மௌன வாசிப்புக்குரிய செயலட்டைகள்
- கருத்தூன்றி வாசிப்பதற்கான செயலட்டைகள்
- பல்வேறு வகையான பந்திகள்
- இலத்திரனியல் ஊடகங்கள் (தொலைக்காட்சி, கணினி முதலியன)

## கணிப்பீடு

- ✳ உரத்து வாசித்தல்
- ✳ மௌனமாக வாசித்தல்
- ✳ கருத்தூன்றி வாசித்தல்
- ✳ கிரகித்தல் வினாக்களுக்கு விடை கூறுதல்
- ✳ வாசிப்பு வேகத்தை அதிகரித்தல்

என்பனவற்றைக் கணிப்பிடுக.

## தேர்ச்சி மட்டம்

### 3.1.3 சொற்களஞ்சிய விருத்திக்காக வாசிப்பார்.

### உள்ளடக்கம்

- ✓ புதிய சொற்கள்
- ✓ மரபுச் சொற்கள்
- ✓ மரபுத் தொடர்கள்
- ✓ சுருக்கக் குறியீடுகள் இடப்பட்ட பகுதிகள்
- ✓ குறியீடுகள்
- ✓ பழமொழிகள்
- ✓ பத்திரிகைகள்/ சஞ்சிகைகள்
- ✓ ஏனைய பாடநூல்கள்
- ✓ சிறுவர் அறிவியல் நூல்கள்
- ✓ அகராதி
- ✓ சிறுவர் கலைக்களஞ்சியம்

**சொற்களஞ்சியம்**

- மொழி கற்றலில் சொற்களஞ்சியப் பெருக்கம் ஒரு முக்கிய கூறாகும்.
- மாணவர்களின் சொற்களஞ்சியத்திலுள்ள சொற்களை இருவகையாகப் பிரிக்கலாம்.
  1. மாணவரது பேச்சில் நாள்தோறும் வழங்கும் சொற்கள்
  2. நாள்தோறும் வழங்காத சொற்கள்.
- மாணவர்களுக்கு அகராதியைப் புரட்டுதல், அருஞ்சொல் வரிசையைப் பார்த்தல் ஆகியவற்றில் பழக்கத்தை உண்டாக்கி விட்டால் தாமாகப் பொருளுணர்ந்து படிக்கும் பழக்கம் வளரும்.

### கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

- ➲ உரைப்பகுதிகள், பாடல்கள் என்பவற்றை வாசித்து, மாணவர்கள் தம் சொல் வளத்தைப் பெருக்கவும் அச்சொற்களஞ்சிய விருத்தியின் மூலம் மாணவரின் மொழியாற்றலை மேம்படுத்தவும் ஒழுங்கு செய்க.

- ➲ மாணவர்கள் வாசிக்கும்போது அவர்களுக்குப் பொருள் விளங்காமல் அமையும் புதிய சொற்களைக் குறித்துக் கொள்ளவும், அப்புதிய சொற்களைக் குறித்துக் கொள்ளவும், அப்புதிய சொற்களின் பொருளை அறியவும், அவற்றை வாக்கியங்களில் ஆக்கி வாசிக்கவும் எழுதவும் வழிப்படுத்துக.

- ➲ முன்னைய வகுப்புகளில் மாணவர்கள் கற்ற மரபுச் சொற்களை நினைவு கூரச் செய்து, அவ்வாறான வேறு மரபுச் சொற்கள் அமைந்த உரைப்பகுதிகளை மாணவர்கள் வாசிக்கவும், அம்மரபுச் சொற்கள் பற்றிய விளக்கம் பெறவும் வழிகாட்டுக.

- ➲ குறிப்புப் பொருள் உணர்த்தும் மரபுத்தொடர்கள் அடங்கிய உரைப்பகுதிகளை வாசிக்கச்செய்து அம்மரபுத் தொடர்கள் உணர்த்தும் பொருளை விளங்கிக்கொள்ளவும், அத்தகைய மரபுத்தொடர்கள் சிலவற்றைப் பட்டியற்படுத்தவும் ஆர்வமூட்டுக.

- ➲ சுருக்கக் குறியீடுகளைால் உணர்த்தப்படும் சொற்கள், சொற்றொடர்கள் என்பன அமைந்த உரைப்பகுதிகளை வாசித்து, அவ்வாறான சுருக்கக் குறியீடுகள் உணர்த்தும் சொற்கள் எவையென விளக்குக.

- ➲ பொது இடங்களில் உள்ள குறியீடுகளை விளங்கிக் கருத்தை உள்வாங்கி வாசிக்க வழிப்படுத்துக.

- முன்னைய வகுப்புகளிலே கற்ற பழமொழிகளை நினைவுகூறச் செய்து, வேறு பழமொழிகள் இடம்பெறும் உரைப்பகுதிகளை மாணவர் வாசிக்கத் துணைபுரிக.

- சொற்களஞ்சிய விருத்திக்காகவும், அறிவு மேம்பாட்டிற்காகவும் மாணவர்கள் தினமும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றை வாசிப்பதற்கு வசதியாக, வாசிப்பு மூலை, வகுப்பறை நூலகம், பாடசாலை நூலகம், பொது நூலகம் என்பனவற்றினைப் பயன்படுத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்க.

- ஏனைய பாடங்களில் படித்த சொற்கள், சொற்றொடர்கள் என்பவற்றைக் குறிக்கவும் அவற்றின் பொருள் விளங்கவும் ஆவன செய்க.

- சிறுவர் அறிவியல் நூல்களைப் பாடசாலைக்கு தருவித்து. அவற்றில் உள்ள அறிவியல் சார்ந்த சொற்களஞ்சியத்தை விருத்தி செய்ய மாணவரை வழிப்படுத்துக.

- சொற்களுக்குரிய பொருளை மாணவர் தாமாகவே தேடி அறியவும், அவை தொடர் பான மேலதிக தகவல்களைப் பெறவும், அகராதிகள் கலைக்களஞ்சியங்கள் என்பவற்றைப் பாடசாலை நூலகத்திற் பெற்றுப் பயன்படுத்தவும் நெறிப்படுத்துக.

- முன்னைய வகுப்புகளில் மாணவர்கள் கற்ற மரபுச் சொற்களை நினைவு கூரச் செய்து, அவ்வாறான வேறு மரபுச் சொற்கள் அமைந்த உரைப்பகுதிகளை மாணவர்கள் வாசிக்கவும், அம்மரபுச் சொற்கள் பற்றிய விளக்கம் பெறவும் வழிகாட்டுக.

- குறிப்புப் பொருள் உணர்த்தும் மரபுத்தொடர்கள் அடங்கிய உரைப்பகுதிகளை வாசிக்கச்செய்து அம்மரபுத் தொடர்கள் உணர்த்தும் பொருளை விளங்கிக்கொள்ளவும், அத்தகைய மரபுத்தொடர்கள் சிலவற்றைப் பட்டியற்படுத்தவும் ஆர்வமூட்டுக.

## செயற்பாடுகள்

### செயற்பாடு 1 (சொற்களஞ்சியத்தை விருத்தி செய்தல்)

- மாணவர்கள் ஒவ்வொருவரும் உரைப்பகுதிகள், பாடல்கள் என்பனவற்றை வாசித்து. அவற்றில் உள்ள புதிய சொற்களை அப்பியாசப் புத்தகத்தில் குறிக்கச் செய்க.

- மாணவர் ஒவ்வொருவரும் சேகரித்த சொற்களை உரத்து வாசிக்கவும், அவற்றின் பொருள் பற்றிக் கலந்துரையாடவும், தேவைப்படின் அகராதி, கலைக்களஞ்சியம் என்பனவற்றின் உதவியோடு பொருளறியவும் துணை செய்க.

- மாதமொருமுறை மாணவர்கள் சேகரித்த சொற்களுள் குறைந்தது பத்துச் சொற்களை வாக்கியங்களில் அமைத்துக் கூறவும் அவ்வாக்கியங்களைக் கரும்பலகையில் எழுதி உரத்து வாசிக்கவும் நெறிப்படுத்துக.

### செயற்பாடு 2

- பின்வரும் உரைப்பகுதி போன்ற மரபுச் சொற்கள் உள்ள வாக்கியங்களையோ, பந்தியையோ மாணவர் வாசித்த பின், அம்மரபுச் சொற்களை அவர்கள் இனங் காணவும் விளங்கிக்கொள்ளவும் துணை புரிக.

***எடுத்துக்காட்டு:***

அது அடர்த்தியான பெருங்காடு. எம்மைப் பிரிந்து சென்ற நண்பன் அக்காட்டுக்குள் இருக்கக்கூடும் எனக்கருதி, அதற்குள் சென்றோம். பல்வகை விலங்குகளின் சத்தங்கள் வெவ்வேறு இடங்களிற் கேட்டன. கரடிகள் **உறுமின.** கழுதைகள் **கத்தின.** நரிகள் **ஊளையிட்டன.** குளத்துக்குள் இருந்த எருமைகள் **எக்காளமிட்டன.** தொலைவில் மயில்கள் **அகவும்** சத்தமும் கேட்டது. மிகத்தொலைவில் காட்டு நாய்கள் **குரைக்கும்** சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. எங்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

- முன்னைய வகுப்புகளில் மாணவர் கற்ற மரபுச் சொற்களை நினைவூட்டுக.
- மாணவர்களுக்குப் பின்வருவன போன்ற மரபுச்சொற்களை அறிமுகஞ் செய்க.

***எடுத்துக்காட்டு:***

**தொனிகள்**

| | | |
|---|---|---|
| கரடி | - | உறுமும் |
| தேனீ | - | ரீங்காரம் செய்யும் |
| கழுதை | - | கத்தும் |
| பன்றி | - | உறுமும் |
| நரி | - | ஊளையிடும் |
| கோழி | - | கொக்கரிக்கும் |
| நாய் | - | குரைக்கும் |
| காகம் | - | கரையும் |
| எருமை | - | எக்காளமிடும் |
| ஆடு | - | கத்தும் |
| மயில் | - | அகவும் |
| புறா | - | குறுகுறுக்கும் |

**இளமைப் பெயர்கள்**

| | | |
|---|---|---|
| அணில் | - | குஞ்சு, பிள்ளை |
| ஆடு | - | குட்டி |
| நெல் | - | நாற்று |
| கீரி | - | பிள்ளை |
| கமுகு | - | கன்று, பிள்ளை |
| காகம் | - | குஞ்சு |
| கோழி | - | குஞ்சு |
| தவளை | - | பேத்தை, குஞ்சு |
| மூங்கில் | - | கன்று |
| பாம்பு | - | குட்டி |

## ஆண் - பெண் மரபு

| உயிரினம் | ஆண் | பெண் |
|---|---|---|
| ஆடு | கடா | மறி |
| மாடு | ஏறு, காளை, எருது | நாகு, பசு |
| கோழி | சேவல் | பேடு, பெட்டை |
| நாய் | கடுவன் | பெட்டை |
| யானை | களிறு | பிடி |
| குரங்கு | கடுவன் | மந்தி |
| பூனை | கடுவன் | பெட்டை |
| மான் | கலை | பிணை |
| குதிரை | குண்டு | வடவை, பெட்டை |
| மயில் | போத்து | அளகு |

## செயற்பாடு 3

- பின்வரும் உரைப்பகுதி போன்ற குறிப்புப் பொருள் உணர்த்தும் மரபுத் தொடர்கள் அடங்கிய உரைப்பகுதிகளை வாசிக்கச் செய்க. அம்மரபுத் தொடர்கள் உணர்த்தும் பொருளை விளக்குக. மரபுத் தொடர்கள் நேர்ப் பொருளைத் தராமல் குறிப்புப் பொருளாக வேறு பொருளைத் தருவன என விளக்குக.
  ***எடுத்துக்காட்டு:***

### மரபுத்தொடர்கள் அமைந்த உரைப்பகுதி

கந்தசாமி வீடு ஒன்றைக்கட்ட விரும்பினார். அவரது நண்பர்கள் **தோள் கொடுக்க** முன்வந்தனர். அவர் **முகம் மலர்ந்தார்.** உடனடியாகவே வீடு கட்டுவதற்கான வேலைகளை ஆரம்பிக்க எண்ணினார். அவர் வீடு கட்டப் போவதை அறிந்த சிலர் **வயிற்றெரிச்சல்** அடைந்தனர். அதனைப் பொருட்படுத்தால் **முன்னுக்கு வருதலே** சிறந்தது என்ற நண்பர்கள் ஆலோசனை கூறினார்.

| மரபுத்தொடர் | கருத்து |
|---|---|
| தோள் கொடுத்தல் | உதவுதல் |
| முகம் மலர்தல் | மகிழ்ச்சியடைதல் |
| வயிற்றெரிச்சல் | பொறாமை |
| முன்னுக்குவருதல் | வாழ்க்கையில் முன்னேறுதல் |

- மாணவர்க்குப் பின்வருவன போன்ற செயலட்டைகளைத் தயாரித்து வழங்கி, மரபுத் தொடர்கள் சிலவற்றை அறிமுகஞ் செய்க.







*எடுத்துக்காட்டு:*






**செயலட்டை**

| | | |
|---|---|---|
| அவசரக் குடுக்கை | - | பதற்றக்காரன் |
| அறக்கப் பறக்க | - | விரைவாக |
| இரண்டுங் கெட்டான் | - | நன்மை தீமை அறியாதவன் |
| இலவு காத்த கிளி | - | காத்திருந்து ஏமாறுதல் |
| ஏட்டுச் சுரைக்காய் | - | அனுபமில்லாத கல்வியறிவு |
| ஓட்டை வாயன் | - | இரகசியத்தைக் காக்க முடியாதவன் |
| காது குத்துதல் | - | ஏமாற்றுதல் |
| குரங்குப்பிடி | - | பிடிவாதம் |
| பூசி மெழுகல் | - | குற்றத்தை மறைத்தல் |
| தாளம் போடல் | - | வறுமையால் வாடல் |
| நாக்குப் புரளுதல் | - | சொல் தவறுதல் |
| நுனிப்புல் மேய்தல் | - | மேலெழுந்த வாரியாகப் படித்தல் |
| கண்ணுங் கருத்துமாய் | - | முழுக் கவனமுடன் |
| பொடி வைத்துப் பேசுதல் | - | தந்திரமாயப் பேசுதல் |
| வாட்ட சாட்டம் | - | தோற்றப் பொலிவு |

## செயற்பாடு 4

- குறியீடுகளை மாணவர்கள் அறிந்து கொள்ளவும், வாசிக்கவும் அவசியமான குறியீடு களை அட்டைகளில் ஒட்டித் தயார்செய்து கொள்க. அதன் பின்னர் மாணவர்களைக் குழுக்களாக்கி அட்டைகளில் உள்ள குறியீடுகளை வாசிக்க வழிப்படுத்துக.

| | | | |
|---|---|---|---|
|  மின் விநியோயோகிக்கும் இடம் |  வலது குறைந்தவர் |  தொலைபேசி வசதி |  சிற்றுண்டிச்சாலை |
|  இலங்கை கட்டளைகள் பணியகம் |  பெருந்தெருக்கள் அபிவிருத்தி அதிகாரசபை |  பெருந்தெரு/ அகன்ற தெரு |  இலங்கைப் பெற்றோலி யக் கூட்டுத்தாபனம் |
|  இலங்கை மின்சார சபை |  தீ பற்ற வைப்பது ஆபத்தானது. |  சாய்வான பாதை |  முன்னால் ஒளிச் சமிக்ஞைகள் |

| | | | |
|---|---|---|---|
|  வாகனங்கள் நிறுத்தக்கூடாது |  மின் தாக்குதல் ஏற்பட இடமுண்டு |  எரிபொருள் நிரப்பு நிலையம் |  விமான நிலையம் |
|  நொருங்கக்கூடியது. |  கவனமாகக் கையாளுங்கள். |  இப்பக்கம் மேலே |  மீள் சுழற்சிக் குட்படுத்தக் கூடியது. |

**குறிப்பு:** இங்கு தரப்பட்டுள்ள குறியீடுகளை பேச்சு, எழுத்து செயற்பாடுகளின் போதும் பயன்படுத்த முடியும்.

## செயற்பாடு 5

- பின்வருவன போன்ற வாக்கியங்களைப் பெரிதாக எழுதிக்காட்சிப்படுத்தி மாணவரை வாசிக்கச் செய்க.

 ***எடுத்துக்காட்டு:***

 1. நாமனைவரும் **இ.போ.ச.** பேருந்து வண்டியில் கதிர்காமத்துக்குப் போனோம்.
 2. வங்கிகளைக் கட்டுப்படுத்துவது **இ.ம.வ.** ஆகும்.
 3. **இ.மி.ச** மின் கட்டணங்களைக் குறைத்துள்ளது.
 4. **இ.ஒ.கூ** சிறுவர் நிகழ்ச்சிளை விடுமுறை நாட்களில் ஒலிபரப்புகின்றது.
 5. **இ.பெ.கூ** இன்று முதல் பெற்றோலியப் பொருட்களின் விலையை உயர்த்தியுள்ளது.

- இன்று இவ்வாறு வார்த்தைகளைச் சுருக்கமாகக் குறித்து எழுதும் முறை பெரு வழக்காகி வருவதால் மாணவர்கள் அவற்றை வாசிக்கவும், சுருக்கக் குறியீடுகள் உணர்த்தும் பொருளை விளங்கிக்கொள்ளவும் துணை புரிக.

 ***எடுத்துக்காட்டு:***

 **இ.ம.வ.** - இலங்கை மத்திய வங்கி

 **இ.மி.ச.** - இலங்கை மின்சார சபை

 **இ.ஒ.கூ.** - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

 **இ.ரூ.கூ.** - இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்

 **இ.பெ.கூ.** - இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**குறிப்பு:** சுருக்கக்குறியீடுகளை அறிமுகம் செய்யும்போது தரம் ஐந்து மாணவர் களுக்கு அவசியமான, நன்கு பரிச்சயமானவற்றையே அறிமுகம் செய்க.

## செயற்பாடு 6

- முன்னைய வகுப்புகளில் மாணவர்கள் கற்ற பழமொழிகளை நினைவு கூரச் செய்து, அவற்றைக் கரும்பலகையில் எழுதிக் காட்சிப்படுத்துக. அப்பழமொழிகளை மாணவர்கள் வாசிக்கச் செய்க.

- வேறு பழமொழிகள் சிலவற்றை அறிமுகஞ் செய்க. அவற்றை வாசித்து, சொற்களஞ்சியத்தை விருத்தி செய்ய ஒவ்வொரு மாணவனுக்கும் சந்தர்ப்பம் வழங்குக.

***எடுத்துக்காட்டு:***

| **பழமொழிகள்** |
|---|
| அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு (ஒற்றுமையே பலம்) |
| அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம் (உத்தம நட்பு) |
| ஆனைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒரு காலம் (காலம் மாறி வரும்) |
| இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை (திருப்திப்படாத மனம்) |
| உப்பிட்டவன உள்ளளவும் நினை (நன்றி மறவேல்) |
| ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது (வெறும் புத்தகப்படிப்பு) |
| ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு (ஒற்றுமை) |
| கந்தையானாலும் கசக்கிச்கட்டு (வறுமையிற் செம்மை) |
| காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் (காலந்தவறேல்) |
| காகந் திட்டி மாடு சாகாது (பழிக்குப் பயப்படாதே) |
| குப்பையிற் கிடந்தாலும் குன்றிமணி மங்காது (நற்புகழ் மங்குவதில்லை) |

- மாணவர்களை இரு குழுக்களாக்குக. (ஒவ்வொரு மாணவனையும் பழமொழிகள் ஐந்தினைச் சேகரித்து வருமாறு முன்கூட்டியே கூறுக.) ஒவ்வொரு குழுவில் உள்ளோரும் தாம் எழுதி வந்த பழமொழிகளை உரத்து வாசிக்கவும் எதிர்க் குழுவில் உள்ளோர் அவற்றுக்குப் பொருள் கூறும் வகையிலும் போட்டியாக நடத்துக. பொருள் கூறஇடர்ப் படும் போது துணை புரிக.

## செயற்பாடு 7

- பத்திரிகைகள் அல்லது சஞ்சிகைகளில் வரும் கதைகள், கட்டுரைகள், செய்திகள் என்பவற்றை மாணவர்கள் வாசிக்கவும், அவற்றிலுள்ள புதிய சொற்களையும் சொற்றொடர்களையும் சேகரிக்கவும் வழிப்படுத்துக.

- பத்திரிகைகளில் வெளிவந்த செய்தித் தலைப்புக்களையும் கட்டுரைத் தலைப்புக்களையும் தெரிவு செய்து வெட்டி, அட்டைகளில் ஒட்டிச் செயலட்டைகளைத் தயார்செய்க.

***எடுத்துக்காட்டு:*** **செய்தித்தலைப்புகள்**

| **எரிபொருள் நெருக்கடியை தீர்க்க புதிய திட்டம்** |
|---|
| அமைச்சரவைக்கு ஜனாதிபதி யோசனை முன்வைப்பு |

| |
|---|
| வீடமைப்புத் திட்டம் விரைவில் ஆரம்பம் |

| |
|---|
| தேயிலை உற்பத்தியில் வரலாற்றுச்சாதனை |

*நன்றி: தினகரன்*

- மாணவர்களைக் குழுக்களாக்கி, அவ்வட்டைகளை அக்குழுக்களுக்கு வழங்கி வாசிக்கவும், புதிய சொற்களையும் சொற்றொடர்களையும் இனங்காணவும் வழிகாட்டுக. புதிய சொற்கள் சொற்றொடர்கள் என்பவற்றின் பொருளை அறிந்துகொள்ள ஆர்வமூட்டுக.

## செயற்பாடு 8

- மாணவர்களைக் குழுக்களாக்குக. அவர்கள் கணிதம், சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் ஆகிய பாடங்களிலும், சிறுவர் அறிவியல் நூல்களிலும் கற்ற புதிய சொற்கள், சொற்றொடர்கள் கணினியுடன் தொடர்புடைய கலைச்செற்கள் என்பனவற்றைக் குழுக்களிலே பட்டியற்படுத்த வழிப்படுத்துக.

- அச்சொற்களைக் கரும்பலகையில் எழுதி, மாணவரை ஒவ்வொருவராக வாசிக்கச் செய்க. அவற்றின் பொருளை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துக.

***எடுத்துக்காட்டு:***

| சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் | | கணிதம் | |
|---|---|---|---|
| நாற்றுக்கள் | கம்பளித்தையல் | எண்ணிகள் | அளவுச்சாடிகள் |
| முள் முருக்கு | மெல்லுதல் | மேற்பரப்பு | மடங்குகள் |
| வாழ்விடங்கள் | அரச இலச்சினை | திண்மங்கள் | எண்குறி |
| உலர்த்துதல் | புத்தளிப்புக்கருவி | கிடைப்படம் | இடப்பெறுமானம் |
| இலைக்கஞ்சி | மண் சரிவு | தளவுருக்கள் | ஏறுவரிசை |
| மரக்கீலம் | சுவர்ப்பத்திரிகை | முக்கோணி | செங்கோணம் |
| மோப்பசக்தி | மாதிரியுருக்கள் | நேர்விளிம்பு | நாட்காட்டி |
| சமநிலை | படியவிடல் | நிலைக்குத்து | குற்றிநாணம் |
| முடிவுக்கோடு | துத்திரிப்புல் | வளையி | அளவுகோல் |
| எல்லைக்கோடு | கீலங்கள் | நிரல்வரைபு | கொள்ளளவு |
| குளிர்பானம் | பொறிகள் | வலையமைப்பு | குவியல்கள் |

### கணினி கலைச்சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வலை | - | Web | வையக விரிவுவலை | - | World Wide Web |
| பதிவிறக்கம் | - | Drowser | பதிவேற்றம் | - | Upload |
| இணையத்தளம் | - | Website | மின்னஞ்சல் | - | E-mail |
| கோப்பு | - | File | மென்பொருள் | - | Software |
| வன்பொருள் | - | Hardware | எழுத்துரு | - | Font |
| இணையம் | - | Internet | இறுவட்டு | - | CD |
| வன்தகடு | - | Hard disc | விசைப்பலகை | - | Keyboard |
| குறிப்புச்சொல் | - | Password | சேமி | - | Save |
| நீக்குக | - | Delete | கோப்பு | - | File |


**குறிப்பு:** மாணவர்கள் ஒவ்வொருவரும் புதிய சொற்கள், சொற்றொடர்கள் என்பனவற்றையும் அவற்றின் பொருளையும் தனியான அப்பியாசக் கொப்பியில் எழுதி வாசிக்க ஊக்கமளிக்குக.

### செயற்பாடு 9

- மாணவர்கள் அகராதியைப் பயன்படுத்தி சொற்களுக்குரிய பொருளை அறிந்து கொள்ளவும். அவை தொடர்பாக மேலதிக தகவல்களை கலைக்களஞ்சியங்களில் இருந்து பெற்றுக்கொள்ளவும் வழிப்படுத்துக. மாணவர்களை குழுக்களாக்கி தெரிவுசெய்யப் பட்ட சொற்களைச் செவிமடுத்து அகராதியில் இருந்து பொருளைத் தேடியறிய வழிப்படுத்துக.

*எடுத்துக்காட்டு:*

(1) அ∴றிணை
(2) அக்கம் பக்கம்
(3) அக்கினி
(4) அக்கினி மூலை


மாணவர் மொழியாக்க அகராதி
தமிழ் - தமிழ் - ஆங்கிலம்
அ

- சொற்களின் விரிவான தகவல்களைக் கலைக்களஞ்சியங்களைப் பார்வையிடுவதன் மூலம் அறிந்து கொள்ளவும் மாணவர்களை வழிப்படுத்துக.

## கற்றல் - கற்பித்தல் வளங்கள்

- உரைப்பகுதிகள், பாடல்கள் (தெரிவுசெய்யப்பட்டவை)
- மரபுச்சொற்கள் உள்ள வாக்கியங்கள் அல்லது உரைப்பகுதிகள்
- மரபுச்சொற்கள் எழுதப்பட்ட அட்டைகள்
- மரபுத் தொடர்கள் அங்கிய வாக்கியங்கள் அல்லது உரைப்பகுதிகள்
- மரபுத் தொடர்கள் எழுதப்பட்ட அட்டை
- சுருக்கக் குறியீடுகள் இடப்பட்ட வாக்கியங்கள்
- பழமொழிகள் எழுதப்பட்ட அட்டை
- பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பனவற்றில் இடம்பெற்ற பிரதான தலைப்புகள் எழுதப்பட்ட அட்டைகள்
- ஏனைய பாடநூல்கள், சிறுவர் அறிவியல் நூல்கள் என்பவற்றில் உள்ள புதிய சொற்கள், சொற்றொடர்கள் எழுதப்பட்ட அட்டைகள்

## கணிப்பீடு

- புதிய சொற்களைத் தேடுதலும் வாசித்தலும்
- மரபுச் சொற்களைத் தேடுதலும் வாசித்தலும்
- மரபுத் தொடர்களைத் தேடுதலும் வாசித்தலும், பொருள் கூறலும்
- சுருக்கக் குறியீடுகளால் உணர்த்தப்படும் சொற்களை இனங்காணல்
- பழமொழிகளைத் தேடலும் வாசித்தலும் பொருள் கூறலும்
- பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வரும் புதுச் சொற்களைத் தேடுதல்
- ஏனைய பாடநூல்கள், சிறுவர் அறிவியல் நூல்களில் வரும் சொற்களைத் தேடுதல்
- அகராதி, கலைக் களஞ்சியங்கள் என்பவற்றில் பயன்பாடு

என்பனவற்றைக் கணிப்பிடுக.

## தேர்ச்சி மட்டம்

## 3.1.4 தொடர்பாடலுக்காக வாசிப்பார்.

## உள்ளடக்கம்

- ✓ அழைப்பிதழ்கள்
- ✓ அறிவித்தல்கள்
- ✓ அறிக்கைகள்
- ✓ சுவரொட்டிகள்
- ✓ துண்டுப்பிரசுரங்கள்
- ✓ விளம்பரங்கள்
- ✓ இணையத்தளம் (Website)
- ✓ மின்னஞ்சல் (E-mail)
- ✓ குறுஞ்செய்திகள் (SMS)

**தொடர்பாடல்**

- நம் அன்றாட வாழ்வில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்வும் ஒவ்வொரு தகவல் ஆகும்.
- இதனை மற்றவர்களுக்குத் தெரிவித்தால் தகவல் தொடர்பு ஆகும்.
- தகவல்களை ஒருவரிட மிருந்து மற்றவருக்கோ அல்லது ஒருவரிடமிருந்து ஒரு கூட்டத்திற்கோ கொண்டு செல்லும் சாதனங்கள் தொடர்புச் சாதனங்களாகும்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

- தொடர்பாடலும் தகவல் சேகரிப்பும் இன்றைய வாழ்வில் அத்தியாவசியமானவை என்பதை மாணவர்களுக்கு விளக்குக. கடிதங்கள் தொன்று தொட்டுக் கையாளப்பட்டு வரும் தொடர்பாடல் ஊடகம் என்பதைக் கூறி, இலகுவான கடிதங்களை வாசிக்கச் செய்க.

- பல்வேறு வைபவங்களுக்கும் அழைப்பு அனுப்பப்படுவதை மாணவரின் கவனத்திற்குக் கொண்டு வந்து, பலதரப்பட்ட அழைப்பிதழ்களை மாணவர்கள் சேகரிக்கவும், அவற்றை வாசிக்கவும் அழைப்பிதழ்களின் அமைப்பு, வடிவம், மொழிநடை என்பவற்றிற் கவனஞ் செலுத்தவும் நெறிப்படுத்துக.

- பாடசாலையினுள்ளும், வெளியேயும் இடப்படும் அறிவித்தல்களை வாசிக்கவும், அவற்றில் இடம்பெறும் தகவல்களைத் தேடவும் மாணவர்க்கு ஆர்வமூட்டுக.

- இன்று தகவல்கள் பலவற்றைத் தருவதில் அறிக்கைகள் முக்கியத்துவம் பெறுவதை மாணவர்க்குக் கூறி மாணவர்மன்றக் கூட்ட அறிக்கை, ஆண்டறிக்கைகள் பற்றித் தெளிவுறுத்துக. அவ்வறிக்கைகள் சிலவற்றை (மாணவர்க்குப் பொருத்தமானவற்றை) வாசிக்க வழிப்படுத்துக.

- பல்வேறு சுவரொட்டிகளையும் வாசிக்கச்செய்து, அவற்றின் தகவல்களைக் கண்டறியச் செய்க.

- வெவ்வேறு விடயங்கள் பற்றி விளக்குவனவாக அமையும் துண்டுப்பிரசுரங்களை மாணவர் சேகரித்த பின்னர், அவற்றை வாசிக்கவும் தகவல்களைக் கிரகிக்கவும் சந்தர்ப்பம் வழங்குக.

- விளம்பரங்கள் பல செய்தித்தாள்களில் மட்டுமன்றி, பெரிய அளவில் ஆங்காங்கே பல்வேறு தேவைகளுக்காகவும் இடம்பெற்றிருப்பதைச் சுட்டிக்காட்டி அவற்றின் தகவல்களை மாணவர்கள் வாசித்துக் கலந்துரையாடச் செய்க.

- கணினி மூலம் இணையத்தளத் தொடர்பாடல்கள் மேற்கொள்ளப்படுவதையும், மின்னஞ்சல்கள் அனுப்பப்படுவதையும் எடுத்துக்கூறி, அவ்வாறான தகவல்களை மாணவர் பெற்றுக்கொள்ள வசதி செய்க.

- கையடக்கத் தொலைபேசிகள் மூலம் அனுப்படும் குறுஞ்செய்திகளை வாசிக்கவும் வழிகாட்டுக.

## செயற்பாடுகள்

### செயற்பாடு 1 (தொடர்பாடலுக்காக வாசித்தல்)

- தொன்று தொட்டுத் தொடர்பாடல் ஊடகமாகக் கையாளப்பட்டு வரும் கடிதங்கள் சிலவற்றை வாசிக்கச் செய்க. அனுப்பியவர் பெயர், முகவரி, கூறப்பட்ட செய்தி என்பவற்றை மாணவர் கலந்துரையாடச் செய்க.

***எடுத்துக்காட்டு:*** **கடிதம்**

**மரபுமுறைக் கடிதம்**

98, கல்லூரி வீதி,
புல்மோட்டை,
திருகோணமலை.
01.01.2009.

அன்புள்ள அப்பா,

நான் நலமாக இருக்கின்றேன். உங்களின் நலம் அறிய ஆவலாக உள்ளேன். நீங்கள் அனுப்பிய 1000 விடுகதைகள் என்ற புத்தகம் கிடைத்தது. விடுகதைகளை வாசித்து நானே விடைகளைக் கண்டுபிடிக்கின்றேன். புத்தகத்திலுள்ள விடைகளைப் பார்ப்பதில்லை.

ஓய்வு நேரங்களில் நண்பர்களுடன் விடுகதைகளைக் கேட்டு, விடைசொல்லி விளையாடுவோம். நான் நண்பர்கள் கேட்கும் விடுகதைகளுக்கு உடனே பதில் சொல்வேன். அதனால் நண்பர்கள் என்னை 'விடுகதை மன்னன்' என்று கூறுவார்கள். அவர்கள் அப்படிக் கூறும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது. அப்பா எனக்கு நகைச்சுவைக் கதைப் புத்தகங்கள் வாங்கி அனுப்புங்கள். மீண்டும் அடுத்த மடலில் விரிவாக எழுதுகின்றேன்.

இப்படிக்கு,
அன்புள்ள மகன்,
த. குமணன்.

**தற்காலக் கடிதம்**

எம்.ஏ.எப். அஸ்ரா,
484, கடற்கரை வீதி,
புத்தளம்.
21.01.2009.

ஆசிரியர்,
தினகரன் வாரமலர்,
35, டி.எஸ். விஜயவர்த்தன மாவத்தை,
லேக் ஹவுஸ்,
கொழும்பு.

ஐயா,

வணக்கம். நான் தரம் ஐந்தில் கல்வி கற்கின்றேன். 'பூக்கள்' என்ற தலைப்பில் சிறுவர் பாடல் ஒன்றை எழுதியுள்ளேன். பத்திரிகைக்கு அனுப்பும் முதலாவது ஆக்கம் இதுவாகும். எனது ஆக்கத்தை தினகரன் வார மஞ்சரியில் 'சிறுவர் உலகம்' பகுதியில் பிரசுரித்து ஆக்கமும் ஊக்கமும் தருவீர்கள் என்று நம்புகின்றேன். இக்கடிதத்துடன் சிறுவர் பாடலை இணைத்துள்ளேன்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,

அஸ்ரா
..............................
எம்.ஏ.எப். அஸ்ரா

**குறிப்பு:** மரபு ரீதியாக எழுதப்படும் கடித முறைபற்றியும் கணினியின் வருகையின் பின்னர் தற்காலத்தில் எழுதப்படும் கடிதமுறை பற்றியும் விளக்குக.

### செயற்பாடு 2

- அழைப்பிதழ்கள், அறிவித்தல்கள், அறிக்கைகள் என்பவற்றிற் சிலவற்றை ஒட்டிச், செயலட்டைகளாகத் தயார்ப்படுத்துக. மாணவர்களைக் குழுக்களாக்குக. குழுக்களுக்குச் செயலட்டைகளை வழங்குக. ஒவ்வொரு குழுவிலுள்ளவர்களையும் அழைப்பிதழ், அறிவித்தல், அறிக்கை என்பவற்றை வாசிக்கச் செய்து, அமைப்பு, அவற்றில்உள்ள தகவல்கள் பற்றிக் கலந்துரையாடலில் ஈடுபடுத்துக.

*எடுத்துக்காட்டு:* **அழைப்பிதழ்**

**கொ/பாரதி தமிழ் மகா வித்தியாலயம்**
**ஆரம்பப்பிரிவுக் கலைவிழா - 2009**

**திகதி : 2009.01.05** **நேரம் : பி.ப. 4.30**

**இடம்**
**பிரதான மண்டபம்**

**பிரதம அதிதி**
**பேராசிரியர் க. இராஜராஜசோழன்**


அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**05, கடற்கரை வீதி,**
**கொழும்பு**

**- அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**
**பெற்றோர், பழைய மாணவர்கள்**

**(வரும்போது அழைப்பிதழைத் தவறாது கொண்டு வரவும்.)**

**அறிவித்தல்**


க.பொ.த (உ.தர)ப் பரீட்சை - 2008 ஆகஸ்ட்

*நன்றி: தினகரன்*

**அறிக்கை**


மாணவர் மன்றம் 2009.01.01 அன்று இறைவணக்கத்துடன் மு.ப. 11.30 க்கு ஆரம்பமாகியது. வரவேற்புரையை செல்வன் ம.ரகுவரன் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து மாணவர் மன்றப் பொறுப்பாசிரியர் ம. கலைவதனன் அவர்கள் உரையாற்றினார். அதன் பின்னர் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. கலை நிகழ்ச்சிகளுக்கு இடையே கல்லூரி அதிபர் உரையாற்றினார். நன்றியுரையை மு. மதிவதனி வழங்கினார். பாடசாலைக் கீதத்துடன் நிறைவு பெற்றது. அடுத்த மாணவர் மன்றம் பெப்ரவரி முதலாந் திகதி நடைபெறும் என மாணவர் மன்றப் பொறுப்பாசிரியரால் அறிவிக்கப்பட்டது.

## செயற்பாடு 3

- முன்கூட்டியே சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள், விளம்பரங்கள் என்பனவற்றை மாணவர்கள் சேகரிப்பதற்குத் தூண்டுக. மாணவர்கள் சேகரித்தவற்றுள் பொருத்தமான வற்றைக் காட்சிப்படுத்துக. அத்தொடர்பாடற் சாதனங்களை வாசித்துத் தன் சொந்த மொழிடையில் அவற்றில் உள்ள தகவல்களைக் கூறுவதற்குத் துணை புரிக.

***எடுத்துக்காட்டு:***

**துண்டுப்பிரசுரம்**



# மாணவர்களே!

- அரசாங்கம் இலவசமாக உங்களுக்குப் புத்தகங்களை வழங்குகின்றது.
- இலவசமாக வழங்கப்படும் புத்தகங்களைப் பாதுகாக்க வேண்டியது உங்கள் கடமை அல்லவா!
- புத்தகங்களுக்கு உறைபோட்டு கவனமாகப் பயன்படுத்துங்கள்.
- அடுத்தவருடம் இந்தப் புத்தகங்களை ஏனைய மாணவர்களும் பயன்படுத்த வேண்டும் அல்லவா?
- இலவசமாக வழங்கப்படும் புத்தகங்கள்தானே என அலட்சியப்படுத்தாதீர்கள்.

**புதிய புத்தகங்களைப் பாதுகாத்து அடுத்த வருடம் புதிதாக வரும் மாணவர்களுக்கு கொடுப்போம் என உறுதி எடுத்துக்கொள்ளுங்கள்.**

*- கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.*

**குறிப்பு:** பாடசாலை நூல்களைச் சிறப்பாகப் பயன்படுத்தும் மாணவர்களுக்கு கல்வி வெளியீட்டுத் திணைக்களமும் கல்வி அமைச்சும் இணைந்து சான்றிதழ்களை வழங்குகின்றன என்பதையும் மாணவர்களுக்கு வலியுறுத்துக.

**சுவரொட்டி**

**பெற்றோர்களே!**

**கல்வி கற்பது சிறுவர்களின் உரிமை**
**சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்புவோம்!**

**சிறுவர்களை வேலைக்கமர்த்துவதைத் தடுப்போம்!**



*அனுசரணை - யுனிசெவ்-*

**விளம்பரங்கள்**

*எடுத்துக்காட்டு 1:*



உலக சிறுவர் தினம் 2008
அகில இலங்கை பேச்சு போட்டி
சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் வலுவூட்டல் அமைச்சு

*எடுத்துக்காட்டு 2:*




*நன்றி: தினகரன்*

## செயற்பாடு 4


- தொலைக்காட்சி, இணையத்தளம், மின்னஞ்சல் என்பனவற்றில் வெளியிடப்படும் செய்திகள், தகவல்கள் என்பனவற்றை மாணவர்கள் வாசிக்க ஏற்ற ஒழுங்குகளையும் வசதிகளையும் செய்க. பாடசாலையில் அவ்வசதிகள இல்லாதவிடத்து, அவ்வசதிகள் உள்ள ஒரு நிலையத்திற்கு மாணவர்களை அழைத்துச் சென்று இலத்திரனியல் ஊடகங்களின் தகவல்களை வாசிக்கத் துணை புரிக.

***எடுத்துக்காட்டு: இணையத் தகவல்***

வியாழன் கிரகம்

சூரியக் குடும்பத்தின் பெரிய கிரகமாக வியாழன் கிரகம் உள்ளது. விண்வெளியில் இப்படி தனி ஆதிக்கம் செலுத்துவதன் காரணமாக இக்கிரகத்துக்கு ரோமானிய ஆட்சிக் கடவுளான 'ஜூபிடரின்' பெயர் சூட்டப்பட்டது. சூரியனில் இருந்து ஐந்தாவதாக உள்ள இக்கிரகம், விண்வெளியில் சூரியன், நிலா, வெள்ளி கிரகங்களுக்குப் பிறகு பிரகாசமாக தெரியக்கூடியதாகும்.

நீங்கள் ஒரு விண்கலத்தில் போய் வியாழன் கிரகத்தில் இறங்கினால் அமிழ்ந்து போவீர்கள். காரணம் இக்கிரகம் திடப்பொருட்களால் ஆனது அல்ல. முழுக்க முழுக்க வாயுக்கள் தான். இவை இக்கிரகத்துக்கு ஓர் அழகான வண்ணக் கலவை தோற்றத்தைத் தருகின்றன.



*www.dailythanthi.com*

## செயற்பாடு 5

- கையடக்கத் தொலைபேசிகள் மூலம் அனுப்பப்படும் குறுஞ் செய்திகள்/தகவல்களை வாசிக்க மாணவர் ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு வழங்குக. அத்தகவல்களுக்கான பதில்களை எவ்வாறு அனுப்பலாம் என மாணவர்களுடன் கலந்துரையாடுக.

## கற்றல் - கற்பித்தல் வளங்கள்

- மாதிரிக் கடிதங்கள்
- மாதிரி அழைப்பிதழ்கள்
- மாதிரி அறிவித்தல்கள்
- மாதிரி அறிக்கைகள்
- சுவரொட்டி - செயலட்டை
- துண்டுப்பிரசுரம் - செயலட்டை
- விளம்பரம் - செயலட்டை
- இணையத்தளம், மின்னஞ்சல் - தகவல்கள்
- கையடக்கத் தொலைபேசி - குறுந்தகவல்கள்

## கணிப்பீடு

- கடிதங்களை வாசித்துத் தகவல் சேகரித்தல்
- அழைப்பிதழ்களை வாசித்துத் தகவல் சேகரித்தல்
- அறிவித்தல்களை வாசித்துத் தகவல் சேகரித்தல்
- அறிக்கைகளை வாசித்துத் தகவல் சேகரித்தல்
- சுவரொட்டிகளைச் சேகரித்தலும் வாசித்தலும்
- துண்டுப்பிரசுரங்களைச் சேகரித்தலும் வாசித்தலும்
- விளம்பரங்களைச் சேகரித்தலும் வாசித்தலும்
- இணையத்தளம், மின்னஞ்சல் தகவல்களை வாசித்தல்
- குறுஞ் செய்திகளை வாசித்தல், பதிலளித்தல்
- விடையளித்தல்

என்பனவற்றைக் கணிப்பிடுக.

## தேர்ச்சி மட்டம்

## 3.1.5 இரசனைக்காக வாசிப்பார்.

## உள்ளடக்கம்

✓ உணர்ச்சி வெளிப்பாடு, தொனி வேறுபாடு, முகபாவம் என்பன வெளிப்பட வாசித்தல்
- சிறுவர் பாடல்கள்/கவிதைகள்
- கதைகள்
- நாடகங்கள்
- சித்திரக் கதைகள்
- சஞ்சிகைகள்
- விகடத் துணுக்குகள்
- பழமொழிகள், உவமைகள், மரபுத்தெடர்கள், இணைமொழிகள், இரட்டைக்கிளவி போன்றவை அமைந்துள்ள பகுதிகள்
- படிப்பினைகள், விழுமியங்கள்

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

➲ சொல் நயம், பொருள் நயம் உள்ள சிறுவர் பாடல்களை மாணவர்கள் வாசித்து, நயப்பதற்கு வழிப்படுத்துக.

➲ கதைகள், நாடகங்கள் ஆகியவற்றை வாசிக்கவும் நாம் நயந்த பகுதிகளை ஏனை யோருக்கு எடுத்துக் கூறவும் அவற்றில் உள்ள படிப்பினைகளையும் விழுமியங்களை யும் இனங்கண்டு கூறவும் வழிகாட்டுக.

➲ சஞ்சிகைகளை வாசித்து, அவற்றில் தாம் இரசித்த பகுதிகளை மாணவர்மன்றக் கூட்டங்களில் எடுத்துக் கூறவும் சந்தர்ப்பம் வழங்குக.

➲ மாணவர்கள் விரும்பி வாசிக்கும் சித்திரக்கதைகள், விகடத்துணுக்குகள் ஆகியவற்றில் மாணவர்களுக்குப் பொருத்தமானவற்றைத் தெரிவுசெய்து, அவற்றை வாசித்து இரசிக்கவும் இரசித்த பகுதிகளை ஏனையோருடன் பகிர்ந்து கொள்ளவும் வழிப்படுத்துக.

➲ தாம் வாசித்த உரைநடைப் பகுதிகளிலும், பாடல்களிலும் மொழிக்கு வளம் சேர்ப்பன வாக அமையும் பழமொழிகள், மரபுத்தொடர்கள், இணைமொழிகள், இரட்டைக்கிளவி போன்றவற்றை இனங்காணவும் இரசிக்கவும் துணைபுரிக.

## செயற்பாடுகள்

### செயற்பாடு 1 (இரசனைக்காக வாசித்தல்)

▣ பின்வரும் சிறுவர் பாடலை ஒத்த பாடல்களை மாணவர் வாசிக்கவும் இரசிக்கவும் சந்தர்ப்பம் வழங்குக. மாணவர்களைக் குழுக்கள் ஆக்குக. ஒவ்வொரு குழுவுக்கும் பாடலைச் செயலட்டைகளில் ஒட்டி வழங்குக.

- பாடலில் உள்ள பொருட் சிறப்புக்களையும், கையாளப்பட்ட சொற்கள், சொற்றொடர்கள் என்பவற்றிற் காணப்படும் சிறப்புக்களையும் குழுவிலே உள்ள ஏனையோருடன் கலந்துரையாட வழிநடத்துக. தொகுப்புரையின்போது பாடலில் உள்ள சிறப்புக்களை எடுத்துக் கூறுக.

***எடுத்துக்காட்டு:*** **பாடல்**

**பாடல் 1**

***உன்னை நீ அறிந்திரு!***

உன்னை நீயே அறிந்தால் - தம்பி
உலகில் எதையும் வெல்லலாம்!

நன்மை செய்து வாழ்ந்தால் - தம்பி
நாலு பேரை வாங்கலாம்!

உண்மை வழியில் நடந்தால் - தம்பி
உயர்ந்த வாழ்வை அடையலாம்!

பண்பின் குன்றாய் விளங்கினால் - தம்பி
பாரும் வாழ்த்தக் காணலாம்.

அறிவை நாளும் வளர்த்தால் - தம்பி
அழியாப் புகழைப் பெறலாம்!

பரிவை எங்கும் விதைத்தால் - தம்பி
பாரோர் போற்ற ஒளிரலாம்!

***தங்க. சங்கர பாண்டியன்***
***நன்றி: www.dinamani.com***

**பாடல் 2**

***சந்திரன்***

மீனினம் ஓடிப் பரக்குதம்மா! - ஊடே
வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா!
வானுங் கடலாக மாறுதம்மா! - இந்த
மாட்சியி லுள்ளம் முழுகுதம்மா!

அம்புயம் வாடித் தளர்ந்ததம்மா! - அயல்
ஆம்பலும் கண்டு களிக்குதம்மா!
இம்பருலகின் இயல்பிதம்மா! - மதிக்
கின்னார் இனியாரும் உண்டோ அம்மா?

சின்னஞ் சிறுவில்லாய்க் கண்டதம்மா! - பின்னர்ச்
செம்பொற் குடம்போலே தோன்றுதம்மா!
என்ன அதிசயம் பாராயம்மா! - ஈதோர்
இந்திர சாலமோ கூறாயம்மா!

வளர்ந்து வளர்ந்து பெருகுதம்மா! - உடல்
வட்டந் திருந்தி வருகுதம்மா!
தளர்ந்து தளர்ந்துபின் போகுதம்மா! - கண்ணல்
சற்றுந் தெரியாமல் ஆகுதம்மா!

***கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை***

## செயற்பாடு 2

- கதைகள் எழுதி ஒட்டித் தயாரிக்கப்பட்ட செயலட்டைகளைக் குழுக்களிடம் கொடுத்து வாசிக்கச் செய்து, கதைகளை மாணவர் வாசிக்கும்போது, கதைச் சந்தர்ப்பங்களுக் கேற்ப உணர்ச்சி வெளிப்பாடு, தொனி வேறுபாடு, முகபாவம் என்பனவற்றைக் காட்டும் வகையில் மாணவர்கள் ஒவ்வொருவரும் வாசிக்க வழிகாட்டுக. கதையின் படிப்பினை, விழுமியங்கள் என்பன பற்றிய கலந்துரையாடலில் ஈடுபடுத்துக.

***எடுத்துக்காட்டு:*** **கதை**

### முயற்சி திருவினையாக்கும்

சுப்புரத்தினம் அவனது பெற்றோருக்கு ஒரே பிள்ளை. வசதியான குடும்பம். அவன் தந்தை கனகசபை, சுப்புரத்தினத்தை நன்கு படிக்க வைத்து பெரிய அறிவாளியாக்க வேண்டும் என்று விரும்பினார். ஆனால் சுப்புரத்தினத்துக்கோ படிப்பென்றால் வேப்பங்காயாகக் கசந்து அவன் விளையாட்டுப் பிரியனாக இருந்தான்.

சுப்புரத்தினத்தைப் ‘படி படி’ என்று அவனது பெற்றோர் வற்புறுத்தியும் ஒரு பலனும் அளிக்கவில்லை. பள்ளியில் வகுப்பாசிரியரும், தலைமையாசிரியரும் சுப்புரத்தினம் சரியாப் படித்துத் தேறாவிட்டால் பள்ளியிலிருந்து விலக்கி விடுவோம் என்று பயமுறுத்தினர். சுப்புரத்தினத்தின் நண்பர்கள் எல்லாம் நன்கு படிக்கும் போது அவன் மட்டும் இப்படி இருக்கிறானே என்று கனகசபை கவலையுற்றார்.

அவ்வருடம் நடந்த பரீட்சையில் சுப்புரத்தினம் சித்தியடையவில்லை. வீட்டில் அவனது பெற்றோர் நிச்சயம் கண்டிப்பார்கள் என்று பயந்து யாரிடமும் சொல்லாமல் வீட்டை விட்டு வெளியேறினான்.

வெகு தூரம் நடந்ததால் காட்டின் எல்லைப் பகுதியை அடைந்து, மிகுந்த களைப்பின் காரணமாக ஒரு மரத்தடியில் படுத்துவிட்டான். சுப்புரத்தினத்தின் பெற்றோர், அவனைக் காணாமல் கவலையடைந்தனர். அவன் படிக்காவிட்டாலும் பரவாயில்லை, வீட்டுக்கு வந்து விட்டால் போதும் என்று கடவுளை வேண்டினர்.

காட்டின் வழியாக வந்த ஒரு பெரியவர், சுப்புரத்தினம் மயங்கிக் கிடப்பதைப் பார்த்து அவனுக்கு முதலுதவி செய்தார். தன்னிடம் இருந்த தண்ணீரையும் ஆகாரத்தையும் கொடுத்து மயக்கத்தைத் தெளிவித்தார். கண்விழித்த சுப்புரத்தினம், தனக்குப் படிப்பு வராததால் தன் பெற்றோர் படும் வேதனையைப் பார்க்கப் பொறுக்காமல் வீட்டை விட்டு வெளியேறி விட்டதாகக் கூறி தேம்பித் தேம்பி அழுதான்.

பெரியவர் அவன் தந்தை கனகசபைக்கு வேண்டியவர். ஓய்வு பெற்ற தமிழாசிரியர் 'தம்பி சுப்புரத்தினம்... கவலைப்படாதே. தோல்வியே வெற்றிக்கு முதல்படி. மனம் தளர்ந்துவிடாதே. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார். ஆரம்பத்தில் தோல்வியுற்று பின்னர் வெற்றி அடைந்தவர்கள் பற்றிக் கூறுகிறேன்... கேள்...

ஒரு நாட்டு அரசன் அவனது எதிரிகளால் பலமுறை தோற்கடிக்கப்பட்டான். உயிருக்குப் பயந்து மலையடிவாரத்தில் ஒரு குகையில் ஒளிந்துகொண்டான். அப்போது குகையின் வெளி நுழைவாயிலில் ஒரு சிலந்தி வலை பின்ன முயன்று கொண்டிருந்தது. ஒரு முனையிலிருந்து மறுமுனைக்கு இழையை இழுத்துச் செல்லும்போது அறுந்து விழுந்தது. இப்படிப் பலமுறை மீண்டும் மீண்டும் முயன்று சிலந்தி வலையைப் பின்னி முடித்தது. அதைப் பார்த்த அந்த அரசன் உற்சாகத்துடன் எழுந்தான். துடிப்போடு தனது மக்களைச் சந்தித்து, அவர்களின் உதவியோடு எதிரி எதிர்பாராத சமயத்தில் அவனைத் தாக்கி அபார வெற்றி பெற்றான்.

அதேபோல, அமெரிக்க அதிபராக இருந்த ஆப்ரகாம் லிங்கன் அடைந்த தோல்விகள் ஒன்றிரண்டு அல்ல. இளமையில் வறுமை. பலமுறை தேர்தல்களில் போட்டியிட்டு தோல்வியைத் தழுவினார். இருப்பினும் தன் முயற்சியைக் கைவிடவில்லை. முடிவில் அமெரிக்க ஜனாதிபதியாகவே உயர்ந்தார். இது வரலாறு.

''பார்த்தாயா சுப்புரத்தினம்? வருத்தப்படாதே. சோர்ந்து உட்கார்ந்துவிடாதே. நான் உனக்குப் பயிற்சி அளிக்கிறேன்...'' என்று கூறித் தேற்றி சுப்புரத்தினத்தை அவனது வீட்டுக்கு அழைத்துச் சென்றார். அவனைக் கண்ட பெற்றோர் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர்.
தமிழாசிரியர் எல்லா விபரங்களையும் கூறி, ''கனகசபை... இனிமேல் சுப்புரத்தினத்தின் முன்னேற்றத்தைப் பார். அவன் வாழ்வில் மிக உயர்ந்த நிலையை அடையப் போகிறான்...'' என்றார்.

கனகசபையும் மிகுந்த சந்தோசமடைந்து, தமிழாசிரியரை உபசரித்துப் பெருமைப் படுத்தினார்.

**- கலா நிகேதன் பாலு**

**நன்றி: www.dailythanthi.com**

## செயற்பாடு 3

- மாணவர்களின் தரத்திற்குப் பொருத்தமான சிறுவர் நாடகங்களையோ, நாடகக் காட்சிகள் சிலவற்றையோ தெரிவு செய்க. நாடகத்தில் உள்ள கதாபாத்திரங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாணவர்களைக் குழுக்களாக்குக. ஒரு பாடவேளையில் ஒரு குழு பாத்திரமேற்று வாசிக்கவும், ஏனைய மாணவர்கள் அதனைச் செவிமடுக்கவும், பாத்திரமேற்று வாசிப்பதிலுள்ள குறை நிறைகளைப் பற்றிக் கலந்துரையாடவும் சந்தர்ப்பம் வழங்குக. ஏனைய மாணவர்களும் நாடகத்தைப் பாத்திரமேற்று வாசிப் பதற்கு வாய்ப்பு வழங்கி, மாணவரின் நடிப்பார்வத்தைக் காட்டுவதற்கும் தம் இரசனையை வெளிப்படுத்துவதற்கும் களம் அமைக்குக.

## செயற்பாடு 4

- சித்திரக்கதைகள் பலவற்றை வெவ்வேறு செயலட்டைகளில் ஒட்டித் தயார்ப்படுத்துக. சித்திரக் கதையில் வரும் கதாபாத்திரங்களின் எண்ணிக்கைக்கேற்ப, அக்கதைகளை வாசிப்பதற்குரிய மாணவர் குழுக்களை முன்கூட்டியே ஒழுங்கு செய்க. சித்திரக் கதைகளை இரசனையுடன் வாசிக்க வழிகாட்டுக. வாசிக்கும் குழுக்களை (மாணவர் களை) மாற்றி எல்லோருக்கும் சித்திரக் கதைகளை வாசிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.

***எடுத்துக்காட்டு:*** **சித்திரக்கதை**






*நன்றி: கோகுலம் - மே. 2000*

## செயற்பாடு 5

- பல்வேறு மாணவர் சஞ்சிகைகளைத் தேடிப் பெற்றுக்கொள்க. மாணவர்களைச் சிறு குழுக்களாக்குக. குழுக்களில் அவர்கள் வாசித்த சஞ்சிகையில் இரசித்த பகுதிகளை அல்லது தகவல்களை அல்லது விகடத்துணுக்குகளை வகுப்பு மாணவர் அனைவருக்கும் எடுத்துக் கூறுவதற்கு ஒவ்வொரு குழுவுக்கும் சந்தர்ப்பம் வழங்குக.

*எடுத்துக்காட்டு:* **வாசித்துச் சுவைத்த பகுதிகள் / விகடத் துணுக்குகள்**

**நமது மந்திரிகள்**

| | | |
|---|---|---|
| **மூளை** | - | பிரதம மந்திரி |
| **தண்டு வடம்** | - | இணை அமைச்சர் |
| **நரம்பு மண்டலம்** | - | ஊடகத்துறை அமைச்சர் |
| **தலை** | - | கல்வி அமைச்சர் |
| **தோல்** | - | மனிதவள மேம்பாட்டு அமைச்சர் |
| **எலும்பு** | - | பாதுகாப்பு அமைச்சர் |
| **கண்** | - | வெளியுறவுத்துறை அமைச்சர் |
| **காது** | - | தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சர் |
| **மூக்கு** | - | சுகாதாரத்துறை அமைச்சர் |
| **பல்** | - | கிராமியத்துறை அமைச்சர் |
| **இதயம்** | - | உள்நாட்டு விவகாரத்துறை அமைச்சர் |
| **கை** | - | தொழில்துறை அமைச்சர் |
| **வயிறு** | - | உணவுத்துறை அமைச்சர் |
| **கால்** | - | போக்குவரத்து அமைச்சர் |

**ஏ. சுரேஸ்**
**நன்றி : கோகுலம்**

**விகடத்துணுக்குகள்:**



''வெளியே உத்தரவின்றி உள்ளே வரக்கூடாது என்று எழுதிப் போட்டிருக்கின்றேன். ஏன் உள்ளே வந்தாய்?''
''உத்தரவு வாங்குவதற்காகத்தான் உள்ளே வந்தேன்.''

''மேல் நோக்கி வீசும் பொருள் கீழ் நோக்கி விழக் காரணம் என்ன?''
''மேலே அதைப் பிடிப்பதற்கு யாரும் இல்லாத காரணத்தால் தான் கீழே விழுகின்றது ஐயா!''





''அம்மா, எங்கள் வகுப்பில் ஒரு சிறுவன் கீழே விழுந்து விட்டான். எல்லோரும் சிரிச்சாங்க. நான் மட்டும் அழுதேன்.''
''உனக்கு ரொம்பத்தான் இரக்ககுணம்''
''விழுந்ததே நான் தான் அம்மா!''

‘‘உங்க மகன் என்ன செய்யிறான்?’’
‘‘மேலே படிக்கிறான்.’’
‘‘டொக்ரருக்கா?, எஞ்சினியருக்கா?’’
‘‘மாடியிலே கதைப்புத்தகம் வாசித்துக் கொண்டிருக்கிறான்!’’





‘‘டொக்ரர், புத்திசாலிகளுக்கு ஞாபகமறதி வராதென்று சொல்கிறார்களே. அது உண்மையா?’’
‘‘அதை வக்கீலிடம் கேட்டால் எப்படி டொக்ரரிடம் போய்க் கேளுங்கள்!’’

‘‘அப்பா உங்களுக்கு கடிதம் வந்திருக்கு’’
‘‘எங்கே இருந்து வந்திருக்கு’’
‘‘தபாற்காரன் கையில் இருந்துதான்.’’



## செயற்பாடு 6

- சிறுவர் நூல்கள், சஞ்சிகைள், கதைகள், பாடல்கள் என்பவற்றில் மாணவர் ஒவ்வொருவரும் இரசித்த உவமைகள், பழமொழிகள், இணைமொழிகள், இரட்டைக் கிளவிகள், மரபுத்தொடர்கள் போன்ற பகுதிகளைத் தனியான அப்பியாசக் கொப்பியிற் குறிக்கச் செய்க.

- உரைப்குதிகள், பாடல்கள் என்பவற்றில் இடம்பெறும் உவமைகள் மாணவர்கள் இனங்காண ஆர்வமூட்டுக. இதற்காக பின்வருவன போன்ற உரைப்பகுதிகளையும் பாடல்களையும் தெரிவுசெய்து வழங்குக.

***எடுத்துக்காட்டு:*** **உரைப்பகுதி**

ஓர் ஆற்றங்கரையில் வானளவாக வளர்ந்ததோர் ஆலமரம் நின்றது. பத்துப்பேர் சேர்ந்தாலும் அதன் அடிமரத்தைக் கட்டிப்பிடித்தல் முடியாது. அவ்வளவு பருமனுடையது அது. அதன் கிளைகளைத் தூண் போன்ற விழுதுகள் தாங்கி நின்றன.

- ♦ விழுதுகள் எத்தகையன என விளக்குவதற்கு இங்கு கையாளப்பட்ட உவமானம் யாது?’’

| **பாடல்**<br>‘‘கன்றை நினைத்தே உள்ளம்<br>கசியும் பசுவைப் போல<br>நன்றி புரிந்தோர் தம்மை<br>நாமும் நினைக்க வேண்டும்.’’<br>**- வித்துவான் க. வேந்தனார்.** | ♦ எமக்கு நன்மை செய்தவர்களை நாம் எவ்வாறு நினைக்க வேண்டும் என்பதை விளக்குவதற்கு இங்கு கையாளப்பட்ட உவமானம் யாது? |
|---|---|

**பாடல்**

பாலைப்போல நிலவு வானில்
பவனிவரப் போகுது
கோலக் கடல் அலைக்கைதட்டிக்
குதூகலிக்கப் போகுது
நீலவானும் கண்சிமிட்டி நின்று பார்க்கப் போகுது
மாலை வேளை மலர்ந்து கங்குல்
மங்கை தோன்றப் போகிறாள்.

♦ இப்பாடல் இடம்பெற்றுள்ள உவமானம் யாது?

- பழமொழிகள் எடுத்தாளப்பட்ட உரைப்பகுதிகளை வழங்குக. அங்கு இடம்பெற்ற பழமொழிகளை மாணவர் இனங்காணத் துணை புரிக.

***எடுத்துக்காட்டு:*** **உரைப்பகுதி**

என்னுடைய பாட்டி **''ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு''** என்று என்னைப் பார்த்துச் சொல்வார். அப்போது எனக்கு அதன் அர்த்தம் புரியவில்லை. பெரியவனாகிய பிறகுதான் புரிகிறது. கோபத்தால் என் நண்பர்கள் பலரை இழந்திருக்கிறேன். நான் அவசரப்பட்டு முடிவுகளை எடுக்கும்போது **''ஆழம் அறியாமல் காலை விடாதே''** என்று தாத்தா புத்திமதி சொல்வார். அவரது ஆலோசனைகளைக் கேட்டிருந்தால் நான் தோல்விகளைச் சந்தித்திருக்கமாட்டேன். **''காற்றுள்ள போதே தூற்றிக்கொள்''** என்று அப்பா அடிக்கடி சொல்வார். நான் கிடைத்த நல்ல வாய்ப்புகளை எல்லாம் தவறவிட்டதால் இன்று வேதனைப்படுகின்றேன். நான் தோல்விகளைச் சந்திக்கும்போதெல்லாம் என் அம்மா **''வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்''** என்று சொல்லி நம்பிக்கையூட்டுவார். அது மட்டுமல்ல. **''அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்''** துவண்டுவிடாதே. முயற்சி செய் என்றும் தன்னம்பிக்கை ஊட்டுவார். என்னைச் சுற்றி நல்ல சொந்தங்கள் இருந்தும் நான் இப்படி இருப்பதற்கு யார் காரணம் நான் தானே?

| **உரைப்பகுதியில் கையாளப்பட்டுள்ள** | **பழமொழிகளும் கருத்தும்** |
|---|---|
| ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு | - கோபம் சிந்தனைக்கு இடையூறு. |
| ஆழம் அறியாமல் காலை விடாதே | - எதையும் ஆராய்ந்தே செய்தல் வேண்டும். |
| காற்றுள்ள போதே தூற்றிக்கொள் | - சந்தர்ப்பத்தைத் தவறவிடக் கூடாது. |
| வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் | - திறமையில் நம்பிக்கை |
| அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் | - விடா முயற்சி பலன் தரும். |

- இணைமொழிகள் கையாளப்பட்டு ஆக்கப்படும் வாக்கியங்கள் அல்லது பந்திகள் சிலவற்றைக் கொடுத்து, மாணவர்கள இணைமொழிகளின் பிரயோகத்தை நன்கு விளங்கிக்கொள்ள வழிகாட்டுக.

***எடுத்துக்காட்டு:***

- சங்கரன் **அல்லும் பகலும்** பாடுபட்டான்.
- **ஆடிப்பாடி** வேலை செய்தால் அலுப்பிருக்காது என்று கூறுவார்.
- **கரடு முரடான** பாதையூடாக செல்ல முடியுமா? என்று கேட்டார்.
- முகுந்தன் **ஏழை எளியவர்களுக்கு** வாரி வழங்குவான்.
- நாம் பெரியவர்களுடன் **ஏட்டிக்குப் போட்டியாக** நடந்து கொள்ளக்கூடாது.
- விழாவிற்கான ஏற்பாடுகள் **தடல் புடலாக** நடைபெறுகின்றன.
- அவரது **பேரும் புகழும்** உலகெங்கும் பரவியது.

- மரபுத்தொடர்கள் இடம்பெறும் வாக்கியங்களை அல்லது உரைப்குதியினை மாணவர் வாசிக்கச் செய்து, அவற்றில் உள்ள மரபுத்தொடர்களை இனங்காணவும், அவற்றின் பொருளை விளங்கவும் வழிப்படுத்துக.

  ***எடுத்துக்காட்டு:***
  - நாம் எவரையும் **அலைக்களித்தல்** கூடாது.
  - அவனை **அண்டப்புழுகன்** என்று கூறுவர்.
  - நான் பரீட்சையில் சித்தியடைந்தமையைக்கண்டு **உச்சி குளிர்ந்தார்.**
  - துன்பப்படுவோருக்குக் **கைகொடுத்தல்** வேண்டும்.

- இணைமொழிகள் கையாளப்பட்டுள்ள வாக்கியங்கள் அல்லது உரைப்பகுதி என்பன வற்றை மாணவர் வாசித்தபின், இணைமொழிகளை இனங்காணத் துணை புரிக.

  ***எடுத்துக்காட்டு:***

  | **ஒரு சொல் இரட்டித்துவரின் இரட்டைக்கிளவி எனப்படும்.** |
  |---|

  - அவன் **கலகல** வென்று சிரித்தான்.
  - ஆலயமணி **கணீர்கணீர்** என்று ஒலித்தது.
  - பாட்டி **குடுகுடு** வென்று நடந்து சென்றார்.
  - தலை **கிறுகிறு** என்று சுற்றியது.
  - மல்லிகைப்பூ **கமகம** வென்று வாசம் வீசியது.
  - ஆற்று நீர் **சலசல** வென்று ஓடியது.
  - அவனது மனம் **படபட** வென்று அடித்தது.
  - தங்க நகைகள் **பளபள** வென்று மின்னியது.

## கற்றல் - கற்பித்தல் வளங்கள்

- சிறுவர் பாடல்கள்
- கதைகள்
- சிறுவர் நாடகங்கள்
- சித்திரக் கதைகள்
- சஞ்சிகைகள், விகடத் துணுக்குகள்
- உவமைகள் இடம்பெற்ற உரைப்பகுதிகள், பாடல்கள்
- பழமொழிகள் இடம்பெற்ற உரைப்பகுதிகள்
- இணைமொழிகள் இடம்பெற்ற வாக்கியங்கள் / உரைப்பகுதிகள்
- மரபுத்தொடர்கள் இடம்பெற்ற வாக்கியங்கள் / உரைப்பகுதிகள்
- இரட்டைக்கிளவி இடம்பெற்ற வாக்கியங்கள் / உரைப்பகுதிகள்

## கணிப்பீடு

- சிறுவர் பாடல்களை நயத்தல்
- கதைகளை வாசித்து இரசித்தலும், அதில் உள்ள படிப்பினைகள், விழுமியங்கள் என்பனவற்றை இனங்கண்டு கூறுதலும்
- நாடகங்களை வாசித்து இரசித்தலும், அதிலுள்ள படிப்பினைகள், விழுமியங்கள் என்பனவற்றை இனங்கண்டு கூறுதலும்
- சித்திரக் கதைகளை வாசித்து இரசித்தல்
- சஞ்சிகைகள், விகடத்துணுக்குகளை வாசித்து இரசித்தல்
- பழமொழிகள், உவமைகள், மரபுத்தொடர்கள், இணைமொழிகள், இரட்டைக்கிளவி போன்றவற்றை (உரைப்பகுதிகளை வாசித்து) இனங்கண்டு கூறுதல்

என்பனவற்றைக் கணிப்பிடுக.

## தேர்ச்சி மட்டம்

## 3.1.6 கற்றலுக்காகக் கற்க வாசிப்பார்.

### உள்ளடக்கம்

- ✓ பத்திரிகைகள் / சஞ்சிகைகள்
- ✓ பல்வேறுபட்ட நூல்கள்
- ✓ சிறுவர் பாடல்கள்
- ✓ விடுகதைகள், புதிர்கள்
- ✓ இலத்திரனியல் ஊடகங்களில் வெளிவரும் தகவல்கள்

### கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

- ➲ கற்றலுக்காகக் கற்கும் பழக்கத்தை விருத்தி செய்வதை மாணவர்கள் கல்வியின் நோக்கமாகக் கருத வேண்டும் என்பதை விளக்குக. பாடசாலைக் காலத்தில் மட்டு மல்லாது வாழ்நாள் முழுவதும் கல்வி தொடர் வேண்டுமாயின் அது வாசிப்பின் மூலமாகவே முக்கியமான நிகழும் என்பதை எடுத்துக் கூறுக. பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பனவற்றை வாசிக்கவும், வாழ்க்கைக்கு உதவியாக அமைவன பற்றி அவ்வப்போது அறியவும் மாணவரை ஊக்குவிக்குக.

- ➲ கதைகள், நாடகங்கள் போன்ற பல்வேறுபட்ட நூல்கள் வாசிக்க வழிப்படுத்துக.

- ➲ சிறுவர் பாடல்கள், விடுகதைகள், புதிர்கள் முதலியவற்றை வாசித்துப் பல தரப்பட்ட அனுபவங்களை அறியத் துணை புரிக.

- ➲ இலத்திரனியல் ஊடகங்களில் வெளிவரும் தகவல்கள் மனித வாழ்வுக்குப் பெரிதும் பயனளிப்பவையாகையால் அவற்றை மாணவர்கள் வாசிக்கும் பழக்கத்தை விருத்தி செய்க.

### செயற்பாடுகள்

### செயற்பாடு 1 (கற்றலுக்காகக் கற்க வாசித்தல்)

- ▣ மாதமொரு முறை மாணவர்களைப் பயனுள்ள பொழுதுபோக்காக வாசித்தலை மேற்கொள்ளத் தூண்டுக. கலைத்திட்டத்துக்கும் அப்பால் மாணவர்கள் வாசிப்பில் ஈடுபட்டுப் பயன்பெறுவதற்கேற்ற மாணவரின் வயது மட்டம், அறிவு மட்டம் என்பவற் றிற்குப் பொருத்தமான பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும், நாளாந்த வாராந்த வெளியீடுகளில் வரும் சிறுவர் பகுதிகளையும் வாசிக்கவும், பயனுள்ள தகவல்களைச் சேகரிக்கவும் வசதி செய்க. (ஒவ்வொரு பிரதியையாவது அறிமுகஞ் செய்க.)

- ▣ மாணவர்கள் மாறிவரும் உலகின் நடப்புக்களை அறிவதற்கு ஆர்வமூட்டுக.
  ***எடுத்துக்காட்டு:***
  பத்திரிகைகள், சஞ்சிகைகள்

**ஆயுளைக் கூட்டும் புத்தி!**

மிகவும் புத்திசாலித்தனமான மனிதராக இருந்தால் மற்றவர்களை விடப் பதினைந்து வருடங்கள் அதிகமாக வாழலாம் என விஞ்ஞானிகள் கண்டறிந்து உள்ளனர். நமது புத்திசாலித்தனத்தை நிர்ணயிப்பது உடலில் உள்ள ஜீன் ஆகும். அந்த ஜீன் சிறப்பாக இருந்தால் நமது மூளை சுறுசுறுப்பாக இயங்கும். இதனால் நமக்கு வயதானாலும் நமது மூளைக்கு வயது ஆகாது. எனவே எண்பத்தைந்து வயதுவரை வாழலாம். நூற்றுக்கணக்கான மனிதர்களின் ஜீன்களை ஆய்வு செய்து, அவர்களை தொடர்ந்து கண்காணித்து இந்த உண்மையைக் கண்டறிந்து உள்ளனர். எனவே நீண்ட நாள் உயர்வாழ மூளைக்கு வேலை கொடுங்கள்.

## செயற்பாடு 2

- பல்வேறுபட்ட நூல்களை வாசிப்பு மூலையில் வைப்பதன் மூலம் மாணவர்கள் அவற்றைப் பார்க்கவும் தமக்கு விருப்பமான நூலைத் தெரிவுசெய்து வாசிக்கவும் சந்தர்ப்பம் வழங்குக. வகுப்புக்கு ஆசிரியர் சமூகமளிக்காத வேளைகளில் இத்தகைய நூல்களை வாசிக்க வசதிசெய்து கொடுத்து ஆர்வமூட்டுக.

***எடுத்துக்காட்டு:***

- உலகப்புகழ் பெற்ற விஞ்ஞானிகள்
- இயற்கை பேசுகிறது.
- நல்லொழுக்கக் கதைகள்
- சிறுவர் நாடகங்கள்
- வளரும் தொழில்நுட்பம்
- உலகம் உங்கள் கைகளில்
- நல்லறிவுக் கதைகள்
- நாடோடிக் கதைகள்
- பழமொழிக் கதைகள்
- அறிவியல் செய்திகளை

**குறிப்பு:** மாணவரின் சிந்தனை விருத்திக்கும், அறிவு விருத்திக்கும், நல்லொழுக்க விருத்திக்கும் உதவும் ஆக்கபூர்வமான கருத்துகளை அவர்கள் அறிந்து கொள்வதற்கேற்ற பலதரப்பட்ட நூல்களை வாசிப்பு மூலையிற் சேகரித்து வைக்க ஆவன செய்க.

## செயற்பாடு 3

- தவணைக்கு ஒரு முறை மாணவர் பங்குபற்றும் பொழுதுபோக்கு நிகழ்வினை ஒழுங்கு செய்க. சிறுவர் பாடல்கள் பலவற்றைச் சிறுவர் பாடி இன்புறவும், விடுகதைகள், புதிர்கள் என்பனவற்றை விடுவிக்கவும் சந்தர்ப்பம் வழங்குவதோடு ஒவ்வொரு மாணவனும் ஆர்வமாக ஈடுபடுவதற்கும் முன்கூட்டியே ஆயத்தஞ் செய்க.

***எடுத்துக்காட்டு:***

சிறுவர் பாடல்கள் (நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.)
1. ..........................................................................
2. ..........................................................................
3. ..........................................................................

விடுகதைகள் (நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.)
1. ..........................................................................
2. ..........................................................................
3. ..........................................................................

புதிர்கள் (நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.)
1. ..........................................................................
2. ..........................................................................
3. ..........................................................................

**குறிப்பு:** நூலகத்திலுள்ள சிறுவர் நூல்களின் பெயர்களை குறிப் பிடும்போது அவற் றின் ஆசிரியர் களின் பெயர்களையும் குறிப்பிடுக.


## செயற்பாடு 4

- அச்சு ஊடகங்கள் மட்டுமன்றி இன்று இலத்திரனியல் ஊடகங்களும் பெருகி வருவதைக் கருத்திற்கொண்டு, மாணவர்களின் கவனத்தை இலத்திரனியல் ஊடகங்களின் பால் ஈர்த்து அவற்றினூடாக அவர்களின் வாசிப்புப் பழக்கததை விருத்திசெய்ய ஆவன செய்க.

- மாணவர்கள் தொலைக்காட்சி, கணினி, இணையத்தளம், மின்னஞ்சல் போன்ற ஊடகங்களைக் கையாண்டு அவற்றில் வெளியாகும் தகவல்கள், செய்திகள், நூல்கள் என்பவற்றை வாசிக்க உதவும் செயன்முறை வாரத்தைப் (வாசிப்பு வாரம்) பயன்படுத்த முன்கூட்டியே திட்டமிட்டு ஒழுங்கு செய்க.

***எடுத்துக்காட்டு:***

**தேடிவந்த நோபல் பரிசு**



"2-வது உலகயுத்தம் ஆரம்பமாவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் தனது ஆயுதபலத்தை அதிகரிக்க விஞ்ஞானி ஐன்ஸ்டீனை அழைத்து அணுகுண்டு தயாரித்து தருமாறு கேட்டுக் கொண்டதுடன், அதற்கு தேவையான உதவிகளையும் ஏராளமான பணமும் தருவதாக கூறினார்."

இதைக் கேட்டதும் ஐன்ஸ்டீன் சிரித்தார். அதற்கான அர்த்தம் ரூஸ்வெல்ட்டுக்கு புரியவில்லை.

"அறிவியல் கண்டுபிடிப்புகள் மனித குல மேம்பாட்டிற்கு பயன்பட வேண்டுமே தவிர, மனித அழிவுக்கு பயன்படக் கூடாது. பணத்திற்காக எனது மூளையை ஒருபோதும் அடகு வைக்க மாட்டேன்" என்று ரூஸ்வெல்ட்டிடம் உறுதிபட தெரிவித்தார்.

ரூஸ்வெல்ட் வேறு விஞ்ஞானியைக் கொண்டு அணுகுண்டு தயாரித்தார். இரண்டாம் உலகப்போரில் ஜப்பான் நாட்டின் ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களின் மீது அமெரிக்கா அந்த அணுகுண்டுகளை வீசியது. அந்த இரு நகரங்களும் தரைமட்டமாயின. எங்கும் மரண ஓலம். ஆயிரக் கணக்கான மக்கள் மாண்டு மடிந்தனர்.

வேறொரு விஞ்ஞானியால் தயாரிக்கப்பட்ட அணுகுண்டுகளை ஜப்பான் நாட்டின் மீது அமெரிக்கா வீசியதைக் கேள்விப்பட்டு ஐன்ஸ்டீன் அழுதார். அறிவியல் வளர்ச்சி அழிவுக்கு பயன்படுத்தப்பட்டதை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இந்த சோகத்தில் இருந்துவிடுபட அவருக்கு பல ஆண்டுகள் ஆனதாம்.

இந்த உயரிய குணத்தைப் பாராட்டிதான் ஐன்ஸ்டீனுக்கு நோபல் பரிசு தேடி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

***நன்றி: www.thinamalar.com***

## கற்றல் - கற்பித்தல் வளங்கள்

- பத்திரிகைகள், சஞ்சிகைகள்
- பல வேறுபட்ட நூல்கள்
- சிறுவர் பாடல்கள்
- விடுகதைகள், புதிர்கள்
- இலத்திரனியல் ஊடகங்களில் வெளிவரும் தகவல்கள்

## கணிப்பீடு

- பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளை வாசித்தல்
- பல வேறுபட்ட நூல்களை வாசித்தல்
- சிறுவர் பாடல்களை வாசித்தல், பாடுதல்
- விடுகதைகள், புதிர்களை வாசித்தலும், விடுவித்தலும்.
- இலத்திரனியல் ஊடகங்களில் வெளிவந்த தகவல்களை வாசித்தல், திரட்டுதல்

ஆகியவற்றைக் கணிப்பிடுக.

## ஆசிரியர்களின் சுயமதிப்பீட்டிற்கான அளவுகோல்.....

**ஆசிரியர்கள் தமது கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளின் சாதக பாதக விளைவுகளை தாமே சுயமதிப்பீடு செய்துகொண்டு தமது கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளை மாற்றியமைத்துக்கொள்வதற்காகவே இவ்வினாக்கள் தரப்பட்டுள்ளன.**

1. வாசிப்பு முறைகளை அறிந்து அதற்குப் பொருத்தமான அணுகுமுறைகளைப் பின்பற்று கின்றீர்களா?

2. வாசித்தலுக்கும், செவிமடுத்தலுக்கும் இடையிலான தொடர்பினை அனுபவ ரீதியாக உணர்ந்துள்ளீர்களா?

3. வாசித்தலின்போது வரிவடிவத்தைப் பார்த்தல், ஒலித்தல், பொருளுணர்தல் ஆகிய மூன்றும் இணைந்தே நடைபெறுகின்றன என்பதை விளங்கிச் செயற்படுகின்றீர்களா?

4. உரத்து வாசிப்பதற்குப் பொருத்தமான சூழலை வகுப்பறைக்கு வெளியே தெரிவு செய்கின்றீர்களா?

5. உரத்து வாசிக்கும்போது ஒலித்தல் வேறுபாடுகளையும் நிறுத்தக் குறிகளையும் அனுசரித்து வாசிப்பதற்குப் பொருத்தமான செயற்பாடுகளைத் திட்டமிடுகின்றீர்களா?

6. உரத்து வாசிக்கும் திறனை மேம்படுத்த தனியாள் வாசிப்பு முறையே சிறந்தது என்பதை உணர்ந்து பின்பற்றுகின்றீர்களா?

7. உரத்து வாசிக்கப் பயிற்சி பெற்ற பின்னரே மௌன வாசிப்பிற்கான செயற்பாடுகளைத் திட்டமிட்டு வழங்குகின்றீர்களா?

8. மௌன வாசிப்பின் ஊடாக நேரச் சிக்கனம், வாசித்தலில் விரைவு, உறுப்புக்களுக்கு ஓய்வு போன்ற விளைவுகள் ஏற்படுகின்றன என்பதை அனுபரீதியாக உணர்ந்துள்ளீர்களா?

9. கருத்தூன்றி வாசித்துத் துலங்குவதற்குப் பொருத்தமான செயற்பாடுகளைத் திட்டமிட்டு வழங்குகின்றீர்களா?

10. சொற்களஞ்சிய விருத்திக்காக வாசிப்பதற்கு ஏற்ற பல்வேறு வகையான செயற்பாடுகளை வழங்குகின்றீர்களா?

11. தொடர்பாடலுக்காக வாசிக்கும் திறனை மேம்படுத்த தற்காலத்திற்கேற்ற நுட்பமுறை களைப் பின்பற்றுகின்றீர்களா?

12. இரசனையுடன் வாசிப்பதற்கு ஏற்ற செயற்பாடுகளின் ஊடாக வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்ட முயலுகின்றீர்களா?

13. கற்றலுக்காகக் கற்கும் பரந்த வாசிப்பிற்கு ஊக்கமளிக்கின்றீர்களா?


14. இலத்திரனியல் ஊடக வாசிப்பின் அவசியத்தை உணர்ந்து அதற்குரிய அணுகுமுறை களைப் பின்பற்றுகின்றீர்களா?

15. நூலகத்திற்குச் சென்று வாசிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி அதற்கேற்ற செயற்றிட் டங்களை நடைமுறைப்படுத்துகின்றீர்களா?

16. வகுப்பறையில் வாசிப்பு முறையை உருவாக்கி வாசிப்பிற்கு ஊக்கமளிக்கின்றீர்களா?

17. வாசித்தலுக்கான நவீன கற்பித்தல் அணுகுமுறைகளை வகுப்பில் பிரயோகிக்கின் றீர்களா?

18. வாசித்தல் திறன் பிற அடிப்படைத்திறன்களைப் போன்று கற்றல் காலத்தில் எல்லா நிலைகளிலும் வளருகின்றது என்பதக் கருத்திற்கொண்டு செயற்படுகின்றீர்களா?

# 4.0  எழுதுதல் (WRITING)



மொழியின் அடிப்படைத்திறன்கள் நான்கினுள் எழுதுதல் திறன் வளர்படிநிலையில் நான்காவது திறனாகும். எழுதுதல் திறன் எழுத்துத்திறனில் இருந்து வேறுபட்டதாகும். மொழியைக் கற்கும்போது, அதிலுள்ள எழுத்துக்களையும் சொற்களையும் வாக்கியங்களையும் முறையாக எழுதும் அளவிலேயே எழுதுதல் திறன் நிறைவடைகின்றது. மொழியின்வழி கருத்துக்களை வல்லமையாக வெளியிடும் திறனே எழுத்துத்திறனாகும். இது, மொழியின் உயர்நிலைத் திறனாகும். இத்திறன் பெற எழுதுதல் திறனோடு சிந்தனைத்திறனும் இணைய வேண்டும். கடிதம், கட்டுரை, படைப்பு போன்றன எழுத்துத்திறன் சார்ந்தனவாகும். எழுதுதல் திறன் என்பது, எழுத்துக்களை எழுதுவதற்குரிய முன்செயல்கள், எழுதும்முறை, எழுதும் நிலை ஆகியவற்றினோடு தொடர்புடையதாகும். செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல் ஆகிய திறன்களைப் பெறுவதற்கு பாடசாலைகள் தவிர்ந்த பிறச் சூழல்கள் உதவுகின்றன. ஆனால் எழுதுதல் திறன் வளர்ச்சிக்குப் பாடசாலையும் ஆசிரியர்களுமே பொறுப்பாவார்கள். எதை எழுதுகின்றார்கள் எனக்குறிப்பது எழுதுதல் திறன் அன்று. எப்படி எழுதுகின்றார்கள் என்பதே எழுதுதல் திறனனோடு தொடர்புடையதாகும். மொழியின் அடிப்படைத் திறன்களான செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகியன ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. எனவே அடிப்படைத்திறன்களை வளர்ப்பதில் ஆரம்பக்கல்விக்கு பெரும்பங்கு உண்டு.

## தேர்ச்சி

**4.1 கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு எழுத்தாக்க நுட்பங்களையும், முறைகளையும் பயன்படுத்தி எழுதுந் திறனை விருத்தி செய்வார்.**


## தேர்ச்சி மட்டம்

**4.1.1 எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து எழுதுவார்.**

## உள்ளடக்கம்

- ✓ அமைப்பு, அளவு, திசைமுகம், உறுப்பு ஆகியவற்றை அனுசரித்து எழுதுதல்
- ✓ உயிர்க்குறிகளை அனுசரித்து எழுதுதல்
- ✓ நிறுத்தக் குறிகளை (முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி, வியப்புக்குறி, மேற்கோட்குறி, அடைப்புக்குறி, இடையீட்டுக் கோடு) அனுசரித்து எழுதுதல்

***எழுதுகோலை பிடிக்கும் முறை***




- எழுதுகோலைப் பயன்படுத்தும் போது அதனை முறையாகப் பிடிக்கப்பழக்க வேண்டும்.

- ✓ சொல் வாக்கியம் பந்தி என்பவற்றுக்கிடையே ஏற்ற இடைவெளி விட்டு எழுதுதல்
- ✓ நெடுங்கணக்கு ஒழுங்குமுறையைப் பின்பற்றி எழுதுதல் (எழுத்துக்கள், சொற்கள்)
- ✓ ஒலித்தல் வேறுபாடுகளை அனுசரித்து எழுதுதல்

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

- எழுத்துகளின் அமைப்பு, அளவு, திசைமுகம், உறுப்பு என்பவற்றை அனுசரித்து எழுத வழிப் படுத்துக.
  - இரண்டாம், மூன்றாம், நான்காம் தரங்களிலே கடைப்பிடித்த அணுகுமுறைகளைப் பின்பற்றுக.

- தனிக்கோட்டு அப்பியாசப் புத்தகங்களில் மாணவர்கள் எழுதுவதற்குப் போதிய வாய்ப்புகள் அளிப்பதனூடாகவும் சுதந்திரமான எழுத்துவேலைகளைக் கொடுப்பதனூடாகவும் தெளிவாக எழுதுதல், எழுத்தை முழுமையாக எழுதுதல், வரிசை பிசகாமல் எழுதுதல் என்னும் பொறிமுறைத் திறன்களின் தேர்ச்சிக்குத் துணை புரிக.

- உயிர்க்குறிகளை முறையாக அனுசரித்து எழுது வதற்கு வழிப்படுத்துக. முன்னைய வகுப்புகளில் கற்ற உயிர்க்குறிகளை மாணவர்க்கு நினைவு படுத்தி, தமிழிலுள்ள எல்லா உயிர்க்குறிகளை யும் சரியான முறையில் இட்டு எழுதுவதற்குப் பழக்குக.

***எடுத்துக்காட்டு:***

| உயிர்க்குறிகள் | பெயர் | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| ா | அரவு | பாலைவனம் |
| ி | விசிறி | சிந்தனை |
| ீ | விசிறியும் சுழியும் | மீன்கள் |
| ெ | ஒற்றைக்கொம்பு | செந்தமிழ் |
| ே | இரட்டைக் கொம்பு | மேளம் |
| ை | சங்கிலிக் கொம்பு | வைக்கோல் |
| ெ...ா | ஒற்றைக்கொம்பும் அரவும் | தொட்டில் |
| ே...ா | இரட்டைக்கொம்பும் அரவும் | சோதனை |
| ı | கீழ்க்கால் | சுவாசம் |
| ு | கீழ்க்காலும் சுழியும் | சூரியன் |
| ப | மடக்கேறு | நுங்கு |
| ா | மடக்கேறும் அரவும் | நூதனசாலை |

- எழுதுகோலை நடுவிரல், ஆட்காட்டி விரல், பெருவிரல் ஆகிய மூன்று விரல்களாலும் தான் பிடிக்கச் செய்ய வேண்டும்.
- எழுதுகோலைப் பிள்ளைகள் பிடிக்கும் முறையை ஆரம்பத்திலே பழக்க வில்லை யென்றால் பின்னர் திருத்து வது சிரமம்.
- எழுதுகோலை முறையாகப் பிள்ளை கள் பிடிப்பதை ஆசிரியர் உன்னிப் பாகக் கவனித்து; முறை பிறழும் போது திருத்த வேண்டும்.
- எழுதுகோலை அதன் நுனியிலிருந்து 3 முதல் 4 சென்றிமீற்றர் தூரத்தில் விரல்களாற் பிடித்தல் வேண்டும்.
- பிள்ளைகள் எழுதும்போது,
  - எழுதுகோலைப் பிடிக்கும் முறை.
  - எழுதுபலகை, தாள் போன்ற வற்றை வைக்கும் முறை.

  போன்ற நுட்பங்களை உரிய முறையில் ஆசிரியர் கையாளுதல் வேண்டும்.



- பிள்ளைகள் அமரும் கொண்ணிலை யிலும் கவனம்செலுத்த வேண்டும்



- மாணவர்களின் எழுத்தாக்கங்களில் நிறுத்தக்குறிகளின் பிரயோகம் மிகவும் அவசிய மென்பதை வற்புறுத்துக.

- பின்வரும் நிறுத்தக் குறிகளைப் பிரயோகித்து மாணவர்கள் எழுதுவதற்கு வாய்ப்பாகப் போதிய பார்த்தெழுதும் பயிற்சிகளையும், கேட்டெழுதும் பயிற்சிகளையும் வாரந் தோறும் வழங்குக.

***எடுத்துக்காட்டு:*** **நிறுத்தக்குறிகள் (PUNCTUATION)**

| | | |
|---|---|---|
| (.) | முற்றுப்புள்ளி | (Full stop) |
| (,) | காற்புள்ளி | (Comma) |
| (?) | வினாக்குறி | (Q uestion mark) |
| (!) | வியப்புக்குறி | (Exclamation mark) |
| (‘‘...”) | மேற்கோட்குறி | (Quotation mark) |
| ( ) | அடைப்புக்குறி | (Brackets) |
| ( - ) | இடையீட்டுக்கோடு | (Dash) |

- நிறுத்தக் குறிகளைப் பொருத்தமாகப் பிரயோகிப்பதற்கு வாய்ப்பாக முதலில் நிறுத்தக் குறிகள் இட்டு எழுதப்பட்ட உரைப்பகுதிகளைப் பார்த்தெழுத வழிப்படுத்துக. பின்னர் நிறுத்தக் குறிகள் இடப்படாத உரைப்பகுதிகளில் பொருத்தமாக நிறுத்தக் குறிகளை இடுமாறு வழிப்படுத்துக. அதன் பின்னர் கேட்டெழுதுதல் பயிற்சிகளின்போதும் நிறுத்தக் குறிப் பிரயோகத்திற்குப் பயிற்சியளிக்குக.

- சொல், வாக்கியம், பந்தி என்பவற்றுக்கிடையில் உரிய இடைவெளி விட்டு எழுத மாணவரை வழிப்படுத்துக. தரம் 4 ஆசிரியர் வழிகாட்டியிலே (பக்கம் 83, பக்கம் 84, பக்கம் 85) இவை தொடர்பாகக் கூறப்பட்டவற்றை எடுத்துக் கூறுக.

***எடுத்துக்காட்டு:***

### இடைவெளி

எழுதும்போது உரிய இடைவெளிகளோடு எழுதுவதற்குப் பழக்குதல் வேண்டும். இடைவெளிகளை எழுத்து இடைவெளி, சொல் இடைவெளி, வாக்கிய இடைவெளி என மூன்று வகையில் காணலாம்.

**எழுத்து இடைவெளி**

ஒரு எழுத்துக்கும் அடுத்து எழுதப்படும் எழுத்துக்கும் இடையே அதே அளவில் இன்னொரு எழுத்தை எழுத முடியாத அளவில் இடைவெளி அமைய வேண்டும்.

***எடுத்துக்காட்டு:***

வணக்கம் → **முறையான இடைவெளி**
வ ண க் கம் → **முறையற்ற இடைவெளி**

**சொல் இடைவெளி**

சொற்கள் எழுதப்படும்போது ஒவ்வொரு சொல்லுக்கும் இடையே எழுதப்பட்ட எழுத்தளவில் ஓர் எழுத்தை எழுதும் அளவிற்கு இடைவெளி இருத்தல் வேண்டும்.

மலர்கள் அழகானவை - **முறையானது.**
மலர்கள் அழகானவை - **முறையற்றது.**

**வாக்கிய இடைவெளி**

இரண்டு வாக்கியங்களுக்கிடையிலும் ஓர் எழுத்தை எழுதும் அளவிற்கு இடைவெளி இருத்தல் வேண்டும்.

- பெரிய எழுத்துகளில் எழுதப்பட்ட தமிழ் நெடுங்கணக்கு அட்டையைக் காட்சிப்படுத்தி, தமிழ் அகராதியை மாணவர்கள் பயன்படுத்துவதற்கு வழிகாட்டி, சொற்களின் பொருளை எழுதுவதற்குத் துணை புரிக.
  - குறிப்பிட்ட சொற்களை நெடுங்கணக்கு ஒழுங்கு முறையில் எழுத வழிப்படுத்துக.
  - அச்சொற்களின் பொருளை அகராதியைப் பயன்படுத்தி எழுதுமாறு கூறுக.

***எடுத்துக்காட்டு:***

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணை |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

ஆசிரியரால் தெரிவுசெய்து வழங்கப்பட்ட சொற்களின் பொருளை எழுத அகராதியைப் பயன்படுத்தல்.

***எடுத்துக்காட்டு:***

**அ**

**அக்கரை** - எதிர்க்கரை, நீர் நிலையின் மறுகரை

**அகழி** - கோட்டையைச்சுற்றியுள்ள ஆழமான நீர்நிலை, மதில் சூழ் கிடங்கு; ஓடை; கேணி; கிடங்கு

**ஆ**

**ஆசிரமம்** - முனிவர் உறைவிடம்; பன்னசாலை; வாழ்க்கை நிலை

**ஆட்காட்டி** - சுட்டுவிரல்; பறவை வகை; ஆள்களுக்கு வழி முதலியவற்றைக் குறித்துக் காட்டும் அடையாளப் பலகை

**இ**

**இசைக்கருவி**- தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, மிடற்றுக்கருவி, கஞ்சக் கருவி என ஐந்து வகைப்படும்.

**இசைத்தமிழ்** - முத்தமிழுள் ஒன்று

**ஈ**

**ஈகை** - கொடை; பொன்; கற்பகம்; காடை; காற்று, மேகம்; கற்பகமரம்

**ஈரடி** - இரண்டு அடி; இணையடி; ஈரப்பதன்; ஈரொட்டு; ஐயம்; இரண்டு போகம்

*- ஆதாரம்: தமிழ் - தமிழ் அகரமுதல்*
*தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம்*

- ஒலித்தல் வேறுபாடுடைய எழுத்துகள் கொண்ட (ல, ள, ழ இடம்பெற்ற, ன, ண, ந இடம்பெற்ற, ர, ற இடம்பெற்ற) சொற்கள் இடம்பெறும் மாதிரி அட்டைகளைக் காட்சிப்படுத்துக. ஒலித்தல் வேறுபாடுகள் எவ்வாறு பொருளை வேறுபடுத்தும் என்பதைத் தெளிவுபடுத்திய பின்னர், அவ்வாறான சொற்களைத் தனித்தனி வாக்கியங்களில் அமைக்க நெறிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு:***

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **அரம்** | - | ஒரு கருவி | **அலை** | - | நீரலை |
| **அறம்** | - | தருமம் | **அளை** | - | புற்று |
| **அரி** | - | வெட்டு | **அழை** | - | கூப்பிடு |
| **அறி** | - | தெரி | **ஒலி** | - | ஓசை |
| **அரை** | - | பாதி | **ஒளி** | - | வெளிச்சம் |
| **அறை** | - | வீட்டின் பகுதி | **ஒழி** | - | நீக்கு |
| **கரை** | - | ஓரம் | **வலி** | - | நோவு |
| **கறை** | - | அழுக்கு | **வளி** | - | காற்று |
| | | | **வழி** | - | பாதை |

- மேலே தரப்பட்டுள்ள சொற்களின் கருத்தை விளங்கி தனித்தனி வாக்கியங்கள் அமைக்க மாணவர்களை வழிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு:***

**அரி** : காய்கறிகளைச் சிறு சிறு துண்டுகளாக **அரி**ந்தான்.

**அறி** : தெரியாத விடயங்களை ஆசிரியரிடம் கேட்டு **அறி**ந்தான்.

## செயற்பாடுகள்

### செயற்பாடு 1 (எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து எழுதுதல்)

- வாரம் ஒரு தடவை மாணவர்கள் எழுத்துப் பொறிமுறையை அனுசரித்து உறுப்பாகவும் வேகமாகவும் எழுதுவதற்கு வகுப்பறையில் சந்தர்ப்பம் வழங்குக. உறுப்பெழுத்துக் கெனத் தனியான அப்பியாசக் கொப்பியை வைத்திருக்க (இயலாதவிடத்து ஒரு அப்பியாசக் கொப்பியின் பகுதியை ஒதுக்கி வைத்திருக்க) அறிவுறுத்துக. தனிக்கோட்டு அப்பியாசக் கொப்பியில் மாணவர்கள் உறுப்பமைய எழுதுவதற்கு நான்கு சொற் களுக்குக் குறையாத வாக்கியங்களை ஆயத்தஞ் செய்து அவற்றைப் பெரிய எழுத்தில் எழுதிக் காட்சிப்படுத்துக.

- மாணவர்களைப் பிழையின்றியும் உறுப்பாகவும் வேகமாகவும் எழுதப் பயிற்றுக. மாணவர் ஒவ்வொருவரையும் அவதானித்து உடன் திருத்துக. இடர்ப்படுவோருக்குத் துணை புரிக.

**குறிப்பு:** ஒரு பொருட்களைப் பற்றி நான்கு சொற்களுக்குக் குறையாத ஆறு வாக்கியங்களை எழுதித் தயாராக வைத்திருக்கவும். முதலாம் நாள் மாணவர்கள் எழுதுவதற்கு முதலாவது வாக்கியத்தை மட்டும் காட்சிப் படுத்துக. இரண்டாம் நாள் முதல் வாக்கியத்தோடு இரண்டாவது வாக்கி யத்தையும் உறுப்பாகவும் வேகமாகவும் பிழையின்றியும் எழுதுவதை உறுதிப்படுத்துக. ஆறாம் நாள் அப்பொருள் பற்றிய ஆறு வாக்கியங் களையும் எழுத வழிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு:***

(1) மரக்கிளைகளினூடாக வந்த இளஞ்சூரியனின் கதிர்கள் எனது மேனியை இதமாக வருடிச் சென்றன.
(2) பறவையினங்களின் இனிய கானத்தினால் அப்பகுதி முழுவதும் இசையில் மூழ்கியிருந்தது.
(3) மெல்லென வீசிய இளந்தென்றல் என்னை அன்புடன் தழுவிச் சென்றது.
(4) காட்டு மலர்கள் ஆற்றின் இரு பக்கங்களையும் எழில் செய்தன.
(5) மலரிதழ்களினாலும் மகரந்தங்களினாலும் மூடப்பட்டிருந்த தரையின் மீது எனது பாதங்கள் பதியும்போது மென்மையான கம்பள விரிப்பில் நடப்பதுபோன்று உணர்வு பெற்றேன்.
(6) மலரிதழ்களால் அழகுபெற்ற நீரின் மீது அலைகள் அங்குமிங்கும் எழுந்தபோது, அவை அலங்காரம் செய்யப்பட்ட நீல வண்ண ஆடையைப் போலக் காட்சியளித்தன.

## செயற்பாடு 2

- பல்வேறு உயிர்க்குறிகள் கொண்ட சொற்கள், சொற்றொடர்கள் என்பனவற்றைக் காட்சிப்படுத்தி, அவற்றை மாணவர்கள் பிழையின்றி எழுதி வாசிக்கச் செய்க. வாசிக்கும் போது வரும் ஒலிச் சேர்க்கையே அச்சொற்களின் பொருளை உணர்த்து வதை விளக்குக.

***எடுத்துக்காட்டு:***

1. கராம்பு - இங்கு ரகரத்துடன் ‘ ா’ என்னும் உயிர்க்குறி வரும்போது தான் அச்சொல் வாசனைத் திரவியத்தை உணர்த்தும்.
அவ்வுயிர்க்குறி ரகரத்துடன் வராமல். ககரத்துடன் சேர்ந்து எழுதப் பட்டால் அச்சொல்லின் பொருள் **‘காரம்பு’** என வேறுபட்டு விடும்.

2. கலாரசிகன் - இங்கு லகரத்துடன் ‘ ா’ என்னும் உயிர்க்குறி இடம்பெற்றாலே ‘கலையை ரசிப்பவன்’ என்னும் பொருளை உணர்த்தும் மாறாக அவ்வுயிர்க்குறி மாறி ககரத்துடன் இடம்பெற்றால் **‘காலரசிகன்’** என்றாகி ‘காலத்தை ரசிப்பவன்’ என்னும் பொருளை உணர்த்தும்.

- இதனால் உயிர்க்குறிகள் சரியாக இடம்பெற்றிருப்பதை உறுதிப்படுத்துவதற்காக, மாணவர்கள் தாம் எழுதியவற்றைத் தாமே ஒருமுறை வாசிக்க வேண்டுமென வற்புறுத்துக.

| | |
|---|---|
| **குறிப்பு:** | உயிர்க்குறிகள் மாறி இடப்படுவதால் சொற்கள், சொற்றொடர்களில் பல பிழைகள் ஏற்படுவதைச் சுட்டிக்காட்டுக. |

## செயற்பாடு 3

- முன்னைய வகுப்புகளிலே மாணவர் கற்ற நிறுத்தக் குறிகளை அனுசரித்து எழுதுவதற்கு மீட்டற் பயிற்சி வழங்குக. (முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி, வியப்புக்குறி, மேற்கோட்குறி)

***எடுத்துக்காட்டு:***

**பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.**

1. உலகில் மக்கள் பல மொழிகளைப் பேசுகின்றனர்
2. அறிவு வளர்ச்சிக்குக் கல்வி இன்றியமையாதது
3. அம்மா வானூர்தி எப்படிப் பறக்கிறது

4. தாளின் வலப்பக்க மேல் மூலையில் வீட்டு எண் வீதியின் பெயர் ஊரின் பெயர் நாள் ஆகியவற்றை எழுதிவிட்டேன்
5. நன்றி தாயே வணக்கம் வருகிறேன்
6. மன்னா என்ன கூறுகின்றீர்கள்
7. கண்ணன் நான்தான் பாட்டை எழுதினேன் என்று மகிழ்வுடன் கூறினான்

- அடைப்புக்குறி, இடையீட்டுக்கோடு என்னும் நிறுத்தக் குறிகளை அறிமுகஞ் செய்க. அவை இடம்பெறும் உரைப்பகுதிகளை/வாக்கியங்களைப் பெரிதாக எழுதிக் காட்சிப் படுத்தி, அக்குறிகள் எவ்விடங்களில் அமைகின்றன என்பதை விளக்குக.

***எடுத்துக்காட்டு 1: அடைப்புக்குறி ( )***

**கரிகாலன் :** வாருங்கள் சான்றோர்களே, வாருங்கள் (அங்கே உள்ள இருக்கைகளைக்காட்டி) அமருங்கள்.

**இருவரும் :** நன்றி, மன்னவா! நன்றி.

**கரிகாலன் :** தாங்கள் இருவரும் ஏதோ வழக்கு உரைக்க வந்துள்ளதாக அறிந்தேன். தாங்கள் கூற வந்த வழக்கு யாதோ?

(இருவரும் சற்றுத் திகைப்புடன் ஏதும் பேசாமல் அமைதியாக இருந்தார்கள்.)

ஏன் மௌனம்? வழக்கைக் கூறலாமே!

***எடுத்துக்காட்டு 2: இடையீட்டுக் கோடு ( - )***

1. இளவேனில், ஆண்டு, மாலை, சித்திரை, வாரம், நிமிடம் - இவை எவற்றைக் குறிக்கின்றன?
2. புறா, வீடு, தாய், கம்பர், அண்ணன், மரம், கல் - இவை யாவும் பெயர்ச் சொற்களே.
3. கை, வா, போ - இவை தனித்தனியே பொருள் தருகின்றன.

- நிறுத்தக் குறிகளைப் பிரயோகித்து மாணவர்கள் எழுதும்பொருட்டு பார்த்தெழுதும் பயிற்சிகளைச் செயலட்டைகளில் தயாரித்து வழங்குக.

- வாரந்தோறும் கேட்டெழுதுவதற்கான சந்தர்ப்பம் வழங்குக. நிறுத்தக் குறிப் பிரயோகத்திற் கவனம் செலுத்துக.

## செயற்பாடு 4

- மாணவர்கள் வாசித்த பகுதிகளிலிருந்து அரும்பதங்களைத் தேர்ந்தெடுத்து சொற்களஞ் சியக் கோவையொன்றைத் தனியான அப்பியாசக் கொப்பியில் தொகுத்து எழுதும் ஒப்படையை ஒவ்வொரு மாணவருக்கும் வழங்குக.

- ஒவ்வொரு மாணவரும் தொகுத்த சொற்களஞ்சியக் கோவையை மாதமொருமுறை வகுப்பறையிற் காட்சிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குக. அவ்வாறு காட்சிப்படுத்தும் போது நெடுங்கணக்கு ஒழுங்கு முறையில் எழுதவும் அச்சொற்களின் பொருளை அகராதியைப் பயன்படுத்தி எழுதுவதற்கும் வழிப்படுத்துக.
(நெடுங்கணக்கு ஒழுங்கு முறையை மாணவர்கள் அவதானிக்கச் செய்து, சொற்களைக் கோவைப்படுத்தவும், அகராதி, கலைக்களஞ்சியம் என்பவற்றைப் பயன்படுத்திப் பொருள் எழுதவும் மாணவரைப் பரிச்சயப்படுத்துதல் மாணவரின் சுயதேடல் முயற்சிக்குப் பயனளிப்பதாகும்.)

***எடுத்துக்காட்டு:*** **சொற்களஞ்சியக் கோவை**

| | | | |
|---|---|---|---|
| குளிர் | குறடு | குறிப்பாக | குறுக்கு |
| குளிர்ச்சி | குறத்தி | குறிப்பு | குறுக்குப்பாதை |
| குளிர்சாதனம் | குறவஞ்சி | குறியீடு | குறுகிய |
| குற்றச்சாட்டு | குறிக்கோள் | குறில் | குறுநாவல் |
| குறட்டை | குறிஞ்சி | குறுக்கீடு | குறும்பன் |

குளிர் 192 குறிக்கோள்

3. மகிழ்ச்சியடை. The president was highly satisfied with the welcome.
**குளிர்-** குளிர்ச்சி, cold. Wear warm clothes to avoid the cold.
**குளிர்காய்-** நெருப்புக்கு அருகிலிரு, warm yourself near the fire. குளிர் காய்ச்சல், shivering fever. குளிர் காலம், winter.
**குளிர்ச்சி-** குளிர், cold. The cold of winter. ஒ. வெப்பம்.
**குளிர் சாதனம்-** குளிர்விக்கும் பெட்டி, air conditioner. குளிர்சாதன வசதி, air conditioning facilities. குளிர்ப்பதனப் பெட்டி, freezer refrigerator. குளிர்பானம், cool drink. குளிர் சேமிப்பகம், cold storage.
**குற்ற உணர்வு-** குற்ற உணர்ச்சி, guilty feeling. Now I have a guilty feeling about the happening.
**குற்றக் குறிப்பாணை-** குற்றச்சாட்டு ஆணை, charge memo. He was served with a charge memo.
**குற்றச்சாட்டு-** குற்றம் கூறல், accusation, allegation. An allegation was brought against the minister.
**குற்றப் பத்திரிகை-** குற்றங்கள் அடங்கிய தொகுப்பு, charge sheet. The police filed a charge sheet in the criminal court.
**குற்றப் பிரிவு-** புலனாய்வுப் பிரிவு, crime branch of the police department.
**குற்றம்-** 1. தவறு, fault. It is a fault to disrespect the elders.
2. சட்டத்திற்குப் புறம்பான செயல், criminal offence.
3. பழி, blame. Don't blame others for your failures. It is due to circumstances.
**குற்றம் சாட்டு-** 1. பழிசுமத்து, accuse. You are accused of cheating.
2. பழிகூறு, blame. Why do you blame me for things not connected with me?
**குற்றவாளி-** குற்றம் செய்தவர், the accused. The accused is acquitted.
**குற்றவியல்-** குற்றங்களை ஆராயும் துறை, criminology.
**குற்றேவல்-** சிறுபணி, menial work.
**குறட்டை-** தூங்கும் பொழுது தொண்டையிலிருந்து எழும் ஒலி, snoring. His snoring will disturb other's sleep.
**குறடு-** 1. பிடிப்பி, pincers, pliers.
2. திண்ணைக்கு அருகிலுள்ளது, adjacent floor to pial.
**குறத்தி-** குறமகள், gypsy girl. குறத்தி நடனம், gypsy dance. குறவன், gypsy man, kuravan.
**குறவஞ்சி-** குறவஞ்சிப் பாடல், kuravanji, a poem involving the fore telling of a gipsy girl to the heroine of the poem, a minor form of literature.
**குறளிப் பிசாசு-** பேய், goblin in fairytales doing all michiefs.
**குறளி வித்தை-** மாயவித்தை, magic tricks.
**குறி-** 1. எழுது, Note down what I say.
2. வேண்டியதை மட்டும் பார், mark. Read only the marked page.
3. நாள்குறி, fix date. The date has been fixed for the marriage.
4. காட்டு, indicate. What does this diagram indicate?
**குறி-** 1. இலக்கு, aim, target. What is your aim?
2. அடையாளம், sign or dash. + is a sign of addition.
3. குறிசொல்லல், fortune telling.
**குறிக்கோள்-** இலட்சியம், objective. What is your objective in life?
**குறிஞ்சி-** 1. 12 ஆண்டுகளுக்கு ஒரு

குறிஞ்சி 193 குறும்பி

முறை பூக்கும் பூ, kurinji flower.
2. குறிஞ்சி நிலம், hilly tract.
**குறித்த, குறித்து-** பற்றிய, regarding. The manager said nothing regarding your promotion.
**குறித்த நேரம்-** குறிப்பிட்ட நேரம், at the appointed time.
**குறிப்பாக-** சிறப்பாக, in particular.
**குறிப்பிட்ட-** 1. ஒதுக்கி செய்யப் பட்ட, specified. The specified departments are the following. பா. குறிப்பாக.
**குறிப்பிடு-** தெரிவி, mention. The president mentioned several things in the course of his address.
**குறிப்பு-** 1. கருத்துக்கள், notes. Take notes in the class. 2. சான்று, evidence, the evidences of foreigners. 3. சாதகக் குறிப்பு, horoscope. குறிப்பெடு, take notes.
**குறிப்பேடு-** 1. நினைவுக் கணக்குப் பதிவுகள் செய்யும் புத்தகம், day-book. 2. குறிப்புகள், notes. 3. கையேடு, hand book.
**குறிபார்-** இலக்கை நோக்கு, aim at. He aimed his gun at the target.
**குறியாக இரு-** பிடிப்பாக இரு, be keen on it. He is very keen on earning wealth.
**குறியீட்டெண்-** குறிக்கும் எண், price index. Dearness allowances are given on the basis of price index.
**குறியீடு-** அடையாளம், symbol. $O_2$ is the symbol of Oxygen.
**குறில்-** குறைந்த ஓசை உள்ள உயிரெழுத்து, short vowel. (எ.டு) அ, இ, உ, எ, ஒ.
**குறுக்களவு-** விட்டம், diameter.
**குறுக்கிடு-** 1. இடைமறி, intervene. Don't intervene in the middle.
2. தலையிடு, interfere. You are unnecessarily interfering in all matters.
3. காண், come across. I came across my friend on the way. 4. குறுக்கீடு, interference, interruption.
**குறுக்கு-** அளவில் குறை, shorten, shroten the length of the pole.
**குறுக்கு-** குறுக்காகவுள்ள, crosswise. a yellow flag with a red band going crosswise from top left to bottom right. குறுக்குவெட்டுத் தோற்றம் cross section. ஒ. நெடுக்கு.
**குறுக்குக் கேள்வி-** இடைமறித்து கேட்கும் கேள்வி, cross question. குறுக்குச் சட்டம், cross piece. குறுக்கு மறுக்கு இலையமைவு, decussate leaf arrangement as in calotropis.
**குறுக்குப் பாதை-** சுருக்குவழி, short cut.
**குறுக்கு வழி-** 1. நேர்மையற்ற வழி, dishonest means. 2. கணக்குப் போடு வதில் சுருக்கமான முறை, short cut method in Maths.
**குறுக்கு விசாரணை-** cross examination in the court.
**குறுக்கே-** இடையே, across. There is a proposal to build a bridge across the river.
**குறுக்கே நில்-** எதிர், oppose. We don't want to oppose you with regard to your marriage.
**குறுகிய-** குறுகலான, narrow. narrow outlook. narrow lane.
**குறுணை-** நொறுங்கிய தானியம், broken grain.
**குறுநாவல்-** சிறிய நெடுங்கதை, short novel.
**குறும்பன்-** குறும்பு செய்பவன், michief - maker.
**குறும்பி-** காது அழுக்கு, ear-wax.

***நன்றி: மாணவர் அகராதி***

## செயற்பாடு 5

- ஒலித்தல் வேறுபாடுடைய எழுத்துகள் கொண்ட (ல, ள, ழ என்பன, ன, ண, ந என்பன, ர, ற என்பன) சொற்கள் இடம்பெறும் வாக்கியங்கள் சிலவற்றைச் செயலட்டை களாகத் தயார்ப்படுத்துக. அச்செயலட்டைகளை மாணவர் ஒவ்வொருவருக்கும் வழங்குக.

***எடுத்துக்காட்டு:***

### செயலட்டை - ❶ (லகர, ளகர, ழகர வேறுபாடு)

கீறிட்ட இடங்களைப் பொருத்தமான எழுத்தினால் நிரப்பி வாசித்து, அவ்வாக்கியங் களை எழுதுக.

(அ) கு....ந்தைகள் நி.... க்காட்சியைக் கண்டு க....த்தனர்.
(ஆ) அப்பெரிய மரத்தின் கி..... கள் கு..... ர் நி..... ..... ப் பரப்பின.
(இ) ம..... பெய்யும் கா..... ங்களில் ஆற்றில் வெ..... ...... ம் பெருகி ஓடும்.
(ஈ) நா..... மா...... யில் நாம் கண்டிக்குச் செ..... ...... வேண்டும்.
(உ) மெ ..... குவர்த்தியின் வெ...... ச்சத்தினால் இரு..... வி..... கியது.

### செயலட்டை - ❷ (னகர, ணகர, நகர வேறுபாடு)

கீறிட்ட இடங்களைப் பொருத்தமான எழுத்தினால் நிரப்பி வாசித்து, அவ்வாக்கியங் களை எழுதுக.

(அ) மீ....கள் த.... ..... ரிலுள்ள அழுக்குகளைத் தி....று சுத்தப்படுத்துகின்றன.
(ஆ) நான் அதனைக் க.... ..... ற்ற போது, க.... ....ர் விட்டுக் கதறினேன்.
(இ) இ....றைய உலகில் ம.... தர்கள் அ....வரும் ப....ம் சம்பாதிக்கவே விரும்புகின்றனர்.
(ஈ) பெரியவர்களின் ம .... தைப் பு .... படுத்தாமல் பேசுதல் வே.... டும்.
(உ) வைத்தியசாலையில் ....யாளிகள் பருக வெ.... ....ர் கொடுக்கப்பட்டது.

### செயலட்டை - ❸ (ரகர, றகர வேறுபாடு)

கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமான எழுத்திட்டு நிரப்பி வாசித்து, அவ்வாக்கியங் களை எழுதுக.

(அ) நோயற்.... வாழ்வுக்கு ம....க்க.... உணவே சி....ந்தது.
(ஆ) இன்....ய சி....வர்கள் நாளைய பி....சைகள் என்று கூ....ப்படுவதுண்டு.
(இ) கட....க....யில் சிலர் க....ப்பந்தாட்டத்திலும், சிலர் கா....பந்தாட்டத்திலும் ஈடுபட்டனர்.
(ஈ) அவரது அருமையையும் பெருமையையும் அவரின் ம....ணத்தின் பின்னரே அ....ய முடிந்தது.
(உ) வ....சையில் நிற்குமா.... மாணவர்கள் அ....வுறுத்தப்பட்டனர்.

- ஒலி வேறுபாடுகளை இனங்காணவும், அவற்றை அனுசரித்து சொற்கள் வாக்கியங் கள் என்பவற்றைப் பிழையின்றி எழுதவும் மாணவருக்குப் போதியளவு பயிற்சிகள் வழங்குக.

***எடுத்துக்காட்டு:***

அடைப்பில் உள்ள எழுத்துகளிலிருந்து பொருத்தமான எழுத்தைத் தெரிவுசெய்து கீழேயுள்ள சொற்களைப் பூரணப்படுத்துக.

**ர, ள, ல, ழ, ற, ன, ண**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | கா.... ணம் | (4) | குற்....ம் | (7) | நூ....கம் |
| (2) | மா....வன் | (5) | விமா....ம் | (8) | பத்தி....கை |
| (3) | வ....க்கு | (6) | பவ....ம் | (9) | பத...றம் |

## கற்றல் - கற்பித்தல் வளங்கள்

- தனிக்கோட்டு அப்பியாசக் கொப்பிகள்
- தமிழ் நெடுங்கணக்கு அட்டை (பெரிய எழுத்தில்)
- அகராதிகள்
- கலைக்களஞ்சியங்கள்
- ஒலித்தல் வேறுபாடுள்ள எழுத்துகள் கொண்ட சொற்கள், வாக்கியங்கள் எழுதப்பட்ட அட்டைகள்
- ஆறு வாக்கியங்கள் எழுதப்பட்ட அட்டைகள்
- உயிர்க்குறிகளை அனுசரித்து எழுதுவதன் அவசியத்தை உணர்த்தும் சொற் பட்டியல்
- நிறுத்தக்குறிகள் இடப்பட்ட வாக்கியங்கள்/ உரைப்பகுதிகள்
- நிறுத்தக்குறிப் பிரயோகத்திற்கான பயிற்சிகள்
- சொற்களஞ்சியக்கோவை
- ஒலித்தல் வேறுபாட்டை விளக்குவதற்கான செயலட்டைகள்

## கணிப்பீடு

- ✳ அமைப்பு, அளவு, திசைமுகம், உறுப்பு ஆகியவற்றை அனுசரித்து நான்கு சொற்களுக்குக் குறையாத வாக்கியங்களை வேகமாக எழுதுதல்
- ✳ உயிர்க்குறிகளை அனுசரித்து எழுதுதல்
- ✳ நிறுத்தக்குறிகளை அனுசரித்து எழுதுதல்
- ✳ சொல், வாக்கியம், பந்தி என்பவற்றிற்கிடையே ஏற்ற இடைவெளி விட்டு எழுதுதல்
- ✳ நெடுங்கணக்கு ஒழுங்குமுறையைப் பின்பற்றிச் சொற்களஞ்சியக் கோவையை எழுதுதல்
- ✳ ஒலித்தல் வேறுபாடுகளை அனுசரித்து சொற்களை/வாக்கியங்களை எழுதுதல்

என்பனவற்றைக் கணிப்பிடுக.

## தேர்ச்சி மட்டம்

## 4.1.2 கிரகித்து எழுதுவார்.

## உள்ளடக்கம்

- ✓ செவிமடுத்துக் கிரகித்து வினாக்களுக்கு விடை எழுதுதல்
- ✓ வாசித்துக் கிரகித்து வினாக்களுக்கு விடை எழுதுதல்
- ✓ செவிமடுத்த / வாசித்த விடயங்களை நினைவுபடுத்தி எழுதுதல்
- ✓ சொல்வதெழுதுதல் / கேட்டெழுதுதல்
- ✓ வாசித்த, செவிமடுத்த பகுதிகளில் இடம்பெற்றுள்ள அடைமொழிகள், மரபுத்தொடர்கள், இரட்டைக்கிளவி, இணைமொழிகள், பழமொழிகள், உவமைத்தொடர்கள் என்பன வற்றை இனங்கண்டு எழுதுதல்
- ✓ சிறிய கதை / சிறிய உரைப்பகுதி / பாடல் என்பவற்றுக்குப் பொருத்தமான தலைப்பினை இடுதல்
- ✓ சிறிய கதை / சிறிய உரைப்பகுதி / பாடல் என்பவற்றின் கருத்தை அல்லது சாராம்சத்தை எழுதுதல்
- ✓ தொடர்புபடுத்தல், எதிர்வுகூறல்

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

- ➲ மாணவர்கள் தாம் செவிமடுத்த பேச்சு, கதை, நாடகம், கவிதை, உரையாடல், அறிவித்தல், அறிவுறுத்தல், அறிவுரை கூறல் போன்றவற்றைக் கிரகிக்கச் செய்க, கிரகித்த விடயங்கள் பற்றி மாணவர்கள் குழுக்களிலே கலந்துரையாடச் சந்தர்ப்பம் வழங்குக. கிரகித்தல் வினாக்களுக்கு விடையெழுத வழிகாட்டுக.

- பாடநூல்கள், சஞ்சிகைகள், கதைகள், பாடல்கள், சித்திரக் கதைகள், விளம்பரங்கள், அறிவித்தல் , துண்டுப்பிரசுரங்கள் முதலியவற்றில் மாணவர்கள் வாசித்துக் கிரகித்த வற்றைக் கலந்துரையாடச் செய்க. உரத்து வாசித்த பகுதிகள், மௌனமாக வாசித்த பகுதிகள் என்பவற்றிலே கிரகித்தல் வினாக்களை வழங்கி, விடயங்களைக் கிரகிக்கும் திறன், வினாக்களுக்கு விடையெழுதும் ஆற்றல் என்பவற்றை மாணவர்கள் ஒவ்வொரு வரும் வளர்க்கத் துணை புரிக.

- மாணவர்களின் அவதானம், நினைவாற்றல், பிழையின்றி எழுதுதல், நிறுத்தக் குறிகளைப் பிரயோகித்து எழுதுதல், உரைப்பகுதிகளையும் பாடல்களையும் வேக மாகவும் உறுப்பாகவும் எழுதுதல் ஆகியவற்றை வளர்க்கும் பொருட்டு கேட்டெழுதுதல் பயிற்சிகள் பலவற்றை வழங்குக.

- செவிமடுத்த, வாசித்த விடயங்களில் மொழிநடையை வளப்படுத்தும் அடைமொழிகள், மரபுத்தொடர்கள், இணைமொழிகள், இரட்டைக்கிளவி, பழமொழிகள், உவமைத் தொடர்கள் என்பவற்றை மாணவர் இனங்காண வழிப்படுத்துக.

- சிறிய கதை / சிறிய உரைப்பகுதி / பாடல் என்பனவற்றைச் செவிமடுத்த பின்னர் அல்லது வாசித்த பின்னர், மாணவர்கள் அவற்றைக் கிரகித்தமையை அறியும் பொருட்டு, செவிமடுத்த / வாசித்த பகுதிகளுக்குத் தலைப்பு இடுவதற்கு வழிகாட்டுக.

- சிறிய கதை / சிறிய உரைப்பகுதி / பாடல் என்பனவற்றைச் செவிமடுத்த பின்னர் அல்லது வாசித்த பின்னர், அவற்றின் பிரதான கருத்தைச் சில வாக்கியங்களில் விவரித்து எழுதுவதற்கு மாணவர்களை நெறிப்படுத்துக.

- வாசித்த விடயங்களிலே உள்ள கருத்துக்களை நன்கு விளங்கி, அவற்றைத் தொடர்பு படுத்தி எழுதுவதற்குத் துணை புரிக.

- கதைகள் அல்லது சம்பவங்கள் என்பனவற்றைப் பூர்த்தி செய்து எழுதுவதற்கு மாணவரைத் தயார்ப்படுத்துக. கிடைத்த தகவல்களை வைத்து மாணவர் எதிர்வுகூறும் திறனை வளர்க்குக.

## செயற்பாடுகள்

### செயற்பாடு 1 (கிரகித்து எழுதுதல்)

- மாணவர்களைக் குழுக்களாக்குக. குழுக்களில் ஒலி நாடாவைப் பயன்படுத்தியோ ஒருவர் மூலமாகவோ பேச்சு, கதை, கவிதை, அறிவித்தல், அறிவுறுத்தல், அறிவுரைகள் முதலியவற்றைச் செவிமடுக்க வழிப்படுத்துக. கிரகித்த விடயங்கள் பற்றி மாணவர்கள் கலந்துரையாடலில் ஈடுபடச் சந்தர்ப்பம் வழங்குக. கலந்துரையாடிய விடயம் கவிதையாக இருப்பின் அதன் உள்ளடக்கம் தொடர்பான மூன்று அல்லது நான்கு வினாக்களை வினவுக. அவ்வினாக்களுக்கு எழுவாய், பயனிலை இயைபு பெற்ற விடைகளை மாணவர் கூறச் சந்தர்ப்பம் வழங்குக. ஒவ்வொரு மாணவனையும் அவ்விடைகளை எழுதச் செய்து, அவற்றைத் திருத்துக.

***எடுத்துக்காட்டு:*** **கவிதை**

**கற்றுக்கொள்!**

பூக்களிடம் கற்றுக்கொள்
புன்னகை புரிவாய்!
மரங்களிடம் கற்றுக்கொள்
வள்ளலாய் வளர்வாய்!

பறவையிடம் கற்றுக்கொள்
உறவை இணைப்பாய்!
விலங்கிடம் கற்றுக்கொள்
வீரமாய் நடப்பாய்!

நதியிடம் கற்றுக்கொள்
நன்மைகள் செய்வாய்!
மலையிடம் கற்றுக்கொள்
மாண்புடன் இருப்பாய்!

கடலிடம் கற்றுக்கொள்
ஞானத்தைப் பெறுவாய்!
காற்றிடம் கற்றுக்கொள்
காலத்தை வெல்வாய்!

விண்ணிடம் கற்றுக்கொள்
விஞ்ஞானி ஆவாய்!
மண்ணிடம் கற்றுக்கொள்
வாழ்வியல் தெளிவாய்!

***- பாவலர் கருமலைப்பழம் நீ.***
***நன்றி. www.dailythanthi.com***

**கிரகித்தல் வினாக்கள்**

1. புன்னகை புரிய யாரிடம் கற்றுக்கொள்ள வேண்டும்?
2. நன்மைகள் செய்ய யாரிடம் கற்றுக்கொள்ள வேண்டும்?
3. மலையிடம் இருந்து எதனைக் கற்றுக் கொள்ள முடியும்?
4. காற்றிடம் இருந்து நாம் எதனைக் கற்றுக் கொள்ள முடியும்?
5. இப்பாடல் எமக்கு எதனை உணர்த்துகின்றது?

**குறிப்பு:** கவிதையைப் போன்று ஏனையவற்றுக்கும் தனித்தனிச் செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துக.

## செயற்பாடு 2

- பாடநூல் பகுதிகள், சஞ்சிகைகளில் இடம்பெற்ற பயனுள்ள பகுதிகள், கதைகள், பாடல்கள், சித்திரக் கதைகள், விளம்பரங்கள், அறிவித்தல்கள், துண்டுப்பிரசுரங்கள் ஆகிய வாசிப்புப் பகுதிகள் ஒவ்வொன்றையும் கிரகித்தல் வினாக்களுடன் செயலட்டை களாகத் தயார்செய்க. அச்செயலட்டைகளின் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்கி, அவற்றை வாசிக்கச் செய்க. கிரகித்தல் வினாக்களுக்குரிய விடைகளைக் கலந்துரை யாடச் செய்க. பூரண வாக்கியங்களில் மாணவர் ஒவ்வொருவரையும் விடை எழுதச் செய்க.

***எடுத்துக்காட்டு:*** **தம்பி... நீயும் நெறிப்படுத்து!**

அறிவியல் தந்த அருங்கொடையாய்
அனைவர் கையிலும் செல்பேசி!
அவசர உலகம் ஆகையினால்
அவசியம் ஆனது செல்பேசி!

அடுத்தவர்க்கு இடராய் இல்லாது - வரும்
அழைப்புகள் தனையும் ஏற்றிவிடுவாய்!
அவசியம் அற்ற அழைப்புகளை
பயணத்தின் போது தவிர்த்திடுவாய்!

உரக்கப்பேசி உடன் இருப்போர்
வெறுப்பைத் தேடிக் கொள்ளாதே!
உணவு வேளையில் பேசுவதை - உன்
உயர்ந்த விருப்பமாய் செய்யாதே!

அறிவியல் தந்த கொடைகளை - தம்பி
அறிவு பூர்வமாய் பயன்படுத்து!
அறிவார்ந்த செயலால் இந்நிலத்தை
இனிய தம்பி நீயும் நெறிப்படுத்து!

***சேகுவேரா***
***நன்றி: www.dailythanthi.com***

**பின்வரும் வினாக்களுக்குப் பூரண வாக்கியங்களில் விடை தருக.**

1. அறிவியல் தந்த அருங்கொடை எது?
2. அது ஏன் அவசியமானது?
3. எப்படியான அழைப்புக்களை ஏற்றிட வேண்டும்?
4. எப்போது அழைப்புக்களைத் தவிர்த்தல் வேண்டும்?
5. எவ்வாறு பேசி வெறுப்பைத் தேடிக்கொள்ளக்கூடாது என்று கவிஞர் கூறுகிறார்?
6. எவ்வேளையில் பேசுவதை உயர்ந்த விருப்பாய்க் கொள்ளக்கூடாது?
7. அறிவியல் தந்த கொடைகளை நாம் எவ்வாறு பயன்படுத்த வேண்டும்?
8. இந்நிலத்தை எவ்வாறு நெறிப்படுத்த முடியும்?

## செயற்பாடு 3

- மாணவர் செவிமடுத்த, வாசித்த விடயங்களை நினைவுகூரச் செய்க. மாணவர் ஒவ்வொருவரும் தாம் நினைவுகூர்ந்த விடயத்தைப் பற்றி எழுதுவதற்குத் துணை புரிக. (தலைப்பு, பிடித்த அம்சங்கள், படிப்பினைகள், விழுமியங்கள் முதலியன)

***எடுத்துக்காட்டு:***

**விஞ்ஞானியை உருவாக்கிய பெற்றோர்**



விஞ்ஞானி தோமஸ் அல்வா எடிசன் 1847ஆம் ஆண்டு அமெரிக்காவில் மிலான் நகரில் பிறந்தார். அவரது தந்தை சாதாரண வியாபாரி என்றாலும் கூட எடிசனின் வளர்ச்சிக்குப் பெற்றோர் கடுமையாகப் பாடுபட்டனர். எடிசனுக்குப் புத்தகம் படிப்பதில் ஆர்வம் அதிகம். இந்த ஆர்வம் வளரக் காரணம் அவரது தந்தைதான். எடிசன் ஒவ்வொரு புத்தகத்தையும் படித்து முடிக்கும்போது அவருக்கு பரிசு வழங்கிப் பாராட்டுவாராம். எடிசனுக்கு முன்பு சேர் ஹம்பிரி டேவி என்பவர் மின் விளக்கைக் கண்டறிந்தாலும் அது குறைவான நேரமே ஒளிர்ந்தது. ஆனால் எடிசன் உருவாக்கிய மின் விளக்கு நீண்ட நேரம் ஒளிர்ந்து சாதனை படைத்தது.

## செயற்பாடு 4

- வாரம் ஒரு முறை மாணவர்களுக்குக் கேட்டெழுதுதல் பயிற்சிகள் வழங்குக. அவதானம், நினைவாற்றல், பிழையின்றி எழுதுதல், நிறுத்தக் குறிகளைப் பிரயோகித்து எழுதுதல், வேகமாகவும் உறுப்பாகவும் எழுதுதல் ஆகிய திறன்களில் மாணவர் தேர்ச்சி பெறச் சந்தர்ப்பம் வழங்குக. (கேட்டெழுதுதல் தொடர்பான பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுக.)
  - **மாணவர் கேட்டெழுத வேண்டிய பகுதியை (சொற்கள், வாக்கியங்கள், உரைப் பகுதிகள் முதலியன) அவர்கள் எழுதும் முன்னர் ஒருமுறை வாசித்துக்காட்டுக.**
  - **மாணவர் எழுதுவதற்கு ஏற்ற வேகத்தில் ஒரு முறை மட்டுமே சொல்லுக. (மாணவர் யாராவது மீண்டும் கூறுமாறு கோரினாலும் அவ்வாறு செய்தலாகாது.)**
  - **எழுதி முடித்த பின்னர் அப்பகுதியை ஒரு முறை வாசித்துக் காட்டுக.**
  - **மாணவர் எழுதியவற்றைத் திருத்துக.**

## செயற்பாடு 5

- செவிமடுத்த, வாசித்த பகுதிகளின் பொருளை நன்கு கிரகிப்பதற்கு உதவுவது கையாளப்பட்ட மொழிநடை என்பதை மாணவர்க்கு எடுத்துக்கூறுக. பின்வருவன போன்ற வாக்கியங்களை ஓர் அட்டையில் எழுதிக் காட்சிப்படுத்துக.

> நாய் ஓடியது.
> நாய் வேகமாய் ஓடியது.
> வெள்ளை நாய் வேகமாய் ஓடியது.

- இங்கு தரப்பட்ட வாக்கியங்களில் ஒரே பொருள் உணர்த்தப்பட்ட போதிலும், மூன்றாவது வாக்கியமே பொருளைத் தெளிவாக உணர்த்துகின்றது என்பதை மாணவர்களுக்குச் சுட்டிக்காட்டுக. காரணம் அங்கு கையாளப்பட்ட அடைமொழிகள் என்பதை மாணவருடன் கலந்துரையாடி அவர்கள் வாயிலாகவே பெற்றுக்கொள்க. நாய் என்னும் பெயர்ச்சொல் பற்றி விசேடித்துச் சொல்லுவது வெள்ளை; ஓடியது என்னும் வினைச் சொல்லை விசேடித்துச் சொல்லுவது வேகமாய் என்பதாகும். வெள்ளை, வேகமாய் என்பன **அடைமொழிகள்** என விளக்குக.

- பின்வருவன போன்ற வாக்கியங்களை ஓர் அட்டையில் எழுதிக் காட்சிப்படுத்துக.

> மகனின் சாதனையைக் கேள்வியுற்ற தாய்
> **உச்சி குளிர்ந்தாள்.** (மகிழ்ந்தாள்)
> பிரச்சினைகள் வரும் வேளை அவற்றிற்குத் தைரியமாகக்
> **முகங்கொடுத்தல்** வேண்டும். (எதிர்கொள்ளல்)
> காவலாளியைக் கண்டதும் திருடர் **கம்பிநீட்டினர்.**
> (ஓடி விட்டனர்)

இங்கு தடித்த எழுத்திலுள்ள **மரபுத் தொடர்கள்** குறிப்பாக உணர்த்தும் பொருள்கள் வாக்கியங்களை விளங்கிக் கொள்ளப் பெரிதும் உதவுகின்றன என்பதை மாணவர்க்குத் தெளிவுபடுத்துக.

- பின்வன போன்ற வாக்கியங்களை ஓர் அட்டையில் எழுதிக் காட்சிப்படுத்துக.

ஆற்று நீர் **சலசல** வென்று ஓடியது.
பூவிலிருந்து மணம் **கமகம** என்று வீசியது.
தென்றல் **குளுகுளு** வென்று வீசியது.

இவ்வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ளவை இரட்டைகிளவிகளாகும்.

- பின்வருவன போன்ற வாக்கியங்களை ஓர் அட்டையில் எழுதிக் காட்சிப்படுத்துக.

பரீட்சையிற் சித்தியடைவதற்காக நிசார் **அல்லும் பகலும்** பாடுபட்டுப் படித்தான்.
**ஏழை எளியவர்**களுக்கு உதவுவது ஓர் உத்தம குணமாகும்.
நோய் வந்தமையால் அவன் **எலும்பும் தோலும்** ஆகிவிட்டான்.

இவ்வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ளவை **இணைமொழிகள்** ஆகும். இவை கையாளப்படுவதால் மொழிநடை வளம்பெறுகிறது என்பதை மாணவர்களுக்கு விளக்குக.

- பின்வருவன போன்ற உரைப்பகுதியை வாசிக்கச் செய்க.

எனது நண்பன் செய்த வேலை காரணமாக எனக்குப்பொல்லாத ஆத்திரம் ஏற்பட்டது. **''ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம்''**என்று சொல்வார்கள். எனக்கு நண்பன் செய்த பல நன்மைகள் உள்ளன. அவற்றை நினைத்துப் பார்த்து என் ஆத்திரத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டேன்.

இவ்வுரைப்பகுதியில் தடித்த எழுத்திலுள்ள கூற்றை மாணவர் அவதானிக்கச் செய்க. அதுவே **பழமொழி** என இனங்காணச் செய்க.

- பின்வருவன போன்ற வாக்கியங்களைக் காட்சிப்படுத்தி அவற்றை வாசிக்கச் செய்க.

மரக்கிளையில் இருந்த குருவியானது **மலரப்போகும்** ஒரு **மொட்டைப்போலக்**காட்சியளித்தது.
வானத்திலே வெண்ணிலா ஓர் **ஓடம் போலத்** தோன்றியது.
**பாலைப் போல** நிலவு வானில் பவனி வருகிறது.

இவ்வாக்கியங்களில் இடம்பெற்ற **உவமைத் தொடர்கள்** அவ்வாக்கியப் பொருளைத் தெளிவாக விளக்க உதவுவதை மாணவர்க்குத் தெளிவுபடுத்துக.

- பாடநூல், சஞ்சிகைகள், பத்திரிகைகள் முதலிய வாசிப்புப் பகுதிகளில் இடம்பெறும் அடைமொழிகள், மரபுத்தொடர்கள், இரட்டைக்கிளவி, இணைமொழிகள், பழமொழிகள், உவமைத் தொடர்கள் என்பனவற்றை மாணவர்கள் இனங்காணவும் அவற்றைத் தேடித் தொகுக்கவும் ஆர்வமூட்டுக.

***எடுத்துக்காட்டு:***

**அடைமொழிகள்**

**சிவப்பு** நிறப் பேருந்து **வேகமாகச்** சென்றது.
**அழகிய** ஓவியத்தை சுவரிலே தொங்க விட்டார்கள்.
**கறுப்புப்** பூனை எலியைப் பிடிக்கப் **மெதுவாகப்** பதுங்கியது.

**மரபுத்தொடர்கள்**

**ஏட்டிக்குப் போட்டி** - விதண்டாவாதம்
**கடன் கழித்தல்** - மனமின்றிச் செய்தல்
**கை கழுவுதல்** - பொறுப்பை நீக்கிக்கொள்ளல்

**இரட்டைக்கிளவி**

காற்று **குளுகுளு** என்று வீசியது.
வெடிகள் **படபட**வென்று வெடித்தன.
பானைகள் **கடகட** வென்று உருண்டன.

**இணைமொழிகள்**

அவர்கள் **நன்மை தீமைகளில்** பங்குபற்றினர்.
அவர்கள் **சீரும் சிறப்புமாக** வாழ்ந்து வந்தனர்.
வாழ்க்கை **மேடு பள்ளம்** நிறைந்தது.

**பழமொழிகள்**

அன்பான சினேகிதனை ஆபத்திலறியலாம் (உத்தம நட்பு)
ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம். (காலம் மாறும்)
இரக்கப்போனாலும் சிறக்கப்போ (வறுமையிற் செம்மை)

**உவமைத்தொடர்கள்**

**இலைமறைகாய் போல்** இருக்கும் இளம் கலைஞர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.
எங்கள் வீட்டுக்கு மாமா **அத்தி பூத்தாற்போல்** வந்திருக்கிறார்.
அவர்கள் இருவரும் **கீரியும் பாம்பும் போலவே** இருப்பார்கள்.

## செயற்பாடு 6

- மாணவர்களுக்குப் பொருத்தமான கதை, உரைப்பகுதி, பாடல் என்பனவற்றைச் செயலட்டைகளில் தயாரித்து வாசிக்க வழங்குக. வாசித்த பின்னர் பின்வரும் வினாக்களுக்கு விடையெழுதத் துணை புரிக.
  - பொருத்தமான தலைப்பினை எழுதுக.
  - பிரதான கருத்தைச் சில வாக்கியங்களில் விளக்கி எழுதுக.
  - படிப்பினை எதுவென விளக்குக.
  - விழுமியக் கருத்துகள் இடம்பெற்றிருப்பின் அவற்றைக் குறிப்பிடுக.

*எடுத்துக்காட்டு:* **கதை**

.......................................

சங்கரும், பூங்கொடியும் உடன் பிறந்தவர்கள். அவர்களின் வீட்டைச் சுற்றிலும் எண்ணற்ற கொய்யாமரங்கள் இருந்தன. பழுத்த கொய்யாப்பழங்களை உண்பதற்காக அம்மரங் களைத் தேடித் தினந்தோறும் ஏராளமான பறவைகள் வந்த வண்ணம் இருந்தன.

ஒருநாள், கொண்டைக் குருவியைத் தொட்டுப் பார்க்க ஆசைப்பட்ட சங்கர், தானியங் களைத் தூவி ஒரு சிறிய வலையை விரித்தான்.

அவன் எதிர்பார்த்தபடி வலையில் ஒரு கொண்டைக்குருவி சிக்கிக்கொண்டது. அக் குருவியை ஆசையுடன் தொட்டுப் பார்த்த அண்ணன், தங்கை இருவரும் அந்தக் குருவியைப் பார்த்து ''ஐயோ பாவம்... செல்லக்குருவி நீ பறந்து போம்மா...'' என்று வானில் பறக்க விட்டனர்.

உடனே அந்தக் குருவி தேவதையாக மாறியது. ''உயிர்களிடத்திலே அன்பு கொண்ட குழந்தைகளே, உங்களுக்கு என்ன வேண்டுமோ கேளுங்கள்... தருகிறேன்...'' என்றது. ''பறவைகள் போல் பறந்து செல்ல எங்களுக்கு இறக்கைகள் வேண்டும்'' என்றனர் குழந்தைகள்.

''அன்புக் குழந்தைகளே... இறக்கைகள் இருந்தால் மட்டும் பறக்க முடியாது. பறப்ப தற்கு பறவைகளின் உடலமைப்பும் வேண்டும்...'' என்ற தேவதை அடுத்த நொடியில் அவர்களைப் பறவைகளாக மாற்றியது.

பின்னர், ''நீங்கள் மீண்டும் மனிதர்களாக மாற விரும்பினால் 'அன்பே வெல்லும்' என்ற மந்திரச் சொல்லை மனதாரக் கூறுங்கள்'' என்று கூறி மறைந்தது.பறவைகளாக மாறிய குழந்தைகள் மகிழ்ச்சியுடன் வானில் பறந்தனர்.

சற்று நீண்ட தூரம் சென்ற பிறகு ஓரிடத்தில் மலைப்பாம்பு ஒன்று வளைந்து நெளிந்து கிடப்பதைக்கண்டு அதன் அருகே சென்று கவனித்தனர்.

அப்போது அந்த மலைப்பாம்பு பேச ஆரம்பித்தது. ''பறவைகளே... நான் மலைப்பாம்பு அல்ல. இந்தப் பெரிய மலையின் மீது ஊர்ந்து செல்லும் சாலை...'' என்றது.

''அப்படியா!'' என்று வாய்பிளந்து வியந்து நின்ற இருவரும் ''நாங்களும் பறவைகள் அல்ல. தேவதையின் கருணையால் பறவைகளாய் மாறிய சிறு பிள்ளைகள்'' என்றனர். ''அடடா!'' என்று ஆச்சரியப்பட்ட சாலை அவர்கள் மலை உச்சியை அடைய வழி காட்டியது.

''அங்கு சறுக்கி விளையாடிக்கொண்டிருந்த நீர்வீழ்ச்சி ''ஹா... ஹா... ஹ...'' என்று சிரித்துக் கொண்டே ஓடி வந்த அக்குழந்தைகளை அன்புடன் வரவேற்றது.

அவ்வேளையில் நீர்வீழ்ச்சியின் வாயிலிருந்து வெளியேறிய வெண்ணிறப் புகை வானில் மேகமாகத் தவழ்ந்து சென்றது. அம்மேகத்தை ரசித்துக்கொண்ட இருவரும் ஆனந்தமாய் நீர்வீழ்ச்சியில் குளித்தனர். பின்னர், ஈரமான தங்கள் சிறகுகளை உயரமான தைல மரத்தின் உச்சியில் அமர்ந்து உலர்த்தினர்.

பிறகு எல்லாப் பறவைகளும் கூட்டை நோக்கிப் பறந்து செல்லும் மாலை வேளையில் இருவரும் வீட்டை நோக்கிப் பறந்து சென்றனர். ''அன்பே வெல்லும்'' என்றும் மனதாரக் கூறினர். பழையபடி மனித ரூபத்துக்கு மாறினர்.

பறவைகளாய் தாங்கள் கண்டகாட்சிகளை 'இயற்கையைப் பாதுகாப்போம்'' என்ற தலைப்பில் படங்களாக வரைந்து ஓவியக் கண்காட்சியாக வைத்தனர். பாராட்டும் பரிசும் பெற்றனர்.

அதில் கிடைத்த பரிசுத் தொகையை, படிக்கின்ற ஏழை நண்பர்களுக்குக் கொடுத்து மகிழ்ந்தனர். அந்த அன்பு நிறைந்த குழந்தைகள். ஊரே அவர்களை வாழ்த்தியது. அவர்களின் பெற்றோர் உள்ளமும் மகிழ்ந்தது.

*கொ.சுமதி*

*நன்றி: www.dailythanthi.com*

## செயற்பாடு 7

- மாணவர்களின் தொடர்புபடுத்தும் ஆற்றலை வளர்க்கும் வகையில் உரிய பயிற்சிகளை வழங்குக. ஒரு பொருளை, நபரை, கூற்றை அல்லது சந்தர்ப்பத்தை அது போன்ற வேறொரு பொருளுடன், நபருடன், கூற்றுடன், சந்தர்ப்பத்துடன் காணப்படும் தொடர்பு களை அல்லது ஒற்றுமை, வேற்றுமைகளை அல்லது காரண காரியத் தொடர்புகளைக் காண மாணவர்க்குப் பயிற்சி வழங்குக.

***எடுத்துக்காட்டு:***

**1. பின்வரும் நிகழ்வுடன் தொடர்புடைய பழமொழியைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**நிகழ்வு:** பணம் இல்லாது கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த எனக்கு நண்பன் ஒருவன் தன்னிடமிருந்த பணத்தில் ஒரு பகுதியைக் கொடுத்தான்.

**பழமொழி:**
(1) ஆசை வெட்கம் அறியாது.
(2) உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
(3) அன்பான நண்பனை ஆபத்தில் அறி.
(4) உண்ணாச்சொத்து மண்ணாய்ப் போகும்.

2. மாலதி பணக்கார வீட்டுப் பிள்ளை. அவள் சிறுவர் சஞ்சிகைகள், சித்திரக்கதைகள் எனப் பலவற்றைப் பாடசாலைக்குக் கொண்டு வருவாள். அவற்றை ஏனைய மாணவர்களுக்குக் காட்டுவாள். ஆனாலும், யாருக்கும் வாசிக்கக் கொடுக்க மாட்டாள்.

அவளைப் பற்றிக் குறிப்பிடுவதற்குப் பொருத்தமானது;
(1) பொதுநலவாதி
(2) சுயநலவாதி
(3) வள்ளல்
(4) உலோபி

## செயற்பாடு 8

- தரப்பட்ட தரவுகள் அல்லது தகவல்களை வைத்துக்கொண்டு எதிர்காலத்தில் நிகழக் கூடிய நிலைமைகள் பற்றி எதிர்வுகூற மாணவர்களைத் தயார்ப்படுத்துக. கதை அல்லது சம்பவத்தைப் பூர்த்திசெய்து எழுதுவதற்குப் போதிய பயிற்சிகள் வழங்குக.

***எடுத்துக்காட்டு 1 :***

இருண்ட ஒரு பெரிய காடு இருந்தது. அங்கே ஒரு மரக்கிளையின் மேலிருந்த ஒரு குருவி தலையை அசைத்து சுற்றும் முற்றும் பார்த்தது. ஆயினும் தனக்கு ஆபத்து எனக் கருதும் எதனையும் அக்குருவி காணவில்லை. அக் குருவி பார்க்காத ஒரு பக்கம் இருந்தது. அது சிறிதேனும் அப்பக்கத்தைப் பார்த்திருந்தால், ................................................................................................
...................................................................................................................

இதனைப் பூரணப்படுத்துக.

(ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது நான்கு சொற்களாவது இடம்பெற வேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாக இருக்க வேண்டும்.)

***எடுத்துக்காட்டு 2 :***

.

சண்முகம் வீதியில் நடந்துவந்து கொண்டிருந்தான். வீதியோரம் ஓர் அழகிய ஓவியத்தைக் கண்டான். மாம்பழத்தைக் கிளியொன்று கொத்து வதைப் போன்ற ஓவியம் அது. அந்த ஓவியத்தைக்கண்ட சண்முகம் இந்த ஓவியத்தை யார் வரைந்திருக்கக்கூடும் என்று சுற்றிலும் பார்வை யிட்டான். வீதியோரத்தில்......................................................................

..........................................................................................................

சம்பவத்தின் மீதிப் பகுதியை நிறைவு செய்வதற்குப் பொருத்தான ஆறு வாக்கியங் களை எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது நான்கு சொற்களாவது இடம்பெறுதல் வேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலை இயைபு திருத்தமானதாக இருத்தல் வேண்டும்.

## கற்றல் - கற்பித்தல் வளங்கள்

- ஒலி நாடாக்கள் (பேச்சு, கதை, நாடகம், கவிதை, உரையாடல், அறிவித்தல், அறிவுறுத்தல் முதலியன)
- வாசிப்புப் பகுதிகள் (பாடநூல்கள், சஞ்சிகைகள், கதைகள், பாடல்கள், சித்திரக் கதைகள், விளம்பரங்கள், துண்டுப் பிரசுரங்கள் முதலியன)
- நினைவு கூர்ந்த விடயங்கள் பற்றிய செயலட்டைகள்
- கேட்டெழுதுவதற்கான பகுதிகள்
- அடைமொழிகள் இடம்பெறும் வாக்கியங்கள்
- மரபுத்தொடர்கள் இடம்பெறும் வாக்கியங்கள்
- இரட்டைக்கிளவிகள் இடம்பெறும் வாக்கியங்கள்
- இணைமொழிகள் இடம்பெறும் வாக்கியங்கள்
- பழமொழிகள் இடம்பெறும் உரைப்பகுதிகள்
- உவமைத் தொடர்கள் இடம்பெறும் வாக்கியங்கள்
- கதைகள், உரைப்பகுதிகள், பாடல்கள், கிரகித்தலுக்கான வினாக்கள் கொண்ட செயலட்டைகள்
- தொடர்புபடுத்தல் - பயிற்சிகள்
- எதிர்வுகூறல் - பயிற்சிகள்

## கணிப்பீடு

- செவிமடுத்துக் கிரகித்து வினாக்களுக்கு விடையெழுதுதல்
- வாசித்துக் கிரகித்து வினாக்கடளுக்கு விடையெழுதுதல்
- நினைவுபடுத்தி எழுதுதல்
- அறிவித்தல்கள் கூறுதல்
- கேட்டெழுதுதல்
- அடைமொழிகள், மரபுத்தொடர்கள், இணைமொழிகள், பழமொழிகள், உவமைத் தொடர்கள் என்பனவற்றை இனங்கண்டு எழுதுதல்
- கதைகள், உரைப்பகுதிகள், பாடல்கள், கிரகித்தல் வினாக்களுக்கு விடை எழுதுதல்
- தொடர்புபடுத்தல் - பயிற்சிகளுக்கு விடையளித்தல்
- எதிர்வுகூறல் - பயிற்சிகளுக்கு விடையளித்தல்

என்பனவற்றைக் கணிப்பிடுக.

## தேர்ச்சி மட்டம்

## 4.1.3 நாளாந்த தேவைகளுக்காக எழுதுவார்.

### உள்ளடக்கம்

- ✓ சுயவிபரம் எழுதுதல்
- ✓ படிவங்களைப் பூர்த்தி செய்தல்
- ✓ கடிதம் (உறவுமுறை, உத்தியோகபூர்வமான) எழுதுதல்
- ✓ அறிவித்தல்கள் எழுதுதல்
- ✓ அறிவுறுத்தல்கள் எழுதுதல்
- ✓ நிகழ்ச்சி நிரல் எழுதுதல்
- ✓ தினக்குறிப்பு எழுதுதல்
- ✓ அழைப்பிதழ் எழுதுதல்
- ✓ மின்னஞ்சல் எழுதுதல்/குறுஞ்செய்திகளை அனுப்புதல்
- ✓ குறியீடுகளுக்கான விளக்கம் எழுதுதல்

### கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

- ➲ முன்னைய வகுப்புகளில் எழுதிய சுயவிபரங்களை மாணவர்க்கு நினைவூட்டுக. கூடுதலான விபரங்கள் அடங்கிய சுயவிபரக்கோவையைத் திருத்தமாகத் தயாரிப்பதற்குத் துணை புரிக.

- ➲ அன்றாடத் தேவைகளுக்குரிய பல்வேறு படிவங்களைப் பிழையின்றி நிரப்புவதற்கு மாணவர்க்குத் துணை புரிக.

- ➲ உறவுமுறைக் கடிதங்கள், உத்தியோகபூர்வமான கடிதங்கள் என்பவற்றின் அமைப்பை விளக்குக. கணினியிற் கடிதம் அமைக்கப்படும் முறையினையும் எடுத்துக்கூறுக.

- ➲ அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள் என்பன தொடர்பாக 2.1.2 தொடர்பாடலுக்காகப் பேசுவார் என்னும் தேர்ச்சி மட்டத்திற் கற்றவற்றை நினைவுகூர்ந்து அங்கு கொடுக்கப் பட்ட மாதிரி அறிவித்தல்களையும் மாதிரி அறிவுறுத்தல்களையும் பெரிதாக எழுதிக் காட்சிப்படுதி மாணவர்கள் தாமாகச் சில அறிவித்தல்களையும் அறிவுறுத்தல்களையும் எழுதுவதற்குத் துணை புரிக.

- ➲ வெவ்வேறு வைபவங்களின்போதும் நிகழ்வுகளின் போதும் விநியோகிக்கப்படும் நிகழ்ச்சி நிரல்களையொத்த நிகழ்ச்சி நிரலொன்றை மாணவர்கள் ஆக்கியெழுதுவதற்கு நெறிப்படுத்துக.

- ➲ இன்றைய அவசர உலகில் வாழும் ஒவ்வொருவரும் தினக்குறிப்பு எழுதுவது அவசியமானதொன்றாகும் என்பதை மாணவர்க்கு எடுத்துக்கூறி, அக்குறிப்புக்களைத் தினந்தோறும் எவ்வாறு எழுத வேண்டும் என்பதை, மாதிரித் தினக்குறிப்புகளின் துணையோடு விளக்குக.

- ➲ அழைப்பிதழ்கள் சிலவற்றை அவதானிக்கச் செய்தும் வாசிக்கச் செய்தும் வெவ்வேறு வைபவங்களுக்கான அழைப்பிதழ்களை மாணவர் எழுதுவதற்குத் துணை புரிக.

- கணினி வசதிகள் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு மின்னஞ்சல் (e.mail) எழுதி அனுப்புவதற்காக வாய்ப்புகளை (கணினித் தொழினுட்பம் தெரிந்தவர்களின் உதவியைப் பெற்று) ஏற்படுத்துக.

- கையடக்கத் தொலைபேசிகளினூடாகக் குறுஞ் செய்திகளை (SMS) அனுப்புவதற்கும், பெற்றுக்கொள்வதற்கும் சந்தர்ப்பம் வழங்குக.

- வார்த்தைகளைப் பிரயோகிக்காமல் அடையாளங்களையும் குறியீடுகளையும் பயன்படுத்தி அறிவித்தல்கள் வழங்கப்படுவதுண்டு. அவ்வாறான அடையாளக் குறியீடுகள் எழுதப்பட்ட அட்டைகளைக் காட்டி அவற்றை மாணவர் விளக்கமளிப்பதற்குத் துணை புரிக.

## செயற்பாடுகள்

### செயற்பாடு 1 (நாளாந்த தேவைகளுக்காக எழுதுதல்)

- மாணவர்களுக்குச் சுய விபரம் எழுதுதல் தொடர்பாக முன்னைய வகுப்புகளிலே கற்றுக்கொண்டதை நினைவூட்டுக.

- ஒரு பந்தியாக எழுதப்பட்ட ஒருவரின் பல்வேறு விபரங்களை வாசித்து, விபரக் கோவையாக எழுதுமாறு மாணவருக்கு அறிவுறுத்துக. (ஒருவர் தானே தன் விபரத்தை எழுதுவது சுய விபரம் என்பதையும் இன்னொருவர் விபரத்தை விபரக் கோவையாக எழுத முடியும் என்பதையும் தெளிவுபடுத்துக.)

***எடுத்துக்காட்டு:***

> பனிப்புலம் அரசினர் தமிழ்ப் பாடசாலையிலே ஐந்தாந் தரத்திலே பிரணவன் கல்வி கற்கிறான். தந்தையாரான மணிவண்ணன் வைத்தியசாலை ஒன்றில் மருத்துவராகக் கடமை புரிகிறார். தாயாரான தமிழரசி பனிப்புலக் கிராமத்தின் கிராமசேவை அலுவலராவர். பிரணவனுக்கு இரண்டு சகோதரிகளும் ஒரு சகோதரனும் உள்ளனர். பத்து வயது உடைய பிரவணவன் மூத்த பிள்ளை. அவன் படிப்பில் மட்டுமன்றி விளையாட்டுக்களிலும் ஆர்வம் காட்டுவான். காற்பந்தாட்டம் அவனுக்கு மிகவும் விருப்பமானது. தன் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் வாசிப்பிற் செலவிடுவான். அவனது இலட்சியம் ஏழைப்பிள்ளைகளின் அறிவுக் கண்களைத் திறக்கும் ஆசிரியராக வேண்டும் என்பதாகும்.

- தரப்பட்டுள்ள விபரக்கோவையைப் பூர்த்திசெய்ய மாணவர்களுக்குத் துணை புரிக.

**விபரக்கோவை**

1. முழுப் பெயர் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐
2. ஊர் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐
3. பிறந்த திகதி : ☐☐☐☐☐☐☐☐
4. பாடசாலை : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐
5. படிக்கும் தரம் : ☐☐☐☐☐☐☐☐
6. தந்தையின் பெயர் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐
7. தாயின் பெயர் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐
8. குடும்பத்தில் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை : ☐☐☐☐☐☐☐☐
9. விருப்பமான விளையாட்டு : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

10. விருப்பமான பொழுதுபோக்கு: | | | | | | | | | | | | | | |
11. விருப்பமான தொழில் : | | | | | | | | | | | | | | | | | |
12. விருப்பமான நாடு : | | | | | | | | | | | | | | | | | |

## செயற்பாடு 2

- அன்றாட வாழ்விலே பல படிவங்களைப் பிழையின்றி நிரப்பவேண்டும் என்பதை மாணவர்களுக்கு விளக்கிக் கூறுக. படிவங்கள் சிலவற்றைப் பிரதியெடுத்து மாணவர் களுக்கு வழங்கி அப்படிவங்களைப் பிழையின்றிப் பூர்த்திசெய்ய வழிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு:***

- தந்திப்படிவம்
- காசுக்கட்டளைப்படிவம்
- சிறுவர் சங்க அங்கத்துவப் படிவம்
- நூலக அங்கத்துவப் படிவம்
- அலுவலகம் ஒன்றில் அதிகாரி ஒருவரைச் சந்திக்க அனுமதி பெறுவதற்கான நுழைவுப் படிவம்
- டெங்கு நோய் ஒழிப்பு தொடர்பாக சுகாதாரத் திணைக்களம் குடும்ப விபரம் பெறுவதற்காக வழங்கிய படிவம்.
- சன சமூக நிலைய விளையாட்டுப் போட்டியிற் பங்குபற்றுவதற்கான விண்ணப்பப் படிவம்
- பல்வேறு போட்டிகளுக்கான விண்ணப்பப் படிவம்
- பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விண்ணப்பப்படிவம்

**சிறுவர் சங்க அங்கத்துவப் படிவம்**

**தேனீ சிறுவர் சங்கம் - அங்கத்துவப்படிவம்**

**என் பெயர்** : ..................................

**வயது** : ..................................

**தந்தையின் பெயர்** : ..................................

**வகுப்பு** : ..................................

(புகைப்படம்)

**பாடசாலை** : ..........................................................

**வீட்டு முகவரி** : ..........................................................
..........................................................
..........................................................
..........................................................

**நான் தேனீ சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.**

**திகதி:.........................** ..................................
**(கையொப்பம்)**

## நூலக அங்கத்துவப்படிவம்


PUBLIC LIBRARY - CHILDREN'S SECTION

Borrower's Ticket No.

Date of Expiry

Receipt No.

Serial No. of Ticket

I the undersigned, being a scholar/resident within the City of Colombo, hereby apply to the Public Library for two Tickets to enable me to borrow books from the Children's Lending Library, in accordance with the Rules and Regulations to which I agree to conform.

Full Name

Address

Age

Grade/Year

Name of School

Date

Signature

I the undersigned of opinion that the above applicant may be trusted to use the Library carefully to his/her advantage.

Name of Principal


Name of School/Address

Signature

Entrance fee

City Limits Rs. 50.00

Out of City Limits Rs. 100.00


This side is for guarantor only

Applicant signs on the other side

GUARANTEE

Full Name

Address

Signature

Date

Name

Address

Occupation

Business/Official Address

Date

Telephone No.

நன்றி: கொழும்புப் பொதுநூலகம்

## செயற்பாடு 3

◘ கடிதம் எழுதுதல் தொடர்பாகக் கற்றவற்றை நினைவுபடுத்துக. உறவு முறைக்கடிதம், உத்தியோகபூர்வமான கடிதம் என்னும் இரண்டு வகைக் கடிதங்களின் வேறுபாடுகளைக் கலந்துரையாடி விளக்குக. இரண்டு வகைக் கடிதங்களையும் மாணவர் எழுதத் துணை புரிக.

***எடுத்துக்காட்டு:***

**❶ உறவுமுறைக் கடிதம்**

- வெளியூரிலுள்ள தந்தையாருக்குச் சுற்றுலா செல்ல அனுமதி கோரும் கடிதம்
- பாடசாலை விடுதியில் உள்ள சகோதரியின் சுகம் விசாரிக்கும் கடிதம்

**❷ உத்தியோகபூர்வமான கடிதம்**

- வகுப்பாசிரியருக்குச் சுகவீனமுற்றிருப்பதைத் தெரிவிக்கும் கடிதம்

**குறிப்பு:** சாதாரண கடிதங்களுக்கும் கணினிக் கடிதங்களுக்கும் இடையிலான வேறுபாடுகளை விளக்குக.

## செயற்பாடு 4

◘ தொடர்பாடலுக்காகப் பேசுவார் என்னும் தேர்ச்சி மட்டத்திற் கற்றவற்றை மாணவர் களின் கவனத்திற்கு கொண்டு வருக. மாதிரி அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள், அறிக்கைகள் என்பனவற்றைப் பெரிதாக எழுதிக் காட்சிப்படுத்துக. மாணவர்கள் சில அறிவித்தல்களையும், சில அறிவுறுத்தல்களையும் எழுத வழிப்படுத்துக. மாணவர் களின் ஆக்கங்களைத் திருத்துக.

## செயற்பாடு 5

- பல்வேறு வைபவங்களும் நடைபெறுவதற்கான நிகழ்ச்சி நிரல்களை மாணவர்கள் சேகரிக்கச் செய்க. அந்நிகழ்ச்சி நிரல்களைக் காட்சிப்படுத்தி மாணவர்களை வாசிக்க வழிப்படுத்துக. அவ்வாறான நிகழ்ச்சி நிரலை ஒவ்வொரு மாணவரும் எழுதத்துணை புரிக.

***எடுத்துக்காட்டு:***

**மாணவர் மன்றக்கூட்டம் - 2008**
**நிகழ்ச்சி நிரல்**

திகதி : 10.06.2008 நேரம் : பி.ப. 1.00 மணி

1. மங்கள விளக்கேற்றல்
2. இறைவணக்கம்
3. வரவேற்புரை
4. தலைமையுரை
5. சென்ற கூட்ட அறிக்கை வாசித்தல்
6. மாணவரின் கலை நிகழ்ச்சிகள்
   - கிராமிய நடனம்
   - குழு இசை
   - பல் குரல் மன்னன் வழங்கும் நகைச்சுவை
7. நன்றியுரை
8. தேசிய கீதம்

## செயற்பாடு 6

- தினக்குறிப்பு எழுதும் பழக்கத்தை மாணவரிடம் விருத்தி செய்க. தினமும் முக்கிய சம்பவங்களையும், நினைவில் வைத்திருக்க வேண்டியவற்றையும் சுருக்கக் குறிப்பு களாக எழுதுவதன் அவசியத்தை வற்புறுத்துக.

***எடுத்துக்காட்டு:***

**தினக்குறிப்பு - 2009**

ஜனவரி

01 வியாழக்கிழமை

- புதிய வகுப்புக்குச் சென்றேன்.
- நண்பர்களுடன் உரையாடி மகிழ்ந்தேன்.
- புதிய வகுப்பாசிரியர் தன்னை அறிமுகம் செய்தார்.
- வகுப்பில் உள்ள மாணவர்கள் அனைவரும் தங்களை அறிமுகம் செய்தனர்.

02 வெள்ளிக்கிழமை

மாலை 3.30 க்கு விளையாட்டுப் பயிற்சி



## செயற்பாடு 7

- அழைப்பிதழ்கள் பலவற்றை மாணவர் சேகரிக்கத் தூண்டுக. கலைவிழா அழைப் பிதழ், கண்காட்சி அழைப்பிதழ், பரிசளிப்பு விழா அழைப்பிதழ், இல்ல விளையாட்டுப் போட்டி அழைப்பிதழ் எனப் பல நோக்கங்களுக்கு அழைப்பிதழ் அனுப்பப்படுவதைச் சுட்டிக்காட்டுக. குழுச் செயற்பாடாக அழைப்பிதழ்களை மாணவர் உரிய முறையில் எழுத வழிப்படுத்துக.

## செயற்பாடு 8

- அன்றாட வாழ்க்கையுடன் தொடர்புடைய முக்கிய குறியீடுகளைக் காட்சிப்படுத்துக. அக்குறியீடுகளுக்கான விளக்கங்களை எழுத வழிப்படுத்துக.


***எடுத்துக்காட்டு:*** **குறியீடுகள்**






..................... ..................... ..................... .....................




..................... ..................... ..................... .....................



..................... ..................... ..................... .....................






..................... ..................... ..................... .....................

> **குறிப்பு:** மோட்டார்ப் போக்குவரத்துத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள விதி ஒழுங்கு நூலில் போக்குவரத்துக் குறியீடுகளுக்கான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. அவ்விளக்கங்களையே மாணவர்களுக்கு அறிமுகம் செய்க.




**இக்குறியீட்டின் விளக்கம்**

1. தொடர்பாடல்
2. சமாதானம்
3. பாதுகாப்பு
4. சரணாலயம்

**இக்குறியீட்டின் விளக்கம்**

1. இலங்கை போக்குவரத்து சபை
2. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
3. இலங்கை அஞ்சல்
4. இலங்கை மின்சார சபை

இவை ஒவ்வொன்றும் வெளிப்படுத்தும் கருத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

............................ ............................ ............................ ............................

## கற்றல் - கற்பித்தல் வளங்கள்

- ⊡ விபரக்கோவைக்கான படிவம்
- ⊡ பூரணப்படுத்துவதற்கான பல்வேறு படிவங்கள்
- ⊡ கடிதங்கள்
- ⊡ அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள்
- ⊡ நிகழ்ச்சி நிரல்கள்
- ⊡ மாதிரி தினக்குறிப்புகள்
- ⊡ அழைப்பிதழ்கள்
- ⊡ குறியீடுகளின் பட்டியல்

## கணிப்பீடு

- ✳ விபரக்கோவை தயாரித்தல்
- ✳ படிவங்களைப் பிழையின்றிப் பூரணப்படுத்துதல்
- ✳ உறவுமுறைக் கடிதங்கள், உத்தியோகபூர்வமான கடிதங்கள் என்பனவற்றை முறையாக எழுதுதல்
- ✳ அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள் என்பனவற்றை எழுதுதல்
- ✳ நிகழ்ச்சிநிரல் தயாரித்தல்
- ✳ தினக்குறிப்பு எழுதுதல்
- ✳ அழைப்பிதழ்கள் எழுதுதல்
- ✳ அடையாளங்கள், குறியீடுகளுக்கான விளக்கம் அளித்தல்

என்பனவற்றைக் கணிப்பிடுக.

## தேர்ச்சி மட்டம்

## 4.1.4 ஆக்கத்திறனை வெளிப்படுத்தி எழுதுவார்.

### உள்ளடக்கம்

- ✓ ஒரு பொருள் பற்றி வாக்கியங்கள் எழுதுதல்
- ✓ படம் பார்த்து விளக்கம் எழுதுதல் / வருணித்து எழுதுதல்
- ✓ படம் பார்த்துக் கவிதைகள் எழுதுதல்
- ✓ பழமொழிகள், மரபுப் பெயர்கள், உவமைகள், இரட்டைக்கிளவி, இணைமொழிகள், மரபுத் தொடர்கள் என்பவற்றைத் தமது ஆக்கங்களிலே பயன்படுத்தி எழுதுதல்
- ✓ தமது அனுபவங்களை எழுதுதல்
- ✓ கவிதைகளை ஆக்குதல்
- ✓ அவதானித்தவற்றை விவரித்து எழுதுதல்
- ✓ வழிகாட்டற் குறிப்புகளின் துணையுடன் கதை, கட்டுரை என்பவற்றை எழுதுதல்
- ✓ சுயசரிதை எழுதுதல்
- ✓ சிறுவர்களுக்கான கதைகளை எழுதுதல்
- ✓ விளம்பரங்கள், துண்டுப்பிரசுரங்கள் என்பவற்றை எழுதுதல்
- ✓ உரையாடல்கள்/ பொம்மலாட்ட உரையாடல்கள் என்பவற்றை எழுதுதல்

### கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

- ➲ ஒரு பொருள் பற்றிய கலந்துரையாடலில் மாணவரை ஈடுபடுத்துக. அப்பொருள் பற்றிய வெவ்வேறு வாக்கியங்களை ஆக்குவதற்கு மாணவரை வழிப்படுத்துக. மாணவர்களின் சிந்தனையைப் பரவலாக்கிப் பலகோணங்களில் நின்று அப்பொருளைப் பார்க்கச் செய்தால் அப்பொருள் பற்றிப் பல்வேறு வாக்கியங்களை ஆக்கலாம் என்பதை எடுத்துக் கூறுக. அவர்கள் கூறிய வாக்கியங்களைச் செம்மைப்படுத்தி, ஒழுங்குபடுத்தி எழுதுவதற்கு ஆர்வமூட்டுக.

- ➲ படங்களைப் பார்த்து, அப்படங்கள் உணர்த்தும் பொருளை மாணவர்கள் விளக்கி எழுதவோ, வருணிக்கவோ சந்தர்ப்பம் வழங்குக. பார்த்து அவதானித்துக் கிரகித்த விடயங்களை வெளிக்கொணரச் செய்வதன் மூலம் மாணவரின் ஆக்கத்திறன் விருத்தியடையும் என்பதைக் கருத்திற்கொள்க.

- ➲ நிகழ்வுகள் / கதைச் சம்பவங்கள் கொண்ட படங்களைப் பார்த்து, அப்படங்கள் புலப்படுத்தும் கருத்துக்களைக் கிரகித்துக் கோவைப்படுத்திக் கதையாக்குவதற்கு உதவும் கலந்துரையாடலை நெறிப்படுத்துக. மாணவர்கள் ஆக்கிய வாக்கியங்களை ஒழுங்குபடுத்திக் கதையைச் சுவைபட எழுதுவதற்குத் துணை புரிக.

- ➲ தாம் பார்த்த / அவதானித்த படங்களை ஆதாரமாகக் கொண்டு இலகுவான சிறு கவிதைகளை எழுதுவதற்குத் துணை புரிவதோடு, அவ்வாறான கவிதையாக்கத்திற்குப் போதிய வாய்ப்பும் வசதியும் வழங்கி, மாணவர்க்கு ஆர்வமூட்டுக.

- ➲ மாணவர்கள் தாம் சேகரித்துத் தொகுத்து வைத்துள்ள பழமொழிகள், மரபுப்பெயர்கள், உவமைகள், இணைமொழிகள், மரபுத்தொடர்கள் என்னும் மொழிநடைக்கு வலுவூட்டு வனவற்றை, ஆக்கியெழுதும் கட்டுரைகள், கதைகள், உரையாடல்கள் முதலியவற்றிலே பொருத்தமாகக் கையாண்டு எழுதுவதற்குத் துணை புரிக.

- மாணவர் தமது அனுபவங்களைச் சுவைபட எழுதி ஏனையோருடன் அவ்வனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு வாய்ப்புகள் வழங்குக.

- கவிதையாக்கத்தில் மாணவரை ஈடுபடுத்தி, அவர்களின் ஆக்கத்திறனை விருத்தி செய்யத் துணை புரிக.

- தொலைக்காட்சியிற் பார்த்த, வானொலியிற் செவிமடுத்த, நேரிற்கண்ட சம்பவங்களையும் நிகழ்ச்சிகளையும் விவரித்து எழுதுவதற்கு மாணவரை உற்சாக மூட்டி, அவர்களின் ஆக்கத்திறனை வெளிப்படுத்த வாய்ப்பு வழங்குக.

- ஒரு விடயம் பற்றிக் கலந்துரையாடி கரும்பலகையிலே சில குறிப்புகளை எழுதிக் காட்சிப்படுத்துக. அவ்வழிகாட்டற் குறிப்புகளை அடியொற்றி அவ்விடயத்தையொட்டிய கதைகள், கட்டுரைகள் என்பனவற்றை எழுத நெறிப்படுத்துக.

- ஒருவர் அல்லது ஒரு பொருள் தன் கதையைத் தானே கூறுவதாய் அமையும் சுயசரிதையினை எழுதுவதற்கு உதவியாக மாதிரிச் சுயசரிதைகள் சிலவற்றை வாசித்துக்காட்டி, சுயசரிதைகளை எழுதுவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பம் வழங்குக.

- சிறுவர் சஞ்சிகைகளில் வெளியிடுவதற்கு அல்லது சுவர்ப்பத்திரிகைகளில் இடம் பெறுவதற்கு அல்லது மாணவர் மன்றப் பத்திரிகைக்கு உரிய சிறுவர் கதைகளை எழுதுவதற்கு மாணவரை உற்சாகமூட்டுக.

- முன்னைய வகுப்புகளில் வாசித்து எழுதிய விளம்பரங்கள், துண்டுப்பிரசுரங்கள் என்பனவற்றை நினைவுபடுத்தி, அவ்வாறான விளம்பரங்கள், துண்டுப்பிரசுரங்கள் என்பனவற்றை வெவ்வேறு பொருள்களை ஒட்டி எழுதுவதற்குத் துணை புரிக.

- முன்னைய வகுப்புகளில் வாசித்த / எழுதிய உரையாடல்களை நினைவுபடுத்தி, வேறு பொருள்களில் சிறு உரையாடல்களை எழுதுவதற்கு நெறிப்படுத்துக.

- பொம்மைகள் ஒன்றுடன் ஒன்று உரையாடுவதாக அமையும் பொம்மலாட்ட உரையாடல்களையும், காட்டூன் கதாபத்திர உரையாடல்களையும் எழுதுவதற்கும் துணை புரிக.

## செயற்பாடுகள்

### செயற்பாடு 1 (ஆக்கி எழுதுதல்)

- கொடுக்கப்படும் தலைப்பு ஒன்றைப் பற்றிய கலந்துரையாடலில் மாணவரை ஈடுபடுத்துக. அத்தலைப்புப் பற்றிய வெவ்வேறு கருத்துக்களை முழு வாக்கியங்களில் எடுத்துக் கூற மாணவரை வெளிப்படுத்துக. மாணவர் கூறும் வாக்கியங்களைக் கரும்பலகையில் எழுதுக. அவ்வாக்கியங்கள் நான்கு சொற்களுக்குக் குறைவாக இருப்பின் நான்கு சொற்களுக்குக் குறையாமல் அவ்வாக்கியங்களைச் சீராக்கம் செய்க. எழுவாய், பயனிலை இயைபினையுங் கவனிக்குக. எழுமாற்றாக மாணவர் ஒவ்வொருவரும் ஆறு வாக்கியங்களைக் கூற வழி நடத்துக. கரும்பலகையில் எழுதியவற்றை அழித்த பின்னர் அப்பொருள் பற்றி ஒவ்வொரு மாணவரையும் ஆறு வாக்கியங்கள் எழுதச் செய்க. மாணவர் எழுதிய ஆக்கங்களைப் பார்வையிட்டுத் திருத்துக.


***எடுத்துக்காட்டு:*** **தலைப்புகள்**

- மழை நாள்
- பேருந்துப் பயணம்
- விளையாட்டு
- கலை விழா
- நீர்வீழ்ச்சியின் அழகு
- கணினிக்கல்வி

## செயற்பாடு 2

- படங்களைக் காட்சிப்படுத்துக. அவை உணர்த்தும் கருத்தை மாணவர்கள் விளக்கிக் கூறச் சந்தர்ப்பம் வழங்குக. அவர்கள் கூறிய வாக்கியங்களைச் செம்மையாக்கஞ் செய்க. அவ்வாக்கியங்களை மாணவர்கள் எழுதத் துணை புரிக.


***எடுத்துக்காட்டு 1:*** **படங்கள்**



**விசேட குறிப்பு:** படம் பார்த்து வாக்கியங்களை எழுதும்போது நிகழ்காலத்திலேயே எழுதுதல் வேண்டும் என்பதை நினைவிற் கொள்க.


..................................................................
..................................................................
..................................................................
..................................................................

***எடுத்துக்காட்டு 2:***




..................................................................
..................................................................
..................................................................
..................................................................

***எடுத்துக்காட்டு 3:***




..................................................................
..................................................................
..................................................................
..................................................................


## செயற்பாடு 3

- பல்வேறு நிகழ்வுகளைக் காட்டும் படங்களைப் பார்த்து, அவற்றின் அடிப்படையில் மாணவர்கள் எழுமாற்றாகக் கதையை ஆக்கிக்கூற வழிப்படுத்துக. அவ்வாறு கூறப்பட்ட கதையை மாணவர்கள் பிழையின்றி எழுதுவதற்குத் துணை புரிக.

***எடுத்துக்காட்டு 1:*** **படங்கள்**



***எடுத்துக்காட்டு 2:***



***எடுத்துக்காட்டு 3:***




*நன்றி: தினகரன் வாரமலர்*

## செயற்பாடு 4

- மாணவர்களைக் கவரக்கூடிய படங்களைக் காட்சிப்படுத்துக. அப்படங்கள் உணர்த்தும் பொருளை இலகுவான சிறு கவிதையாக மாணவர்கள் வெளிப்படுத்த நெறிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு:*** **கவிதை**



....................................
....................................
....................................
....................................
....................................
....................................
....................................
....................................
....................................
....................................

## செயற்பாடு 5

- மாணவர்கள் சேகரித்த பழமொழிகள், மரபுப்பெயர்கள், உவமைகள், இணைமொழி கள், இரட்டைக்கிளவி மரபுத்தொடர்கள் என்பனவற்றை வெவ்வேறாகப் பெரிய எழுத்தில் எழுதி வகுப்பில் ஆங்காங்கே தொங்க விடுக. மணாவர்கள் கதைகள், கட்டுரைகள், உரையாடல்கள் முதலியவற்றை ஆக்கியெழுதும் போது பழமொழிகள் முதலியவற்றைப் பொருத்தமாகக் கையாண்டு எழுத வழிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு:***

ஒற்றுமை பற்றிய கருத்து இடம்பெறும் சந்தர்ப்பங்களில் **'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு', 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு'** முதலிய பழமொழிகளைக் கையாளலாம் என எடுத்துக்கூறுக.

## செயற்பாடு 6

- மாணவர்களைக் குழுக்களாக்குக. குழுக் கலந்துரையாடலில் ஒவ்வொருவரும் தாம் பெற்ற அனுபவங்களை ஏனையோருடன் பகிர்ந்து கொள்வதற்கு உற்சாகமூட்டுக. அவ்வனுபவங்களைச் சுவையாக எழுதுவதற்குத் துணை புரிக.

***எடுத்துக்காட்டு:***

**மாணவன் A :** 2008ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி எந்த நாட்டில் நடைபெற்றது தெரியுமா?
**மாணவன் B :** தெரியுமே. சீனாவில் தான்.
**மாணவன் C :** சீன ஒலிம்பிக் போட்டிகளைப் பார்த்து உலகமே வியந்து போய் விட்டதாம்.
**மாணவன் D :** என்ன காரணம்.
**மாணவன் A :** சீனர்கள் நவீன முறையில் வடிவமைத்த மைதானங்கள் தான்.
**மாணவன் B :** இல்லை. சீனாவின் கடுமையான உழைப்புத்தான்.
**மாணவன் C :** சீனாவின் நவீன தொழில்நுட்ப வளர்ச்சிதான்.

## செயற்பாடு 7

- கவிதையாக்கத்தில் மாணவர்கள் ஈடுபடுவதற்கு வாய்ப்பாகப் பல இலகுவான கவிதைகளைப் பெரிய எழுத்தில் எழுதிக் காட்சிப்படுத்துக. அதுபோன்ற இலகுவான கவிதைகளை எழுதுவதற்கு மாணவர்களுக்குத் துணை புரிக.

***எடுத்துக்காட்டு:***

**ஊசி**

ஓட்டையுள்ள ஊசி
ஒல்லியான ஊசி!
தைக்கும் நல்ல ஊசி
தரம் வாய்ந்த ஊசி!
கூர்மையான ஊசி
நூல் கோர்க்கும் ஊசி!
பளபளக்கும் ஊசி
பதமாய் உள்ள ஊசி!
இரும்பில் செய்த ஊசி
இலகுவான ஊசி!
சின்னஞ்சிறிய ஊசி
சீராய்த் தைக்கும் ஊசி!

***- வல்லநாடு இராமலிங்கம்***

***கவிதையைப் பூர்த்தி செய்க.***

**விமானம்**

வானில் பறக்கும் விமானம்
...........................................
மக்கள் செல்லும் விமானம்
...........................................
உலகைச் சுற்றும் விமானம்
...........................................
சத்தமிடும் விமானம்
...........................................
விந்தையான விமானம்
...........................................

## செயற்பாடு 8

- மாணவர்கள் பாடசாலைக்கு உள்ளேயும், வெளியேயும் தாம் அவதானித்த சம்பவங்களைக் கட்டுக்கோப்பாகவும், வாசகருக்குப் பயனளிக்கும் வகையிலும் விவரித்தெழுதுவதற்கு வழிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு:***

பாடசாலை விட்டுச் செல்லும்போது வாகன நெரிசல் ஏற்பட்டது. ஏன் என்று எவருக்கும் புரியவில்லை. அப்போது 'அம்புலன்ஸ்' வண்டி ஒலி எழுப்பியவாறு வந்து கொண்டிருந்தது. அதனால் வாகன நெரிசலுக்கு ஊடாகச் செல்ல முடியவில்லை.

## செயற்பாடு 9

- கொடுக்கப்படும் வழிகாட்டற் குறிப்புகளுக்கு அமைவாக கதை, கட்டுரை என்பனவற்றை எழுதுவதற்கு மாணவர்களுக்குப் பயிற்சி வழங்குக.

***எடுத்துக்காட்டு:*** **கதை**

நான்கு பிள்ளைகள் - ஒற்றுமையின்றிச் சண்டையிட்டபடி இருந்தமை - அவர்களைத் திருத்த தந்தை எண்ணியமை - ஆளுக்கொரு தடியைக் கொடுத்து ஒடிக்கும்படி கூறியமை - தடிகள் சுலபமாக ஒடிக்கப்பட்டமை - அத்தடிகளை இணைத்துக்கட்டி அதனை ஒடிக்கும்படி கொடுத்தமை - தடிகள் ஒன்றாகக் கட்டப்பட்டிருந்தமையால் ஒடிக்க முடியாமை - அவற்றைப் போல் ஒற்றுமையாக இருந்தால் யாராலும் அவர்களை எதுவும் செய்ய முடியாது என விளக்கியமை.

- மாணவர்கள் கதையை ஆக்கி எழுதுவதற்கு இடர்ப்படுமிடத்துத் துணை புரிக. வாக்கியங்களின் எழுவாய், பயனிலை இயைபைக் கவனித்து, மாணவர் ஒவ்வொருவரும் எழுதுவதை அவதானித்துச் செம்மைப்படுத்துக.

## செயற்பாடு 10

- ஒருவர் அல்லது ஒரு பொருள் **தன் கதையைத் தானே கூறுவதாய் அமைவது சுயசரிதை** என விளக்குக. மாதிரிச் சுயசரிதைகள் சிலவற்றை வாசித்துக்காட்டுக. அவ்வாறான சுயசரிதைகளை மாணவர் எழுதுவதற்கு வழிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு:***

- பேனாவின் சுயசரிதை
- பசுவின் சுயசரிதை
- வைத்தியர் ஒருவரின் சுயசரிதை
- தெரு நாயின் சுயசரிதை
- மாமரத்தின் சுயசரிதை
- கணினியின் சுயசரிதை
- ஓய்வுபெற்ற அதிபரின் சுயசரிதை
- கரும்பலகையின் சுயசரிதை

## செயற்பாடு 11


- சிறுவர் கதைகளை எழுதுவதற்கு மாணவர்களுக்கு உற்சாகமூட்டுக. மாணவர்கள் எழுதிய கதைகளைக் காட்சிப்படுத்துக. அல்லது கையெழுத்துப் பத்திரிகையில் இடம்பெறச் செய்க. அல்லது சிறுவர் சஞ்சிகைகளில் இடம்பெறுவதற்கு ஆவன செய்க.

## செயற்பாடு 12

- விளம்பரங்கள், துண்டுப்பிரசுரங்கள் என்பனவற்றை நினைவுபடுத்துக. வெவ்வேறு பொருள்களையொட்டிய விளம்பரங்கள், சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள் என்பனவற்றை மாணவர்கள் ஆக்கி எழுதுவதற்குத் துணை புரிக.

***எடுத்துக்காட்டு:*** **விளம்பரம்**

**தமிழில் முதல் முறையாக**
**வெளிவருகின்றது..........**



**"சிறுவர் கணினி"**

**ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான கணினிச் சஞ்சிகை இது.**

**எதிர்கால சிற்பிகளே!**

**உங்களுக்காக முதல் இதழில்...**

- **கணினி விளையாட்டுக்கள்.**
- **கணினியைப் பயன்படுத்துவது எப்படி?**
- **கணினியில் ஓவியம் வரையலாம்.**
- **பாடல்களை எப்படிப் பதிவு செய்வது.**
- **ரோபோக்களின் சாதனைகள் இன்னும் பல.**

**உடனே வாருங்கள்! பயன் பெறுங்கள்.**
**சிறுவர் கணினி**
**காலி வீதி, கொழும்பு - 03**

**துண்டுப்பிரசுரம்**

**பொது மக்களே!**

## மின்னல்! மின்னல்!

**மின்னலில் இருந்து பாதுகாப்புப் பெறும் வழிகளை ஞாபகத்தில் வைத்திருங்கள்.**

⇒ இடி ஒலியை நாம் உணர்ந்தால் மின்னலால் தாக்கப்படக்கூடிய பிரதேசத்தில் உள்ளோம் என்பதை அறிந்து கொள்ளவேண்டும்.
⇒ திறந்த வெளிகளில் நிற்காமல் பாதுகாப்பான இடங்களை நோக்கிச் செல்லுங்கள்.
⇒ உயர்ந்த மரங்களின் கீழோ மரங்களின் அருகிலோ நிற்க வேண்டாம்.
⇒ வீட்டின் மின் இணைப்பைத் துண்டித்து விடுங்கள்.
⇒ மின்னல் தாக்கம் நிகழும்போது குளிப்பதைத் தவிருங்கள்.
⇒ குளிரூட்டிகளின் மின் இணைப்பைத் துண்டித்து விடுங்கள்.
⇒ மின் கம்பங்களுக்கு அருகில் நிற்காதீர்கள்.
⇒ இடி தாங்கி ஒன்றை அமைத்துக் கொள்ளுங்கள்.

**முன் எச்சரிக்கையுடன் செயற்படுங்கள்.**

*- வளிமண்டலவியல் திணைக்களம்.*

**சுவரொட்டி**

## சுற்றாடலை தூய்மையாக்குவோம்.

## பிளாஸ்ரிக் கழிவுகள் ஆபத்தானவை.



**மீள் சுழற்சிக்கு உட்படுத்துங்கள்.**

**எதிர்காலம் உங்கள் கைகளில்**

**சிந்தியுங்கள்! செயற்படுங்கள்!**

**- சூழல் பாதுகாப்பு அமைப்பு**

### செயற்பாடு 13

◘ முன்னைய வகுப்புகளில் மாணவர்கள் எழுதிய உரையாடல்களை நினைவுகூரச் செய்க. எடுத்துக்கொண்ட ஒரு பொருளை இருவர் அல்லது மூவர் உரையாடும் பாங்கில் சுவைபட எழுதலாம் என எடுத்துக்கூறுக. உரையாடல்களையும், பொம்மலாட்ட உரையாடல்களையும் காட்டூன் கதாபாத்திர உரையாடல்களையும் மாணவர் எழுதத் துணை புரிக.

***எடுத்துக்காட்டு:***

**தொலைக்காட்சியைப் பற்றிய உரையாடல்**

**கீதா** : தொலைக்காட்சியைத் தொடர்ந்து பார்க்கக்கூடாது.
**அஸ்ரா :** ஏன் என்று சொல்லவில்லையே!

**கீதா** : கண்களுக்குப் பாதிப்பு ஏற்படும்.
**அஸ்ரா :** விட்டுவிட்டுப் பார்த்தால் பாதிப்பு ஏற்படாதுதானே?


**கீதா** : ஒரு நாளைக்கு ஒரு மணித்தியாலம் மட்டும் பார்ப்பதால் அதிகம் பாதிப்புக் கிடையாது என்று வைத்தியர்கள் கூறுகின்றார்களாம்.
**மாலா** : அவர்கள் சொன்னால் சரியாக இருக்கும்.


**அஸ்ரா :** சிறுவர்கள் தொடர்ந்து தொலைக்காட்சியைப் பார்த்தால் என்ன நடக்கும்?
**மேரி** : சிந்திக்கும் திறன் குறைந்து விடுமாம்.

**அஸ்ரா :** அப்படியா!

***எடுத்துக்காட்டு:***

காட்டுன் படங்களைப் பார்த்து கற்பனை உரையாடல்களை எழுதுதல்





## கற்றல் - கற்பித்தல் வளங்கள்

- கதை நிகழ்வுகளுக்கான படங்கள்
- விளக்கம் எழுத / வருணிக்க உதவும் படங்கள்
- கவிதைகள் எழுதப்பட்ட அட்டைகள்
- கதை, கட்டுரை என்பன எழுதுவதற்கான வழிகாட்டற் குறிப்புகள்
- மாதிரிச் சுயசரிதைகள்
- விளம்பரங்கள், துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள்
- உரையாடல்கள், பொம்மலாட்ட உரையாடல்கள்

## கணிப்பீடு

- கதையைக் கட்டுக்கோப்பாக எழுதுதல்
- விளக்கம் எழுதுதல் / வருணித்து எழுதுதல்
- பொருள் பொதிந்த பாடல்களை எழுதுதல்
- வழிகாட்டற் குறிப்புகளை அடியொற்றி எழுதுதல்
- சுயசரிதைகள் எழுதுதல்
- எடுத்துக்கொண்ட பொருளுக்குப் பொருத்தமான விளம்பரங்கள், சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள் என்பனவற்றை எழுதுதல்
- உரையாடல்கள் எழுதுதல்

என்பனவற்றைக் கணிப்பிடுக.

## தேர்ச்சி மட்டம்

## 4.1.5 நியம மொழியை அனுசரித்து எழுதுவார்.

### உள்ளடக்கம்

- ✓ பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள் என்பனவற்றை இனங்கண்டு எழுதுதல்
- ✓ பெயராகவும் வினையாகவும் வரும் சொற்களை வாக்கியங்களில் வைத்து எழுதுதல்
- ✓ சேர்த்தெழுதுதல், பிரித்தெழுதுதல்
- ✓ சொற்றொடர்கள், வாக்கியங்கள் என்பனவற்றை எழுதுதல்
- ✓ திணை, பால், எண், இடம், காலம் என்பனவற்றை அனுசரித்து வாக்கியம் எழுதுதல்
- ✓ எழுவாய், பயனிலைகள் பொருத்தமாக அமைய வாக்கியங்களை எழுதுதல்
- ✓ வாக்கியங்களில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பனவற்றை இனங்கண்டு எழுதுதல்
- ✓ வாக்கியங்களில் அடைமொழிகளைக் கையாண்டு எழுதுதல்
- ✓ பேச்சு வழக்குச் சொற்களை நியம மொழியில் எழுதுதல்
- ✓ செம்மையான மொழிநடையிற் சரளமாக (தனிவாக்கியங்கள், தொடர்வாக்கியங்கள்) எழுதுதல்

### கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

- ➲ வாக்கியக் கோலங்களின் மூலம் பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் வாக்கியங்களிற் பிரதானமாக இடம்பெறுவதை இனங்காட்டி விளக்குக.

- ➲ வாக்கியங்களில் உள்ள பெயர்ச்சொற்களையும் வினைச் சொற்களையும் மாணவர்கள் இனங்கண்டு எழுத வழிப்படுத்துக.

- ➲ தமிழிலுள்ள சில சொற்கள் சில வேளைகளில் பெயராகவும், சில வேளைகளில் வினையாகவும் வருவதை வாக்கியங்களின் துணையுடன் விளக்குக.
  ***எடுத்துக்காட்டு:***
  அவன் மாடிப்படியில் ஏறினான் (பெயர்)
  விரைவாகப் படி என ஆசிரியர் கூறினார். (வினை)

- ➲ ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து வரும்போது அவை சொற்றொடர்களாக இடம்பெறுவதை உரைப்பகுதிகளிலும், கவிதைகளிலும் காட்டுக.
  ***எடுத்துக்காட்டு:*** தலைநகர், மணல் வீடு, கடற்கரை, வாழைப்பழம்

  (அவ்வாறு வரும் சொற்றொடர்களை எழுத்துப் பிழையின்றி எழுதவும், அவற்றைப் பொருட் பொருந்தமுறப் பிரித்து எழுதவும் பழக்குக.)

- ➲ ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து வந்தாலும் உணர்த்தும் கருத்தின் அடிப்படையில் சொற்றொடர்களாகச் சில வேளைகளிலும், வாக்கியங்களாகச் சில வேளைகளிலும் அமைவதை எடுத்துக்காட்டுகள் மூலம் தெளிவுபடுத்துக.
  ***எடுத்துக்காட்டு:***
  சேர சோழ பாண்டியர் - **சொற்றொடர்**
  சேர சோழ பாண்டியர் முற்காலத்தில் தமிழ் நாட்டை ஆட்சி புரிந்தனர். **- வாக்கியம்**

- வாக்கியக் கோலங்களினூடாக திணை, பால், எண், இடம், காலம் என்பன வேறுபட்டு அமைவதை எடுத்துக்காட்டி வாக்கியங்களை அமைத்தெழுதும் போது பிழையின்றி எழுதுவதற்கு மாணவரை வழி நடத்துக.

- வாக்கிய அமைப்பலே எழுவாய், பயனிலைகள் (திணை, பால், எண், இடம்) அடிப் படையிலே பொருத்தமாக (இயைபுபட) அமைந்திருந்தால் அவ்வாக்கியப் பொருள் தெளிவாகப் புலப்படும் என்பதை எடுத்துக்காட்டுகளுடன் தெளிவாக விளக்குக.

- வாக்கியங்கள் சிலவற்றைக் காட்சிப்படுத்தி அவற்றில் அமைந்துள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்னும் வாக்கிய உறுப்புகளை இனங்காணச் செய்க. செயப்படுபொருள் இல்லாத வாக்கியங்களும் உள்ளன என்பதைத் தெளிவுறுத்துக.

***எடுத்துக்காட்டு:***

| | எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
|---|---|---|---|
| நாய் குரைத்தது. | நாய் | குரைத்தது | |
| நான் பாட்டுப் பாடினேன். | நான் | பாடினேன் | பாட்டு |
| தங்கை தண்ணீர் குடித்தாள். | தங்கை | குடித்தாள் | தண்ணீர் |
| மாடு புல் மேய்ந்தது. | மாடு | மேய்ந்தது | புல் |
| கிளி பழத்தைத் தின்றது. | கிளி | தின்றது | பழத்தை |

- எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பனவற்றைச் சிறப்பித்துக் கூறும் சொற்கள், அடைமொழிகள் என எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்குக. அடைமொழிகளைப் பயன்படுத்தி வாக்கியங்களை அமைத்தெழுத மாணவரை வழிநடத்துக.

- தமிழிலே உள்ள பேச்சு வழக்குச் சொற்கள் சிலவற்றையும் அவற்றுக்குரிய எழுத்து வழக்குச் சொற்களையும் பட்டியற்படுத்திக் காட்சிப்படுத்துக. நியமமான மொழியில் தம் ஆக்கங்களை எழுதுவதற்கு இச்சொற்கள் பற்றிய அறிவு பெரிதும் உதவுமெனக் கூறுக.

- செம்மையான மொழிநடையிலே சரளமாக எழுதுவதற்கு மாணவரை நெறிப்படுத்துக. அவ்வாறான சரளமான எழுத்துக்கு தனி வாக்கிய அமைப்பு, தொடர் வாக்கிய அமைப்பு என்பன துணை புரிவதை எடுத்துக்கூறி, எடுத்துக்காட்டுகள் வாயிலாக அவ்வகைகளிலான வாக்கியங்கள் பற்றித் தெளிவாக விளக்குக.

## செயற்பாடுகள்

### செயற்பாடு 1 (நியம மொழியை அனுசரித்து எழுதுதல்)

- வாக்கியங்களிலே பிரதானமாகப் பெயர்ச் சொற்களும் வினைச்சொற்களும் இடம் பெறுவதைத் தயார் செய்யப்பட்ட செயலட்டைகள் மூலம் தெளிவுபடுத்துக.

***எடுத்துக்காட்டு:*** **செயலட்டை - ❶**

**நாய்** குரைத்தது. (பெயர்ச்சொல்)

**மாடு புல்** மேய்ந்தது. (பெயர்ச்சொற்கள்)

**நேற்று நான் கொழும்புக்குப்** போனேன். (பெயர்ச்சொற்கள்)

**நாளைக்கு அப்பாவும் நானும் வெளிநாடு** போவோம்.(பெயர்ச்சொற்கள்)

**குறிப்பு:** தடித்த எழுத்தில் இல்லாத சொற்கள் வினைச்சொற்கள் ஆகும் எனக்கூறுக.

### செயலட்டை - ❷

ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொற்கள் யாவும் **பெயர்ச்சொற்கள்** எனப்படும். பெயர்ச்சொற்கள் ஆறு வகைப்படும். அவை;

1. **பொருட் பெயர் :** பொருட்கள், ஆட்கள் என்பவற்றின் பெயர்களைக் குறிப்பன.
(உணவு, மரம், காற்று, புத்தகம், மோகன், நிசார், நளினி, கமலா முதலியன)

2. **இடப்பெயர்** : இடங்களின் பெயர்களைக் குறிப்பன.
(வீடு, ஊர், நகரம், நாடு, இலங்கை, இந்தியா, கொழும்பு, கண்டி முதலியன)

3. **காலப்பெயர்** : காலங்களின் பெயர்களைக் குறிப்பன.
(திங்கட்கிழமை, தை மாதம், இரவு, பகல், காலை, நேற்று, நாளை முதலியன)

4. **சினைப்பெயர்** : ஒன்றின் உறுப்புக்களைக் குறிப்பன.
(கை, மூக்கு, கிளை, இலை, தலை, வேர், கண், பூ முதலியன)

5. **குணப்பெயர்** : நிறம், சுவை, வடிவம் முதலிய பண்புகளைக் குறிப்பன.
(கறுப்பு, வட்டம், நன்மை, இனிப்பு)

6. **தொழிற்பெயர்** : ஒரு தொழிலைக் (செயலை) குறிப்பன.
(ஆடல் பாடல், படித்தல், மகிழ்ச்சி, செலவு, வரவு, வருகை, காட்சி முதலியன)

### செயலட்டை - ❸

ஒரு செயல் நிகழ்ந்தமையைக் குறிக்கும் சொல் **வினைச்சொல்** எனப்படும்.
(படித்தான், பாடுகிறான், வருவார், ஓடுகிறது, விளையாடின, கூவும் முதலியன)

வினைச்சொற்கள் வாக்கியங்களில் இரண்டு வகைகளில் இடம்பெறும். அவை;

1. **முற்று :** செயல் முடிந்து நிற்பது முற்று அல்லது வினைமுற்று எனப்படும்.
(பேசினேன், கேட்கிறாய், தூங்குவான்)

2. **எச்சம் :** செயல் முடியாது எஞ்சி நிற்பது எச்சம் ஆகும்.
(குளித்த, சென்ற, ஆடிய, பாடிய, குளித்து, சென்று, ஆடி, பாடி)

**குறிப்பு:** 1. ஒவ்வொரு செயலட்டையையும் வாக்கியங்களினூடாக விளக்கம் அளிப்பது நன்று. மாணவர்கள் அவற்றைப் பிழையின்றி வாக்கியங்களில் அமைக்க உதவும்.

2. மூன்று செயலட்டைகளையும் மாணவர் நன்கு விளங்கிக்கொண்ட பின்னர், வாக்கியங்களில் பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் இனங் காணும் பயிற்சியில் ஈடுபடுத்துக.

## செயற்பாடு 2

- பெயராகவும் வினையாகவும் வரும் சொற்களைக் கொண்ட செயலட்டையை வழங்கி அவை ஒவ்வொன்றையும் பெயராகவும் வினையாகவும் வர வாக்கியங்களில் அமைத் தெழுதத் துணை புரிக.

***எடுத்துக்காட்டு:*** **செயலட்டை**

| சொல் | பெயர் | வினை |
|---|---|---|
| அடி | பாதம் | அடித்தல் |
| அமர் | போர் | அமர்தல் |
| அலை | கடலலை | திரிதல் |
| இரை | உணவு | ஒலி செய் |
| உடை | ஆடை | உடைத்தல் |
| கலை | வித்தை | கலைத்தல் |
| நகை | அணிகலன் | சிரி |
| நாடு | தேசம் | தேடு |

## செயற்பாடு 3

- ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் ஒன்றையொன்று தொடர்ந்து வருவது சொற்றொடர் என்பதை விளக்குக.
  அத்தகைய சொற்றொடர்களைப் பிழையின்றி எழுதும் பொருட்டும், அவற்றைப் பொருட் பொருத்தமுறப் பிரித்தெழுதும்பொருட்டும் பின்வருவன போன்ற செயலட்டை களை வழங்குக.

***எடுத்துக்காட்டு:***

| | |
|---|---|
| தேயிலை + நீர் - தேநீர் | முந்நூறு - மூன்று + நூறு |
| தேன் + நீர் - தேனீர் | முன்னூறு - முன்பு + நூறு |

| செயலட்டை - ❶ | செயலட்டை - ❷ |
|---|---|
| நெல் + வயல் - நெல்வயல் | வடகிழக்கு - வடக்கு + கிழக்கு |
| பல் + பொடி - பற்பொடி | கப்பற்கூலி - கப்பல் + கூலி |
| மலை + உச்சி - மலையுச்சி | பச்சைக்கிளி - பச்சை + கிளி |
| மரம் + வேர் - மரவேர் | மனமாற்றம் - மனம் + மாற்றம் |
| முள் + செடி - முட்செடி | தேன்மொழி - தேன் + மொழி |
| தமிழ் + சொல் - தமிழ்ச்சொல் | வாழைக்காய் - வாழை + காய் |
| மண் + குடம் - மட்குடம் | தென் மாகாணம்- தெற்கு+ மாகாணம் |
| மலர் + செண்டு - மலர்ச்செண்டு | காவியுடை - காவி + உடை |

(இவை போன்ற சொற்றொடர்களைப் பிழையின்றி எழுதவும், பொருட் பொருத்த மாகப் பிரித்தெழுதவும் மாணவர்க்கு வழிகாட்டுக.)

## செயற்பாடு 4

- பின்வரும் இரண்டு தொகுதிகளிலும் எழுதுப்பட்டவற்றைக் கரும்பலகையில் எழுதி மாணவரை வாசிக்கச் செய்க. கலந்துரையாடலில் ஈடுபடுத்தி முதலாவது தொகுதியில் உள்ள சொற்றொடர்கள் பொருளை உணர்த்தினாலும் நிறைவான பொருளை உணர்த்தவில்லை என்பதையும் இரண்டாம் தொகுதியிலுள்ள வாக்கியங்கள் நிறை வான பொருளை உணர்த்தியிருப்பதையும் தெளிவாக்குக.

| தொகுதி - ❶ | தொகுதி - ❷ |
|---|---|
| அம்மா சுட்ட தோசை | அம்மா சுட்ட தோசை ருசியானது. |
| பண்டைக்காலத்தில் வாழ்ந்த மக்கள் | பண்டைக் காலத்தில் வாழ்ந்த மக்கள் காடுகளில் அலைந்து திரிந்தனர். |
| மண்ணால் ஆக்கப்பட்ட வீடு | மண்ணால் ஆக்கப்பட்ட வீடு அழிந்து போனது. |

- முதலாந் தொகுதியிலும், இரண்டாந் தொகுதியிலும் சொற்கள் ஒன்றையொன்று தொடர்ந்து வந்துள்ளன. ஆயினும் முதலாந் தொகுதியில் உள்ளவை நிறைவான பொருளை உணர்த்தாத காரணத்தால் சொற்றொடர்கள் என்றும், இரண்டாந் தொகுதியில் உள்ளவை நிறைவான பொருளை உணர்த்தும் காரணத்தால் வாக்கியங்கள் என்றும் அழைக்கப்படுவதை மாணவர்களுக்கு எடுத்துக் கூறுக.

- மாணவர்களைத் தம் அப்பியாசக் கொப்பிகளில் சொற்றொடர்கள் சிலவற்றையும் வாக்கியங்கள் சிலவற்றையும் எழுதச் செய்க.

## செயற்பாடு 5

- வாக்கிய அமைப்பிலே திணை, பால், எண், இடம் என்பன முக்கிய இடம் பெறுவதை விளக்குக. இதன்பொருட்டு மாணவர்கள் அவை பற்றிய அடிப்படை எண்ணக் கருக்களைப் பெறுவதற்கு உதவும் வகையில் முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட செயலட்டைகளை வழங்குக.

***எடுத்துக்காட்டு:*** **செயலட்டை - ❶**

திணை என்பது ஒழுக்கம். உயர்ந்த ஒழுக்கமுடையவை உயர்திணை எனப்படும். உயர்வல்லாத ஒழுக்கமுடையவை அஃறிணை எனப்படும். பகுத்தறிவுடைய மக்கள், தேவர் முதலியோர் உயர்திணைக்குள் அடங்குவர்.
(மணிவண்ணன், முருகன், திருமகள், மரிக்கார், விக்டர் முதலியன)

பகுத்தறிவில்லாத உயிருள்ளவை, உயிரற்றவை யாவும் அஃறிணைக்குள் அடங்கும்.
(மரம், மாடு, கண்டம், பாம்பு, புத்தகம் முதலியன)

**செயலட்டை - ❷**

பால் என்பது பகுப்பு எனப் பொருள்படும். தமிழில் பால் ஐந்து வகைப்படும்.

1. **ஆண்பால்** - ஆணைக் குறிப்பது.

   (பாலன், நரேந்திரன், முகம்மது, இயேசு, மனோகரன் முதலியன)
2. **பெண்பால்** - பெண்ணைக் குறிப்பது.
   (வேணி, மாதவி, பாத்திமா, மரியாள் முதலியன)

3. **பலர்பால்** - ஆண், பெண் என்பவற்றின் பன்மையைக் குறிப்பது.
   (மாணவர்கள், ஆசிரியர்கள், தம்பியர், பெற்றோர், ஆண்கள், பெண்கள், தாதியர் முதலியன)

**குறிப்பு:** இவை மூன்றும் உயர்திணைக்குரியவை.

4. **ஒன்றன்பால்** - அஃறிணையில் ஒன்றைக் குறிப்பது.
   (ஆடு, மாடு, செடி, பறவை, மலை முதலியன)

5. **பலவின்பால்** - அஃறிணையில் பலவற்றைக் குறிப்பது.
   (ஆடுகள், மாடுகள், செடிகள், பறவைகள், மலைகள் முதலியன)

### செயலட்டை - ❸

எண்ணிக்கையைக் குறிப்பது எண் எனப்படும். ஒருமை, பன்மை என எண் இருவகைப்படும். ஒரு பொருளைக் குறிப்பது ஒருமை. ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையைக் குறிப்பது பன்மை

| ஒருமை | பன்மை |
|---|---|
| அணில் | அணில்கள் |
| ஓசை | ஓசைகள் |
| மரம் | மரங்கள் |
| கல் | கற்கள் |
| பூ | பூக்கள் |

| ஒருமை வாக்கியத்தை பன்மை வாக்கியமாக மாற்றுக. |
|---|
| அணில் அழகாக இருக்கும்.<br>அணில்கள் அழகாக இருக்கும் |
| மரம் அசைந்து ஆடியது.<br>மரங்கள் அசைந்து ஆடின. |
| பூ மலர்ந்தது.<br>பூக்கள் மலர்ந்தன. |

### செயலட்டை - ❹

இடம் மூன்று வகைப்படும். தன்மை, முன்னிலை, படர்க்கை என்பன அம்மூன்று வகைகள். பேசுகிறவர் தன்மை இடம்; அப்பேச்சைக் கேட்பவர் முன்னிலை இடம்; யாரைப் பற்றி அல்லது எதைப் பற்றிப் பேசுகிறோமோ அவர் அல்லது அது படர்க்கை இடம்

| | | |
|---|---|---|
| நான், யான் | - | தன்மை ஒருமை |
| நாம், யாம், நாங்கள் | - | தன்மைப் பன்மை |
| நீ | - | முன்னிலை ஒருமை |
| நீர், நீவிர், நீங்கள் | - | முன்னிலைப் பன்மை |
| அவன், அவள், அது | - | படர்க்கை ஒருமை |
| அவர்கள், அவைகள் | - | படர்க்கைப் பன்மை |

- வாக்கியங்களை எழுதும்போது திணை, பால் எண், இடம் என்பனவற்றை அனுசரித்து எழுதுமாறு மாணவரிடம் வற்புறுத்துக.

- வாக்கியப் பொருளைப் புலப்படுத்துவதற்கு பயனிலைகளின் காலமும் பொருத்தமாக அமைய வேண்டுமென்பதை விளக்குக. தரம் 4 ஆசிரியர் வழிகாட்டி பக்கம் 92இல் கொடுக்கப்பட்ட வாக்கிய அட்டையில் உள்ளவை போன்ற வேறு எடுத்துக்காட்டுகளை வழங்கி, பிழையில்லாத வாக்கியங்களை மாணவர்கள் எழுதத் துணை புரிக.

## செயற்பாடு 6

- முன்னைய வகுப்புகளில் மாணவர்கள் வாக்கியங்களின் பயனிலை, எழுவாய், செயப் படுபொருள் என்பனவற்றை இனங்காணக் கற்றதை நினைவுபடுத்துக. கரும்பலகையில் பின்வருவன போன்ற வாக்கியங்களைக் காட்சிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு:***
1. நாய் இறைச்சியைக் கௌவியது.
2. ஆடு குழை தின்றது.
3. சிறுவர்கள் பால் பருகினார்கள்.
4. நீதிபதி குற்றவாளியைத் தண்டித்தார்.
5. கோழி தானியங்களைக் கொத்தியது.

- ஒவ்வொரு வாக்கியத்திலுமுள்ள பயனிலையை முதலிலும் பயனிலையோடு யார் அல்லது எது என்ற வினாவை வினவி எழுவாயையும், பயனிலையோடு யாரை அல்லது எதை என்ற வினாவை வினவிச் செயப்படுபொருளையும் மாணவர்கள் இனங்காணத் துணை புரிக.

**கவனத்திற்கு:** எல்லா வாக்கியங்களிலும் செயப்படுபொருள் இடம்பெறுவதில்லை என்பதை மாணவர்களுக்கு எடுத்துக் கூறுக.

***எடுத்துக்காட்டு:*** 1. சேவல் காலையில் கூவும்.
2. அரசன் மாறுவேடத்தில் வந்தான்.
3. மாணவர்கள் நேற்றுக் கதிர்காமம் சென்றனர்.

## செயற்பாடு 7

- வாக்கியங்களின் பொருள் தெளிவாகவும் நுட்பமாகவும் அமைவதற்கு அடைமொழி களைச் சேர்த்து வாக்கியங்களை எழுதுவது அவசியமாகும் என்பதைத் தெளிவு படுத்துக.

***எடுத்துக்காட்டு:***

- **நல்ல** மாணாக்கன் **எல்லாப்** பாடங்களையும் **கவனமாகப்** படிப்பான்.

இவ்வாக்கியத்தில் தடித்த எழுத்திலுள்ள சொற்கள் அடைமொழிகளாக இடம்பெற்றமையை மாணவர்களுக்கு விளக்குக.
மாணாக்கன் என்ற எழுவாய்க்கு நல்ல என்பது அடைமொழியாக வந்தது.
பாடங்களை என்ற செயப்படுபொருளுக்கு எல்லாம் என்பது அடைமொழியாக வந்தது.
படிப்பான் என்ற பயனிலைக்கு கவனமாக என்பது அடைமொழியாக வந்தது.
எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்னும் வாக்கிய உறுப்புகளை விசேடித்து (சிறப்பித்து) கூறும் சொற்கள் **அடைமொழிகள்** என்பதை மாணவர்களுக்கு விளக்குக.

**குறிப்பு:** வாக்கிய உறுப்புகள் எல்லாவற்றையும் விசேடித்து எல்லா வாக்கியங்களிலும் அடைமொழிகள் வருவதில்லை என்பதையும், மாணவர்களுக்குத் தெளிவு படுத்துக.

- **அழகான** குழந்தை அங்கே இருந்தது. (எழுவாய் அடைமொழி)
- நாய் **விரைவாய்** ஓடியது. (பயனிலை அடைமொழி)
- காற்று **பெரிய** மரத்தை வீழ்த்தியது.
(செயப்படுபொருள் அடைமொழி)

## செயற்பாடு 8

- வாக்கிய அமைப்பில் எழுவாய், பயனிலை ஆகிய இரண்டு உறுப்புகளும் பொருத்த மாக இடம்பெறுவது வாக்கியத்தின் பொருள் தெளிவாகப் புலப்பட அவசியம் என்பதை மாணவர்களுக்கு எடுத்துக் கூறுக. எழுவாய் அமைந்துள்ள திணை, பால், எண், இடம் என்பன பயனிலையின் திணை, பால், எண், இடம் என்பனவாகவும் இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்துக. எழுவாய் உயர்திணையில் இருந்தால் பயனிலையும் உயர்திணையில் இருக்க வேண்டும் என்பதைக் கூறுக. இவ்வாறே ஏனையவற்றிலும் எழுவாய், பயனிலை என்பன பொருத்தமாக அமைக்கப்பட வேண்டும் என்பதை எடுததுக்காட்டுகள் மூலம் விளக்குக.

***எடுத்துக்காட்டு:***

| எழுவாய் | பயனிலை |
|---|---|
| அவன் | வந்தான் (உயர்திணை ஆண்பால்) |
| அவள் | வந்தாள் (உயர்திணை பெண்பால்) |
| அவர்கள் | வந்தார்கள் (உயர்திணை பலர்பால்) |
| அது | வந்தது (அஃறிணை ஒன்றன்பால்) |
| அவை | வந்தன (அஃறிணை பலவின்பால்) |

**குறிப்பு:** பூக்கள் மலர்ந்தது என்றோ, வீடுகள் விற்கப்பட்டது என்றோ வாக்கியங்கள் அமைவது வழுவாகும் என்பதை எடுத்துக் கூறுக.

## செயற்பாடு 9

- பேச்சு வழக்கிலே உள்ள சில சொற்களின் திருத்தமான வடிவத்தை மாணவர்கள் அறிய வழிப்படுத்துக. மாணவர்கள் வழுக்களின்றித் தம் ஆக்கங்களை எழுதுவதற்கு பேச்சு வழக்குச் சொற்களின் திருத்தமான வடிவத்தை எழுதப் பழகியிருப்பது உதவு மென எடுத்துக் கூறுக. பின்வருவன போன்ற பட்டியலை மாணவர் தேடி எழுதத் துணை புரிக.

***எடுத்துக்காட்டு:*** **பட்டியல்**

| பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
|---|---|
| இளனி | இளநீர் |
| இங்கனம் | இங்ஙனம் |
| எண்ணை | எண்ணெய் |
| காச்சல் | காய்ச்சல் |
| கத்திரிக்கோல் | கத்தரிக்கோல் |
| கோடாலி | கோடரி |
| தீவாளி | தீபாவளி |
| தேத்தண்ணி | தேநீர் |
| பாவக்காய் | பாகற்காய் |
| வெக்கம் | வெட்கம் |

## செயற்பாடு 10

- மாணவர்கள் முதன்மைநிலை மூன்றில் கற்பதால் செம்மையான மொழிநடையிற் சரளமாக எழுதுந் திறனைப் பெறுவதற்கு உதவும் பொருட்டுப் பந்தியாக எழுதவும், தனி வாக்கியங்களில் மட்டுமன்றி தொடர்வாக்கியங்களில் எழுதவும் துணை புரிக. ஒரு கருத்தை விளக்கிப் பல வாக்கியங்களில் ஒரு பந்தியாக எழுத வழிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு:***

- பசு அழைத்தது. கன்று ஓடிற்று - இவை தனி வாக்கியங்கள்
- பசு அழைக்கக் கன்று ஓடிற்று எனத் தொடர் வாக்கியமாகவும் எழுதலாம் என விளக்குக.
- அரசன் திருடனைக் கண்டான். திருடன் அரசனைக் கண்டான்.
  - இவை தனி வாக்கியங்கள்
- அரசனும் திருடனும் ஒருவரை ஒருவர் கண்டனர் எனத் தொடர்வாக்கியமாக எழுதலாம் என விளக்குக.

**குறிப்பு:** செம்மையான மொழிநடையிலே சரளமாக எழுதும்போது தொடர் வாக்கியங்களைப் பிரித்துத் தனி வாக்கியங்கள் ஆக்கலாம் என்றும் தனி வர்ககியங்களை இணைத்துத் தொடர் வாக்கியம் ஆக்கலாம் என்றும் தெளிவுபடுத்துக.

## கற்றல் - கற்பித்தல் வளங்கள்

- பெயர்ச்சொல், வினைச்சொல் என்பன கொண்ட செயலட்டை
- பெயர்ச்சொல் விளக்கம் (செயலட்டை)
- வினைச்சொல் விளக்கம் (செயலட்டை)
- பெயராகவும் வினையாகவும் வரும் சொற்கள் (செயலட்டை)
- சேர்த்தெழுதல், பிரித்தெழுதல் (செயலட்டைகள்)
- சொற்றொடர், வாக்கியம் என்பன எழுதப்பட்ட அட்டை
- திணை, பால், எண், இடம் என்பனவற்றை விளக்கும் செயலட்டைகள்
- வாக்கியங்கள் (எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்) எழுதப்பட்ட அட்டை
- அடைமொழிகள் கையாளப்பட்ட வாக்கிய அட்டை
- எழுவாய், பயனிலை இயைபு (வாக்கியங்கள்)
- பேச்சு வழக்குச் சொற்களும் அவற்றின் எழுத்து வழக்கும் - பட்டியல்
- தனி வாக்கியங்கள் - தொடர் வாக்கியங்கள்

## கணிப்பீடு

- பெயர்ச்சொல், வினைச்சொல் என்பவற்றை வாக்கியங்களில் இனங்காணல்
- சில சொற்களைப் பெயராகவும், வினையாகவும் வர வாக்கியம் எழுதுதல்
- சொற்களைச் சேர்த்தெழுதுதல், பொருள் புலப்படப் பிரித்தெழுதுதல்
- சொற்றொடர்கள், வாக்கியங்கள் என்பனவற்றின் வேறுபாட்டை இனங்காணல்
- திணை, பால், எண், இடம், காலம் என்பனவற்றை அனுசரித்து வாக்கியம் அமைத்தல்
- எழுவாய் - பயனிலை இயைபுபட வாக்கியம் அமைத்தல்
- வாக்கிய உறுப்புகளை இனங்காணல்
- அடைமொழிகளைக் கையாண்டு வாக்கியம் அமைத்தல்
- பேச்சு வழக்குச் சொற்களை நியமமொழியில் எழுதுதல்
- செம்மையான மொழிநடையிற் சரளமாக எழுதுதல்

என்பனவற்றைக் கணிப்பிடுக.

## தேர்ச்சி மட்டம்

## 4.1.6 விரைவாகவும் எழுத்துகளை உறுப்பமையவும் எழுதுந் திறனை விருத்தி செய்வார்.

### உள்ளடக்கம்

✓ **பார்த்தெழுதுதல்**
- சொற்கள்
- சொற்றொடர்கள்
- வாக்கியங்கள்
- பந்திகள்

✓ **கேட்டெழுதுதல்/சொல்வதெழுதுதல்**
- தெரிவுசெய்யப்பட்ட சொற்கள்
- சொற்றொடர்கள்
- இணைமொழிகள்
- வாக்கியங்கள்
- பழமொழிகள்
- சிறிய பந்திகள்

**பார்த்து எழுதுதலின் நன்மைகள்**

- கையெழுத்துத் திருத்தமாக அமையும்.
- தெளிவாகவும் வேகமாகவும் எழுதத் தூண்டுகோளாக அமையும்.
- மாணவர்களின் உற்று நோக்கும் பழக்கத்தையும் ஆற்றலையும் வளர்க்கும்.
- கவனக்குறைவாக உள்ள மாணவர் களுக்குக் கவனத்தை ஊட்டவல்லது.
- நிறுத்தக்குறிகளின் பயனை நன்குணர் வதற்குத் துணையாக இருக்கும்.
- மாணவர்கள் எழுதம்போது நேரும் பிழைகளை மறைமுகமாக இப்பயிற்சி யால் நீங்க இடம் உண்டு.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

- மாணவர்களை விரைவாகவும் உறுப்பாகவும் எழுதச் செய்வதற்குப் பார்த்தெழுதுதல்/உறுப்பமைய எழுதுதல் பயிற்சிகள் என்பனவற்றை வாரம் ஒருமுறை வழங்குதல் வேண்டும். வேகமாக எழுதுவதற்கு வாய்ப்பாக நேரம் கருத்திற்கொள்ளப்பட வேண்டும். முன்னர் ஏழு நிமிடங்களில் எழுதப்பட்ட விடயப்பகுதி ஆறு நிமிடங்களில் அல்லது ஐந்து நிமிடங்களில் மாணவர்கள் எழுதி முடிக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துக.

- வேகமாக எழுதினாலும் எழுத்துகள் உறுப்பமைய எழுதப்படுதல், வரியில் எழுதப்படுதல், எழுத்துக்களுக்கிடையே உரிய இடைவெளி விட்டு எழுதப்படுதல், உயிர்க்குறிகள் சரியாக அனுசரிக்கப்படுதல், நிறுத்தக் குறிகள் உரியவாறு இடப்படுதல் முதலிய பொறிமுறைகளை மாணவர்கள் கடைப்பிடிப்பதை உறுதிப்படுத்துக.

- வாரமொரு முறையாவது கேட்டெழுதுதல்/சொல்வதெழுதுதல் பயிற்சிகள் வழங்குக. பார்த்தெழுதுதலை விட சொல்வதெழுதும் போது மாணவர்கள் எல்லோருமே வேகமாய் எழுத வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என்பதைக் கருத்திற் கொள்க. மாணவர் யாவரும் கேட்டெழுதக்கூடிய வேகத்தை முதலில் இனங்காண வேண்டியது ஆசிரியரின் இன்றியமையாத கடமையாகின்றது. தொடர்ந்து வரும் சொல்வதெழுதும் பயிற்சிகளின் போதுதான் மாணவர்களின் எழுதும் வேகத்தைக் கூட்டுவது சாத்தியமாகும் என்பதை கருத்திற்கொண்டு. படிப்படியாக மாணவரின் எழுதும் வேகத்தை அதிகரிக்கக் கூடிய வகையில் சொல்வதற்குத் தெரிவுசெய்யும் பகுதியை வரையறை செய்க.

### *பார்த்தெழுதுதல்*

- பார்த்து எழுதப் பழக்கும்போது வாசித்துக்கொண்டு எழுதச் செய்யும் போது ஒலிப்பு, வாசித்தல் ஆகிய திறன்கள் வளருகின்றன.

### *சொல்வதெழுதல்*

- ஆசிரியர் வாசிப்பதைக்கேட்டு மாணவர்கள் எழுதுவது சொல்வதெழுதலாகும். சொல்வதை எழுதும்போது எழுத்து வடிவங்களை நினைவு கூர்ந்து எழுதுகின்றனர். சொல்வதை எழுதும் போது எழுத்துக்கள் ஒலித் தோற்றுவாயிலிருந்து நினைவுக் குக் கொண்டுவரப்படுகின்றன. எனவே ஆசிரியரின் ஒலிப்பு முறையாகஅமைதல் வேண்டும். சொல்வதெழுதலுக்கு உரிய பகுதியை பேசுவது போலன்றி வாசிப்புப் பொறிமுறையைக் கையாண்டு வாசித்தல் வேண்டும்.

### *தானே எழுதுதல்*

- சொல்வதெழுதலுக்கு மேம்பட்ட எழுதுதிறன் தானே எழுதுதலாகும். தானே எழுதும் போது மாணவர்களே ஒலியை எழுப்பி அவ்வொலிக்குரிய எழுத்து வடிவங்களை அறிந்து எழுதுகின்றனர்.

## செயற்பாடுகள்


### செயற்பாடு 1 (விரைவாக எழுதுந் திறனை விருத்தி செய்தல்)

- பார்த்தெழுதுதல் (உறுப்பமைய எழுதுதல்) பயிற்சிகள் முன்கூட்டியே திட்டமிடப்பட்டு பாடவேளையில் மாத்திரம் மாணவர்களால் எழுதி முடிக்கக்கூடிய அளவுக்கு இருப்பதை உறுதிப்படுத்துக.

- மாணவர்களின் எழுதும் வேகத்தைக் கூட்டுவதற்காக ஐந்து நிமிடமோ, எட்டு நிமிடமோ தான் மாணவர்கள் எழுதுவதற்கு நேரம் வழங்கப்படும் என்பதை அறிவிக்குக. உறுப்பெழுத்தில் மாணவர்கள் அனைவரும் ஆர்வமாக ஈடுபடக் கூடிய ஆரோக்கியமான சூழல் வகுப்பில் நிலவச் செய்க. (வேண்டா வெறுப்பாக மாணவர்கள் இப்பயிற்சிகளில் ஈடுபடுவாராயின் பயிற்சி கொடுப்பதன் நோக்கம் நிறைவுறாது என்பதைக் கருத்திற் கொள்க.)

- பார்த்தெழுதுவதற்குத் தெரிவுசெய்யும் பகுதியை சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்கள் பந்திகள் என வளர்த்துச் செய்க.

***எடுத்துக்காட்டு:*** **பார்த்தெழுதுதல்**




**நல்ல கையெழுத்தின் இயல்புகள்**

- நல்ல கையெழுத்து நல்ல கல்விக்கும் மனப்பயிற்சிக்கும் வழிவகுக்கும். இது பிள்ளை களின் தசை நார்களை அடக்கி ஆளுவது மட்டுமன்றி மனதையும் பயில்விக்கின்றது. அழகின் பெருமையை எடுத்துக்காட்டுகின்றது. நல்ல முத்துப் போன்ற எழுத்துக்களை யாவரும் விரும்பிப்பிடிப்பர்.

## செயற்பாடு 2

- மாணவர்களின் செவிமடுக்குந்திறன், பரிச்சயமான சொற்களஞ்சியம் அமைந்துள்ளமை, ஏற்ற வேகத்திற் சொல்லுதல் என்பன கேட்டெழுதுதலின் போது அடிப்படையானவை என்பதைக் கவனத்திற்கொள்க.

- மாணவருக்குப் பரிச்சயமான சொற்கள், சொற்றொடர்கள், இணைமொழிகள், வாக்கியங்கள், பழமொழிகள், சிறிய பந்திகள் என்பனவற்றைப் பயிற்சிகள் வழங்கும்போது படிப்படியாக அதிகரித்து வழங்க ஆவன செய்க.

- சொல்வதெழுதுதலின்போது மாணவர்கள் எழுத்துப் பிழையின்மை, நிறுத்தக் குறிப் பிரயோகம் என்பன வற்றிற் கவனஞ் செலுத்துமாறு அறிவுறுத்துக.

- வாரந்தோறும் நடத்தப்படும் சொல்வதெழுதுதலில் மாணவர்களின் வேகம் அதிகரித்துச்செல்வதை உறுதிப்படுத்துக.

***சொல்வதெழுதலின் நன்மைகள்***

1. பேசும் மொழியை விரைவாகவும், சரியாகவும் பொருளுணர்ந்து கொள்வதற்கு ஒரு நல்லவாய்ப்பாகும்.
2. கவனிக்கும் ஆற்றலையும் கேட்கு மாற்றலையும் மன ஒருமைப்பாட்டையும் நன்கு வளர்க்கின்றது.
3. நிறுத்தக்குறிகளை சரியாக இடுவதற்கான பயிற்சியைத் தருகின்றது.
4. கையெழுத்தின் விரைவையும்தெளிவையும் வளர்க்கத்துணை நிற்கின்றது.
5. ஆசிரியரின் உச்சரிப்பை மாணவர்கள் சரியாகப் பின் பற்றுகின்றார்களா என அறிய உதவுகின்றது.
6. மாணவர்கள் விடும் தவறுகளை கண்டறியச் சரியான வழியாகக் கொள்ளலாம்.
7. ஆசிரியரின் பேச்சுத் தெளிவையும் இது கண்டறிகிறது.

## கற்றல் - கற்பித்தல் வளங்கள்

- ▣ பார்த்தெழுதுதல்
  - சொற்கள்
  - சொற்றொடர்கள்
  - வாக்கியங்கள்
  - பந்திகள்
- ▣ கேட்டெழுதுதல் / சொல்வதெழுதுதல்
  - சொற்கள்
  - சொற்றொடர்கள்
  - இணைமொழிகள்
  - வாக்கியங்கள்
  - பழமொழிகள்
  - சிறிய பந்திகள்

## கணிப்பீடு

- ✳ உறுப்பாக எழுதுதல்
- ✳ சீரான இடைவெளி விட்டு எழுதுதல்
- ✳ உயிர்க்குறிகளை முறையாக எழுதுதல்
- ✳ நிறுத்தக் குறிகளைச் சரியாகப் பிரயோகித்தல்
- ✳ எழுத்துப் பிழையின்றி எழுதுதல்
- ✳ வேகமாக எழுதுதல்

என்பனவற்றைக் கணிப்பிடுக.

**பார்த்து எழுதுதலும் விளையாட்டு முறையும்**

- ஒருமையை பன்மையாக மாற்றும் பயிற்சிகள், காலங்களை மாற்றி எழுதுதல், ஏற்ற அடை மொழிகளை பெயர்களுக்கும், வினைகளுக்கும் தந்து தொடர் மொழிகளை விரிக்கச் செய்யும் பயிற்சிகள்.

இவ்வாறாக பயிற்சிகள் மாணவர் களின் சொற்களஞ்சியத் தேர்ச்சி யையும் இலக்கண மரபு முறை களையும் தெரிந்து வழங்கும் அறிவையும் வளர்க்கும்.

**சொல்வதெழுதல்**

- ஆசிரியர் சொல்வதைக்கேட்டு மாணவர்கள் பார்க்காமல் எழுது வது சொல்வதெழுதலாகும். பார்த்து எழுதலை விட கேட் டெழுதலில் சுறுசுறுப்பும் விரை வும் அதிகமாக உண்டு.

## தேர்ச்சி மட்டம்

## 4.1.7 மொழிப் பயிற்சிகளில் ஈடுபடுவார்.

## உள்ளடக்கம்

- ✓ ஒத்த கருத்துச் சொற்கள், எதிர்க்கருத்துச் சொற்கள், எதிர்ப்பாற் சொற்கள் என்பவற்றை இனங்கண்டு அவற்றை வாக்கியத்தில் எழுதுதல்
- ✓ ஒரு பொருள் பன்மொழி, பல பொருள் ஒரு மொழி, தொடர்மொழிக்கு ஒரு மொழி என்பனவற்றை எழுதுதல்
- ✓ கீறிட்ட இடங்களில் சொற்களை வைத்து நிரப்புதல்
- ✓ ஒழுங்கின்றி அமைந்துள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்களை ஆக்குதல்
- ✓ சொற்கள், சொற்றொடர்கள் என்பவற்றை வைத்து வாக்கியமாக்குதல்
- ✓ கவிதைகளைப் பூர்த்தி செய்தல்
- ✓ தனி வாக்கியங்களைத் தொடர்வாக்கியங்கள் ஆக்குதல்
- ✓ தொடர் வாக்கியங்களைத் தனிவாக்கியங்கள் ஆக்குதல்
- ✓ வாக்கியங்களை வினா வாக்கியங்களாக மாற்றி எழுதுதல்
- ✓ குறுக்கெழுத்துப்போட்டி, புதிர்கள்
- ✓ சுருக்கக் குறியீடுகளை விரித்து எழுதுதல்
- ✓ பழமொழிகளின் பொருள் எழுதுதல்
- ✓ மரபுத்தொடர்களின் பொருள் எழுதுதல்
- ✓ உவமைகளை இனங்கண்டு எழுதுதல்
- ✓ ஒழுங்கின்றி அமைந்துள்ள வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி எழுதுதல்
- ✓ பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுதல்

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

- மாணவர்களை மொழிப் பயிற்சிகளில் ஈடுபடுத்துவதற்குக் கையாளக்கூடிய முக்கிய மானதொரு அணுகுமுறை சுயதேடல் ஆகும். மாணவர்கள் சுயமாக வாசித்து, பல்வேறு விடயங்களைக் கிரகித்து தமக்கு முக்கியமெனக் கருதுபவற்றைக் குறித்து வைத்துக் கொள்வதாகும். மாணவர்கள் இவ்வாறான தேடல் முயற்சியில் ஈடுபடுவதற்கு ஏற்ற வாய்ப்பு, வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களை அவ்வப்போது வழி காட்டி உற்சாகமூட்டுக.

- தேடிப் பெற்றுக்கொண்ட விடயங்களை மாணவர் உள்வாங்கி, மனதிற் பதித்துக் கொள்வதற்கு உதவும் வகையில் அவற்றை மாணவர்கள் திரும்பத் திரும்ப வாசிக்கவும் அவ்வாறு வாசித்தவற்றை நினைவு கூரவும் மீட்டற் பயிற்சிகள் வழங்குக.

- தேடல், பதித்தல் என்பனவற்றோடு பிரயோகித்தலே மாணவரை மொழித்திறன்களை மேம்படுத்துவதற்குப் பெரிதும் பயன்படும் என்பதைக் கருத்திற்கொள்க. மாணவர்கள் தாம் பெற்ற சொல்வளங்கள், சொற்றொடர்கள் வளங்கள் என்பனவற்றைப் பிரயோகிக்க உதவும் வகையிலே புதிதாக வாசிக்கும் உரைப்பகுதிகள், பாடல்கள் என்பனவற்றில் பல்வேறு பயிற்சிகள் வழங்குக.

  ***எடுத்துக்காட்டு:***

  புதிதாக வாசிக்கும் உரைப்பகுதிகள், பாடல்கள் என்பனவற்றில் வரும் ஒத்தகருத்துச் சொற்கள், எதிர்க்கருத்துச் சொற்கள் என்பனவற்றை இனங்காணத் துணை புரிக. பழமொழிகள், உவமைத்தொடர்கள், மரபுத்தொடர்கள் என்பன எவ்வாறு கையாளப் பட்டுள்ளன என்பதை மாணவர்கள் கண்டறிய வழிகாட்டுக.

## செயற்பாடுகள்

### செயற்பாடு 1 (மொழிப் பயிற்சிகளில் ஈடுபடுதல்)

- மாணவர்கள் 3 குழுக்களாகப் பிரிக்குக. ஒரு குழுவுக்கு ஒத்த கருத்துச் சொற்களை இனங்காணவும். அவற்றை வைத்து வாக்கியம் அமைக்கவும் பயிற்சிகள் வழங்குக. இரண்டாவது குழுவுக்கு எதிர்க்கருத்துச் சொற்களை இனங்காணவும் அவற்றை வைத்து வாக்கியம் அமைக்கவும் பயிற்சிகள் வழங்குக. மூன்றாவது குழுவுக்கு எதிர்ப்பாற்சொற்களை இனங்காணவும் அவற்றை வைத்து வாக்கியம் அமைக்கவும் பயிற்சிகள் வழங்குக.
  (மூன்று பாடவேளைகளில் மூன்று குழுக்களும் எல்லாப் பயிற்சிகளிலும் ஈடுபடத்தக்க தாக மாற்றிக் கொடுக்க ஆவனசெய்க.)

### செயற்பாடு 2

- மாதிரிச் செயலட்டைகளைத் தயாரித்து, ஒரு பொருட் பன்மொழி, பல பொருள் ஒரு மொழி, தொடர்மொழிக்கு ஒரு மொழி ஆகியவற்றினைக் காட்சிப்படுத்துக. ஒவ்வொருமாணவரும் அவ்வாறான சொல் வளங்களைத் தேடவும் அவற்றை வாக்கியங்களில் அமைத்தெழுதவும் வழிப்படுத்துக.

*எடுத்துக்காட்டு:* **செயலட்டை - ❶**

**ஒரு பொருள் பன்மொழி**

| | |
|---|---|
| அரசன் | - மன்னன், வேந்தன், இராசா, கோ |
| அழகு | - எழில், வனப்பு, வடிவு, கவின் |
| துன்பம் | - அல்லல், இன்னல், துயர், இடர் |
| சூரியன் | - ஞாயிறு, பகலவன், பரிதி, ஆதவன் |
| சினம் | - கோபம், சீற்றம், வெகுளி, ஆத்திரம் |

**செயலட்டை - ❷**

**பல பொருள் ஒரு மொழி**

| | |
|---|---|
| அடி | - அடித்தல், ஒரு நீட்டலளவை, பாதம் |
| திங்கள் | - மாதம், வாரத்தில் ஒரு நாள், சந்திரன் |
| அரை | - பாதி, இடுப்பு, அரைத்தல் |
| கலை | - வித்தை, ஆண்மான், கலைத்தல் |
| முடி | - மகுடம், முடித்தல், குடுமி |

**செயலட்டை - ❸**

**தொடர்மொழிக்கு ஒரு மொழி**

| | |
|---|---|
| அகர வரிசைப்படி சொற்களுக்குப் பொருள் கூறுவது | - **அகராதி** |
| தாய் தந்தையரை இழந்தவன் | - **அநாதை** |
| சிறைத் தண்டனை பெற்றவன் | - **கைதி** |
| ஒருவர் / ஒரு பொருள் தானே தன் கதையைக் கூறுவது | - **சுயசரிதை** |
| பேருந்தில் பயணச்சீட்டு வழங்குபவர் | - **நடத்துநர்** |
| விசாரணை முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது | - **தீர்ப்பு** |
| மற்றவர்களைப் பற்றிய அக்கறையில்லாதவன் | - **சுயநலவாதி** |
| வீண் செலவு செய்பவன் | - **ஊதாரி** |
| தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவன் | - **வேட்பாளர்** |
| முனிவர்கள் வாழும் இடம் | - **ஆச்சிரமம்** |
| நூலுக்கு இன்னொருவரால் வழங்கப்படும் உரை | - **அணிந்துரை** |
| நடக்க இருப்பவற்றை முன்னரே கூறுபவன் | - **தீர்க்கதரிசி** |
| அரசன், ஆசிரியர், தந்தை, தாய், தமையன் ஆகியோர் | - **குரவர்** |
| சுதந்திரமற்று வாழ்பவன் | - **அடிமை** |
| அரண்மனையில் பெண்கள் வசிக்கும் இடம் | - **அந்தப்புரம்** |
| கடவுள் இல்லை என்று வாதிடுபவன் | - **நாத்திகன்** |
| வழக்கைத் தாக்கல் செய்பவன் | - **வாதி** |
| வழக்கில் குற்றம் சாட்டப்படுபவன் | - **பிரதிவாதி** |

**செயலட்டை - ❹**

**விழாக்கள்**

| | |
|---|---|
| இருபத்தைந்தாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா | - **வெள்ளி விழா** |
| ஐம்பதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா | - **பொன் விழா** |
| அறுபதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா | - **வைரவிழா(மணி விழா)** |
| எழுபத்தைந்தாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா | - **பவள விழா** |
| நூறாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா | - **நூற்றாண்டு விழா** |


**பத்து ஆண்டுகளை தசாப்தம் என்று கூறுவர்.**

## செயற்பாடு 3

◘ வாக்கியங்களுக்கு இடையே உள்ள படங்களின் பெயர்களைப் பூர்த்திசெய்து எழுதுவதற்கும் கீறிட்ட இடங்களிற் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புவதற்கும் மாணவர்களுக்குப் பயிற்சி வழங்குக.

***எடுத்துக்காட்டு:*** **நானே ராசா!**

**படங்களின் பெயர்களைச் சொற்களால் நிரப்புக.**




## செயற்பாடு 4

◘ வாக்கியங்களை மாணவர்கள் பிழையின்றி ஆக்கி எழுதுவதற்கு சொற்களை ஒழுங்கு படுத்தி வாக்கியங்களாக்கும் பயிற்சிகளை வழங்குக.

***எடுத்துக்காட்டு 1:***

| |
|---|
| மகாவித்தியாலயம்/ கல்வியிற் / பாரதி / விளங்கியது / சிறந்து |
| **பாரதி மகாவித்தியாலயம் கல்வியிற் சிறந்து விளங்கியது.** |

1. செய்வதைக் / துணிப்பொம்மைகள் / சிவநந்தினி / கவனித்தாள் / கூர்ந்து
2. நின்றனர் / எல்லோரும் / வானத்தைப் / கொண்டு / பார்த்துக்
3. தொழிற்சாலை / கடதாசித் / இருக்கிறது / வாழைச்சேனையில்
4. அமைதியாக / கொண்டிருந்தது / ஓடிக் / கங்கை / மாணிக்க
5. இரு / அந்த / நிழல் / பக்கங்களிலும் / வீதியில் / மரங்கள் / நின்றன.

***எடுத்துக்காட்டு 2:***

மாறியுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி பழமொழிகளாக்குக.

1. குளித்துக் /குடி /கூழானாலும்
2. கட்டு /கந்தையானாலும் /கசக்கிக்
3. அழகு /தெரியும் /முகத்தில் /அகத்தின்
4. மட்டும் /தொட்டில் /சுடுகாடு /பழக்கம்
5. ஐம்பதில் /வளையாதது /வளையுமா /ஐந்தில்

## செயற்பாடு 5

- மாணவர்கள் வாசித்தபோது கிடைத்த அருஞ்சொற்களையும் சொற்றொடர்களையும் வைத்து வாக்கியம் ஆக்குமாறு ஒரு கலந்துரையாடலில் ஈடுபடுத்துக. குழுக்களிலே ஆக்கப்பட்ட வாக்கியங்களை எழுவாய், பயனிலைப் பொருத்தமுறச் செம்மைப்படுத்துக. அவ்வாக்கியங்களை அப்பியாசக் கொப்பிகளில் எழுதச் செய்க.

## செயற்பாடு 6

- இலகுவான கவிதைகளை வாசிக்கச் செய்க. பின்னர் சில கவிதைகளின் முற்பகுதியைக் கொடுத்து, பிற்பகுதியைப் பூர்த்திசெய்யத் துணை புரிக.

***எடுத்துக்காட்டு:***

சிட்டே சிட்டே பறந்து வா
    சிறகை வாசித்துப் பறந்து வா
.................................................
    .................................................
கொட்டிக் கிடக்கும் நெல் மணிகள்
    .................................................
.................................................
    .................................................

## செயற்பாடு 7

- வாக்கிய அமைப்பில் உள்ள பல்வேறு வகைகளை மாணவர்கள் பரிச்சயப்படுத்துவற்கு உதவியாக தனி வாக்கியங்களைத் தொடர் வாக்கியங்களாக ஆக்கும் செயலட்டை, தொடர்வாக்கியங்களைத் தனி வாக்கியங்களாக ஆக்கும் செயலட்டை, வாக்கியங்களை வினா வாக்கியங்களாக ஆக்கும் செயலட்டை என்பனவற்றைக் காட்சிப்படுததுக. கலந்துரையாடலில் மாணவர்களை ஈடுபடுத்தி அவற்றை மாணவர்கள் விளங்கிக் கொள்ளத் துணை புரிக. பயிற்சிகள் வழங்குக.

***எடுத்துக்காட்டு:***

**செயலட்டை - ❶**

1. ஆசிரியர்கள் பாடசாலைக்குப் போனார்கள்.
மாணவர்கள் பாடசாலைக்குப் போனார்கள்.
ஆசிரியர்களும் மாணவர்களும் பாடசாலைக்குப் போனார்கள்.

2. உழவன் வயலை உழுதான்.
பின் தானியங்களை விதைத்தான்.
உழவன் வயலை உழுத பின் தானியங்களை விதைத்தான்.

3. சிற்பம் ஒரு கலை.
ஓவியம் ஒரு கலை.
கட்டிட அமைப்பு ஒரு கலை.
சிற்பமும் ஓவியமும், கட்டிட அமைப்பும் கலைகள் ஆகும்.

**செயலட்டை - ❷**

1. விடுமுறையின்போது ஒரு நாள் இரகுமானும் அவனது மாமனாரும் மூதூருக்குச் சென்றார்கள்.
விடுமுறையின்போது ஒரு நாள் இரகுமான் மூதூருக்குச் சென்றான்.
அவனது மாமனாரும் மூதூருக்குச் சென்றார்.

2. அரசனும் பரிவாரத்தினரும் வேட்டையாடக் காட்டுக்குச் சென்றனர்.
அரசன் வேட்டையாடக் காட்டுக்குச் சென்றான்.
பரிவாரத்தினர் வேட்டையாடக் காட்டுக்குச் சென்றார்.

3. பாலைக் குடித்தவுடன் குழந்தையின் தாகமும் களைப்பும் நீங்கின.
குழந்தை பால் குடித்தது.
அதன் தாகமும் களைப்பும் நீங்கின.

**செயலட்டை - ❸**

1. நேற்றுப் பாடசாலைக்குச் சென்று மோகன் பாடம் படித்தான்.
நேற்றுப் பாடசாலைக்குச் சென்று மோகன் பாடம் படித்தானா?

2. பெரியப்பாவும், பெரியம்மாவும் நேற்று வீட்டுக்கு வந்தனர்.
நேற்று வீட்டுக்கு வந்தோர் யாவர்?


3. இலங்கை 1948ஆம் ஆண்டு சுதந்தரம் பெற்றது.
இலங்கை சுதந்திரம் பெற்றது எப்போது?

## செயற்பாடு 8

▣ மாணவரின் சொல்வளத்தைப் பரீட்சிக்கும் வகையில் குறுக்கெழுத்துப் போட்டியையும், அவர்களின் மூளைக்கு வேலை கொடுக்கும் வகையிலே புதிர்களையும் வழங்குக.

***எடுத்துக்காட்டு:***

**குறுக்கெழுத்துப் போட்டி**



**இடமிருந்து வலம்**

1. கிழங்கு வகைகளில் ஒன்று
2. வாசலை அடைக்க உதவுவது.
3. செய்திகளைத் திரட்டித் தருவது.
4. தகப்பனுக்கு இளையவர்
5. தெய்வம் என்பதன் ஒத்த கருத்துச்சொல்

**மேலிருந்து கீழ்**

6. மலர்களிற் காணப்படும் பொடி
7. செலவு என்பதன் எதிர்ப்பதம்
8. கிடைக்கின்றது என்பதன் இறந்த காலம்
9. கரண்டி முதலியவற்றை இலகுவாகப் பிடிக்க உதவுவது.
10. பாட்டுப் பாடுபவன்

**சிந்தனைப் புதிர்கள்**

1. ஆசிரியர் ஒரு நாள் மாணவர்களை மிருகக்காட்சிசாலைக்கு அழைத்துச் சென்றார். எல்லாரும் விதவிதமான பறவைகள், விலங்குகள் என்பவற்றைக் கண்டு குதூகலித்து வந்தனர். ஆனால் மாணவன் ஒருவனோ பறவைகள், விலங்குகள் என்பவற்றின் தலைகள் எத்தனை, கால்கள் எத்தனை என்பவற்றை எண்ணிக் கணக்கிட்டுக் கொண்டே வந்தான். மிருகக்காட்சிசாலையைப் பார்த்து முடிந்து வெளியே வந்ததும், ஆசிரியர் அம்மாணவனைப் பார்த்து ''என்ன பார்த்தாய்?'' என்று கேட்டார். ''ஐயா, 50 தலைகளையும் 130 கால்களையும் பார்த்தேன்.'' என்றான். இதைக்கேட்டு ஏனைய மாணவர்கள் சிரித்தனர். ஆனால் ஆசிரியர் அதனை வைத்துக்கொண்டு மாணவர்களின் மூளைக்கு வேலை கொடுத்தார். 50 தலைகள், 130 கால்கள் என்றால், இக்காட்சிச்சாலையில் உள்ள மிருகங்கள் எத்தனை? பறவைகள் எத்தனை? **நீங்களும் கண்டுபிடியுங்கள்.**

**விடை : (மிருகங்கள் 15, பறவைகள் 35)**

2. இரண்டு நண்பர்கள் புறப்படும்போது அவரவரிடமுள்ள பணத்தை ஒப்பிட்டுப் பார்த்தனர். முதல் நண்பன் ''எனக்கு நீ நூறு ரூபாய் கொடுத்தால் உன்னைப்போல் நான் இரு மடங்கு பணம் உள்ளவனாவேன்.'' என்றான். மற்றவன் ''இவ்வளவுதானா? நீ எனக்குப் பத்து ரூபாய் கொடுத்தால் நான் உன்னைப்போல் ஆறு மடங்கு பணமுள்ளவன் ஆகி விடுவேன்'' என்றான். நண்பர்கள் இருவரும் தனித்தனியே வைத்திருந்த பணத்தொகை எவ்வளவு? **கண்டுபிடியுங்கள்.**

(முதல் நண்பன் - 40 ரூபாய், இரண்டாம் நண்பன் 170 ரூபாய்)

## செயற்பாடு 9

▣ மாணவர்கள் தேடிக்தொடுத்து வைத்திருக்கும் பழமொழிகள், மரபுத்தொடர்கள் என்பன வற்றின் பொருளை அறியவும், எழுதவும் மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குக. செயலட்டைகளில் உள்ளவற்றை வாசித்துப் பொருளறியவும், அவற்றை அப்பியாசப் புத்தகங்களில் எழுதவும் வழிப்படுத்துக. வேறு பழமொழிகளுக்கும், மரபுத்தொடர் களுக்கும் பொருள் எழுதத் துணை புரிக.

***எடுத்துக்காட்டு:***

### செயலட்டை - ❶

| | | |
|---|---|---|
| அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் | - | விடாமுயற்சி |
| அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி | - | முன்மாதிரி |
| ஆழம் அறியாமல் காலை விடாதே | - | ஆராய்ந்து செய் |
| ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம் | - | காலம் மாறும் |
| இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை | - | திருப்தியற்ற மனம் |
| இட்டுக் கெட்டார் எங்கும் இல்லை | - | தருமஞ் செய் |
| உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும் | - | உலோபங் கூடாது |
| எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லாக்கு | - | வீண் பெருமை |
| ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? | - | இளமையிற் செய் |
| கடவுளை நம்பினோர் கைவிடப்படார். | - | நம்பிக்கை காக்கும் |

### செயலட்டை - ❷

| | | |
|---|---|---|
| அகட விகடம் | - | தந்திரம் |
| அகலக் கால் வைத்தல் | - | அளவு கடந்து போதல் |
| இட்டுக் கட்டுதல் | - | இல்லாததைச் சொல்லுதல் |
| இலவுகாத்த கிளி | - | காத்திருந்து ஏமாறுதல் |
| எடுத்தெறிதல் | - | அலட்சியம் செய்தல் |
| ஏட்டுச் சுரைக்காய் | - | அனுபவமில்லாத கல்வியறிவு |
| ஒத்துப்பாடுதல் | - | ஆமோதித்தல் |
| கட்டுக்கதை | - | பொய்க்கதை |
| கல்லில் நாருரித்தல் | - | இல்லாததைப் பெறமுயலல் |
| கைகூடுதல் | - | சித்தியடைதல் |
| சீட்டுக்கொடுத்தல் | - | வேலையினின்றும் நீக்கல் |
| நுனிப்புல் மேய்தல் | - | மேலெழுந்தவாரியாகப் படித்தல் |
| நெஞ்சு புண்ணாதல் | - | மனம் வருந்துதல் |
| பூசி மெழுகுதல் | - | குற்றத்தை மறைத்தல் |
| பொடி வைத்தல் | - | தந்திரமாகப் பேசுதல் |

## செயற்பாடு 10

- பாடல்களில் இடம்பெறும் உவமானங்களை இனங்கண்டு எழுதுவதற்கு மாணவர்க்குத் துணை புரிக.

***எடுத்துக்காட்டு 1:***

துள்ளித் துள்ளி, ஓடுதுபார்
வெள்ளை முயல் அம்மா - அதை
மெள்ள ஓடிப் பிடித்திடவே
மிகவும் ஆசை அம்மா.

பஞ்சு போன்ற உடலைத் தடவிப்
பார்க்க ஆசை அம்மா - நான்
கொஞ்சிப் பேசிக் கூடி ஆடிக்
குதிக்க வேண்டும் அம்மா.

*அழ. வள்ளியப்பா*

***எடுத்துக்காட்டு 2:***

மீன்கள்கோடி கோடி சூழ வெண்ணிலாவே! - ஒரு
வெள்ளியோடம் போலவரும் வெண்ணிலாவே!

பானுவெங் கதிர்குளிர்க்கும் வெண்ணிலாவே! - நித்தம்
பாற்கடலும் ஆடுவையோ? வெண்ணிலாவே!

*கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை*

## செயற்பாடு 11

- கருத்துக்களைப் புலப்படுத்துவதற்காகவே வாக்கியங்கள் எழுதப்படுகின்றன என மாணவர்களுக்கு எடுத்துக் கூறுக. வாக்கியங்களை வாசித்து அவற்றின் பொருளைக் கிரகித்து, அவற்றிற்கிடையே உள்ள கருத்துத் தொடர்பை மாணவர்கள் அறிந்து கொள்ளவும் ஒழுங்கின்றி அமைந்துள்ள வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி எழுதுவதற்கும் வழிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு:***

- பாடசாலை சுத்தமாகக் காட்சியளித்தது.
- எங்கள் பாடசாலையில் சிரமதானம் நடைபெற்றது.
- தள்ளுவண்டி மூலம் குப்பைகளை எடுத்துச் சென்றனர்.
- சிரமதானத்தில் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.
- தலைமையாசிரியர் அனைவருக்கும் நன்றி கூறினார்.
- பெற்றோர்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் சுற்றாடலைச் சுத்தம் செய்தனர்.

## செயற்பாடு 12

- பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.



அமெரிக்கா தேசத்தில் கெந்தக்கி என்னும் ஓர் ஊர் உண்டு. அந்த ஊரில் ஒரு சிறுவன் பிறந்தான். அவன் பெயர் ஆபிரகாம் லிங்கன். அவனுடைய பெற்றோர் வறியவர்கள். பெற்றோருடன் சேர்ந்து லிங்கனும் வயலில் வேலைசெய்வது வழக்கம். அதனால் அவன் பாடசாலைக்குச் சென்று கல்வியைக் கற்க இயலாதவனாக இருந்தான். ஆனால் அவனிடம் பழக்க வேண்டும் என்ற ஆவல் இருந்தது. அவன் ஓய்வு நேரத்தில் பிறரிடம் புத்தகங்களை இரவல் வாங்கிப் படிப்பான். அடக்கமும் நேர்மையும் உள்ள ஆபிரகாம் லிங்கன் பிற்காலத்தில் அமெரிக்க தேசத்தின் ஜனாதிபதியானான்.

**வாய்மொழி வினாக்கள்**

(1) ஆபிரகாம் லிங்கன் எங்கே பிறந்தார்.?
(2) அவனிடம் உங்களுக்குப் பிடித்த குணங்கள் எவை?
(3) லிங்கனுடைய பொழுதுபோக்கு யாது?
(4) லிங்கனால் ஏன் பாடசாலைக்குச் சென்று கல்வி கற்க முடியவில்லை?
(5) பிற்காலத்தில் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாவதற்கு காரணமாக அமைந்தது எது?

## கற்றல் - கற்பித்தல் வளங்கள்

- ஒத்த கருத்துச் சொற்களின் பட்டியல்
- எதிர் கருத்துச் சொற்களின் பட்டியல்
- எதிர்ப்பாற் கருத்துச் சொற்களின் பட்டியல்
- ஒரு பொருட் பன்மொழியின் செயலட்டை
- பல பொருள் ஒரு மொழியின் செயலட்டை
- தொடர்மொழிக்கு ஒரு மொழியின் செயலட்டை
- சொற்களை கீறிட்ட இடங்களில் நிரப்புவதற்கான வாக்கிய அட்டைகள்
- ஒழுங்கின்றி அமைந்த சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியங்கள் ஆக்குவதற்கான பயிற்சிகள்
- வாக்கியங்களில் அமைத்து எழுதுவதற்கான சொற்கள், சொற்றொடர்கள் என்பன வற்றின் பட்டியல்
- பூர்த்தி செய்து எழுதுவதற்கான கவிதைகள்
- தனிவாக்கியங்கள், தொடர்வாக்கியங்கள், வினா வாக்கியங்கள் என்பன எழுதப்பட்ட அட்டைகள்
- குறுக்கெழுத்துப்போட்டி, சிந்தனைப் புதிர்கள்
- பழமொழி எழுதப்பட்ட அட்டைகள்
- மரபுத்தொடர்கள் எழுதப்பட்ட அட்டைகள்
- உவமைகளை இனங்காண்பதற்குரிய உரைப்பகுதிகள், பாடல்கள்
- ஒழுங்கின்றி அமைந்துள்ள வாக்கியங்கள் எழுதப்பட்ட அட்டைகள்

## கணிப்பீடு

- ஒத்த கருத்து, எதிர் கருத்து, எதிர்ப்பாற் சொற்களை இனங்காணல், அவற்றைப் பொருத்தமாக வாக்கியத்தில் அமைத்து எழுதுதல்
- ஒரு பொருட் பன்மொழி, பல பொருள் ஒரு மொழி, தொடர்மொழிக்கு ஒரு மொழி என்பனவற்றை எழுதுதல்
- கீறிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை வைத்து வாக்கியங்களைப் பூர்த்தி செய்து எழுதுதல்
- ஒழுங்கின்றி அமைந்த சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்களை ஆக்குதல்
- சொற்கள், சொற்றொடர்கள் என்பனவற்றை வைத்து வாக்கியமாக்குதல்
- கவிதைகளைப் பூர்த்தி செய்து எழுதுதல்
- தனி வாக்கியங்களைத் தொடர்வாக்கியமாக ஆக்குதல்
- தொடர்வாக்கியங்களைத் தனிவாக்கியங்கள் ஆக்குதல்
- வாக்கியங்களை வினா வாக்கியங்களாக மாற்றி எழுதுதல்
- குறுக்கெழுத்துப்போட்டிகள், சிந்தனைப் புதிர்கள் என்பவற்றில் ஆர்வமாக ஈடுபடல்
- பழமொழிகள், மரபுத்தொடர்கள் என்பனவற்றின் பொருள் எழுதுதல்
- உரைப்பகுதிகள், பாடல்கள் என்பனவற்றில் உள்ள உவமைகளை இனங்கண்டு எழுதுதல்
- ஒழுங்கின்றி அமைந்த வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி எழுதுதல்

என்பனவற்றைக் கணிப்பிடுக.

## ஆசிரியர்களின் சுயமதிப்பீட்டிற்கான அளவுகோல்.....

**ஆசிரியர்கள் தமது கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளின் சாதக பாதக விளைவுகளை தாமே சுயமதிப்பீடு செய்துகொண்டு தமது கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளை மாற்றியமைத்துக்கொள்வதற்காகவே இவ்வினாக்கள் தரப்பட்டுள்ளன.**

1. எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து எழுதுவதற்கு ஏற்ற நுட்ப முறைகளைப் பின்பற்றுகின்றீர்களா?
2. பேசுதலுக்கும் எழுதுதலுக்கும் இடையிலான தொடர்பினை அனுபவ ரீதியாக உணர்ந்துள்ளீர்களா?
3. எழுதுதலின்போது பென்சில் பிடிக்கும்முறை, தாளை வைத்திருக்கும் முறை மற்றும் கொண்ணிலை ஆகியவற்றை அவதானித்து முறையாக எழுதுவதற்கு வழிப்படுத்துகின்றீர்களா?
4. எழுத்து இடைவெளி, சொல் இடைவெளி, வாக்கிய இடைவெளி ஆகியவற்றை அனுசரித்து எழுதுவதன் அவசியத்தை வலியுறுத்திச் செயற்பாடுகளை வழங்குகின்றீர்களா?
5. பார்த்து எழுதும் திறனை வளர்ப்பதன் ஊடாக எழுத்துக்களைச் சீராகவும் உறுப்பமையவும் எழுதும் ஆற்றலை விருத்திசெய்ய முடியுமென்பதை அனுபரீதியாக உணர்ந்துள்ளீர்களா?
6. சொல்வதெழுதல் மூலம் எழுத்துக்கள் ஒலித் தோற்றுவாயிலிருந்து நினைவுக்குக் கொண்டுவரப்படுவதனால் ஆசிரியரின் ஒலிப்பு முறையாக அமைதல் வேண்டும் என்பதை உணர்ந்து செயற்படுகின்றீர்களா?
7. நிறுத்தக்குறிகளைப் பொருத்தமுறப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை விளக்கித் திட்டமிட்ட செயற்பாடுகளை வழங்குகின்றீர்களா?
8. வாசிப்பதன் ஊடாகக் கிரகித்து எழுதும் திறனை மேம்படுத்துவதற்காக பல்வேறு செயற்பாடுகளை வழங்கி ஊக்கப்படுத்துகின்றீர்களா?
9. நாளாந்தத் தேவைகளுக்காகப் படிவங்களைப் பூர்த்திசெய்ய வேண்டியதன் அவசியத்தை விளக்கி சரியாகப் படிவங்களைப் பூர்த்தி செய்வதற்கு வாய்ப்புக்களை வழங்குகின்றீர்களா?
10. செவிடுத்துக் கிரகித்து வினாக்களுக்கு விடையெழுதுவதற்கு ஒலி நாடாக்களைப் பயன்படுத்துகின்றீர்களா?
11. ஆக்கத்திறனை விருத்தி செய்வதற்காகப் பல்வேறு அணுகுமுறைகளைப் பின்பற்றுகின்றீர்களா?
12. அடிப்படை இலக்கண அறிவை விருத்தி செய்வதற்காக நடைமுறைச் சாத்தியமான செயற்பாடுகளை முன்வைக்கின்றீர்களா?
13. அகராதியைப் பயன்படுத்தி சொற்களின் கருத்துக்களை அறிந்து பிரயோகிப்பதற்கான செயற்பாடுகளை வழங்கி ஊக்குவிக்கின்றீர்களா?
14. தகவல்களைத் தேடிப்பெற்று, தொகுத்து எழுதுவதற்கான வாய்ப்புக்களை வழங்குகின்றீர்களா?
15. பல்வேறு மொழிப் பயிற்சிகளினூடாக மொழியறிவை மேம்படுத்தும் செயற்பாடுகளை முன்வைக்கின்றீர்களா?
16. எழுத்தாற்றலை வளர்ப்பதற்காக கையெழுத்துப் பத்திரிகை, சஞ்சிகைகள் மற்றும் சுவர்ப் பத்திரிகைகள் ஆக்குவதற்கும் காட்சிப்படுத்துவதற்கும் ஊக்கமளிக்கின்றீர்களா?
17. எழுத்தாக்கப்போட்டிகள், கண்காட்சிகள் போன்றவற்றில் பங்குகொள்வதற்குக் களம் அமைத்துக் கொடுக்கின்றீர்களா?
18. எழுத்துக் கொப்பிகளைப் பார்வையிட்டுத் திருத்தங்களை கிரமமாக மேற்கொண்டு உரிய விளக்கங்களை நயம்பட வழங்குகின்றீர்களா?
19. ஒவ்வொரு எழுத்துப் பிழையையும் சிவப்பு நிறப் பேனாவால் பிழை என அடையாளமிடுவது தன்னம்பிக்கையை இழக்கத்தூண்டும் செயல் என்பதை அனுபரீதியாக உணர்ந்துள்ளீர்களா?
20. அடிப்படைத்திறன்கள் நான்கினையும் ஒன்றிணைத்துக் கற்பிப்பதன் ஊடாகவும் மொழித் திறனை விருத்தி செய்ய முடியும் என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்துள்ளீர்களா?

## தாய்மொழி - கணிப்பீடு - அறிக்கைப் படிவம்

**கணிப்பீட்டு அளவுத் திட்டம்**

வெற்றிகரமாகச் செய்கிறார். ✓

இடர்ப்படுகிறார் / மேலும் உதவி தேவைப்படுகின்றது. •

| | | | | | மாணவர் பெயர் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 01. செவிமடுத்த விடயங்களில் முக்கிய அம்சங்களைக் குறிப்பிடுவார். | செவிமடுத்தல் |
| | | | | | 02. நிகழ்வு/சம்பவம் ஒன்றைச் செவிமடுத்து முக்கிய விடயங்களைக் கூறுவார். | |
| | | | | | 03. செய்திகள்/அறிவித்தல்களைச் செவிமடுத்து முக்கிய விபரங்களைக் கூறுவார். | |
| | | | | | 04. அறிவித்தல்களைச் செவிமடுத்து அதற்கேற்பத் துலங்குவார். | |
| | | | | | 05. பாடல், கதை, உரையாடல் என்பவற்றை இரசனையுடன் செவிமடுத்து ஆக்கபூர்வ மான கருத்துகள் கூறுவார். | |
| | | | | | 06. தான் பார்த்த சம்பவம்/நிகழ்வு ஒன்றை ஒழுங்கு முறையில் விபரிப்பார். | |
| | | | | | 07. தனியாள் இடைத்தொடர்பை விருத்தி செய்ய நட்புறவுடன் பேசுவார். | பேசுதல் |
| | | | | | 08. கேட்போர் விளங்கிக்கொள்ளும் வண்ணம் தெளிவாக உச்சரித்துப் பேசுவார். | |
| | | | | | 09. கருத்துக்களை வெளிப்படுத்திப் பேசுவார். | |
| | | | | | 10. சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு உறுதியுடனும் பண்புடனும் பேசுவார். | |
| | | | | | 11. பாத்திரமேற்றுத் தொனிவேறுபாட்டுடன் நடித்துப் பேசுவார். | |
| | | | | | 12. மெய்ப்பாடுகளுடன் கதைகள் கூறுவார். | |
| | | | | | 13. இசையுடனும் தாளலயத்துடனும் பாட்டுக்கள் பாடுவார். | |
| | | | | | 14. தெளிவாக உச்சரித்து உரிய வேகத்தில் வாசிப்பார். | வாசித்தல் |
| | | | | | 15. நிறுத்தக்குறிகளை அனுசரித்துப் பொருள் விளங்க வாசிப்பார். | |
| | | | | | 16. கதைகள், உரைப்பகுதிகளை வாசித்து விழுமியக் கருத்துகளைக் கூறுவார். | |
| | | | | | 17. கருத்து விளங்க, தொனி வேறுபாடுகளை அனுசரித்து உணர்வுபூர்வமாக வாசிப்பார். | |
| | | | | | 18. செவிமடுப்போர் புரிந்துகொள்ளும் வகையில் பாடலொன்றை வாசிப்பார். | |
| | | | | | 19. உரைப்பகுதி/பாடலொன்றை வாசித்தபின் வினாக்களுக்கு விடை கூறுவார். | |
| | | | | | 20. சிறுவர் படைப்புகளை விரும்பி வாசித்து, இரசனையான பகுதிகளை குறிப்பிடுவார். | |
| | | | | | 21. பத்திரிகை, சஞ்சிகைகளை வாசித்து தகவல்களைக் கூறுவார். | |
| | | | | | 22. விளம்பரம், அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள் என்பவற்றை வாசித்து விவரங் களைக் கூறுவார். | |
| | | | | | 23. எழுத்துக்களைப் பிழையின்றி உறுப்பமைய எழுதுவார். | எழுதுதல் |
| | | | | | 24. சொற்கள், வாக்கியங்களைக் கேட்டு எழுதுவார். | |
| | | | | | 25. நிறுத்தக்குறிகள், உயிர்க்குறிகளை அனுசரித்து சொற்கள், தொடர்கள், வாக்கியங் களை எழுதுவார். | |
| | | | | | 26. திணை, பால், எண், இடம், காலம் என்பவற்றுக்கேற்ப வாக்கியங்களை அமைத்து எழுதுவார். | |
| | | | | | 27. வாக்கியங்களை எழுவாய், பயனிலை இயைபுற எழுதுவார். | |
| | | | | | 28. உரைப்பகுதி, பாடல், கதையொன்றைச் செவிமடுத்துக் கிரகித்து வினாக்களுக்கு விடை எழுதுவார். | |
| | | | | | 29. ஒரு பொருள் பற்றி விளக்கி, பிழையின்றி எழுதுவார். | |
| | | | | | 30. படம் பார்த்து வாக்கியங்கள் எழுதுவார்; கதை எழுதுவார். | |
| | | | | | 31. நாளாந்தத் தேவைகளுக்காகப் பல்வேறு படிவங்களைப் பிழையின்றி நிரப்புவார். | |
| | | | | | 32. பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள் என்பவற்றைத் திணை, பால் வேறுபாட்டிற் கேற்ப பயன்படுத்துவார். | |
| | | | | | 33. ஒத்தகருத்துச்சொற்கள், எதிர்கருத்துச் சொற்கள், எதிர்பாற்சொற்கள் என்பவற்றை பிழையின்றி எழுதுவார். | |
| | | | | | 34. உரைப்பகுதி, பாடல், கதையொன்றை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுவார். | |
| | | | | | 35. நட்புறவு, அலுவலகக் கடிதங்களை முறைப்படி எழுதுவார். | |
| | | | | | 36. காட்டூன் படங்களைப் பார்த்துக் கற்பனை உரையாடல்களை எழுதுவார். | |

# முதன்மைநிலை மூன்றில் மாணவர்களின் வாசிப்பு, எழுத்து தொடர்பான இடர்பாடுகள்

**வாசித்தல்:**

1. வாசிக்க முடியாமை.
2. வாசித்தலில் விருப்பமின்மை.
3. திக்கித் திக்கி வாசித்தல்.
4. புத்தகத்தில் உள்ள சொல்லுக்குப் பதிலாக வேறு சொல்லை வாசித்தல்.
5. வாக்கியங்களில் உள்ள சில சொற்களை விட்டு வாசித்தல்.
6. ஒரு சொல்லை அல்லது எழுத்தை மீண்டும் மீண்டும் வாசித்தல்.
7. குறியீடுகளை அவதானிக்காமல் வாசித்தல்.
8. ஒலி வேறுபாடுகளுக்கு ஏற்ப வாசிக்க முடியாமை.
9. எழுத்துக்கூட்டி வாசிக்க முடியாமை.
10. எழுத்துக்களை அல்லது சொற்களை அவதானிக்காமல் வாசித்தல்.

**எழுதுதல்:**

1. பார்த்தெழுத முடியும். ஆனால் கேட்டெழுத முடியாமை.
2. ஞாபகத்தில் வைத்திருந்து எழுத முடியாமை.
3. சில எழுத்துக்களை எழுதத் தெரியாமை.
4. கருத்து விளங்காமல் எழுதுதல்
5. திசைமுகத்தை அனுசரிக்காமல் எழுதுதல்.
6. எழுத்துக்களை வரிவடிவக் குறைபாட்டுடன் எழுதுதல்.
7. வேறுபட்ட எழுத்துக்களின் வித்தியாசத்தை புரிந்துகொள்ளாமல் எழுதுதல்.
8. எழுத்துக்களுக்கிடையே உரிய இடைவெளி இன்றி எழுதுதலும் சொற்களுக்கிடையே உரிய இடைவெளி இன்றி எழுதுதலும்.
9. உயிர்க்குறிகளை உரியவாறு எழுதாமை.
10. உயிர்க்குறிகள் தெளிவின்றி எழுதுதல்.
11. எழுத்துக்கள், சொற்களை எழுதுவதற்குக் கூடிய நேரத்தை எடுத்துக்கொள்ளுதல்.
12. எழுத்துக்களைச் சீரின்றி எழுதுதல்.
13. எழுதும் ஆற்றல் மிகக் குறைவாக இருத்தல்.
14. தனது முழுப் பெயரையும் எழுத முடியாமை.
15. வாசிக்கக்கூடிய வகையில் எழுத்துக்களைத் தெளிவாக எழுத முடியாமை.

தரம் ஐந்தை அடையும் சில மாணவர்கள் வாசிப்பதற்கும், எழுதுவதற்கும் முடியாமைக்கான காரணமென அடையாளங் காணப்பட்ட இடர்பாடுகளின் தொகுப்பே இவையாகும். இவை ஆய்வொன்றின் மூலம் அறியப்பட்டவையாகும்.

## முதன்மைநிலை மூன்றில் கற்கும் மாணவர்களின் வாசித்தல், எழுதுதல் தொடர்பான இடர்பாடுகளை நீக்குதல்

மாணவர்களிடம் காணப்படும் வாசிப்பு, எழுத்து என்பன தொடர்பான இடர்பாடுகளை நீக்குவதற்கென முன்வைக்கப்பட்டுள்ள கற்பித்தல் முறையை வகுப்பறையில் இரண்டு விதமாகப் பயன்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. முழு வகுப்புக்கும் பயன்படுத்தக் கூடிய பொதுவான சில முறைகள் உள்ளன. அவ்வப்போது இடர்பாடுகளை வெளிப்படுத்தும் மாணவர்களுக்கு ஏற்ற வேறு முறைகளும் உள்ளன. அவற்றை வகுப்பறைக் கற்பித்தலுக்குப் புறம்பாக வேறொரு நேரத்தில் பயன்படுத்துதல் உசிதமானதாகும். வகுப்பறையில் உரிய

கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்கள் எல்லா மாணவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதால் பிறிதொரு நேரத்தைத் தெரிவுசெய்ய வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

முழு வகுப்புக்குமென பொதுவாகப் பயன்படுத்தக்கூடிய முறைகளும் இடர்பாடுகளை வெளிப்படுத்தும் மாணவர்களுக்கென பயன்படுத்த வேண்டிய முறைகளும் இங்கு தரப்பட்டுள்ளன.

## (அ) வாசித்தலுக்கும் எழுத்துதலுக்குமென ஊக்கமளிக்கும் சிறந்த சூழலை வகுப்பறையில் ஏற்படுத்துதல்

- ☐ வகுப்பறையைச் சக்தி வாய்ந்த சுற்றாடல் ஆக்குதல்.
- ☐ மாணவரை வாசிக்கவும் எழுதவும் தூண்டும் சுற்றாடலைத் திட்டமிட்ட முறையில் அமைத்துக் கொள்ளுதல்.
- ☐ சுதந்திரமாக எழுதவும் வாசிக்கவும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல்.
- ☐ சுதந்திரமாக எழுத, வரைய ஏற்ற எழுது கருவிகள் உபகரணங்களை வழங்குதல்.
- ☐ வகுப்பறைச் சுவர்களில் கதைப்படங்களை ஒழுங்கமைத்துக் காட்சிப்படுத்தல்.
- ☐ பாடசாலையின் அமைவைக் காட்டும் வரைபடத்தை வரைந்து காட்சிப்படுத்துங்கள். (அதில் பிரதானமான இடங்களைக் குறிக்கவும்.)
- ☐ தெரிவுசெய்த பத்திரிகைச் செய்திகள், துணுக்குகள் போன்றவற்றைச் சேகரித்துக் காட்சிப்படுத்துங்கள்.
- ☐ மாணவர்களின் முழுப் பெயர்களையும் பட்டியற்படுத்திக் காட்சிப்படுத்தவும் மாணவர் சுய ஆக்கங்களைக் காட்சிப்படுத்தும்போது மாணவர்களின் பெயர்கள் எழுதப்பட வேண்டும்.
- ☐ மாணவர் தாம் விரும்பிய கருத்துக்களை எழுதி வெளியிட ஏற்ற வகையில் கருத்துப் பெட்டி ஒன்றைத் தயார் செய்தல். அப்பெட்டியிலிருந்து சேகரிக்கப்படும் கருத்துக்களை வாரத்திற்கு ஒரு முறையாவது மாணவர்கள் வாசிப்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- ☐ கொடுக்கப்படும் செயற்பாடுகளுக்கேற்ப வகுப்பறையிலுள்ள மேசை, கதிரைகளை ஒழுங்கமைத்தல்.
- ☐ வகுப்பறையிலுள்ள கதைப்புத்தகங்கள், சஞ்சிகைகள், சித்திரக்கதை நூல்கள், விந்தைச் செய்திகள், காட்டூன் துணுக்குகள் போன்றவற்றை மாணவர்கள் தாமாகவே தெரிவுசெய்து வாசிக்கும் வகையில் ஒழுங்கமைத்தல்.
- ☐ வகுப்பறையிலுள்ள தேவையற்ற பொருட்கள், அட்டைகள், மிகவும் பழைமையான பொருட்கள் போன்றவற்றை மாதம் ஒரு முறையேனும் அகற்றி புதிய பொருட்களை, ஆக்கங்களை, அட்டைகளை மீள வைத்து ஒழுங்கமைத்தல்.
- ☐ குழுச் செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடுவதற்கு ஏற்ற இடவசதிகளைத் திட்டமிட்டு ஏற்படுத்துதல். (***எடுத்துக்காட்டு:*** படங்கள் வரைய, குழு விளையாட்டுக்களில் ஈடுபட உரிய ஆக்கங்களில் ஈடுபட)
- ☐ ஒவ்வொரு பாடரீதியாகவும் முக்கியமானவற்றை காட்சிப்படுத்த இடம் ஒதுக்குக்குங்கள்.

## (ஆ) வாசித்தல், எழுதுதல் ஆகியவற்றில் இடர்ப்படும் மாணவர்களுக்குத் தனித்தனியாகப் பயன்படுத்தக்கூடிய கற்பித்தல் முறைகள்.

### குறிக்கோள் 1: மாணவர்களின் ஆயத்த வாசிப்பை இனங்காணல்

**வாசிப்பிற்குரிய நூலொன்றைக் காட்டிக் கீழ்வரும் வினாக்களை வினவுங்கள்.**

- ☐ புத்தகத்தின் மேலட்டையைக் காட்டுங்கள்.
- ☐ புத்தகத்தின் பின் அட்டையைக் காட்டுங்கள்.
- ☐ மேலட்டையின் மேற்பகுதியைக் காட்டுங்கள்.
- ☐ மேலட்டையின் கீழ்ப்பகுதியைக் காட்டுங்கள்.
- ☐ புத்தகத்தின் முதற்பக்கத்தைக் காட்டுங்கள்.
- ☐ புத்தகத்தின் கடைசிப் பக்கத்தைக் காட்டுங்கள்.
- ☐ சொல் ஒன்றைக் காட்டுங்கள்.
- ☐ குறிப்பிட்ட வரிசையைக் காட்டி அவ்வரிசையின் முதற்சொல்லை இனங்காணுமாறு கூறுங்கள்.
- ☐ படத்தைக் காட்டி படத்தின் கீழுள்ள சொல்லை இனங்காணுமாறு கூறுங்கள்.
- ☐ படத்தின் மேலுள்ள சொல்லை இனங்காணுமாறு கூறுங்கள்.
- ☐ நீங்கள் கூறும் சொல்லை இனங்கண்டு காட்டும்படி கூறுங்கள்.

இவ்வினாக்களுக்குச் சரியான விடைகள் பெறப்பட்டால் மாணவர் வாசிக்க ஆயத்த நிலையில் இருக்கிறார் என்பதைத் தீர்மானிக்கலாம்.

முறைசார் வாசிப்புக்குத் தயார் செய்வதற்குக் கீழ்வரும் முறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

### குறிக்கோள் 2: வாசிப்பதற்கான ஆயத்தம் செய்தல்

**கற்பித்தல் அணுகுமுறைகள் - கீழ்க்காணும் படிமுறையைப் பின்பற்றுங்கள்.**

- ☐ அண்மையில் நடந்த சுவையான சம்பவம் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- ☐ மாணவரைக் கவர்ந்த சம்பவ இடத்தை விபரித்துக்கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ☐ வகுப்புக்கு வெளியேயுள்ள இடமொன்றை அவதானித்து அவ்விடத்தில் அவனைக் கவர்ந்தவற்றை விபரிக்கச் செய்யுங்கள்.
- ☐ கண், கை இயைபாக்கத்திற்கெனக் கத்தரிக்கோலால் வெட்டுதல்.
- ☐ படம் வதைல் (நிலத்தில், கரும்பலகையில், தாளில்) ஆகிய செயற்பாடுகளை வழங்குதல்.
- ☐ சித்திரக் கதையை வாசித்துக் கலந்துரையாடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ☐ வாசிப்புக்கான தேர்ச்சிகளை அடையும் வரையில் மேற்படி செயல்களில் ஈடுபடுத்தலாம். பொருத்தமான வேறு உத்திகளையும் பயன்படுத்தலாம்.
- ☐ வாசிக்கத் தூண்டும் பத்திரிகைச் செய்தித் தலைப்புகள் அடங்கிய அட்டைகளைக் காட்சிப்படுத்துதல். வாசிக்கத் தூண்டுதல்.

### குறிக்கோள் 3: வாசிக்க ஆரம்பித்தல்

**கற்பித்தல் அணுகுமுறைகள் - சிறிய கதை ஒன்றை முன்வையுங்கள்.**

- ☐ கதையைக் கேட்டுச் சொந்த மொழியில் கூற வழிப்படுத்துங்கள்.
- ☐ மாணவர் கூறியவற்றை அவரது மொழிநடையிலேயே எழுத வழிப்படுத்துங்கள்.

- ☐ எழுதிய கதையை ஆசிரியர் வாசியுங்கள்.
- ☐ மாணவருடன் சேர்ந்து வாசியுங்கள்.
- ☐ மாணவரைக்கொண்டு எழுதப்பட்டவற்றைப் பிரதிசெய்ய வழிப்படுத்துங்கள்.

## குறிக்கோள் 4: மாணவனது வயது மட்டத்திற்கேற்ற கதைப் புத்தகமொன்றை வாசித்தல்

**கற்பித்தல் அணுகுமுறைகள் - கீழ்க்காணும் படிமுறையைப் பின்பற்றுங்கள்.**

- ☐ படங்களுடன் கூடிய கதைப் புத்தகமொன்றை எடுத்துக் கொள்ளுங்கள்.
- ☐ கதையில் வரும் புதிய சொற்களை மாணவரின் சூழலுடன் தொடர்புபடுத்திக் கலந்துரையாடுங்கள்.
- ☐ அச்சொற்களைக் கரும்பலகையில் எழுதுங்கள்.
- ☐ கதைப் புத்தகத்திலுள்ள படங்களைப் பார்ப்பதற்கும் அவற்றைப் பற்றி ஆசிரியரிடம் கேட்டறிவதற்கு வாய்ப்பை ஏற்படுத்துங்கள்.
- ☐ கதையில் வரும் முக்கியமான சொற்களைக் கரும்பலகையில் எழுத வழிப்படுத்துங்கள்.
- ☐ கதையைப் பற்றிய பல்வேறு வினாக்களை வினவிக் கற்பனை உருவங்களை உருவாக்கிக்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்துங்கள்.

## குறிக்கோள் 5: மாணவரது வயதுக்குப் பொருத்தமான நூலொன்றை வாசித்தல்

**கற்பித்தல் அணுகுமுறைகள் - வாசிப்பதற்குப் பொருத்தமான நூலைத் தெரிந்தெடுங்கள்**

- ☐ உச்சரிப்பதற்குக் கடினமான சொற்களைச் சரியான முறையில் ஆசிரியர் உச்சரித்துக் காட்டுதல் வேண்டும்.
- ☐ வரிவரியாக வாசிப்பது சிரமமாயின் குறித்த வரியின் கீழ் அட்டையொன்றை வைத்து வரிவரியாக வாசிப்பதற்குத் துணை புரியுங்கள்.

## குறிக்கோள் 6: மாணவரை வாசிப்பதற்குத் தயார்ப்படுத்தல்

**(அ) கற்பித்தல் அணுகுமுறைகள்**

- ☐ பட அட்டைகள் ஆறினைத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள். அவற்றை ஒருமுறை காட்டிய பின் மறைத்துவிடுங்கள்.
- ☐ படங்களில் உள்ளவற்றை ஞாபகப்படுத்திக்கூற மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- ☐ பின்னர் 6 படங்களில் ஒன்றை நீக்கி விட்டு எஞ்சிய படங்களைக் காட்டுங்கள்.
- ☐ நீக்கப்பட்ட படம் எதுவென வினாவி, அப்படத்தைச் சரியாக இனங்கண்டு கூற வழிப்படுத்துங்கள்.

சொல்லட்டைகளைப் பயன்படுத்தி இது போன்ற செயற்பாட்டை மீண்டும் செய்யுங்கள்.

**(ஆ) கற்பித்தல் அணுகுமுறைகள்**

- ☐ நீங்கள் ஒரு சொல்லைக் கூறிய பின்னர் அதனுடன் தொடர்புபட்ட ஒத்த ஓசைச் சொற்களை மாணவர் கூற வழிப்படுத்துங்கள்.
- ☐ ஒலிநாடாவில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒலிகளைச் செவிமடுத்து அவற்றை இனங்கண்டு கூற வழிப்படுத்துங்கள்.

- ☐ கதையொன்றைக்கூறி இடையில் நிறுத்துங்கள். மீதிக் கதையை மாணவர் கற்பனை செய்து சுவைபடக்கூற வழிப்படுத்துங்கள்.
- ☐ மாணவருக்குத் தெரிந்த ஒரு கதையைக் கூறும்போது இடைநடுவில் பிழையாகக் கூறுங்கள். அப்பிழையைக் கண்டறிந்து திருத்தமாக மாணவர் கூற வழிப்படுத்துங்கள்.
- ☐ கதையொன்றைக் கூறி அதன் முடிவை மாணவர் சுயமாகக் கூற வழிப்படுத்துங்கள்.

## குறிக்கோள் 7: வாசிக்க இடர்படும் மாணவருக்குத் திருத்தமாக வாசிக்கக் கற்பித்தல்

**கற்பித்தல் அணுகுமுறைகள் - பின்வரும் படிமுறையைப் பின்பற்றுங்கள்.**

- ☐ பந்தியொன்றை அல்லது வாக்கியங்களை ஆசிரியர் உரத்து வாசிக்கும்போது மாணவர்கள் அதனைக் கிரகிக்க வழிப்படுத்துங்கள்.
- ☐ வாசித்த பகுதியைக் கேட்டு அதில் வரும் நிகழ்வுகளையும் பொருள்களையும் படமாக வரைந்து காட்டி அவை பற்றி மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- ☐ ஆசிரியர் உரத்து வாசிக்கும்போது அதனைச் செவிமடுத்து வாசிப்பதில் மாணவரையும் ஈடுபடுத்துங்கள்.
- ☐ வீட்டிலுள்ள மூத்தோர், பெற்றோர் ஆகியோரின் உதவியுடன் பாடநூலை வாசிக்குமாறு மாணவருக்கு அறிவுறுத்துங்கள்.
- ☐ பாடசாலையில் மற்றுமொரு மாணவரின் உதவியுடன் இவ்வாறு செயற்பட முடியும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

## குறிக்கோள் 8: வாசிக்க இடர்படும் மாணவருக்குத் திருத்தமாக வாசிக்கக் கற்பித்தல்

**கற்பித்தல் அணுகுமுறைகள் - சேர்ந்து வாசித்தல்**

- ☐ பாடநூலின் அல்லது கதைப்புத்தகத்தின் பந்தியொன்றை ஆசிரியர் வாசிக்க, மாணவனும் சேர்ந்து வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- ☐ அடுத்த பந்தியை மாணவனை வாசிக்கச் செய்து ஆசிரியர் கேட்டு அவனுக்குத் தேவையான போது உதவி செய்தல்.
- ☐ மாணவரின் வாசிப்புத் திறனைப் பாராட்டிய பின்னர் அடுத்த பந்தியை ஆசிரியர் வாசித்துக் காட்டுதல்.
- ☐ அப்பந்தியை வாசிக்குமாறு மாணவருக்கு மீண்டும் கூறித் தேவையான சந்தர்ப்பங்களில் உதவி அளித்தல்.
- ☐ ஆசிரியர் வாசிப்பதைப் படிப்படியாகக் குறைத்து மாணவர் வாசிக்கும் சந்தர்ப்பங்களை அதிகரித்தல்.

## குறிக்கோள் 9: வாசிக்க கற்பதற்கான ஏற்ற சொற்றொடரை உருவாக்குதல்

**கற்பித்தல் அணுகுமுறைகள் - வாசிக்க வேண்டிய சொற்களை இனங்கண்டு அச்சொற்களைத் தனித்தனியான அட்டைகளில் எழுதிக் கொள்ளுங்கள்.**

- ☐ சொல் அட்டையை மாணவரிடம் கொடுத்து அதனை அவர்களால் வாசிக்க முடிகிறதா என ஆராயுங்கள்.
- ☐ வாசிக்க முடியாத சொற்களை மாணவர்கள் பார்த்தெழுதச் செய்யுங்கள்.

- ☐ அச்சொற்களை உரத்துவாசிக்கச் செய்வதில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.
- ☐ வாசிக்கும் அதே சமயம் அந்த எழுத்துக்களின் மீது விரலினால் தொடுமாறு மாணவருக்கு அறிவுரை வழங்குங்கள்.
- ☐ அந்தச் சொற்களை உரத்து வாசிக்கவும், தரையில் எழுதவும், வரையவும் அறிவுரை கூறுங்கள்.
- ☐ ஆசிரியர் சொல்லொன்றைக் கூறும்போது அட்டையைப் பார்க்காது அச்சொல்லை எழுத வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் எழுதிய சொல்லை அம்மாணவனையே சரி பிழை பார்க்கச் செய்யுங்கள். பிழையாயின் மேற்படி படிமுறைகளை மீண்டும் பின்பற்றுங்கள்.
- ☐ தாம் கற்ற சொற்கள் அடங்கிய சொற்களஞ்சியம் தயாரிக்குமாறு மாணவருக்குக் கூறுங்கள். அவர்கள் அன்றாடம் புதிதாகக் கற்றுக் கொள்ளும் சொற்களையும் அதில் எழுதச் செய்யுங்கள்.
- ☐ அச்சொற்களை உபயோகித்து வாக்கியம் அமைக்க வழிப்படுத்துங்கள்.

## குறிக்கோள் 10: பாடநூலை வாசித்தல்

**கற்பித்தல் அணுகுமுறைகள் - பாடநூலிலுள்ள குறிப்பிட்ட ஒரு பாடத்தில் மாணவனால் வாசிக்க முடியாத சொற்களைத் தெரிந்து மேற்குறிப்பிட்ட முறையைப் பின்பற்றச் செய்யுங்கள். பின்னர் அச்சொற்களில் நன்கு பயிற்சி பெற்ற பின்னர் பாடத்தை வாசிக்க வழிப்படுத்துங்கள்.**

## குறிக்கோள் 11: மாணவர்கள் அடிக்கடி மறந்து போகும் சொற்கள்/ எழுத்துக்கள் ஆகியவற்றைக் கற்றல்

**கற்பித்தல் அணுகுமுறைகள் - அடிக்கடி மறந்துபோகும் எழுத்துக்களை அல்லது சொற்களைப் பெரிய எழுத்தில் (நிறத்தில்) அட்டைகளில் எழுதிக் கொள்ளச் செய்யுங்கள்.**

- ☐ அந்த எழுத்துக்களை/சொற்களை உரத்து வாசித்தபடி அவற்றின் மீது விரலினால் தொடுமாறு அறிவுரை கூறுங்கள. அந்த எழுத்தை அல்லது சொல்லை ஞாபகத்தில் வைத்து எழுதக்கூடியவரை இவ்வாறு செய்ய அறிவுரை வழங்குங்கள்.
- ☐ அந்த எழுத்து அல்லது சொல் எழுதப்பட்ட அட்டையை மூடி வைத்து பின் ஞாபகத்தில் இருந்து எழுதச் செய்யுங்கள்.
- ☐ பிழையாக எழுதப்பட்டிருக்குமெனின் மேலே II, III இல் குறிப்பிடப்பட்டபடி மீண்டும் பின்பற்றிச் செய்யுங்கள்.

## குறிக்கோள் 12: அச்சிட்ட சொற்களை அறிமுகம் செய்தல்

**கற்பித்தல் அணுகுமுறைகள் - முதலாம் படிமுறை**

- ☐ கீழ்வரும் முறையில் படமும், சொற்களும் கொண்ட புத்தகமொன்றைத் தயார் செய்க. (கற்பதற்கு அவசியமான சொற்களும், அச்சொற்களுக்குரிய படங்களும் உள்ளடங்கியதாக)

| | |
|---|---|
| பேருந்து/<br>வசுவண்டி | |

- ☐ ஆசிரியர் முதலில் படத்தைக் காட்டி அதன் பெயரைக் கேட்கவும் அதன் பின்னர் அச்சொல்லை உரத்து வாசிக்கவும். சொல்லை உச்சரித்துக் கொண்டே எழுத்தின் மீது விரலைக் கொண்டு செல்க. மாணவர்கள் எழுத்தையும் சொல்லையும் இனங் கண்டு கொள்ளும் வரை இம்முறையைப் பின்பற்றுங்கள்.

**இரண்டாம் படிமுறை**

- ☐ இரு சொற்கள் கொண்ட புத்தகம் தயாரித்தல், படத்தில் காட்டப்பட்டுள்ள முறையில் இரு சொற்கள் கொண்ட வாக்கியம் அடங்கிய வாக்கிய புத்தகமொன்றை தயாரி யுங்கள். புத்தகத்தினுள் படங்களும் சேர்க்கப்பட வேண்டும்.

| | |
|---|---|
| சோறு<br>சாப்பிடுகிறார். | |

- ☐ சொல்லையும், வாக்கியத்தையும் அறிந்து கொள்ளும் வரை மேலே படிமுறை ஒன்றைப் பின்பற்றுங்கள்.

**மூன்றாம் படிமுறை**

- ☐ மூன்று சொற்களைக்கொண்ட வாக்கியப் புத்தகமொன்றைத் தயாரியுங்கள்.

- ☐ படத்தில் காட்டியவாறு மாணவருக்குக் கற்பதற்கு அவசியமான சொற்கள் அடங்கிய மூன்று சொற்கள் கொண்ட வாக்கியப் புத்தகம் ஒன்றினைத் தயாரியுங்கள்.

| | |
|---|---|
| சிறுவன் பந்தை<br>அடிக்கிறான். | |

- ☐ சொல்லையும், வாக்கியத்தையும் அறிந்துகொள்ளும் வரை மேலே படிமுறை ஒன்றைப் பின்பற்றுங்கள்.

**நான்காம் படிமுறை**

- ☐ மாணவருக்குக் கற்பிப்பதற்கு அவசியமான வாக்கியங்களை உள்ளடக்கிய வாக்கிய அட்டைகளைத் தயாரித்து அந்த வாக்கியங்களுக்குரிய படங்களை வரைய, அல்லது ஒட்டுவதற்கு வழிப்படுத்துங்கள்.

| | |
|---|---|
| அவன் சோறு<br>சாப்பிடுகிறான். | |

## வாசிக்க இடர்ப்படும் மாணவருக்குக் கற்பிக்கும்போது கவனம் செலுத்த வேண்டியவை:

- ☐ ஆசிரியர் முறையாகவும், நிதானமாகவும் எழுத வாசிக்கக்கூடிய திறமையுள்ளவராக இருத்தல்.
- ☐ பொழுதுபோக்காகவும் தகவல்களைத் தெரிந்து கொள்வதற்காகவும் வாசிக்கும் சந்தர்ப்பங்களை அதிகரித்தல்.
- ☐ வாசிப்பதன் குறிக்கோள்களையும், அதன் முக்கியத்துவத்தையும் மாணவர்கள் விளங்கிக் கொள்ளல்.
- ☐ பிள்ளைக்கு பரிச்சயமானவற்றையும் அவர்கள் விரும்பும் வாசிப்புத் துணை சாதனங் களையும் ஒழுங்குபடுத்தல்.

- ☐ வாசிப்புக்காக பரிசில்கள், பாராட்டுக்கள் போன்ற ஊக்கப்படுத்துபவைகளைப் பெற்றுக் கொடுத்தல்
- ☐ திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்ட வாசிப்புத் துணைச் சாதனங்களைப் பயன்படுத்தல்.
- ☐ ஒரே தடவையில் புத்தகங்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக முதலில் பட அட்டைகளைப் பயன்படுத்துங்கள்.
- ☐ அடுத்து பாடநூல்களுக்குப் பிரவேசிக்கவும், வாசிப்பதற்குப் போதியளவு நேரத்தைப் பெற்றுத்தர ஆவன செய்தல்.
- ☐ புதிதாக வாசிப்பதற்கு முன்னர் கட்புலச் சொற்களஞ்சிய விருத்தியை உருவாக்குதல்.
- ☐ ஒலிப்பிரிகை, ஒலிக்கலப்பு பயிற்சிகளை உபயோகித்தல்.
- ☐ எழுத்துக்களை உறுப்பமைய எழுதப் பயிற்றுவித்தல். (உறுப்பமைய எழுதப்பட்ட மாதிரி எழுத்துக்களின் உதவியுடன்)
- ☐ விரல்களால் எழுதும்போது பலன்களையும் பயன்படுத்துதல்.
- ☐ எழுதுவதில் மாணவர் பின் தங்கியிருப்பின் அவர்களுக்குப் பயிற்சி வழங்குதல்.

## எழுதுவதில் பின்தங்கிய மாணவரை எழுதக் கற்பித்தல்

மாணவர்கள் தமது வாழ்க்கையுடன் தொடர்புடைய எழுத்து வேலைகளில் ஈடுபட ஆர்வங் காட்டுவர். எனவே தமது பெயரை எழுதுதல், படங்களின் பெயர்களை எழுதுதல், நண்பர்களுக்கு கடிதம் எழுதுதல் போன்ற செயற்பாடுகளில் அவர்களை முதலில் ஈடுபடுத்தல் முக்கியமானதாகும்.

### குறிக்கோள் 13: எழுத்துக்களை எழுதத் தயார்ப்படுத்தல்

**கற்பித்தல் அணுகுமுறைகள் - பேனை, பென்சில் போன்றவற்றை உரிய முறையில் பிடிக்கும் விதத்தை மாணவருக்கு உணர்த்தல், எழுத்துக்களை எழுதுவதற்குப் பொருத்தமானவாறு கைகளை இயக்கும் திறனைப் பெற்றுக் கொடுத்தல்**

- ☐ கையை வலமாகவும், இடமாகவும் சுழற்றுதல்.
- ☐ இணைக்கும் பயிற்சிகள், புள்ளிக்கோட்டின் மீது வரைதல், பார்த்து வரைதல், வரையறுத்த பரப்பினுள் நிறந்தீட்டல் போன்ற முன் எழுத்துத்திறன்களைப பெற்றுத்தரல்.
- ☐ சித்திரங்களை வரைவதன் மூலம் கருத்து வெளிப்பாட்டிற்கு வாய்ப்பேற்படுத்தல்

***எடுத்துக்காட்டு:***



அழுதல்



சிரித்தல்

போன்ற வகையில் கருத்து வெளிக்காட்டும் முகங்களை வரைதல்

- ☐ மாணவரின் மேசை மற்றும் கதிரையின் மீதும், சாப்பாட்டுப் பெட்டியின் மீதும் ஆக்கங்களின் மீதும் அவர்களது பெயர்களைத் தெளிவான எழுத்தில் எழுதி வைத்தல்.
- ☐ நோய் காரணமாக பாடசாலைக்குச் சமூகந் தராத மாணவருக்கு கடிதம் அனுப்புதல். (ஆசிரியரினால் எழுதப்பட்டவற்றைப் பார்த்து கடிதம் எழுத மாணவருக்கு வாய்ப்பளிக்கலாம்.)

- ☐ அன்றாடம் செய்ய வேண்டிய வேலைகள், சுவையான அனுபவங்கள், ஏனைய மாணவரின் பெயர்கள், திகதி ஆகியவற்றை நிறச் சுண்ணக்கட்டியினால் கரும்பலகையில் எழுதி பிரதி பண்ணிக்கொள்ள வாய்ப்பளித்தல்.

## குறிக்கோள் 14: தெளிவான கையெழுத்தில் எழுதுதல்

**கற்பித்தல் அணுகுமுறைகள் - அட்டைத்தாளில் பெரிய எழுத்தில் எழுதிய எழுத்துக்களின் மாதிரியின் மீது, எழுத்து எழுதும் முறையில் ஆள்காட்டி விரலை கொண்டு செல்லல். (ஆசிரியருடன் சேர்ந்து)**

- ☐ மேற்குறிப்பிட்ட விதத்தில் மாணவர் தனியாக எழுத்துக்களின் மீது ஆள்காட்டி விரலை கொண்டு செல்லல்.
- ☐ இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு எழுத்தின் மீது விரலைக் கொண்டு செல்லும் போதும், அம்முறையாலும் எழுத்தை இனங்காண முடியுமா என ஆராய்தல்.
- ☐ விரலினால் எழுத்து அல்லது சொல்லின் மீது எழுதிய விதத்தில் பென்சிலால் எழுதுதல்
- ☐ எழுத்தை அல்லது சொல்லை மறைத்து வைத்தலும் அதனை ஞாபகப்படுத்தி எழுதுதல்.
- ☐ எழுதியவற்றை அட்டையைப் பார்த்து ஒப்பிடல்.

**எழுத்துக்களை எழுதும் தேர்ச்சியைப் பெறும்வரை இம்முறையைப் பின்பற்றுங்கள்.**

- ☐ தேர்ச்சியடைந்த பின்னர், குறித்த எழுத்தை அல்லது சொல்லைப் பயன்படுத்திக் கருத்துள்ளவற்றை எழுதுவித்தல்.
  (இத்திறனை சிறிதளவில் பெற்றுக்கொண்டவுடன் எழுதுவதற்கு ஊக்குவித்தல்)
  ***எடுத்துக்காட்டு:*** சித்திரங்களுக்குத் தலைப்பு எழுதுதல், செய்திகளை எழுதுதல், கதையின் ஒரு பகுதியை எழுதுதல், நாட்குறிப்பேடு எழுதுதல், ஞாபகப் புத்தகங்களில் எழுதுதல், தகவல் பெட்டிக்கு தகவலொன்று எழுதுதல், சுகயீனம் காரணமாக பாடசாலைக்குச் சமுகந்தராத நண்பர்களுக்குக் கடிதம் எழுதுதல் போன்றவை.

## குறிக்கோள் 15: எழுத்துக்களை நெருக்கமாக எழுதுதல்/சொற்களையும், எழுத்துக்களையும் பிரிக்காது எழுதுவதைத் தவிர்த்தல்

**கற்பித்தல் அணுகுமுறைகள் - எழுதுவதற்கென பெரிய கட்டங்களுடன் கூடிய கடதாசியை அல்லது பெரிய கட்டங்களுடன் கூடிய புத்தகத்தைப் பயன்படுத்துங்கள். ஒரு கட்டத்தினுள் ஒரு எழுத்தை எழுதச் செய்யுங்கள். சொல்லொன்றை எழுதிய பின் கட்டமொன்றை இடையே விட்டு அடுத்த சொல்லை அடுத்த கட்டத்தில் எழுதச் செய்யுங்கள்.**

## குறிக்கோள் 16: எழுத ஆரம்பித்தல்

**கற்பித்தல் அணுகுமுறைகள்**

- ☐ மாணவரிடம் ஒரு வினா வினவுங்கள். மாணவர் அதற்கு விடையளிப்பர்.
- ☐ அவ்விடையை கரும்பலகையில் அல்லது கடதாசியில் எழுதுங்கள்.
- ☐ எழுதிய விடையை மாணவரைக்கொண்டு வாசிக்கச் செய்யுங்கள்.
- ☐ அந்த விடையைப் பார்த்து மாணவனை எழுதச் செய்யுங்கள்.

## குறிக்கோள் 17: எழுத ஆரம்பித்தல்

**கற்பித்தல் அணுகுமுறைகள் - முதலில் ஒரே எழுத்தில் ஆரம்பிக்கும் சொற்கள் சிலவற்றை கூறச்செய்தல்**

- ☐ அவ்வாறான வேறு சொற்களை புத்தகங்கள் பத்திரிகையிலிருந்து தேடிப்பெறல்.
- ☐ அவற்றைப் பிரதி செய்து கொள்ளல்.

எடுத்துக்காட்டு: அ - அம்மா, அப்பா, அக்கா, அண்ணா
க - கதை, கண்ணன், கடவுள், கப்பல், கண்
ந - நண்டு, நரி, நட்பு

## குறிக்கோள் 18: சொற்களைக் கற்றல்

**கற்பித்தல் அணுகுமுறைகள் - மாணவர்களுக்குக் கற்பிக்க எதிர்பார்க்கும் சொற்கள் அடங்கும் சொல் அட்டைகளைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.**

**அவற்றை மாணவரிடம் கொடுத்து பின்வரும் வினாக்களை வினவுங்கள்.**

- ☐ நடுவில் 'த' எழுத்து வரும் சொற்களைக் கண்டுபிடியுங்கள்.
- ☐ நடுவில் 'ல' எழுத்து உள்ள சொற்கள் எவை?
- ☐ ஆரம்ப எழுத்து 'வ' உள்ள சொற்கள் எவை?
- ☐ கடைசி எழுத்து 'ம்' ஆகும் சொற்கள் எவை?

என்றவாறு பல்வேறு விதங்களில் அச்சொற்களை வாசித்து இனங்காணும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துங்கள்.

**பின்வரும் மேற்குறிப்பிட்டது போன்ற முறையில் அவற்றை எழுதச் செய்யுங்கள்.**

- ☐ நடுவில் 'த' எழுத்து வரும் சொற்களை எழுதுங்கள்.
- ☐ ஆரம்ப எழுத்து 'வ' கொண்ட சொற்களை எழுதிக் காட்டுங்கள்.
- ☐ கடைசி எழுத்து 'ம்' உள்ள சொற்களை எழுதுங்கள்.

## குறிக்கோள் 19: சொற்களை வாசிக்கவும், எழுதவும் கற்பித்தல்

**கற்பித்தல் அணுகுமுறைகள் - மாணவர் விரும்பும்.**

- ☐ உணவு வகைகள்
- ☐ உடைகள்
- ☐ வாகனங்கள்
- ☐ நண்பர்கள்
- ☐ உறவினர்கள் ஆகியோரின் பெயர்களின் முதல் எழுத்துக்களை கேளுங்கள். பின்னர் அவற்றை எழுதுமாறு கூறுங்கள். மாணவர்கள் அறிந்திராத எழுத்துக்கள் இருப்பின் அவற்றை எழுத உதவுங்கள். (ஆசிரியர் எழுதி மாணவருக்கு பிரதி பண்ணக் கொடுங்கள்.)

## குறிக்கோள் 20: தெளிவான கையெழுத்து எழுதுவதில் ஆரம்பத் திறனைப் பெற்றுக்கொடுத்தல்

**கற்பித்தல் அணுகுமுறைகள் - கீழ்வரும் உருவக் கோலங்களைப் பிரதி பண்ணச் செய்யுங்கள்.**

- ☐ கோட்டுக் கோலங்கள்
- ☐ வட்ட/அரைவட்டக் கோலங்கள்
- ☐ பூக்கோலங்கள்
- ☐ கோலங்களை முன்னெடுத்து வரைதல்
- ☐ பூக்கொத்தொன்றில் பூவை வரைதல்
- ☐ கூரையொன்றுக்கு ஓடுகள் வரைதல்

அறிவுறுத்தலுக்கு இணங்க படத்தை நிறந்தீட்டுதல்

## குறிக்கோள் 21: எழுத்து வரி வடிவில் இருக்க வேண்டிய குற்று, கொம்பு, அரவு, விசிறி ஆகியவற்றை உரிய முறையாக எழுதக் கற்பித்தல்

**கற்பித்தல் அணுகுமுறைகள்**

குற்றுக்களை சரியாக எழுதாத சொற்களை அறிந்து கொண்டு அவற்றைத் தெளிவான எழுத்தில் அட்டையொன்றில் அல்லது கரும்பலகையில் எழுதுங்கள். குற்றை நிறத்தில் எழுதுங்கள். உடனே மாணவர்களுக்கு இதனைப் பிரதிசெய்து கொள்ள இடமளித்து வாசிக்கும்போது வாசியுங்கள். பின்னர் தனியே வாசியுங்கள். இன்னும் வாசிப்பதற்கு முடியாததாயின் பார்க்க, வாசிக்க, மூடுக, எழுதுக, பரீட்சிக்க ஆகிய முறைகளைப் பின்பற்றுங்கள்.

- ☐ சொல்லொன்றை எழுதும்போது அந்தச் சொல்லை உச்சரித்துக் கொண்டு எழுத அறிவரை வழங்குங்கள்.
- ☐ பெண், ஆண், பூ, பழம், விளையாட்டு போன்ற சொற்களைப் பயன்படுத்துங்கள்.
- ☐ எழுத்தைச்சேர்க்கும் விளையாட்டு (ஒரு சொல்லின் முதல் எழுத்தையும் இறுதி எழுத்தையும் எழுதி மிகுதி எழுத்துக்களைப் பூரணப்படுத்தும் போட்டியொன்றாகப் பயன்படுத்தல்)

***எடுத்துக்காட்டு:*** கடி......ம்
பா.......சாலை
பூக்......ள்
மாஞ்.....லை

## குறிக்கோள் 22: முழுப் பெயரைச் சரியாக எழுதுதல்

**கற்பித்தல் அணுகுமுறைகள்**

- ☐ மாணவரின் முழுப்பெயரை தெளிவான எழுத்தில் அட்டையொன்றில் எழுதி வழங்குங்கள்.
- ☐ உமது பிரதேசத்தில் உள்ள பொருத்தமான இலையில் முள்ளொன்றால் மாணவனின் முழுப்பெயரை எழுதச் செய்யுங்கள். பின்னர் அந்த இலையின் மேல் தூசு, மாவு, முகப்பவுடர் இட்டு ஊதி விடுங்கள். அப்போது முழுப் பெயரையும் அலரி இலையில் காணலாம். இது மாணவருக்கு சிறந்த அனுபவமாகவும் இருக்கலாம். தெரிவு செய்த இலை நீளம் குறைவாயின் இரண்டு இலைகளைப் பயன்படுத்தலாம்.

- ☐ பழைய பத்திரிகையின் பக்கமொன்றை வழங்கி முழுப்பெயருக்கும் உரிய எழுத்துக்களை வெட்டி பெயர் தெரியக்கூடியதாக அட்டையொன்றில் ஒட்டிக் கொள்ள அறிவுறுத்துங்கள்.

## குறிக்கோள் 23: எழுத விருப்பமில்லாத மாணவர்களை எழுதத் தூண்டுதல்

**கற்பித்தல் அணுகுமுறைகள்**

- ☐ **1ஆம் படிமுறை -** சில நிமிடங்கள் எழுத்தின் மீது எழுதச் செய்யுங்கள்.

  ***எடுத்துக்காட்டு :***

  புள்ளிக்கோட்டில் வரைதல்
  சாய்வான, நேரான உருவங்களின் குறைபாடுகளைப் பூரணப்படுத்தல்
  முகம் வரைதல் போன்றன.

- ☐ **2ஆம் படிமுறை -** எழுதப்பட்டுள்ளவற்றைப் பார்த்துக்கொண்டு எழுதக் கொடுங்கள்.

- ☐ **3ஆம் படிமுறை -** எழுதுவதற்காக எதிர்பார்த்துள்ள தலைப்புகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

- ☐ **4ஆம் படிமுறை -** இந்த தலைப்புகளை வரையச் செய்யுங்கள்.

- ☐ **5ஆம் படிமுறை -** ஆசிரியருடன் கலந்துரையாடியவற்றை எழுதுங்கள். அவற்றிலிருந்து இரு வாக்கியங்கள் அல்லது சில வாக்கியங்களைப் பிரதி செய்யுங்கள்.

## குறிக்கோள் 24: எழுதுவதற்குத் தூண்டுதல்

**கற்பித்தல் அணுகுமுறைகள்**

''இன்று நாம் புதிய விளையாட்டொன்றைச் செய்வோம்'' என்று கூறி கடதாசியொன்றைப் பெற்று கீழ்வரும் வினாக்களை மாணவர்களைக் கொண்டு எழுதுங்கள்.
உங்கள் பெயர் என்ன? ..........................................................................................

மாணவர்கள் இதனை எழுதிய பின் இன்னுமொரு வினா எழுதுங்கள்.
நண்பனுடைய பெயர் என்ன? ..........................................................................

இதற்கு விடை எழுதிய பின் இன்னுமொரு வினா எழுதுங்கள்.
இன்று கொண்டு வந்த உணவு என்ன? ....................................................................

இம்முறையிலேயே தொடர்ந்து எழுத்துக் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

# சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

## அறிமுகம்

''சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்' எனும் இக்கற்றல் கூறு, மனிதன் மீதும் மனித சமுதாயத்தின் மீதும் பல்வேறு விதங்களில் செல்வாக்குச் செலுத்திய அல்லது செலுத்துகின்ற பௌதிக, சமூக, உயிரியல் தொகுதிகள் தொடர்பாகவும் அவற்றை அடிப்படையாகக் கொண்டு நிகழவேண்டிய கற்றல் செயலொழுங்கு தொடர்பாகவும் வழிப்படுத்துகிறது.

குழந்தைப் பருவம் தொட்டு இயல்பாகவே மனிதன், தனது சுற்றுப்புறத்தின்பால் ஆர்வங்கொண்டு, கிரமமாக அச்சுற்றாடலுடன் வெற்றிகரமாக இடைவினை புரிவதற்கு அவசியமான தேர்ச்சிகளை அடைய முயற்சிக்கின்றான். இச்செயன்முறையின் போது தனது புலனுறுப்புக்களைப் பயன்படுத்துவதோடு அவற்றின் உணர்திறனையும் வகைப்படுத்தல், தர்க்கித்தல் போன்ற நுண்ணறிவுசார் திறன்களையும் விருத்தி செய்து கொள்ளுகிறான். அவ்வாறே அவற்றின் ஊடாகத் தனது சொற்களஞ்சியத்தையும் தொடர்பாடல் திறனையும் விருத்தி செய்து கொள்ளுகிறான். தான் வாழும் சுற்றாடல் தொடர்பான தகவல்களைக் கண்டறிதல், சேகரித்தல், மீள வெளிப்படுத்துதல் என்பன பிள்ளையின் வாழ்க்கைச் செயன்முறையின் ஓர் அங்கமாகும். இது இயல்பாக எந்தவோர் உயிரியிலும் நிகழ்வதொன்றாகும். பிள்ளையின் அப்போக்கே **''சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்''** கட்டியெழுப்பப்படும் அடிப்படையாகும்.

அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் அறைகூவல்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளக்கூடிய நாட்டின் அபிவிருத்திச் செயன்முறையில் பங்களிக்கக்கூடிய, சமநிலை ஆளுமையுடைய ஒருவராவதற்கு, பல்வேறு தேர்ச்சிகள் விருத்தியடைவது இன்றியமையாததாகும். ''சுற்றாடல்சார்ந்த செயற்பாடுகள்'' இப்பணியில் பெரிதும் பங்களிப்புச் செய்யத்தக்கது. சுற்றாடல் சார்ந்த விடயப்பரப்புகளில் அழகியற்கல்வி, ஆக்கத்தொழிற்பாடுகள், உடற்கல்வி, விஞ்ஞானம் போன்ற பாடங்களுடன் ஒன்றிணைக்கப்பட்டு ஒருங்கிணைகப்பட்டுள்ளதுடன் மொழி, கணிதம், சமயம் போன்ற பிரதான பாடங்களையும் வளமூட்டுவதற்கு பயன்படுத்திக்கொள்ள முடியும். இவ்வாறு பிரதான பாடங்களுடன் காணப்படும் தொடர்பு இணைப்புக்குரிய பண்புகளாக கருதப்படும். கருப்பொருள்களை முன்வைப்பதற்கு ஒன்றிணைப்புக்களின் பண்புகள் பெரிதும் துணை புரியும். புதிய கலைத்திட்டத்தில் ''சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்'' எனும் பரந்த பாடப்பரப்பில் மேற்படி பல்வேறு பரப்புகளுக்குரிய தேர்ச்சிகளைச் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு வெளிக்கொணர இடமளிக்கப்பட்டுள்ளது. எனவே இது ஓர் ஒன்றிணைந்த பாடமாகும்.

மூன்றாம் நான்காம் தரங்களில் போன்றே இத்தரத்திலும் 16 கருப்பொருளில் பாடத்திட்டம் விருத்தி செய்யப்பட்டுள்ளது.

பாடத்திட்டத்தில் தரப்பட்டுள்ள சகல பகுதிகளையும் உள்ளவாறாக, இலங்கையின் சகல பாகங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டுமெனக் கருதப்படவில்லை. இப்பருவப் பிள்ளைகளின் சூழல் வரையறையப்பட்டது. பிள்ளைகளுக்காகச் செயற்பாடுகளைத் தெரிவு செய்யும்போது தனது சூழல் வளங்களுக்குப் பொருத்தமானவாறு அவற்றைத் தெரிவு செய்யும் சுதந்திரமும் பொறுப்பும் ஆசிரியருக்கு உண்டு. மேலும் இத்தரத்தில் சமநிலையான ஆளுமை கொண்டு எதிர்கால பிரசைகளை உருவாக்குவதற்கு அடிப்படை அடித்தளத்தை உறுதிப்படுத்துவது இதனூடாக எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்காக உயிரியல் பௌதிக, சமூக சூழல்களுக்குப் பொருத்தமான கற்றல் அனுபவங்களை பெறுவதற்கு வழிப்படுத்தப்பட்டுள்ளன. முதலாம், இரண்டாம் முதன்மை நிலைகளில் முன்வைக்கப்பட்ட தேர்ச்சிகளை மேலும் விருத்தி செய்வதற்கும் வேறு தேர்ச்சிகளை அறிமுகப்படுத்துவதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளன. அத்தோடு பிள்ளைகளின் உரையாடலுக்குப் பொருத்தமான எளிமையான ஆங்கிலச் சொற்களையும் இச்செயற்பாடுகளி னூடாக வெளிக்கொணரலாம். செயற்பாடுகளை தெளிவு செய்யும்போது தமது சூழலுக்குப் பொருத்தமானதாகத் தெரிவுசெய்யும் உரிமை ஆசிரியருக்குண்டு.

## ஆரம்பக் கல்விப் பருவத்திற்குரிய தேர்ச்சிகள்

முதலாந் தரம் தொடக்கம் ஐந்தாம் தரம் வரையில் இக்கற்றற் செயற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவு செய்வதனூடாக மாணவரிடத்தே பின்வரும் அறிவு, திறன்கள், மனப்பாங்குகளை விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

- ✓ தனது சுற்றுப்புறத்தின் அழகினை இனங்கண்டு அதனூடாக இரசனை பெறுவார்.
- ✓ விளையாட்டு, ஓய்வு, களிப்பு என்பன தனது வாழ்க்கைக்கு அவசியமான அம்சங்களாகுமெனக் கருதி அவற்றை நாளாந்த வாழ்வில் போதுமானவாறு பொருத்தமாகச் சேர்த்துச் செயற்படுவார்.
- ✓ அழகியவற்றை மதித்து அவற்றைத் தனது வெளிப்பாட்டு நடவடிக்கைகளின் போது பயன் படுத்துவார்.
- ✓ ஆரோக்கிய வாழ்விற்குத் தேவையான அடிப்படைப் பழக்கங்களை வெளிக்காட்டுவார்.
- ✓ மனிதனின் ஆக்கங்களை மதிப்பார்.
- ✓ தனது சுற்றாடலில் வசிக்கும் உயிரினங்கள், அவற்றின் இடைத் தொழிற்பாடுகள் என்பன தொடர்பான விளக்கத்தைப் பெற்றுச் செயற்படுவார்.
- ✓ மனித சமூகம், மனித நடத்தைகள், மனிதர் மீது அவற்றின் ஆதிக்கம் ஆகியன தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார்.
- ✓ புவி, அதன் வளங்கள், வெளி என்பன மனிதன் மீது செலுத்தும் செல்வாக்கை ஆராய்வார்.
- ✓ சூழல் பாதுகாப்புச் செயன்முறையில் தனது பொறுப்பை விளங்கி அதற்கேற்பச் செயற்படுவார்.
- ✓ தனது சுற்றாடலில் சக்திப் பயன்பாடு பற்றிய அடிப்படை விளக்கத்தைப் பெறுதல் சமூகத்தின் முன்னேற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தினை கூர்ந்து நோக்கி மதிப்பார்.
- ✓ எதிர்கால வேலை உலகிற்குத் தேவையான திறன்களைப் பெற்று தனது நாளாந்த வாழ்க்கைக் குத் தேவையான கைத்திறன்களைப் பெறுவர்.
- ✓ வாழ்க்கைக்கு அவசியமான பொருட்களையும் உபகரணங்களையும் தேவைக்கேற்ப பயன் படுத்துவார்.

## முதன்மை நிலை மூன்றிற்கான தேர்ச்சிகள்

- ➲ ஆன்மீக நல்வாழ்வுக்கான பிரயோகங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தி அன்றாட வேலைகளில் ஈடுபடுவார்.
- ➲ சமூகத்தின் நல்வாழ்வுக்கு வழிகோலத்தக்க கடமைகள், உரிமைகள், பொறுப்புக்கள் தொடர்பாக உணர்வுடன் செயற்படுவார்.
- ➲ சட்டதிட்டங்களை மதிப்பதன் முக்கியத்துவத்தைக் கவனதிற்கொண்டு சட்டதிட்டங்களை மதித்து நடப்பார்.
- ➲ சமூகத்தின் நல்வாழ்வுக்குரிய படிப்பினையாக அமையத்தக்க ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.
- ➲ சமூகத்தின் நல்வாழ்க்கைக்கு வழிகோலத்தக்க ஆக்கங்களில் ஈடுபடுவார்.
- ➲ பிராணிகளினது நடத்தையின் பல்வகைமையைத் தேடியாய்ந்து, சிறப்பான ஆற்றல் களை மதித்துச் செயற்படுவார்.
- ➲ பிராணிகளின் பல்வகைமையின் வியத்தகு தன்மையை இரசித்து முன்வைப்பார்.
- ➲ பிராணிகளின் இருப்புக்குத் துணையாகும் நடத்தையைப் பேணி வருவார்.
- ➲ பிராணிகளால் எமக்குக்கிடைக்கும் பயன்கள் தொடர்பாகக் கவனம் செலுத்திச் செயற்படு வார்.
- ➲ பல்வேறு பொருள்களைப் பயன்படுத்தி பிராணி உலகின் வியத்தகு தன்மையைக் கொண்டு ஆக்கங்கள் செய்வார்.
- ➲ பிராணிகளின் நடத்தையைப் போலச்செய்து விளையாட்டுக்களில் களிப்புடன் ஈடுபடுவார்.
- ➲ இலங்கையின் அமைவை வெவ்வேறு விதங்களில் வெளியிடுவார்.
- ➲ தரையின் பல்வகைமையூடாக வெளிக்கொணரப்படும் அழகைப் பேணுவதில் பங்களிப்பார்.
- ➲ மண்ணின் பல்வகைமையை நுணுகியாய்ந்து மண்ணைப் பாதுகாப்பதில் பங்களிப்பார்.

- வானத்தின் விந்தைமிகு தன்மையைத் தேடியாய்ந்து களிப்பார்.
- காற்றின் தொழிற்பாடு தொடர்பாக நுணுகியாய்ந்து செயற்படுவார்.
- தமது பிரதேசத்தில் மழையின் வேறுபாடு தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார்.
- வெளியைப் பயன்படுத்தி விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- நிலத்தினதும், வானத்தினதும் விந்தைமிகு தன்மையை வெளிக்காட்டும் ஆடல் பாடல் களில் ஈடுபடுவார்.
- வானம் - பூமி ஆகியவற்றின் மாற்றங்கள் மனித வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்தும் விதம் தொடர்பாகக் கவனஞ்செலுத்திச் செயற்படுவார்.
- பொருளொன்றைக் கொள்வனவு செய்யும்போது தரம், பொருளாதாரம் என்பன குறித்துக் கவனஞ்செலுத்திச் செயற்படுவார்.
- பொருளொன்றை விற்பனை செய்யும்போது கவனமாகச் செயற்படுவார்.
- சேவையொன்றினைப் பெறும் பொழுதும் வழங்கும் பொழுதும் கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்களைக் கருத்திற்கொண்டு செயற்படுவார்.
- அன்றாட வாழ்க்கையில் பாவனைப் பொருள்களையும் சேவைகளையும் வினைத் திறனு டையவாறு பயன்படுத்துவார்.
- அன்றாட வீட்டு வேலைகளின்போது சிக்கனமாகச் செயற்படுவார்.
- வீட்டில் சிக்கனம் பேணுவதற்காக சூழலிலிருந்து பெறத்தக்க பல்வேறு பொருள்களைப் பயன்படுத்திப் பொருத்தமான பாவனைப் பொருள்கள் ஆக்குவார்.
- சந்தை தொடர்பான பல்வேறு ஆடல், பாடல்கள், பாத்திர நடித்தல்களில் ஈடுபட்டு இரசனை பெறுவார்.
- எமது இருப்புக்கு இன்றியமையாத, உணவுகள், பானங்களைப் பெறுவதற்காக மரஞ் செடிகொடிகளின் காய் கனிகள் மூலம் கிடைக்கும் பயன்களைப் பயன்படுத்துவார்.
- மரஞ்செடிகொடிகளின் காய்கனிகளினது பல் வகைமையை இனங்கண்டு அவற்றின் இருப்புக்காகப் பங்களிப்புச் செய்வார்.
- விசேட கவனஞ் செலுத்த வேண்டிய மரஞ்செடிகொடிகளைப் பாதுகாப்பதில் பங்களிப்பார்.
- அயற்சூழலில் மரஞ்செடிகொடிகளின் பல்வகைமையை மதித்து அதனைப் பேணுவதில் பங்களிப்பார்.
- மரஞ்செடிகொடிகள் தொடர்பான பயனுடைய ஆக்கங்கள் புரிவார்.
- தாவரங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் வெளிக்கொணரப்படும் வகையிலான ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.
- தாவரங்களின் பல்வகைமை வெளிக்கொணரப்படும் ஆக்கபூர்வமான விளையாட்டுகளில் ஈடுபடுவார்.
- மரஞ்செடிகளுடன் தொடர்புபட்டு உள அமைதி பெறுவதோடு, இரசனையும் பெறுவார்.
- பெறுமதிமிக்க ஒரு வளமாகக்கருதி, நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவார்.
- ஆரோக்கியமாக வாழ்வதற்காகப் போதுமான அளவுக்கு நீரை நுகருவார்.
- நீர் தொடர்பான பாரம்பரியமான பழக்கவழக்கங்களை ஆராய்வுபூர்வமாகப் பேணி வருவார்.
- நீர் மாசடைதல் தொடர்பாகக் கவனஞ்செலுத்தி, அதனைத் தவிர்ப்பதற்காகப் பங்களிப்புச் செய்வார்.
- ஓடும் நீரின் சக்தியைப் பயன்படுத்தி இயக்கத்தக்க உபகரணங்களின் மாதிரியுருக்களை ஆக்குவார்.
- நீருடன் தொடர்புடைய ஆடல் பாடல்களை முன்வைப்பார்.
- வீட்டுத்தோட்டச் செய்கையில் ஆராய்வுபூர்வமாகப் பங்களிப்புச் செய்து இரசனை பெறுவார்.
- பயிர்ச்செய்கைக்கான மாற்று முறைகளை அமைப்பார்.
- வெவ்வேறு ஆக்கங்கள் மூலம் வீட்டுத்தோட்டத்தின் அழகை வெளிப்படுத்திக் காட்டுவார்.
- வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபட்டு, அனுபவங்களைப் பகிர்ந்து பரிமாறியவாறு அதன் விளைச்சலை அதிகரிப்பதற்காகச் செயற்படுவார்.
- வீட்டுத்தோட்டத்தின் அழகைக்கூறும் ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.

- இயற்கைத் தோற்றப்பாடுகளின்போது அழிவுகள் ஏற்படத்தக்க சந்தர்ப்பங்கள் தொடர்பாகக் கவனஞ்செலுத்தி அவற்றிலிருந்து பாதுகாப்பும் பெறுவதற்காகச் செயற்படுவார்.
- விபத்துகள் நிகழத்தக்க சந்தர்ப்பங்களில் தனதும் ஏனையோரதும் பாதுகாப்பு தொடர்பாக கரிசனையுடன் செயற்படுவார்.
- விபத்துக்களின்போது முறையான முதலுதவி வழங்குவதற்கு செயற்படுவார்.
- சிறுவருக்கு எதிராக நிகழும் சட்டவிரோதச் செயல்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காகச் செயற்படுவார்.
- தாமும் ஏனையோரும் தொற்று நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவது தொடர்பாக கரிசனையுடன் சுகாதாரமான சூழலை ஏற்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்வார்.
- பாதுகாப்பு, கரிசனை என்பன குறித்து ஏனையோருக்கு அறிவூட்டம் செய்வதற்குப் பொருத்தமான பல்வேறு ஆக்கங்கள் புரிவார்.
- பாதுகாப்பாகவும் கரிசனையுடனும் செயற்படும் விதத்தை வலியுறுத்தும் ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.
- நாட்டின் அபிவிருத்திக்காகப் பாரிய சேவை செய்த சில அரசர்களை இனங்கண்டு அவர்களது சேவைகளின் நல்ல முன்மாதிரிகளை வாழ்க்கையுடன் இணைத்துக் கொள்வார்.
- வரலாற்று முக்கியத்துவமுடைய சில இடங்களை இனங்கண்டு பெருமையுடன் மதிப்பார்.
- வரலாற்று முக்கியத்துவமுடைய இடங்கள் தொடர்பான தகவல் சேகரிப்பதற்காகப் பிரயோகிக்கத்தக்க முறைகளை விளைதிறனுடைய வகையில் பயன்படுத்துவார்.
- பண்டைய கலைப்படைப்புக்களின் சிறப்புக்களைத் தேடியாய்ந்து களிப்பார்.
- வரலாற்று முக்கியத்துவமுடைய இடங்களைப் பாதுகாப்பதில் பங்களிப்பார்.
- தேசப்பற்றை வளர்க்கும் ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.
- கூட்டாகச் செய்யும் வேலையொன்றில் திட்டமிடல் தொடக்கம் வெற்றிகரமாக நிறைவு செய்தல் வரையில் பங்களிப்புச் செய்வார்.
- வேலைகளை இலகுபடுத்திக்கொள்வதற்காக எளியபொறிக் கோட்பாடுகளைப் பயன்படுத்து வார்.
- வெவ்வேறு சக்திகளைப் பயன்படுத்தி அன்றாட வேலைகளை இலகுபடுத்திக் கொள்வார்.
- வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய எளிமையான உபகரணங்களை ஆக்குவார்.
- வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காக ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.
- கூட்டுணர்வு வெளிக்கொணரப்படும் ஆக்கபூர்வமான விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- எடுகோள்களுடன் திட்டமிடல்களில் ஈடுபடுவார்.
- சகல மக்கட் பிரிவினரதும் தனித்துவத்தை மதித்து ஒத்துழைத்துச் செயற்படுவார்.
- நாட்டின் சுதந்திரத்துக்காகச் செய்த அர்ப்பணிப்புக்களை மதித்து நாட்டுப்பற்றுடன் செயற்படுவார்.
- இலங்கையர் என்ற வகையில் தனது தனித்துவம் பாதுகாக்கப்படும் வகையில் செயற்படு வார்.
- வளங்களைப் பாதுகாக்கும் மனப்பாங்குடன் நடப்பார்.
- நாட்டிற்கு நற்பெயரை ஈட்டுக்கொடுத்தோரின் நடத்தையை எடுத்துக்காட்டாகக் கொண்டு செயற்படுவார்.
- நாட்டின் தனித்துவத்தை எடுத்துக்காட்டும் ஆக்கம், ஆடல், பாடல்கள், விளையாட்டுக்கள் என்பவற்றில் ஈடுபடுவார்.
- தமது நடத்தையின் உடன்பாடான (+) மாற்றத்துக்காக கவனத்துடன் செயற்படுவார்.
- தனதும் சக மாணவ மாணவியரதும் கல்வியின் தர மேம்பாட்டுக்காகவும், உள சமூக கவனிப்புக்காகவும் கவனத்துடன் செயற்படுவார்.
- எனையோருக்கு உதவி புரியத்தக்க சந்தர்ப்பங்கள் பற்றித் தேடியறிந்து அதற்காகச் செயற்படுவார்.
- பாடசாலைச் சூழலை அழகாகப் பேணி வரப் பங்களிப்புச் செய்வார்.
- உடல், உள ஆரோக்கியத்துக்காக ஆக்கபூர்வமான விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.

- தகவல் பெறுவதற்காக பல்வேறு ஊடகங்களையும் முறைகளையும் பயன்படுத்துவார்.
- அன்றாட வேலைகளுக்காக இலத்திரனியல் சாதனங்கள் சிலவற்றைக் கையாள்வார்.
- பல்வேறு ஊடகங்களினூடாகக் கிடைக்கும் தகவல்களைப் பகுத்தாய்வு செய்து பொருத்த மான தகவல்களைத் தெரிவுசெய்து கொள்வார்.
- தகவல்களை முன்வைப்பதற்காக விளைதிறன்மிக்க முறைகளைப் பயன்படுத்துவார்.
- பல்வேறு ஊடகங்களினூடாகப் பெறும் தகவல்களைப் பயன்படுத்தி ஓய்வை விளைதிறனு டைய வகையில் கழிப்பார்.
- தமது பங்களிப்புடன் உற்பத்தி செய்யும் உணவுப் பொருளொன்றை வேளையுணவுடன் சேர்த்துக்கொள்வதற்காகச் செயற்படுவார்.
- ஆரோக்கியமான வாழ்வுக்காக நிறைவான வேளையுணவொன்றின் அவசியத்தை விளங்கிச் செயற்படுவார்.
- வயதுக்குப் பொருத்தமானவாறு உயரத்தையும் நிறையையும் பேணி வருவார்.
- சரியான ஒழுங்குகளை அனுசரித்து ஆக்கபூர்வமாக உணவு பரிமாறுவார்.
- உணவு வீண்விரயத்தைத் தவிர்ப்பதற்காக கவனமாகச் செயற்படுவார்.
- போசாக்குத் தரம் பேணப்படும் வகையில் உணவொன்றைத் தயாரிப்பார்.
- உடல், உளச் சமநிலைக்குரிய ஆக்கபூர்வமான விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- உணவினது போசாக்குத் தரத்தின் முக்கியத்துவத்தைக் கூறும் ஆடல் - பாடல்களில் ஈடுபடுவார்.
- போக்குவரத்து விருத்தியின் கடந்த காலத்தையும் தற்காலத்தையும் ஒப்பிட்டு எதிர்காலம் பற்றி எதிர்வு கூறுவார்.
- வீதிகளின் பரம்பல் தொடர்பாக திட்டமிட்டுச் செயல்படுவார்.
- பயணங்களின்போது திட்டமிட்டுச் செயற்படுவார்.
- போக்குவரத்துத் தேவைகளை இலகுபடுத்திக்கொள்வதற்காகப் பொறிமுறைச் சக்தியைப் பயன்படுத்தக்கூடிய விதம் தொடர்பாக ஆக்கபூர்வமாகச் செயற்படுவர்.
- வீதிப் பயன்படுத்துவோர் அனுசரிக்க வேண்டிய சட்டதிட்டங்கள். வீதி ஒழுக்கங்கள், வீதிப் பாதுகாப்பு ஆகியன தொடர்பாக கவனஞ்செலுத்தி அவற்றுக்கு அமைவாகச் செயற்படுவர்.
- போக்குவரத்து தொடர்பான ஆடல் பாடல்கள், ஆக்கங்கள் விளையாட்டுக்களில் ஈடுபடுவர்.
- புரிந்துணர்வுடன் செயற்பட்டு ஏனையோருக்கு பரிவுணர்வு காட்டுவார்.
- மனித கௌரவம் நன்கு பேணப்படும் வகையில் உறுதிப்பாட்டுடன் செயற்படுவார்.
- எப்போதும் ஏனையோருக்கு உதவுதற்கும் தேவையேற்படுமிடத்து மட்டும் பிறரிடம் உதவி கோருவதற்கும் ஆர்வம் காட்டுவார்.
- வயது கூடியோரின், குறைந்தோரின் நடத்தைக் கோலங்களை புரிந்துகொண்டு அதற்கேற்ப நடந்துகொள்வார்.
- மாற்று வழிகள் தொடர்பாகக் கவனஞ்செலுத்தி புரிந்துணர்வுடன் செயற்படுவார்.
- மகிழ்ச்சியாகவும் ஒற்றுமையாகவும் வாழ்வதன் பெறுமதியை வலியுறுத்தும் வகையிலான ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.
- நல்ல மனித நடத்தைகளை எடுத்துக்காட்டும் வகையில் ஆக்கம் புரிவார்.

# பாடத்திட்டம்

## 1.0 எமது நல்வாழ்வு

### தேர்ச்சிகள்

- ஆன்மீக நல்வாழ்வுக்கான பிரயோகங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தி அன்றாட வேலைகளில் ஈடுபடுவார்.
- சமூகத்தின் நல்வாழ்வுக்கு வழிகோலத்தக்க கடமைகள், உரிமைகள், பொறுப்புக்கள் தொடர்பாக உணர்வுடன் செயற்படுவார்.
- சட்டதிட்டங்களை மதிப்பதன் முக்கியத்துவத்தைக் கவனத்திற்கொண்டு சட்டதிட்டங்களை மதித்து நடப்பார்.
- சமூகத்தின் நல்வாழ்வுக்குரிய படிப்பினையாக அமையத்தக்க ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.
- சமூகத்தின் நல்வாழ்க்கைக்கு வழிகோலத்தக்க ஆக்கங்களில் ஈடுபடுவார்.

### உள்ளடக்கம்

- ✓ ஆன்மீக நல்வாழ்வுக்குரிய பிரயோக முறைகளைப் பேணி வருதல்
- ✓ சமூகத்தின் நல்வாழ்க்கைக்கு வழிகோலத்தக்க கடமைகள், பொறுப்புக்கள், உரிமைகள்
- ✓ சட்டதிட்டங்களைப் பின்பற்றுவதன் முக்கியத்துவம்
- ✓ சமூகத்தின் நல்வாழ்வுக்கு உதவத்தக்க படிப்பினை தரும் ஆடல் பாடல்கள்
- ✓ சமூகத்தின் நல்வாழ்வுக்கு வழிகோலத்தக்க கருத்துக்களை உள்ளடக்கிய பல்வேறு ஆக்கங்கள்

## 2.0 எம்மைச் சூழவுள்ள பிராணிகள்

### தேர்ச்சிகள்

- பிராணிகளினது நடத்தையின் பல்வகைமையைத் தேடியாய்ந்து, சிறப்பான ஆற்றல் களை மதித்துச் செயற்படுவார்.
- பிராணிகளின் பல்வகைமையின் வியத்தகு தன்மையை இரசித்து முன்வைப்பார்.
- பிராணிகளின் இருப்புக்குத் துணையாகும் நடத்தையைப் பேணி வருவார்.
- பிராணிகளால் எமக்குக்கிடைக்கும் பயன்கள் தொடர்பாகக் கவனம் செலுத்திச் செயற்படு வார்.
- பல்வேறு பொருள்களைப் பயன்படுத்தி பிராணி உலகின் வியத்தகு தன்மையைக் கொண்டு ஆக்கங்கள் செய்வார்.
- பிராணிகளின் நடத்தையைப் போலச்செய்து விளையாட்டுக்களில் களிப்புடன் ஈடுபடுவார்.

### உள்ளடக்கம்

- ✓ பிராணிகளின் பல்வேறு நடத்தைகளின் பல்வகைமையை ஆராய்தலும் நயத்தலும்
- ✓ பிராணிகளினது பல்வகையின் வியத்தகுதன்மை
- ✓ பிராணிகளின் இருப்புக்குத் துணையாகும் நடத்தைகள்
- ✓ பிராணிகளால் எமக்குக் கிடைக்கும் பயன்கள்
- ✓ பல்வேறு பொருள்களைப் பயன்படுத்தி பிராணி உலகின் வியத்தகு தன்மையைக் காட்டும் ஆக்கங்கள் புரிதல்
- ✓ பிராணிகளின் நடத்தையைப் போலச் செய்யும் விளையாட்டுக்கள்
- ✓ பிராணிகளின் நடத்தைகளை வெளிக்காட்டும் ஆடல் பாடல்கள்

## 3.0 நிலமும் வானமும்

### தேர்ச்சிகள்

- இலங்கையின் அமைவை வெவ்வேறு விதங்களில் வெளியிடுவார்.
- தரையின் பல்வகைமையூடாக வெளிக்கொணரப்படும் அழகைப் பேணுவதில் பங்களிப்பார்.
- மண்ணின் பல்வகைமையை நுணுகியாய்ந்து மண்ணைப் பாதுகாப்பதில் பங்களிப்பார்.
- வானத்தின் விந்தைமிகு தன்மையைத் தேடியாய்ந்து களிப்பார்.
- காற்றின் தொழிற்பாடு தொடர்பாக நுணுகியாய்ந்து செயற்படுவார்.
- தமது பிரதேசத்தில் மழையின் வேறுபாடு தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார்.
- வெளியைப் பயன்படுத்தி விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- நிலத்தினதும், வானத்தினதும் விந்தைமிகு தன்மையை வெளிக்காட்டும் ஆடல் பாடல் களில் ஈடுபடுவார்.
- வானம் - பூமி ஆகியவற்றின் மாற்றங்கள் மனித வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்தும் விதம் தொடர்பாகக் கவனஞ்செலுத்திச் செயற்படுவார்.

### உள்ளடக்கம்

- ✓ இலங்கையின் சார்பளவிலான அமைவு
- ✓ தரை மேற்பரப்பின் பல்வகைமை
- ✓ மண்ணின் தன்மை
- ✓ மண்ணைப் பாதுகாப்பதில் பங்களிப்பு
- ✓ இரவு வானத்தில் காணப்படுபவை
- ✓ வானிலை எதிர்வு கூறல்களும், காற்று வீசும் திசைகளையும் மழையின் அளவையும் அறிவதற்கேற்ற உபகரணங்களும் மழையின் அளவு - கூட, குறைய
- ✓ காற்றின் சக்தியால் இயக்கக்கூடியவை
- ✓ வெளியைப் பயன்படுத்தி ஈடுபடத்தக்க விளையாட்டுக்கள்
- ✓ வானத்திலும், நிலத்தினதும் வியத்தகுதன்மையை வெளிக்கொணரும் ஆடல் பாடல்கள், ஆக்கங்கள்
- ✓ வானத்தினதும் நிலத்தினதும் மாற்றங்களுக்கேற்ப வாழ்க்கைக் கோலத்தில் உள்ள மாற்றங்கள்.

## 4.0 நாமும் சந்தையும்

### தேர்ச்சிகள்

- பொருளொன்றைக் கொள்வனவு செய்யும்போது தரம், பொருளாதாரம் என்பன குறித்துக் கவனஞ்செலுத்திச் செயற்படுவார்.
- பொருளொன்றை விற்பனை செய்யும்போது கவனமாகச் செயற்படுவார்.
- சேவையொன்றினைப் பெறும் பொழுதும் வழங்கும் பொழுதும் கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்களைக் கருத்திற்கொண்டு செயற்படுவார்.
- அன்றாட வாழ்க்கையில் பாவனைப் பொருள்களையும் சேவைகளையும் வினைத் திறனு டையவாறு பயன்படுத்துவார்.
- அன்றாட வீட்டு வேலைகளின்போது சிக்கனமாகச் செயற்படுவார்.
- வீட்டில் சிக்கனம் பேணுவதற்காக சூழலிலிருந்து பெறத்தக்க பல்வேறு பொருள்களைப் பயன்படுத்திப் பொருத்தமான பாவனைப் பொருள்கள் ஆக்குவார்.
- சந்தை தொடர்பான பல்வேறு ஆடல், பாடல்கள், பாத்திர நடித்தல்களில் ஈடுபட்டு இரசனை பெறுவார்.

### உள்ளடக்கம்

- ✓ பொருள்களை வாங்குபவர் கவனஞ் செலுத்த வேண்டிய விடயங்கள்
- ✓ பொருள்களை விற்பனை செய்யும்போது கவனஞ் செலுத்த வேண்டிய விடயங்கள்
- ✓ சேவைகளைப் பெறும்போதும் சேவைகளை வழங்கும்போதும் கவனஞ் செலுத்த வேண்டிய விடயங்கள்
- ✓ பொருள்களையும் சேவைகளையும் வினைத்திறனுடனும் விளைதிறனுடையவாறும் பயன்படுத்துதல்
- ✓ வீட்டில் நடவடிக்கைகளைச் சிக்கனமாக நடத்திச் செல்வதற்காகத் தமது பங்களிப்பு
- ✓ பயன்படுத்துவதற்குப் பொருத்தமான பாவனைப் பொருள்கள் ஆக்கல்
- ✓ கொடுக்கல் வாங்கல் செய்யும் விதம், சேவைகள் வழங்கும் விதம் சேவைகள் பெறும் விதம் ஆகியவற்றைக் காட்டும் ஆடல் பாடல்கள்

## 5.0 மரஞ்செடிகொடிகள்

### தேர்ச்சிகள்

- ➲ எமது இருப்புக்கு இன்றியமையாத, உணவுகள், பானங்களைப் பெறுவதற்காக மரஞ் செடிகொடிகளின் காய் கனிகள் மூலம் கிடைக்கும் பயன்களைப் பயன்படுத்துவார்.
- ➲ மரஞ்செடிகொடிகளின் காய்கனிகளினது பல் வகைமையை இனங்கண்டு அவற்றின் இருப்புக்காகப் பங்களிப்புச் செய்வார்.
- ➲ விசேட கவனஞ் செலுத்த வேண்டிய மரஞ்செடிகொடிகளைக் காப்பதில் பங்களிப்பார்.
- ➲ அயற்சூழலில் மரஞ்செடிகொடிகளின் பல்வகைமையை மதித்து அதனைப் பேணுவதில் பங்களிப்பார்.
- ➲ மரஞ்செடிகொடிகள் தொடர்பான பயனுடைய ஆக்கங்கள் புரிவார்.
- ➲ தாவரங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் வெளிக்கொணரப்படும் வகையிலான ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.
- ➲ தாவரங்களின் பல்வகைமை வெளிக்கொணரப்படும் ஆக்கபூர்வமான விளையாட்டுகளில் ஈடுபடுவார்.
- ➲ மரஞ்செடிகொடிகளுடன் தொடர்புபட்டு உள அமைதி பெறுவதோடு, இரசனையும் பெறுவார்.

### உள்ளடக்கம்

- ✓ மனிதனின் இருப்புக்காக மரஞ்செடிகொடிகளின் கிழங்குகள், காய்கனிகள், இலைகள், வித்துக்கள் மூலம் கிடைக்கும் பயன்கள்
- ✓ காய்கனிகளின் பல்வகைமையும் அவற்றின் இருப்பும்
- ✓ விசேட கவனஞ் செலுத்திக் காக்க வேண்டிய மரஞ்செடிகொடிகள்
- ✓ அயற் சூழலில் மரஞ்செடிகொடிகளின் பல்வகைமையும் இருப்பும்
- ✓ தாவரங்கள் தொடர்பாகவும் தாவரப்பகுதிகளைக் கொண்டும் செய்யும் பல்வேறு ஆக்கங்கள்
- ✓ தாவரங்களைப் பேணிப் பாதுகாப்பதன் முக்கியத்தை வெளிக்கொணரத்தக்க ஆடல் பாடல்கள்
- ✓ தாவரங்களின் பல்வகைமை வெளிக்கொணரப்படும் ஆக்கபூர்வமான விளையாட்டுக்கள்

## 6.0 நீர்

### தேர்ச்சிகள்

- ➲ பெறுமதிமிக்க ஒரு வளமாகக்கருதி, நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவார்.

- ➲ ஆரோக்கியமாக வாழ்வதற்காகப் போதுமான அளவுக்கு நீரை நுகருவார்.
- ➲ நீர் தொடர்பான பாரம்பரியமான பழக்கவழக்கங்களை ஆராய்வுபூர்வமாகப் பேணி வருவார்.
- ➲ நீர் மாசடைதல் தொடர்பாகக் கவனஞ்செலுத்தி, அதனைத் தவிர்ப்பதற்காகப் பங்களிப்புச் செய்வார்.
- ➲ ஓடும் நீரின் சக்தியைப் பயன்படுத்தி இயக்கத்தக்க உபகரணங்களின் மாதிரியுருக்களை ஆக்குவார்.
- ➲ நீருடன் தொடர்புடைய ஆடல் பாடல்களை முன்வைப்பார்.

### உள்ளடக்கம்

- ✓ நீர் இன்றியமையாத ஒரு வளம்
- ✓ தினமும் குடிப்பதற்கு நீர் அவசியம்
- ✓ நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தல்
- ✓ வீணாகிச் செல்லும் நீரினால் பெறத்தக்க பயன்கள்
- ✓ நீருடன் தொடர்புடைய பாரம்பரியமான பழக்க வழங்கங்களைத் தேடியறிதலும்
- ✓ அவற்றைப் பேணி வருதலும்
- ✓ நீரில் பொதிந்துள்ள சக்தியைப் பயன்படுத்தி இயக்கத்தக்க பல்வேறு ஆக்கங்கள்
- ✓ நீர் மாசடைதலும் அதனை தவிர்த்தலும்
- ✓ நீர் தொடர்பான விளையாட்டுக்கள்
- ✓ நீர் தொடர்பான ஆடல் பாடல்கள்

## 7.0 வீட்டுத்தோட்டம்

### தேர்ச்சிகள்

- ➲ வீட்டுத்தோட்டச் செய்கையில் ஆராய்வுபூர்வமாகப் பங்களிப்புச் செய்து இரசனை பெறுவார்.
- ➲ பயிர்ச்செய்கைக்கான மாற்று முறைகளை அமைப்பார்.
- ➲ வெவ்வேறு ஆக்கங்கள் மூலம் வீட்டுத்தோட்டத்தின் அழகை வெளிப்படுத்திக் காட்டுவார்.
- ➲ வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபட்டு, அனுபவங்களைப் பகிர்ந்து பரிமாறியவாறு அதன் விளைச்சலை அதிகரிப்பதற்காகச் செயற்படுவார்.
- ➲ வீட்டுத்தோட்டத்தின் அழகைக்கூறும் ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.

### உள்ளடக்கம்

- ✓ வெவ்வேறு கையாண்டு பார்த்தல்கள் மூலம் வீட்டுத்தோட்டச் செய்கையில் பங்களிப்பு
- ✓ பயிர்ச்செய்யும் மாற்று முறைகள்
- ✓ வீட்டுத்தோட்டதில் காணப்படவேண்டிய இயல்புகள்
- ✓ கூட்டெரு தயாரித்தலும் பயன்படுத்தலும்
- ✓ பயிர்ச்செய்கைக்கு அனுகூலமான பிராணிகளும், பிரதிகூலமக பிராணிகளும்
- ✓ வீட்டுத்தோட்டத்தின் அழகை நயத்தல்

## 8.0 பாதுகாப்பும் கரிசனையும்

### தேர்ச்சிகள்

- ➲ இயற்கைத் தோற்றப்பாடுகளின்போது அழிவுகள் ஏற்படத்தக்க சந்தர்ப்பங்கள் தொடர்பாகக் கவனஞ்செலுத்தி அவற்றிலிருந்து பாதுகாப்பும் பெறுவதற்காகச் செயற்படுவார்.
- ➲ விபத்துகள் நிகழத்தக்க சந்தர்ப்பங்களில் தனதும் ஏனையோரதும் பாதுகாப்பு தொடர்பாக கரிசனையுடன் செயற்படுவார்.

- ➲ விபத்துக்களின்போது முறையான முதலுதவி வழங்குவதற்கு செயற்படுவார்.
- ➲ சிறுவருக்கு எதிராக நிகழும் சட்டவிரோதச் செயல்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காகச் செயற்படுவார்.
- ➲ தாமும் ஏனையோரும் தொற்று நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவது தொடர்பாக கரிசனையுடன் சுகாதாரமான சூழலை ஏற்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்வார்.
- ➲ பாதுகாப்பு, கரிசனை என்பன குறித்து ஏனையோருக்கு அறிவூட்டம் செய்வதற்குப் பொருத்தமான பல்வேறு ஆக்கங்கள் புரிவார்.
- ➲ பாதுகாப்பாகவும் கரிசனையுடனும் செயற்படும் விதத்தை வலியுறுத்தும் ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.

### உள்ளடக்கம்

- ✓ மழை, காற்று, மின்னல், வெள்ளம், வரட்சி, மண் சரிவு, சூறாவளி, சுனாமி போன்றவற்றால் ஏற்படத்தக்க அழிவுகள்
- ✓ அவசர தவிர்ப்பதற்காகக் கையாளத்தக்க உத்திகள்
- ✓ விபத்துக்களைத் தவிர்த்தலும், விபத்துக்களின்போது முதலுதவியும்
- ✓ தமதும் ஏனையோரதும் பாதுகாப்பு தொடர்பாகக் கவனஞ் செலுத்துதல்
- ✓ சிறுவருக்கு எதிராக இடம்பெறும் செயல்களும் அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக எடுக்கத்தக்க நடவடிக்கைகளும்
- ✓ நோய்களிலிருந்து தம்மையும் ஏனையோரையும் பாதுகாப்பதற்காகச் செய்யத்தக்கவைகள்
- ✓ இயற்கைத் தோற்றப்பாடுகள், விபத்துக்கள், கொள்ளை நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவது தொடர்பான பல்வேறு ஆக்கங்கள்
- ✓ இயற்கைத் தோற்றப்பாடுகள், விபத்துக்கள், நோய்களிலிருந்து பாதுகாப்பு பெறுவது தொடர்பான பல்வேறு ஆக்கங்கள்
- ✓ இயற்கைத் தோற்றப்பாடுகள், விபத்துக்கள், சமூகவிரோதச் செயற்பாடுகளிலிருந்து பாதுகாப்புப் பெறுவதை வெளிக்கொணரும் ஆடல் பாடல்கள்

## 9.0 எமது பண்டைய தகவல்கள்

### தேர்ச்சிகள்

- ➲ நாட்டின் அபிவிருத்திக்காகப் பாரிய சேவை செய்த சில அரசர்களை இனங்கண்டு அவர்களது சேவைகளின் நல்ல முன்மாதிரிகளை வாழ்க்கையுடன் இணைத்துக் கொள்வார்.
- ➲ வரலாற்று முக்கியத்துவமுடைய சில இடங்களை இனங்கண்டு பெருமையுடன் மதிப்பார்.
- ➲ வரலாற்று முக்கியத்துவமுடைய இடங்கள் தொடர்பான தகவல் சேகரிப்பதற்காகப் பிரயோகிக்கத்தக்க முறைகளை விளைதிறனுடைய வகையில் பயன்படுத்துவார்.
- ➲ பண்டைய கலைப்படைப்புக்களின் சிறப்புக்களைத் தேடியாய்ந்து களிப்பார்.
- ➲ வரலாற்று முக்கியத்துவமுடைய இடங்களைப் பாதுகாப்பதில் பங்களிப்பார்.
- ➲ தேசப்பற்றை வளர்க்கும் ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.

### உள்ளடக்கம்

- ✓ நாட்டின் அபிவிருத்திக்காகச் செயற்பட்ட சில அரசர்களின் சேவைகள்
- ✓ வரலாற்று முக்கியத்துவமுடைய கலைப்படைப்புக்கள் தொடர்பான பிராந்தியத் தகவல்கள்
- ✓ வரலாற்று முக்கியத்துவமுடைய தகவல் சேகரிக்கும் பல்வேறு முறைகள்
- ✓ தேசப்பற்றும் ஆடல் பாடல்கள், கிராமிய விளையாட்டுக்கள்

# 10.0 வேலைகளை இலகுவாக்கும் வழிகள்

### தேர்ச்சிகள்

- ➲ கூட்டாகச் செய்யும் வேலையொன்றில் திட்டமிடல் தொடக்கம் வெற்றிகரமாக நிறைவு செய்தல் வரையில் பங்களிப்புச் செய்வார்.
- ➲ வேலைகளை இலகுபடுத்திக்கொள்வதற்காக எளியபொறிக் கோட்பாடுகளைப் பயன்படுத்து வார்.
- ➲ வெவ்வேறு சக்திகளைப் பயன்படுத்தி அன்றாட வேலைகளை இலகுபடுத்திக் கொள்வார்.
- ➲ வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய எளிமையான உபகரணங்களை ஆக்குவார்.
- ➲ வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காக ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.
- ➲ கூட்டுணர்வு வெளிக்கொணரப்படும் ஆக்கபூர்வமான விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- ➲ எடுகோள்களுடன் திட்டமிடல்களில் ஈடுபடுவார்.

### உள்ளடக்கம்

- ✓ கூட்டாகச் சேர்ந்து செய்யக்கூடிய வேலையொன்றின் வெற்றிகரமான தன்மை
- ✓ இழுத்தல், தள்ளுதல், உயர்த்துதல், சுழற்றுதல் ஆகியவற்றின் பயன்பாடு
- ✓ உபகரணங்கள், கருவிகள். உபகரண அமைப்புக்களின் பயன்பாடு
- ✓ பண்டைய காலம் தொட்டு இன்றுவரை வேலைகளை இலகுபடுத்திக்கொள்வதற்காகச் செய்யப்பட்ட மாற்றங்கள், நன்மைகள்
- ✓ மின்காந்தத்தன்மை, காற்றுச் சக்தி, நீர்மின்சக்தி ஆகியவற்றால் வேலைகளை இலகு படுத்துதல்
- ✓ வேலைகளை இலகுபடுத்துவதற்காக எளிமையான உபகரணங்கள் ஆக்கல்
- ✓ வேலைகளை இலகுபடுத்துவதற்காக பண்டைக்காலம் தொட்டு பயன்படுத்தப்பட்ட ஆடல் பாடல்கள்
- ✓ கூட்டுணர்வை வெளிக்கொணரும் ஆக்கபூர்வமான விளையாட்டுக்கள்

# 11.0 நாம் இலங்கையர்

### தேர்ச்சிகள்

- ➲ சகல மக்கட் பிரிவினரதும் தனித்துவத்தை மதித்து ஒத்துழைத்துச் செயற்படுவார்.
- ➲ நாட்டின் சுதந்திரத்துக்காகச் செய்த அர்ப்பணிப்புக்களை மதித்து நாட்டுப்பற்றுடன் செயற்படுவார்.
- ➲ இலங்கையர் என்ற வகையில் தனது தனித்துவம் பாதுகாக்கப்படும் வகையில் செயற்படு வார்.
- ➲ வளங்களைப் பாதுகாக்கும் மனப்பாங்குடன் நடப்பார்.
- ➲ நாட்டிற்கு நற்பெயரை ஈட்டிக் கொடுத்தோரின் நடத்தையை எடுத்துக்காட்டாகக் கொண்டு செயற்படுவார்.
- ➲ நாட்டின் தனித்துவத்தை எடுத்துக்காட்டும் ஆக்கம், ஆடல், பாடல்கள், விளையாட்டுக்கள் என்பவற்றில் ஈடுபடுவார்.

### உள்ளடக்கம்

- ✓ இலங்கையின் வெவ்வேறு மக்கட் பிரிவினரின் தனித்துவம்
- ✓ இலங்கையருக்கான தனித்துவம்
- ✓ மக்கட் பிரிவினருக்கு இடையே ஒத்துழைப்பு
- ✓ சுதந்திரத்துக்காகப் பாடுபட்ட பல்வேறு மக்கட் தலைவர்கள்

- ✓ நாட்டிற்கு நற்பெயரை ஈட்டிக்கொடுத்தோர் சிலர்
- ✓ வளங்களைக் காக்கும் மனப்பாங்கு விருத்தி
- ✓ தேசியத்துவத்தை எடுத்துக்காட்டும் ஆடல் பாடல்கள், விளையாட்டுக்கள், ஆக்கங்கள்

## 12.0 எம்மால் செய்யக்கூடிய மாற்றங்கள்

### தேர்ச்சிகள்

- ➲ தமது நடத்தையின் உடன்பாடான (+) மாற்றத்துக்காக கவனத்துடன் செயற்படுவார்.
- ➲ தனதும் சக மாணவ மாணவியரதும் கல்வியின் தர மேம்பாட்டுக்காகவும், உள சமூக கவனிப்புக்காகவும் கவனத்துடன் செயற்படுவார்.
- ➲ எனையோருக்கு உதவி புரியத்தக்க சந்தர்ப்பங்கள் பற்றித் தேடியறிந்து அதற்காகச் செயற்படுவார்.
- ➲ பாடசாலைச் சூழலை அழகாகப் பேணி வரப் பங்களிப்புச் செய்வார்.
- ➲ உடல், உள ஆரோக்கியத்துக்காக ஆக்கபூர்வமான விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.

### உள்ளடக்கம்

- ✓ அன்றாட பேணிவரும் தவறான நடத்தைகளைத் திருத்திக்கொள்வதற்காகச் செய்யத் தக்கவை.
- ✓ தமதும் ஏனையோரதும் கல்வி அபிவிருத்திக்காகச் செய்யக்கூடிய உதவிகள், உள சமூக விருத்திக்காகச் செய்யக்கூடிய உதவிகள்.
- ✓ பாடசாலைக்கு அப்பாற்பட்ட ஏனையோருக்கு உதவி புரிவதற்கான வாய்ப்புக்களும் செய்யத்தக்க உதவிகளும்
- ✓ பாடசாலையின் அழகைப் பேணுவதற்காகச் செய்யத்தக்கவை
- ✓ உடன்பாடான மாற்றங்கள் தொடர்பான ஆடல் பாடல்கள், ஆக்கங்கள்
- ✓ உடல், உள ஆரோக்கியத்துக்கான ஆக்கபூர்வமான விளையாட்டுக்கள்

## 13.0 மனிதனும் தகவல்களும்

### தேர்ச்சிகள்

- ➲ தகவல் பெறுவதற்காக பல்வேறு ஊடகங்களையும் முறைகளையும் பயன்படுத்துவார்.
- ➲ அன்றாட வேலைகளுக்காக இலத்திரனியல் சாதனங்கள் சிலவற்றைக் கையாள்வார்.
- ➲ பல்வேறு ஊடகங்களினூடாகக் கிடைக்கும் தகவல்களைப் பகுத்தாய்வு செய்து பொருத்த மான தகவல்களைத் தெரிவுசெய்து கொள்வார்.
- ➲ தகவல்களை முன்வைப்பதற்காக விளைதிறன்மிக்க முறைகளைப் பயன்படுத்துவார்.
- ➲ பல்வேறு ஊடகங்களினூடாகப் பெறும் தகவல்களைப் பயன்படுத்தி ஓய்வை விளைதிறனு டைய வகையில் கழிப்பார்.

### உள்ளடக்கம்

- ✓ தகவல் பெறும் ஊடகங்களாக
  - மின் ஊடகங்கள், அச்சு ஊடகங்கள், சமிக்ஞைகள், சைகைகள், குறியீடுகள்
- ✓ தகவல் பெறுவதற்காக அளவாய்வுகள், அவதானிப்புக்கள், தேடியாய்தல் முறைகளின் பயன்பாடு
- ✓ நூலகத்தைப் பயன்படுத்தல்
- ✓ மின் ஊடக உபகரணங்கள் சிலவற்றின் செயற்படுதன்மையும் இவற்றைக் கையாளலும்
- ✓ பொருத்தமான தகவல்களைத் தெரிவுசெய்வதன் இன்றியமையாமையும் பகுப்பாய்வும்

- ✓ மிகப்பொருத்தமான ஊடகங்களினூடாக தகவல் பெறுவதற்கும் முன்வைப்பதற்கும் ஏற்ற முறைகள்
- ✓ ஆடல் பாடல்களை உள்ளடக்கிய ஆக்க நாடகங்கள்/உத்திகள்

## 14.0 எமது உணவு

### தேர்ச்சிகள்

- ➲ தமது பங்களிப்புடன் உற்பத்தி செய்யும் உணவுப் பொருளொன்றை வேளையுணவுடன் சேர்த்துக்கொள்வதற்காகச் செயற்படுவார்.
- ➲ ஆரோக்கியமான வாழ்வுக்காக நிறைவான வேளையுணவொன்றின் அவசியத்தை விளங்கிச் செயற்படுவார்.
- ➲ வயதுக்குப் பொருத்தமானவாறு உயரத்தையும் நிறையையும் பேணி வருவார்.
- ➲ சரியான ஒழுங்குகளை அனுசரித்து ஆக்கபூர்வமாக உணவு பரிமாறுவார்.
- ➲ உணவு வீண்விரயத்தைத் தவிர்ப்பதற்காக கவனமாகச் செயற்படுவார்.
- ➲ போசாக்குத் தரம் பேணப்படும் வகையில் உணவொன்றைத் தயாரிப்பார்.
- ➲ உடல், உளச் சமநிலைக்குரிய ஆக்கபூர்வமான விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- ➲ உணவினது போசாக்குத் தரத்தின் முக்கியத்துவத்தைக் கூறும் ஆடல் - பாடல்களில் ஈடுபடுவார்.

### உள்ளடக்கம்

- ✓ பயிர் நடுகையில் தமது பங்களிப்பு
- ✓ உடலாரோக்கியத்தைப் பேணும் செயற்பாடுகள்
- ✓ சுகாதாரத்துக்குக் கேடான உணவுகள்
- ✓ உணவு பரிமாறும் சரியான முறைகள்
- ✓ உணவு பரிமாறுவதில் ஆக்கபூர்வமான தன்மை
- ✓ உணவு வீண்விரயத்தைத் தவிர்க்கும் முறைகள்
- ✓ போசாக்குத் தரம் பேணப்படும் வகையில் உணவு தயாரித்தல்
- ✓ உடல், உளச் சமனிலையைப் பேணும் விளையாட்டுக்கள்
- ✓ போசாக்குத் தரத்தைக் கூறும் ஆடல் பாடல்கள்

## 15.0 போக்குவரத்து

### தேர்ச்சிகள்

- ➲ போக்குவரத்து விருத்தியின் கடந்த காலத்தையும் தற்காலத்தையும் ஒப்பிட்டு எதிர்காலம் பற்றி எதிர்வு கூறுவார்.
- ➲ வீதிகளின் பரம்பல் தொடர்பாக திட்டமிட்டு செயல்படுவார்.
- ➲ பயணங்களின்போது திட்டமிட்டுச் செயற்படுவார்.
- ➲ போக்குவரத்துத் தேவைகளை இலகுபடுத்திக்கொள்வதற்காகப் பொறிமுறைச் சக்தியைப் பயன்படுத்தக்கூடிய விதம் தொடர்பாக ஆக்கபூர்வமாகச் செயற்படுவார்.
- ➲ வீதிகளைப் பயன்படுத்துவோர் அனுசரிக்க வேண்டிய சட்டதிட்டங்கள். வீதி ஒழுக்கங்கள், வீதிப் பாதுகாப்பு ஆகியன தொடர்பாக கவனஞ்செலுத்தி அவற்றுக்கு அமைவாகச் செயற்படுவர்.
- ➲ போக்குவரத்து தொடர்பான ஆடல் பாடல்கள், ஆக்கங்கள், விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.

### உள்ளடக்கம்

- ✓ போக்குவரத்தின் பரம்பல்
- ✓ பெருந்தெருக்கள், புகையிரதப் பாதைகள், வான் வழிகளின் பரம்பல்
- ✓ பிரதான பாதைகளும் மாற்றுப் பாதைகளும்
- ✓ போக்குவரத்து சார்ந்த தகவல்கள்
- ✓ திட்டமிட்ட பிரயாணங்களும் அவற்றின் முக்கியத்துவமும்
- ✓ சைக்கிளின் தொழிற்பாடு
- ✓ போக்குவரத்துக்காக பொறிமுறைச் சக்தியைப் பன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்
- ✓ போக்குவரத்து தொடர்பான சட்டதிட்டங்களும் ஒழுங்குவிதிகளும்
- ✓ போக்குவரத்து தொடர்பான ஆடல் பாடல்கள், விளையாட்டுக்கள்
- ✓ போக்குவரத்து தொடர்பான சுவரொட்டிகள், மாதிரியுருக்கள் ஆக்குதல்

## 16.0 மனித நடத்தைகள்

### தேர்ச்சிகள்

- ➲ புரிந்துணர்வுடன் செயற்பட்டு ஏனையோருக்கு பரிவுணர்வு காட்டுவார்.
- ➲ மனித கௌரவம் நன்கு பேணப்படும் வகையில் உறுதிப்பாட்டுடன் செயற்படுவார்.
- ➲ எப்போதும் ஏனையோருக்கு உதவுவதற்கும் தேவையேற்படுமிடத்து மட்டும் பிறரிடம் உதவி கோருவதற்கும் ஆர்வம் காட்டுவார்.
- ➲ வயது கூடியோரின், குறைந்தோரின் நடத்தைக் கோலங்களை புரிந்துகொண்டு அதற் கேற்பச் நடந்துகொள்வார்.
- ➲ மாற்று வழிவகைகள் தொடர்பாகக் கவனஞ்செலுத்தி புரிந்துணர்வுடன் செயற்படுவார்.
- ➲ மகிழ்ச்சியாகவும் ஒற்றுமையாகவும் வாழ்வதன் பெறுமதியை வலியுறுத்தும் வகையிலான ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.
- ➲ நல்ல மனித நடத்தைகளை எடுத்துக்காட்டும் வகையில் ஆக்கம் புரிவார்.

### உள்ளடக்கம்

- ✓ குடும்ப உறுப்பினர்களிடையெ பரிவுணர்வு காட்டல்
- ✓ நாளாந்த வேலைகளின்போது பரிவுணர்வுடன் செயல்படுவதன் முக்கியத்துவம்
- ✓ மனித கௌரவம் பேணப்படும் வகையில் உறுதியான வகையில் கருத்துத் தெரிவிப்பதன் பெறுமதி
- ✓ மாற்றுவழிகளைப் பயன்படுத்தல் தொடர்பான அனுபவங்கள்
- ✓ மகிழ்ச்சியாகவும், ஒற்றுமையாகவும் வாழ்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையிலான ஆடல் பாடல்கள்
- ✓ மனிதனின் நற்செயல்களை வெளிப்படுத்தும் ஆக்கங்கள்

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

‘‘சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்’’ எனும் பாடம், கற்பித்தலிலும் பார்க்க கற்றலுக்கு முக்கியத்துவம் வழங்கும் ஒரு கற்றல் - கற்பித்தற் செயன்முறையாகும். மாணவரைக் குழுக்களாகவோ தனித்தனியாகவோ கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தலாம். தேவையான சந்தர்ப்பங்களில் முழு வகுப்பையுமே அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுத்தலாம்.

ஆசிரியர் இதற்கான திட்டத்தை முன்கூட்டியே தயாரித்துக்கொள்ள வேண்டும். ஒரு குறித்த சந்தர்ப்பத்தில் வெவ்வேறு குழுக்கள், வெவ்வேறுபட்ட வேலைகளில் ஈடுபட இடமுண்டு. பரந்த பாடப்பரப்பை உள்ளடக்குவதற்கு இது வாய்ப்பளிக்கும்.

மாணவர்களுக்காகத் திட்டமிடும் வேலைகளில், அவதானிப்பு, களப் பிரயாணங்கள், கையாண்டு பார்த்தல்கள், குறுகிய காலச் செயற்றிட்டங்கள், சேகரித்தல்கள், வகிபாகமேற்று நடித்துக்காட்டல்கள் (Role play) போன்ற பல்வேறு கற்றல் முறைகளும், நூல்கள் போன்ற அச்சு ஊடகங்கள், வானொலி, தொலைக்காட்சி, இணையம் போன்ற மின் ஊடகங்கள், தனியாள்களிடம் வினவித் போன்றவற்றினூடாகத் தகவல் சேகரித்தலும் தகவல் பெறுதலும் அடங்கலாம்.

## பாடசாலைக்கொள்கையும் வேலைத்திட்டமும்

அழகியல் சார்ந்த, ஆக்கம் சார்ந்த, உடல் சார்ந்த தேர்ச்சிகளை அடைவதற்காக பரந்த வீச்சில் கற்றல் - கற்பித்தல் அனுபவங்களை வழங்க முயற்சி மேற்கொள்ளப்பட்டிருத்தல் புதிய பாடவிதானத்தில் காணப்படும் தெளிவான ஒரு மாற்றமாகும். அம்மாற்றத்துக்கு ஈடுகொடுப்பதற்காக, வகுப்பறையும் ஒட்டுமொத்த பாடசாலைச் சூழலும் மாணவரை நோக்கும் கண்ணோட்டமும் மாற்றமடைதல் வேண்டும். பாடசாலைக் கொள்கை வேலைத்திட்டத்தின் கீழ் தகவல்களைச் சேகரித்தல், அவற்றை வெவ்வேறு முறைகளுக்கு அமைய அறிக்கைப்படுத்த வாய்ப்பளிக்கப்படுவது முக்கியமானதாகும். எனவே நாள் முழுவதும் மேசையருகே கதிரையில் அமர்ந்திருப்பதற்குப் பதிலாக, வெவ்வேறு மெய்ந்நிலைகளில் மகிழ்ச்சியாக பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவரைக் காணத்தக்க வகையிலேயே ‘‘பாடசாலைக் கொள்கைகளும் வேலைத்திட்டங்களும்’’ ஒழுங்கு செய்யப்படுதல் வேண்டும்.

இதற்காகத் திட்டமிடும் வகுப்பில் காணப்படத்தக்க பண்புகள் வருமாறு:

- ✓ இம்மாணவருக்குப் பிரதானமாக பாடசாலை செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கேற்ற கற்றற் சூழலைத் தயார்ப்படுத்தல்
- ✓ வகுப்புக்கு வெளியே திறந்த வெளியில் கற்பதற்கான வசதிகளை வழங்குதல்
- ✓ பாடசாலையில் விளையாட்டு, அழகியல் வேலைகள், ஆக்க வேலைகள் ஏனைய பாட இணைச் செயற்பாடுகளில் கவனஞ் செலுத்துதல்

# மாணவர் முன்னேற்றத்தைக் கணிப்பிடல்

‘‘சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்’’ பாட மதிப்பீட்டின்போது அக்கற்றற் செயன்முறையினூடாக மாணவர்க்கு வழங்க எதிர்பார்க்கும் அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், ஒப்படைகள் குறித்துக் கவனஞ் செலுத்துதல் வேண்டும். அத்தோடு சமூகத்திறன்கள் குறித்தும் விசேட கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

மாணவர் குழுக்களிடத்திலோ தனித்தனி மாணவரிடத்திலோ காணப்படும் குறைபாடுகளை அடுத்துவரும் கற்றல் பணிகளின்போது நிவர்த்தி செய்வதையும் துரிதமாகக் கற்கும் ஆற்றலைக் காட்டும் மாணவர்க்கு மேலும் ஊக்கமளிப்பதையும் நோக்காகக் கொண்டே கணிப்பீடு நடாத்தப்படுதல் வேண்டும்.

இதற்காக, பெரும்பாலும் முறைசார்ந்த மதிப்பீட்டு முறைகளுக்கு அப்பாற்பட்ட முறைகளைப் பின்பற்ற நேரிடும். மாணவர்கள் வேலைகளில் ஈடுபட்டிருக்கும் போது அவர்களை அவதானித்தும் அவர்கள் கூறுபவற்றைச் செவிமடுத்தும், அவர்களோடு கலந்துரையாடியும் இதற்கான வாய்ப்புக்களை உருவாக்கிக்கொள்ளலாம். அவற்றை முறைமையாக அறிக்கைப்படுத்துவதற்காக, ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் தரப்பட்டுள்ள கணிப்பீட்டு அறிக்கைப்படிவத்தினைப் பயன்படுத்தலாம்.

# 1.0 எமது நல்வாழ்வு



**தமது உரிமைகளுக்காக மாத்திரம் பாடுபடுகின்ற, தமது கடமைகள், பொறுப்புக்களைத் தட்டிக் கழிக்கின்ற ஆட்கள் செறிந்த சமூகமொன்றின் சீரான இயக்கம் ஆபத்துக்களைக் கொண்டதாகும். தமது உரிமைகள், கடமைகள், பொறுப்புக்கள் தொடர்பாக சமனிலையாகச் செயற்படுகின்ற, சமூக நியமங்கள், சட்டதிட்டங்களை மதித்து நடக்கின்ற ஆட்கள் செறிந்து காணப்படுவார் களானால் மாத்திரமே சமூகத்தின் சீரான இருப்பு உறுதிப்படுத்தப்படும். அவ்வாறான ஆட்களைப் பெரும்பான்மையாகக்கொண்ட சமூகமொன்றுக்கு அடித்தளமிடுவதற்கான எதிர்கால பிரசைகளை விருத்தி செய்யும் எதிர்பார்ப்புட னேயே இந்த கருப்பொருள் திட்டமிடப்பட்டுள்ளது.**


## தேர்ச்சிகள்

- ஆன்மீக நல்வாழ்வுக்கான பிரயோகங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தி அன்றாட வேலைகளில் ஈடுபடுவார்.
- சமூகத்தின் நல்வாழ்வுக்கு வழிகோலத்தக்க கடமைகள், உரிமைகள், பொறுப்புக்கள் தொடர்பாக உணர்வுடன் செயற்படுவார்.
- சட்டதிட்டங்களை மதிப்பதன் முக்கியத்துவத்தைக் கவனத்திற்கொண்டு சட்டதிட்டங் களை மதித்து நடப்பார்.
- சமூகத்தின் நல்வாழ்வுக்குரிய படிப்பினையாக அமையத்தக்க ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.
- சமூகத்தின் நல்வாழ்க்கைக்கு வழிகோலத்தக்க ஆக்கங்களில் ஈடுபடுவார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

## செயற்பாடு 1

- தரம் 4 ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் கருப்பொருள் 16 இனை நன்கு வாசியுங்கள். அக்கருப்பொருளின்போது ஆன்மீக நல்வாழ்வுக்காக மாணவர்கள் பரிச்சயம் பெற்றுள்ளனர். இச் செயற்பாடுகளை இதமாக மீண்டும் முன்வைக்க வாய்ப்பளியுங்கள். அவ்வாறாக அச்செயற்பாடுகளில் ஈடுபட முடியாத மாணவர்கள் உள்ளனராயின் மேலும் இலகுவான வகையில் உங்களது செய்து காட்டலுடன் அச்செயற்பாடுகளில் ஈடுபட அம்மாணவரை வழிப்படுத்துங்கள்.



- சூரிய நமஸ்கார/மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகளை நாளாந்தம் செய்து வரும் மாணவரைப் பாராட்டுங்கள். அவற்றைச் செய்துவருதை இன்னமும் பரிச்சயப் படுத்திக்கொள்ளாத மாணவரை இனங்கண்டு, அவர்களையும் நாளாந்தப் பழக்கமாக அச்செயற்பாடுகளில் ஈடுபடத் தூண்டுங்கள்.

- இக்கருப்பொருள் முடிவடைந்த பின்னரும் ஒவ்வொரு வாரமும் 30 நிமிட நேர பாட இணைச் செயற்பாடுகளை ஆரம்பிக்கும்போது சூரிய நமஸ்காரத்தை/மனதை ஒரு நிலைப்படுத்தலை நடைமுறைப்படுத்துங்கள். பாடசாலை நடைபெறாத நாட்களான, வார இறுதியிலும், விடுமுறை தினங்களிலும், ஆன்மீக, உடல் தகைமைக்காக சூரிய நமஸ்காரத்தை/மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள். இறுதியில் மாணவருடன் சூரிய நமஸ்காரத்தை/ மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாடுகளை நல்வாழ்க்கைக்கான ஒரு பழக்க மாக்கிக்கொள்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் உரையாடுங்கள். மாணவரது கருத்துக்களையும் உள்ளடக்கி பின்வரும் விடயங்களை வலியுறுத்துங்கள்.
  - சூரிய நமஸ்கார/மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகளில் பரிச்சயம் பெற்று நாளாந்த வாழ்க்கையில் பழக்கமாக ஆக்கிக்கொள்வதன் முக்கியத்துவமான
  - அது ஆன்மீக (உடல் தகைமைகள் உருவாதல்) வாழ்க்கைக்கு மிகப்பயனுடையது.
  - இவ்வாறான நிலைமைகளை உருவாக்கிக்கொள்வதன் மூலம் கிடைக்கும் அமைதி யான மனமும் ஆரோக்கியமான வாழ்க்கையும் மிக முக்கியமானவை.

- ஏற்கனவே சூரிய நமஸ்காரத்தில் அதாவது/மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடு களில் பரிச்சயம் பெற்று நாளாந்தம் அதனைச் செய்து வரும் மாணவரை மீண்டும் பாராட்டி வகுப்பு மாணவர் அனைவரையும் அவ்வாறு செய்யத் தூண்டுங்கள்.

## செயற்பாடு 2

- மாணவர்களால் வீட்டுக்காகவும், பாடசாலைக்காகவும் ஆற்றவேண்டிய கடமைகள், பொறுப்புக்களை வலியுறுத்தும் வகையிலான பங்கேற்று நடித்தலொன்றை முன் கூட்டியே திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**பங்கேற்று நடித்தல் 1**

வீட்டுக்காக ஆற்றவேண்டிய கடமைகள், பொறுப்புக்களை வலியுறுத்தும் வகையில்

***எடுத்துக்காட்டு:***

- தாயினதும் தந்தையினதும் வேலைகளில் உதவுதல்
- வீட்டை ஒழுங்காக - நேர்த்தியாக வைத்திருக்க உதவுதல்
- வீட்டு அயற்சூழலை நுளம்புகள் பெருகாத வகையில் பேணுவதில் பங்களிப்புச் செய்தல்
- வீட்டில் இருக்கும் வயோதிபர்களுக்குப் பணிவிடை செய்ய உதவுதல்
- வீட்டார் நோய்வாய்ப்படும் சந்தர்ப்பத்தில் பணிவிடை செய்ய உதவி செய்தல் போன்றவை.

**பங்கேற்று நடித்தல் 2**

பாடசாலைக்காக / வகுப்புக்காக ஆற்றவேண்டிய கடமைகள், பொறுப்புக்களை வலியுறுத்தும் வகையில்

***எடுத்துக்காட்டு:***

- வகுப்பை சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைத்திருக்க பங்களிப்பு வழங்குதல்
- வகுப்பு மாணவருடன் நட்புடன் செயற்படுதல்

- பாடசாலை வளங்களைப் பாதுகாத்தல்
- பாடசாலையில் விசேடமான சந்தர்ப்பங்களில் உச்ச அளவுக்குப் பங்களிப்புச் செய்தல்

**பங்கேற்று நடித்தல் 3**

ஒரு மாணவன் என்ற வகையில் நாட்டுக்காக ஆற்றவேண்டிய கடமைகள், பொறுப்புக்களை வலியுறுத்தும் வகையில்

***எடுத்துக்காட்டு:***

- இலவசமாகக் கிடைக்கும் பாடநூலை, அடுத்த வருடத்தில் மற்றுமொரு மாணவனுக்குப் பயன்படுத்தக்கூடிய வகையில் பாதுகாப்பாகப் பயன்படுத்தல்
- இலவசமாகக் கிடைக்கும் சீருடையைத் தாமே கழுவிச் சுத்தப்படுத்தி அழகாக அணிந்து பாடசாலைக்கு வருதல்
- தான் பயணம் செய்யும் இடங்களில் பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்
- தேசியக் கொடி, தேசிய கீதம் ஆகியன தொடர்பாக தவறான நடத்தைகளிலிருந்து விலகி, தேசியக்கொடிக்கும் தேசிய கீதத்துக்கும் கௌரவமளித்து நடந்துகொள்ளல்

- இந்த வகிபாகமேற்று நடித்துக்காட்டல்களுக்காக மேலே குறிப்பிடப்பட்டவற்றை வலியுறுத்தும் வகையில் நடித்துக்காட்டும் திறனுடைய மாணவரைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள். நடித்துக்காட்டல்களை முன்வைக்க முன்னர் தேவையான வழிகாட்டல்கள் வழங்கி அவற்றை விருத்தி செய்யுங்கள்.

- ஒரு மாணவன்/மாணவி என்ற வகையில் தமது கடமைகள், பொறுப்புக்கள் தொடர்பான உணர்வு பார்வையாளரிடத்தே ஏற்படக்கூடியவாறாக மேற்படி நடித்துக்காட்டல்களை முன்வைப்பதற்காக மாணவருக்கு உதவி புரியுங்கள். நடித்துக்காட்டல்களை முன்வைத்த பின்னர் மாணவருடன் அவற்றை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடலை நடத்துங்கள். ஒரு மாணவன் என்ற வகையில் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் இலகுவாக உணர்ந்து கொள்ள கூடிய வகையில் கலந்துரையாடலை நடத்துங்கள்.

## செயற்பாடு 3

- நான்காந்தரத்தில் மாணவர் அனுபவித்த சூரிய நமஸ்கார/மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகளை, அவர்களது கடமைகள், பொறுப்புக்கள், உரிமைகள் தொடர்பாக வழிப்படுத்தும் வகையில் இவ்வகுப்பிலும் அறிமுகஞ் செய்யுங்கள்.

- வகுப்பின் தன்மைக்கு அமைய ஒரேயடியாகச் செய்வது கடினமானதாயின் நாளுக்கு நாள் படிமுறைகளை அதிகரித்தவாறு சூரிய நமஸ்காரத்தை அதாவது மனதை ஒருநிலைப்படுத்தலை நிறைவு செய்யுங்கள்.

- கருப்பொருள் நடைமுறைப்படுத்தப்படும் ஒவ்வொரு நாளும் ஆரம்பச் செயற்பாடாக மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள். வீட்டிலும் செய்து பரிச்சயம் பெற இடமளியுங்கள்.

- ஆன்மீக தகைமைக்காக நாளாந்தம் வாழ்க்கையில் பரிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டிய ஒரு செயற்பாடாக சூரிய நமஸ்காரத்தில் அதாவது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட வழிப்படுத்துங்கள்.

## படி 1 உடலைத் தளர்த்துதல்

சௌகரியமாக அமர்ந்துகொள்ளுங்கள். கண்களை மெல்ல மெல்ல மூடிக்கொள்ளுங்கள். கைகால்களை இறுக்கமாகவன்றி தளர்வாக வைத்துக் கொள்ளுங்கள். கால்களில் விரல்கள், கணுக்கால், முழங்கால், இடுப்பு, வயிறு, நெஞ்சு, தோள்கள், கைகள், முழங்கைகள், கைவிரல்களைத் தளர்த்திக் கொள்ளுங்கள். கழுத்து, தலைப் பகுதிகளையும் தளர்வாக வைத்துக் கொள்ளுங்கள். உள் மூச்சு வாங்குங்கள். மூச்சை வெளிப்படுத்துங்கள். (பல தடவை உள்மூச்சு, வெளிமூச்சு விடுங்கள்.)

## படி 2 மனதைத் தளர்த்துதல்

மாணவரை விளித்து, இப்படிக் கூறுங்கள். (தேவையான சந்தர்ப்பங்களில்) உங்களது உடல் இப்போது தளர்வாக உள்ளது. இனி உள்ளத்தையும் தளர்த்திக் கொள்ளுங்கள். சூழலின் ஒலிகளைச் செவிமடுங்கள். தூரத்தே கேட்கும் ஒலிகளைச் செவிமடுங்கள். (பறவைகளின் நாதம்) உங்களுக்குக் கேட்கும் ஒலிகளைச் செவிமடுங்கள். அருகே கேட்கும் ஒலிகளைச் செவிமடுங்கள். உங்களது இதயத்துடிப்பு ஒலி உங்களுக்குக் கேட்கிறதா? அதனைச் செவிமடுங்கள். இப்போது உங்கள் உள்ளம் அமைதியடைந்துள்ளது. இப்போது உள்ளம் தளர்வாக உள்ளது.

## படி 3 மனவுறுதி

மாணவரை விளித்து இதமாக பின்வருமாறு கூறுங்கள். எண்ணிப்பார்க்க இடமளித்து, பின்வருமாறு யோசனையை முன்வையுங்கள்.

எனது உள்ளத்தை அமைதிப்படுத்திக்கொள்ள முடிந்தது. எனது அமைதியான மனதில் நல்ல கருத்துக்களை ஏற்படுத்திக்கொள்ள முடியும். வீட்டுக்காக நான் செய்ய வேண்டிய கடமைகளை நான் கட்டாயம் செய்வேன். பத்து வருட வயதுடைய ஒரு பிள்ளை என்ற வகையில் வகுப்புக்காக, பாடசாலைக்காக நான் ஆற்றவேண்டிய பொறுப்புக்களைக் கட்டாயமாக ஆற்றுவேன். வீட்டிலும், வகுப்பிலும், பாடசாலையிலும் பொறுப்புடன் நடந்துகொள்ள ஆர்வம் காட்டுவேன். எதிர்காலத்தில் எனது நாட்டுக்குப் பயனுடைய ஒருவராக வருவேன்.

## படி 4 பிரார்த்தனை

மாணவரை விளித்து, இப்படிச் சொல்லுங்கள். இவ்வாறு சிந்திக்க இடமளியுங்கள். கடமைகளை நிறைவேற்றுவதற்காக எனது மனதில் தோன்றிய ஆர்வம் எனது நண்பர்களின் மனங்களிலும் தோன்றட்டும்.

சின்னச் சின்னப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக எனது மனதில் தோன்றிய ஆர்வம் எனது நண்பர்களின் மனதிலும் தோன்றட்டும். எனது குடும்பத்தில் உள்ளோரது உள்ளங்களிலும் அவ்வாறே ஆகட்டும்.

கடமைகளை நிறைவு செய்கின்றோரை, பொறுப்புடன் வேலை செய்கின்றோரை, எனது வீட்டிலும் பாடசாலையிலும் சந்திக்கக் கிடைக்கட்டும். எதிர்காலத்தில் நான் செல்லும் இடங்களிளெல்லாம் அப்படியானோரைச் சந்திக்கக் கிடைக்கட்டும்.

படி 5 மலர்வு

மாணவரை விளித்து, இப்படிக் கூறுங்கள். இவ்வாறாக எண்ணத்தைச் செலுத்த இடமளியுங்கள்.

நான் ஒரு சிறு பிள்ளை, என்னால் ஆற்றப்பட வேண்டிய கடமைகளை வீட்டுக்கும், வகுப்புக்கும், பாடசாலைக்கும் செய்யும் ஒரு சிறு பிள்ளையாவேன்.

நான் வீட்டிலும், பாடசாலையிலும் பொறுப்புடன் வேலைகளைச் செய்யும் ஒரு சிறு பிள்ளையாவேன். அத்தோடு நான் ஓர் ஒளிவிளக்காவேன்! எதிர்காலத்தில் எனது நாட்டுக்கும் நான் ஒளிவிளக்காவேன்!

## செயற்பாடு 4

**படி 1**

வகுப்பு மாணவர்களை ஆறுபேர் கொண்ட குழுக்களாகப் பிரியுங்கள். பந்து போன்ற ஆளுக்காள் அனுப்பக்கூடிய ஒரு பொருள் வீதம் ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள். குழு மாணவர்கள் வட்டமாக நிற்பர். ஒருவர் வட்டத்தின் மத்தியில் நிற்பார். மத்தியில் இருக்கும் மாணவன் 'நான் விரும்புவது' எனக்கூறி தாம் விரும்பும் யாதேனுமொன்றை குழுவில் எல்லோருக்கும் கேட்கக்கூடியவாறு கூறி, வட்டத்தில் இருக்கும் ஒரு மாணவனுக்குப் பந்தை அனுப்புவார். அம்மாணவனும் தாம் விரும்புவதைக்கூறி பந்தை மத்தியில் உள்ள மாணவனுக்கு அனுப்புவார். மீண்டும் மத்தியில் உள்ள மாணவன், 'அவர் விரும்புவது...' எனக்கூறி முன்னைய மாணவன் கூறியதை மீண்டும் கூறி அதை உறுதிப்படுத்துவார்.

- இவ்வாறாக ''நான் விரும்புவது...'' ஒரு சுற்று முடிந்த பின்னர், ''நான் விரும்பாதது...'' எனக்கூறி மீண்டுமொரு தடவை முன்னர் போன்றே செயற்பாட்டில் ஈடுபட இடமளியுங்கள்.

**படி 2**

இச்செயற்பாட்டுக்கு முன்னர் மாணவர் தனித்தனியே பின்வருவனவற்றைத்தயார்ப் படுத்திக்கொள்ளல் வேண்டும் என்பதை அறிவியுங்கள்.

காட்டும்போது வகுப்பில் அனைவருக்கும் தெரியக்கூடிய அளவுக்குப் பெரிய மூன்று முகங்களை தடித்த அட்டைகள் மூன்றில் வரைந்து தயாரித்துக் கொள்ள வழிப்படுத்துங்கள்.



மகிழ்ச்சியான முகம்



இயல்பான முகம்



சோகமான முகம்

செயற்பாடு 4, படி 1இன்போது ஒவ்வொருவரும் 'நான் விரும்புபவை', 'நான் விரும்பாதவை' எனக் கூறியவற்றைத் தனித்தனியாக அட்டைகளில் எழுதிக்கொள்ள வழிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு:***

| **நான் விரும்புபவை** | **நான் விரும்பாதவை** |
|---|---|
| விளையாட | |
| நினைவில் வருவதைச் சொல்ல | பட்டப் பெயர் சொல்வது |
| நோய்வாய்ப்படாதிருக்க | கடுமையாய் பேசுவது |
| நான்றாகப் படிக்க | பிழை செய்வது |
| சுவையான பழங்கள் உண்ண | என்னைக் கண்டிப்பது. |

படி 1 இற்போன்று சிறு சிறு குழுக்களாகவே செயற்பட விடுங்கள். அப்போது அவர்கள் 'நான் விரும்புபவை' எனத் தனித்தனியாகத் தயாரித்த அட்டைகளில் இருந்து விருப்பமானவற்றை ஒவ்வொருவராக வாசிக்குமாறு கூறுங்கள். ஒருவர் வாசிக்கும்போது ஏனையோர் செவிமடுத்து, அது;

தாம் விரும்புவதாயின் மகிழ்ச்சியான முகத்தையும்
விரும்பாததாயின் கவலையான முகத்தையும்

விசேட விருப்பமோ, விருப்பமின்மையோ இல்லையெனின், இயல்பான முகத்தையும் உயர்த்திக்காட்டுமாறு வழிக்காட்டுங்கள்.

- ஆரம்பக்கட்டங்களில் இடர்ப்படும் மாணவர்க்கு உதவுங்கள். சிறு குழுக்களில் மாணவர் அனைவரும் கூறிய 'நான் விரும்புபவை' என்பதற்கு உரிய முகங்களைத் தெரிவு செய்ய இடமளியுங்கள்.

**படி 3**

குழுவில் பெரும்பாலானோர் ''மகிழ்ச்சியான முகத்தைக்'' காட்டியவற்றை 'நாம் விரும்புபவை' என்ற தலைப்பின் கீழ்த்தொகுத்து எழுதுமாறு அறிவுறுத்துங்கள். குழுவில் பொரும்பாலானோர் ''சோகமான முகத்தை'' காட்டியவற்றை 'நாம் விரும்பாதவை' என்ற தலைப்பின்கீழ் தொகுத்து அட்டவணையொன்றாக எழுது மாறும் அறிவுறுத்துங்கள்.

குழுக்களின் 'நாம் விரும்புபவை' அட்டைகளை ஏனைய குழுக்களுடன் ஓர் ஒழுங்கு முறையில் பரிமாறிக்கொள்ள இடமளியுங்கள். குழுவுக்கு புதிய அட்டை யொன்று கிடைத்தவுடன் குழுவின் தலைவர் அதனை வாசிக்கவும், ஏனையோர் 'மகிழ்ச்சியான முகம்', 'இயல்பான முகம்', 'சோகமான முகம்' ஆகியவற்றைக் காட்சிப்படுத்தவும் வழிப்படுத்துங்கள். குழுவில் பெரும்பாலானோரின் கருத்து அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றுடன் இணங்குவதாக உள்ளதாயின் அப்படியே விட்டு வையுங்கள். இணங்கவில்லையெனின், அவ்விடயம் தொடர்பாக அவ்வட்டை யில் அக்கூற்றுக்குப் பக்கத்தில் வினா அடையாளமொன்றை இடுங்கள்.

- இவ்வாறாக ஒவ்வொரு குழுவினாலும், 'நாம் விரும்புபவை' அட்டைகள் தொடர்பாகக் கருத்துக்களைக் கேட்ட பின்னர் 'நாம் விரும்பாதவை' அட்டைகள் தொடர்பாகக் கருத்து அறியுமாறும் மாணவரை வழிப்படுத்துங்கள்.

**படி 4**

எல்லாக் குழுக்களுடனும் கலந்துரையாடுங்கள். ஒவ்வொரு குழுவினதும் 'நாம் விரும்புபவை' அட்டைகளின்பால் கவனத்தைத் திருப்புங்கள். அவற்றில் வினா அடையாளம் இடப்படாதவை வகுப்பில் உள்ள நாம் எல்லோரும் விரும்புபவை என்பதை வலியுறுத்துங்கள்.

- வகுப்பில் ஒவ்வொரு பிள்ளையும் அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்பதை வலியுறுத்துங்கள். அவை வகுப்பு மாணவரின் உரிமைகளில் அடங்கும் என்பதை வலியுறுத்துங்கள்.ஒவ்வொரு பிள்ளைக்கும் அவற்றைப்பெற சமமான உரிமை உண்டு என்பதை எடுத்துக்காட்டுங்கள். பிள்ளையின் அதிக நன்மைக்காகவே இவை அனைத்தும் கிடைக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுங்கள். நாம் எவ்வளவு விருப்பமான ஒன்றாக இருந்தபோதிலும், தமக்கும் ஏனையோருக்கும் நன்மை இல்லையெனின், அவற்றைப் பெற எமக்கு உரிமை கிடையாது என்பதையும் எடுத்துக்காட்டுங்கள்.

**படி 5**

குழுவில் எல்லோருடனும் 'நாம் விரும்புபவை' அட்டையை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல் நடத்துங்கள். ஏனைய குழுவினர் வினா அடையாளம் இட்டுள்ள ''நாம் விரும்பாதவை'' எதனையும் எவரும் செய்தால் என்ன நடக்கும் என வினவுங்கள். அப்போது எமது உரிமைகள் மீறப்படும் என்பதை வலியுறுத்துங்கள்.

ஏனைய குழுக்களால் குறிப்பிடப்படும், அவர்கள் விரும்பாத எதனையும் செய்யாதிருப்பது எமது பொறுப்பாகும் என்பதை வலியுறுத்துங்கள்.

ஏனைய குழுக்கள் குறிப்பிட்டுள்ள, அவர்கள் விரும்புபவற்றுள், செய்யக்கூடியவற்றைச் செய்வது எமது பொறுப்பாகும் என்பதையும் எடுத்துக்காட்டுங்கள்.

**படி 6**

கடந்த படிமுறைகளில் போன்று குழுவாக ஒவ்வொருவரதும் கருத்துக்களைத் தெரிவுசெய்து 'நாம் விரும்பாதவை' என அட்டையொன்றில் எழுதுமாறு கூறுங்கள். ஒவ்வொரு கருத்தையும் தெரிவுசெய்யும்போது ''எமக்கு தீங்கு செய்பவற்றையும், எமது எதிர்காலத்துக்குத் தீங்கு செய்பவற்றையும் தெரிவுசெய்வதனால் ஏற்படக் கூடிய விளைவுகள் தொடர்பாக எடுத்துக்கூறுங்கள். ஒவ்வொரு குழுவுக்கும்''நாம் விரும்பாதவை' எழுதப்பட்ட அட்டையை வாசிக்க இடமளியுங்கள். மாணவர்கள் அட்டையில் பட்டியற்படுத்திய மாணவர்களின் இருப்புக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய, கௌரவத்துக்கு தீங்கு விளைவிக்கக்கூடியவை எமக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் எமது எதிர்காலத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை என்பதை எடுத்துக் கூறுங்கள்.

- அவற்றில் இருந்து பாதுகாப்புப் பெறுவது நண்பர்களைப் பாதுகாப்பது ஒவ்வொரு மாணவரதும் பொறுப்பாகும் என்பதை வலியுறுத்துங்கள். அதற்காக,
  - அவ்வாறானவை நிகழக்கூடிய இடங்களிலிருந்து விலகிச் செல்வதற்கும்
  - பிள்ளைகளுக்கு தீங்கு செய்ய முனையும் ஆட்களிடமிருந்து விலகிச் செல்வதற்கும்
  - அவை இடம்பெறப்போகின்றதாயின் உதவி கேட்பதற்கும்
  - நண்பர்கள், நெருக்கமானோர் கூட முன்வைக்கும் பாதகமான யோசனைகளை மறுப்பதற்கும் தைரியம் பெற வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுங்கள்.

- தாம் விரும்பாத, தமக்குத் தீங்காகும் எனத்தோன்றும் எந்தவொன்றையும் ஆசிரியையிடம்/ஆசிரியரிடம் கூறுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள்.

- ஆசிரியர் என்ற வகையில் நீங்கள் எப்போதும் மாணவரைப் பாதுகாக்க ஆயத்தமாக இருக்கீறீர்கள் என்பதைக் குறிப்பிடுங்கள்.

இங்கு துஷ்பிரயோகம் எனும் வார்த்தையை அறிமுகஞ் செய்வது அவசியமற்றது. அவ்வாறான விடயங்களில் இருந்து மாணவர்களைப் பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அந்நன்மனப்பாங்குடன் இச்செயற்பாட்டை நடைமுறைப் படுத்துவது முக்கியமாகும்.

## செயற்பாடு 5

- மாணவர் அனைவரும் பங்குபற்றக்கூடிய, சில குழுக்களாகப் பிரிந்து ஈடுபடக்கூடிய ஏதேனுமொரு திறந்தவெளி விளையாட்டைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள்.

- தெரிவுசெய்துகொண்ட விளையாட்டின் சட்டதிட்டங்கள் பற்றி விளையாட்டைத் தொடங்க முன்னர், தெளிவாகக் கூறுங்கள். அறிந்துகொண்ட சட்டதிட்டங்களைப் பேணி, விளையாட்டில் ஈடுபடுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள்.

- மாணவர்கள் விளையாட்டில் ஈடுபடும் விதத்தை நன்கு அவதானியுங்கள். சட்டதிட்டங் கள் மீறப்படும் சந்தர்ப்பங்களைக் குறித்துக்கொள்ளுங்கள்.

- திறந்த வெளிவிளையாட்டின் பின்னர், விளையாட்டில் ஈடுபட்டுப் பெற்ற அனுபங்களை அடிப்படையாக் கொண்டு கலந்துரையாடலில் ஈடுபடுங்கள். சட்டதிட்டங்கள் மீறப்பட்ட சந்தர்ப்பங்கள் தொடர்பாக உங்களது அவதானிப்புக்களையும் பயன்படுத்தி, சட்ட திட்டங்களைப் பின்பற்றப்பட்ட சந்தர்ப்பங்களைப் பாராட்டுங்கள். சட்டதிட்டங்களைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

- அதனை அடிப்படையாகக்கொண்டு சட்டதிட்டங்களைப் பின்பற்றுவது எமது வகுப்புக்கு எமது பாடசாலைக்கு, எமது நாட்டுக்கு எவ்வளவு முக்கியமானது என எண்ணிப் பார்க்க வழிப்படுத்துங்கள்.

- சமூகத்தின் நல்வாழ்வுக்காக அரசினால் சட்டதிட்டங்கள் விதிக்கப்பட்டுள்ளன என்பதை யும் அவை சமூகத்தினால் நீண்ட காலமாகப் பேணி வரப்பட்டுள்ளன என்பதையும் விளக்குங்கள்.

## செயற்பாடு 6

- சமூகத்தில் நீண்ட காலமாகப் பேணிவரப்படும் ஒழுக்கக்கட்டுப்பாடுகளைத் தொடர்ந்தும் பேணிவருவதற்காக,
    - நாம் செய்ய வேண்டியவை உண்டு.
    - செய்யக்கூடாதவையும் உண்டு.

- சமூகத்தில் நல்வாழ்வுக்குத் துணையாகும் ஒழுங்குவிதிகள் பற்றிய விடயங்களை முன்வைப்பதற்காக, முன்கூட்டியே ஒழுங்கு செய்த ஒரு வளவாளரை வகுப்புக்கு அழையுங்கள். இச்சந்தர்ப்பத்தில் பழக்கவழக்கம் தொடர்பாக எடுத்துக்கூற நெறிப் படுத்துங்கள். பழக்கவழக்கம் சமூக, சமய பண்பாடுகளுக்கேற்ப வேறுபடலாம் என்பதையும் எடுத்துக்கூறுங்கள்.

    ***எடுத்துக்காட்டு:***

    சமூகத்தில் நல்வாழ்வுக்கு ஏதுவாகும் ஒழுங்குவிதிகள் தொடர்பாகப் பரிச்சயமுள்ள சமயப் பிரமுகர் ஒருவர், ஓய்வு பெற்ற முதியவர் ஒருவர் அல்லது அறிவூட்டம் செய்யக்கூடிய முதியவர் ஒருவர்.

- அவ்வாறான வளவாளர் ஒருவருடன் பண்டு தொட்டு இருந்துவருபவையும் எதிர்காலத் துக்காகப் பாதுகாக்க வேண்டியவையுமான ஒழுங்குவிதிகளைப் பற்றியும் பழக்க வழக்கங்கள் பற்றியும் மாணவருடன் கலந்துரையாடத் தூண்டுங்கள். உரையாடலின் போது அவ்வாறான ஒழுங்குவிதிகளை (அனுசரிக்க வேண்டியவை, தவிர்க்க வேண்டியவை - பழக்கவழக்கங்கள்) கரும்பலகையில் பட்டியற்படுத்துங்கள்.

- அப்பட்டியல்களைத் துணையாகக்கொண்டு, அவ்வாறான ஒழுங்குவிதிகளை வலியுறுத்தும் வகையில் சுவரொட்டிகளை ஆக்குமாறு குழுக்களை வழிப்படுத்துங்கள்.

- ஆக்கிய சுவரொட்டிகளைக் காட்சிப்படுத்தி, பெற்றோர் சந்திப்பொன்றின்போது பாராட்டுங்கள்.

## செயற்பாடு 7

- இச்செயற்பாட்டிற்கு முன்னர் சமூகத்தின் நல்வாழ்வுக்குத் துணையாகும் பாடல்களை பண்டைய இலக்கியத்திலிருந்தும் தற்கால இலக்கியத்திலிருந்தும் தெரிவுசெய்து கொள்ளுங்கள். படிப்பினைதரும் பாடல்கள் பதிவுசெய்யப்பட்ட ஒலி நாடாக்கள், இறுவட்டுக்களை இசைத்துக்காட்ட வசதியிருப்பின் இசைத்துகாட்டுங்கள். இல்லையேல் அவற்றை இனிமையான குரலில் பாடிக்காட்டுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  பாரதியார் பாடல்கள் (பாடல் தொகுப்பு)
  அழ வள்ளியப்பா பாடல்கள் (பாடல் தொகுப்புக்கள்)
  கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை பாடல்கள் (மலரும் மாலை)

- அப்பாடல்களைச் செவிமடுக்க மாணவரை வழிப்படுத்துங்கள். அப்பாடல்களைப் பாடுவதற்கு மாணவரை ஆர்வமூட்டுங்கள்.

- செவிமடுத்த, பாடிய பாடலின் இறுதியில், சமூகத்தின் நல்வாழ்க்கைக்காக, நாம் பின்பற்ற வேண்டிய ஒழுங்குவிதிகள், பழக்கவழக்கங்கள். மதிக்கவேண்டிய மனிதப்பெறு மானங்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடி அவற்றை வலியுறுத்துங்கள்.

- சமூகத்தின் நல்வாழ்வுக்குத் துணையாகும் குறு நடனங்களைத்திட்டமிடுமாறு மாண வரை வழிப்படுத்துங்கள். கருப்பொருள் நடைமுறைப்படுத்தப்படும் காலத்துள் அவ்வாறான சில நடனங்களை முன்வைக்க வழிப்படுத்துங்கள்.

## 2.0 எம்மைச் சூழவுள்ள பிராணிகள்



**சூழலில் ஒரு பகுதியாகிய பிராணிகள், சூழலில் காணப்படும் சவால்களை (அறைகூவல்களை) வெற்றி கொண்டு தமது வாழ்க்கையை நடத்திச் செல்லும் விதத்தை ஆராய்ந்து, கற்று அறிவது பிள்ளைகளுக்கு இனிமையான அனுபவமாக அமையும், பிராணிகள் அனுசரிக்கும் பல்வேறு நடத்தைக் கோங்களை அவதானிப்பதற்கும் தொடர்ந்தும் தேடியாய்வதற்கும் இந்த கருப்பொருளில் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. உயிருலகின் பல்வகைமை சூழலின் சீரான இருப்பில் பங்களிப்புச் செய்கின்றது. அதனைப் பயனுடையவாறு கையாள்வதில் மனிதன் வெற்றி கொண்டுள்ளான். இது தொடர்பான அடிப்படை அறிவைப் பெறக்கூடியதாக தேடியாய்தலுக்கு இடைமளிக்கும் வகையில் இந்தக் கருப்பொருளை நடைமுறைப்படுத்துவது முக்கியமானது.**

### தேர்ச்சிகள்

- பிராணிகளினது நடத்தையின் பல்வகைமையைத் தேடியாய்ந்து, சிறப்பான ஆற்றல் களை மதித்து செயற்படுவார்.
- பிராணிகளின் பல்வகைமையின் வியத்தகு தன்மையை இரசித்து முன்வைப்பார்.
- பிராணிகளின் இருப்புக்குத் துணையாகும் நடத்தையைப் பேணி வருவார்.
- பிராணிகளால் எமக்குக்கிடைக்கும் பயன்கள் தொடர்பாகக் கவனம் செலுத்திச் செயற்படுவார்.
- பல்வேறு பொருள்களைப் பயன்படுத்தி பிராணி உலகின் வியத்தகு தன்மையைக் கொண்டு ஆக்கங்கள் செய்வார்.
- பிராணிகளின் நடத்தையைப் போலச்செய்து விளையாட்டுக்களில் களிப்புடன் ஈடுபடுவார்.

### கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

### செயற்பாடு 1

- தாம் விரும்பும் ஏதேனும் ஒரு பிராணி பற்றிய பின்வரும் தகவல்களைத் தேடிப்பெற்று வருமாறு பாடத்தை ஆரம்பிப்பதற்கு சில நாட்களுக்கு முன்னர் மாணவர்களுக்கு கூறுங்கள்.

  பிராணி வாழும் சூழல்
  அப்பிராணி பொதுவாகக் காணப்படும் பிரதேசங்கள்/நாடுகள்
  உடலின் பருமன் - பருமட்டாக அல்லது பெரியது, சிறியது, நடுத்தரமானது என்றவாறாக
  உடலின் நிறம்
  உணவாக உட்கொள்பவை
  அங்குமிங்கும் செல்லும் முறை
  அப்பிராணியால் மனிதருக்குக் கிடைக்கும் நன்மைகள்/ஏற்படும் தீமைகள்
  பிராணியிடமிருந்து பாதுகாப்புப் பெறும் விதம்
  பெருக்கமடையும் முறை

- அப்பிராணியின் பெயரையும், முடியுமாயின் அதன் படமொன்றினையும் கொண்டு வருமாறு மாணவர்களுக்குக் கூறுங்கள்.

- வகுப்பு மாணவரைச் சிறு குழுக்களாகப் பிரியுங்கள். ஒவ்வொரு குழுவின் அங்கத்தவர் களுக்கும் தாம் தகவல் சேகரித்துக் கொண்டு வந்துள்ள பிராணியின் பெயரைக் கூறாது படத்தைக் காட்டாது, தகவல்களை மாத்திரம் குழுவில் முன்வைக்க வழிப் படுத்துங்கள்.

- அத்தகவல்களைக்கொண்டு, குறித்த பிராணி எது என அனுமானிப்பதற்கு குழுவின் ஏனைய அங்கத்தவர்களுக்கு வாய்ப்பளியுங்கள்.


- ஒவ்வொரு குழுவிலும் இனங்காண சிரமப்பட்ட பிராணியின் பெயரை அக்குழுவிற்கு இடுங்கள். எனினும் ஏனைய குழுக்கள் அதனை அறிந்து கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

## செயற்பாடு 2

- மேற்படி குழுக்களுக்கு இடையே பிராணியைச் சரியாக இனங்காண்பதற்கான ஒரு போட்டி நடத்துங்கள். இதற்காக புள்ளி வழங்கும் முறையொன்று முன்வைக்கப் பட்டுள்ளன. (மாணவரின் ஆர்வத்தைப் பேணுவதற்கு அது துணையாகும்.)

- பிராணிகள் தொடர்பாக தகவல்களைத் தேடியறிவதற்காகச் செயற்பாடு - 01 இல் பயன்படுத்திய தகவல் பெறுவதற்கு தரப்பட்ட வழிகாட்டல் கூற்றுக்கள் கொண்ட வினாக்களை பெரிதாக அட்டையில் எழுதி வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.

  ஒரு சந்தர்ப்பத்தில் இரண்டு குழுக்களே போட்டியில் ஈடுபடும்.




  ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொரு தடவை மாத்திரம் விளையாட வாய்ப்புக் கிடைக்கும்.

- ஒவ்வொரு குழுவுக்கும் ஆரம்பத்தில் 10 புள்ளிகள் உரித்தாகும். புள்ளிக்காக யாதேனும் பொருளின் 10 உருப்படிகளை ஒவ்வொரு குழுவுக்கும் வழங்கலாம். (எடுத்துக்காட்டு: அட்டைகள், குளிர்பானப் போத்தல் மூடிகள், தாயக்கட்டைகள், தெறிகள் (பொத்தான்கள்) .... போன்றவை.)

- காட்சிப்படுத்தியுள்ள ஒன்பது கூற்றுக்களையும் வினாக்களாகத்தொகுத்து ஒரு குழு மற்றைய குழுவிடம் வினவியவாறு பிராணி எது என அனுமானிக்க முயற்சி செய்வதே இப்போட்டியின் தன்மையாகும்.
  - வினாக்களை ஒழுங்குமுறைப்படி வினவத்தேவையில்லை.
  - எனினும் வினவும் ஒவ்வொரு வினாவின் பின்னரும் பிராணியின் பெயரைக்கூற முடியாமற் போகுமாயின் வினாக்கேட்கும் குழுவின் ஒரு புள்ளி குறைக்கப்பட்டு அப்புள்ளி மற்றைய குழுவுக்கு வழங்கப்படும்.
  - சரியான விடையைக் கூறுவதற்கு மூன்று (3) முயற்சிகள் - வாய்ப்புக்கள் வழங் கப்படும்.

- இவ்வாறாக எல்லாக் குழுக்களையும் போட்டியில் ஈடுபடுத்துங்கள்.

- விலங்குகளின் பல்வகைமையை விளங்கிக் கொள்ளவும் பிராணிகள் தொடர்பான தகவல்களை ஓரளவுக்குத் தேடியறிவதற்கு வழிப்படுத்துவதே இச்செயற்பாட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும்.

- இச்செயற்பாட்டின் இறுதியில் தகவல்கள் எல்லாவற்றையும் சேகரித்து வகுப்பில் வைத்திருப்பதற்காக ‘பிரணிகளின் உலகம்’ எனும் பெயரில் ஒரு புத்தகத்தைத் தயாரிக்கலாம்.

## செயற்பாடு 3

- முன்னைய செயற்பாடுகளுக்காக மாணவர்கள் கொண்டு வந்த படங்களைப்பயன்படுத்தி பிராணிகளை வகைப்படுத்துவதில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.

- ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு வகைப் பிராணிகளின் படங்களை வழங்குங்கள்.

- வகைப்படுத்துவதற்குரிய நியதிகளைத் தெரிவுசெய்யும் பொறுப்பை மாணவரிடமே ஒப்படையுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - உட்கொள்ளும் உணவுக்கு அமைய
  - அங்குமிங்கும் செல்லும் முறைக்கு அமைய
  - உடலின் இயல்புகளுக்கு அமைய
  - வாழும் இடத்துக்கு அமைய

  என்றவாறாக வெவ்வேறு முறைகளில் பிராணிகளை வகைப்படுத்த முடியும் என்பதை வலியுறுத்துங்கள்.

## செயற்பாடு 4

- பிராணிகளின் விசேட இசைவாக்கங்களும் நடத்தைகளும் அவற்றின் இருப்புக்கு உதவுகின்றமையை எடுத்துக்காட்டுகளைக்காட்டி விளக்குங்கள்.

- காட்டில் வாழும் பிராணிகள் தமது உணவு, வாழிடம், பாதுகாப்பு ஆகியவற்றுக்காக அனுசரிக்கும் விசேடமான முறைகளைக் கலந்துரையாடுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - பிராணிகளின் உடல் நிறம் (கிளி, ஓணான், பாம்புகள்)
  - திறன்கள் - வேகமாக ஓடும் தன்மை (மான்)
  - சிறிய ஒலிகளைக் கேட்கும் தன்மை ((முயல்)

- பிராணிகளின் பல்வேறு ஒலிகளை போலச் செய்வதற்கு வாய்ப்பளியுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  மாடு, ஆடு, அணில், ஆந்தை, குரங்கு, குயில், நாய், பூனை, நரி

- ஒவ்வொரு பிராணியும் குரலைக் கையாளும் முறை, ஒலியை வெளிப்படுத்தும் முறை ஆகியவற்றை எடுத்துக்கூறுங்கள்.

- மேலும் ஒவ்வொரு பிராணியினதும் சிறப்பியல்புகள் பற்றிய அனுபவங்களைக் கலந்துரையாடுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - ஓட்டினுள் புகுந்து பாதுகாப்புப் பெறுதல் (ஆமை, கடலாமை, நத்தை)
  - கூர்மையான கண்கள் (பருந்து/கழுகு)

- பறவைகளுக்கு அவற்றுக்கேயுரிய ஒரு வாழ்க்கைக் கோலம் உள்ளது என்பதை இனங்காணக் கூடியவாறாக மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

- பறவைகள் சிலவற்றின் படங்களை வகுப்பில் முன்வையுங்கள். பறவைகளை ஏனைய பிராணிகளிலிருந்து வேறுபடுத்திக்காட்டும் இயல்புகளைப் - புறப்பண்புகளைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
  - சிறகுகள் இருத்தல் (பெரும்பாலான பறவைகளால் பறக்க முடியும்.)
  - ஒரு சோடிக் கால்கள்
  - உடலை மூடியுள்ள இறக்கைகள்
  - வால் (தோகை)
  - தலையும் நீண்ட கழுத்தும்
  - அலகு (சொண்டு)
  - அலகுக்கு மேலால் மூக்குத் துவாரங்கள் அமைந்திருக்கும் விதம்
  - கண்களின் அமைவு (கண்களைத் திருப்ப முடியாது. எனவே தலையைத் திருப்பிச் சுற்று முற்றும் பார்க்கும்.)
  - தரையிலும், மரங்களின் மீதும் உயரமான இடங்களிலும் நீரிலும் வாழும்
  - உடலில் காணப்படும் வேறு புற இயல்புகள்

- பறவைகளின் வாழ்க்கைக் கோலம் தொடர்பான விளக்கத்தை வழங்குவதற்காக உங்களது பிரதேசத்தில் பெருமளவில் புழங்கும் பறவையொன்றினைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள். அதற்கமைய பின்வரும் சந்தர்ப்பங்களை இயன்ற அளவுக்கு அவதானிக்க வழிப்படுத்துங்கள். பெரும்பாலான சூழல்களில் இவற்றை அவதானிக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. இல்லையேல் கோழிப் பண்ணையொன்றினை அவதானிக்க இடமளியுங்கள். பின்வரும் விடயங்களை அவதானிக்க வழிப்படுத்துங்கள்.
  - தனியாக வாழ்கின்றனவா? கூட்டமாக வாழ்கின்றனவா?
  - கூட்டமாக வாழ்கின்றனவாயின் தலைவனை/தலைவியை இனங்காண முடியுமா?
  - அவ்வாறாக இனங்காண உதவும் இயல்புகள் யாவை?
  - உண்ணும் உணவு வகைகள் எவை?
  - உணவை எவ்வாறு பெறுகிறது?
  - உணவை உண்ணும் முறை எது? (கடித்து விழுங்குதல்/முழுதாக விழுங்குதல்)
  - எவ்வாறு நீர் பருகுகிறது?
  - எந்தெந்தச் சந்தர்ப்பங்களில் ஒலியை எழுப்பும்? எவ்வாறு?
  - அடுத்த சந்ததியை எப்படி உருவாகின்றது? (முட்டையாக/குஞ்சுகளாக)
  - முட்டையிடுவதாயின்;
    - எவ்வாறான இடத்தில் இடுகிறது?
    - முட்டைகளை அடைகாப்பது யார்?
    - இரவை எங்கே கழிக்கிறது?

- இந்தத் தகவல்களைச் சேகரித்து, விடயங்களைக் கலந்துரையாடி, பறவைகளின் வாழ்க்கைக் கோலத்தை விபரிக்கும் சுவரொட்டியொன்றைக் கூட்டாக ஆக்குமாறு வழிப்படுத்துங்கள்.

- உங்களது பாடசாலை அயற் பிரதேசத்தில் பெருமளவில் வாழும் பிராணிகள் சில வற்றின் பெயர்களை கூறுமாறு மாணவரை ஆர்வமூட்டுங்கள். அவ்வொவ்வொரு பிராணியினாலும் சூழலுக்குக் கிடைக்கும் நன்மைகள் பற்றிய ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - காகம் : அழுக்குகளை உண்ணும்.
  - தேனீ : பூக்களின் மகரந்தச் சேர்க்கைக்கு உதவும்.
  - வௌவால் : மரங்களின் வித்துக்களைத் தூர இடங்களுக்கு எடுத்துச்செல்லும்
  - கறையான் : குப்பை கூளங்கள், மரம் போன்றவை உக்குவதற்கு உதவும்.

- இந்த எல்லாப் பிராணிகளும் சூழலில் சமநிலையைப் பேண உதவும் விதத்தைக் கலந்துரையாடுங்கள்.

- இவ்வாறாக மேலும் சில எடுத்துக்காட்டுகளை எடுத்துக்கொள்ளுங்கள். அப்பிராணி களால் சூழலுக்குக் கிடைக்கும் நன்மைகள் பற்றிக் கலந்துரையாடுங்கள். எமக்குப் பாதகமான வையாகத் தோன்றும் செயல்கள் கூட சூழலுக்கு யாதேனும் நன்மை தரும் என்பதை எடுத்துக்காட்டுங்கள். உதாரணமாக காகம் எமக்குத் தொல்லை தருவதாக தோன்றிய போதிலும் அது எமது சூழலில் காணப்படாவிட்டால் அது உண்டு தீர்க்கும் அழுக்குகள் சூழலில் எஞ்சிக்காணப்படும். கறையான் சில வேளை களில் மனிதருக்குப் பயனுடையவற்றை உண்டு தீர்த்துவிட்டாலும் கூட அது இல்லா விட்டால் உக்காது. எஞ்சும் குப்பை கூளங்கள், தடிகள் போன்றவை புவிமீது நிரம்பிக் காணப்படும்.

- குதிரைபோன்று பயணஞ்செய்து காட்டுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளியுங்கள். குதிரைப் பயணம் இடம்பெற்ற புராணக் கதையொன்றினைச் சுருக்கமாகக் கூறுங்கள்.

- முயல் போன்று செல்வதற்கும் மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளியுங்கள். பொருத்தமான பாடல்களுடன் முன்வைப்பது பொருத்தமானது.

  ***எடுத்துக்காட்டு:*** **வெள்ளை முயல்**

துள்ளித் துள்ளி ஓடுதுபார்
வெள்ளை முயல் அம்மா - அதை
மெல்ல ஓடிப் பிடித்திடவே
மிகவும் ஆசை அம்மா.

பஞ்சு போன்ற உடலைத் தடவிப்
பார்க்க ஆசை அம்மா - நான்
கொஞ்சிப் பேசிக்கூடி ஆடிக்
குதிக்க வேண்டும் அம்மா.

பளிங்குக் கண்ணைக் கூர்ந்து நானும்
பார்க்க ஆசை அம்மா - இது
ஒளிந்து கொள்ளைப் புதரை நோக்கி
ஓடப் பார்க்கு தம்மா.

புல்லைத் தினமும் பிடுங்கிப் பிடுங்கிப்
போடு வேனே அம்மா - அது
மெல்ல மெல்லக் கடித்துக் கடித்து
உள்ளே தள்ளும் அம்மா

நெட்டைக் காது இரண்டும் மேலே
நிமிர்ந்து நிற்கு தம்மா - நான்
தொட்டுப் பிடித்தே இழுக்க மாட்டேன்;

சொல்லை நம்பு அம்மா!

## செயற்பாடு 5

- பிராணிகள் போன்று செல்லும் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

- குரங்கு போன்ற நடத்தைகளைக் காட்டுவதற்கும், ஒலியெழுப்புவதற்கும் சந்தர்ப்ப மளியுங்கள்.

***எடுத்துக்காட்டு:*** **பாடல்**

### குரங்கு

குரங்கு நல்ல குரங்கு - இது
குச்ச வெளிக் குரங்கு
மரங்கள் மீது தாவும் - பின்பு
மண்ணின் மீது பாயும்

பல்லைப் பல்லை இளிக்கும் - இது
பாலரைக் கண்டாற் சிரிக்கும்
காசு பணமும் கேட்கும் - நல்ல
காவ டியும் ஆடும்.

குடிக் கரணம் போடும் - பல
குளப் படிகளும் செய்யும்
கையைக் கையை நீட்டும் - நல்ல
கடலை பழமும் தின்னும்
வேடிக்கை பலவும் செய்யும் - பல
வித்தை களும் காட்டும்
குரங்கு நல்ல குரங்கு - இது
குச்ச வெளிக் குரங்கு.

***நன்றி: கவிஞர் த. துரைசிங்கம்***

- திறந்த வெளியான ஓர் இடத்துக்கு மாணவரை அழைத்துச் செல்லுங்கள்.

- ஒரு குழுவில் 5 பேர் அடங்குமாறு மாணவரைக் குழுக்களாப் பிரியுங்கள்.

- படத்திற்காட்டியுள்ளது போன்று மாணவர்களை வரிசைகளில் நிற்கச் செய்யுங்கள். தொடக்கக் கோட்டையும் முடிவுக்கோட்டையும் அடையாளமிட்டுக் கொள்ளுங்கள்.




தொடக்கக்கோடு முடிவுக்கோடு

- சைகை வழங்கியவுடன் முதலாவது மாணவன் கரடி போன்று சென்று திரும்பிவர வேண்டும் எனக் கூறுங்கள். திரும்பி வரும்போது முயல் போன்று பாய்ந்து பாய்ந்து வரும்படி அறிவுறுத்துங்கள். தமது வரிசையில் முன்னே இருப்பவரின் கையில் தட்டிவிட்டு இறுதியில் போய் அமருமாறு அறிவுறுத்துங்கள். வரிசையின் ஏனைய மாணவர்களுக்கு பின்வரும் பிராணிகள் போன்று செல்லுமாறு அறிவுறுத்துங்கள்.
  - யானை போன்று செல்லுதல்
  - கங்காரு போன்று செல்லுதல்
  - புழுணிக்குருவி (குந்துகாலி போன்று) செல்லுதல்
  - வாத்து போன்று செல்லுதல்

- முதலில் பயணஞ் சென்று முடிக்கும் குழுவுக்கு வெற்றியை வழங்குங்கள்.

## செயற்பாடு 6

- பிராணிகள் போன்று பாத்திரமேற்றல், நடத்தைக் கோலங்கள், இருப்பு ஆகியவற்றை எடுத்துக்காட்டும் நடிப்புக்களை முன்வைக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***
  - பிராணிகளின் நடத்தைகளை எடுத்துக்காட்டும் நடனம்
  - பிராணிகள் பற்றிய பாடல்கள்
  - சமயஞ்சார்ந்த கதைகள்/சம்பவங்களை நடித்துக்காட்டல்

  இவற்றின் மூலம் பிராணிகளின் நடத்தைகளை அபிநயித்துக் காட்டுவதே எதிர்பார்க்கப்படுகின்றது. பிராணிகள் தொடர்பான பின்வரும் பாடலைப்பாடி மகிழ்வதற்கு வாய்ப்பு வழங்குங்கள். புத்தளிப்புக் கருவிகளையும் பயன் படுத்தலாம்.

**பிராணிகள்**

புல்லைத் தின்று வளர்ந்திடுவேன்
பாலை உமக்குத் தந்திடுவேன்
நான் யார்? நான் யார்? **பசு**

சொன்னதைச் செல்லும் பறவை நான்
சொண்டால் பழத்தை கலைத்திடுவேன்
நான் யார்? நான் யார்? **கிளி**

பஞ்சுக் காலால் நடந்திடுவேன்
பாலை சுவைத்து உண்டிடுவேன்
நான் யார்? நான் யார்? **பூனை**

வள்வள் என்று குரைத்திடுவேன்
வீட்டை நன்றாய் காத்திடுவேன்
நான் யார்? நான் யார்? **நாய்**

## செயற்பாடு 7

- உங்களது பிரதேசத்தில் பொதுவாகக் காணப்படும் எமது நாட்டுக்கே உரித்தான பிராணிகள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்க வழிப்படுத்துங்கள். (பிறப்பில் இலங்கைக்கே உரித்தான பிராணிகளே எமது நாட்டுக்கே உரிய பிராணிகள் எனப் படுகின்றன.)

  நரைப்புழுணி, செம்முகப் பூங்குயில், இலங்கை நாகணவாய், காட்டுச்செண்பகம், காட்டுக்கோழி, நெருப்புக்கோழி போன்றவைகளும், மரநாய், கருங்குரங்கு, சுண்டெலி போன்ற முலையூட்டிகளும், மரத்தேரை, சிவப்புக்கழுத்துத் தவளை போன்ற ஈரூடகவாழிகளும், கோழிக்கொண்டை, சேல் கொண்டை, அழகிய சொர்க்கம், புள்ளிக்கோட்டி போன்ற மீன்களும், பச்சைப்பாம்பு, நீர்ப்பாம்பு போன்ற பாம்புகளும், கொம்பு ஓணான், ட்ரீ நம்ப், ஸ்ரீலங்கா பர்ட்விங் போற் வண்ணத்துப்பூச்சிகளும் சில எடுத்துக்காட்டுகளாகும்.

- மேற்படி இலங்கை நாட்டுக்கே உரித்தான பிராணிகளிலிருந்து தமது பிரதேசத்தில் காணப்படும் எமது நாட்டுக்கே உரித்தான பிராணிகளை இனங்காண இடமளியுங்கள்.

இவை எமது நாட்டு அருஞ்செல்வங்களாகும் என்பதை மாணவர்களுக்கு விளக்குங்கள். எதிர்காலச் சந்ததியினருக்காக இந்தப் பிராணிகளை நாம் பாதுகாக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுங்கள்.

- இவற்றைப் பாதுகாப்பதற்காக நாம் செய்யக்கூடியவை யாவை என்பது பற்றி கலந்துரையாடுங்கள்.

- இவ்வாறாக ஒவ்வொரு பிராணியும் சூழலின் ஒரு பகுதி என்பதை எடுத்துக்காட்டுங்கள். சூழலைக் காப்பதற்காக சூழலின் பகுதிகளான பிராணிகளையும் காப்பது அவசியம் என்பதை வலியுறுத்துங்கள்.

- இலங்கையில் உள்ள எமது நாட்டுக்கே உரித்தான பிராணிகளின் படங்களைக் கொண்ட முத்திரைகளைச் சேரித்துக் காட்சிப்படுத்துங்கள்.

- தமது நாட்டிற்கே உரித்தான பிராணிகள் குறித்த நாடுகளுக்கு மிகவும் முக்கியமான பிராணிகளாக கருதப்படுகின்றன என்பதை பின்வரும் எடுத்துக்காட்டுகளினூடாக மட்டும் எடுத்துக்காட்டுங்கள். தேசிய ரீதியான அல்லது அதையொத்த குறியீடுகளாக, சின்னமாக தமது நாட்டில் பிராணிகளை குறிப்பிட்டு சின்னமாக பயன்படுத்தும் பின்வரும் சந்தர்ப்பங்களை காட்டுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - பண்டா - சீனாவின் பெல்ஜியம் ஒலிம்பிக் நிகழ்ச்சியின் சின்னம்
  - காட்டுக்கோழி - இலங்கையின் தேசிய சின்னம்
  - கங்காரு - அவுஸ்திரேலியாவின் தேசிய சின்னம்

## செயற்பாடு 8

- பிராணிகள் தொடர்பாக முன்னர் கற்ற விடயங்களைக்கொண்டு, பிராணிகள் மூலம் எமக்குக் கிடைக்கும் பயன்களை அட்டவணைப்படுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

**சூழலுக்குக் கிடைக்கும் நன்மைகள்**

| பிராணிகளின் பெயர் | சூழலுக்குக் கிடைக்கும் நன்மைகள் |
|---|---|
| காகம் | அழுக்கு அகற்றுதல் |
| மண்புழு | மண்ணை வளப்படுத்தல் |
| ஆந்தை | வயல்களில் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை அழித்தல் |

**சமூகத்துக்குக் கிடைக்கும் நன்மைகள்**

| பிராணிகளின் பெயர் | சமூகத்துக்குக் கிடைக்கும் நன்மைகள் |
|---|---|
| நாய் | பாதுகாப்பு வழங்குதல் |
| பூனை | செல்லப்பிராணியாக மனதுக்கு இதமளித்தல் |
| வளர்ப்பு மீன்கள்/ அலங்கார மீன்கள் | சூழலுக்கு அழகூட்டல்,மனதுக்கு இதமளித்தல் |
| பறவைகள் | அவதானிப்பதால் உளத்திருப்தி கிடைத்தல் |

**பொருளாதார நன்மைகள்**

| பிராணிகளின் பெயர் | பொருளாதார நன்மைகள் |
|---|---|
| தேனீ | தேன் தருதல் |
| பசு | பால் தருதல் |
| கோழி | முட்டை, இறைச்சி தருதல் |

## செயற்பாடு 9

- பசுவிலிருந்து எமக்குக் கிடைக்கும் முக்கியமான ஒரு பயனாக பால் பெறுவதை எடுத்துக் காட்டுங்கள்.

- பால் உணவாகக் கொள்ளப்படும் பல்வேறு முறைகள்
  - பசும்பால்
  - மாப்பால்
  - பாற்கட்டி (Cheese), வெண்ணெய் (Butter), யோகட், தயிர்.
  - பால் உற்பத்திகளின் பெயர்ச்சுட்டிகள் மூலம் பெறக்கூடிய தகவல்களைக் கலந்துரையாடுங்கள்.
  - பெயர்ச்சுட்டிகளைச் சேகரியுங்கள்.

- இலங்கையில் பால் உற்பத்தியில் பங்களிப்புச் செய்யும் நிறுவனங்கள் பற்றிய தகவல்களைச் சேரிக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.
  - கால்நடை வளங்கள் அமைச்சு

- இவற்றில் பால் சேகரிக்கும் நடவடிக்கைகளை மேம்படுத்தப்படுகின்றன என்பதை விளக்குங்கள்.

- பசும்பால் பயன்பாடு/நுகர்வு தொடர்பான சந்தை உருவாகியிருப்பதன் முக்கியத்து வத்தை விளக்கி பாலை நுகர வழிப்படுத்துங்கள்.


- பசு வளர்க்கும் ஒருவரை வகுப்புக்கு அழைத்து, கலந்துரையாட சந்தர்ப்பமளி யுங்கள். அல்லது பசுப் பண்ணையொன்றைப் பார்வையிடச் செல்ல வாய்ப்பளியுங்கள். அதற்கேற்ப பின்வரும் தகவல்களைச் சேகரிக்க வழிப்படுத்துங்கள்.
  - பசு பற்றிய தகவல்கள் : உணவு உட்கொள்ளல், பாதுகாப்பு, நோய்கள், பால் கறக்கும்/பெறும் முறைகள் போன்றன.

- சேகரித்துக்கொண்டு வந்த தகவல்களை வகுப்பில் கலந்துரையாடுங்கள்.

## செயற்பாடு 10

- பின்வரும் ஆக்கங்கள் புரிய மாணவரை வழிப்படுத்துங்கள்.
  - பசு வளர்ப்பதை உக்கமளிப்பதற்கான துண்டுப்பிரசுரம்
  - சிறப்பான பாற்பசு வளர்ப்புக்காக இலகுவான ஆலோசனைப் பட்டியலொன்று
  - ‘‘பசு மனிதனின் நண்பன்’’ எனும் கருத்தைத்தரும் ஒரு பாடல்

# 3.0 நிலமும் வானமும்



**நாம் வாழும் பூமி, எம்மைச்சூழவுள்ள வானம் ஆகியன பற்றி ஆராய்வது விந்தைமிக்கது. இதனூடாக ஒருவரின் வாழ்க்கைக்குத் தேவையான பல தேர்ச்சிகளை விருத்தி செய்துகொள்ளலாம். புவி மேற்பரப்பிலுள்ள மண் கழுவிச் செல்லப்படுதல், மண்ணை வளப்படுத்துதல், மழை, காற்று போன்ற இயற்கைத் தோற்றப்பாடுகளை ஆராய்தல், வானில் காணப்படும் பொருள்கள் தொடர் பாகக் கவனஞ்செலுத்தி ஆராய்தல் போன்ற பல விடயங்களை இக்கருப்பொருளி னூடாக அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.**

## தேர்ச்சிகள்

- இலங்கையின் அமைவை வெவ்வேறு விதங்களில் வெளியிடுவார்.
- தரையின் பல்வகைமையூடாக வெளிக்கொணரப்படும் அழகைப் பேணுவதில் பங்களிப்பார்.
- மண்ணின் பல்வகைமையை நுணுகியாய்ந்து மண்ணைப்பாதுகாப்பதில் பங்களிப்பார்.
- வானத்தின் விந்தைமிகு தன்மையைத் தேடியாய்ந்து களிப்பார்.
- காற்றின் தொழிற்பாடு தொடர்பாக நுணுகியாய்ந்து செயற்படுவார்.
- தமது பிரதேசத்தில் மழையின் வேறுபாடு தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார்.
- வெளியைப் பயன்படுத்தி விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- நிலத்தினதும், வானத்தினதும் விந்தைமிகு தன்மையை வெளிக்காட்டும் ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.
- வானம் - பூமி ஆகியவற்றின் மாற்றங்கள் மனித வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்தும் விதம் தொடர்பாகக் கவனஞ்செலுத்திச் செயற்படுவார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

## செயற்பாடு 1

- மாணவர் ஏற்கனவே பெற்றுள்ள அனுபவங்களினூடாக இலங்கையின் அமைவு தொடர்பான தகவல்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

- மாதிரிப்பூகோளமொன்றினை அல்லது உலகப்படமொன்றை வகுப்பில் காட்சிப்படுத்தி, இலங்கையின் அமைவிடத்தை அவதானிக்க இடமளியுங்கள்.

- மாணவர் முன்வைத்த கருத்துக்களையும் மாதிரிப்பூகோளத்தை/உலகப்படத்தை அவதானித்துப்பெற்ற தகவல்களையும் கொண்டு கலந்துரையாடலொன்றை நடத்துங்கள்.

- அதற்கமைய இலங்கையின் அமைவு தொடர்பாக பின்வருமாறு குறிப்பிடலாம் என விளக்குங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - வடக்கே இந்தியாவுக்கும் மேற்கே ஆபிரிக்கா நாடுகளுக்கும், தெற்கே இந்து சமுத்திரத்திற்கும் கிழக்கே மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கும் மத்தியில் அமைந்துள்ளது. (சார்பளவிலான அமைவிடம்)

- இலங்கை இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள ஒரு தீவு
- இந்தியாவுக்குத் தெற்கில் இந்தியாவுக்கு அண்மையிலும் அமைந்துள்ளது.

- உலகப்படத்தை/மாதிரிப்பூகோளத்தை அவதானித்து மேற்படி விவரங்கள் சரியான வையா எனக் கண்டறிவதற்கு வாய்ப்பளியுங்கள்.

- இதற்கு வகுப்பைச் சிறு குழுக்களாகப் பிரித்து குழுவுக்கு ஒன்றாக உலகப்படம், அல்லது மாதிரிப்பூகோளம் ஒன்றை வழங்குங்கள்.

## செயற்பாடு 2

- இலங்கையில் பிரதானமான ஆறுகள், நீர்வீழ்ச்சிகள், மலைகள், சமதரைகள் போன்ற வற்றின் படங்கள் அல்லது புகைப்படங்களை வகுப்பில் காட்சிப்படுத்தி நிலத்தின் சகல இடங்களும் ஒரே தன்மையானவையல்ல என்பதையும் அது பல வகைமை யானது என்பதையும் விளங்கிக்கொள்ள இடமளியுங்கள். இயலுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மாணவரது அனுபவங்களை வெளியிடவும் கலந்துரையாடவும் வாய்ப்பளியுங்கள்.

- இலங்கையின் தரைத்தோற்ற வேறுபாடுகளைக் காட்டும் தேசப்படமொன்றை அவதானிப்பதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பளியுங்கள்.
  தேசப்படத்தில் காட்டப்பட்டுள்ள,
  - மலைப்பிரதேசங்கள்
  - தாழ்நிலப் பிரதேசங்கள்
  - பிரதானமான ஆறுகள், நீர் வீழ்ச்சிகள்

  ஆகியனவற்றை இனங்காண இடமளியுங்கள்.

- அவை குறிக்கப்பட்டுள்ள விதத்தைக் கண்டறிய வழிப்படுத்துங்கள். நிறங்கள் பயன் படுத்தப்பட்டுள்ள விதத்தைக் கொண்டும், அமைவை இனங்காண முடியும் என்பதை காட்டுங்கள். சில ஆறுகளை எடுத்துக்காட்டாகக்கொண்டு அவை ஆரம்பிக்கும்/ ஊற்றெடுக்கும் பிரதேசங்களிலிருந்து தாழ்வான பிரதேசங்களின் ஊடாகப் பாய்ந்து கடலை அடைகின்றமையை இனங்காண இடமளியுங்கள். அந்த ஆறுகள் கடலில் சேரும் இடங்களை இனங்காணவும் சந்தர்ப்பமளியுங்கள்.

- தாம் வாழும் பிரதேசம், மலைப்பிரதேசமா தாழ்நிலப் பிரதேசமா என்றவாறு தரைத் தோற்ற வேறுபாடுகளைப் பற்றி மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

- மாணவரைக் குழுக்களாகப் பிரித்து, அவர்கள் பெற்ற அனுபவங்களுக்கு அமைய பலகையொன்றின் மீது அல்லது வேறு பொருத்தமான ஓர் இடத்தில் களி/கடதாசிக்கூழ் போன்றவற்றைப் பயன்படுத்தி தமது பிரதேசத்தின் தரைத்தோற்ற வேறுபாடுகளைக் காட்டும் மாதிரியுருக்களை அமைக்க வழிப்படுத்துங்கள். சிறிய வீடுகள், நீரோடைகள் போன்றவற்றை உள்ளடக்கி, ஆக்கத்தை அழகுபடுத்துமாறு அறிவுறுத்தல் வழங்குங் கள். குழுவாகச் சேர்ந்து இவ்வாறான சில மாதிரியுருக்களை ஆக்கும் ஒப்படைகளில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.

- எமது நாட்டின் பிரதானமான ஆறுகள், நீர் வீழ்ச்சிகள் பற்றிய பாடல்களைப் பாட இடமளியுங்கள். பாடலுக்கேற்ப ஆடவும் இடமளியுங்கள். புத்தளிப்பு வாத்தியக்கருவி களைப் பயன்படுத்துமாறும் அறிவுறுத்தல் வழங்குங்கள்.

*எடுத்துக்காட்டு:* **களனி நதி**

இந்து சமுத்திர நடுவினிலே
இலங்கும் தீவாம் இலங்கையிது
தந்த செல்வமே களனிநதி
தரணி செழிக்கும் கல்யாணி

கொழும்பு நகரை வாழவைக்கும்
கோடி உயிரைக் காத்து நிற்கும்
செழுமை தந்து கூத்தாடும்
சேர்ந்து மூவினம் மகிழ்ந்தாடும்.

நீர்மின் சக்தி பிறப்பாக்கம்
நதிவடி நிலமதில் பயிராக்கம்
ஊர்வாழ் மக்கள் உளம்மகிழும்
உயிராய்க் கலந்து கலகலக்கும்

எந்தச் சமய மக்களுக்கும்
இங்குற்ற எல்லா உயிர்களுக்கும்
சிந்தை குளிர்விக்கும் களனிநதி
சுகந்தரும் என்றுமே பெரியநதி.

***ச. அருளானந்தம்***
***நன்றி: ஆனந்தமான பாட்டு***

- அத்தோடு வேறு ஆறுகள், நீர்வீழ்ச்சிகள் பற்றிய பாடல்களையும் பாட மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

- தரைத்தோற்ற வேறுபாடுகளைக் காட்டும் பாடல்களை வகுப்பில் பாட மாணவருக்கு இடமளியுங்கள். இயலுமாயின் பாடல்களை ஆக்க வழிப்படுத்துங்கள்.

- பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஆறுகள், அருவிகள், மலைகள், நீர் வீழ்ச்சிகளைத் தேசப்படத்திற் கண்டறிய மாணவரை வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 3

- ஓர் ஆற்றில் மணல் அகழும் இடமொன்றின்பால் மாணவரின் கவனத்தை ஈர்த்து அல்லது அவ்வாறான ஓர் இடத்தின் படத்தைக் காட்டி, பின்வரும் வினாக்களை வினவிக் கலந்துரையாடுங்கள்.
  - ஆற்றுக்கு இந்த மணல் எங்கிருந்து கிடைத்தது?
  - மணல் முழுவதையும் இவ்வாறாக வெளியேற்றினால் ஆற்றில் அடிப்பகுதி எப்படி இருக்கும்?
  - ஆற்றங்கரை எப்படிக் காட்சியளிக்கிறது?பல இடங்களில் ஆற்றங்கரையில் புல், ஏனைய தாவரங்கள் போன்றவை காணப்படுவதில்லை. அதற்கான காரணம் என்ன?

- ஆற்றங்கரைகளிலும், மேட்டு நிலப்பகுதிகளிலும் உள்ள இடங்களில் இருந்து மண் கழுவிச்செல்லப்பட்டு மணல் எஞ்சுவதாலேயே ஆற்றிலும் ஓடையிலும் இவ்வாறாக மணல் சேருகின்றது என்பதை விளக்குங்கள்.

- நீர் வேகமாகப் பாய்ந்தோடுவது மண் கழுவிச்செல்லப்படும் வேகத்தை அதிகரிக்குமா என்பது பற்றி மாணவரிடம் கலந்துரையாடுங்கள்.

- இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக பரிசோதனையொன்றினைத் திட்டமிடுமாறு மாணவர் களுக்கு ஒப்படையை வழங்குங்கள். பின்னர் கலந்துரையாடி பரிசோதனையை நடத்த சந்தர்ப்பமளியுங்கள்.

நிலத்தின் மேற்பரப்பில் ஓடும் நீரின் வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்காக அந்நில மேற்பரப்பில் புல் வளர்த்தல், பொருத்தமான வடிகால் முறைகளைப் பயன்படுத் தல் போன்ற மண்ணைக் காக்கத்தக்க முறைகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

- பாடசாலைத் தோட்டத்தில் அல்லது வீட்டுத்தோட்டமொன்றில் அல்லது பாதையில் பொருத்தமான ஓர் இடத்தைக் கண்டறியுமாறு மாணவரை வழிப்படுத்துங்கள். மண் ணரிப்புக்கு உள்ளாகியுள்ள இடமொன்றினை இனங்கண்டு, அவ்விடத்தில் மண்ணிரிப் பைத் தவிர்ப்பதற்காக எடுக்கத்தக்க வழிவகைகள் எவை? எனத் தேடியறிய வழிப்படுத் துங்கள்.

- மண்ணரிப்புக் காரணமாக ஏற்படத்தக்க பின்வரும் விடயங்கள் தொடர்பாக் கலந்துரை யாடுங்கள். கலந்துரையாடலின்போது வெளிக்கொணரப்படும் விடயங்களை அறிக்கைப் படுத்த வழிப்படுத்துங்கள்.
  - மேல் மண்ணின் வளம் குன்றும். எனவே பயிர்கள் பாதிக்கப்படும்.
  - ஆறுகளின் அடியில் மணல் நிரம்பும். எனவே வெள்ளப்பெருக்கு ஏற்படும்.

- மண் தரங்குறைவதில் (மண்ணரிப்பு ஏற்படுவதில்) செல்வாக்குச் செலுத்தும் காரணிக ளாக மனிதனின் தொழிற்பாடுகள், பிராணிகளின் தொழிற்பாடுகள், ஓடும் நீர், காற்று போன்றவற்றை எடுத்துக் காட்டுங்கள்.

## செயற்பாடு 4

- வளமான மண் உள்ள ஓர் இடத்திலிருந்தும், வளம் குன்றிய மண் உள்ள ஓரிடத் திலிருந்தும் வெவ்வாறாக இரண்டு மண் மாதிரிகளைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள். பின்னர் மாணவரைக் குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் மண் மாதிரிகளின் ஒவ்வொரு பகுதி வீதம் பகிர்ந்தளியுங்கள்.

- பின் அம்மண் மாதிரிகள் இரண்டையும் வெவ்வேறாக ஆராய இடமளியுங்கள்.பின்பு பெற்ற தகவல்களைப் பின்வருவது போன்ற ஓர் அட்டவணையில் பகுப்பாய்வுசெய்து காட்டுமாறு மாணவரை வழிப்படுத்துங்கள். (இச்செயற்பாட்டைச் செய்யும்போது கையுறைகள் (Gloves) அணிதல் போன்ற சுகாதார முற்பாதுகாப்பு வழி வகைகளை அனுசரித்து, வேலையுலகுக்குப் பொருத்தமான பழக்கங்களை விருத்தி செய்துகொள்ள வழிப்படுத்துங்கள்.)

| மண் பெற்றுக்கொண்ட இடம் | வளமான மண்ணின் பண்புகள் | வளமற்ற மண்ணின் பண்புகள் |
|---|---|---|
| | | |

## செயற்பாடு 5


- இரவு வானம் தொடர்பாக தமது அனுபவங்களை வெளியிட மாணவருக்கு இடமளியுங்கள். அன்று இரவு வானத்தை அவதானித்து (குறித்த அளவு நேரத்துக்கு)அங்கு காணப்பட்டவற்றை மறுநாள் வகுப்பில் முன்வைக்க வழிப்படுத்துங்கள். (மழை இல்லாத ஒரு நாளாக இருத்தல் வேண்டும்.) ஆசிரியரது கருத்துக்கள் மூலம் மாணவரது கருத்துக்களை வளப்படுத்துங்கள்.

- வெவ்வேறு நாள்களில் சந்திரன் காட்சியளிக்கும் விதம் பற்றி உரையாடுங்கள். வீட்டில் இருக்கையில், இரவு காலத்தில் சந்திரனை அவதானிக்க மாணவரை வழிப்படுத்துங்கள். அதற்காகப் படத்திற் காட்டப்பட்டுள்ளது போன்ற ஓர் அமைப்பைத் தயாரித்துக்கொள்வதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பளியுங்கள். இதற்கு சூழலிலிருந்து கிடைக்கும் பொருட்களைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.



- திறந்த வெளியான ஓர் இடத்தைத் தெரிவுசெய்து உபகரணத்தைப் பொருத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள். இரவில் வசதியான ஒரு நேரத்தைத் தெரிவுசெய்து, குழாயின் ஊடாக சந்திரன் அமைந்திருக்கும் இடத்தை அவதானித்து வெளியின் எல்லையைத் தீர்மானித்துக்கொள்ள வழிப்படுத்துங்கள்.

- சகல தினங்களிலும் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் இருந்து சந்திரனின் அமைவை (அண்ணளவாக)யும் வடிவினையும் அவதானித்து பின்வரும் விதத்தில் குறித்துக் கொள்வதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.




- சந்திரனின் வடிவை உரிய கட்டத்தில் வரைந்துகொள்ள நெறிப்படுத்துங்கள். இரண்டு மூன்று நாட்களுக்கு ஒரு தடவை குறித்துக்கொள்வது போதுமானது.

- மேற்படி குறித்துக்கொண்ட தகவல்கள் அட்டவணையில் நிறைவு பெற்றதும் மாதத்தின் எஞ்சிய நாட்களை குறித்துக்கொள்வதற்காக மேலும் இன்னொரு வரைபை வரைந்து கொள்ளுங்கள். சகல தினங்களையும் குறித்துக்கொண்ட பின்னர் (இரு அட்டவணை யையும் பூர்த்தி செய்த பின்னர்)

- சேகரித்த தகவல்களைக்கொண்டு ஒரு தினத்தில் கண்காட்சியொன்றினை நடத்துங்கள். அது தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
    - 1ஆம் நாள் தொடக்கம் 15ஆம் நாள் வரையில் சந்திரனின் வடிவத்துக்கு என்ன நடந்துள்ளது?
    - பூரணை நோன்மதி தினம் எது?
    - அதனை அடுத்த சில நாள்களில் சந்திரனின் வடிவத்துக்கு என்ன நடந்திருக்கிறது?
    - சந்திரனின் உட்புற வளைவு எந்தத்திசையை நோக்கியுள்ளது?
    - இரண்டு நாள்களில் ஒரே நேரத்தில் அவதானித்த போதிலும் சந்திரனை வானத்தில் ஒரே இடத்தில் காண முடிவதில்லை. இதற்கான காரணம் என்னவாக இருக்கக் கூடும்?
    - சந்திரனின் உட்புற வளைவு எத்தனையாம் நாளின் பின்னர் எதிர்பக்கமாகத் திரும்பியது?
    - இம்மாற்றம் நிகழுவதற்கு எத்தனை நாட்கள் சென்றன?

**குறிப்பு:** சில நாட்களில் காலை வேளையில் மேற்கு வானத்தில் சந்திரனைக் காணலாம்.

- சந்திரனின் வடிவத்தில் இவ்வாறாக மாற்றம் எவ்வாறு ஏற்படுகின்றது எனக்காட்டு வதற்காக மாதிரியொன்றை ஆக்க வழிப்படுத்துங்கள்.

- சந்திரனை அவதானிப்பதற்காக ஏற்கனவே ஆக்கிய உபகரணத்தை மீண்டும் எடுக்கு மாறு அறிவுறுத்துங்கள். திறந்த வெளியான ஓர் இடத்தில் உபகரணத்தைப் பொருத்தி, சூரியன் மறைந்த பின்னர், முதலாவதாகக் காட்சியளிக்கும் உடுவை (நட்சத்திரத்தை) நோக்கி குழாயைத் திருப்பிவைக்குமாறு அறிவுறுத்துங்கள்.

- ஒரு மணித்தியாலத்தின்/இரண்டு மணித்தியாலங்களின் பின்னர், மீண்டும் முன்னர் பார்த்த அதே உடுவைப் பார்க்குமாறு அறிவுறுத்துங்கள்.

- கண்ட அந்த உடுவை அயலில் உள்ள ஏனைய உடுக்களுடன் ஒப்பிடுமாறு அறிவுறுத்துங்கள். ஒற்றுமை, வேற்றுமைக்களை அறிக்கைப்படுத்துமாறு அறிவுறுத்துங்கள்.

## செயற்பாடு 6

- யூன், யூலை, ஓகஸ்ட் மாதங்களில் தெளிவாக மேற்கு வானில் பின்வரும் உடுக் கோலங்களைக் காணலாம். அவற்றை அவதானிக்க முயற்சிசெய்யுமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.

- உடுக்களிடையே பெரிய உடுக்களையும் சிறிய உடுக்களையும் காணலாம் என்பதை அவதானிப்பு அனுபவங்களினூடாக கலந்துரையாடி வெளிக்கொணருங்கள்.

- ஒரு சில நாட்களுக்கு வீட்டில் இருந்தவாறு உடுக்களை அவதானித்தும் பெற்ற அனுபவங்களை வகுப்பில் முன்வைக்க இடமளியுங்கள். அவை பற்றிக் கலந்துரை யாடுங்கள்.

- மாணவர் இனங்கண்ட சில உடுக்கோலங்களை வரைந்து கொள்ளுமாறு வழிப்படுத்துங்கள். அவற்றுக்கு பெயரிடுமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.
  ***எடுத்துக்காட்டு:*** கார்த்திகை, பெருங்கரடி, வேட்டைக்காரன்

## செயற்பாடு 7

- வானம் பற்றிய பாடல்களைப் பாடியவாறு அசைவுச் செயற்பாடுகளில் ஈடுபடுமாறு மாணவரை வழிப்படுத்துங்கள். குறிப்பாக இரவு வானம் பற்றிக் கூறும் பாடல்களைப் பாடி ஆட வாய்ப்பளியுங்கள்.
  ***எடுத்துக்காட்டு:*** **வானம்**

வானம் என்னும் திரையிலே - நீல
வண்ணம் அடித்தோர் ஆராமோ?
காணும் விழிகள் மகிழவே - அதில்
காட்சி வரைந்தோர் ஆராமோ?

நீல வண்ணத் திரையிலே - தினம்
நின்றழகு செய்திடும்
கோல வண்ண மணிகளை - அதில்
கொண்டு பதித்தோர் யாராமோ?

பட்டுச் சேலை தன்னையே - நன்கு
பளபளக்கும் விதத்திலே
கட்டி விட்டதாராமோ? அந்தக்
கலைஞன் அவன் தானாமோ?

பூமி மேலே அழகாக - அவன்
போட்ட பந்தல் இது தானே!
நாமும் அதன் கீழேயே - சுகமாய்
நாளும் வாழுகின்றோமே!

***கவிஞர் வாகரை வாணன்***
***நன்றி: நீ வா நிலாவே***

- சந்திரன், சூரியன், புவி ஆகியவற்றை பொம்மலாட்டப் பாவைகளைக்கொண்டு அல்லது வேட முகங்கள் (முகமூடிகள்) அணிந்து எடுத்துக்காட்டுமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***
  சந்திரனாக வேடமேற்று மாணவர்களே உரையாடவும்,
  புவியாக வேடமேற்று மாணவர்களே உரையாடவும்
  (சந்திரனுக்கும் புவிக்கும் இடையிலான உரையாடலாகவும் அமையலாம்.)

- சந்திரன், சூரியன், புவி பற்றிய பாடல்களைப் பாடி ஆட இடமளியுங்கள்.

***எடுத்துக்காட்டு:***

**பூமியை அறிதல்**

தோடம் பழம் போலே பூமி
சூரியனைச் சுற்றும் பூமிப்
பாடம் படிப்போம் பூமிப்
படத்தைப் பார்ப்போம் மேவி

நாம் பிறந்தது பூமியிலே
நாம் வளர்ந்தது பூமியிலே
நாம் இருப்பது பூமியிலே
நாம் நடப்பது பூமியிலே

பந்த டிப்பது பூமியிலே
பாடி ஓடுதல் பூமியிலே
மந்தை மேய்ப்பது பூமியிலே
மாடு வளர்ப்பதும் பூமியிலே

நெல் விதைப்பது பூமியிலே
நீர் இறைப்பது பூமியிலே
எல்லாப் பயிரும் பூமியிலே
மாடு வளர்ப்பதும் பூமியிலே

***- சி. அகிலேச சர்மா***
***நன்றி: ஈழத்துச் சிறுவர் பாடல் களஞ்சியம்***

## செயற்பாடு 8

- காற்று பற்றிய மாணவரது அனுபவங்களைக் கேட்டறிந்து உரையாடுங்கள்.
    - வளி எல்லா இடங்களிலும் உள்ளது என்பதையும்
    - அசையும் வளியே காற்று எனக் குறிப்பிடலாம் என்பதையும் விளக்குங்கள்.

- வகுப்பு மாணவரை குழுக்களாகப் பிரியுங்கள். காற்று வீசும் திசையைக் கண்டறியக் கூடியவாறான பின்வருவன போன்ற எளிமையான செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு:***

- வாசனைக்குச்சி (ஊதுபத்தி) ஒன்றினைக் கொளுத்தி புகை செல்லும் விதத்தை அவதானித்தல்
- நன்கு உலர்ந்த இலையொன்றினை (சருகு) பொறுக்கியெடுத்து உள்ளங்கை களுக்கு இடையே வைத்து பொடி செய்து வானில் எறிந்து நிகழுபவற்றை அவதானித்தல்
- பஞ்சு, மெல்லிய மலர் இதழ்கள், சீதேவியார் செங்கழுநீர் வித்துக்கள் போன்ற பெறக்கூடிய இலேசான பொருள்களை வானில் எறிந்து நிகழுபவற்றை அவதானித்தல்
- கடதாசியொன்றினை சிறு சிறு துண்டுகளாகக் கிழித்து அல்லது நறுக்கி அவற்றை வானில் எறிந்து நிகழுவதை அவதானித்தல்
- ரிசூத்தாளொன்றினைக்(Tissue paper) கீலங்களாகக்கத்தரித்து அதனை கதவு நிலைகளில் தொங்கவிட்டு அதனசைவுக்கு அமையக்காற்றை அவதானித்தல்

- மரங்கள், கிளைகள் அசைவும் விதத்தை அவதானித்து அதற்கமைய காற்று வீசும் திசையை விளங்கிக்கொள்ளல்

- மேற்படி செயற்பாடுகள் மூலம் கண்டறிந்த தகவல்களைக் கலந்துரையாடி அறிக்கைப் படுத்துமாறு மாணவரை வலியுறுத்துங்கள். பின்வருவன போன்ற விடயங்களை வலியுறுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - அந்தந்தச் சந்தர்ப்பத்தில் காற்று எந்தெந்தத் திசையில் வீசியது?
  - காற்று ஒரு திசையில் மட்டும்தான் வீசுகிறதா?

- வருடத்தில் வெவ்வேறு காலங்களில் காற்று வீசும் திசை பற்றி மாணவரிடம் வின வுங்கள். காற்று, மழை என்பவை பற்றி பிரதேச ரீதியில் காணப்படும் அபிப்பிராயங் களைச் சேகரிக்குமாறு தூண்டுங்கள். சேகரித்த தகவல்களை வகுப்பில் கலந்துரை யாடுங்கள். அது தொடர்பான பாடல்களை குழுவாகவும், தனியாகவும் பாட வழிப்படுத் துங்கள். அதற்கமைய உடலசைவுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.

- காற்று வீசும்போது அயற்சூழலில் நிகழுபவை மாணவர் அவதானித்துள்ள மாற்றங்கள் பற்றிய தகவல்களைக் கலந்துரையாடுங்கள். காற்று வீசும்போது உண்டாகும் ஒலி யைப்போன்று ஒலி எழுப்புமாறு மாணவர் குழுவொன்றுக்கு அறிவுறுத்துங்கள். காற்று வீசும்போது ஏற்படும் மாற்றங்களைச் செய்து காட்டுமாறு மற்றுமொரு குழுவை வழிப்படுத்துங்கள். காற்றின் வேகம் மாற்றமடைதலுக்கு (அதிகரித்தல்/குறைவடைதல்) அமைய பின்வரும் அசைவு ஆய்வுச் செயற்பாடுகளில் ஈடுபட வழிப்படுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - உயரமான மரங்கள் போன்று ஆடியசையுங்கள்.
  - காற்றுத் திசைகாட்டி போன்று சுழற்றுங்கள்.
  - பூண்டுகள் போன்று வளையுங்கள்.
  - காற்றுத்தட்டை போன்று மெதுவாக சுழலுங்கள்.

## செயற்பாடு 9

- தத்தமது வீடுகளில் நாளாந்தம் வேலைகளுக்காக காற்றுச் சக்தியைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள், பயன்படுத்தும் விதம் ஆகியன தொடர்பாக மாணவரின் அனுபவங் களைக் கலந்துரையாடுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - அடுப்பில் தீ மூட்டும்போது
  - ஈர உடுப்புக்களை காயவைக்கும்போது
  - நெல்லிலிருந்து பதரை நீக்கும்போது

- தொழிநுட்ப முறைகளைக் கையாண்டு காற்றின் சக்தியைப் பயன்படுத்தும் ஆலைகள், பொறிகள் தொடர்பான தகவல்களையும் அவற்றினால் செய்யப்படும் வேலைகள் தொடர்பாகவும் மாணவருடன் உரையாடுங்கள். ஆலைகள், பொறிகளின் படங்களை இதற்காகப் பயன்படுத்தலாம். முடியுமாயின் செயன்முறையில் அனுபவம் பெற வாய்ப்பளியுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - மோட்டார் வாகனங்கள், தளபாடங்களுக்கு நிறமூட்டுவதற்காகப் பயன் படுத்தும் பூச்சு விசிறும் பொறி (Sprayer)
  - தூசு, மாசு போன்றவற்றை நீக்குவதற்காகக் காற்றின் சக்தியைப் பயன் படுத்தும் புது வகை உபகரணங்கள் (Vaccum Cleaner)

- கூந்தலை உலர வைப்பதற்குப் பயன்படுத்தும் உபகரணம் (Hair Dryer)
- உப்பளங்களில் உவர் நீரை, பாத்திகளுக்குச் செலுத்துவதற்காகப் பயன் படுத்தும் காற்றாலை (Wind Mill)
- காற்றின் சக்தியைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யும் ஆலை.
- அறைகளில் வளியைக் குளிரச் செய்வதற்காக மின் விசிறிகளைப் பயன் படுத்தல்

◻ காற்றுச் சக்தியைப் பயன்படுத்தி வெவ்வேறு தொழில்களில் ஈடுபடும் சந்தர்ப்பங்களைக் காட்ட வழிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு:***
- சைக்கிள் டயருக்கு பம்பியினால் காற்று நிரப்புதல்
- மோட்டார் வாகனத்துக்கு / தளபாடமொன்றுக்கு வர்ணப்பூச்சு சிவிறுதல்
- சிகையலங்கரிப்பவர் சிவிறி (Sparayer) யினால் நீர் சிவிறுதல்

◻ இயற்கையான காற்றைப் பயன்படுத்தி முற்காலத்தில் பயணஞ்செய்த முறைகள் தொடர்பான தகவல்களை மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

◻ வானிலை எதிர்வுகூறல்கள் தொடர்பாக மாணவரின் கருத்துக்களை வினவுங்கள். (ஆள்காட்டிக் குருவிகள் பறத்தல்...)

◻ வாயினால் காற்றை ஊதி கோலங்களை உருவாக்க வழிகட்டுங்கள்.(இதற்காக நீர் வர்ணம், வேறு வர்ணம் போன்றதொன்றையும் காற்று ஊதுவதற்காக ஒரு குழாயை யும் பெற்றுக்கொள்ளுங்கள். கடதாசியின் மீது நிறப்பொருட்களை/துளிகளை வைத்து குழாயினால் ஊதி வடிவமைப்புக்களை உருவாக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத் தல் வழங்குங்கள்.)

## செயற்பாடு 10

◻ பின்வரும் பொருள்களைப் கொண்டுவருமாறு முன்கூட்டியே மாணவர்களுக்குக் கூறுங்கள்.

***எடுத்துக்காட்டு:***
- காற்றாடி (பட்டம்) செய்வதற்குத் தேவையான பொருள்கள்.
- ஊதி செய்வதற்குத் தேவையான பொருள்கள்
  பிளாத்திக்குக் குழாய்த்துண்டு / குருத்தோலைக்கீற்று / பப்பாசி இலைக் காம்புக்குழாய் /சிறு மூங்கில் துண்டு (போதிய நீளமுடைய துண்டு), தடித்த பெரிய இரும்பாணி - 01
- கடதாசித் தட்டொன்று (Plate) ஆக்குவதற்காக
  பிளாத்திக்குத் தட்டொன்று, அடைப்பான் - 1, இரும்புக்கூர் - 01

◻ மாணவரைக் குழுக்களாகப் பிரித்து, பின்வரும் ஒவ்வொன்றையும் ஆக்குவதற்கு ஒப்படைகளை வழங்குங்கள். அதற்குத் தேவையான அறிவுறுத்தல்களைக் குழுக்க ளுக்குக் கூறுங்கள்.

**ஒப்படைகள் :** குழு 1 - காற்றாடி (பட்டம்) ஆக்குதல்
குழு 2 - புல்லாங்குழல் ஆக்குதல்
குழு 3 - காற்றுத்தட்டை ஆக்குதல்

### காற்றாடி (பட்டம்) ஆக்குதல்

குழுவினது விருப்பப்படி அல்லது தனித்தனி மாணவரது விருப்பப்படி குழுவாகவே, தனியாகவோ காற்றாடி செய்வதற்கு வழிப்படுத்துங்கள். கடதாசியை மடித்து வெட்டி அழகான கோலங்களை வெட்டி ஒட்டுமாறு வழிப்படுத்துங்கள்.

### புல்லாங்குழல் ஆக்குதல்

புல்லாங்குழல் செய்வதற்குப் பொருத்தமான அளவுடைய பிளாத்திக்குக் குழாய்த் துண்டொன்றைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவியுங்கள். புல்லாங்குழலில் துளைகள் இடப்பட்டுள்ள தூர அளவுப்படி அக்குழாய்த்துண்டில் அடையாளமிட்டுக் கொள்ளுமாறு வழிப்படுத்துங்கள். நன்கு வெப்பமேற்றிய இரும்பு ஆணியை அல்லது இரும்புக்கூரை, அடையாளமிட்ட இடங்களில் வைக்க வழிப்படுத்துங்கள். (பாதுகாப்பான வகையில் செயற்படுமாறு அறிவுறுத்துங்கள்.) துளைகள் இட்டு முடித்த பின்னர் வாயை வைத்து ஊதும் துளைக்கு அருகே உள்ள முனையில் அடைப்பானை பொருத்துமாறு அறிவுறுத்துங்கள். அடைப்பான் பொருத்தப்பட்ட முனையின் ஊடாக காற்று வெளியேறுவதைத் தடுப்பதற்காக மெழுகை உருக்கி ஊற்றி முத்திரையிடுமாறும் அறிவுறுத்துங்கள்.


◘ ஆக்கச் செயற்பாடுகளில் சில நாட்கள் வரை ஈடுபடுவதானால் குழுக்களின் ஒப்படைகளை மாற்றிக்கொடுத்து, சகல மாணவருக்கும் சகல திறன்களையும் பெற்றுக்கொள்ள வகை செய்யலாம். ஆக்கிய புல்லாங்குழலை ஊதி மகிழ்வதற்கும் திருப்தியடைவதற்கும் வாய்ப்பளியுங்கள்.

***எடுத்துக்காட்டு:***

ஒரு குழு பாடும்போது மற்றைய குழு புல்லாங்குழல் இசை வழங்கலாம். இவ்வாறாக குழுக்களை மாற்றுவதால் சகல மாணவர்களும் புல்லாங்குழல் ஊதும் செயலில் ஈடுபட வாய்ப்பளிக்கலாம்.

## செயற்பாடு 11

◘ கடதாசித்தட்டை/கடதாசிக் கிண்ணத்தைப் பயன்படுத்தி காற்றுத்தட்டையை ஆக்குதல்




படத்திற் காட்டியுள்ளவாறு கடதாசித் தட்டில்/ கிண்ணத்தில் இதழ்களை அடையாளமிட்டுக் கொள்ளுங்கள். நீளப்பாடாக மாத்திரம் வெட்டி இதழ்களை வேறாக்கிக் கொள்ளுங்கள். நடுப் பகுதியில் வெட்டி தேவையற்ற பகுதிகளை அகற்றுமாறு அறிவுறுத்துங்கள். மத்தியில் ஒரு துளை இட்டு கடதாசித்தட்டில் தக்கை/அடைப்பான் ஒன்றினை ஒட்டிக்கொள்ள வழிப்படுத்துங்கள். நடுவில் உள்ள துளையின் ஊடாக மெல்லிய ஆணியொன்றினை / கம்பியைப் புகுத்தி தடியொன்றுடன் இணைத்துக்கொள்ளுங்கள்.கம்பிக்கோலைத் தடியுடன் இணைத்து இதழ்களைச்சற்று சாய்வாக வளைத்துக் கொள்ளுங்கள். அதனைக்கையில் பிடித்துக் கொண்டு ஓடுங்கள். வேகமாகச் சுழலுவதைக் கண்டு மகிழுங்கள்.

## காற்றுத்திசைகாட்டி ஆக்குதல்

- வகுப்பறையில் எளிய காற்றுத் திசைகாட்டி ஒன்றை ஆக்கிக்கொள்வதற்காக மாணவரை இருவரிருவராகப் பிரித்து ஓர் ஒப்படையைச் செய்வியுங்கள்.

தேவையான பொருள்கள்:




- குளிர்பான உறிஞ்சு குழாய்கள் - 02 (இதற்காக கிராமப்புறங்களில் கிடைக்கும் புற்குழாய்களையும் பயன்படுத்தலாம்)
- தடித்த கடதாசிக் கீலமொன்று (பயன்படுத்திக் கழித்த பிறிஸ்டல்போட் துண்டு போன்ற)
- தக்கை அடைப்பான் - 1 (படத்தில் காட்டி யுள்ளவாறு அதற்குப் பதிலாகப் பொருத்த மான வேறு தாங்கியொன்றையும் பயன் படுத்தலாம்.)
- குண்டூசி - 1
- சதுரவடிவக் கடதாசி-1(திசைகள் குறிப்பதற்கு)

- கடதாசியில் எட்டுத்திசைகளையும் அடையாளமிடுங்கள். தாங்கியைக் கடதாசியின் சரி மத்தியில் இணையுங்கள். பானக்குழாயொன்றினைப்பெற்று முனையை பிளந்து தடித்த கடதாசியில் வெட்டி இணையுங்கள். ஆக்கிய ஈட்டியின் மத்தியில் குண்டூசியால் துளைத்து பானக்குழாயின் சிறிய பகுதியினால் குண்டூசி மறையும் வகையில் இட்டு தாங்கியில் இணையுங்கள். கையால் சுழற்றி அது சுழலும் விதத்தை அவதானியுங்கள்.

- மாணவர் இருவர் - இருவராகச் சேர்ந்து ஆக்கிய எளிமையான ஆக்கம் காற்றில் தொழிற்படும் விதத்தை அவதானிப்பதற்காக வெளியேகொண்டு செல்லுமாறு அறிவு றுத்துங்கள். காற்றுத்திசைகாட்டி தொழிற்படும் விதத்தைப் பார்த்து மகிழ வாய்ப்பளி யுங்கள். ஆக்கத்தை மதியுங்கள். இடங்களை மாற்றியவாறு ஆக்கத்தைத் தொழிற் படச்செய்து காற்று வீசும் திசை தொடர்பாக மேலும் உரையாடுங்கள்.

- மேற்படி ஆக்கம் தவிர, பெற்ற அனுபவங்களின் ஊடாக சூழலில் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி சற்றுக் கூடுதலான காலம் பயன்படுத்தக்கூடிய சற்றுப் பெரிய காற்றுத்திசைகாட்டியொன்றினை பாடசாலைத் தோட்டத்தில் பொருத்தமான ஓர் இடத்தில் அமைக்குமாறு குழுக்களுக்கு ஒப்படை வழங்குங்கள்.

## செயற்பாடு 12

- வெளியைப் பயன்படுத்தி பந்தை அனுப்பும் விளையாட்டொன்றின் விவரம் இங்கு தரப்பட்டுள்ளது. இந்த விளையாட்டுக்காக திறந்த வெளியான ஓர் இடத்துக்கு மாணவரை அழைத்துச் செல்லுங்கள்.

- வகுப்பு மாணவரை (இரண்டு) குழுக்களாகப் பிரியுங்கள். (ஒரு குழுவில் ஏறத்தாழ 10 பேர் வீதம் அடங்கும் வகையில்) மாணவர் தொகை அதிகமானதாயின் வெவ்வேறு இடங்களில் இவ்வாறான குழுக்களை அமைத்து விளையாட இடமளியுங்கள்.

இந்த விளையாட்டுக்காக அணிகளுக்கு A, B எனப் பெயரிடப்பட்டதாயின், முதலில் பந்தை அனுப்பும் அணி எது என்பதைத் தெரிவுசெய்து கொள்ள வேண்டும். அதற்காக பொருத்தமாக ஒரு முறையைப் பயன்படுத்தலாம்

முதலில் பந்தை அனுப்பும் வாய்ப்பு A அணிக்குக் கிடைத்ததாயின், அந்த அணியின் மாணவர் ஒருவர் பந்தை தலைக்கு மேலாக B அணிக்கு அனுப்புதல் வேண்டும். B அணி அங்கத்தவர் ஒருவர் அதனைத் தரையில் விழ முன்னர் பிடித்தாராயின், பிடித்தவர் A அணிப் பக்கத்துக்குச் செல்ல வேண்டும். எனினும் அவர் A அணியின் அங்கத்தவராகமாட்டார். B குழுவினர் பிடித்த பந்தை A அணிக்கு திருப்பி அனுப்பும் வாய்ப்பு வழங்கப்படும். இவ்வாறாக B அணியினர் பந்தை அனுப்பும்போது A அணியில் உள்ள தமது அங்கத்தவருக்கே பந்தை அனுப்ப முயற்சித்தல் வேண்டும். அச்சந்தர்ப்பத்தில் A அணியினர் பந்தைப் பிடிக்க முயற்சி செய்தல் வேண்டும். அச்சந்தர்ப்பத்தில் A குழுவிற்கு வந்த மாணவன் பந்தைப் பிடித்துக்கொண்டாரானால் அவர் தடையேதுமின்றி தமது அணிக்கு பந்தை அனுப்ப முடியும். (குறிக்கப்பட்டுள்ள எல்லையின் அருகே வந்து பந்தை அனுப்பலாம். அல்லது இலகுவாகப் பிடித்துக் கொள்ளக்கூடிய வகையில் பந்தை அனுப்பலாம். A அணியினர் தடைபோடக் கூடாது.) அப்போது B அணியினர் பந்தைப் பிடித்துக்கொண்டா ராயின் அவருக்கும் A அணிக்குச் செல்ல முடியும். B அணியிலிருந்து அனுப்பும் பந்தை A அணி அங்கத்தவர் ஒருவர் பிடித்தாரானால் அவர் தமது அணியில் இருந்து மற்றைய அணிக்குச் செல்ல வேண்டும். இவ்வாறு அங்கத்தவர்கள் தீர்ந்துபோகும் அணி வெற்றி பெற்ற அணியாகக் கருதப்படும். ஒரு அணி வெற்றிபெறும் வரையில் இவ்வாறாகப் பந்தை அனுப்புதல் வேண்டும். விளையாட்டுக்காக நேர வரையறைகளையும் விதித்துக்கொள்ள வேண்டும். இவ்விளையாட்டின்போது பின்வரும் விடயங்களின்பால் கவனஞ் செலுத்துவது முக்கியமானது.

(i) இரு அணிகளுக்கு விளையாடுவதற்கு போதுமான இடவசதி இருத்தல்

(ii) தமது எல்லையுள் சுயாதீனமாகச் செயற்பட வசதி இருத்தல்

(iii) குறித்த எல்லையினுள்ளேயே பந்தை அனுப்புதல் வேண்டும்.
பந்து எல்லைக்கு வெளியே செல்லுமானால், அடுத்ததாக பந்தை அனுப்பும் வாய்ப்பு மற்றைய குழுவுக்கு வழங்கப்படும்.

(iv) எல்லையினுள் மாத்திரமே விளையாடுதல் வேண்டும். எல்லைக்கு வெளியே சென்று பந்தைப் பிடித்தலோ அனுப்புதலோ ஆகாது.

(v) அணியில் கூட்டுணர்வுடன் செயற்படுதல்




எல்லைக்கோடு எல்லைக்கோடு

# 4.0 நாமும் சந்தையும்



**நல்ல பிரசைகளைக்கொண்ட சமூகத்தில் உயர் தரமானதொரு சந்தையே காணப்படுதல் வேண்டும். அவ்வாறானதோரு சந்தையில் தரமான பண்டங்களும் (பொருட்களும்) சேவைகளும் நீதி, நியாயம் பேணும் முயற்சியாண்மையாளர்களையும் கொண்டிருக்கும். அப்பொருள்களையும் சேவைகளையும் நுகர்வோர் பகுத்தறிவுள்ள வாடிக்கையாளர்களாவர். அவ்வாறான தரமானதொரு சந்தைக்குப் பொருத்தமான எதிர்கால முயற்சியாண்மையாளருக்கும் வாடிக்கையாளர்களுக்கும் அடித்தளமிடுவதற்குத் தேவையான கற்றல் அனுபவங்களை வழங்குவதற்காகவே இந்தக் கருப்பொருள் திட்டமிடப்பட்டுள்ளது.**

## தேர்ச்சிகள்

- பொருளொன்றைக் கொள்வனவு செய்யும்போது தரம், பொருளாதாரம் என்பன குறித்துக் கவனஞ்செலுத்திச் செயற்படுவார்.
- பொருளொன்றை விற்பனை செய்யும்போது கவனமாகச் செயற்படுவார்.
- சேவையொன்றினைப் பெறும் பொழுதும் வழங்கும் பொழுதும் கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்களைக் கருத்திற்கொண்டு செயற்படுவார்.
- அன்றாட வாழ்க்கையில் பாவனைப் பொருள்களையும் சேவைகளையும் வினைத்திறனுடையவாறு பயன்படுத்துவார்.
- அன்றாட வீட்டு வேலைகளின்போது சிக்கனமாகச் செயற்படுவார்.
- வீட்டில் சிக்கனம் பேணுவதற்காக சூழலிலிருந்து பெறத்தக்க பல்வேறு பொருள்களைப் பயன்படுத்திப் பொருத்தமான பாவனைப் பொருள்கள் ஆக்குவார்.
- சந்தை தொடர்பான பல்வேறு ஆடல், பாடல்கள், பாத்திர நடித்தல்களில் ஈடுபட்டு இரசனை பெறுவார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

இந்தக் கருப்பொருளை ஆரம்பிக்க முன்னர் பெற்றோர் சந்திப்பொன்றை நடத்துங்கள். வீட்டுக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக சந்தைக்குப் போகும்போது தமது பிள்ளையையும் கூட்டிச் சென்று சந்தையில் நேரடி அனுபவங்களைப்பெற இடமளிப்பது தொடர்பாகக் கவனஞ் செலுத்துமாறு பெற்றோருக்கு அறிவூட்டம் செய்யுங்கள்.

## செயற்பாடு 1

- சந்தையில் பெற்ற அனுபவங்களைத் துணையாகக்கொண்டு, பொருள்களை வாங்கும் சந்தர்ப்பங்கள், விற்கும் சந்தர்ப்பங்கள், அவ்வாறு வாங்கும், விற்கும் இடங்கள் ஆகியன தொடர்பான விடயங்களை மாணவரிடம் வினவுங்கள்.

- அந்த இடங்களில் தாம் பெற்ற பல்வேறு அனுபவங்களை அடிப்படையாகக்கொண்டு கலந்துரையாடுவற்காக குழுச் செயற்பாடொன்றை நடத்துங்கள்.

- பின்வரும் விடயங்களினூடாக அனுபவங்களைப் பகிர்ந்து பரிமாறியவாறு கலந்துரையாட வழிப்படுத்துங்கள்.
  - விற்பதற்காக பொருள்கள் வைக்கப்பட்டுள்ள ஒழுங்கு
  - பொருளை விற்பதற்காக வியாபாரி எடுக்கும் முயற்சி
  - பணக்கொடுக்கல் - வாங்கல் நிகழும் விதம்
  - அளவை, நிறுவைக்காகப் பயன்படுத்தும் உபகரணங்கள், அளவை, நிறுனங்களின் செம்மை
  - வாங்கிய பொருளின் சுத்தமும் புத்தம்புதிய தன்மையும்
  - கொடுத்த பணத்திற்குப் பெறுமதியான பொருள் கிடைத்தமை

- மாணவரை 4 அல்லது 5 குழுக்களாகப் பிரித்து விடயங்களைச் சேகரிக்க இடமளியுங்கள். குழுச் செயற்பாட்டின் இறுதியில், சந்தை தொடர்பாக ஒவ்வொரு குழுவுக்கும் கருத்துத் தெரிவிக்க இடமளியுங்கள். அக்கருத்துக்களையும் துணையாகக் கொண்டு பண்டமொன்றை வாங்கும்போது அதன் தரம் தொடர்பாகக் கவனஞ் செலுத்துவதும், தமது பொருளாதார நிலைக்குப் பொருத்தமான, தரமான பண்டத்தைத் தெரிவு செய்தலும் அவசியமாகும் என்பதை வலியுறுத்துங்கள்.

## செயற்பாடு 2

- பண்டமொன்றைக் கொள்வனவு செய்யும்போதும், விற்பனை செய்யும்போதும் கவனஞ் செலுத்தவேண்டிய ஓர் அம்சமாகிய அதன் தரம் தொடர்பாகக் கவனத்தை ஈர்ப்பதற்காக பின்வரும் செயற்பாட்டில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.

- மாணவருக்கு முன்கூட்டியே அறிவித்து சவர்க்காரம், ரின்மீன், பற்பசை போன்ற பல்வேறு பொருட்களின் மேலுறைகளைக் கொண்டுவருமாறுகூறி, குறித்த தினத்தில் சேகரித்துக் கொள்ளுங்கள்.

- மாணவரைக் குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு வகையான மேலுறைகளையும் ஒவ்வொரு குழுக்களுக்கும் ஒவ்வொன்றாக ஒதுக்கி வழங்குங்கள். பின்வரும் விடயங்களில் மாணவரின் கவனத்தைச் செலுத்தச் செய்யுங்கள்.
  - காலாவதியாகும் திகதி, உற்பத்தி செய்த திகதி
  - பண்டத்தின் விலை
  - பண்டத்தின் அளவும் அமைப்பும் (நிறை/கனவளவு/நீளம்)
  - பொருத்தமானவாறு பொதிசெய்யப்பட்டுள்ள விதம்
  - அங்கீகரிக்கப்பட்ட தரமான பண்டம் என்பதற்கான ஆதாரம் (தரச்சான்று (SLS/ ISO)வர்த்தகப்பெயர், வியாபாரக் குறியீடு, உற்பத்தியாளரின் பெயரும் முகவரியும்.)
  - போசணைப்பெறுமானம்/அடங்கியுள்ளவை
  - பயன்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள்
  - முறைப்பாடு தெரிவிப்பதற்காகத் தரப்பட்டுள்ள தகவல்கள் (தொலைபேசி, முகவரி)

- பண்டங்களின் தரம் குறித்து, குழுவின் கருத்துக்களை வகுப்பில் வெளியிடுவதற்கு ஒவ்வொரு குழுவுக்கும் வாய்ப்பளியுங்கள். மாணவருக்குச் சுயாதீனமாகக் கருத்துத் தெரிவிக்க இடமளித்து. அவற்றுள் முக்கியமான கருத்துக்களைத் துணையாகக் கொண்டு, பண்டங்களை வாங்கும்போதும் விற்கும்போதும் அப்பொருளின் தரம் தொடர்பாகக் கவனஞ்செலுத்த வேண்டிய விடயங்களை மாணவர் விளங்கிக்கொள்ளக் கூடியவாறு வலியுறுத்துங்கள்.

- SLS என்ற ஆங்கில எழுத்துப் பொறிக்கப்பட்டுள்ள உணவுப்பொருள் நுகர்வதற்குப் பொருத்தமானது என்பதை அறிந்துகொள்வதற்கு வழங்கப்பட்டுள்ள சான்று என்பதை எடுத்துக் கூறுங்கள். உங்கள் பிரதேசத்தில் கடைகளில் காணப்படுகின்ற உணவுப் பொருட்களில் SLS முத்திரை பதிக்கப்பட்டுள்ள பொருட்கள் யாவை என்பதை தேடியறிய நெறிப்படுத்துங்கள். அம்முத்திரை பொறிக்கப்பட்ட உணவுகள். பானங்களின் பெயரப் பட்டியலொன்றினை தயாரிப்பதற்கு மாணவர் குழுக்களுக்கு ஒப்படையுங்கள்.

## செயற்பாடு 3

- சந்தையில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள சில வகைப் பண்டங்களும், பொருள்களும் உரிய தரமற்றவையாக இருக்க வாய்ப்புண்டு. அவ்வகையான பொருள்கள், பண்டங்களைக் கொள்வனவு செய்யும் போது நாம் கவனமாக இருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  தேயிலை, சவர்க்கார வகைகள், வீட்டுப்பாவனைப் பொருள்கள். மின்சார உபகரணங்கள்.

- பொருளொன்றின் தரத்தை வீட்டிலேயே சோதித்துப்பார்ப்பதற்குப் பொருத்தமான ஒரு பரிசோதனை கீழே தரப்பட்டுள்ளது. இப்பரிசோதனையை வகுப்பறையில் செய்து பார்ப்பதற்கு மாணவர்களுக்கு இடமளியுங்கள்.

  **தேவையான பொருள்கள்:**

  - சந்தையில் உள்ள தேயிலை வகைகள் சில
  - நிறமற்ற கண்ணாடிக் குவளைகள் சில
  - குளிர்ந்த நீர்

- கண்ணாடிக் குவளைகளில் அரைவாசிவரை நீர் இடுங்கள். ஒரு நீர்க்குவளையில் ஒரு வகை தேயிலை மாதிரியை ஒவ்வொரு குவளையிலும் சிறிதளவு வீதம் தூவுங்கள்.

- நீர் மேற்பரப்பில் கணப்பொழுதில் கடும் கபில நிறம் தோன்றி, பின்பு அந்நிறம் படிப்படியாக நீரினுள் பரவிச்செல்கிறதா எனக் கவனியுங்கள். செயற்கையாக நிறமூட்டப் பட்ட தேயிலையிலேயே இவ்வாறன நிறம் தோன்றும். தரமான தேயிலை காரணமாக தண்ணீர்த் துரிதமாக கபில நிறமாக மாறுவதில்லை. தரமான தேயிலையை தண்ணீரில் இட்டால் நீரில் இளமஞ்சள் நிறம் மாத்திரமே தோன்றும்.

- சந்தையில் காணப்படும் மேலும் சில பொருட்களைப் பயன்படுத்தி அதன் தரமான தன்மையை சோதிப்பதற்கு இவ்வாறான பொருத்தமான பரிசோதனைகளை மேற்கொள் வதற்கு வாய்ப்பளியுங்கள்.

## செயற்பாடு 4

- மாணவர் பெற்ற அனுபவங்களின்படி பண்டங்களை விற்பனை செய்தல், வாங்குதல் ஆகியவை தொடர்பாகக் கவனஞ்செலுத்தி, பாடசாலையில் ஒரு சந்தையை நடத்து வதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

- கீழ் வகுப்புக்களில் சந்தை நடத்திய அனுபவங்களும் இம்மாணவர்களுக்கு இருக்கக் கூடும். எனினும் இச்செயற்பாட்டின்போது இது வரையில் இக்கருப்பொருளினூடாகப் பெற்ற அனுபவங்களைத் துணையாகக்கொண்டு உயர் தரமுடைய வகையில் பண்டங்கள்/பொருள்களை விற்பனைக்காக வைக்க வழிப்படுத்துங்கள்.

- பண்டத்தின் நிறை, அல்லது அளவு, உற்பத்தித்திகதி, விலை, காலாவதியாகும் திகதி( அண்ணளவாக அனுமானித்து) ஆகியவற்றைக் குறிப்பிடுவது அவசியம் என்பதை விளக்குங்கள்.

- பண்டங்களைக் கொள்வனவு செய்யும்போது தரம் தொடர்பாகக் கவனஞ் செலுத்து மாறும், செலுத்தும் பணத்துக்குப் பொருத்தமான பெறுமதி உண்டா எனக்கவனஞ் செலுத்துமாறும் வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 5

- சந்தையை அவதானித்துப் பெற்ற அனுபவங்கள் தொடர்பாகக் கலந்துரையாட இடமளியுங்கள். 'சந்தை' எனும் தலைப்பில் 'பல ஊடகங்களைப்' பயன்படுத்தி கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமொன்றை ஆக்குமாறு அறிவுறுத்துங்கள். இதற்காக நிறச்சாய வகைகள், நிறக்கடதாசி வகைகள், சூழலில் காணப்படும் தாவரங்களின் பகுதிகள் போன்றவற்றைப் பயன்படுத்துமாறு வழிப்படுத்துங்கள்.

- தமது மனதைக் கவர்ந்த ஒரு சம்பவத்தைக் காட்டுவதற்கான சித்திரக் கதையொன்றை அமைக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள். (காட்சிகளை வேறாக்கிக் கொள்ளல், உரையாடல்களை ஒழுங்குபடுத்தல் போன்றவற்றுக்காக மாணவருக்கு, ஆசிரியரின் உதவி தேவைப்படலாம்.)

- சந்தை அனுபவங்கள் தொடர்பாக உடலசைவுச் செயற்பாடுளில்/விளையாட்டில் ஈடுபடுத்துவதற்கு மாணவரை விளையாட்டு மைதானத்தில் சுயாதீனமான ஓர் இடத் துக்கு அழைத்துச் செல்லுங்கள். பின்வரும் வினாக்களை வினவி முன்வைப்புக்களைச் செய்ய இடமளியுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - ஒரு தோளில் சுமையைத் தாங்கிக்கொண்டு போவது போல் போக யாரால் முடியும்?
  - ஓரளவு பாரமான பெட்டியொன்றைத் தலையில் வைத்துக்கொண்டு போவது போல போக யாரால் முடியும்?
  - அரிசி மூடையொன்றை முதுகில் வைத்துக்கொண்டு போவது போல் போக யாரால் முடியும்?
  - சைக்கிளின் பின்னே பாரமொன்றினை கட்டிவைத்து உழக்கிச் செல்வது போல செல்ல யாரால் முடியும்?
  - இரண்டு கைகளிலும் பாரமான இரண்டு பொதி உறைகளைத் தூக்கிக்கொண்டு போவது போல போக யாரால் முடியும்?

- மாணவருக்கு ஆக்கபூர்வமாக அசைவுகளை முன்வைக்குமாறு ஊக்கமளியுங்கள். தாம் கண்டறிந்த அசைவுகளை மிக ஆக்கபூர்வமாக முன்வைக்கும் சந்தர்ப்பங்களைப் பாராட்டுங்கள்.

- வார இறுதிக்கு முந்தியதோர் தினத்தில் பின்வரும் ஒப்படையை மாணவருக்கு வழங்குங்கள்.

**ஒப்படை**

வார இறுதி நாளொன்றில் வீட்டில் பயன்படுத்தப்படும் பொருள்கள்/உபகரணங்கள், மற்றும் வீட்டில் கிடைக்கும் சேவைகள் தொடர்பாக தேடியறியுங்கள்.

**வீட்டில் பயன்படுத்தும் பொருள்கள் / உபகரணங்கள்:**

- சமையலறையில் பயன்படுத்தப்படும் பொருட்கள், உபகரணங்கள்
- வீட்டை அழகுபடுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் பொருட்கள், உபகரணங்கள்
- வீட்டை சுத்திகரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் பொருட்கள், உபகரணங்கள்

**வீட்டில் கிடைக்கும் சேவைகள்**

- மின்சாரம் கிடைத்தல்
- குடிக்க, குளிக்க, கழுவ நீர் கிடைத்தல்
- தொலைபேசி போன்ற தொடர்பாடல் வசதிகள் கிடைத்தல்

- அப்பொருள்கள், உபகரணங்கள் நிலைமையை அவதானித்து, அறிக்கைப்படுத்திக் கொண்டு வருமாறு அறிவுறுத்துங்கள். வீட்டில் சேகரித்த தகவல்களை வகுப்பிற்குக் கொண்டுவருமாறு வழிப்படுத்துங்கள்.

- மாணவர்களைப் பொருத்தமான குழுக்களாகப் பிரித்து வீட்டில் பயன்படுத்தப்படும் பொருட்கள், உபகரணங்களை வினைத்திறனாகவும் விளைதிறனுடையவாறும் பயன் படுத்துவது தொடர்பாகக் கலந்துரையாட வழிப்படுத்துங்கள்.

| பொருள்/உபகரணம்/ சேவை | தற்போது காணப்படும் நிலை |
|---|---|
| பாறாங்கத்தி | துருப்பிடித்துள்ளது. அலகு கரடாக உள்ளது. கைகளில் படுமானால் காயமேற்பட இடமுண்டு. |
| விளக்குமாறு | ஒரு பக்க ஈரக்குகள் கூடுதலாகத் தேய்ந்துள்ளன. வெளிப்புற சுவரில் சாத்திவைக்கப்பட்டுள்ளது. மழையினால் ஈர்க்குகள் நனைந்துள்ளன. |
| நீர் கொண்டுவரும் குடம் | கொதிக்கவைக்காத நீர் குடிப்பதற்காகப் பயன்படுகின்றது. குடத்தில் இருந்து நீர் சிந்தியுள்ளது போல் தெரிகிறது. |
| மின்சாரம் | அதிக ஒளி தரும் பொதுவான மின்குமிழ் பயன்படுத்தப் பட்டுள்ளது. இரவில் வீட்டில் எல்லா அறைகளிலும் மின்குமிழ்கள் ஒளிர்கின்றன/எரிகின்றன. மின்சாரம் வீண்விரயமாவது தெரிகிறது. |

- தாம் கலந்துரையாடிய விடயங்களைப் பின்வருமாறு ஓர் அட்டவணையில் குறிக்குமாறு ஒவ்வொரு குழுவையும் வழிப்படுத்துங்கள்.

| பொருள்/உபகரணம்/ சேவை | செய்யக்கூடிய மாற்றம் |
|---|---|
| பாறாங்கத்தி | அலகின் மழுங்கியத் தன்மையை நீக்குவதற்காக கூர்மை யாக்கல், துருப்பிடிக்காதவாறும் கூர்மை மழுங்காதவாறும் கைகால்களில் மோதாதவாறும் இறாக்கையில் (ஏந்தனத்தில்) வைத்தல் |
| விளக்குமாறு | ஈர்க்குகள் சமமாகத் தேயும் வகையில் சரியாகக் கூட்டுதல், ஈரக்குகள் நனையாத வகையில் வெளிப்புறச் சுவரில் தொங்கவிடுதல் |
| நீர் கொண்டுவரும் குடம் | குடத்தை வைப்பதற்கென ஓர் இடத்தைத் தயார்ப்படுத்தல் கொதித்தாறிய நீரை குடத்தில் ஊற்றிவைத்தல் நீர் சிந்தாத வகையில் தேவையான அளவுக்கு மாத்திரம் நீரைக் குடத்திலிருந்து குவளையில் ஊற்றிக் கொள்ளல் |
| மின்சாரம் | விரைவில் எரிந்துபோகும் பொதுவான மின்குமிழுக்குப் பதிலாக சி.எவ்.எல் (CFL) மின்குமிழ் வாங்குவதற்காக நாளாந்தம் உண்டியலில் நாணயங்கள் இட்டு பணம் சேமித்தல் இரவில் தேவையான இடங்களில் மாத்திரம் மின்குமிழ்களை ஒளிரச் செய்தல் அவ்விடத்திலிருந்து வெளியேறும் போது மின்குமிழை அணைத்தல் |

- இவ்வாறாக அந்தந்தக் குழுவினர், வினைத்திறனுடைய வகையிலும் விளைதிறனுடைய வகையிலும் பயன்படுத்துவதற்காக எடுக்கக்கூடிய வழிவகைகளை முன்வைக்கும்போது ஆசிரியரது கருத்துக்களையும் சேர்த்து அவ்வாறான படிமுறைகளை விருத்தி செய்வ தற்கு ஊக்கமளியுங்கள்.

- இறுதியில் தத்தமது வீடுகளில் பொருட்களையும் உபகரணங்களையும் சேவைக ளையும், வினைத்திறனுடைய வகையிலும் விளைதிறனுடைய வகையிலும் பயன் படுத்துவதற்காக மேற்கொள்ளக்கூடிய வழிவகைகளை உள்ளடக்கிய அட்டவணை யைத் தயாரிக்குமாறு சகல மாணவர்களையும் வழிப்படுத்துங்கள். பின்னர் அது தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.

- தமது அட்டவணையில் அடங்கியுள்ள வழிவகைகளை வீட்டில் நடைமுறைப்படுத்து வதற்காக மாணவர்களுக்கு பெற்றோர் வழங்கவேண்டிய ஒத்துழைப்புக் குறித்து பெற்றோர் சந்திப்பொன்றின்போது விளக்குங்கள்.

## செயற்பாடு 6

- மேற்படி செயற்பாட்டின் இறுதியில் மாணவரது கருத்துக்களையும் உள்ளடக்கி ஒரு கலந்துரையாடல் நடத்துங்கள்.
  அப்போது பின்வரும் கருத்துக்களை வெளிக்கொணருங்கள்.
  - ஒவ்வொரு சேவைக்காகவும் வளங்கள் பயன்படுத்தப்படும், அச்சேவையை பேணு வதற்குச் செலவு செய்ய வேண்டும். செலவை ஈடுசெய்வதற்காக போதுமான பணத்தொகையைச் செலுத்த வேண்டும்.

- சேவை வழங்குபவர் செலுத்திய தொகைக்குப் போதுமான அளவு சேவையை வழங்குவதும் அவசியமாகும்.
- முக்கியமான சில சேவைகள் எமக்கு இலவசமாகக் கிடைக்கின்றன. (***எடுத்துக்காட்டு:*** கல்வி, சுகாதாரம்...)
- எமக்கு இலவசமாகக் கிடைக்கும் சேவைகளுக்காகவும் (கல்வி, சுகாதாரம்) செலவு உண்டு.
- எமது நாட்டு மக்களே அந்தச் செலவைச் செய்கின்றனர்.
- சில சேவைகளுக்காக நாம் சிறு தொகைகளையே செலுத்த வேண்டியுள்ளது. (***எடுத்துக்காட்டு:*** இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்து வண்டிகளில் பருவ கால அனுமதிச்சீட்டு)
- இலவசமாகவும் குறைந்த விலையிலும் எமக்குக் கிடைக்கும் சேவைகளுக்குரிய செலவை எமது நாட்டு மக்களே செய்கின்றனர்.
- எனவே அவ்வாறான சேவைகளை பேணிக்காத்து நடத்திவருவதும் அவற்றின் மூலம் உச்ச பயன்பெறுவதும் எமது பொறுப்பாகும்.

◙ சேவைகளைப் பெறும்போதும் வழங்கும்போதும் கவனஞ் செலுத்த வேண்டிய விடங்கள் தொடர்பாக, வலியுறுத்துவதற்காக அந்தந்தச் சேவை தொடர்பான ஆட்களுக்கு முன்கூட்டியே அறிவித்து வகுப்புக்கு அழையுங்கள்.

***எடுத்துக்காட்டு:***

| | |
|---|---|
| கல்வி | : அதிபர், பிரதி அதிபர் |
| சுகாதாரம் | : குடும்பச் சுகாதாரத் தாதி/பொதுச் சுகாதாரப் பரிசோதகர் |
| தபால்/அஞ்சல் | : தபால் விநியோகிப்பவர்/தபால் நிலைய அதிபர் |
| போக்குவரத்து | : பேருந்து சாரதி/பேருந்து நடத்துநர் (இ.போ.ச, தனியார்) |
| மின்சாரம் | : இலங்கை மின்சார சபை அதிகாரியொருவர். |

◙ இவ்வாறாக ஒரு சில அதிகாரிகளை / ஆட்களை மாத்திரம் அழையுங்கள். ஏனைய சேவைகள் பற்றிய துண்டுப் பிரசுரங்களை அல்லது தகவல் எழுதிய அட்டைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

***எடுத்துக்காட்டு :*** நீர் விநியோக சேவை, தொலைபேசிச் சேவை

## செயற்பாடு 7

◙ சந்தை தொடர்பான பின்வரும் பாடலைப் பாடி ஆட வாய்ப்பளியுங்கள்.

### சந்தை

சந்தை இது சந்தை இது //
சாமான் வாங்கும் சந்தை //
எந்த நாளும் கூடும் இது //
எங்கள் ஊருச் சந்தை //

காய்கறிகள் வாங்கலாம்
கனிவகைகள் வாங்கலாம்
உடுபுடவை வாங்கலாம்
உணவும் பொருளும் வாங்கலாம்

நண்டும் இறாலும் வாங்கலாம்
நல்ல மீன்கள் வாங்கலாம்
இறைச்சி வகையும் வாங்கலாம்
இனிப்பு வகையும் வாங்கலாம்

அப்பாவோடு நானுமே
அன்பாய்ச் சந்தை செல்லுவேன்
தப்பெதுவும் செய்யாமல்
சுற்றிப் பார்த்துத் திரும்புவேன்

***சிறுவர் பாடல் - 1***
***தேசிய கல்வி நிறுவகம்***

◙ சந்தையில் இடம்பெறும் நீதிநியாயமான, அநீதியான நிகழ்வுகளை உள்ளடக்கிய ஒரு நாடகத்தை (பாத்திரமேற்று) முன்வைப்பதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பளியுங்கள்.

# 5.0 மரஞ்செடிகொடிகள்



**பல்வகையான மரஞ்செடிகொடிகள் எங்கும் பரம்பிக் காணப்படுவதால் எமது நாடு அழகுபெற்றுள்ளது. இந்த மரஞ்செடிகொடிகளுள் பெரும்பாலானவை எமக்கு உணவு தருவதாலும், மருந்தாக அமைவதாலும் எமது வாழ்க்கைக்குத் துணையாகின்றன. விசேட கவனஞ் செலுத்தி பேணிக்காக்க வேண்டிய மரஞ்செடி கொடி களும் உள்ளன. எனவே மரஞ்செடி கொடிகளின் இருப் புக்கும் அவற்றைப் பேணுவதற்கும் பங்களிப்புச் செய்தல் எமது பொறுப்பாகும். அதற்கு அடித்தளமாக அமையத்தக்க பரிச்சயத்தை வழங்கும் நோக்குடனேயே இந்தக் கருப்பொருள் திட்டமிடப்பட்டுள்ளது.**

## தேர்ச்சிகள்

- எமது இருப்புக்கு இன்றியமையாத, உணவுகள், பானங்களைப் பெறுவதற்காக மரஞ்செடிகொடிகளின் காய் கனிகள் மூலம் கிடைக்கும் பயன்களைப் பயன் படுத்துவார்.
- மரஞ்செடிகொடிகளின் காய்கனிகளினது பல் வகைமையை இனங்கண்டு அவற்றின் இருப்புக்காகப் பங்களிப்புச் செய்வார்.
- விசேட கவனஞ் செலுத்த வேண்டிய மரஞ்செடிகொடிகளைக் காப்பதில் பங்களிப்பார்.
- அயற்சூழலில் மரஞ்செடிகொடிகளின் பல்வகைமையை மதித்து அதனைப் பேணு வதில் பங்களிப்பார்.
- மரஞ்செடிகொடிகள் தொடர்பான பயனுடைய ஆக்கங்கள் புரிவார்.
- தாவரங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் வெளிக்கொணரப்படும் வகையிலான ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.
- தாவரங்களின் பல்வகைமை வெளிக்கொணரப்படும் ஆக்கபூர்வமான விளையாட்டு களில் ஈடுபடுவார்.
- மரஞ்செடிகொடிகளுடன் தொடர்புபட்டு உள அமைதி பெறுவதோடு, இரசனையும் பெறுவார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

## செயற்பாடு 1

- தமது பிரதேசத்தில் வளரும் தாவரங்கள் (உணவு, மருந்து வேறு பெறுமதிமிக்க தாவரங்கள்...) தொடர்பான அனுபவங்களை ஏற்கனவே மாணவர்கள் பெற்றுள்ளனர். அந்த அனுபவங்களைத் துணையாகக்கொண்டு ‘‘மரஞ்செடிகொடிகள்’’ எனும் பெயரில் ஒரு கண்காட்சியை நடத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்யுங்கள். கருப்பொருளின் ஆரம்பத்திலேயே அவ்வாறாக திட்டமிட்டுக்கொள்வதும் பின்வரும் விடயங்கள் தொடர் பாகக் கவனஞ் செலுத்துவதும் அவசியமாகும்.
    - கண்காட்சிக்காகத் தாவரங்களைத் தெரிவுசெய்தல்
      ***எடுத்துக்காட்டு:*** உணவுப் பயிர்த்தாவரங்கள், மருந்து மூலிகைகள்... போன்றன.
    - கண்காட்சிப்படுத்தும் தாவரங்களுக்குப் பெயர்ச்சுட்டி இடுதல்.
    - தாவரத்தைப் பொருத்தமான ஒரு பாத்திரத்தில் (சாடியில் அல்லது வேறு பொருத்த மான ஒரு பாத்திரத்தில்) நாட்டி எடுத்து வருதல்

- கொண்டுவரும் தாவரம் மாணவரால் கையாளக்கூடிய அளவுடைய ஒரு தாவரமாக இருத்தல்
- வகுப்புக்குக் கொண்டுவரும் தாவரங்களைப் பொருத்தமான ஒர் இடத்தில் ஒழுங்காக வைத்தல்
- தயார்ப்படுத்தியுள்ள வீட்டுத்தோட்டத்தில் திறந்த வெளியான பொருத்தமான ஓர் இடத்தில் கண்காட்சியை நடத்துதல்
- காய்க்கும் தாவரங்களைக் கொண்டு வருவோருக்கு, முடியுமாயின் அவற்றின் காயொன்றினையும் கொண்டுவருமாறு அறிவுறுத்துதல்
- கண்காட்சி முடிவடைந்த பின்னர் அத்தாவரங்களை பாடசாலைத் தோட்டத்தில் நாட்டுதல்

◻ இவ்வாறாகத் திட்டமிட்டு ‘மரஞ்செடிகொடிகள்’ போன்ற பொருத்தமான ஒரு பெயரில் கண்காட்சியை நடத்துவதற்கான நடவடிக்கைகளைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

◻ தாவரங்களில் இருந்து பயன்பெறுவது எவ்வாறு (காய், பழம், கிழங்கு... என்றவாறாக) என்பதை அனுபவங்களினூடாக குழுவாக கலந்துரையாட வழிப்படுத்துங்கள். சகல அவதானிப்புக்களும் உள்ளடங்கும் வகையில் அறிக்கை தயாரித்து வகுப்பில் முன் வைக்க இடமளியுங்கள். அறிக்கை தயாரிக்கும்போது பல்வகைமையுடையதாகத் தயாரித்து முன்வைப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள்.

◻ மாணவர் இனங்கண்ட தாவரங்களிலிருந்து கிடைக்கும் பயன்கள் பற்றி உரையாடுங்கள்.

***எடுத்துக்காட்டு:***
- உணவாக
- ஔடதபானமாக
- சுவையான பானமாக
- அழகுபடுத்துவதற்காக
- வீட்டலங்காரம்/வீட்டுப்பொருட்களுக்காக

◻ கண்காட்சிப்படுத்திய சில தாவரங்களை, பொருத்தமானவாறு பாடசாலையில் தொடர்ந்தும் பேணி வருமாறு மாணவரை வழிப்படுத்துங்கள். சில தாவரங்களை பாடசாலையில் பயிர்கள் வளர்க்கும் தோட்டத்திலும் பாடசாலையின் மற்றைய வளவிலும் நடலாம்.

## செயற்பாடு 2

◻ மாணவரைக் குழுக்களாகப் பிரியுங்கள். முன்னைய தினத்தில் கொண்டுவந்த காய்களை குழுக்களிடையே பகிர்ந்தளியுங்கள். முதலில் அவற்றின் புறத்தோற்றத்தை மாத்திரம் அவதானிக்க வழிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு:***
- நிறம் யாது?
- காயா? கதிரா? பொத்தியா?
- மேற்பரப்பின் தன்மை எவ்வாறானது?

◻ காய்களை (இருவகையான இனங்கள்) இரண்டாக வெட்டுமாறு வழிப்படுத்துங்கள். (பாதுகாப்பு தொடர்பாக கவனஞ் செலுத்துங்கள்.) வெட்டிய காய்களைப் பின்வருமாறு அவதானிக்க வழிப்படுத்துங்கள்.
- உள்ளே வித்துக்கள் அமைந்துள்ள விதம்
- வித்துக்களின் பருமன், வடிவம், நிறம், எண்ணிக்கை
- உணவாகப் பயன்படுத்தக்கூடிய விதம்

- இந்த அவதானிப்புக்களை அறிக்கைப்படுத்த வழிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு:***

| **உணவாகப் பயன்படுத்தும் காய் வகைகள்** | **உணவாகப் பயன்படுத்தும் வித்து வகைகள்** | **வித்துக்களை நீக்கிய பின் உணவாகப் பயன்படுத்தும் காய்கள்** |
|---|---|---|
| வாழை<br>அன்னாசி<br>கத்தரிக்காய்<br>சிறகவரை<br>பயற்றை<br>பாகல்<br>வெண்டி<br>போஞ்சி | பாசிப்பயறு<br>கவ்பீ<br>நெல்<br>சோளம் | பூசனிக்காய்<br>வெள்ளரிக்காய்<br>மாங்காய்<br>பப்பாசி, புடோல்<br>வட்டுக்கத்தரிக்காய் |

- முதல் கட்டத்தில் இரு வகையான இனங்களைச் சேர்ந்த காய்கள் இடம் பெற்றுள்ளன. என்பதை அவதானியுங்கள். தயாரித்த அறிக்கைளை வகுப்பில் முன்வைக்க இடமளியுங்கள்.

- மரஞ்செடிகொடிகளில் காய்க்கும் காய்களும்,கதிர்களும் எமக்கு ஆரோக்கியமாக இருப்பதற்கும், சுறு சுறுப்பாக இருப்பதற்கும் உதவுகின்றமையை விளங்கிக்கொள்ளக் கூடியவாறு கலந்துரையாடுங்கள்.

- எமக்கு உணவுக்காகவும், எமது நோய்களுக்கான மருந்தாகவும் காய்களும், கதிர் களும் உதவுகின்றமையை வலியுறுத்துங்கள்.

- வகுப்புக்குக் கொண்டுவரப்பட்ட காய்களால் தயாரிக்கப்பட்ட ஓர் உணவை உட்கொள் வதற்கு மாணவருக்கு வாய்ப்பளியுங்கள். இதற்காகப் பெற்றோரின் உதவியைப் பெறுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:*** மாணவரால் தயாரிக்கப்பட்ட ஒரு பழக்கலவை
  பெற்றோரின் உதவியுடன் தயாரிக்கப்பட்ட சக்கரைச் சாதம்/கிச்சடி/ சக்கரைப் பொங்கல்

- முன்னைய இரண்டு தினங்களிலும் பெற்ற அனுபவங்களை அடிப்படையாகக்கொண்டு ஒவ்வொரு சிறிய நூல் வீதம் ஆக்குமாறு குழுக்களுக்கு அறிவுறுத்துங்கள்.

## செயற்பாடு 3

- காய்கள், வித்து வகைகளைக் காட்டும் வேட முகங்களை (முகமூடிகளை) ஆக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.

- ஆக்கிய வேட முகத்தை அணிந்து குறித்த காய், கதிர் அல்லது வித்து பற்றிய விபரங்களை முன்வைப்பதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பளியுங்கள். இதற்காக அறிவுறுத்தல்களை குறித்த தினத்திற்கு முந்திய தினத்தில் வழங்குவது அவசியமாகும்.

  ***எடுத்துக்காட்டு:***
  - நான் எங்கு தோன்றினேன்/பிறந்தேன்? மரத்திலா? செடியிலா? கொடியிலா?
  - பருமன், நிறம் போன்ற புறத்தோற்ற அம்சங்கள்
  - உள்ளே உள்ள வித்துக்களின் அளவு

- அவ்வித்துக்கள் எதற்காகப் பயன்படுகின்றன? உணவுக்காகவா?, புதிய தாவரங் களை உற்பத்தி செய்வதற்காகவா?
- புதிய தாவரங்களை உற்பத்தி செய்வதற்கு மாத்திரம் தான் அவை பயன்படு கின்றனவா?
- பச்சையாக உண்ண முடியுமா?, சமைத்த பின்புதான் உண்ண வேண்டுமா?
- பச்சையாகவும், சமைத்தும் உண்ண முடியுமா? வேறு முறைகளிலும் உண்ண முடியுமா?

***எடுத்துக்காட்டு:*** குரக்கன் - மாவாக்கித் தயாரித்த வெவ்வேறு உணவுகளாக பாசிப்பயறு - உணவாகவும், மாவாக்கித் தயாரித்த பலகாரங் களாகவும்.

## செயற்பாடு 4

- மரஞ்செடிகொடிகளின் இயற்கையான நிறங்களை இனங்காண இடமளித்து அந்த அனுபவங்களைக்கொண்டு வீட்டுத்தோட்டமொன்றினைச் சித்திரமாக வரைய சந்தர்ப்ப மளியுங்கள்.

- பாடசாலைத் தோட்டத்தில் வெவ்வேறு தாவரங்களின் இலைகளை அவதானிப்பதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பளியுங்கள். நன்கு அவதானிக்குமாறு அறிவுறுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - இளம் பருவத்தில் நிறம்
  - முதிர்ந்த பருவத்தில் நிறம்
  - உலரும் போது நிறம்

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் பெரிய டிமை கடதாசி, பஸ்டல் வர்ணம் அல்லது நீர்ச்சாயம் ஆகியவற்றை வழங்குங்கள்.

- கடதாசிக்கூழ் அல்லது களியைப் பயன்படுத்தி உணவாக உட்கொள்ளப்படும் காய் வகைகளை ஆக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள். வீட்டுத்தோட்டச் சித்திரங்கள் நிலைக்குத்தாகக் காட்சியளிக்கும் வகையிலும், அத்தோட்டத்தில் இருந்து பெறக்கூடிய காய் வகைகளின் கடதாசிக்கூழ்/களியினாலான மாதிரியுருக்கள், கிடையாக அமையுமாறும் கண்காட்சியை ஒழுங்குபடுத்துங்கள்.

- கண்காட்சியைப் பார்வையிடுவதற்காக பெற்றோரையும் பாடசாலைச் சமுதாயத்தையும் அழையுங்கள்.

- மாணவர்களது ஆக்கங்களைக் காட்சிப்படுத்திப் பாராட்டுங்கள்.

## செயற்பாடு 5

- பின்வரும் பல்வேறு வித்து வகைகளையும் காய் வகைகளையும் வகுப்புக்குக்கொண்டு வருமாறு மாணவர்களுக்குக் கூறுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - முற்றிய வெண்டிக்காயொன்று, சிறகவரைக்காயொன்று, பயற்றங்காயொன்று
  - நெற்கதிரொன்று, சோளப் பொத்தியொன்று
  - மாம்பழம், நாவல் பழம், பலாக்கொட்டை, மரமுந்திரிகைப்பழம், காசித்தும்பைக் காய், முடக்கொத்தான் காய்
  - எண்ணைய் வித்து, பஞ்சு வித்து, சீதேவியர் செங்கழுநீர் வித்து, துத்திரி மணி, எருக்கலை வித்து, ஆடையொட்டிக் காய், றப்பர் வித்து, குன்றிமணி வித்து, முருங்கை வித்து, பாக்கு (கமுகு) வித்து.

- மாணவரைக் குழுக்களாகப் பிரியுங்கள். மாணவர்கள் வகுப்புக்குக்கொண்டு வந்த காய்கள், வித்துக்களைத் திரட்டி குழுவுக்கு ஒரு தொகுதி வீதம் பகிர்ந்தளியுங்கள். அந்தந்தக் குழுவுக்கு அவ்வித்துக்களை அவதானித்து அவ்வித்துக்கள் / காய்களைக் கொண்டு பின்வருவனவற்றைச் செய்து பார்க்க வழிப்படுத்துங்கள். பின்வரும் வினாக் களை வினவி வழிப்படுத்துங்கள்.
  - நீரில் போட்டால் என்ன நடக்கும்?
  - காற்றில் அகப்பட்டால் என்ன நடக்கும்?
  - உடையிலோ துணித்துண்டொன்றிலோ பட்டால் என்ன நடக்கும்?
  - கதிர்/காய் வெடித்தால் என்ன நடக்கும்?

- இச்செயற்பாட்டைச் செய்வதால் பெறும் அனுபவங்களைத் துணையாகக் கொண்டு, மரஞ்செடி கொடிகள் பரவும் விதம் பற்றி மாணவருடன் கலந்துரையாடுங்கள். தமது இனத்தைத் தொடர்ந்தும் பேணுவதற்காகவே அவை பரம்புகின்றன என்பதை வலியுறுத்துங்கள். அந்தந்த முறையில் பரவுவதற்காக அவற்றின் வித்துக்கள் இசைவடைந்துள்ள விதம், பற்றிய விபரங்களையும் உண்மையான பொருள்களை அல்லது படங்களை உள்ளடக்கி, மரஞ்செடிகொடிகளின் பரம்பல் தொடர்பான சுவர்ப் பத்திரிகையொன்றை ஆக்குமாறு மாணவரைத் தூண்டுங்கள்.

## செயற்பாடு 6

- மாணவரைக் குழுக்களாகப் பிரித்து தத்தம் குழுத் தலைவர்களை நியமித்துக்கொள்ள வாய்ப்பளியுங்கள். ஒருவர் தலைவராகவும் ஏனையோர் அங்கத்தவர்களாகவும் இருக்க வழிப்படுத்துங்கள். குழுவை இவ்வாறு பெயரிடலாம்.
  - பிராணிகளால் அல்லது மனிதரால் பரம்பும் வித்துக்கள்
  - காற்றினால் பரம்பும் வித்துக்கள்
  - கதிர் வெடித்து, வித்துக்கள் சிதறி விழுவதால் பரம்பும் வித்துக்கள்
  - நீரில் மிதந்து சென்று பரம்பும் வித்துக்கள்
  - பிராணிகளின் உடலில் அல்லது மனிதரின் உடைகளில் ஒட்டிப் பரம்பும் வித்துக்கள்.

- ஒவ்வொரு குழுவுக்கும் கைப்பொம்மலாட்டப் பாவைகள், உண்மைப்பொருள்கள் அல்லது தொப்பிகளை ஆக்கி அந்தந்த காய்கள், வித்துக்களை உருவகித்து எடுத்துக்காட்ட இடமளியுங்கள்.

- தலைவருக்குத் தமது குழுவை அறிமுகஞ்செய்ய வாய்ப்பளியுங்கள். அவர்களது தகவல்களை முன்வைக்க உதவி புரியுங்கள்.

*எடுத்துக்காட்டு:* **பிராணிகளால் வித்துக்கள் பரம்பும் குழு**
மா, பப்பாசி, புடோல், கத்தரிக்காய்

**மாம்பழம்**

எனது பெயர் மாம்பழம்
நான் ஒரு பெரிய மரத்தில் காயத்தேன்.
நான் ஒரு நல்ல சுவையான பழம்
எனக்கு பல சகோதரர்கள் உள்ளனர்.
என்னைப் பழுக்கவைத்து உண்ணலாம்.
காயைச் சமைத்தும் உண்ணலாம்.
மனிதர்கள் என்னை விரும்பி உண்பார்கள்.
பறவைகளும் என்னை விரும்பி உண்ணும்.
அவர்கள் எனது உள்ளே இருக்கும் வித்தை நாட்டுவார்கள்.
அதிலிருந்து எனது புதிய மரம் வளரும்.

- இவ்வாறான விளக்கங்கள் மூலம் மரஞ்செடிகொடிகள் பரம்புவது தொடர்பாக அறிந்து கொண்ட விடயங்களை உறுதிப்படுத்துங்கள். இவ்வாறான முன்வைப்புக்களைச் செய்யும்போது வகுப்பில் ஏனைய பிள்ளைகளுக்கு வினாக்கள் கேட்பதற்கு இட மளியுங்கள்.

## செயற்பாடு 7

- சூழலிலிருந்து பெற்ற பல்வேறு வித்துக்கள், காய்கள், கதிர்களைக்கொண்டு பல்வேறு ஆக்கங்கள் புரியுமாறு மாணவரை வழிப்படுத்துங்கள். உணவாகப் பயன்படுத்தும் வித்துக்கள், காய்கள், கதிர்களைத் தவிர்த்து, பணச் செலவின்றி இலகுவாகத் தேடிப் பெறக்கூடிய காய், வித்து, கதிர் வகைகளைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - பனங்காயினால் பிராணி உருவங்கள் செய்தல்
  - வெவ்வேறு வித்துக்களைப் பயன்படுத்தி பூ வகைகளைச் செய்தல்
  - கடல்மாங்காய்க் காய்களால் பிராணிகளின் உருவங்கள் செய்தல்
  - றப்பர் வித்துக்கள், றப்பர் கோதுகள் போன்றவற்றால் பல்வேறு உருவங்கள், வேறு ஆக்கங்கள் செய்தல்

- இந்த ஆக்கங்களைச் செய்துமுடித்த பின்னர் மாணவரது ஆக்கங்களை மதித்துப் பாராட்டி மரஞ்செடிகொடிகள் மீது அன்பு செலுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத் துங்கள்.

## செயற்பாடு 8

- எமக்குத் தாவரங்கள் மூலம் கிடைக்கும் பயன்கள் பற்றி வலியுறுத்தும் பின்வரும் செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.

- பாடசாலைத் தோட்டத்தில் பெரிய மரமொன்றின் கீழ் உள்ள நிழலான ஓர் இடத்தை நோக்கி மாணவரை அழைத்துச் செல்லுங்கள். அவ்வாறு செல்லும்போது கடுமையான சூரிய ஒளி படத்தக்க ஒரு பாதையைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள். வெய்யிலில் சென்று மரநிழலை அடைந்தவுடன் மாணவர்கள் உணரக்கூடிய வேறுபாடுகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

- மரநிழலின் கீழ் உள்ள குளிர்ச்சி பற்றி உரையாடுங்கள். மரங்களின் இலைகள் அசையும் சத்தத்தைச் செவிமடுக்க வழிப்படுத்துங்கள். பாடசாலைத் தோட்டத்தில் அவ்வாறான மரஞ்செடிகொடிகள் உள்ளனவாயின் அவற்றைப் பேணிப்பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள். மரத்தடியில் அமைதியாக, கண்களை மூடிய வாறு இருக்க வழிப்படுத்துங்கள். உள்ளத்தினால் உணரப்படும் சுகத்தை அனுபவிக்க இடமளியுங்கள்.

- மரங்களால் எமக்குக் கிடைக்கும் பயன்கள் பற்றிய கருத்துக்களை வெளியிட (சித்தனைக் கிளர்வு மூலம்) இடமளியுங்கள். மாணவரது மனதில் தோன்றிய கருத்துக் களைப் பட்டியற்படுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - மரஞ்செடிகொடிகள் எமக்கு உணவு பானங்களைத் தருகின்றன.
  - மரஞ்செடிகொடிகள் எமக்கு மூலிகை மருந்துகளைத் தருகின்றன.
  - வீடு கட்டும்போது கூரையிலும் கதவு யன்னல்களிலும் பயன்படுத்தப்படுகின்றது.
  - தளபாடம் செய்யப் பயன்படுகின்றது.

- பிராணிகளின் உணவாகப் பயன்படுகின்றது.
- சூழலுக்கு அழகூட்டுகின்றது.
- எரிபொருளாகப் பயன்படுகின்றது.
- மரஞ்செடிகொடிகள் காரணமாக மனம் நிம்மதியடைகின்றது.

- செயற்பாட்டின் இறுதியில், இவ்வாறான பயன்களை மதித்து பெருந்தொகையானோரின் பயன்பாட்டுக்காக மாணவர்கள் செய்யக்கூடியவை பற்றி வினவுங்கள். அக்கருத்துக்கள் மீது கவனஞ்செலுத்தி வகுப்பில் யாவரும் செய்யக்கூடிய யாதேனுமொன்றை நடை முறைப்படுத்த வழிகாட்டி உதவி புரியுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  மாணவர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஔடத (மூலிகை) தாவரக் கன்றொன்றைக் கொண்டுவந்து பாடசாலைத்தோட்டத்தில் மூலிகைப்பூங்காவொன்றினை அமைத்தல்

## செயற்பாடு 9

- தமது பிறந்த நாளன்று நாட்டிய யாதேனும் ஒரு மரம் உள்ளதாயின் அது பற்றிப் பேசுவதற்கு மாணவருக்கு வாய்ப்பளியுங்கள்.

- பாடசாலைத் தோட்டத்தில் பாடசாலை வரலாற்றுடன் தொடர்புடைய மரங்கள் உள்ளனவாயின் அவற்றை இனங்காண இடமளியுங்கள்.

- அம்மரங்கள், யார் யாரால் எவ்வெப்போது நடப்பட்டவை என்பதைத் தேடியறிய வழிப்படுத்துங்கள்.

- தமது பிரதேசத்தின் மிகப் பண்டைய தாவரம் அல்லது தாவரங்கள் தொடர்பாகத் தேடியறிய, கேட்டறிய வழிப்படுத்துங்கள்.

- தமது வாழ்க்கையுடன், பாடசாலை வரலாற்றுடன், மாகாணத்தின் வரலாற்றுடன் நாட்டின் வரலாற்றுடன் தொடர்புடைய மரங்கள் பற்றி மாணவருடன் கலந்துரை யாடுங்கள். அவற்றைப் பேணிக்காப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள்.

## செயற்பாடு 10

- இச்செயற்பாட்டுக்கு முன்னதாக தமது பிரதேசத்தில் இனங்காணக்கூடிய நமது நாட்டுக்கே உரிய தாவரங்கள் எவை எனக் கண்டறியுமாறு மாணவரை வழிப்படுத் துங்கள்.

- ஒரு நாட்டுக்குரிய தாவரங்கள் எனப்படுபவை அந்நாட்டில் தோன்றிய அந்நாட்டுக்கு உரித்தான மரஞ்செடிகொடிகளாகும்.

  ***எடுத்துக்காட்டு:***

  பச்சைக் கொரக்காய்ப்புளி, எண்ணை, குங்குலிய மரம், வெசாக் ஒக்கிட்டு, பெரும்பிரம்பு, காட்டிலுப்பை, தொம்மாக்கொட்டை, சீண்டுக்கொடி, தொரணை, கஸ்தூரி மஞ்சள், பாக்கிலிப்பால், நிலவேம்பு

  போன்றவை இலங்கையில் காணப்படும் எமது நாட்டுக்குரிய சில தாவரங்களாகும். இலங்கையில் இலங்கைக்கே உரித்தான ஏறத்தாழ 830 தாவர வகைகள் உள்ளன.

- மாணவர் தேடியறிந்த தகவல்களையும் துணையாகக்கொண்டு இவ்வாறான தாவரங் கள் எமது நாட்டின் அரும்பொக்கிசங்களாகையால், எதிர்காலச் சந்ததியினருக்காக அவற்றைப் பேணிப்பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள்.

- தமது பிரதேசத்தில் காணப்படும் எமது நாட்டுக்கு உரித்தான சில தாவரங்களை இனங்காண மாணவரை வழிப்படுத்துங்கள். வசதியுள்ளதாயின் அத்தாவரங்களை அவதானிக்க வாய்ப்பளியுங்கள்.

- வரலாற்று முக்கியத்துவமுடைய தாவரங்களையும் எமது நாட்டுக்குரிய தாவரங்களை யும் பேணிக்காப்பதற்காக நாம் செய்யக்கூடியவை பற்றிக் கலந்துரையாடுங்கள்.

- வரலாற்று முக்கியத்துவமுடைய தாவரங்கள், பண்டைப்பெருமைமிக்க தாவரங்கள் எமது நாட்டுக்குரிய தாவரங்கள் பற்றிய பாடல்களைப் பாடி ஆட, ஆக்கம்புரிய வழிப்படுத்துங்கள்.

- ஆக்கபூர்வமான கதை நாடகங்களை முன்வைக்க வாய்ப்பளியுங்கள்.

***எடுத்துக்காட்டு:***

சில மனிதர்கள் மரங்களைத் தறிப்பதற்காக காட்டினுள் நுழைகின்றனர். தறிக்கும் மரங்கள் ஓலமிட்டு அழுகின்றன. தம்மை அழித்துவிட்டால் நாட்டில் தம்மைப்போற் வேறு மரம் கிடையாது என உரத்துக் கூறுகின்றன. காப்பாற்றுமாறு கதறுகின்றன. எனினும் மனிதர்கள் அதனைப் பொருட்படுத்தவில்லை. மரங்களைத் தறித்து வீழத்துகின்றனர். மரங்களில் கூடுகட்டியிருந்த பறவைகள் மாலையில் திரும்பு கின்றன. அவர்களுடைய வீடுகள் கிடையாது. பறவைகள் கீச்சிட்டபடி அங்கு மிங்கும் பறந்து திரிகின்றன. மரத்தடியை வீடாகக்கொண்டு வாழ்ந்த பிராணிகள் வருகின்றன.

அப்பிராணிகளும் கூச்சலிட்டபடி அலைகின்றன. காட்டுக்கு அருகே கிராமத்தில் வாழும் சிறுவர்களும் வளர்ந்தோரும் இடத்துக்கிடம் கவலையுடன் நிற்கின்றனர். தறித்து வீழ்த்திய மரங்களின் இலைகள் காய்ந்து சருகாகிப்போயுள்ளன. இதற்கிடையே ஒரு குரல் ஒலிக்கிறது.

கம்பீரமான குரலின் மூலம் எமது நாட்டுக்கு உரித்தான தாவரங்கள், பண்டைப் பெருமைமிக்க தாவரங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்படு கின்றது.

- இவ்வாறான ஆக்கபூர்வமாக கதை, நாடகங்களை ஆக்குவதற்கும் அவற்றை முன் வைப்பதற்கும் பின்வரும் பாடலைப் பாடுவதற்கும் மாணவருக்கு வாய்ப்பளியுங்கள்.

## மரங்கள் செடிகள் கொடிகள்

மரங்கள் செடிகள் கொடிகள்
மனிதனுக்கு எத்தனை பயன்கள்!
மரங்களை வளர்ப்பத னாலே
மழைதனைப் பெறவழி யாகும்!

ஆல மரத்தின் அடியில்
அடடா நிழல்தரும் குளிர்ச்சி!
ஆல மரத்தில் கூடு
அதுதான் பறவைக்கு வீடு!

நாம்வெளி விடுகிற மூச்சில்
நச்சுக் காபனீரொட் சைட்டு!
ஆம் அதை இலைகள் ஏற்று
ஒட்சிச னைவெளி யாக்கும்!

மரத்தின் இலை, வேர், மருந்தாய்
மனிதனின் நோய்களைப் போக்கும்!
மரத்திலை வேர்கள் நமக்கு
வாசனைப் பொருளாய் மாறும்!

சுற்றிலும் ஆலையில் புகையால்
தூசு படிந்த காற்று!
சுற்றிவிடும் மாசுக் காற்றைத்
தூய்மைப் படுத்திடும் மரங்கள்!

***நன்றி: பட்டுச்சிறகு***
***கவிஞர் செல்ல கணபதி***

- இப்பாடல்களுக்கேற்ப தாளமிடவும் ஆடவும் மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

**மரம்**

நிலத்தில் காலை ஊன்றி
நிற்கும் அந்த மரந் தான்
பலத்த காற்றைக் கண்டும்
பயமே கொள்வதில்லை

தலையின் மீது பூக்கள்
தங்கை அவளைப் போல
இலைகள் நீள மாகும்
எங்கள் கைகள் போல

சின்னச் சின்ன மொட்டு
செவியில் தோடு போல
பென்னம் பெரிய காய்கள்
பிடுங்கித் தின்னலாமே

வட்ட மான பழங்கள்
வாயை ஊறச் செய்யும்
எட்டிப் பிடுங்க லாமோ?
ஏற வேண்டும் தம்பி

மழை பொழியச் செய்யும்
மரம் வளர்க்க வேண்டும்
நிழல் மரங்களாலே
நிலம் குளிர்ந்து போகும்.

***- வாகரை வாணன்***
***நன்றி: ஈழத்துச் சிறுவர் பாடல் களஞ்சியம்***

- மரஞ்செடிகொடிகள் பற்றிக்கூறும் இவ்வாறான மேலும் சில பாடல்களைப் பாடி ஆட இடமளியுங்கள்.

**தோட்டம்**

வீட்டிலே நாம் போட்ட தோட்டத்திலே
வெண்டி பூத்துக் காய்த்தது
தக்காளி காய்த்துப் பழுத்தது
வெள்ளரி பழுத்து வெடித்தது

மாட்டின் சாணம் எருவாயிட்டு
மாமா தண்ணீர் ஊற்றினார்
மாமா களையைப் பிடுங்கினார்
மாமா மண்ணைக் கிளறினார்

நாட்டில் எல்லோரும் தோட்டம் போட்டால்
நலிக்கும் வறுமை ஓடுமே
நமது சோம்பல் தீருமே
நல்ல உணவு கிடைக்குமே

***- ஈழத்துப் பூராடனார்***
***நன்றி: ஈழத்துச் சிறுவர் பாடல் களஞ்சியம்***

## செயற்பாடு 11

- பாடசாலைத் தோட்டத்திலோ அயற் சூழலிலோ தாவரங்களின் பல்வகைமையைக் கண்டறிய வழிப்படுத்துங்கள்.
  அச்சூழலில் காணப்படும் மரஞ்செடிகொடிகளின் தன்மை
  அவை அச்சூழலுக்கு இசைவடைந்துள்ள விதம்
  பழங்களின்/காய்களின் தன்மை; பூக்களின் தன்மை
  அந்தச் சூழலில் அதிக அளவில் காணப்படுகின்ற பிராணிகள்

- இவ்வாறான ஒரு வினாக்கொத்துக்கு அமைவாக அவதானிக்க இடமளியுங்கள். முக்கியமானவற்றைக் குறித்துக்கொள்ள வழிப்படுத்துங்கள்.

- பாதுகாப்பு தொடர்பாக விசேட அறிவுறுத்தல் வழங்குங்கள். மாணவர்களுக்குப் போதுமான அளவு நேரத்தைச் செலவிட இடமளியுங்கள். வகுப்புக்கு கொண்டுவந்த தகவல்களைக்கொண்டு அறிக்கை தயாரித்து வகுப்பில் முன்வைத்துக் கலந்துரையாட இடமளியுங்கள். அவதானித்த விடயங்களில் கவனஞ்செலுத்தி அவற்றினூடாக கலந்துரையாடலை நடத்துங்கள்.

- அந்தந்தச் சூழலில் தாம் கண்ட அழகை வெளிப்படுத்தும் பாடல்கள், கட்டுரைகள், சித்திரங்களை உள்ளடக்கிய வகுப்புச் சஞ்சிகையைத் தயாரிக்க வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 12

- பாடசாலைத் தோட்டத்தில் பல்வேறு மரஞ்செடிகொடிகள் காணப்படும் சில நிலப்பகுதி களைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள்.

- பாடசாலைத் தோட்டத்தில் அவ்வாறான இடங்கள் இல்லையாயின், அயலில் பொருத்த மான ஓர் இடத்தைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள். மாணவரைக் குழுக்களாகப் பிரித்து ஒரு சதுர மீற்றர் அளவு அடையாளமிட்ட நிலப்பகுதி ஒவ்வொன்று வீதம் குழுக்களுக்கு ஒப்படையுங்கள்.
- தெரிவுசெய்யப்பட்ட நிலப்பகுதியில் உள்ள வெவ்வேறுபட்ட மரஞ்செடிகொடிகளை அவதானிக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.

- ஒரு சதுர மீற்றர் நிலத்தில் எத்தனை தாவர வகைகள் உள்ளன எனத் தேடியறிய வழிப்படுத்துங்கள். மாணவர்கள் இடர்ப்பாடுகளை எதிர்நோக்குகின்றனராயின் உதவி புரியுங்கள்.

- ஒரே பிரதேசத்தில் பல்வேறு வகைப்பட்ட தாவரங்கள் உள்ளன என்பதை மாணவர்கள் விளங்கிக்கொள்ளக் கூடியவாறு கலந்துரையாடல் நடத்துங்கள்.

- பல்வேறுபட்ட மரஞ்செடிகொடிகள் காரணமாக, சூழல் அழகு பெறுகின்றமையைக் கலந்துரையாடல் மூலம் வெளிக்கொணருங்கள். இலைகளின் வடிவம், நிறம், பூக்களின் பல்வகைப்பட்ட தன்மை, தண்டின் தன்மை, தண்டின் பல்வகைப்பட்ட தன்மை ஆகிய வற்றை இதற்காகப் பயன்படுத்துங்கள்.

- குழுக்கள் அவதானித்த நிலப்பகுதியில் உள்ள பல்வேறு தாவரங்களின் எண்ணிக்கைப் படி உயிர்ப்பல்வகைமை உயர்வானதா? குறைவானதா? எனத் தீர்மானிக்க முடியும் என்பதை வலியுறுத்துங்கள்.

- வகுப்பின் எதிரே அல்லது அயலில் பல்வேறுபட்ட தன்மையைக்கொண்ட தாவரங்களை வளர்த்து அழகுபடுத்துமாறு வழிப்படுத்துங்கள்.


- தமது வீட்டு முற்றத்தின் ஒரு பகுதியையும் அவ்வாறாக அழகுபடுத்த வழிப் படுத்துங்கள்.

- உயிர்ப்பல்வகைமையின் வியத்தகு தன்மையை நேரடியாக அனுபவிப்பதற்கு வாய்ப்பளியுங்கள்.
- வெவ்வேறு தாவர இலைப்பகுதிகள், அல்லது பல்வேறு பூக்களைக் கொண்டு அழகான பூச்செண்டொன்றை ஆக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள். தேவைப்படுமிடத்து உதவி புரியுங்கள். மாணவர் தயாரித்த அழகிய பூச்செண்டை வகுப்பில் மேசைமீது வைக்க வழிப்படுத்துங்கள்.

- மரஞ்செடிகொடிகள் தொடர்பான பின்வரும் விளையாட்டில் ஈடுபட சந்தர்ப்பமளியுங்கள்.

- மாணவரை விளையாட்டு மைதானத்துக்குத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்லுங்கள். நிலத்தில் உதிர்ந்துள்ளவற்றில் இருந்து வெவ்வேறுபட்ட 3 அல்லது 4 வகையான தாவர இலைகளைப் பொறுக்குமாறு அறிவுறுத்துங்கள். ஒவ்வொரு தாவர வகையிலும் 15 - 20 இலைகள் வரை பொறுக்கிக் கொள்வது போதுமானது.

- படத்தில் காட்டப்பட்டுள்ளது போன்று மாணவரை 3அல்லது 4 குழுக்களாப் பிரித்து A, B, C, D என உரிய இடங்களில் நிறுத்துங்கள்.




பொறுக்கிய இலைகளை A, B, C, D எனக் குறிக்கப்பட்ட சிறிய வட்டங்களினுள் வையுங்கள்.

சைகை வழங்கப்பட்டவுடன் குழுவில் முதலாவதாக இருப்பவர், தமக்குரிய வட்டத்தில் இருந்து ஓர் இலையை எடுத்து ஓடிச்சென்று மத்தியில் உள்ள வட்டத்தினுள் போட வேண்டும். வட்டத்தில் இலையை இட்டவர் வரிசையின் பின்னேபோய் அமர்தல் வேண்டும். இவ்வாறாக ஒழுங்கு முறைப்படி அங்கத்தவர்கள் எல்லோரதும் ஈடுபாட்டு டன், தமக்குரிய வட்டத்தினுள் உள்ள இலைகள் எல்லாவற்றையும் நடுவில் உள்ள வட்டத்தினுள் போட்ட பின்னர் இறுதி அங்கத்தவரும் திரும்பி வந்து வரிசையில் சேர்ந்துக்கொண்ட குழுவே வெற்றிபெற்ற குழுவாகக்கருதப்படும். இவ்வாறான விளை யாட்டுக்களைத் திட்டமிட்டு மாணவர்களுக்கு அவற்றில் ஈடுபடச் சந்தர்ப்பமளியுங்கள்.

# 6.0 நீர்



**உலகில் உள்ள நீரின் ஏறத்தாழ 97 சதவீதமான பகுதி உப்புக்கலந்த நீராகக் காணப்படுகின்றது. மேலும் 2 வீதமான பகுதி பனிக்கட்டியாகக் காணப்படுகின்றது. எனவே மனிதனின் பயன்பாட்டுக்கும் தாவரங்களின் வளர்ச் சிக்கும் எஞ்சியிருப்பது 1 சதவீதமான நீரேயாகும். இந்த அளவுகளில் பாரிய மாற்றங்கள் ஏற்படுவதில்லை. எனினும் நீர் மாசடைவதால், பயன்படுத்தக்கூடிய நிலையில் காணப் படும் நீர் அசுத்தமடைந்து பயன்படுத்த முடியாத நிலையை அடையும். எனவே நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது காலத்தின் தேவைகளுள் ஒன்றாகும். பல்வேறு சூழல் சீர்கேடுகள் காரணமாக, நீர் ஊற்றுக்கள் வற்றிப்போதல், ஆறுகள் உலர்ந்து போதல் போன்றவை காரணமாக உணவுப் பயிர்களைப் பயிரிட முடியாத ஒருநிலை ஏற்பட இடமுண்டு. சனத்தொகை அதிகரிப்புடன் நுகரப்படும் நீரின் அளவும் அதிகரித்துள்ளது. இவை யாவும் நீர் தொடர்பாக நாம் எதிர்நோக்கும் சவால்களாகும்.**

## தேர்ச்சிகள்

- பெறுமதிமிக்க ஒரு வளமாகக்கருதி, நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவார்.
- ஆரோக்கியமாக வாழ்வதற்காகப் போதுமான அளவுக்கு நீரை நுகருவார்.
- நீர் தொடர்பான பாரம்பரியமான பழக்கவழக்கங்களை ஆராய்வுபூர்வமாகப் பேணி வருவார்.
- நீர் மாசடைதல் தொடர்பாகக் கவனஞ்செலுத்தி, அதனைத் தவிர்ப்பதற்காகப் பங்களிப்புச் செய்வார்.
- ஓடும் நீரின் சக்தியைப் பயன்படுத்தி இயக்கத்தக்க உபகரணங்களின் மாதிரியுருக் களை ஆக்குவார்.
- நீருடன் தொடர்புடைய ஆடல் பாடல்களை முன்வைப்பார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

## செயற்பாடு 1

- பாடத்துக்கு முன்னர் பின்வரும் தகவல்களை தேடிப்பெற்றுக் கொண்டுவருமாறு மாணவருக்கு அறிவுறுத்தல் வழங்குங்கள்.
  - தாம் நாளொன்றுக்கு பருகும் நீரின் அளவு எத்தனை குவளைகள் (Tumblar) அல்லது எத்தனை கோப்பைகள் (Cup).
  - வீட்டில் சமையலறை வேலைகளுக்காக நாளொன்றுக்கு பயன்படுத்தும் நீரின் அளவு
  - வீட்டில் வேறு வேலைகளுக்காக நாளொன்றுக்கு பயன்படுத்தும் நீரின் அளவு
  - குழாய்நீர் பயன்படுத்துவதானால் நாளொன்றுக்குப் பயன்படுத்தும் நீர் அலகுகளின் அளவு

- இத்தகவல்களைக்கொண்டு மாணவரொருவர் நாளொன்றுக்குப் பருகும் நீரின் அளவை அண்ணளவாக லீற்றரில் கணித்துக்கொள்ளுங்கள்.

- அதன்படி, வகுப்பு மாணவர் அனைவருக்குமாக நாளொன்றுக்கு பருகுவதற்குத் தேவையான நீரின் அளவை அனுமானியுங்கள்.

- மேலும் மாணவர் அனைவரதும் வீடுகளில் நாளொன்றுக்குப் பயன்படுத்தும் மொத்த நீரின் அளவு பற்றி மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

- அவற்றுக்கு அமைய எமது நுகர்வுக்காக நாளொன்றுக்கு பெருமளவு நீர் தேவை என்பதைக் கலந்துரையாடல் மூலம் வெளிக்கொணருங்கள்.

- நீரை நுகரும்போது எவ்வளவு நீர் வீண்விரயமாகிறது என்பது பற்றியும், நீர் வீண் விரயமாவதைத் தவிர்க்கக்கூடிய விதம் பற்றியும் கலந்துரையாடுங்கள். அவற்றின் ஊடாக நீரின் மூலம் உச்ச அளவில் பயன்பெறக்கூடிய விதம் பற்றிக் கலந்துரை யாடுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - முகம் கழுவுவதற்கான நீரை ஒரு பாத்திரத்தில் இட்டுக்கொள்ளல் (குழாய்களில் முகம் கழுவும்போது)
  - வீட்டுக் கழிவு நீரைப் பொருத்தமான பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தல்

- மாணவரது வீட்டில் நீரைப்பெறும் விதம் தொடர்பான தகவல்களை ஒரு வரைபாகக் காட்ட வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 2

- புவியில் நீர் எவ்வாறான நிலைகளில் காணப்படுகிறது எனக் கலந்துரையாடுங்கள்.

- இதற்கான பிரவேசமாக ''நீர்த்துளியின் கதை'' எனும் தலைப்பில் ஒரு கதையை உருவாக்குங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  முன்பொரு காலத்தில் நான் ஒரு பேசினினுள் இருந்தேன். ஒரு தாய், தனது குழந்தையை அந்த நீரில் நீராட்டினாள். நீராட்டி முடிந்த பின்பு என்னையும் நண்பர்களையும் வடிகாலில் கொட்டினாள். வடிகாலில் ஓடிச்சென்று நிலத்தை அடைந்தேன். நிலம் என்னை உறிஞ்சிக்கொண்டது. மண்ணினுள் இருந்த நான் சில நாட்களின் பின்பு ஒரு மரத்தின் மேலே சென்று ஓர் இலையினூடாக வெளி யேறினேன். பின்னர் காற்றில் மிதந்து சென்று முகிலொன்றினுள் சேர்ந்து கொண் டேன். என்னைப்போன்ற பலர் அங்கு என்னுடன் சேர்ந்து கொண்டார்கள். சிறிது காலம் வானத்தில் மிதந்துகொண்டிருந்தேன். ஒரு நாள் மீண்டும் நிலத்தை அடைந்தேன். கற்களுக்கு இடையே புகுந்து விளையாடினேன். ஒரு தொட்டியை அடைந்தேன். சிறிது நேரத்தில் ஒரு சிறிய குழாயின் ஊடாகப் புகுந்து சென்றேன். இப்போது நான் இந்தக்கேத்தலினுள் இருக்கிறேன். அடுத்ததாகத் தேநீர்க்கோப்பை யினுள் செல்வேனா?, ஆவியாகி மீண்டும் ஆகாயத்தில் செல்வேனா? கொஞ்சம் பொறுத்துத்தான் பார்க்க வேண்டும். எங்கேதான் போனாலும் மீண்டும் மீண்டும் உங்களைச் சந்திக்க வந்துகொண்டே இருப்பேன்!

- இவ்வாறான நீர் காணப்படும் வெவ்வேறு இடங்கள் பற்றிக் கலந்துரையாடி (கடல், ஆறு, நீர்வீழ்ச்சி, அருவி, ஓடை, கிணறு, குளம் ஏனைய இடங்கள்) அவற்றுடன் தொடர்புபடுத்தி அந்த நீர் உலகெங்கும் ஒரு சக்கரமாகக் காணப்படுகின்றமையை மாணவர்களுக்கு விளக்குங்கள். மேலும் பல்வேறு மாற்றங்களை உட்படுத்தி நீர்த் துளியின்கதையைப் புனைவதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பமளியுங்கள். தாம் எழுதிய கதையின் மனங்கவர்ந்த ஒரு சந்தர்ப்பத்தைச் சித்திரமாக வரைய வழிப் படுத்துங்கள். அச்சித்திரங்களைக் காட்சிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 3

- சகலரது உடலிலும் நீர் அடங்கியுள்ளது என்பதையும் அது வெவ்வேறு வழிகளில் உடலில் இருந்து வெளியேறும் என்பதையும் விளக்குங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***
  வியர்வை, சிறுநீர், வெளிச்சுவாசம் போன்றவை

- எனவே உடலில் நீர் மட்டத்தைப் பேணுவதற்காக போதுமான அளவு நீரைப்பருகு வதன் முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

- கடினமான உடலுழைப்பு, விளையாட்டு போன்று அதிக அளவில் வியர்வை வெளி யேறும் சந்தர்ப்பங்களில் அதிக அளவு நீர் பருகுவது அவசியமாகும் என்பதை விளக்குங்கள்.

- போதுமான அளவு நீரைப் பருகுவதால் ஆரோக்கியமாகவும் மலர்ச்சியாகவும் இருக்க முடியும் என்பதையும் விளக்குங்கள். கழிச்சல்/வயிற்றோட்டம் போன்ற நோய்கள் ஏற்படுவதை கொதித்தாறிய நீரைப் பருகுவதால் தவிர்த்துக்கொள்ள முடியும் என்பதையும் குறிப்பிடுங்கள்.

## செயற்பாடு 4

- **நீர் வடிகட்டியொன்று அமைத்தல்**
  இதற்காக படத்திற் காட்டியுள்ளது போன்று பெரிய பிளாத்திக்குப் போத்தலொன்றை வெட்டிக்கொள்ளுங்கள்.



பகுதி A யின் வாயைக் கீழ் நோக்கித் திருப்பி, அதனை ஒரு புனல் போன்று பயன் படுத்துங்கள். அதன் வாய் மூடப்படும் வகையில் பஞ்சுத்திரளையொன்றைச் சிறைப் படுத்துங்கள். பின்னர் அதன் மீது வெவ்வேறு அளவுடைய பரல்களைப் படை படை யாக இடுங்கள். பரல் படைகளின் மீது மணல்படை இடுங்கள். அப்படைகளின் ஊடாக நீர் பொசிந்து வடிந்து கீழே உள்ள பாத்திரத்தில் சேர இடமளியுங்கள்.

இதற்காக கலங்கல் தன்மையுடைய நீரை அப்படைகளின் மீது மெதுவாக ஊற்றுங்கள். தெளிவான நீர், கீழே உள்ள பாத்திரத்தில் சேர்வதை அவதானியுங்கள்.

பரல்களின் பருமன், பரல் மற்றும் மணல் படைகளின் தடிப்பு ஆகியவற்றை மாற்றிய வாறு மிகச் சிறந்த ஒரு வடிகட்டியை அமைக்கக்கூடிய விதத்தைக் கண்டறிய மாணவருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.

## செயற்பாடு 5

- நீர் அதன் பயன்கள் காரணமாக மட்டுமன்றி பல்வேறு பண்பாட்டுப் பண்டிகைகள் மற்றும் சந்தர்ப்பங்களுடன் தொடர்புடைய வழக்கங்கள் தொடர்பாகவும் முக்கியத் தும் பெறுகின்றமையை விளங்கிக்கொள்ள துணை புரியுங்கள். இது தொடர்பான கதைகள், படங்களைச் சேகரிக்குமாறு முன்கூட்டியே அறிவுறுத்துங்கள். அவற்றைப் பாடத்துடன் தொடர்புபடுத்திக் கொள்ளுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  **1. தமிழர்களுடைய திருமணப் பழக்கவழக்கங்கள்**
  - மணமகனைக் கால் கழுவி வரவேற்றல்
  - நீர் நிரம்பிய நிறைகுடமொன்றினை முன்னே வைத்தல்
  - நீர்க்குடத்தில் மோதிரத்தை இட்டு அதனை மணமகனும், மணமகளும் தேடி எடுத்தல் (பிரதேசத்திற்கு ஏற்ற முறையில்)

  **2. முஸ்லிம்களுடைய பழக்கவழக்கங்கள்**
  - முஸ்லிம்கள் நீரைக்கொண்டு தம்மைச் சுத்தம் செய்து கொள்ளல்
  - விருந்துண்ண முன்னர் கைகளைக் கழுவிக்கொள்ளல்
  - முஸ்லிம்கள் நீரைக்கொண்டு தம்மைச் சுத்தம் (வுளு - Ablution))செய்து கொள்ளல் போன்றவை.

  **3. சிங்களவர்களுடைய திருமணப் பழக்கவழக்கங்கள்**
  - புதுமணத் தம்பதிகளுக்குக் கையில் நீர் வார்த்தல்
  - நீர்ப்பாத்திரங்களைக்கொடுத்து வரவேற்றல்
  - புதுமணத் தம்பதியினர் முன்னால் நீர் நிரம்பிய பாத்திரத்தில் வெண்ணிறப் பூக்களைப் போட்டு எடுத்துச் செல்லல்
  - நற்காரியங்களுக்கு செல்லும்போது நீர் நிரம்பிய பாத்திரமொன்றை கையில் ஏந்தி பெண்மனியொருவர் முன்னே வருதல்

  **4. சிங்களவர்கள் தமது புதுவருடத்தில் நீருடன் தொடர்புபடுத்திச் செய்யும் சம்பிரதாயங்கள்.**
  - கிணற்றுடன் கொடுக்கல் வாங்கல்
  - புதுவருட தினத்தில் குளித்தல் / நீராட்டல்
  - பழைய வருடத்தில் குளித்தல்

  **5. கத்தோலிக்க, கிறிஸ்தவர்களது நீருடன் தொடர்படைய பழக்க வழக்கங் களைத் தேடியறியுங்கள்.** (பிரதேசத்திற்கு ஏற்ற முறையில்)

- செம்பு நடனத்திற்குரிய பாடல் ஒன்றை தேடியறிந்து பாடச்செய்க. செம்புடன் ஆற்றுக் குச் செல்லும் காட்சி புலப்படக்கூடியதாக நடனத்தை உருவாக்க விடுக. நடனம் ஆடும்போது புத்தளிப்புக்கருவிகளின் துணையுடன் பாடச் செய்யுங்கள்.

- மேலே கூறப்பட்டவாறு பல்வேறு சமயச் சடங்குகளின் போதும் நீருடன் தொடர்புபட்ட சம்பிரதாயங்கள் பற்றித் தேடியறியச் செய்யுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  **தமிழர்கள்**
  - சித்திரை புதுவருடத்தில் மருந்துநீர் வைத்து நீராடுதல்
  - சமய விழாக்களில் ஆலயங்களில் கும்பாபிஷேகத்திற்கு நீர் பயன்படுத்தப்படும்
  - நீராடிய பின் ஆலயத்திற்குச் செல்லல்
  - ஆலயத்திற்குள் பிரவேசிக்கும் முன் கால்களைக் கழுவி விட்டுச் செல்லல்
  - ஆலயங்களில் தீர்த்தம் வழங்குதல்

- ஆலயங்களில் நடைபெறும் அனைத்து அபிஷேகங்களுக்கும் நீர் பயன்படும்.

**முஸ்லிம்கள் - (சமயக்கடமைகளின்போது)**

- பெருநாள் தினங்களில், வெள்ளிக்கிழமைகளில் குளித்தல்
- இறைவனை தொழும் முன் தம்மை நீரினால் சுத்தம் செய்தல்/வுளூ செய்தல்
- மரணித்தவரின் உடலை நீரினால் கழுவி சுத்தம் செய்தல்
- பற்களை துலக்கி சுத்தம் செய்தல்
- பிறக்கும் சிசுவை நீரினால் கழுவி சுத்தம் செய்தல் போன்றவை.

**பௌத்தர்கள்**

- சமயச் சடங்குகளின்போது பிக்குகளின் கால்களைக் கழுவி அன்புடன் வரவேற்றல்
- தோசம் நீக்கிக்கொள்வதற்காக ''பிரித் ஓதிய நீர்'' தெளித்தல்
- இறந்துபோன உறவினர்களுக்குப் புண்ணியம் தேடும் வைபவத்தில் நீர் வார்த்தல்

- இதே போல் கத்தோலிக்கர், கிறிஸ்தவர் போன்றோரின் சமய சடங்குகளின்போது நீரைப் பயன்படுத்தும் விதம் தொடர்பாகத் தேடி அறிந்து முன்வையுங்கள்.

- இவ்வாறான வேறு சமய பண்பாட்டு வழக்கங்கள் நீருடன் தொடர்புபட்டுள்ள விதத்தை மாணவரின் அனுபவங்களினூடாக கலந்துரையாடுங்கள். வசதி உள்ளதாயின் நீருடன் தொடர்புடைய வழக்கங்களை விளக்குவதற்காக வளவாளர் ஒருவரை அழையுங்கள்.
  ***எடுத்துக்காட்டு:*** பிரதேசத்தில் முதியவர் ஒருவர், சமயத் தலைவர் ஒருவர், பாடசாலை ஆசிரியர் ஒருவர்...)

## செயற்பாடு 6

- தமது பிரதேசத்தில் குடிநீர்த் தேவை நிறைவு செய்யப்பட்டுள்ள விதம் பற்றித் தேடியறிவதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.

- நகர்ப்பகுதிகளில் விநியோகிக்கப்படும் நீருக்காகக் கட்டணம் செலுத்தவேண்டியுள்ளமைக்கான காரணம், குடிநீரைச் சுத்திகரிப்பதற்கு பணம் செலவு செய்யவேண்டியுள்ளமையாகும். இவ்வாறான கட்டணம் அறவிடலானது மறைமுகமாக நீர் நுகர்வைக் குறைப்பதற்கு ஏதுவாகும். சுத்திகரிக்கப்பட்ட நீர் வீண்விரயமாவதைத் தவிர்ப்பதற்காக சகலரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

- மாணவரைக் குழுக்களாகப் பிரியுங்கள். நீர் வீண்விரயமாவதைத் தவிர்ப்பதற்காக எடுக்கத்தக்க வழிவகைகளை குழுவில் கலந்துரையாட வழிப்படுத்துங்கள். அக்கருத்துக்களை விரும்பிய ஒரு விதத்தில் முன்வைப்பதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***
  வாக்கியங்களாக/செற்றொடர்களாக/சிறு கட்டுரைகளாக
  சித்திர ஆக்கங்களாக
  பாடல் ஆக்கங்களாக

- நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது தொடர்பான செய்திகளை முன்வைப்பதற்காகச் சுவரொட்டிகளை ஆக்க வழிப்படுத்துங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***
  - குழாய் வாயிலைத் திறந்து வைத்து வேறு வேலைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்தல்
  - பொது இடங்களில் நீர்க்குழாய்வாயில்களை இறுக்கமாக மூடிவைத்தல்
  - பாத்திரங்களைக் கழுவும்போது அவ்வப்போது ஒவ்வொரு பாத்திரமாகக் கழுவுவதைத் தவிர்த்து எல்லாப் பத்திரங்களையும் ஒரே தடவையில் கழுவிக்கொள்ளல்

- போதியளவு குடிநீரைப்பெற முடியாத பிரச்சினை நிலவும் பிரதேசங்களில் நீரைப்பெறும் போது எதிர்நோக்கும் அசௌகரியங்கள் பற்றிக் கலந்துரையாடுமாறு குழுக்களுக்கு அறிவுறுத்துங்கள்.

- சுத்தமான குடிநீர் கிடைக்காமை (தட்டுப்பாடு) காரணமாக அவதியுறும் மக்கள் எமது நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் வாழ்கின்றனர் என்பதை நினைவூட்டுங்கள். அனுபவங்கள் உள்ளனவாயின் அவற்றையும் துணையாகக் கொள்ளுங்கள்.

- உங்களது பிரதேசத்தில் அவ்வாறான நீர்ப்பிரச்சினை உள்ளதாயின் அப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை முன்வைக்குமாறு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***
  மழை நீரைச் சேகரித்து வைத்துக்கொள்ளல், அருவி, ஓடை, குளம், ஆறு போன்றவற்றில் நீர் மாசடைவதைத் தவிர்த்தல்

- பாடசாலையில் இவ்வாறு நீர்த்தட்டுப்பாடு உள்ளதாயின் அதனைத் தீர்ப்பதற்காக இது வரையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றித் தேடியறிய வழிப்படுத்துங்கள்.

- இதுவரையில் அதற்கான தீர்வுகள் முன்வைக்கப்படவில்லையெனின்,அதற்கென காத்திர மாகச் செயற்படக்கூடிய ஒரு அமைப்பைத் தாபித்துச் செயற்பட வழிகாட்டுங்கள்.

## செயற்பாடு 7


- நீர் மாசடைதல் நிகழும் வழிகளைக் காட்டும் அறிக்கைகள், புகைப்படங்களைச் சேகரித்து அவற்றை வகுப்பில் முன்வையுங்கள். நீர் மாசடைவதால் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

- தமது பிரதேசத்தில் பிரதானமான நீர் நிலைகள் மாசடைதல் தொடர்பாக அறிக்கை தயாரிக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.

- பாட இணைச் செயற்பாடுகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள நேரத்தைப் பயன்படுத்தி, பாடசாலைச் சுகாதார முன்னோடிக் குழுவொன்றைத் தாபித்து, அதனூடாக நீர்க்காப்பு மற்றும் நீர் மாசடைவதைத் தவிர்க்கும் வழி வகைகளில் ஈடுபட துணை புரியுங்கள்.

## செயற்பாடு 8

- ஓடும் நீரினால் சுழற்றக்கூடிய நீர்ச்சில்லொன்றை ஆக்குமாறு மாணவரை வழிப் படுத்துங்கள்.



ஆக்கிய நீர்ச்சில்லை ஓடும் நீருக்குக் குறுக்காக வைத்து அது சுழலும் விதத்தை அவதானிக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
நீர்ச்சில்லு சுழலுவதில் நீர்த்தாரையின் வேகம் பங்களிக்கும் விதத்தை அவதானிக்க வழிப் படுத்துங்கள்.

- பிராணிகளின் தாக்கத்திலிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்காகப் பயன்படுத்தும் ஓர் அமைப்பாக ''நீர்ப்பிசாசை'' அறிமுகஞ் செய்யுங்கள். வகுப்பு மட்டத்தில் இவ் வாறான ஆக்கங்களைச் செய்து மாணவர்களுக்கு அனுபவம் பெறச் சந்தர்ப்பமளி யுங்கள்.

## செயற்பாடு 9

- நீர்வளம் மற்றும் நீர்வளத்தைக் காத்தல் தொடர்பான பாடல்களைப் பாட இட மளியுங்கள். அவ்வாறான புதிய பாடல்களைப் புனைய சந்தர்ப்பமளியுங்கள். நீர் வளத்தைக் காப்பதன் முக்கியத்துவத்தை உள்ளடக்கிய கட்டுரைகளைத் தயாரித்து அல்லது பத்திரிகைகளிலிருந்து பிரசுரிக்கப்பட்ட கட்டுரைகள், துணுக்குகள் போன்றவற்றைப் பெற்று மாணவர்க்கு வாசிப்பதற்காக காட்சிப்பலகையில் காட்சிப் படுத்துங்கள்.

## செயற்பாடு 10

- நீர் தொடர்பான பின்வரும் விளையாட்டில் ஈடுபடச் சந்தர்ப்பமளியுங்கள்.

  **உள்ளங்கைகளால் நீர் நிரப்பும் விளையாட்டு:**

  மாணவரைக் குழுக்களாகப் பிரியுங்கள். (ஒரு குழுவில் உச்ச அளவாக 5 பேர் அடங்குவது போதுமானது.)

- குழுக்களை வரிசைகளில் நிறுத்துங்கள். சகல குழுக்களின் வரிசையில் ஓர் அந்தத்தில் நிற்கும் மாணவனுக்கு அருகே நீர்ப்பாத்திரமொன்று ஒவ்வொரு குழுவிலும் வையுங்கள். மறு அந்தத்தில் நிற்கும் மாணவனுக்கு அருகே வெறும்போத்த லொன்றை வையுங்கள். ஆசிரியர் சைகை வழங்கியவுடன் வரிசையில் முதலாவது நிற்பவர் உள்ளங்கைகளிரண்டையும் குவித்து நீர் அள்ளி அதனை இரண்டாவதாக இருப்பவரின் உள்ளங்கைகளில் இட வேண்டும். இவ்வாறாக வரிசையில் இறுதியில் உள்ளவரின் உள்ளங்கைகளை அடையும் நீரை அவர் அவரது அருகில் உள்ள போத்தலில் ஊற்ற வேண்டும்.

  இவ்வாறாக போத்தல் நிரம்பும் வரை நீர் ஊற்றுதல் வேண்டும். குறைந்த நேரத்தில் போத்தலை நீரினால் நிரப்பிய பின் அவ்வாறு நீர் நிரப்பிய போத்தலை கையில் எடுத்து அங்கத்தவர்கள் அனைவரும், அடையாளமிடப்பட்டுள்ள போட்டி முடிவிடத்துக்கு ஓடிச்செல்லும் குழுவே வெற்றிபெற்ற குழுவாகும்.

- இவ்வாறாக வேறு விளையாட்டுக்களையும் உருவாக்கிக்கொள்ளுங்கள்.

# 7.0 வீட்டுத்தோட்டம்



**உலக மக்கள் யாவரும் உக்கிரமான உணவுப் பற்றாக் குறையை எதிர்நோக்கவுள்ளதாக அபாய அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளமையால், உணவுப் பயிர்ச்செய் கையை விருத்தி செய்வதும் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்வதும் இன்றைய தேவையாக உள்ளது. அதன்பால் செல்லும் எதிர்காலச் சந்ததியின் அடித்தளத்துக்கு வலுவூட்டுவதற்காக, வீட்டுத்தோட்டச் செய்கை தொடர்பான அடிப்படையான அனுபவங்கள் முன்னைய வருடங்களில் வழங்கப்பட்டுள்ளன. ஐந்தாந் தரத்தில் அக்கற்றல் அனுபவங்களை மேலும் உறுதிப் படுத்திக்கொள்வதற்கும், கவனமாக ஆராய்ச்சியாளர்களாக பயிர் செய்ய வழிப் படுத்துவதற்குமாகவே இக்கருப்பொருள் விருத்திசெய்யப்பட்டுள்ளது.**

## தேர்ச்சிகள்

- வீட்டுத்தோட்டச் செய்கையில் ஆராய்வுபூர்வமாகப் பங்களிப்புச் செய்து இரசனை பெறுவார்.
- பயிர்ச்செய்கைக்கான மாற்று முறைகளை அமைப்பார்.
- வெவ்வேறு ஆக்கங்கள் மூலம் வீட்டுத்தோட்டத்தின் அழகை வெளிப்படுத்திக் காட்டுவார்.
- வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபட்டு, அனுபவங்களைப் பகிர்ந்து பரிமாறியவாறு அதன் விளைச்சலை அதிகரிப்பதற்காகச் செயற்படுவார்.
- வீட்டுத்தோட்டத்தின் அழகைக்கூறும் ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

## செயற்பாடு 1

- வீட்டுத்தோட்டத்தில் நாட்டுவதற்குப் பொருத்தமான தானிய வகைகள், பழவகைகள், மரக்கறிவகைகள் சிலவற்றின் வித்துக்கள் சிறிதளவு வீதம் வகுப்புக்குக் கொண்டு வருமாறு மாணவர்களுக்கு முன்கூட்டியே கூறுங்கள். நல்ல விளைச்சல் பெறுவதற்காக உறுதியாக வளரும் ஆரோக்கியமான தாவரங்களை உருவாக்க வேண்டும் என்பதை யும் அதற்காக ஆரோக்கியமான வித்துக்களைத் தெரிவுசெய்து கொள்வதன் முக்கியத் துவத்தையும் வலியுறுத்துங்கள்.

- மாணவர் கொண்டுவந்த வித்துக்களை மேசைமீது பரப்பி வைத்து அவற்றுள் மிக உறுதியான ஆரோக்கியமான நாற்றுக்களை (கன்றுகளைத்) தரக்கூடியனவையெனக் கருதக்கூடிய வித்துக்களைத் தெரிவுசெய்வதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளி யுங்கள். ஆரோக்கியமான நாற்றுக்களைத் தரக்கூடிய வித்துக்களில் வெளிப்புறத்தே இனங்காணக்கூடிய இயல்புகள் எவை என மாணவரிடம் வினவுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - நன்கு முதிர்ச்சியடைந்திருத்தல்
  - உணவு நிரம்பி செழித்து வளர்ந்திருத்தல்
  - வெளியுறை கறைப் புள்ளிகளின்றிப் பிரகாசமாக இருத்தல்
  - பழுதுகள் இல்லாதிருத்தல்
  - பூச்சிகள் இல்லாதிருத்தல்

போன்ற வெளிப்புறத்தே இனங்காணக்கூடிய இயல்புகளைக்கொண்டு நல்ல வித்துக் களைத் தெரிவுசெய்துகொள்ளலாம். எஞ்சியுள்ள வித்துக்களை ஒதுக்கிவிடுமாறு அறிவுறுத்துங்கள்.

- நன்றாக முளைக்காத வித்துக்களை நாட்டுவதால் வீட்டுத் தோட்டத்திலிருந்து உச்ச பயன்பெற முடியாதாகையால் தெரிவுசெய்த வித்துக்களின் சிறிதளவை எடுத்து அவை நன்றாக முளைக்கின்றனவா எனச் சோதிக்க சந்தர்ப்பமளியுங்கள்.

- பின்வரும் முறைகளுள் ஒன்றைப் பயன்படுத்தி மேலே தெரிவுசெய்த வித்துக்களுள் எவ்வாறான வித்துக்கள் நன்றாக முளைக்கின்றன எனச் சோதிக்க வழிப்படுத்துங்கள்.

- பெரிய வகை வித்துக்களாயின் அவற்றை ஈரமான மணல் பாத்திரமொன்றில் புதைக்க வழிப்படுத்துங்கள்.

- சிறிய வகை வித்துக்களாயின் பின்வருவனவற்றுள் ஒரு முறையில் சோதிக்க வழிப் படுத்துங்கள்.

  சிறிய தட்டைப்பாத்திரமொன்றின் (தேநீர்க்கோப்பைத் தட்டு போன்ற) மீது சிறிதளவு பஞ்சைப்பரப்பி அதை டிமை கடதாசித் துண்டினால் மூடி நீர் இட்டு நன்கு நனையுங்கள். அதன் மீது வித்துக்களை இடுங்கள். நாளாந்தம் தட்டின் மீது சிறிதளவு வீதம் நீர் இடுங்கள்.

  வாழையிலைக்காம்பு அல்லது சேம்பு இலைக்காம்புத் துண்டொன்றை (30 சென்றி மீற்றர் அளவுடைய) வெட்டிக்கொள்ளுங்கள். நீளப்பாடாக இரண்டாகப் பிளவுங்கள். பிளந்த பாதிகளின் உட்புறத்தே நீளப்பாடாக வித்துக்களை இடுங்கள். பின்பு பாதிகளிரண்டையும் சேர்த்து வைத்து நூலினால் கட்டுங்கள். நிழலான ஈரலிப்பான ஓர் இடத்தில் வையுங்கள்.

- சில நாள்களின் பின்னர் வித்துக்கள் முளைத்துள்ளவா எனச் சோதிக்க வழிப்படுத் துங்கள். முளைக்க வைத்த வித்துக்களின் தொகை, முளைத்துள்ள வித்துக்களின் தொகை, முளைக்காத வித்துக்களின் தொகை ஆகியவற்றைக் கண்டறிய வழிப் படுத்துங்கள். முளைக்க வைத்த மொத்த வித்துக்களுள் 3/4 பகுதி வித்துக்களேனும் முளைத்துள்ளனவாயின், தெரிவு செய்துள்ள வித்துக்கள் பயிரிடுவதற்குப் பொருத்த மானவையென முடிவு செய்யலாம் என்பதை விளக்குங்கள்.

- அடுத்த சோதனைக்காக விரைவாக முளைக்கும் வித்து வகையொன்றினைத் தெரிவு செய்துகொள்ளுங்கள். (பாசிப்பயறு வித்துக்கள், கடுகு வித்துக்கள் போன்றவை) தெரிவுசெய்த வித்து மாதிரியை 4 பகுதிகளாகப் பிரித்துக்கொள்ளுங்கள்.

  **முதலாவது பகுதி:** வித்துக்களை உலர்ந்த சோதனைக்குழாயொன்றினுள்/சிறிய போத்தலொன்றினுள் இட்டு பொதுவான உஷ்ணம் கொண்ட ஓர் அறையில் வையுங்கள்.

  **இரண்டாவது பகுதி:** சோதனைக்குழாயொன்றினுள்/சிறு கண்ணாடிக்குவளை யொன்றின் உள்ளே அடிப்பகுதியில் ஈரமாக்கப்பட்ட பஞ்சு சிறிதளவை இட்டு அதன் மீது வித்துக்களை இட்டுப் பொது வான உஷ்ணம்கொண்ட ஓர் அறையில் வையுங்கள்.

  **மூன்றாவது பகுதி:** சோதனைக்குழாயொன்றினுள்/சிறிய கண்ணாடிக்குவளை யொன்றினுள் வித்துக்களை இடுங்கள். வித்துக்கள் முழுமை யாக அமிழுமாறு நீர் இட்டு, பொதுவான உஷ்ணம் கொண்ட ஓர் அறையில் வையுங்கள்.

**நான்காவது பகுதி:** வித்துக்களை முதலில் கொதிக்கும் நீரில் இட்டு அவியுங்கள். பின்னர் சோதனைக்குழாயொன்றின்/சிறு கண்ணாடிக்குவளையொன்றின் உள்ளே இடப்பட்ட ஈரமாக்கப்பட்ட பஞ்சின்மீது இடுங்கள். பொதுவான உஷ்ணம் கொண்ட அறையில் வையுங்கள்.

- சில நாள்களின் பின்னர் கிடைக்கும் அவதானிப்புக்களைக்கொண்டு பின்வருவது போன்ற ஓர் அட்டவணையைப் பூர்த்தி செய்யுங்கள்.

| வித்துக்கள் | சோதனை | கண்டவை | அனுமானிக்கக்கூடிய காரணம் |
|---|---|---|---|
| முதலாவது குழாய் | | | |
| இரண்டாவது குழாய் | | | |
| மூன்றாவது குழாய் | | | |
| நான்காவது குழாய் | | | |

- வித்துக்கள் முளைத்து வளருவதற்கு நீர், வெப்பநிலை, வளி ஆகியன தேவை என்பதையும் அவ்வித்துக்கள் இறக்காதவையாக இருக்கவேண்டும் என்பதையும் விளக்குங்கள்.

- மூன்றாவது சோதனைக்காக மாணவரைச் சில குழுக்களாகப் பிரியுங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் வெறும் ஜாம் போத்தல் அல்லது தெளிவான சுவருடைய கண்ணாடிக் குவளை ஒன்று வீதம் தேடிப்பெறுமாறு அறிவுறுத்தல் வழங்குங்கள்.

- அப்பாத்திரத்தில் உட்புறச் சுவரின்மீது டிமை கடதாசித்துண்டொன்றை விரித்து வைக்குமாறு அறிவுறுத்துங்கள். டிமை கடதாசியினுள் மணல் நிரப்புங்கள், பாத்திரத்தின் சுவருக்கும் டிமை கடதாசிக்கும் இடையே ஒரு வித்து வகையில் இரண்டு அல்லது மூன்று வித்துக்கள் வீதம் இடுங்கள். (சோளம், கத்தரிக்காய், முள்ளங்கி, மிளகாய் போன்றவை சில எடுத்துக்காட்டுகளாகும்.)

- பின்னர் மணலை நன்கு நனையுங்கள். பொதுவான ஒளி கிடைக்கும் ஓர் அறையில் இப்பாத்திரங்களை வையுங்கள். வித்துக்கள் முளைக்கும் விதத்தைத் தினமும் அவதானிக்க வழிப்படுத்துங்கள். (வித்திலைகளின் நடத்தை, தண்டு நீளும் விதம், இலைகள் தோன்றும் விதம்... போன்றவை)
  - நாளாந்தம் நாற்றுக்கள் காட்சியளிக்கும் விதத்தை வரையுமாறு வழிப்படுத்துங்கள்.
  - ஏனைய குழுக்களின் வித்துக்கள் முளைக்கும் விதத்தையும் அவதானிக்க வழிப்படுத்துங்கள்.
  - ஒவ்வொரு வித்து வகையும் முளைக்கும்போது அவற்றுக்கு இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை அவதானிக்க வழிப்படுத்துங்கள்.

- இந்தச் செயற்பாட்டில் பயன்படுத்திய யாதேனும் முறையில் வீட்டுத்தோட்டத்தில் நாட்டுவதற்குத் தேவையான நாற்றுக்களைப் பெற்றுக்கொள்ளுமாறு வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 2


- தண்டுத்துண்டுகளைக்கொண்டு புதிய நாற்றுக்களைப் பெறுவது தொடர்பான அனுபவங்களைப் பெறுவதற்காகப் பின்வரும் இரண்டு முறைகளின்படி செயற்பாட்டில் ஈடுபடுமாறு அறிவுறுத்துங்கள்.

**முறை 1**

மேலதிக நீர் வெளியேறுவதற்காக துளைகள் இடப்பட்ட, ஊடுகாட்டும் தன்மையுடைய ஒரு பாத்திரத்தை/சாடியை தயார்ப்படுத்திக்கொள்ளுங்கள்.
அரித்தெடுத்த (சலித்தெடுத்த) மண் ஒரு பகுதியுடன் கூட்டெரு ஒரு பகுதியைச் சேர்த்துக் கலந்து கொள்ளுங்கள்.
இக்கலவையைப் பாத்திரத்தில் இட்டு, போதுமான அளவுக்கு நீர் இட வழிப்படுத்துங்கள்.
தெரிவுசெய்த தண்டுத்துண்டை அப்பாத்திரத்தில் நடுங்கள்.
நாளாந்தம் போதுமான அளவு நீர் இடுங்கள்.
நாளாந்தம் அவதானிக்க வழிப்படுத்துங்கள்.
தண்டுத்துண்டில் வேர்கள் வளரும் விதத்தை அவதானிக்க வழிப்படுத்துங்கள்.

**முறை 2**

ஊடுகாட்டும் தன்மையுடைய ஒரு பாத்திரத்தை/சாடியைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள்.
அரித்தெடுத்த மண் ஒரு பகுதியையும் கூட்டெரு ஒரு பகுதியையும் சேர்த்துக் கலந்து கொள்ளுங்கள்.
இக்கலவையைப் பாத்திரத்தினுள்/சாடியினுள் இட்டு, போதுமான அளவு நீர் சேருங்கள். மீண்டும் நீர் இடத்தேவையில்லை.
தெரிவுசெய்த தண்டுத்துண்டை பாத்திரத்தில்/சாடியில் நாட்டுங்கள். தேவையாயின், ஆதாரத்தடியொன்றினை நாட்டுங்கள்.
அப்பாத்திரத்தை/சாடியை பொலித்தீன் உறையொன்றினுள் இடுங்கள்.
உறையினுள் வளி நன்கு அடங்கியிருக்கும் வகையில் உறையின் வாயைக் கட்டுங்கள். தண்டுத்துண்டில் வேர்கள் வளரும் விதத்தை அவதானிக்க வழிப்படுத்துங்கள்.




- இந்த இரண்டு முறைகளிலும் நாட்டப்பட்ட தண்டுத்துண்டுகளில் வேர்கள் வளர்ந்துள்ள விதத்தை அவதானிக்க வழிப்படுத்துங்கள். வேர் வளர்ச்சி நன்றாக ஏற்பட்டு நல்ல பயன்பெறுவதற்கு இந்த இரண்டு முறைகளும் பொருத்தமானவையா அல்லது இவற்றுள் ஒரு முறை மற்றைய முறையிலும் பொருத்தமானதா என மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

- மாணவர்கள் தீர்மானித்ததற்கிணங்க வீட்டுத்தோட்டத்தில் தண்டுத்துண்டுகளை நட்டு, தேவையான நாற்றுக்களைப் பெற வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 3

- பல்வேறு மாற்று முறைகளை/உத்திகளைக் கையாண்டு வீட்டுத்தோட்டத்தில் பயிர் களைச் செய்கை பண்ணுமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.
  எடுத்துக்காட்டு:
  பசளை உறை, மழைப்பீலித்துண்டு, பேசின், மூங்கில் குழாய்... போன்றவை.

- அவ்வொவ்வொரு பொருளையும் பயன்படுத்தி பொருத்தமான பயிர் நாற்றுக்களை நட வழிப்படுத்துங்கள். மாற்று வழிமுறைகளைக்கொண்ட வீட்டுத்தோட்டங்களை அமைப்பதன் முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடுங்கள். மாணவரின் வெவ்வேறுபட்ட வீட்டுச் சூழல்களுக்குப் பொருத்தமானவாறு மாற்று முறைகளைப் பயன்படுத்தி பயிர்க்கன்றுகளை நடுமாறு தூண்டுங்கள். வசதி உள்ளதாயின் அவ்வாறான மாற்று முறைகளை பயன்படுத்தி நடாத்திச் செல்லும் வீட்டுத்தோட்டமொன்றினை அவதானிப்பதற்கு வாய்ப்பைப் பெற்றுக் கொடுங்கள். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மாற்று முறைகளைக் கையாண்டு வீட்டுத்தோட்டச் செய்கையினை மேற்கொள்ளும் நிகழ்ச்சிகள் தொடர்பாக கலந்துரையாடி அவற்றை குறித்த நேரங்களில் அவதானிக்க மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 4

- பயிர்ச்செய்கைக்குச் சேதம் விளைவிக்கும் பிராணிகளை இனங்காணுமாறு மாணவரை வழிப்படுத்துங்கள். ஒவ்வொரு பிராணியையும் பெயரிட்டு அது பயிரின் எந்தப்பகுதி யைச் சேதப்படுத்தும் என்பதைக் கலந்துரையாடுங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***
  - பன்றி, எலி போன்றவை கிழங்குப் பயிர்களில் ஏற்படுத்தும் சேதங்கள்
  - நெல்தண்டுக்கோதி, பனிப்பூச்சி, அழுக்கணவன் போன்றவை ஏற்படுத்தும் சேதங்கள்.
  - மீலி முட்டைப்பூச்சி போன்றவை கத்திரி, தக்காளி, வெண்டி போன்ற பயிர்களில் ஏற்படுத்தும் சேதங்கள்.

- வசதி உண்டெனின், பிராணிகளால் சேதப்படுத்தப்பட்ட பயிர்த்தாவரப் பகுதிகளை அவதானிக்க வழிப்படுத்துங்கள். அதற்காக கை வில்லையொன்றைப் பயன்படுத் துங்கள். வீட்டுத்தோட்டத்திலோ, சேதமாக்கப்பட்ட தாவரப் பகுதிகளை வகுப்புக்குக் கொண்டுவந்தோ அவதானிக்கலாம்.

- பயிர்களில் பிராணிகளின் தாக்கங்களைக் குறைப்பதற்காக எடுக்கக்கூடிய நடவடிக்கை கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

- அதற்காக அனுபவமிக்க ஒரு விவசாயி அல்லது பிரதேச விவசாய பிரிவாக்க உத்தியோகத்தர் அல்லது வெற்றிகரமாக வீட்டுத்தோட்டமொன்றை நடத்திச் செல்லும் ஒருவரை அழையுங்கள்.

- விவசாய இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக வேறு பாரம்பரிய மான முறைகளைப்பயன்படுத்த சந்தர்ப்பமளியுங்கள். பயிர்த் தாவரங்களைச் சேதப் படுத்தும் பிராணிகளை உணவாக உட்கொள்ளும் பிராணிகளை இனங்காண வழிப் படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு:***

- எலியை உணவாகக் கொள்ளும் பாம்புகள்
- பூச்சிகளை உணவாகக் கொள்ளும் தவளை, ஓணான்
- நத்தைகளை உணவாகக் கொள்ளும் செண்பகம்

- சூழலில் காணப்படும் இந்த இயற்கையான சமநிலை குலைவதில் விவசாய இரசாய னங்கள் காரணமாக அமைந்துள்ள விதம் பற்றிக் கலந்துரையாடுங்கள். இது தொடர்பாக மாணவரது அனுபவங்களைக் கலந்துரையாடுங்கள். விவசாய இரசாயனப் பயன்பாட்டின் பாதிப்புக்கள் தொடர்பாக மேலும் விடயங்களைத் தேடியறிய மாணவர் களுக்கு வழிகாட்டுங்கள்.

## செயற்பாடு 5

- இச்செயற்பாட்டுக்கு முன்னர் பூச்சி நாசினிகளால் ஏற்படும் பாதிப்புக்கள், சூழல் நேய பூச்சிக்கட்டுப்பாட்டுத் திரவங்களின் பெறுமதி ஆகியன பற்றிய செய்திப்பத்திரிகை அறிவித்தல்கள் போன்றவற்றைச் சேகரிக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.

- வீட்டுத்தோட்டச் செய்கையில் பயன்படுத்தக்கூடிய சூழல் நேய பூச்சிக்கட்டுப்பாட்டுத் திரவமொன்றைத் தயாரிக்கும் முறை பற்றி, செய்தித்தாள்களிலோ வேறு துண்டுப் பிரசுரங்களிலோ தரப்பட்டுள்ள விவரங்களைத் தேடியறியுமாறு மாணவரை வழிப்படுத் துங்கள்.

- இதற்காக, வேப்பங்கொட்டை, வேப்பெண்ணெய் போன்றவை பயன்படுத்தப்படும் விதத்தை விளக்கும் துண்டுப்பிரசுரங்கள், கட்டுரைகளை உசாவ வழிப்படுத்துங்கள்.

- இவ்வாறான பூச்சிக்கட்டுப்பாட்டுத் திரவங்களைத் தயாரித்து அவற்றை வீட்டுத்தோட்டச் செய்கையின்போது பயன்படுத்துவோர் போன்ற வளவாளர்களை இனங்காண முடியு மாயின் அவர்களுள் ஒருவரை அழைத்து திரவங்களைத் தயாரிக்கும் முறையைச் செய்வித்துக்காட்டி மாணவருக்கு அவற்றை அவதானிக்க சந்தர்ப்பமளியுங்கள்.

- அவ்வாறான **'சூழல் நேய'** பூச்சிக்கட்டுப்பாட்டுத் திரவமொன்றைத் தயாரிக்குமாறு வழிப்படுத்துங்கள். குழுக்களாகப்பிரிந்து வெவ்வேறு தாவரப்பகுதிகளைப் பயன்படுத்தி அவ்வாறான சில பூச்சிக்கட்டுப்பாட்டுத் திரவங்களைத் தயாரித்துக்கொள்ள முடியு மாயின் மிக நல்லது.

- மாணவர் தயாரித்த பூச்சிக்கட்டுப்பாட்டுத் திரவங்களைப் பாடசாலைத் தோட்டத்தில் அல்லது வீட்டுத்தோட்டத்தில் பூச்சித்தாக்கத்துக்கு உள்ளாகியுள்ள தாவரமொன்றின் மீது நாளாந்தம் தெளித்து தொடர்ந்து சில நாள்களுக்கு அவதானித்து வர வழிப்படுத் துங்கள். பின்வருவது போன்ற ஓர் அட்டவணையைத் தயாரித்து அவதானிப்புக்களை அதில் குறித்துக்கொள்ளுமாறு வழிப்படுத்துங்கள்.

| பூச்சிக்கட்டுப்பாட்டு திரவம் | திரவம் தெளிக்க முன்னர் இருந்த நிலை | திரவம் தெளித்த பின்னர் அவதானிப்புக்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1ஆம் நாள் | 2ஆம் நாள் | 3ஆம் நாள் | 4ஆம் நாள் | 5ஆம் நாள் |
| ***எடுத்துக்காட்டு:*** வேப்பெண்ணெய் | | | | | | |

- மாணவர்கள் ஏறத்தாழ 5 நாள்கள் வரை அவதானித்து அட்டவணைப்படுத்திய தகவல்களைக் கொண்டு சிறு குழுக் கலந்துரையாடல் நடத்த வழிப்படுத்துங்கள்.

- சிறு குழுக்களின் அனுபவங்களைத் துணையாகக்கொண்டு பொதுக் கலந்துரையாட லொன்று நடத்துங்கள். பொதுக்கலந்துரையாடலின்போது, பூச்சிக்கட்டுப்பாட்டுத் திரவங் களின் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்துங்கள். வெவ்வேறு தாவரப் பகுதிகளைப் பயன்படுத்தி, பூச்சிக்கட்டுப்பாட்டுத் திரவங்கள் தயாரித்து, அவற்றினைப் பரீட்சார்த் தமாகப் பயன்படுத்திப் பார்த்து வெற்றிகரமான பூச்சிக்கட்டுப்பாட்டுத் திரவத்தை இனங்கண்டு கொள்ளலாம் என்பதை வலியுறுத்துங்கள். விவசாய இரசாயனப் பொருள் களுக்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய பாரம்பரியமான முறைகளின் பெறுமதியை எடுத்துக்காட்டும் வகையில் சுவரொட்டிகள் ஆக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 6

- பாடசாலையில் பேணிவரப்படும் வீட்டுத்தோட்டத்தை அழகுபடுத்துவது பற்றி எண்ணிப் பார்க்க வழிப்படுத்தும் வகையில் சில வினாக்கள் வினவுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - வீட்டுத்தோட்டத்தில் சிறிய தாவரங்களை வளர்த்து எவ்வாறு அழகுபடுத்தலாம்.
  - உயரமாக வளரும் கொடி வகைகளுக்குப் பொருத்தமான ஆதார அமைப்புகள் எவை?
  - தரையில் படரும் செடி வகைகளை எவ்வாறு ஓர் எல்லைக்குள் மட்டும் படரச் செய்யலாம்?
  - கன்றுகள் நாட்டப்பட்டுள்ள வெவ்வேறு சாடிகள்/பாத்திரங்களை அழகாக வைத்திருப்பது எப்படி?

- இவ்வாறான வினாக்களுக்கு விடை காண்பதற்கான சிறு குழுக்கலந்துரையாடல்களை நடத்த வழிப்படுத்துங்கள்.

- வீட்டுத்தோட்டத்தை அழகுபடுத்துவதற்கான கருத்துக்களை பட்டியற்படுத்துமாறும் அவற்றுள் தமது குழுவினால் செய்யத்தக்க மாற்றமொனறினைத் திட்டமிடுமாறும் ஒவ்வொரு குழுவையும் வழிப்படுத்துங்கள்.

- திட்டத்துக்கு அமைய, அந்தந்தக் குழுவினால் அம்மாற்றங்களைச் செய்த பின்னர், முன்னர் இருந்த வீட்டுத்தோட்டத்தைவிட அழான ஒரு வீட்டுத்தோட்டத்தை அமைப்பதற் காக ஆக்கபூர்வமாகச் செயற்பட்டமை குறித்து பாராட்டுங்கள்.

## செயற்பாடு 7

- கூட்டெரு தயாரித்தல் தொடர்பான விடயங்களை ஆராய்ந்து உங்களது பாடசாலைக் குப் பொருத்தமான ஒரு முறையைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள்.மாணவர் விளங் கிக்கொள்ளக்கூடியவாறு எளிமையான வகையில் அறிவுறுத்தல் பத்திரமொன்றினை எழுதித் தயாரித்துக்கொள்ளுங்கள். சிறிய அளவில் கூட்டெரு தயாரிக்க வழிப்படுத் துங்கள். நீங்கள் தெரிவுசெய்த முறையின்படி திட்டமிட்டுத் தயாரித்த அறிவுறுத்தல் பத்திரத்திற்குப் பொருத்தமானவாறு மாணவரைச் சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.

- தமது குழுவுக்குத் தேவையான பொருள்களைத் தேடிப்பெறுமாறு மாணவரை வழிப் படுத்துங்கள். தேவையெனின், பெற்றோரின் உதவியையும் பெறுங்கள்.

- கருப்பொருளை நடைமுறைப்படுத்தும் காலத்துள் கூட்டெரு தயாரிப்பதை ஆரம்பியுங்கள். அச்செயன்முறையின் பின்னர், தயாரிக்கப்பட்ட கூட்டெரு மாதிரியொன்றினை மாணவர்க்குக் காட்டுங்கள். அம்மாதிரியை அவதானித்த பின்னர் அந்தந்தக் குழுவினால் அமைக்கப்பட்டுள்ள கூட்டெரு தயாரிக்கும் அமைப்பினுள் உள்ள பொருள்கள், காலப்போக்கில் இந்த நிலையை அடையும் என்பதை விளக்குங்கள். கூட்டெருவைப் பயன்படுத்தி வீட்டுத்தோட்டத்தை வளப்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள்.

- கருப்பொருள் நடைமுறைப்படுத்தப்படும் காலத்தின் பின்னர், மாணவர் தயாரித்த கூட்டெரு உற்பத்தி அமைப்பு பற்றி நாளாந்தம் கவனஞ் செலுத்தி வருவதன் முக்கியத்துவத்தை விளக்குங்கள். அவை உக்கிக் கூட்டெருவாக மாறிய பின்னர், வீட்டுத்தோட்டத்தில் பயிர்களுக்கு இட வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 8

- ''வீட்டுத்தோட்டம்' எனும் பெயரில் சுவர்ப்பத்திரிகையைத் தயாரிக்க வழிப்படுத்துங்கள். ''வீட்டுத்தோட்டத்தின்'' புகைப்படமொன்றினையும் உள்ளடக்க முடியுமாயின் நல்லது. வீட்டுத்தோட்டப் பயிர்த் தாவரங்களில் பூக்கள், காய்கள், பழங்களைக் காணும்போது ஏற்படும் உணர்வுகளை இரசனையுடைய, சந்தத்துக்கு இசைவான குறுகிய வாக்கியங்களாகவும் ஏனையோரையும் வீட்டுத்தோட்டச் செய்கையின்பால் ஈர்க்கத்தக்கவாறான இலகுவான செய்திகளாகவும் பாடல்களாகவும் வெளியிட மாணவரை வழிப்படுத்துங்கள். ''பெற்றோர் வட்டம்'' நடத்தப்படும் நாளொன்றில் பாடசாலை வீட்டுத்தோட்டத்தை அப்பெற்றோருக்குப் பார்வையிடவும் சுவர்ப்பத்திரிகையை வாசிக்கவும் சந்தர்ப்பமளியுங்கள்.

## செயற்பாடு 9

- வீட்டுத்தோட்டம் செய்வதன் முக்கியத்துவம், வீட்டுத்தோட்டச் செய்கையின் பெறுமானம், எமது பயிர்ச்செய்கை ஆற்றல் போன்ற கருத்துக்களை வலியுறுத்தும் பாடல்களைப் பாட மாணவரை வழிப்படுத்துங்கள். பாடும்போது புத்தளிப்பு வாத்தியக்கருவிகளைப் பயன்படுத்த துணை புரியுங்கள்.

***எடுத்துக்காட்டு:*** **தோட்டம்**

தோட்டம் எங்கள் தோட்டம் - மண்ணில்
தோன்றி வளரும் பயிர்கள்
வாட்டமின்றி வளரும் - நீர்
வாய்க்கால் தன்னில் ஓடும்

சின்னஞ் சிறிய இலைகள் - தாங்கி
செழித்து வளரும் மிளகாய்
பென்னம் பெரிய கிழங்கு - தந்து
பேணும் மையர்ச் செடியே

பயற்றங் கொடிகள் வளர்ந்து - எங்கும்
பச்சை மாலை யாகும்
வயிற்றுக் கினிய உணவு - தந்து
வளரும் வாழை மரங்கள்


வெண்டி கத்தரியோடு - ஈர
வெங்காயம்; பூசனிக்காய்கள்
கொண்டு வளரும் தோட்டம் - பயன்
கொடுக்கும் எங்கள் தோட்டம்

இனிய 'கப்பல்' இதரை - கறிக்கு
ஏற்ற சாம்பல் மொந்தன்
கனியக் கொஞ்சம் புளிக்கும் - அந்தக்
கதலி வாழை எல்லாம்

செழித்து வளரும் தோட்டம் - நல்ல
செம்மண் நிறைந்த தோட்டம்
உழைத்து நாங்கள் வாழ்வோம் - இந்த
உலகை வெற்றி காண்போம்.

***- கவிஞர் வாகரை வாணன்***
***நன்றி: சின்னச் சின்னப் பூக்கள்***

## 8.0 பாதுகாப்பும் கரிசனையும்



**விபத்துக்களால் ஏற்படக்கூடிய இழப்புக்களைக் குறைத்தும், விபத்துக்களைத் தவிர்த்தும், வாழக்கூடிய ஒரு சூழலை உருவாக்குவது நாம் தட்டிக்கழிக்க முடியாத ஒரு பொறுப் பாகும். தற்காலத்தில் காணவும், கேட்கவும் கிடைக்கும் விபத்துக்கள் இழப்புக்கள், கொள்ளை நோய்களை இயன்ற அளவுக்குத் தவிர்த்துச் செயற்படுதல் காலத்தின் தேவைகளுள் ஒன்றாகும். சிறுபருவ முதலே அதற்குத் தேவையான தேர்ச்சிகளை அடைய முனையும் சந்ததியே எமது நாட்டில் நாளைய ஜீவ நாடியாக அமையும். அதற்கான அடித்தளமாக அமையத்தக்க அனுபவங்களைப் பெற வகை செய்யும் எதிர்பார்ப்புடனேயே இக்கருப்பொருள் திட்டமிடப்பட்டுள்ளது.**

### தேர்ச்சிகள்

- இயற்கைத் தோற்றப்பாடுகளின்போது அழிவுகள் ஏற்படத்தக்க சந்தர்ப்பங்கள் தொடர்பாகக் கவனஞ்செலுத்தி அவற்றிலிருந்து பாதுகாப்பும் பெறுவதற்காகச் செயற்படுவார்.
- விபத்துகள் நிகழத்தக்க சந்தர்ப்பங்களில் தனதும் ஏனையோரதும் பாதுகாப்பு தொடர்பாக கரிசனையுடன் செயற்படுவார்.
- விபத்துக்களின்போது முறையான முதலுதவி வழங்குவதற்கு செயற்படுவார்.
- சிறுவருக்கு எதிராக நிகழும் சட்டவிரோதச் செயல்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காகச் செயற்படுவார்.
- தாமும் ஏனையோரும் தொற்று நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவது தொடர் பாக கரிசனையுடன் சுகாதாரமான சூழலை ஏற்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்வார்.
- பாதுகாப்பு, கரிசனை என்பன குறித்து ஏனையோருக்கு அறிவூட்டம் செய்வதற்குப் பொருத்தமான பல்வேறு ஆக்கங்கள் புரிவார்.
- பாதுகாப்பாகவும் கரிசனையுடனும் செயற்படும் விதத்தை வலியுறுத்தும் ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.

### கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

### செயற்பாடு 1

- கடந்த காலங்களில் இழப்புக்களை ஏற்படுத்திய இயற்கைத் தோற்றப்பாடுகளாகிய மழை, காற்று, மண்சரிவு, சுனாமி, மின்னல், சூறாவளி, வறட்சி, வெள்ளப்பெருக்கு போன்றவை பற்றி பத்திரிகைகளிலிருந்தும் பொருத்தமானோரிடம் கேட்டறிந்தும் தகவல்கள் திரட்டுமாறு மாணவர் குழுக்களை வழிப்படுத்துங்கள். தகவல் சேகரிக்கும் போது பின்வரும் அட்டவணையைப் பூர்த்திசெய்வதற்குப் பொருத்தமான தகவல்களைச் சேகரிக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள். பின்னர், அத்தகவல்களைக்கொண்டு அட்டவணையைப் பூரணப்படுத்துமாறு மாணவரை நெறிப்படுத்துங்கள்.

| இயற்கைத் தோற்றப்பாடு காரணமாக ஏற்பட்ட சேதங்கள் | சேதம் ஏற்பட்ட காலப்பகுதி | சேதத்துக்கு உள்ளான பிரதேசங்கள் | ஏற்பட்ட இழப்புகள் | |
|---|---|---|---|---|
| | | | பௌதிக | மானுட |
| ***எடுத்துக்காட்டு:*** வெள்ளப்பெருக்கு | 2007 டிசெம்பர் | களுத்துறை மாவட்டம் | வீடுகள்<br>வயல்கள்<br>தோட்டங்கள்<br>வேறு ஆதனங்கள் | இருவர் காணாமற் போயுள்ளனர் |

- இவ்வாறாக இயற்கைத் தோற்றப்பாடுகளால் ஏற்படும் இழப்புக்கள், சேதங்கள் பற்றி உரையாடுங்கள்.

- இலங்கை இடையிடையே இவ்வாறான பல்வேறு இயற்கைத் தோற்றப்பாடுகளுக்கு ஆளாகி வருகின்றது என்பது பற்றியும் ஒரு நாடு என்ற வகையில் ஏற்பட்டுள்ள இழப்புக்கள் பற்றியும் கலந்துரையாடுங்கள்.

- வகுப்பு மாணவரை சில குழுக்களாகப் பிரியுங்கள். தாம் அல்லது தமது நண்பர் ஒருவர் அல்லது வேறு ஒருவர் எதிர்கொண்ட விபத்துக்கள் பற்றி குழுவில் கலந்துரை யாடச் சந்தர்ப்பமளியுங்கள்.

- அவ்விபத்துக்கள் தொடர்பான தகவல்களை வகுப்பில் முன்வைக்க வழிப்படுத்துங்கள். இச்சந்தர்ப்பத்தில் வினாக்கள் வினவுமாறு மாணவரை வழிப்படுத்தி, மேன்மேலும் தகவல் பெறத் தூண்டுங்கள்.

- மாணவரிடம் வினாக்கள் வினவும்போது பின்வரும் விடயங்களும் உள்ளடங்கும் வகையில் வினாக்களை முன்வையுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  **வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்ட இழப்பு/சேதம்**

  - வெள்ளப்பெருக்கு ஏற்பட முன்னர் மனதில் தோன்றிய கருத்து
  - படிப்படியாக சேதங்கள்/இழப்புக்கள் ஏற்பட்ட விதம்
  - அந்தந்தச் சந்தர்ப்பங்களில் தமது மனதிலும் குடும்ப அங்கத்தவர்களது மனதிலும் ஏற்பட்ட கருத்துக்கள்.
  - படிப்படியாக ஏற்பட்ட சேதங்களைத் தவிர்ப்பதற்காக எடுத்த நடவடிக்கைகள்
  - வெள்ளப் பெருக்கின் இறுதியில் ஏற்பட்ட விளைவுகள்
  - வெள்ளம் வடிந்து சென்ற பின்னர் அது தொடர்பாக தமது மனதில் தோன்றிய எண்ணங்கள்.
  - தாம் தவறுவிட்ட சந்தர்ப்பங்கள்
  - தாம் செயற்பட வேண்டிய சரியான விதம் பற்றிய விளக்கம் தற்போது உள்ளதாயின் அது தொடர்பான கருத்துக்கள்.
  - எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய வெள்ளப்பெருக்குகளின்போது தாம் எடுக்க எதிர் பார்க்கும் நடவடிக்கைகள்.

- மேற்குறிப்பிட்டவாறாக, வேறு இவ்வாறான சேதங்கள், இழப்புகள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களை வெளிக்கொணர்ந்தவாறு மாணவருடன் கலந்துரையாடுங்கள். அவ் வாறான அனர்த்தங்கள் அடிக்கடி ஏற்படக்கூடுமாகையால் அதற்கான முன்னாயத்தம் அவசியமாகும் என்பதை மாணவருக்கு வலியுறுத்துங்கள். சேதங்கள், இழப்புகள் ஏற்பட முன்னர் முன்னாயத்தம் அவசியமானது என்பதை வலியுறுத்துங்கள்.

| பொருள்/உபகரணம்/ சேவை | செய்யக்கூடிய மாற்றம் |
|---|---|
| பாறாங்கத்தி | அலகின் மழுங்கியத் தன்மையை நீக்குவதற்காக கூர்மை யாக்கல், துருப்பிடிக்காதவாறும் கூர்மை மழுங்காதவாறும் கைகால்களில் மோதாதவாறும் இறாக்கையில் (ஏந்தனத்தில்) வைத்தல் |
| விளக்குமாறு | ஈர்க்குகள் சமமாகத் தேயும் வகையில் சரியாகக் கூட்டுதல், ஈரக்குகள் நனையாத வகையில் வெளிப்புறச் சுவரில் தொங்கவிடுதல் |
| நீர் கொண்டுவரும் குடம் | குடத்தை வைப்பதற்கென ஓர் இடத்தைத் தயார்ப்படுத்தல் கொதித்தாறிய நீரை குடத்தில் ஊற்றிவைத்தல் நீர் சிந்தாத வகையில் தேவையான அளவுக்கு மாத்திரம் நீரைக் குடத்திலிருந்து குவளையில் ஊற்றிக் கொள்ளல் |
| மின்சாரம் | விரைவில் எரிந்துபோகும் பொதுவான மின்குமிழுக்குப் பதிலாக சி.எவ்.எல் (CFL) மின்குமிழ் வாங்குவதற்காக நாளாந்தம் உண்டியலில் நாணயங்கள் இட்டு பணம் சேமித்தல் இரவில் தேவையான இடங்களில் மாத்திரம் மின்குமிழ்களை ஒளிரச் செய்தல் அவ்விடத்திலிருந்து வெளியேறும் போது மின்குமிழை அணைத்தல் |

- இவ்வாறாக அந்தந்தக் குழுவினர், வினைத்திறனுடைய வகையிலும் விளைதிறனுடைய வகையிலும் பயன்படுத்துவதற்காக எடுக்கக்கூடிய வழிவகைகளை முன்வைக்கும்போது ஆசிரியரது கருத்துக்களையும் சேர்த்து அவ்வாறான படிமுறைகளை விருத்தி செய்வதற்கு ஊக்கமளியுங்கள்.

- இறுதியில் தத்தமது வீடுகளில் பொருட்களையும் உபகரணங்களையும் சேவைகளையும், வினைத்திறனுடைய வகையிலும் விளைதிறனுடைய வகையிலும் பயன்படுத்துவதற்காக மேற்கொள்ளக்கூடிய வழிவகைகளை உள்ளடக்கிய அட்டவணையைத் தயாரிக்குமாறு சகல மாணவர்களையும் வழிப்படுத்துங்கள். பின்னர் அது தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.

- தமது அட்டவணையில் அடங்கியுள்ள வழிவகைகளை வீட்டில் நடைமுறைப்படுத்துவதற்காக மாணவர்களுக்கு பெற்றோர் வழங்கவேண்டிய ஒத்துழைப்புக் குறித்து பெற்றோர் சந்திப்பொன்றின்போது விளக்குங்கள்.

## செயற்பாடு 6

- மேற்படி செயற்பாட்டின் இறுதியில் மாணவரது கருத்துக்களையும் உள்ளடக்கி ஒரு கலந்துரையாடல் நடத்துங்கள்.
  அப்போது பின்வரும் கருத்துக்களை வெளிக்கொணருங்கள்.
  - ஒவ்வொரு சேவைக்காகவும் வளங்கள் பயன்படுத்தப்படும், அச்சேவையை பேணுவதற்குச் செலவு செய்ய வேண்டும். செலவை ஈடுசெய்வதற்காக போதுமான பணத்தொகையைச் செலுத்த வேண்டும்.

- சேவை வழங்குபவர் செலுத்திய தொகைக்குப் போதுமான அளவு சேவையை வழங்குவதும் அவசியமாகும்.
- முக்கியமான சில சேவைகள் எமக்கு இலவசமாகக் கிடைக்கின்றன. (***எடுத்துக்காட்டு:*** கல்வி, சுகாதாரம்...)
- எமக்கு இலவசமாகக் கிடைக்கும் சேவைகளுக்காகவும் (கல்வி, சுகாதாரம்) செலவு உண்டு.
- எமது நாட்டு மக்களே அந்தச் செலவைச் செய்கின்றனர்.
- சில சேவைகளுக்காக நாம் சிறு தொகைகளையே செலுத்த வேண்டியுள்ளது. (***எடுத்துக்காட்டு:*** இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்து வண்டிகளில் பருவ கால அனுமதிச்சீட்டு)
- இலவசமாகவும் குறைந்த விலையிலும் எமக்குக் கிடைக்கும் சேவைகளுக்குரிய செலவை எமது நாட்டு மக்களே செய்கின்றனர்.
- எனவே அவ்வாறான சேவைகளை பேணிக்காத்து நடத்திவருவதும் அவற்றின் மூலம் உச்ச பயன்பெறுவதும் எமது பொறுப்பாகும்.

◙ சேவைகளைப் பெறும்போதும் வழங்கும்போதும் கவனஞ் செலுத்த வேண்டிய விடங்கள் தொடர்பாக, வலியுறுத்துவதற்காக அந்தந்தச் சேவை தொடர்பான ஆட்களுக்கு முன்கூட்டியே அறிவித்து வகுப்புக்கு அழையுங்கள்.

***எடுத்துக்காட்டு:***

| | |
|---|---|
| கல்வி | : அதிபர், பிரதி அதிபர் |
| சுகாதாரம் | : குடும்பச் சுகாதாரத் தாதி/பொதுச் சுகாதாரப் பரிசோதகர் |
| தபால்/அஞ்சல் | : தபால் விநியோகிப்பவர்/தபால் நிலைய அதிபர் |
| போக்குவரத்து | : பேருந்து சாரதி/பேருந்து நடத்துநர் (இ.போ.ச, தனியார்) |
| மின்சாரம் | : இலங்கை மின்சார சபை அதிகாரியொருவர். |

◙ இவ்வாறாக ஒரு சில அதிகாரிகளை / ஆட்களை மாத்திரம் அழையுங்கள். ஏனைய சேவைகள் பற்றிய துண்டுப் பிரசுரங்களை அல்லது தகவல் எழுதிய அட்டைகளை குழுக்களுக்கு வழங்குங்கள்.

***எடுத்துக்காட்டு :*** நீர் விநியோக சேவை, தொலைபேசிச் சேவை

## செயற்பாடு 7

◙ சந்தை தொடர்பான பின்வரும் பாடலைப் பாடி ஆட வாய்ப்பளியுங்கள்.

### சந்தை

சந்தை இது சந்தை இது //
சாமான் வாங்கும் சந்தை //
எந்த நாளும் கூடும் இது //
எங்கள் ஊருச் சந்தை //

காய்கறிகள் வாங்கலாம்
கனிவகைகள் வாங்கலாம்
உடுபுடவை வாங்கலாம்
உணவும் பொருளும் வாங்கலாம்

நண்டும் இறாலும் வாங்கலாம்
நல்ல மீன்கள் வாங்கலாம்
இறைச்சி வகையும் வாங்கலாம்
இனிப்பு வகையும் வாங்கலாம்

அப்பாவோடு நானுமே
அன்பாய்ச் சந்தை செல்லுவேன்
தப்பெதுவும் செய்யாமல்
சுற்றிப் பார்த்துத் திரும்புவேன்

***சிறுவர் பாடல் - 1***
***தேசிய கல்வி நிறுவகம்***

◙ சந்தையில் இடம்பெறும் நீதிநியாயமான, அநீதியான நிகழ்வுகளை உள்ளடக்கிய ஒரு நாடகத்தை (பாத்திரமேற்று) முன்வைப்பதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பளியுங்கள்.

# 5.0 மரஞ்செடிகொடிகள்



**பல்வகையான மரஞ்செடிகொடிகள் எங்கும் பரம்பிக் காணப்படுவதால் எமது நாடு அழகுபெற்றுள்ளது. இந்த மரஞ்செடிகொடிகளுள் பெரும்பாலானவை எமக்கு உணவு தருவதாலும், மருந்தாக அமைவதாலும் எமது வாழ்க்கைக்குத் துணையாகின்றன. விசேட கவனஞ் செலுத்தி பேணிக்காக்க வேண்டிய மரஞ்செடி கொடி களும் உள்ளன. எனவே மரஞ்செடி கொடிகளின் இருப் புக்கும் அவற்றைப் பேணுவதற்கும் பங்களிப்புச் செய்தல் எமது பொறுப்பாகும். அதற்கு அடித்தளமாக அமையத்தக்க பரிச்சயத்தை வழங்கும் நோக்குடனேயே இந்தக் கருப்பொருள் திட்டமிடப்பட்டுள்ளது.**

## தேர்ச்சிகள்

- ➲ எமது இருப்புக்கு இன்றியமையாத, உணவுகள், பானங்களைப் பெறுவதற்காக மரஞ்செடிகொடிகளின் காய் கனிகள் மூலம் கிடைக்கும் பயன்களைப் பயன் படுத்துவார்.
- ➲ மரஞ்செடிகொடிகளின் காய்கனிகளினது பல் வகைமையை இனங்கண்டு அவற்றின் இருப்புக்காகப் பங்களிப்புச் செய்வார்.
- ➲ விசேட கவனஞ் செலுத்த வேண்டிய மரஞ்செடிகொடிகளைக் காப்பதில் பங்களிப்பார்.
- ➲ அயற்சூழலில் மரஞ்செடிகொடிகளின் பல்வகைமையை மதித்து அதனைப் பேணு வதில் பங்களிப்பார்.
- ➲ மரஞ்செடிகொடிகள் தொடர்பான பயனுடைய ஆக்கங்கள் புரிவார்.
- ➲ தாவரங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் வெளிக்கொணரப்படும் வகையிலான ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.
- ➲ தாவரங்களின் பல்வகைமை வெளிக்கொணரப்படும் ஆக்கபூர்வமான விளையாட்டு களில் ஈடுபடுவார்.
- ➲ மரஞ்செடிகொடிகளுடன் தொடர்புபட்டு உள அமைதி பெறுவதோடு, இரசனையும் பெறுவார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

## செயற்பாடு 1

▣ தமது பிரதேசத்தில் வளரும் தாவரங்கள் (உணவு, மருந்து வேறு பெறுமதிமிக்க தாவரங்கள்...) தொடர்பான அனுபவங்களை ஏற்கனவே மாணவர்கள் பெற்றுள்ளனர். அந்த அனுபவங்களைத் துணையாகக்கொண்டு ‘‘மரஞ்செடிகொடிகள்’’ எனும் பெயரில் ஒரு கண்காட்சியை நடத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்யுங்கள். கருப்பொருளின் ஆரம்பத்திலேயே அவ்வாறாக திட்டமிட்டுக்கொள்வதும் பின்வரும் விடயங்கள் தொடர் பாகக் கவனஞ் செலுத்துவதும் அவசியமாகும்.

- கண்காட்சிக்காகத் தாவரங்களைத் தெரிவுசெய்தல்
  ***எடுத்துக்காட்டு:*** உணவுப் பயிர்த்தாவரங்கள், மருந்து மூலிகைகள்... போன்றன.
- கண்காட்சிப்படுத்தும் தாவரங்களுக்குப் பெயர்ச்சுட்டி இடுதல்.
- தாவரத்தைப் பொருத்தமான ஒரு பாத்திரத்தில் (சாடியில் அல்லது வேறு பொருத்த மான ஒரு பாத்திரத்தில்) நாட்டி எடுத்து வருதல்

- கொண்டுவரும் தாவரம் மாணவரால் கையாளக்கூடிய அளவுடைய ஒரு தாவரமாக இருத்தல்
- வகுப்புக்குக் கொண்டுவரும் தாவரங்களைப் பொருத்தமான ஓர் இடத்தில் ஒழுங்காக வைத்தல்
- தயார்ப்படுத்தியுள்ள வீட்டுத்தோட்டத்தில் திறந்த வெளியான பொருத்தமான ஓர் இடத்தில் கண்காட்சியை நடத்துதல்
- காய்க்கும் தாவரங்களைக் கொண்டு வருவோருக்கு, முடியுமாயின் அவற்றின் காயொன்றினையும் கொண்டுவருமாறு அறிவுறுத்துதல்
- கண்காட்சி முடிவடைந்த பின்னர் அத்தாவரங்களை பாடசாலைத் தோட்டத்தில் நாட்டுதல்

◘ இவ்வாறாகத் திட்டமிட்டு ‘மரஞ்செடிகொடிகள்’ போன்ற பொருத்தமான ஒரு பெயரில் கண்காட்சியை நடத்துவதற்கான நடவடிக்கைகளைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

◘ தாவரங்களில் இருந்து பயன்பெறுவது எவ்வாறு (காய், பழம், கிழங்கு... என்றவாறாக) என்பதை அனுபவங்களினூடாக குழுவாக கலந்துரையாட வழிப்படுத்துங்கள். சகல அவதானிப்புக்களும் உள்ளடங்கும் வகையில் அறிக்கை தயாரித்து வகுப்பில் முன் வைக்க இடமளியுங்கள். அறிக்கை தயாரிக்கும்போது பல்வகைமையுடையதாகத் தயாரித்து முன்வைப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள்.

◘ மாணவர் இனங்கண்ட தாவரங்களிலிருந்து கிடைக்கும் பயன்கள் பற்றி உரையாடுங்கள்.
***எடுத்துக்காட்டு:***
- உணவாக
- ஔடதபானமாக
- சுவையான பானமாக
- அழகுபடுத்துவதற்காக
- வீட்டலங்காரம்/வீட்டுப்பொருட்களுக்காக

◘ கண்காட்சிப்படுத்திய சில தாவரங்களை, பொருத்தமானவாறு பாடசாலையில் தொடர்ந் தும் பேணி வருமாறு மாணவரை வழிப்படுத்துங்கள். சில தாவரங்களை பாடசாலை யில் பயிர்கள் வளர்க்கும் தோட்டத்திலும் பாடசாலையின் மற்றைய வளவிலும் நடலாம்.

## செயற்பாடு 2

◘ மாணவரைக் குழுக்களாகப் பிரியுங்கள். முன்னைய தினத்தில் கொண்டுவந்த காய் களை குழுக்களிடையே பகிர்ந்தளியுங்கள். முதலில் அவற்றின் புறத்தோற்றத்தை மாத்திரம் அவதானிக்க வழிப்படுத்துங்கள்.
***எடுத்துக்காட்டு:***
- நிறம் யாது?
- காயா? கதிரா? பொத்தியா?
- மேற்பரப்பின் தன்மை எவ்வாறானது?

◘ காய்களை (இருவகையான இனங்கள்) இரண்டாக வெட்டுமாறு வழிப்படுத்துங்கள். (பாதுகாப்பு தொடர்பாக கவனஞ் செலுத்துங்கள்.) வெட்டிய காய்களைப் பின்வருமாறு அவதானிக்க வழிப்படுத்துங்கள்.
- உள்ளே வித்துக்கள் அமைந்துள்ள விதம்
- வித்துக்களின் பருமன், வடிவம், நிறம், எண்ணிக்கை
- உணவாகப் பயன்படுத்தக்கூடிய விதம்

- இந்த அவதானிப்புக்களை அறிக்கைப்படுத்த வழிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு:***

| **உணவாகப் பயன்படுத்தும் காய் வகைகள்** | **உணவாகப் பயன்படுத்தும் வித்து வகைகள்** | **வித்துக்களை நீக்கிய பின் உணவாகப் பயன்படுத்தும் காய்கள்** |
|---|---|---|
| வாழை<br>அன்னாசி<br>கத்தரிக்காய்<br>சிறகவரை<br>பயற்றை<br>பாகல்<br>வெண்டி<br>போஞ்சி | பாசிப்பயறு<br>கவ்பீ<br>நெல்<br>சோளம் | பூசனிக்காய்<br>வெள்ளரிக்காய்<br>மாங்காய்<br>பப்பாசி, புடோல்<br>வட்டுக்கத்தரிக்காய் |

- முதல் கட்டத்தில் இரு வகையான இனங்களைச் சேர்ந்த காய்கள் இடம் பெற்றுள்ளன. என்பதை அவதானியுங்கள். தயாரித்த அறிக்கைளை வகுப்பில் முன்வைக்க இடமளியுங்கள்.

- மரஞ்செடிகொடிகளில் காய்க்கும் காய்களும்,கதிர்களும் எமக்கு ஆரோக்கியமாக இருப்பதற்கும், சுறு சுறுப்பாக இருப்பதற்கும் உதவுகின்றமையை விளங்கிக்கொள்ளக் கூடியவாறு கலந்துரையாடுங்கள்.

- எமக்கு உணவுக்காகவும், எமது நோய்களுக்கான மருந்தாகவும் காய்களும், கதிர் களும் உதவுகின்றமையை வலியுறுத்துங்கள்.

- வகுப்புக்குக் கொண்டுவரப்பட்ட காய்களால் தயாரிக்கப்பட்ட ஓர் உணவை உட்கொள் வதற்கு மாணவருக்கு வாய்ப்பளியுங்கள். இதற்காகப் பெற்றோரின் உதவியைப் பெறுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:*** மாணவரால் தயாரிக்கப்பட்ட ஒரு பழக்கலவை
  பெற்றோரின் உதவியுடன் தயாரிக்கப்பட்ட சக்கரைச் சாதம்/கிச்சடி/ சக்கரைப் பொங்கல்

- முன்னைய இரண்டு தினங்களிலும் பெற்ற அனுபவங்களை அடிப்படையாகக்கொண்டு ஒவ்வொரு சிறிய நூல் வீதம் ஆக்குமாறு குழுக்களுக்கு அறிவுறுத்துங்கள்.

## செயற்பாடு 3

- காய்கள், வித்து வகைகளைக் காட்டும் வேட முகங்களை (முகமூடிகளை) ஆக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.

- ஆக்கிய வேட முகத்தை அணிந்து குறித்த காய், கதிர் அல்லது வித்து பற்றிய விபரங்களை முன்வைப்பதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பளியுங்கள். இதற்காக அறிவுறுத்தல்களை குறித்த தினத்திற்கு முந்திய தினத்தில் வழங்குவது அவசியமாகும்.

  ***எடுத்துக்காட்டு:***
  - நான் எங்கு தோன்றினேன்/பிறந்தேன்? மரத்திலா? செடியிலா? கொடியிலா?
  - பருமன், நிறம் போன்ற புறத்தோற்ற அம்சங்கள்
  - உள்ளே உள்ள வித்துக்களின் அளவு

- அவ்வித்துக்கள் எதற்காகப் பயன்படுகின்றன? உணவுக்காகவா?, புதிய தாவரங்களை உற்பத்தி செய்வதற்காகவா?
- புதிய தாவரங்களை உற்பத்தி செய்வதற்கு மாத்திரம் தான் அவை பயன்படுகின்றனவா?
- பச்சையாக உண்ண முடியுமா?, சமைத்த பின்புதான் உண்ண வேண்டுமா?
- பச்சையாகவும், சமைத்தும் உண்ண முடியுமா? வேறு முறைகளிலும் உண்ண முடியுமா?

  ***எடுத்துக்காட்டு:*** குரக்கன் - மாவாக்கித் தயாரித்த வெவ்வேறு உணவுகளாக பாசிப்பயறு - உணவாகவும், மாவாக்கித் தயாரித்த பலகாரங்களாகவும்.

## செயற்பாடு 4

- மரஞ்செடிகொடிகளின் இயற்கையான நிறங்களை இனங்காண இடமளித்து அந்த அனுபவங்களைக்கொண்டு வீட்டுத்தோட்டமொன்றினைச் சித்திரமாக வரைய சந்தர்ப்பமளியுங்கள்.

- பாடசாலைத் தோட்டத்தில் வெவ்வேறு தாவரங்களின் இலைகளை அவதானிப்பதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பளியுங்கள். நன்கு அவதானிக்குமாறு அறிவுறுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - இளம் பருவத்தில் நிறம்
  - முதிர்ந்த பருவத்தில் நிறம்
  - உலரும் போது நிறம்

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் பெரிய டிமை கடதாசி, பஸ்டல் வர்ணம் அல்லது நீர்ச்சாயம் ஆகியவற்றை வழங்குங்கள்.

- கடதாசிக்கூழ் அல்லது களியைப் பயன்படுத்தி உணவாக உட்கொள்ளப்படும் காய் வகைகளை ஆக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள். வீட்டுத்தோட்டச் சித்திரங்கள் நிலைக்குத்தாகக் காட்சியளிக்கும் வகையிலும், அத்தோட்டத்தில் இருந்து பெறக்கூடிய காய் வகைகளின் கடதாசிக்கூழ்/களியினாலான மாதிரியுருக்கள், கிடையாக அமையுமாறும் கண்காட்சியை ஒழுங்குபடுத்துங்கள்.

- கண்காட்சியைப் பார்வையிடுவதற்காக பெற்றோரையும் பாடசாலைச் சமுதாயத்தையும் அழையுங்கள்.

- மாணவர்களது ஆக்கங்களைக் காட்சிப்படுத்திப் பாராட்டுங்கள்.

## செயற்பாடு 5

- பின்வரும் பல்வேறு வித்து வகைகளையும் காய் வகைகளையும் வகுப்புக்குக்கொண்டு வருமாறு மாணவர்களுக்குக் கூறுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - முற்றிய வெண்டிக்காயொன்று, சிறகவரைக்காயொன்று, பயற்றங்காயொன்று
  - நெற்கதிரொன்று, சோளப் பொத்தியொன்று
  - மாம்பழம், நாவல் பழம், பலாக்கொட்டை, மரமுந்திரிகைப்பழம், காசித்தும்பைக் காய், முடக்கொத்தான் காய்
  - எண்ணைய் வித்து, பஞ்சு வித்து, சீதேவியர் செங்கழுநீர் வித்து, துத்திரி மணி, எருக்கலை வித்து, ஆடையொட்டிக் காய், றப்பர் வித்து, குன்றிமணி வித்து, முருங்கை வித்து, பாக்கு (கமுகு) வித்து.

- மாணவரைக் குழுக்களாகப் பிரியுங்கள். மாணவர்கள் வகுப்புக்குக்கொண்டு வந்த காய்கள், வித்துக்களைத் திரட்டி குழுவுக்கு ஒரு தொகுதி வீதம் பகிர்ந்தளியுங்கள். அந்தந்தக் குழுவுக்கு அவ்வித்துக்களை அவதானித்து அவ்வித்துக்கள் / காய்களைக் கொண்டு பின்வருவனவற்றைச் செய்து பார்க்க வழிப்படுத்துங்கள். பின்வரும் வினாக் களை வினவி வழிப்படுத்துங்கள்.
  - நீரில் போட்டால் என்ன நடக்கும்?
  - காற்றில் அகப்பட்டால் என்ன நடக்கும்?
  - உடையிலோ துணித்துண்டொன்றிலோ பட்டால் என்ன நடக்கும்?
  - கதிர்/காய் வெடித்தால் என்ன நடக்கும்?

- இச்செயற்பாட்டைச் செய்வதால் பெறும் அனுபவங்களைத் துணையாகக் கொண்டு, மரஞ்செடி கொடிகள் பரவும் விதம் பற்றி மாணவருடன் கலந்துரையாடுங்கள். தமது இனத்தைத் தொடர்ந்தும் பேணுவதற்காகவே அவை பரம்புகின்றன என்பதை வலியுறுத்துங்கள். அந்தந்த முறையில் பரவுவதற்காக அவற்றின் வித்துக்கள் இசை வடைந்துள்ள விதம், பற்றிய விபரங்களையும் உண்மையான பொருள்களை அல்லது படங்களை உள்ளடக்கி, மரஞ்செடிகொடிகளின் பரம்பல் தொடர்பான சுவர்ப் பத்திரிகை யொன்றை ஆக்குமாறு மாணவரைத் தூண்டுங்கள்.

## செயற்பாடு 6

- மாணவரைக் குழுக்களாகப் பிரித்து தத்தம் குழுத் தலைவர்களை நியமித்துக்கொள்ள வாய்ப்பளியுங்கள். ஒருவர் தலைவராகவும் ஏனையோர் அங்கத்தவர்களாகவும் இருக்க வழிப்படுத்துங்கள். குழுவை இவ்வாறு பெயரிடலாம்.
  - பிராணிகளால் அல்லது மனிதரால் பரம்பும் வித்துக்கள்
  - காற்றினால் பரம்பும் வித்துக்கள்
  - கதிர் வெடித்து, வித்துக்கள் சிதறி விழுவதால் பரம்பும் வித்துக்கள்
  - நீரில் மிதந்து சென்று பரம்பும் வித்துக்கள்
  - பிராணிகளின் உடலில் அல்லது மனிதரின் உடைகளில் ஒட்டிப் பரம்பும் வித்துக்கள்.

- ஒவ்வொரு குழுவுக்கும் கைப்பொம்மலாட்டப் பாவைகள், உண்மைப்பொருள்கள் அல்லது தொப்பிகளை ஆக்கி அந்தந்த காய்கள், வித்துக்களை உருவகித்து எடுத்துக்காட்ட இடமளியுங்கள்.

- தலைவருக்குத் தமது குழுவை அறிமுகஞ்செய்ய வாய்ப்பளியுங்கள். அவர்களது தகவல்களை முன்வைக்க உதவி புரியுங்கள்.

*எடுத்துக்காட்டு:* **பிராணிகளால் வித்துக்கள் பரம்பும் குழு**

மா, பப்பாசி, புடோல், கத்தரிக்காய்

**மாம்பழம்**

எனது பெயர் மாம்பழம்<br>
நான் ஒரு பெரிய மரத்தில் காயத்தேன்.<br>
நான் ஒரு நல்ல சுவையான பழம்<br>
எனக்கு பல சகோதரர்கள் உள்ளனர்.<br>
என்னைப் பழுக்கவைத்து உண்ணலாம்.<br>
காயைச் சமைத்தும் உண்ணலாம்.<br>
மனிதர்கள் என்னை விரும்பி உண்பார்கள்.<br>
பறவைகளும் என்னை விரும்பி உண்ணும்.<br>
அவர்கள் எனது உள்ளே இருக்கும் வித்தை நாட்டுவார்கள்.<br>
அதிலிருந்து எனது புதிய மரம் வளரும்.

- இவ்வாறான விளக்கங்கள் மூலம் மரஞ்செடிகொடிகள் பரம்புவது தொடர்பாக அறிந்து கொண்ட விடயங்களை உறுதிப்படுத்துங்கள். இவ்வாறான முன்வைப்புக்களைச் செய்யும்போது வகுப்பில் ஏனைய பிள்ளைகளுக்கு வினாக்கள் கேட்பதற்கு இட மளியுங்கள்.

## செயற்பாடு 7

- சூழலிலிருந்து பெற்ற பல்வேறு வித்துக்கள், காய்கள், கதிர்களைக்கொண்டு பல்வேறு ஆக்கங்கள் புரியுமாறு மாணவரை வழிப்படுத்துங்கள். உணவாகப் பயன்படுத்தும் வித்துக்கள், காய்கள், கதிர்களைத் தவிர்த்து, பணச் செலவின்றி இலகுவாகத் தேடிப் பெறக்கூடிய காய், வித்து, கதிர் வகைகளைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - பனங்காயினால் பிராணி உருவங்கள் செய்தல்
  - வெவ்வேறு வித்துக்களைப் பயன்படுத்தி பூ வகைகளைச் செய்தல்
  - கடல்மாங்காய்க் காய்களால் பிராணிகளின் உருவங்கள் செய்தல்
  - றப்பர் வித்துக்கள், றப்பர் கோதுகள் போன்றவற்றால் பல்வேறு உருவங்கள், வேறு ஆக்கங்கள் செய்தல்

- இந்த ஆக்கங்களைச் செய்துமுடித்த பின்னர் மாணவரது ஆக்கங்களை மதித்துப் பாராட்டி மரஞ்செடிகொடிகள் மீது அன்பு செலுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத் துங்கள்.

## செயற்பாடு 8

- எமக்குத் தாவரங்கள் மூலம் கிடைக்கும் பயன்கள் பற்றி வலியுறுத்தும் பின்வரும் செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.

- பாடசாலைத் தோட்டத்தில் பெரிய மரமொன்றின் கீழ் உள்ள நிழலான ஓர் இடத்தை நோக்கி மாணவரை அழைத்துச் செல்லுங்கள். அவ்வாறு செல்லும்போது கடுமையான சூரிய ஒளி படத்தக்க ஒரு பாதையைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள். வெய்யிலில் சென்று மரநிழலை அடைந்தவுடன் மாணவர்கள் உணரக்கூடிய வேறுபாடுகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

- மரநிழலின் கீழ் உள்ள குளிர்ச்சி பற்றி உரையாடுங்கள். மரங்களின் இலைகள் அசையும் சத்தத்தைச் செவிமடுக்க வழிப்படுத்துங்கள். பாடசாலைத் தோட்டத்தில் அவ்வாறான மரஞ்செடிகொடிகள் உள்ளனவாயின் அவற்றைப் பேணிப்பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள். மரத்தடியில் அமைதியாக, கண்களை மூடிய வாறு இருக்க வழிப்படுத்துங்கள். உள்ளத்தினால் உணரப்படும் சுகத்தை அனுபவிக்க இடமளியுங்கள்.

- மரங்களால் எமக்குக் கிடைக்கும் பயன்கள் பற்றிய கருத்துக்களை வெளியிட (சித்தனைக் கிளர்வு மூலம்) இடமளியுங்கள். மாணவரது மனதில் தோன்றிய கருத்துக் களைப் பட்டியற்படுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - மரஞ்செடிகொடிகள் எமக்கு உணவு பானங்களைத் தருகின்றன.
  - மரஞ்செடிகொடிகள் எமக்கு மூலிகை மருந்துகளைத் தருகின்றன.
  - வீடு கட்டும்போது கூரையிலும் கதவு யன்னல்களிலும் பயன்படுத்தப்படுகின்றது.
  - தளபாடம் செய்யப் பயன்படுகின்றது.

- பிராணிகளின் உணவாகப் பயன்படுகின்றது.
- சூழலுக்கு அழகூட்டுகின்றது.
- எரிபொருளாகப் பயன்படுகின்றது.
- மரஞ்செடிகொடிகள் காரணமாக மனம் நிம்மதியடைகின்றது.

- செயற்பாட்டின் இறுதியில், இவ்வாறான பயன்களை மதித்து பெருந்தொகையானோரின் பயன்பாட்டுக்காக மாணவர்கள் செய்யக்கூடியவை பற்றி வினவுங்கள். அக்கருத்துக்கள் மீது கவனஞ்செலுத்தி வகுப்பில் யாவரும் செய்யக்கூடிய யாதேனுமொன்றை நடை முறைப்படுத்த வழிகாட்டி உதவி புரியுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  மாணவர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஔடத (மூலிகை) தாவரக் கன்றொன்றைக் கொண்டுவந்து பாடசாலைத்தோட்டத்தில் மூலிகைப்பூங்காவொன்றினை அமைத்தல்

## செயற்பாடு 9

- தமது பிறந்த நாளன்று நாட்டிய யாதேனும் ஒரு மரம் உள்ளதாயின் அது பற்றிப் பேசுவதற்கு மாணவருக்கு வாய்ப்பளியுங்கள்.

- பாடசாலைத் தோட்டத்தில் பாடசாலை வரலாற்றுடன் தொடர்புடைய மரங்கள் உள்ளனவாயின் அவற்றை இனங்காண இடமளியுங்கள்.

- அம்மரங்கள், யார் யாரால் எவ்வெப்போது நடப்பட்டவை என்பதைத் தேடியறிய வழிப்படுத்துங்கள்.

- தமது பிரதேசத்தின் மிகப் பண்டைய தாவரம் அல்லது தாவரங்கள் தொடர்பாகத் தேடியறிய, கேட்டறிய வழிப்படுத்துங்கள்.

- தமது வாழ்க்கையுடன், பாடசாலை வரலாற்றுடன், மாகாணத்தின் வரலாற்றுடன் நாட்டின் வரலாற்றுடன் தொடர்புடைய மரங்கள் பற்றி மாணவருடன் கலந்துரை யாடுங்கள். அவற்றைப் பேணிக்காப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள்.

## செயற்பாடு 10

- இச்செயற்பாட்டுக்கு முன்னதாக தமது பிரதேசத்தில் இனங்காணக்கூடிய நமது நாட்டுக்கே உரிய தாவரங்கள் எவை எனக் கண்டறியுமாறு மாணவரை வழிப்படுத் துங்கள்.

- ஒரு நாட்டுக்குரிய தாவரங்கள் எனப்படுபவை அந்நாட்டில் தோன்றிய அந்நாட்டுக்கு உரித்தான மரஞ்செடிகொடிகளாகும்.

  ***எடுத்துக்காட்டு:***

  பச்சைக் கொரக்காய்ப்புளி, எண்ணை, குங்குலிய மரம், வெசாக் ஒக்கிட்டு, பெரும்பிரம்பு, காட்டிலுப்பை, தொம்மாக்கொட்டை, சீண்டுக்கொடி, தொரணை, கஸ்தூரி மஞ்சள், பாக்கிலிப்பால், நிலவேம்பு

  போன்றவை இலங்கையில் காணப்படும் எமது நாட்டுக்குரிய சில தாவரங்களாகும். இலங்கையில் இலங்கைக்கே உரித்தான ஏறத்தாழ 830 தாவர வகைகள் உள்ளன.

- மாணவர் தேடியறிந்த தகவல்களையும் துணையாகக்கொண்டு இவ்வாறான தாவரங்கள் எமது நாட்டின் அரும்பொக்கிசங்களாகையால், எதிர்காலச் சந்ததியினருக்காக அவற்றைப் பேணிப்பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள்.

- தமது பிரதேசத்தில் காணப்படும் எமது நாட்டுக்கு உரித்தான சில தாவரங்களை இனங்காண மாணவரை வழிப்படுத்துங்கள். வசதியுள்ளதாயின் அத்தாவரங்களை அவதானிக்க வாய்ப்பளியுங்கள்.

- வரலாற்று முக்கியத்துவமுடைய தாவரங்களையும் எமது நாட்டுக்குரிய தாவரங்களையும் பேணிக்காப்பதற்காக நாம் செய்யக்கூடியவை பற்றிக் கலந்துரையாடுங்கள்.

- வரலாற்று முக்கியத்துவமுடைய தாவரங்கள், பண்டைப்பெருமைமிக்க தாவரங்கள் எமது நாட்டுக்குரிய தாவரங்கள் பற்றிய பாடல்களைப் பாடி ஆட, ஆக்கம்புரிய வழிப்படுத்துங்கள்.

- ஆக்கபூர்வமான கதை நாடகங்களை முன்வைக்க வாய்ப்பளியுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  சில மனிதர்கள் மரங்களைத் தறிப்பதற்காக காட்டினுள் நுழைகின்றனர். தறிக்கும் மரங்கள் ஓலமிட்டு அழுகின்றன. தம்மை அழித்துவிட்டால் நாட்டில் தம்மைப்போற் வேறு மரம் கிடையாது என உரத்துக் கூறுகின்றன. காப்பாற்றுமாறு கதறுகின்றன. எனினும் மனிதர்கள் அதனைப் பொருட்படுத்தவில்லை. மரங்களைத் தறித்து வீழத்துகின்றனர். மரங்களில் கூடுகட்டியிருந்த பறவைகள் மாலையில் திரும்புகின்றன. அவர்களுடைய வீடுகள் கிடையாது. பறவைகள் கீச்சிட்டபடி அங்குமிங்கும் பறந்து திரிகின்றன. மரத்தடியை வீடாகக்கொண்டு வாழ்ந்த பிராணிகள் வருகின்றன.

  அப்பிராணிகளும் கூச்சலிட்டபடி அலைகின்றன. காட்டுக்கு அருகே கிராமத்தில் வாழும் சிறுவர்களும் வளர்ந்தோரும் இடத்துக்கிடம் கவலையுடன் நிற்கின்றனர். தறித்து வீழ்த்திய மரங்களின் இலைகள் காய்ந்து சருகாகிப்போயுள்ளன. இதற்கிடையே ஒரு குரல் ஒலிக்கிறது.

  கம்பீரமான குரலின் மூலம் எமது நாட்டுக்கு உரித்தான தாவரங்கள், பண்டைப் பெருமைமிக்க தாவரங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகின்றது.

- இவ்வாறான ஆக்கபூர்வமாக கதை, நாடகங்களை ஆக்குவதற்கும் அவற்றை முன்வைப்பதற்கும் பின்வரும் பாடலைப் பாடுவதற்கும் மாணவருக்கு வாய்ப்பளியுங்கள்.

**மரங்கள் செடிகள் கொடிகள்**

மரங்கள் செடிகள் கொடிகள்
மனிதனுக்கு எத்தனை பயன்கள்!
மரங்களை வளர்ப்பத னாலே
மழைதனைப் பெறவழி யாகும்!

ஆல மரத்தின் அடியில்
அடடா நிழல்தரும் குளிர்ச்சி!
ஆல மரத்தில் கூடு
அதுதான் பறவைக்கு வீடு!

நாம்வெளி விடுகிற மூச்சில்
நச்சுக் காபனீரொட் சைட்டு!
ஆம் அதை இலைகள் ஏற்று
ஒட்சிச னைவெளி யாக்கும்!

மரத்தின் இலை, வேர், மருந்தாய்
மனிதனின் நோய்களைப் போக்கும்!
மரத்திலை வேர்கள் நமக்கு
வாசனைப் பொருளாய் மாறும்!

சுற்றிலும் ஆலையில் புகையால்
தூசு படிந்த காற்று!
சுற்றிவிடும் மாசுக் காற்றைத்
தூய்மைப் படுத்திடும் மரங்கள்!

***நன்றி: பட்டுச்சிறகு***
***கவிஞர் செல்ல கணபதி***

- இப்பாடல்களுக்கேற்ப தாளமிடவும் ஆடவும் மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

**மரம்**

நிலத்தில் காலை ஊன்றி
நிற்கும் அந்த மரந் தான்
பலத்த காற்றைக் கண்டும்
பயமே கொள்வதில்லை

தலையின் மீது பூக்கள்
தங்கை அவளைப் போல
இலைகள் நீள மாகும்
எங்கள் கைகள் போல

சின்னச் சின்ன மொட்டு
செவியில் தோடு போல
பென்னம் பெரிய காய்கள்
பிடுங்கித் தின்னலாமே

வட்ட மான பழங்கள்
வாயை ஊறச் செய்யும்
எட்டிப் பிடுங்க லாமோ?
ஏற வேண்டும் தம்பி

மழை பொழியச் செய்யும்
மரம் வளர்க்க வேண்டும்
நிழல் மரங்களாலே
நிலம் குளிர்ந்து போகும்.

***- வாகரை வாணன்***
***நன்றி: ஈழத்துச் சிறுவர் பாடல் களஞ்சியம்***

- மரஞ்செடிகொடிகள் பற்றிக்கூறும் இவ்வாறான மேலும் சில பாடல்களைப் பாடி ஆட இடமளியுங்கள்.

**தோட்டம்**

வீட்டிலே நாம் போட்ட தோட்டத்திலே
வெண்டி பூத்துக் காய்த்தது
தக்காளி காய்த்துப் பழுத்தது
வெள்ளரி பழுத்து வெடித்தது

மாட்டின் சாணம் எருவாயிட்டு
மாமா தண்ணீர் ஊற்றினார்
மாமா களையைப் பிடுங்கினார்
மாமா மண்ணைக் கிளறினார்

நாட்டில் எல்லோரும் தோட்டம் போட்டால்
நலிக்கும் வறுமை ஓடுமே
நமது சோம்பல் தீருமே
நல்ல உணவு கிடைக்குமே

***- ஈழத்துப் பூராடனார்***
***நன்றி: ஈழத்துச் சிறுவர் பாடல் களஞ்சியம்***

## செயற்பாடு 11

- பாடசாலைத் தோட்டத்திலோ அயற் சூழலிலோ தாவரங்களின் பல்வகைமையைக் கண்டறிய வழிப்படுத்துங்கள்.
  அச்சூழலில் காணப்படும் மரஞ்செடிகொடிகளின் தன்மை
  அவை அச்சூழலுக்கு இசைவடைந்துள்ள விதம்
  பழங்களின்/காய்களின் தன்மை; பூக்களின் தன்மை
  அந்தச் சூழலில் அதிக அளவில் காணப்படுகின்ற பிராணிகள்

- இவ்வாறான ஒரு வினாக்கொத்துக்கு அமைவாக அவதானிக்க இடமளியுங்கள். முக்கியமானவற்றைக் குறித்துக்கொள்ள வழிப்படுத்துங்கள்.

- பாதுகாப்பு தொடர்பாக விசேட அறிவுறுத்தல் வழங்குங்கள். மாணவர்களுக்குப் போதுமான அளவு நேரத்தைச் செலவிட இடமளியுங்கள். வகுப்புக்கு கொண்டுவந்த தகவல்களைக்கொண்டு அறிக்கை தயாரித்து வகுப்பில் முன்வைத்துக் கலந்துரையாட இடமளியுங்கள். அவதானித்த விடயங்களில் கவனஞ்செலுத்தி அவற்றினூடாக கலந்துரையாடலை நடத்துங்கள்.

- அந்தந்தச் சூழலில் தாம் கண்ட அழகை வெளிப்படுத்தும் பாடல்கள், கட்டுரைகள், சித்திரங்களை உள்ளடக்கிய வகுப்புச் சஞ்சிகையைத் தயாரிக்க வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 12

- பாடசாலைத் தோட்டத்தில் பல்வேறு மரஞ்செடிகொடிகள் காணப்படும் சில நிலப்பகுதி களைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள்.

- பாடசாலைத் தோட்டத்தில் அவ்வாறான இடங்கள் இல்லையாயின், அயலில் பொருத்த மான ஓர் இடத்தைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள். மாணவரைக் குழுக்களாகப் பிரித்து ஒரு சதுர மீற்றர் அளவு அடையாளமிட்ட நிலப்பகுதி ஒவ்வொன்று வீதம் குழுக்களுக்கு ஒப்படையுங்கள்.
- தெரிவுசெய்யப்பட்ட நிலப்பகுதியில் உள்ள வெவ்வேறுபட்ட மரஞ்செடிகொடிகளை அவதானிக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.

- ஒரு சதுர மீற்றர் நிலத்தில் எத்தனை தாவர வகைகள் உள்ளன எனத் தேடியறிய வழிப்படுத்துங்கள். மாணவர்கள் இடர்ப்பாடுகளை எதிர்நோக்குகின்றனராயின் உதவி புரியுங்கள்.

- ஒரே பிரதேசத்தில் பல்வேறு வகைப்பட்ட தாவரங்கள் உள்ளன என்பதை மாணவர்கள் விளங்கிக்கொள்ளக் கூடியவாறு கலந்துரையாடல் நடத்துங்கள்.

- பல்வேறுபட்ட மரஞ்செடிகொடிகள் காரணமாக, சூழல் அழகு பெறுகின்றமையைக் கலந்துரையாடல் மூலம் வெளிக்கொணருங்கள். இலைகளின் வடிவம், நிறம், பூக்களின் பல்வகைப்பட்ட தன்மை, தண்டின் தன்மை, தண்டின் பல்வகைப்பட்ட தன்மை ஆகிய வற்றை இதற்காகப் பயன்படுத்துங்கள்.

- குழுக்கள் அவதானித்த நிலப்பகுதியில் உள்ள பல்வேறு தாவரங்களின் எண்ணிக்கைப் படி உயிர்ப்பல்வகைமை உயர்வானதா? குறைவானதா? எனத் தீர்மானிக்க முடியும் என்பதை வலியுறுத்துங்கள்.

- வகுப்பின் எதிரே அல்லது அயலில் பல்வேறுபட்ட தன்மையைக்கொண்ட தாவரங்களை வளர்த்து அழகுபடுத்துமாறு வழிப்படுத்துங்கள்.


- தமது வீட்டு முற்றத்தின் ஒரு பகுதியையும் அவ்வாறாக அழகுபடுத்த வழிப் படுத்துங்கள்.

- உயிர்ப்பல்வகைமையின் வியத்தகு தன்மையை நேரடியாக அனுபவிப்பதற்கு வாய்ப்பளியுங்கள்.
- வெவ்வேறு தாவர இலைப்பகுதிகள், அல்லது பல்வேறு பூக்களைக் கொண்டு அழகான பூச்செண்டொன்றை ஆக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள். தேவைப்படுமிடத்து உதவி புரியுங்கள். மாணவர் தயாரித்த அழகிய பூச்செண்டை வகுப்பில் மேசைமீது வைக்க வழிப்படுத்துங்கள்.

- மரஞ்செடிகொடிகள் தொடர்பான பின்வரும் விளையாட்டில் ஈடுபட சந்தர்ப்பமளியுங்கள்.

- மாணவரை விளையாட்டு மைதானத்துக்குத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்லுங்கள். நிலத்தில் உதிர்ந்துள்ளவற்றில் இருந்து வெவ்வேறுபட்ட 3 அல்லது 4 வகையான தாவர இலைகளைப் பொறுக்குமாறு அறிவுறுத்துங்கள். ஒவ்வொரு தாவர வகையிலும் 15 - 20 இலைகள் வரை பொறுக்கிக் கொள்வது போதுமானது.

- படத்தில் காட்டப்பட்டுள்ளது போன்று மாணவரை 3அல்லது 4 குழுக்களாப் பிரித்து A, B, C, D என உரிய இடங்களில் நிறுத்துங்கள்.




பொறுக்கிய இலைகளை A, B, C, D எனக் குறிக்கப்பட்ட சிறிய வட்டங்களினுள் வையுங்கள்.

சைகை வழங்கப்பட்டவுடன் குழுவில் முதலாவதாக இருப்பவர், தமக்குரிய வட்டத்தில் இருந்து ஓர் இலையை எடுத்து ஓடிச்சென்று மத்தியில் உள்ள வட்டத்தினுள் போட வேண்டும். வட்டத்தில் இலையை இட்டவர் வரிசையின் பின்னேபோய் அமர்தல் வேண்டும். இவ்வாறாக ஒழுங்கு முறைப்படி அங்கத்தவர்கள் எல்லோரதும் ஈடுபாட்டு டன், தமக்குரிய வட்டத்தினுள் உள்ள இலைகள் எல்லாவற்றையும் நடுவில் உள்ள வட்டத்தினுள் போட்ட பின்னர் இறுதி அங்கத்தவரும் திரும்பி வந்து வரிசையில் சேர்ந்துக்கொண்ட குழுவே வெற்றிபெற்ற குழுவாகக்கருதப்படும். இவ்வாறான விளை யாட்டுக்களைத் திட்டமிட்டு மாணவர்களுக்கு அவற்றில் ஈடுபடச் சந்தர்ப்பமளியுங்கள்.

# 6.0 நீர்



**உலகில் உள்ள நீரின் ஏறத்தாழ 97 சதவீதமான பகுதி உப்புக்கலந்த நீராகக் காணப்படுகின்றது. மேலும் 2 வீதமான பகுதி பனிக்கட்டியாகக் காணப்படுகின்றது. எனவே மனிதனின் பயன்பாட்டுக்கும் தாவரங்களின் வளர்ச் சிக்கும் எஞ்சியிருப்பது 1 சதவீதமான நீரேயாகும். இந்த அளவுகளில் பாரிய மாற்றங்கள் ஏற்படுவதில்லை. எனினும் நீர் மாசடைவதால், பயன்படுத்தக்கூடிய நிலையில் காணப் படும் நீர் அசுத்தமடைந்து பயன்படுத்த முடியாத நிலையை அடையும். எனவே நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது காலத்தின் தேவைகளுள் ஒன்றாகும். பல்வேறு சூழல் சீர்கேடுகள் காரணமாக, நீர் ஊற்றுக்கள் வற்றிப்போதல், ஆறுகள் உலர்ந்து போதல் போன்றவை காரணமாக உணவுப் பயிர்களைப் பயிரிட முடியாத ஒருநிலை ஏற்பட இடமுண்டு. சனத்தொகை அதிகரிப்புடன் நுகரப்படும் நீரின் அளவும் அதிகரித்துள்ளது. இவை யாவும் நீர் தொடர்பாக நாம் எதிர்நோக்கும் சவால்களாகும்.**

## தேர்ச்சிகள்

- பெறுமதிமிக்க ஒரு வளமாகக்கருதி, நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவார்.
- ஆரோக்கியமாக வாழ்வதற்காகப் போதுமான அளவுக்கு நீரை நுகருவார்.
- நீர் தொடர்பான பாரம்பரியமான பழக்கவழக்கங்களை ஆராய்வுபூர்வமாகப் பேணி வருவார்.
- நீர் மாசடைதல் தொடர்பாகக் கவனஞ்செலுத்தி, அதனைத் தவிர்ப்பதற்காகப் பங்களிப்புச் செய்வார்.
- ஓடும் நீரின் சக்தியைப் பயன்படுத்தி இயக்கத்தக்க உபகரணங்களின் மாதிரியுருக் களை ஆக்குவார்.
- நீருடன் தொடர்புடைய ஆடல் பாடல்களை முன்வைப்பார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

## செயற்பாடு 1

- பாடத்துக்கு முன்னர் பின்வரும் தகவல்களை தேடிப்பெற்றுக் கொண்டுவருமாறு மாணவருக்கு அறிவுறுத்தல் வழங்குங்கள்.
  - தாம் நாளொன்றுக்கு பருகும் நீரின் அளவு எத்தனை குவளைகள் (Tumblar) அல்லது எத்தனை கோப்பைகள் (Cup).
  - வீட்டில் சமையலறை வேலைகளுக்காக நாளொன்றுக்கு பயன்படுத்தும் நீரின் அளவு
  - வீட்டில் வேறு வேலைகளுக்காக நாளொன்றுக்கு பயன்படுத்தும் நீரின் அளவு
  - குழாய்நீர் பயன்படுத்துவதானால் நாளொன்றுக்குப் பயன்படுத்தும் நீர் அலகுகளின் அளவு

- இத்தகவல்களைக்கொண்டு மாணவரொருவர் நாளொன்றுக்குப் பருகும் நீரின் அளவை அண்ணளவாக லீற்றரில் கணித்துக்கொள்ளுங்கள்.

- அதன்படி, வகுப்பு மாணவர் அனைவருக்குமாக நாளொன்றுக்கு பருகுவதற்குத் தேவையான நீரின் அளவை அனுமானியுங்கள்.

- மேலும் மாணவர் அனைவரதும் வீடுகளில் நாளொன்றுக்குப் பயன்படுத்தும் மொத்த நீரின் அளவு பற்றி மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

- அவற்றுக்கு அமைய எமது நுகர்வுக்காக நாளொன்றுக்கு பெருமளவு நீர் தேவை என்பதைக் கலந்துரையாடல் மூலம் வெளிக்கொணருங்கள்.

- நீரை நுகரும்போது எவ்வளவு நீர் வீண்விரயமாகிறது என்பது பற்றியும், நீர் வீண் விரயமாவதைத் தவிர்க்கக்கூடிய விதம் பற்றியும் கலந்துரையாடுங்கள். அவற்றின் ஊடாக நீரின் மூலம் உச்ச அளவில் பயன்பெறக்கூடிய விதம் பற்றிக் கலந்துரை யாடுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - முகம் கழுவுவதற்கான நீரை ஒரு பாத்திரத்தில் இட்டுக்கொள்ளல் (குழாய்களில் முகம் கழுவும்போது)
  - வீட்டுக் கழிவு நீரைப் பொருத்தமான பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தல்

- மாணவரது வீட்டில் நீரைப்பெறும் விதம் தொடர்பான தகவல்களை ஒரு வரைபாகக் காட்ட வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 2

- புவியில் நீர் எவ்வாறான நிலைகளில் காணப்படுகிறது எனக் கலந்துரையாடுங்கள்.

- இதற்கான பிரவேசமாக ‘‘நீர்த்துளியின் கதை’’ எனும் தலைப்பில் ஒரு கதையை உருவாக்குங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  முன்பொரு காலத்தில் நான் ஒரு பேசினினுள் இருந்தேன். ஒரு தாய், தனது குழந்தையை அந்த நீரில் நீராட்டினாள். நீராட்டி முடிந்த பின்பு என்னையும் நண்பர்களையும் வடிகாலில் கொட்டினாள். வடிகாலில் ஓடிச்சென்று நிலத்தை அடைந்தேன். நிலம் என்னை உறிஞ்சிக்கொண்டது. மண்ணினுள் இருந்த நான் சில நாட்களின் பின்பு ஒரு மரத்தின் மேலே சென்று ஓர் இலையினூடாக வெளி யேறினேன். பின்னர் காற்றில் மிதந்து சென்று முகிலொன்றினுள் சேர்ந்து கொண் டேன். என்னைப்போன்ற பலர் அங்கு என்னுடன் சேர்ந்து கொண்டார்கள். சிறிது காலம் வானத்தில் மிதந்துகொண்டிருந்தேன். ஒரு நாள் மீண்டும் நிலத்தை அடைந்தேன். கற்களுக்கு இடையே புகுந்து விளையாடினேன். ஒரு தொட்டியை அடைந்தேன். சிறிது நேரத்தில் ஒரு சிறிய குழாயின் ஊடாகப் புகுந்து சென்றேன். இப்போது நான் இந்தக்கேத்தலினுள் இருக்கிறேன். அடுத்ததாகத் தேநீர்க்கோப்பை யினுள் செல்வேனா?, ஆவியாகி மீண்டும் ஆகாயத்தில் செல்வேனா? கொஞ்சம் பொறுத்துத்தான் பார்க்க வேண்டும். எங்கேதான் போனாலும் மீண்டும் மீண்டும் உங்களைச் சந்திக்க வந்துகொண்டே இருப்பேன்!

- இவ்வாறான நீர் காணப்படும் வெவ்வேறு இடங்கள் பற்றிக் கலந்துரையாடி (கடல், ஆறு, நீர்வீழ்ச்சி, அருவி, ஓடை, கிணறு, குளம் ஏனைய இடங்கள்) அவற்றுடன் தொடர்புபடுத்தி அந்த நீர் உலகெங்கும் ஒரு சக்கரமாகக் காணப்படுகின்றமையை மாணவர்களுக்கு விளக்குங்கள். மேலும் பல்வேறு மாற்றங்களை உட்படுத்தி நீர்த் துளியின்கதையைப் புனைவதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பமளியுங்கள். தாம் எழுதிய கதையின் மனங்கவர்ந்த ஒரு சந்தர்ப்பத்தைச் சித்திரமாக வரைய வழிப் படுத்துங்கள். அச்சித்திரங்களைக் காட்சிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 3

- சகலரது உடலிலும் நீர் அடங்கியுள்ளது என்பதையும் அது வெவ்வேறு வழிகளில் உடலில் இருந்து வெளியேறும் என்பதையும் விளக்குங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***
  வியர்வை, சிறுநீர், வெளிச்சுவாசம் போன்றவை

- எனவே உடலில் நீர் மட்டத்தைப் பேணுவதற்காக போதுமான அளவு நீரைப்பருகு வதன் முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

- கடினமான உடலுழைப்பு, விளையாட்டு போன்று அதிக அளவில் வியர்வை வெளி யேறும் சந்தர்ப்பங்களில் அதிக அளவு நீர் பருகுவது அவசியமாகும் என்பதை விளக்குங்கள்.

- போதுமான அளவு நீரைப் பருகுவதால் ஆரோக்கியமாகவும் மலர்ச்சியாகவும் இருக்க முடியும் என்பதையும் விளக்குங்கள். கழிச்சல்/வயிற்றோட்டம் போன்ற நோய்கள் ஏற்படுவதை கொதித்தாறிய நீரைப் பருகுவதால் தவிர்த்துக்கொள்ள முடியும் என்பதையும் குறிப்பிடுங்கள்.

## செயற்பாடு 4

- **நீர் வடிகட்டியொன்று அமைத்தல்**
  இதற்காக படத்திற் காட்டியுள்ளது போன்று பெரிய பிளாத்திக்குப் போத்தலொன்றை வெட்டிக்கொள்ளுங்கள்.



பகுதி A யின் வாயைக் கீழ் நோக்கித் திருப்பி, அதனை ஒரு புனல் போன்று பயன் படுத்துங்கள். அதன் வாய் மூடப்படும் வகையில் பஞ்சுத்திரளையொன்றைச் சிறைப் படுத்துங்கள். பின்னர் அதன் மீது வெவ்வேறு அளவுடைய பரல்களைப் படை படை யாக இடுங்கள். பரல் படைகளின் மீது மணல்படை இடுங்கள். அப்படைகளின் ஊடாக நீர் பொசிந்து வடிந்து கீழே உள்ள பாத்திரத்தில் சேர இடமளியுங்கள்.

இதற்காக கலங்கல் தன்மையுடைய நீரை அப்படைகளின் மீது மெதுவாக ஊற்றுங்கள். தெளிவான நீர், கீழே உள்ள பாத்திரத்தில் சேர்வதை அவதானியுங்கள்.

பரல்களின் பருமன், பரல் மற்றும் மணல் படைகளின் தடிப்பு ஆகியவற்றை மாற்றிய வாறு மிகச் சிறந்த ஒரு வடிகட்டியை அமைக்கக்கூடிய விதத்தைக் கண்டறிய மாணவருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.

## செயற்பாடு 5

- நீர் அதன் பயன்கள் காரணமாக மட்டுமன்றி பல்வேறு பண்பாட்டுப் பண்டிகைகள் மற்றும் சந்தர்ப்பங்களுடன் தொடர்புடைய வழக்கங்கள் தொடர்பாகவும் முக்கியத் தும் பெறுகின்றமையை விளங்கிக்கொள்ள துணை புரியுங்கள். இது தொடர்பான கதைகள், படங்களைச் சேகரிக்குமாறு முன்கூட்டியே அறிவுறுத்துங்கள். அவற்றைப் பாடத்துடன் தொடர்புபடுத்திக் கொள்ளுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  **1. தமிழர்களுடைய திருமணப் பழக்கவழக்கங்கள்**
  - மணமகனைக் கால் கழுவி வரவேற்றல்
  - நீர் நிரம்பிய நிறைகுடமொன்றினை முன்னே வைத்தல்
  - நீர்க்குடத்தில் மோதிரத்தை இட்டு அதனை மணமகனும், மணமகளும் தேடி எடுத்தல் (பிரதேசத்திற்கு ஏற்ற முறையில்)

  **2. முஸ்லிம்களுடைய பழக்கவழக்கங்கள்**
  - முஸ்லிம்கள் நீரைக்கொண்டு தம்மைச் சுத்தம் செய்து கொள்ளல்
  - விருந்துண்ண முன்னர் கைகளைக் கழுவிக்கொள்ளல்
  - முஸ்லிம்கள் நீரைக்கொண்டு தம்மைச் சுத்தம் (வுளு - Ablution))செய்து கொள்ளல் போன்றவை.

  **3. சிங்களவர்களுடைய திருமணப் பழக்கவழக்கங்கள்**
  - புதுமணத் தம்பதிகளுக்குக் கையில் நீர் வார்த்தல்
  - நீர்ப்பாத்திரங்களைக்கொடுத்து வரவேற்றல்
  - புதுமணத் தம்பதியினர் முன்னால் நீர் நிரம்பிய பாத்திரத்தில் வெண்ணிறப் பூக்களைப் போட்டு எடுத்துச் செல்லல்
  - நற்காரியங்களுக்கு செல்லும்போது நீர் நிரம்பிய பாத்திரமொன்றை கையில் ஏந்தி பெண்மனியொருவர் முன்னே வருதல்

  **4. சிங்களவர்கள் தமது புதுவருடத்தில் நீருடன் தொடர்புபடுத்திச் செய்யும் சம்பிரதாயங்கள்.**
  - கிணற்றுடன் கொடுக்கல் வாங்கல்
  - புதுவருட தினத்தில் குளித்தல் / நீராட்டல்
  - பழைய வருடத்தில் குளித்தல்

  **5. கத்தோலிக்க, கிறிஸ்தவர்களது நீருடன் தொடர்படைய பழக்க வழக்கங் களைத் தேடியறியுங்கள்.** (பிரதேசத்திற்கு ஏற்ற முறையில்)

- செம்பு நடனத்திற்குரிய பாடல் ஒன்றை தேடியறிந்து பாடச்செய்க. செம்புடன் ஆற்றுக் குச் செல்லும் காட்சி புலப்படக்கூடியதாக நடனத்தை உருவாக்க விடுக. நடனம் ஆடும்போது புத்தளிப்புக்கருவிகளின் துணையுடன் பாடச் செய்யுங்கள்.

- மேலே கூறப்பட்டவாறு பல்வேறு சமயச் சடங்குகளின் போதும் நீருடன் தொடர்புபட்ட சம்பிரதாயங்கள் பற்றித் தேடியறியச் செய்யுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  **தமிழர்கள்**
  - சித்திரை புதுவருடத்தில் மருந்துநீர் வைத்து நீராடுதல்
  - சமய விழாக்களில் ஆலயங்களில் கும்பாபிஷேகத்திற்கு நீர் பயன்படுத்தப்படும்
  - நீராடிய பின் ஆலயத்திற்குச் செல்லல்
  - ஆலயத்திற்குள் பிரவேசிக்கும் முன் கால்களைக் கழுவி விட்டுச் செல்லல்
  - ஆலயங்களில் தீர்த்தம் வழங்குதல்

- ஆலயங்களில் நடைபெறும் அனைத்து அபிஷேகங்களுக்கும் நீர் பயன்படும்.

**முஸ்லிம்கள் - (சமயக்கடமைகளின்போது)**

- பெருநாள் தினங்களில், வெள்ளிக்கிழமைகளில் குளித்தல்
- இறைவனை தொழும் முன் தம்மை நீரினால் சுத்தம் செய்தல்/வுளூ செய்தல்
- மரணித்தவரின் உடலை நீரினால் கழுவி சுத்தம் செய்தல்
- பற்களை துலக்கி சுத்தம் செய்தல்
- பிறக்கும் சிசுவை நீரினால் கழுவி சுத்தம் செய்தல் போன்றவை.

**பௌத்தர்கள்**

- சமயச் சடங்குகளின்போது பிக்குகளின் கால்களைக் கழுவி அன்புடன் வரவேற்றல்
- தோசம் நீக்கிக்கொள்வதற்காக ''பிரித் ஓதிய நீர்'' தெளித்தல்
- இறந்துபோன உறவினர்களுக்குப் புண்ணியம் தேடும் வைபவத்தில் நீர் வார்த்தல்

- இதே போல் கத்தோலிக்கர், கிறிஸ்தவர் போன்றோரின் சமய சடங்குகளின்போது நீரைப் பயன்படுத்தும் விதம் தொடர்பாகத் தேடி அறிந்து முன்வையுங்கள்.

- இவ்வாறான வேறு சமய பண்பாட்டு வழக்கங்கள் நீருடன் தொடர்புபட்டுள்ள விதத்தை மாணவரின் அனுபவங்களினூடாக கலந்துரையாடுங்கள். வசதி உள்ளதாயின் நீருடன் தொடர்புடைய வழக்கங்களை விளக்குவதற்காக வளவாளர் ஒருவரை அழையுங்கள்.
  ***எடுத்துக்காட்டு:*** பிரதேசத்தில் முதியவர் ஒருவர், சமயத் தலைவர் ஒருவர், பாடசாலை ஆசிரியர் ஒருவர்...)

## செயற்பாடு 6

- தமது பிரதேசத்தில் குடிநீர்த் தேவை நிறைவு செய்யப்பட்டுள்ள விதம் பற்றித் தேடியறிவதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.

- நகர்ப்பகுதிகளில் விநியோகிக்கப்படும் நீருக்காகக் கட்டணம் செலுத்தவேண்டியுள்ளமைக்கான காரணம், குடிநீரைச் சுத்திகரிப்பதற்கு பணம் செலவு செய்யவேண்டியுள்ளமையாகும். இவ்வாறான கட்டணம் அறவிடலானது மறைமுகமாக நீர் நுகர்வைக் குறைப்பதற்கு ஏதுவாகும். சுத்திகரிக்கப்பட்ட நீர் வீண்விரயமாவதைத் தவிர்ப்பதற்காக சகலரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

- மாணவரைக் குழுக்களாகப் பிரியுங்கள். நீர் வீண்விரயமாவதைத் தவிர்ப்பதற்காக எடுக்கத்தக்க வழிவகைகளை குழுவில் கலந்துரையாட வழிப்படுத்துங்கள். அக்கருத்துக்களை விரும்பிய ஒரு விதத்தில் முன்வைப்பதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***
  வாக்கியங்களாக/செற்றொடர்களாக/சிறு கட்டுரைகளாக
  சித்திர ஆக்கங்களாக
  பாடல் ஆக்கங்களாக

- நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது தொடர்பான செய்திகளை முன்வைப்பதற்காகச் சுவரொட்டிகளை ஆக்க வழிப்படுத்துங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***
  - குழாய் வாயிலைத் திறந்து வைத்து வேறு வேலைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்தல்
  - பொது இடங்களில் நீர்க்குழாய்வாயில்களை இறுக்கமாக மூடிவைத்தல்
  - பாத்திரங்களைக் கழுவும்போது அவ்வப்போது ஒவ்வொரு பாத்திரமாகக் கழுவுவதைத் தவிர்த்து எல்லாப் பத்திரங்களையும் ஒரே தடவையில் கழுவிக்கொள்ளல்

- போதியளவு குடிநீரைப்பெற முடியாத பிரச்சினை நிலவும் பிரதேசங்களில் நீரைப்பெறும் போது எதிர்நோக்கும் அசௌகரியங்கள் பற்றிக் கலந்துரையாடுமாறு குழுக்களுக்கு அறிவுறுத்துங்கள்.

- சுத்தமான குடிநீர் கிடைக்காமை (தட்டுப்பாடு) காரணமாக அவதியுறும் மக்கள் எமது நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் வாழ்கின்றனர் என்பதை நினைவூட்டுங்கள். அனுபவங்கள் உள்ளனவாயின் அவற்றையும் துணையாகக் கொள்ளுங்கள்.

- உங்களது பிரதேசத்தில் அவ்வாறான நீர்ப்பிரச்சினை உள்ளதாயின் அப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை முன்வைக்குமாறு குழுக்களை வழிப்படுத்துங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***
  மழை நீரைச் சேகரித்து வைத்துக்கொள்ளல், அருவி, ஓடை, குளம், ஆறு போன்றவற்றில் நீர் மாசடைவதைத் தவிர்த்தல்

- பாடசாலையில் இவ்வாறு நீர்த்தட்டுப்பாடு உள்ளதாயின் அதனைத் தீர்ப்பதற்காக இது வரையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றித் தேடியறிய வழிப்படுத்துங்கள்.

- இதுவரையில் அதற்கான தீர்வுகள் முன்வைக்கப்படவில்லையெனின்,அதற்கென காத்திர மாகச் செயற்படக்கூடிய ஒரு அமைப்பைத் தாபித்துச் செயற்பட வழிகாட்டுங்கள்.

## செயற்பாடு 7


- நீர் மாசடைதல் நிகழும் வழிகளைக் காட்டும் அறிக்கைகள், புகைப்படங்களைச் சேகரித்து அவற்றை வகுப்பில் முன்வையுங்கள். நீர் மாசடைவதால் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

- தமது பிரதேசத்தில் பிரதானமான நீர் நிலைகள் மாசடைதல் தொடர்பாக அறிக்கை தயாரிக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.

- பாட இணைச் செயற்பாடுகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள நேரத்தைப் பயன்படுத்தி, பாடசாலைச் சுகாதார முன்னோடிக் குழுவொன்றைத் தாபித்து, அதனூடாக நீர்க்காப்பு மற்றும் நீர் மாசடைவதைத் தவிர்க்கும் வழி வகைகளில் ஈடுபட துணை புரியுங்கள்.

## செயற்பாடு 8

- ஓடும் நீரினால் சுழற்றக்கூடிய நீர்ச்சில்லொன்றை ஆக்குமாறு மாணவரை வழிப் படுத்துங்கள்.



ஆக்கிய நீர்ச்சில்லை ஓடும் நீருக்குக் குறுக்காக வைத்து அது சுழலும் விதத்தை அவதானிக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
நீர்ச்சில்லு சுழலுவதில் நீர்த்தாரையின் வேகம் பங்களிக்கும் விதத்தை அவதானிக்க வழிப் படுத்துங்கள்.

- பிராணிகளின் தாக்கத்திலிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்காகப் பயன்படுத்தும் ஓர் அமைப்பாக ''நீர்ப்பிசாசை'' அறிமுகஞ் செய்யுங்கள். வகுப்பு மட்டத்தில் இவ் வாறான ஆக்கங்களைச் செய்து மாணவர்களுக்கு அனுபவம் பெறச் சந்தர்ப்பமளி யுங்கள்.

## செயற்பாடு 9

- நீர்வளம் மற்றும் நீர்வளத்தைக் காத்தல் தொடர்பான பாடல்களைப் பாட இட மளியுங்கள். அவ்வாறான புதிய பாடல்களைப் புனைய சந்தர்ப்பமளியுங்கள். நீர் வளத்தைக் காப்பதன் முக்கியத்துவத்தை உள்ளடக்கிய கட்டுரைகளைத் தயாரித்து அல்லது பத்திரிகைகளிலிருந்து பிரசுரிக்கப்பட்ட கட்டுரைகள், துணுக்குகள் போன்றவற்றைப் பெற்று மாணவர்க்கு வாசிப்பதற்காக காட்சிப்பலகையில் காட்சிப் படுத்துங்கள்.

## செயற்பாடு 10

- நீர் தொடர்பான பின்வரும் விளையாட்டில் ஈடுபடச் சந்தர்ப்பமளியுங்கள்.

  **உள்ளங்கைகளால் நீர் நிரப்பும் விளையாட்டு:**

  மாணவரைக் குழுக்களாகப் பிரியுங்கள். (ஒரு குழுவில் உச்ச அளவாக 5 பேர் அடங்குவது போதுமானது.)

- குழுக்களை வரிசைகளில் நிறுத்துங்கள். சகல குழுக்களின் வரிசையில் ஓர் அந்தத்தில் நிற்கும் மாணவனுக்கு அருகே நீர்ப்பாத்திரமொன்று ஒவ்வொரு குழுவிலும் வையுங்கள். மறு அந்தத்தில் நிற்கும் மாணவனுக்கு அருகே வெறும்போத்த லொன்றை வையுங்கள். ஆசிரியர் சைகை வழங்கியவுடன் வரிசையில் முதலாவது நிற்பவர் உள்ளங்கைகளிரண்டையும் குவித்து நீர் அள்ளி அதனை இரண்டாவதாக இருப்பவரின் உள்ளங்கைகளில் இட வேண்டும். இவ்வாறாக வரிசையில் இறுதியில் உள்ளவரின் உள்ளங்கைகளை அடையும் நீரை அவர் அவரது அருகில் உள்ள போத்தலில் ஊற்ற வேண்டும்.

  இவ்வாறாக போத்தல் நிரம்பும் வரை நீர் ஊற்றுதல் வேண்டும். குறைந்த நேரத்தில் போத்தலை நீரினால் நிரப்பிய பின் அவ்வாறு நீர் நிரப்பிய போத்தலை கையில் எடுத்து அங்கத்தவர்கள் அனைவரும், அடையாளமிடப்பட்டுள்ள போட்டி முடிவிடத்துக்கு ஓடிச்செல்லும் குழுவே வெற்றிபெற்ற குழுவாகும்.

- இவ்வாறாக வேறு விளையாட்டுக்களையும் உருவாக்கிக்கொள்ளுங்கள்.

# 7.0 வீட்டுத்தோட்டம்



**உலக மக்கள் யாவரும் உக்கிரமான உணவுப் பற்றாக் குறையை எதிர்நோக்கவுள்ளதாக அபாய அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளமையால், உணவுப் பயிர்ச்செய் கையை விருத்தி செய்வதும் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்வதும் இன்றைய தேவையாக உள்ளது. அதன்பால் செல்லும் எதிர்காலச் சந்ததியின் அடித்தளத்துக்கு வலுவூட்டுவதற்காக, வீட்டுத்தோட்டச் செய்கை தொடர்பான அடிப்படையான அனுபவங்கள் முன்னைய வருடங்களில் வழங்கப்பட்டுள்ளன. ஐந்தாந் தரத்தில் அக்கற்றல் அனுபவங்களை மேலும் உறுதிப் படுத்திக்கொள்வதற்கும், கவனமாக ஆராய்ச்சியாளர்களாக பயிர் செய்ய வழிப் படுத்துவதற்குமாகவே இக்கருப்பொருள் விருத்திசெய்யப்பட்டுள்ளது.**

## தேர்ச்சிகள்

- ➲ வீட்டுத்தோட்டச் செய்கையில் ஆராய்வுபூர்வமாகப் பங்களிப்புச் செய்து இரசனை பெறுவார்.
- ➲ பயிர்ச்செய்கைக்கான மாற்று முறைகளை அமைப்பார்.
- ➲ வெவ்வேறு ஆக்கங்கள் மூலம் வீட்டுத்தோட்டத்தின் அழகை வெளிப்படுத்திக் காட்டுவார்.
- ➲ வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபட்டு, அனுபவங்களைப் பகிர்ந்து பரிமாறியவாறு அதன் விளைச்சலை அதிகரிப்பதற்காகச் செயற்படுவார்.
- ➲ வீட்டுத்தோட்டத்தின் அழகைக்கூறும் ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

## செயற்பாடு 1

- ▣ வீட்டுத்தோட்டத்தில் நாட்டுவதற்குப் பொருத்தமான தானிய வகைகள், பழவகைகள், மரக்கறிவகைகள் சிலவற்றின் வித்துக்கள் சிறிதளவு வீதம் வகுப்புக்குக் கொண்டு வருமாறு மாணவர்களுக்கு முன்கூட்டியே கூறுங்கள். நல்ல விளைச்சல் பெறுவதற்காக உறுதியாக வளரும் ஆரோக்கியமான தாவரங்களை உருவாக்க வேண்டும் என்பதையும் அதற்காக ஆரோக்கியமான வித்துக்களைத் தெரிவுசெய்து கொள்வதன் முக்கியத் துவத்தையும் வலியுறுத்துங்கள்.

- ▣ மாணவர் கொண்டுவந்த வித்துக்களை மேசைமீது பரப்பி வைத்து அவற்றுள் மிக உறுதியான ஆரோக்கியமான நாற்றுக்களை (கன்றுகளைத்) தரக்கூடியனவையெனக் கருதக்கூடிய வித்துக்களைத் தெரிவுசெய்வதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளியுங்கள். ஆரோக்கியமான நாற்றுக்களைத் தரக்கூடிய வித்துக்களில் வெளிப்புறத்தே இனங்காணக்கூடிய இயல்புகள் எவை என மாணவரிடம் வினவுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - நன்கு முதிர்ச்சியடைந்திருத்தல்
  - உணவு நிரம்பி செழித்து வளர்ந்திருத்தல்
  - வெளியுறை கறைப் புள்ளிகளின்றிப் பிரகாசமாக இருத்தல்
  - பழுதுகள் இல்லாதிருத்தல்
  - பூச்சிகள் இல்லாதிருத்தல்

போன்ற வெளிப்புறத்தே இனங்காணக்கூடிய இயல்புகளைக்கொண்டு நல்ல வித்துக் களைத் தெரிவுசெய்துகொள்ளலாம். எஞ்சியுள்ள வித்துக்களை ஒதுக்கிவிடுமாறு அறிவுறுத்துங்கள்.

- நன்றாக முளைக்காத வித்துக்களை நாட்டுவதால் வீட்டுத் தோட்டத்திலிருந்து உச்ச பயன்பெற முடியாதாகையால் தெரிவுசெய்த வித்துக்களின் சிறிதளவை எடுத்து அவை நன்றாக முளைக்கின்றனவா எனச் சோதிக்க சந்தர்ப்பமளியுங்கள்.

- பின்வரும் முறைகளுள் ஒன்றைப் பயன்படுத்தி மேலே தெரிவுசெய்த வித்துக்களுள் எவ்வாறான வித்துக்கள் நன்றாக முளைக்கின்றன எனச் சோதிக்க வழிப்படுத்துங்கள்.

- பெரிய வகை வித்துக்களாயின் அவற்றை ஈரமான மணல் பாத்திரமொன்றில் புதைக்க வழிப்படுத்துங்கள்.

- சிறிய வகை வித்துக்களாயின் பின்வருவனவற்றுள் ஒரு முறையில் சோதிக்க வழிப் படுத்துங்கள்.

  சிறிய தட்டைப்பாத்திரமொன்றின் (தேநீர்க்கோப்பைத் தட்டு போன்ற) மீது சிறிதளவு பஞ்சைப்பரப்பி அதை டிமை கடதாசித் துண்டினால் மூடி நீர் இட்டு நன்கு நனையுங்கள். அதன் மீது வித்துக்களை இடுங்கள். நாளாந்தம் தட்டின் மீது சிறிதளவு வீதம் நீர் இடுங்கள்.

  வாழையிலைக்காம்பு அல்லது சேம்பு இலைக்காம்புத் துண்டொன்றை (30 சென்றி மீற்றர் அளவுடைய) வெட்டிக்கொள்ளுங்கள். நீளப்பாடாக இரண்டாகப் பிளவுங்கள். பிளந்த பாதிகளின் உட்புறத்தே நீளப்பாடாக வித்துக்களை இடுங்கள். பின்பு பாதிகளிரண்டையும் சேர்த்து வைத்து நூலினால் கட்டுங்கள். நிழலான ஈரலிப்பான ஓர் இடத்தில் வையுங்கள்.

- சில நாள்களின் பின்னர் வித்துக்கள் முளைத்துள்ளவா எனச் சோதிக்க வழிப்படுத் துங்கள். முளைக்க வைத்த வித்துக்களின் தொகை, முளைத்துள்ள வித்துக்களின் தொகை, முளைக்காத வித்துக்களின் தொகை ஆகியவற்றைக் கண்டறிய வழிப் படுத்துங்கள். முளைக்க வைத்த மொத்த வித்துக்களுள் 3/4 பகுதி வித்துக்களேனும் முளைத்துள்ளனவாயின், தெரிவு செய்துள்ள வித்துக்கள் பயிரிடுவதற்குப் பொருத்த மானவையென முடிவு செய்யலாம் என்பதை விளக்குங்கள்.

- அடுத்த சோதனைக்காக விரைவாக முளைக்கும் வித்து வகையொன்றினைத் தெரிவு செய்துகொள்ளுங்கள். (பாசிப்பயறு வித்துக்கள், கடுகு வித்துக்கள் போன்றவை) தெரிவுசெய்த வித்து மாதிரியை 4 பகுதிகளாகப் பிரித்துக்கொள்ளுங்கள்.

  **முதலாவது பகுதி:** வித்துக்களை உலர்ந்த சோதனைக்குழாயொன்றினுள்/சிறிய போத்தலொன்றினுள் இட்டு பொதுவான உஷ்ணம் கொண்ட ஓர் அறையில் வையுங்கள்.

  **இரண்டாவது பகுதி:** சோதனைக்குழாயொன்றினுள்/சிறு கண்ணாடிக்குவளை யொன்றின் உள்ளே அடிப்பகுதியில் ஈரமாக்கப்பட்ட பஞ்சு சிறிதளவை இட்டு அதன் மீது வித்துக்களை இட்டுப் பொது வான உஷ்ணம்கொண்ட ஓர் அறையில் வையுங்கள்.

  **மூன்றாவது பகுதி:** சோதனைக்குழாயொன்றினுள்/சிறிய கண்ணாடிக்குவளை யொன்றினுள் வித்துக்களை இடுங்கள். வித்துக்கள் முழுமை யாக அமிழுமாறு நீர் இட்டு, பொதுவான உஷ்ணம் கொண்ட ஓர் அறையில் வையுங்கள்.

**நான்காவது பகுதி:** வித்துக்களை முதலில் கொதிக்கும் நீரில் இட்டு அவியுங்கள். பின்னர் சோதனைக்குழாயொன்றின்/சிறு கண்ணாடிக்குவளை யொன்றின் உள்ளே இடப்பட்ட ஈரமாக்கப்பட்ட பஞ்சின்மீது இடுங்கள். பொதுவான உஷ்ணம் கொண்ட அறையில் வையுங்கள்.

- சில நாள்களின் பின்னர் கிடைக்கும் அவதானிப்புக்களைக்கொண்டு பின்வருவது போன்ற ஓர் அட்டவணையைப் பூர்த்தி செய்யுங்கள்.

| வித்துக்கள் | சோதனை | கண்டவை | அனுமானிக்கக்கூடிய காரணம் |
|---|---|---|---|
| முதலாவது குழாய் | | | |
| இரண்டாவது குழாய் | | | |
| மூன்றாவது குழாய் | | | |
| நான்காவது குழாய் | | | |

- வித்துக்கள் முளைத்து வளருவதற்கு நீர், வெப்பநிலை, வளி ஆகியன தேவை என்பதையும் அவ்வித்துக்கள் இறக்காதவையாக இருக்கவேண்டும் என்பதையும் விளக்குங்கள்.

- மூன்றாவது சோதனைக்காக மாணவரைச் சில குழுக்களாகப் பிரியுங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் வெறும் ஜாம் போத்தல் அல்லது தெளிவான சுவருடைய கண்ணாடிக் குவளை ஒன்று வீதம் தேடிப்பெறுமாறு அறிவுறுத்தல் வழங்குங்கள்.

- அப்பாத்திரத்தில் உட்புறச் சுவரின்மீது டிமை கடதாசித்துண்டொன்றை விரித்து வைக்குமாறு அறிவுறுத்துங்கள். டிமை கடதாசியினுள் மணல் நிரப்புங்கள், பாத்திரத் தின் சுவருக்கும் டிமை கடதாசிக்கும் இடையே ஒரு வித்து வகையில் இரண்டு அல்லது மூன்று வித்துக்கள் வீதம் இடுங்கள். (சோளம், கத்தரிக்காய், முள்ளங்கி, மிளகாய் போன்றவை சில எடுத்துக்காட்டுகளாகும்.)

- பின்னர் மணலை நன்கு நனையுங்கள். பொதுவான ஒளி கிடைக்கும் ஓர் அறையில் இப்பாத்திரங்களை வையுங்கள். வித்துக்கள் முளைக்கும் விதத்தைத் தினமும் அவதானிக்க வழிப்படுத்துங்கள். (வித்திலைகளின் நடத்தை, தண்டு நீளும் விதம், இலைகள் தோன்றும் விதம்... போன்றவை)
  - நாளாந்தம் நாற்றுக்கள் காட்சியளிக்கும் விதத்தை வரையுமாறு வழிப்படுத்துங்கள்.
  - ஏனைய குழுக்களின் வித்துக்கள் முளைக்கும் விதத்தையும் அவதானிக்க வழிப்படுத் துங்கள்.
  - ஒவ்வொரு வித்து வகையும் முளைக்கும்போது அவற்றுக்கு இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை அவதானிக்க வழிப்படுத்துங்கள்.

- இந்தச் செயற்பாட்டில் பயன்படுத்திய யாதேனும் முறையில் வீட்டுத்தோட்டத்தில் நாட்டுவதற்குத் தேவையான நாற்றுக்களைப் பெற்றுக்கொள்ளுமாறு வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 2


- தண்டுத்துண்டுகளைக்கொண்டு புதிய நாற்றுக்களைப் பெறுவது தொடர்பான அனுபவங்களைப் பெறுவதற்காகப் பின்வரும் இரண்டு முறைகளின்படி செயற்பாட்டில் ஈடுபடுமாறு அறிவுறுத்துங்கள்.

**முறை 1**

மேலதிக நீர் வெளியேறுவதற்காக துளைகள் இடப்பட்ட, ஊடுகாட்டும் தன்மையுடைய ஒரு பாத்திரத்தை/சாடியை தயார்ப்படுத்திக்கொள்ளுங்கள்.
அரித்தெடுத்த (சலித்தெடுத்த) மண் ஒரு பகுதியுடன் கூட்டெரு ஒரு பகுதியைச் சேர்த்துக் கலந்து கொள்ளுங்கள்.
இக்கலவையைப் பாத்திரத்தில் இட்டு, போதுமான அளவுக்கு நீர் இட வழிப்படுத்துங்கள்.
தெரிவுசெய்த தண்டுத்துண்டை அப்பாத்திரத்தில் நடுங்கள்.
நாளாந்தம் போதுமான அளவு நீர் இடுங்கள்.
நாளாந்தம் அவதானிக்க வழிப்படுத்துங்கள்.
தண்டுத்துண்டில் வேர்கள் வளரும் விதத்தை அவதானிக்க வழிப்படுத்துங்கள்.

**முறை 2**

ஊடுகாட்டும் தன்மையுடைய ஒரு பாத்திரத்தை/சாடியைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள்.
அரித்தெடுத்த மண் ஒரு பகுதியையும் கூட்டெரு ஒரு பகுதியையும் சேர்த்துக் கலந்து கொள்ளுங்கள்.
இக்கலவையைப் பாத்திரத்தினுள்/சாடியினுள் இட்டு, போதுமான அளவு நீர் சேருங்கள். மீண்டும் நீர் இடத்தேவையில்லை.
தெரிவுசெய்த தண்டுத்துண்டை பாத்திரத்தில்/சாடியில் நாட்டுங்கள். தேவையாயின், ஆதாரத்தடியொன்றினை நாட்டுங்கள்.
அப்பாத்திரத்தை/சாடியை பொலித்தீன் உறையொன்றினுள் இடுங்கள்.
உறையினுள் வளி நன்கு அடங்கியிருக்கும் வகையில் உறையின் வாயைக் கட்டுங்கள். தண்டுத்துண்டில் வேர்கள் வளரும் விதத்தை அவதானிக்க வழிப்படுத்துங்கள்.




- இந்த இரண்டு முறைகளிலும் நாட்டப்பட்ட தண்டுத்துண்டுகளில் வேர்கள் வளர்ந்துள்ள விதத்தை அவதானிக்க வழிப்படுத்துங்கள். வேர் வளர்ச்சி நன்றாக ஏற்பட்டு நல்ல பயன்பெறுவதற்கு இந்த இரண்டு முறைகளும் பொருத்தமானவையா அல்லது இவற்றுள் ஒரு முறை மற்றைய முறையிலும் பொருத்தமானதா என மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

- மாணவர்கள் தீர்மானித்ததற்கிணங்க வீட்டுத்தோட்டத்தில் தண்டுத்துண்டுகளை நட்டு, தேவையான நாற்றுக்களைப் பெற வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 3

- பல்வேறு மாற்று முறைகளை/உத்திகளைக் கையாண்டு வீட்டுத்தோட்டத்தில் பயிர் களைச் செய்கை பண்ணுமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.
  எடுத்துக்காட்டு:
  பசளை உறை, மழைப்பீலித்துண்டு, பேசின், மூங்கில் குழாய்... போன்றவை.

- அவ்வொவ்வொரு பொருளையும் பயன்படுத்தி பொருத்தமான பயிர் நாற்றுக்களை நட வழிப்படுத்துங்கள். மாற்று வழிமுறைகளைக்கொண்ட வீட்டுத்தோட்டங்களை அமைப்பதன் முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடுங்கள். மாணவரின் வெவ்வேறுபட்ட வீட்டுச் சூழல்களுக்குப் பொருத்தமானவாறு மாற்று முறைகளைப் பயன்படுத்தி பயிர்க்கன்றுகளை நடுமாறு தூண்டுங்கள். வசதி உள்ளதாயின் அவ்வாறான மாற்று முறைகளை பயன்படுத்தி நடாத்திச் செல்லும் வீட்டுத்தோட்டமொன்றினை அவதானிப்பதற்கு வாய்ப்பைப் பெற்றுக் கொடுங்கள். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மாற்று முறைகளைக் கையாண்டு வீட்டுத்தோட்டச் செய்கையினை மேற்கொள்ளும் நிகழ்ச்சிகள் தொடர்பாக கலந்துரையாடி அவற்றை குறித்த நேரங்களில் அவதானிக்க மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 4

- பயிர்ச்செய்கைக்குச் சேதம் விளைவிக்கும் பிராணிகளை இனங்காணுமாறு மாணவரை வழிப்படுத்துங்கள். ஒவ்வொரு பிராணியையும் பெயரிட்டு அது பயிரின் எந்தப்பகுதி யைச் சேதப்படுத்தும் என்பதைக் கலந்துரையாடுங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***
  - பன்றி, எலி போன்றவை கிழங்குப் பயிர்களில் ஏற்படுத்தும் சேதங்கள்
  - நெல்தண்டுக்கோதி, பனிப்பூச்சி, அழுக்கணவன் போன்றவை ஏற்படுத்தும் சேதங்கள்.
  - மீலி முட்டைப்பூச்சி போன்றவை கத்திரி, தக்காளி, வெண்டி போன்ற பயிர்களில் ஏற்படுத்தும் சேதங்கள்.

- வசதி உண்டெனின், பிராணிகளால் சேதப்படுத்தப்பட்ட பயிர்த்தாவரப் பகுதிகளை அவதானிக்க வழிப்படுத்துங்கள். அதற்காக கை வில்லையொன்றைப் பயன்படுத் துங்கள். வீட்டுத்தோட்டத்திலோ, சேதமாக்கப்பட்ட தாவரப் பகுதிகளை வகுப்புக்குக் கொண்டுவந்தோ அவதானிக்கலாம்.

- பயிர்களில் பிராணிகளின் தாக்கங்களைக் குறைப்பதற்காக எடுக்கக்கூடிய நடவடிக்கை கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

- அதற்காக அனுபவமிக்க ஒரு விவசாயி அல்லது பிரதேச விவசாய பிரிவாக்க உத்தியோகத்தர் அல்லது வெற்றிகரமாக வீட்டுத்தோட்டமொன்றை நடத்திச் செல்லும் ஒருவரை அழையுங்கள்.

- விவசாய இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக வேறு பாரம்பரிய மான முறைகளைப்பயன்படுத்த சந்தர்ப்பமளியுங்கள். பயிர்த் தாவரங்களைச் சேதப் படுத்தும் பிராணிகளை உணவாக உட்கொள்ளும் பிராணிகளை இனங்காண வழிப் படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு:***
- எலியை உணவாகக் கொள்ளும் பாம்புகள்
- பூச்சிகளை உணவாகக் கொள்ளும் தவளை, ஓணான்
- நத்தைகளை உணவாகக் கொள்ளும் செண்பகம்

- சூழலில் காணப்படும் இந்த இயற்கையான சமநிலை குலைவதில் விவசாய இரசாய னங்கள் காரணமாக அமைந்துள்ள விதம் பற்றிக் கலந்துரையாடுங்கள். இது தொடர்பாக மாணவரது அனுபவங்களைக் கலந்துரையாடுங்கள். விவசாய இரசாயனப் பயன்பாட்டின் பாதிப்புக்கள் தொடர்பாக மேலும் விடயங்களைத் தேடியறிய மாணவர் களுக்கு வழிகாட்டுங்கள்.

## செயற்பாடு 5

- இச்செயற்பாட்டுக்கு முன்னர் பூச்சி நாசினிகளால் ஏற்படும் பாதிப்புக்கள், சூழல் நேய பூச்சிக்கட்டுப்பாட்டுத் திரவங்களின் பெறுமதி ஆகியன பற்றிய செய்திப்பத்திரிகை அறிவித்தல்கள் போன்றவற்றைச் சேகரிக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.

- வீட்டுத்தோட்டச் செய்கையில் பயன்படுத்தக்கூடிய சூழல் நேய பூச்சிக்கட்டுப்பாட்டுத் திரவமொன்றைத் தயாரிக்கும் முறை பற்றி, செய்தித்தாள்களிலோ வேறு துண்டுப் பிரசுரங்களிலோ தரப்பட்டுள்ள விவரங்களைத் தேடியறியுமாறு மாணவரை வழிப்படுத் துங்கள்.

- இதற்காக, வேப்பங்கொட்டை, வேப்பெண்ணெய் போன்றவை பயன்படுத்தப்படும் விதத்தை விளக்கும் துண்டுப்பிரசுரங்கள், கட்டுரைகளை உசாவ வழிப்படுத்துங்கள்.

- இவ்வாறான பூச்சிக்கட்டுப்பாட்டுத் திரவங்களைத் தயாரித்து அவற்றை வீட்டுத்தோட்டச் செய்கையின்போது பயன்படுத்துவோர் போன்ற வளவாளர்களை இனங்காண முடியு மாயின் அவர்களுள் ஒருவரை அழைத்து திரவங்களைத் தயாரிக்கும் முறையைச் செய்வித்துக்காட்டி மாணவருக்கு அவற்றை அவதானிக்க சந்தர்ப்பமளியுங்கள்.

- அவ்வாறான **'சூழல் நேய'** பூச்சிக்கட்டுப்பாட்டுத் திரவமொன்றைத் தயாரிக்குமாறு வழிப்படுத்துங்கள். குழுக்களாகப்பிரிந்து வெவ்வேறு தாவரப்பகுதிகளைப் பயன்படுத்தி அவ்வாறான சில பூச்சிக்கட்டுப்பாட்டுத் திரவங்களைத் தயாரித்துக்கொள்ள முடியு மாயின் மிக நல்லது.

- மாணவர் தயாரித்த பூச்சிக்கட்டுப்பாட்டுத் திரவங்களைப் பாடசாலைத் தோட்டத்தில் அல்லது வீட்டுத்தோட்டத்தில் பூச்சித்தாக்கத்துக்கு உள்ளாகியுள்ள தாவரமொன்றின் மீது நாளாந்தம் தெளித்து தொடர்ந்து சில நாள்களுக்கு அவதானித்து வர வழிப்படுத் துங்கள். பின்வருவது போன்ற ஓர் அட்டவணையைத் தயாரித்து அவதானிப்புக்களை அதில் குறித்துக்கொள்ளுமாறு வழிப்படுத்துங்கள்.

| பூச்சிக்கட்டுப்பாட்டு திரவம் | திரவம் தெளிக்க முன்னர் இருந்த நிலை | திரவம் தெளித்த பின்னர் அவதானிப்புக்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1ஆம் நாள் | 2ஆம் நாள் | 3ஆம் நாள் | 4ஆம் நாள் | 5ஆம் நாள் |
| ***எடுத்துக்காட்டு:*** வேப்பெண்ணெய் | | | | | | |

- மாணவர்கள் ஏறத்தாழ 5 நாள்கள் வரை அவதானித்து அட்டவணைப்படுத்திய தகவல்களைக் கொண்டு சிறு குழுக் கலந்துரையாடல் நடத்த வழிப்படுத்துங்கள்.

- சிறு குழுக்களின் அனுபவங்களைத் துணையாகக்கொண்டு பொதுக் கலந்துரையாட லொன்று நடத்துங்கள். பொதுக்கலந்துரையாடலின்போது, பூச்சிக்கட்டுப்பாட்டுத் திரவங் களின் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்துங்கள். வெவ்வேறு தாவரப் பகுதிகளைப் பயன்படுத்தி, பூச்சிக்கட்டுப்பாட்டுத் திரவங்கள் தயாரித்து, அவற்றினைப் பரீட்சார்த் தமாகப் பயன்படுத்திப் பார்த்து வெற்றிகரமான பூச்சிக்கட்டுப்பாட்டுத் திரவத்தை இனங்கண்டு கொள்ளலாம் என்பதை வலியுறுத்துங்கள். விவசாய இரசாயனப் பொருள் களுக்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய பாரம்பரியமான முறைகளின் பெறுமதியை எடுத்துக்காட்டும் வகையில் சுவரொட்டிகள் ஆக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 6

- பாடசாலையில் பேணிவரப்படும் வீட்டுத்தோட்டத்தை அழகுபடுத்துவது பற்றி எண்ணிப் பார்க்க வழிப்படுத்தும் வகையில் சில வினாக்கள் வினவுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - வீட்டுத்தோட்டத்தில் சிறிய தாவரங்களை வளர்த்து எவ்வாறு அழகுபடுத்தலாம்.
  - உயரமாக வளரும் கொடி வகைகளுக்குப் பொருத்தமான ஆதார அமைப்புகள் எவை?
  - தரையில் படரும் செடி வகைகளை எவ்வாறு ஓர் எல்லைக்குள் மட்டும் படரச் செய்யலாம்?
  - கன்றுகள் நாட்டப்பட்டுள்ள வெவ்வேறு சாடிகள்/பாத்திரங்களை அழகாக வைத்திருப்பது எப்படி?

- இவ்வாறான வினாக்களுக்கு விடை காண்பதற்கான சிறு குழுக்கலந்துரையாடல்களை நடத்த வழிப்படுத்துங்கள்.

- வீட்டுத்தோட்டத்தை அழகுபடுத்துவதற்கான கருத்துக்களை பட்டியற்படுத்துமாறும் அவற்றுள் தமது குழுவினால் செய்யத்தக்க மாற்றமொனறினைத் திட்டமிடுமாறும் ஒவ்வொரு குழுவையும் வழிப்படுத்துங்கள்.

- திட்டத்துக்கு அமைய, அந்தந்தக் குழுவினால் அம்மாற்றங்களைச் செய்த பின்னர், முன்னர் இருந்த வீட்டுத்தோட்டத்தைவிட அழான ஒரு வீட்டுத்தோட்டத்தை அமைப்பதற் காக ஆக்கபூர்வமாகச் செயற்பட்டமை குறித்து பாராட்டுங்கள்.

## செயற்பாடு 7

- கூட்டெரு தயாரித்தல் தொடர்பான விடயங்களை ஆராய்ந்து உங்களது பாடசாலைக் குப் பொருத்தமான ஒரு முறையைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள்.மாணவர் விளங் கிக்கொள்ளக்கூடியவாறு எளிமையான வகையில் அறிவுறுத்தல் பத்திரமொன்றினை எழுதித் தயாரித்துக்கொள்ளுங்கள். சிறிய அளவில் கூட்டெரு தயாரிக்க வழிப்படுத் துங்கள். நீங்கள் தெரிவுசெய்த முறையின்படி திட்டமிட்டுத் தயாரித்த அறிவுறுத்தல் பத்திரத்திற்குப் பொருத்தமானவாறு மாணவரைச் சிறு குழுக்களாகப் பிரியுங்கள்.

- தமது குழுவுக்குத் தேவையான பொருள்களைத் தேடிப்பெறுமாறு மாணவரை வழிப் படுத்துங்கள். தேவையெனின், பெற்றோரின் உதவியையும் பெறுங்கள்.

- கருப்பொருளை நடைமுறைப்படுத்தும் காலத்துள் கூட்டெரு தயாரிப்பதை ஆரம்பியுங்கள். அச்செயன்முறையின் பின்னர், தயாரிக்கப்பட்ட கூட்டெரு மாதிரியொன்றினை மாணவர்க்குக் காட்டுங்கள். அம்மாதிரியை அவதானித்த பின்னர் அந்தந்தக் குழுவினால் அமைக்கப்பட்டுள்ள கூட்டெரு தயாரிக்கும் அமைப்பினுள் உள்ள பொருள்கள், காலப்போக்கில் இந்த நிலையை அடையும் என்பதை விளக்குங்கள். கூட்டெருவைப் பயன்படுத்தி வீட்டுத்தோட்டத்தை வளப்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள்.

- கருப்பொருள் நடைமுறைப்படுத்தப்படும் காலத்தின் பின்னர், மாணவர் தயாரித்த கூட்டெரு உற்பத்தி அமைப்பு பற்றி நாளாந்தம் கவனஞ் செலுத்தி வருவதன் முக்கியத்துவத்தை விளக்குங்கள். அவை உக்கிக் கூட்டெருவாக மாறிய பின்னர், வீட்டுத்தோட்டத்தில் பயிர்களுக்கு இட வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 8

- ‘‘வீட்டுத்தோட்டம்’ எனும் பெயரில் சுவர்ப்பத்திரிகையைத் தயாரிக்க வழிப்படுத்துங்கள். ‘‘வீட்டுத்தோட்டத்தின்’’ புகைப்படமொன்றினையும் உள்ளடக்க முடியுமாயின் நல்லது. வீட்டுத்தோட்டப் பயிர்த் தாவரங்களில் பூக்கள், காய்கள், பழங்களைக் காணும்போது ஏற்படும் உணர்வுகளை இரசனையுடைய, சந்தத்துக்கு இசைவான குறுகிய வாக்கியங்களாகவும் ஏனையோரையும் வீட்டுத்தோட்டச் செய்கையின்பால் ஈர்க்கத்தக்கவாறான இலகுவான செய்திகளாகவும் பாடல்களாகவும் வெளியிட மாணவரை வழிப்படுத்துங்கள். ‘‘பெற்றோர் வட்டம்’’ நடத்தப்படும் நாளொன்றில் பாடசாலை வீட்டுத்தோட்டத்தை அப்பெற்றோருக்குப் பார்வையிடவும் சுவர்ப்பத்திரிகையை வாசிக்கவும் சந்தர்ப்பமளியுங்கள்.

## செயற்பாடு 9

- வீட்டுத்தோட்டம் செய்வதன் முக்கியத்துவம், வீட்டுத்தோட்டச் செய்கையின் பெறுமானம், எமது பயிர்ச்செய்கை ஆற்றல் போன்ற கருத்துக்களை வலியுறுத்தும் பாடல்களைப் பாட மாணவரை வழிப்படுத்துங்கள். பாடும்போது புத்தளிப்பு வாத்தியக்கருவிகளைப் பயன்படுத்த துணை புரியுங்கள்.

***எடுத்துக்காட்டு:*** **தோட்டம்**

தோட்டம் எங்கள் தோட்டம் - மண்ணில்
தோன்றி வளரும் பயிர்கள்
வாட்டமின்றி வளரும் - நீர்
வாய்க்கால் தன்னில் ஓடும்

சின்னஞ் சிறிய இலைகள் - தாங்கி
செழித்து வளரும் மிளகாய்
பென்னம் பெரிய கிழங்கு - தந்து
பேணும் மையர்ச் செடியே

பயற்றங் கொடிகள் வளர்ந்து - எங்கும்
பச்சை மாலை யாகும்
வயிற்றுக் கினிய உணவு - தந்து
வளரும் வாழை மரங்கள்


வெண்டி கத்தரியோடு - ஈர
வெங்காயம்; பூசனிக்காய்கள்
கொண்டு வளரும் தோட்டம் - பயன்
கொடுக்கும் எங்கள் தோட்டம்

இனிய ‘கப்பல்’ இதரை - கறிக்கு
ஏற்ற சாம்பல் மொந்தன்
கனியக் கொஞ்சம் புளிக்கும் - அந்தக்
கதலி வாழை எல்லாம்

செழித்து வளரும் தோட்டம் - நல்ல
செம்மண் நிறைந்த தோட்டம்
உழைத்து நாங்கள் வாழ்வோம் - இந்த
உலகை வெற்றி காண்போம்.

*- கவிஞர் வாகரை வாணன்*
*நன்றி: சின்னச் சின்னப் பூக்கள்*

## 8.0 பாதுகாப்பும் கரிசனையும்



**விபத்துக்களால் ஏற்படக்கூடிய இழப்புக்களைக் குறைத்தும், விபத்துக்களைத் தவிர்த்தும், வாழக்கூடிய ஒரு சூழலை உருவாக்குவது நாம் தட்டிக்கழிக்க முடியாத ஒரு பொறுப் பாகும். தற்காலத்தில் காணவும், கேட்கவும் கிடைக்கும் விபத்துக்கள் இழப்புக்கள், கொள்ளை நோய்களை இயன்ற அளவுக்குத் தவிர்த்துச் செயற்படுதல் காலத்தின் தேவைகளுள் ஒன்றாகும். சிறுபருவ முதலே அதற்குத் தேவையான தேர்ச்சிகளை அடைய முனையும் சந்ததியே எமது நாட்டில் நாளைய ஜீவ நாடியாக அமையும். அதற்கான அடித்தளமாக அமையத்தக்க அனுபவங்களைப் பெற வகை செய்யும் எதிர்பார்ப்புடனேயே இக்கருப்பொருள் திட்டமிடப்பட்டுள்ளது.**

### தேர்ச்சிகள்

- இயற்கைத் தோற்றப்பாடுகளின்போது அழிவுகள் ஏற்படத்தக்க சந்தர்ப்பங்கள் தொடர்பாகக் கவனஞ்செலுத்தி அவற்றிலிருந்து பாதுகாப்பும் பெறுவதற்காகச் செயற்படுவார்.
- விபத்துகள் நிகழத்தக்க சந்தர்ப்பங்களில் தனதும் ஏனையோரதும் பாதுகாப்பு தொடர்பாக கரிசனையுடன் செயற்படுவார்.
- விபத்துக்களின்போது முறையான முதலுதவி வழங்குவதற்கு செயற்படுவார்.
- சிறுவருக்கு எதிராக நிகழும் சட்டவிரோதச் செயல்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காகச் செயற்படுவார்.
- தாமும் ஏனையோரும் தொற்று நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவது தொடர் பாக கரிசனையுடன் சுகாதாரமான சூழலை ஏற்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்வார்.
- பாதுகாப்பு, கரிசனை என்பன குறித்து ஏனையோருக்கு அறிவூட்டம் செய்வதற்குப் பொருத்தமான பல்வேறு ஆக்கங்கள் புரிவார்.
- பாதுகாப்பாகவும் கரிசனையுடனும் செயற்படும் விதத்தை வலியுறுத்தும் ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.

### கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

### செயற்பாடு 1

- கடந்த காலங்களில் இழப்புக்களை ஏற்படுத்திய இயற்கைத் தோற்றப்பாடுகளாகிய மழை, காற்று, மண்சரிவு, சுனாமி, மின்னல், சூறாவளி, வறட்சி, வெள்ளப்பெருக்கு போன்றவை பற்றி பத்திரிகைகளிலிருந்தும் பொருத்தமானோரிடம் கேட்டறிந்தும் தகவல்கள் திரட்டுமாறு மாணவர் குழுக்களை வழிப்படுத்துங்கள். தகவல் சேகரிக்கும் போது பின்வரும் அட்டவணையைப் பூர்த்திசெய்வதற்குப் பொருத்தமான தகவல்களைச் சேகரிக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள். பின்னர், அத்தகவல்களைக்கொண்டு அட்டவணையைப் பூரணப்படுத்துமாறு மாணவரை நெறிப்படுத்துங்கள்.

| இயற்கைத் தோற்றப்பாடு காரணமாக ஏற்பட்ட சேதங்கள் | சேதம் ஏற்பட்ட காலப்பகுதி | சேதத்துக்கு உள்ளான பிரதேசங்கள் | ஏற்பட்ட இழப்புகள் | |
|---|---|---|---|---|
| | | | பௌதிக | மானுட |
| ***எடுத்துக்காட்டு:*** வெள்ளப்பெருக்கு | 2007 டிசெம்பர் | களுத்துறை மாவட்டம் | வீடுகள்<br>வயல்கள்<br>தோட்டங்கள்<br>வேறு ஆதனங்கள் | இருவர் காணாமற் போயுள்ளனர் |

- இவ்வாறாக இயற்கைத் தோற்றப்பாடுகளால் ஏற்படும் இழப்புக்கள், சேதங்கள் பற்றி உரையாடுங்கள்.

- இலங்கை இடையிடையே இவ்வாறான பல்வேறு இயற்கைத் தோற்றப்பாடுகளுக்கு ஆளாகி வருகின்றது என்பது பற்றியும் ஒரு நாடு என்ற வகையில் ஏற்பட்டுள்ள இழப்புக்கள் பற்றியும் கலந்துரையாடுங்கள்.

- வகுப்பு மாணவரை சில குழுக்களாகப் பிரியுங்கள். தாம் அல்லது தமது நண்பர் ஒருவர் அல்லது வேறு ஒருவர் எதிர்கொண்ட விபத்துக்கள் பற்றி குழுவில் கலந்துரை யாடச் சந்தர்ப்பமளியுங்கள்.

- அவ்விபத்துக்கள் தொடர்பான தகவல்களை வகுப்பில் முன்வைக்க வழிப்படுத்துங்கள். இச்சந்தர்ப்பத்தில் வினாக்கள் வினவுமாறு மாணவரை வழிப்படுத்தி, மேன்மேலும் தகவல் பெறத் தூண்டுங்கள்.

- மாணவரிடம் வினாக்கள் வினவும்போது பின்வரும் விடயங்களும் உள்ளடங்கும் வகையில் வினாக்களை முன்வையுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  **வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்ட இழப்பு/சேதம்**
  - வெள்ளப்பெருக்கு ஏற்பட முன்னர் மனதில் தோன்றிய கருத்து
  - படிப்படியாக சேதங்கள்/இழப்புக்கள் ஏற்பட்ட விதம்
  - அந்தந்தச் சந்தர்ப்பங்களில் தமது மனதிலும் குடும்ப அங்கத்தவர்களது மனதிலும் ஏற்பட்ட கருத்துக்கள்.
  - படிப்படியாக ஏற்பட்ட சேதங்களைத் தவிர்ப்பதற்காக எடுத்த நடவடிக்கைகள்
  - வெள்ளப் பெருக்கின் இறுதியில் ஏற்பட்ட விளைவுகள்
  - வெள்ளம் வடிந்து சென்ற பின்னர் அது தொடர்பாக தமது மனதில் தோன்றிய எண்ணங்கள்.
  - தாம் தவறுவிட்ட சந்தர்ப்பங்கள்
  - தாம் செயற்பட வேண்டிய சரியான விதம் பற்றிய விளக்கம் தற்போது உள்ளதாயின் அது தொடர்பான கருத்துக்கள்.
  - எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய வெள்ளப்பெருக்குகளின்போது தாம் எடுக்க எதிர் பார்க்கும் நடவடிக்கைகள்.

- மேற்குறிப்பிட்டவாறாக, வேறு இவ்வாறான சேதங்கள், இழப்புகள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களை வெளிக்கொணர்ந்தவாறு மாணவருடன் கலந்துரையாடுங்கள். அவ் வாறான அனர்த்தங்கள் அடிக்கடி ஏற்படக்கூடுமாகையால் அதற்கான முன்னாயத்தம் அவசியமாகும் என்பதை மாணவருக்கு வலியுறுத்துங்கள். சேதங்கள், இழப்புகள் ஏற்பட முன்னர் முன்னாயத்தம் அவசியமானது என்பதை வலியுறுத்துங்கள்.

- பாடசலையில் இடர்களை எதிர்கொள்வதற்கான முன்னாயத்தத்துக்காக மாணவருடன் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

**படி 1:**

***பாடசாலையின் நிலைமையைக் கணிப்பீடு செய்தல்***

- மாணவரைக் குழுக்களாப் பிரியுங்கள். பாடசாலையில் வெவ்வேறு இடங்களுக்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.

  ***எடுத்தக்காட்டு:***

  விளையாட்டு மைதானம், விஞ்ஞான ஆய்வுகூடம், மலசலகூடம், படிக்கட்டு வரிசை, நுழைவாயில், சிற்றுண்டிச்சாலை, வகுப்பறை............ போன்றன.

- அந்தந்த இடங்களில் காணப்படும் இடர் ஏற்படுத்தக்கூடியவற்றை பின்வரும் நியதிகளின்படி, அறிக்கைப்படுத்த வழிப்படுத்துங்கள்.
  - அந்த இடத்தில் நிகழக்கூடிய விபத்துக்கள்.
  - அந்த விபத்துக்கள் எவ்வாறான சந்தர்ப்பங்களில் நிகழ இடமுண்டு
  - அந்த இடத்துக்கு எவ்வளவு தொகை மாணவர்கள் சென்று வருகின்றனர்.
  - ஏற்கனவே அது தொடர்பாகக் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளதா?

**படி 2:**

இடரை எதிர்கொள்வதற்காக ஒரு திட்டத்தைத் தயாரிப்பதற்கு வழிகாட்டுங்கள்.

- குழுக்கள் அவதானித்த விடயங்கள் தொடர்பாக அந்தக் குழுவினர் ஒன்று சேர்ந்த தகவ்களைக்கொண்டு மிக நல்ல தீர்மானத்தை எடுக்க வழிப்படுத் துங்கள்.

- இடர்கள் ஏற்படுவதைக் குறைப்பதற்கான பிரேரணைகளை முன்வைப்பதற்கு இடமளியுங்கள்.

  ***எடுத்தக்காட்டு:***

  - பாரிய மரங்களில் உள்ள பட்டுப்போன கிளைகளைத் தறித்து விடுதல்
  - காடு மண்டியுள்ள இடங்களைத் துப்புரவு செய்தல்
  - நிலத்தில் வெளிப்பட்டுக் காணப்படும் வேர்கள், கற்கள் போன்றவற்றை மண் இட்டு மூடுவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்
  - பாடசாலை வளவினுள் வாகனங்கள் புகுவதைக் கட்டுப்படுத்தல்
  - அறையில், விபத்துக்கள் ஏற்படக்கூடிய வகையிலும், இடவசதி தடைப்படும் வகையிலும் வைக்கப்பட்டுள்ள உபகரணங்கள், பொருள்களைப் பொருத்த மானவாறு இடப்படுத்தி வைத்தல்

**படி 3:**

***திட்டத்தை நடைமுறைப்படுத்தல்***

- பாடசாலையில் நடைமுறைப்படுத்தக்கூடியவற்றை நடைமுறைப்படுத்துதல்
- அதற்காக கால அட்டவணையொன்றினைப் பயன்படுத்தி கண்காணித்தல்
- நீண்டகால ரீதியில் செய்யவேண்டிய தலையீடுகளுக்காகப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், வகுப்பு வட்டம் மற்றும் வேறு நிறுவனங்களைப் பங்குகொள்ளச் செய்தல்
- மாணவர் தயாரித்த அறிக்கைகளை, மாணவரைக்கொண்டு அக்குழுக்களின் முன்னிலையில் சமர்ப்பிக்க வழிப்படுத்தல்

***பாடசாலையில் அவசர நிலைமைகளின்போது அவற்றை எதிர்கொள்ளத் தயாராக்குதல்***

- இதற்காக பாடசாலை மற்றும் அயற் பிரதேசம் தொடர்பாக ஒரு படத்தைத் (Map) தயாரித்து, அப்பிரதேசத்துள் துரிதமாகச் செல்லத்தக்க பாதைகளை இனங்காணல்
- இடரின் தன்மைக்கு அமைய அந்த இடத்திலிருந்து விலகிச் செல்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய மாற்று வழிகளை இனங்காணல்

  ***எடுத்துக்காட்டு:*** பாடசாலையினுள் தீ ஏற்பட்டால் செல்ல வேண்டிய பாதுகாப்பான பாதை எது என்பதை முன்கூட்டியே இனங் கண்டு கொள்ளல்
- தீ ஏற்பட உதவக்கூடிய எண்ணெய்த்தொட்டி, வாயு உருளை போன்றவை உள்ள இடங்களை முன்கூட்டியே இனங்காண்டிருப்பதால் மாணவர்களுக்கு விரைவாக அவற்றிலிருந்து விலகிச் செல்லலாம்.
- அத்தோடு முதலுதவி பெறுவதற்காக எந்த இடத்துக்குச் செல்ல வேண்டும் என்பதையும் அறிந்து வைத்திருத்தல்
- விபத்து ஏற்படுமானால் யாருக்கு அறிவித்தல் வேண்டும் என்பதையும் அறிந்திருத்தல் வேண்டும்.

◘ மேலே மாணவருடன் கலந்துரையாடியதற்கமைய யாதேனும் இயற்கை அனர்த்தச் சந்தர்ப்பமொன்றினைக் கற்பனை செய்து, படிமுறை படிமுறையாக எடுக்கத்தக்க நடவடிக்கைகளை மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

◘ அந்தந்த இயற்கை அனர்த்தச் சந்தர்ப்பத்தின்படி இவ்வழிவகைகள் வேறுபடலாம் என்பதையும், பதட்டப்படாது செயற்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துங்கள். சொத்துக்கள், ஆதனங்களைக் காப்பாற்றிக்கொள்வதைவிட, உயிர்களைக் காப்பாற்றிக் கொள்வது முக்கியமானது என்பதையும் கலந்துரையாடலின்போது வலியுறுத்துங்கள்.

## செயற்பாடு 2

◘ விபத்துக்கள் எற்படத்தக்க சந்தர்ப்பங்கள் குறித்து மாணவரது கவனத்தைத் திருப்புங் கள். விபத்துக்கள் தொடர்பான தகவல்கள் அடங்கிய பத்திரிகையிலிருந்து வெட்டிப் பெற்ற துண்டுகள், கேட்டறிந்த தகவல்கள் ஆகியனவற்றைச் சேகரிக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள். சேகரித்த தகவல்களைக்கொண்டு பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்த வழிப்படுத்துங்கள்.

| விபத்து | விபத்து நிகழ்ந்த திகதி (அறிய முடியுமாயின்) | விபத்துக்குக் காரணம் | விபத்து நிகழ்ந்த இடம் (அறிய முடியுமாயின்) | விபத்துக் காரணமாக ஏற்பட்ட சேதம்/இழப்பு | |
|---|---|---|---|---|---|
| | | | | ஆட்கள் | சொத்து |
| ***எடுத்துக்காட்டு:*** வாகன விபத்தில் காயம் ஏற்பட்டமை | 01.02.2008 | இரவில் கறுப்புநிற உடைய ணிந்து கவன யீனமாக சென்றமை | கொழும்பு | 01 | சைக்கிளுக் குச் சேதம் |
| நீரில் மூழ்கி இறப்பு | | பாதுகாப்பற்ற இடத்தில் குளித்தமை | மட்டக்களப்புக் கடலில் | பாடசாலை மாணவர் மூவர் | |

- மாணவர் மேற்காட்டியவாறு தொகுத்த தகவல்களை வகுப்பில் முன்வைக்க வழிப் படுத்துங்கள். தகவல்களை முன்வைக்கும்போது குழு அங்கத்தவர்கள் கூட்டாகச் செயற்பட வழிப்படுத்துங்கள். குழு அங்கத்தவர் ஒவ்வொருவரதும் பொறுப்புகள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- குழுக்கள் முன்வைத்த தகவல்களைக்கொண்டு கலந்துரையாடுங்கள். பின்வரும் விடயங்களை வெளிக்கொணருங்கள்.
  - எந்தவொரு விபத்துக்கும் பல்வேறு காரணங்கள் உண்டு.
  - ஒரு குறித்த வகை விபத்து பல்வேறு காரணங்களால் நிகழலாம்.
  - விபத்துக்கள் பெரும்பாலும் எமது கவனயீனம் காரணமாக ஏற்படும்.
  - தமது பிரதேசத்திலும், தமக்கு அறிமுகமற்ற யாதேனும் இடத்திலும் அவ்வாறான விபத்துக்கள் பெருமளவில் நிகழும் யாதேனும் இடத்திலும் பாதுகாப்புப் பெறுவதற் கான நடவடிக்கைகள் எடுப்பது அவசியமாகும்.
  - எமது கவனயீனம் காரணமாகவே விபத்துக்கள் ஏற்படுகின்றமையால் அவற்றைத் தவிர்ப்பதற்கான முன்னாயத்தம் அவசியமாகும்.
  - விபத்துக்களைத் தவிர்ப்பதால் மனிதர், பிராணிகளின் உயிர்களைக் காப்பாற்றுவ தோடு சொத்துக்கள், பொருள்களையும் பாதுகாத்துக்கொள்ளலாம்.

- பின்னர் பாடசாலையிலும், வீட்டிலும், வீதியிலும் ஏற்படத்தக்க விபத்துக்களிலிருந்து தம்மையும் ஏனையோரையும் பாதுகாத்துக்கொள்வதன் அவசியம் பற்றி கலந்துரை யாடுங்கள்.

- விபத்துக்களுக்கு ஆளாகிய ஏனையோர் பற்றிய தாம் அறிந்துள்ள தகவல்களை முன்வைப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

- விபத்துக்களிலிருந்து தம்மையும் ஏனையோரையும் பாதுகாப்பதற்காக, செய்திகளை வழங்கும் வகையில் நடித்துக்காட்டல்களைத் திட்டமிட வழிப்படுத்துங்கள். அவற்றி னூடாக வழங்கப்படும் செய்திகள் பற்றி உரையாடுங்கள்.

- தம்மையும் ஏனையோரையும் பாதுகாப்பதற்கான செய்திகளை உள்ளடக்கிய ஊர்வல மொன்றினை பாடசாலையிலோ அயலிலோ நடத்த ஒழுங்குகளைச் செய்யுங்கள். ஊர்வலத்தின்போது சுவரொட்டிச் சித்திரங்கள், அட்டைகள் உட்பட பல்வேறு வழிகளில் தகவல்களைக் காட்சிப்படுத்த வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 3

- பின்வரும் கருத்துக்களை உள்ளடக்கிய சித்திரங்களை வரைந்துகொள்ளுங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***
  - மலையுச்சியிலிருந்து பள்ளத்தை நோக்கி, கைப்பிடியைப் பிடிக்காது வேகமாக சைக்கிளை ஓட்டிச்செல்லும் ஒரு சிறுவன்.
  - ‘‘இங்கே குளிப்பது ஆபத்தானது’’ என அறிவித்தல் பலகை காணப்படும் ஒரு குளத்தில் இறங்கிக் குளிக்க ஆயத்தமாகும் சிலர்.
  - பாரிய மரமொன்றின் உச்சிக் கிளையொன்று தறிக்கப்படுவதை அருகே இருந்து பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு சிறுமி
  - பாதுகாப்பற்ற வகையில் மின்சாரத்தைப் பயன்படுத்த முயற்சி செய்யும் ஒரு சிறுவன்.

- அட்டைகளில் தரப்பட்டுள்ள விபத்துச் சந்தர்ப்பங்களின்பால் மாணவரின் கவனத்தைத் திருப்புங்கள். அட்டைகளைக் குழுக்களிடையே பகிர்ந்தளியுங்கள். அட்டைகளை ஆராய இடமளித்து பின்வரும் விடயங்களின்பால் மாணவரது கவனத்தைத் திருப்புங்கள்.
  - தாம் எதிர்நோக்கக்கூடிய விபத்துக்கள்
  - அவற்றைத் தவிர்ப்பதற்காகச் செய்யக்கூடியவை.
  - அவ்வாறான விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக ஏனையோருக்கு வழங்கும் ஆலோசனைகள்.
  - இவ்வாறான மேலும் விபத்துக்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

- இவ்வாறான சந்தர்ப்பங்கள் தொடர்பாக முன்வைப்புக்களைச் செய்வதற்கு மாணவர்களுக்கு இடமளியுங்கள். பாடசாலையில் யாதேனும் விபத்து ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் எடுக்கத்தக்க நடவடிக்கைகள் பற்றி மாணவரின் கவனத்தைத் திருப்பியவாறு அவற்றை உள்ளடக்கிய ஒரு பட்டியல் தயாரிக்கும் பொறுப்பை ஒப்படையுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - விபத்து நிகழ்ந்தவுடன் பதட்டப்படாதிருத்தல்
  - விபத்தின் தன்மையின்படி தமதும் ஏனையோரதும் பாதுகாப்புக் குறித்து கவனஞ் செலுத்திச் செயற்படுதல்
  - தம்மால் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க முடியாதெனின் உடனடியாக மூத்த சகோதர மாணவரொருவருக்கோ ஆசிரியரொருவருக்கோ அறிவித்தல்.
  - முடியுமாயின் முதலுதவி வழங்குதல்
  - தேவைக்கேற்ப தாமதமின்றி வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்...

  என்றவாறாக ஒரு பட்டியல் தயாரிக்க வழிப்படுத்துங்கள்.

- பின்னர் அவற்றை பாடசாலையில் நடைமுறைப்படுத்த முடியுமா எனக்கண்டறியுமாறு மாணவரை வழிப்படுத்துங்கள். அதற்காகப் பாடசாலையில் காணப்படும் வசதிகள் பற்றியும், எதிர்நோக்கும் வசதியீனங்கள் பற்றியும் மாணவரின் கவனத்தைத் திருப்புங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - விபத்து பற்றிய செய்தியை அறிவிப்பதற்காக பாடசாலையில் அதற்குப் பொறுப்பாக ஒரு மாணவர் அல்லது ஆசிரியர் உள்ளாரா?
  - விபத்துக்கு உள்ளானவரைக்கொண்டு செல்வதற்கென ஒதுக்கப்பட்ட ஓர் இடம் பாடசாலையில் உள்ளதா?
  - முதலுதவி வசதிகள் பாடசாலையில் உள்ளனவா?
    (***எடுத்துக்காட்டு:*** நோயாளியைக் கிடத்துவதற்கு ஒரு கட்டில், மருந்து வகைகள்)
  - விபத்து நிகழ்ந்த சந்தர்ப்பத்தில் செயற்படவேண்டிய விதம் தொடர்பாக மாணவர்களுக்கு அறிவூட்டம் செய்யப்பட்டுள்ளதா?
  - விபத்துக்கு உள்ளாகுவோரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கான ஒழுங்குகள் பாடசாலையில் உள்ளனவா?

  என்றவாறாகத் தகவல் சேகரிக்க வழிப்படுத்துங்கள்.

- மேற்காட்டியவாறு திரட்டிய தகவல்களைத் துணையாகக்கொண்டு, தமது பாடசாலையில் இல்லாதவற்றை அங்கு ஏற்படுத்துவதற்காக எடுக்கத்தக்க நடவடிக்கைகள் பற்றி மாணவரின் கவனத்தைத் திருப்புங்கள். நலிவான வகையில் செயற்படும் அம்சங்களை மேலும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்க வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 4

- அவசர நிலைமைகளின்போது வழங்கக்கூடிய முதலுதவிகள் தொடர்பாக மாணவரது கவனத்தைத் திருப்புங்கள்.
  ***எடுத்துக்காட்டு:*** - மயக்கம் - நீரில் மூழ்குதல் - பாம்பு தீண்டல்
  போன்றவை பற்றியும் மேலும் இவ்வாறான சந்தர்ப்பங்கள் பற்றியும் உரையாடுங்கள். மாணவருக்குத் தமது அனுபவங்களை வெளியிட இடமளியுங்கள். முதலுதவி வழங்குவது தொடர்பாக அறிவூட்டம் செய்வதற்காகப் பொருத்தமான ஒரு வளவாளரின் துணையைப் பெறுவது மிக சிறந்தது.
  ***எடுத்துக்காட்டு:*** வைத்தியர், தாதி

- பின்னர் தம்மைப்போன்றே ஏனையோரும் நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவது தொடர்பாக மாணவரது கவனத்தைத் திருப்புங்கள்.

- தற்போது இலங்கையில் பரவிச் செல்கின்ற மற்றும் கடந்த சில தசாப்தங்களில் இலங்கையில் பரவிய கொள்ளை நோய்கள் தொடர்பான தகவல்களையும் அவை தொடர்பான செய்தித்தாள் அறிக்கைகளையும் புகைப்படங்கள், படங்கள் போன்றவற்றையும் திரட்டி வகுப்பில் சேகரிக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.

- அத்தகவல்களைக்கொண்டு பின்வருவது போன்ற ஓர் அட்டவணையைப் பூர்த்திசெய்யுமாறு அறிவுறுத்துங்கள்.

| பரவிய கொள்ளை நோய் | அந்நோய் பரவிய பிரதேசம்/ பிரதேசங்கள் | எவ்வாறு பரவியது? | பரவியதால் ஏற்பட்ட இழப்புக்கள் |
|---|---|---|---|
| ***எடுத்துக்காட்டு:*** சிக்குன்குன்யா | சப்பிரகமுவ | நுளம்புகளால் | மனிதர் பலர் இறந்தனர். மனிதரின் சுகாதார நிலை சீர்குலைந்தது. |

- தயாரித்த அட்டவணையில் அடங்கியுள்ள தகவல்களை மாணவர்களுக்கு வலியுறுத்துங்கள். அத்தகவல்களைக்கொண்டு பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடுங்கள்.
  - இலங்கையில் கடந்த தசாப்தங்களிலும், அண்மைக்காலத்திலும் பெருமளவுக்குப் பரவிய கொள்ளை நோய்கள் உள்ளனவா?
  - அவ்வாறாகப் பெருமளவில் பரவும் பிரதேசங்களை இனங்காண முடியுமா?
  - அந்தக்கொள்ளை நோய் எவ்வாறு பரவுகிறது?
  - ஒரு காரணம் ஒன்றுக்கு மேற்பட்ட நோய்கள் பரவக் காரணமாவதுண்டா?

  என்றவாறாக.

- இவ்வாறான கொள்ளை நோய்கள் காரணமாக மனிதருக்கு ஏற்படும் இழப்புகள், நாட்டுக்கு ஏற்படும் இழப்புகள் பற்றி உரையாடுங்கள். ஆட்கள்/குடும்பம்/ஊர்-கிராமம்/நாடு என்ற வகையில் ஏற்படும் இழப்புகள் பற்றி உரையாடுங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***
  உடல் வலிமை குன்றுதல்
  பொருளாதார நிலைமை குன்றுதல்

- கடந்த தசாப்தங்களில் இலங்கையில் மலேரியா நோய் பரவியமையால் வடக்கு - கிழக்கு பிரதேசங்களிலும் வடமத்திய மாகாணம் உட்பட மேலும் பல பிரதேசங்களிலும் மக்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்ட விதம், மனிதர் இறந்து போனமை, நாட்டின் விவசாயம் பாதிக்கப்பட்ட விதம், மனிதர் அப்பிரதேசங்களைக் கைவிட்டுச் சென்ற விதம் ஆகிய விடயங்களை வெளிக்கொணர்ந்தவாறு மாணவரது கவத்தை அவற்றின் பால் திருப்புங்கள்.

- இந்த கொள்ளை நோய்கள் தொடர்பாக நல்ல செய்திகளை வழங்குவதற்காக பாத்திரமேற்று நடித்துக்காட்டல்கள், சித்திரங்கள், சுவரொட்டிகள் போன்றவற்றை முன்வைக்குமாறு மாணவருக்கு வழிகாட்டுங்கள்.

- மேலே குறிப்பிட்ட கொள்ளை நோய்களைத் தவிர்ப்பதற்காக எடுக்கக்கூடிய நடவடிக் கைகள் பற்றித் தேடியறிந்து அவற்றைப் பின்வருமாறு ஒரு கடதாசியில் குறித்துக் கொள்ள வழிப்படுத்துங்கள்.

| **தொற்று நோய்கள்** | **பரவும் விதம்** | **நோயைத் தவிர்த்தல்** |
|---|---|---|
| ***எடுத்துக்காட்டு:***<br>மலேரியா | நுளம்பினால் | நுளம்புகள் பரவுவதைத் தவிர்த்தல்<br>சரியாகச் சிகிச்சை பெறல் |

- மாணவருடன் பாடசாலை வளவில் ஒரு களப்பயணம் செல்லுங்கள். அவ்வாறு செல்லும்போது துப்புரவு செய்வதற்குரிய உபகரணங்களையும் எடுத்துச் செல்லுங்கள். நுளம்புகள், ஈக்கள் பரவும் இடங்களை இனங்காணுமாறு மாணவரை வழிப்படுத் துங்கள். அவை அவ்விடங்களில் பரவுவதைத் தவிர்ப்பதற்காக எடுக்கக்கூடிய நடவடிக் கைகள் பற்றி கருத்துக்களை வெளியிட மாணவர்களுக்கு இடமளியுங்கள். அவற்றை நடைமுறைப்படுத்தவும் இடமளியுங்கள். மாணவரது செயல்களைப் பாராட்டுங்கள்.

- தமது வீட்டுச் சூழலைச் சுத்தமாக வைத்திருப்பதற்காக நுளம்புகள், ஈக்கள் பரவும் இடங்களை இனங்கண்டு அவ்விடங்களில் அவை பரவுவதைத் தவிர்ப்பதற்காக மேற் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஒரு பதிவுப்புத்தகத்தைப் பேணிவருமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.

- பதிவுசெய்த விடயங்களை நாளாந்தம்/வாராந்தம் வகுப்பில் முன்வைக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள். மாணவர் சேகரித்த தகவல்களை மதித்து அவர்களைப் பாராட்டுங்கள். அவ்விடயங்கள் பற்றி மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

- தொற்றும் நோய்களையும் அந்நோய்களால் ஏற்படும் பாதிப்புக்களையும் தவிர்த்தல் தொடர்பாக பத்திரிகைகளில் வெளியாகும் தகவல்களை வகுப்பில் காட்சிப்படுத்தி அவற்றை வாசிக்க வழிப்படுத்துங்கள்.


## செயற்பாடு 5

- நுளம்புத் தொல்லையைத் தவிர்த்தல் தொடர்பான செய்திகளை உறுதிப்படுத்துவதற் காக விளையாட்டுக்களில் ஈடுபட சந்தர்ப்பமளியுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  நுளம்பு வலை விளையாட்டு

◘ வகுப்பு மாணவரை பொருத்தமானவாறு மூன்று பிரிவுகளாகப் பிரித்து ஒரு பகுதியினர் நுளம்பு வலையாக கைகோர்த்து வட்டமாக நிற்பர். ஒரு பகுதியின் நுளம்புகளாவர். ஏனையோர் நுளம்பு வலையினுள் இருக்கும் பிள்ளைகளாவர். வலைக்கு வெளியே இருக்கும் நுளம்புகள் வலையைச் சுற்றிப் பறந்து வந்து வலையினுள் இருக்கும் பிள்ளைகளைப் பிடிக்க முயற்சிப்பர். நுளம்பு வலையாகச் செயற்படுவோர் அதனைத் தடுக்க முயற்சி செய்வர். நுளம்புகள் வலையினுள் வந்து பிள்ளைகளைத் தீண்டினால் அவர்கள் நோய்வாய்ப்பட்டு தோல்வியடைவர். வலையினுள் புக முடியாமற்போக நுளம்புகளும் தோல்வியடையும் மூன்று பிரிவினரும் இடம்மாறி இவ்விளையாட்டைத் தொடர்ந்து நடத்தலாம்.




◘ இவ்வாறான விளையாட்டுக்களை ஆக்கி அவற்றில் மாணவர்களை பங்குகொள்ளச் செய்ய வாய்ப்பளியுங்கள்.

## செயற்பாடு 6

◘ மாணவர்கள் ஆளாகக்கூடிய சமூக விரோதச் செயல்கள் குறித்து மாணவரின் கவனத்தைத் திருப்புங்கள். இவை தொடர்பாக மூத்தோரிடம் கேட்டறிந்தும் செய்தித் தாள்கள், சுவரொட்டிகள், வேறு வெளியீடுகள் ஆகியவற்றிலிருந்தும் பெற்ற தகவல்கள், படங்கள் போன்றவற்றை திரட்டி, வகுப்பில் சேகரிக்குமாறு மாணவரை வழிப்படுத் துங்கள். மாணவரைச் சில குழுக்களாகப் பிரித்து இத்தகவல்களை யாதேனுமொரு முறையில் கோவைப்படுத்த முயற்சிக்குமாறு வழிப்படுத்துங்கள். பின்வருவது போன்ற ஓர் அட்டவணையைப் பூர்த்திசெய்ய வழிப்படுத்துங்கள்.

| சமூக விரோத செயல் யாது? | சமூக விரோதச் செயல் நிகழ்ந்த பிரதேசம் எது? | சமூக விரோதச்செயலில் பிள்ளையை ஈடுபடுத்தியவர் யார்? |
|---|---|---|
| போதைப்பொருள் கொண்டு செல்லல் | கொழும்பு | போதைப்பொருள் வர்த்தகர் |
| சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல் | அனுராதபுரம் | ஹோட்டல் உரிமையாளர் ஒருவர். |

◘ சேகரித்த தகவல்களை வகுப்பில் அறிக்கைப்படுத்துமாறு மாணவர்களை வழிப்படுத் துங்கள். அவ்வாறு அறிக்கைப்படுத்தும் போது குழு அங்கத்தர் ஒவ்வொருவரதும் செயல் ரீதியான பங்களிப்பு முக்கியமானது என்பதை வலியுறுத்துங்கள்.

◘ இது தொடர்பாக வினாக்கள் வினவுமாறு வகுப்பில் ஏனைய மாணவர்களை வழிப்படுத்தி அத்தகவல்களை மேலும் உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.

- இக்கலந்துரையாடலின்போது பின்வரும் விடயங்களை மாணவர்களுக்கு வலியுறுத்துங்கள்.
  - சமூக விரோதச் செயல்கள் யாவை?
  - அவை இலங்கையின் எந்தெந்தப் பிரதேசங்களில் இடம்பெற்றுள்ளன?
  - அவற்றுக்கு ஆளாகியுள்ள பிள்ளைகள் யார்?
  - அப்பிள்ளைகளின் வயது மட்டங்கள் எவை?

- இக்கலந்துரையாடலின்போது பின்வரும் விடயங்களை மாணவருடன் கலந்துரையாடி உறுதிப்படுத்துங்கள்.
  - சமூக விரோதச் செயல்கள் காரணமாக தமக்கும் தமது குடும்பத்துக்கும் ஏற்படும் இழப்புகள்.
  - சமூக அபகீர்த்தி ஏற்படல்/நற்பெயர் கெட்டுப்போதல், ஒதுக்கிவைக்கப்படல்
  - தண்டனைக்கு உள்ளாதல்
  - சுயகௌரவம் பாதிக்கப்படுதல்
  - சமூகத்தில் மதிப்பிழத்தல்

- சிலர் மேற்குறிப்பிட்டவாறு தமக்கு ஏற்படும் இழப்புக்களைப் பொருட்படுத்தாது செய்யும் சமூக விரோதச்செயல்கள் அர்த்தமற்றவை என்பதை மாணவரது கவனத்துக்கு உட்படுத்துங்கள். கலந்துரையாடுங்கள். அவை தொடர்பாக மாணவரது கருத்துக்களை வெளியிட இடமளியுங்கள்.மேலும் இனங்காணப்பட்ட சமூக விரோத செயல்களில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு செய்யக்கூடியதாகவுள்ள வழிமுறைகள் தொடர்பாகவும் மாணவர்கள் கருத்திற்கு கொண்டு வாருங்கள். கலந்துரையாடுங்கள். தமது கருத்தை கூற வாய்ப்பு வழங்குங்கள்.

- இத்தகவல்களை மாணவரிடத்தே மேலும் உறுதிப்படுத்துவதற்காக பங்கேற்று நடித்தல் களை முன்வைக்கும் மாணவரைத் தனித்தனியாகவோ, குழுவாகவோ வழிப்படுத் துங்கள். சமூக விரோதச் செயல்களுக்கு எதிரான கருத்துக்களை வெளிப்படுத்தும் வகையில் சித்திரங்கள், சுவரொட்டிகளை ஆக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள். அவற்றை வகுப்பில் காட்சிப்படுத்த சந்தர்ப்பமளியுங்கள்.

# 9.0 எமது பண்டைய தகவல்கள்



**இலங்கையர்களாகிய எமக்கு பெருமைமிக்க வரலாறு உள்ளது. நாம் பண்டைக்காலம் முதல், நாகரிகத்தில் மேம்பட்டவர்களாவோம். தொழிநுட்பம் ஆக்கக் கலைகள், பண்பாட்டம்சங்களில் அன்று நாம் மேம்பட்டிருந்தமைக்குச் சான்றுகள் உள்ளன. எமது எதிர்கால சந்ததியினர் இந்நிலைமைகளை நன்கு இனங்கண்டு அவற்றுக் கேற்ப உணர்வுடன் செயற்படு வோராக உருவாகுவது அவசியமாகும். வரலாற்றிலிருந்து படிப்பினைகளையும் முன்மாதிரிகளையும் பெற்றுச்செயற்பாடுவோரை எதிர்காலத்தில் நாட்டுக்கு அளிக்கும் நோக்குடனேயே இந்த கருப்பொருளின் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன.**

## தேர்ச்சிகள்

- நாட்டின் அபிவிருத்திக்காகப் பாரிய சேவை செய்த சில அரசர்களை இனங்கண்டு அவர்களது சேவைகளின் நல்ல முன்மாதிரிகளை வாழ்க்கையுடன் இணைத்துக் கொள்வார்.
- வரலாற்று முக்கியத்துவமுடைய சில இடங்களை இனங்கண்டு பெருமையுடன் மதிப்பார்.
- வரலாற்று முக்கியத்துவமுடைய இடங்கள் தொடர்பான தகவல் சேகரிப்பதற்காகப் பிரயோகிக்கத்தக்க முறைகளை விளைதிறனுடைய வகையில் பயன்படுத்துவார்.
- பண்டைய கலைப்படைப்புக்களின் சிறப்புக்களைத் தேடியாய்ந்து களிப்பார்.
- வரலாற்று முக்கியத்துவமுடைய இடங்களைப் பாதுகாப்பதில் பங்களிப்பார்.
- தேசப்பற்றை வளர்க்கும் ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

## செயற்பாடு 1



யாபகுவை காவல் அரண் நுழைவாயில்

- எமது நாட்டுக்கு அருஞ்சேவைகள் செய்த அரசர்கள், நாட்டுக்குழைத்த ஏனையவர்கள் சிலரை இனங்கண்டு அவர்கள் எமது நாட்டுக்குச் செய்த செயல்களை இனங்காண்பதற்காக பின்வரும் செயற்பாடுகளில் ஈடு படுத்துங்கள்.
- எமது நாட்டுக்கு அருஞ்சேவைகள் செய்த அரசர்கள், நாட்டுக்குழைத்த ஏனையவர்கள் பற்றி மாணவரிடம் வினவுங்கள். கருப்பொருளை நடைமுறைப்படுத்த முன்னர், மாணவர்கள் தேடிப்பெறத்தக்க எமது நாட்டுக்கு அருஞ்சேவைகள் செய்த அரசர்கள், நாட்டுக்குழைத்த ஏனையவர்கள் தொடர்பான படங்கள், பாடல்கள், பத்திரிகைக் கட்டுரைகள், நாட்டார் கதைகள் போன்றவற்றைத் திரட்டுமாறு மாணவரை வழிப்படுத்துங்கள். அவ்வாறு திரட்டியவற்றை வகுப்புக்குக் கொண்டு வருமாறு அறிவுறுத்துங்கள்.மாணவர்கள் வகுப்புக்குக் கொண்டுவரும் தகவல்களைக்கொண்டு கலந்துரையாடல் நடத்தி, தேடியறிய வேண்டிய அரசர்களையும் ஏனைய முக்கியஸ்தர்களை இனங்காணுங்கள். (மாணவர்களுடன் கலந்துரையாடியவாறு அந்த அரசர்களையும் நாட்டுக்கு உழைத்த ஏனையவர்களையும் தெரிவுசெய்து கொள்வது பொருத்தமானது.)

- தெரிவுசெய்த அரசர்கள், அல்லது நாட்டுக்கு உழைத்த ஏனையவர்கள் தொடர்பாக மேலும் தகவல்களைத் தேடியறிவதற்கான முறைகளை இனங்கண்டு கொள்ளுங்கள். அம்முறைகளைப் பயன்படுத்தி, அவ்வரசர்கள் பிரமுகர்கள் தொடர்பாக ஆராய இடமளியுங்கள். நூல்களில் அடங்கியுள்ள தகவல்கள், வரலாறு பற்றிய விளக்க முடைய தனியாட்கள், புகைப்படங்கள், விவரண நிகழ்ச்சிகள், இடிபாடுகள் காணப் படும் இடங்கள் போன்றவை முக்கியமானவை.

- தேடிப்பெற்ற தகவல்களைப் பின்வருமாறு ஓர் அட்டவணையாக ஒழுங்குபடுத்த வழிப்படுத்துங்கள்.

| அரசர், நாட்டுக்குழைத்த ஏனையவர்கள் | செய்த சேவைகள் | அவற்றின் மூலம் இன்று எமக்குக் கிடைக்கும் பயன்கள் |
|---|---|---|
| | | |

- மாணவரைக் குழுக்களாகப் பிரித்து அந்தந்த அரசரால், நாட்டுக்கு உழைத்த ஏனையவர்களால் செய்யப்பட்ட வேலைகளை இனங்காண வழிப்படுத்துங்கள். அத்தகவல்கள் பற்றி உரையாடுங்கள். அவற்றைக்கொண்டு,
  - காலைக்கூட்டத்தில் அல்லது சங்கங்களில் அவர்கள் தொடர்பான தகவல்களை முன்வைத்தல்
  - சுவர்ப் பத்திரிகைக்காக அறிக்கை தயாரித்து முன்வைத்தல்
  - பாடல்களை ஆக்கிப்பாடுதல்
  - நாடகங்களை அமைத்து நடித்தல்

  போன்றவற்றில் ஈடுபட மாணவருக்கு வாய்ப்பளியுங்கள். இதற்கு மாணவர்களைக் குழுக்களாக வழிப்படுத்தல் மிகப் பொருத்தமானது.

- அரசர்கள், நாட்டுக்குழைத்த ஏனையோர் செய்த சேவைகள் மூலம் எமது நாட்டுக்கும் மக்களுக்கும் கிடைத்த நன்மைகள் பற்றியும் இன்றும் கூட அவற்றின் மூலம் பயன் கள் கிடைக்கின்றமை பற்றியும் கலந்துரையாடுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - பாரிய சந்தைத் தொகுதியொன்றிலிருந்து பணம் கொடுத்து வாங்கும் அரிசி, பண்டைய அரசர்கள் அமைத்த நீர்ப்பாசனத்திட்டங்களின் துணையுடன் விளைவிக்கப் பட்டுள்ளமை.
  - குளத்துநீர், குடிப்பதற்கும், குளிப்பதற்கும் வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தப் படுகின்றமை.

- பின்வரும் பாடலைப்பாட மாணவர்களுக்கு வாய்ப்பளியுங்கள். பாடலுக்கும் தாளம் போடுவதற்காக கைத்தாளமொன்றினை அல்லது சிறிய மேளமொன்றினைப் பயன் படுத்துங்கள்.

## இலங்கை நாடு

இலங்கை என்பது எம்நாடு - நாம்
இலங்கையர் என்றே பண் பாடு.
இலங்கிடும் செல்வம் உளநாடு - எவரும்
இசைந்து புகழும் திருநாடு.

சிங்களவர் தமிழர் முஸ்லீங்கள் - வேறு
சிறிய இனத்து மாந்தர்களும்
இங்குற்ற சகல மதத்தவரும் சேர்ந்து
இன்புற்று வாழும் பெருநாடு.

மாவலி களனி கலகலக்கும் - இரு
மருங்கும் நிறைந்து பயிர் விளைக்கும்.
பூமலி அருவி தெதுறுநதி - பாய்ந்து
பூரித்து வழங்கும் பெரியநதி.

மலைதனில் இருந்து வழிந்தோடும் - நதிகளை
வளைத்தே அணைகள் போட்டிடுவோம்.
விளைநிலம் அனைத்திலும் பயிரிடுவோம் - பசி
வாட்டும் மனதிர்க்குச் சோறிடுவோம்.

*- ச. அருளானந்தம்*
*நன்றி: ஆனந்தமான பாட்டு*

- மாணவர் பாடுவதற்குப் பொருத்தமான இவ்வாறான வேறு பாடல்களைத் தேடிப்பெற்று அவற்றைப் பாடி ஆட வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 2

- எமது மூதாதையர்கள் செய்த அரிய ஆக்கங்களை இனங்கண்டு அவற்றை ஆராய இடமளியுங்கள்.

- எமது மூதாதையர்கள், பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள், கட்டடங்கள் போன்ற வரலாற்று முக்கியத்துவமுடைய இடங்களைத் தாபித்திருந்தனர். பெரும்பாலான மாணவர்கள் இவ்வாறாக இடங்கள் பற்றி ஏற்கனவே அறிந்து வைத்திருக்கக்கூடும். அத்தகவல்களை முன்வைப்பதற்கு வாய்ப்பளியுங்கள். அதனூடாக ஆராய வேண்டிய சில ஆக்கங்களை இனங்காண வழிப்படுத்துங்கள்.



**பழைய கற்பாலம்**

- இந்த ஆக்கங்களை ஆராய்வதற்கு மிகப்பொருத்தமான முறைகளை இனங்காண்பதற்கும் அதற்குத் தேவையான ஒழுங்குகளைச் செய்வற்கும் ஆவன செய்யுங்கள்.
    - நூல்களில் உள்ள தகவல்களை ஆராய்தல்
    - பாடசாலையின் வரலாற்று ஆசிரியர் அல்லது வேறு வளவாளர் ஒருவருடன் கலந்துரையாடல்
    - குறித்த இடங்கள் தொடர்பான செவிவழிக் கதைகள், நாட்டார் கதைகளைத் தேடியறிதல்
    - மூதாதையர் உருவாக்கிய ஆக்கங்களை ஆராய்வதற்காக தேடியாய்வுக்காகக் களப் பிரயாணமொன்றைத் திட்டமிடுங்கள்.

- இந்த தேடல் பிரயாணத்தின்போது பின்வரும் விடயங்களில் மாணவரது கவனத்தைத் திருப்புங்கள்.
  - ஆக்கங்களின் சிறப்பை மதித்தல்
  - அவற்றை ஆக்குவதற்காகப் பயன்படுத்தப்பட்ட மேம்பட்ட தொழினுட்ப முறைகள்
  - அந்த ஆக்கங்களைச் செய்யும்போது அவர்களால் செய்யப்பட்ட தியாகங்கள், அர்ப்பணிப்புகள்

- இந்த தேடல் பிரயாணத்தின்போது பெற்ற தகவல்களை அறிக்கைப்படுத்த வழி காட்டுங்கள்.

- அத்தகவல்களைக்கொண்டு அறிக்கைப் புத்தகங்கள் தயாரித்தல், சித்திரங்கள் ஆக்குதல், பாடல்கள் ஆக்கிப்பாடுதல், மாதிரியுருக்களை உருவாக்குதல் ஆகியனவற்றுக்கு வாய்ப்பளியுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  கலாவாவியின் அல்லது பிரிதொரு குளத்தின் மாதிரியுருவை அமைத்தல்

- அறிக்கைப்படுத்திய தகவல்களைக் கண்காட்சியாகவோ கலை நிகழ்ச்சியாகவோ முன்வைப்பதற்கு மாணவருக்கு வழிகாட்டுங்கள்.

- வரலாற்று முக்கியத்துவமுடைய இடங்கள் தொடர்பாக எழுதப்பட்டுள்ள பாடல்களைத் தனியாகவும் கூட்டாகவும் பாடுவதற்கு மாணவரைத் தூண்டுங்கள். இங்கு மட்டு நகர்வாவி தொடர்பான பாடல் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. இதனைப் பாடி ஆட சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**மட்டுநகர் வாவி**

மட்டக் களப்பு வாவியிலே
வந்து பாடும் மீனினங்கள்
தட்டும் மனதைக் களிப்பூட்டும்
தென்றல் தழுவித் தாலாட்டும்

சித்திரை மாதம் முழுநிலவில்
சிரிக்கும் அலைகள் கரையிடிக்கும்
தத்திடும் ஏழு கன்னியரின்
தவழும் இசையில் உயிர்துடிக்கும்.

யாழின் நரம்புகள் கலகலக்கும்
நாதம் எழுந்து குதுகலிக்கும்
சூழும் சரிகம பதநி இசை
சுழலும் உலகம் பரதநிலை.

உயிர்கள் இசையில் மூழ்கியெழும்.
உய்யும் தொழில் வகை முளையவிழும்
பயிர்கள் செழிக்கும் பால்சொரியும்
பண்பு மலிந்து தான்விரியும்.

*அ. அருளானந்தம்*
*நன்றி: ஆனந்தமான பாட்டு*

## செயற்பாடு 3

- எமது நாட்டில் காணப்படும் வரலாற்றுப் பெறுமானமுடைய கலைப்படைப்புகள் தொடர்பாக ஆராய்வதற்காக மாணவரைப் பின்வரும் செயற்பாடுகளின்பால் வழிப் படுத்துங்கள்.

- ஆராய்வதற்குப் பொருத்தமான சில கலைப்படைப்புக்கள் பற்றி மாணவருடன் உரையாடுங்கள். அதற்காக பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவரது கவனத்தைத் திருப்புங்கள்.
  - பண்டைய இலங்கையின், சமூக பொருளாதார அம்சங்கள் யாவும் கலையினால் போசிக்கப்பட்டிருத்தல். அவ்வாறான பல கலைப்படைப்புக்கள் எமது நாடடில் உள்ளன.

    ***எடுத்துக்காட்டு:***
    - ஓவியம்/சித்திரக்கலை : சிகிரியா, இசுருமுனியா விகாரை
    - செதுக்கல் வேலைக்கலை : அம்பக்கை, யாப்பகுவை, தலதா மாளிகை
    - இலக்கிய நூல்கள் : பராக்கிரமபாகு கதை
- மாணவர்கள் ஏற்கனவே அறிந்துவைத்துள்ள விடயங்களை முன்வைக்க இடமளித்து கலந்துரையாடலை நடத்துங்கள்.

- அதனூடாக பண்டைய அரசர்கள், அரசாட்சியிலும் கலை, இலக்கிய, பண்பாட்டு அம்சங்களிலும் கவனஞ் செலுத்தியுள்ளனர் என்பதை மாணவர்களுக்கு விளக்குங்கள்.

- ஆராய்வதற்குப் பொருத்தமான முறைகளை இனங்காண்பதற்கான ஒரு வேலைத் திட்டத்தை அமைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்குங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - நூல்களை உசாவுதல்
  - வளவாளர்களின் கருத்துக்களைப் பெறுதல்
  - விவரண நிகழ்ச்சிகளைப் பார்வையிடல்

- இனங்கண்ட முறைகளினூடாக அக்கலைப்படைப்புக்கள் தொடர்பான தகவல்களை ஆராய்வதற்கு மாணவர்களுக்கு இடமளியுங்கள். அவற்றின் சிறப்பை இனங்காண்பதற்குத் தேவையான பண்புகளைத் தம்மிடத்தே உருவாக்கிக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வழிப்படுத்துங்கள்.

- ஆராய்ந்த பின்னர், அறிக்கைப்படுத்திய தகவல்களைப் பொருத்தமானவாறு குழு நிலையில் கலந்துரையாட வழிப்படுத்துங்கள்.
  - அக்கலைப்படைப்புகளின் வரலாற்றுப் பெறுமானம்
  - அவற்றின் கலைத்துவப் பெறுமானம்
  - அவற்றின் தற்போதைய நிலை
  - அவற்றைப் பேணிக்காப்பதற்காக நாம் செய்யக்கூடியவை.

## செயற்பாடு 4

- வரலாற்று முக்கியத்துவமுடைய இடங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காக இச்செயற்பாட்டில் ஈடுபட மாணவர்களுக்கு இடமளியுங்கள்.

- தொல்பொருள்களைப் பாதுகாப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படும் செயற்றிட்டமொன்றினை ஆராய்வதற்காக, அயற் பிரதேசத்தில் காணப்படும் அவ்வாறான ஒருசெயற்றிட்டத்தை அல்லது அவ்வாறான வசதிகள் - ஒழுங்குகள் உள்ள ஓர் இடத்தை இனங் கண்டு கொள்ளுங்கள். பாரிய செயற்றிட்டங்களன்றி, கல்லேடொன்றைப் பாதுகாப்பதற்கான வேலி அமைக்கப்பட்டிருத்தல், அதற்காகத் தொல்பொருளியல் இலட்சினை பொறிக்கப்பட்டிருத்தல் போன்ற சந்தர்ப்பங்கள் பொருத்தமானவையாகும்.

- அவ்வாறான ஓரிடத்தில் தேடியாய்வுப் பிரயாணமொன்றில் ஈடுபட மாணவர்களுக்கு வழிகாட்டுங்கள். அப்பிரயாணத்தின்போது சந்திக்கக்கூடிய தொல்பொருளியல் அதிகாரிகளுடன் அல்லது அந்த இடங்கள் பற்றிய போதிய விளக்கமுடைய மூத்தோருடன் கலந்துரையாடுவதற்கான வாய்ப்புக்களை முன்கூட்டியே திட்டமிட்டு உருவாக்கிக் கொடுங்கள்.
  - தொல்பொருள்கள் இயற்கையாக அழிவடையும் விதம்
  - ஆட்கள் காரணமாக ஏற்படும் அழிவுகள்
  - அவற்றை (வெளிநாட்டாருக்கு) விற்பனை செய்தல் போன்றவை பற்றி வலியுறுத்துவது தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- தேடல் பிரயாணத்தின் பின்னர் வகுப்பு மாணவரைப் பொருத்தமானவாறு குழுக்களாக்கிப் பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனஞ்செலுத்துமாறு அவர்களை வழிப்படுத்துங்கள்.
  - பண்டைய கலைப் படைப்புக்களின் சிறப்பியல்புகள்
  - அவற்றின் வரலாற்றுப் பெறுமானம்
  - அவற்றின் மூலம் பெறத்தக்க இரசனை
  - அவற்றைப் பாதுகாப்பதற்காகப் பங்களிக்கத்தக்க விதம்

- இந்த ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் மாணவரது கருத்தை வினவுங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***
  கலைப்படைப்புக்களின் சிறப்பியல்புகள் தொடர்பாக அவற்றை ஆக்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள மூலப்பொருள்கள், அழகுபடுத்தல்கள் போன்றவை.

- பண்டைய கலைப்படைப்பொன்றினைத் தெரிவுசெய்து மேற்படி ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் மாணவருடன் உரையாடுங்கள். குறிப்பாக அவற்றைப் பாதுகாப்பதற்காகப் பங்களிப்புச் செய்யக்கூடிய விதம் பற்றிய கருத்துக்களை முன்வைப்பதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பளியுங்கள்.


## செயற்பாடு 5

- இந்தக் கருப்பொருளின்போது நடத்தப்பட்ட தேடல் பிரயாணங்கள் தொடர்பான சிறுநூலொன்றினைத் தயாரிக்க வழிப்படுத்துங்கள். தமது வசதிப்படி ஊடகங்களைப் பயன்படுத்தி இச்சிறுநூலை நல்ல தரமுடையதாக முன்வைக்குமாறு மாணவரைத் தூண்டுங்கள்.

- வரலாற்று முக்கியத்துவமுடைய இடங்களைப் பாதுகாப்பதில் பங்களிப்புச் செய்தல் தொடர்பான ஆக்கபூர்வமான சுவரொட்டிகளை ஆக்குமாறு மாணவர் குழுக்களை வழிப்படுத்துங்கள்.

- மாணவரது அவ்வாறான ஆக்கங்களை இக்கருப்பொருளின் பின்னர் பெற்றோருக்காக நடத்தப்படும் வகுப்பு வட்டத்தின்போது அவர்களுக்குக் காட்சிப்படுத்துங்கள்.

# 10.0 வேலைகளை இலகுவாக்கும் வழிகள்



**இன்று நாம் தொழினுட்ப ரீதியில் மிக மேம்பட்ட ஓர் உலகிலேயே வாழ்கின்றோம். எமது வாழ்க்கையில் வேலைகளை இலகுபடுத்திக்கொள்வதற்காக, உருவாக்கப் பட்ட பல உபகரணங்களும், பொறிகளும் எமது சூழலில் உள்ளன. அந்த உபகரணங்கள், பொறிகளை உற்பத்தி செய்வதற்கு அடிப்படையாக அமைந்த எளிமையான பல கோட்பாடுகள் உள்ளன. அது தொடர்பான விளக்கத்தை யும் செயன்முறை அனுபங்களையும் வழங்குவது, தொழி னுட்ப உலகுக்காக அவர்களைத் தயார்ப்படுத்துவதற்குப் பெரிதும் துணையாகும். அதற்குரிய தேர்ச்சிகளை மாணவரிடத்தே விருத்தி செய்யும் நோக்குடனேயே இந்த கருப்பொருள் திட்டமிடப்பட்டுள்ளது.**

## தேர்ச்சிகள்

- கூட்டாகச் செய்யும் வேலையொன்றில் திட்டமிடல் தொடக்கம் வெற்றிகரமாக நிறைவு செய்தல் வரையில் பங்களிப்புச் செய்வார்.
- வேலைகளை இலகுபடுத்திக்கொள்வதற்காக எளியபொறிக் கோட்பாடுகளைப் பயன்படுத்துவார்.
- வெவ்வேறு சக்திகளைப் பயன்படுத்தி அன்றாட வேலைகளை இலகுபடுத்திக் கொள்வார்.
- வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய எளிமையான உபகரணங்களை ஆக்குவார்.
- வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காக ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.
- கூட்டுணர்வு வெளிக்கொணரப்படும் ஆக்கபூர்வமான விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- எடுகோள்களுடன் திட்டமிடல்களில் ஈடுபடுவார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

## செயற்பாடு 1

- வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காக நாளாந்தம் பயன்படுத்தும் பல்வேறு உபகரணங்கள் பற்றி மாணவருடன் கலந்துரையாடி, அவ்வாறானவை சிலவற்றைப் பட்டியற்படுத்துங்கள்.
  மூன்றாம், நான்காந் தரங்களில் இனங்கண்ட உபகரணங்களையும் அவற்றினால் செய்யப்படும் வேலைகளையும் பற்றி உரையாடுங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***
  கத்தரிக்கோல், குறடு, போத்தல் மூடி திறக்கும் உபகரணம்

- வெவ்வேறு உபகரணங்களைப் பயன்படுத்தி, வேலைகள் இலகுபடுத்திக் கொள்ளப்படும் சந்தர்ப்பங்களையும் விதங்களையும் அவதானிக்கக்கூடிய தொழிற்சாலையொன்றை வேலைத்தளமொன்றைப் பார்வையிடுவதற்கான நடவடிக்கைகளை ஒழுங்கு செய்யுங் கள். அவ்வாறான ஓர் இடத்தை அவதானித்துப் பெறும் அனுபவங்களை வகுப்பில் கலந்துரையாட இடமளியுங்கள்.

சிங்களவர் தமிழர் முஸ்லீங்கள் - வேறு
சிறிய இனத்து மாந்தர்களும்
இங்குற்ற சகல மதத்தவரும் சேர்ந்து
இன்புற்று வாழும் பெருநாடு.

மாவலி களனி கலகலக்கும் - இரு
மருங்கும் நிறைந்து பயிர் விளைக்கும்.
பூமலி அருவி தெதுறுநதி - பாய்ந்து
பூரித்து வழங்கும் பெரியநதி.

மலைதனில் இருந்து வழிந்தோடும் - நதிகளை
வளைத்தே அணைகள் போட்டிடுவோம்.
விளைநிலம் அனைத்திலும் பயிரிடுவோம் - பசி
வாட்டும் மனதிர்க்குச் சோறிடுவோம்.

*- ச. அருளானந்தம்*
*நன்றி: ஆனந்தமான பாட்டு*

- மாணவர் பாடுவதற்குப் பொருத்தமான இவ்வாறான வேறு பாடல்களைத் தேடிப்பெற்று அவற்றைப் பாடி ஆட வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 2

- எமது மூதாதையர்கள் செய்த அரிய ஆக்கங்களை இனங்கண்டு அவற்றை ஆராய இடமளியுங்கள்.

- எமது மூதாதையர்கள், பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள், கட்டடங்கள் போன்ற வரலாற்று முக்கியத்துவமுடைய இடங்களைத் தாபித்திருந்தனர். பெரும்பாலான மாணவர்கள் இவ்வாறாக இடங்கள் பற்றி ஏற்கனவே அறிந்து வைத்திருக்கக்கூடும். அத்தகவல்களை முன்வைப்பதற்கு வாய்ப்பளியுங்கள். அதனூடாக ஆராய வேண்டிய சில ஆக்கங்களை இனங்காண வழிப்படுத்துங்கள்.



**பழைய கற்பாலம்**

- இந்த ஆக்கங்களை ஆராய்வதற்கு மிகப்பொருத்தமான முறைகளை இனங்காண்பதற்கும் அதற்குத் தேவையான ஒழுங்குகளைச் செய்வற்கும் ஆவன செய்யுங்கள்.
    - நூல்களில் உள்ள தகவல்களை ஆராய்தல்
    - பாடசாலையின் வரலாற்று ஆசிரியர் அல்லது வேறு வளவாளர் ஒருவருடன் கலந்துரையாடல்
    - குறித்த இடங்கள் தொடர்பான செவிவழிக் கதைகள், நாட்டார் கதைகளைத் தேடியறிதல்
    - மூதாதையர் உருவாக்கிய ஆக்கங்களை ஆராய்வதற்காக தேடியாய்வுக்காகக் களப் பிரயாணமொன்றைத் திட்டமிடுங்கள்.

- இந்த தேடல் பிரயாணத்தின்போது பின்வரும் விடயங்களில் மாணவரது கவனத்தைத் திருப்புங்கள்.
  - ஆக்கங்களின் சிறப்பை மதித்தல்
  - அவற்றை ஆக்குவதற்காகப் பயன்படுத்தப்பட்ட மேம்பட்ட தொழினுட்ப முறைகள்
  - அந்த ஆக்கங்களைச் செய்யும்போது அவர்களால் செய்யப்பட்ட தியாகங்கள், அர்ப்பணிப்புகள்

- இந்த தேடல் பிரயாணத்தின்போது பெற்ற தகவல்களை அறிக்கைப்படுத்த வழி காட்டுங்கள்.

- அத்தகவல்களைக்கொண்டு அறிக்கைப் புத்தகங்கள் தயாரித்தல், சித்திரங்கள் ஆக்குதல், பாடல்கள் ஆக்கிப்பாடுதல், மாதிரியுருக்களை உருவாக்குதல் ஆகியனவற்றுக்கு வாய்ப்பளியுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  கலாவாவியின் அல்லது பிரிதொரு குளத்தின் மாதிரியுருவை அமைத்தல்

- அறிக்கைப்படுத்திய தகவல்களைக் கண்காட்சியாகவோ கலை நிகழ்ச்சியாகவோ முன்வைப்பதற்கு மாணவருக்கு வழிகாட்டுங்கள்.

- வரலாற்று முக்கியத்துவமுடைய இடங்கள் தொடர்பாக எழுதப்பட்டுள்ள பாடல்களைத் தனியாகவும் கூட்டாகவும் பாடுவதற்கு மாணவரைத் தூண்டுங்கள். இங்கு மட்டு நகர்வாவி தொடர்பான பாடல் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. இதனைப் பாடி ஆட சந்தர்ப்பம் வழங்குங்கள்.

### மட்டுநகர் வாவி

மட்டக் களப்பு வாவியிலே
வந்து பாடும் மீனினங்கள்
தட்டும் மனதைக் களிப்பூட்டும்
தென்றல் தழுவித் தாலாட்டும்

சித்திரை மாதம் முழுநிலவில்
சிரிக்கும் அலைகள் கரையிடிக்கும்
தத்திடும் ஏழு கன்னியரின்
தவழும் இசையில் உயிர்துடிக்கும்.

யாழின் நரம்புகள் கலகலக்கும்
நாதம் எழுந்து குதுகலிக்கும்
சூழும் சரிகம பதநி இசை
சுழலும் உலகம் பரதநிலை.

உயிர்கள் இசையில் மூழ்கியெழும்.
உய்யும் தொழில் வகை முளையவிழும்
பயிர்கள் செழிக்கும் பால்சொரியும்
பண்பு மலிந்து தான்விரியும்.

*அ. அருளானந்தம்*
*நன்றி: ஆனந்தமான பாட்டு*

## செயற்பாடு 3

- எமது நாட்டில் காணப்படும் வரலாற்றுப் பெறுமானமுடைய கலைப்படைப்புகள் தொடர்பாக ஆராய்வதற்காக மாணவரைப் பின்வரும் செயற்பாடுகளின்பால் வழிப் படுத்துங்கள்.

- ஆராய்வதற்குப் பொருத்தமான சில கலைப்படைப்புக்கள் பற்றி மாணவருடன் உரையாடுங்கள். அதற்காக பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவரது கவனத்தைத் திருப்புங்கள்.
  - பண்டைய இலங்கையின், சமூக பொருளாதார அம்சங்கள் யாவும் கலையினால் போசிக்கப்பட்டிருத்தல். அவ்வாறான பல கலைப்படைப்புக்கள் எமது நாடடில் உள்ளன.

    ***எடுத்துக்காட்டு:***
    - ஓவியம்/சித்திரக்கலை : சிகிரியா, இசுருமுனியா விகாரை
    - செதுக்கல் வேலைக்கலை : அம்பக்கை, யாப்பகுவை, தலதா மாளிகை
    - இலக்கிய நூல்கள் : பராக்கிரமபாகு கதை

- மாணவர்கள் ஏற்கனவே அறிந்துவைத்துள்ள விடயங்களை முன்வைக்க இடமளித்து கலந்துரையாடலை நடத்துங்கள்.

- அதனூடாக பண்டைய அரசர்கள், அரசாட்சியிலும் கலை, இலக்கிய, பண்பாட்டு அம்சங்களிலும் கவனஞ் செலுத்தியுள்ளனர் என்பதை மாணவர்களுக்கு விளக்குங்கள்.

- ஆராய்வதற்குப் பொருத்தமான முறைகளை இனங்காண்பதற்கான ஒரு வேலைத் திட்டத்தை அமைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்குங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - நூல்களை உசாவுதல்
  - வளவாளர்களின் கருத்துக்களைப் பெறுதல்
  - விவரண நிகழ்ச்சிகளைப் பார்வையிடல்

- இனங்கண்ட முறைகளினூடாக அக்கலைப்படைப்புக்கள் தொடர்பான தகவல்களை ஆராய்வதற்கு மாணவர்களுக்கு இடமளியுங்கள். அவற்றின் சிறப்பை இனங்காண்பதற் குத் தேவையான பண்புகளைத் தம்மிடத்தே உருவாக்கிக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வழிப்படுத்துங்கள்.

- ஆராய்ந்த பின்னர், அறிக்கைப்படுத்திய தகவல்களைப் பொருத்தமானவாறு குழு நிலையில் கலந்துரையாட வழிப்படுத்துங்கள்.
  - அக்கலைப்படைப்புகளின் வரலாற்றுப் பெறுமானம்
  - அவற்றின் கலைத்துவப் பெறுமானம்
  - அவற்றின் தற்போதைய நிலை
  - அவற்றைப் பேணிக்காப்பதற்காக நாம் செய்யக்கூடியவை.

## செயற்பாடு 4

- வரலாற்று முக்கியத்துவமுடைய இடங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காக இச்செயற்பாட்டில் ஈடுபட மாணவர்களுக்கு இடமளியுங்கள்.

- தொல்பொருள்களைப் பாதுகாப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படும் செயற்றிட்டமொன்றினை ஆராய்வதற்காக, அயற் பிரதேசத்தில் காணப்படும் அவ்வாறான ஒருசெயற்றிட்டத்தை அல்லது அவ்வாறான வசதிகள் - ஒழுங்குகள் உள்ள ஓர் இடத்தை இனங்கண்டு கொள்ளுங்கள். பாரிய செயற்றிட்டங்களன்றி, கல்லேடொன்றைப் பாதுகாப்பதற்கான வேலி அமைக்கப்பட்டிருத்தல், அதற்காகத் தொல்பொருளியல் இலட்சினை பொறிக்கப்பட்டிருத்தல் போன்ற சந்தர்ப்பங்கள் பொருத்தமானவையாகும்.

- அவ்வாறான ஓரிடத்தில் தேடியாய்வுப் பிரயாணமொன்றில் ஈடுபட மாணவர்களுக்கு வழிகாட்டுங்கள். அப்பிரயாணத்தின்போது சந்திக்கக்கூடிய தொல்பொருளியல் அதிகாரிகளுடன் அல்லது அந்த இடங்கள் பற்றிய போதிய விளக்கமுடைய மூத்தோருடன் கலந்துரையாடுவதற்கான வாய்ப்புக்களை முன்கூட்டியே திட்டமிட்டு உருவாக்கிக் கொடுங்கள்.
  - தொல்பொருள்கள் இயற்கையாக அழிவடையும் விதம்
  - ஆட்கள் காரணமாக ஏற்படும் அழிவுகள்
  - அவற்றை (வெளிநாட்டாருக்கு) விற்பனை செய்தல் போன்றவை பற்றி வலியுறுத்துவது தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- தேடல் பிரயாணத்தின் பின்னர் வகுப்பு மாணவரைப் பொருத்தமானவாறு குழுக்களாக்கிப் பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனஞ்செலுத்துமாறு அவர்களை வழிப்படுத்துங்கள்.
  - பண்டைய கலைப் படைப்புக்களின் சிறப்பியல்புகள்
  - அவற்றின் வரலாற்றுப் பெறுமானம்
  - அவற்றின் மூலம் பெறத்தக்க இரசனை
  - அவற்றைப் பாதுகாப்பதற்காகப் பங்களிக்கத்தக்க விதம்

- இந்த ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் மாணவரது கருத்தை வினவுங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***
  கலைப்படைப்புக்களின் சிறப்பியல்புகள் தொடர்பாக அவற்றை ஆக்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள மூலப்பொருள்கள், அழகுபடுத்தல்கள் போன்றவை.

- பண்டைய கலைப்படைப்பொன்றினைத் தெரிவுசெய்து மேற்படி ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் மாணவருடன் உரையாடுங்கள். குறிப்பாக அவற்றைப் பாதுகாப்பதற்காகப் பங்களிப்புச் செய்யக்கூடிய விதம் பற்றிய கருத்துக்களை முன்வைப்பதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பளியுங்கள்.


## செயற்பாடு 5

- இந்தக் கருப்பொருளின்போது நடத்தப்பட்ட தேடல் பிரயாணங்கள் தொடர்பான சிறுநூலொன்றினைத் தயாரிக்க வழிப்படுத்துங்கள். தமது வசதிப்படி ஊடகங்களைப் பயன்படுத்தி இச்சிறுநூலை நல்ல தரமுடையதாக முன்வைக்குமாறு மாணவரைத் தூண்டுங்கள்.

- வரலாற்று முக்கியத்துவமுடைய இடங்களைப் பாதுகாப்பதில் பங்களிப்புச் செய்தல் தொடர்பான ஆக்கபூர்வமான சுவரொட்டிகளை ஆக்குமாறு மாணவர் குழுக்களை வழிப்படுத்துங்கள்.

- மாணவரது அவ்வாறான ஆக்கங்களை இக்கருப்பொருளின் பின்னர் பெற்றோருக்காக நடத்தப்படும் வகுப்பு வட்டத்தின்போது அவர்களுக்குக் காட்சிப்படுத்துங்கள்.

# 10.0 வேலைகளை இலகுவாக்கும் வழிகள்



**இன்று நாம் தொழினுட்ப ரீதியில் மிக மேம்பட்ட ஓர் உலகிலேயே வாழ்கின்றோம். எமது வாழ்க்கையில் வேலைகளை இலகுபடுத்திக்கொள்வதற்காக, உருவாக்கப் பட்ட பல உபகரணங்களும், பொறிகளும் எமது சூழலில் உள்ளன. அந்த உபகரணங்கள், பொறிகளை உற்பத்தி செய்வதற்கு அடிப்படையாக அமைந்த எளிமையான பல கோட்பாடுகள் உள்ளன. அது தொடர்பான விளக்கத்தை யும் செயன்முறை அனுபங்களையும் வழங்குவது, தொழி னுட்ப உலகுக்காக அவர்களைத் தயார்ப்படுத்துவதற்குப் பெரிதும் துணையாகும். அதற்குரிய தேர்ச்சிகளை மாணவரிடத்தே விருத்தி செய்யும் நோக்குடனேயே இந்த கருப்பொருள் திட்டமிடப்பட்டுள்ளது.**

## தேர்ச்சிகள்

- கூட்டாகச் செய்யும் வேலையொன்றில் திட்டமிடல் தொடக்கம் வெற்றிகரமாக நிறைவு செய்தல் வரையில் பங்களிப்புச் செய்வார்.
- வேலைகளை இலகுபடுத்திக்கொள்வதற்காக எளியபொறிக் கோட்பாடுகளைப் பயன்படுத்துவார்.
- வெவ்வேறு சக்திகளைப் பயன்படுத்தி அன்றாட வேலைகளை இலகுபடுத்திக் கொள்வார்.
- வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய எளிமையான உபகரணங்களை ஆக்குவார்.
- வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காக ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.
- கூட்டுணர்வு வெளிக்கொணரப்படும் ஆக்கபூர்வமான விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- எடுகோள்களுடன் திட்டமிடல்களில் ஈடுபடுவார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

## செயற்பாடு 1

- வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காக நாளாந்தம் பயன்படுத்தும் பல்வேறு உபகரணங்கள் பற்றி மாணவருடன் கலந்துரையாடி, அவ்வாறானவை சிலவற்றைப் பட்டியற்படுத்துங்கள்.
  மூன்றாம், நான்காந் தரங்களில் இனங்கண்ட உபகரணங்களையும் அவற்றினால் செய்யப்படும் வேலைகளையும் பற்றி உரையாடுங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***
  கத்தரிக்கோல், குறடு, போத்தல் மூடி திறக்கும் உபகரணம்

- வெவ்வேறு உபகரணங்களைப் பயன்படுத்தி, வேலைகள் இலகுபடுத்திக் கொள்ளப்படும் சந்தர்ப்பங்களையும் விதங்களையும் அவதானிக்கக்கூடிய தொழிற்சாலையொன்றை வேலைத்தளமொன்றைப் பார்வையிடுவதற்கான நடவடிக்கைகளை ஒழுங்கு செய்யுங் கள். அவ்வாறான ஓர் இடத்தை அவதானித்துப் பெறும் அனுபவங்களை வகுப்பில் கலந்துரையாட இடமளியுங்கள்.

- வீடுகளில் முற்காலத்தில் பல்வேறு வேலைகளுக்காகப் பயன்படுத்திய உபகரணங்கள், அவற்றுக்காகச் செலவு செய்த காலம், உடல் உழைப்பு, பணம் என்பன தொடர்பான தகவல்களைச் சேகரித்துவருமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.

- வகுப்பு மாணவரைக் குழுக்களாகப் பிரித்து, அக்குழுவைச் சேர்ந்த மாணவர்கள், சேகரித்து வந்த தகவல்களை ஒன்று திரட்டி அவ்வொவ்வொரு வேலைக்காகவும், தற்காலத்தில் பயன்படுத்தப்படும் முறைகள்/உபகரணங்கள் தொடர்பாகக் கலந்துரை யாட வழிப்படுத்துங்கள்.

- அத்தகவல்களின்படி, பல்வேறு வேலைகளுக்காக பண்டைக்காலத்தில் பயன்படுத்தப் பட்ட முறைகள்/உபகரணங்கள் பற்றியும் தற்காலத்தில் பயன்படுத்தப்படும் முறைகள்/ உபகரணங்கள் பற்றியும் தாளொன்றில் குறித்துக் கொள்ளுமாறு வழிப்படுத்துங்கள். முடியுமாயின், படங்கள் வரையவும் வழிப்படுத்துங்கள். (மிகத் திருத்தமாக வரைவது மாணவர்களுக்கு கடினமாக இருக்கலாம். எனினும் தொழினுடபப் படங்களை வரை வதற்கான ஒரு பிரவேசமாக இதனைக் கொள்ளலாம்.)

- குழுக்கள் தயாரித்த தகவல், அறிக்கைகளை முன்வைக்கும் சந்தர்ப்பங்களில் முற் காலத்தில் பயன்படுத்திய முறைகள்/உபகரணங்களினதும், தற்காலத்தில் பயன்படுத் தப்படும் முறைகள், உபகரணங்களினதும் அனுகூலங்கள், பிரதிகூலங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
    - செலவாகும் காலம்/நேரம்
    - செலவாகும் மனித உழைப்பு
    - செலவாகும் பணம் (வாங்குவதற்கு, மின்சாரத்துக்கு, பராமரிப்பதற்கு...)

- கூட்டாக வேலை செய்யும் சந்தர்ப்பங்களை நடனமாக ஆடிக்காட்ட வாய்ப்பளியுங்கள். அவ்வாறான ஒரு (வேலைத்தளத்தின்/தொழிற்சாலையின்) வேலைசெய்யும் பல்வேறு சந்தர்ப்பங்களைக் காட்டும் சித்திரங்களை வரைய வழிப்படுத்துங்கள். அச்சித்திரங் களைக் காட்சிப்படுத்தி அவை பற்றி உரையாடுங்கள்.

## செயற்பாடு 2


- யாதேனும் ஒரு பொருளை ஓர் இடத்தில் இருந்து மற்றுமோர் இடத்துக்குக் கொண்டு செல்லும்போது இழுப்பு அல்லது தள்ளுகை நிகழுகின்றது என்பதை மாணவர்களுக்கு விளக்குங்கள்.

    **தள்ளுதல்:** சில்லு வண்டியை (வீல்பரோவை)தள்ளுதல்,
    அலுமாரியொன்றை ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்குத் தள்ளுதல்,
    பந்தொன்றுக்கு துடுப்பால் அடித்தல்


    **இழுத்தல்:** கிணற்றிலிருந்து நீர் வாளியை இழுத்தல்,
    பாரந்தூக்கியினால் பொருளொன்றை உயர்த்துதல்

- பாரமான பொருளொன்றினை இடத்துக்கிடம் கொண்டு செல்லும்போது தூக்கிச் செல்லுவதை விட, இழுத்துச் செல்லுதல் அல்லது தள்ளிச் செல்லுதல் இலகுவானது என்பதை மாணவர்களுக்கு நடைமுறையில் கையாண்டு பார்க்க இடமளியுங்கள். இதற்காக எளிமையான சில முறைகளைப் பயன்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு:***




கோலொன்றினைப் பயன்படுத்தல்



சில்லு வண்டியில் வைத்துத் தள்ளிச் செல்லுதல்

- மாணவரை பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
  1. ஒரு குறித்த சுமையை, வெவ்வேறு கோணங்களில் சாய்தளங்கள் மீது வைத்து இழுத்துச் செல்லும்போது அனுபவிக்கும் வேறுபாடுகள் எவை எனப் பார்க்க வழிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு:*** சௌகரியம், தூரம், காலம்/நேரம்



- மேலே படத்தில் காட்டியவாறு ஒரு மட்டத்தில் இருந்து மற்றுமொரு சமமான மட்டத்துக்கு செல்ல இடமளியுங்கள்.

  2. வெவ்வேறு நிறைகளை ஒரே சாய்தளத்தின் மீது கொண்டு செல்ல இடமளியுங்கள். இரண்டுக்கும் இடையிலான வேறுபாடுகளை இனங்கண்டு விபரிக்க இடமளியுங்கள்.

வேலையை இலகுபடுத்துவதற்கு மற்றுமொரு முறை, பொருள்களை இடத்துக்கிடம் கொண்டு செல்லும் ஊடகத்தை மாற்றுவதாகும்.
***எடுத்துக்காட்டு:*** பொருள்களை நீரின் மீது இடத்துக்கிடம் கொண்டு செல்லல்.

- நீர் ஓடிச் செல்கின்ற, ஆழம் குறைவான, மாசடையாத நீரைக்கொண்ட ஓர் ஓடை/ அருவி அருகே உள்ளதாயின், மாணவரை அங்கு கூட்டிச்செல்லுங்கள். இச்செயற்பாட்டுக்காக நீரில் இறங்கத் தேவையில்லை.

கடதாசி ஓடம், பிளாத்திக்குப் பந்து, சிறிதளவு மண், சிறிதளவு மணல், சற்றுப் பெரிய ஒரு கல், தேங்காயொன்று, இறப்பர் வித்தொன்று, பீங்கான் ஓடொன்று போன்ற தேடிப்பெறக்கூடிய பொருள்களை ஓடும் நீரில் இட்டு, நடப்பவற்றை அவதானிக்க மாணவரை வழிப்படுத்துங்கள்.

- ஓடிச்செல்லாத நீரைக் கொண்ட ஆழம் குறைவான ஓர் இடத்தைத் தெரிவு செய்து கொள்ளுங்கள். அருகே உள்ள பாதுகாப்பான ஓர் இடம் பொருத்தமானது.

- சற்றுப் பாரமான ஒரு கல்லை கயிறொன்றில் கட்டிக் கொள்ளுங்கள். கயிற்றினால் பிடித்து அதனை உயர்த்துங்கள். அக்கல்லை நீரினுள் அமிழ்த்துங்கள். பின் மேலே இழுங்கள். வேறுபாடு ஏதும் உள்ளதாயின்/உணரப்படுமாயின் அது பற்றிக் கலந்துரையாடுங்கள். மேலும் பல பொருள்களைப் பெற்று அவ்வாறு செய்யுங்கள்.

- நீரில் மிதக்கும் தன்மையுடைய சிறிய மரக்குற்றியொன்றினைப் பெற்றுக்கொள்ளுங்கள். ஒரு முனையில் கயிற்றை அல்லது நூலைக் கட்டி தரையின் மீது இழுத்துச் செல்லுங்கள்.


- மரக்குற்றியை நீரினுள் இட்டு நீரின் மீது அதை இழுத்துச் செல்லுங்கள். வேறுபாடு உணரப்பட்டதாயின் அவ்வேறுபாட்டை விபரியுங்கள்.

- மேற்படி தொழிற்பாடுகளை அவதானித்து அது தொடர்பான தகவல்களை சில வரிகளில் எழுத வழிப்படுத்துங்கள்.

- மாணவர்கள் எழுதியவற்றைப் பற்றி மீண்டும் கலந்துரையாடி மீட்டாய்வு செய்யுங்கள்.

**கப்பி (Pully)**

பாரமானவற்றை உயர்த்துவதை இலகுபடுத்தும் மற்றுமொரு முறையாக கப்பிகளின் பயன்பாட்டை அறிமுகஞ் செய்யுங்கள். கப்பிகளை சந்தையில் பெறமுடியும். கடைச்சல் இயந்திரம் (Lathe Machine) உள்ளதாயின் அரிமரத்தினால் வெவ்வேறு அளவுடைய சில கப்பிகளை ஆக்கிக்கொள்ளலாம்.




- கப்பிகளைப் பயன்படுத்தக்கூடிய பல்வேறு சந்தர்ப்பங்களைக் கையாண்டு பார்ப்பதற்கு மாணவருக்கு வாய்ப்பளியுங்கள்.


- சந்தையில் 'கஸ்பர் வீல்' (Casper wheel) எனப்படும். கீழ்ப்புறத்தே பொருத்தக்கூடிய சில்லுகொண்ட ஆக்கங்கள் உள்ளன. அவ்வாறான நான்கு சில்லுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள். 'கஸ்பர் வீல்' பெற முடியாவிட்டால் வேறு மாற்றுப் பொருள்களைப் பயன்படுத்துங்கள்.



- படத்திற்காட்டப்பட்டுள்ளது போன்ற, ஏறத்தாழ 3 சென்றிமீற்றர் தடிப்புடைய பலகையொன்றினைத் தேடிப் பெற்றுக்கொள்ளுங்கள். 'கஸ்பர் வீல்' சில்லுகளைப் பொருத்தக் கூடியவாறு பொருத்தமான துளைகளை (படத்திற்போன்று)துளைத்துக் கொள்ளுங்கள். பலகையின் இரு அந்தங்களிலும், கயிறு கட்டுவதற்காக இரண்டு கொளுக்கிகளைப் பொருத்திக் கொள்ளுங்கள்.



- இப்பலகையையும் சில்லுத் தொகுதிகளையும் பயன்படுத்தி, வெவ்வேறு வகையான வண்டிகளை ஆக்குங்கள். ஒரு தனிச் சில்லினால் வண்டியொன்றை ஆக்கமுடியுமா? கையாண்டு பார்க்க வாய்ப்பு வழங்குங்கள். பலகையின் வெவ்வேறு இடங்களில் இரண்டு சில்லுகளைப் பொருத்தி, இழுத்துச் செல்லக்கூடிய ஒரு வண்டியை ஆக்குங்கள். அவ்வொவ்வொரு சந்தர்ப்பத்திலும் காணப்படும் நல்ல இயல்புகளையும் அல்லாத நிலைமைகளையும் இனங்க… ங்கள்.



- பின்வரும் வினாக்களை வினவியவாறு தேடியறிகைகளில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.
    - இழுத்துக்கொண்டு செல்லக்கூடிய இரண்டு சில்லுவண்டியில் சில்லுகளைப் பொருத்த மிகப் பொருத்தமான இடங்கள் எவை?
    - படத்தில் காட்டியுள்ளவாறு சில்லுகளைப் பொருத்தினால் காணப்படும் சிறப்பான இயல்புகள் யாவை?
    - சில்லில் இடப்பட்டுள்ள துளை மத்தியில் இடப்படாவிட்டால் காணப்படும் இயல்புகள் எவை?

- கையாண்டு பார்த்து அறிக்கைப்படுத்த வழிப்படுத்துங்கள்.

- ஆக்கிய வண்டியையும் ஏனைய வாகன வகைகளையும் மீண்டும் அவதானிக்க இடமளியுங்கள். மோட்டார் கார், இரண்டு சில்லு திராக்டர் (கைத்திராக்டர்) போன்ற வாகனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சில்லு வகைகள் தொடர்பாகக் கவனத்தைத் திருப்புங்கள்.

- டீசலினால் இயக்கப்படும் இரண்டு சில்லு திராக்டர்களில் ஓட்டிச் சில்லு(log wheel) எனும் ஒரு சில்லு உள்ளது. அச்சில்லின் பயன் யாது?
  அவ்வாறான சில்லைக்கொண்டுள்ள பொம்மைக்கார் போன்ற வேறு சந்தர்ப்பங்களை இனங்காண வழிப்படுத்துங்கள்.

- மாணவர்கள் குழுக்களாகச் சேர்ந்து இயக்கக்கூடிய விளையாட்டு (பொம்மை)வண்டியொன்றை ஆக்குமாறு வழிப்படுத்துங்கள். தேவையான பொருள்களைப் பெறுதல், ஆக்கத்திறன் அடிப்படையான இயல்புகள் தொடர்பாக உரையாடுதல், அதற்காக தனிப்பட்ட வகையில் உதவிகளும் ஆலோசனைகளும் பெறுதல், ஆக்கத்தை அழகுபடுத்தல் சந்தர்ப்பங்களை நினைவூட்டுங்கள். ஆக்கிய ஆக்கத்தை இயக்கி களிப்படைய வாய்ப்பளியுங்கள்.

- பற்சக்கரம் என்பது மற்றுமொரு வகைச் சில்லாகும்.
  பற்சில்லுகள் காணப்படும் வாகனங்கள், அமைப்புக்கள் தொடர்பாக மாணவரது கவனத்தைத் திருப்புங்கள். வாகனங்கள், உபகரணங்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட பற்சில்லுகளைச் சேகரித்து அவற்றை அவதானிக்க இடமளியுங்கள்.

- சைக்கிளொன்றில் உள்ள பற்சில்லுகளின் தொழிற்பாட்டை பின்வரும் விடயங்களுக் கேற்ப அவதானிக்க வாய்ப்பளியுங்கள்.
  - எந்தெந்த இயல்புகளில் பற்சில்லுகள் ஒன்றுக்கொன்று சமமாக உள்ளன.
  - பற்சில்லுகள் எந்தெந்த இயல்புகளில் வேறுபட்டுக் காணப்படுகின்றன?
  - ஒரு பற்சில்லு ஒரு சுற்றுச் சுற்றும்போது மற்றைய பற்சில்லும் ஒரு சுற்றுச் சுழலுமா?
  - இதன் மூலம் கிடைக்கும் நன்மை யாது?
  - மிதியுடன் இணைக்கப்பட்டுள்ள சில்லு மேலும் பெரியதாக இருந்தால் என்ன நடக்கும்?
  - அது மேலும் சிறியதாக இருந்தால் என்ன நடக்கும்?
  - சில்லுகளைத் தொடுக்கும் சங்கிலியால் (செயின்) செய்யப்படும் வேலை எது?
  - சங்கிலி தவிர, ஒரு சில்லினால் மற்றுமொரு சில்லுக்கு சுழற்சியைக் கொண்டு செல்வதற்குக் கையாளும் வேறு வழிகள் யாவை? சந்தர்ப்பங்கள் யாவை?

## செயற்பாடு 3

- மின்சாரத்தினால் அல்லது எரிபொருளினால் இயங்கும் பொறிகள் காணப்படும் ஒரு தொழிற்சாலைக்குச் சென்று அங்கு பல்வேறு வேலைகளைச் செய்வதற்காக பொறிகள் வெவ்வேறு வகைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள விதத்தை அவதானிக்க இடமளியுங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***
  - ஆடைத்தொழிற்சாலைகளில் உடை தைக்கும் தையல் பொறிகள், பாதங்களால் மிதியை மிதித்து இயக்கப்படுவதில்லை.
  - அத்தொழிற்சாலைகளில் துணி வெட்டுப் பொறியின் அலகு அப்பொறியை இயக்குபவரால் மேலும் கீழும் கொண்டு செல்லப்படுவதில்லை.
  - மோட்டார் வாகனத்தின், கைத்திராக்டரின் சில்லுகள் அதனை இயக்குபவரால் சுழற்றப்படுவதில்லை.

- இவ்வாறான சந்தர்ப்பங்களை அவதானித்த பின்னர், அது பற்றி உரையாடுங்கள். இயலுமாயின் உபகரணங்கள் தொடர்பாக மாணவர்களுக்கு அது தொடர்பான அறிவுடைய ஒருவரை கேட்டறிந்து கொள்வதற்கு வளவாளராக வகுப்புக்கு அழைத்துக் கொள்ளுங்கள். வகுப்புக்கு வருவதற்கு வாய்ப்பு வழங்குங்கள். முடியுமானால் மாணவர்கள் அவதானிப்பதற்கு சில உபகரணங்களைக் கொண்டு வரச் சொல் லுங்கள்.


## செயற்பாடு 4

- வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி, வேலை செய்வதற்குத் தேவையான தள்ளு தல், இழுத்தல், உயர்த்துதல், சுழற்றல் ஆகியன பெறப்படுகின்றமையை விளங்கிக் கொள்ள வகை செய்யுங்கள்.

- அந்தந்த முதல்களைக்கொண்டு, இழுத்தல், தள்ளுதல், சுழற்றுதல், உயர்த்துதல் ஆகியவற்றைச் செய்யும் முறைகளின் எளிமையான சில மாதிரிகள் கீழே தரப் பட்டுள்ளன. தேவையான பொருள்களைத் தேடிப்பெற்று, ஒவ்வொரு மாணவனும் மாணவியும் அவற்றுள் ஒன்றையோ இரண்டையோ ஆக்க வழிப்படுத்துங்கள். (தேவையெனின் வளவாளர் ஒருவரின் துணையைப் பெற்று, மாணவருடன் இவற்றை ஆக்குங்கள்.)

  ***எடுத்துக்காட்டு:***

  கொதிநீராவியினால் இயக்கப்படும் ஒரு படகு/சுழல் தட்டை



  பொருள்களை இடத்துக்கிடம் கொண்டு செல்லும் பாரம் தூக்கி
    - மின்சார பாரந்தூக்கி (மாதிரியொன்று)
    - மின்சாரத்தினால் இயங்கும் புகையிரதம்
    - வியர்வையைத் தணிப்பதற்குப் பொருத்தமான ஒரு விசிறி

- நவீன ‘ரொபோ’ (இயந்திர மனிதன்) பற்றி உரையாடக்கூடிய ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்பை மாணவருக்கு வழங்குங்கள். ‘ரொபோ’ பொறிகளைப் பயன்படுத்துவதற்கான காரணம், அவை செய்யும் வேலைகள் ஆகியன பற்றி உரையாடுங்கள். ‘ரொபோ’ பொறிகள் போன்று பாவனை செய்து, அவை பேசுவது போன்று பேசுமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.

- அல்லது ‘ரொபோ’ தொழிற்பாட்டை வீடியோ நிகழ்ச்சி ஊடாகப் பார்ப்பதற்கு இட மளியுங்கள்.

## செயற்பாடு 5

- காந்தம் தொடர்பாக மாணவர்கள் அறிந்துவைத்துள்ளவை பற்றி வினவுங்கள்.


- நாலாந்தரத்தில் காந்தம் தொடர்பாக கற்றவை பற்றி நினைவூட்டுவதற்காக வினாக்கள் வினவுங்கள். காந்தங்களின் வடிவம் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
  (வசதியுள்ளதாயின் வெவ்வேறு வடிவ காந்தங்கள் சிலவற்றை வகுப்புக்குக் கொண்டு வந்து மாணவர்களுக்கு அவற்றை அவதானிக்க இடமளியுங்கள்.)
  ***எடுத்துக்காட்டு:***
  சட்டக் காந்தம் (Bar Magnet)
  வட்டவடிவக் காந்தம் (Circular Magnet)
  குதிரை இலாட வடிவக் காந்தம் (Horse shoe Magnet)
  வளைய வடிவக் காந்தம் (Ring Magnet)

- நாளாந்த வாழ்வில் காந்தங்கள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***
  அலுமாரி, சிற்றலுமாரி, 'கபட்' களின் கதவுகளில்
  குளிரேற்றிகளில்
  கைப்பைகளில்

- காந்தம் பயன்படுத்தப்பட்டுள்ள விளையாட்டுப் பொருள்கள் சிலவற்றை மாணவர் களுக்குக் காட்டுங்கள். அவை காந்தத்தினால் இயக்கப்படும் விதத்தை அவதானிக்க இடமளியுங்கள்.

- காந்தத்தைப் பயன்படுத்தி, அசையக்கூடிய ஒரு வண்ணத்துப்பூச்சியை ஆக்கப்போகி றோம் எனக்கூறி மாணவரைக் குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ் வொரு தொகுதி வீதம் பின்வரும் உபகரணங்களை வழங்குங்கள்.
  - வளைய / வட்ட வடிவ காந்தம் - 1
  - கடதாசியால் அமைத்த வண்ணத்துப்பூச்சி - 1
  - நூல்
  - சிறிய தடிகள் - 2
  - பசை நாடா (செலோ ரெப்)
  - ரெஜி.ஃ.போம் துண்டு - 1 (ஏறத்தாழ 20cm x 6cm அளவுடைய)/களிமண் கட்டி
  - கத்தரிக்கோல்

- பின்வரும் படத்தை கரும்பலகையில் வரையுங்கள். அல்லது பிறிஸ்டல் போட்டில் வரைந்து காட்சிப்படுத்துங்கள்.




**Resource: JICA - OBIHIRO Presentation Manual - 2007**

- அதனை ஆக்கும் விதத்தை மாணவர்களுக்கு விளக்குங்கள்.
  - படத்தில் காட்டியுள்ளவாறு தடிகளிரண்டை/கோல்கள் இரண்டை ஓர் அந்தத்தில் நூலினால் கட்டிக்கொள்ளுங்கள்.
  - காந்தத் துண்டொன்றைக் கிடையாக உள்ள தடியின் நுனியின் கீழ்ப்புறத்தில் வைத்து செலோ ரேப்பினால் ஒட்டிக் கொள்ளுங்கள்.
  - படத்தில் காட்டியுள்ளவாறு நிலைக்குத்தாக உள்ள தடியின்/கோலின் கீழ்ப்பகுதியை தடித்த ரெஜிபோம் துண்டு/களிமண் கட்டிக்குள் செலுத்தி நிறுத்துங்கள்.
  - அதன் பின்னர் மெல்லிய கடதாசி ஒன்றில் வண்ணத்துப்பூச்சியின் புற உருவப் படத்தை வரைந்து கத்தரிக்கோலால் வெட்டி எடுங்கள்.
  - வண்ணத்திப்பூச்சியின் உடலின் தலையிலிருந்து கீழ் நோக்கி ஒரு குண்டூசியைச் செலுத்துங்கள்.
  - வண்ணத்துப்பூச்சியின் உடலில் செலுத்திய பின்னர், குண்டூசியின் தலைப்பகுதி மேல் நோக்கி இருக்கிறதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளுங்கள்.
  - அதன் பின்னர் வண்ணத்துப்பூச்சியின் உடலின் குண்டூசிக்குச் சமாந்தரமாக சட்டை தைக்கப்பயன்படும் மெல்லிய நூலின் ஒரு பகுதியை வைத்து செலோடேப் பினால் ஒட்டுங்கள்.
  - கிடையாக உள்ள தடியின் அல்லது கோலின் நுனியில் பொருத்தப்பட்டுள்ள காந்தத்திற்கும் வண்ணத்துப்பூச்சியின் குண்டூசியின் முனைக்கும் இடையிலான இடைவெளி 2cm வரக்கூடிய வகையில் அமையுமாறு நூலின் மறு அந்தத்தை ரெஜிபோம் துண்டில்/களிமண் கட்டியில் செலோடேபினால் ஒட்டுங்கள்.
  - இப்போது வண்ணத்துப்பூச்சி அந்தரத்தில் நின்று அசைவதைக் காணலாம்.

- மாணவர்கள் வியப்புடன் பார்ப்பார்கள். அப்போது வண்ணத்துப்பூச்சி இவ்வாறு அந்தரத்தில் நின்று அசைவதற்கான காரணம் யாது என வினாவுங்கள். (குண்டூசி காந்தத்தினால் ஈர்க்கப்பட்டுகின்ற/கவரப்படுகின்ற காரணத்தினால்) மாணவர்கள் சரி யாகப் பதிலளிக்க ஊக்கப்படுத்துங்கள்.

- பின்வருமாறு வினாக்கள் வினவியவாறு அவதானிக்க இடமளியுங்கள்.
  - குண்டூசியைக் கழற்றியவுடன் வண்ணத்துப்பூச்சிக்கு யாது நடக்கும்?
  - குண்டூசிக்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய வேறு பொருள்கள் எவை?

- குண்டூசிக்குப் பதிலாக வேறு பொருள்களைப் பயன்படுத்தும்போது நிகழுபவற்றை அவதானிக்க வாய்ப்பளியுங்கள்.


- எந்தெந்தப் பொருளைப் பயன்படுத்தும்போது வண்ணத்துப்பூச்சி அசைகிறது என்பதை அவதானித்துக் குறித்துக்கொள்ளுமாறு கூறுங்கள்.


- காந்தத்தின் எந்த இயல்பு காரணமாக இவ்வாறு நிகழுகின்றது என மாணவரிடம் வினவுங்கள். இரும்பு போன்ற பொருள்கள் காந்தத்தினால் இழுக்கப்படும் (கவரப்படும்). இந்த இயல்பு காந்தத்தன்மை (காந்த இயல்பு) எனப்படும் என்பதை மாணவர்களுக்கு அறிமுகஞ் செய்யுங்கள்.

- வண்ணத்துப்பூச்சிக்கும் காந்தத்துக்கும் இடையே பின்வருவனவற்றைச் செலுத்தினால் யாது நிகழும் என அவதானிக்கச் செய்யுங்கள்.

| | |
|---|---|
| 1. பிளாஸ்டிக் அட்டை | 2. காட்போட் அட்டை |
| 3. மெல்லிய கண்ணாடிக்கீலம் | 4. மெல்லிய பலகைத் துண்டு |

- காந்தங்களின் இயல்புகள் தொடர்பாக மேலும் விளங்கிக்கொள்ள மாணவர்களுக்கு வாய்ப்பளிப்பதற்காகப் பின்வரும் ஆக்கத்தையும் பயன்படுத்தலாம். பின்வரும் படத்தைக் கரும்பலகையில் வரைந்து அல்லது பிறிஸ்டல் போட்டில் வரைந்து காட்சிப்படுத்துங்கள்.





**Resource: JICA - OBIHIRO Presentation Manual - 2007**

மேற்படி அமைப்பை ஆக்குவதற்காக வட்டவடிவக் காந்தங்கள் - 02, தடிகள் - 02, நூல், சிறிய பிளாத்திக்குப் பந்து அல்லது ரெஜிபோமினாலான உருண்டை, தடித்த ரெஜிபோம் துண்டு/களிமண் கட்டி, செலோரேப், கத்தரிக்கோல் பந்தைச் சூழ இடு வதற்குக் காட்போட் வளையம் என்பன தேவை.


- **அதனை ஆக்கும் விதத்தை மாணவருக்கு விளக்குங்கள்.**
  - படத்தில் காட்டியுள்ளவாறு தடிகளிரண்டை/கோல்கள் இரண்டை ஓர் அந்தத்தில் நூலினால் இறுகக்கட்டுங்கள்.
  - பிளாஸ்ரிக் பந்து அல்லது ரெஜிபோ.்.ம் உருண்டை ஒன்றை எடுத்து பந்தின் மேற்பகுதியின் முனையில் நூலின் ஒரு பகுதியை வைத்து செலோரேப்பினால் ஒட்டிக் கொள்ளுங்கள்.
  - பந்தைச்சூழ இடுவதற்காக மெல்லிய காட்போட் வளையம் ஒன்றை வெட்டி எடுத்து படத்தில் காட்டியுள்ளவாறு பொருத்துங்கள்.
  - பந்தின் கீழ்ப்பகுதியின் மத்தியில் ஒரு காந்தத்தினை செலோரேப்பினால் ஒட்டுங்கள்.
  - படத்தில் காட்டியவாறு நிலைக்குத்தாக உள்ள தடியின்/கோலின் கீழ்ப் பகுதியை ரெஜிபோம் துண்டு/களிமண் கட்டிக்குள் செலுத்தி நிறுத்துங்கள்.
  - படத்தில் காட்டியவாறு ரெஜிபோம் துண்டில்/களிமண்கட்டியில் முற்பகுதியில் மற்றைய காந்தத்துண்டை (பந்தில் ஒட்டப்பட்ட காந்தத்தின் முனையும் செலோ ரேப்பில் ஒட்டப்பட்ட காந்தத்தின் முனையும் ஒத்த முனைவுகளாக இருத்தல் வேண்டும்.) வைத்து செலோரேப்பினால் ஒட்டுங்கள்.
  - அதன் பின்னர் நூலின் ஒரு பகுதியை கிடையாக உள்ள தடியின் அருகில் பிடித்தவாறு ரெஜிபோம் உள்ள காந்தத்துக்கு அருகே கொண்டு செல்லுங்கள்.
  - ரெஜிபோமில் உள்ள காந்தம் பந்தில் உள்ள காந்தத்தைத் தள்ளும் அளவு இடைவெளியை அவதானித்து நூலின் முனையை கிடையாக உள்ள தடியின் நுனிப் பகுதியில் கட்டுங்கள்.
  - இப்போது பந்து வட்ட வடிவில் சூழலுவதை அவதானிப்பீர்கள்.

  பந்து வட்டவடிவில் சுழலுவதற்கும், காந்தங்கள் ஒன்றை ஒன்று தள்ளுவதற்குமான காரணத்தை மாணவர்களிடம் வினவுங்கள். (காந்தங்கள் இரண்டினதும் ஒத்த முனைகள் ஒன்றையொன்று தள்ளும்)

- முன்னைய தொழிற்பாட்டிற் போன்றே வினாக்கள் வினவியவாறு நிகழுபவற்றை அவதானிப்பதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பளியுங்கள். கலந்துரையாடுங்கள்.

## செயற்பாடு 6

- மின்காந்தமொன்றை ஆக்குவதற்காக படத்திற் காட்டியுள்ளவாறு இரும்பு ஆணி யொன்றின் மீது சுருள் (கொயில்) கம்பித்துண்டைச் சுற்றி உலர் மின்கலம், கம்பித் துண்டுகள் சிலவற்றை இணையுங்கள்.



- இவ்வாறான சந்தர்ப்பத்தில் இரும்பு ஆணி, காந்தம் போன்று தொழிற்படும் விதத்தைக் காண இடமளியுங்கள்.

- ஒரு உலர்கலம் மாத்திரம் தொடுக்கப்பட்டுள்ளபோது எத்தனை குண்டூசிகள் இரும்பு ஆணியினால் கவரப்படுகின்றன? அவதானிக்க வழிப்படுத்துங்கள்.

- உலர் மின்கலங்களின் எண்ணிக்கையையும், இரும்பு ஆணியின் மீது மற்றும் கொயில் கம்பியின் நீளத்தையும் மாற்றியவாறு இச்செயற்பாட்டைச் சில தடவைகள் செய்யுங்கள். பின்வருமாறு போன்ற ஒரு அட்டவணையில் விவரங்களைப் பதிவு செய்யுங்கள்.

| கொயில் கம்பியின் நீளம் | உலர் மின்கலங்களின் எண்ணிக்கை | கவரப்படும் / ஈர்க்கப்படும் குண்டூசிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| | | |

- மின்காந்தங்கள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் தொடர்பாக மாணவருடன் உரையாடுங்கள்.

- மின்மணிக்காவும் இவ்வாறான ஒரு மின்காந்தம் ஆக்கிக்கொள்ளப்படுகின்றது என்பதை விளக்குங்கள்.

- மாணவர்களது உதவியையும் பெற்று ஒரு மின்மணியை ஆக்குங்கள். (இதற்காக தேவையெனின் வளவாளர் ஒருவரின் துணையையும் பெற்றுக் கொள்ளலாம்.)

- இரும்பு ஆணி, காந்தம்போன்று தொழிற்படுகின்றது என்பதை சில குண்டூசிகளையோ சிறிதளவு இரும்புத் துளையோ பயன்படுத்தி காண்பியுங்கள்.

- மின்கலத்துடனான தொடர்பை நீக்கியவுடன் என்ன நிகழுகின்றது என அவதானிக்க வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 7

- அன்றாட வாழ்வில் ஒளி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள். ஒளியைப் பயன்படுத்தி வேலைகளை இலகுபடுத்திக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் பற்றிய அனுபவங்கள் உண்டா என மாணவருடன் வினவுங்கள்.


- இருளான இடத்தில் புகைப்படம் பிடிப்பதற்காக கமராவில் உள்ள மின்குமிழினால் (ஃபிளாஷ் லைற்) ஒளியை வழங்கலாம்.
  - மின்சூள் பயன்படுத்தல்
  - சினிமாக் கொட்டகையில் திரையின் மீது ஒளி விழுதல்
  - வீதிச் சமிக்ஞை விளக்குத் தொகுதியின் தொழிற்பாடு

- ஒளி பயன்படும் சந்தர்ப்பங்கள் தொடர்பான பல்வேறு சந்தர்ப்பங்களுக்குரிய பல்வேறு ஆக்கங்கள் புரிவதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பளியுங்கள்.

- எளிமையான மின்சுற்றொன்றைப் பயன்படுத்தி விளையாட்டு (பொம்மை) வீதிச் சைகைத் தொகுதியொன்றை ஆக்குதல், இதற்காக பலகைத்துண்டு -1, உலர் மின் கலம் - 1, சிறிய மின்குமிழ்கள் - 3, கம்பித்துண்டுகள் சில, கடதாசி கவ்வி - 1, வரைதல் ஊசிகள் (டுரோவின் பின்) - சில ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.


- குமிழ்களுக்கு சிவப்பு, பச்சை, மஞ்சள் செலோபேன் தாளினால் மறைப்பிடுமாறு அல்லது குமிழ்கள் மீது அந்நிறப் பூச்சுப் பூசிக்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்குங்கள்.

- சுவிச்சினது (ஆளியினது) கடதாசி கௌவியை (கிளிப்பை) ஓர் அமைவுக்குக் கொண்டு வந்தவுடன் ஒரு குமிழ் ஒளிரும் வகையில் பின்வரும் படத்தில் காட்டியுள்ள வாறு அமைப்பைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.



- சுவிச்சின் கிளிப்பை ஒன்றின் பின் ஒன்றாக வெவ்வேறு அமைவுகளுக்குக் கொண்டு சென்று, வீதிச் சமிக்ஞை விளக்குத் தொகுதியின் தொழிற்பாட்டை அனுபவிப்பதற்கு ஒவ்வொரு மாணவரையும் வழிப்படுத்துங்கள்.

- சூரிய ஒளி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களைக் காட்டுவதற்காக பின்வருமாறு ஒரு செயற்பாட்டை மாணவருக்கு அறிமுகஞ் செய்யுங்கள்.



- நன்கு சூரிய ஒளி கிடைக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் உட்புறம் மினுமினுப்பான ஒரு சட்டியை/ தாச்சியை சூரிய ஒளியில் பிடித்து, தாச்சியின் உள்ளே அடியில் இருந்து காட்போட் துண்டொன்றைக் கிடையாக தாச்சிக்கு மேல் கொண்டு செல்லுங்கள்.


- காட்போட் துண்டின் கீழ்ப்புறத்தில் தோன்றும் ஒளிக்கற்றை ஒரு பொட்டுப்போன்று அமையும் இடத்தைக் கண்டறியுங்கள்.

- காட்போட் அட்டையை அப்புறப்படுத்தி சிறிய நீர்ப்பாத்திரமானது அந்த இடத்தில் அமையுமாறு பாத்திரத்தை தொங்கவிடுங்கள்.

- சிறிது நேரத்தின் பின்னர் நீரின் வெப்பநிலையைப் பரிசீலித்துப் பாருங்கள்.

**மாயாஜாலப்பெட்டி**

சிறிய காட்போட் பெட்டியொன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள். பெட்டியின் ஒரு பக்கத்தை வெட்டித் திறவுங்கள். முகம் பார்க்கும் கண்ணாடித்துண்டுகளிரண்டை பெட்டியுள் நிறுத்துங்கள். (படத்தைப் பாருங்கள்.) முகம்பார்க்கும் பக்கம் உட்புறமாக இருக்கும் வகையில் முகம் பார்க்கும் கண்ணாடிகள் இரண்டிற்கும் இடையே மேசை மீது யாதேனும் ஒரு பொருளை வையுங்கள். முகம்பார்க்கும் கண்ணாடிகளினூடாகப் பாருங்கள். முகம் பார்க்கும் கண்ணாடிகளின் அமைவை மாற்றி புதிய பகியவர்றைக் கேடுங்கள்.



## செயற்பாடு 8

- மாணவருக்கு பின்வரும் விளையாட்டில் ஈடுபட இடமளியுங்கள். மாணவரை பொருத்த மானவாறு நான்கு அல்லது ஐந்து குழுக்களாகப் பிரித்துக் கொள்ளுங்கள். ஐந்து பொருள்களைச் சூழலிலிருந்து தேடிப் பெறுங்கள்.

***எடுத்துக்காட்டு:***

- கோளவடிவமான ஒரு கல்
- களைப்பூண்டொன்றின் இரண்டு இலைகளைக் கொண்ட ஒரு பகுதி
- ஏறத்தாழ 30 சென்றிமீற்றர் நீளமான தடித்துண்டு.
- கீழே விழுந்து கிடக்கும் இலையொன்று

(பலா இலை போன்ற இலகுவாகப் பெறக்கூடிய இலை)

- சேகரித்தவற்றை இடப்படுத்தி, அவற்றை நன்கு அவதானிக்க மாணவர்களுக்கு வாய்ப்பளியுங்கள்.

- அவதானித்தவற்றை சூழலில் இருந்து தேடிப்பெறுமாறு அறிவுறுத்தல் வழங்குங்கள். அதற்காக ஒரு குறித்த அளவு நேரம் வழங்குங்கள். இந்த விளையாட்டின்போது பின்வரும் விடயங்களை வலியுறுத்துங்கள்.
  1. சூழலில் தேடிப்பெறும் பொருள்கள், அவதானித்த பொருள்களுக்கு ஒப்பானவையாக இருத்தல் வேண்டும்.
  2. குறைந்த காலத்துள் நிறைவு செய்யக்கூடியவை தொடர்பாக குழுவினர் தீர்மானித்தல் வேண்டும்.
  3. வேலைகளை இலகுவாக்கிக்கொள்வதற்காக கூட்டாகச் செயற்பட வேண்டும்.

- இவ்வாறான வேறு விளையாட்டுக்களை ஆக்கி மாணவரை அவற்றின் பால் வழிப் படுத்துங்கள்.

- நமது முன்னோர் வேலைசெய்யும்போது தமது களைப்பையும் அசதியையும் போக்கிக் கொள்வதற்காக, ஆடல் பாடல்களில் ஈடுபட்டுள்ளனர் என்பதை நினைவூட்டுங்கள்.

***எடுத்துக்காட்டு:*** **அரிவு வெட்டு**

உண்ண உணவு தந்திடும்
உழவர் வாழ்க், வாழ்கவே
மண்ணை உழுது பயிர்களை
வளர்க்கும் உழவர் வாழ்கவே

ஒன்றை நூறு நெற்களாய்
உண்டு பண்ணித் தருபவர்;
நன்கு உழுது வியர்வையால்
நனைத்து போக உழைப்பவர்;

கண்ணைப் போலப் பயிர்களைக்
காத்து உயிர்கள் காப்பவர்
உண்ண உணவு இன்றியே
உடல் வருந்தல் நீதியோ?

பாடு பட்டு உழுபவர்,
பலனும் கண்டு தருபவர்,
நாடு வளர வாழ்பவர்,
நன்கு வாழ்க. வாழ்கவே!

*அழ வள்ளியப்பா*
*நன்றி: மலரும் உள்ளம்*

**மீனவர்**

புறப்படுவோமே மச்சான் புறப்படுவோமே
கட்டுவலை எடுத்துக்கிட்டுப் புறப்படுவேமே
கடல் கடந்து செல்வதற்கு தோணியுமுண்டு
கட்டை சுறா உழுவை மீன் கடலிலே உண்டு
கடவுள் தந்த கைகளே முழுப்பட உண்டு
மச்சான் முழுப்பட உண்டு.

கடல் கடந்து மீன்பிடிப்போமே - வீண்
கவலையற்று வாழ்ந்திடுவோமே
முப்பது நாள் உழைத்துழைத்து நிறையப் பணம் வாங்கி
அதை மூன்று நாளிற்திண்டுவிட்டுக் கடனையும் வாங்கி
பாக்கி நாளிற் பெரும் பகுதியைப் பட்டினியாக்கி
மனப் பதறலோடு மாரடிக்கும் சன்மமும் வேண்டாம்
மன் - மாரடிக்கும் சண்முகம் வேண்டாம்.

புறப்படுவேமே மச்சான் புறப்படுவோமே
கட்டுவலை எடுத்துக்கிட்டுப் புறப்படுவேமே

*ஈழத்து நாட்டார் பாடல்கள்*

# 11.0 நாம் இலங்கையர்



மனிதர்கள் சேர்வதால் உருவாகும் சமூகமொன்றில், இனம், மதம் என்றவாறாக பல்வேறு மக்கட் பிரிவின ராலான சமூக உப பிரிவுகள் உருவாவதுண்டு. அவ்வா றான ஒரு சமூகத்தில் காணப்படும் பண்பாட்டுச் சமூக நிலைமைகளுடன் இணைந்து நாட்டை நேசிக்கின்ற, நாட்டின் தனித்துவத்துக்கு மதிப்பளிக்கின்ற ஆட்களாகச் செயற்படுகின்ற சம மக்கட்பிரிவினருக்கு இடையிலான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும். பல்வேறு மக்கட் பிரிவினருக்கு இடையே காணப்படும் பண்பாடுகளை மதித்தவாறு அவற்றுக்கு கௌரவமளித்து சகவாழ்வுடன் செயற்படுதல் சிறு பராயம் முதலே பரிச்சயம் பெற வேண்டியதொன்றாகையால் அப்பரிச்சயத்தை வழங்கும் நோக்குடனேயே இந்த கருப்பொருள் திட்டமிடப் பட்டுள்ளது.

## தேர்ச்சிகள்

- சகல மக்கட் பிரிவினரதும் தனித்துவத்தை மதித்து ஒத்துழைத்துச் செயற்படுவார்.
- நாட்டின் சுதந்திரத்துக்காகச் செய்த அர்ப்பணிப்புக்களை மதித்து நாட்டுப்பற்றுடன் செயற்படுவார்.
- இலங்கையர் என்ற வகையில் தனது தனித்துவம் பாதுகாக்கப்படும் வகையில் செயற்படுவார்.
- வளங்களைப் பாதுகாக்கும் மனப்பாங்குடன் நடப்பார்.
- நாட்டிற்கு நற்பெயரை ஈட்டிக்கொடுத்தோரின் நடத்தையை எடுத்துக் காட்டாகக் கொண்டு செயற்படுவார்.
- நாட்டின் தனித்துவத்தை எடுத்துக்காட்டும் ஆக்கம் ஆடல், பாடல்கள், விளையாட்டுக்கள் என்பவற்றில் ஈடுபடுவார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

## செயற்பாடு 1

- இந்த நாட்டில் வாழும் ஆதி வாசிகள் உட்பட சகல மக்கட் பிரிவினரதும் தனித் துவத்தை எடுத்துக்காட்டும் வகையில் வகுப்பு மட்டத்தில் கண்காட்சியொன்றினை நடத்துங்கள். அக்கண்காட்சிக்காக;
    - ஒழுக்க விதிகள்
    - ஆடையணிகள்
    - வழிபாடுகள், கிரியைகள்
    - சமயப் பண்டிகைகள் (தேர் ஊர்வலங்கள், தலதா ஊர்வலம், புனித அந்தோனியார் ஊர்வலம்....)
    - உணவு பானாதிகள்

  போன்ற அம்சங்களை உள்ளடக்கும் வகையிலான சித்திரங்கள்/புகைப்படங்கள், படங்கள் போன்றவற்றை முன்கூட்டியே சேகரித்துக் கொள்ளுங்கள். அவற்றைத் தயார்படுத்தி யாதேனும் ஓர் ஒழுங்கில் வகுப்பில் கண்காட்சியை நடத்துங்கள். கண்காட்சியைப் பார்வையிட்டு காட்சிப்பொருள்களின் சிறப்பம்சங்களைப் பட்டியற் படுத்துமாறு ஒப்படையொன்று வழங்குங்கள்.

- குழுக்கள் இனங்கண்ட இயல்புகள் எவை என்பதை முன்வைக்க வாய்ப்பளியுங்கள். மாணவரது முன்வைப்புக்களின் போது வெளிக்கொணரப்படும் ஒவ்வோர் விசேட பண்புகளையும் கரும்பலகையிலோ டிமை கடதாசியிலோ குறித்துக் கொள்ளுங்கள். இனங்காணத்தவறிய இயல்புகள் உள்ளனவாயின், ஆசிரியர் தலையிட்டு அவற்றை வெளிக்கொணர்ந்து எடுத்துக்கூறுங்கள்.

## செயற்பாடு 2

- வகுப்பு மாணவரை சில குழுக்களாகப் பிரியுங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் ஆண்டுப் பஞ்சாங்கம் ஒவ்வொரு பிரதி வீதம் வழங்குங்கள்.

- பஞ்சாங்க வருடத்தில் உள்ள பல்வேறு பண்டிகைகள், விடுமுறை தினங்கள் ஆகிய வற்றை அவதானிக்க வாய்ப்பளியுங்கள். அவதானித்து இனங்கண்ட விடயங்களின் முக்கியத்துவம், அந்த நாளில் நடத்தப்படும்/இடம்பெறும் பண்பாட்டம்சங்கள், சமய நடவடிக்கைகள், வழக்காறுகள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள். மேலதிக விளக் கங்கள் தேவைப்படுமிடத்து அடுத்த தினமொன்றின்போது சமய முக்கியத்தர் ஒருவரை அழைத்து தேவையான விளக்கங்களைப் பெற வகை செய்யுங்கள்.

- பல்வேறு சமய உற்சவங்கள் தொடர்பாகவும் எழுதப்பட்டுள்ள பல்வேறு புத்தகங்கள், பிரசுரங்களில் இருந்தும் தகவல்களை சேகரித்து முன்மொழிய வாய்ப்பளியுங்கள்.

- ஆண்டுப் பஞ்சாங்கத்தில் இனங்கண்ட விசேட தினம் பாடசாலை நாள்களுக்கு இடையே அமையுமானால் அந்நாளில் விடுமுறை வழங்கப்படும் என்பதை எடுத்துக் காட்டுங்கள். விடுமுறை கிடைத்தபோதிலும் அந்த விடுமுறை நாள்களைக் கழிக்கும் போது விசேட தினத்துக்குரிய நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டோ, அது தொடர்பாக புத்தகங்களிலிருந்தோ அல்லது மூத்தோரிடம் கேட்டோ தகவல்களைப் பெற்று அவை பற்றி அறிந்து கொள்வதன் முக்கியத்துவத்தை உணர்த்துங்கள்.

## செயற்பாடு 3

- வெவ்வேறு மக்கட் பிரிவுகளைச் சேர்ந்த மூத்தோர் சிலரையும் வெவ்வேறு சமயங் களைச் சேர்ந்த சமயப் பெரியார்கள் சிலரையும் வகுப்புக்கு அழைப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

- அவர்களைக்கொண்டு, தமது பண்பாடுகளின் (கலாசாரங்களின்) தனித்துவமான பண்புகளையும் விசேடமான சந்தர்ப்பங்களையும் முன்வைத்து விளக்கிப் பேச வாய்ப் பளியுங்கள். மாணவர்களுக்கு மேலும் விளக்கம் தேவைப்படுமிடத்து அதற்கான வாய்ப்பு வழங்குங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
    - ஒழுக்க விதிகள்
    - உணவு பானங்களும் பழக்க வழக்கங்களும்
    - சமய முக்கியத்துவமுடைய நாட்களில் நடாத்தப்படும் விசேட வேலை திட்டங்கள் போன்றவை.

- இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒற்றுமையாக சகவாழ்வுடன் செயற்படமுடியும் என்பதை எடுத்துக்காட்டுங்கள்.

## செயற்பாடு 4

- ஓர் இலங்கையர் என்ற வகையில் தனது தனித்துவம் தெள்ளத்தெளிவாகத் தென்படும் சந்தர்ப்பங்களை வலியுறுத்துங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***
  சர்வதேச ரீதியில் நடத்தப்படும் விளையாட்டு விழாக்கள், சர்வதேச மாநாடுகள், சர்வதேச கருத்தரங்குகள், கல்வி நடவடிக்கைகள் போன்றவை.

- இவ்வாறான சந்தர்ப்பங்களில் இலங்கையர் என்ற வகையில் தெள்ளத்தெளிவாகத் தெரியும் வகையில் இலங்கையரின் தனித்துவமான ஆடையணிகளை அணிந்திருத்தல், தேசியக்கொடி ஆகியன முக்கியமான அடையாளங்கள் என்பதை மாணவருக்கு விளக்குதல் அவசியமாகும். இது தொடர்பாக மாணவரது கருத்துக்களையும் வகுப்பில் வெளியிட வாய்ப்பளியுங்கள்.

- இவ்வாறான சந்தர்ப்பங்களைக் காட்டும் புகைப்படங்கள், படங்கள் போன்றவற்றை மேற்படி செயற்பாடுகளின்போது காட்சிப்படுத்தி அவ்விடயங்களை மேலும் உறுதிப் படுத்திக்கொள்ள உதவி புரியுங்கள். இலங்கையின் தனித்துவம் பாதுகாக்கப்படும் வகையில் செயற்படுவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துங்கள். இலங்கையின் தனித்துவத்தை வெளிப்படுத்தும் ஆடல் பாடல்களில் ஈடுபட வாய்ப்பளியுங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***

**இலங்கையின் தனித்துவத்தைக் காட்டும் பாடல்கள்**

பாடல் 1

இலங்கை நாடு எம்நாடு
இதுவே எங்கள் தாய்நாடு

செந்தமிழ் சிங்களம் இருமொழியும்
சிறந்து விளங்குவ தெம்நாடு
இந்திய நாடெம் அயல்நாடு
இந்து சமுத்திரம் சூழ்நாடு

அழகு மலைகள் நிறைநாடு
ஆறுகள் பாய்வது எம்நாடு
மழைவள முள்ளது எம்நாடு
மண்வள முள்ளது எம்நாடு

வீரர்கள் வாழ்ந்தது எம்நாடு
வெற்றிகள் கண்டது எம்நாடு
தீரர்கள் வாழ்ந்தது எம்நாடு
தியாகம் புரிந்தது எம்நாடு

பாடல் 2

இலங்கை எங்கள் தாய்நிலம்
இணையில்லாத எழில்நிலம்
இலங்குகின்ற புகழ்நிறைந்த
இனிய தேன்நிலம்

வளம் நிறைந்த மருதமும்
வான் உயர்ந்த குறிஞ்சியும்
அளவிறந்த வளகொழிக்க
அமைந்த பொன்நிலம்

அழகு கொஞ்சும் முல்லையும்
அமைதி கொஞ்சும் நெய்தலும்
உளம் கவர்ந்த உவகைநல்
உவர்ந்த பொன்நிலம்

## செயற்பாடு 5

- சுதேச முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் நடனங்களில் ஈடுபட வாய்ப்பளியுங்கள். இதற்காகப் பின்வரும் சுதேச நடனங்கள் சிலவற்றை எடுத்துக்கூறுங்கள். பின்வரும் பாடல்களை இதற்காககப் பயன்படுத்தலாம்.

***எடுத்துக்காட்டு:***

- அரிவு வெட்டு நடனம்
- கோலாட்டம்
- கும்மி
- செம்பு நடனம்
- காவடியாட்டம்
- கூத்து

**குறிப்பு:** கும்மி நடனத்துக்காக தமிழ்மொழி ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் 50ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ள பாடல்களைப் பயன்படுத்தலாம்.

### அரிவு வெட்டுப்பாடல்

ஆற்றோடு ஆற்றுநீர் அலைந்து வருமாப்போல்
அதன் பிறகே புள்ளுத் தொடர்ந்து வருமாப்போல்
சேற்றோடு வெள்ளம் தெளிந்து வருமாப்போல்
செங்கால் நாரையினம் மேய்ந்து வருமாப்போல்
சினந்தரிவி வெட்டும் இளந்தாரிமாரை
கண்ணன் எங்களுர் இளந்தாரிமாரை
கண்ணூறு படாமற் காரும் ஐயனாரே.

மட்டுருக்காலை அருவாளுமடித்து
மரவிலங்கன் பிடி சீவிபிறுக்கி
வெட்டும் பிடியைச் சிறக்கவே போட்டு
வெள்ளித் தகட்டினால் விரல் கூட்டமிட்டு
வளர்ந்தரிவி வெட்டும் இளந்தாரிமாரை
நாவூறு வாராமற் காரும் ஐயனாரே.

***நன்றி: ஈழத்து நாட்டார் பாடல்கள்***

### பொலிப்பாட்டு - சூடுமிதிப்பாட்டு

பொலி பொலி தாயே
பொலி தம்பிரானே பொலி
பூமி பொலி
பூமாதேவித் தாயே
மண்ணின் களமே
மாதாவே நிறைகளமே
பொன்னின் களமே பூமாதேவி அம்மா
பொலி பொலி பொலியே

நாளது கேட்டு நார்க்கம்பு வெட்டி
நல்ல கடாக்கள் தெரிந்து பிணைத்து
ஏரதுபூட்டி இடம்பட உழுது
எல்லையில்லாத செந்நெல் விதைத்துச்
சோழன் எருதுகள் தொண்ணூறாயிரம்
பாண்டியன் எருதுகள் பன்னீராயிரம்
இரவும் பகலும் ஏத்தி இழுக்கப்
பொலி வளராய் பொலி பொலி பொலியே

***நன்றி: ஈழத்து நாட்டார் பாடல்கள்***

### நாட்டார் பாடல் - கும்மிப்பாட்டு

தந்தன நாதினம் தன்னானே - தன
தந்தன நாதினம் தன்னானே
தந்தன நாதினம் தன்னானே - தான
தந்தன நாதினம் தன்னானே

மங்கையர் எல்லோரும் வாருங்கடி - நல்ல
மாணிக்க கங்கை நீர் ஆடுங்கடி
சிங்கார நகையை பூட்டுங்கடி - நல்ல
சிவந்த குங்குமம் தீட்டுங்கடி

மூங்கில் இலையிலே பச்சரிசி - நல்ல
முப்பது தேங்காயும் சர்க்கரையும்
வைத்து படைக்கின்ற முத்தாளம்மனுக்கு
வளைந்து கும்மி அடியுங்கடி
(தந்தன)

## செயற்பாடு 6

- சுதேச ஆக்கங்களைப் புரிய மாணவர்களுக்கு வாய்ப்பளியுங்கள். குறிப்பாக சுதேச அலங்காரங்களை ஆக்க இடமளியுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - பனையோலைப் பின்னல் வேலைகள் (பாய், தட்டு, விரிப்பு போன்றவை)
  - கடதாசி அலங்காரங்கள்
  - முகமூடி செய்தல், பின்னல் (துணி, கயிறு, மக்ரம் வனைதல்)
  - இழைத்தல் (துணி, பன், பனையோலை, தென்னோலை...)
  - தென்னஞ் சிரட்டையால் பல்வேறு ஆக்கங்கள் செய்தல் (தென்னஞ்சிரட்டை அகப்பை, சிரட்டைப்பூச்சாடி, பிராணிகளின் உருவங்கள் ஆக்கல், சிரட்டைத் துண்டுகளால் மாலை தொடுத்தல்)
  - சித்திரங்கள் வரைய இடமளித்தல்

- மாணவர் விரும்பிய ஆக்கமொன்றினை அல்லது சிலவற்றை ஆக்க இடமளிப்பது முக்கியமானது. இதற்காக பெற்றோர், சமுதாயத்தில் ஏனையோர், ஆசிரியர் ஆகியோரது உதவியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## செயற்பாடு 7

- எமது நாடு வெளிநாட்டவர்களின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருந்ததென்பதை அறிந்து கொள்ள வாய்ப்பளியுங்கள். இலங்கைக்கு போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் வந்ததாகவும் அவர்கள் தொடர்பான மேலோட்டமான வரலாற்றையும் அறிந்து கொள்ள வாய்ப்பளியுங்கள். பின்வரும் செயற்பாட்டில் மாணவர்களை பங்குகொள்ளச் செய்யுங்கள்.

- போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய மூன்று தேசத்தையும் பிரதிநிதித் துவப்படுத்துவதற்காக வகுப்பு மாணவர் மூவரைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள். அந்தந்த நாட்டின் ஆடையணிகளை அணிந்து வரச் செய்ய முடியுமாயின் மிக நல்லது. அல்லது போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் எனும் சொற்கள் எழுதப்பட்ட அட்டைகளை உடை மீது அணிந்து தமது தனித்துவத்தை வெளிக்காட்டத் தக்கவாறாக ஆயத்தமாக வருமாறு அறிவுறுத்துங்கள்.

- ஆசிரியரின் வழிகாட்டலில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் முதன்முதல் இலங்கைக்கு வந்து இறங்கியபோது செயற்பட்ட விதத்தினை சிறு சிறு நிகழ்ச்சிகளாக நடித்துக்காட்ட ஊக்கப்படுத்துங்கள். (முழுமையான வரலாறு இடம்பெற வேண்டிய தில்லை. மாணவர்களின் நடிப்பாற்றலை வெளிக்காட்ட வாய்ப்பளியுங்கள்.)

- மாணவர்களின் பங்கேற்று நடித்தலுக்குப் பின்னர், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் வருகை தொடர்பாக சுருக்கமாக விளக்குங்கள். போர்த்துக்கேயர் கி.பி. 1505 இலும் ஒல்லாந்தர் கி.பி.1658 இலும் ஆங்கிலேயர் 1796 இலும் இலங் கைக்கு வந்தனர் என்பதை எடுத்துக் கூறுங்கள்.

- எமது நாட்டு வளங்களை வெளிநாட்டவர்கள் தமது நாட்டிற்கு அனுப்பியதோடு, எமது மக்களை துன்புறுத்தியமையால் வெளிநாட்டவர்களிடமிருந்து விடுதலை பெறு வதற்கான தேவை எமது மக்களுக்கு எற்பட்டது. அதன் விளைவாக வெளிநாட்டவர் களை எதிர்த்துப் போராடி சுதந்திரத்திற்காகப் பாடுபட்டனர். அவ்வாறு போராடித் தியாகம் புரிந்த சில மூத்தோர்களை அறிந்து கொள்வதும் அவர்களை மதித்து நடப்பதும் மிக முக்கியம் என்பதை எடுத்துக் கூறுங்கள்.

- அவ்வாறு தியாகத்துடன் செயலாற்றித் தமது வாழ்வைக்கூட அர்பணித்த சிலரைப் பற்றி அறிந்துகொள்ள வழிப்படுத்துங்கள். அவர்களில் எடுத்துக்காட்டாக கொங்காலே கொட பண்டா, மொனராவில கப்பெட்டிப்பொல திசாவை போன்றவர்களைக் கூறலாம்.

## கொங்காலேகொட பண்டா



சுதந்திரப் போராட்டத்தின் பிரதான தளபதியாக இருந்த கொங்காலேகொட பண்டா அவர்களது இயற்பெயர் டேவிட் அல்லது தாவீது என்பதாகும். அலுதெனியே பண்டா கபுறுபஸ்தி பண்டலாகே டேவிட் தொன் புள்ளே வெதராள எனும் பல பெயர்களால் இவர் அழைக்கப்பட்டார். 1843 காலப்பகுதியில் இவர் பதுளைப் பிரதேசத்தில் வாழ்ந்துள் ளார். நாட்டுப்பற்றுமிக்க சிங்களவர்களுடன் இணைந்து ஆங்கிலேயருக்கு எதிராக செயலாற்றியுள்ளார். எனவே இவர் ஒரு தேசத்துரோகி என ஆங்கில ஆட்சியாளர்க ளால் பிரகடனப்படுத்தப் பட்டிருந்தார்.

தாம் ராஜசிங்க அரச பரம்பரையைச் சேர்ந்தவர் எனக்கூறி, கண்டி தலதா மாளிகையிலும் வாழ்ந்துள்ளார். வெளிநாட்டவரின் ஆட்சிக்கு எதிராக விடுதலைப் போராட்டத்தை முன்வைக்கும் போது மக்களின் ஆதரவையும் நம்பிக்கைகளையும் பெற அது உதவும் என அவர் நம்பியிருந்தார். மக்களை வாட்டிவதைக்கும் வகையில் ஆங்கியேர்களால் விதிக்கப்பட்டிந்த, வரிகளை ரத்துச் செய்வித்துக்கொள்ளவேண்டிய தேவை சிங்கள மக்களுக்கு இருந்தது. ஆங்கிலேய ஆட்சியாளர்களை இலங்கையிலிருந்து துரத்தியடிப்பதற்காக சிங்களவர்கள் ஒன்று திரள வேண்டும் என அறிந்திருந்தனர். இந்தப் போராட்டத் தில் தலைவராக கொங்காலேகொட பண்டா நியமிக்கப்பட்டார். 1848 யூலை 30ஆந் திகதி பெருந்தொகையானோரின் விருப்பத்தின் பேரில் விகாராதிபதி வண கிரானேகமை இந்திரஜோதி அவர்களின் ஆசீர்வாதத்துடன் மங்களவாள் அணிவிக்கப்பட்டு ஸ்ரீ விக்ரம சர்வ சித்தி எனும் பெயரால் கொங்காலேகொட பண்டா முழு நாட்டினதும் மன்னனாக முடிசூட்டப்பட்டு ஆசீர்வாதிக்கப்பட்டார்.

கண்டி, பரந்துகலை, மாத்தளை ஆகிய நகரங்களை வெற்றிகொண்டிருந்த சிங்கள போராட்டத் தலைவர்களுக்கு இடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு, சிங்களவரின் யுத்த வலிமை போதியதாகாமை ஆகியன காரணமாக போர் நலிவடைந்தது. இத்தருணத்தைச் சாதகமாகக்கொண்ட ஆங்கிலேயர்கள் 1848 நவம்பர் 14ஆந் திகதி கொங்காலகொட பண்டாவை யுத்த நீதிமன்ற முன்னிலையில் நிறுத்தியது. அங்கு அவர் அளித்த வாக்கு மூலம் காரணமாக மரண தண்டனை தளர்த்தப்பட்டு 100 கசையடிகளின் பின் 1849 சனவரி 01ஆந் திகதி மலாக்காவுக்கு நாடு கடத்தப்பட்டார். வீரர் கொங்காலேகொட பண்டா 1849 திசெம்பர் 01ஆந் திகதி உயிர்துறந்தார். கண்டியின் முடிசூட்டு மன்னனாகவும், 1848 இன் விடுதலைப் போராட்டத்தை ஒழுங்கு செய்து அதற்கு மக்களின் ஆதரவைப் பெற்று நெறிப்படுத்திய ஒரு வீரனாகவும் கொங்காலே கொட பண்டாவின் பெயர் இலங்கை வரலாற்றில் அழியாத இடத்தைப் பெற்றுள்ளது.

## மொனராவில கப்பெட்டிப்பொல திசாவை



கொலஹெல கப்பெட்டிப்பொல, தெல்லள எத்தன ஹாமி தம்பதியினரின் மகனாக கப்பெட்டிப்பொல திசாவையும் மகளாக அகபோபொல குமாரிஹாமியும் பிறந்தனர். கப்பெட்டிப்பொல தந்தை இறந்த பின்னர், தலதா மாளிகையின் தியவடன நிலமே பதவியை ஏற்றார். ஆங்கிலேயருடன் ஆரம்பம் முதல் இணைந்து செயற்பட்டு வந்தார். இதனால் ஊவை வெல்லஸ்ஸை கிளர்ச்சியை அடக்குவதற்காக ஆங்கிலேயரால் கப்பெட்டிப்பொல திசாவை அனுப்பப்பட்டார். அவர் ஊவா மக்களுடன் இணைந்து சிங்களவரைப் பாதுகாப்பதற்காக ஆங்கிலேயருக்கு எதிராகப் போரிட்டு வெற்றி பெற்றார். ஆங்கிலயர்கள் மொல்லிகொடை திசாவையின் உதவியுடன் கப்பெட்டிப்பொல திசாவையையும் மேலும் பலரையும் சிறைப்படித்தனர். இவர் தைரியமாக மரணத்தை எதிர்கொண்டார். தமது கழுத்தை ஒரு வாள்வெட்டில் துண்டித்துவிடுமாறு அவர் கோரினார். அதுவே அவரது இறுதிக் கோரிக்கையாக அமைந்தது. இதனூடாக அவரின் அஞ்சாமையும் வீரத்தன்மையும் எடுத்துக்காட்டப்பட்டன.

- இவர்கள் தொடர்பான மேலும் தகவல்களை தேடியறிவதற்கு மாணவர்க் குழுக்களை நெறிப்படுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  1. மூத்தோரிடம் கேட்டறிதல்
  2. புத்தகங்களிலிருந்தும் தகவல் திரட்டல்

- குழுக்களாகச் சேகரித்த தகவல்களைப் பொருத்தமான விதத்தில் முன்வைப்பதற்கு வழிப்படுத்துங்கள். தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.

## செயற்பாடு 8

- நாட்டின் சுதந்திரத்துக்காகச் செயற்பட்டு, நாட்டின் கீர்த்தி நாமத்தை உயர்த்துவதற்கும் அயராது உழைத்த மக்கள் தலைவர்கள் பற்றிய தகவல்களை அறிய வாய்ப்பளியுங்கள். இத்தலைவர்கள் கற்றவர்களாகவும், பல்வேறு துறைகளிலும் பல்வேறு திறன்களைக் காட்டிய நபர்கள் என்பதனையும் எடுத்துக்கூறுங்கள்.

## கலாநிதி ஆனந்த குமாரசுவாமி



கலாநிதி ஆனந்த குமாரசுவாமி அவர்கள் 1877 ஆகஸ்ட் 22 ஆந் திகதி கொழும்பு கொள்ளுப்பிட்டியில் பிறந்தார். அவர் தரமிக்க நூல்களையும் ஆக்கங்களையும் எழுதியுள்ளார். அவை 500 இற்கும் மேற்பட்டவை. ஆங்கிலம், தமிழ், பிராஞ்சு, ஜேர்மன், லத்தீன், கிரேக்கம், சமஸ்கிருதம், பாலி ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருந்தார். சட்ட அறிஞராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் திறமை காட்டினார். பௌத்த நூல்களை பாலி மொழியிலிருந்து ஆங்கிலத்துக்கும் இந்து சமய நூல்களை தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கும் மொழி பெயர்த்தார்.

இவர் லண்டன் வைக்லி∴ப் கல்லூரியில் கல்வி பயின்றார். இலங்கையின் மலைகளும் காரீயமும் எனும் பருவ இதழ் அவரது முதலாவது எழுத்தாக்க மாகும். 1905 இல் இலங்கை சமூக சீர்திருத்த சங்கத்தைத் தொடங்கிய குமாரசுவாமி, சிலோன் நஷனல் ரிவீவ் (Ceylon National Review) எனும் சஞ்சிகையின் ஆரம்பகால பிரதம ஆசிரியரும் ஆவார்.

இலங்கைத் திருநாடு, உலகுக்கு அளித்த பிரதானமான ஒரு தத்துவஞானி கலாநிதி ஆனந்த குமாரசுவாமி ஆவார்.

கீழைத்தேய படைப்புக்களைக்காக்கும் பொறுப்பை ஏற்றிருந்த இவரது ஆக்கங்களின் கையெழுத்துப் பிரதிகள் இன்றும் கூட அமெரிக்காவில் பொஸ்டன் லலிதக் கலைகள் அரும்பொருட்காட்சிச்சாலையில் பாதுகாப்பாக வைக்கப் பட்டுள்ளன. மத்திய கால சிங்களக்கலை, இந்திய - இந்தோனேசிய கலை வரலாறு, தேசிய எதிர்பார்ப்புகள் போன்றவை இவரால் எழுதப்பட்ட சில அரிய நூல்களாகும்.

இவர் 1947 செப்ரெம்பர் 09 ஆந் திகதி அமெரிக்காவில் பொஸ்டன் நகரில் இவ்வுலகை விட்டு மறைந்தார்.

## கலாநிதி ரீ.பீ. ஜாயா



1890 சனவரி 01ஆந் திகதி கண்டி, கலகெதரைப் பிரதேசத்தில் பிறந்த துவான் புர்ஹானுத்தீன் ஜாயா அவர்களின் இளமைக்காலம் கிராமப் பிள்ளைகளுடன் எளிமையாகக் கழிந்தது. இவர் கொட்டாஞ்சேனை சாந்த போல்ஸ் கல்லுரியிலும் பின்னர் சாந்த தோமஸ் கல்லூரியிலும் கல்வி பயின்றார்.

1910 ஆம் ஆண்டில் இல் கண்டி தர்மராஜ கல்லூரியில் ஆசிரியராகப் பதவி யேற்ற இவர், லத்தீன், கிரேக்க, பொருளியல், வரலாறு போன்ற பாடங்களினூடாக மாணவரது மனதில் வீரம், ஆளுமை, நாட்டுப்பற்று போன்றவற்றை ஏற்படுத்தும் வகையில் கற்பித்தலில் ஈடுபட்டார். 1917இல் கொழும்பு ஆனந்தக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த காலத்தில் நாட்டைப் பெறுப்பேற்க உதவும் வகையில் பூரணமான கல்வியை மாணவர்களுக்கு வழங்கினார் 1921இல் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி அதிபராகப் பதவியேற்றார். அக்காலத்தில் கைரியா பெண்கள் பாடசாலை, டென்ஹாம் ஆங்கிலப் பாடசாலை ஆகியவற்றைத் தாபித்தவரும் இவரே. அளுத்கமை, கம்பளை, புத்தளம், மாத்தளை ஆகிய நகரங்களில் ஸாஹிறாக் கல்லூரிகளையும், அளுத்கமை, அட்டாளைச்சேனை ஆகிய நகரங்களில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளையும் ஆரம்பித்தார்.

தேசிய கொடிக் கமிட்டி, தேசிய கீதக் கமிட்டி ஆகியவற்றில் அங்கத்தவராக இருந்து செயற்பட்டார். 1960 மே 3ஆந் திகதி புனித ஹஜ் கடமை நிறைவேற்றச் சென்றபோது மக்கா நகரில் இறையடி சேர்ந்தார்.

## சேர் டீ.பி. ஜயதிலக்க



சேர் தொன் பரோன் ஜயதிலக்க அவர்கள் களனிய, வராகொடை எனும் கிராமத்தில் 1868 சனவரி 13ஆந் திகதி பிறந்தார். பப்டிசம் கலைக்கூடம், கொழும்பு வெஸ்லி கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றார். கண்டி, தர்மராஜ கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய இவர் பிற் காலத்தில் (1900)பத்து வருட காலம் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் அதிபராகப் பணியாற்றினார். கொழும்பு இளைஞர் பௌத்த சங்கம், பரம வித்தியார்த்த பௌத்த சங்கம் ஆகியவற்றின் அங்கத்தவராக இருந்த இவர், 1910 இல் மது ஒழிப்பு இயக்கத்தை ஆரம்பித்தார். சிங்கள அகராதி ஆக்கத்தில் இவர் முன்னின்று செயற்பட்டார்.

சிங்களம், பாளி, சமஸ்கிருதம், ஆங்கிலம், லத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருந்த அவர், சிங்கள மொழிக்கும் சிங்கள இலக்கியத்துக்கும் அரும்பணிகளை ஆற்றியுள்ளார். பண்டைய நூல்களை மீள வெளியீடுவதன் அவசியத்தை உணர்ந்த அவர் அவற்றை மீண்டும் வெளியிடும் பணியை மேற்கொண்டார். 1927இல் இலங்கைப் பல்கலைக் கழகத்தை பேராதனையில் ஆரம்பிக்கும் நடவடிக்கைகளில் பங்குகொண்டார்.

இலங்கைப் பாடசாலைகளில் தாய் மொழியில் கற்பித்தல் வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தினார். சிறு பராயத்தில் அவர் எழுதிய நையாண்டிக் கவிதைகள் அவரது இயல்பான கவிதையாற்றலை எடுத்துக்காட்டுவனவாக உள்ளன. இவர் 1944 மே மாதம் 31ஆந் திகதி இவ்வுலகை விட்டு மறைந்தார்.

## வண. எஸ். மஹிந்த



திபெத் நாட்டில் சீக்கிம் பிராந்தியத்தில் பிறந்த எஸ்.கே. தசினம்கல் 1914இல் தனது 12ஆம் வயதில் கொழும்பு வித்யோதய பிரினெவில் சேர்ந்து பாலி, சிங்களம், சமஸ் கிருதம் ஆகியவற்றைக் கற்றார். ஆங்கில மகாபோதி வித்தியாலயத்திலும் பொல்கஸ்துவை ஆராமயாவிலும், கீழைத்தேய மொழிகளைக் கற்றார். ரத்கமை, வண சிரிசூலசுமன அவர்களின் மாணவர்கள் தொடர்ந்துவை சைலபிம்பாராமையில் சீக்கிம் மஹிந்த எனும் பெயரில் துறவரம் பூண்டார்.

இவர் 1934 - 1936 வரையிலான காலத்துள் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் சிங்களம், பாலி, பௌத்த சமயம் ஆகிய பாடங்கள் கற்பித்தார். பன்சாலை, கிராமம் ஆகியனவற்றுக்காக அரும்பணியாற்றிய இவர் நவ லங்கா சமய பாடசாலை, ஆங்கிலப் பாடசாலை ஆகியவற்றை ஆரம்பித்தார். மேலும் அப்பிரதேச சத்தரபேறுவ கிராமங்களிலிருந்து மருந்து மூலிகைகளைச் சேகரித்து இலவச மருந்துச்சாலையொன்றினைத் தாபித்தார். மக்கள் மாட்டிறைச்சி உண்பதைத் தவிர்ப்பதற்காக அரும்பாடுபட்டார். இவர் பாணந்துரை, தொட்டகமுவை உபசம்பதா பிக்குகள் சபையின் பதிவாளராகவும் செயற்பட்டார்.

வணக்கத்துக்குரிய எஸ். மஹிந்த அவர்கள் கவிதை நூல்களும், உரைநடை நூல்களுமாக மொத்தம் 40 இற்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். இவரது லங்கா மாதா, ''நிதஹஸே மந்த்ரய'' (சுதந்திர மந்திரம்), ''நிதஹஸே தஹன'' (சுதந்திர தியானம்), ''ஜாதிக தறு நலவில்ல'' (தேசிய தாலாட்டு) போன்ற புத்தகங்கள் இலங்கை மக்களிடத்தே நாட்டுப்பற்றை வளர்க்க உதவின. கொழும்பு யுகத்தின் பிரபல்யமிக்க ஒரு கவிஞராக இருந்த இவரது முதலாவது கவிதை நூல் 'ஔவா முத்துதம' (அறிவுரை முத்துச்சரம்) என்பதாகும். இறுதியாக வெளியிட்ட நூல் 'ஸ்ரீபாத' என்பதாகும். நாட்டுப்பற்றுடன் நாட்டுக்குப் பணியாற்றிய இவர் 1951 மார்ச் மாதம் 14ஆந் திகதி இயற்கையெய்தினார்.

- நாட்டின் சுதந்திரத்திற்காக அயராது உழைத்த மக்கள் தலைவர்களில் சிலரைப் பற்றி அறிந்துகொண்ட மாணவர்களை இவர்கள் தொடர்பான மேலும் தகவல்களை சேகரிக்க குழுக்களாக வழிப்படுத்துங்கள்.

- அவற்றை குழுக்களாகப் பொருத்தமான முறையில் ஒழுங்குபடுத்துவதற்கும் வகுப்பில் முன்வைப்பதற்கும் வழிப்படுத்துங்கள். தேவையான வழிகாட்டலை வழங்குங்கள்.

- மேலும் நாட்டின் நற்பெயருக்காகப் பாடுபட்ட சிலரையும் அறிமுகஞ் செய்யுங்கள்.

- இவர்கள் தொடர்பான மேலும் தகவல்களை சேகரிக்க குழுக்களாக வழிப்படுத்துங்கள். அவற்றை குழுக்களாகப் பொருத்தமான முறையில் ஒழுங்குபடுத்துவதற்கும் வகுப்பில் முன்வைப்பதற்கும் வழிப்படுத்துங்கள். தேவையான வழிகாட்டலை வழங்குங்கள்.

## கலாநிதி சி.டபிள்யு.டபிள்யு. கன்னங்கரா



இலவசக் கல்வியின் தந்தை எனப் போற்றப்படும் கலாநிதி கிறிஸ்டோபர் வில்லியம் விஜேகோன் கன்னங்கரா புகழ் பூத்த கல்வியியலாளரும் தேசிய வீரருமாவார். இவர் 1894 ஒக்டோபர் 18 ஆந் திகதி பிறந்தார்.

''கலாநிதி கன்னங்கரா அவர்கள் பாரத தேசத்தில் பிறந்திருப்பாரானால் அவர் ஒரு தெய்வம் போன்று போற்றப்பட்டிருப்பார்'' என 1945 இல் இலங்கையில் இருந்த இந்திய பிரதிநிதி திரு. எம்.எஸ். அனே கூறியுள்ளார். அம்பலாங்கொடை வெஸ்லியன் கல்லூரி, காலி ரிச்மண்ட் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்ற அவர் பிரித்தானிய ஏகாதிபத்திய நாடுகளில் மிகச் சிறந்த மாணவருக்குரிய பரிசையும் பெற்றார்.


ரிச்மண்ட கல்லூரி ஆசிரியராக தனது வாழ்க்கையைத் தொடங்கிய இவர் மொறட்டுவை வேல்ஸ் குமார வித்தியாலயம், கொழும்பு வெஸ்லிக் கல்லூரி ஆகியவற்றிலும் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். 1931 தொடக்கம் 1946 வரையில் இலங்கையில் கல்வி அமைச்சராக அளப்பரிய சேவை ஆற்றியுள்ளார்.

முதலாந் தரம் தொடக்கம் பல்கலைக்கழகம் வரையில் இலவசக் கல்வி வழங்குதல், தாய்மொழியை கல்வி ஊடக மொழியாக்குதல், பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றல், மத்திய மகா வித்தியாலயங்கள் ஆரம்பித்தல், ஒவ்வொரு பிள்ளைக்கும் தமது பெற்றோரின் சமயத்தைக் கற்பித்தல், குறைந்த

வருமானமுடைய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்குப் புலமைப்பரிசில் வழங்குதல், பொதுவான பாடத்திட்டம் தயாரித்தல், பாட வெளிவேலைகளை ஒழுங்கு செய்தல், பாடசாலைகளுக்கு விளையாட்டு மைதானங்களை அமைத்துக் கொடுத்தல், இசை, நடனம், மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் ஆகியவற்றைக் கற்க வாய்ப்பளித்தல், இரண்டாம் தரம் முதல் ஆங்கிலப் பாடம் கற்பதை கட்டாயமாக்கல் போன்றவை அவர் ஆற்றிய சேவைகளுள் முக்கியமானவையாகும்.

இந்த மறுசீரமைப்புகள் காரணமாக, இலங்கைக் கல்வியில் புதிய திருப்பம் ஏற்பட்டது. அக்காலப்பகுதியில் ஆசியாவில் மிக அபிவிருத்தியடைந்த நாடு எனும் நிலையை இலங்கை அடைந்தது. வெளிநாட்டவரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த ஒருகால கட்டமாக இருந்த போதிலும், இலங்கையின் கல்விக்கோலத்தை மாற்றியமைப்பதற்காகத் தோள் கொடுத்த கலாநிதி ஸீ.டபிள்யு.டபிள்யு.கன்னங்கரா அவர்கள் சிறந்த கல்விமானும் தேசிய வீரருமாவார். இதனாலேயே இவர் ‘‘இலவசக் கல்வியின் தந்தை’’ எனப் போன்றப்படுகின்றார்.

### ஆதர் சி. கிளாக்



இவர், இங்கிலாந்தின் தெற்குப் பகுதியில், ஸமர்செற் பிராந்தியத்தில் மயின்ஹெச் நகரில் 1917 டிசம்பர் 16ஆந் திகதி பிறந்தார். இவர் ஒரு விஞ்ஞானியும், சிறந்த எழுத்தாளருமாவார். இவர் 1945இல் வயர்லெஸ் வேர்ல்ட் (Wireless world) எனும் சஞ்சிகையில் வெளி யிட்ட ஒரு கட்டுரை காரணமாக பிரபல்யமடைந்தார். தரையிலிருந்து வானில் செய்மதிகளை அனுப்ப முடியும் எனவும் அச்செய்மதிகளைப் பயன்படுத்தி செய்திப் பரிமாற்ற முறையொன்றினை உருவாக்க முடியும் எனவும் அவர் அக்கட்டுரையில் குறிப்பிட்டிருந் தார். இவர் 1956 இல் இலங்கையில் குடியேறினார். மொரட்டுவைப்பல்கலைக்கழக வேந்தராகவும், இங்கிலாந்து அரச வானியலாளர் கழக அங்கத்தவராகவும் பணியாற்றினார். இவருக்கு 38 பட்டங்களும் விருதுகளும் கிடைத்துள்ளன. ‘‘நையிற்’’ பதவியும் இவருக்குக் கிடைத்துள்ளது. தனது 90ஆம் வயதில் 2008 மார்ச் 19 ஆந் திகதி இலங்கையில் உயிர் நீத்தார்.

- இவர்களது வாழ்க்கையூடாக நாம் பெற்றுக்கொள்ள வேண்டியவை எனக்கருதும் பண்புகள் யாவை என்பது தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள். தன்னைக் கவர்ந்த ஒருவரைப்பற்றி பேசுவதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்குங் கள். இக்கருப்பொருளை கற்பிக்கும் கால கட்டத்தில் மாணவர்களுக்குக் காலைக் கூடத்தில் சொற்பொழிவாற்ற வாய்ப்பு வழங்குங்கள். மாணவர்கள் சேகரித்த தகவல் களைக்கொண்டு சிறு புத்தகங்களை வடிவமைக்க வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 9

- எமது நாட்டில் அமைந்துள்ள இயற்கை வளங்கள் தொடர்பாக படங்கள், புகைப் படங்கள், கட்டுரைகளைச் சேகரிக்குமாறு முன்கூட்டியே மாணவர்களுக்கு அறிவுறுத் தல் வழங்குங்கள்.

***எடுத்துக்காட்டு:*** நிலம், நீர், பிராணிகள், தாவரங்கள், காற்று

- இயற்கை வளங்களைக் காப்பது தொடர்பாக மாணவரது மனதில் மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள். ''எமது நாட்டின் இயற்கை வளங்கள்'' எனும் தலைப்பை வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.

- மாணவரைச் சிறு சிறு குழுக்களாகப் பிரித்து சேகரித்த தகவல்களை அக்குழுக்களுக்கு வழங்கி, அவற்றை அறிந்து கொள்ள இடமளியுங்கள். அவற்றில் அடங்கியுள்ள வளங்கள் எவை என வினவி அவை தொடர்பாக சுருக்கமான ஒரு விவரத்தை முன்வைக்க குழுக்களுக்கு வாய்ப்பளியுங்கள்.

- முன்வைக்கப்பட்ட கருத்துக்களின்படி இயற்கையாக எமக்குக் கிடைக்கும் வளங்கள் இயற்கை வளங்களாகும் என்பதையும் அவை இலங்கையின் வெவ்வேறு பிரதேசங் களில் காணப்படுகின்றன என்பதையும் எடுத்துக்காட்டுங்கள்.
  ***எடுத்துக்காட்டு:*** ஆறுகள், மலைகள், நீர்வீழ்ச்சிகள், இரத்தினக்கல், காரீயம்... போன்றன.

- மாணவர் திரட்டி முன்வைக்கும் தகவல்களை சுவர்ப்பத்திரிகையொன்றில் ஒட்டிக் காட்சிப்படுத்துங்கள். பிரதேசத்தில் அமைந்துள்ள, இலகுவாகச் சென்றடையக்கூடிய இடங்களில் அமைந்துள்ள இயற்கை வளங்களைப் பார்வையிட அவதானிப்புச் சுற்றுலாவொன்றினை ஒழுங்கு செய்யுங்கள். செல்ல முன்னர் அவதானிக்க வேண்டிய விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள். ஒரு குழுவுக்கு ஒரு விடயம் மூலம் ஒதுக்கிக் கொள்வது இலகுவாக அமையும்.
  ***எடுத்துக்காட்டு:***
  - இயற்கை வளம் அமைந்துள்ள இடத்தில் காணப்படும் நிலைமைகள்
  - பாதுகாப்பாக அவ்விடத்துக்குச் செல்வதற்கு உள்ள வாய்ப்புக்கள்
  - பார்வையிட்டோர் அவ்விடத்தில் செய்துள்ள தீங்குகள்
  - இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்
  - பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் விதம்...

- மாணவர் அவதானிப்பில் ஈடுபடுத்தி தேவையான விளக்கங்களைக் குறித்துக்கொள்ள வழியுறுத்துங்கள். அந்த இடத்துக்குப் பொறுப்பாகப் பணியாற்றும் அதிகாரிகள், ஏனைய ஆட்கள் உள்ளனவாயின் தேவையான தகவல்களை கேட்டு அறிந்து கொள்ள வழியுறுத்துங்கள்.

- தகவல்களை வகுப்புக்குக் கொண்டுவந்த பின்னர் தமது குழுவினர் திரட்டிய தகவல் களை முன்வைக்க வாய்ப்பளியுங்கள். தகவல்களை கோவைப்படுத்தும்போதும், முன்வைக்கும்போதும் விடுபடுபவற்றை ஈடுசெய்துகொள்ள ஆசிரியர் உதவி புரியலாம்.

- இங்கு இயற்கை வளங்கள் அழிவதைத் தவிர்த்து அவற்றைப் பாதுகாப்பதன் முக்கியத்து வத்தை எடுத்துக்காட்டுங்கள். அது குறித்து மாணவர்களின் கருத்துக்களைக் கேட்டறி யுங்கள்.

- இயற்கை வளங்கள் தொடர்பான பாடல்களைப்பாட மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு:***

**ஆறு**

கல்லும் மலையும் குதித்து வந்தேன் - பெருங்
காடும் செடியுங் கடந்து வந்தேன்
எல்லை விரிந்த சமவெளி யெங்கும் - நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்.

காயும் நிலத்தழல் ஆற்றி வந்தேன் - அதில்
கண்குளி ரப்பயிர் கண்டு வந்தேன்
ஆயும் மலர்ப்பொழில் சென்று வந்தேன் - அங்கென்
ஆசை தீர விளை யாடிவந்தேன்.

ஏறாத மேடுகள் ஏறி வந்தேன் - பல
ஏரி குளங்கள் நிரப்பி வந்தேன்
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்
ஓடைகள் பொங்கிட ஓடி வந்தேன்.

மாங்கனி தேங்கனி வாரிவந்தேன் - பல
வாச மலர்களும் அள்ளி வந்தேன்
தீங்கரும் பாயிரந் தள்ளிவந்தேன் - மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.

அல்லும் பகலும் அலைந்துவந்தேன் - எங்கள்
ஆழி இறைவனைக் காணவந்தேன்
நில்லும் எனக்கினி நேரமில்லை - இன்னும்
நீண்ட வழிபோக வேண்டும் அம்மா.

***- கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை***

**மகாவலி கங்கை**

மங்கள் மாவலி கங்கையவள் -
தங்கும் அருவிகள் கூட்டி வந்தாள்
எங்கள் உணவாகி நீர் தருவாள் -
பொங்கு பயிர்வளரப் போற்றிடுவோம்.

எங்கும் தொழில்வளம் கண்டிடுவோம் -
ஏத்தும் உழுதொழில் செய்திடுவோம்.
தங்கமின் சக்தியும் தான் தருவாள் -
தொங்கிடும் மின்விளக்கு ஏற்றிடுவோம்.

தேயிலை றப்பர் மிளகுடனே -
வாழைமா தென்னை வளம் பெருகும்
பாயும் நீள் மாவலி நீரதனால் -
நாட்டில் பஞ்சம் பிணி பறந்திடுமே.

***நன்றி: மயிலங்கூடல் த. கனரத்தினம்***
***சிறுவர் பாடல்***

## வயல் காட்சி

முத்து முத்தாய் மணிகள் - கோதால்
முடியுள்ள மணிகள்
கொத்துக் கொத்தாய் வயலில் - தம்பி
குலுங்குதடா பாராய்

காற்று வந்து தழுவும் - ஏதோ
கதைத்துப் பேசிச் செல்லும்
நாற்று மேடை யெல்லாம் - ஒரு
நடனம் நிகழும் தம்பி

பச்சை மஞ்சள் வண்ணம் - பூண்டு
பார்ப்போர் உள்ளமெல்லாம்
இச்சை கொள்ளச் செய்யும் - ஓர்
இனிய காட்சி தம்பி


நான்கு பக்கம் வரம்பு - அதன்
நடுவே நெல்லின் தாள்கள்
தூங்கி நிற்கும் கதிர்கள் - மயில்
தோகை போல தம்பி

தண்ணீர் பாய்ந்து செல்லும் - அதில்
தாவிச் செல்லும் மீன்கள்
கண் குளிரும் காட்சி - நீ
கண்ட துண்டோ தம்பி?

***கவிஞர் வாகரைவாணன்***
***நன்றி: நீ வா நிலாவே***

◙ ‘‘எமது நாட்டு வளங்களைக் காப்போம்’’எனும் தலைப்பில் ஒரு சுவரொட்டி தயாரிக்க வாய்ப்பளியுங்கள். அவற்றைப் பொருத்தமான ஓர் இடத்தில் காட்சிப்படுத்த வழிப்படுத் துங்கள்.

# 12.0 எம்மால் செய்யக்கூடிய மாற்றங்கள்



**தமது நடத்தை தொடர்பாகக் கவனஞ் செலுத்தி, உடன்பாடான (+) வகையில் நடத்தைகளை மாற்றிய மைத்துக் கொள்ளும் பிரசைகள் நாட்டுக்கு நலம் பயக்கும் மனித வளங்களாவர். ஒரு சிறந்த சமூகத் துக்காக அடிப்படையாக அமைவது, தம்மை உடன் பாடான வகையில் மாற்றியமைத்தவாறு ஏனையோ ரையும் மாற்றியமைப்பதில் பங்களிப்புச் செய்யும் பிரசைகளாவர். அவ்வாறான பிரசைகளை பெருமளவில் கொண்ட சமூகத்தின் அடித்தளத்தை உறுதிப்படுத்துவதற்குத் தேவை யான அனுபவங்கள் இந்த கருப்பொருளினூடாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

## தேர்ச்சிகள்

- தமது நடத்தையின் உடன்பாடான (+) மாற்றத்துக்காக கவனத்துடன் செயற் படுவார்.
- தனதும் சக மாணவ மாணவியரதும் கல்வியின் தர மேம்பாட்டுக்காகவும், உள சமூக கவனிப்புக்காகவும் கவனத்துடன் செயற்படுவார்.
- எனையோருக்கு உதவி புரியத்தக்க சந்தர்ப்பங்கள் பற்றித் தேடியறிந்து அதற்காகச் செயற்படுவார்.
- பாடசாலைச் சூழலை அழகாகப் பேணி வரப் பங்களிப்புச் செய்வார்.
- உடல், உள ஆரோக்கியத்துக்காக ஆக்கபூர்வமான விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

### செயற்பாடு 1

- உடன்பாடான (நேர்) நடத்தை மாற்றத்துக்காக மாணவரைப் பின்வரும் செயற்பாடு களில் ஈடுபடுத்துங்கள். இதற்காக நாம் அன்றாடம் செய்யும் வேலைகளுடன் தொடர்புடைய வகையில் சில சித்திரங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***
  - காலையில் நித்திரைவிட்டு எழும்பியவுடன் படுக்கை/கட்டில்/பாய் ஒழுங்கின்றி இருத்தல்
  - உணவு உட்கொண்ட பின்னர்/தேநீர் பருகிய பின்னர் பயன்படுத்திய பாத்திரங்கள் கழுவாது மேசை மீது வைக்கப்பட்டிருத்தல்
  - வீட்டில் புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ள இடம் நேர்த்தியின்றி இருத்தல்
  - இடத்துக்கிடம் கடதாசித்துண்டுகள் போடப்பட்டிருப்பதால் வகுப்பறை அலங்கோல மாக இருத்தல்

- மாணவரைப் பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரியுங்கள். குழுக்களுக்கு ஒன்றாக சித்தரங்களைப் பகிர்ந்தளியுங்கள். சித்திரத்தில் காணப்படுபவற்றையும் அந்நிலைமை ஏற்பட்டமைக்கான காரணங்களையும், அதனைத் தவிர்ப்பதற்காக செய்ய வேண்டிய வற்றையும் குறித்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்குங்கள்.

- மேலும் குழுவில் உள்ள மாணவரை தமது நாளாந்த நடத்தைகள் தொடர்பாக சுய கணிப்பீட்டில் ஈடுபட வழிப்படுத்துங்கள்.

- அவை பற்றிக் கலந்துரையாடி, குறைபாடுகளை நிவர்த்திசெய்து கொள்வதற்காக ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய நடத்தை மாற்றங்கள் தொடர்பாக உரையாட வழிப் படுத்துங்கள். ஒவ்வொரு குழுவினரும் எழுதிக் கொண்ட விடயங்களை முன்வைக்க வாய்ப்பளியுங்கள். தேவைக்கேற்ப வழிகாட்டுங்கள்.

## செயற்பாடு 2

- மாணவரைப் பொருத்தமானவாறு சில குழுக்களாகப் பிரித்து, ஒரு நிகழ்வை அல்லது சந்தர்ப்பத்தை அடிப்படையாகக் கொண்டு, நடத்தையில் நல்லதொரு மாற்றம் ஏற் பட்டமையை வலியுறுத்தப்படும் வகையில் குறுநாடகங்கள் சிலவற்றைத் திட்டமிடு வதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டுங்கள்.
  குறு நாடகங்கள் ஆரம்பத்தில் கதா பாத்திரங்களால் காட்டப்பட்ட பொருத்தமற்ற நடத்தைகள் அக்குறுநாடகத்தின் இறுதியில், நல்ல நடத்தைகளாக மாற்றமடைந் துள்ளமை வெளிக்காட்டப்படுகின்றமை வலியுறுத்தப்படுதல் வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுங்கள். மாணவர் குழுக்களுடன் கலந்துரையாடி அவர்களது அனுபவங்கள் தொடர்பான நிகழ்வுகள், சந்தர்ப்பங்களை அடிப்படையாகக் கொண்டு நாடகங்களைத் திட்டமிட்டுக் கொள்ளலாம். உண்மைச் சந்தர்ப்பங்களில்/நிகழ்வுகளில் நல்ல நடத்தைகள் இடம்பெறாவிடின் அவற்றை எவ்வாறு நல்ல நடத்தைகளாக மாற்றியமைக்கலாம் என்பது பற்றி மாணவருடன் கலந்துரையாடி குறுநாடகங்களைத் திட்டமிடுவதற்கு உதவுங்கள். திட்டமிடும்போது குழுக்களுக்கு வழிகாட்டுவதன் மூலம் ஒரு கதாபாத்திரத்திலேனும் நல்ல மாற்றத்தைக் காணக்கூடியவாறு குறு நாடகத்தை முன்வைக்குமாறு ஆர்வமூட்டுங்கள்.

- ஒரு குறுநாடகத்தை முன்வைத்து முடித்த பின்னர் நாடகக் கதாபத்திரங்களில்/ கதாபத்திரத்தில் ஏற்பட்ட நல்ல மாற்றங்கள், தொடர்பாகக் கலந்துரையாடி அம்மாற்றங் களை வலியுறுத்துங்கள். இறுதியில் மாணவர்களுக்குக் கண்களை மூடிக்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கிப் பின்வருமாறு கூறுங்கள்.
  உங்களது நாளாந்த வேலைகளை நினைவுபடுத்திக்கொள்ளுங்கள். காலையில் நித்திரைவிட்டு எழுந்தவேளை தொடக்கம், இரவில் நித்திரைக்குச் செல்லும் வரையி லான உங்களது நடத்தைகளை நினைவுபடுத்திக்கொள்ளுங்கள். மிக விரைவாக அதிக கஷ்டமின்றி உங்களால் மாற்றியமைத்துக்கொள்ளக்கூடிய நடத்தைகளை இனங்கண்டு கொள்ளுங்கள். அவ்வாறான நடத்தைகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள். அந்த நடத்தையில் நீங்கள் ஏற்படுத்தக்கூடிய நல்ல மாற்றங்கள் எவை என எண்ணிப்பாருங்கள். அவற்றுள் ஒரு நல்ல மாற்றத்தை நாளை தொடக்கம் ஆரம்பிப்பதாக உறுதிபூணுங்கள். நான் நாளை தொடக்கம் எனது நடத்தையில் அந்த மாற்றத்தை ஏற்படுத்துவேன் என உறுதி பூணுங்கள்.

## செயற்பாடு 3

- வகுப்புக்கொள்கையாக தற்போது நடைமுறையில் உள்ள யாதேனுமொரு வேலைத் திட்டத்தைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***
  - காலை சமய ஆராதனை
  - மனதைச் சாந்தப்படுத்தும் செயற்பாடுகள்
  - உடற்பயிற்சிச் செயற்பாடுகள்
  - மாணவர்களின் பிறந்தநாள் நிகழ்ச்சிகள்
  - வகுப்பில் குப்பைகூளங்களை வெளியேற்றல்

- இவ்வாறான வேலைகளைக் குழுவுக்கு ஒன்றாக ஒப்படையுங்கள். ஒவ்வொரு குழுவுக் குமுரிய வேலைத்திட்டத்தில் தற்போது காணப்படும் குறைபாடுகளைக் கலந்துரையாடுவது அவசியமாகும். இவ்வேலைத்திட்டத்தை மேம்படுத்துவதற்கான பிரேரணைகளையும் அதற்காக வகுப்பு மாணவரின் நடத்தையில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்களையும் பற்றிச் சிந்திக்க வாய்ப்பளியுங்கள். அடுத்த வாரத்தில் குறித்த வேலைத் திட்டத்தின் கீழ் முதலில் ஏற்படுத்த வேண்டிய நடத்தை மாற்றங்கள் பற்றிக் கலந்துரையாடி அது தொடர்பாக வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 4

- இதற்காக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் போன்ற பொருத்தமான ஒரு வளவாளரை வகுப்புக்கு வரவழைத்து மாணவர்களுக்கு எதிர்பார்ப்பது அறிவூட்டம் செய்ய வாய்ப் பளியுங்கள். அதிதியிடம் வினவ வேண்டிய வினாக்களை முன்கூட்டியே ஆயத்தப் படுத்திக்கொள்வது அவசியமாகும். உரையின்போது வினாக்கள் வினவுவதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - தமது சுத்தத்துக்காக கட்டாயமாகச் செய்ய வேண்டியவை.
  - தாம் சுத்தமாக இருப்பதால் தமக்குக் கிடைக்கும் நன்மைகள்
  - தாம் சுத்தமாக இருப்பதால் ஏனையோருக்குக் கிடைக்கும் நன்மைகள்
  - தாம் சுத்தமாக இருப்பது சமூகத்தில் செல்வாக்குச் செலுத்தும் விதம்

- அதிதியை வரவேற்றல், மரியாதையாகப் பேசுதல், உணவு பானாதிகள் பரிமாறுதல், நன்றி கூறுதல் போன்ற நற்பழக்கங்களுக்காக அனுபவங்களை வழங்குவது தொடர் பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- தாம் அறிந்துகொண்ட விடயங்கள்/செய்திகளை உள்ளடக்கிய சுவர்ப்பத்திரிகைக்குக் குறுங்கட்டுரையொன்று தயாரிக்க சந்தர்ப்பமளியுங்கள்.

- சுய சுத்தத்தின் முக்கியத்துவம், அசுத்தமாக இருப்பதால் ஏற்படும் நோய்கள் தொடர்பான பாடல்களை ஆக்கி முன்வைக்க இடமளியுங்கள்.

### சுத்தம்

கண்ட கண்ட இடத்தில் எச்சில்
துப்பக் கூடாது - நாம்
காலை வைத்து மிதித்து அதில்
நடக்கக் கூடாது!

எச்சில் தொட்டி எதற்கு இருக்கு
மறக்கக் கூடாது - நாம்
எந்த நோயும் ஒண்ட இடம்
கொடுக்கக் கூடாது!

குப்பை பெருக்கித் தொட்டியிலே
கொட்டிட வேண்டும் - நாம்
குடும்பத் தூய்மை காப்பதிலே
முந்திட வேண்டும்!

குளித்து நாளும் துப்பரவாய்
இருந்திட வேண்டும் - நாம்
கலகலப்பாய்ப் பேசி நன்றாய்ச்
சிரித்திட வேண்டும்!

சேம்பல் தானே நோய்களுக்கு
முதல் படியாகும் - நமக்குச்
சுற்றுப் புறத் தூய்மைதானே
அடிப்படை யாகும்!

ஒன்றுபட்டு நாட்டைத் தூய்மை
ஆக்கிட வேண்டும் - நோய்
இல்லாமல் நூறாண்டுகள்
வாழ்ந்திட வேண்டும்!

***கவிஞர் குழந்தை கதிரேசன்***
***நன்றி: சிறுவர் பாடல்கள்***

## செயற்பாடு 5

- தமதும் சகோதர மாணவர்களதும் கல்வியின் தரம், உள சமூக கவனிப்பு ஆகியன தொடர்பாக கவனஞ் செலுத்துங்கள். அதற்கான ஓர் அணுகுமுறையாக சரியான வழிகாட்டல்களைப் பெறுவதற்கு பொருத்தமான விளையாட்டொன்றில் ஈடுபட வாய்ப் பளியுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  மாணவர்களுக்கு இருவரிருவராகச் சேர்ந்து வெளியே ஓர் இடத்துக்கு வந்து, பயண முடிவிடமொன்றை தெரிவுசெய்துகொள்ளுமாறு வழிப்படுத்துங்கள். இருவரும் தெரிவுசெய்துகொண்ட பயண முடிவிடத்துக்கு தொடக்க இடத்திலிருந்து போகும் போது ஒருவர் கண்களை மூடிக்கொண்டு செல்பவராகவும் மற்றவர் அவருக்கு வழிகாட்டுபவராகவும் மாறுவர். பயணப்பாதையில் உள்ள பல்வேறு தடைகளைத் தவிர்த்து தமது கண்களை மூடிக்கொண்டிருக்கின்ற சகபாடியை பயண முடிவிடம் வரை செல்ல வழிப்படுத்துவது வழிகாட்டுபவரின் பொறுப்பாகும். பயண முடிவிடத்தை அடைந்த பின்னர், கண்களை மூடிக்கொண்டிருந்தவர் வழிகாட்டியாகவும், வழிகாட்டியவர் கண்களை மூடிக்கொண்டிருப்பவராகவும் மாறி இருவரும் திரும்பி பயணத்தைத் தொடங்கி ஆரம்ப இடத்துக்கு மீண்டும் வர வேண்டும்.

- செயற்பாட்டின் பின்னர் கலந்துரையாடலொன்றை நடத்துங்கள். ஒருவருக்குக் கண் தெரியாதபோது அவர் இக்கட்டான நிலைக்கு உள்ளாவது போன்று ஏனையோரின் உதவி தேவைப்படும் நிலை ஏற்படும்போது உள்ளாகும் இக்கட்டான நிலையை எடுத்துக் காட்டுங்கள். அவ்வாறே எமக்கு உதவி தேவைப்படும்போது எவரேனும் உதவ முன்வராவிட்டால் நாமும் இக்கட்டான நிலைக்கு ஆளாவோம் என்பதை வலியுறுத்துங்கள். எவருக்கேனும் உதவி செய்யும்போது அவரையும் சமமான நிலையில் கருதி, உதவி பெறுபவரின் கௌரவம் பாதிக்கப்படாத வகையிலேயே அவருக்கு உதவி செய்ய வேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டுங்கள்.

- தமக்குத் தேவையான உதவிகள் தொடர்பாக சிந்தித்துப் பார்க்குமாறு சகல மாணவ ரையும் வழிப்படுத்துங்கள். இவை தமது படிப்புக்குத் தேவையான பொருள்கள் இருக்கலாம் அல்லது பொருள் சாராத உதவிகளாக இருக்கலாம் என்பதையும் வலியுறுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு 1:***

  - வகுப்பில் புத்தகங்கள், பென்சில், பேனை வாங்குவதில் கஷ்டங்களை எதிர்நோக்கி யுள்ள ஒரு மாணவனுக்கு அவற்றை வழங்குதல்
  - வசதி குறைவான ஒரு மாணவனுக்கு வீட்டில் நாட்டுவதற்கு பூச்செடிகள், மரக்கறிச் செடிகள் வழங்குதல்
  - இறுதியில் ஏனையோருக்கு உதவி செய்யத்தக்க சந்தர்ப்பங்கள் பற்றித் தேடியறிந்து பொருத்தமானவாறு செயற்படச் செய்தல்

  உதவி செய்யும்போது உதவி பெறுபவரின் கௌரவத்துக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் உதவி புரிவதன் பெறுமானத்தையும் வலியுறுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு 2:***

  பேனை, பென்சில், புத்தகங்கள் போன்றவற்றைக் கொடுத்தல், புத்தகங்களுக்கு உறை போட்டுக்கொடுத்தல், உடைகள் வழங்குதல் போன்ற உதவிகள் பாடசாலையில் கற்கும் சந்தர்ப்பங்களிலும் பாடசாலைக்கு வரத்தவறிய நாள்களிலும் தேவையான உதவிகளை வழங்குவது தொடர்பாகக் கவனத்தைச் செலுத்த வழிப்படுத்துங்கள். உதவி செய்யக்கூடிய விதங்களை வகுப்பு மட்டத்தில் இனங்காணச் செய்யுங்கள். உதவி புரிவோருக்கு நன்றி தெரிவித்தல், பாராட்டுதல், மதிப்பளித்தல் போன்றவற்றைச் செய்ய வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 6

- தமது அர்ப்பணிப்பையும் பங்களிப்பையும் காட்டியவாறு ஏனையோருக்கு உதவி புரிவதை வலியுறுத்தும் வகையில் பின்வரும் செயற்பாட்டில் மாணவரை ஈடுபடச் செய்யுங்கள்.

- ஏனையோருக்கு உதவி புரிவதற்கான வாய்ப்புக்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுங்கள். இனங்காணப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களை மாணவரது கருத்துப்படி பட்டியற்படுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - முதியோர் இல்லமொன்றுக்கு உதவி செய்தல்
  - சிறுவர் இல்லமொன்றுக்கு உதவி செய்தல்
  - வைத்தியசாலையில் மருந்துவில்லைகள் இட்டுக் கொடுப்பதற்குரிய கடதாசி உறைகளை வகுப்பு மட்டத்தில் தயாரித்து வைத்தியசாலைக்கு வழங்குதல்

- இவ்வாறாக இனங்காணப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தின்போது மாணவரால் வகுப்பு மட்டத்தில் செய்யத்தக்கவை தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  அழகியல் செயற்பாடுகள் மூலம் முதியோரை/சிறுவரை மகிழ்வித்தல் அல்லது திருப்திப்படுத்தல், முதியோருடன்/சிறுவருடன் நட்புடன் உரையாடுதல், இயன்ற அளவுக்கு உதவி செய்தல், வகுப்பு மாணவர்கள் முன்னரே தயாரித்த தலையணை உறை, கைக்குட்டை, விசிறி போன்றவற்றை முதியோருக்கு/சிறுவருக்கு வழங்குதல் (விலை கொடுத்து வாங்குவதைத் தவிர்த்து சங்கிலித் தையல், கம்பளித் தையல், குறுக்குத்தையல் போன்ற அலங்காரத்தையல் முறைகளைப் பயன்படுத்தி இவற்றை அழகுபடுத்த வழிப்படுத்துங்கள். தைத்துக்கொண்ட கைக்குட்டைகள், தலையணை உறைகளை துணி அச்சிடல் (Fabric Painting) முறையில் அழகுபடுத்தவும் வழிப் படுத்துங்கள்.)

- செயற்பாட்டின் இறுதியில் ஏனையோருக்கு உதவி புரியும் நட்பண்பை எடுத்துக்காட் டுங்கள். அவ்வாறானோர் பெருளவில் காணப்படும் சமூகம் மேலும் நல்ல சமூகமாகும் என்பதையும் எடுத்துக்காட்டுங்கள்.

## செயற்பாடு 7

- பாடசாலைச் சூழலை அழகாகப் பேணிவருவதன் அவசியத்தை எடுத்துக்காட்டுங்கள். பாடசாலைத் தோட்டத்தை அழகாப் பேணுவதன் அவசியம் தொடர்பாக கவனம் ஈர்க்கப்படும் வகையில் பாடசாலைத் தோட்டத்தை அவதானிக்க வழிப்படுத்துங்கள். அவதானிப்பின் பின்னர் ‘‘நான் கண்ட பாடசாலை’’யை சித்திரமாக வரைய இட மளியுங்கள்.

- பாடசாலைச்சூழல் அழகான ஓர் இடமாக இருப்பதன் அவசியத்தை வலியுறுத்தி, கண்களை மூடியவாறு மிக அழகான ஒரு பாடசாலைத் தோட்டம் பற்றி எண்ணிப் பார்க்க வாய்ப்பளியுங்கள். அது தொடர்பாக மாணவருக்கு ஊக்கமளியுங்கள்.

- அழகிய பாடசாலைத் தோட்டம் தொடர்பாக தமது மனதில் தோன்றியவற்றை உள்ளடக்கி ‘‘எனது கனவுப் பாடசாலை’’ எனும் தலைப்பில் ஒரு சித்திரம் வரைய வழிப்படுத்துங்கள்.

- ‘‘எனது கனவுப் பாடசாலை’’ எனும் சித்திரத்தையும் எடுத்துக்கொண்டு பொருத்தமான வாறு குழுக்களாகுமாறு மாணவரை வழிப்படுத்துங்கள். இரண்டு சித்திரங்களையும் ஒப்பிட வழிப்படுத்துங்கள். தற்போது இருக்கும் பாடசாலைத் தோட்டத்தில் செய்ய வேண்டிய மாற்றங்களைப் பிரேரித்து, தமது சித்திரத்தை விவரிப்பதற்கு இடமளியுங்கள். சகல குழுவினரும் சேர்ந்து ஐந்தாம் தர மாணவர்கள் என்ற வகையில் பாடசாலையின் அழகை மேம்படுத்துவதற்காகச் செய்யத்தக்கவை பற்றி, ஒவ்வொருவரதும் ‘‘எமது கனவுப் பாடசாலை’’ சித்திரத்தின் ஊடாக இனங்கண்டு கொள்ள வழிப்படுத்துங்கள்.

- சிறு குழுவின் அனைவரும் சேர்ந்து ‘‘எமது பாடசாலைக்கு நாம் தருபவை’’ எனும் தலைப்பில் கூட்டான ஒரு சித்திரத்தை வரைய வழிப்படுத்துங்கள். அங்கு உண்மையில் வகுப்பு மாணவர்களால் செய்யக்கூடிய மாற்றங்களை உள்ளடக்கிய ஒரு சித்திரமாக இருத்தல் வேண்டும் எனக் கூறுங்கள். தொடர்ந்தும் கூட்டுச்சேர்ந்து பகுத்தாய்ந்து மேம்படுத்தி பாடசாலைத் தோட்டத்தை அழகான ஓர் இடமாக விருத்தி செய்வதற்காகச் செய்யத்தக்கவற்றை இனங்கண்டு கொள்ள வழிப்படுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - பாடசாலைக்கு அழகியதொரு வேலி
  - சுவர்களுக்குச் சித்திரங்கள்
  - முற்றத்துக்கு ஒரு குளம்
  - பாதை இருபுறமும் வெவ்வேறு நிறப் பூச்செடிகள், மரக்கறிச் செடிகள்
  - மண் கழுவிச் செல்லப்படும் இடங்களுக்கு அழகிய கல்வேலி
  - வாசிப்புக்கு திறந்தவெளியில் ஓர் இடம்.

- இனங்கண்ட ஒரு மாற்றத்தை செய்வதற்காக குழுவினருக்குப் பொறுப்புக்களைப் பகிர்ந்துகொள்ளுமாறு வழிப்படுத்துங்கள். ஒவ்வொரு குழுவினாலும் திட்டமிடப்பட்ட மாற்றங்களைச் செய்வதற்காக வேலைத்திடடங்களை அமைத்துக்கொள்ள வழி காட்டுங்கள். பொறுப்புக்களைப் பகிர்ந்துகொள்ள வழிப்படுத்துங்கள். மாற்றங்களை நடைமுறைப்படுத்திய பின்னர் அம்மாற்றங்களை ‘‘எனது கனவுப் பாடசாலை’’ சித்திரத்துடன் ஒப்பிட்டு மகிழ்ச்சியடைய ஆர்வமூட்டுங்கள். எனது கனவுப் பாடசாலை சித்திரத்துக்கு அமைய ஏற்படுத்தப்படாத மாற்றங்களை எதிர்காலத்தில் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.

## செயற்பாடு 8

- செய்யப்பட்ட மாற்றம் தொடர்பாக பாடல் ஒன்றை ஆக்க, கட்டுரை ஒன்றை எழுத வாய்ப்பளியுங்கள். அவற்றை வகுப்பில் முன்வைக்க இடமளியுங்கள். முன்வைக் கப்பட்ட பாடல்/கட்டுரைகளுள் ஆக்கபூர்வமானவற்றை இறுதியில் வகுப்பில் காட்சிப் பலகையில் காட்சிப்படுத்த வழிப்படுத்துங்கள்.

- நல்ல பழக்கங்களைக்கூறும் சில பாடல்களைப்பாட இடமளியுங்கள். அவற்றில் கூறப்படும் நல்ல பழக்கங்களில் கவனஞ் செலுத்தி நல்ல புதிய பழக்கங்களை ஏற்படுத்திக்கொண்டவாறு மாற்றமடைவதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுங்கள்.

## செயற்பாடு 9

- உடல், உள சுகத்துக்கான ஆக்கபூர்வமான விளையாட்டுக்களில் மாணவர்களை ஈடுபடுத்துங்கள். மாணவர்களை குழுக்களாக்கிக்கொள்ளுங்கள். சரியான நடத்தைகள் எழுதப்பட்ட அட்டைகள் சிலவற்றை தயாரித்துக்கொள்ளுங்கள்.

***எடுத்தக்காட்டு:***


- மேசை மீது புத்தகங்களை ஒழுங்காக வைப்போம்.
- நல்லதைத் தெரிவுசெய்து நல்லதை மட்டும் செய்வோம்.

▣ தயாரித்த அட்டைகளில் உள்ள சொற்களை பல்வேறு வடிவங்களில் வெட்டிக்கொள் ளுங்கள். இவ்வாறு வெட்டிய அட்டைகளில் பல தொகுதிகளைத் தயாரித்துக்கொள் ளுங்கள். மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள். சொல்லட்டைகளைக் கலந்து உறைகளில் இட்டுக்கொள்ளுங்கள். தயாரிக்கும் அட்டைத்தொகுதிகள் மாணவர் களுக்கு போதுமான அளவில் இருத்தல் வேண்டும்.

▣ திறந்த வெளியான ஓர் இடத்துக்கு மாணவரைக் கூட்டிச் செல்லுங்கள். சில இடங்களில் சொல் அட்டைத் தொகுதிகளை வைத்து, விளையாட்டின் விவரங்களை மாணவருக்கு விளக்குங்கள்.

- உறையில் இருந்து அட்டைத் துண்டுகளை வெளியே எடுங்கள்.
- அவற்றைக்கொண்டு ஒரு வாக்கியம்/கூற்று அமைக்க முயற்சி செய்யுங்கள்.
- தேவையான அட்டைகள் இல்லையேல் ஏனைய குழுக்களிடம் செல்லுங்கள்.
- தேவையான அட்டைகளைத் தேடிப் பெறுங்கள்.
- உங்களுக்குத் தேவையில்லாத அட்டைத் துண்டுகளை ஏனையோருக்குக் கொடுங்கள்.
- முதலில் வாக்கியத்தை அமைத்த குழு ஆசிரியரால் அடையாளமிடப்பட்டுள்ள இடத்துக்கு அட்டையுடன் வேகமாக ஓடிவர வேண்டும்.
- கூற்று / வாக்கியம் சரியானதா என அவதானித்து ஆசிரியர் சரிபார்த்தல் வேண்டும்.
- ஆரம்ப இடத்துக்கு ஓடுங்கள். மீண்டும் விளையாட்டைத் தொடங்குங்கள். விளையாட்டை நிறைவு செய்யுங்கள்.

# 13.0 மனிதனும் தகவல்களும்



**தகவல் தொழிநுட்பம், அண்மைக்காலமாக மிகத்துரித கதியில் முன்னேற்றமடைந்துவரும் ஒரு துறையாகும். நாட்டினுள்ளும் நாடுகளுக்கு இடையேயும் தகவல் களைப் பரிமாறிக் கொள்வதற்காக செய்தித்தாள்கள் போன்ற அச்சு ஊடகங்களும் மின்னஞ்சல் உட்பட இலத்திரனியல் ஊடகங்களும் பயன்பாட்டில் உள்ளன. இவை பற்றி நன்கு விளக்கம்பெற்றுப் பொருளுள்ள வகையில் நாளாந்த வாழ்க்கையுடன் அவற்றைத் தொடர்புபடுத்திக்கொள்ளுதல், வெற்றிகரமான ஒரு பிரசையாவதற்கு அவசியமாகும். இது தொடர்பாக முக்கியத்துவம் பெறும் பல தேர்ச்சிகள் உள்ளன. நாளாந்தம் தகவல்கள் தொடர்பாக கரிசனையுடன் செயற்படல், தகவல்களைத் தேவைக்கேற்பத் தெரிவுசெய்தல், தகவல்களை முன்வைப்பதற்காகப் பொருத்தமான முறைகளைப் பயன்படுத்தல் போன்றவை அவற்றுள் பிரதானமானவையாகும். இதற்கான அடித்தளத்தை மாணவர்களுக்கு வழங்குவதே இக்கருப்பொருளின் எதிர்பார்ப்பாகும்.**

## தேர்ச்சிகள்

- தகவல் பெறுவதற்காக பல்வேறு ஊடகங்களையும் முறைகளையும் பயன்படுத்துவார்.
- அன்றாட வேலைகளுக்காக இலத்திரனியல் சாதனங்கள் சிலவற்றைக் கையாள்வார்.
- பல்வேறு ஊடகங்களினூடாகக் கிடைக்கும் தகவல்களைப் பகுத்தாய்வு செய்து பொருத்தமான தகவல்களைத் தெரிவுசெய்து கொள்வார்.
- தகவல்களை முன்வைப்பதற்காக விளைதிறன்மிக்க முறைகளைப் பயன்படுத்துவார்.
- பல்வேறு ஊடகங்களினூடாகப் பெறும் தகவல்களைப் பயன்படுத்தி ஓய்வை விளைதிறனுடைய வகையில் கழிப்பார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

## செயற்பாடு 1

- மாணவர்கள் வாசிக்கும், செவிமடுக்கும், பார்க்கும் நாளாந்தப் பத்திரிகைகள், நிகழ்ச்சிகள் தொடர்பான தகவல்களை சேகரிக்குமாறு வழிப்படுத்துங்கள். இதற்காக பின்வருவது போன்ற ஒரு படிவத்தைத் தயாரித்துக் கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.

பொருத்தமான இடத்தில் x அடையாளமிடுங்கள்.
இடைவெளிகளில் உரிய விடையை எழுதுங்கள்.

1. நண்பனின்/நண்பியின் பெயர்: ..............................................................................

2. i. தொலைக்காட்சி பார்ப்பீர்களா? ஆம் ☐ இல்லை ☐
   ii. தொலைக்காட்சி பார்ப்பதானால்,
   எந்தெந்த நிகழ்ச்சிகளைப் பார்ப்பீர்கள்?

| நிகழ்ச்சி | பார்க்கும் நேர மணி | அளவு (கிட்டத்தட்ட) நிமிடம் |
|---|---|---|
| ............................................ | ............... | ................ |
| ............................................ | ............... | ................ |
| ............................................ | ............... | ................ |

3. i. வானொலி கேட்பீர்களா? ஆம் ☐ இல்லை ☐

ii. வானொலி கேட்பதானால்
எந்தெந்த நிகழ்ச்சிகளைக் கேட்பீர்கள்?

| நிகழ்ச்சி | கேட்கும் நேர மணி | அளவு (ஏறக்குறைய) நிமிடம் |
|---|---|---|
| ............................................ | ............... | ................ |
| ............................................ | ............... | ................ |
| ............................................ | ............... | ................ |

4. i. பத்திரிகை வாசிப்பீர்களா? ஆம் ☐ இல்லை ☐

ii. பத்திரிகை வாசிப்பதானால், எவற்றை வாசிப்பீர்கள்?
.......................................................
.......................................................

5. i. மேலதிக நூல்கள் வாசிப்பீர்களா?
ஆம் ☐ இல்லை ☐

6. i. இணையம்/மின்னஞ்சல் பயன்படுத்துவதுண்டா?
ஆம் ☐ இல்லை ☐

- இவ்வாறான ஒரு படிவம் ஒவ்வொரு மாணவருக்கும் கிடைத்தல் வேண்டும். வகுப்பு நண்பர் ஒருவரைச் சந்தித்து அவரிடம் வினவி இப்பத்திரத்தை நிரப்புமாறு வழிப்படுத் துங்கள். ஒவ்வொரு மாணவரது பத்திரமும் பூர்த்திசெய்யப்படுவது அவசியமாகும்.

- மாணவரைக் குழுக்களாகப் பிரியுங்கள். பூரணப்படுத்திய பத்திரங்களில் அடங்கியுள்ள தகவல்களைக் கோவைப்படுத்துமாறு அறிவுறுத்துங்கள். அதற்காக பின்வருவது போன்ற ஓர் அட்டவணையைப் பயன்படுத்தலாம்.

| நண்பனின்/ நண்பியின் பெயர் | தொலைக்காட்சியில் பார்க்கும் நிகழ்ச்சிகள் | வானொலியில் கேட்கும் நிகழ்ச்சிகள் | பத்திரிகையில் வாசிக்கும் பகுதிகள் | இணையத் தைப்பயன படுத்தல் | பிற |
|---|---|---|---|---|---|
| | | | | | |

- குழுவினர் திரட்டிய தகவல்களை வகுப்பில் முன்வைக்க இடமளியுங்கள். எல்லாக் குழுக்களும் சமர்ப்பித்த தகவல்களை மீண்டும் ஒரு பொது அட்டவணையாகத் திரட்டுவதற்கு ஆசிரியர் உதவி வழங்கிச் செயற்படுங்கள். அதற்காகப் பின்வருவது போன்ற ஓர் அட்டவணையைப் பயன்படுத்தலாம்.

| தொலைக்காட்சியில் பார்க்கும் நிகழ்ச்சிகள் | வானொலியில் கேட்கும் நிகழ்ச்சிகள் | பத்திரிகையில் வாசிக்கும் பகுதிகள் | இணையத் தைப்பயன் படுத்தல் | பிற |
|---|---|---|---|---|
| | | | | |

- தயாரித்த அட்டவணையைப் பயன்படுத்தி பின்வரும் விடயங்களை வெளிக்கொணருங் கள்.
  - அந்தந்த ஊடகத்தை விரும்பும் மாணவர் தொகை
  - அதிகமானோர் பார்க்கும் நிகழ்ச்சிகள்
  - அதிகமானோர் கேட்கும் நிகழ்ச்சிகள்
  - அதிகமானோர் வாசிக்கும் பத்திரிகைகளும் தலைப்புக்களும்
  - அதிகமானோர் பயன்படுத்தும் ஊடகங்கள்
  - மிகக் குறைவானோர் பயன்படுத்தும் ஊடகங்கள்
  - தகவல் கிடைக்கும் வேறு ஊடகங்கள்
  - நாம் விருத்தி செய்துகொள்ள வேண்டிய அம்சங்கள்

- தொலைக்காட்சி பார்க்கும்போதும் வானொலி கேட்கும்போதும் பத்திரிகைகளை வாசிக்கும்போதும் பொருத்தமான நிகழ்ச்சிகளையும் தலைப்புகளையும் தெரிவுசெய்து கொள்பவை பற்றி கவனத்தைத் திருப்புங்கள். மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்து கொள்ளும்போது கவனஞ் செலுத்தவேண்டிய விடயங்கள் தொடர்பாக மாணவர்களுக்கு வழிகாட்டுங்கள்.

- இவ்வாறாகத் தகவல்களைப் பெறும்போது அதற்கான ஓர் வழியாக படிவங்கள் மூலமோ வினாக்கள் கேட்பதன் மூலமோ தகவல்களைப் பெறலாம் என்பதைக் காட்டுங்கள்.

- மேற்படி தகவல்களை அடிப்படையாகக்கொண்டு மாணவரைக் குழுக்களாக்குங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***
  - வானொலி கேட்கும் மாணவர்கள்
  - தொலைக்காட்சி பார்க்கும் மாணவர்கள்
  - பத்திரிகை வாசிக்கும் மாணவர்கள் ...போன்றவை.

- மறுநாள் செயற்பாட்டுக்காக, அந்தந்த ஊடகத்தின் மூலம் வழங்கப்படும் சில தகவல்களைக் குறித்து வைத்து வகுப்புக்கு எடுத்து வருமாறு மாணவருக்கு அறிவுறுத் துங்கள்.

## செயற்பாடு 2


- மாணவரைக் குழுக்களாகப் பிரியுங்கள். திரட்டி வந்த தகவல்களுள், மாணவருக்குப் பொருத்தமான தகவல்களை மாத்திரம் தெரிவுசெய்துகொள்ள உதவி புரியுங்கள்.

- தெரிவுசெய்துகொண்ட தகவல்களை ஏதேனுமொரு வகையில் அட்டவணைப்படுத்த முடியுமா எனப் பார்க்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***
  விளையாட்டு நிகழ்ச்சிகள், சிறுவர் நிகழ்ச்சிகள், கல்வி நிகழ்ச்சிகள், பண்பாட்டு நிகழ்ச்சிகள்...

- அத்தகவல்களினூடாகப் பின்வரும் இயல்புகளை இனங்காண இடமளியுங்கள்.
  - பத்திரிகைகளில் கருத்துக்களின் தெளிவு.
  - பத்திரிகைகளில் ஒவ்வொரு தலைப்பின் கீழும் முன்வைக்கப்பட்டுள்ள தகவல்கள் குறுகியனவா?, விரிவானவையா? என்பது.
  - யாரால் யாருக்காக வெளியிடப்பட்டது?
  - அக்கருத்துக்கள் கேட்போர், பார்ப்போர், வாசிப்போரின் மனதைக் கவரக்கூடிய வையாக உள்ளனவா?
  - அத்தகவல்கள் மூலம் நாம் பெறக்கூடிய முன்மாதிரிகளும் பயன்களும்

- அதற்கமைய தகவல் வழங்கும்போது கூடுதலாக வலியுறுத்தவேண்டிய அம்சங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துமாறு அறிவுறுத்துங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***
  - வழங்கும் தகவல்களை மிகத் தெளிவாகவும் எளிமையாகவும் முன்வைத்தல்
  - முன்வைக்கும் விதம்/பாங்கு

## செயற்பாடு 3




- பாடசாலையில் காணப்படும் வசதிகளின்படி மேற்படி பொதுசன தொடர்பூடகங்களுள் ஒன்றைத் தெரிவுசெய்து அதனை இயக்கும் விதம் தொடர்பான அனுபவங்களப்பெறு வதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பளியுங்கள். செய்தியறிக்கையொன்றைச் செவிமடுக்க இடமளித்து அதன் மூலம் பெறத்தக்க தகவல்கள், பயன்கள் பற்றியும் கலந்துரை யாடுங்கள்.

- செய்தியறிக்கைகளைச் செவிமடுத்தலானது நாளாந்த வாழ்க்கையை வெற்றிகரமான தாக்கிக்கொள்வதற்கு பயன்படும் விதத்தை விளங்கிக்கொள்ளும் வகையிலும் அவற் றைச் செவிமடுப்பதில் ஆர்வம் ஏற்படும் வகையிலும் இக்கலந்துரையாடலை நடத் துங்கள்.

- அந்தந்த ஊடகத்தின் அனுகூலங்கள், பிரதி கூலங்கள் பற்றி உரையாடுமாறு மாணவர் குழுக்களை வழிப்படுத்துங்கள். அவற்றைக் கடதாசிகளில் குறித்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்குங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  **தொலைக்காட்சி பார்ப்பதால் கிடைக்கும் அனுகூலங்கள்**
  - உலகின் பல்வேறு தகவல்களைக் கேட்கவும் பார்க்கவும் வாய்ப்புக் கிடைத்தல்
  - கல்வி நிகழ்ச்சிகள் ஒலி ஒளிபரப்பப்படுதல்
  - சில நிகழ்ச்சிகள் நேரடியாக முன்வைக்கப்படுதல்

  **தொலைக்காட்சி பார்ப்பதால் ஏற்படக்கூடிய பிரதிகூலங்கள்/பாதகங்கள்**
  - தேவையேதுமின்றி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்துக்கொண்டித்தல், தேவையேதுமின்றி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு அடிமைப்படுதல், அதன் பொருத்தமின்மை
  - நேரம் வீண் விரயமாதல்
  - வாசிப்பில் ஆர்வம் குறைதல்

- ஏனைய ஊடகங்களின் அனுகூலங்கள்/பிரதிகூலங்கள் பற்றியும் கலந்துரையாடுங்கள்.

- அந்தந்த ஊடகத்தின் பிரதிகூலங்கள்/பாதகங்கள் தொடர்பாக அதிக கவனஞ்செலுத்தி அவ்வாறான நிலைமைகளைத் தவிர்த்துச் செயற்பட வேண்டிய விதத்தை விளக் குங்கள்.

- மாணவர் குறித்துக்கொண்ட தகவல்களை முன்வைக்க வாய்ப்பளியுங்கள். ஆசிரியர் கலந்துரையாடி மாணவரது கருத்துக்களை மேலும் விருத்தி செய்யுங்கள்.

- ஒலிப் பதிவுக்/இறுவட்டு கருவியைப் (Cassette player/CD player) பயன்படுத்தி பாடல் களை மீண்டும் செவிமடுக்க இடமளியுங்கள்.

- ஆக்கபூர்வமான வகையில் நிகழ்ச்சியொன்றினை ஒலிப்பதிவு செய்து வகுப்பில் முன்வைக்க விரும்பும் மாணவர்கள் உள்ளனராயின் அதற்காக அவர்களுக்கு வாய்ப்பு வழங்குங்கள்.

- அச்சு ஊடகங்களில் குறிப்பாக பத்திரிகைகளில் தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ள விதம் பற்றிய அனுபவங்களைப் பெற மாணவர்களுக்கு இடமளியுங்கள். இதற்காக தினசரிப் பத்திரிகையொன்றினை அல்லது மாணவருக்குப் பொருத்தமாக, இலகு வாகத் தேடிப்பெறத்தக்க பத்திரிகையொன்றினைப் பெற்று பின்வரும் விடயங்களுக்கு அமைய ஆராய இடமளியுங்கள்.
  - பத்திரிகைப் பக்கங்கள் தயார்ப்படுத்தப்பட்டுள்ள விதத்தில் யாதேனும் சிறப்பியல்பு கள் உள்ளனவா? அவ்வாறாயின் அதற்கான காரணங்கள் யாவை?
  - பத்திரிகையின் பிரதான செய்தி, அது இடம்பெற்றுள்ள இடம், அது அவ்வாறாக முன்வைக்கப்பட்டுள்ளமைக்கான காரணங்கள்.
  - வெவ்வேறு பக்கங்களில் உள்ள பிரதான செய்திகள் எவை?
  - ஏனைய தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ள விதம் எவ்வாறானது?
  - நிறப் பயன்பாடும் அதற்கான காரணங்களும்
  - எழுத்துக்களின் பருமன், வடிவம், அதற்கான காரணங்கள்
  - கவனத்தை ஈர்ப்பதற்காகப் பயன்பத்தப்பட்டுள்ள உத்திகள்

  ***எடுத்துக்காட்டு:***

  வேடிக்கைச் சித்திரங்கள் (காட்டூன்), படங்கள் போன்றவை.

- மேற்படி வழிப்படுத்தல்களின் ஊடாக, மாணவரது அனுபவங்களை வெளிக்கொணர் வதற்கு அவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- வெவ்வேறு ஊடகங்களில் வெளியிடப்படும் சில நிகழ்ச்சிகளைத் தயாரித்து முன்வைப் பதற்கு மாணவர் குழுக்களுக்கு சந்தர்ப்பளியுங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***
  செய்தி அறிக்கை வாசித்தல், நாளுக்குரிய நிகழ்ச்சி நிரலை வாசித்தல், அதிதி ஒருவருடன் கலந்துரையாடல்... போன்றவை.

## செயற்பாடு 4

- நூலகப்பயன்பாடு தொடர்பான அனுபவங்களை மாணவர்களுக்கு வழங்குவதற்கான ஒழுங்குகளைச் செய்யுங்கள். நேரடியாக அனுபவங்களைப் பெறுவதற்காக பாடசாலை நூலகத்திற்குச் செல்ல வழிப்படுத்துவது அவசியமாகும். நூலகத்தைப் பார்வையிடச் செல்ல முன்னர் பின்வரும் விடயங்களில் மாணவரது கவனத்தைத் திருப்புங்கள்.
  1. நூல்கள் வைக்கப்பட்டுள்ள விதம்
     - எண் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டிருத்தல்
     - விடயங்களுக்கு அமைய வகைப்படுத்தப்பட்டிருத்தல்
     - புத்தகங்கள் அடுக்கிவைக்கப்பட்டுள்ள விதம் (நிலைக்குத்தாக/கிடையாக)
  2. புத்தகங்களை வாசிப்பதற்கும் இரவலாக கொண்டு செல்வதற்கும் செய்யப்பட்டுள்ள ஒழுங்குகள்.
  3. நூலகத்தினுள் நடந்துகொள்ள வேண்டிய விதம்
     - அமைதி பேணல்
     - ஓர் இறாக்கையில் (ஏந்தானத்தில்) இருந்து எடுத்த புத்தகத்தை மீண்டும் வைக்கவேண்டிய விதம்
     - ஏனையோருக்கு இடைஞ்சல் ஏற்படாத வகையில் நடந்துகொள்ளல்
     - நூல்களைக் கவனமாகக் கையாளல்/பயன்படுத்தல்

- தமக்கு வாசிப்பதற்குப் பொருத்தமான ஒரு நூலைத் தெரிவுசெய்து கொள்ள வழிப் படுத்துங்கள்.

- நூலின் யாதேனுமொரு பகுதியைத் தெரிவுசெய்யும்போதும் நூலைத் தெரிவு செய்யும் போதும் அது தமக்குப் பொருத்தமானதா என அறிவதற்காக நூலின் உள்ளடக்கத்தில் தரப்பட்டுள்ள தலைப்புகளின்பால் கவனத்தைச் செலுத்த வழிப்படுத்துங்கள். நூலின் ஆசிரியர், வெளியிடப்பட்ட வருடம் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் கவனஞ் செலுத்த வேண்டும் என்பதை விளக்குங்கள்.

- நூலகத்தை அவதானித்துப் பெற்ற அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு, குழு ஒப்படையொன்று வழங்குங்கள். குழுக்களைப் பாடசாலை நூலகத்தின்பால் வழிப்படுத்தி தமது குழுவுக்குப் பொருத்தமான, குழுவினர் விரும்புகின்ற ஒரு நூலைத் தெரிவு செய்து கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.

- அந்நூலை வாசித்து பின்வரும் தகவல்களை டிமை கடதாசியொன்றில் அல்லது வேறு பொருத்தமான ஒரு தாளில் குறித்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்குங்கள்.
  1. அந்நூலில் அடங்கியுள்ள அடிப்படையான கருத்து
     (நூல் எதைப்பற்றியது என்பது மாத்திரம் போதுமானது.)
  2. நூலின் பெயர்
  3. பதிப்பு ஆண்டு
  4. எத்தனையாவது பதிப்பு

- எழுதித் தயார்ப்படுத்திய டிமை கடதாசிகள் எல்லாவற்றையும் வகுப்பில் காட்சிப்படுத்தி, அவற்றை வாசித்துப் பார்ப்பதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பளியுங்கள்.

- ஓய்வாக இருக்கும் நேரங்களில் நூலகத்தைப் பயன்படுத்துவது பயன்மிக்கது என்பதை வலியுறுத்துங்கள்.

## செயற்பாடு 5

- தகவல்களை வழங்குவதற்கும், முன்வைப்பதற்கும் மிகப் பொருத்தமான முறைகள் தொடர்பாக மாணவரது கவனத்தைத் திருப்புங்கள். இதற்காக முன்னைய தினமொன் றில் மாணவரை வழிப்படுத்தி பத்திரிகையொன்றில் வெளியான வர்த்தக விளம்பரங்கள், சுகாதார செய்திகள், சிறு அறிவித்தல்கள், படங்கள் போன்றவற்றை இயன்ற அளவுக்கு வகுப்புக்குக் கொண்டுவருமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்துங்கள்.

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, அவர்கள் திரட்டிக் கொண்டுவந்த தகவல் களைக் குழுக்களுக்குப் பகிர்ந்தளித்து, அவை ஒவ்வொன்றையும் இனங்காண வழிப்படுத்துங்கள். அதற்கமைய வெவ்வேறு வர்த்தக விளம்பரங்களில் எப்போதும் அடங்கியிருக்கும் விடயங்களை இனங்காண வழிப்படுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  தொழில் வெற்றிடங்கள், காணி கட்டடம் விற்பனை, மோட்டர் வாகன விற்பனை/ தேவை.... போன்றவை.

- யாதேனும் ஒரு குறித்த கருத்தை வெளிப்படுத்துவதற்காக வர்த்தக விளம்பரமொன்றை உருவாக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள். அதற்காக பொருத்தமான ஊடகங் களைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்துங்கள்.

- இதனைத் தனியாகவோ குழுவாகவோ செய்யும் ஒப்படையாக வழங்கி ஆக்கியவற்றை முன் வைப்பதற்கும் அதன் மூலம் வெளியிடப்படும் கருத்துக்களில் கவனஞ் செலுத்து வதற்கும் மாணவருக்கு வாய்ப்பளியுங்கள்.

- எளிமையான ஒரு கருப்பொருளில் சுவரொட்டிச் சித்திரமொன்றை ஆக்க வழிப்படுத் துங்கள். அவற்றைப் பொருத்தமான இடங்களில் காட்சிப்படுத்த வாய்ப்பளியுங்கள்.

## செயற்பாடு 6

- நாளாந்த வாழ்க்கையுடன் நெருக்கமாகத் தொடர்புடைய தகவல்களைக் காட்டுவதற் காக, குறியீட்டுச் சைகைகள் பயன்படுத்தப்படுவதைக்காண முடிகிறது. அவை பற்றிய கலந்துரையாடலுக்கு முன்னர் பின்வரும் செயற்பாட்டில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  - பொலிஸ் அதிகாரிகள் பயன்படுத்தும் சைகைகள்
  - நாம் நாளாந்தம் பயன்படுத்தும் பல்வேறு சைகைகள்/குறியீடுகள்
  - வானிலை தொடர்பான குறியீடுகள் / சமிக்ஞை

  (தமிழ்மொழி ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் தரப்பட்டுள்ள குறியீடுகளைக் கவனத்திற் கொள்ளுங்கள்.)

- தந்தி, தொலைநகல் (ஃபக்ஸ்), மின் அஞ்சல் (ஈ-மெயில்), சர்வதே வலையத்தளங்கள் (websites) போன்ற தகவல் பரிமாற்றமுறைகளைத் தேடிப்பார்ப்பதற்கும் அனுபவங் களைக் கலந்துரையாடுவதற்கும் வாய்ப்பளியுங்கள்.

- அன்றாட வாழ்வில் எமக்குப் பயன்படும் சைகைகள், குறியீடுகள் எவையென நோக்க மாணவரை வழிப்படுத்துங்கள். (பொது இடங்களை இனங்காண்பதற்காக வீதியோரங்களில் குறியீட்டுப் பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன.)

  ***எடுத்துக்காட்டு:***

  பண்டைப் பெருமைமிக்க இடங்கள், வைத்தியசாலை, உண்டிச்சாலை, நீதிமன்றம், பாடசாலை, பேருந்துத் தரிப்பிடம்

- இது தொடர்பான தகவல்களை சேகரிக்குமாறு மாணவருக்கு அறிவுறுத்துங்கள்.

- சுவர்ப்பத்திரிகையொன்றுக்குப் பொருத்தமானவாறு அத்தகவல்களைக் அட்டவணைப் படுத்தி காட்சிப்படுத்துமாறு வழிப்படுத்துங்கள்.

- உணவுப்பொதி மேலுறைகள், ஔடதப்பொதி மேலுறைகள், அவை தொடர்பான விளம்பரங்கள், வானொலிக்கருவி, தொலைக்காட்சிக் கருவி போன்றவற்றைக் கொள் வனவு செய்யும்போது அவற்றுடன் வழங்கப்படும் அறிவுறுத்தல் பத்திரங்கள் போன்ற வற்றை இயன்ற அளவுக்குச் சேகரிக்க மாணவரை வழிப்படுத்துங்கள்.

- மேற்படி வெவ்வேறு வகை விவரப் பத்திரங்களிலும் பொதி உறைகளிலும் பெயர்ச் சுட்டிகளிலும் அச்சிடப்பட்டுள்ள விவரங்களில் வலியுறுத்தப்பட்டுள்ள விடயங்களுள் பெரும்பாலானவை எந்த வகையைச் சேர்ந்தவை எனத் தேடியறிய மாணவரை வழிப்படுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  - மருந்து வகைகளைப் பாதுகாக்க வேண்டிய விதம்
  - எந்தெந்த நோய்க்காகப் பயன்படுத்தலாம் என்பது
  - அதனைப் பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய பக்கவிளைவுகள்.
    (பெரும்பாலும் இந்த விபரங்கள் ஆங்கிலத்திலேயே அச்சிடப்பட்டிருக்கும் சுதேச வைத்திய மருந்துப்பொருள்களில் பெரும்பாலும் தமிழ், சிங்கள மொழிகளிலும் இவ்விவரங்கள் அச்சிடப்பட்டிருக்கும்)

- பாடசாலையில்/வீட்டில் பாதுகாப்புக் குறைவான இடங்களை இனங்காண்பதற்காக களப்பயணமொன்றில் மாணவரை ஈடுபடுத்துங்கள். அவ்வாறான இடங்களில் விபத்துக்கள் ஏற்பட்டிருக்கவும் இடமுண்டு. அது குறித்து அயலவர் அறிந்திருக்கவும் கூடும். பாதுகாப்புக் குறித்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை விபரிக்கும் அறிவுறுத்தல் பத்திரமொன்றைத் தயாரிக்க வழிப்படுத்துங்கள். பின்னர் அதனை சைகைகள், குறியீடுகளைக்கொண்ட ஓர் ஆக்கமாக மாற்றியமைக்க வழிப்படுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  பாதையில் குன்றுங் குழியுமான இடங்கள், பாதையோரத்தில் உள்ள ஆழமான இடங்கள், மூடிவிடப்படாத பழைய கிணறுகள், ஆழமான குட்டைகள்.

- அன்றாடம் பயன்படுத்தும் இலகுவான உபகரணங்களைப் பயன்படுத்தும் முறை தொடர்பான அறிவுறுத்தல் பத்திரங்களைத் தயாரிப்பதற்கு மாணவர்களை வழிப்படுத் துங்கள். அவ்வாறான அறிவுறத்தல் பத்திரங்களில் உள்ள நன்மைகள் தொடர்பாக மாணவர்களின் கருத்துக்களை கேட்டறியுங்கள்.

- ஒலிச் சைகைகள் மூலமும் சில சந்தர்ப்பங்கள், நிகழ்வுகள் போன்றவை குறிக்கப்படும் என்பதையும் விளக்குங்கள்.

***எடுத்துக்காட்டு:***

- சைக்கிள் மணி - தபால் விநியோகிப்பவரின் வருகையைக் குறிக்கும்
- நோயாளர் வண்டியின் ஊதல் ஒலியும், அதன் அர்த்தமும்
- அவசர நிலைமைகளின்போது ஒலிக்கப்படும் வேறு ஒலிச் சைகைகள்

▣ ஒலிகளால் குறிக்கப்படும் நிகழ்வுகள் தொடர்பாக மாணவரின் கருத்துக்களை வினவுங்கள்.

***எடுத்துக்காட்டு:***

பாதையிலிருந்து விலகி நிற்கவும், ஊர்வலம் வருகிறது, பஸ் வண்டியை நிறுத்தவும். செய்தி அறிக்கையின் தொடக்கம், வேலைத்தலங்கள் சிலவற்றில் வெளியிடப்படும் ஒலிகள், கோயில் மணி ஓசை, பெருந்தோட்டத்தில் ஊதப்படும் ஊதி (சைரன்)

▣ வகுப்பில் பல்வேறு செயல்களுக்காக சில ஒலிச் சைகைகளை உருவாக்கிக்கொள்ளுவதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு:***

- மூன்றாம் குழுவின் நான்காவது மாணவன்/மாணவி ஆசிரியரின் மேசை அருகே வருக. இதற்காக ஒரு ஒலிச்சைகையை உருவாக்குங்கள்.
- மாணவ, மாணவிகள் எல்லோரும் எழும்புங்கள்.
- மாணவ மாணவிகள் எல்லோரும் வகுப்புக்கு வெளியே செல்லுங்கள்.
- முதலாம், இரண்டாம் குழு மாணவர்கள் மாத்திரம் உள்ளே வாருங்கள்.

▣ புத்தளிப்பு இசைக்கருவிகளைப் பயன்படுத்தி செய்தி அறிக்கையின் ஆரம்பத்திலும் இறுதியில் ஒலிப்பதற்குப் பொருத்தமான ஓர் வாத்திய இசைப் பகுதியை உருவாக்க வழிப்படுத்துங்கள். பின்னர் அந்த வாத்திய இசையை இசைத்து, செய்தி வாசிக்க இடமளியுங்கள்.

## செயற்பாடு 7

▣ செய்திகளைப் பரப்புவதற்காகக் கையாளப்படும் வெவ்வேறு முறைகள் பற்றி ஓர் ஆய்வு நடத்துமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு:***

பதாகைகள், சுவரொட்டிகள், அறிவித்தல்கள் போன்றவற்றைத் தேடிப்பெற முடியா விட்டால் அவ்வாறானவை தாராளமாகக் காணப்படும் ஓர் இடத்துக்கு மாணவரை அழைத்துச் செல்லுங்கள். அவற்றில் மாணவரின் கவனத்தைத் திருப்புங்கள்.

- பரப்பப்படும் செய்திகள் யாவை?
- இந்த செய்திகளில் எந்தெந்த விடயங்களுக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டுள்ளது?
- விரிவாக எழுதுவதானால் மேலும் எந்தெந்த விவரங்களை உள்ளடக்க வேண்டும்?
- மிகப் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ள தகவல்கள் எவை?
- சின்னஞ்சிறிய எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ள தகவல்கள் எவை?
- எத்தனை நிறங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன?
- மிகத்தொலைவில் இருந்து பார்க்கும்போது தெளிவாகத் தெரியும் நிறம் எது/ நிறங்கள் எவை?
- தூரத்தே இருந்து பார்க்கும்போது தெளிவாகத் தெரியாத நிறம் எது/ நிறங்கள் எவை?
- நீங்கள் விரும்பும் நிறங்கள் எவை?
- அவற்றில் உள்ள நிறங்களுள் மக்கள் பெரிதும் விரும்பும் நிறம் எது/ நிறங்கள் எவை?
- அவர்கள் பயன்படுத்தும் சித்திரங்களில் /படங்களில் விசேட இயல்புகள் உள்ளனவா?

- செய்திகளைப் பரப்புவதற்காக எடுக்கும் முயற்சிகளின்போது சூழலுக்கு ஏற்படும் தீங்குகள், வளங்கள் வீண் விரயமாதல் ஆகியன குறித்து மாணவரின் கவனத்தைத் திருப்புங்கள். அதற்கமைய அவதானித்து, பெறும் தகவல்களைப் பொருத்தமானவாறு அட்டவணைப்படுத்தி, அவை பற்றி உரையாட இடமளியுங்கள். யாதேனும் முடிவுக்கு வரமுடியுமா என முயற்சியுங்கள்.

- மனிதர் வெளியிடும் ஒலிகளை/குரல்களை அவ்வாறு வகைப்படுத்த முடியுமா எனக் கண்டறிவதற்காக, மாணவர்களுக்கு வாய்ப்பளியுங்கள்.

- மனதில் தோன்றும் கவலையையும் மகிழ்ச்சியையும் வெளிக்காட்டுவதற்காக நாம் பயன்படுத்தும் சொற்களை இனங்காண்பதற்கான கலந்துரையாடலொன்றை நடத்துங்கள். பயிற்சியில் ஈடுபட்டு மிக நன்றாகக் கருத்து வெளிப்படுமாறு உச்சரிக்கக்கூடியோர் யார் என்பதை இனங்காண்பதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பளியுங்கள்.

- இது தொடர்பாக குறுநாடகங்களை எழுதி நடிப்பதற்கு மாணவர் குழுக்களுக்கு இடமளியுங்கள். இதனைச் செய்வதற்கு அவர்களுக்கு உதவி தேவைப்படலாம். நாடகத்துறையில் அனுபவமுடையோர் உள்ளனராயின் அவர்களது உதவியை மாணவர்களுக்குப் பெற்றுக்கொடுங்கள்.

- மாணவர் உருவாக்கிய நாடகங்களுக்காக, புத்தளிப்புக் கருவிகளைக் கொண்டு ஒலி/இசை சேர்க்குமாறு மாணவரை வழியுறுத்துங்கள்.

- கவலை, மகிழ்ச்சி, அச்சம் போன்றவற்றை ஏற்படுத்தத்தக்க பாடல்களும் எமது இலக்கியத்தில் உள்ளன. இரங்கற்பா (சோகப்பாடல்) போன்ற பாடல்களைச் செவிமடுக்கச் சந்தர்ப்பம் வழங்கு முடியுமாயின் மிக நன்று.

- மலரும் மாலையும், ஆசியஜோதி என்பவற்றில் இருந்து பெற்றுக்கொண்ட இலகுவான சோகப்பாடல்கள், ஒப்பாரிப்பாடல்கள் என்பவற்றை நன்கு பாடக்கூடியவர்களின் துணைகொண்டு பாடிக்காட்டுங்கள்.

# 14.0 எமது உணவு



**நாட்டின் முன்னேற்றமானது ஆரோக்கியமான, திடகாத்திர மான, தேசியப் பணியில் விளைதிறனுடையவாறு பங்களிக் கக்கூடிய பிரசைகளிலேயே தங்கி உள்ளது. இதற்காக உணவு உற்பத்தியில் பங்களிப்புச் செய்தல், உணவு தொடர்பான நல்ல மனப்பாங்குகள் உருவாதல், போசாக் குத் தரமிக்க நிறையுணவை வீண்விரயஞ் செய்யாது நுகர்தல் போன்ற பண்புகள் இன்றியமையாதவை. அவ்வாறான பண்புகளைக் கொண்ட வர்களுக்கு அடித்தளமாக அமையும் தேர்ச்சிகளை விருத்தி செய்யும் நோக்குட னேயே இந்த கருப்பொருள் முன்வைக்கப்படுகின்றது.**

## தேர்ச்சிகள்

- தமது பங்களிப்புடன் உற்பத்தி செய்யும் உணவுப் பொருளொன்றை வேளை யுணவுடன் சேர்த்துக்கொள்வதற்காகச் செயற்படுவார்.
- ஆரோக்கியமான வாழ்வுக்காக நிறைவான வேளையுணவொன்றின் அவசியத்தை விளங்கிச் செயற்படுவார்.
- வயதுக்குப் பொருத்தமானவாறு உயரத்தையும் நிறையையும் பேணி வருவார்.
- சரியான ஒழுங்குகளை அனுசரித்து ஆக்கபூர்வமாக உணவு பரிமாறுவார்.
- உணவு வீண்விரயத்தைத் தவிர்ப்பதற்காக கவனமாகச் செயற்படுவார்.
- போசாக்குத் தரம் பேணப்படும் வகையில் உணவொன்றைத் தயாரிப்பார்.
- உடல், உளச் சமநிலைக்குரிய ஆக்கபூர்வமான விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- உணவினது போசாக்குத் தரத்தின் முக்கியத்துவத்தைக் கூறும் ஆடல் - பாடல்களில் ஈடுபடுவார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

## செயற்பாடு 1

- வீட்டுத்தோட்டம் எனும் கருப்பொருளின் கீழ் விருத்தி செய்த, பாடசாலை வீட்டுத் தோட்டத்திலிருந்து கிடைக்கும் விளைபொருள்களை மாணவர்க்கு வழங்குங்கள். அல்லது தமது வீட்டுத் தோட்டத்தில் கிடைக்கும் விளைபொருளொன்றைப் பயன்படுத்த வழிப்படுத்துங்கள். தமது பங்களிப்புடன் உற்பத்தி செய்த உணவுப் பயிர் விளைபொரு ளொன்றைப் பெற்று அதனைப் பகலுணவுக்காகத் தயாரித்துக்கொள்வதற்கான ஒரு குறித்த திகதியை ஒதுக்கிக்கொள்ளுங்கள். அத்தினததுக்குரிய பகலுணவில் உண்மை யில் தமது பங்களிப்புடன் உற்பத்தி செய்த ஓர் உணவுப் பொருளேனும் அடங்கியிருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துங்கள். இது தொடர்பாக, கருப்பொருளை நடை முறைப்படுத்தத் தொடங்க முன்னர், பெற்றோர் சந்திப்பொன்றின் போது வலியுறுத்துங்கள்.

- உணவு உண்ண முன்னர், பகலுணவுக்காகத் தயாரித்துக்கொண்டுவந்துள்ள தமது பங்களிப்புடன் உற்பத்தி செய்த உணவு யாது என வகுப்பில் கூறுவதற்கு ஒவ்வொரு மாணவனுக்கும் மாணவிக்கும் சந்தர்ப்பமளியுங்கள். பகலுணவு உண்ணும் சந்தர்ப்பத் தில் உணவுப் பாத்திரங்களைத் திறப்பதற்கும் அதனை நன்கு அவதானிப்பதற்கும் மாணவரை வழிப்படுத்துங்கள்.

- ஆசிரியர் பின்வரும் வாக்கியத்தைக்கூறும் போது, அதனைக்கேட்டு, தமது உணவைப் பார்த்து அதனைக் கூறுமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.

- ''இந்த உணவில் நான் உற்பத்தி செய்த ஒரு பொருள் அடங்கியுள்ளது குறித்து நான் பெருமைப்படுகிறேன். உணவாக உட்கொள்ளக்கூடிய ஒரு பொருளை உற்பத்தி செய்யக்கூடிய ஆற்றல் எனக்கு இருப்பது குறித்தும் மகிழ்ச்சியடைகிறேன்.''
இது தொடர்பாக மீண்டும் எண்ணிப்பார்த்த பின்னர், உணவு உட்கொள்ள ஆரம்பிக்கு மாறு வழிப்படுத்துங்கள்.

- பகலுணவு உண்ட பின்னர், மாணவரைச் சிறு சிறு குழுக்களாகப் பிரித்து தாம் உற்பத்தி செய்த ஒரு பொருளை உணவாக உட்கொள்வதன் முக்கியத்துவம் பற்றி உரையாடச் சந்தர்ப்பமளியுங்கள்.

- சிறு குழுக்களின் கருத்துக்களையும் பயன்படுத்தி, பொதுக் கலந்துரையாடலொன்றின் போது தாம் உற்பத்தி செய்த பொருளொன்றினை உணவாகக் உட்கொள்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள். தாம் உற்பத்தி செய்த உணவுப் பொருளை தாம் பயன்படுத்துவதோடு மட்டுமன்றி வீட்டில் ஏனையோருக்கும், நண்பர்கள், தோழியர் களுக்கும், அயலவர்களுக்கும் உணவுக்காக வழங்க முடியும் என்பதையும் வலியுறுத் துங்கள்.

## செயற்பாடு 2

- இக்கருப்பொருளை ஆரம்பிக்க முன்னர், பெற்றோர் சந்திப்பு ஒன்றை நடத்தி, நிறையுணவு வேளையொன்று என்பதால் கருதப்படுவது யாது என பெற்றொருக்கு அறிவூட்டம் செய்யுங்கள். செயற்பாடு இடம்பெறும் திகதியை அறிவித்து, அத்தினத்திலே விசேட கவனஞ் செலுத்தி பகலுணவுக்காக நிறையுணவு வேளையொன்றினை அனுப்பி வைப்பது அவசியம் என்பதைப் பெற்றோருக்கு வலியுறுத்துங்கள். பெற்றோருக்கு அறிவூட்டம் செய்வதற்காக பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துங்கள்.
  **நல்ல - வேளையுணவொன்றின் இயல்புகள்:**
  போதுமானதாக இருத்தல்
  நிறைவான போசாக்குப் பெறுமானமுடையதாக இருத்தல்
  பாதுகாப்பான தன்மை
  சுவைத்து உண்ணக்கூடியதாக இருத்தல்
  வேளையுணவில் உணவோடு பானமும் அடங்கியிருத்தல்
  குடும்பத்தில் அனைவருக்கும் போதுமானதாக இருத்தல்

- ஒரு நல்ல வேளையுணவு சகல போசாக்குப் பதார்த்தங்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும் எனவும் அது நிறைவான வேளையுணவு எனவும் உறுதிப்படுத்துங்கள். மேற்குறிப்பிட்ட நல்ல வேளையுணவொன்றின் இயல்புகள் தொடர்பாக மாணவர்களுக்கு முன்கூட்டியே விளக்கமளித்தல் முக்கியமானது.

- நிறைவான வேளையுணவில் காபோவைதரேற்று, புரதம், கொழுப்பு, விற்றமின், உலோக உப்புக்கள்/கனிய உப்புக்கள், நீர் என்பன அடங்கியிருக்கும் என்பதை விளக்குங்கள்.

- உணவின் மூலம் சக்தி கிடைத்தல், வளர்ச்சி, உடலின் இருப்பு, உடலின் பராமரிப்பு என்பன நிகழுகின்றமையை உணவுக்கூறுகளை வகைப்படுத்திக்காட்டி விளக்குங்கள். போசணைப் பதார்த்தங்களையும் அந்தந்தப் போசணைப் பதார்த்தத்தினால் உடலுக் குக் கிடைக்கும் நன்மைகளையும் விளக்குங்கள்.

- மேற்படி வெவ்வேறு போசாக்குப் பதார்த்தங்கள் கிடைக்கும் வழிகளை, பின்வரும் தரவுகளைத் துணையாகக்கொண்டு விளக்குங்கள்.

| **போசாக்குப் பதார்த்தம்** | **பெறக்கூடிய வழிகள்** |
|---|---|
| காபோவைதரேற்று | தானியங்கள், மாப்பொருள் அடங்கிய கிழங்கு வகைகள், பலாக்காய், ஈரப்பலாக்காய் |
| கொழுப்பு | தேங்காய், எண்ணெய், இறைச்சி, கொழுப்பு, மாஜரின், நிலக்கடலை போன்ற வித்து வகைகள், சில மீன் வகைகள் |
| புரதம் | இறைச்சி, மீன், பால், முட்டை போன்ற விலங்கு உணவுகள், சோயா அவரை, கடலை, போஞ்சி போன்ற அவரை வகைகள் |
| இரும்பு | இறைச்சி, மீன், ஈரல், கரும்பச்சை நிற மரக்கறிகள், நிலக்கடலை போன்ற வித்து வகைகள் |
| கல்சியம் | பால், பால் உற்பத்திகள், கருவாடு |
| அயடின் | கடல் மீன், உப்புத் தன்மையான சூழலில் வளரும் தாவரங்கள், கருவாடு |
| விற்றமின் A | ஈரல், முட்டை, பால் உற்பத்திகள், கடும்பச்சை நிறமரக் கறிகளும், மஞ்சள் நிற மரக்கறிகளும் பழ வகைகளும் |
| விற்றமின் B | கடும்பச்சை நிற மரக்கறி வகைகள், தானிய வகைகள், இறைச்சி, மீன், முட்டை |
| விற்றமின் C | பழவகைகள், மரக்கறி வகைகள் பெரும்பாலானவை, குறிப்பாக புளிப்புச் சுவையுடைய பழவகைகள் |
| விற்றமின் D | பால், முட்டை, மீணெண்ணெய் |

- மேற்படி உணவுகளுள் குறைந்த செலவில் பெறக்கூடிய உயரிய போசாக்குத் தரமுடைய உணவுகளைத் தெரிவுசெய்து, அறிவிக்கப்படும் திகதியில் பகலுணவு தயாரித்து அனுப்ப வேண்டும் என்பதை பெற்றோர் சந்திப்பு வட்டத்தின்போது அறி வியுங்கள்.

- செயற்பாட்டுக்கென விசேட கவனஞ் செலுத்தித் தயாரிக்கப்பட்ட நிறையுணவை பகலுணவுக்காகக் கொண்டுவருமாறு மாணவரை வழிப்படுத்துங்கள். அவ்வாறு கொண்டுவந்த பகலுணவை உண்ட பின்னர், அந்த உணவில் அடங்கியிருந்த உணவுப் பொருள்களைப் பட்டியற்படுத்த சந்தர்ப்பமளியுங்கள்.

- பகல் உணவு உண்ட பின்னர், கலந்துரையாடி சக்தி தரும் உணவு, வளர்ச்சி உணவு, பாதுகாப்புத் தரும் உணவு என்பன தொடர்பாக மாணவரது கவனத்தைத் திருப்புங்கள்.

- நாளாந்த வேலைகளுக்குத் தேவையான சக்தியானது, சக்தி தரும் உணவுகள் மூலமும் வளர்ச்சிக்குத் தேவையானவை வளர்ச்சி உணவுகள் மூலமும் நோய்களிலிருந்து தவிர்த்திருப்பதற்குத் தேவையானவை பாதுகாப்பு உணவுகள் மூலமும் கிடைக்கின்றன என்பதை வலியுறுத்துங்கள்.

- பொருத்தமானவாறு சிறு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொருவரதும் பகலுணவில் அடங்கியிருந்த உணவுகள் அடங்கிய பட்டியலைப் பயன்படுத்தி பின்வருமாறு அட்டவணையைப் பூர்த்திசெய்ய வழிகாட்டுங்கள்.

| சக்தி தரும் உணவு | வளர்ச்சி உணவு | பாதுகாப்பு உணவு |
|---|---|---|
| ***எடுத்துக்காட்டு:***<br>சோறு | ***எடுத்துக்காட்டு:***<br>பாசிப்பயறு<br>முட்டை | ***எடுத்துக்காட்டு:***<br>கரட்<br>பசளிக்கீரை |

- ஒவ்வொரு குழுவுக்கும் தாம் பூர்த்திசெய்த அட்டவணையைப் பயன்படுத்தி தாம் உணவு உட்கொள்ளும்போது நிறையுணவு உட்கொள்ளப்படுகின்றதா எனக் கலந்துரையாட வழிப்படுத்துங்கள். விருப்பு வெறுப்புகள், பல்வேறு விளம்பரங்கள், பழக்கங்கள் ஆகியன காரணமாக பெரும்பாலான வேளை உணவுகள், சக்திதரும் உணவு, வளர்ச்சி தரும் உணவு, பாதுகாப்பு உணவு ஆகிய எல்லாவற்றையும் உள்ளடக்கிய நிறையுணவாக அமைவதில்லை என்பதை வலியுறுத்துங்கள்.

- ஒவ்வொருவரது உணவுத் தேவை வேறுபடும் விதத்தைக் கலந்துரையாடுங்கள். எடுத்துக்காட்டு: வயது, தொழில், ஆரோக்கியநிலை போன்றவற்றின்படி, அதன்படி அந்த உணவில் பாதுகாப்புத் தரும் உணவு, வளர்ச்சி உணவு, சக்தி தரும் உணவு ஆகியன கூடிக்குறையத்தக்க விதம் பற்றிக் கவனஞ் செலுத்தி உரையாடுங்கள். நிறையுணவு உண்ணுதல் தொடர்பான நல்ல மனப்பாங்குகள் உருவாகும் வகையில், நிறையுணவு வேளையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி செயற்பாட்டை நிறைவு செய்யுங்கள்.

- தாம் விரும்பிய ஓர் ஊடகத்தைப் பயன்படுத்தி, மரக்கறிகள், பழவகைகளைக் காட்டும் சித்திரமொன்றினை ஆக்குமாறு மாணவர் குழுக்களை வழிப்படுத்துங்கள். ஆக்கங்களைக் காட்சிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 3

- மாணவர்களின் நிறையை அளப்பதற்குப் பொருத்தமான தாராசொன்றைப் பெற்றுக் கொள்ளுங்கள். தேவையேற்படுமிடத்து குடும்ப சுகாதாரத்தாதி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் போன்றோரின் அல்லது பெற்றாரின் உதவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

- மாணவர்கள் ஒவ்வொருவரினதும் நிறை, உயரம் என்பவற்றை அளந்து குறித்துக் கொள்ளுங்கள். தத்தமது நிறையையும் உயரத்தையும் குறித்து அட்டை ஒன்றினைத் தயாரிக்கவும் அதனை அணிந்துகொள்ளவும் வழிப்படுத்துங்கள்.

- குடும்ப சுகாதாரத்தாதி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் போன்றோரிடம் பெற்றுக் கொண்ட சரியான உயரம், நிறை, வயது தொடர்பான அண்மைக்காலத்தில் வெளியிடப் பட்ட அட்டவணையொன்றினை வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.

- தனது உயரம், நிறை ஆகியன குறிக்கப்பட்ட அட்டையை வகுப்பில் காட்சிப்படுத்தியுள்ள உயரம், நிறை, வயது அட்டவணையுடன் ஒப்பிட்டு தமது நிலையைக் கண்டறிந்து கொள்வதற்கு வழிப்படுத்துங்கள்.

- அதற்கேற்ப நிறை கூடிய, நிறை குறைந்த, சாதாரண நிறை போன்ற நிலைமைகளில் தாம் உள்ளடங்கும் நிலை யாது என்பதை அறிந்துகொள்வதற்கு வழிப்படுத்துங்கள்.


- நிறை கூடிய, நிறை குறைந்த, சாதாரண நிறை போன்ற நிலைமைகளுக்கேற்ப சிறு சிறு குழுக்களாகப் பிரித்து தாம் உரிய நிலைமைக்கு வருவதற்கும் யாது செய்ய வேண்டும் என்பது தொடர்பாகக் கலந்துரையாட வழிப்படுத்துங்கள்.

- சமநிலை உணவினை உட்கொள்ளல், உடற்பயிற்சி செய்தல், மனதை ஒருநிலைப் படுத்தல் போன்றவையூடாக ஆரோக்கியமான வாழ்வின் முக்கியத்துவத்தை வலியுறுத் துங்கள்.

## செயற்பாடு 4

- சாப்பாட்டு மேசை ஒன்றில் விரிப்பதற்கான அலங்கார விரிப்பொன்றைத் தைப்பதற்கு அல்லது பாய்ப்பின்னல் கோலங்களைப் பின்பற்றிப் பின்னுவதற்கு அல்லது நெய்வதற்கு அறிவுறுத்தல் வழங்குங்கள்.
  (60சென்றி மீற்றர் நீளமும் அகலமும் இருக்கக்கூடியதாகச் சிறிய புடைவைத்துண்டு களைப் பயன்படுத்தி மேசை விரிப்பொன்றைத் தைத்துக்கொள்ள அல்லது கடதாசிக் கீலங்களையோ பனையோலை, தென்னோலை, பன்புல் போன்றவற்றைப் பயன்படுத்திப் பின்னிக்கொள்ள உதவியளியுங்கள்.)

  ***எடுத்துக்காட்டு:***



- தைத்த அல்லது பின்னிய மேசை விரிப்பின் நாற்புறங்களையும் அழகாக நிறைவு செய்ய வழிப்படுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  அதற்கென பட்டியொன்றை நான்கு புறங்களிலும் வைத்து மடித்துத்தைத்தல் அல்லது வேறு அலங்காரத் தையல் முறையொன்றைப் பின்பற்றுதல்

- அலங்காரமாக பின்னப்பட்ட புடைவைக் கீலமொன்றை விரிப்பில் சுற்றிவர தைத்துக் கொள்வதனூடாகவும் அதனை அழகுபடுத்திக்கொள்ளலாம். உணவைப் பரிமாறும் போதும் நாம் பின்பற்ற வேண்டிய பண்புகள்/ பழக்கவழக்கங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள். அக்கலந்துரையாடலின்போது பின்வரும் விடயங்களை எடுத்துக் காட்டுங்கள்.

**உணவு வகைகளைப் பரிமாறும்போது:**

விருந்தினரொருவருக்கு உணவு வகைகளை பரிமாறும்போது பரிமாறும் உணவு சிற்றுண்டியாக இருப்பின் அதற்குப் பொருத்தமான ஒரு தட்டில் வைத்து பரிமாற முடியும். ஆனால் பிரதான உணவு வேளையொன்றில் உணவை பரிமாறும்போது மேசைமீது வைத்து பரிமாற முடியும் என்பதையும் எடுத்துக்கூறுங்கள்.

- உணவு வகைகளை பரிமாறுவதற்காகத் தயார்ப்படுத்தும்போது, கவர்ச்சியாகவும் ஒழுங்காகவும் இருப்பது அவசியமாகும்.

*எடுத்துக்காட்டு:*
- உணவு வகைகளை ஒழுங்காக நேர்த்தியாக வெட்டுதல்
- உறையிடல்
  - நிறப்பொருத்தப்பாடு
  - பயன்படுத்தும் உபகரணங்கள்
  - உபகரணங்களின் தூய்மை
- உணவு வகைகளுக்கு முறையாக உறையிடப்பட்டு இருத்தல்
- உணவு வகைகளுக்குப் பொருத்தமான பாத்திரங்களைத் தெரிவுசெய்தல்

போன்ற விடயங்களில் கவனம் செலுத்தல் வேண்டும் என்பதை எடுத்துக்கூறுங்கள்.

- உணவு வகை பரிமாறும் போது கை துடை துண்டை வழங்குதல் முக்கியம் என்பதையும் எடுத்துக்கூறுங்கள்.

- மேசை மீது உணவு பரிமாறும்போது, ஒழுங்காகவும் அழகாகவும் தயார்ப்படுத்துதல் தொடர்பாகக் கவனஞ்செலுத்துவது அவசியமாகும் என்பதைக் குறிப்பிடுங்கள். குறிப்பாக உணவு உட்கொள்ள முன்னரும் பின்னரும் கைகளைக் கழுவிக்கொள்வதற்காக நீர்ப்பாத்திரம் வைப்பதன் முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டுங்கள்.

## செயற்பாடு 5

- தனது பிரதேசத்தில் இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய, வெயிலில் காய வைத்துப் பேணப்பட்ட உணவுப் பொருளை வகுப்பிற்கு கொண்டு வாருங்கள்.

***எடுத்துக்காட்டு:*** பலாக்காய், ஈரப்பலாக்காய், எலுமிச்சம்பழம், ஒடியல், பினாட்டு, மீன், தானியம்

- அதனை மாணவர்களுக்குக் காட்டி இம்முறையிலே பேணிவைக்கக்கூடிய வேறு பொருட்கள் யாவை என்பதனை வினவிக் கலந்துரையாடுங்கள். மாணவர்கள் கூறும் பொருட்களின் பெயர்களை கரும்பலகையில் அட்டவணைப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு:*** பலாக்காய்ச்சுளை, ஈரப்பலாக்காய், பனங்கிழங்கு, எலுமிச்சம்பழம், பனம்பழம் போன்றவை.

- அட்டவணைப்படுத்திய பொருட்களைப் பேணும் முறைகளை மாணவர்களிடம் வினவி அப்பொருள்களுக்கு எதிரே கரும்பலகையில் குறித்துக்கொள்ளுங்கள்.

*எடுத்துக்காட்டு:*

| | |
|---|---|
| பலாச்சுளை | - உலர வைப்பதன் மூலம் |
| ஈரப்பலாக்காய | - உலர வைப்பதன் மூலம் |
| எலுமிச்சம்பழம் | - உப்பு இடுவதன் மூலம் |
| மாங்காய் | - உப்பு இடுவதன் மூலம் |
| பழங்கள் | - பாதுகாப்புப் பதார்த்தங்களுடன் பேணிகளில் அடைத்தல் |

- தமது பிரதேசத்தில் மலிவாகக் காணப்படும் உணவுப்பொருள் ஒன்றை வகுப்பிற்குக் கொண்டு வரும்படி மாணவர்களுக்குக் கூறுங்கள்.

- உணவு வீண்விரயத்தைத் தவிர்ப்பதற்காக அப்பொருட்களைப்பேணி வைக்கக்கூடிய ஒரு முறையை அல்லது இரண்டு முறைகளைக் கையாண்டு பார்ப்பதற்குச் சிறு குழுக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

***எடுத்துக்காட்டு:***

| பொருள் | பேணும் முறை |
|---|---|
| எலுமிச்சம்பழம் | உப்பிட்டு வைத்தல் |

- உணவு பேணும் முறைகள் ஊடாக அதன் நிறம், நிறை, சுவை போன்ற தன்மைகள் மாறும் விதம் தொடர்பாகப் பெறும் அனுபங்களைக் கொண்டு கருத்துக்கள் வெளியிட வாய்ப்பளியுங்கள்.

- அத்தோடு தமது பிரதேசத்தில் மலிவாகக் காணப்படும் உணவுப்பொருட்கள் வீணா வதைத் தவிர்ப்பதற்கு உணவு பேணும் முறைகள் மூலம் அவற்றைப் பாதுகாக்கலாம் என்பதையும் தமது பொருளாதார நிலையை மேம்படுத்தும் சந்தர்ப்பங்களும் ஏற்படும் என்பதையும் விளங்குங்கள்.

- மாணவர்களுடன் பொதுக் கலந்துரையாடலில் ஈடுபட்டு பின்வரும் விடயங்களை எடுத்துக்கூறுங்கள்.
  - மலிவாகக் காணப்படும் உணவு வகைகள் வீணாவதை தவிர்ப்பதற்கு, உணவு வகை களைப் பேணி வைத்தல் முக்கியமானது.
  - உணவுத் தட்டுப்பாடு எதிர்காலத்தில் அதிகரிக்கக்கூடுமாகையால் உணவு வகைகள் வீணாவதைக் குறைத்துக்கொள்ளும் பொருட்டு நாம் செயல்பட வேண்டும் என்பதை மாணவர்கள் விளங்கிக்கொள்ள இடமளியுங்கள்.
  - உணவு வீணாவதை தவிர்ப்பதற்கும் உணவு வகைகளைப் பேணிப் பாதுகாப்பது சகலரதும் பொறுப்பாகும்.

- உணவு வீணாகுவதைத் தவிர்ப்பதன் முக்கியத்துவத்தை பின்வரும் விடயங்கள் ஊடாக எடுத்துக்காட்டுங்கள்.
  - விரயமாகுவதைத் தவிர்க்கலாம்.
  - அருமையாகக் கிடைக்கும் காலங்களில் பயன்படுத்தலாம்.
  - கொண்டு செல்வது இலகு.
  - சுகாதாரத்துக்கு ஏற்றது.
  - உணவுத் தட்டுப்பாட்டிற்கு ஒரு தீர்வாகும்.
  - பொருளாதாரப் பயன் உண்டு.

- உணவு வகைகள் வீணாவதைக்குறைக்கும் பொருட்டு உணவு வகைகளைப் பேணி வைப்பதற்கு பின்பற்றக்கூடிய பல்வேறு முறைகள் உண்டென்பதை எடுத்துக்கூறுங்கள்.
  - குளிரேற்றியில் வைத்தல் (மரக்கறி)
  - அதி குளிரேற்றியில் வைத்தல் (மீன்)
  - பேணியில் அடைத்தல் (மீன், பிஸ்கட்)
  - சீனி/பாணி இடல் (ஈரப்பலாக்காய்/பலாக்காய்)
  - உப்பு இடல் (எலுமிச்சம்பழம், மாங்காய்)
  - உலர வைத்தல் (பனங்கிழங்கு, பனம்பழம், ஈரப்பலாக்காய்/பலாக்காய்)
  - பொரித்து வைத்தல்
  - மணலில் புதைத்து வைத்தல் (எலுமிச்சை)
  - புகையூட்டுதல் (கருவாடு)

- இவ்வாறான முறைகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கிக்கூறுங்கள்.

- உணவு வீண்விரயத்தைத் தவிர்ப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் ஆக்கபூர்வ மான நாடகமொன்றை முன்வைக்க வழிப்படுத்துங்கள். முகமூடி, பொம்மலாட்ட வேடமுகம் போன்றவற்றைத் தயாரிக்க வாய்ப்பளித்து அவற்றை அணிந்து, நடித்துக் காட்ட வழிப்படுத்துங்கள். நடிக்கும் நாடகத்திற்குப் பொருத்தமான தலைப்பொன்றை இடுவதற்குத் துணை புரியுங்கள்.

- பிரதேசத்தில் அதிகமாகக் காணப்படும் உணவு வகைகள் விணாவதைத் தவிர்ப்பதற் காக அல்லது பேணி வைக்கப்பட்ட ஓர் உணவுப் பொருளுக்கான பொருத்தமான விளம்பரமொன்றினை அல்லது சுவரொட்டியொன்றினை வரைய வழிப்படுத்துங்கள். அல்லது பெயர்ச்சுட்டி (Label) ஒன்றினைத் தயாரிக்க வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 6

- போசணைக்கூறுகளில் இழப்பு ஏற்படாதவாறு ஏதாவதொரு உணவை அல்லது பானத்தை வகுப்பறையில் தயாரித்து அனுபவம் பெறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***
  - நெல்லி, தோடம்பழம், எலுமிச்சம்பழப்பானம்
  - பச்சை மரக்கறிகள் கொண்டு தயாரிக்கும் சலாதுக் கலவை.
  - இலைக்கஞ்சி

- பாடசாலையில் இலைக்கஞ்சி தயாரிக்க திட்டமிடுவதாயின்;
  - இலைகளை நன்கு சுத்தம் செய்துகொள்ளல்
  - போசணைத்தரமுடைய அரிசி வகையொன்றினை தெரிவுசெய்தல்
  - சுத்தம் செய்த இலைகளை நன்கு இடித்தல்
  - கஞ்சியை அதிக நேரம் வேக வைக்காது பச்சை நிறம் மாறாத நிலையில் கஞ்சைத் தயாரித்துக்கொள்ளல்.

  போன்ற விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- போசணைக்கூறுகள் பாதுகாக்கப்படும் வகையில் உணவு உட்கொள்வதன் முக்கியத் துவத்தினைக் கலந்துரையாடுங்கள்.
  அக்கலந்துரையாடலின்போது,
  - உணவு நச்சாகும் முறைகளும் அவ்வாறான உணவுகளை உண்பதைத் தவிர்த்துக்கொள்ளலும்
  - கண்ட கண்ட இடங்களில் முறையின்றி உணவை வைப்பதனால் உணவு மாசடை யும் விதமும், அவ்வாறான உணவு வகைகளை உட்கொள்ளாது தவிர்த்தலும்
  - பல்வேறு இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் ஊடாக பரப்பப்படும் விளம்பரங்கள் காரணமாக, போசாக்குத் தரம் அற்ற உணவுகளைக் கண்டு தரமானவை என நம்பி ஏமாறாதிருத்தல்.

- இவ்வாறான விடயங்களை எடுத்துக்கூறி போசணைக்கூறுகள் பாதுகாக்கப்பட்டுள்ள உணவு வகைகளை உட்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள்.

## செயற்பாடு 7

- போசணைத் தரத்தில்இழப்பு ஏற்படாத விதத்தில் உணவு சமைக்கும் முறைகள் தொடர்பான தகவல்களை மூத்தோரிடமிருந்து கேட்டறிந்து வருவதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.

- அவ்வாறு சேகரித்து வகுப்பிற்குக் கொண்டு வந்த தகவல்களைத் துணையாகக் கொண்டு கலந்துரையாடுங்கள். பின்வரும் விடயங்களில் கவனஞ் செலுத்துங்கள்.
**போசணைத்தன்மை பாதுகாக்கப்படும் வகையில் உணவு சமைக்கும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்.**
  - பச்சையாக உட்கொள்ளக்கூடிய உணவு வகைகளாகிய, மரக்கறிகள், பழங்கள், இலை வகைகள், பானங்களை அவிக்கும்போதும், வெட்டிக்கழுவும்போதும் போசணைத் தன்மைக்கு என்ன நிகழும் என்பது.
  - பச்சையாக உண்ணும் சகலவற்றையும் நன்கு கழுவிக்கொள்ள வேண்டும் என்பது.
  - உணவுகள் மற்றும் பான வகைகளைப் பச்சையாகச் சாப்பிடும்போது கிடைக்கும் நன்மைகள்
  - உணவை நுகர்வதில் விருப்பை ஏற்படுத்தல்

- கலந்துரையாடப்படும் விடயங்கள் ஊடே பின்வருமாறு அட்டவணை ஒன்றைக் கரும்பலகையில் கட்டியெழுப்புங்கள்.
***எடுத்துக்காட்டு:***

| | **உணவுப்பொருட்கள்** | **சமைக்கும் முறை அல்லது பயன்படுத்தும் முறை** | **கிடைக்கும் நன்மைகள்** |
|---|---|---|---|
| 1. | மரக்கறி வகைகள் | | |
| 2. | பான வகைகள் | | |
| 3. | பழ வகைகள் | | |

- போசாக்கான வேளை உணவு பசியைப் போக்குவதற்கு மட்டுமல்லாது எமது உடலின் வளர்ச்சிக்கும் தேவையான சக்தியைப் பெறுவதற்கும் அவசியம் என்பதை விளக்குங்கள்.

- அவிக்கும்போதும், வெட்டிக்கழுவும் போதும், உணவுப் பொருட்களின் போசணைத் தன்மைக்கு என்ன நடக்கும் எனக் கண்டறிவதற்கு வகுப்பில் பின்வரும் செயற்பாடு களில் ஈடுபட மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
***எடுத்துக்காட்டு:***
  - பீற்றூட் கிழங்கை வெட்டாது அவித்தலும், வெட்டி அவித்தலும்
  - கீரை வகையொன்றை வெட்டாது கழுவுதலும், வெட்டிக் கழுவுதலுல்
  - வெண்டிக்காயை வெட்டாது அவித்தலும், வெட்டி அவித்தலும்

- சிறு குழுக்களை இலகுவான கையாண்டு பார்த்தல்களில் ஈடுபடுத்தி, கண்டறிந்த தகவல்களை அறிக்கைப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- சில உணவுப்பொருள்களைக் கூடுதலாகக் கழுவுவதாலும் மூலம் சில உணவுப் பொருட்கள் அவிக்கப்படுவதாலும் போசாக்குப் பதார்த்தங்கள் கழுவிச்செல்லப்படும் என்பதையும், போசாக்குப் பதார்த்தங்கள் அழியும் என்பதையும் விளக்குங்கள்.

- இது தொடர்பில் பொருத்தமான வளவாளர் ஒருவரை வகுப்பிற்கு அழைத்து மேற்கூறிய விடயங்கள் தொடர்பான தகவல்களைப் பெறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- போசாக்குத்தரம் பாதுகாக்கப்படும் வகையில் உணவைத் தயாரிப்பதன் முக்கியத்து வத்தை வலியுறுத்துங்கள்.

## செயற்பாடு 8

- உணவு, பானங்கள் தொடர்பான பாடல்களை தாள வாத்தியத்தோடு பாடி மகிழ்வதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்குங்கள். புத்தளிப்புக் கருவிகளைப் பயன்படுத்தலாம்.
***எடுத்துக்காட்டு:***

### கீரைகளை உண்போம்

கீரை வகையைத் தினம் உணவில்
சீராயச் சேர்த்து நாமுண்போம்
விரும்பி நாமும் கீரையுண்டால்
இரும்புச் சத்து கிடைத்திடுமே

பொன்னாங்காணி சிறுகீரை
புத்தம் புதிதாய் முருங்கையிலை
ஞானக் கீரையாம் தூதுவளை
ஞாபக சக்திக்கு வல்லாரை

காயத்தை ஆற்றும் மாம்பாஞ்சான்
தேகம் குளிரப் பசளிவகை
அகத்திக்கீரையும் நோய் போக்கும்
அதிகம் விரும்பி உண்போமே

தினமும் நாமொரு கீரைவகை
உணவில் சேர்ப்பதால் நன்மையுண்டு
மலிவாய்க் கிடைக்கும் கீரைகளால்
பொலிவாயச் சத்துக்கள் பெறலாமே.

***யோகா யோகேந்திரன்***
***நன்றி: ஈழத்துச் சிறுவர் பாடல் களஞ்சியம்***

### உற்பத்தி செய்வோம்

உற்பத்தி செய்வோம் வாரீர் - பயிர்
உற்பத்தி செய்வோம் வாரீர்!

நிலங்களைப் பண்படுத்தி
நற்பயன் நல்கும் நல்ல
விளைபயிர் நாட்டி நாளும்
நீர்பாய்ச்சி களைபிடுங்கி...

உற்பத்தி செய்வோம் வாரீர் - பயிர்
உற்பத்தி செய்வோம் வாரீர்!

இரந்துண்டு வாழும் வாழ்வை
இன்றோடு விட்டொதுக்கி
கரமுண்டு கலப்பை யுண்டு
கடிதெழு! களைவிட்டு...

உற்பத்தி செய்வோம் வாரீர் - பயிர்
உற்பத்தி செய்வோம் வாரீர்!

சுயதேவை மக்கள் தேவை
சுதந்திர உழைப்பால் தேறும்
அயராது நிலத்தை நம்பி
ஆக்கங்கள் பெருக்கி வாழ...

உற்பத்தி செய்வோம் வாரீர் - பயிர்
உற்பத்தி செய்வோம் வாரீர்!

***நன்றி: மணிக்கவிராயர் குருவும் சீடரும்***

- மாணவர்களை நான்கு குழுக்களாக்குங்கள்.

- இரண்டு குழுக்கள் பாடல்களைத் தாளமிட்டுப் பாடவும் ஏனைய இரு குழுக்களும் அதற்கு அபிநயம் காட்டவும் வழிப்படுத்துங்கள்.

- பின்பு, முதலில் பாடியவர்கள் அபிநயம் செய்யவும் அபிநயம் செய்தவர்கள் பாடவும் வழிப்படுத்துங்கள்.

- உணவு வகைகளின் போசாக்குத் தன்மையின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறும் பாடல்களைச் சேகரிக்கவும் ஆக்கவும் வழிப்படுத்துங்கள்.

- அப்பாடல்களைச் சேகரித்து சிறு புத்தகங்கள் தயாரிக்க நெறிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 9

- மாணவர்களை மைதானமொன்றிற்கு அல்லது திறந்த வெளிக்கு அழைத்துச் செல்லுங்கள். வகுப்பு மாணவர்களை நான்கு சம குழுக்களாகப் பிரித்துக்கொள்ளுங்கள்.

- நான்கு குழுக்களையும் சேர்ந்த மாணவர்களுக்குப் பின்வரும் விதத்தில் நிற்குமாறு அறிவுறுத்துங்கள்.

மாணவர் குழுக்கள்


| | | |
|---|---|---|
| x x x x x | | |
| x x x x x | | x ஆசிரியை |
| x x x x x | | |
| | ஏறத்தாழ | |
| x x x x x | 10 மீற்றர் | |

- ஒவ்வொரு வரிசையில் நிற்கும் மாணவர்களுக்கும் ஒன்று தொடக்கம் எண்ணச் சொல்லுங்கள். தாம் கூறிய இலக்கத்தை நினைவில் வைத்திருக்கச் சொல்லுங்கள்.

- ஆசிரியை குறித்த இலக்கமொன்றினை கூறியதும் நான்கு குழுக்களிலும் உள்ள குறித்த இலக்கத்தைக்கூறிய நான்கு பேரும் தத்தமது குழுவின் எதிரே வருதல் வேண்டும். ஆசிரியர் கூறும் மெய்ப்பாட்டினை செய்து காண்பித்தவாறு வரும் மாணவர்கள், ஆசிரியையின் அருகே அடையாளமிடப்பட்டுள்ள எல்லைக்கோட்டுக்கு வருதல் வேண்டும். முதலில் வரும் மாணவனுக்கு ஒரு புள்ளி வழங்கப்படும்.

- உடல், உள ரீதியாக சமநிலையை ஏற்படுத்தக்கூடிய இவ்வாறான செயற்பாடுகளை ஆக்கி மாணவர்களை அவற்றில் ஈடுபடுத்துங்கள்.

# 15.0 போக்குவரத்து



**போக்குவரத்து ஒருவரின் நாளாந்த வாழ்க்கையுடன் நேரடித் தொடர்புடைய முக்கியமாக ஒரு காரணியாகும். வெற்றிகரமாக வாழ்க்கையை நடத்துவதற்காக ஒருவர் போக்குவரத்து தொடர்பான பல்வேறு திறன்களை விருத்திசெய்து கொள்ளுதல் வேண்டும். நாட்டிலும் தமது பிரதேசத்திலும் காணப்படும் போக்குவரத்து முறைகள், பாதைத்தொகுதிகள் தொடர்பான விளக்கத்தை அவர் பெற வேண்டும். எனவே மாணவரிடத்தே மேற்படி விடயங்கள் தொடர்பான தேர்ச்சிகளை விருத்திசெய்வதே இக்கருப்பொருளின் எதிர்பார்ப்பாகும்.**

## தேர்ச்சிகள்

- போக்குவரத்து விருத்தியின் கடந்த காலத்தையும் தற்காலத்தையும் ஒப்பிட்டு எதிர் காலம் பற்றி எதிர்வு கூறுவார்.
- வீதிகளின் பரம்பல் தொடர்பாக திட்டமிட்டுச் செயற்படுவார்.
- பயணங்களின்போது திட்டமிட்டுச் செயற்படுவார்.
- போக்குவரத்துத் தேவைகளை இலகுபடுத்திக்கொள்வதற்காகப் பொறிமுறைச் சக்தியைப் பயன்படுத்தக்கூடிய விதம் தொடர்பாக ஆக்கபூர்வமாகச் செயற்படுவார்.
- வீதிகளைப் பயன்படுத்துவோர் அனுசரிக்க வேண்டிய சட்டதிட்டங்கள். வீதி ஒழுக்கங்கள், வீதிப் பாதுகாப்பு ஆகியன தொடர்பாக கவனஞ்செலுத்தி அவற்றுக்கு அமைவாகச் செயற்படுவார்.
- போக்குவரத்து தொடர்பான ஆடல் பாடல்கள், ஆக்கங்கள் விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

### செயற்பாடு 1

- மூன்றாம், நான்காந் தரங்களில் ‘போக்குவரத்து’ எனும் கருப்பொருளின் கீழ் மாணவர்கள் பல்வேறு விடயங்களை அறிந்துள்ளதோடு பல அனுபவங்களையும் பெற்றுள்ளனர். மூன்றாம், நான்காந் தர ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளில் அடங்கியுள்ள விடயங்களை உசாவி, மாணவரிடம் அவை பற்றி வினவுங்கள்.

### செயற்பாடு 2

- பண்டைக்காலத்தில் இலங்கையில் காணப்பட்ட போக்குவரத்து முறைகள் தொடர்பான தகவல்களைத் தேடியறிய மாணவரை வழிப்படுத்துங்கள்.
  மன்னர்கள், பல்வேறு நடவடிக்கைகளுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றமை, தமது அதிகாரிகளையும் படைகளையும் அனுப்பியமை.
  ***எடுத்துக்காட்டு:***
  - மன்னன் இராவணன் மயில்வாகனத்தில் பயணஞ் செய்தமை.
  - வலகம்பாகு மன்னன் போரில் தோல்வியடைந்து குதிரை வண்டியில் ஏறித்தப்பித்துச் சென்ற கதை.
  - மகாபாராக்கிரமபாகு மன்னன் வெளிநாடுகளுக்கு போர்ப் படைகளை அனுப்பியமை.

போன்ற வரலாற்றுச் சம்பவங்கள் சிலவற்றை முன்வைத்து, அவற்றின் துணையுடன், பண்டைக்காலத்தில் போக்குவரத்துக்காக வாகனங்கள் பயன்படுத்தல். பிராணிகள் மீது ஏறிப் பயணஞ்செய்தல், நடந்து செல்லல், கடற் கலங்களைப் பயன்படுத்தல், பல்லக்கு பயன்படுத்தல் போன்ற முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது பற்றி மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

- இவை தொடர்பான படங்களைச் சேகரிக்க வழிப்படுத்துங்கள்.

- பண்டைக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட போக்குவரத்து முறைகளின் பயன்கள், எதிர்நோக்கப்பட்ட பிரச்சினைகள் ஆகியன தொடர்பாகக் கலந்துரையாடி, அவற்றைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்த வழிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு:***

| பயன்கள் | பிரச்சினைகள் |
|---|---|
| சூழல் நேயத்தன்மை<br>உடல் சுகாதாரத்தைப் பேணுவதற்கு பங்களிப்பு | அதிக நேரம் செல்வதால் |

- பண்டைக்காலத்தில் எமது நாட்டில் காணப்பட்ட பிரதானமான பாதைகளைக் காட்டும் தேசப்படமொன்றைப் பயன்படுத்தி, அன்று காணப்பட்ட பிரதானமான சில பாதைகளையும், பிரதானமான சில நகரங்களையும் இனங்காணுமாறு மாணவரை வழிப்படுத்துங்கள். இதற்குப் பழைய நகரங்களை இணைத்துக் காட்டும் வீதிகளைச் சுட்டிக் காட்டும் தேசப்படத்தினைப் பயன்படுத்துங்கள். நகரங்களுடன் தொடர்புடைய பிரதான பாதைகளை அவதானித்தல் போதுமானது.

- அனுராதபுரத்தில் உள்ள பண்டைய ''கற்பாலம்'' போன்றவை தரும் வரலாற்றுத் தகவல்களைக்கொண்டு அக்காலத்தில் காணப்பட்ட மேம்பட்ட வீதித்தொகுதி பற்றிய விளக்கத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.

## செயற்பாடு 3

- நவீன வாகனங்களாலும் மற்றும் பாதைத் தொகுதிகளாலும் எமது நாட்டு போக்குவரத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்படத்தொடங்கியமை குறித்துக் கலந்துரையாடுங்கள்.
  இலங்கையில் பெருந்தோட்டச்செய்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் புகையிரதம், மோட்டார் வாகனம் போன்ற போக்குவரத்து முறைகள் எமது நாட்டில் அறிமுகஞ் செய்யப்பட்டமை பற்றிக் கலந்துரையாடுங்கள். பின்னர் படிப்படியாக போக்குவரத்து முறைகள் விருத்தி பெற்ற விதத்தை விளக்குங்கள்.

## செயற்பாடு 4

- எமது நாட்டில் பயன்படுத்தப்படும் வளர்ச்சியடைந்த போக்குவரத்து முறைகளை, தரைவழி, நீர்வழி மற்றும் ஆகாய விமான முறைகளின் கீழ் கலந்துரையாடுங்கள்.

| வழி | வாகனம் | பயன்படுத்தும் சக்தி முதல் |
|---|---|---|
| தரைவழி | மாட்டுவண்டி, சைக்கிள்,தொடருந்து (Train), பேருந்து (Bus) கார் | உடலுழைப்பு |
| நீர்வழி | தோணி, ஓடம், வள்ளம், கப்பல், படகு | |
| வான்வழி | உலங்குவானுர்தி(Helicopter)<br>ஆகாய விமானம் | |

- பண்டைக்காலத்தில் காணப்பட்ட, தற்காலத்தில் காணப்படுகின்ற, எதிர்காலத்தில் உருவாக்கக்கூடிய வாகனங்கள் தொடர்பான ஆக்கங்கள் செய்ய மாணவரை வழிப் படுத்துங்கள்.

- மாணவர்கள் ஆக்கிய வாகன மாதிரிகள், மற்றும் படங்களைத் தருவித்துக்கொள் ளுங்கள். அவற்றைக்கொண்டு கண்காட்சி நடத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்யுங்கள்.

## செயற்பாடு 5

- படங்களையும் மாதிரியுருக்களையும் பயன்படுத்தி உலகில் பயன்படுத்தப்படும் நவீன போக்குவரத்து முறைகளை இனங்காண மாணவரை வழிப்படுத்துங்கள்.

| | |
|---|---|
| வான்வழி | நவீன ஆகாய விமானங்கள் பற்றிய தகவல்கள் |
| நீர்வழி | நவீன கப்பல்கள், படகுகள் பற்றிய தகவல்கள் |
| தரைவழி | நவீன மோட்டார் வாகனங்கள், அதிவேகதொடருந்துகள் |

## செயற்பாடு 6

- இலங்கையின் வீதி அமைப்புத் தேசப்படமொன்றை ஆராய்ந்து பிரதான பாதைகள் மற்றும் இனைப்பாதைகள் பற்றி விளங்கிக்கொள்ள சந்தர்ப்பமளியுங்கள்.

- இதற்குப் பின்வருவன போன்ற செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.
  - இரண்டு நகரங்களை இனங்கண்டு ஒரு நகரத்தில் இருந்து அடுத்த நகரத்துக்குச் செல்வதற்கு இருக்கும் பாதைகள் எவை என இனங்காணல்.
  - விசேடமாகத் தமது பாடசாலை அமைந்துள்ள பிரதான நகரத்திலிருந்து அண்மித்த இன்னொரு நகரத்திற்கு செல்லும் பாதையைக் கண்டறிதல். அத்தோடு:
  - கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு பேருந்திலும், தொடருந்திலும், கப்பலிலும் போக முடியும்.
  - வேறு மாற்றுவழிகள் உள்ளனவா எனச் சிந்திப்பதற்கு மாணவர்களுக்கு இட மளியுங்கள்.

- இரண்டு நகரங்களுக்கு இடையிலான மிகக்கிட்டிய தூரமுடைய பாதையைக் கண்டறிந்து கொள்ள வாய்ப்பு வழங்குங்கள்.

- அப்பாதையில் பயணஞ் செய்யும்போது அசௌகரியங்கள், தடைகள் ஏற்படுமானால் பயன்படுத்தக்கூடிய மாற்று வழி உண்டா என இனங்காண வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 7

- வாகனங்கள் செல்லல் தொடர்பான பின்வரும் விளையாட்டில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.

**விளையாட்டு: தொடருந்து/புகையிரதம் ஆக்குவோம்.**

- ஒரு கட்டத்தை அடையாளமிட்டுக்கொள்ளுங்கள். (10மீற்றர் x 10மீற்றர் அளவு)
- ஒரு மாணவரை தொடருந்து எஞ்சினாகத் தெரிவுசெய்து கொள்ளுங்கள்.
- ஏனைய மாணவர்களுக்கு அடையாளமிடப்பட்ட கட்டத்தின் எல்லைக்குள் நிற்கு மாறு அறிவுறுத்துங்கள்.

- ஆசிரியை சைகை வழங்கியவுடன் எஞ்சின் ஓடிச்சென்று கட்டத்தின் எல்லையில் இருக்கும் ஒரு மாணவரின் முதுகில் தட்டுதல் வேண்டும்.
- அப்போது அவர் எஞ்சினின் தோள்களைப் பிடித்து ரயிலின் ஒரு பெட்டியாக இணைத்துக்கொள்ள வேண்டும்.
- இவ்வாறாக எஞ்சினும் பெட்டியும் ஓடிச்சென்று மாணவர்களின் முதுகில் தட்டி, மேலும் மேலும் பெட்டிகளை இணைத்துக்கொள்ள வேண்டும்.
- கட்டத்தின் உள்ளே இருக்கும் மாணவர்கள் எஞ்சினின் கைகளில் அகப்படாது தப்பித்துக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.
- ரயில் எஞ்சினால் பிடிக்கப்படாது எஞ்சியிருக்கும் மாணவன் வெற்றிபெற்றவராகக் கருதப்படுவர்.

▣ இவ்வாறான வேறு விளையாட்டுக்களையும் திட்டமிட்டு அவ்விளையாட்டுக்களில் ஈடுபடுவதற்கு மாணவருக்கு வழிகாட்டுங்கள்.

## செயற்பாடு 8

▣ நவீன போக்குவரத்து முறைகளில் கிடைக்கும் பயன்களையும் அவை தொடர்பாக எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளையும் இனங்காண இடமளியுங்கள்.

▣ மாணவருடன் கலந்துரையாடியவாறு தற்காலத்தில் காணப்படும் நவீன வாகனங்கள், போக்குவரத்து முறைகளின் பயன்கள், குறைபாடுகள் ஆகியனவற்றைப் பின்வருவது போன்ற ஓர் அட்டவணையில் குறிக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.

| பயன்கள் | குறைபாடுகள் |
|---|---|
| | |

▣ புகையிரத நேரசூசியொன்றினை அல்லது பேருந்து நிலைய நேரசூசியொன்றினைத் தேடிப்பெற்று அவ்வாறான ஒரு நேரசூசிப்படி செயற்படுவதன் பயன்கள் பற்றி மாணவ ருடன் கலந்துரையாடுங்கள்.

▣ அவ்வாறு நேரசூசிப்படி செயற்படாவிட்டால் ஏற்படத்தக்க பிரச்சினைகள் பற்றி மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

▣ பயணங்கள் செல்லும்போது நேரசூசிப்படி செயற்படுவதால் கிடைக்கும் பயன்களைத் தேடியறிய மாணவரை வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 9

▣ பெருந்தெருக்களைப் பயன்படுத்தும்போது சாரதிகள், பாதசாரிகள் ஆகிய இரு பிரிவினரும் சட்டதிட்டங்களை அனுசரித்துச் செயற்படுவதன் முக்கியத்துவத்தை கலந்துரையாடல் மூலம் வெளிக்கொணருங்கள்.

◙ பெருந்தெருக்களைப் பயன்படுத்தும்போது பாதசாரிகளும் சாரதிகளும் அனுசரிக்க வேண்டிய சட்டதிட்டங்கள், கவனஞ்செலுத்த வேண்டிய விடயங்கள் ஆகியன பற்றி மாணவர்களுக்கு அறிவூட்டம் செய்வதற்காக பின்வரும் செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.

- பெருந்தெருக்களைப் பயன்படுத்தும்போது அனுசரிக்க வேண்டிய சட்டதிட்டங்கள் பற்றி சமுதாயத்தினருக்கு அறிவூட்டம் செய்வதற்காக பொலிஸ் உட்பட ஏனைய அரச நிறுவனங்களால் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள், சுவரொட்டிகள் போன்றவற்றைச் சேகரித்துக் கொள்ளுங்கள்.
- பாடத்தின் ஆரம்பத்தில் அவற்றை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்தி அது தொடர் பாகக் கவனஞ் செலுத்த சந்தர்ப்பமளியுங்கள்.
- அவற்றின் மூலம் எடுத்துக்காட்டப்படுபவை தொடர்பாகக் கவனஞ்செலுத்தி பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடுங்கள்.

### பாதசாரிகள்

- பாதையில் பயணஞ்செய்யும்போது எப்பொதும் தமது வலதுகைப் பக்கமாக பயணஞ் செய்தல்
- பாதையில் ஒரு பக்கத்தில் இருந்து மறு பக்கத்துக்கு செல்லும்போது, பாதையைக் கடப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தின் ஊடாகக் கடந்து செல்லல்
- அவ்வாறாக ஒதுக்கப்பட்டுள்ள இடம் இல்லாத போது பாதையின் இரண்டு புறங் களையும் நன்றாகக் கவனித்து,வாகனங்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் மாத்திரம் பாதையைக் கடந்து செல்லுதல் வேண்டும்.

### சாரதிகள்

◙ சாரதிகளுக்கென பல சட்டத்திட்டங்கள், வீதி ஒழுங்குகள் என்பன உள்ளன. எனினும் மாணவர்களுக்கு அவற்றை அறிமுகஞ் செய்யும்போது பின்வருவனபோன்ற சில சட்ட திட்டங்கள் தொடர்பாக மாணவரது கவனத்தைத் திருப்புங்கள்.

- எமது நாட்டில், பாதையின் இடதுபுறமாகவே வாகனங்கள் ஓட்டிச் செல்லப்படு கின்றன.
- வீதிச் சுற்றுவட்டங்களில் எப்போதுமே தமது வலது புறத்திலிருந்து வரும் வாகனங்களுக்கு செல்ல இடமளித்து பின் தமது வாகனத்தை ஓட்டிச் செல்லல்
- ஒரு வாகனம் மற்றுமொரு வாகனத்தை முந்திச் செல்லும்போது அனுசரிக்க வேண்டிய சட்டதிட்டங்கள் உள்ளன.
- பெருந்தெருக்களில் இடப்பட்டுள்ள பல்வேறு குறியீடுகள், முறிந்த கோடு, வெள்ளை நிற ஒற்றைக்கோடு, வெள்ளைநிற இரட்டைக்கோடு ஆகியவற்றினால் குறிக்கப்படும் பொருள்.
- போன்றவற்றை மாணவர்களுக்கு அறிமுகஞ்செய்தல்
- சமிக்ஞை மின் விளக்குத் தொகுதிகள் காணப்படும் இடங்களில் செயற்பட வேண்டிய விதம்.
- பாதையில் செல்லும் பாதசாரிகளது பாதுகாப்பும் கரிசனையும் தொடர்பாக விளங்கி, வாகனத்தை ஓட்டிச்செல்ல வேண்டும்.

◙ பாதையில் வாகனங்களை ஓட்டிச்செல்லல், பல சட்டதிட்டங்களை அனுசரித்து செய்ய வேண்டியதொன்று என்பதையும் அது விபத்துக்களின்றி வாகனங்களைச் செலுத்த உதவும் என்பதையும் பாதையில் சட்டதிட்டங்களுக்கு இணங்கிச் செயற்படு வதன் பல பயன்கள் கிடைக்கும் என்பதையும் கலந்துரையாடல் மூலம் வெளிக் கொணருங்கள்.

- வசதி உள்ளதாயின் பொலிஸ் அதிகாரி ஒருவரை அல்லது அவ்வாறான வேறு வளவாளர் ஒருவரை வகுப்புக்கு அழைத்து வீதி ஒழுங்குகள்- சட்டதிட்டங்கள் பற்றிய ஒரு கலந்துரையாடல் நடத்துங்கள்.

- மாணவர் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை முன்வைத்து அவற்றைத் தீர்த்துக் கொள்ள சந்தர்ப்பமளியுங்கள்.

- பின்வருவனபோன்ற அட்டைகளைத் தயாரித்து முற்றத்தில் அவ்வாறான இடவசதியுள்ள இடங்களில் பொருத்தி மாணவர்களை வாகன ஓட்டிகளாகச் செயற்படச் செய்தல். அத்தோடு வீதி ஒழுங்குகள் - சட்டதிட்டங்கள் பற்றிய விளக்கத்தைப் பெற சந்தர்ப்பமளியுங்கள்.

  முதலில் ஒரு மாணவரை ஈடுபடுத்திச் செய்து காட்டிய பின்னர் சகல மாணவர்களும் பங்கு கொள்ள வாய்ப்பு வழங்குங்கள்.

  வாகன விபத்துக்கள் தொடர்பான செய்தித்தாள் அறிக்கைகளைச் சேகரித்து, அவற்றைப் பகுப்பாய்வு செய்து அதிகமானோர் பொதுவாகச் செய்யும் தவறுகளை இனங்கண்டு அவற்றைத் தவிர்த்தல் அவசியம் என்பதை விளங்கிக்கொள்ளச் சந்தர்ப்பமளியுங்கள்.

## செயற்பாடு 10

- போக்குவரத்து தொடர்பான நாட்டார் பாடல்கள், ஏனைய பாடல்களைப்பாடி இரசனை பெற இடமளியுங்கள்.

***எடுத்துக்காட்டு:*** **மாட்டு வண்டி**

வண்டில் அதோ வண்டில்
மாடு இழுக்குது வண்டில்
எருத்து மாட்டு வண்டில்
இரண்டு சில்லு வண்டில்

வெள்ளை மாட்டு வண்டில்
மெல்லச் செல்லும் வண்டில்
நெல்லு மூட்டை ஏற்றியே
நிறைந்து போகுது வண்டில்

புகை எழுப்பா வண்டில்
புனிதமான வண்டில்
வயல் வெளிக்குச் சென்று
வைக்கோல் ஏற்றும் வண்டில்

இரைச்சல் இல்லா வண்டில்
எங்கும் போகும் வண்டில்
முள்ளும் குத்தா சில்லு
உள்ள நல்ல வண்டில்

***- மண்டூர் தேசிகன்***
***நன்றி: ஈழத்துச்சிறுவர் பாடல் களஞ்சியம்***

- தொடருந்து தொடர்பான, சைக்கிள் தொடர்பான பாடல்களைப் பாடவும், அவ்வாறான பாடல்களைப் ஆக்கவும் சந்தர்ப்பமளியுங்கள்.

- இப்பாடல்களை ஆடிப்பாடி மகிழ வாய்ப்பு வழங்குங்கள். மேலும் இவ்வாறான பாடல்களை தேடியறிந்து பாடி ஆடி இன்புறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.


- குழுவாகச் சேர்ந்து வீதி விபத்துக்கள் தொடர்பாக சமுதாயத்தினருக்கு அறிவூட்டம் செய்வதற்கான சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்களை ஆக்க வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 11

- பொதுப்போக்குவரத்துச் சேவையைப் பயன்படுத்தும்போது கவனஞ்செலுத்த வேண்டிய விடயங்கள் பற்றி வகுப்பில் கலந்துரையாடி மாணவர்களுக்கு அறிவூட்டம் செய்யுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - தமக்குரிய சந்தர்ப்பம் வரும்வரை காத்திருத்தல்
  - பொது வாகனப் பயன்பாட்டின்போது கவனத்துடன் செயற்படுதல்
  - பொது வாகனங்களைப் பயணம் செய்யும் போது தன்னடக்கம் பேணல்
  - பொதுவாகனங்களில் பயணஞ்செய்யும்போது ஏனையோரின் சௌகரியம் தொடர்பாகக் கவனஞ் செலுத்துதல்
  - பாதுகாப்பு தொடர்பாகக் கவனஞ்செலுத்துதல்
  - தேவைப்படும் சந்தர்ப்பங்களில் ஏனையோருக்கு உதவி புரிதல்

# 16.0 மனித நடத்தைகள்



**சமூகமொன்றின் அங்கத்தர்வர்களுக்கிடையே சிறந்த தனியாளிடைத் தொடர்பு இருப்பதற் காக, ஒருவருக்கொருவர் அனுதாபங்காட்டி செயற்படுவது மாத்திரம் போதுமானதல்ல. தம்மை ஏனையோராக எண்ணி பரிவுணர்வுடன் செயற்படும் பரிச்சயமுள்ளோரும் பிரச்சினை களுக்கு மாற்றுத் தீர்வுகாண துரிதமாக முனை வோருமான தனியாள்களைக்கொண்ட ஒரு சமூகத்தின் அங்கத்தவர்களுக்கிடையே நட்பும் ஒற்றுமையும் விருத்தியடைவதால் சிறந்த தனியாளிடைத் தொடர்புகள் உருவாகும். அவ்வாறானதோர் இலங்கைச் சமூகத்தை உருவாக்குவதற்காக, எதிர்காலச் சந்ததியினர் தேவையான கற்றல் அனுபவங்களைப் பெறக்கூடிய வகையில் இந்தக் கருப்பொருள் திட்டமிடப்பட்டுள்ளது.**

## தேர்ச்சிகள்

- புரிந்துணர்வுடன் செயற்பட்டு ஏனையோருக்கு பரிவுணர்வு காட்டுவார்.
- மனித கௌரவம் நன்கு பேணப்படும் வகையில் உறுதிப்பாட்டுடன் செயற்படுவார்.
- எப்போதும் ஏனையோருக்கு உதவுவதற்கும் தேவையேற்படுமிடத்து மட்டும் பிறரிடம் உதவி கோருவதற்கும் ஆர்வம் காட்டுவார்.
- வயது கூடியோரின், குறைந்தோரின் நடத்தைக் கோலங்களை புரிந்துகொண்டு அதற்கேற்பச் நடந்துகொள்வார்.
- மாற்று வழிவகைகள் தொடர்பாகக் கவனஞ்செலுத்தி புரிந்துணர்வுடன் செயற்படுவார்.
- மகிழ்ச்சியாகவும் ஒற்றுமையாகவும் வாழ்வதன் பெறுமதியை வலியுறுத்தும் வகையிலான ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்.
- நல்ல மனித நடத்தைகளை எடுத்துக்காட்டும் வகையில் ஆக்கம் புரிவார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

## செயற்பாடு 1

- ஏனையோருக்கு பரிவுணர்வு காட்டுதல் தொடர்பான அனுபவங்களைப் பெறுவதற்கு மெய்நிலைகளின் முக்கியத்துவம் எடுத்துக்காட்டப்படும் செயற்பாடுகளில் ஈடுபட வாய்ப்பளியுங்கள்.

***எடுத்துக்காட்டு:***

**தலைவரைக் கண்டுபிடித்தல்**

விளையாட்டை ஆரம்பிக்க முன்னர், விளையாட்டை விளையாடும் விதத்தை விளக்குங்கள். குழுவுக்கென ஒரு தலைவர் நியமிக்கப்படுவார் எனக் கூறுங்கள். அத்தலைவரைக் கண்டுபிடிக்கும் சவாலை ஏற்றுக்கொள்ளும் மாணவரொருவரை இனங்கண்டு கொள்ளுங்கள். அம்மாணவரை குழுவினரைப் பார்க்க முடியாத ஓர் இடத்துக்குப் போய் நிற்குமாறு கூறுங்கள். குழுவின் தலைவர் செயற்பட வேண்டிய விதம் தொடர்பாக அறிவுறுத்தல் வழங்குங்கள்.

மாணவர்களை ஒரே வட்டத்தில் நிற்கச் செய்யுங்கள். முதலில் விளையாட்டை ஆரம்பிக்கும் விதம் தொடர்பாக மாணவர்களுக்கு விளக்குங்கள். முதலில் ''தலைவரைக் கண்டு பிடிக்கும் விளையாட்டு'' ஒன்றை ஆரம்பிக்கப் போவதாகவும் ''தலைவரைக் கண்டுபிடிக்க யாரால் முடியும்'' எனும் சவாலை யார் ஏற்றுக்கொள்ளப் போகின்றனர் எனவும் வினவவும். தலைவரைக் கண்டுபிடிக்க முடியும் என்னும் சவாலை ஏற்றுக்கொண்ட நபரை வட்டத்தின் மத்திக்கு அழைத்து பின்பு அந்த இடத்தை விட்டும் சற்று தொலைவில் போய் நிற்குமாறு அறிவுறுத்துங்கள். பின்னர் வட்டத்தில் நிற்கும் ஏனையோர் சகலரும் ஒன்றிணைந்து அல்லது சுய விருப்பின் பேரில் தலைவரொருவரை நியமித்துக்கொள்ளுங்கள். ஆசிரியரும் வட்டத்தில் நிற்பது உசிதமானது. முதலில் ஆசிரியர் விடையாட்டை ஆரம்பிப்பது சிறந்தது. தெரிவுசெய்யப்பட்ட தலைவர் தடவைக்குத் தடவை மெய்ப்பாடுகளை மாற்றுவார். அவரைப் பார்த்து ஆசிரியர் அவ்வாறே செய்வார். ஏனையவர்களும் அவ்வாறே செய்வார்கள். ஒவ்வொருவரும் தலைவர் மீது கவனத்தைச் செலுத்துவதை மத்தியில் இருப்பவர் இலகுவில் இனங்காண முடியாதவாறு மிக அவதானமாகவே செய்தல் வேண்டும். பின்னர் தலைவரைக் கண்டுபிடிப்பதாகக் கூறிய நபரை வட்டத்தில் மத்திக்கு அழைத்து வட்டத்தில் இருப்போர் செய்யும் செயல் தொடர்பாகக் கவனஞ் செலுத்தி மறைந்திருக்கும் தலைவரைக் கண்டுபிடிக்க வேண்டும் எனக் கூறுங்கள். ஏனையோர் கண்டுபிடிக்க முடியாதவாறு நீண்ட நேரத்துக்கு விளையாட்டைத் தொடர்ந்து நடத்திச் செல்வதே தலைவர் எதிர்நோக்கும் சவாலாகும். இயன்ற அளவு விரைவாக தலைவரைக் கண்டுபிடிப்பது மத்தியில் இருப்பவர் எதிர்நோக்கும் சவாலாகும். இவ்விளையாட்டை இவ்வாறு தொடர்ந்து நடாத்திச் செல்லுங்கள்.

## செயற்பாடு 2

- ஏனையோருக்கு பரிவுணர்வு காட்டுவதற்காக பேண வேண்டிய நடத்தைகள் தொடர் பாக வலியுறுத்துவதற்காக அமைதியான திறந்த வெளிச் சூழலில் இருவரிருவராக பின்வருவன போன்ற செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு:***

தாம் அதிக மகிழ்ச்சியடைந்த ஒரு சம்பவத்தை நினைவுபடுத்த வழிப்படுத்துங்கள்.

**படி 1:**

மாணவரை இருவரிருவராக முதுகுக்கு முதுகுகாட்டி அமர்ந்திருக்கச் செய்யுங்கள். ஒரு மாணவரை தமது நினைவுக்கு வந்த சம்பவத்தை மற்றவருக்குக்கூற வழிப்படுத்துங்கள். சோடிகளைச் சற்றுத் தூரத்தூர அமரச்செய்து ஒவ்வொரு சோடிக்கும் சுயாதீனமாகச் செயற்படத்தக்க சூழ்நிலையை உருவாக்குங்கள்.

**படி 2:**

மாணவர் சோடிகளை முகத்தை முகம் நோக்கியவாறு அமரச் செய்யுங்கள். படி - 1இல் செவிமடுத்த மாணவனுக்கு, அவர் நினைவுகூர்ந்த சம்பவத்தை மற்றவருக்குக் கூறுமாறும் அடுத்தவர் அதனைச் செவிமடுக்குமாறும் வழிப் படுத்துங்கள்.

**படி 3:**

குழுக்களில் இருவருள் ஒருவரை எழுந்திருக்கச்செய்யுங்கள். ஒருவர் எழுந் தவுடன் அவர் தன்னுடன் சோடியாக இருந்தவராகின்றமையைக் குறிப்பிடுங்கள். சகல குழுக்களிலும் அமர்ந்திருப்போர் அவ்வாறே இருக்கும் போது, எழுந்திருப்போர் தனது ஆசனத்தை விட்டு வேறு இடங்களுக்கு இடம்மாறுமாறு அறிவுறுத்துங்கள்.

- படி - 1 இலும் படி - 2 இலும் கருத்துக்களைத் தெரிவிக்கும் போதும் செவிமடுக்கும் போதும் அனுபவித்த சௌகரியங்கள், அசௌகரியங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள். வினா - விடை முறையைக்கையாண்டு, பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை நடத்துங்கள். மாணவர்களது கருத்துக் களினூடாக பின்வரும் விடயங்களை வலியுறுத்துங்கள்.
    - இடையிடையே ஏற்படும் கண்ணோடு கண் நோக்கும் தொடர்பின் முக்கியத்துவம்
    - மலர்ச்சியான வரவேற்பு ரீதியான முகபாவங்களை பேணல்
    - கருத்துக்களை வரவேற்கும் வகையிலான அங்க (கை, கால்) அசைவுகள் (மெய்ந்நிலைகள்)
    - வார்த்தைகளையும் மெய்ந்நிலைகளையும் கையாண்டு கருத்துக்களை வெளியிடல்
    - பொருத்தமானவாறு வார்த்தைகளும் மெய்ந்நிலைகளும் உணர்வுகளும், பரிமாற்றமுறும் வகையில் சிறிது நேரத்துக்கு பிறிதொருவராக மாறுவதன் முக்கியத்துவம்.

- மேற்படி கற்றல் அனுபவங்களைக் கொண்டு சுவரொட்டிகளை ஆக்குவதற்கு மாணவர் குழுக்களுக்கு வாய்ப்பளியுங்கள்.

**குறிப்பு:** பரிபூரணமான சுவரொட்டி ஆக்கவேண்டுமென எதிர்பார்க்கப்படவில்லை. பெற்ற கற்றல் அனுபவங்கள் மீது ஆக்கபூர்வச் சிந்தனைக்கு வழிப்படுத்து தலும், சித்திரிப்பு ஊடகத்தைக்கொண்டு கருத்து வெளிப்பாட்டுக்கு இடமளித் தலும் கருப்பொருள் தொடர்பாக ஆக்கங்களை வெளிக்கொணர்வதுமே எதிர்பார்க்கப்படுவனவாகும்.

## செயற்பாடு 3

- ஏனையோருக்கு பரிவு காட்டும்போது சொற்கள் மூலம் கருத்துக்களைத் தெளிவாகப் பரிமாறுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்கான செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு:***

**வழிப்போக்கன்:**

மலையூருக்குப் போக வேண்டுமே
வழியை எனக்குச் சொல்லித்தா அண்ணே!

**குடியானவன்:**

பனங்காய் இன்னும் பழுக்க வில்லையே
பனம் பனாட்டு செய்யவில்லையே

**வழிப்போக்கன்:**

பனம் பனாட்டு எனக்கு எதுக்கு
மலையூருக்கு வழியை நீ சொல்லு

**வழிப்போக்கன்:**

மலையூருக்குப் போக வேண்டுமே
வழியை எனக்கு சொல்லித்தா ஆத்தா!

**குடியானவனின் மனைவி:**

பனங்கிழங்கு முத்த வில்லையே
ஒடியற் கிழங்கு காய வில்லையே

**வழிப்போக்கன்:**

ஒடியல் கிழங்கு எனக்கு எதுக்கு
மலையூருக்கு வழியை நீ சொல்லு.

**வழிப்போக்கன்:**

மலையூருக்குப் போக வேண்டுமே
வழியை எனக்கு சொல்லித்தா ஆத்தா

**குடியானவனின் மனைவி:**

ஒருக்கா இங்கே ஓடி வா அம்மா
ஒடியலின் அருமை சொல்லிக்கொடம்மா

**வழிப்போக்கன்:**

மலையூருக்குப் போக வேண்டுமே
வழியை எனக்கு சொல்லித்தா அம்மா!

**குடியானவனின் மகள்:**

இன்டைக்கு அண்ணா வருவாராமே
பண்டங்கள் கொண்டு தருவாராமே.
அண்ணா இப்ப வந்தா ரெண்டா
எங்களுக்கெல்லாம் கொண்டாட்டம் தான்!

எனும் பாடலைப்பாடி ஆட இடமளியுங்கள்.

- பாடி ஆடிய பாடல் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள். இது செவிடர்களுக்கும் வேறு ஒருவருக்கும் இடையில் நிகழ்ந்த ஓர் உரையாடல் என்பதை வலியுறுத்துங்கள். அவர்கள் செவிடர்கள் என்பதனால் அவர்களிடையே இவ்வாறானதோர் நிகழ்வு இடம்பெற்றுள்ளது என்பதை எடுத்துக் கூறுங்கள்.

- பின்வரும் உரையாடலை பங்கேற்று நடித்தலில் முன்வைப்பதற்கு வழிப்படுத்துங்கள்.

**முதலாவது மாணவர்:** உங்களைச் சந்திக்கத்தான் இருந்தேன். இந்த நாட்களில் நான் மிகுந்த வேதனையுடன் இருக்கின்றேன். அம்மா சுகவீனமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

**இரண்டாவது மாணவர்:** எனது அப்பாவும் கடந்த தினங்களில் சுகவீனமாக வைத்தியசாலையில் தங்கியிருந்தார். நான் தினமும் அம்மாவோடு பார்க்கச் சென்றேன்.

**முதலாவது மாணவர்:** அம்மா வைத்தியசாலையில் இருப்பதால் வீடும் ஓய்ந்து காணப்படுகின்றது. அம்மா வீட்டில் இல்லாமை எனக்கு மிகுந்த வேதனை அளிக்கின்றது.

**இரண்டாவது மாணவர்:** அப்பா வைத்தியசாலையில் இருந்தபோது இன்னுமொரு நோயாளி அவர் பக்கத்தில் இருந்தார். அவர் இரவில் நித்திரையில்லாது புலம்பிக் கொண்டிருந்தாராம்.

- இவ்வாறு ஒருவர் கூறுபவற்றை பரிவுணர்வுடன் செவிமடுக்காது, இடைமறித்து எமது அனுபவத்தைக் கூறும் சந்தர்ப்பங்களை கொண்ட நிகழ்வுகளை பங்கேற்று நடிப்பதற்கு வழிப்படுத்துக.

- இவ்வாறான பங்கேற்று நடித்தலின் இறுதியில் மாணவர்களுடன் கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளுங்கள். தாம் செவிடர்களாக இல்லாத போதும் அநேகமாக ஏனையோருக்கு செவிமடுக்காது இருக்கும் இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவதுண்டு. இதுவும் செவிடர்கள் செயற்படுவதை போலாகின்றது என்பதை எடுத்துக் காட்டுங்கள்.

- உரிய மொய்ப்பாடுகளுடனும் பரிவுணர்வுடனும் செவிமடுப்பதனால் எமக்கு ஏனையோரை புரிந்துகொள்வதற்கும் ஏனையோர் போன்று சிந்திப்பதற்கும் வழிபிறக்கும் என்பதை எடுத்தக்காட்டுங்கள்.

## செயற்பாடு 4

- வகுப்பிலும் வீட்டிலும் சிறிய நேரத்துக்கேனும் வேறு ஒருவர் போன்று இருப்பதன் பெறுமானம் பற்றி மனதை ஒரு நிலைப்படுத்தி எண்ணிப்பார்க்க இடமளியுங்கள். இதற்காக மாணவர் களைப்பின்றி மகிழ்ச்சியுடன் இருக்கும் ஒரு சந்தர்ப்பத்தைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள். மனதைக் கவரும் விதத்தில் மென்மையான குரலில் பின்வருமாறு மாணவர்களுக்குக் கூறுங்கள்.

***எடுத்துக்காட்டு:***

இப்போது நீங்கள் ஆசனத்தில் சௌகரியமாக அமர்ந்திருக்கிறீர்கள். கால்களை சௌகரியமாக வைத்துக்கொள்ளுங்கள். உடலை நிமிர்த்தி வைத்து, தலையைச் சற்று உயர்த்தி வைத்திருங்கள். நீங்கள் இப்போது சௌகரியமாக அமர்ந்திருக்கிறீர்கள். ஆழமாக உள்மூச்சு வாங்குங்கள். மூச்சை வெளியே மெது மெதுவாக விடுங்கள். (சில தடவைகள் செய்க.) கண்களை மெல்ல மெல்ல மூடிக்கொள்ளுங்கள். இனி நான் கூறுபவற்றை நன்கு செவிமடுங்கள். என்னோடு மனதால் இச் சொற்களைக் கூறுங்கள்.

நீங்கள் கூறுபவற்றைக் கேட்கும்போது நான் உங்களது வார்த்தைகளை நன்கு செவிமடுக்கிறேன். உங்களது முகம், உங்களது கண்கள், உங்களது கைகள் நீங்கள் கூறும் பாங்கு/பாணி பற்றி கவனமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் கூறுபவற்றை நன்றாக விளங்கிக்கொள்ள முயற்சி செய்கிறேன். நீங்கள் நினைப்பவற்றை நீங்கள் நினைக்கும் விதத்திலேயே விளங்கிக்கொள்கிறேன். நான் நீங்களாகவே மாறிவிட முயற்சி செய்கிறேன்.

- வகுப்பில் இடம்பெறும், மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாடுகளின்போது சொற்ப நேரத்துக்கேனும் மற்றொருவராக மாறுவதற்கான விடயங்களை உள்ளடக்குங்கள். ஏனையோரின் அனுபவங்கள், உணர்வுகளைத் தமதாக்கிக்கொள்ள முயற்சிப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுங்கள். அதன் மூலம் ஒவ்வொரு மாணவரதும் உணர்வுகளை விளங்கிக்கொள்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள்.

- பெற்றோர் சந்திப்பொன்றின்போது மாணவரது சுவரொட்டி ஆக்கங்களைக் காட்சிப் படுத்துங்கள். வகுப்புச் சூழலில் வலியுறுத்துப்படும் செவிமடுத்தல், கருத்து வெளியிடல் தொடர்பான விடயங்கள் உறுதிப்படுத்தப்படும் வகையிலான வீட்டுச் சூழல் பெற்றாரின் கவனத்தைக் குறித்து திருப்புங்கள்.

## செயற்பாடு 5

- வகுப்பு மாணவரின் வயதை ஒத்த வயதுடைய பிள்ளைகளுள் பின்வரும் சந்தர்ப்பங் களை எதிர்நோக்கிய பிள்ளைகள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள். பின்வரும் சந்தர்ப்பங்களை அல்லது அவ்வாறான வேறு சந்தர்ப்பங்களை எதிர்நோக்கியுள்ள பிள்ளைகள் தொடர்பான சம்பவங்களை எழுதி அட்டைகளைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
  - வெள்ளப்பெருக்கு காரணமாக வீடு சிதைவடைந்து பாடசாலையில் அல்லது பொதுக்கட்டடமொன்றில் தற்காலிகமாக தங்கியுள்ள ஒரு பிள்ளையின் கதை.
  - பாடசாலை செல்லவேண்டிய வயதில் உள்ள எனினும் வீட்டுக்கு வருமானம் ஈட்டிக் கொடுப்பதற்காக வெவ்வேறு வேலைகளில் ஈடுபடும் ஒரு பிள்ளையின் கதை.
  - வறட்சி காரணமாக பயிர்கள் அழிந்தமையால் உணவுத் தட்டுப்பாட்டினால் அவதியுறும குடும்பமொன்றினைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் கதை.
  - அன்புடன் வளர்த்த தனது செல்லப்பிராணி இறந்தமையால் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு பிள்ளையின் கதை.
  - யுத்தம் காரணமாக ஊரைவிட்டு வெளியேறி, அகதி முகாமொன்றில் தங்கியுள்ள குடும்பமொன்றிலிருந்து பாடசாலை வரும் ஒரு பிள்ளையின் கதை.
  - தாய் அல்லது தந்தை நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள மையால் அது தொடர்பான எண்ணங்கள் காரணமாக கற்றல் பணிகளில் ஈடுபடுவதில் இடர்ப்பாடுகளை எதிர்நோக்கியுள்ள ஒரு பிள்ளையின் கதை.

**குறிப்பு:** வகுப்பில் இவ்வாறான சம்பவங்களுக்கு உள்ளான பிள்ளைகள் இருக்கக் கூடும். மேலே குறிப்பிட்ட அட்டைகளைத் தயாரிக்க முன்னர், வகுப்பில் உள்ள பிள்ளைகளின் பின்னணி பற்றி தேடியறிவது முக்கியமானது. அவ்வாறான பிள்ளைகளுக்கு மனத்தாக்கம் ஏற்படக்கூடியவாறான அட்டை களை வகுப்பில் முன்வைப்பதைத் தவிர்த்தல் வேண்டும். வகுப்பு மாணவர் களுக்கு மனத்தாக்கம் ஏற்படும் வகையிலான சந்தர்ப்பங்கள் தொடர்பான கதைகளை முன்வைக்காது இருப்பதனூடாக அவ்வாறான நிலைமைகள் உருவாதலைத் தவிர்த்துக்கொள்ளலாம். மேலும் பிள்ளகளின் வயதுக்குப் பொருந்தாத விடயங்களை மற்றும் சம்பவங்களைக்கொண்ட அட்டைகளை யும் முன்வைத்தலாகாது.

- தயார்ப்படுத்திய அட்டைகளை நன்கு பேர் கொண்ட குழுவுக்கு ஒன்றாகப் பகிர்ந்தளியுங்கள். ஒரே சம்பவத்தை ஒன்றுக்கு மேற்பட்ட குழுக்களுக்கும் கொடுக்கலாம். அட்டைகளை வாசித்து கலந்துரையாட வழிப்படுத்துங்கள். அந்தப் பிள்ளை நீங்களாக இருந்தால் அதனை ஏனையோரிடம் எப்படி கூறுவீர்கள்.

- ஒவ்வொருவருக்கும் அட்டையில் தரப்பட்டுள்ள பிள்ளை போன்று கருத்துத் தெரிவிக்க இடமளியுங்கள். கருத்துத் தெரிவித்தவாறு? செய்யக்கூடிய சில உதவிகள் தொடர்பாக இணக்கப்பாட்டுக்கு வர வழிப்படுத்துங்கள்.
- இவ்வாறாக பரிவுணர்வு காட்ட வேண்டிய பிள்ளைகளுக்கு உதவி புரிவதற்காக வகுப்பு மாணவர் செய்யக்கூடியவை பற்றி வினவி கரும்பலகையில் பட்டியல் படுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  அவ்வாறான பிள்ளைகள் தொடர்பாக:
  - நாளாந்தத் தகவல்கள், பிரச்சினைகள் பற்றி வினவுதல்
  - பகலுணவு கொண்டு செல்லல்
  - வெளிநாடு சென்றுள்ள பெற்றோர் அனுப்பியுள்ள கடிதங்களின் தகவல்களை வினவுதல்
  - இறந்து போன, தனது செல்லப்பிராணி பற்றிக் கூறியவற்றை உள்ளடக்கி புனைந்த பாடல் வரிகளை உள்ளடக்கி, ஞாபகார்த்த அட்டை தயாரித்தல்
  - கூறிய உண்மையான, நேர்மையான தகவல்கள் தொடர்பாக நன்றி தெரிவித்தல்
  - ஆடையணிகள் வழங்கல்
  - பாடசாலை நடவடிக்கைகளுக்குத் தேவையான பொருள்கள் வழங்குதல்

- மாணவரிடம் வினாக்களை வினவி அவர்கள் அளிக்கும் விடைகளின் துணையுடன் குறித்த கருத்துக்கள் வெளிக்கொணரப்படும் வகையில் கலந்துரையாடுங்கள்.

- சமமான ஒருவராகக் கருதியே நாம் அனைவர்க்கும் உதவி புரிய வேண்டும். நீங்கள் அது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்? எண்ணிப்பார்க்க வழிப்படுத்துங்கள்.

- ஒவ்வொருவரையும் சமமாகக் கருதுதல்; ஒவ்வொருவரதும் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் எமது கடமைகளை நிறைவு செய்தல் ஒரு சனநாயகப் பண்பாகும் என்பதை இலகுவாக விளக்குங்கள்.

- பரிவுணர்வுடன் தம்மை ஏனையோர் போன்று கருதும்போது சமமானவராகக் கருதி உதவி புரிவது இலகுவானது என்பதை வலியுறுத்துங்கள்.

- தமது பிரச்சினைகளை, குறைபாடுகளை, திறன்களை நேர்மையாக வெளியிடக்கூடிய நண்பர்கள், தோழிகள் உள்ள ஒரு சூழ்நிலையில் தம்மை ஏனையோர் போன்று கருதிச் செயற்பட முடியும்.
  அதன் மூலம் தமது பாதுகாப்பு உறுதியாகும். எனவே மகிழ்சிகரமான சூழல் உருவாகும்.

- ‘‘நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மன உளைச்சல்களை நம்பிக்கையான ஒருவரிடம் கூறத்தான் வேண்டும்.’’ என்பதைச் சிந்திக்க இடமளியுங்கள். கலந்துரையாடுங்கள்.

- தம்மை மானசீகமாகப் பார்ப்பதற்கு ஏனையோருக்கு இடமளிப்பதன் மூலம் மகிழ்ச்சிகரமான ஒரு சூழ்நிலை உருவாகும் என்பதையும், ஒருவருக்கொருவர் உதவி புரியும் சூழ்நிலை உருவாவதற்கு அது வசதியளிக்கும் என்பதையும் வலியுறுத்துங்கள்.

## செயற்பாடு 6

- இச்செயற்பாட்டிற்கு முன்பு தரம் நான்கு ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டியில் தரப் பட்டுள்ள மனித நடத்தை எனும் கருப்பொருளை நன்கு வாசித்தறிந்துகொள்ளுங்கள். அதில் உறுதியான வெளிப்பாடு தொடர்பாக விசேட கவனஞ் செலுத்துங்கள். மூர்க்கமான நடத்தை தாழ்வான நடத்தை ஆகிய அந்தங்களிலிருந்து விலகி, உறுதியான வெளிப்பாடு தொடர்பாக பயிற்சி பெறுவது பற்றிய சிறந்த மனப்பாங்குடன் இச்செயற்பாட்டை ஆரம்பியுங்கள்.

- உறுதியான வெளிப்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக பின்வருவன போன்ற வினாக்கள் - விடைகளை உள்ளடக்கிய வினா - விடை நிகழ்சியொன்றை வகுப்பில் நடத்துங்கள். வகுப்பில் ஆறு பேர் வீதம் எழுமாறாக இரண்டு குழுக்களைத் தெரிவுசெய்து வினாக்களை வினவி அவர்கள் அளிக்கும் விடைக்கு அமைய புள்ளி வழங்குங்கள். ஏனைய மாணவர்க்கு பார்வையாளர்களாக இருக்க இடமளியுங்கள். இரு குழுவினரும் விடையளிக்காத வினாக்களை பார்வையாளர்களுக்கு முன்வையுங்கள். வினா - விடை நிகழ்ச்சியின் பின்னர், புள்ளி வழங்கிய முறையை எடுத்துக்காட்டி, உறுதிப் பாடான நடத்தையை மதியுங்கள்/பாராட்டுங்கள்.

***எடுத்துக்காட்டு:***

(1) பாடசாலை விட்டு வீடு செல்லும்போது, மூத்தோர் எவருக்கும் அறிவிக்காது. குளத்துக்கு/ஆற்றுக்குச் சென்று நீச்சலடித்துக் குளிப்போம் என உங்கள் நெருங்கிய நண்பன்/நண்பி கூறுகிறார். நீங்கள் என்ன செய்வீர்கள்?

1. வீட்டுக்கு அறிவிக்காது பொருத்தமற்ற ஒரு செயலைச் செய்ய அழைப்பது குறித்து நண்பரை ஏசுதல், மறுப்புத் தெரிவித்தல்
2. நண்பருடன் இணங்கி, குளத்துக்கு/ஆற்றுக்குச் செல்லுதலும் களிப்புடன் நீச்சலடித்துக் குளித்தலும்.
3. நண்பரை விளித்து, உங்களுடன் எப்படி வருவது, நான் வீட்டுக்கு அறிவிக் காது எங்கும் போகமாட்டேன். நீங்களும் வீட்டுக்குப் போவதையே நான் விரும்புகிறேன் என மறுப்புத் தெரிவித்தல்.

(2) நீங்கள் கடைக்குச் சென்று பொருள்கள் வாங்குவதற்காக உங்களது சந்தர்ப்பம் வரும்வரை காத்துக்கொண்டிருக்கிறீர்கள். கடை முதலாளி, உங்களுக்கு முன்னர் வந்தவருக்கு பொருள்களை வழங்கிக் கொண்டிருக்கிறார். உங்களுக் குப் பின்னால் வந்த ஒருவர் உங்களுக்கு முன்னால் நிற்கிறார். நீங்கள் வாங்க முன்னர் பொருள்களை வாங்க முயற்சி செய்கிறார். நீங்கள் என்ன செய்வீர்கள்?

1. நீண்ட நேரம் காத்துக்கொண்டிருந்த உங்களை மீறி பின்னால் வந்தவர் பொருள்களை வாங்க முயற்சி செய்வது குறித்து கோபப்பட்டு அவருக்கு குறைகூறுதல்
2. அவருக்கு பொருள்களை வாங்க இடமளித்து ஒதுங்கி நிற்றல்
3. ‘‘நீங்கள் வரிசையில் எனக்கு முன்னால் வந்து நிற்பது குறித்துக் கவலைப் படுகிறேன். நான் நீண்ட நேரமாக இங்கு காத்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் வரிசையில் உரிய இடத்தில் போய் நிற்பதைத்தான் நான் விரும்பு கிறேன்.’’

(3) பாடசாலை வளவில் ‘மரக்கறித்தோட்டம்’ அமைப்பதற்கான இடத்தைத் தெரிவு செய்வது தொடர்பாக ஆசிரியை வகுப்பில் உரையாடிக்கொண்டிக்கிறார்.

வகுப்பு மாணவரின் பெரும்பாலானோர் ஒரு குறித்த இடத்தை விரும்புகின்றனர். எனினும் பாடசாலை நடைபெறாத நாள்களில் மரக்கறித் தோட்டத்துக்கு பாதிப்பு ஏற்படக்கூடியதால் அந்த இடம் பொருத்தமற்றது என்பது உங்கள் கருத்தாகும். நீங்கள் என்ன செய்வீர்கள்?

1. விடுமுறை நாள்களில் ஏற்படத்தக்க பாதிப்புக்களை எடுத்துக்காட்டி, பெரும் பான்மையினரின் தீர்மானத்தை கடுமையாக விமர்சித்தல். அந்த இடத்தில் மரக்கறித் தோட்டத்தை அமைப்பதானால், அதற்கு ஒருபோதும் உதவப் போவதில்லை என கடுமையாகக் கூறுதல்
2. பெரும்பான்மையானோர் விரும்புகின்றமையால் உங்கள் கருத்தை வெளியி டாது பெரும்பான்மைக் கருத்துக்கு இணக்கம் தெரிவித்தல்
3. ‘‘உங்களுள் பெரும்பான்மையானோரின் கருத்துடன் இணங்குவது கஷ்ட மானது; ஏனென்றால் விடுமுறை காலத்தில் மரக்கறித் தோட்டத்துக்குள் பிராணிகள் நுழைவதற்கு அவகாசம் அதிகமாக உள்ளது. மாமரத்துக்கு அப்பால் உள்ள பகுதியே மரக்கறித் தோட்டத்தை அமைப்பதற்கு நல்ல இடம் என்பது எனது கருத்து.’’

- இவ்வாறான இல. 01 இல் தரப்பட்டுள்ள மூர்க்கமான துலங்கலுக்கு 0 புள்ளியும், இல. 02 இல் தரப்பட்டுள்ள தாழ்வான துலங்கலுக்கு 0 புள்ளியும், இல. 03 இல் தரப்பட்டுள்ள உறுதிப்பாடான கருத்துத் தெரிவிப்புக்கு 1 புள்ளியும் வழங்குங்கள். இவ்வாறான உறுதியான கருத்துத் தெரிவிப்பை மதித்து உறுதியான நடத்தையைப் பழக்கத்தில் பரிச்சயப்படுத்திக்கொள்வதற்காக, பின்வரும் வேலைத்திட்டத்தை வலியுறுத் துங்கள். (வகுப்பில் பரிச்சயப்படுத்திக்கொள்ள ஆர்வமூட்டுங்கள்)

உங்களது கருத்துக்களை எவரது மனதையும் நோவிக்காதவாறு கூறுங்கள்.
- வீட்டுக்கு அறிவிக்காமல் குளத்துக்குப்போக என்னால் வர முடியாது.

காரணத்தைக் கூறுங்கள். அது உங்களில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தைக் கூறுங்கள்.
- நான் வீட்டுக்கு அறிவிக்காமல் எங்கும்போக மாட்டேன். அது மட்டுமல்ல அது எனக்கு வேதனையைத் தரும்

தேவையெனின் வலியுறுத்துங்கள்
- வீட்டில் உள்ளோர் என்மீது அளவுகடந்த நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்?

உங்களது கருத்தைக் கூறுங்கள்.
- நீங்கள் இந்த ஆபத்தான செயலைச் செய்யாமல் இருப்பதைத்தான் நான் விரும்புகிறேன்.

- இவ்வாறாக பிள்ளைகளின் வார்த்தைகளைக்கொண்டே உறுதியான கூற்றுக்களை கூறுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள்.

- தமது கருத்தைக் சொல்லாமலிருப்பதை விடுத்து அதனைச் சொல்வதற்கும், ஆபத் தான பொருத்தமற்ற யோசனைளுக்கு மறுப்புத் தெரிவிப்பதற்கும், இணங்க முடியாத சந்தர்ப்பங்களில் தனது கருத்தைத் தெரிவிப்பதற்கும், உறுதியாகக் கூறுவது இன்றி யமையாதது என்பதை விளக்குங்கள்.

- மூர்க்கமாக ஏனையோரைக் கொடுமைப்படுத்தும் வகையில் நடந்துகொள்வதும் தனது மனதுடன் இணங்காது, ஏனையோரின் தேவைக்கேற்ப நடந்துகொள்வதும் இதன் மூலம் தவிர்க்கப்படும் என்பதை வலியுறுத்துங்கள்.

## செயற்பாடு 7

- உறுதியான நடத்தை வலியுறுத்தப்படும் வகையில் மாணவரது நாளாந்த வாழ்க்கையுடன் தொடர்புடைய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி பங்கேற்று நடித்தல்கள் சிலவற்றைத் திட்டமிட்டு பிள்ளைகளை அவற்றில் ஈடுபடுத்துங்கள்.

## செயற்பாடு 8

- மாணவ - மாணவியர்களுக்கு தீர்மானமெடுக்க வழிகாட்டக்கூடியவாறான, வகுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக கவனத்தைத் திருப்புங்கள். இதுவரையில் பாரம்பரியமாக இடம்பெற்ற அவ்வாறான நடவடிக்கைகளை மாணவர்களுக்கு தீர்மானமெடுக்க வழி காட்டுவதற்கு சிந்தனையை வழிப்படுத்தும் பிரச்சினைகளாக உங்களது மனதில் வரிசைப்படுத்திக் கொள்ளுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***
    - வகுப்பைச் சுத்திகரிப்பதற்காக தயாரித்துக்கொள்ளக்கூடிய மிகச்சிறந்த வேலைத் திடடம் யாது?
    - வகுப்புத் தலைவர்களாக மாணவரைத் தெரிவுசெய்து கொள்வதற்கும், அதற்கு வாய்ப்பு வழங்குவதற்கும் மிகப்பொருத்தமான வேலைத்திட்டம் யாது?
    - வகுப்பு மாணவர்களால் பாடசாலைத் தோட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள பல்வேறு ஆக்கங்கள், பூம்பாத்திகள், மரக்கறிப்பாத்திகளைப் பாதுகாப்பதற்காக விடுமுறை காலத்தில் நடைமுறைப்படுத்தும் வேலைத்திட்டம் எவ்வாறானதாக இருத்தல் வேண்டும்?
    - பாடசாலை வளவில் மரக்கறித்தோட்டத்தை அமைத்துப் பராமரித்து வருவதற்கு மிகப்பொருத்தமான வேலைத்திட்டம் யாது?
    - வீட்டில் பல்வேறு பிரச்சினைகள் காரணமாக மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ள வகுப்புப் பிள்ளைகளுக்கு நிம்மதியான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காக, ஏனைய பிள்ளைகள், எவ்வாறு பங்களிப்புச் செய்யலாம்?

- உங்களது வகுப்புப் பிள்ளைகள் பயன்படுத்தும் மொழியை/வார்த்தைகளை நன்கு விளங்கிக்கொள்ளுங்கள். நீங்கள் ஏற்கனவே மனதில் வரிசைப்படுத்தியுள்ள, மாணவரை சிந்திக்க வழிப்படுத்தும் பிரச்சினைகளை மாணவர்களுக்கும் பொருத்தமான மொழியை/வார்த்தைகளைப் பயன்படுத்தி முன்வையுங்கள். உங்களது வார்தைகளை அவர்களது சிந்தனைக்குத் தடையாக அமையாத வகையில் பிரயோகிப்பது தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.

- அவ்வாறான ஒரு பிரச்சினை தொடர்பாக மாணவரின் மாற்றுத் தீர்வுகளை வரிசைப் படுத்துங்கள். அந்தந்த மாற்றுத் தீர்வு யோசனைகளை முன்வைப்பதற்கு ஏதுவாக அமைந்த விடயங்களை வெளியிடவும், அவற்றுக்கு தன்னடக்கத்துடன் செவிமடுக்கவும் பழக்கப்படுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  **வகுப்பைச் சுத்தம் செய்வதற்கான வேலைத்திட்டம்**

  **மாற்றுவழிகள்:**
  1.
  2.
  3.
  4.
  5.

- அவ்வாறான ஒவ்வொரு மாற்று வழியும், தமது அனுகூலத்துக்கும், பிரதிகூலத்துக்கும், ஏனையோரின் அனுகூலத்துக்கும் பிரதிகூலத்துக்கும் காரணமாகும் விதத்தைப் பற்றிக்கலந்துரையாட மாணவரை வழிப்படுத்துங்கள். அதற்கமைய தமக்கும் ஏனையோருக்கும் நன்மைகளே ஏற்படத்தக்க, விளைதிறன்மிக்க தீர்மானங்களை எடுக்க வழிகாட்டுங்கள். (எனினும், ஆசிரியர் எடுக்கும் தீர்மானங்கள் தொடர்பாக மாணவரை வழிப்படுத்துவது எதிர்பார்க்கப்படவில்லை. பிள்ளைகளுக்கு விளை திறனுடைய வகையில் தீர்மானமெடுக்க வழிப்படுத்துவது மாத்திரமே எதிர்பார்க்கப் படுகின்றது.)

- இச்செயற்பாட்டின் பின்னர், பின்வரும் பண்புகள் வலியுறுத்தப்படும் வகையில் கலந்துரை யாட வழிப்படுத்துங்கள்.

- இக்கருத்துக்கள் வலியுறுத்தப்படும் வகையிலான ஒரு கலந்துரையாடலை மாணவரது மொழி மட்டத்தைப் பேணி நடத்துதல் வேண்டும். அவ்வாறன்றி பின்வருவனவற்றை ஒரு தடவை வாசிப்பதோ எழுதிக்கொள்வதோ எதிர்பார்க்கப்படவில்லை. கருப் பொருளின் பின்னர் நல்ல மனப்பாங்குகளின்பால் நிதமும் வழிப்படுத்தப்படும் வகையிலான ஒரு கலந்துரையாடலை நடத்துதல் எதிர்பார்க்கப்படுகின்றது.

**பிரச்சினை தொடர்பான உரையாடலின்போது தமது கருத்துக்களை இங்கிதமாக முன்வைக்க வழிப்படுத்தல்**

- பிரச்சினை தொடர்பாக, முன்வைக்கப்படும் பல்வேறு கருத்துக்களுக்கு அடக்கமாகச் செவிமடுக்கப் பழகுதல்
- பிரச்சினை தொடர்பாக தமது கருத்துக்களை உரையாடலில் பங்குபற்றும் ஏனை யோருக்கு இங்கிதமாக முன்வைத்தல்

**பிரச்சினைக்குத் தீர்வாக மாற்றுவழிகள் பலவற்றைத் தேட வழிப்படுத்தல்**

- முன்வைக்கப்படும் பிரச்சினையின் பல்வேறு அம்சங்களைக் (Profiles) கண்டறிதல்
- பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நோக்கும் சில மாற்று வழிகள் தொடர்பாக கவனஞ் செலுத்துதல்

**வலியுறுத்த வேண்டிய விடயங்கள்**

- தீர்மானமெடுக்க முன்னர் பிரச்சினை தொடர்பாக ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும்.
- ஒரு பிரச்சினைக்கு பல்வேறு மாற்றுத் தீர்வுகள் இருக்கலாம்.
- பிரச்சினையின் சகல அம்சங்கள் தொடர்பாகவும் கவனஞ் செலுத்துவதன் மூலமே மேன்மேலும் மாற்றுத்தீர்வு வழிகளை எண்ணிப்பார்க்க முடியும்.

ஒவ்வொரு மாற்றுத்தீர்வு வழியும் தமக்கும் அனுகூலமானதாகவும், பிரதிகூலமானதாக வும் அமையும் விதத்தையும், அது ஏனையோருக்கு அனுகூலமானதாகவும் பிரதி கூலமானதாகவும் அமையும் விதத்தையும் தேடியறிதலானது, பக்கச்சார்பின்றித் தீர்மானமெடுக்க உதவும்.

தெரிவுசெய்யப்படும் தீர்வு, அப்பிரச்சினை தொடர்பாக எடுக்கத்தக்க மிக நல்ல தீர்மானமாக அமைவது அவசியமாகும்.

## செயற்பாடு 9

- பின்வரும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையிலான ஆடல்பாடல்களில் ஈடுபட வாய்ப்பளியுங்கள்.
  - ஏனையோருக்கு பரிவுணர்வு காட்டல்
  - மலர்ச்சியாக நடந்துகொள்ளல்
  - உணர்வுகளுக்கு ஆளாகாதவாறு தமது கருத்துக்களை முன்வைத்தல்
  - ஒத்தாசையாக வாழ்வது அவசியம்

**மனித நடத்தைகள்**

முரண் பாடின்றி வாழ்ந்திடுதல்
முக்கிய மான பண்பாகும்
முரண்பாடு தன்னை அகற்றிடவே
முயலுதல் நமது கடனாகும்

ஒருவர் கருத்தை ஒருவர் புரிந்தால்
ஒற்றுமை தானே உருவாகும்
ஒன்று பட்ட உணர்வாலே
உயர்வு நாமும் கண்டிடலாம்

அனைவரும் சமமென உணர்ந்து விட்டால்
அமைதி மனதிற் பிறந்திடுமே
பிரச்சினைகள் எதுவும் இன்றி
பிரியமுடன் நாம் வாழலாம்.

***கவிஞர் த. துரைசிங்கம்***
***நன்றி: சிறுவர் பாடல்கள்***

- மேற்படி கருத்துக்கள் வலியுறுத்தப்படும் வகையில் இரசனையுடன் ஆடிப்பாட மாணவரை வழிப்படுத்துங்கள்.

- ஆடல் பாடல்களின் பின்னர், மேற்படி கருத்துக்களை வலியுறுத்தி, மலர்ச்சியுடனும் ஒற்றுமையாகவும் செயற்படுவதன் பெறுமானத்தையும் வலியுறுத்துங்கள்.

## செயற்பாடு 10

- மாணவர் ஒவ்வொருவரதும் திறமைகள் பற்றி வகுப்பு மாணவருடன் உரையாடுங்கள். ஒவ்வொருவருக்கும் யாதேனும் திறன் - ஆற்றல் உண்டு என்பதை வலியுறுத்துங்கள்.

- மாணவரை இருவரிருவராக அமரச் செய்யுங்கள். ஒவ்வொருவருக்கும் தமது திறமைகள் தொடர்பாக மற்றையவருக்குக்கூற இடமளியுங்கள்.

- அவ்வாறு கூறும்போது செவிமடுத்திருப்பவருக்கும்கூட அவ்வாறு கூறும் பிள்ளையின் திறமைகளையும் நற்பழக்கங்களையும் முன்வைக்கலாம்.

***எடுத்துக்காட்டு:***

**முதலாம் பிள்ளை:** எனக்கு அழகாகச் சித்திரம் வரைய முடியும். பிராணிகள் என்றால் எனக்கு நல்ல விருப்பம்

**இரண்டாம் பிள்ளை:** ஏனையோருக்கு உதவி செய்வதிலும் உங்களுக்கு விருப்பம் தானே!

- நான்கு சோடிகள் வீதம் சேர்ந்து குழுக்களாகுமாறு வழிப்படுத்துங்கள். தம்முடன் சோடியாக இருந்த பிள்ளையின் திறமைகளை குழுவினருக்கு முன்வைக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.

- இவ்வாறாக ஒவ்வொரு மாணவனும்/மாணவியும் ஏனைய மாணவர்களது திறமை களையும் நற்பண்புகளையும் ஆற்றல்களையும் வகுப்பில் முன்வைத்தல் வேண்டும்.

- குழுவில் இருக்கும் மாணவரின் நற்பண்புகள், திறமைகள், ஆற்றல்களை உள்ளடக்கிய ஒரு பட்டடியலைத் தயாரிக்க மாணவரை வழிப்படுத்துங்கள். அப்படியலில் இருந்து முக்கியமான திறமைகளையும், நற்பண்புகளையும் ஆற்றல்களையும் தெரிவுசெய்து மேலுமொரு பட்டியல் தயாரித்து ‘‘உங்களுக்கு நாங்கள் தருபவை!’’ எனும் தலைப்பில் ஒரு சுவரொட்டி தயாரிக்க வழிப்படுத்துங்கள்.

சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் - கணிப்பீட்டு அறிக்கைப் படிவம்

கணிப்பீட்டு அளவுத் திட்டம்
வெற்றிகரமாகச் செய்கிறார். ✓
இடர்ப்படுகிறார் / மேலும் உதவி தேவைப்படுகின்றது. •

| | | | | | மாணவர் பெயர் | கருப்பொருள் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 01. சமூகத்தின் நல்வாழ்வுக்கு வழிகோலத்தக்க கடமைகள், பொறுப்புக்கள். உரிமைகள், பொறுப்புக்களின்பால் கவனஞ்செலுத்தி உணர்வுப் பகிர்வுடன் துலங்கள் காட்டுவார். | 1 |
| | | | | | 02. சட்டதிட்டங்களை மதித்து நடந்துகொள்வார். | |
| | | | | | 03. சில பிராணிகளின் சிறப்பான ஆற்றல்களைக் கூறுவார். | 2 |
| | | | | | 04. பிராணிகளின் இருப்பு தொடர்பாகத் தம்மால் செய்யக்கூடியவற்றை விவரிப்பார். | |
| | | | | | 05. பிராணிகள் மூலம் மனிதனுக்குக் கிடைக்கும் பயன்களை விளக்குவார். | |
| | | | | | 06. பிராணிகளின் குரலினது பல்வகைமையின் வியத்தகு தன்மையை மதிப்பார். | |
| | | | | | 07. இலங்கையின் அமைவைக் குறிப்பிடுவார். | 3 |
| | | | | | 08. நிலத்தின் அழகைப் பேணுவதற்காகப் பங்களிப்புச் செய்வார். | |
| | | | | | 09. வானத்தை அவதானித்து இனங்கண்ட சில பண்புகளை கூறுவார். | |
| | | | | | 10. மண்ணின் பல்வகைமையைப் பரிசோதனை ரீதியில் முன்வைப்பார். | |
| | | | | | 11. காற்றின் தொழிற்பாடு தொடர்பாகத் தனது அனுபவங்கள் சிலவற்றை கூறுவார். | 4 |
| | | | | | 12. நாளாந்த செயற்பாடுகளின்போது பண்டங்கள், சேவைகளை வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் கையாள்வார். | |
| | | | | | 13. பண்டங்களைக் கொள்வனவு செய்யும்போதும், பண்டங்களைக் கையாளும் போதும் கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் எவை எனக் குறிப்பிடுவார். | |
| | | | | | 14. மரஞ்செடிகொடிகள் மூலம் மனிதன் பெறும் பயன்களை விவரிப்பார். | 5 |
| | | | | | 15. மரஞ்செடிகொடிகளின் இருப்புக்காகத் தனது பங்களிப்பு எவ்வாறானது என விவரிப்பார். | |
| | | | | | 16. அயற்சூழலில் மரஞ்செடிகொடிகளின் பல்வகைமை மதித்து, அவற்றைப் பேணி வருவதில் பங்களிப்புச் செய்வார். | |
| | | | | | 17. நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவார். | 6 |
| | | | | | 18. போதுமான அளவுக்கு நீரை நுகர்வார். | |
| | | | | | 19. நீர் மாசடைவதைத் தவிர்க்கக்கூடிய விதத்தை விவரிப்பார். | |
| | | | | | 20. நீரினால் இயக்கத்தக்க உபகரணங்களின் மாதிரிகளை அமைப்பார். | |
| | | | | | 21. பயிர்ச் செய்கையின்போது தாம் பெற்ற அனுபவங்களைக் கூறுவார். | 7 |
| | | | | | 22. பயிர்களைச் செய்கை பண்ணுவதற்காக மாற்று வழிகள் சிலவற்றை விவரிப்பார். | |
| | | | | | 23. இயற்கையான அனர்த்தங்கள் மற்றும் நிகழும் விபத்துக்கள் எவை எனக் குறிப்பிடுவார். | 8 |
| | | | | | 24. விபத்தொன்றின் போது செயற்பட வேண்டிய விதத்தை விளக்குவார். | |
| | | | | | 25. நாட்டின் அபிவிருத்திக்காக சேவை செய்த சில அரசர்களை இனங்கண்டு குறிப்பிடுவார். | 9 |
| | | | | | 26. வரலாற்று முக்கியத்துவமுடைய ஓர் இடம் பற்றிய தகவல்களை அறிக்கைப்படுத்துவார். | |
| | | | | | 27. வரலாற்று முக்கியத்துவமுடைய இடங்களைக் காப்பதற்காகப் பங்களிப்புச் செய்யக்கூடிய விதத்தை விவரிப்பார். | |
| | | | | | 28. கூட்டாகச் செய்யக்கூடிய வேலைகளைத் திட்டமிடுவது தொடக்கம் வெற்றிகரமாக முடிவடையும் வரை பங்களிப்புச் செய்வார். | 10 |
| | | | | | 29. வேலைகளை இலகுபடுத்திக்கொள்வதற்காக நாளாந்த வேலைகளில் பொருத்தமான உத்திகள் முறைகளைக் கையாள்வார். | |
| | | | | | 30. வேலைகளை இலகுபடுத்திக்கொள்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய எளிமையான உபகரணங்களை அமைப்பார். | |
| | | | | | 31. சகல மக்கட் பிரிவினதும் தனித்துவத்தைப் பேணி ஒற்றுமையாகச் செயற்படுவார். | 11 |
| | | | | | 32. நாட்டின் சுதந்திரத்துக்காக உழைத்து, நாட்டிற்கு நற்பெயரை ஈட்டிக்கொடுத்தோரின் நடத்தைப் பண்புகளில் சிலவற்றைக் கூறுவார். | |
| | | | | | 33. நடத்தையில் உடன்பாடான மாற்றத்துக்காக தமது நடத்தையைச் சீராகப் பேணி வருவார். | 12 |
| | | | | | 34. தமதும் ஏனையோரதும் கல்வி நடவடிக்கைகளின் போதும் உதவி தேவைப்படும் ஏனைய சந்தர்ப்பங்களின்போதும் உதவி புரிய முன்வருவார். | |
| | | | | | 35. பாடசாலைச் சூழலின் அழகைப் பேணி வருவதில் பங்களிப்பார். | |
| | | | | | 36. தகவல் பெறும் மற்றும் முன்வைக்கும் முறைகளைப் பொருத்தமானவாறு பயன்படுத்துவார். | 13 |
| | | | | | 37. கிடைக்கும் தகவல்களைப் பகுத்தாய்ந்து பொருத்தமான தகவல்களைத் தெரிவுசெய்வார். | |
| | | | | | 38. தமது பங்களிப்புடன் உற்பத்தி செய்யும் உணவுப் பயிர்களைத் தமது உணவு வேளையுடன் சேரத்துக் கொள்வார். | 14 |
| | | | | | 39. வயதுக்குப் பொருத்தமான உயரத்தையும் நிறையையும் பேணி வருவார். | |
| | | | | | 40. உணவு பரிமாறும் மற்றும் உணவு உட்கொள்ளும் சரியான ஒழுங்கு முறைகளைப் பின்பற்றுவார். | |
| | | | | | 41. பண்டைய மற்றும் தற்கால போக்குவரத்து முறைகளில் காணப்படும் சிறப்பம்சங்களை விவரிப்பார். | 15 |
| | | | | | 42. நாளாந்த நடவடிக்கைகளின்போது பொறிமுறைச்சக்தி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களை விவரிப்பார். | |
| | | | | | 43. வீதியைப் பயன்படுத்தும்போது பின்பற்ற வேண்டிய சட்டதிட்டங்கள், ஒழுங்கு விதிகள் தொடர்பாகக் கவனஞ் செலுத்திச் செயற்படுவார். | |
| | | | | | 44. ஏனையோரின் கௌரவம் பாதுகாக்கப்படும் வகையில் செயற்படுவார். | 16 |
| | | | | | 45. தேவையான சந்தர்ப்பங்களில் மாற்றுத் தீர்வுகளைப் பிறப்பித்துச் செயற்படுவார். | |

# செயற்பாட்டு அடிப்படையிலான வாய்மொழி ஆங்கிலம்

## அறிமுகம்

முதன்மை நிலை ஒன்றிலும் இரண்டிலும் செயற்பாட்டு அடிப்படையிலான வாய்மொழி ஆங்கிலத்தைப் பயன்படுத்தல் தொடர்பாக அனுபவத்தைப் பெற்றுள்ள மாணவர்களை மேலும் வளப்படுத்துவதுடன் தொடர்பாடலுக்காக ஆங்கில மொழியைப் பயன்படுத்தும் அனுபவத்தையும் வழங்குதல் முதன்மை நிலை மூன்றிலும் எதிர்பார்க்கப்படுகின்றது. முதலாம், இரண்டாம் தரங்களில் தனிச்சொற்கள், சோடிச் சொற்கள், கட்டளைகள், வாழ்த்துக்கள், சொற்றொடர்கள், சிறிய வாக்கியங்கள் என்பவற்றைப் பயன்படுத்தப் பழகிய மாணவர்கள் 3ஆம், 4ஆம் தரங்களில் ஆங்கில வாக்கியங்களைப் பேசுதல், அவற்றை விளங்கிக் கொள்ளல் முறைகள் பற்றிய அனுபவத்தைப் பெற்றுள்ளனர். 5ஆம் தரத்தில் இவற்றை மேலும் வளமூட்டுவதற்கு வழிவகுக் கப்பட்டுள்ளன.

இது முதலாம் இரண்டாம் தரங்களில் செய்த செயற்பாடுகளிலும் பார்க்க ஓரளவு விரிவுபடுத்தப்பட்ட ஒரு செயற்பாடாகும். மூன்றாந் தரத்திலிருந்து ஆங்கிலம் கற்பிப்பதற்காக ஒரு ஆங்கில ஆசிரியர் வருகை தந்து முறையாக ஆங்கில மொழியைக் கற்பிப்பார். இது நான்காம், ஐந்தாம் தரத்திலும் மேற்கொள்ளப்படும். இத்தரத்திலும் முறைசார் ஆங்கில மொழியோடு சமாந்தர நிலையில் செயற்பாட்டு அடிப்படையிலான வாய்மொழி ஆங்கிலமும் கற்பிக்கப்படும். இதற்காக செயற்பாட்டு அடிப்படையிலான வாய்மொழி ஆங்கிலம் தொடர்பான வேலைத்திட்டத்திற்கு ஆங்கில பாட ஆசிரியரின் உதவியை வகுப்பாசிரியர் பெற்றுக்கொள்ளவும் முடியும். அதனால் ஆசிரியர் இருவருக்குமிடையே ஏற்படுகின்ற அன்னியோன்னிய புரிந்துணர்வு, உதவி ஒத்தாசை என்பவற்றில் இவ்வேலைத்திட்டத்தின் வெற்றி தங்கியுள்ளது.

இலகுவான தனி வாக்கியங்களாக ஆங்கிலத்தில் செவிமடுக்கக் கூடியவற்றை விளங்கிக் கொள்வதற்கும் அதே அடிப்படையில் தமது கருத்துக்களை இலகுவான ஆங்கில வாக்கியங்களில் கூறுவதற்கும் ஏற்ற வகையில் மாணவர்களுக்கு ஆற்றலைப் பெற்றக் கொடுப்பது முதன்மை நிலை 3இல் எதிர்பார்க்கப்படுகின்றது.

இது தொடர்பாக நடாத்தப்படுகின்ற செயற்பாடுகளை மூன்று சந்தர்ப்பங்களில் பயன்படுத்தலாம்.

(i) வகுப்புக்குச் சமூகமளிக்கும் ஆங்கில பாட ஆசிரியர் ஆங்கில பாடத்திற்கு ஒதுக்கப் பட்டுள்ள பாடவேளையில் பாடத்திட்டத்திற்கு ஏற்ப ஆங்கிலமொழி கற்பித்தல்

(ii) முதன்மை நிலை ஒன்று, இரண்டு ஆகியவற்றிற் போன்றே சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் மற்றும் கணித பாடங்களுக்குரிய பாட வேளைகளையும் ஓய்வு நேரங்களையும் பயன்படுத்தி வகுப்பாசிரியர் மாணவர்கள் ஆங்கிலம் பேசுவதற்கும் ஆங்கிலத்தைக் கேட்பதற்கும் சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொடுத்தல்

(iii) இவற்றிற்கு மேலதிகமாக மாணவர்கள், வகுப்பாசிரியர், ஆங்கிலப்பாட ஆசிரியர் ஆகிய மூன்று பகுதியினரும் வாரத்திற்கு ஒரு தடவை சேர்ந்து நடத்துகின்ற உரையாடல் வேலைத்திட்டம் மூன்றாம் தரத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு புதிய அம்சமாகும். இந்த அம்சம் நான்காம், ஐந்தாம் தரங்களிலும் அறிமுகப் படுத்தப்படும்.

- சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடத்தினூடாகக் கட்டியெழுப்பப்பட்ட செயற் பாடொன்றின் அடிப்படையில் உரையாடல் நடைபெறும் வேளையில் ஆங்கில மொழியைப் பூரணமாகப் பயன்படுத்துவதோடு, செயற்பாடுகளையும் மகிழ்ச்சிக்குரிய விளையாட்டுக்களையும் பயன்படுத்தி இதனை விருத்தி செய்ய வேண்டும். இதற்காக வாரத்திற்கொருமுறை சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகளுக்குரிய பாடவேளைகளுள் ஒரு பாடவேளையை ஒதுக்கிக் கொள்ளலாம்.

- மேற்கூறப்பட்டவாறு ஒதுக்கிக்கொள்ளப்படும் பாடவேளை வகுப்பாசிரியரும், ஆங்கிலப் பாட ஆசிரியரும் ஒருமித்துச் சமூகமளிக்கக்கூடிய பாடவேளையாக இருத்தல் வேண்டும். **கால அட்டவணை தயாரிக்கும் போது இப்பாடவேளையை ஒதுக்குவதற்கு அதிபர் விசேட கவனஞ் செலுத்துதல் வேண்டும்.**


- இவ்வேலைத்திட்டத்தில், எழுதுதல், வாசித்தல், மனனஞ் செய்தல் என்பவற்றில் மாணவரை ஈடுபடுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளவும். அதற்குப் பதிலாக மாணவர் களும் ஆசிரியர்களும் ஏதேனும் செயற்பாடொன்றை உள்ளடக்கியதாக எளிய உரையாடலை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் மாணவர்களது ஆற்றலை வளர்க்கக்கூடியதாக உரையாடலைத் திட்டமிட்டுக் கொள்வது முக்கியமாகும். இதில் குறித்த ஒரு வாக்கியத்தை பல தடவை உச்சரிக்கச் செய்வதனூடாக மாணவர்களின் திறனை விருத்தி செய்துகொள்ளக் கூடியவாறு உரையாடல்களைத் திட்டமிட்டுக் கொள்ள முடியும்.

  இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள சொற்கள், வாக்கியங்கள் அனைத்தையும் பயன்படுத்த வேண்டும் என்பது நியதியில்லை. பொருத்தமான சந்தர்ப்பங்களில் பொருத்தமான சொற்களையும் வாக்கியங்களையும் பயன்படுத்தக்கூடிய சுதந்திரம் ஆசிரியருக்குக் குண்டு.

- தரம் 5 மாணவர்கள் விளங்கிக்கொள்ளக் கூடிய உரையாடலில் பயன்படுத்தக்கூடிய இலகுவான சொற்களைத் தெரிவுசெய்து இங்கு பயன்படுத்தக்கூடிய சொற்களஞ்சி யத்தை ஒழுங்கு செய்தல் வேண்டும். தரம் 1, 2, 3, 4 ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளில் அடங்கியுள்ள சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்கள், கட்டளைகள், வாழ்த்துக்கள், வேண்டுகோள்கள் போன்றவற்றையும் இங்கு பயன்படுத்தலாம். இனங்கண்டு கொண்ட வாக்கியங்களை வகுப்பறையிலும் வகுப்பறைக்கு வெளியேயும் மீண்டும் மீண்டும் பலமுறை பயன்படுத்தக்கூடியதாக மாணவர்களை ஆசிரியர் ஊக்குவிக்க வேண்டும்.

- இவ்வாறான செயற்பாடுகளில் கலந்துகொள்வதற்கு முன்னர் அதற்கான பூரண ஆயத்தத்தை மேற்கொள்ளல் அவசியமாகும். அதிபரின் ஆலோசனைக்கு ஏற்ப ஐந்தாந்தர வகுப்பாசிரியரும் ஆங்கிலப் பாட ஆசிரியரும் ஒன்றாகச் சேர்ந்து முன்னாயத்தத்தைச் செய்து கொள்ளல் எதிர்பார்க்கப்படுகின்றது.

# ஆங்கில வேலைத்திட்டங்கள்




## நோக்கம்:

முதன்மை நிலை 3 இற்கு வந்துசேரும் மாணவர் தொடர்பாக செயற்பாட்டு அடிப்படையிலான வாய்மொழி ஆங்கில வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது கீழ்வரும் நோக்கங்களை அடைய எதிர்பார்க்கப்படுகின்றது.

1. இலகுவான ஆங்கிலச் சொற்களையும் வாக்கியங்களையும் பயன்படுத்தி அன்றாட வாழ்வில் தொடர்பாடுவார்.

2. அன்றாட தொடர்பாடலின்போது இலகுவான ஆங்கிலச் சொற்களையும் வாக்கியங்களையும் பயன்படுத்துவதில் விருப்புக்காட்டுவார்.

# செயற்பாட்டு அடிப்படையிலான வாய்மொழி ஆங்கிலம் மாதிரிச் சொல்வளம்

## ACTIVITY BASED ORAL ENGLISH
## AN EXAMPLE OF A VOCABULARY

### Objects in the classroom

chair, cupboard, desk, blackboard, chalk, bags, books, bottles, register, record book, table, table cloth, duster, posters, eraser, pen, pencil, gum, glue, clay, pictures, calendar, ruler, lunch box

### Persons in the school

principal, teacher, monitor, captain, security guard, peon, vice princpal, group leader, watcher, prefect

### Common places inside the school

art-room, classroom, canteen, dental clinic, corridor, garden, well, gate, fence, tap, dancing-room, shrine room, library, office, toilet, playground, music-room, sick room, staff room

### Common places outside the school

home, house, market, dispensary, hospital, airport, post office, bus stop, shop, fair, bakery, pharmacy, police station, railway station, temple, church, kovil, mosque, boutique

### Persons outside the school

brother, sister, father, aunt, doctor, driver, policeman, postman, priest, mother, grandfather, nurse, uncle, grandmother, buddhist monk

### Names of toys

ball, bat, doll, building block, balloon, kite, whistle, toy car, toy aeroplane, badminton rackets, shuttlecock

### Common food items and drinks

bread, buns, cakes, beans, butter, cheese, ice cream, chocolate, dhal, hoppers, rice and curry, beetroot, brinjal, potatoes, toffees, biscuits, cabbage, carrot, milk, tea, curd and treacle, string hoppers, fish, meat, coffee, orange juice, water

### Parts of body

eyes, ears, face, nose, arms, hands, legs, fingers, feet, toes, thumb, mouth, chin, cheeks, chest, stomach, nails, hair

### Fruits

mango, pineapple, plantain, papaw, wood apple, lemon, orange, grapes, apple, sweet melon

## Vehicles

bus, bicycle, car, lorry, train, tractor, aeroplane, helicopter, ship, boat, motor cycle, van, cart, jet plane, foot cycle

## Common animals and birds

dog, cat, cow, hen, elephant, horse, parrot, peacock, ant, spider, bee, goat, crow, pigeon, butterfly, mosquito, rabbit , cockroach, gecko, buffalo

## Common flowers

rose, sunflower, shoe-flower, carnation, temple flower, jesmine, lotus, blue water lily

## Colours

red, blue, white, green, yellow, pink, black, brown, orange, maroon, violet, purple, gold, silver, grey, light blue/green, dark blue/ green

## Numbers

one, two, three, four, five, six, seven, eight, nine, ten, eleven, twelve, thirteen, fourteen, fifteen, sixteen, seventeen, eighteen, nineteen, twenty, thirty, forty, fifty, sixty, seventy, eighty, ninety, one hundred , one thousand

first, second, third, fourth, fifth, sixth, seventh, eighth, nineth, tenth

## Natural environment

sky, sun, moon, stars, clouds, rainbow, wind, rain, thunder, lightening, mist, waterfalls, river, sea, beach, lake, tanks, trees, flowers, animals

## Activity Based Oral English

| Theme No. | Theme | Suggested Vocabulary |
|---|---|---|
| 01 | Our wel being | wish, worship, beautiful, like, mind, relax, unity, group, leader, win, lose, listen, peaceful |
| 02 | Animals around us | animals, legs, spiders, smell, message, malaria, fly, blood, rat, sick, parrot, snake, deer, rabbit, tortoise, hawk, shell, jungle fowl, kangaroo, crow, bee, owl, earthworm, chameleon |
| 03 | Earth and Sky | map, beach, rivers, weeds, nature, cloud, birds, fly, cover, district, village, tracing paper, direction |
| 04 | Marketplace | buying, selling, goods, weighing, measuring, fresh, trader, seller, buyer, labels/wrappings, expiry(Ex.), price, weight, manufactured date(MFD) |
| 05 | Plants Trees and Creepers | herbs, honey, coconut-oil, spices, decorate, pod, nest, caterpillar, shade, drink, ants, red ants, winged beans, country beans, bitter gourd, maize, pumpkin, paddy, green gram, cucumber, snake gourd, flour, colour, shape, size, raw food, cooked food, medicine, timber, fuel, use |
| 06 | Water | ice, hot water, warm water, cool water, temperature, salt, sugar, spoon, tea, stream, sea, river, well, tank, rain water |
| 07 | Home Garden | agriculture, vegetable bed (flower bed), insects, soil, sunny, grow, compost, fence, rain, sun, protect, okra, green leaves, brinjal, frog, potatoes |
| 08 | Safety and Protection | safe, dangerous, floods, thorns, earth slip,stale food, serpent(reptile), poison, vomit, swell, rash, first aid box |
| 09 | Our heritage | history, fort, coins, king, queen, game, temple, church, proud, important place, wooden carvings, historical places, tanks, buildings |
| 10 | Ways of making work easy | work, heavy, lift, bottle opener, stick, move, wheel, wheelbarrow, machine, magnet, pin, torch, batteries, push, pull, knife, scissors, a piece of string/rope |

| | | |
|---|---|---|
| 11 | We are Sri Lankan | shape(of Sri Lanka), globe, place, North, South, East, West, Island, India, Maldives, Pakistan, Bhutan, Nepal, resources, coconut shell |
| 12 | Changes we can make | plan, cobweb, clean, tidy, decide, leader, save, time, song, discussion, plates, good habits |
| 13 | Man and Information | world, computer, post office, stamp, post box, envelope, post master, stage, post card, news, message, leaflet, newspapers, magazines, advertisements |
| 14 | Our Food | balanced diet, fresh, clean, apron, kitchen, sweets, wash hands, daily, plate, cook, eggs, hungry, thirsty, boiled water, salt, tea strainer, nutrients, fat, iron, ,milk food, king coconut, young coconut |
| 15 | Transport | bridge, bus stand, yellow line, crossing by road(s), railway line, hospital, school, temple, police, pavement, flyover |
| 16 | Human Behavior | borrow, sweep, promise, queue, forget, problem, friend, friendly, draw, smile, help, game, unity |

# CLOSSROOM LANGUAGE

**Greetings and wishes**

Good morning
Good afternoon
Good evening
Good night
Good bye
Good luck
All the best
Happy birthday
Happy New year
Merry Christmas

**Requests**

May I come in/go out/go home?
May I go to the toilet/office/canteen?
Silence please
Listen to me please
Hurry up please
Be quiet
Be careful
Please do your home work
Please come to school every day
Tell your parents…
Go home straight
Don’t shout please
Please try to be clean/be good
Please think about others

**Polite forms**

Thank you
Please excuse me
I am sorry
Can I help you
Could you please bring me the duster/ some chalk
Please take this to the office/ to your parents
Bring me the register please
How are you?
Take care
Look after your self
Be careful
Can I see…?
Do you like..?
Please bring me…

**Simple commands**

Hands up/down,
Run, jump, start, stop,
Clap your hands get back
Throw, catch, pass come forward
Look at me open your books
form a line/circle sweep
Don’t go out cut, paste
Get ready draw, colour
Come here write, read
Go there (out) sing, dance, play
Bring (your book) give me the book
Show

Please give me a pencil/book/ruler
Please give me a piece of paper
Please give me a piece of chalk
Please clean the blackboard
Please sit down/stand up
Please be silent
Please open your book
Please look at the picture
Please wipe your feet/nose
Please stop there
Please go out
Do me a favour please

**Praising**

good
very good
well done
That’s right
I like it
Good work
Excellent
Keep it up
Very well
You have done well
That’s good work
Wonderful

**Simple answer forms**

This is my…..
I have got a …/ I've got a …
It's….
I am going to the….
Here it is.

I am hungry/thirsty.
I am reading a book.
I am drinking water.
I am coming to the class.
I am going out.
I am watering the plants.
I am closing my bag.

I want to watch a match.
I want to pluck flowers.
I want to sing/dance/play.

I will come tomorrow.
I will bring flowers.
I will sweep the classroom.
I will clean the blackboard.
I will walk slowly.
I can hear you.
I can come now.
I can't hear you.

**Simple question forms**

Who is shouting?
What's this?
What's that?
What's it?

Are you ready?

Is this yours?
Is this your......?
Is it a ………..?

What do you like?
Where are you going?
Where is the…?
What can you see in the…?

How many?
What are they?
What colour is the......?
What are the colours of .......?
What is it?
What is this?
Where do you live?

**Simple suggestions**

Let's go home.
Let's go out.
Let's sing a song.
Let's go to the playground

Shal we get ready?
Shall we go the play ground?
Shall we start the game?
Shall we wash our hands?
Shall we sing a song?
Shall we pluck flowers?
Shall we stop now?

# கணிதப்பாடத்திற்காக அறிமுகப்படுத்தப்பட்ட சொற்கள்

| | |
|---|---|
| number | hundred |
| order | thousand |
| ordering | whole |
| number pattern | half |
| add | fraction |
| digit | bill |
| two digit numbers | angle |
| subtract | direction |
| multiply | solid |
| divide | plane |
| balance | spatial patterns |
| time | money |
| hour | data |
| minutes | front view |
| clock | side view |
| date | plan |
| day | problem solving |
| month | square |
| year | triangle |
| ruler | rectangle |
| length | straight line |
| metre | cube |
| weigh | cuboids |
| kilogram | sphere |
| gram | area |
| volume | graph |
| litter | picture graph |
| millilitre | table |
| space | transaction |
| decimal | symmetry |
| model | axis |
| week | measure |
| second | measurement |
| less than | terms |
| greater than | times |
| | symbols |

# ஆங்கில உரையாடல் நிகழ்ச்சித் திட்டம்

## அறிமுகம்

ஐந்தாந்தர மாணவர்களுக்காக மூன்று சந்தர்ப்பங்களில் ஆங்கிலமொழி முன்வைக்கப்பட்டுள்ளன.

1. முதலாம், இரண்டாம் முதன்மை நிலைகளிற் போன்றே வகுப்பாசிரியரினால் சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள், கணித பாடங்களின்போது வாய்மொழி ஆங்கிலத்தைப் பயன்படுத்தல்

2. ஆங்கில மொழிப் பாடம் கற்பிக்கும் ஆசிரியரொருவரினல் முறைமையாக ஆங்கிலம் கற்பித்தல்

3. வகுப்பாசிரியர், ஆங்கிலமொழியைக் கற்பிக்கும் ஆசிரியர் மற்றும் மாணவர் ஆகியோரின் பங்குபற்றலுடன் இடம்பெறும் நிகழ்ச்சித்திட்டம் உரையாடல் சார்ந்த ஆங்கிலம் எனப்படும்.

வாரத்துக்கு ஒரு தடவை **''சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்''** எனும் பாடத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள நேரத்துள் தெரிவு செய்து கொண்ட ஒரு பாடவேளையை உரையாடல் சார்ந்த நிகழ்ச்சித் திட்டத்துக்காகப் பயன்படுத்துமாறு விதந்துரைக்கப்பட்டுள்ளது. இதற்காக அதிபரது ஒத்துழைப்பையும் பெற்று ஆங்கிலமொழி கற்பிக்கும் ஆசிரியருக்கு வாரத்துக்கு ஒரு தடவை இந்நிகழ்ச்சித் திட்டத்துக்காக வகுப்பறைக்கு வருகை தரக்கூடியவாறு நேரசூசியை ஒழுங்குபடுத்திக்கொள்ளல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவருடன் நட்புடன் செயற்பாடுகளில் ஈடுபட்டு, இக்காலத்துள் அவர்களது ஆங்கில மொழிப் பயன்பாடு தொடர்பான தகைமையை மேம்படுத்துவதற்காக ஆசிரியர் இருவரும் செயலாற்றுவார்கள் என எதிர்பார்க்கப் படுகின்றது.

- ♦ மாணவர்கள் ஆங்கில மொழியை பேச்சின்போது பயன்படுத்துகையில் அதனைச் செவி மடுப்பதும், தாமும் அம்மொழியைப் பயன்படுத்திப் பேசுவதில் ஈடுபடுவதும் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோளாகும்.

- ♦ குறித்த வாரத்தில் அல்லது அதற்கு முந்திய வாரத்தில் கற்பிக்கப்பட்ட **''சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்''** எனும் பாடக் கருப்பொருள்களினூடாக இவ்வுரையாடல் கட்டியெழுப்பப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

- ♦ குறித்த வாரத்தில் தாம் கற்பித்த கருப்பொருள் தொடர்பாக, வகுப்பாசிரியர் கொண்டுள்ள விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஆங்கில ஆசிரியருடன் கூட்டாக உரையாடல் நிகழ்ச்சித் திட்டத்தைத் திட்டமிட்டுக் கொள்ளல் வேண்டும்.

- ♦ இரண்டு ஆசிரியர்களதும் அன்றாட பாடக்குறிப்புக்களில் இது இடம் பெற்றிருத்தல் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றிக்கு வழிகோலும்.

- ♦ நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் காலப் பகுதியுள் வகுப்பாசிரியர், ஆங்கில மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர், மாணவர் ஆகிய மூன்று பிரிவினரும் உரையாடலில் பங்குகொள்ள வேண்டியது இன்றியமையாதது

கருப்பொருள் சிலவற்றுக்கான மாதிரி ஆங்கில உரையாடல் நிகழ்ச்சிகள் சில அடுத்தடுத்த பக்கங்களில் தரப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சித் திட்டங்களை மாதிரியாகக் கொண்டு அவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்களை ஆக்கிக்கொள்வதற்கு ஆர்வம் காட்டுங்கள். எவ்வாறாயினும் எல்லா வாரங்களிலும் இவ்வாறான நிகழ்ச்சித் திட்டமொன்றை நடாத்துவதன் மூலம் மாணவர்களது ஆங்கிலமொழிப் பயன்பாடு சம்பந்தமான தேர்ச்சியை மேம்படுத்துவது அத்தியவசியமானது என்பதை கவனத்திற் கொள்ள வேண்டும்.

# கருப்பொருள் 02 - எம்மைச் சூழவுள்ள பிராணிகள்

### அறிமுகம் செய்யப்படும் வாக்கியங்களும் தொடர்புகளும்

I can see a ...........................
What can you see ................
near the .................
under the ..............
in the ....................
on the ...................
around the .............
I have .................................
It's a ...................................

### முன் ஆயத்தம்

இச்செயற்பாட்டை மேற்கொள்வதற்காக வேண்டி பாடசாலைத் தோட்டத்தில் பொருத்தமான இடமொன்றினை ஆசிரியர் தேர்ந்தெடுத்தல் வேண்டும். இங்கு மாணவர்கள் உரையாடுவதற்கு ஏற்ற விதத்தில் இடம், பொருள் மற்றும் உயிரினங்களையும் இனங்கண்டு கொள்ள வேண்டும்.

### செயற்பாடு - 1

வகுப்பு ஆசிரியரும் ஆங்கில ஆசிரியரும் கீழுள்ள விதத்தில் செயற்பாட்டை முன்வையுங்கள்.

ஆங்கில ஆசிரியர்
I can see a blue bird near the pond
What can you see?

வகுப்பு ஆசிரியர்
I can see a beautiful fish in the pond
What can you see?

ஆங்கில ஆசிரியர்
I can see a fat cat under the tree
What can you see?

வகுப்பு ஆசிரியர்
I can see a fence around the garden
What can you see?

மாணவர்களும் இவ்வாறே உரையாடலை வளர்த்துச் செல்வதற்குப் பயிற்சி அளியுங்கள். (குழுக்களாகப் பிரித்தோ, கூட்டமாகவோ)

**செயற்பாடு - 2**

| A | B |
|---|---|
| குழுவின் விடுகதை | குழுவின் விடை |

| A | B |
|---|---|
| குழுவின் விடை | குழுவின் விடுகதை |

தேவைப்படின் படத்தை அடிப்படையாகக்கொண்டு ஒவ்வொரு மாணவனுக்கும் ஒரு விடுகதையை ஆக்குவதற்கு ஆர்வமூட்டுங்கள். (இங்கு தேவைப்படின் ஆசிரியரின் ஒத்துழைப்பை மாணவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.)

விடுகதையை உருவாக்கியதன் பின்னர் மாணவர்கள் அவற்றை தங்களது நண்பர்கள் பலருக்கு முன்வைத்து அதற்கான விடையைப் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுங்கள். தமிழ் மொழிப் பாடத்தில் முன்வைக்கப்படும் விடுகதைகள் சிலவற்றை ஞாபகமூட்டி அவ்வாறே ஆங்கில மொழியிலும் விடுகதைகள் கேட்பதற்கும் அவற்றை ஆக்குவதற்கும் முடியும் எனக்கூறி செயற்பாட்டுக்குள் நுழையுங்கள்.

| | |
|---|---|
| ஆங்கில ஆசிரியர் | I can see at night<br>I have big eyes<br>What am I? |
| வகுப்பு ஆசிரியர் | It's a bat |
| ஆங்கில ஆசிரியர் | No, I lay eggs |
| வகுப்பு ஆசிரியர் | It's an owl |
| ஆங்கில ஆசிரியர் | Yes, you're correct |

இவ்வாறே;

| | |
|---|---|
| வகுப்பு ஆசிரியர் | I can fly<br>I have green feathrs<br>What am I? |
| ஆங்கில ஆசிரியர் | It's a parrot |
| வகுப்பு ஆசிரியர் | Yes, you're right |

# கருப்பொருள் 03 - நிலமும் வானமும்

## அறிமுகம் செய்யப்படும் வாக்கியங்களும் தொடர்களும்

Where does the wind blow now?
The wind blows to the south now.
to the west now.
to the east now.
to the north now.

## செயற்பாடு - 1

காற்று வீசும் திசையை காட்டக்கூடிய ‘‘காற்றுத் திசைகாட்டிக்கருவி’’ ஒன்றை உபயோகித்து வகுப்பு ஆசிரியரும் ஆங்கில ஆசிரியரும் தமக்கிடையே பின்வரும் அமைப்பில் உரையாடல் ஒன்றை அமைத்துக் கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| ஆங்கில ஆசிரியர் | Where does the wind blow now? |
| வகுப்பு ஆசிரியர் | The wind blows to the south now. |

ஊதுவதன் மூலம் காற்றுத் திசைகாட்டிக் கருவியின் திசையை மாற்றி,

| | |
|---|---|
| ஆங்கில ஆசிரியர் | Where does the wind blow now? |
| வகுப்பு ஆசிரியர் | The wind blows to the east now. |

இவ்விதமாக காற்றுத்திசைகாட்டிக் கருவியின் துணைகொண்டு பிள்ளைகளும் இவ்வுரை யாடலில் பங்கேற்பதற்கு வழியமைத்துக் கொடுங்கள்.

## செயற்பாடு - 2

காற்றின் நன்மை, தீமைகளைப் புலப்படுத்தக்கூடிய படம் ஒன்றையோ இரண்டையோ கொண்டு வந்து வகுப்பு ஆசிரியரும் ஆங்கில ஆசிரியரும் பின்வருமாறு உரையாட லொன்றில் ஈடுபடுவர். நன்கு செவிமடுக்கும்படி பிள்ளைகளுக்கு அறிவுறுத்துங்கள்.

| | |
|---|---|
| ஆங்கில ஆசிரியர் | What happens here? |
| வகுப்பு ஆசிரியர் | The wind breaks trees |
| ஆங்கில ஆசிரியர் | Right, What happens here |
| வகுப்பு ஆசிரியர் | The wind drops fruits |
| ஆங்கில ஆசிரியர் | Right, What happens here |

இவ்வாறு மேலுள்ள உரையாடலை பலமுறை மாணவர்கள் செவிமடுப்பதற்கு வழிவகுப்பர்.

அத்தோடு சுமார் ஐந்து மாணவர்களை உள்ளடக்கி பல குழுக்களை உருவாக்கி காற்றின் பல்வேறு நன்மை, தீமைகளைப் புலப்படுத்தும் படங்களை வழங்கி மேலுள்ளவாறு உரையாடலில் ஈடுபட வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 3

பின்வரும் பாடலைப் பாட மாணவரை வழிப்படுத்துங்கள்.

The moon shines clear as silver
The sun shines bright like gold
And both are very lovely
And very very old.

***by: C.D. Cole***

## கருப்பொருள் 06 - நீர்

### அறிமுகம் செய்யப்படும் வாக்கியங்களும் தொடர்களும்

What are you doing?

I am .................................
(1. bathing 2. Washing the clothes, 3. Watering the plants, 4. Drinking some water)


### முன் ஆயத்தம்



bathing



washing the clothes



watering the plants



drinking some water

### முன்னாயத்தம்

மேலுள்ள ஒவ்வொன்றிலும் 10 அட்டைகள் விகிதம் 40 அட்டைகளைத் தயார்செய்து கொள்ளுங்கள். பெரிய அளவில் 4 அட்டைகளை செய்து தெளிவாகப் படத்தை வரைந்து கொள்ளுங்கள். அந்த நான்கு அட்டைகளும் ஆசிரியர்களுக்குப் பார்ப்பதற்காகும்.

## செயற்பாடு

மாணவர்களை வட்டமாக நிற்கச்செய்து, பின்வரும் விதத்தில் செயற்பாட்டை அறிமுகப்படுத்துங்கள். ஓர் ஆசிரியர் மத்தியில் இருப்பர். அவர் மத்தியில் நின்று தாவரங்களுக்கு நீர் ஊற்றுவது போன்று பாத்திரமேற்று நடிப்பார். சுற்றியிருக்கும் ஆசிரியரும் மாணவர்களும் What are you doing? எனக் கேட்பார்கள். மத்தியில் நிற்கும் ஆசிரியர் தனது கையிலிருக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட அட்டையில் உள்ளவாறு I am watering the plant எனக் கூறுவார். அதற்கு watering the plant அட்டையைக் கையில் வைத்துக்கொண்டு வட்டத்தில் நிற்கும் மாணவர்கள் மரம் மாறுவது போன்று தங்களது இடத்தை மாற்றிக் கொள்வார்கள். மத்தியிலிருக்கும் ஆசிரியை வந்து வட்டத்தில் தனக்கொரு இடத்தைப் பெற்றுக்கொள்வார். அப்போது ஒரு பிள்ளைக்கு மத்திக்கு வருவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது.

இரண்டு ஆசிரியர்களும் இந்த விளையாட்டை மாணவர் நன்கு விளங்கிக்கொள்வதற்காக அவர்களுக்குத் தென்படக்கூடிய விதத்தில் பலமுறை செய்து காட்டுங்கள்.

## செயற்பாடு

**பின்வரும் பாடலைப் பாடுதல்**

1. I wash my face in the morning
   I wash my face in the morning
   I wash my face in the morning
   And hope to be happy and gay

2. I drink some water in the morning
   I drink some water in the morning
   I drink some water in the morning
   And hope to be happy and gay

3. I bathe myself in the morning
   I bathe myself in the morning
   I bathe myself in the morning
   And hope to be happy and gay

## கருப்பொருள் 14 - எமது உணவு


**அறிமுகம் செய்யப்படும் வாக்கியங்களும், தொடர்களும்**

1. What do you like for lunch?
   What do you like for breakfast?
   What do you like for dinner?
   What do you like for tea?

2. I like .................. (string hoppers, rice & curry, hoppers, milk rice, bread, nooldles etc.)

## முன் ஆயத்தம்

இச்செயற்பாட்டை வகுப்பறையினுள்ளோ அல்லது திறந்த வெளியொன்றிலோ செய்ய முடியும். இதற்காக ஒரு பந்தை எடுத்துக்கொள்ளுங்கள். ஓரளவு பெரியதொரு வட்டத்தை வரைந்து கொள்ளுங்கள். மாணவர்களும், வகுப்பு ஆசிரியரும், ஆங்கில ஆசிரியரும் வட்டத்தில் நின்று கொள்ளுங்கள். நான்கு மாணவர்களுக்கு உணவு உண்ணும் நான்கு வேளைகளைக் குறிக்கும் சுலோகங்கள் நான்கினை வழங்குங்கள்.




## செயற்பாடு

வகுப்பு ஆசிரியர் வட்டத்தின் மத்திக்குச்சென்று ஆங்கில ஆசிரியருக்கு பந்தை எறிவார். ஆங்கில ஆசிரியர் வட்டத்தின் மத்திக்குச் சென்றதும் உணவு நேரங்கள் குறிக்கப்பட்ட சுலோகங்களை கையிலேந்தியிருக்கும் ஒரு மாணவர் வந்து அதனை ஆங்கில ஆசிரியக்குக் காண்பிப்பார். அச்சுலோகத்தில் எழுதப்பட்டிருப்பதற்கேற்ப ஆங்கில ஆசிரியர்,

What do you like for lunch?
என்ற வினாவினை வகுப்பு ஆசிரியரிடம் வினவுவார்.
அப்போது வகுப்பாசிரியர்
I like .................................... (rice and curry, string hoppers, ...)
எனப் பதிலளிப்பார்.

பின்னர் ஆங்கில ஆசிரியர் வகுப்பு ஆசிரியருக்கு பந்தை எறிவார். வகுப்பு ஆசிரியர் வட்டத்தின் மத்திக்கு வருவார். மாணவரொருவர் ஒரு சுலோகத்தைக் காண்பிப்பார். அதில் எழுதப்பட்டுள்ள படி வகுப்பு ஆசிரியர் ஆங்கில ஆசிரியரிடம்,

What do you like for dinner?
என வினவுவார்.

அதற்கு ஆங்கில ஆசிரியர்,
I like........................... ( bread, string hoppers)
எனப் பதிலுரைப்பார்.

அதன் பின் ஆசிரியர்கள் இருவரும் விலகி நின்று இத்தொழிற்பாட்டை மாணவர்கள் மேற்கொள்ள சந்தர்ப்பமளியுங்கள். இச்சந்தர்ப்பத்தில் முன்பு ஆசிரியர்கள் இருவரும் அறிமுகப்படுத்திய வாக்கியங்களையும் பயன்படுத்த அறிவுறுத்துங்கள்.

# இரண்டாம் தேசிய மொழி - சிங்களம்

## அறிமுகம்

இரண்டாவது மொழி கற்பிப்பதனூடாக, நாம் இலங்கையர் என்ற வகையில் தம்முடன் வாழும் சகோதர மக்கள் பயன்படுத்தும் மொழியைக் கற்று ஒருவரோடொருவர் புரிந்துணர் வுடன் செயற்படக்கூடிய திறனை மாணவரிடத்தே விருத்தி செய்வது எதிர்பார்க்கப் படுகின்றது.

இரண்டாவது மொழியைக் கற்பிப்பதனூடாக மொழி தொடர்பான புலமையினை எதிர்பார்ப்பது கிடையாது. இருப்பினும் ஓரளவிற்கேனும் தொடர்பாடல் திறன் விருத்தியும் ஒருவரோடொருவர் புரிந்துணர்வினை ஏற்படுத்திக் கொள்வதும் எதிர்பார்க்கப்படுகின்றன. அத்தோடு இத்தரத்தில் அறிமுகப்படுத்தியுள்ள சொற்கள், வாக்கியங்கள் அநேகமானவை முன்னைய தரங்களில் அறிமுகப்படுத்தியவற்றின் தொகுப்பாக முன்வைக்கப்பட்டுள்ளன. மேலும் இது தரம் ஆறில் கற்பதற்கான பிரவேச அடித்தளமாகவும் அமையும்.

உயிரோட்டமுடைய தேசிய ஒருமைப்பாட்டையும் தேசிய ஒற்றுமையையும் ஏற்படுத்து வதற்கு அவசியமான ஆரம்ப அடித்தளத்தை இடுவதற்கு இரண்டாவது தேசிய மொழியைக் கற்றல் உறுதுணையாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்காக ஆரம்பக் கல்விப் பிரிவிற்கான தேர்ச்சிகளும் முதன்மைநிலை மூன்றில், இரண்டாவது தேசிய மொழியில் அடைய வேண்டுமென எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளும் இனங்காணப்பட்டுள்ளன.

## ஆரம்பக் கல்விப் பிரிவிற்கான தேர்ச்சிகள்

- ✓ தனது நாளாந்த தேவைகளை நிறைவு செய்துகொள்ளும் போது பொருத்தமான சொற்களையும் வாக்கியங்களையும் பயன்படுத்துவார்.
- ✓ மொழியினை செவிமடுத்து, கருத்துள்ள விதத்தில் துலங்குவார்.
- ✓ மொழியினைப் பயன்படுத்தும் போது பண்புடன் நடப்பார்.
- ✓ ஏனையோர் முன்னிலையில் தமது கருத்துக்களை வெளிப்படுத்த முன்வருவார்.
- ✓ வாசிக்கும் திறனை வெளிப்படுத்தி அதற்கேற்ப கருத்துள்ளவாறு துலங்குவார்.
- ✓ பாடல்களை செவிமடுத்து இரசனையுடன் பாடுவார்.
- ✓ சிங்கள மொழியைப் பயன்படுத்துவதன் மூலம் இரசனை பெறுவார்.
- ✓ தனக்கு சிங்கள மொழியில் உள்ள திறன் தொடர்பாக சுயமாக மதிப்பிட்டு மகிழ்வடைவார்.
- ✓ இலகுவான சொற்களை, வாக்கியங்களை எழுதிக் காண்பிப்பார்.
- ✓ சிங்களமொழியை பயன்படுத்தி இலகுவான பங்கேற்று நடித்தல்களில் ஈடுபடுவார்.

## முதன்மை நிலை மூன்றிற்கான தேர்ச்சிகள்

- அன்றாட வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களில் கட்டளைகள், வேண்டுகோள்கள் என்பவற்றுக்கு அவதானமாகச் செவிமடுத்துச் சந்தர்ப்பத்திற்கேற்பத் துலங்குவார்.
- அன்றாட தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு ஏனையோருடன் கலந்துரை யாடலில் ஈடுபடுவார்.
- அண்மித்த சூழலில் உள்ள பிராணிகள், பழங்கள், மரக்கறிவகைகள் போன்றவற்றில் சிலவற்றை இனங்கண்டு அவற்றின் பெயர்களைக் கூறுவார்.
- இலகுவான பாடல்களை அபிநயத்துடன் பாடுவார்.
- சரியான உச்சரிப்புடன் எண்களின் பெயர்களைக் கூறுவார்.
- வாரத்தின் ஏழு நாட்களினதும் பெயர்களை இனங்கண்டு அதற்கேற்பத் துலங்குவார்.
- அன்னியோன்னிய உறவை வளர்ப்பதற்கு நாளாந்த வாழ்விற்கு அண்மித்த பாத்திரங் களை ஏற்று இலகுவான பங்கேற்று நடித்தலில் ஈடுபடுவார்.
- பாடசாலையில் உள்ள ஆட்கள், பொருட்கள், இடங்கள் போன்றவற்றை இனங்கண்டு கூறுவார்.
- படமொன்றில் காணப்படுகின்ற நிகழ்வொன்றில் குறித்த சந்தர்ப்பமொன்றில் காணப்படு கின்றவற்றை இனங்கண்டு கூறுவார்.
- சிங்கள அரிச்சுவடியில் சில எழுத்துக்களை மட்டும் முறையாக விளங்கி அறிந்து உரிய வடிவில் எழுதுவார்.
- குறித்த சில தமிழ் எழுத்துக்களின் உச்சரிப்புகளுக்காக சிங்களத்தில் பல எழுத்துக்கள் பயன்படுவதை விளங்கிப் பயன்படுத்துவார்.
- சில உயிர்க் குறிகளைக் கொண்ட இலகுவான சொற்களை எழுதுவார்.
- அன்றாட நிகழ்வுகளுக்குப் பொருத்தமான சிறிய வாக்கியங்களை ஒழுங்கமைத்துச் சரியாக உச்சரித்துக் கூறுவார்.
- இலகுவான சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை ஒழுங்கமைத்து எழுதுவார்.

# பாடத்திட்டம்

## இரண்டாம் தேசிய மொழி (சிங்களம்) - தரம் 5

### தேர்ச்சி

- அன்றாட வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களில் கட்டளைகள், வேண்டுகோள்கள் என்பவற்றுக்கு அவதானமாகச் செவிமடுத்துச் சந்தர்ப்பத்திற்கேற்பத் துலங்குவார்.

வතුර දෙන්න - வ(த்)துற (Dh)தென்ன
පොත දෙන්න - பொ(த்)த (Dh)தென்ன
බත් දෙන්න - (B)பத் (Dh)தென்ன
පාඩම කියල දෙන්න - பாடம கியள (Dh)தென்ன

යන්න - யன்ன
ගන්න - (G)கன்ன
අහන්න - அஹன்ன
කියන්න - கியன்ன
කියවන්න - கியவன்ன
ලියන්න - லியன்ன
කන්න - கன்ன
බොන්න - (B)பொன்ன

### தேர்ச்சி

- அன்றாட தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு ஏனையோருடன் கலந்துரையாடலில் ஈடுபடுவார்.

**பாடசாலையில்**

ගුරුතුමා එයි ද? - (G)குரு(த்)துமா எய்(Dh)த?
වැසිකිළිය කොහේ ද? - வசி(க்)கிலிய கொஹே(Dh)த?
ආපන ශාලාව කොතැන ද තියෙන්නේ?- ஆபன சாலாவ கொ(த்)தன(Dh)த தியென்னே?
විදුහල්පතිතුමාගේ කාර්යාලය කොහේ ද?
- வி(Dh)துஹல்ப(த்)திதுமா(G)கே கார்யாலய கொஹே(Dh)த?

**வீட்டில்**

තාත්තා ආවා ද? - தாத்தா ஆவா(Dh)த?
සෙල්ලම් කරන්න යමු ද? - செல்லம் கறன்ன யமு(Dh)த?
මම නාන්න ද? - மம நான்ன(Dh)த?
ඔයාට බඩගිනි ද? - ஒயா(ட்)ட (B)பட(G)கினி(Dh)த?
අම්මා උයල ඉවර ද? - அம்மா உயல இவற(Dh)த?

**கடையில்**

හාල් කිලෝවක් කීය ද? - ஹாள் கிலோவக் கீய(Dh)த?
පොල් ගෙඩියක් කීය ද? - பொள் (G)கெடியக் கீய(Dh)த?
බිස්කට් පැකට් එකක් කීය ද? - (B)பிஸ்கட் பக்கெட் எ(க்)கக் கீய(Dh)த?
බිත්තරයක මිල කීය ද? - (B)பித்தரய(க்)க மில கீய(Dh)த?
මිල අඩු කරන්න බැරි ද? - மில அடு கரன்ன பரி(Dh)த?

## தேர்ச்சி

- அண்மித்த சூழலில் உள்ள பிராணிகள், பழங்கள், மரக்கறிவகைகள் போன்றவற்றில் சிலவற்றை இனங்கண்டு அவற்றின் பெயர்களைக் கூறுவார்.

**பிராணிகள்:**

| | |
|---|---|
| නයා | - நயா |
| හූනා | - ஹூனா |
| වඳුරා | - வ(ந்)துரா |
| කිකිළි | - கி(க்)கிலி |
| කොකා | - கொ(க்)கா |
| මැස්සා | - மஸ்ஸா |
| මදුරුවා | - ம(Dh)துறுவா |
| එළදෙන | - எல(Dh)தென |
| කූඹියා | - கூ(ம்)பியா |
| සමනලයා | - சமநலயா |

**பழங்கள்:**

| | |
|---|---|
| අඹ | - அ(ம்)(B)ப |
| කෙසෙල් | - கெசெல் |
| වරකා | - வர(க்)கா |
| දොඩම් | - (Dh)தொ(D)டம் |
| දිවුල් | - (Dh)திவுள் |
| අන්නාසි | - அன்னாசி |
| පේර | - பேர |
| මිදි | - மி(Dh)தி |
| රඹුටන් | - ற(ம்)(B)பு(ட்)டன் |

**மரக்கறிகள்:**

| | |
|---|---|
| වම්බටු | - வம்(B)ப(ட்)டு |
| අළුකෙසෙල් | - அலுகெசெல் |
| බණ්ඩක්කා | - (B)பண்டக்கா |
| වට්ටක්කා | - வட்டக்கா |
| පතෝල | - ப(த்)தோல |
| වැටකොළු | - வ(ட்)டகொளு |
| කරවිල | - கரவில |
| ගෝවා | - (G)கோவா |
| ලීක්ස් | - லீக்ஸ் |
| කැරට් | - கரட் |
| බීට්රූට් | - பீற்ரூட் |

## தேர்ச்சி

- இலகுவான பாடல்களை அபிநயத்துடன் பாடுவார்.
  - சிங்கள எழுத்துக்களுடன் தொடர்புடைய பாடல்கள்.
  - பழங்கள், மரக்கறி வகைகளுடன் தொடர்புடைய பாடல்கள்.
  - பிராணிகளுடன் தொடர்புடைய பாடல்கள்.

## தேர்ச்சி

- சரியான உச்சரிப்புடன் எண்களின் பெயர்களைக் கூறுவார்.

சரியான உச்சரிப்புடன் 21 முதல் 30 வரை எண்களின் பெயர்களை ஒழுங்கு முறையில் கூறுவார்.

විසි එක - விசி எ(க்)க
විසි දෙක - விசி தெ(க்)க
විසි තුන - விசி துன
විසි හතර - விசி ஹ(த்)தற
විසි පහ - விசி பஹ
විසි හය - விசி ஹய
විසි හත - விசி ஹ(த்)த
විසි අට - விசி அ(ட்)ட
විසි නවය - விசி நவய
තිහ - திஹ

சரியான உச்ரிப்புடன் 5 முதல் 50 வரை ஐந்தின் மடங்கான எண்களின் பெயர்களை ஒழுங்கு முறையில் கூறுவார்.

පහ - பஹ
දහය - தஹய
පහළොව - பஹலொவ
විස්ස - விஸ்ஸ
විසිපහ - விசி(ப்)பஹ
තිහ - திஹ
තිස්පහ - திஸ்பஹ
හතළිහ - ஹ(த்)தளிஹ
හතළිස් පහ - ஹ(த்)தளிஸ் பஹ
පනහ - பனஹ

## தேர்ச்சி

- வாரத்தின் ஏழு நாட்களினதும் பெயர்களை இனங்கண்டு அதற்கேற்பத் துலங்குவார்.

සඳුදා - ச(ந்)து(Dh)தா
අඟහරුවාදා - அங்(G)கஹருவா(Dh)தா
බදාදා - (B)ப(Dh)தா(Dh)தா
බ්‍රහස්පතින්දා - (B)பிரஹஸ்ப(த்)திந்(Dh)தா
සිකුරාදා - சி(க்)குறா(Dh)தா
සෙනසුරාදා - செனசுறா(Dh)தா
ඉරිදා - இரி(Dh)தா

## தேர்ச்சி

- அன்னியோன்னிய உறவை வளர்ப்பதற்கு நாளாந்த வாழ்விற்கு அண்மித்த பாத்திரங் களை ஏற்று இலகுவான பங்கேற்று நடித்தலில் ஈடுபடுவார்.
  - வீடு, பாடசாலை, சமூக சூழலில் உள்ள பாத்திரங்களை ஏற்று நடித்தல்.

## தேர்ச்சி

- பாடசாலையில் உள்ள ஆட்கள், பொருட்கள், இடங்கள் போன்றவற்றை இனங் கண்டு கூறுவார்.

**பாடசாலையில் உள்ளோர்:**

විදුහල්පති - வி(Dh)துஹல்ப(த்)தி
ගුරුතුමා - (G)குரு(த்)துமா
පන්තිභාර ගුරුතුමා - பன்தி(B)பாரகுரு(த்)துமா
ශිෂ්‍යයා - சிஷ்யயா
ශිෂ්‍යාව - சிஷ்யாவ

**பாடசாலையில் உள்ள பொருட்கள்:**

පුටුව - பு(ட்)டுவ
මේසය - மேசய
පොත - பொ(த்)த
පෑන - பேன
පැන්සල - பன்சல
කලුලෑල්ල - கலுலேல்ல
හුණුකූර - ஹு்ணுகூற

**பாடசாலையில் காணப்படும் இடங்கள்:**

කාර්යාලය - கார்யாலய
පුස්තකාලය - புஸ்தகாலய
පරිගණක කාමරය - பரி(G)கண(க்)க காமரய
විද්‍යාගාරය - வித்யா(G)காரய
වැසිකිළිය - வசி(க்)கிலிய
ක්‍රීඩාභූමිය - க்ரீ(D)டா(B)பூமிய

## தேர்ச்சி

- படமொன்றில் காணப்படுகின்ற நிகழ்வொன்றில் குறித்த சந்தர்ப்பமொன்றில் காணப்படு கின்றவற்றை இனங்கண்டு கூறுவார்.
  - சூழலுடன் தொடர்புடைய படம்
  - சந்தையின் படம்
  - பாடசாலைக்காட்சி

## தேர்ச்சி

- சிங்கள அரிச்சுவடியில் சில எழுத்துக்களை மட்டும் முறையாக விளங்கி அறிந்து உரிய வடிவில் எழுதுவார்.

உயிர் எழுத்துக்களை அறிந்து கொள்வார்.

**உயிர் எழுத்துக்கள்:**

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| අ | ආ | ඇ | ඈ | ඉ | ඊ | උ | ඌ | එ | ඒ | ඓ | ඔ | ඕ | ඖ |
| அ | ஆ | | | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |

உயிர் மெய் எழுத்துக்களை அறிந்து கொள்வார்.

**உயிர் மெய் எழுத்துக்கள்:**

| | | | | |
|---|---|---|---|---|
| ක | ඛ | ග | ඝ | ඞ |
| க | | | | ங |

| | | | | |
|---|---|---|---|---|
| ච | ඡ | ජ | ඣ | ඤ |
| | | ஜ | | ஞ |
| ට | ඨ | ඩ | ඪ | ණ |
| | | ட | | ண |
| ත | ථ | ද | ධ | න |
| த | | | | ந/ன |
| ප | ඵ | බ | භ | ම |
| ப | | | | ம |
| ය | ර | ල | ව | ශ |
| ய | ர | ல/ள | வ | |
| ෂ | ස | හ | ළ | ෆ |
| ஷ | ச | ஹ | ழ/ள | |

## தேர்ச்சி

- குறித்த சில தமிழ் எழுத்துக்களின் உச்சரிப்புகளுக்காக சிங்களத்தில் பல எழுத்துக்கள் பயன்படுவதை விளங்கிப் பயன்படுத்துவார்.

ක, ග, හ } க

ප, බ, ෆ } ப

ස, ච, ශ } ச    ට, ඩ } ட    ත, ද } த

## தேர்ச்சி

- சில உயிர்க் குறிகளைக் கொண்ட இலகுவான சொற்களை எழுதுவார்.

හාල් - ஹால்
පිටි - பி(ட்)டி
සීනි - சீனி
අක්කා - அக்கா
ආප්ප - ஆப்ப
ගිරවා - (G)கிரவா
පිහිය - பிஹிய
රවුම - ரவும
පොත - பொ(த்)த

## தேர்ச்சி

- அன்றாட நிகழ்வுகளுக்குப் பொருத்தமான சிறிய வாக்கியங்களை ஒழுங்கமைத்துச் சரியாக உச்சரித்துக் கூறுவார்.

| | | |
|---|---|---|
| අපි පාසලට යමු | - | அ(ப்)பி பாசல(ட்)ட யமு |
| අපි සෙල්ලම් කරමු | - | அ(ப்)பி செல்லம் கறமு |
| සීනුව ගහනවා | - | சீனுவ (G)கஹனவா |
| අන්න ගුරුතුමා එනවා | - | அன்ன (G)குறு(த்)துமா எனவா |
| මම පාඩම් කරනවා | - | மம பா(D)டம் கறனவா |
| බස් එක ආවා | - | (B)பஸ் எ(க்)க ஆவா |
| අපි බත් කමු | - | அ(ப்)பி (B)பத் கமு |
| අම්මා වතුර ගෙනාවා | - | அம்மா வ(த்)துற (G)கெனாவா |
| අයියා කඩේට ගියා | - | அய்யா கடே(ட்)ட (G)கியா |
| අපි වතුර බොමු | - | அபி வ(த்)துற (B)பொமு |

## தேர்ச்சி

- இலகுவான சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை ஒழுங்கமைத்து எழுதுவார்.

**பயன்படுத்தும் சொற்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මේ | - | மே | යමු ද? | - | யமு(Dh)த? |
| ගෙදර | - | (G)கெதர | පාසලයි | - | பாசலய் |
| අම්මා | - | அம்மா | අපේ | - | அ(ப்)பே |
| ඔයාගේ | - | ஒயா(G)கே | ආව ද? | - | ஆவ(Dh)த? |
| මට | - | ம(ட்)ட | අපි | - | அ(ப்)பி |
| මාලය | - | மாலய | සෙල්ලම් | - | செல்லம் |
| කරමු | - | கறமு | දෙන්න | - | (Dh)தென்ன |

## கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்

மாணவர்களுக்கு முதன்மைநிலை ஒன்று முதல் இரண்டாவது தேசியமொழியை கற்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. திட்டமிட்ட விநோதமான விளையாட்டுக்கள் ஊடாகவும் செயற்பாடுகள் ஊடாகவும் எழுத்து வேலை ஊடாகவும் ஒழுங்கமைக்கப் பட்டுள்ள இப்பாடத்தில், எதிர்பார்க்கும் கற்றல் தேர்ச்சிகளை அடையக்கூடிய விதத்தில் கற்றல் - கற்பித்தல் செயல்வழிகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

செவிமடுத்தல், பேசுதல், வாசிப்பு, எழுத்து போன்ற அடிப்படை மொழித் திறன்களைப் பெற்றுக் கொடுப்பதுடன் தொடர்பாடல் திறனை மேலும் விருத்தி செய்வதற்கும் வாய்ப்பு வழங்குதல் இதனூடாக எதிர்பார்க்கப்படுகின்ற அம்சமாகும். இதற்காக மாணவர்களுக்கு தேவையான கற்றல் உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல் ஆசிரியரின் பொறுப்பாகும்.

மேலும் தனது இரண்டாம்மொழித் தேர்ச்சியை வளப்படுத்தி, தனது திறனை விருத்தி செய்து கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவது ஆசிரியரின் பொறுப்பாகும்.

இரண்டாவது தேசிய மொழியைக் கற்பதன் ஊடாக அடைய எதிர்பார்க்கும் தேர்ச்சியை அடையும் பொருட்டு கற்றல் - கற்பித்தல் செயல்முறைகளை ஒழுங்கமைத்துக்கொள்வது மிக முக்கியமானது. இங்கே தரப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குப் பதிலாக வேறு பொருத்தமான செயற்பாடுகளை அமைத்துக் கொள்வதற்கு ஆசிரியருக்கு சுதந்திரம் உண்டு.

## பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

இரண்டாவது தேசிய மொழியைப் பயன்படுத்தும் சந்தர்ப்பத்தினை பாடசாலைக் கொள்கை வேலைத்திட்டத்தில் உள்ளடக்குதல் தொடர்பாக அதிபரின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். அத்தோடு ஐந்தாம் தரத்தில் இரண்டாவது தேசிய மொழியைப் பயன்படுத்தும் வகுப்புக் கொள்கையினை ஏற்படுத்துவதற்கு வகுப்பாசிரியர் கவனம் செலுத்த வேண்டும். இங்கு வாழ்த்துக்கூறல், நன்றி கூறல், சில சந்தர்ப்பங்களில் இரண்டாவது தேசிய மொழியில் கதைத்தல் போன்றவற்றை கொள்கையில் உள்ளடக்கலாம். மேலும் இரண்டாவது தேசிய மொழிக்கான ஒரு தினத்தை ஒதுக்கி வகுப்பு மட்டத்தில் விசேட வேலைத்திட்டங்களை ஒழுங்கமைத்துக்கொள்ளவும் முடியும்.

## மாணவர் அடைவினைக் கணிப்பிடல்

சந்தர்ப்பத்திற்கேற்ப சிங்களச் மொழியை பயன்படுத்தும் விதம் தொடர்பான தகவல்களை சேகரிப்பது முக்கியமாகும். அத்தகவல்கள் ஊடாக மாணவர்களின் இயலுமைகளை அறிந்து கொள்வதற்கும், நலிவுகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்து கொள்ள உதவுவதற்கும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் பொதுக் கணிப்பீட்டுப் படிவத்தில் இரண்டாவது தேசிய மொழிக்கான கணிப்பீட்டு நியதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| **தேர்ச்சி :** | அன்றாட வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களில் கட்டளைகள், வேண்டுகோள்கள் என்பவற்றுக்கு அவதானமாகச் செவிமடுத்துச் சந்தர்ப்பத்திற்கேற்பத் துலங்குவார். |

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

### செயற்பாடு 1

- பின்வரும் வேண்டுகோள்களை தனித்தனி அட்டையில் எழுதித் தயாரித்துக் கொள்க.

- வேண்டுகோள்களை உச்சரிப்புடன் எழுதிக்கொள்க.

  ***எடுத்துக்காட்டு:***

  වතුර දෙන්න - வ(த்)துற (Dh)தென்ன
  පොත දෙන්න - பொ(த்)த (Dh)தென்ன
  බත් දෙන්න - (B)பத் (Dh)தென்ன
  පාඩම කියල දෙන්න - பாடம கியள (Dh)தென்ன

- இவ்வேண்டுகோள்களை ஒவ்வொன்றாக முழு வகுப்பிற்கும் அறிமுகப்படுத்தி வேண்டு கோளடங்கிய அட்டைகளை கரும்பலகையில் காட்சிப்படுத்துக.

- காட்சிப்படுத்திய அட்டைகளில் உள்ள வேண்டுகோள்களை மாணவர்கள் விளங்கிக் கொள்ளும் விதத்தில் மீண்டும் மீண்டும் உச்சரித்துக் காட்டுக. மாணவர்களும் உச்சரிக்கச் செய்க.

### செயற்பாடு 2

- இச்செயற்பாட்டை போட்டி முறையில் நடத்துவதற்கு ஒழுங்குசெய்து கொள்க.

- இதற்காக மாணவர்களை இரு குழுக்களாக வகுத்துக் கொள்க. அவற்றிற்கு A, B எனப் பெயரிட்டுக் கொள்க.

- இச்செயற்பாட்டிற்குத் தேவையான ஏனைய பொருட்களையும் சேகரித்துக்கொள்க.

- இரு மாணவர் குழுக்களும் முகத்தை முகம் பார்த்தவாறு இரு புறத்தே நிற்கச் செய்க.

- இரு குழுக்களிடையே ஒரு சிறிய மேசையை வைக்குக. மேசை மீது வேண்டு கோள்கள் எழுதப்பட்ட அட்டைகளை குப்புறக் கவிழ்த்து வைக்குக. இம்மேசையிலேயே தேவையான பொருட்களையும் வைக்குக.

- ஆசிரியர் முதலில் போட்டியை ஆரம்பித்து வைக்குக. முதலில் A குழுவில் உள்ள முதலாம் மாணவனை வரவழைத்து மேசையின் மீது உள்ள ஓர் அட்டையை எடுக்கும்படி கூறுக. பின்னர் அட்டையில் உள்ள வேண்டுகோளை கூறச் செய்க. கூறுவதை B குழுவில் உள்ளோர் செவிமடுக்க நெறிப்படுத்துக. பின்னர் B குழுவில் உள்ள முதலாவது நபர் அவ்வேண்டுகோளை செய்துகாட்ட நெறிப்படுத்துக. அவர் சரியாகச் செய்து காட்டின் B குழுவினருக்கு 1 புள்ளி வழங்குக. முதலாவது நபரால் செய்துகாட்ட முடியாது விடின் அந்த வாய்ப்பை அதே குழுவில் உள்ள இரண்டாம் நபருக்கு வழங்குக. பின்னர் கூறிய வேண்டுகோள் கொண்ட அட்டையை மேசைமீது காணப்படுகின்ற ஏனைய அட்டைகளுடன் கலந்து கவிழ்த்து வைக்குக.

பின்னர் B குழுவின் இரண்டாவது நபர் அட்டை ஒன்றினை எடுத்துக்கூற A குழுவின் இரண்டாவது நபர் அவ்வட்டையில் உள்ள வேண்டுகோளை செய்துகாட்ட நெறிப்படுத்துக. இவ்வாறு குழுவில் உள்ள ஒவ்வொருவரும் பங்குகொள்ள வாய்ப்பளிக்குக.

- அதிக புள்ளிகள் பெற்ற குழுவினர் வெற்றிபெற்றதாகக் கணிக்குக.

- பங்குகொண்ட எல்லோரையும் பாராட்டுக.

## செயற்பாடு 3

- பின்வரும் கட்டளைகள் கொண்ட சொற்களையும் மாணவர்களுக்கு அறிமுகம் செய்க.

  යන්න - யன்ன
  ගන්න - (G)கன்ன
  අහන්න - அஹன்ன
  කියන්න - கியன்ன
  කියවන්න - கியவன்ன
  ලියන්න - லியன்ன
  කන්න - கன்ன
  බොන්න - (B)பொன்ன

- மாணவர்கள் இக்கட்டளைச் சொற்களை உச்சரிப்பதற்கும் கேட்டு அதற்கேற்ப துலங்குவதற்கும் பொருத்தமானவாறு செயற்பாடு அல்லது விளையாட்டு மூலம் அறிமுகம் செய்க.

- சகல மாணவர்களும் அதில் பங்குகொள்ளக்கூடிய விதத்தில் ஒழுங்கமைத்துக் கொள்க.

- கற்ற சொற்கள், சொற்றொடர்களை அட்டைகளில் எழுதி வகுப்பறையில் ஆங்காங்கே காட்சிப்படுத்துக.

**விளக்கம்:**

| | | |
|---|---|---|
| වතුර දෙන්න | - | தண்ணீர் தாருங்கள் |
| පොත දෙන්න | - | புத்தகம் தாருங்கள் |
| බත් දෙන්න | - | சோறு தாருங்கள் |
| පාඩම කියල දෙන්න | - | பாடம் சொல்லித் தாருங்கள் |
| යන්න | - | போங்கள் |
| ගන්න | - | எடுங்கள் |
| අහන්න | - | கேளுங்கள் |
| කියන්න | - | சொல்லுங்கள் |
| කියවන්න | - | வாசியுங்கள் |
| ලියන්න | - | எழுதுங்கள் |
| කන්න | - | சாப்பிடுங்கள் |
| බොන්න | - | குடியுங்கள் |

**தேர்ச்சி :** அன்றாட தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு ஏனையோருடன் கலந்துரையாடலில் ஈடுபடுவார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

## செயற்பாடு 1

- பின்வரும் வினா வடிவிலமைந்த வாக்கியங்களை மாணவர்களுக்கு அறிமுகம் செய்க.

  ගුරුතුමා එයි ද? - (G)குறு(த்)துமா எய்(Dh)த?
  වැසිකිළිය කොහේ ද? - வசிகிலிய கொஹே(Dh)த?
  ආපන ශාලාව කොතැන ද තියෙන්නේ?- ஆபன சாலாவ கொ(த்)தன(Dh)த தியன்னே?
  විදුහල්පතිතුමාගේ කාර්යාලය කොහේ ද?
  - வி(Dh)துஹல்ப(த்)திதுமா(G)கே கார்யாலய கொஹே(Dh)த?

- உச்சரிப்பு, பொருள் என்பவற்றைக் கிரகித்து ஏனையோருடன் கலந்துரையாடலில் ஈடுபட மாணவர்களை நெறிப்படுத்துக.

- அதற்காக மாணவர்களைச் சோடி சோடியாக குழுக்களாக்குக.

- சோடியில் ஒருவரிடம் வினா வினவவும் மற்றவர் பதில் கூறவும் வழிப்படுத்துக.

- கேட்கும் வினாக்களுக்கு மாணவர்கள் தமது இயலுமைக்கேற்ப பதில் கூற ஊக்கப் படுத்துக.

- இவ்வாறு பதில் கூற முனையும்போது முன்னைய வகுப்புக்களில் கற்ற சொற்களை பயன்படுத்துவதற்கு மாணவர்களை ஊக்கப்படுத்துக.

  ***எடுத்துக்காட்டு:***

  கமால் : ගුරුතුමා එයි ද? - (G)குறு(த்)துமா எய்(Dh)த?- ஆசிரியர் வருவாரா?
  சாந்தன்: එයි - எய் - வருவார்.
  සමහරවිට ඒවි - சமஹரவி(ட்)ட ஏவி - சில சமயம் வருவார்.
  අද එන්නේ නෑ - அத என்னே நே - இன்று வரமாட்டார்.

- மேற்படி வினாவுக்கு காட்டப்பட்டுள்ள விதத்தில் மூன்று வெவ்வேறு விடைகள் கூற லாம் என்பதை அல்லது இதையொத்த விடைகளைக் கூறலாம் என்பதை எடுத்துக் காட்டுக.

  கமால் : වැසිකිළිය කොහේ ද?- வெசிகிலிய கொஹே(Dh)த? - மலசலகூடம் எங்கே?
  சாந்தன்: අතන - அ(த்)தன - அங்கே
  මෙතන - மெ(த்)தன - இங்கே
  එහා පැත්තේ - எஹா புத்தே - அந்தப் பக்கத்தில்
  අර ගහ ළඟ - அர (G)கஹ லங்(G)க - அந்த மரத்திற்கு அருகில்

- இவ்வினாவிற்கும் மேலே தரப்பட்டுள்ளது போன்று பல விடைகள் இருக்கலாம் என்பதை எடுத்துக்காட்டுக.

- மேலே காட்டியுள்ளது போன்று பின்வரும் வினாக்களையும் வினவுவதற்கு வழிப் படுத்துக.

***எடுத்துக்காட்டு:***
ආපන ශාලාව කොහෙද තියෙන්නේ?
- ஆ(ப்)பன சாலாவ கொ(த்)தன(Dh)த தியென்னே?
- சிற்றுண்டிச்சாலை எங்கே உள்ளது?

විදුහල්පතිතුමාගේ කාර්යාලය කොහේ ද?
- வி(Dh)துஹல்ப(த்)தி(த்)துமா(G)கே கார்யாலய கொஹே(Dh)த?
- அதிபரின் அறை எங்கே?

- இவற்றுக்கு விடையாக இங்கே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து பொருத்தமானதைப் பயன் படுத்த நெறிப்படுத்துக.

## செயற்பாடு 2

- பின்வரும் வினாக்களை அதன் கருத்துக்கள் புலப்படும் விதத்தில் மாணவர்களுக்கு அறிமுகம் செய்க.

- இவற்றை அட்டைகளில், டிமை பேப்பரில், கரும்பலகையில் எழுதி அறிமுகம் செய்யலாம்.

1. තාත්තා ආවා ද? - தாத்தா ஆவா(Dh)த? - அப்பா வந்தாரா?
2. සෙල්ලම් කරන්න යමු ද? - செல்லம் கறன்ன யமு(Dh)த? - விளையாடப் போவோமா?
3. මම නාන්න ද? - மம நான்ன(Dh)த? - நான் குளிக்கட்டுமா?
4. ඔයාට බඩගිනි ද? - ஒயா(ட்)ட (B)ப(D)ட(G)கினி(Dh)த? - உங்களுக்குப் பசிக்கிறா?
5. අම්මා උයල ඉවර ද? - அம்மா உயல இவற(Dh)த? - அம்மா சமைத்து முடித்து விட்டாரா?

- மாணவர்கள் மேற்படி வினாக்களைப் பயன்படுத்தி கலந்துரையாடலில் ஈடுபட நெறிப் படுத்துக.

- அதற்காக மாணவர்களைச் சோடி சோடியாகக் குழுக்களாக்குக.

- சோடியில் ஒருவர் வினா வினவவும் மற்றவர் பதில் கூறவும் நெறிப்படுத்துக.

- பின்பு பதில் கூறியவர் வினவவும் முன்பு வினவியவர் பதில் கூறவும் வழிப்படுத்துக.

- வினவும் வினாக்களுக்கு மாணவர்களின் இயலுமைக்கேற்ப விடை பகர வாய்ப் பளிக்குக.

- கீழே தரப்பட்டுள்ள விடைகள் உள்ளடங்கக்கூடிய விதத்தில் கலந்துரையாடலைத் தயாரித்துக் கொள்க.

- மேலே தரப்பட்டுள்ள வினா ஒழுங்கிற்கேற்ப விடைகள் தரப்பட்டுள்ளன. இவை தவிர வேறு ஏற்றுக்கொள்ளக்கூடிய விடைகள் இடம் பெறலாம்.

1. නැහැ - <u>நஹ</u> - இல்லை.
   තවම ආවේ නෑ - தவம ஆவே <u>நே</u> - இன்னும் வரவில்லை.
   ඔව් ආවා - ஒவ் ஆவா - ஆம் வந்தார்.
   තව ටිකකින් ඒවි - தவ டி(க்)க(க்)கின் ஏவி - இன்னும் சிறிது நேரத்தில் வருவார்.

2. අද බැහැ - அ(Dh)த பஹ - இன்று முடியாது.
   හා යමු - ஹா யமு - ஆ போவோம்.
   තව ටිකකින් යමු - தவ டி(க்)க(க்)கின் யமு- இன்னும் சற்று நேரத்தில் போவோம்.
   මල්ලිත් එක්ක යමු - மள்ளித் எக்க யமு - தம்பியுடன் போவோம்.

3. හා - ஹா, ஆ - சரி.
   අද එපා - அத எ(ப்)பா - இன்று வேண்டாம்.
   එපා - எ(ப்)பா - வேண்டாம்.
   දවල් වෙලා නාන්න - தவல் வெலா நான்ன - பகலாகிக் குளிக்கவும்.
   හෙට නාන්න - ஹெ(ட்)ட நான்ன - நாளை குளிக்கவும்.

4. ඔව් - ஒவ் - ஆம்.
   නෑ - நே - இல்லை.
   ටිකක් බඩගිනියි - டி(க்)கக் (B)ப(D)ட(G)கினிய் - கொஞ்சம் பசிக்கிறது.

5. ඔව් - ஒவ் - ஆம்
   තවම නෑ - தவம நே - இன்னும் இல்லை
   නෑ - நே - இல்லை
   තව ටිකක් වෙලා යාවි -தவ டி(க்)கக் வெலா யாவி- இன்னும் கொஞ்சம் நேரமாகும்.

## செயற்பாடு 3

◘ பின்வரும் வினாக்களை, முன்னைய தொழிற்பாடுகளில் அறிமுகப்படுத்தியது போன்றே அறிமுகம் செய்க.

1. හාල් කිලෝවක් කීය ද? - ஹாள் கிலோவக் கீய(Dh)த?
2. පොල් ගෙඩියක් කීය ද? - பொள் (G)கெடியக் கீய(Dh)த?
3. බිස්කට් පැකට් එකක් කීය ද? - (B)பிஸ்கட் பு(க்)கெட் எ(க்)கக் கீய(Dh)த?
4. බිත්තරයක මිල කීය ද? - (B)பித்தரய(க்)க மில கீய(Dh)த?
5. මිල අඩු කරන්න බැරි ද? - மில அடு கரன்ன பரி(Dh)த?

◘ இவ்வினாக்களுக்குப் பின்வரும் விடைகள் உள்ளடக்கக்கூடிய விதத்தில் கலந்துரை யாடலை அமைத்துக் கொள்க.

1. රුපියල් හැත්තෑවයි - ரு(ப்)பியல் ஹத்தேவய் - எழுபது ரூபாய்
   රුපියල් අසූවයි - ரு(ப்)பியல் அசூவய் - எண்பது ரூபாய்

2. රුපියල් විසි අටයි - ரு(ப்)பியல் விசிஅ(ட்)டய் - இருபத்தெட்டு ரூபாய்
   රුපියල් තිස්පහයි - ரு(ப்)பியல் திஸ்பஹய் - முப்பத்தைந்து ரூபாய்

3. රුපියල් තිහයි - ரு(ப்)பியல் திஹய் - முப்பது ரூபாய்
   රුපියල් හතලියයි - ரு(ப்)பியல் ஹ(த்)தலிஹய் - நாற்பது ரூபாய்

4. රුපියල් නවයයි - ரு(ப்)பியல் நவயய் - ஒன்பது ரூபாய்
   රුපියල් දහයයි - ரு(ப்)பியல் (Dh)தஹயய் - பத்து ரூபாய்

5. බැහැ - பஹ - முடியாது
   ගන්න අඩුකරන්නම් - (G)கன்ன அடுகரன்னம் - எடுங்கள் குறைக்கிறேன்.
   කීයක් ද? - கீயக்(Dh)த? - எவ்வளவு?

- எல்லா மாணவர்களும் எல்லா வினாக்களையும் வினவவும், விடை பகரவும் நெறிப் படுத்துக.

**விளக்கம்:**

| | |
|---|---|
| ගුරුතුමා එයි ද? | - ஆசிரியர் வருவாரா? |
| වැසිකිළිය කොහේ ද? | - மலசலகூடம் எங்கே உள்ளது? |
| ආපන ශාලාව කොතැන ද තියෙන්නේ? | - சிற்றுண்டிச்சாலை எங்கே உள்ளது? |
| විදුහල්පතිතුමාගේ කාර්යාලය කොහේ ද? | - அதிபர் அறை எங்கே? |
| තාත්තා ආවා ද? | - அப்பா வந்தாரா? |
| සෙල්ලම් කරන්න යමු ද? | - விளையாடப் போவோமா? |
| මම නාන්න ද? | - நான் குளிக்கட்டுமா? |
| ඔබට බඩගිනි ද? | - உங்களுக்கு பசிக்கிறதா? |
| අම්මා උයල ඉවර ද? | - அம்மா சமைத்து முடித்து விட்டாரா? |
| හාල් කිලෝවක් කීය ද? | - (ஒரு) கிலோ அரிசி என்ன விலை? |
| පොල් ගෙඩියක් කීය ද? | - (ஒரு) தேங்காய் என்ன விலை? |
| බිස්කට් පැකට් එකක් කීය ද? | - (ஒரு)பிஸ்கட் 'பக்கெட்' என்ன விலை? |
| බිත්තරයක මිල කීය ද? | - (ஒரு) முட்டை என்ன விலை? |
| මිල අඩු කරන්න බැරි ද? | - விலையை குறைக்க முடியாதா? |

**தேர்ச்சி** : அண்மித்த சூழலில் உள்ள பிராணிகள், பழங்கள், மரக்கறி வகைகள் போன்றவற்றில் சிலவற்றை இனங்கண்டு அவற்றின் பெயர்களைக் கூறுவார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

## செயற்பாடு 1

- பின்வரும் பிராணிகளின் பெயர்களைக் கொண்ட அட்டவணையொன்றினைத் தயாரித் துக்கொள்க. அதனை மாணவர்கள் அவதானிக்கும் விதத்தில் காட்சிப்படுத்தி வைக்குக.

| | |
|---|---|
| නයා | - நயா |
| හූනා | - ஹூனா |
| වඳුරා | - வ(ந்)துரா |
| කිකිළි | - கி(க்)கிலி |
| කොකා | - கொ(க்)கா |
| මැස්සා | - ம<u>ஸ்</u>ஸா |
| මදුරුවා | - ம(Dh)துருவா |
| එළදෙන | - எலதென |
| කූඹියා | - கூ(ம்)பியா |
| සමනලයා | - சமநலயா |

- தரப்பட்டுள்ள பிராணிகளின் படங்களை சேகரிக்கச் செய்க. அவற்றைத் தனித்தனி அட்டைகளில் ஒட்டி பட அட்டைத் தொகுதிகளை தயாரிக்குக.

- அதே போன்று அப்பிராணிகளின் பெயர்களை சிங்களத்தில் எழுதிய அட்டைத் தொகுதிகளையும் தயாரிக்குக.

- மாணவர்களை விரும்பியவாறு குழுக்களாக்குக. குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப பட அட்டைத் தொகுதிகளையும் எழுத்தட்டைத் தொகுதிகளையும் தயாரித்துக் கொள்க.

- ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வோர் எழுத்தட்டைத் தொகுதியையும் பட அட்டைத் தொகுதியையும் வழங்குக.

- ஒவ்வொரு குழுவினரும் பட அட்டைத் தொகுதியையும் எழுத்தட்டைத் தொகுதியையும் தமது குழுவின் மேசையின் மீது கவிழ்த்து வைத்தல் வேண்டும். இரு தொகுதி களையும் புறம்பாக வைத்தல் வேண்டும்.

- தடவைக்கு குழுவில் ஒருவர் பட அட்டைகளுள் ஒன்றை எடுத்து ஏனையோருக்குக் காட்டி குறித்த ஒருவரை சுட்டி அதற்கான சொல்லட்டையை எடுக்கச் சொல்லல் வேண்டும். அவர் ஒவ்வொரு சொல்லட்டையாக, தாம் மட்டும் காணும் விதத்தில் ஒவ்வொன்றாகப் பார்த்து உரிய சொல்லை கண்டுபிடித்தல் வேண்டும். பின் இருவரும் சேர்ந்து அந்த சொல்லை உச்சரித்துக்காட்டல் வேண்டும். பின் அந்த இரு அட்டை களையும் வோறொரு புறமாக வைத்தல் வேண்டும்.

- இவ்வாறு பட அட்டையையும் அதற்குரிய சொல்லட்டையையும் ஒவ்வொருவரும் எடுக்கவும் வாசிக்கவும் வாய்ப்பு வழங்குக.

## செயற்பாடு 2

- மாணவர்கள் சாப்பிடும் பழங்கள் தொடர்பாக அவர்களுடன் கலந்துரையாடுக. அவற்றின் பெயர்களில் இருந்து பின்வருவனவற்றின் பெயர்களைச் சிங்கள மொழியில் கூறுவதற்கு வழிப்படுத்துக.

  அதற்காகப் பின்வரும் அட்டவணையை பிரதி செய்து மாணவர்களுக்கு காட்சிப் படுத்துக.

| | |
|---|---|
| අඹ | - அ(ம்)(B)ப |
| කෙසෙල් | - கெசெல் |
| වරකා | - வர(க்)கா |
| දොඩම් | - (Dh)தொடம் |
| දිවුල් | - (Dh)திவுள் |
| අන්නාසි | - அன்னாசி |
| පේර | - பேர |
| මිදි | - மி(Dh)தி |
| රඹුටන් | - ற(ம்)பு(ட்)டன் |

- மேற்படி பழங்களின் படங்களையும் பெயர்களையும் உள்ளடக்கிய தனித்தனியான அட்டைகளைத் தயாரித்துக் கொள்க.

- மாணவர்களை இரு குழுக்களாக வகுக்குக. குழுக்களுக்கு முதலாவது குழு, இரண்டாவது குழு என பெயரிட்டுக் கொள்க.

- தயாரித்த அட்டைகளை ஒரு பெட்டியில் இடுக.

- இரு குழுக்களுக்கும் இடையே மத்தியில் அப்பெட்டியை வைக்குக.

- குழுக்கள் இரண்டிற்கும் இரு தலைவர்களைத் தெரிவுசெய்து கொள்க. தடவைக்கு ஒரு தலைவர் முதலில் பெட்டியில் இருந்து ஒரு அட்டையை எடுத்தல் வேண்டும். பின் அவர் அதனை வாசித்து விட்டு செல்ல வேண்டும். சரியாக கூறின் அவருக்கு ஒரு புள்ளி வழங்குக. முடியாதுவிடின் அதே குழுவிலுள்ள அடுத்தவருக்கு அந்த வாய்ப்பை வழங்குக. பின் அடுத்த குழுவில் உள்ள தலைவர், முதல் தலைவரைப் போன்றே செயல்பட வேண்டும். அடுத்தடுத்து ஏனையோருக்கு வாய்ப்பு வழங்குதல் வேண்டும். வாசித்த அட்டைகளை வேறாக வைக்குக. மாணவர்கள் பெட்டியில் இருக்கும் அட்டைகள் எல்லாவற்றையும் வாசித்து முடித்த பின்பு மீண்டும் அட்டைகள் யாவற்றையும் பெட்டியில் இடல் வேண்டும். போட்டி மீண்டும் தொடர்ந்து நடைபெற வேண்டும்.

## செயற்பாடு 3

- பின்வரும் சொற்கள் கொண்ட அட்டவணையை பிரதிசெய்து மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துக.

| | |
|---|---|
| වම්බටු | - வம்(B)ப(ட்)டு |
| අළුකෙසෙල් | - அளுகெசெல் |
| බණ්ඩක්කා | - (B)பண்டக்கா |
| වට්ටක්කා | - வட்டக்கா |
| පතෝල | - ப(த்)தோல |
| වැටකොළු | - வ(ட்)டகொளு |
| කරවිල | - கரவில |
| ගෝවා | - (G)கோவா |
| ලීක්ස් | - லீக்ஸ் |
| කැරට් | - கரட் |
| බීට්රූට් | - பீற்ரூட் |

- செயற்பாடு 1, 2 ஆகியவற்றில் முன்மொழியப்பட்டுள்ள அணுகுமுறைகளைக்கொண்டு இங்கு தரப்பட்டுள்ள சொற்களையும் அறிமுகம் செய்வதற்கு செயற்பாடுகளைத் திட்டமிட்டுக் கொள்க.

**விளக்கம்:**

| | | | |
|---|---|---|---|
| නයා | - பாம்பு | හූනා | - பல்லி |
| වඳුරා | - குரங்கு | කිකිළි | - கோழி |
| කොකා | - கொக்கு | මැස්සා | - ஈ |
| මදුරුවා | - நுளம்பு | එළදෙන | - பசு |
| කූඹියා | - எறும்பு | සමනලයා | - வண்ணத்துப்பூச்சி |
| අඹ | - மாங்காய் | කෙසෙල් | - வாழைப்பழம் |
| වරකා | - பலாப்பழம் | දොඩම් | - தோடம்பழம் |
| දිවුල් | - விளாம்பழம் | අන්නාසි | - அன்னாசிப்பழம் |
| පේර | - கொய்யாப்பழம் | මිදි | - திராட்சை |
| රඹුටන් | - றம்புட்டான் | | |
| වම්බටු | - கத்தரிக்காய் | අළුකෙසෙල් | - வாழைக்காய் |
| බණ්ඩක්කා | - வெண்டிக்காய் | වට්ටක්කා | - பூசனிக்காய் |
| පතෝල | - புடலங்காய் | වැටකොළු | - பீர்க்கங்காய் |
| කරවිල | - பாகற்காய் | ගෝවා | - கோவா |
| ලීක්ස් | - லீக்ஸ் | කැරට් | - கரட் |
| බීට්රූට් | - பீற்ரூட் | | |

**தேர்ச்சி :** இலகுவான பாடல்களை அபிநயத்துடன் பாடுவார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

### செயற்பாடு 1

- தரப்பட்டுள்ள பாடல்களை மாணவர்களுக்கு இனிமையான இராகத்துடன் பாடிக் காட்டுக.
- மாணவர்கள் பாடலை முதலில் செவிமடுத்து பின்பு ஆசிரியருடன் சேர்ந்து பாட வழிப்படுத்துக.
- மாணவர்கள் சிறு சிறு குழுக்களாக, சோடி சோடியாக, தனித்தனியாக உச்சரித்துப்பாட நெறிப்படுத்துக.
- மாணவர்கள் பாடல்களை இலகுவாக வாசிக்கக்கூடிய விதத்தில் தாய்மொழியிலும் சிங்கள மொழியிலும் எழுதிக் காட்சிப்படுத்துக.
- பாடல்களைப் பாடும்போது புத்தளிப்புக் கருவிகளை பயன்படுத்தவும் அபிநயம் காண்பித்து நடித்துச் செயல்படவும் ஊக்கப்படுத்துக.

***எடுத்துக்காட்டு 1:***

**එළවළු අම්මා - எலவளு அம்மா - காய்கறி அம்மா**

එළවළු අම්මා අපේ ගෙදරට එන්නා
எலவளு அம்மா அ(ப்)பே (G)கெ(Dh)தரட்ட என்னா
අපට කන්න හොඳ හොඳ දේ අරගෙන එන්නා
அப்ப(ட்)ட கன்ன ஹொந்த ஹொந்த (Dh)தே அர(G)கென என்னா
කැරට් බීට් බණ්ඩක්කා - ගෝවා බෝංචි වට්ටක්කා
கரட் பீற் பண்டக்கா - கோவா போஞ்சி வட்டக்கா
ගහල බතල මඤ්ඤොක්කා - ගෙන එනවා මං දැක්කා
(G)கஹள (B)ப(த்)தள மஞ்ஞொக்கா - (G)கென எனவா மங் (Dh)தெக்கா
ජම්බු දොඩම් අන්නාසි - පේර දිවුල් ගෙඩි රාසි
ஜம்பு தொடம் அன்னாசீ - பேர (Dh)திவுள் (G)கெடி ராஸீ
කෑමට හොඳ රස ජාති - විකිණීමෙන් හරි වාසි
தேம(ட்)ட ஹொந்(Dh)த றஸ ஜா(த்)தீ - வி(க்)கினீமென் ஹரி வாஸீ

**பொருள்:**
காய்கறி அம்மா வீட்டுக்கு வருகிறாள். நாம் உண்ண நல்ல மரக்கறிகள், கிழங்கு வகைகள், பழ வகைகள் கொண்டு வருகிறாள். அவை சுவையானவை. விற்று இலாபம் பெறுகிறாள்.

***எடுத்துக்காட்டு 2:***

**පලතුරු - பள(த்)துறு - பழங்கள்**

| | |
|---|---|
| ඇහැල මලින් ගස් පිරිලා | அஹல மளின் (G)கஸ் பிரிலா |
| බලන්න හරි ලස්සනයි | (B)பளன்ன ஹறி லஸ்ஸனய் |
| අඹ රඹුටන් ජම්බු ඉදිලා | அ(ம்)ப ற(ம்)பு(ட்)டன் ஜ(ம்)பு இ(Dh)திலா |
| අද හැමතැන හරි හැඩයි | அ(Dh)த ஹம தன ஹறி ஹ(D)டய் |

දොඹ ගස් යට මල් හැලිලා — தொம்ப (G)கஸ் யட்ட மள் ஹலிலா
සුවඳක් හැම තැන දැනෙයි — ஸுவந்தக் ஹம தன (Dh)தனெய்
වළි කුකුළන් හඬලන කොට — வலி கு(க்)குளன் ஹண்டலன கொ(ட்)ட
අහං ඉන්න හරි හිතයි — அஹங் இன்ன ஹரி ஹி(த்)தய்

ගස්වල දළු සෙලවෙන කොට — கஸ்வள தளு செலவென கொ(ட்)ட
ඇඟට හරිම සීතලයි — அங்க(ட்)ட ஹரிம சீ(த்)தளய்
ඉගිලෙන අර සමනලයින් — இ(G)கிலென அற ஸமனளயின்
අල්ලන්නට බැරි හැඩයි — அள்ளன்னட (B)பரி ஹ(D)டய்

*(நன்றி: நரி (B)பானா நாடகம்)*

**பொருள்:**

மரங்களின் பூக்கள் நல்ல அழகு
மரங்களின் பழங்கள் நல்ல வடிவு
மரத்தடியில் பூக்கள் நல்ல வாசனை
காட்டுக்கோழி கூவுவது நல்ல இனிமை

மரக்கிளைகள் அசைவதால்
உடல் குளிர்கிறது.
பறக்கும் வண்ணத்திப்பூச்சிகளை
பிடிப்பது கடினம்

***எடுத்துக்காட்டு 3:* මාළු - மாளு - மீன்**

දියේ ඉන්න මාළුවෝ — (Dh)தியே இன்ன மாளுவோ
පුංචි අපේ යාළුවෝ — புஞ்சி அ(ப்)பே யாளுவோ
උඩ පැනිල්ල - යට ගිලිල්ල — உட பனில்ல - ய(ட்)ட (G)கிலில்ல
හැම තිස්සෙම - ඇති නැටිල්ල — ஹம திஸ்ஸம - அ(த்)தி ந(ட்)டில்ல
දියේ ඉන්න මාළුවෝ — தியே இன்ன மாளுவோ
පුංචි අපේ යාළුවෝ — புஞ்சி அ(ப்)பே யாளுவோ

*(நன்றி: உந்துகொட நவரத்ன)*

**பொருள்:**

நீரில் இருக்கும் மீன்கள் எங்கள் நண்பர்கள்
மேலே துள்ளும் - அடியில் செல்லும்
எப்போதும் துடிதுடிப்பாக இருக்கும்

***எடுத்துக்காட்டு 4:* ලේනා - லேனா - அணில்**

හඬ මෙන් වීනා- ටිං ටිං ගානා
ஹ(ண்)ட மென் வீனா - டிங் டிங் (G)கானா
පොඩි ළමයින්ගේ - මිතුරේකි ලේනා
பொடி லமயின்(G)கே மி(த்)து(ரெ)க்கி லேனா
අතු අග දුවමින් - සෙල්ලම් කරමින්
அ(த்)து அ(G)க (Dh)துவமின் - ஸெல்லம் கரமின்
යන්නේ ලේනා - පලවැල සොයමින්
யன்னே லேனா பலவல ஸொயமின்
දරු පැටවුන් පොඩි - කන්ට කැමති ගෙඩි
தறு ப(ட்)டவுன் பொடி - கன்ட தமத்தி (G)கெ(D)டி
කන්නේ ලේනා - වෙහෙස නැතුව වැඩි
கன்னே லேனா - வெஹெஸ நத்துவ வடி

*(நன்றி: உந்துகொட நவரத்ன)*

**பொருள்:**

வீணை ஒலிபோல டிங் டிங் ஒலியெழுப்பும் அணில், சிறுவர் எங்கள் நண்பர்; மரக்கிளைகளில் தாவி விளையாடி பழங்கள் தேடும். சிறுவர் உண்ண விரும்பும் பழங்களை சிரமமின்றி உண்ணும்.

தேர்ச்சி : சரியான உச்சிப்புடன் எண்களின் பெயர்களைக் கூறுவார்.

சரியான உச்சரிப்புடன் 21 முதல் 30 வரை எண்களின் பெயர்களை ஒழுங்கு முறையில் கூறுவார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

### செயற்பாடு 1

- பின்வரும் எண்களின் பெயர்கள் அடங்கிய அட்டவணையொன்றினைத் தயாரித்துக் காட்சிப்படுத்துக.

| | | |
|---|---|---|
| විසි එක | - | விசி எ(க்)க |
| විසි දෙක | - | விசி தெ(க்)க |
| විසි තුන | - | விசி துன |
| විසි හතර | - | விசி ஹ(த்)தற |
| විසි පහ | - | விசி பஹ |
| විසි හය | - | விசி ஹய |
| විසි හත | - | விசி ஹ(த்)த |
| විසි අට | - | விசி அ(ட்)ட |
| විසි නවය | - | விசி நவய |
| තිහ | - | திஹ |

- அத்துடன் 21 முதல் 30 வரை எண்களின் பெயர்கள் உள்ளடங்கிய தனித்தனி அட்டைகளை பின்வரும் விதத்தில் தயாரித்துக்கொள்க.

| | |
|---|---|
| 21<br>විසි එක | 22<br>විසි දෙක |
| 23<br>විසි තුන | 24<br>විසි හතර |
| 25<br>විසි පහ | 26<br>විසි හය |
| 27<br>විසි හත | 28<br>විසි අට |
| 29<br>විසි නවය | 30<br>තිහ |

- ஒவ்வொரு அட்டையாகக் காண்பித்து அதனை உச்சரித்துக் காட்டுக. மாணவர்களையும் உச்சரிக்கச் செய்க.

- இருபத்தொன்று முதல் இருபத்தொன்பது வரை ஒரே வடிவில் ''විසි''(விசி) என்று துவங்கி உரிய இலக்கங்களையும் அதாவது ''එක, දෙක'' என்பதாகச் சேர்த்துக் கூறும் முறையொன்று காணப்படுவதை அவதானிக்கச் செய்க.

- முப்பது மட்டும் வேறொரு வடிவத்தை பெற்றிருப்பதை அவதானிக்கச் செய்க. அதாவது තිහ - ''திஹ'' என வடிவம் பெற்றிருப்பதை அவதானிக்கச் செய்க.

## செயற்பாடு 2

- மாணவர்களை நால்வர் கொண்ட குழுக்களாக்குக.

- ஒவ்வொரு குழுவுக்கும் கொடுக்கக்கூடிய அளவில் சிங்களத்தில் மட்டும் இலக்கங் களின் பெயர்கள் எழுதப்பட்ட அட்டைத்தொகுதிகளைத் தயாரித்துக் கொள்க.

- மாணவர்களை திறந்த வெளியான இடமொன்றுக்கு அழைத்துச் செல்க. ஒவ்வொரு குழுவினருக்கும் ஒவ்வொரு இடத்தை ஒதுக்கிக் கொடுக்குக.

- கொடுக்கப்பட்ட இடத்தில் 'கெந்தி' விளையாடுவதற்கான கட்டமொன்றினை வரைந்து கொள்ளச் சொல்க.

***எடுத்துக்காட்டு:***

| | |
|---|---|
| විසි පහ | විසි හය |
| විසි හතර | විසි හත |
| විසි තුන | විසි අට |
| විසි දෙක | විසි නවය |
| විසි එක | තිහ |

- ஒவ்வொரு கட்டத்திலும் முன்கூட்டியே தயாரித்த அட்டைகளை ஒழுங்கு முறைப்படி வைக்கச் செய்க.

- பின் ஒவ்வொரு கட்டத்திலும் உள்ள இலக்கங்களின் பெயர் எழுதப்பட்ட அட்டையைப் பார்த்து உச்சரித்து அவ்விளையாட்டை விளையாடச் செய்க.

- எல்லா மாணவர்களுக்கும் வாய்ப்பு வழங்குக.

சரியான உச்சரிப்புடன் 5 முதல் 50 வரை ஐந்தின் மடங்கான எண்களின் பெயர்களை ஒழுங்கு முறையில் கூறுவார்.

## செயற்பாடு 3

- பின்வருவன போன்ற அட்டையொன்றினை தயாரித்து மாணவர்களுக்குக் காட்சிப் படுத்துக.

| | | |
|---|---|---|
| පහ | - | பஹ |
| දහය | - | தஹய |
| පහළොව | - | பஹலொவ |
| විස්ස | - | விஸ்ஸ |
| විසිපහ | - | விசி(ப்)பஹ |
| තිහ | - | திஹ |
| තිස්පහ | - | திஸ்பஹ |
| හතළිහ | - | ஹ(த்)தளிஹ |
| හතළිස් පහ | - | ஹ(த்)தளிஸ் பஹ |
| පනහ | - | பனஹ |

- செயற்பாடு 1, 2 இல் காட்டியுள்ளது போன்று இவ்வெண்களையும் அறிமுகப்படுத்தலாம்.

- அல்லது வேறு பொருத்தமான முறையில் இதனை முன்வைக்குக.

**விளக்கம்:**

| | | |
|---|---|---|
| විසි එක | - | இருபத்து ஒன்று |
| විසි දෙක | - | இருபத்து இரண்டு |
| විසි තුන | - | இருபத்து மூன்று |
| විසි හතර | - | இருபத்து நான்கு |
| විසි පහ | - | இருபத்து ஐந்து |
| විසි හය | - | இருபத்து ஆறு |
| විසි හත | - | இருபத்து ஏழு |
| විසි අට | - | இருபத்து எட்டு |
| විසි නවය | - | இருபத்து ஒன்பது |
| තිහ | - | முப்பது |
| පහ | - | ஐந்து |
| දහය | - | பத்து |
| පහළොව | - | பதினைந்து |
| විස්ස | - | இருபது |
| විසිපහ | - | இருபத்தைந்து |
| තිහ | - | முப்பது |
| තිස්පහ | - | முப்பத்தைந்து |
| හතළිහ | - | நாற்பது |
| හතළිස්පහ | - | நாற்பத்தைந்து |
| පනහ | - | ஐம்பது |

| | |
|---|---|
| **தேர்ச்சி :** | வாரத்தின் ஏழு நாட்களினதும் பெயர்களை இனங்கண்டு அதற்கேற்பத் துலங்குவார். |

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

### செயற்பாடு 1

- வாரத்தின் ஏழு நாட்களினதும் பெயர்களை ஒழுங்குமுறைப்படி தமிழில் கேட்டறிக.
- அவற்றின் பெயர்களை சிங்களத்தில் கூறமுடியுமா என்பது பற்றி கலந்துரையாடல் மூலம் கேட்டறிக.
- வாரத்தின் ஏழு நாட்களினதும் பெயர்களை உச்சரிப்புடன் பிரதி செய்து கொள்க.

***எடுத்துக்காட்டு:***

| | | |
|---|---|---|
| සඳුදා | - | ச(ந்)து(Dh)தா |
| අඟහරුවාදා | - | அங்கஹருவா(Dh)தா |
| බදාදා | - | (B)ப(Dh)தா(Dh)தா |
| බ්‍රහස්පතින්දා | - | பிரஹஸ்ப(த்)திந்(Dh)தா |
| සිකුරාදා | - | சி(க்)குறா(Dh)தா |
| සෙනසුරාදා | - | செனசுறா(Dh)தா |
| ඉරිදා | - | இரி(Dh)தா |

- பிரதி செய்த பெயர்களை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துக.
- அவற்றைச் சரியாக உச்சரித்துக்காட்டி, உச்சரித்துக்கூற நெறிப்படுத்துக.

### செயற்பாடு 2

- மாணவர்களை வகுப்பறைக்கு வெளியே அழைத்துச் செல்க.
- மாணவர்கள் சுதந்திரமாக ஓடக்கூடிய இடமொன்றினைத் தெரிவுசெய்து கொள்க.
- தமிழிலும் சிங்களத்திலும் தனித்தனியாக வார நாட்களின் பெயர்கள் எழுதப்பட்ட அட்டைத் தொகுதிகள் இரண்டினைத் தயாரித்துக் கொள்க.
- குறித்த ஏழு இடங்களைத் தெரிவுசெய்து ஒவ்வொரு இடத்திலும் ஏழு நாட்களினதும் பெயர்களை இரு மொழியிலும் காட்சிப்படுத்தி வைக்குக.
- மாணவர்களும் ஆசிரியர்களும் பொதுவான ஓர் இடத்தில் நிற்றல் வேண்டும்.
- முதலில் ஆசிரியர் தமிழ்மொழியில் திங்கட்கிழமை என்று கூறியதும் மாணவர்கள் திங்கட்கிழமை என்று அட்டை ஒட்டப்பட்டுள்ள இடத்தை நோக்கி செல்ல வேண்டும். பின் அடுத்தடுத்த தடவைகளில் ஏனைய வார நாட்களின் பெயர்களைக் கூறி அந்த இடத்தை நோக்கி செல்ல வைத்தல் வேண்டும்.
- பின்னர் தமிழ்மொழியில் எழுதி காட்சிப்படுத்தியுள்ள அட்டைகளை அகற்றி சிங்கள மொழியில் தனியாக எழுதப்பட்ட அட்டைகளைக் காட்சிப்படுத்துக.

- முன்பு தமிழில் கூறி விளையாடியது போன்று சிங்கள மொழியில் மட்டும் கூறி விளையாட்டைச் செயற்படுத்துக.

- இவ்விளையாட்டை மாணவர்கள் தாங்களாகவே சிறு குழுக்களாக விளையாட வாய்ப்பு வழங்குக.

## செயற்பாடு 3

- மாணவர்களைச் சிறு சிறு குழுக்களாக்குக.

- குழுக்களுக்கு போதுமான அளவில் வார நாட்களின் பெயர்கள் தனித்தனியாக சிங்களத்திலும் தமிழிலும் எழுதப்பட்ட அட்டைத் தொகுதிகளைத் தயாரித்துக் கொள்க.

- குழுக்களுக்குத் தனியாக தமிழிலும் தனியாக சிங்களத்திலும் எழுதப்பட்ட இரு அட்டைத் தொகுதிகளை வழங்குக.

- கிடைக்கப்பெற்ற அட்டை தொகுதி இரண்டினையும் குழுவின் மத்தியில் வெவ்வேறாக வைக்குக.

- தடவைக்கு குழுவில் உள்ள ஒருவர் குழுவின் மத்தியில் உள்ள தமிழில் எழுதப்பட்ட வார நாட்களின் பெயர்களில் ஒன்றை எடுத்தல் வேண்டும். பின் அவர் தனது குழு வில் உள்ள ஒருவரைச் சுட்டிக்காட்டியதும் அவர் அதற்கு பொருத்தமான வாரநாளின் சிங்களப் பெயர் கொண்ட அட்டையை எடுத்தல் வேண்டும். அதனை உச்சரித்து கூறுதலும் வேண்டும். அவரைப் பாராட்டுதல் வேண்டும். இவ்வாறு எல்லோரும் சிங்களமொழியில் வாரநாட்களின் பெயர்களை சரியாக கூறவும் உரிய தினத்திற்கு கூறும் பெயரை சரியாக இனங்காணவும் செய்க.

## செயற்பாடு 4

- பின்வரும் பாடலை சிங்களத்திலும், உச்சரிப்பினை தமிழிலும் எழுதி காட்சிப்படுத்துக.

| | |
|---|---|
| අද ඉරිදා හෙට සඳුදා | அ(Dh)த இரி(Dh)தா ஹெ(ட்)ட ஸ(ந்)து(Dh)தா |
| ඉස්කෝලේ පළවෙනිදා | இஸ்கோளே பளவெனி(Dh)தா |
| කැලැන්ඩරේ පෙරලි පෙරලි | தவண்டரே பெரளி பெரளி |
| අපට කියනවා | அ(ப்)ப(ட்)ட கியனவா |
| | |
| අවුරුද්දත් ළඟ එනවා | அவுறு(Dh)த்த(Th)த் ல(ங்)க எனவா |
| කැලැන්ඩරේ පෙරලෙනවා | கலண்டரே பெரலெனவா |
| අලුත් ඇඳුම් අඳින දිනේ | அளுத் அ(ந்)தும் அ(ந்)தின (Dh)தினே |
| අපට කියනවා | அ(ப்)ப(ட்)ட கியனவா |
| කැලැන්ඩරේ පෙරලි පෙරලි | தலண்டரே பெரளி பெரளி |
| අපට කියනවා | அ(ப்)ப(ட்)ட கியனவா |
| | |
| පොඩි නංගිගේ උපන්දිනේ | பொடி நங்கி(G)கே உ(ப்)பன் (Dh)தினே |
| එන මාසේ හත් වෙනිදා | என மாஸே ஹத் வெனி(Dh)தா |
| කේක් කන්න යාළුවන්ට | கேக் கன்ன யாளுவன்(T)ட |
| එන්න කියනවා | என்ன கியனவா |
| කැලැන්ඩරේ පෙරලි පෙරලි | தலண்டரே பெரளி பெரளி |
| අපට කියනවා | அ(ப்)ப(ட்)ட கியனவா |

**பொருள்:**
இன்று ஞாயிற்றுக்கிழமை நாளை திங்கட்கிழமை
பாடசாலை தொடங்கும் நாள்.
புதுவருசம் வருகிறது.
புது ஆடை அணிவதற்கு
சின்னத்தங்கை பிறந்த நாள் ஏழாந்திகதி
கேக் சாப்பிட நண்பர்களை அழைப்போம்.
தாள்புரளும் கலண்டர்தான் எல்லா நாள்களையும் சொல்லித்தருகிறது.

- இப்பாடலைப் பாடிக்காட்டுக. மாணவர்களுடன் சேர்ந்து பாடுக.
- மாணவர்களை சிறு சிறு குழுக்களாக பாட விடுக.
- இரசனையுடன் பாடி ஆட நெறிப்படுத்துக.
- இப்பாடலில் வரும் வார நட்களின் பெயர்களை எடுத்துக்கூறி பொருள்களையும் எடுத்துரைக்குக.

**விளக்கம்:**

| | | |
|---|---|---|
| සඳුදා | - | திங்கள் |
| අඟහරුවාදා | - | செவ்வாய் |
| බදාදා | - | புதன் |
| බ්‍රහස්පතින්දා | - | வியாழன் |
| සිකුරාදා | - | வெள்ளி |
| සෙනසුරාදා | - | சனி |
| ඉරිදා | - | ஞாயிறு |

**தேர்ச்சி :** அன்னியோன்னிய உறவை வளர்ப்பதற்கு நாளாந்த வாழ்விற்கு அண்மித்த பாத்திரங்களை ஏற்று இலகுவான பங்கேற்று நடித்தலில் ஈடுபடுவார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

### செயற்பாடு 1

- வீடு, பாடசாலை, சமூக சூழலில் காணக்கூடிய சில பாத்திரங்களைத் தெரிவுசெய்து கொள்க.
- மாணவர்கள் தாம் அறிந்த விதத்தில் சிங்களமொழியில் சிறு சிறு உரையாடல்களில் கலந்துகொள்ள ஆர்வமூட்டுக.
- உரையாடலுக்கும் பாத்திரங்களுக்குமேற்ப மாணவர்களை குழுக்களாக்குக.
- ஒரு குழுவினர் பாத்திரமேற்று நடிக்கும்போது ஏனையோர் அவதானமாகச் செவிமடுத்து பின் சிறப்பாக துலங்குவதற்கு நெறிப்படுத்துக.

- பின் மாணவர்களை நடித்து காண்பிக்க வழிப்படுத்துக.

- மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் பாத்திரங்களை ஏற்று நடிப்பதற்கு முன்பு பயிற்சி பெற போதுமான அளவு அவகாசம் வழங்குக.

- கீழே தரப்பட்டுள்ள சில உரையாடல்களை மாதிரியாகக் கொள்க.

- இவற்றிலோ இவற்றையொத்த உரையாடல்களிலோ மாணவர்களைப் பங்கு கொள்ளச் செய்யலாம்.

- மாணவர்கள் ஏற்கனவே தாம் கற்ற சொற்களையோ அறிந்து வைத்துள்ள சொற்களையோ பயன்படுத்துவதற்கு ஆர்வமூட்டி நெறிப்படுத்துக.
  ***எடுத்துக்காட்டு:*** **உரையாடல் 1**

**මව සහ දුව - *மவ சஹ துவ* - தாயும் மகளும்**



**දුව** ඃ අම්මේ හෙට ඉස්කෝලේ නිවාඩුයි.
**துவ** : அம்மே ஹெ(ட்)ட இஸ்(க்)கோலே நிவாடுய்.
**மகள்** அம்மா நாளைக்கு பாடசாலை விடுமுறை

**අම්මා** ඃ ඒකට මොකක් ද? (එහින්දා මොකක් ද?)
**அம்மா** : ஏ(க்)கட மொக(க்)(Dh)த? (ஏஹிந்(Dh)தா மொக(க்)(Dh)த?)
**தாய்** அதற்கென்ன? (அதனால் என்ன?)

**දුව** ඃ සත්තු වත්තට යමු ද?
**துவ** : சத்து வத்த(ட்)ட யமு(Dh)த?
**மகள்** மிருகக்காட்சிச்சாலைக்குப் போவோமா?

**අම්මා** ඃ තාත්තා වැඩ ඇරිලා ආවාම අහන්න.
**அம்மா** : தாத்தா <u>ஒெ</u>ட <u>அ</u>ரிலா ஆவாம அஹன்ன.
**தாய்** அப்பா வேலை முடிந்து வந்ததும் கேளுங்கள்.

**දුව** ඃ අම්මා එනවද යන්න?
**துவ** : அம்மா எனவ(Dh)த யன்ன?
**மகள்** அம்மா வருவீர்களா போக?

**අම්මා** ඃ ඔව් මම එන්නම්.
**அம்மா** : ஒவ் மம என்னம்.
**தாய்** ஆம் நான் வருகிறேன்.

**දුව** ඃ මගේ හොඳ අම්මා. මම තාත්තාගෙන් අහන්නම්.
**துவ** : ம(G)கே ஹொ(ந்)(Dh)த அம்மா. மம தாத்தா(G)கென் அஹன்னம்.
**மகள்** எனது நல்ல அம்மா. நான் அப்பாவிடம் கேட்கிறேன்.

**உரையாடல் 2**

## ගුරුතුමිය සහ ශිෂ්‍යාව
## குருதுமிய சஹ சிஷ்யாவ
## ஆசிரியையும் மாணவியும்



**ගුරුතුමිය** ඃ ගීතා ඇයි දින තුනක් පාසලට නො ආවේ.
**குருதுமிய** : (G)(த்)கீதா அய் (Dh)தின துனக் பாசல(ட்)ட நொ ஆவே.
**ஆசிரியை** : கீதா ஏன் மூன்று நாட்கள் பாடசாலைக்கு வரவில்லை.

**ශිෂ්‍යාව** ඃ උණ ටීචර්.
**சிஷ்யாவ** : உண டீச்சர்.
**மாணவி** : காய்ச்சல் ரீச்சர்.

**ගුරුතුමිය** ඃ නො පැමිණීමට ලියමක් ගෙනාව ද?
**குருதுமிய** : நொபமனீமட லியுமக் கெனாவ(Dh)த?
**ஆசிரியை** : வராததற்கு கடிதம் கொண்டு வந்தீர்களா?

**ශිෂ්‍යාව** ඃ ඔව් ටීචර්.
**சிஷ்யாவ** : ஒவ் டீச்சர்.
**மாணவி** : ஆம் ரீச்சர்.

**ගුරුතුමිය** ඃ ගෙනල්ලා මේසය උඩින් තියන්න.
**குருதுமிய** : (G)கெனல்லா மேசய உடின் தியன்ன.
**ஆசிரியை** : கொண்டு வந்து மேசை மேல் வையுங்கள்.

**ශිෂ්‍යාව** ඃ හොඳයි ටීචර්.
**சிஷ்யாவ** : ஹொ(ந்)தய் டீச்சர்.
**மாணவி** : சரி ரீச்சர்.

**உரையாடல் 3**

## සංකර් සහ වෙළෙන්දා - *சங்கர் சஹ வெலெ(ந்)தா*
## சங்கரும் வியாபாரியும்



**සංකර්** ඃ පොල් මිල කීය ද?
**சங்கர்** : பொள் மில கீய(Dh)த?
தேங்காய் என்ன விலை?

**වෙළෙන්දා** ඃ රුපියල් තිහයි.
**வியாபாரி** : ரு(ப்)பியல் திஹய்.
முப்பது ரூபாய்.

**සංකර්** ඃ මිල අඩු කරන්න බැරි ද?
**சங்கர்** : மில அடு கறன்ன (B)பரி(Dh)த?
விலையை குறைக்க முடியாதா?

**වෙළෙන්දා** ඃ ගෙඩි පහක් ගත්තොත් මිල අඩුකරනවා.
**வியாபாரி** : (G)கெடி பஹக் (G)கத்தொத் மில அடு கறனவா.
ஐந்து தேங்காய் வாங்கினால் விலையைக் குறைப்பேன்.

**සංකර්** ඃ රුපියල් කීයක් අඩු කරනව ද?
**சங்கர்** : ரு(ப்)பியல் கீயக் அடு கறனவ (Dh)த?
எத்தனை ரூபாய் குறைப்பீர்கள்?

**වෙළෙන්දා** ඃ එක පොල් ගෙඩියකට රුපියල් දෙකක්.
**வியாபாரி** : எ(க்)க பொல் (G)கெடிய(க்)கட ரு(ப்)பியல் (Dh)தெ(க்)கக்.
ஒரு தேங்காய்க்கு இரண்டு ரூபாய்.

**සංකර්** ඃ ඊට වඩා අඩු කරන්න බැරි ද?
**சங்கர்** : ஈ(ட்)ட வ(D)டா அடு கறன்ன (B)பரி(Dh)த?
அதற்கு மேல் குறைக்க முடியாதா?

**වෙළෙන්දා** ඃ ඊට වඩා බෑ පුතා. මට පාඩු වෙයි.
**வியாபாரி** : ஈ(ட்)ட வ(D)டா (B)பே பு(த்)தா. ம(ட்)ட பாடு வெய்.
இதற்கு மேல் முடியாது மகனே. எனக்கு நட்டம் ஏற்படும்.

**සංකර්** ඃ හරි හොඳවායින් ලොකු පොල් ගෙඩි පහක් දෙන්න.
**சங்கர்** : ஹரி ஹொ(ந்)(Dh)தவாயின் லொ(க்)கு பொள்(G)கெடி பஹக் (Dh)தென்ன.
சரி, நல்லதில் பெரிய ஐந்து தேங்காய் தாருங்கள்.

| | |
|---|---|
| **தேர்ச்சி** | **:** பாடசாலையில் உள்ள ஆட்கள், பொருட்கள், இடங்கள் போன்றவற்றை இனங்கண்டு கூறுவார். |

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

### செயற்பாடு 1

- பாடசாலையில் உள்ள ஆட்கள் தொடர்பாக தாய்மொழியில் கலந்துரையாடுக. ஆட்களின் பெயர்களை தாய்மொழியிலேயே கூறுவதற்கு வழிப்படுத்துக.

- பின் அப்பெயர்களை சிங்கள மொழியில் கூற முடியுமா? என வினவி அப்பெயர்களை சிங்களமொழியில் எழுதிய அட்டவணையொன்றினைக் காட்சிப்படுத்துக. அல்லது கரும்பலகையில் எழுதி அவதானிக்க விடுக.

| | |
|---|---|
| විදුහල්පති | - வி(Dh)துஹல்ப(த்)தி |
| ගුරුතුමා | - (G)குரு(த்)துமா |
| පන්තිභාර ගුරුතුමා | - பந்தி(B)பார(G)குரு(த்)துமா |
| ශිෂ්‍යයා | - சிஷ்யயா |
| ශිෂ්‍යාව | - சிஷ்யாவ |

- பின் இச்சொற்களை ஒவ்வொன்றாக உச்சரித்துக் காட்டுக. மாணவர்களையும் உச்சரித்துக் கூற வழிப்படுத்துக.

### செயற்பாடு 2

- மேற்படி சொற்கள் ஐந்தினையும் சிங்களமொழியில் தனித்தனியாக ஒவ்வோர் அட்டை யிலும் எழுதிக்கொள்க. ஒவ்வொன்றிலும் மாணவர் தொகைக்கேற்ப சுமார் ஆறு, அல்லது ஏழு சொல்லட்டைகள் இடம்பெறலாம்.

- மாணவர்கள் யாவரையும் ஒரே வட்டத்தில் நிற்கச் செய்க. ஒவ்வொரு மாணவரிடமும் எழுதிய அட்டைகளில் ஒவ்வொன்றை வழங்குக.

- ஆசிரியர் வட்டத்தின் மத்தியில் வந்து ஒரு சொல்லை கூறியதும் அச்சொல்லை வைத்திருக்கும் சகல மாணவர்களும் வட்டத்தின் மத்தியில் ஆசிரியரைச் சுற்றி ஒரு சிறு வட்டமாக அமைதல் வேண்டும் என அறிவுறுத்துக. பின் அவர்கள் கொண்டு வந்த அட்டையை வாசிக்க நெறிப்படுத்துக.

- இவ்வாறு சகல சொற்களிலும் மாணவர்கள் பரிச்சயம் பெற வாய்ப்பு வழங்குக.

### செயற்பாடு 3

- பாடசாலையில் உள்ள பொருட்கள் தொடர்பாக தாய்மொழியில் கலந்துரையாடுக. அவற்றின் பெயர்களை தாய்மொழியிலேயே கூற வழிப்படுத்துக.

- பின் அப்பெயர்களைச் சிங்கள மொழியில் கூற முடியுமா என வினவி அப்பெயர்களை சிங்களமொழியில் எழுதிய அட்டையொன்றினை காட்சிப்படுத்துக. அல்லது கரும்பலகையில் எழுதி அவதானிக்க விடுக.

| | |
|---|---|
| පුටුව | - பு(ட்)டுவ |
| මේසය | - மேசய |

පොත - பொ(த்)த
පෑන - பேன
පැන්සලය - புன்சலய
කලුලෑල්ල - கலுலேல்ல
හුණුකූර - ஹுணுகூற

- பின் இச்சொற்களை ஒவ்வொன்றாக உச்சரித்துக் காட்டுக. மாணவர்களையும் உச்சரித்துக் கூற வழிப்படுத்துக.

- செயற்பாடு 2 இல் முன்மொழியப்பட்டுள்ள விளையாட்டு முறையிலும் இச்சொற்களை அறிமுகப்படுத்தலாம்.

## செயற்பாடு 4

- அறிமுகப்படுத்திய சொற்களுக்குரிய தனித்தனியான படங்களைச் சேகரிக்குக. அவற்றைத் தனித்தனி சிறு சிறு அட்டைகளில் ஒட்டிக் கொள்க.

- படங்கள் ஒட்டிய அட்டைகளை ஒரு சிறிய பெட்டியில் இடுக.

- மாணவர்களை இரு குழுக்களாக வகுக்குக. இவர்களிடையே இதனை ஒரு போட்டி நிகழ்ச்சியாக நடத்துக. இரு குழுக்களையும் A, B எனப் பெயரிட்டுக் கொள்க.

- A குழுவில் ஒருவர் ஒரு பட அட்டையை எடுத்து B குழுவில் உள்ள ஒரு வரை சுட்டிக்காட்டி இதன் பெயர் யாது என கேட்டல் வேண்டும். அதற்கு அவர் சிங்களத்தில் சரியான பதிலைக் கூற வேண்டும். அவ்வாறு கூறினால் அவருக்கு ஒரு புள்ளி வழங்குக.

- இவ்வாறு தடவைக்கு ஒருவரிடம் ஒரு வினாவாவது வினவ வேண்டும். வினவிய அட்டையை மீண்டும் பெட்டியில் இட்டு கலந்து இன்னொரு அட்டையை எடுத்து மற்றொருவரிடம் வினவ வேண்டும்.

- பின் முதல் வினவிய குழுவினர் இரண்டாவது சுற்றில் பதில் கூறும் குழுவினராக மாற வேண்டும். இவ்வாறு இதனைத் தொடர்ந்து நடத்தலாம்.

- அதிக புள்ளி பெற்ற குழு வெற்றி பெற்றதாகக் கணிக்குக.

- பங்குபற்றிய எல்லோரையும் மதிக்குக.

## செயற்பாடு 5

- பாடசாலையில் காணப்படும் குறிப்பிட்ட இடங்களை அறிமுகம் செய்வதற்காக அவ்விடங்களை எடுத்துக்காட்டும் படங்களைச் சேகரிக்குக. அவற்றைத் தனித்தனியான சிறு சிறு அட்டைகளில் ஒட்டிக்கொள்க.

- தடவைக்கு ஒவ்வொரு படமாக காண்பித்து அதன் பெயரைத் தாய்மொழியில் கேட்டறிந்து உரிய சொல்லை சிங்கள மொழியிலும் கூற வழிப்படுத்துக.

- சொற்களைக் கூறுவதற்கு இலகுவாக பின்வரும் சொற்கள் அடங்கிய அட்டை ஒன்றினை தயார்படுத்திக் காட்சிப்படுத்துக.

| | |
|---|---|
| කාර්යාලය | - கார்யாலய |
| පුස්තකාලය | - புஸ்தகாலய |
| පරිගණක කාමරය | - பரி(G)கன(க்)க காமரய |
| විද්‍යාගාරය | - வி(Dh)த்யா(G)காரய |
| වැසිකිළිය | - வசிகிலிய |
| ක්‍රීඩාභූමිය | - க்ரீ(D)டா(B)பூமிய |

- மாணவர்கள் சொற்களைச் சரியாக உச்சரிப்பதற்கு ஆர்வமூட்டுக.

## செயற்பாடு 6

- மாணவர்களை இரு குழுக்களாக்குக. அறிமுகப்படுத்தவேண்டிய இடங்களைக் குறிக்கும் சிங்களமொழிச் சொற்களைக் கொண்ட அட்டைகள் பலவற்றைத் தயாரித்துக் கொள்க.

- சொல்லட்டைகளை ஒரு பெட்டியில் இட்டுக் கொள்க.

- மாணவர் குழுக்களை இரு பக்கமாக நிற்கச் செய்து தடவைக்கு ஒரு குழுவில் நின்றும் ஒருவர் வந்து ஓர் அட்டையை எடுத்து வாசித்து அதன் பொருளை சிங்களத்தில் கூறச் செய்க. வாசித்த அட்டையை அப்புறமாக வைக்குக. எல்லா அட்டைகளும் முடித்த பின்பு மீண்டும் சகல அட்டைகளையும் பெட்டியில் இடுக. முதல் குழுவில் ஒருவர் வந்து வாசித்து பொருள் கூறின் அவருக்கு ஒரு புள்ளி வழங்குக. வாசிக்க முடியாவிடின் அதே குழுவில் அடுத்திருப்பவருக்கு வாய்ப்பு வழங்குக. பின்னர் அடுத்த குழுவில் முதலாவதாக இருப்பவருக்கு வாய்ப்பு வழங்குதல் வேண்டும். இவ்வாறு குழுவில் உள்ள எல்லோரும் பங்குகொள்ள வாய்ப்பு வழங்குதல் வேண்டும்.

- அதிக புள்ளிகளைப் பெற்ற குழுவினர் வெற்றி பெற்றதாகக் கருதப்படுவர்.

- பங்குபற்றிய எல்லோரையும் பாராட்டுக.

**விளக்கம்:**

| | | | |
|---|---|---|---|
| විදුහල්පති | - அதிபர் | පැන්සලය | - பென்சில் |
| ගුරුතුමා | - ஆசிரியர் | කළුලෑල්ල | - கரும்பலகை |
| පන්තිභාර ගුරුතුමා | - வகுப்பாசிரியர் | හුණුකූර | - வெண்கட்டி |
| ශිෂ්‍යයා | - மாணவன் | කාර්යාලය | - காரியாலயம் |
| ශිෂ්‍යාව | - மாணவர் | පුස්තකාලය | - நூலகம் |
| පුටුව | - கதிரை | පරිගණක කාමරය | - கணினிக்கூடம் |
| මේසය | - மேசை | විද්‍යාගාරය | - விஞ்ஞானகூடம் |
| පොත | - புத்தகம் | වැසිකිළිය | - மலசலகூடம் |
| පෑන | - பேனை | ක්‍රීඩාභූමිය | - விளையாட்டு மைதானம் |

**தேர்ச்சி :** படமொன்றில் காணப்படுகின்ற நிகழ்வொன்றில் குறித்த சந்தர்ப்பமொன்றில் காணப்படுகின்றவற்றை இனங்கண்டு கூறுவார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

### செயற்பாடு 1 –

- குழுக்களுக்குப் பகிர்ந்தளிக்கப் போதுமான அளவில் பின்வரும் படத்தைப் பிரதி செய்து கொள்க.



- வகுப்பிலுள்ள மாணவர்களை விரும்பியவாறு குழுக்களாக்குக.
- ஒவ்வொரு குழுவினருக்கும் பட அட்டையை வழங்குக.
- மேசையின்மீது படத்தை வைத்து அவதானிக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்துக.
- ஒவ்வொரு குழுவினரும் முன்வந்து தாம் படத்தில் இனங்கண்டவற்றின் பெயர்களை சிங்கள மொழியில் கூறுவதற்கு வழிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு:***

| | |
|---|---|
| අඹ | - அ(ம்)(B)ப |
| ගහ | - (G)கஹ |
| අඹ ගහ | - அ(ம்)(B)ப (G)கஹ |
| බල්ලා | - (B)பல்லா |
| පොල් ගස | - பொள் (G)கஸ |
| ගෙදර | - (G)கெ(Dh)தர |
| ඉර | - இர |
| බස් | - (B)பஸ் |
| ලේනා | - லேனா |
| කුරුල්ලා | - குருள்ளா |

- மேலே குறிப்பிட்டது போன்ற சொற்களையோ வேறு சொற்களையோ கூறலாம். அவர்களைப் பாராட்டுக.

## செயற்பாடு 2

- மேலே உள்ள சொற்களை சொல்லட்டைகளாகத் தயார்ப்படுத்துக. சொல் அட்டைத் தொகுதியை சிறிய பெட்டியொன்றில் இடுக. ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு பெட்டியை வழங்குக.

- மாணவர் எழுமாறாக ஒவ்வொரு சொல்லாக எடுத்து குழு முன்னிலையில் வாசிப் பதற்கு சந்தர்ப்பத்தை வழங்குக. எல்லா மாணவரும் எல்லாச் சொற்களையும் வாசிப்பதற்கு வாய்ப்பு வழங்குக.

## செயற்பாடு 3

- மாணவர் தெரிவுசெய்து எடுத்த ஒரு சொல்லை வாக்கியமாக அமைத்து சிங்கள மொழியில் கூறுவதற்கு வழிப்படுத்துக.

***எடுத்துக்காட்டு:***

| | |
|---|---|
| අඹ රසයි | - அ(ம்)(B)ப றஸய் |
| බස් යනවා | - (B)பஸ் யனவா. |
| ළමයි සෙල්ලම් කරනවා | - லமய் செல்லம் கரனவா. |
| ඉර පායනවා | - இர பாயனவா. |
| තාත්තා වැඩට යනවා | - தாத்தா வு(D)ட(ட்)ட யனவா. |
| අම්මා ගෙදර එනවා | - அம்மா (G)கெ(Dh)தர எனவா. |

- இவை போன்ற வாக்கியங்களை மாணவர் கூறுவதற்கு வழிப்படுத்துக.

## செயற்பாடு 4

- மாணவரை அரைவட்டத்தில் இருக்கச் செய்க.

- முதலில் மாணவர் சந்தையில் கண்டவற்றை ஞாபகப்படுத்திக்கூற வழிப்படுத்துக.

- அங்கு நடைபெறும் செயல்கள் பற்றிக் கலந்துரையாடுக.

- பின்வருவது போன்ற சந்தைப் படம் ஒன்றை பெரிய அளவில் பிரதி செய்து வகுப் பறையில் காட்சிப்படுத்துக.



- படத்தில் காணப்படும் பொருட்களின் பெயர்கள், செயல்கள் என்பனவற்றை இனங்காண வாய்ப்பு வழங்குக.

- மாணவர் தாம் இனங்கண்டவற்றை வகுப்பு முன்னிலையில் சிங்களமொழியில் கூறுவதற்கு வழிப்படுத்துக.

  ***எடுத்துக்காட்டு:***

  පොල් - பொள்
  අන්නාසි - அன்னாசி
  කෙසෙල් - கெசெல்
  බයිසිකලය - (B)பய்சி(க்)கலய
  වෙළෙන්දා බඩු කිරනවා - வெலெ(ந்)தா (B)ப(D)டு கிரனவா.
  බඩු ගන්නවා - (B)ப(D)டு (G)கன்னவா.
  මිනිස්සු පොළට එනවා - மினிஸ்ஸு பொல(ட்)ட எனவா.


## செயற்பாடு 5

- படத்தில் காணக்கூடிய பொருள்களின் பெயர்களைக் கொண்ட அட்டைகள் சில வற்றைத் தயார்படுத்திக் கொள்க. மாணவரை இரு குழுக்களாக்குக. A, B என அவற்றுக்குப் பெயரிட்டுக் கொள்க. சொல்லட்டைகளை இரு குழுக்களுக்கும் இடையே மத்தியில் சொல் மேற்பக்கமாகத் தெரியாத வண்ணம் கவிழ்த்து வைக்குக. தடவைக்கு குழு A இல் உள்ள ஒரு மாணவன் ஒரு சொல்லை எடுத்துக்கூற குழு B யில் உள்ள மாணவன் அச்சொல்லிற்குப் பொருத்தமாக வாக்கியம் ஒன்றை அமைத்து சிங்கள மொழியில் முன்வைக்க வேண்டும் என அறிவுறுத்துக. முடியாதவிடத்து அடுத்தவருக்கு வாய்ப்பு வழங்குதல் வேண்டும். பின்னர் குழு B யிலிருந்து ஒருவர் ஒரு சொல்லை எடுத்து A குழுவினரில் ஒருவருக்குக் காட்ட, அவர் அது தொடர்பாக வாக்கியமொன்று கூறுதல் வேண்டும். எடுக்கப்பட்ட சொற்கள் வேறாக வைக்கப்படல் வேண்டும்.

- இவை போன்ற வாக்கியங்களை எல்லா மாணவரும் கூறுவதற்கு வாய்ப்பு வழங்குக.

## செயற்பாடு 6

- மாணவரை அரைவட்டத்தில் அமரச் செய்க.
- பாடசாலையில் காணப்படும் இடங்கள் பற்றிக் கலந்துரையாடுக.
- பாடசாலையில் யார் யார் இருக்கிறார்கள் என்பது பற்றிக் கலந்துரையாடுக.
- தரப்பட்டுள்ள படத்தை பெரிய அளவில் பிரதிசெய்து வகுப்பறையில் காட்சிப்படுத்துக.



- படத்தில் காணப்படும் இடங்களை/ஆட்களை இனங்கண்டு சிங்களமொழியில் கூற நெறிப்படுத்துக.

  ***எடுத்துக்காட்டு:***

  කාර්යාලය - கார்யாலய
  පංතිකාමරය - ப(ந்)திகாமரய
  විදුහල්පති - வி(Dh)துஹல்ப(த்)தி
  ගුරුවරයා - (G)குருவரயா
  ශිෂ්‍යාව - சிஷ்யாவ
  විද්‍යාගාරය - வி(Dh)த்யா(G)காறய
  පුස්තකාලය - புஸ்தகாலய
  ආපන ශාලාව - ஆ(ப்)பன சாலாவ
  සෙල්ලම් මිදුල - செல்லம் மிதுல

## செயற்பாடு 7

- மேலே தரப்பட்டுள்ள படத்தில் காணப்படும் இடங்களின் பெயர்களை சொல்லட்டைகளில் தயாரிக்குக.

- சொல்லட்டைகளை பெட்டி ஒன்றில் இட்டு மாணவர்களுக்கு வழங்குக. ஒவ்வொரு மாணவரும் தமக்குக் கிடைத்த சொல்லுக்கு ஏற்ப வாக்கியம் ஒன்றை சிங்கள மொழியில் அமைத்துச் சரியாகக்கூற அறிவுறுத்துக.

- எல்லா மாணவருக்கும் இச்செயற்பாட்டில் ஈடுபடச் சந்தர்ப்பம் வழங்குக.

**விளக்கம்:**

| | | | |
|---|---|---|---|
| අඹ | - மாங்காய் | කාර්යාලය | - காரியாலயம் |
| ගහ | - மரம் | පංතිකාමරය | - வகுப்பறை |
| අඹ ගහ | - மா மரம் | විදුහල්පති | - அதிபர் |
| බල්ලා | - நாய் | ගුරුවරයා | - ஆசிரியர் |
| පොල් ගස | - தென்னை மரம் | ශිෂ්‍යාව | - மாணவி |
| ගෙදර | - வீடு | ශිෂ්‍යයා | - மாணவன் |
| ඉර | - சூரியன் | විද්‍යාගාරය | - விஞ்ஞானகூடம் |
| බස් | - பஸ்/பேருந்து | පුස්තකාලය | - நூலகம் |
| ලේනා | - அணில் | ආපන ශාලාව | - சிற்றுண்டிச்சாலை |
| කුරුල්ලා | - குருவி | සෙල්ලම් මිදුල | - விளையாட்டு முற்றம் |

අඹ රසයි - மாங்காய் ருசியானது.
බස් යනවා - பஸ் போகிறது.
ළමයි සෙල්ලම් කරනවා - பிள்ளைகள் விளையாடுகிறார்கள்.
ඉර පායනවා - சூரியன் உதிக்கிறது.
තාත්තා වැඩට යනවා - அப்பா வேலைக்குப் போகிறார்.
අම්මා ගෙදර එනවා - அம்மா வீட்டுக்கு வருகிறார்.
පොල් - தேங்காய்
අන්නාසි - அன்னாசி
කෙසෙල් - வாழை
බයිසිකලය - சைக்கிள்
වෙළෙන්දා බඩු කිරනවා - வியாபாரி பொருள் நிறுக்கிறான்.
බඩු ගන්නවා - பொருள் எடுக்கிறார்.
මිනිස්සු පොළට එනවා - மக்கள் சந்தைக்குப் வருகிறார்கள்.

**தேர்ச்சி :** சிங்கள அரிச்சுவடியில் சில எழுத்துக்களை மட்டும் முறையாக விளங்கி அறிந்து உரிய வடிவில் எழுதுவார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

### செயற்பாடு 1

- முதலில் உயிர் எழுத்துக்களை முழு வகுப்பிற்கும் அறிமுகம் செய்க.

- அதற்காக கீழே தரப்பட்டுள்ள எழுத்துக்களை இருமொழிகளிலும் சற்றுப் பெரிதாக பெரிய தாளொன்றில் அல்லது அட்டையொன்றில் பிரதிசெய்து மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துக.

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| අ | ආ | ඇ | ඈ | ඉ | ඊ | උ | ඌ | එ | ඒ | ඓ | ඔ | ඕ | ඖ |
| அ | ஆ | | | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |

- இவற்றில் உச்சரிப்பு வடிவங்களை சகலரும் விளங்கும் வண்ணம் கூறுக. மாணவர் களையும் கூறச் செய்க.

- காட்சிப்படுத்திய அட்டையைப் பார்த்து சிறு குழுவாக, இருவர் இருவராக, தனித் தனியாக எழுத்துக்களின் உச்சிப்பைக் கூற நெறிப்படுத்துக.

- தமிழில் தனி எழுத்துக்களாக இல்லாத சில உச்சரிப்புக்கள் சிங்களத்தில் உண்டென் பதை எடுத்துக் கூறுக. உணரச் செய்க.

### செயற்பாடு 2

- மாணவர்களைக் குழுக்களாக்குக.

- ஏற்கனவே அறிமுகப்படுத்திய சிங்கள உயிர் எழுத்துக்கள் கொண்ட பின்வரும் விதத்தில் அமைந்த, அட்டைகளை மாணவர் குழுக்களுக்குக் கொடுக்கக்கூடிய அளவில் தயாரித்துக் கொள்க.

| | | | |
|---|---|---|---|
| අ | ආ | ඇ | ඈ |
| ඉ | ඊ | උ | ඌ |
| එ | ඒ | ඓ | ඔ |
| ඕ | ඖ | | |

- பின்னர் இவ்வட்டையில் உள்ளது போன்ற எழுத்துக்களை அதே அளவில் தனித் தனியாக அட்டைகளில் எழுதி ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொரு அட்டைத் தொகுதியை வழங்கக்கூடிய விதத்தில் தயாரித்துக் கொள்க.

- ஒவ்வொரு குழுவிடமும் பெரிய அட்டையும், தனித்தனி எழுத்துக்கள் கொண்ட அட்டைத் தொகுதியொன்றும் காணப்படல் வேண்டும்.

- பெரிய அட்டையை குழுவின் மத்தியில் மேசை மீது வைக்கச் செய்க. தனித்தனி எழுத்துக்களை ஒரு புறமாக வைக்க அறிவுறுத்துக.


- ஆசிரியர் எழுத்துக்களை எழுமாறான விதத்தில் கூற அந்த எழுத்தை மாணவர்கள் எழுத்துக் தொகுதியில் இருந்து தெரிந்து எழுத்தட்டையின் உரிய கட்டத்தின் மேல் வைக்க வேண்டும் என அறிவுறுத்துக.

- இவ்வாறு பல முறை செய்து எழுத்துக்களை இனங்காண வழிப்படுத்துக.

## செயற்பாடு 3

- உயிர் எழுத்துக்களை எழுதும் முறையினை முழு வகுப்பிற்கும் அறிமுகப்படுத்துக.

- பின்வரும் முறையினை அவதானித்து அறிமுகப்படுத்தலாம்.
  ***எடுத்துக்காட்டு:***



- பின்னர் தம்மிடமுள்ள அட்டையைப் பார்த்து உயிர் மெய் எழுத்துக்களை எழுது வதற்கு வழிப்படுத்துக.

## செயற்பாடு 4

- உயிர் மெய் எழுத்துக்களை முழு வகுப்பிற்கும் அறிமுகம் செய்வதற்காக இரு மொழிகளிலும் சற்றுப் பெரிதாக எழுதப்பட்ட உயிர் மெய் எழுத்துக்கள் கொண்ட அட்டையொன்றினை தயாரித்துக் கொள்க.

| | | | | |
|---|---|---|---|---|
| ක<br>க | ඛ | ග | ඝ | ඞ<br>ங |
| ච | ඡ | ජ<br>ஜ | ඣ | ඤ<br>ஞ |
| ට | ඨ | ඩ<br>ட | ඪ | ණ<br>ண |
| ත<br>த | ථ | ද | ධ | න<br>ந/ன |
| ප<br>ப | ඵ | බ | භ | ම<br>ம |
| ය<br>ய | ර<br>ர | ල<br>ல /ள | ව<br>வ | ශ |
| ෂ<br>ஷ | ස<br>ச | හ<br>ஹ | ළ<br>ழ /ள | ෆ |

- இவற்றில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் சில எழுத்துக்களை மட்டும் ஒரு தடவையில் அறிமுகம் செய்க.

  ***எடுத்துக்காட்டு:***

  ක, ග, ච, ජ, ට , ඩ, ණ, ත, ද, න

- இவற்றின் உச்சரிப்பு வடிவங்களை சகலரும் விளங்கும் வண்ணம் கூறுக. மாணவர் களையும் கூறச்செய்க.

- தமிழில் தனி எழுத்துக்களாக இல்லாத சில உச்சரிப்புக்கள் சிங்களத்தில் உண்டென்பதை எடுத்துக் கூறுக.

## செயற்பாடு 5

- உயிர் மெய் எழுத்துக்கள் எழுதிய அட்டையை காட்சிப்படுத்துக.

- முதலில் அறிமுகம் செய்யும் உயிர் மெய் எழுத்துக்களை தனித்தனியாக சிறிய அட்டைகளில் எழுதிக் கொள்க. ஒரு எழுத்தில் சுமார் பத்துப் பன்னிரெண்டு அளவில் தயாரித்துக் கொள்க.

- மாணவர்களை வட்டமாக நிற்கச் செய்க.

- தனித்தனியாக எழுதிய எழுத்தட்டைகளில் எழுத்துக்களைக் கலந்து ஒவ்வொருவரிட மும் சில எழுத்துக்கள் வரக்கூடியதாக பகிர்ந்தளிக்குக. எல்லோரிடமும் ஒரே அளவு எழுத்தட்டைகள் வழங்கப்படவேண்டியதில்லை.

- ஆசிரியர் வட்டத்தின் மத்தியில் நின்று, உச்சரிக்கும் எழுத்தட்டையை வைத்திருக்கும் மாணவர்கள் ஆசிரியர் அருகே ஓடி வருதல் வேண்டும் என அறிவுறுத்துக. எழுத்து இல்லாதவர் வரவேண்டியதில்லை.

- கொண்டு வரும் எழுத்துக்களை அவதானித்து நெறிப்படுத்துக.

- இவ்வாறு பல எழுத்துக்களையும் அறிமுகம் செய்க.

- அறிமுகப்படுத்திய எழுத்தட்டைத் தொகுதி ஒவ்வொன்றாக எடுத்து ஒவ்வொரு மாணவர் குழுவுக்கும் வழங்குக.

- அவற்றை பார்த்து தமது பயிற்சி புத்தகத்தில் எழுதுவதற்கு வழிப்படுத்துக.

## செயற்பாடு 6

- செயற்பாடு 5 இல் அறிமுகப்படுத்தியவாறு ஏனைய எழுத்துக்களை அறிமுகம் செய்க.

- அவற்றை எழுதுவதற்கு வழிப்படுத்துக.

**தேர்ச்சி :** குறித்த சில தமிழ் எழுத்துக்களின் உச்சரிப்புகளுக்காகச் சிங்களத்தில் பல எழுத்துக்கள் பயன்படுவதை விளங்கிப் பயன்படுத்துவார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

## செயற்பாடு 1

- பின்வரும் சிங்கள எழுத்துக்களை மட்டும் மாணவர்களுக்கு அட்டைகளில் அல்லது டிமை தாளில் அல்லது கரும்பலகையில் எழுதிக் காட்சிப்படுத்துக.

ක, ග, ඝ } க

ප, බ, භ } ப

ස, ච, ශ } ச

ට, ඩ } ட

ත, ද } த

- அவற்றை ஒவ்வொன்றாக உச்சரித்துக் காட்டுக.
- அந்த எழுத்துக்களுக்கு குறித்த ஒரு எழுத்து மட்டும் தமிழில் பயன்படுவதை எடுத்துக்காட்டுக.

## செயற்பாடு 2

- மாணவர்கள் ஒரு குழுவில் 5/6 பேர் இடம் பெறக்கூடிய விதத்தில் குழுக்களாக்கிக் கொள்க.
- மாணவர் குழுக்களுக்கு பகிர்ந்தளிக்கக்கூடிய விதத்தில் பின்வரும் சொற்கள் கொண்ட அட்டைத் தொகுதிகளைத் தயாரித்துக் கொள்க.

| | | |
|---|---|---|
| කන්න | ගන්න | හත |
| කතුර | ගම | හරකා |
| කඩල | ගල | හරි |
| කළය | ගස | හඬ |

- அட்டைத் தொகுதிகளைத் தயாரிக்கும்போது தனித்தனியான அட்டைகளில் தயாரித்தல் வேண்டும்.
- ஒவ்வோர் அட்டையிலும் குறித்த எழுத்தை குறிப்பாக அடையாளமிட்டுக் காட்டுவது மிகப் பொருத்தமுடையதாக அமையும். அதாவது வேறாகக் கட்டமிட்டோ வேறு நிறத்திலோ அந்த எழுத்தை அடையாளமிடலாம்.
- ஒவ்வொரு அட்டைத் தொகுதியிலும் ஒவ்வொன்றை ஒவ்வொரு குழுவிற்கும் வழங்குக.
- பின் ஆசிரியர் ක. ග. හ எழுத்தில் ஆரம்பிக்கும் ஒவ்வொரு சொல்லையும் உரத்து வாசிக்கும்போது அந்த குறித்த சொல்லை குழுவினர் தெரிவுசெய்து காண்பிக்க வேண்டும் என அறிவுறுத்துக.
- பின்னர் சொற்களைக் கூறச்செய்து குழுவினர் செயல்பட வழிகாட்டுக.
- குழுவிலோ தனித்தனியாகவோ வினவலாம்.
- குழுவில் அவர்களாகவே சொல்லைத் தெரிவுசெய்து அவர்களாகவே உச்சரித்துக் கூறவும் வழிப்படுத்தலாம்.
- மேற்படி சொற்களுக்கு தமிழில் 'க' என்ற எழுத்தே அநேகமாகப் பயன்படுத்தப் படுகின்றது என்பதை பொருத்தமான சந்தர்ப்பங்களில் எடுத்துக் கூறுக.

## செயற்பாடு 3

- மேற்படி செயற்பாட்டைப் போன்று இச்செயற்பாட்டையும் பொருத்தமாக முன் வைக்கலாம்.

- அதற்காக பின்வரும் அட்டைத் தொகுதிகளைத் தயாரித்துக் கொள்க.

| | | | |
|---|---|---|---|
| **ප**නාව | **ප**හළ | **ප**හන | **ප**ලතුරු |
| **ෆ**යිල් | **ෆ**ාමසි | **ෆ**ෑන් | ටො**ෆි** |
| **බ**ස් | **බ**ඩ | **බ**ත් | |

- முன்னைய செயற்பாட்டைப் போன்றோ விளையாட்டு போன்றோ இதனை அறிமுகம் செய்யலாம்.

## செயற்பாடு 4

- இதற்குப் பொருத்தமான பின்வருவன போன்ற சொல் அட்டைத் தொகுதிகளைத் தயாரித்துக் கொள்க.

| ස | ච | ට | ඩ | ත | ද |
|---|---|---|---|---|---|
| සවස | චලනය | ටයරය | බඩ | තරාදිය | දහය |
| සරුංගලය | චන්ද්‍රයා | ටකරම | කඩය | තරුව | දත |
| සමනලයා | චන්න | ටකය | ඉඩම | තක්කාලි | දළ |

- மேற்கூறியவாறு விளையாட்டை மையமாக வைத்தோ வேறு தொழிற்பாடு முறையிலோ இச்சொற்களில் உள்ள உச்சரிப்பை முறையாக அறிமுகம் செய்யலாம்.

- எல்லா தொழிற்பாடுகளின் பின்பும் தமிழில் குறித்த சில எழுத்துக்களின் உச்சரிப்புக்கு சிங்களத்தில் தனித்தனியாக எழுத்துக்கள் பயன்படுத்தப்படுகின்றன என்பதை எடுத்துக் காட்டுக.

- நான்கு தொழிற்பாடுகளின் போதும் ஆசிரியர் தனக்குத் தெரிந்த சொற்களைக் கொண்டு அதிலும் முன்னைய வகுப்புக்களில் கற்றவற்றில் இருந்தும் குறித்த ஒலியை தருகின்ற சொற்களை தெரிவுசெய்து கொள்வது மிக உசிதமாக அமையலாம்.

**விளக்கம்:**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| කන්න | - | சாப்பிடுங்கள் | පනාව | - | சீப்பு | සරුංගලය | - | பட்டம் |
| ගන්න | - | குடியுங்கள் | බස් | - | பஸ் | චන්ද්‍රයා | - | சந்திரன் |
| හත | - | ஏழு | පහළ | - | கீழ் | ටකරම | - | தகரம் |
| කතුර | - | கத்தரிக்கோல் | බඩ | - | வயிறு | කඩය | - | கடை |
| ගම | - | ஊர் | පහන | - | விளக்கு | තරුව | - | நட்சத்திரம் |
| හරකා | - | மாடு | බත් | - | சோறு | දත | - | பல் |
| කඩල | - | கடலை | පලතුරු | - | பழங்கள் | සමනලයා | - | வண்ணத்துப்பூச்சு |
| ගල | - | கல் | සවස | - | மாலை | චන්න | - | சன்ன |
| හරි | - | சரி | චලනය | - | அசைவு | ටකය | - | கிலுக்கி |
| කළය | - | குடம் | ටයරය | - | டயர் | ඉඩම | - | காணி |
| ගස | - | மரம் | තරාදිය | - | தராசு | තක්කාලි | - | தக்காளி |
| හඬ | - | குரல் | දහය | - | பத்து | දළ | - | தந்தம் |

**தேர்ச்சி :** சில உயிர்க் குறிகளைக் கொண்ட இலகுவான சொற்களை எழுதுவார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

### செயற்பாடு 1

- தரப்பட்டுள்ள சொற்களை எழுதுவதற்காக, பின்வரும் சொற்களைக்கொண்ட அட்டவணையை டிமை கடதாசி, கரும்பலகை, அட்டை போன்ற ஒன்றில் எழுதி மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துக.

| | | |
|---|---|---|
| හාල් | - | ஹால் |
| පිටි | - | பி(ட்)டி |
| සීනි | - | சீனி |
| අක්කා | - | அக்கா |
| ආප්ප | - | ஆப்ப |
| ගිරවා | - | (G)கிரவா |
| පිහිය | - | பிஹிய |
| රවුම | - | ரவும |
| පොත | - | பொ(த்)த |

- இச்சொற்களை உச்சரித்துக்காட்டுக. மாணவர்களையும் உச்சரித்து வாசிக்கச் செய்க.

- பின் மாணவர்களை வட்டமாக நிற்கச் செய்க. எழுமாறாக மாணவர்களை குறித்த சொல்லை கூறி கரும்பலகையில் எழுதச் செய்க.

- பின்னர் காட்சிப்படுத்தியுள்ள சொற்களை அப்பியாசக் கொப்பிகளில் எழுதிக் கொள்வதற்கு மாணவரை வழிப்படுத்துக.

- இயன்ற அளவுக்கு உறுப்பமைய எழுதுவதற்கு வழிப்படுத்துக.

**விளக்கம்:**

| | | |
|---|---|---|
| හාල් | - | அரிசி |
| පිටි | - | மா |
| සීනි | - | சீனி |
| අක්කා | - | அக்கா |
| ආප්ප | - | அப்பம் |
| ගිරවා | - | கிளி |
| පිහිය | - | கத்தி |
| රවුම | - | வட்டம் |
| පොත | - | புத்தகம் |

**தேர்ச்சி :** அன்றாட நிகழ்வுகளுக்குப் பொருத்தமான சிறிய வாக்கியங்களை ஒழுங்கமைத்து சரியாக உச்சரித்துக் கூறுவார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

### செயற்பாடு 1

- தொடர்பாடலுக்காக பயன்படுத்தக்கூடிய பின்வரும் வாக்கியங்களை சகல மாணவர்களுக்கும் அறிமுகம் செய்க.

| | | |
|---|---|---|
| අපි පාසලට යමු | - | அ(ப்)பி பாசல(ட்)ட யமு |
| අපි සෙල්ලම් කරමු | - | அ(ப்)பி செல்லம் கறமு |
| සීනුව ගහනවා | - | சீனுவ (G)கஹனவா |
| අන්න ගුරුතුමා එනවා | - | அன்ன (G)குறு(த்)துமா எனவா |
| මම පාඩම් කරනවා | - | மம பாடம் கறனவா |
| බස් එක ආවා | - | பஸ் எ(க்)க ஆவா |
| අපි බත් කමු | - | அபி (B)பத் கமு |
| අම්මා වතුර ගෙනාවා | - | அம்மா வ(த்)துற (G)கெனாவா |
| අයියා කඩේට ගියා | - | அய்யா கடே(ட்)ட (G)கியா |
| අපි වතුර බොමු | - | அபி வ(த்)துற (B)பொமு |

- மேற்படி வாக்கியங்களை அட்டையொன்றில் அல்லது டிமை தாளொன்றில் அல்லது கரும்பலகையில் எழுதிக் காட்சிப்படுத்துக.

- ஒவ்வொரு வாக்கியத்தையும் உச்சரித்துக்காட்டி அதன் பொருளையும் எடுத்துக் கூறுக.

- சகல மாணவர்களும் உச்சரிப்பதற்கு வழிப்படுத்துக.

### செயற்பாடு 2

- மாணவர்களை பதினொரு பேர் கொண்ட குழுக்களாக நிற்கச் செய்க. வட்டத்தில் 10 பேரும் வட்டத்தின் மத்தியில் ஒருவரும் நிற்றல் வேண்டும்.

- மேற்படி வாக்கியங்களை தனித்தனியான அட்டைகளில் சிங்களத்தில் எழுதிக் கொள்க.

- அத்தோடு சிங்களத்தில் எழுதியவற்றின் கருத்தை வேறு தனித்தனியான அட்டைகளில் தமிழில் எழுதிக் கொள்க.

- சிங்களத்திலும் தமிழிலும் எழுதிய அட்டைகளை மாணவர் குழுக்களுக்கு கொடுக்கக் கூடியதாக, போதுமான அளவில் தயாரித்துக் கொள்க.

- தமிழில் தனித்தனியாக எழுதிய அட்டைகளை குவியலாக எழுதிய பக்கம் தெரியாதவாறு மாணவர் குழுக்களின் மத்தியில் கவிழ்த்து வைக்குக.

- சிங்களத்தில் எழுதிய அட்டைகளை தனித்தனியான அட்டையாக குழுவில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் அட்டை வீதம் வழங்குக.

- குழுவின் மத்தியில் நிற்பவர் குழுவின் மத்தியில் வைக்கப்பட்டிருக்கும் அட்டைகளில் இருந்து ஓர் அட்டையை எடுத்து உரத்து வாசித்தல் வேண்டும். அதனை கேட்டு கிரகித்து அதன் பொருள்பட எழுதப்பட்டிருக்கும் சிங்கள வாக்கிய அட்டை யாரிடம் உள்ளதோ, அந்த மாணவன் வட்டத்தின் மத்தியில் வந்து அவ்வட்டையை காண்பித்து அதனை உரத்து வாசித்து அட்டையை வட்டத்தின் மத்தியில் இருப்பவரிடம் கொடுத்து விட்டு மீண்டும் வட்டத்திற்கு செல்ல வேண்டும்.

- வாசிக்கப்பட்ட அட்டைகள் ஒருபுறமாக வைக்கப்படல் வேண்டும். வாசிக்க சிரமப்படு மிடத்து உதவுக.

- பின்னர் மத்தியல் இருப்பவர் இன்னொரு அட்டையை எடுத்து வாசிக்க வேண்டும். முன்பு செய்தது போன்றே அடுத்தவர் செயல்பட வேண்டும். இவ்வாறு எல்லோரும் செயல்பட வாய்ப்பு வழங்கப்படல் வேண்டும்.

- வட்டத்தின் மத்தியில் இருப்பவர் இறுதியாக வட்டத்திற்கு சென்று வேறு ஒருவர் வட்டத்தின் மத்திக்கு வரலாம். இவ்வாறு இச்செயற்பாட்டை தொடர்ச்சியாகக் கொண்டு செல்லலாம்.

**விளக்கம்:**

| | | |
|---|---|---|
| අපි පාසලට යමු | - | நாங்கள் பாடசாலைக்குப் போவோம். |
| අපි සෙල්ලම් කරමු | - | நாங்கள் விளையாடுவோம். |
| සීනුව ගහනවා | - | மணி அடிக்கிறது. |
| අන්න ගුරුතුමා එනවා | - | அதோ ஆசிரியர் வருகிறார். |
| මම පාඩම් කරනවා | - | நான் படிக்கின்றேன். |
| බස් එක ආවා | - | பஸ் வண்டி வந்துவிட்டது. |
| අපි බත් කමු | - | நாங்கள் சோறு சாப்பிடுவோம். |
| අම්මා වතුර ගෙනාවා | - | அம்மா தண்ணீர் கொண்டுவந்தார். |
| අයියා කඩේට ගියා | - | அண்ணா கடைக்குப் போனார். |
| අපි වතුර බොමු | - | நாங்கள் தண்ணீர் குடிப்போம். |

**தேர்ச்சி** : இலகுவான சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை ஒழுங்கமைத்து எழுதுவார்.

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

## செயற்பாடு 1

- ஒரு குழுவில் 5/6 பேர் அடங்கும் விதத்தில் மாணவர்களை குழுக்களாக்கிக்கொள்க.

- பின்வரும் சொற்களைத் தனித்தனியாக ஒவ்வொரு அட்டையிலும் சிங்களத்தில் எழுதி அட்டைத் தொகுதிகளைத் தயாரித்துக் கொள்க.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මේ | - | மே | යමු ද? | - | யமு(Dh)த? |
| ගෙදර | - | (G)கெதர | පාසලයි | - | பாசலய் |
| අම්මා | - | அம்மா | අපේ | - | அ(ப்)பே |
| ඔයාගේ | - | ஒயா(G)கே | ආවා ද? | - | ஆவா(Dh)த? |
| මට | - | ம(ட்)ட | අපි | - | அ(ப்)பி |
| මාලය | - | மாலய | සෙල්ලම් | - | செல்லம் |
| කරමු | - | கரமு | දෙන්න | - | (Dh)தென்ன |

- ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு அட்டைத் தொகுதியை வழங்குக.

- கொடுக்கப்பட்டுள்ள அட்டைத் தொகுதியிலுள்ள சொற்களை வாசித்து விளங்கிக் கொள்வதற்கு மாணவர்களுக்குப் போதுமான அளவு அவகாசம் வழங்குக.

- கொடுக்கப்பட்டுள்ள சொல் அட்டைத்தொகுதியில் இருந்து இரண்டு அல்லது மூன்று சொற்களைக் கொண்ட வாக்கியமொன்றினை குழுவாக சேர்ந்து அமைப்பதற்கு வாய்ப்பளிக்குக.

***எடுத்துக்காட்டு:***

| | | |
|---|---|---|
| මේ | අපේ | ගෙදර |
| මේ | අපේ | පාසලයි |
| අම්මා | ආවාද? | |

- பின்னர் அட்டைத் தொகுதியில் உள்ள சொற்களைப் பயன்படுத்தி குழுவில் முழுக் குழுவாக, சிறு குழுவாக, இருவர் இருவராக, தனித்தனியாக மேலும் வாக்கியங்கள் அமைப்பதற்கு வாய்ப்பு வழங்குக.

- ஒவ்வொரு குழுவினரும் அமைத்த வாக்கியங்களை ஏனைய குழுவினர் செவிமடுக்கக் கூடிய விதத்தில் வாசித்துக் காட்ட வாய்ப்பு வழங்குக.

- ஒழுங்காக வாக்கியங்களை அமைத்து வாசித்த சகல குழுவினரையும் பாராட்டுக.

## செயற்பாடு 2

- ஒவ்வொரு குழுவினரும் ஒழுங்கமைத்த வாக்கியங்களை தமது பயிற்சிப் புத்தகத்தில் குறித்துக்கொள்ள வழிப்படுத்துக.

**விளக்கம்**

| | | |
|---|---|---|
| මේ | - | இது |
| යමු ද? | - | போவோமா? |
| ගෙදර | - | வீடு |
| පාසලයි | - | பாடசாலையாகும். |
| අම්මා | - | அம்மா |
| අපේ | - | எங்கள் |
| ඔයාගේ | - | உங்கள் |
| ආවා ද? | - | வந்தாரா? |
| මට | - | எனக்கு |
| අපි | - | நாம் |
| මාලය | - | மாலை (சங்கிலி) |
| සෙල්ලම් | - | விளையாட்டு |
| කරමු | - | செய்வோம் |
| දෙන්න | - | தாருங்கள் |

# සිංහල අක්ෂර මාලාව

| | අ | ආ | ඇ | ඈ | ඉ | ඊ | උ | ඌ | එ | ඒ | ඓ | ඔ | ඕ | ඖ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ක් | ක | කා | කැ | කෑ | කි | කී | කු | කූ | කෙ | කේ | කෛ | කො | කෝ | කෞ |
| ඛ් | ඛ | ඛා | ඛැ | ඛෑ | ඛි | ඛී | ඛු | ඛූ | ඛෙ | ඛේ | ඛෛ | ඛො | ඛෝ | ඛෞ |
| ග් | ග | ගා | ගැ | ගෑ | ගි | ගී | ගු | ගූ | ගෙ | ගේ | ගෛ | ගො | ගෝ | ගෞ |
| ඝ් | ඝ | ඝා | ඝැ | ඝෑ | ඝි | ඝී | ඝු | ඝූ | ඝෙ | ඝේ | ඝෛ | ඝො | ඝෝ | ඝෞ |
| ඞ් | ඞ | ඞා | ඞැ | ඞෑ | ඞි | ඞී | ඞු | ඞූ | ඞෙ | ඞේ | ඞෛ | ඞො | ඞෝ | ඞෞ |
| ච් | ච | චා | චැ | චෑ | චි | චී | චු | චූ | චෙ | චේ | චෛ | චො | චෝ | චෞ |
| ඡ් | ඡ | ඡා | ඡැ | ඡෑ | ඡි | ඡී | ඡු | ඡූ | ඡෙ | ඡේ | ඡෛ | ඡො | ඡෝ | ඡෞ |
| ජ් | ජ | ජා | ජැ | ජෑ | ජි | ජී | ජු | ජූ | ජෙ | ජේ | ජෛ | ජො | ජෝ | ජෞ |
| ඣ් | ඣ | ඣා | ඣැ | ඣෑ | ඣි | ඣී | ඣු | ඣූ | ඣෙ | ඣේ | ඣෛ | ඣො | ඣෝ | ඣෞ |
| ඤ් | ඤ | ඤා | ඤැ | ඤෑ | ඤි | ඤී | ඤු | ඤූ | ඤෙ | ඤේ | ඤෛ | ඤො | ඤෝ | ඤෞ |
| ට් | ට | ටා | ටැ | ටෑ | ටි | ටී | ටු | ටූ | ටෙ | ටේ | ටෛ | ටො | ටෝ | ටෞ |
| ඨ් | ඨ | ඨා | ඨැ | ඨෑ | ඨි | ඨී | ඨු | ඨූ | ඨෙ | ඨේ | ඨෛ | ඨො | ඨෝ | ඨෞ |
| ඩ් | ඩ | ඩා | ඩැ | ඩෑ | ඩි | ඩී | ඩු | ඩූ | ඩෙ | ඩේ | ඩෛ | ඩො | ඩෝ | ඩෞ |
| ඪ් | ඪ | ඪා | ඪැ | ඪෑ | ඪි | ඪී | ඪු | ඪූ | ඪෙ | ඪේ | ඪෛ | ඪො | ඪෝ | ඪෞ |
| ණ් | ණ | ණා | ණැ | ණෑ | ණි | ණී | ණු | ණූ | ණෙ | ණේ | ණෛ | ණො | ණෝ | ණෞ |
| ත් | ත | තා | තැ | තෑ | ති | තී | තු | තූ | තෙ | තේ | තෛ | තො | තෝ | තෞ |
| ථ් | ථ | ථා | ථැ | ථෑ | ථි | ථී | ථු | ථූ | ථෙ | ථේ | ථෛ | ථො | ථෝ | ථෞ |
| ද් | ද | දා | දැ | දෑ | දි | දී | දු | දූ | දෙ | දේ | දෛ | දො | දෝ | දෞ |
| ධ් | ධ | ධා | ධැ | ධෑ | ධි | ධී | ධු | ධූ | ධෙ | ධේ | ධෛ | ධො | ධෝ | ධෞ |
| න් | න | නා | නැ | නෑ | නි | නී | නු | නූ | නෙ | නේ | නෛ | නො | නෝ | නෞ |
| ප් | ප | පා | පැ | පෑ | පි | පී | පු | පූ | පෙ | පේ | පෛ | පො | පෝ | පෞ |
| ඵ් | ඵ | ඵා | ඵැ | ඵෑ | ඵි | ඵී | ඵු | ඵූ | ඵෙ | ඵේ | ඵෛ | ඵො | ඵෝ | ඵෞ |
| බ් | බ | බා | බැ | බෑ | බි | බී | බු | බූ | බෙ | බේ | බෛ | බො | බෝ | බෞ |
| භ් | භ | භා | භැ | භෑ | භි | භී | භු | භූ | භෙ | භේ | භෛ | භො | භෝ | භෞ |
| ම් | ම | මා | මැ | මෑ | මි | මී | මු | මූ | මෙ | මේ | මෛ | මො | මෝ | මෞ |
| ය් | ය | යා | යැ | යෑ | යි | යී | යු | යූ | යෙ | යේ | යෛ | යො | යෝ | යෞ |
| ර් | ර | රා | රැ | රෑ | රි | රී | රු | රූ | රෙ | රේ | රෛ | රො | රෝ | රෞ |
| ල් | ල | ලා | ලැ | ලෑ | ලි | ලී | ලු | ලූ | ලෙ | ලේ | ලෛ | ලො | ලෝ | ලෞ |
| ව් | ව | වා | වැ | වෑ | වි | වී | වු | වූ | වෙ | වේ | වෛ | වො | වෝ | වෞ |
| ශ් | ශ | ශා | ශැ | ශෑ | ශි | ශී | ශු | ශූ | ශෙ | ශේ | ශෛ | ශො | ශෝ | ශෞ |
| ෂ් | ෂ | ෂා | ෂැ | ෂෑ | ෂි | ෂී | ෂු | ෂූ | ෂෙ | ෂේ | ෂෛ | ෂො | ෂෝ | ෂෞ |
| ස් | ස | සා | සැ | සෑ | සි | සී | සු | සූ | සෙ | සේ | සෛ | සො | සෝ | සෞ |
| හ් | හ | හා | හැ | හෑ | හි | හී | හු | හූ | හෙ | හේ | හෛ | හො | හෝ | හෞ |
| ළ් | ළ | ළා | ළැ | ළෑ | ළි | ළී | ළු | ළූ | ළෙ | ළේ | ළෛ | ළො | ළෝ | ළෞ |
| ෆ් | ෆ | ෆා | ෆැ | ෆෑ | ෆි | ෆී | ෆු | ෆූ | ෆෙ | ෆේ | ෆෛ | ෆො | ෆෝ | ෆෞ |

# விசேட கல்வித் தேவைகள்

உங்களது வகுப்பில் உள்ள சில பிள்ளைகள், சிறு சிறு உடல், உள மனவெழுச்சிக்கோளாறுகளைக் கொண்டிருக்கக்கூடும். இவை தவிர சில பிள்ளைகள் கற்றல் தொடர்பான பிரச்சினைகளையும் கொண்டிருக்கக்கூடும். எவ்வாறான வேறுபாடுகள் இருந்தபோதிலும் வகுப்பில் உள்ள ஒவ்வொரு பிள்ளைக்கும் கல்வி பெறும் உரிமை உண்டு. தனது வகுப்பறையில் இருக்கும் ஒவ்வொரு பிள்ளைக்கும் பொருத்தமான கல்வியை வழங்கும் பொறுப்பு ஆசிரியரையே சாரும். எனவே வகுப்பறையில் உள்ள பிள்ளைகளின் விசேட கல்வித் தேவைகளை இனங்கண்டு அவர்களுக்குப் பொருத்தமான கல்வியை வழங்குவதற்கான உதவிகளைச் செய்தல், வகுப்பாசிரியரின் பொறுப்பாகும். அதற்கான வழிகாட்டலை வழங்குவதே இவ்வத்தியாயத்தின் குறிக்கோளாகும். இங்கு தரப்பட்டுள்ள வகையில் செயற்படுவதன் ஊடாக 5ஆந் தரத்தில் கற்கும் ஒவ்வொரு பிள்ளைக்கும் பயனுறுதியுடைய கல்வியை வழங்க முடியும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

**பிள்ளைகள் கொண்டிருக்கத்தக்க விசேட தேவைகள் வருமாறு:**

- மீத்திறனும் சிறப்புத்திறன்களும்
- கற்றல் இடர்ப்பாடுகள்
- தொடர்பாடற் குறைபாடுகள்
- மனவெழுச்சிப் பிரச்சினைகள்
- பார்வைக் குறைபாடுகள்
- செவிப்புலக் குறைபாடுகள்
- உடலூனங்கள்
- நீண்டகால நோய் நிலைமைகள்

**மீத்திறனும் சிறப்புத் திறன்களும்**

வகுப்பறையில் இருக்கும் பிள்ளைகளுள் சிலர் மீத்திறனையும் சிறப்பான திறன்களையும் காட்டக்கூடும். பிள்ளைகளின் மீத்திறனையும் சிறப்புத்திறன்களையும் பின்வருவன மூலம் இனங்கண்டு கொள்ளலாம்.

- சிறப்பான நினைவாற்றல்
- சிறப்பான ஆக்கத்திறன்கள்
- பிரச்சினை தீர்க்கும் ஆற்றல்
- மிகையான புதிது காண் நாட்டம்
- வளமான சொற்களஞ்சியம்
- உயர் அடைவு மட்டம் இருத்தல்
- உயர் பகுத்தறி திறன்
- உரிய பணிகளைத் துரிதமாக நிறவு செய்து வேறு பணிகளில் ஈடுபடல்
- அசாதாரண உறுத்துணர்வு
- வயதை மிஞ்சிய முதிர்ச்சி

## மீத்திறன் பிள்ளைகளுக்கு உதவத்தக்க விதம்

வகுப்பறையில் குறித்த பொதுவான செயற்பாடுகள் தவிர்ந்தவிடத்து, பின்வருவன போன்ற செயற்பாடுகளையும் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதனூடாக அவர்களது விருத்திக்கு உதவி புரியலாம்

- **ஆக்கபூர்வமாக எழுதுதல்**

  ***எடுத்துக்காட்டு:***

  யன்னலின் பல்கணியின் ஊடாக நோக்கி தென்படுபவற்றை எழுத வழிப்படுத்தல்
  தாளில் துளையொன்றினூடாக நோக்கி, தென்படுபவற்றை எழுத வழிப்படுத்தல்

- **ஆராய்வுபூர்வமான செயற்பாடுகள்**

  ***எடுத்துக்காட்டு***

  சஞ்சிகையொன்றில் உள்ள புதிய சொற்களைத் தேடியறிய வழிப்படுத்தல்
  தரப்பட்ட தடங்களைத் துணையாக் கொண்டு ஆக்கங்களைப் புனைய வழிப்படுத்தல்

- **புதிர்களைத் தீர்த்தல்**

- **கணித பிரசினங்களைத் தீர்த்தல்**

## கற்றல் இடர்ப்பாடுகள்

உடல், உளக் குறைபாடுகளோ வேறு கோளாறுகளோ இல்லாத போதிலும் சில பிள்ளைகள் எழுதுதல், வாசித்தல், கணக்குச் செய்தல் போன்றவற்றில் தெளிவான குறைபாட்டைக் காட்டுவதுண்டு.

- பிள்ளைகளிடத்தே காணப்படும் கற்றல் இடர்பாடுகளைப் பின்வரும் இயல்புகளினூடாகவே இனங்கண்டு கொள்ளலாம்.
- உத்தேச திறன்களுக்கும் பிள்ளை காட்டும் திறன்களுக்கும் இடையிலான வேறுபாடு
- நினைவாற்றல் குறைபாடு
- பார்வைப் பிரித்தறிகை, கேட்டல் பிரித்தறிகைக் குறைபாடு.
- கவனத்தை ஈர்த்து வைத்திருக்க முடியாமை / கவனக் கலைவு.
- மிகைத் தொழிற்பாட்டைக் காட்டல்
- வயதுக்குப் பொருத்தமான சொற்களஞ்சியம் இன்மை.
- எளிமையான கருத்தைக்கூட, தெளிவாக வெளியிட முடியாமை.
- ஏதேனுமொன்றை வாசித்து விளங்க முடியாமை.

## கற்றல் இடர்ப்பாடுகளைக் கொண்ட பிள்ளைகளுக்கு உதவத்தக்க விதம்

பிள்ளைகளின் கற்றல் இடர்ப்பாடுகளை நிவிர்த்திப்பதற்கேற்ற சில செயற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

கற்றலுடன் தொடர்புடைய பின்வரும் பணிகளை ஆற்றுவதற்கு வேண்டிய அடிப்படைத் திறன்களை அவர்களிடத்தே விருத்தி செய்தல் வேண்டும்.

- செவிமடுத்தல்
- சிந்தித்தல்
- வாசித்தல்
- எழுதுதல்
- எழுத்தமைப்பு
- கணிதம்

மேற்படி அடிப்படைத் திறன்களை வழங்குவதற்காகப் பின்வரும் உத்திகளைக் கையாளல் மிகப் பொருத்தமானதாகும்.

- பிள்ளையின் செயற்பாட்டு வீதத்திற்கு (Rate) அமைய செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல்
- பல தடவைகள் பயிற்சி பெற வாய்ப்பளித்தல்
- தேவைப்படும் இடங்களில் பொருத்தமான உபகரணங்களைப் பயன்படுத்தல்
- சுயகற்றல் மற்றும் சுயமதிப்பீட்டுத்திறன்களை வளர்த்தல்
- பல உறுப்பு அணுகுமுறை
- சிறு வெற்றியைக் கூட உயர்வாக மதித்தல் - பாராட்டல்
- பொருத்தமற்ற நடத்தைகளைக் கட்டுப்படுத்தல்

## தொடர்பாடற் குறைபாடுகள்

- பேச்சுத் தொடர்பாகப் பிள்ளைகள் காட்டும் குறைபாடுகளே இங்கு தொடர்பாடற் குறைபாடு களைக் கருதப்படுகின்றன.
- குரலைக் கட்டுப்படுத்த இயலாமை
- அடித்தொண்டையால் கதைத்தல்
- உயர்ந்த தொனியில் கதைத்தல்
- மெதுவாகக் கதைத்தல்
- பேச்சின்போது சொற்களை விழுங்குதல்
- திக்கித் திக்கிப் பேசுதல்
- சந்த அமைவற்ற பேச்சு
- ஒலிக்குப் பதிலாக வேறு ஒலிகளை மாதிரியாகக் கொண்டு பேச்சு பேசுதல்

## பிள்ளைக்கு உதவக்கூடிய முறை

- பிள்ளையின் பேச்சுக் குறைபாடுகள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்படுவதை உணர்த்தாக வகையில் செயற்படல்
- வகுப்பிலுள்ள ஏனைய பிள்ளைகளுக்கும் அவ்வாறகச் செயற்படுமாறு விழிப்பூட்டல்
- பிள்ளையின் பேச்சுக்குறைபாடுகள் தொடர்பாக கிண்டல் செய்வதைத் தவிர்த்தல்
- ஆசிரியர் தெளிவாகவும் செம்மையாகவும் சொற்களைப் பயன்படுத்திப் பேசிக் காட்டல்
- பிள்ளைக்கு இயன்ற அளவுக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்தல்
- பிள்ளை விடும் தவறுகளை அடிக்கடி திருத்த முற்படுவதைத் தவிர்த்தல்
- பேசுவதற்குப் போதிய கால அவகாசம் வழங்குதல். உடனடியாகப் பேசுமாறு வழிப்படுத்து வதைத் தவிர்த்தல்
- பேச்சுச் சிகிச்சையாளரின் உதவியைப் பெற்றுக்கொடுத்தல்

## மனவெழுச்சிப் பிரச்சினைகள்

கற்றல் செயன்முறையில் பங்குகொள்ளாது, தாமே உருவாக்கிக் கொண்ட ஓர் உலகில் தனிமைப்பட்டுச் சஞ்சரிக்கும் பிள்ளைகளும் மூர்க்கத்தனமாகச் செயற்படும் பிள்ளைகளும் வகுப்பறையில் காணப்படக்கூடும். மனவெழுச்சிக் குறைபாடுகள் காரணமாகவே இவர்கள் இவ்வாறான தன்மைகளை வெளிக்காட்டுவதாகக் கருதலாம். வகுப்பறையில் உள்ள அவ்வாறான பிள்ளைகளை இனங்காணத்தக்க சிறப்பான சில இயல்புகள் வருமாறு:

- தம்மைப் பற்றிக் கரிசனை காட்டாமை
- அன்றாடப் பணிகள் பற்றிக் கவனஞ் செலுத்தாமை
- ஏனையோர் தொடர்பாக உரிய வகையில் துலங்கல் காட்டாமை
- தனிமைப்பட்டிருக்க விரும்புதல்
- விரைவில் சினத்தல் (கோபப்படல்)

- பகற்கனவு காணல்
- நீண்ட நேரம் ஏதேனுமொன்றையே பார்த்தபடி இருத்தல்
- களவெடுத்தல்
- சோம்பியிருத்தல்
- வாழாவிருத்தல்
- சிறுசிறு விடயங்களுக்காகவும் கலவரப்படல்
- அடிக்கடி அழுதல்
- அடிக்கடி, எதிர்முறைப்பாடு செய்தல்
- புத்தகங்கள், உடை போன்றவற்றை ஒழுங்குகின்றி வைத்திருத்தல்

## மனவெழுச்சிப் பிரச்சினையுடைய பிள்ளைக்கு உதவத்தக்க விதம்

- பிள்ளையைத் தமது அருகே வைத்திருத்தல்
- அடிக்கடி பங்குபற்றத்தக்க வகையில் பிள்ளையைக் குழுச் செயற்பாடுகள். பங்கேற்று நடித்தல்கள் போன்றவற்றில் ஈடுபடுத்துதல்
- உரையாடும்போது இதமாகப் பேசுதல்
- பிள்ளைக்கு வெற்றியனுபவம் கிடைக்குமாறு செயற்படல்
- மகிழ்ச்சிகரமான வகுப்பறைச் சூழ்நிலை உருவாகும் வகையில் பணியாற்றல்.
- பிள்ளையின் உகப்பற்ற நடத்தைகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- பிள்ளையிடத்தே உகப்பான நடத்தைகளைத் தூண்டுவதற்கான உத்திகளைப் பிரயோகித்தல்

## பார்வைக் குறைபாடுகள்

பார்வைக் குறைபாடுடைய அல்லது முற்றாகப் பார்வை அற்ற பிள்ளைகள் உங்களது வகுப்பில் காணப்படக்கூடும். முழுக் குருடான பிள்ளைகளை எளிதாக இனங்காணலாம். எனினும் பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகளை இனங்காண்பது சற்றுக் கடினமானது. அவ்வாறான பிள்ளைகளை இனங்காணத்தக்க சில அறிகுறிகள் வருமாறு:

- கண்களில் இருந்து அடிக்கடி கண்ணீர், பீழை வடிதல்
- கண்கள் அடிக்கடி சிவந்திருத்தல்
- கண்கள் அடிக்கடி துடித்தல்
- அடிக்கடி கண் இமைத்தல்
- வாசிக்கும்போது எழுத்துக்களையோ, சொற்களையோ விட்டு விட்டு வாசித்தல்
- எழுதும்போது எழுத்துக்களையோ, சொற்களையோ விட்டு விட்டு எழுதுதல்
- எழுதுதல், வாசித்தல் போன்றவற்றில் ஆர்வம் காட்டாமை
- புத்தகங்களைக் கண்களுக்கு அருகே கொண்டு சென்று பார்த்தல்
- தலையைத் தூரவும், கிட்டவும் அசைத்து பொருளைப் பார்த்தல்
- கண், காது. தலை போன்றவற்றில் நோவு, வலி தொடர்பாக அடிக்கடி முறையிடல்
- அடிக்கடி கரும்பலகைக்கு அருகே சென்று பார்த்தல்
- அருகே இருக்கும் பிள்ளைகளின் புத்தகங்களை அடிக்கடி எட்டிப்பார்த்தல்

## பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகளுக்கு உதவத்தக்க விதம்

- முழுக் குருடான பிள்ளையாயின் விசேட கல்வி ஆசிரியருடன் ஒத்துழைத்துச் செயற்படல்
- கரும்பலகையை நன்கு தெரியத்தக்க வகையில் ஒளி பொருந்திய ஓர் இடத்தில் வைத்தலும், பிள்ளையை வகுப்பில் முன்வரிசையில் அமர்த்துதலும்.
- கரும்பலகையில் பெரிய எழுத்தில் தெளிவாக எழுதுதல் எழுதுபவற்றை தெளிவாக வாசித்தபடி எழுதுதல்

- எழுதுவதற்கும், வாசிப்பதற்கும் பிள்ளைக்குப் போதிய கால அவகாசம் வழங்குதல்
- எழுத்து மூல அறிவுறுத்தல்களோடு வாய்மொழி மூல அறிவுறுத்தல்களையும் வழங்குதல்
- நீண்ட வாய்மொழி மூல ஒப்படைகளை ஒலிப்பதிவு செய்துகொள்ள வாய்ப்பளித்தல்
- வகுப்பறையினுள் அளவுக்கதிகமான இரைச்சல் ஏற்படுவதைக் கட்டுப்படுத்தல்
- பிள்ளை பயன்படுத்தும் மூக்குக்கண்ணாடி (வில்லை) பொருத்தமானதா எனக் கண்டறிதல்
- கற்றல் துணைச் சாதனங்களைத் தெளிவாக, கடுமையான, பிரகாசமான நிறங்களில் தயாரித்தல்
- வகுப்பறைச் சாதனங்களைப் பிள்ளை எளிதாச் சென்று எடுக்கத்தக்கவாறு ஒழுங்குபடுத்தி வைத்தல்
- பிள்ளைக்கும் ஆசிரியருக்கும் இடையேயான இடைவெளி இயன்ற அளவுக்குக் குறைவானதாக அமையும் வகையில் ஆசிரியருக்கு அருகே பிள்ளையை அமர்த்திக் கொள்ளல்.

## செவிப்புலக் குறைபாடுகள்

செவிப்புலன் குன்றிய பிள்ளைகளும், முற்றாகச் செவிப்புலனற்ற பிள்ளைகளும் வகுப்பில் இருக்கக்கூடும். அவ்வாறானோரை இனங்காணத்தக்க சில இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

- வாய்மொழி மூல அறிவுறுத்தல்களை விளங்கிக்கொள்ள முடியாமை
- பேசுபவரின் வாயையோ உதடுகளையோ பார்த்தபடி இருத்தல்
- ஒலி வரும் திசையில் காதைத் திருப்பி வைத்துச் செவிமடுக்க முனைதல்
- சொற்களஞ்சியம் வரையறைப்பட்டிருத்தல்
- காதின் அருகே கையை வைத்துச் செவிமடுக்க முனைதல்
- காது வலி / நோவு குறித்து முறைப்பாடு செய்தல்
- உரத்துப் பேசுதல்
- தாழ்ந்த குரலில் பேசுதல்
- ஒரே பாணியில் கதைத்தல்
- பின்புறத்தே இருந்து எழுப்பப்படும் ஒலிகளுக்கு குறைவான துலங்களைக் காட்டல்
- வாய்மொழி மூலம் அறிவுறுத்தல்கள் தொடர்பாக குறைவாகக் கவனஞ் செலுத்துதல்

## செவிப்புலக் குறைபாடுடைய பிள்ளைகளுக்கு உதவத்தக்க விதம்

- வகுப்பறியல் அநாவசியமான ஒலிகள், இரைச்சல்கள் ஏற்படுவதைக் கட்டுப்படுத்தல்
- ஆசிரியருக்கும் பிள்ளைக்கும் இடையிலான தூரத்தை இயன்ற அளவுக்குக் குறைத்தல்
- ஆசிரியரின் முகத்தைத் தெளிவாகப் பார்க்கக்கூடியவாறான ஓர் இடத்தில் பிள்ளையை அமர்த்துதல்
- வாய்மொழி மூல அறிவுறுத்தல் வழங்குகையில் முழுமையான வாக்கியங்களையே பயன்படுத்துதல்
- கற்றல் செயற்பாடுகளுக்காக பல உறுப்புக் கற்றல் அணுகுமுறையைப் பிரயோகித்தல்
- கட்புல ஊடகத்தை மிகையாகப் பயன்படுத்த வாய்ப்பளித்தல்
- குறிப்புக்களை எழுதிக் கொள்வதற்காக வகுப்பறை நேரத்துக்கு அப்பாற்பட்ட வகையில் மேலதிக கால அவகாசத்தை வழங்குதல்
- பிள்ளை கேட்டல் துணைச் சாதனமொன்றினைப் (Hering aid) பயன்படுத்துவதாக இருப்பின் அதன் பொருத்தப்பாடு பற்றிக் கவனங் செலுத்துதல்.
- இதுவரையில் கேட்டல் துணைச்சாதனம் பயன்படுத்தாத பிள்ளையாயின் அது குறித்து வழிப்படுத்துதல்.

## உடற் குறைபாடுகள்

கைவிரல்கள், கால்விரல்கள் போன்றவை சீராக அமையப் பெறாத பிள்ளைகளும் அவற்றின் தொழிற்பாடு சீராக நிகழாத பிள்ளைகளும் வகுப்பில் காணப்படக்கூடும். இவ்வாறான பிள்ளைகளுக்கு அவர்களது கைவிரல்கள், கால்விரல்களைப் பயன்படுத்திப் பணிகளை ஆற்றுதல் தொடர்பான இடர்ப்பாடுகளை எதிர்நோக்கக்கூடும். இவ்வாறான பிள்ளைகள் பின்வருவன போன்ற குணங்குறிகளைக் காட்டக்கூடும்.

- கை - கால் விரல்கள் முழுமையாகவோ சிலவோ செயற்படாமை.
- கை - கால் விரல்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமை.
- எழுதுதல், வெட்டுதல், பற்றிப் பிடித்தல் போன்ற நுணுக்கமான இயற்கைச் செயல்களை ஆற்ற முடியாமை.
- ஓடுதல், பாய்தல், புரளுதல், இழுத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட முடியாமை.

## உடற்குறைபாடுடைய பிள்ளைகளுக்கு உதவத்தக்க விதம்

- பிள்ளை கிண்டலுக்கு / கேலிக்கு ஆளாவதைத் தவிர்த்தல்
- பிள்ளையை வகுப்பின் மற்றைய பிள்ளைகளின் கணிப்புக்கு உட்படுத்தல்
- வகுப்பை வெளிக்களச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துகையில் மாற்று வழி வகைகளைக் கையாளல்
- மற்றைய பிள்ளைகளின் உதவியைப் பெறும் வகையில் செயற்படுதல்
- சிகிச்சையாளரின் (Physiotherapist) உதவியைப் பெற வழிப்படுத்தல்

## நீண்ட கால நோய் நிலைமைகள்

உங்களது வகுப்பில் ஈளை, காக்காய்வலிப்பு போன்ற நீண்டகால நோய்களால் அவதியுறும் பிள்ளைகள் இருக்கக்கூடும்.

## அவ்வாறான பிள்ளைகளுக்கு உதவத்தக்க விதம்

- பிள்ளையின் நோய்நிலைமைகள் தொடர்பாகத் திருத்தமான தகவல்களைப் பெற்றோரினூடாகப் பெற்றுக்கொள்ளல்
- பாடசாலை வேளையில் மருந்து உட்கொள்ள வேண்டியிருப்பின் அதற்கான ஒழுங்குகளைச் செய்து கொடுத்தல்
- வைத்திய ஆலோசனைப்படி பொருத்தமான செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல்
- பிள்ளைக்கு எப்போதும் கவலையின்றி மகிழ்ச்சியாக இருத்த உதவுதல்
- பாடசாலைக்கு வருகை தராத நாட்களில் விடுபட்ட கற்றல் வேலைகளை ஈடுசெய்வது தொடர்பாக மாற்று வேலைத்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தல்
- பிள்ளையை ஒரு நோயாளி என அறிமுகஞ் செய்வதைத் தவிர்த்தல்

## மாணவர்களுக்குத் தமது விருப்பத்துக்கும் ஆர்வத்துக்கும் ஏற்ப விருப்புக்குரிய பாடங்களைக் கற்க சந்தர்ப்பமளித்தல்

ஆரம்பத்தரங்களில் கற்கும் பிள்ளைகள் அவர்களது விருப்புக்கள், ஆர்வங்கள், உளச்சார்புகள் ஆகியவற்றுக்கமைய ஆளுக்காள் பாரிய வேறுபாடுகளைக் காட்டுவர். வகுப்பறையில் இடம்பெறும் கற்றல் - கற்பித்தற் செயன்முறையின்போது, இம்மாற்றங்களைக் கவனத்திற்கொண்டு செயற்படுவது அவர்களது விருத்திக்கு இன்றியமையாததாகும். எனவே வகுப்பறையில் இருக்கும் ஒவ்வொரு பிள்ளையினதும் விருப்புக்களையும் ஆர்வங்களையும் குறிப்பாக இனங்காண்பது அவசியமாகும். பிள்ளைகள் நடனமாடுதல், நடித்தல், சித்திரம் வரைதல், வாத்தியங்கள் இசைத்தல், வனைதல், சிற்பஞ் செதுக்குதல், சிலைகள் ஆக்குதல், விளையாடுதல், விளையாடல், தொழினுட்பத்திறன் வெளிப்பாட்டுச் செயற்பாடுகள் போன்ற வெவ்வேறு கோலங்களில் விருப்பமும் ஆர்வமும் காட்டும் மாணவர்கள் வகுப்பறையில் அப்பிள்ளைகளுக்குத் தமது விருப்பத்துக்கும் ஆர்வத்துக்கும் ஏற்ப திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கான வாய்ப்புக்களை பாடசாலையில் உச்ச அளவில் வழங்குவதே இந்த வேலைத்திட்டத்தின் எதிர்பார்ப்பாகும். இதற்காக வாரத்துக்கு 30 நிமிடம் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## குறிக்கோள்கள்

- மாணவர்களது விருப்புக்களையும் ஆர்வங்களையும் இனங்கண்டு அவற்றை விருத்தி செய்துகொள்வதற்கு சந்தர்ப்பமளித்தல்
- 'கற்கக் கற்றல்' எனும் தேர்ச்சியை அடைவதற்கு மாணவருக்கு உந்துதலளித்தல்
- சுயாதீனமாகச் செயற்பட வாய்ப்பளித்தல்
- மாணவர்க்குத் தமது உள்ளார்ந்த ஆற்றல்களைத் தாமாகவே புரிந்துகொள்ள சந்தர்ப்பமளித்தல்
- மாணவர் மையக் கற்றற் சூழலைப் போசித்தல்
- மாணவர்களுக்கு இரசனையுடன், கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட சந்தர்ப்பமளித்தல்
- சிறு பராய முதற்கொண்டு வாழ்க்கைத் தேர்ச்சிகளை உருவாக்கிக்கொள்ள மாணவருக்கு வழிகாட்டுதல்
- ஓய்வு நேரத்தை விளைதிறனுடையவாறு கழிப்பதற்கான பரிச்சயத்தைப் பெறச் சந்தர்ப்பமளித்தல்
- சுயாதீனமாகச் செயற்படுவதற்கான மனவுறுதியை வளர்த்துக்கொள்ளச் சந்தர்ப்பமளித்தல்

## பிள்ளைகளின் சிறப்பான திறன்களையும் விருப்புக்களையும் இனங்காணல்

இதற்காக சில முறைகளைப் பயன்படுத்தலாம்.

- மூன்றாம் முதன்மை நிலையை களிப்பூட்டும் வகையில் ஆரம்பித்தல்
- இரண்டாம் முதன்மை நிலையைச் சேர்ந்த ஆசிரிய, ஆசிரியைகளுடன் கலந்துரையாடல்
- கணிப்பீட்டுப் படிவங்களைப் பரிசீலித்தல்
- செயலடைவுக்கோவையைப் பரிசீலித்தல்
- பெற்றோரிடம்/பாதுகாவலரிடம் தகவல்கள் பெறுதல்

## மாணவர்களது விருப்புக்கள் ஆர்வங்களின்படி அவர்களை ஈடுபடுத்தக்கூடிய செயற்பாடுகள்:

- ஆக்கபூர்வமான எழுத்துவேலை (பாடல், உரைநடை)
- பேச்சுப் பேசுதல்
- பாட்டுப்பாடுதல்
- வாத்தியம் இசைத்தல்

- நடனமாடுதல்
- அபிநயித்தல்
- நிர்மாணித்தல்
- தொழினுட்பச் செயற்பாடுகள்
- நாடகம்
- நடித்தல்
- சிற்பம் செதுக்குதல்
- நெசவு செய்தல்
- விவசாய வேலைத்திட்டங்கள்

## வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

பின்வரும் விடயங்கள் தொடர்பாக விசேட கவனங் செலுத்துதல் வேண்டும்.

- மாணவரது விருப்புக்கள் ஆர்வங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிகளை வகுப்பில் பகிரங்கப்படுத்துதல் (அறிவித்தல் பலகைகளில் இட்டு)
- அந்நிகழ்ச்சிகளுடன் அவற்றில் ஈடுபடும் மாணவர்களது பெயர்களையும் காட்சிப்படுத்தல்
- நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்கள்
- அந்தந்த நிகழ்ச்சிக்காக வருகை தரும் வளவாளர்கள்.

| |
|---|
| ஆரம்பப் பாடசாலை நேரசூசி நெகிழ்வானதாயினும் இப்பாடவேளைக்காக, குறிப்பான ஒரு நேரத்தை ஒதுக்கிக்கொள்வது தொடர்பாக விசேட கவனஞ் செலுத்துங்கள். |

## இவ்வேலைத்திட்டத்துக்காகப் பெறத்தக்க வளங்கள்

- பல்வேறு திறமைகளை வெளிக்காட்டிய பழைய மாணவ மாணவிகள்.
- சுய விருப்பத்தின் பேரில் முன்வரும் ஓய்வுபெற்ற ஆசிரிய ஆசிரியைகள்.
- பாடசாலை ஆசிரிய ஆசிரியைகள்.
- பெற்றோரும் அயற் சமுதாயத்தினரும்.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- தமது விருப்புக்களுக்கும் ஆர்வங்களுக்கும் ஏற்பச் செயற்படச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளமையால், சுய இரசனையிலும் சுய மதிப்பீட்டிலும் ஈடுபட மாணவரை வழிப்படுத்துங்கள்.
- தமது முன்னேற்றம் தொடர்பாக சுய மதிப்பீட்டுடன் செயற்படுத்தல்
- மாணவர் தொடர்பாக நிதமும் கவனஞ் செலுத்துதலும் அவ்வப்போது மாணவரால் சமர்ப்பிக்கப் படும் அறிக்கைகளைச் செயலடைவுக் கோவையில் இடுதலும்.
- மாணவரது முன்னேற்றம் குறித்து ஆசிரியரின் ஓர் அறிக்கையைப் பேணி வருதல்
- மாணவரது முன்னேற்றத்தைக் கண்டுகளிப்பதற்கு பெற்றோருக்குச் சந்தர்ப்பமளித்தல்

***எடுத்துக்காட்டு:***

- ஆக்கக் கண்காட்சிகள்
- கண்காட்சிப்போட்டிகள்
- விசேட திறன் கண்காட்சிகள்
- சிறப்பான வெற்றிகளுக்குரிய சான்றிதழ்கள்
- செயலடைவுக் கோவை

# மாணவர் முன்னேற்றத்தைக் கணிப்பீடு செய்தல்

## 1.0 அறிமுகம்

ஆரம்பக்கல்வி வகுப்பில் கற்கும் மாணவர்களுக்கு கற்றல் அனுபவங்களை ஒழுங்கமைக்கும் போது ஆசிரியர், மாணவர்களின் திறமை, முடியாமை போன்றவற்றைப் போன்று அவர்கள் கற்றல் தொடர்பாக காட்டும் நலிவுகளும், வலிவுகளும் தொடர்பான தகவல்களும் அவசியமாகும். மாணவர்களின் முன்னேற்றம் தொடர்பாக எப்போதும் தகவல் சேகரிக்கும் செயற்பாடு கணிப்பீடு செய்தல் எனக்கருதப்படும். மாணவர்களுக்குப் பொருத்தமான விதத்தில் கற்றல் அனுபவங்களை ஒழுங்கமைத்து, எதிர்பார்க்கும் கற்றல் பலன்களை நோக்கி வழிப்படுத்தலுக்காக, மாணவர்கள் தொடர்பான தொடர்ச்சியான கணிப்பீடு மிக அவசியமாகும். அது மாணவர்களின் கற்றலை விருத்திசெய்வதற்கு உதவுவதாக அமைதல் வேண்டும். கணிப்பீட்டை கற்பிக்கும் ஆசிரியரே மேற்கொள்ளல் வேண்டும். வெளி நபரொருவரால் மேற்கொள்ளக்கூடாது. இதில் கண்டறிதலும், வழிகாட்டலும் முக்கியமான தாகும். இதனூடாக ஒவ்வொரு மாணவனதும் முன்னேற்றம் அவர் எதிர்நோக்கும் பிரச்சினை என்பவற்றைச் சிறப்பாக இனங்கண்டு கொள்ள முடியும். ஆரம்பக்கல்வி வகுப்பறையினுள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கணிப்பீடு செய்தல் வகுப்பறை கற்றல் - கற்பித்தல் செயல்முறையுடன் நேராகவே தொடர்புபட்டிருத்தல் வேண்டும். அதேபோல் அது மாணவனின் முன்னேற்றத்தை மேம்படுத்த உதவுவனவாகவும் இருத்தல் வேண்டும்.

## 2.0 மாணவர் முன்னேற்றத்தைக் கணிப்பீடு செய்வதற்குப் பயன் படுத்தும் அணுகுமுறைகள்

மாணவர்கள் பாடத்திட்டத்தினால் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அண்மித்துள்ளனரா என்பதைக் கணிப்பீடு செய்தல் முறைமையில் அமைப்பைப் போலவே முறைசார் அமைப்பிலும் மேற்கொள்ள முடியும்.

- மாணவர்கள் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் போது அதற்குத் தட்டங்கல் ஏற்படாதவாறு தகவல்களைச் சேகரித்தல் - **முறைமையில் கணிப்பீடு. என்றும்**

- கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கைத் தற்காலிகமாக நிறுத்தி முழுக் கவனத்தையும் அதன் மீது செலுத்தி முன் ஆயத்தத்துடனும் திட்டத்துடனும் தகவல்களைச் சேகரித்தல் - **முறைசார் கணிப்பீடு** என்றும் கூறுவர்.

இதுபோலவே கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கின்போது கணிப்பீடு செய்தலைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் மேற்கொள்ள முடியும். அதற்கேற்ப அதனை தொடர் கணிப்பீடாகவோ, இறுதிக் கணிப்பீடாகவோ மேற்கொள்ள முடியும்.

### தொடர் கணிப்பீடு

குறித்த கற்றல் படியொன்றின் இடையே அடிக்கடி மாணவர்களின் கற்றல் முன்னேற்றத்தையும் கற்றல் இடர்களையும் கண்டறிவதற்கு வகுப்பறையில் கற்பிக்கும்போதே மாணவர்களின் முன்னேற்றத்தை கண்டறிதலை இதற்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

### இறுதிக்கணிப்பீடு

கற்றல் படியொன்றின் இறுதியில் மாணவர்கள் குறித்த கற்றல் பகுதியொன்றை எவ்வளவு தூரம் வெற்றிகரமாகக் கற்றுள்ளார்கள் எனக் கண்டறிவதற்கு தவணை இறுதியில் அலகொன்றின் இறுதியில் மேற்கொள்ளும் சோதனையை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

## நியதிசார் கணிப்பீடு

ஆரம்பத் தரங்களில் நியதி (Criterion) சார் கணிப்பீடே நடத்தப்படுகின்றது. இங்கு ஆசிரியரால் மேற்கொள்ளப்படும் முதன்மைப்படுத்தியுள்ள முறைசாரா நுட்பங்களில் கூடுதலான கவனஞ் செலுத்தப்படும்.

கலைத்திட்டத்தின் உள்ளடக்கம், தேர்ச்சிகள் என்பவற்றுக்கேற்ப தயாரிக்கப்பட்ட நியதிகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பதை பரீட்சித்தல் நியதி அடிப்படையிலான கணிப்பீடாகும். இதற்கு பயன்படுத்தக்கூடிய நியதிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட கணிப்பீட்டுப் படிவங்கள் ஆரம்ப தரங்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ்வாசிரிய அறிவுரைப்பு வழிகாட்டியில் மொழி, சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் ஆகிய பாடப்பரப்புகளுக்கான கணிப்பீட்டுப் படிவங்கள் அப்பாடங்களின் இறுதியிலும், பொதுக்கணிப்பீட்டு படிவம் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் இறுதியிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும் கணிதப் பாடத்திற்காக தயாரிக்கப்பட்டுள்ள கணிப்பீட்டுப்படிவம் கணித ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் இறுதியிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மொழி, கணிதம், சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் ஆகிய பாடங்களுக்கு தயாரிக்கப்பட்ட நியதிகள் சில இங்கு தரப்பட்டுள்ளன.

**கணிதம்:**

***எடுத்துக்காட்டு:*** 2 முதல், 5 வரையிலான பெருக்கல் கோலங்களை இனங்கண்டு ஆக்குவார்.

**முதன்மொழி:**

***எடுத்துக்காட்டு:*** கேட்போர் விளங்கிக்கொள்ளும் வண்ணம் தெளிவாக உச்சரித்துப் பேசுவார்.

**சுற்றாடல்சார் செயற்பாடுகள்:**

***எடுத்துக்காட்டு:*** நடத்தையில் உடன்பாடான மாற்றத்துக்காக தமது நடத்தையைச் சீராகப் பேணி வருவார்.

**பொதுக் கணிப்பீடு**

***எடுத்துக்காட்டு:*** பொது வேலைகளுக்காக விருப்புடன் முன்வருவார்.

## 2.1 முறைமையில் - தொடர் கணிப்பீடு முறையில் தகவல் சேகரித்தல்

முறைமையில் - தொடர் கணிப்பீடு செய்தலின் கீழ் மாணவர்களின் முன்னேற்றத்தைக் கணிப்பீடு செய்வதற்கு பல முறைகள் உள்ளன. அவ்றறில் முதன்மை நிலை 3 இல் பயன்படுத்தக்கூடிய சில முறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

**மாணவர்களை அவதானித்தல்**

- குழுவாக செயற்பாடுகளில் செயல் முறையில் ஈடுபட்டிருக்கும்போது
- திட்டமிட்ட விளையாட்டுக்கள், மகிழ்ச்சிகரமான வேலைகளில் ஈடுபட்டிருக்கும்போது
- சுயமாக இருந்த நிலையில் செய்யக்கூடிய வேலைகளில் ஈடுபட்டிருக்கும்போதும்
- எழுத்து வேலைகளின்போதும்.

இங்கு குறித்த ஒரு சந்தர்ப்பத்தில் ஆசிரியரின் கவனம் தனியே ஒரு மாணவன் மீதும் தனியான செயலொழுங்கிற்கும் செலுத்தப்பட்டிருத்தல் மிக முக்கியமாகும்.

- ஒப்படைகள், வீட்டு வேலை, பயிற்சிகள் ஆகியவற்றை சரிபார்த்து அடையாளமிடல் இங்கு மாணவர் விடும் பிழைகள், எண்ணக்கரு தொடர்பான பிழையான விளக்கம் என்பவற்றின் மீது ஆசிரியரின் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்.
- மாணவர்களுடன் தனித்தனியாகவும் குழுக்களாகவும் உரையாடுதல்.
- மாணவர்கள் வகுப்பின் முன்சமர்ப்பிப்பவை, எடுத்துக்காட்டுக்கள் என்பனவற்றை அவதானித்தலும் அவற்றுக்குச் செவிமடுத்தலும்.
- மாணவர்கள் அமைக்கும் மாதிரி உருக்கள் போன்றவற்றை சோதித்தலும் அவற்றின் உதாரணத்தொகுதியை சேகரித்து வைத்தலும்
- மாணவர்களின் ஒப்படைகள், வேறு ஆக்கத்துடன் தொடர்புபட்ட விசேட எழுத்து வேலைப்பத்திரங்களை கோவைப்படுத்தி வைத்தல்.

## 2.2 மாணவர்களிடம் வினாக்களை வினவுதல்

மாணவர்களின் முன்னேற்றம் தொடர்பான சிறந்த விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு 'வினாக்களை வினவுதல்' எனும் முறையானது ஆசிரியர் பயன்படுத்தக்கூடிய ஒரு முறை யாகும். ஆசிரியர்கள் மாணவர்களிடம் வினாக்களை வினவுவதென்பது வகுப்பறையில் அநேகமாக காணக்கூடிய ஒரு முறையாகும். மாணவர்களை பாடத்தின் பால் திசைதிருப்பு கின்ற மாணவர்களின் இயழுமைகளை நன்கு அறிந்துகொள்வதற்கு வினாக்களை வினவுவதென்பது ஆசிரியரிடம் இருக்கவேண்டிய ஒரு சிறந்த பண்பாகும். வகுப்பில் கற்பிக்கும்போதே பல்வேறு விதத்தில் வினாக்களை வினவி கணிப்பீட்டு படிவங்களில் தரப்பட்டுள்ள நியதிகளை அடைந்துள்ளார்களா என சோதித்துப் பார்க்க முடியும்.

மாணவரின் முன்னேற்றம் தொடர்பாக இவ்வாறு முறைமையில் அமைப்பில் தகவல் சேகரித்தல் மிகவும் ஏற்றதெனக் கருதப்படுகின்றது. ஆசிரியர்கள் அவர்களின் விளக்கத்தின் பேரில் மேற்கொள்ளும் தீர்மானங்கள், பொழிப்புச் சோதனைகளைவிட ஏற்கத்தகுந்தவை என அநேக ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

## 2.3

மாணவரின் முன்னேற்றம் தொடர்பாக இவ்வாறு முறைமையில் அமைப்பில் தகவல் சேகரித்தல் மிகவும் ஏற்றதெனக் கருதப்படுகின்றது. ஆசிரியர்கள் அவர்களின் விளக்கத்தின் பேரில் மேற்கொள்ளும் தீர்மானங்கள், பொழிப்புச் சோதனைகளைவிட ஏற்கத்தகுந்தவை என அநேக ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

# 3.0 மாணவர்களது அடைவினை முறைசார் ரீதியாகக் கணிப்பீடு செய்தல்

முதன்மை நிலை 3 இல் மாணவர்களின் முன்னேற்றத்தினைக் கணிப்பீடு செய்வதற்காக முறைமையில் கணிப்பீட்டு முறை போன்றே, முறைசார் கணிப்பீட்டு முறைகளும் கூடுதலாக பிரயோசனப்படுகின்றன. விசேடமாக தரம் 5ஐ அடையும்போது மாணவர்கள் முறைசார்ந்த கற்றல் அமைப்புக்குப் பரிச்சயமாவதாலும் கற்கும் விடயங்களின் தன்மைக்கு அமைய சோதனை போன்ற முறைசார் கணிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்த நேரிடும்.

தேசிய கல்வி நிறுவகத்தின் முன்பிள்ளை பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித் துறையினால் தயாரிக்கப்பட்டுள்ள முறைசார்ந்த கணிப்பீட்டு முறை தொடர்பான மேலதிக விடயங்கள் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் முன்வைக்கப்பட்டுள்ளன.

## 3.1 முறைசார் - இறுதிக்கணிப்பீடு

குறித்த அலகொன்றின் இறுதியில், தவணை இறுதியில் ஒரு பாடவேளை இறுதியில் நடாத்தப்படும் முறைசார்ந்த பரீட்சையை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். சுற்றாடல் சார்ந்த செயற்பாட்டில் குறித்த ஒரு கருப்பொருளைக் கற்பித்து அதன் இறுதியில் அக்கருப்பொருளின் கீழ் கற்பிக்க எதிர்பார்த்தவைகளை மாணவர்கள் கற்றுக்கொண்டுள்ளார் களா என்பதனை சோதிப்பதற்கு வழங்கப்படுகின்ற முறைசார்ந்த பரீட்சையை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். ஆண்டு இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையும் இதன் கீழ் அடங்கும்.

வினாப்பத்திரம் என்பது மிகவும் முக்கியமான கணிப்பீட்டுக்கருவியாகும். அவற்றைத்தகுதி வாய்ந்ததாகவும் நம்பகத்தன்மை கொண்டதாகவும் அமைத்தால் மட்டுமே மாணவர் பற்றிய சரியான கணிப்பீட்டை மேற்கொள்ள முடியும். எனவே மிகச்சிறந்த பரீட்சைப் பத்திரங்களை தயாரிக்க ஆசிரியர்கள் ஆர்வம் காட்டல் வேண்டும். அது ஆசிரியர்களிடம் காணப்பட வேண்டிய மிகச் சிறந்த தேர்ச்சியாகும்.

## 3.2 ஆசிரியர்களால் தயாரிக்கப்படும் வினாப்பத்திரம்

முதன்மைநிலை ஒன்றிலும், தரம் மூன்றிலும் மாணவர்களின் முன்னேற்றத்தைக் கணிப்பீடு செய்வதற்கு முறைசாரா முறைகள் அதிகளவில் நன்மை அளித்துள்ளன. இருப்பினும் தரம் நான்கில் இருந்து முறைசார்ந்த பரீட்சையையும் பயன்படுத்திக்கொள்ள முடியும். வகுப்பறையில் உள்ள மாணவர்களின் அடைவு மட்டத்தைக் கணிப்பீடு செய்வதற்கு ஏற்ற வகையில் நல்ல பரீட்சை வினாப்பத்திரங்களை வகுப்பறையில் கற்பித்த ஆசிரியர்களாலேயே தயாரித்துக்கொள்ள முடியும். அதனால் கணிப்பீடு செய்வதற்காக வேறு பாடசாலைகளால் அல்லது நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட வினாப்பத்திரங்களை பாவித்தல் பொருத்தமற்றதாகும்.

வினாப்பத்திரம் ஒன்றைத் தயாரிக்கும்போது உபயோகப்படுத்தக்கூடிய பல்வேறு வினா வகைகள் உள்ளன. பல்தேர்வு வகை வினா, இணைத்தல் வகை வினா, இடைவெளி நிரப்பல் வகை வினா, ஆம், இல்லை எனக்கூறும் வகை வினா, குறித்ததொரு பந்தியை வழங்கி அது தொடர்பாக வழங்கப்படும் வினா போன்றன இதற்கென பயன்படுத்தக்கூடிய வினா வகைகளுட் சிலவாகும்.

பரீட்சை வினாப்பத்திரமொன்றுக்காக விடயத்தின் அட்டவணையை (Table of specifications) தயாரிப்பதானது மேலெழுந்தவாரியாக நோக்கும்போது அதி இலகுவான ஒரு காரியமாகத் தோன்றலாம். இருப்பினும் அளவிடுவதற்கு எதிர்பார்ப்பதை அளக்கக்கூடிய விதத்தில் தரமான வினாக்களைத் தயாரித்தலானது கரிசனையோடு செய்ய வேண்டியதொன்றாகும். இச்சந்தர்ப்பத்தில் கருத்தில் கொள்ள வேண்டிய சில விடயங்கள் காணப்படுகின்றன. தயாரிக்கப்படும் சகல வினாக்களையும் அதற்காகவே சிறப்பாகக் கருத்தில் கொள்ளப்பட்ட குறிக்கோள்களை அடிப்படையாகக்கொண்டு தயாரித்தல் வேண்டும். வினாவால் அளப்பதற்கு எதிர்பார்க்கும் விடயத்தை அளக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

வினாக்களைத் தயாரிக்கும்போது அறிவு போன்ற இலகுவான திறன்களைப் போலவே சிக்கலான திறன்களை அளப்பதற்கும் முடியுமான விதத்தில் அமைந்த வினாக்களைத் தயாரிப்பதில் கவனம் செலுத்தப்படல் வேண்டும். கிரகித்துக்கொள்ளும் திறன், மாற்றியமைக்கும் மற்றும் பகுப்பாய்வு செய்யும் திறன், பிரச்சினை விடுவிக்கும் திறன், பிரச்சினையைத் தீர்க்க பொருத்தமான வழிமுறைகளை இனங்காணும் திறன் போன்ற சிக்கலான திறன்களை இனங்கண்டு கொள்வதற்குப் பொருத்தமான வினாக்களைத் தயாரித்தல் வேண்டும்.

## 4.0 சிறு குறிப்பெழுதி பதிவு செய்தல்

ஒவ்வொரு மாணவன் தொடர்பாகத் தெளிவாகத் தெரியும் எவையேனும் தகவல்கள் இருப்பின் அவை தொடர்பாகச் சிறு குறிப்பு எழுதலாம். குறித்த ஒரு மாணவன் வெளிக்காட்டும் விசேட திறன்கள் அல்லது குறைபாடுகள் அல்லது நடத்தைகள் இருப்பின் அவையும் இவ்வகையில் அடங்கும். இக்குறிப்பை உள்ளடக்குவதற்காக ஒவ்வொரு மாணவனுக்காகவும் ஒன்று அல்லது இரண்டு பக்கங்களை ஒதுக்கியுள்ள அப்பியாசப் புத்தகமொன்றை அல்லது கோவையொன்றைப் பயன்படுத்த முடியும். விசேட அவதானிப்பு தொடர்பான விபரங்களை சுருக்கமாக திகதியுடன் முறைப்படி குறித்தல் முக்கியமாகும்.

## 5.0 செயல் அடைவுக்கோவை

மாணவர்களைக் கணிப்பிட உபயோகிக்கக்கூடிய மிகவும் பயனுறுதியுள்ள ஒரு முறையாக இது கருதப்படுகின்றது. மாணவரின் கற்றல் தொடர்பான இடர்களையும் அவர்களது திறன்களையும் தொடர்ச்சியாகக் கணிப்பிடும் ஒரு முறை என்ற வகையில் அதிக முக்கியத்துவமுடையது. பொதுவாக ஆரம்பத்தர ஆசிரியர்கள் யாவரும் மாணவர் ஒவ்வொருவரதும் வேலைகளைத் தனித்தனிக் கோவைகளில் சேகரிக்கும் வழக்கமுடையவர் களாவார்கள். எனினும் செயல் அடைவுக் கோவை முறையை இதனிலும் முன்னேற்றகரமான ஒரு முறையாகக் கருதப்படுகிறது. இதன்படி செயல் அடைவுக் கோவை என்பது, மாணவனது திறமைகளையும் அவன் கற்றலின்போது எதிர்கொள்ளும் இடர்களையும் காட்டும் வகையில் கருத்தாழத்துடன் தயாரிக்கப்பட்டுள்ள மாணவர் வேலைத் தொகுப் பாகும் எனக் கருதலாம். **இது மாணவர்கள் பற்றிய தெளிவான கருத்தை வெளிக்காட்டும் ஒரு கோவையாக அமைதல் வேண்டும்.** இதனைத் தயாரிக்கும் முறை ஆசிரியருக்கு ஏற்பவே மாறுபடும். இது பற்றிய ஒரு நியம முறை இல்லையாகையால் ஆக்கத்திறனுடைய ஒரு ஆசிரியரினால் தனது ஆக்கத்திறனுக்கேற்ப மிக உயர்மட்டச் செயலடைவுக் கோவை யொன்றை வடிவமைத்துக்கொள்ள முடியும். செயல் அடைவுக் கோவை ஒன்றில் உள்ளடக் கத்தக்கவை யாவை? இதில் மாணவரது வேலைகளின் மாதிரிகளை (Samples) உள்ளடங்கும் எழுத்துவேலைகள், செய்த கணக்குகள், வரைந்த சித்திரங்கள், ஆக்கங்கள் போன்றவை இதில் உள்ளடக்கப்படலாம். மேலும் ஆசிரியரின் சிறு குறிப்புக்களையும் இதில் உள்ளடக்கலாம்.

## 6.0 தகவல் பதிவுப்படிவமும் அதனைப் பயன்படுத்தலும்

சேகரித்துக்கொண்ட தகவல்களை பதிவுசெய்து அறிக்கைப்படுத்துவதற்காக பயன்படுத்தக்கூடிய மாதிரிக் கணிப்பீட்டுப் படிவங்கள் மூன்று தரப்பட்டுள்ளன. அவை தாய்மொழி, சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள், பொதுக் கணிப்பீட்டுப் படிவம் எனப் பெயர் குறிக்கப்பட்டுள்ளன. அப்படிவங்களில் ஒவ்வொரு பிள்ளையின் பெயருக்கு எதிரேயும் ஒவ்வொரு கற்றல் பேற்றுக்காக ஒவ்வொரு கட்டம் ஒதுக்கப்பட்டள்ளது. மாணவர்கள் ஒவ்வொரு கற்றல் பேறுகளையும் அடைந்துள்ளார்களா? இல்லையா? என்பதை சோதித்த பின்பு அதனைக் குறித்தல் வேண்டும்.

நீங்கள் சேகரித்துக்கொள்ளும் தகவல்கள் மூலம் ஒவ்வொரு மாணவன் தொடர்பாகவும் ஒவ்வொரு கற்றல் பேறுகளின் கீழ் உள்ள கட்டங்களில் பொருத்தமான அடையாளத்தைப் பயன்படுத்தி அதனை அறிக்கைப்படுத்திக்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள் எதிர்பார்க்கும் மட்டத்தை அடைந்துள்ளார்களாயின் (✓) அடையாளத்தினையும் இடர்படுவதாயின் (•) அடையாளத்தையும் குறித்தல் வேண்டும்.

| முடிவு | குறியீடு |
|---|---|
| வெற்றிகரமாகச் செய்கிறார். | ✓ |
| இடர்ப்படுகிறார் / மேலும் உதவி தேவைப்படுகின்றது. | • |

ஏதேனும் கற்றல் பேறுகள் தொடர்பாக மாணவன் வெற்றிகரமாகச் செய்கின்றாரா என்பதை ஆசிரியர் குறித்த மட்டத்திற்குப் பொருந்தக்கூடியவாறு தன்னால் தயாரித்துக்கொள்ளப்பட்ட உத்தேசிக்கப்பட்ட அளவீட்டுக்கருவி மூலம் தீர்மானம் எடுக்க முடியும்.

வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களினதும் அடைவு மட்டம் தொடர்பாகத் தீர்மானம் எடுப்பதற்காக ஒரே பிரமாணத் தொகுதியின் அடிப்படையில் செய்யப்படும்போது அதன் ஒருமைப்பாடும் உயர்வாகத் தென்படும்.

## 7.0 கண்டறிதலும், பரிகாரமும்

ஆரம்ப வகுப்பு மாணவர்களின் முன்னேற்றத்தை கணிப்பீடு செய்வதன் பிரதான நோக்கம் மாணவர்களின் இயலுமையையும் இயலாமையையும் கண்டறிதலாகும். குறித்த ஒரு மாணவன் கணிப்பீட்டுப் படிவத்தில் ''•'' அடையாளம் பெற்றுள்ள எல்லாச் சந்தர்ப்பங்கள் தொடர்பாகவும் ஆசிரியர் விசேட அவதானம் செலுத்த வேண்டும். மாணவன் முகங்கொடுக்கும் இடர்பாட்டை இனங்கண்டு அதற்குப் பரிகாரம் செய்து அம்மாணவனை மீண்டும் கணிப்பீடு செய்ய வேண்டும். அந்த ''•'' அடையாளத்தை பின்னர் ''✓'' அடையாளமாக மாற்றக்கூடியதாக இருக்கும் வரையில் இச்செயலொழுங்கை தொடர்ந்து செய்வது ஆசிரியரின் பொறுப்பாகும். இனங்கண்ட கற்றல் இடர்ப்பாட்டை நீக்குவதற்காக ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் பொருத்தமான வகையில் விசேட பரிகாரக் கற்றல் - கற்பித்தல் முறைகளை கடைப்பிடித்தல் முக்கியமானதாகும். இதில் ஒவ்வொரு மாணவனும் காட்டுகின்ற கற்றல் இடர்ப்பாடுகள் தொடர்பாகத் தீர்மானித்தல் வேண்டும்.

மேலும் ஏதேனும் ஒரு கற்றல் குறிக்கோளை கற்பித்த பின்னர் அதிகமான மாணவர்கள் ''•'' பெற்று இருப்பவர்களாயின் அதற்கான காரணங்கள் பல இருக்கலாம். அவற்றை இனங்கண்டு பொருத்தமான செயல்முறைகளைப் பின்பற்றி மாணவர்களுக்குத் தேவையான கற்றல் பெறுபேற்றை அடையச் செய்தல் ஆசிரியரின் பொறுப்பாகும்.

## 8.0 அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள்

முதன்மை நிலை 3 இன் இறுதியில் சகல மாணவர்களும் அடைந்திருக்க வேண்டுமென உறுதிப்படுத்த வேண்டிய தேர்ச்சித் தொகுதியொன்றினை இனங்கண்டு அச்சிட்டு வெளியிட்டுள்ளோம்.

சகல மாணவர்களும் அந்தத் தேர்ச்சிகளில் பாண்டித்தியம் பெறுவதற்கு வழியமைத்தலானது ஆசிரியருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமையாகும். அந்த தேர்ச்சிகள் தொடர்பாக விசேட கவனத்தை செலுத்தி கற்பித்தல் செயல் முறைகளை மேற்கொள்வதற்கும் சகல மாணவர்களையும் கணிப்பீட்டிற்கு உட்படுத்தி அந்த தேர்ச்சி தொடர்பாக பாண்டித்தியம் அடைந்துள்ளார் என்பதை உறுதிப்படுத்தல் அவசியமாகும். இதனை உறுதிப்படுத்துவதற்காக தொடர்ச்சியான முறைசாரா கணிப்பீடு செய்தல், அவதானித்தல் அறிக்கை, தொடர் மதிப்பீடு போன்றவற்றின் ஊடாகத் தீர்மானம் எடுப்பதற்கு ஆசிரியருக்கு வாய்ப்பு நேரிடும். இந்தச் சந்தர்ப்பத்தில் பாண்டித்தியம் அடையாத மாணவர்களுக்கு மீண்டும்சிறப்பான கற்பித்தல் முறைகளை நடைமுறைப்படுத்துவதனூடாக குறித்த தேர்ச்சி தொடர்பாக பாண்டித்தியம் பெறுவதற்கு முயற்சி எடுத்தல் வேண்டும். அதனால் பின்னொரு தடவை மீண்டும் அவர்களை கணிப்பீடு செய்து பாண்டித்தியம் தொடர்பான முடிவு எடுக்க நேரிடும்.

இரண்டாவது தடவையாகவும் கணிப்பீடு செய்து சில தேர்ச்சிகள் தொடர்பாக பாண்டித்தியம் அடையாத மாணவர்கள் காணப்படின் அந்த மாணவர்கள் தொடர்பாகவும் குறித்த அந்த தேர்ச்சிகள் தொடர்பாகவும் விசேட அறிக்கை ஒன்றினை தயாரிப்பது அவசியமாகும். இதற்குக் காரணம் தரம் 6 ஆசிரியர் அந்த மாணவர்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காகும்.

மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காக அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளில் பாண்டித்தியத்தை உறுதிப்படுத்தல் தரம் 5 ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற முக்கியமான பொறுப்பு வாய்ந்த விடயம் என்பதை புரிந்துகொள்ளல் வேண்டும். இது தொடர்பான விசேட ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியொன்று தயாரித்து வெளியிடப்பட்டுள்ளது.

## 9.0 கணிப்பீடு செய்யும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய வேறு விடயங்கள்

பிள்ளையொன்றின் கற்றல் முன்னேற்றத்தை இன்னொரு பிள்ளையின் கற்றல் முன்னேற்றத்துடன் ஒப்பிடுவதன் மூலம் கல்விசார் ரீதியாக முக்கியமான தீர்மானங்களைப் பெறுதல் கடினமாகும். அதனால் மாணவர் - மாணவர் அடைவை ஒப்பிடுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

பிள்ளையொன்றின் அடைவு மட்டத்தை அதே பிள்ளையின் ஆரம்ப அடைவு மட்டங்களுடன் ஒப்பிடுவதால் பிரயோசனம் அடையலாம் என்பதனால் அது தொடர்பாக அவதானத்தைச் செலுத்துங்கள். அத்தோடு பாடத்திட்டத்தில் எதிர்பார்ப்பவற்றை எந்த அளவு அண்மித்துள்ளார்கள் என்பதனையும் தேடி அறிதல் அவசியமாகும்.

எழுத்து மூலமான வினாப்பத்திரமொன்றைத் தயாரிக்கும்போது மாணவர்களது தரத்திற்குப் பொருந்தக்கூடிய வகையில் பொருத்தமான வினா வகைகளைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள்.

தங்கள் வகுப்பில் இருக்கும் மாணவர்களுக்குப் பொருத்தமான முறையில் வினாக்களைத் தயாரிப்பதில் வகுப்பாசிரியரே கரிசனை காட்டுதல் வேண்டும்.

## தரம் - 5 பொதுக் கணிப்பீடு- தகவற்படிவம்

**கணிப்பீட்டு அளவுத் திட்டம்**

| | |
|---|---|
| வெற்றிகரமாகச் செய்கிறார். | ✓ |
| இடர்ப்படுகிறார் / மேலும் உதவி தேவைப்படுகின்றது. | • |

| | | | | | மாணவர் பெயர் |
|---|---|---|---|---|---|
| | | | | | 01. தெளிவான முழு நிறைவுடன் வேலையை முடிப்பார். |
| | | | | | 02. உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்களில் தயக்கமின்றி முன்வருவார். |
| | | | | | 03. பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பதோடு ஏனையோருக்கும் அதற்காக ஆர்வமூட்டுவார். |
| | | | | | 04. பாடல்களை ரசித்து தாளத்துடன் பாடுவார். |
| | | | | | 05. சரியான மெய்நிலைகளுடனும் அபினயங்களுடனும் பாத்திரங்களை ஏற்று நடிப்பார். |
| | | | | | 06. ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடுவார். |
| | | | | | 07. பொது வேலைகளுக்காக விருப்புடன் முன்வருவார். |
| | | | | | 08. பொது வேலைகளின்போது ஏனையோருடன் ஒத்துழைத்துச் செயற்படுவார். |
| | | | | | 09. ஆசிரியர்களை மதிப்பார். பண்புடன் கதைப்பார். |
| | | | | | 10. பயன்படுத்தும் உபகரணங்களை பாதுகாப்பாக் கையாளுவதோடு அவற்றை உரிய இடங்களில் வைப்பர். |
| | | | | | 11. எளிமையான அவதானிப்புக்களில் ஈடுபட்டு தகவல்களை அறிக்கைப்படுத்துவார். |
| | | | | | 12. அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் பெறும் தகவல்கள் தொடர்பாக தமது கருத்தை வெளியிடுவர்ர். |
| | | | | | 13. தலைமைத்துவத்தை மதித்துச் செயற்படுவார். |
| | | | | | 14. ஏனையோரின் ஆற்றல்களையும் நற்பண்புகளையும் மதிப்பார். |
| | | | | | 15. சுய கற்றலில் ஈடுபட்டு ஏனையோருக்கு அறிவூட்டம் செய்வார். |
| | | | | | 16. தமது கருத்துக்களையும் உணர்வுகளையும் சித்திரங்கள் மூலம் வெளிப்படுத்துவார். |
| | | | | | 17. சூழல் வளங்களை ஆக்கபூர்வமான வகையில் பயன்படுத்தி, கவர்ச்சிகரமான ஆக்கங்கள் படைப்பார். |
| | | | | | 18. சரியான சந்தத்துடன் அசைவுச் செயற்பாடுகளில் ஈடுபடுவார். |
| | | | | | 19. புத்தளிப்புக் கருவிகளைப் பயன்படுத்தி கூட்டாக வாத்தியமிசைப்பார். |
| | | | | | 20. இலடகுவான சட்டதிட்டங்களைப் பின்பற்றி விளையாட்டுக்களில் ஈடுபடுவார். |
| | | | | | 21. ஏனையோரின்பால் பரிவுணர்வுடன் செயற்படுவார். |
| | | | | | 22. தமது கருத்துக்களை உறுதிப்பாட்டுடன் வெளியிடுவார். |
| | | | | | 23. தரப்பட்ட பருமட்டான திட்டத்தின்படி பருமட்டான மாதிரியுரு அமைப்பார். |
| | | | | | 24. தையல், பின்னல் ஊடாக ஆக்கம் புரிவார். |
| | | | | | 25. சந்தர்ப்பத்திற்குப்பொருத்தமான வகையில சிங்களத்தில் வாழ்த்துத் தெரிவிப்பார். |
| | | | | | 26. ஏனையோருடன் இலகுவான மொழியில் நட்புடன் தம்மைப் பற்றிய தகவல்ளைத் சிங்களத்தில் பரிமாறிக் கொள்வார். |
| | | | | | 27. சிங்கள மொழியில் இலகுவான எழுத்துக்களை எழுதுவார். |
| | | | | | 28. தரப்பட்ட படத்திற்குரிய சொல்லை சிங்களத்தில் எழுதுவார். |
| | | | | | 29. சிங்களத்தில் இலகுவான பாடலொன்றைப் பாடுவார். |